# நூல் தேட்டம் 15

என். செல்வராஜா

அயோத்தி நூலக சேவைகள் &
குமரன் புத்தக இல்லம்

# நூல் தேட்டம்

## [தொகுதி 15]

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பெற்ற
ஈழத்துத் தமிழ் நூல்கள்

குறிப்புரையுடனான
நூல் விபரப்பட்டியல்

**என். செல்வராஜா**

வெளியீடு
**அயோத்தி நூலக சேவைகள்**
&
**குமரன் புத்தக இல்லம்**
செப்டெம்பர் 2021

நூலின் தலைப்பு - நூல் தேட்டம் (தொகுதி 15)

ஆசிரியர் - என்.செல்வராஜா

மின்னஞ்சல் - Noolthettam.ns@gmail.com

தொலைபேசி - (0044) 07817402704

பதிப்பு - முதற்பதிப்பு, 01 செப்டெம்பர் 2021

வெளியீடு - அயோத்தி நூலக சேவைகள், ஐக்கிய இராச்சியம் &
குமரன் புத்தக இல்லம், கொழும்பு

அச்சுப்பதிப்பு - குமரன் புத்தக இல்லம், 39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6,
தொ.பே. 0112 364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com

அட்டை
வடிவமைப்பு - கௌதமன் செல்வராஜா

சர்வதேச தராதர
நூல் பதிவெண் - 978-955-659-729-5

பக்கங்கள் - 638

பதிப்புரிமை © என்.செல்வராஜா 2021

குமரன் வெ.எண் - #917

Title - Nool Thettam (Volume 15)
An annotated bibliography of 1000 published writings in Tamil language, by Sri Lankan Tamils, home and abroad.

Compiler - N.Selvarajah

e-mail - Noolthettam.ns@gmail.com

Mobile - (0044) 07817402704

Edition - First Edition, 01 September 2021

Publishers - Ayothy Library Services, United Kingdom and
Kumaran Book House, Colombo

Printers - Kumaran Book House, 39, 36th Lane, Colombo 6, Sri Lanka
E-Mail: kumbhlk@gmail.com

Cover Design - Gauthaman Selvarajah

ISBN - 978-955-659-729-5

Published No - #917

Pages - 638

Price - £ 15.00, Euro 20.00, SL Rs 2500.00

© Copy Right 2021 by N.Selvarajah

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

# நன்றி

நூல்தேட்டத்தின் பதினான்காவது தொகுதியை உங்கள் கரங்களில் இன்று கையளிப்பதற்குத் தோன்றாத் துணையாக இருந்த அனைவருக்கும் முதலில் நன்றிகூறுவது என் தலையாய பணியாகும்.

பதினான்காவது தொகுதியை உரியகாலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்ததுடன், அத்தொகுதியை இலங்கையில் பரவலாக அறிமுகம் செய்யும் பொறுப்பினையும் கொழும்பு, குமரன் புத்தக இல்ல அதிபர் **கணேசலிங்கம் குமரன்** ஏற்றிருந்தார். வழமை போலவே பதினைந்தாவது தொகுதியையும் அச்சேற்றி விநியோகித்துத் தரும் பொறுப்பினையும் அவரே ஏற்றிருக்கிறார். அவருக்கு முதலில் என் நன்றி.

பதினைந்தாவது தொகுதிக்கான நூல்தேடலுக்கான எனது இலங்கைப் பயணத்தின் போது (கோவிட்-19 பெருந்தொற்றுக்கு முன்னர்) மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் பொது நூலகங்களிலும், கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. தி.செல்வமனோகரன், ஞானம் சஞ்சிகை ஆசிரியர் திரு தி.ஞானசேகரன், குமரன் புத்தக இல்லம், ஆகியோரிடமிருந்தும் ஈழத்துத் தமிழ் நூற் சேர்க்கைகளைப் பார்வையிட்டு அரிய பல ஈழத்து நூல்களைப் பதிவுசெய்ய முடிந்தது. "எங்கட புத்தகங்கள்" குலசிங்கம் வசீகரன், சுன்னாகம் பொது நூலகர் ஜெயலட்சுமி, கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகர் சித்தார்த்தினி ஆகியோர் தமது மேலதிக உழைப்பை பிரதிபலன் கருதாது எனக்கு வழங்கினர். என்னைத் தமது நூலகத்தினைப் பயன்படுத்த அனுமதியளித்த அனைவருக்கும் எனது நன்றி.

தாயகத்திலும், புகலிடத்திலும் காலத்துக்குக் காலம் எனது நூல்தேட்டம் தொகுப்பு முயற்சிகளுக்கு ஆதரவான செய்திகளைப் பிரசுரித்தும், விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டும் எனக்கு ஆதரவை வழங்கிவரும் சிறுசஞ்சிகை ஆசிரியர்களுக்கும், தேசிய, பிராந்தியப் பத்திரிகையாளர்களுக்கும் எனது நன்றி.

எனது வாழ்வின் பெரும்பகுதி நேரத்தை விழுங்கிவிடும் நூல்தேட்டம் தொகுப்புக் கடமைகளின்போது எமது குடும்பச்சுமைகளை முழுமையாகத் தாங்கி என்னைச் சுதந்திரமாக இயங்கவிட்டதுடன் எனக்குத் துணையாகவிருந்து நூலாக்கக் கடமைகளிலும் முடிந்தவரை உதவிவரும் என் அன்புத் துணைவி விஜிக்கு நன்றி செலுத்தத் தவறினால் மிக முக்கியமான பதிவொன்றினை இங்கு மேற்கொள்ளத் தவறியவனாவேன். குடும்பத்தின் நிதி நிலைமையை

மிகச் சிக்கனமாகக் கையாண்டு ஒவ்வொரு நூல்தேட்டம் தொகுதிக்கும் தேவையான மேலதிக நிதியை சேமித்து வழங்கும் இமாலயப்பணியும் இவருடையதாகும்.

உங்கள் ஆதரவில் நம்பிக்கைவைத்து, நூல்தேட்டத்தின் **பதினாறாவது** தொகுதியுடன் 16000 நூல்களைப் பார்வையிட்டுப் பதிவுசெய்த மனத்திருப்தியுடன் விரைவில் உங்களைச் சந்திப்பேன் என்ற உறுதியுடன் விடைபெறுகிறேன்.

**என்.செல்வராஜா**
*01.04.2021*

# முன்னுரை

## நூல்தேட்டம்
## (ஓர் அறிமுகம்)

ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002இலும், இரண்டாவது தொகுதி 2004இலும், மூன்றாவது தொகுதி 2005இலும், நான்காவது தொகுதி 2006இலும், ஐந்தாவது தொகுதி 2008 இலும், ஆறாவது ஏழாவது தொகுதிகள் 2011இலும், எட்டாவது தொகுதி 2012இலும் ஒன்பதாவது தொகுதி 2014இலும், பத்தாவது தொகுதி 2015இலும், பதினொராவது தொகுதி 2017இலும், பன்னிரண்டாவது தொகுதி 2018இலும், பதின்மூன்றாவது தொகுதி 2019இலும் 14ஆவது தொகுதி 2020இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான பதினைந்தாவது தொகுதியே இதுவாகும்.

இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் இத் தொகுதியில் இடம்பெறும் நூல்பதிவுகளுக்கு 14001இலிருந்து 15000வரை தொடரிலக்கமிடப்பட்டுள்ளன. 15000 நூல்களை நேரில் பார்த்துக் குறிப்பெடுத்து, ஒழுங்கமைத்து, பதிவேற்றம் செய்து நூலுருவாக்குவதென்பது இலேசான காரியமல்ல. இதன் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டு எனக்கு உதவ முன்வரும் தொண்டுள்ளங்களை வாழ்த்தித் தொடர்கின்றேன்.

### தொகுப்பும் தவிர்ப்பும்

இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியலாக்கப்பட்டுள்ள தனி நூல்கள் (Monographs) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படவில்லை. இன்று பார்வையிடக்கூடிய ஈழத்துத் தமிழ் நுல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடுவதே நூல்தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். வெளியீட்டின் பௌதிகத் தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுகள் என்பன இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை.

பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகைகள், என்பனவும் இத்தொகுதியில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், தனி ஆவணமாகக் கருதும்வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்புமலர்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் தனிநூலின் வகைக்குள் அடங்கக்கூடியதான கனதியான அம்சங்களுடன்

வெளிவந்திருப்பதால் அவற்றையும் இத்தொகுதியில் சேர்த்துக்கொண்டுள்ளோம். 15ஆவது தொகுதியிலிருந்து சில மின்நூல்களையும் சேர்த்துக்கொண்டுள்ளேன். இனிவருங்காலத்தில் அச்சுருவில் வெளிவராமல், நேராக மின்நூலாகவே எம்மவரின் ஈழத்துத் தமிழ் நூல்கள் வெளிவருவதற்கான சாத்தியக்கூறுகளை நலிவடைந்து செல்லும் எம்மவரின் பதிப்புத்துறை ஏற்படுத்தி வருகின்றமையையும்
517 என்னால் அண்மைக் காலத்தில் அவதானிக்க முடிகின்றது.

நூல்தேட்டத் தொகுதிகளில் தொகுக்கப்பட்டுள்ள நூல்கள் எவ்வித கால எல்லைகளுக்கும் வரையறுக்கப்படவில்லை. ஒரு நூலின் பின்னைய பதிப்புகள் வெளிவரும்போது அவை புதுக்கியோ, சுருக்கியோ, வெளிவரும் வாய்ப்பிருப்பதாலும், முற்றிலும் வேறான நூலியல் தகவல்களை அவை கொண்டிருப்பதாலும் குறித்தவொரு நூலின் பல்வேறு பதிப்புகளும் இங்கு ஒரே பதிவிலக்கத்தின் கீழ் இடம்பெறுகின்றன. முன்னைய பதிவிலக்கத்தைப் பெற்ற மீள்பதிப்புக்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

## பதிவுகளின் ஒழுங்கமைப்பு

நூல்தேட்டம் ஒரு உசாத்துணை நூலாகும். ஒரு நூலைப் பற்றிய நூலியல் தகவல்களைக் குறுகிய நேரத்தில் வாசகர் கண்டறிய வகைசெய்யும் வண்ணம் இத்தொகுதி மூன்று பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப் படுத்தப்பட்டு தொடரெண்கள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாடவாரியாக ஒரு நூலைத்தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைவர். இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும்.

முதற்பகுதியில் நூல்கள் பாடவாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அகரவரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிழையும் வாசகர் இரண்டாவது பிரிவில் அகரவரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர் இலக்கத்தைக் கண்டறிந்து முதற்பகுதியில் உள்ள பிரதான பதிவைப் பார்வையிட முடியும். இங்கு தலைப்புக்கள் அகரவரிசை எழுத்தொழுங்கில் அல்லாது சொல்லொழுங்கி லேயே அகரவரிசைப் படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர் ஆகியோரின் விபரங்களைக் கொண்டு ஒரு நூலைத்தேடும் வாசகர் மூன்றாவது பிரிவின் மூலம் பயனடைவர். இங்கு ஆசிரியர் அகர வரிசையில் நூல்களின் தொடர் எண்களைக் கண்டறிந்து அதன் மூலம் தான் தேடும் நூலைச் சென்றடைய முடியும். ஆசிரியர் அகரவரிசையில் புனைபெயர்களும் இடம்பெறுகின்றன. ஒரு நூலாசிரியர் இயற்பெயரிலும் புனைபெயரிலும் நூல்களை எழுதுவதால் புனைபெயரின் கீழ் நூலைத்தேடும் வாசகர் ஆசிரியரின் இயற்பெயரிலும் அவற்றைத் தேட உதவும் வகையில், **பார்க்க, மேலும் பார்க்க** போன்ற வழிகாட்டி அம்சங்கள் தேவை கருதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்கள் ஒரே புனைபெயரில் வலம்

வருவதையும் இங்கு காணமுடிவதால் புனைபெயரில் நூலைத்தேடும் வாசகர்கள் அவதானமாக இருக்க வேண்டும். வாசகரின் தேடுகை நேரத்தை குறைக்கும் வகையில் புனைபெயரிலும் இயற்பெயரிலும் எழுதும் ஆசிரியரின் பிரபல்யமான ஒரு பெயரின்கீழ் மட்டும் இயன்றவரை அவரது நூல்களின் தொடர்எண்களைக் குறித்துள்ளோம்.

## நூலியல் பதிவுகள்

*பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், ஆகியனவும் அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறுமிடத்து சர்வதேச தராதர நூல் எண்களும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன. ஆசிரியர் பற்றிய தகவலில் ஆசிரியரின் இயற்பெயர், புனை பெயர் பற்றிய குறிப்புகளும் அறியமுடிந்தால் தரப்பட்டுள்ளன. பதிவுக்குள்ளாகும் நூலின் உரித்தாளர் மூலநூலாசிரியராக இல்லாதவிடத்து, அவரின் பங்களிப்புப் பற்றிய தகவல் அவரது பெயரையடுத்து அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டாளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு வெளியீட்டகம் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளைப் பரப்பியிருக்கும் வேளை, பதிவுக்குள்ளாகும் நூலில், குறிப்பாக ஒரு இயங்குதளத்தை மட்டும் வெளிப்படுத்தியிருந்தாலன்றி, பதிவுத்தேவை கருதி, நூல் அச்சிடப்பட்ட நாட்டில் உள்ள வெளியீட்டகத்தின் கிளை அமைந்த ஊரே அதன் இயங்குதளமாகப் பதியப்பட்டுள்ளது. ஆசிரியரே வெளியீட்டாளராகவும் இருக்கும்போது, நூலில் காணும் ஆசிரியரின் முகவரி வெளியீட்டக முகவரியாகக் கொள்ளப்பட்டுள்ளது.*

*நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நூல் முதற்பதிப்பு அல்லாதவிடத்து முன்னைய பதிப்புகள் பற்றிய திகதி விபரங்களும் நூலில் தரப்பட்டவாறாகப் பதியப்பட்டுள்ளன. சில வெளியீட்டாளர்கள், மறுபதிப்பு நூல்களையும் முதற்பதிப்பாகக் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வெளியீட்டாளரின் முதற் பதிப்பாகவே அது கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்விபரங்கள் நூலியல் நேர்மை கருதி, பதிப்பு நூலில் குறிப்பிடப்படவேண்டியது அவர்களது கடமையாகும் என்பதை இங்கு வலியுறுத்துதல் அவசியமாகின்றது. பெரும்பான்மையான தமிழக மீள்பதிப்புக்களில் இத்தவறுகள் காணப்படுகின்றன.*

*நூலின் அச்சக விபரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இந்த விபரம் பதிவுக்குரிய நூலின் குறித்த பதிப்புக்கு மட்டும் உரியதாகும் என்பதும் கவனத்துக்குரியது.*

நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

நூலின் பக்கங்கள் மூன்று வகையில் குறிப்பிடப்படுகின்றன. அவை ரோமன் இலக்கமிடப்பட்ட பக்கங்கள், இலக்கமிடப்படாத பக்கங்கள், அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்கள் என்பனவாகும். ரோமன் இலக்கமும், அரேபிய இலக்கமும் இடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை அவ்வவ்விலக்கங்களாலேயே சுட்டப்பட்டுள்ளன. இலக்கமிடப்படாத பக்கங்கள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன. (உதாரணம்: VII, (12), 243 பக்கம்). பெரும்பான்மையான தமிழ் நூல்களில் முகவுரைப் பக்கங்கள் இலக்கமிடப்படாவிடினும் அவை பின்னர் அரேபிய இலக்கங்களாகத் தொடர்கின்றன. அத்தருணங்களில் அவை அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்களாகவே கருதப்பட்டுள்ளன.

பக்கங்கள் பற்றிய குறிப்பை அடுத்து அமைவது சிறப்பம்சங்களாகும். இங்கு வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படும். விலை விபரம் காலவரையறைக்குட்பட்டதாக அமைவதாயினும் வரலாற்றுத்தேவை கருதி மட்டுமே நூல்தேட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுள்ளது. நூலில் குறிப்பிடப்படும் விலை அந்நாட்டு நாணய அலகின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவுக்கு மாத்திரம் நாடு குறிப்பிடப்படவில்லை. இது ஒரு வர்த்தக நூற்பட்டியல் இல்லையென்பதால் தேவைப்படுமிடத்து நூலின் தற்போதைய விலை பற்றிய தகவலை அதன் விற்பனையாளர்களிடமே வாசகர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

நூலின் பௌதீக விபரங்களில் அடுத்ததாக வருவது, நூலின் அளவாகும். இது சதம மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) பற்றிய தகவலாகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளி வந்திருப்பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று **முதலாவது** தொகுதியில் xiv-xviii பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது நூலினதும் நூலாசிரியரினதும் சிறு அறிமுகமாக மாத்திரம் அமைவது குறிப்பிடத்தக்கது. அரியநூல்களின் வைப்பிடம் பற்றிய குறிப்பு 3வது தொகுதியிலிருந்து வழங்கப்படுகின்றது. உதாரணமாக பெறுதற்கரிய சில ஈழத்து நூல்கள் பிரித்தானிய நூலகங்களிலும், மலேயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறையிலும் காணமுடிந்தது. அவை பற்றிய இருப்பு விபரம் இப்பகுதியில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

## பகுப்பாக்கம்

*இந்நூலின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென நாம் தேர்ந்தெடுத்துள்ள பாட ஒழுங்கு வரிசை, டூவியின் தசாம்சப்பகுப்பு முறையாகும். (Dewey Decimal Classification Scheme) தென்னாசியாவிலும் ஐரோப்பாவிலும் நூலகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இப்பகுப்பு முறை தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமானதொன்றென்ற வகையில் இப்பகுப்பாக்கத்தைப் பின்பற்றத் தீர்மானித்தோம். இப்பகுப்பாக்கத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று பிராந்தியத் தேவைகருதி இப்பகுப்பு முறையில் தேவைப்படும் மாற்றத்தைப் புகுத்தமுடியும் என்பதாகும். ஈழத்துத் தமிழ் நூல்களின் பகுப்புத்தேவை கருதி இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பகுப்பாக்கம் அறிவுத்தேட்டத்தை முதலில் பத்துப் பெரும்பிரிவுக்குள் அடக்குகின்றது. பின்னர் ஒவ்வொரு பெரும்பிரிவும் பத்து உபபிரிவுகளாகின்றன. அந்த உப பிரிவுகள் மேலும் பத்து உபபிரிவுகளாகின்றன. இத்தகைய ஒரு தசாம்சப்பகுப்பு முறை பற்றிய விரிவான விளக்கத்தை இங்கே தரமுடியாவிடினும் வாசகரின் தேவை கருதி இந்நூலில் பயன்படுத்தும் பகுப்புத் திட்டம் சுருக்கமாக இந்த அறிமுகப் பகுதியையடுத்துத் தரப்பட்டுள்ளது.*

## வாழ்க்கை வரலாறு

*பகுப்பாக்க ஒழுங்கில் இறுதிப்பிரிவாக அமைவது வரலாறாகும். இதில் பிரதேச வரலாற்றுடன், வாழ்க்கை வரலாற்று நூல்களும் ஞாபகார்த்த மலர்களும் இடம்பெறுகின்றன. பகுப்பாக்கத்தின் போது பன்முகத்தோற்றம் பெற்ற பெரியார்களின் வரலாற்று நூல்களைத் தரம்பிரிக்கும்போது பிரதான பதிவை ஏதாவது ஒரு பிரிவுக்குள் பதிய வேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டது. ஒருவரது ஆளுமை எத்துறையில் பிரகாசித்தது என்பதை விட குறிப்பிட்ட நூலில் அவரது பன்முகப்பட்ட ஆளுமையின் எப்பகுதி ஆய்வுக்கெடுக்கப்பட்டது என்ற அடிப்படையிலேயே அவரது நூலுக்கான பகுப்புப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனால் இப்பிரிவைப் பார்வையிடும் வாசகர்கள் தயவு செய்து பல்வேறு வாழ்க்கை வரலாற்றுப் பிரிவுகளிலும் கண்ணோட்டம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

## இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புக்கள்

*இரண்டாம் தொகுதியிலிருந்து மேலதிக அம்சமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பகுதி இதுவாகும். இன்றைய ஈழத்து இனப்பிரச்சினையின் சர்வதேசமயப்படுத்தல் காரணமாக ஈழத் தமிழரல்லாத பன்நாட்டவர்களிடையே உருவாகிவரும் ஈழத்தமிழர்சிக்கல் பற்றிய தேடலின் விளைவாக, தமிழகத்திலும் மலேசியாவிலும் ஐரோப்பாவிலும் ஈழத்தமிழர் பற்றிய நூல்களின் வரவு அதிகரித்திருப்பதைக்*

காணமுடிகின்றது. இவற்றில் பல தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன்விளைவாக, நூல்தேட்டத்தில் இவ்வாக்கங்களுக்கான ஆவணமாக்கலும் அவசியம் என்று கருதியதால், தனியானதொரு பிரிவாக அவை இடம்பெறுகின்றன.

## முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்கள்

நூல்தேட்டம், ஈழத்தமிழரின் நூலியல் முயற்சிகளில், இயன்றவரை நிறைவான ஆவணமாக்கலையே மேற்கொள்ள விழைகின்றது. முன்னைய தொகுதியில் இடம்பெற்ற ஒரு நூல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டால், அதுபற்றிய தகவலையும் இத்தொகுதியில் தந்திருக்கின்றோம். தொகுப்பு முயற்சியில் குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு இவை கொள்கையளவில் புதிய பதிவாகக் கருதப்பட மாட்டாது. இதனால் அப்பதிவிற்குத் தனியான தொடர் இலக்கத்தை வழங்காது, அதை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளோம். வாசகர்களின் பயன்கருதி குறிப்பிட்ட இந்நூற்பதிவின் மூலப்பதிப்பின் தொடர் இலக்கத்தையும் குறிப்புப் பகுதியில் தந்துள்ளோம். தொகுப்பு முயற்சியின்போது முன்னைய பதிவுகளில் தவறுகள் நேர்ந்தால், அப்பதிவுகளின் திருத்திய வடிவமும் இப்பகுதியிலேயே இடம்பெறுகின்றன. நூல்தேட்டம் தொகுதிகளை இணைத்துப் பெருந்தொகுப்பாக்கி வெளியிடும் நோக்கமும் உள்ளதால், திருத்திய பதிப்பின்போது இப்பகுதியில் இடம்பெறும் பதிவுகள் பிரதான பதிவுகளுக்குள் உள்வாங்கப்படும்.

## நிறைவுக் குறிப்பு

நூல்தேட்டத்தின் முன்னைய தொகுதிகளை எமது சக்திக்கெட்டியவரை சர்வதேச நூற்பட்டியல்களின் சிறப்பம்சங்களைக் கூர்ந்து கவனத்துக்கெடுத்துத் தொகுத்திருந்தோம். இத்தொகுதிகளில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, காத்திரமான ஆலோசனைகளைப் பலர் வழங்கியிருந்தனர். அவற்றில் நாம் ஏற்றுக்கொண்ட பல விடயங்களை இத்தொகுதியிலும் சேர்த்திருக்கின்றோம். அடுத்து வரவுள்ள எட்டாவது தொகுதி மேலும் சிறந்ததாக அமைய உங்கள் மேலான ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

இத்தொகுதி வர்த்தக நோக்கமற்றதொரு தனிமனித முயற்சியாகும். நிறுவனரீதியில் மேற்கொள்ளப்படவேண்டிய இத்தகைய உசாத்துணை வெளியீட்டு நடவடிக்கைகள் தனிமனித முயற்சியாக மலரும்போது நிதி, காலம், நிபுணத்துவ உதவி என்பன எப்பொழுதும் வரையறைக்குட்பட்டதாகவே அமைகின்றன. இதை மனதில் கொண்டு, இத்தொகுதியின் பரந்துபட்ட அறிமுகத்திற்கும் விநியோகத்திற்கும், விற்பனைக்கும் உங்களாலான பங்களிப்பை வழங்குவீர்கள் என்று நம்புகின்றோம். இதன் விற்பனை மூலம் பெறப்படும் நிதி எமது அடுத்த தொகுதியின் துரித உருவாக்கத்துக்கு உறுதுணையாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம். உலகெங்கும் பரந்துவாழும் ஈழத்தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்துவாழும் நாடுகளிலுள்ள நூலகங்களையும் நூல்தேட்டத்தின் அனைத்துத் தொகுதிகளும் சென்றடைவதற்குத் தங்களாலான பங்களிப்பினை நல்குவதைத் தார்மீகக் கடமையாகக் கொள்வீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

# நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வகுப்புப் பிரிவு

## (டுவி தசாம்சப் பகுப்பை அடிப்படையாகக் கொண்டது)

## பிரதான பிரிவுகள்

| | |
|---|---|
| *000-099* | பொதுப்பிரிவு |
| *100-199* | மெய்யியல்துறை |
| *200-299* | சமயங்கள் |
| *300-399* | சமூக விஞ்ஞானங்கள் |
| *400-499* | மொழியியல் |
| *500-599* | தூய விஞ்ஞானங்கள் |
| *600-699* | பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம் |
| *700-799* | கலைகள், நுண்கலைகள் |
| *800-899* | இலக்கியம் |
| *900-999* | புவியியல், வரலாறுகள் |

## விரிவான பிரிவுகள்

### 000 பொதுப்பிரிவு

| | |
|---|---|
| *000* | பொது அறிவு *14001-14002* |
| *001* | கணனியியல் *14003-14005* |
| *010* | நூலியல், நூல்விபரப்பட்டியல் *14006* |
| *020* | நூலகவியல், தகவல் விஞ்ஞானம் *14007-14008* |
| *051* | பொதுப் பருவஇதழ் சிறப்பிதழ்கள் *14009-14012* |
| *060* | பொது நிறுவனங்கள் *14013-14016* |
| *070* | ஊடகவியல், வெளியீட்டுத்துறை*14017-14019* |
| *070.01* | ஆசிரியத் தலையங்கங்கள்/பத்தி எழுத்துக்கள் *14020-14021* |

## 100 மெய்யியல்துறை


| | |
|---|---|
| *150* | *உளவியல் 14022* |
| *158.1* | *மானிட மேம்பாடு 14023* |
| *158.3* | *உளவளத்துணை 14024-14026* |
| *160* | *தர்க்கவியல் (அளவையியல்) 14027* |
| *170* | *ஒழுக்கவியல் 14028-14038* |
| *180* | *இந்து தத்துவம் (சைவ சித்தாந்தம்) 14039-14046* |
| *190* | *சோதிடம், வானசாஸ்திரம் 14047-14049* |


## 200 சமயங்கள்


| | |
|---|---|
| *220.1* | *கிறிஸ்தவ நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள் 14050* |
| *294.3* | *பௌத்தம் 14051-14059* |
| *294.5* | *இந்து சமயம் 14060-14080* |
| *294.5(1)* | *இந்து சமய பாடநூல்கள் 14081-14086* |
| *294.5(2)* | *இந்து நிறுவனங்கள், ஆலய வரலாறுகள் 14087-14100* |
| *294.5(21)* | *இந்து சமய ஆண்டிதழ்கள் 14101-14104* |
| *294.5(3)* | *ஆலயங்கள், சமய நிறுவனங்களின் சிறப்பு மலர்கள் 14105-14177* |
| *294.5(4)* | *பக்தி இலக்கியங்கள் 14178-14242* |
| *297* | *இஸ்லாம் 14243-14245* |
| *297.4* | *சூபியிசம் 14246* |


## 300 சமூக விஞ்ஞானங்கள்


| | |
|---|---|
| *301* | *சமூகவியல் 14247-14249* |
| *301.01* | *சமூகவியல்சார்ந்த பாடநூல்கள் 14250-14251* |
| *301.05* | *சமூகவியல் சார்ந்த ஆய்விதழ்கள்/சிறப்பு மலர்கள் 14252-14260* |
| *301.1* | *பண்பாடு 14261* |
| *305* | *மானிட சமத்துவம் 14262* |
| *305.31* | *ஆண்கள், ஆண்நிலைவாதம், ஆணாதிக்கம் 14263* |
| *305.4* | *பெண்கள், பெண்ணியம், பெண்ணிலைவாதம் 14264-14265* |
| *320* | *அரசறிவியல் (குடியியல்) 14266-14271* |
| *320.1* | *சமகால அரசியல் கட்டுரைகள், ஆய்வுகள் 14272-14280* |
| *323* | *மனித உரிமை 14281-14289* |
| *323.445* | *தகவல் அறியும் உரிமை 14290* |

| | |
|---|---|
| *325.21* | *அகதிகள் 14291* |
| *327* | *சர்வதேசத் தொடர்புகள் 14292-14293* |
| *330* | *பொருளியல் 14294-14296* |
| *333* | *நிலம் மற்றும் சக்திப் பொருளாதாரம் 14297-14298* |
| *335* | *சோசலிசம், அது தொடர்பான பிரிவுகள் 14299* |
| *335.4* | *கம்யூனிசம் 14300-14302* |
| *336* | *நிதியியல், வங்கியியல் 14303* |
| *338* | *பொருளாதார வளங்கள், மீன்வளம் 14304* |
| *338.642* | *சிறுகைத்தொழில் முயற்சிகள் 14305* |
| *338.9* | *பொருளாதார அபிவிருத்தி 14306-14312* |
| *340* | *சட்டவியல் 14313-14315* |
| *340.05* | *சட்டவியல் ஆய்விதழ்கள், ஆண்டுமலர்கள் 14316-14320* |
| *340.59* | *இஸ்லாமியச் சட்டங்கள் 14321* |
| *341.23* | *ஐக்கிய நாடுகள் தாபனம் 14322* |
| *342* | *அரசியலமைப்புச் சட்டம் 14323-14330* |
| *344.01* | *தொழில் சட்டங்கள் 14331* |
| *344.032* | *சிறுவர் பாதுகாப்புச் சட்டம் 14332* |
| *345* | *குற்றவியல் சட்டம் 14333* |
| *350* | *பொது நிர்வாகம் 14334-14339* |
| *360* | *சமூக சேவை நிறுவனங்கள் 14340-14344* |
| *362.4* | *மாற்றுத்திறனாளிகளும் சேவைகளும் 14345* |
| *362.7* | *சிறுவர் பராமரிப்பு 14346-14347* |
| *363* | *சுற்றாடல், சூழல் மாசுபடுதல் 14348* |
| *370* | *கல்வியியல் 14349-14355* |
| *370.05* | *கல்வி நிறுவனங்களின் ஆய்விதழ்கள், ஆண்டு மலர்கள் 14356-14363* |
| *370.1* | *கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள், சிறப்பிதழ்கள் 14364-14378* |
| *375* | *பாடத்திட்டங்கள்/பாடவிதானங்கள் 14379-14383* |
| *380* | *வர்த்தகம், வணிகத் தொடர்புகள், போக்குவரத்து 14384-14385* |
| *380.(1)* | *வர்த்தகவியல்/வணிகவியல் பாடநூல்கள் 14386-14391* |
| *390* | *நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும் 14392* |

*390.1* இடப்பெயர் ஆய்வு *14393*

*391.7* அணிகலன்கள், உடல் அலங்காரங்கள் *14394*

*392* வாழ்வியல் வழக்குகள், வாழ்க்கை முறைமைகள் *14395-14396*

*392.5* சடங்கு முறைமைகள், திருமணங்கள், மரணச் சடங்குகள் *14397*

*395* நாட்டார் வழக்காற்றியல் *14398-14399*

## 400 மொழியியல்

*420* ஆங்கில மொழி *14405*

*491.2* சமஸ்கிருத மொழி *14406*

*491.48* சிங்கள மொழி *14407-14411*

*494.8* தமிழ் மொழி *14412-14423*

*494.8(01)* தமிழ் மொழி ஆய்வுச் சிறப்பிதழ்கள் *14424-14429*

*494.8(1)* தமிழ் இலக்கணம் *14430-14431*

*494.8(2)* தமிழ்ப் பாடநூல்கள் *14432-14444*

## 500 தூய விஞ்ஞானங்கள்

*510* கணிதம் *14445-14455*

*530* பௌதிகம் *14456*

*540* இரசாயனம் *14457-14458*

*576.83* வேற்றுக்கிரகவாசிகள் *14459*

*580* தாவரவியல் *14460*

## 600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்

*612* உடற்கூற்றுத் தொழிலியல் *14461*

*613* பொது உடல்நலவியல் *14462-14463*

*614* பொதுச் சுகாதாரம் *14464*

*616* நோய்கள் *14465*

*619* கீழைத்தேய மருத்துவம் *14466*

*619.1* சித்த மருத்துவம் *14467-14475*

*630* விவசாயமும் அது சார்ந்த துறைகளும் *14476-14477*

*640* இல்லப் பொருளியல், குடும்பக் கலை *14478*

*650* முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம் *14479-14481*

*657* கணக்கியல் *14482-14483*

*658.15* *நிதி முகாமைத்துவம் 14484-14486*
*660.6* *உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் 14487*

## 700 கலைகள், நுண்கலைகள்

*701* *பொதுக்கலைகள் 14488-14493*
*740* *வரைதல், அலங்கரித்தல் 14494-14495*
*741.5* *கருத்தோவியங்கள் (கார்ட்டூன்) 14496*
*750* *ஓவியக்கலை 14497*
*780* *இசைக்கலை 14498-14503*
*791* *நாட்டியக் கலை 14504-14507*
*792* *அரங்கியல், நாடகக்கலை 14508-14514*
*793* *திரைப்படக்கலை 14515-14517*

## 800 இலக்கியம்

*800.(1)* *இலக்கிய அமைப்புகள் 14518*
*801* *சிறுவர் இலக்கியங்கள் 14519-14520*
*801.(1)* *சிறுவர் பாடல்கள், கவிதைகள் 14521-14526*
*801.(2)* *சிறுவர் நாடகங்கள் 14527-14529*
*801.(4)* *சிறுவர் சிறுகதைகள் 14530-14531*
*801.(41)* *சிறுவர் மொழிபெயர்ப்பு சிறுகதைகள் 14532*
*801.(5)* *சிறுவர் கதைகள்/நாவல்கள் 14533-14538*
*801.(7)* *சிறுவர்க்கான பலவின நூல்கள் 14539-14541*
*891.48* *சிங்கள இலக்கியம் 14542*
*894.8(01)* *தமிழ் இலக்கியப் பாடநூல்கள் 14543-14548*
*894.8(05)* *இலக்கிய அமைப்புகளின்/சஞ்சிகைகளின் சிறப்பிதழ்கள் 14549-14556*
*894.8(1)* *தமிழ்க் கவிதைகள் 14557-14663*
*894.8(11)* *மொழிபெயர்ப்புக் கவிதைகள் 14664*
*894.8(2)* *தமிழ் நாடகங்கள் 14665-14671*
*894.8(21)* *மொழிபெயர்ப்பு நாடகங்கள் 14672*
*894.8(3)* *தமிழ்க்கவிதை/இசை நாடகங்கள்-காவியங்கள் 14673-14675*
*894.8(4)* *தமிழ்ச் சிறுகதைகள் 14676-14728*

*894.8(41)* *மொழிபெயர்ப்புச் சிறுகதைகள் 14729-14731*
*894.8(5)* *தமிழ் நாவல்கள், குறுநாவல்கள் 14732-14821*
*894.8(51)* *மொழிபெயர்ப்பு நாவல்கள், குறுநாவல்கள் 14822-14830*
*894.8(6)* *பொது இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வு 14831-14857*
*894.8(621)* *இஸ்லாமியத் தமிழ், அரபுத்தமிழ் இலக்கியம் 14858-14859*
*894.8(622)* *கிறிஸ்தவ தமிழ் இலக்கியம் 14860*
*894.8(63)* *சங்க இலக்கியங்கள் தொடர்பானவை 14861*
*894.8(64)* *சமகால இலக்கிய ஆய்வுகள், கட்டுரைகள் 14862-14872*
*894.8(7)* *பலவினத் தொகுப்பு 14873-14878*
*894.8(87)* *அங்கதம்/நகைச்சுவை தொகுப்பு 14879*

**900 புவியியல், வரலாறுகள்**

*909* *நாகரீகங்கள் 14880-14881*
*910* *பொதுப் புவியியல் 14882*
*910.01* *புவியியல் பாடநூல்கள் 14883*
*910.(1)* *அபிவிருத்திப் புவியியல் 14884*
*911* *பிரயாண நூல்கள், வழிகாட்டிகள் 14885-14888*
*912* *தேசப்படங்கள் 14889-14891*
*920.01* *துறைசாரா வாழ்க்கைவரலாறுகள் 14892-14897*
*920.1* *ஊடகவியலாளர், ஒலிபரப்புத்துறையினர் 14898*
*922* *சமயத் தலைவர், சிந்தனையாளர் 14899-14909*
*923* *சமூகவியல்துறை சார்ந்தோர் 14910*
*923.2* *அரசியல் துறையினர் 14911-14921*
*923.5* *பொது நிர்வாகத்துறையினர் 14922*
*923.6* *சமூக சேவகர்கள் 14923*
*923.61* *விடுதலைப் போராளிகள்/இராணுவ வீரர்கள் 14924-14925*
*923.7* *கல்வியியலாளர்கள் 14926-14934*
*923.8* *வர்த்தகர்கள் 14935-14936*
*924* *மொழியியலாளர்கள் 14937-14939*
*926* *பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள் 14940*
*927* *கலைஞர்கள் 14941-14942*
*927.8* *இசைக்கலைஞர்கள் 14943*
*927.92* *நாடகக் கலைஞர்கள் 14944-14947*

*928* இலக்கிய அறிஞர்கள், புலவர்கள் *14948-14963*

*940* ஐரோப்பிய வரலாறு *14964*

*941* பிரித்தானிய வரலாறு*14965*

*953* அராபிய வரலாறு *14966*

*954.93* இலங்கை வரலாறு *14967*

*954.93(2)* இலங்கை இனப்பிரச்சினை வரலாறு *14968-14973*

*954.93(3)* இனங்கள், மக்கள் குழுமங்கள், இன உறவுகள் *14974-14976*

*954.93(4)* பிரதேச வரலாறு *14977-14988*

*954.93(41)* ஊர்ச் சங்கங்களின் சிறப்பு மலர்கள்/ஆண்டு மலர்கள் *14989-14990*

*954.93(5)* தொல்லியலாய்வு *14991-14993*

**999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்**

*999* பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள் *14994-15000*

# நூல்தேட்டம் தொகுதி 15
# வகுப்புப் பிரிவு

## 000 பொதுப்பிரிவு

### 000 பொது அறிவு

**14001**

**நுண்ணறிவு: போட்டிப் பரீட்சைக்குரிய உள ஆற்றலும் நுண்ணறிவு அளவீடும்.** *தி.லோகநாதன். கொழும்பு 6: அஸ்ரன் பதிப்பகம், 92, மனிங் பிளேஸ், 5வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, 1999, 2வது பதிப்பு, 2004, 3வது பதிப்பு, 2005, 4வது பதிப்பு, 2009. (கொழும்பு 6: அஸ்ரன் பதிப்பகம், 92, மனிங் பிளேஸ்).*

iv, *278 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 430., அளவு:* 21x14 *சமீ.*, ISBN: 978-955-0584-01-7.

*தர்க்கரீதியான உலகில் ஒவ்வொருவரினதும் ஆற்றலை அளவிடும் கருவியாக அமைவது நுண்ணறிவே. வர்த்தகம், கைத்தொழில் போன்ற பொருளாதார நடவடிக்கைகளுக்கும், விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற அறிவியல் நடவடிக்கைகளுக்கும் நுண்ணறிவு இன்றியமையாதது என உலகே ஏற்றுக் கொண்டுள்ளது.* SLEAS, SLAS *போட்டிப் பரீட்சைகளை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்ட நூல் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 52303).*

**14002**

**பொதுப் போட்டிப் பரீட்சை வழிகாட்டி (பொது அறிவு பொது உளச்சார்பு -நுண்ணறிவு).** P.*சக்திவேல். கொழும்பு 13: பிறைற் புக் சென்டர், இல. 77/24, ஜம்பட்டா வீதி, ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோவில் கிழக்கு வீதி, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 11: பிறைற் புக் சென்டர், எஸ்.27, முதலாவது தளம், த.பெ. இலக்கம் 162, கொழும்பு மத்திய சந்தை கட்டிடத் தொகுதி).*

*(4), 176 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 28x21.5 சமீ.*

*இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சை* (SLAS), *இலங்கை கல்வி நிர்வாக சேவை* (SLEAS), *பயிலுநர்/உதவி ஆசிரியர் போட்டிப் பரீட்சை, அரச எழுதுநர் ஆட்சேர்ப்பு பரீட்சை, ஆகியவற்றுக்கான பொது அறிவு பொது உளச்சார்பு (நுண்ணறிவு) கடந்தகால வினா-விடைகளும் பயிற்சிகளும் உள்ளடக்கியது.*

ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான மாதிரி வினா-விடைகளும் இணைக்கப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24334).

## 001 கணனியியல்

### 14003

**இலகு தமிழில் HTML.** வே.நவமோகன் (புனைபெயர்: கணினிப்பித்தன்). தெகிவளை: வெப் இன்டர்நெஷனல், இல. 7/3, ரூபன் பீரிஸ் மாவத்தை, களுபோவில, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (தெகிவளை: காயத்திரி பதிப்பகம்,).

68 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 22x14.5சமீ., ISBN: 955-97518-9-1.

கணினி உலகில் இணையப் பக்கங்களை வடிவமைக்கப் பயன்படுத்தப்படும் HTML மொழியை இந்நூல் எளிமையாக அறிமுகம் செய்கின்றது. தினகரன் வாரமஞ்சரியில் தொடர்ச்சியாக பிரசுரமாகிவந்த இலகு தமிழில் HTML என்ற தலைப்பிலான கட்டுரைத் தொடரின் தொகுத்த நூல்வடிவம் இதுவாகும். HTMLஇன் ஆரம்பப் பதிப்பு HTML 1.0 ஆகும். பின்னர் வந்த திருத்தப்பட்ட பதிப்புக்களின் வாயிலாக விருத்தி கண்ட HTML 4.0 பயன்படுத்தப்பட்ட வேளையில் இக் கட்டுரைகள் வெளியிடப்பட்டிருந்தன. எனவே HTML 4.0ஐ அடிப்படையாகக் கொண்டு HTMLஇல் உள்ள அடிப்படை விடயங்கள் அனைத்தும் இங்கு ஆராயப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 35671).

### 14004

**கணனி ஒரு அறிமுகம் (கணனியியல் பாகம் 1): கணனி வன்பொருள்.** சின்னத்துரை சற்குணநாதன். ஜேர்மனி: கணனியியல் கல்வி நிலையம், Norderneyer Str.3, 65199, Wiesbaden, வீஸ்பாடின், 1வது பதிப்பு, 2006. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(6), 95 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14சமீ.

கணனித் துறையில் தனது முப்பதாண்டு சேவையினை அடிப்படையாகக் கொண்டு Hardware பற்றிய இந்நூலை உருவாக்கியுள்ளார். முதலாம் அத்தியாயத்தில், கணனி ஒரு அறிமுகம், கணனியின் தொழில்நுட்ப வளர்ச்சியும் இதன் ஆரம்பமும், அபகஸ், இலத்திரனியல் கணனியின் ஆரம்பம், மின் சக்தியின் உதவியுடன் இயக்கப்பட்ட முதற் கணனி, எண் இலத்திரனியல் கணனி, மையச் செயற்பாட்டகம் அறிமுகங்கள், கணனித் தொழில்நுட்ப வல்லுநர்களின் செயற்பாடுகள், கணனித் தொழில்நுட்பக் கலைச்சொற்கள், கணனி ஆங்கிலக் கலைச்சொற்களின் விரிவாக்கம் என்பனவும், இரண்டாம் அத்தியாயத்தில் இலத்திரனியல் தகவற் தொடர்பியல், ஆரம்பகாலத் தொலைத் தொடர்பியல் முறைகள், கணனியின் இருமை எண் மொழி, இருமை எண் கணிப்பு முறை, சமாந்தர, தொடர் மின்னணுச்

*சாதனங்கள், ஆஸ்கி குறியீடு, மின்னணு இணைப்பு, கணனி தொழில்நுட்பக் கலைச்சொற்கள், கணனி ஆங்கிலக் கலைச்சொற்களின் விரிவாக்கம் என்பனவும், மூன்றாம் அத்தியாயத்தில் நுகர்வோர் கணனியின் செயற்பாட்டின் மேலோட்ட விளக்கம், கணனியின் மூன்று கட்டக் கணிப்புப் பகுதிகள், தகவல் உட்செலுத்துதல், தகவல் செயற்படுத்தல், தகவல் வெளிக்கொண்டுவருதல், தகவல் உட்செலுத்தல், செயற்படுத்தல், வெளிக்கொண்டுவருதல் என்பவற்றைத் தொழிற்படுத்தும் முறை, பல்வேறு விதமாகத் தொழிற்படும் கணனிப் பாகங்களான இலத்திரனியல் சாதனங்கள், தகவல் உட்செலுத்தும் கணனி மின்னணுச் சாதனங்கள், தகவல் செயற்படுத்தும் கணனி மின்னணுச் சாதனங்கள், தகவல் வெளிக்கொண்டுவரும் கணனி மின்னணுச் சாதனங்கள், தகவல் உட்செலுத்தல், வெளிக்கொண்டுவருதல் ஆகிய இரு செயற்பாடுகளைச் செய்யும் மின்னணுச் சாதனங்கள், கணனியின் தரமான செயற்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் உறுதுணையான வன்பொருட்கள், கணனி தொழில்நுட்பக் கலைச்சொற்கள், கணனி ஆங்கிலக் கலைச்சொற்களின் விரிவாக்கம் என்பனவும் விளக்கப்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 41076).*

### 14005

**கணினி வழிகாட்டி: 5.** வே.நவமோகன் (தொகுப்பாசிரியர்). தெகிவளை: காயத்திரி பப்ளிக்கேஷன், த.பெ.இலக்கம் 64, 1வது பதிப்பு, மே 2003. (தெகிவளை: காயத்திரி பதிப்பகம்).

*48 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 50.00, அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *955-98004-3-4.*

Task Bar ஐ *ஒழுங்கமைப்பது எப்படி?,* Flash Drive *என்றால் என்ன?,* MP3 *என்றால் என்ன?,* CD*களைப் பாதுகாப்பது எப்படி?, பிரிண்டர் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது எப்படி?, இரும மொழி என்றால் என்ன?,* Brief case *என்றால் என்ன- அதை பயன்படுத்துவது எப்படி?,* Restore *செய்வது எப்படி?,* Peep *ஒலிகளைக் கொண்டு பிரச்சினைகளை அறிவது எப்படி?, விண்டோவை பயன்படுத்துவது எப்படி?, ஈ-மெயில்,* Windows Explorer *என்றால் என்ன?,* System Standby *என்றால் என்ன?, இன்டர்நெட் பிரௌசர்களை பயன்படுத்துவது எப்படி?, பாலியல் தளங்களை வடிகட்டுவது எப்படி?, மைக்ரோசொப்ட் பவர்பொயின்ட்- சில குறுக்குவழிகள், இன்டர்நெட் துணுக்குகள் ஆகிய கேள்விகளுக்கு இந்நூலில் விளக்கப் படங்களுடன் பதிலளிக்கப்பட்டுள்ளது. இக்குறிப்புகள் முன்னர் தினகரன் வாரமஞ்சரியில் கணனி மஞ்சரி பகுதியில் வெளிவந்திருந்தன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 29980).*

## 010 நூலியல், நூல்விபரப்பட்டியல்

### 14006

**நூல்தேட்டம் தொகுதி 14.** *என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், இணை வெளியீட்டாளர், கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜுன் 2020. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xviii, *623 பக்கம், விலை: ரூபா 2500., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-659-666-3.*

*தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான குறிப்புரையுடன் வெளிவந்துள்ள நூல்விபரப்பட்டியலின் பதினான்காவது தொகுதி இதுவாகும். இத்தொகுதியில் மேலும் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவி தசாம்சப் பகுப்புமுறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. பதிவுகள் 13001-14000 வரை தொடர் இலக்கமிடப்பட்டுள்ளன. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றுடன் இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் படைப்புக்களும், முன்னைய தொகுதியின் பதிவுகளுக்கான மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும்.*

## 020 நூலகவியல், தகவல் விஞ்ஞானம்

### 14007

**உலகத் தமிழர்ஆவணக் காப்பகம்: ஓர் அறிமுகம்.** *குரும்பசிட்டி இரா.கனகரத்தினம், பவளராணி கனகரத்தினம். கண்டி: குரும்பசிட்டி இரா.கனகரத்தினம், ஹெட்டியாவத்தை, முல்கம்பொலை, 1வது பதிப்பு, 1996. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*26 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22*x*14 சமீ.*

*உலகத் தமிழர் ஆவணக் காப்பகம் கண்டியில் இலங்கைத் தமிழர் தொடர்பான பல்வேறு ஆவணங்களைச் சேகரித்துப் பாதுகாக்கும் ஓர் ஆவணக் காப்பகமாக உருவாக்கப்பட்டிருந்தது. இது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அணுக்கத் தொண்டராகவிருந்த குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் அவர்களின் 45 ஆண்டுப் பணியால் உருவாக்கப்பட்ட ஆவணக் காப்பகம் ஆகும். குறிப்பாக இந்த ஆவணக் காப்பகத்தில் 1899 தொடக்கம் தொடர்ச்சியான தமிழர் வரலாறு திரட்டப்பட்டிருந்தது. இதில் ஒரு பகுதி ஆவணங்கள் மைக்ரோ பிலிம்களாக (200) யுனெஸ்கோ நிறுவனத்தின் உதவியுடன் சுவிற்சர்லாந்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு தொகை இன்னும் மைக்ரோ பிலிம்களாக பதிவுசெய்யப்பட வேண்டியிருந்தன. இது கண்டியில் நிலவிய பாதுகாப்பின்மையால் 2000களில் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்தது. இலங்கைப் படையினரால் கிளிநொச்சி*

*அழிக்கப்பட்டபோது இந்த ஆவணக்காப்பகமும் அழிக்கப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24858).*

### 14008

**நூலக முகாமைத்துவம்.** W.J. ஜெயராஜ்.கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், *இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

xi, *90 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-659-522-2.*

*நிறுவன அமைப்பு முறையும் முகாமைத்துவமும், நூலக நிறுவனம்-அமைப்பும் நடைமுறையும், முகாமைத்துவக் கோட்பாடுகள், விஞ்ஞான முகாமைத்துவக் கோட்பாடு, நிர்வாகக் கோட்பாடு, மனிதத் தேவைகள் கோட்பாடு, பணிக் குழுவாட்சித் தத்துவம், தந்திரோபாய முகாமைத்துவம், பேரழிவு-அநர்த்த முகாமைத்துவம், முரண்பாட்டு முகாமைத்துவம், அறிவு முகாமைத்துவம், நூலகக் கட்டிட முகாமைத்துவம் ஆகிய 12 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. குமரன் புத்தக இல்லத்தினரின் 710ஆவது பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது.*

## 051 பொதுப் பருவஇதழ் சிறப்பிதழ்கள்

### 14009

**தமிழர் தகவல் 2000. ஒன்பதாவது ஆண்டு மலர் (மிலேனியம் மலர்).** எஸ்.திருச்செல்வம் *(பிரதம ஆசிரியர்). கனடா: அகிலன் அசோஷியேட்ஸ்,* P.O.Box 3, Station F,Toronto, *1வது பதிப்பு, பெப்ரவரி 2000.* (Canada: Ahilan Associates, Printers and Publishers, Toronto).

*158 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5*x*21 சமீ.,* ISSN: 1206-0585

*கனேடியத் தமிழ் மக்களின் நடவடிக்கைகள், பிரச்சினைகள், தீர்வுகள், வளர்ச்சிகள், அத்தகைய வளர்ச்சிக்காக உழைக்கும் பெரியார்கள் தொடர்பான பல தகவல்கள், ஆய்வுக் கட்டுரைகள் என்பனவற்றைத் தாங்கி பெப்ரவரி 1991 முதல் வெளிவரும் மாதாந்த சஞ்சிகையின் ஒன்பதாவது ஆண்டு மலர் இது. இவ்விதழின் பிரதம ஆசிரியர் எஸ். திருச்செல்வம் இலங்கையின் ஒரு சிறந்த ஊடகவியலாளர், அரசியல் ஆய்வாளர், இலக்கிய விமர்சகர், தேசிய செயற்பாட்டாளர், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த முரசொலி தினசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர். தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25212).*

### 14010

**தமிழர் தகவல் 2003. பன்னிரண்டாவது ஆண்டு மலர் (மாமாங்க மலர்).** *எஸ்.திருச்செல்வம் (பிரதம ஆசிரியர்). கனடா: அகிலன் அசோஷியேட்ஸ்,* P.O.Box 3, Station F,Toronto, *1வது பதிப்பு, பெப்ரவரி 2003.* (Canada: Ahilan Associates, Printers and Publishers, Toronto).

*152 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5*x*21 சமீ.,* ISSN: *1206-0585*

*பெப்ரவரி 1991 முதல் கனடாவிலிருந்து வெளிவரும்* **தமிழர் தகவல்** *மாத சஞ்சிகையின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு மலர். அமெரிக்க, கனடியத் தமிழ் மக்களினதும், ஐரோப்பியத் தமிழர்களினதும் 100க்கும் மேற்பட்ட அறிவியல் ஆக்கங்களைத் தாங்கி இது வெளிவந்துள்ளது. தமிழர் தகவல் ஆண்டுதோறும் வழங்கும் விருதுகளைப் பெறுவோர் பற்றிய விபரங்களும் இம்மலரில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. பெப்ரவரி 2003இல் கனடாவின் ரொரன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா மண்டபத்தில் இடம்பெற்ற ஆண்டு விழாவின்போது இம்மலர் வெளியிடப்பட்டது.(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28337).*

### 14011

**தமிழர் தகவல் 2020. 29ஆவது ஆண்டு மலர்: இளமதிச் சுவடு.** எஸ்.திருச்செல்வம் *(பிரதம ஆசிரியர்),* Canada: Tamil's Information, Ahilan Associates, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4, *1வது பதிப்பு, பெப்ரவரி 2020.* (Canada: Ahilan Associates, Printers and Publishers, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4).

*172 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28*x*21.5 சமீ.,* ISSN:*1206-0585.*

*பெப்ரவரி 1991 முதல் கனடாவிலிருந்து வெளிவரும் தமிழர் தகவல் மாத சஞ்சிகையின் 29ஆவது ஆண்டு நிறைவு மலர். அமெரிக்க, கனடியத் தமிழ் மக்களினதும், ஐரோப்பியத் தமிழர்களினதும் 100க்கும் மேற்பட்ட அறிவியல் ஆக்கங்களைத் தாங்கி இது வெளிவந்துள்ளது. தமிழர் தகவல் ஆண்டுதோறும் வழங்கும் விருதுகளைப் பெறுவோர் பற்றிய விபரங்களும் இம்மலரில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. 09 பெப்ரவரி 2020 அன்று கனடாவின் ரொரன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா மண்டபத்தில் இடம்பெற்ற ஆண்டு விழாவின்போது இம்மலர் வெளியிடப்பட்டது.*

### 14012

**நிகர்: சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011: சிறப்பிதழ்.** *அ.லெட்சுமணன் (ஆசிரியர்), வே.தினகரன் (உதவி ஆசிரியர்). நாவலப்பிட்டி: நிகர் வெளியீடு, 83, கொத்மலை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2011. (நாவலப்பிட்டி: ராஜா அச்சகம்).*

*98 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*15 சமீ.*

நிகர் நோக்கிய (ஆசிரியர் தலையங்கம்), சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 பிரதம அமைப்பாளர் லெ. முருகபூபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி (லெ.முருகபூபதி), உலக தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க இலங்கைக் கிளை செயலாளர் அந்தனி ஜீவா அவர்களின் வாழ்த்துச் செய்தி (அந்தனி ஜீவா), சர்வதேச தேயிலை தினம் வரலாற்றுப் பின்னணி (ஓ.ஏ. இராமையா), சிறுகதைகள் (காலத்தின் கட்டளை/ செ.தமிழ்ச்செல்வன், தப்பாட்டம்/ மல்லிகை சி. குமார், புதிய சந்தா/ பெ.லோகேஸ்வரன்), சிங்கள இலக்கிய மறுமலர்ச்சியின் பின்னணியில் மார்டின் விக்கிரமசிங்க (க.முரளிதரன்), தமிழ் வீறு நாம் பெற வேண்டும் (அ.வைத்தியலிங்கம்), கவிதைகள் (தேசியம்/ அருணா, தாய்த் திருநாட்டுக்கு/ பெ.தினகரன், முழக்கமிடு/ ச.சத்தியநாதன், பிரட்டுக்கு வராத பிராதுகள்/ சிவனு மனோஹரன்), மனித நேயம் வேண்டி (பி.திருநாவுக்கரசு), இளமையின் கீதம்: சீன பழைமை சமூகத்தை எதிர்த்து போரிட்ட ஒரு இளம் பெண்ணின் கதை (லெனின் மதிவானம்), மலையக மக்களும் - தேசிய இனத்துவ ஜனநாயக - மனித உரிமை மறுப்புக்களும் (அ.லோறன்ஸ்), நாம் இந்திய வம்சாவளியினரா மலையக மக்களா? (சி.சிவகுமாரன்), தமிழர் பண்பாட்டு கலைகளின் இன்றைய போக்கு (வே.இராமர்) ஆகிய படைப்பாக்கங்களை இச்சிறப்பு மலர் கொண்டுள்ளது.

மேலும் பார்க்க: செங்கதிர்: **14955**

வலு: காலாண்டிதழ் வெள்ளி மலர்: 25வது சிறப்பிதழ். **14345**

## 060 பொது நிறுவனங்கள்

### 14013

**கிராமிய பூபாளம் 2018: சர்வோதய சிறப்பு மலர்.** மலர்க்குழு. ஜேர்மனி: புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம், என்னப்பெற்றால், 1வது பதிப்பு, 2018. யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

117 பக்கம், வண்ணப்படங்கள், விலை: அன்பளிப்பு, அளவு: 29x20.5 சமீ.

புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம் ஜேர்மனியில் என்னெப்பெற்றால் பிரதேசத்தில் 30.09.2017 அன்று நடத்திய கிராமிய பூபாளம் கலைமாலைப்பொழுது நிகழ்வில் வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். மேற்படி நற்பணி ஒன்றியத்தினதும், புங்குடுதீவு சர்வோதய இயக்கத்தினதும் பல்வேறு தாயகப் பணிகள் பற்றிய புகைப்படங்களுடன் கூடிய நிகழ்வு அறிக்கைகளுடன், ஆசியுரைகள், கட்டுரைகள் என்பனவும், கடந்த ஆண்டு நடைபெற்ற கிராமிய பூபாளம் 2017 நிகழ்வுகளின் புகைப்படத் தொகுப்பும் இடம்பெற்றுள்ளன. இம்மலர்க்குழுவில் கணேசு மகாலிங்கம், ஜெயந்தி கேதீஸ்வரன், பொன்னம்பலம் ஜமுனாதேவி, கிருஷ்ணமூர்த்தி மனோரதி ஆகியோர் பங்காற்றியுள்ளனர்.

## 14014

**கொழும்புத் தமிழ்ச்சங்கம்: 49, 50ஆவது ஆண்டுப் பொது அறிக்கை (1990-1991).** கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு. கொழும்பு 6: ஆட்சிக் குழு, கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல. 7, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 1991. (கொழும்பு-13: எம்.ஜி.எம். பிரிண்டிங் வேர்க்ஸ், 102/2, Wolfendhal Street).

25 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

1942ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் தமிழர் முன்னேற்றக் கழகம், 1945இல் கொழும்புத் தமிழ்ச் சங்கம் எனப் பெயர் பெற்றது. 1990-1991 ஆண்டுக் காலகட்டத்துக்கான இச்சங்கத்தின் 49ஆம், 50ஆம் ஆண்டறிக்கை நூலுருவில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36547).

## 14015

**கொழும்புத் தமிழ்ச்சங்கம்: ஆண்டுப் பொது அறிக்கை (1994).** கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு. கொழும்பு 6: ஆட்சிக் குழு, கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல. 7, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 14: ஸ்டார் லைன் அச்சகம், 213, கிரான்ட்பாஸ் வீதி).

(10), 30 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

1942ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் தமிழர் முன்னேற்றக் கழகம், 1945இல் கொழும்புத் தமிழ்ச் சங்கம் எனப் பெயர் பெற்றது. 1994 ஆம் ஆண்டுக்கான இச்சங்கத்தின் ஆண்டறிக்கை நூலுருவில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36547).

## 14016

**கொழும்புத் தமிழ்ச்சங்கம்: 57வது ஆண்டுப் பொது அறிக்கை (1998-1999).** கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு. கொழும்பு 6: ஆட்சிக் குழு, கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல. 7, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 1999. (கொழும்பு-13: எம்.ஜி.எம். பிரிண்டிங் வேர்க்ஸ், 102/2, Wolfendhal Street).

32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

1942ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் தமிழர் முன்னேற்றக் கழகம், 1945இல் கொழும்புத் தமிழ்ச் சங்கம் எனப் பெயர் பெற்றது. 1998-1999 காலகட்டத்துக்கான இச்சங்கத்தின் ஐம்பத்தேழாவது ஆண்டறிக்கை நூலுருவில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36547).

## 070 ஊடகவியல், வெளியீட்டுத்துறை

### 14017

**ஆளுமைகளுக்கான விருதுகள்-2019**. *ஐபீ.சீ. தமிழ். யாழ்ப்பாணம்: நிராஜ் டேவிட், நிறைவேற்றுப் பணிப்பாளர், ஐ.பீ.சீ. தமிழ், 1வது பதிப்பு, 2019. (யாழ்ப்பாணம்: பிரகபி கிராபிக் டிசைனர்ஸ், இல. 1219, காங்கேசன்துறை வீதி, பூநாறி மடம்).*

xvi, *50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.*

*ஐ.பீ.சீ. தமிழ் ஊடகத்தினரால் 2019இல் யாழ்ப்பாணத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட முதலாவது சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்வையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பிதழ். பிரமுகர்களின் வாழ்த்துச் செய்திகளுடன் விருதுகளைப் பெறும் சாதனையாளர்களைப் பற்றிய ஒரு பக்க அறிமுகக் குறிப்புகள் அவர்களது புகைப்படங்களுடன் இம்மலரில் தொகுக்கப்பெற்றுள்ளன. இசைவாணர் எம். கண்ணன், தமிழ்க் கவி (தமயந்தி சிவசுந்தரலிங்கம்), கோகிலா மகேந்திரன், நவரத்தினம் கேசவராஜன், வெற்றிச் செல்வி, புதுவை அன்பன், சண்.யோகரத்தினம் (ராதேயன்), அபயன் கணேஷ், தர்சினி சிவலிங்கம், சி.மௌனகுரு, பண்டாரம் சின்னராசா, ஆசை இராசையா, பார்வதி சிவபாதம், அருணா செல்லத்துரை, ஓ.கே.குணநாதன், வைரமுத்து தர்மகுலநாதன், இரத்தினம் சிவலிங்கம், சிவராஜதேவா விஜயதுஷ்யந்தன், செல்லப்பிள்ளை ஜெயராசா, வல்லிபுரம் கானமயில்நாதன், சாந்தினி சிவநேசன், ராஜேஸ்வரி தெட்சணாமூர்த்தி, குழந்தை செபமாலை, கந்தப்பிள்ளை சின்னத்தம்பி, வெள்ளையன் சுப்ரமணியம், கோதண்டபாணி பஞ்சரத்தினம், சுப்பிரமணியம் பத்மநாதன், பரமு புஷ்பரத்தினம், நா.யோகேந்திரநாதன், சிவசுப்பிரமணியம் (ரமணி), செபஸ்தியாம்பிள்ளை ஜோசப் பாலா, சண்முகரட்ணம் இரட்ணவேல், இராசு புண்ணியமூர்த்தி, ஏ.ஜோசப் (அருளானன்), சுப்பிரமணியம் லோகநாதன், குழந்தை ம.சண்முகலிங்கம், எபனேசர் நேசராஜ் உவொட்ஸ்வேர்த், வண.ஆயர் ராயப்பு ஜோசப் ஆண்டகை, இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன், முருகன் மோகன்ராஜ், கி.ரவிச்சந்திரன் (கருணை ரவி), கோகுலன் (நடராசா இராமநாதன்), நமசிவாயம் விஜயரத்தினம் (மணலாறு விஜயன்), நா.தர்மராசா (அகளங்கன்), தங்கமுத்து சத்தியமூர்த்தி, வண. நிக்கலாஸ் பிள்ளை மரிய சேவியர் அடிகள், பசுமை இயக்கம்-திருகோணமலை, உதுமாலெப்பை முகம்மது அதீக் (சோலைக்கிளி), ஜின்னா ஷரிபுத்தீன், மா.இரத்தினசோதி ஆகிய கலை இலக்கிய அறிவியல் ஆளுமைகள் விருதுகளைப் பெற்றிருந்தனர்.*

### 14018

**ஐம்பது ஆண்டு பாராளுமன்ற அனுபவம்(50 years as Lobby Correspondent).** *எஸ்.தில்லைநாதன். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், த.பெட்டி 160, 1வது பதிப்பு, மார்ச் 2014. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி).*

xvii, 226 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x16.5 சமீ., ISBN: 978-955-0811-07-6.

ரயில்வே திணைக்களத்தில் ஒரு பதவியை ஏற்பதற்குத் தயாராகிக்கொண்டிருந்த வேளையில் தற்செயலாகத் தனது உறவினர் ஒருவரின் மூலம் வீரகேசரி பத்திரிகையில் நிருபராக இணையும் வாய்ப்பினை 1962இல் பெற்றவர் தினகரன் பிரதம ஆசிரியர் கலாபூஷணம் எஸ்.தில்லைநாதன். அன்று வீரகேசரி இணை ஆசிரியராக இருந்த பத்திரிகையாளர் எஸ்.டி.சிவநாயகம் அவர்களையே இவரது ஊடகத்துறை குருவாகக் கருதுகிறார். அவரது ஆலோசனையின் பேரிலேயே பாராளுமன்ற செய்திகளை எழுதும் நிருபராகப் பணியாற்றத் தலைப்பட்டவர் இவர். இவரது வழிகாட்டிகளாக வீரகேசரி இணை ஆசிரியர் அமரர் ஈ.வி.டேவிட் ராஜு, முன்னாள் பிரதம ஆசிரியர் அமரர் எஸ் நடராஜா, வீரகேசரியின் சிரேஷ்ட பத்திரிகையாளர் எஸ்.தியாகராஜா ஆகிய மூவரையும் குறிப்பிடும் திரு. தில்லைநாதன் அவர்கள் இந்நூலில் தான் பாராளுமன்ற செய்திச் சேகரிப்பின் போது பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் கண்டறிந்த வரலாற்று முக்கியத்துவமானதும் சுவையானதுமான செய்திகளையும் 39 அத்தியாயங்களில் பகிர்ந்து கொள்கிறார். அமைச்சர் திருச்செல்வத்தின் கழுத்தை பிரதமர் டட்லியின் எதிரிலேயே நெரித்த திஸ்ஸமஹாராமை எம்.பி. சார்ளி எதிரிசூரியா பற்றியும், மாவட்டசபை முரண்பாட்டில் பதவியை ராஜினாமா செய்ய முன்வந்த பா.உ. திருச்செல்வம் பற்றியும், சுவிஸ் வங்கி பற்றி எழுதியதால் தான் சீ.ஐ.டி. விசாரணைக்கு உட்பட்டது பற்றியும், டாக்டர் தஹாநாயக்கா ஓரிரவில் பல அமைச்சர்களை பதவிநீக்கம் செய்து சாதனை படைத்தது பற்றியும், எம்.ஜி.ஆர். சரோஜா தேவியுடன் வீரகேசரி அலுவலகத்துக்கு வந்தமை பற்றியும் என பல சுவாரஸ்யமான சம்பவங்கள் இந்நூலில் சுவையாக பகிர்ந்துகொள்ளப்பட்டுள்ளன.

## 14019

**பத்திரிகை ஆசிரியர்களுக்கான கையேடு.** ஆர். பாரதி. கொழும்பு 5: இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு, 96, கிருல்ல வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).

96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15.5 சமீ.

பத்திரிகை ஆசிரியர்களுக்கான தொழில்சார் நடைமுறைக்கோவை (ஒழுக்கக் கோவை) இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் நடைமுறையும் நியமங்களும், ஊடக சுதந்திரமும் சமூகப் பொறுப்பும் தொடர்பான கொழும்புப் பிரகடனம் மற்றும் அது தொடர்பான விடயங்களும் அடங்கிய கையேட்டுப் பிரதியாகும். பத்திரிகையாளர்களின் நாளாந்தத் தொழில் வாழ்க்கைக்கு மிகவும் பிரயோசனமான ஒரு உசாத்துணை நூல். 1998இன் கொழும்புப் பிரகடனத் தினூடாக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இவ்வாணைக்குழுவே பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகையாளர்களுக்கான சுயகட்டுப்பாட்டுப் பொறிமுறையான ஒழுக்கக் கோவையையும் நடைமுறைப் படுத்துகின்றது. கொழும்புப் பிரகடனம் மீளாய்வு செய்யப்பட்ட 2008இல்

திருத்தப்பட்டவேளை பத்திரிகை ஆசிரியர் சங்க ஒழுக்கக் கோவையும் திருத்தி எழுதப்பட்டது. அவ்வாறு திருத்தி இற்றைப்படுத்தப்பட்ட பதிப்பே இக்கையேடாகும்.

## 070.01 ஆசிரியத் தலையங்கங்கள்/பத்தி எழுத்துக்கள்

### 14020

**பகிர்தலும் புரிதலும்: ஞானம் பத்திரிகை ஆசிரியத் தலையங்கங்கள்.** தி.ஞானசேகரன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2018. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxvi, 418 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-8354-88-9.

பகிர்தலும் புரிதலும் என்ற தலைப்பில் தொகுத்து வெளியிடப்படும் ஞானம்-ஆசிரியர் தலையங்கங்கள் கடந்த இரண்டு தசாப்தகால அரசியல், சமூக, பொருளாதார, கலை இலக்கிய விடயங்களின் ஒரு வெட்டுமுகத்தை வாசகர்களுக்குத் தொகுத்துத் தருகின்றன. இதில் இலக்கியம் என்ற பிரிவின்கீழ் 26 ஆசிரியத் தலையங்கங்களும், சமூகம் என்ற பிரிவின்கீழ் 25 ஆசிரியத் தலையங்கங்களும், அரசியல் என்ற பிரிவின்கீழ் 25 ஆசிரியத் தலையங்கங்களும், பல்துறை என்ற பிரிவின்கீழ் 25 ஆசிரியத் தலையங்கங்களுமாக மொத்தம் 101 தலையங்கங்கள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. ஞானசேகரனின் ஆசிரியத் தலையங்கங்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களின் அடிப்படையில் அவரின் சமூக, பண்பாட்டு, அரசியல், இலக்கிய, கல்வி, கலைகள் தொடர்பான சிந்தனைகளை பாரம்பரியமான வாழ்வியல் தடத்தில் ஆழமாகக் கால்பதித்த நிலையில் இருந்தவாறே, அதனைக் கடந்த உலக ஓட்டங்களின் தடங்களைத் தொட எத்தனிக்கும் ஈழத்து இலக்கிய அறிஞர் ஒருவரின் கருத்துநிலைகளாக நோக்கலாம். நூலின் இறுதிப் பகுதியில் அமைந்த "புரிதல்கள்" என்னும் பகுதியில் அமைந்த பெரும்பாலான குறிப்புகளில் பிரபல எழுத்தாளர்கள், புத்திஜீவிகள், வாசகர்கள் எனப் பல்திறப்பட்டோர் ஞானத்துக்கு எழுதிய கருத்துக்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டுள்ளன. வரதர், சிற்பி, நந்தி, கே.கணேஷ், வல்லிக்கண்ணன், கா.சிவத்தம்பி முதலான அமரத்துவ மடைந்தவர்களின் கருத்துக்களும், வாழும் பலரது கருத்துகளும் எதிர்வினைகளும் இப்பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இவற்றை ஆசிரியர் தலையங்கங்களுடன் சேர்த்து வாசிக்கும்போது, ஞானம் இதழின் கனதியை புரிந்துகொள்ள முடிகின்றது.

### 14021

**மூனாவின் நெஞ்சில் நின்றவை.** மூனா (இயற்பெயர்: ஆழ்வாப்பிள்ளை தெட்சணாமூர்த்தி செல்வகுமாரன்). ஜேர்மனி: மனஓசை வெளியீடு, Manaosai Verlag, Schweickerweg 29, 74523 Schwabisch Hall, Deutschland, 1வது பதிப்பு, மார்ச் 2019. (ஜேர்மனி: Stuttgart).

*(5), 6-144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.,* ISBN: *978-3-9813002-7-7.*

*ஓவியராகவும், கருத்தோவியராகவும் அறியப்பட்ட "மூனா" தாயகத்தில் தான் சந்தித்துக் கொண்டவற்றில் அவ்வப்போது நெஞ்சில் விழித்துக்கொண்ட சம்பவங்களை சுவைபட இணைய உலகில் பத்தி எழுத்துக்களாகப் பதிவுசெய்து வந்திருக்கிறார். அவற்றில் 22 தேர்ந்த பதிவுகள் இவை. முடித்து வைக்கப்பட்ட வழக்கு, நின்று கொல்லும் தெய்வம் வந்துவிட்டது, மோனைப் பொருளே மூத்தவனே, பெயரைச் சொல்லவா?, காதலிக்காதே கவலைப்படாதே, ஆடவரெல்லாம் ஆடவரலாம், பள்ளிக்கூடம் போகலாம், அறுபது பாகக் கிணறு, ஓடிப்போனவன், கிறுக்கன் என்கின்ற பண்டிதர் வீரகத்தி, கிராமக்கோட்டுச் சந்தி மதவு, சந்தி வாடகைக்கார், மார்க்கிரெற் அன்ரி, முத்து அக்கா, எங்கள் ஊர் முதலாளி, வடையும் மோதகமும் அண்ணன் தம்பி, பார்க்காதே பார்க்காதே, பெண் பார்க்கப் போறேன், கடன் வாங்கிக் களியாட்டம், கள்ளுக்கொட்டில் பக்கம் போகாதே, நாலும் தெரிந்தவன், ஓடிய ஓட்டம் என்ன ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65827).*

**மேலும் பார்க்க: சுவாமி விபுலானந்தரின் தலையங்க இலக்கியம் 15000**

# 100 மெய்யியல்துறை

## 150 உளவியல்

### 14022

**தன்னாத்மாவைத் தேடி அலையும் மனிதன் (பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரை).** *தயா சோமசுந்தரம். யாழ்ப்பாணம்: பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுக் குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, வைகாசி 1994. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(2), 40 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.*

**தன் ஆத்மாவைத் தேடி அலையும் மனிதன்.** *தயா சோமசுந்தரம். யாழ்ப்பாணம்: அமரர் தம்பு தாமோதரம்பிள்ள நினைவுப் பதிப்பு, இணுவில், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2019. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

*56 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.*

*பேராசிரியர் தயா சோமசுந்தரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உள மருத்துவத்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் நினைவுப் பேருரையாக அவரால் 18.05.1994 அன்று நிகழ்த்தப்பட்ட உரையின் நூல்வடிவத்தின் மீள்பதிப்பாக இப்பிரசுரம் வெளிவந்துள்ளது. உலக*

வாழ்க்கையில் ஒவ்வொரு ஆதாரத்திலும் பள்ளிக்கூட வகுப்புகள் போல அத்தரத்துக்கான பாடப்படிப்பு முடிந்து தேர்ந்த பிறகு, அடுத்த வகுப்புக்கு-ஆதாரத்துக்கு மனிதன் உயர்த்தப்படுகின்றான். இன்னொரு வகையில் கூறுமிடத்து குண்டலினி எந்த ஆதாரத்தில் நிலைகொள்கின்றதோ அதற்கு ஏற்றவாறு அந்த மனிதனின் தனு, கரண, புவன, போகங்கள் அமைகின்றன என்றவாறாக மனிதனின் ஆத்மா பற்றிய நுணுக்கங்களை இப்பேருரை விளக்குகின்றது. யாழ்ப்பாணம், இணுவிலைச் சேர்ந்த கணேஷ் என்றழைக்கப்பட்ட அமரர் தம்பு தாமோதரம்பிள்ளை (26.06.1929-27.07.2019) அவர்களின் நினைவு மலராக 25.08.2019 அன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. இவர் நுவரெலியா, வட்டகொடவில் உள்ள மெடேகொம்பர அரச பெருந்தோட்டத்தின் தலைமைக் களஞ்சியப் பொறுப்பாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22299).

## 158.1 மானிட மேம்பாடு

### 14023

**உலகெலாம்**. மட்டுநகர் ராகுல் நாயுடு (இயற்பெயர்: நல்லசாமி பிரதீபன்). மட்டக்களப்பு: நல்லசாமி பிரதீபன், வந்தாறுமூலை, 1வது பதிப்பு, ஜூன் 2014. (மட்டக்களப்பு: Talent Advertising and Marketing).

xxiv, 125 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 490., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-41303-0-2.

“மதங்களை மதிப்போம், மதவெறியினைத் தவிர்ப்போம், புதியதோர் உலகம் செய்வோம்” என்ற தாரக மந்திரத்துடன் விரியும் இந்நூல் உலகில் மனிதன் பதிலைத் தேடுகிறான், வழிபாடு, கடவுள், சமயங்கள், மனிதன், கர்மம், விஞ்ஞானமும் மெய்ஞானமும், பிரபஞ்சமும் கொள்கைகளும், உணவு, அறிவு, அன்பே தியானம், உலகெலாம் ஆகிய இயல்களில் எழுதப்பட்டுள்ளது. மனிதர்கள் இனம், மதம், மொழி என்று பிளவுண்டு திசைக்கொன்றாகி நிற்கும் வேளையில் இந்நூலானது வாசகர் மனதில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தி மனிதர்கள் அனைவரும் கடவுளின் பிள்ளைகளே என்ற கருத்தை வலியுறுத்துவதே ஆசிரியரின் நோக்கமாகின்றது. நூலைப்பற்றி தனது கருத்துரையில் திருமந்திரம், தம்மபதம், பைபிள், திருக்குர் ஆன், பகவத்கீதை, சித்தர்கள் பாடல் என்பவற்றில் இருந்து வாசகர்களுக்காக எடுத்துக் காட்டி உள்ளதாகக் கூறியுள்ளார். நாம் தேடும் அந்தப் பொருள் கருவில் கூடியிருந்தது. அதை நம்மில் பலர் கழித்து விடுவதனால் உண்மையை உணராமல் தவிக்கிறோம். அதைப் பெருக்கி விடுபவர்கள் உண்மையை உணர்ந்தவராவர். இதனை இஸ்லாம் அவர் மறுமை வீட்டைத் தேடிக்கொண்டவர் எனவும், கிறிஸ்தவம் அவர் மரணத்தை விட்டு நித்திய ஜீவனுக்கு உட்பிரவேசிக்கின்றார் எனவும், பௌத்தம் பரிநிர்வாணம் அடைந்து விட்டார் எனவும், சனாதன தர்மம் மோட்சம் அல்லது சிவமாகிவிட்டார் எனவும் எடுத்துரைக்கின்றன. ஒவ்வொரு மனிதனின் இலக்கும் தன்னை உணர்ந்து

சமயங்களின் புனித நூல்கள் விபரிக்கும் பரிசுத்தமான நிலையை அடைவதேயாகும். இதுவே மனித வாழ்வின் இறுதி இலக்காக இருக்கவேண்டும் என்பதும் நூலாசிரியரின் கருத்தாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61340).

## 158.3 உளவளத்துணை (Counseling)

### 14024

**உள்ளத்துள் உறைதல்.** கோகிலா மகேந்திரன். தெல்லிப்பழை: கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, மே 2011. (கொழும்பு 6: குளோபல் கிராப்பிக்ஸ், இல. 14, 57ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை).

x, 168 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14.5 சமீ.

உளவியல் சரிதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ள இந்நூலில் 40 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. நமது வாழ்வில் எதிர்கொள்ளும் சம்பவங்கள், நமது உள்ளத்தில் ஏற்படுத்தும் குமைச்சல்கள் நமது உளவளத்தை பாதிப்படையச் செய்கின்றன. அவற்றிலிருந்து விடுபடும்வகையில் வழங்கும் ஆலோசனைகளாக இதிலுள்ள ஆக்கங்களை காணமுடிகின்றது. ஒரு உளவளத்துணையாளராக நின்று, சீர்மிய உளவியல், தனிமனித சமூகப் புலங்களை ஊடறுத்துத் தெளிவான சிந்தனைகளையும், மனப்பாங்குகளையும், மாற்றங்களையும், உருவாக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இதிலுள்ள 40 கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. கோகிலா மகேந்திரன் ஆசிரியர், அதிபர், கல்வி நிர்வாகி எனக் கல்விப் பரப்பில் பல்வேறு நிலைகளில் தனது பணிகளை நிறைவுடன் மேற்கொண்டவர். வலிகாமம் கல்வி வலயத்தின் ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர். கலை இலக்கியத்தளத்தில் சிறுகதையாளர், நாவலாசிரியர், நாடகாசிரியர், விமர்சகர், கட்டுரையாளர் எனப் பன்முக ஆளுமையுடன் கனதியாக இயங்குபவர். சீர்மிய உளவியல் துறையில் தொடர்ந்து ஆழமான கற்கையும் தேடலும் உள்ளவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50862).

### 14025

**தமிழர் உளவியலும் உளவளத் துணையும்.** சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை, U.G.50, People's Park, 1வது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம், U.G.50, People's Park).

viii, 124 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-685-142-7.

பேராசிரியர் சபா. ஜெயராசா தமிழில் "கல்வியியல்", "சீர்மியம்" உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த நூல்கள் பல எழுதி, அத்துறைசார் விருத்தியில் முதன்மையான பங்கு வகித்து வருபவர். இந்நூலில் உளவளத்துணையும் தமிழ்ச் சூழலும், சங்கப் பாடல்களில் சீர்மியச் செய்திகள், மனவளத்தில் தொன்மங்களும் சடங்குகளும், தமிழர் இசையும் உளவளத்துணையும், தமிழர் நாடகமும்

உளவளத்துணையும், விளையாட்டுக்கள் வாயிலாக உளச்சுகம் பெறல், குறளில் மேலெழும் சீர்மியக் கருத்துக்கள், சிலப்பதிகாரமும் சமூக மனமும் உளவெளியும், பக்தி இலக்கியங்களும் சீர்மியமும், காவியங்களும் மனச்சுகம் பெறுதலும், சீர்மியமும் இலக்கியங்களும், சிற்றிலக்கியங்களும் மனச்சுமை விடுவிப்பும், இசை கலந்து கதை சொல்லல், சீர்மிய நடவடிக்கையாக ஓவியம், சித்தர் பாடல்களும் விளிம்பு நிலையினரது உணர்வுகளும், நாட்டார் பாடல்களின் உளவியற் பரிமாணங்கள், நாட்டார் கதைகளும் உளவியலும், நெருப்புச் சட்டிக் கதைகளும் சீர்மியமும், மனத்தை முகாமை செய்தல், உளவியற் சிகிச்சை முறைமையின் தோல்வி, உளநலத்தின் சமூகத்தளம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 21 கட்டுரைகள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65002).

### 14026

**புறங்கைச் சுவை: கட்டுரைகள்.** ராணி சீதரன். தெகிவளை: ராணி சீதரன், 26/111, வைத்தியா வீதி, 2வது பதிப்பு, மார்ச் 2019, 1வது பதிப்பு, நவம்பர் 2018. (தெகிவளை: tg Printers).

viii, 131 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-97102-5-7.

தினக்குரல் பத்திரிகையில் 2011இல் "வாழ்ந்து பார்க்கலாம்" என்ற தொடராக வெளிவந்த வாழ்வியல் கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும். ஆண் வயதுக்கு வந்து விட்டால், தோளுக்கு மிஞ்சினால் தோழன், ஏன் இந்த இடைவெளி? வாசிப்பும் ஆக்கத்திறனும், இருவர் நினைவும் ஒன்றானால், குடும்பத்திலே எழும் குழப்பங்கள், மாமியாரும் ஒரு தாய்தானே, பெண் ஏன் அடக்கப்பட்டாள்? வலிமை பெற வேண்டிய பெண் அடையாளம், மாற்றமுறும் காலச்சக்கரம், சமூக மனப்பாங்கில் பெண், உணர்வு வெளிப்படுத்தலும் பெண்களும், வாழ்வும் வலிகளும், மனம் விசித்திரமானது, மனிதா நீ எங்கே, முதுமையும் தனிமையும், கல்வி உலகினிலே, கல்யாணச் சந்தையிலே, பெண்ணின் கனவுகளும் வாழ்வும், விதவை என்றால் துறவியா? நீதி வெண்பா கூறும் பெண்ணுக்குரிய நீதி, மனம் சாய்ந்து போனால் ஆகிய 22 தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

## 160 தர்க்கவியல் (அளவையியல்)

### 14027

**இடைநிலை அளவையியல்.** ஜேம்ஸ் வெல்டன், A.J.மொனகன் (ஆங்கில மூலம்), S.H. மெலோன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 58, சேர். ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1967. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

xx, 522 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இந்நூல் Intermediate Logic என்ற தலைப்பில், James Welton, A.J.Monahan ஆகிய இருவரும் இணைந்து எழுதி லண்டன் University Tutorial Press Ltd நிறுவனத்தால் அச்சிட்டு வெளியிடப்பட்ட ஆங்கில நூலின் தமிழாக்கம். அளவையியல் இயல்பு, எண்ண விதிகள், பதங்கள், பதார்த்தங்களும் பயனிலைத் தகவுகளும், வரைவிலக்கணம், வரைவிலக்கணப் போலி, பிரிப்பும் வகையீடும், எடுப்புக்களின் வரைவிலக்கணமும் வகையீடும், தீர்மானத்தால் எழும் போலிகள், உடன் அனுமானம் பற்றிய பொதுவான குறிப்புகள், எடுப்பு முரண்பாடு, வெளிப்பேறு, உடன் அனுமானத்தின் போலிகள், நியாயத்தொடையின் பொது இயல்பு, நியாயத்தொடைவழி அனுமானத்தின் தத்துவமும் விதிகளும், உருவும் பீரகாரமும், நியாயத்தொடைகளின் இனமாற்றம், கலப்பு நியாயத்தொடைகள், சுருக்க நியாயத்தொடைகளும் இணைப்பு நியாயத்தொடைகளும், நியாயத்தொடையின் பயன் வலிமை என்பனவும் குறைபாடுகளும், பொது அறிமுறை, விசேட முறைகள், தருக்கநெறியில் போலிகள், தொகுத்தறிவின் பொது இயல்பு, தொகுத்தறி முறையின் இடுகோள்கள், நோக்கல், சான்று, கருதுகோளின் இயல்பு, கருதுகோள்களின் தோற்றம், கருதுகோள் நிலைநாட்டல், தொகுத்தறிமுறை உதாரணங்கள், கணியமுறைத் துணிபு, விஞ்ஞான விளக்கம் ஆகிய 33 இயல்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25248).

## 170 ஒழுக்கவியல்

### 14028

**அறநெறிச் செல்வம்.** நினைவு மலர்க் குழு. யாழ்ப்பாணம்: தெய்வானை அம்மையார் நினைவு வெளியீடு, சுருவில், 1வது பதிப்பு, 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

(12), 131 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12 சமீ.

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை (நறுந்தொகை), உலகநீதி, மூதுரை (வாக்குண்டாம்), நல்வழி, நன்னெறி ஆகிய ஏழு நீதி நூல்களும் இங்கு ஒருங்கு திரட்டித் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24225).

### 14029

**அன்னை அமுதம்.** ஞாபகார்த்த மலர்க் குழு. யாழ்ப்பாணம்: திருமதி இராசலிங்கம் அன்னபூரணம் ஞாபகார்த்த வெளியீடு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).

62 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.

4.4.2006 அன்று வெளியிடப்பெற்ற இந்நினைவு மலரில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி ஆகிய நீதிநூல்கள் மீள்பிரசுரமாகி யிருக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38263).

### 14030

**காந்தி போதனை.** எம்.ஏ.ரஹ்மான். கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, 1969. (கொழும்பு 13: ரெயின்போ அச்சகம், 231 ஆதிருப்பள்ளித் தெரு).

168 பக்கம், விலை: ரூபா 4.50, அளவு: 19x13 சமீ.

இளம்பிறை என்ற மாசிகையை நடத்தியதால் இளம்பிறை ரஹ்மான் என வழங்கப்படும் எம்.ஏ.ரஹ்மான் அவர்கள் அம்மாசிகையைத் தொடங்கும் முன்பாகவே அரசு வெளியீடு நிறுவனத்தை நிறுவியிருந்தார். 1960களில் இது நிகழ்ந்தது. தேசபிதா மகாத்மா காந்தியின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு ஏக காலத்தில் ஐந்து காந்திய நூல்களை அவர் வெளியிட்டார். காந்தியக் கதைகள், காந்தி பாமாலை, காந்தி தரிசனம், மாணாக்கரின் காந்தி, காந்தி போதனை என்பன அந்த ஐந்து நூல்களுமாகும். மகாத்மா காந்தியின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு இந்திய நாட்டின் எந்த மொழியிலும் தனி நபர் ஒருவர் ஒரே தடவையில் ஐந்து நூல்களை வெளியிட்டார் என்ற பெருமை இவருக்குண்டு. "காந்தி போதனை" என்ற இந்த நூலை காந்திஜியின் போதனைகளை உள்ளடக்கிச் சிறுவர்களுக்காக எம்.ஏ. ரஹ்மான் எழுதியுள்ளார். உப்பு, சத்தியம், காலம், மூன்று குரங்குகள், பசி, அகிம்சை, செருப்பு, மூன்றாம் வகுப்பு, நடத்தல், கல்வி, தாய்மொழி, மது, கதர் ஆகிய தலைப்புகளில் இவற்றை கட்டுரை வடிவில் எழுதியிருக்கிறார். 25ஆவது அரசு வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31718).

### 14031

**சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள் 200.** க.சற்குணேஸ்வரன். மட்டக்களப்பு: இராமகிருஷ்ண மிஷன், சிவானந்த வித்தியாலயம், கல்லடி-உப்போடை, 1வது பதிப்பு, ஜனவரி 1993. (மட்டக்களப்பு: கீன் அச்சகம்).

(14), 36 பக்கம், தகடுகள், விலை: ரூபா 15.00, அளவு: 18x12 சமீ.

நூலாசிரியரான இம்மாணவர், மட்டக்களப்பு- திருப்பழுகாமம் விபுலானந்த வித்தியாலய ஆசிரியர் கந்தப்பன் அவர்களின் மகனாவார். இந்து மதம் தந்த துறவிகளுள் ஒருவரான சுவாமி விவேகானந்தர் அருளிய பொன்மொழிகளைச் சேர்த்துத் தொகுத்து இந்நூலை இவர் வெளியிட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14741).

### 14032

**தருமத்தின் குரல்.** எஸ்.ராதாகிருஷ்ணன். திருக்கோணமலை: இளைஞர் அருள்நெறி மன்றம், ஞானசம்பந்தன் வீதி, 1வது பதிப்பு, 1988. (கொழும்பு 12: நியு லீலா அச்சகம், 182, மெசெஞ்சர் வீதி).

28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

பாரதத்தின் ஜனாதிபதியும் தத்துவஞானியுமான டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்களின் அறிவுரைகள். ஆனி உத்தரத் திருமஞ்சன அபிஷேகத்தின் சிறப்பு வெளியீடாக திருக்கோணமலை, இளைஞர் அருள்நெறி மன்றத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் Pam 734).

## 14033

**திருக்குறள்.** திருவள்ளுவர் (மூலம்), மு.வரதராசனார் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், 1வது பதிப்பு, 2019. (யாழ்ப்பாணம்: எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

739 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 9x25 சமீ.

ஏட்டுவடிவில் அகலப் பாங்கில் அச்சிடப்பட்டுள்ள இத் திருக்குறள் நூல், திருக்குறள் தேசிய வாரத்தினை முன்னிட்டு இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் எண்ணக்கருவில், வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அவர்களின் நெறிப்படுத்தலில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற திருக்குறள் பெருவிழா இறுதிநாள் நிகழ்வில் ஜனாதிபதி அவர்களினால் 30.08.2019 அன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. திருக்குறள் பெருவிழா நிறைவேற்றுக் குழுவில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. இ.இளங்கோவன், பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் ஆகியோர் பங்காற்றியிருந்தனர்.

## 14034

**தினசரி உபதேச மொழிகள்.** மா.வ.செல்லையாபிள்ளை (தொகுப்பாசிரியர்). சண்டிலிப்பாய்: ப.மு.செகராசசிங்கம், நடுக்குறிச்சி, 1வது பதிப்பு, 1929. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).

135 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 20x13 சமீ.

"இவர் (ப.மு.செகராசசிங்கம்) கீரிமலையிலே 1735-ம் ஆண்டுவரையிற் கட்டப்பட்டு நவாலியார் மடமென இப்போது வழங்கும் தண்டிகைக் கனகநாயக முதலியார் மடமும் அதைச் சேர்ந்த சில கட்டடங்களும் மிகவும் சிதிலமாயிருப்பதைக் கண்டு அவைகளைத் திருத்த விரும்புகின்றார். இம்மடம் இப்போது இவர் பராமரிப்பில் இருக்கின்றது. எல்லாரும் தருமத்துக்கு என்றுதானும் இரக்க உடன்படார்கள். இவர் இந்த மடத்தைத் திருத்துவதற்கு எவரையாவது வருத்திப் பொருள் வாங்க விரும்பாமல் அதுவுமொரு புண்ணிய வழியாற் பெறவிரும்பி இந்தத் தினசரி உபதேச மொழிகள் என்னும் நூலை இவர் மைத்துனரும் மலாய் நாட்டைச் சேர்ந்த வத்துக்காஜா நீதிமன்றத்துத் துவிபாஷகருமாகிய மானாமுதலியார் வைத்தியலிங்கம் செல்லையாவைக் கொண்டு இயற்றுவித்து அச்சிட்டிருக்கிறார்.

இந்த நூலை விற்று அதனால் வரும் பொருளைக் கொண்டு இப்பணியை நிறைவேற்ற நினைக்கின்றார். இந்த நூல் வருஷத்திலுள்ள 365 நாளைக்கும் நாளொன்றுக்கு ஒரு பாடமாக 365 பாடங்களை யுடையதாயிருக்கின்றது. இதற்காகத் தெரியப்பட்ட 365 செய்யுள்களும் அருமையான நூல்களினின்றும் எடுக்கப்பட்டன." பாயிரம்- த.கைலாசபிள்ளை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 02407).

## 14035

**நலங்கள் அறுபது.** குமாரசுவாமி சோமசுந்தரம். கொழும்பு 2: அகில இலங்கை இந்து மாமன்றம், 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, 1வது பதிப்பு, ஜுலை 2016. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xii, 286 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1133-05-4.

மனித விழுமியங்கள், ஆன்மீகம் மற்றும் ஒழுக்கநெறிப் பண்புகள் தொடர்பான சிந்தனைக் கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்கியிருக்கின்றது. மனிதனுக்குத் தேவையான நலன்களை ஆசிரியர் அறுபது தலைப்புகளில் தொகுத்தளித்துள்ளார். கடவுள் நம்பிக்கை நலம், அன்பு நலம், உடல் நலம், மன நலம், உயிர் நலம், அறநெறி வாழ்வு நலம், மனிதப் பண்பு நலம், மனிதப்பிறவி நலம், வாழ்வியல் நலம், வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல் நலம், பண்பாடு நலம், தூய்மை நலம், நலமே நாடும் நலம், கல்வி நலம், மனித விழுமியக் கல்வி நலம், இளமை நலம், இளையோர் பண்பு நலம், மரியாதைப் பண்பு நலம், நூலறிவு நலம், நற்பழக்க வழக்க நலம், சுய கட்டுப்பாடு நலம், சமூகச் சூழல் நலம், சமூகமயமாதல் நலம், முதுசொத்துக்கள் நலம், குடும்ப அமைதி நலம், முதுமையின் இனிமை நலம், துன்பமில்லாத வாழ்வு நலம், திட்டமிடுதல் நலம், சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் உணர்த்தும் காலநேர முகாமைத்துவ நலம், பெற்றோர் பிள்ளைகள்உறவு நலம், எண்ணமே வாழ்வு நலம், சாந்தி நலம், உணர்ச்சிக் கட்டுப்பாட்டு நலம், சினம் தவிர்த்தல் நலம், அகந்தை மமதை சீரமைத்தல் நலம், மனச்சுமை தவிர்த்தல் நலம், அச்சந் தவிர் நலம், மனக்கவலை ஒழித்தல் நலம், மது, போதைப்பொருள் பாவனை, புகைத்தல் தவிர்த்தல் நலம், மனம் இயற்கைச்சூழல் மாசடைதல் தவிர்த்தல் நலம், நிம்மதி நலம், மகிழ்ச்சி நலம், நேர்மை நலம், தன்னம்பிக்கை நலம், நல்லெண்ணம் சம்பாதித்தல் நலம், சமத்துவம் சகோதரத்துவம் நலம், சுதந்திரப் பண்பு நலம், சொல் செயல் நலம், முயற்சி வலிமை நலம், சக்தி நலம், தொண்டு நலம், பொது நலம், நட்பு நலம், நம்பிக்கை நாணயம் நலம், நடுவுநிலைமை நலம், பொய்யாமை நலம், நாநலம், உழைப்பு நலம், நகைச்சுவை நலம், உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று நலம் ஆகிய அறுபது தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. தினக்குரல் பத்திரிகையில் அறநெறிச் சாரமாக வெளிவந்த எழுத்துக்கள் இவை.

## 14036

**நீதி நூல் தொகுப்பு.** சி.கந்தசாமி (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: விவேகானந்த சபை, 34, விவேகானந்த மேடு, 1வது பதிப்பு, ஜுன் 1976. (நாவலப்பிட்டி: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்).

(6), 138 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12 சமீ.

மனித வாழ்க்கையில் வெற்றியும், உலக முன்னேற்றமும் பெரும் பொருள் தேடித் திரட்டி ஆடம்பரமாக வாழ்வதனால் வருவனவன்று. இவை கடவுட் பற்றுடன் கூடிய பணிவு, நல்லறிவு, நல்லொழுக்கம், பிறர்க்குப் பயன்பட வாழ்தல் ஆகிய தன்மைகளால் அமைந்தனவாகும். இப்பக்குவ மன வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்திருக்கும் நீதிநூல்களிலுள்ள பகுதிகளைச் சிறுவர்கள் ஓதியுணர்ந்தும், பிறர்க்குரைத்தும், அதற்குத் தக நின்றும் சீரியராக வாழ்ந்து ஈடேற்றம் பெற வேண்டுமென்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட தொகுப்பு இதுவாகும். இத்தொகுப்பில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, வெற்றிவேற்கை, நன்நெறி, உலகநீதி ஆகிய நீதிநூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22342).

## 14037

**பகவத் கீதை வெண்பா: மூன்றாம் பாகம்: ஞான யோகம் (அத்தியாயம் 13-18) விளக்கக் குறிப்புடன்.** ஏ.பெரியதம்பிப்பிள்ளை. சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை, 1வது பதிப்பு, நவம்பர் 1976. (சுன்னாகம்: முத்தையா சபாரத்தினம், திருமகள் அழுத்தகம்).

xxxii, 132 பக்கம், விலை: ரூபா 7.00, அளவு: 21x14 சமீ.

மட்டக்களப்பு புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை எழுதியுள்ள இந்நூலில் புலவர்மணியவர்கள், கீதையைத் தமிழிலே வெண்பாவாகப் பாடி உரையும் எழுதி வழங்கியுள்ளார். ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் முன்னுரையுடனும், க.இராமச்சந்திரா அவர்களின் ஆராய்ச்சி முன்னுரையுடனும், சு.வித்தியானந்தன் அவர்களின் மதிப்புரையுடனும் வி.சீ.கந்தையா அவர்களின் அணிந்துரையுடனும் கூடியது. சேத்திர சேத்திரஞ்ஞ விபாக யோகம்: பொருட் சுருக்கம், சேத்திர சேத்திரஞ்ஞ விபாக யோகம், குணத்திரய விபாக யோகம்: பொருட் சுருக்கம், குணத்திரய விபாக யோகம், புருஷோத்தம யோகம்: பொருட் சுருக்கம், புருஷோத்தம யோகம், தைவாசுர சம்பத் விபாக யோகம்: பொருட் சுருக்கம், தைவாசுர சம்பத் விபாக யோகம், சிராத்தாத் திரய விபாக யோகம்: பொருட் சுருக்கம், சிராத்தாத் திரய விபாக யோகம், மோட்ச சன்னியாச யோகம்: பொருட் சுருக்கம், மோட்ச சன்னியாச யோகம் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 14038

**மகா வாக்கியங்கள்.** திருச்செல்வம் தவரத்தினம். காரைநகர்: திருச்செல்வம் தவரத்தினம், சர்வசக்தி வெளியீடு, சடையாளி, 1வது பதிப்பு, 2015. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

vi, *104 பக்கம், விலை: ரூபா 150.00, அளவு: 17.5*x*12.5 சமீ.,* ISBN: *978-955-44445-5-3.*

*பழந்தமிழ் புலவர்களும், ஆற்றல் மிக்க அறிஞர்களும், மனிதன் வாழ்வாங்கு வாழவேண்டும் என்ற நோக்கில் தமது வாழ்க்கை அனுபவங்களையும் அறிவுப் பொக்கிஷங்களையும் அரிச்சுவடிகளாக விட்டுச் சென்றுள்ளனர். அவை மனிதனை ஆற்றல் உள்ளவனாகவும், ஆளுமை மிக்கவனாகவும் உருவாக்க பெரும்பங்காற்றின. ஆனாலும் ஒவ்வொரு கல்விமான்களும் தமது கருத்துக்களைத் தனித்தனியான பாணிகளில் சமூகத்திடம் எடுத்துச்சென்றனர். இந்நூல்வழியாக ஆசிரியர் தவரத்தினம் அவர்கள் மகா வாக்கிய வரிகளுக்கு இணங்க சத்தியம், தர்மம் என்பவற்றைக் கடைப்பிடித்து மக்கள் ஒழுகுவார்கள் என்ற நம்பிக்கையுடன் அத்தகைய பல மகாவாக்கியங்களைத் திரட்டித் தந்துள்ளார்.*

## 180 இந்து தத்துவம் (சைவ சித்தாந்தம்)

### 14039

**இந்து நாகரிகம் தரம்-12: வளநூல்.** *தேசிய கல்வி நிறுவகம். மஹரகம: சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை, மொழிகள் மானிடவியல் சமூக விஞ்ஞான பீடம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2018. (மஹரகம: அச்சகப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்).*

ix, *166 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 29*x*20 சமீ.,* ISBN: *978-955-654-731-3.*

*2018ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்திற்கு அமைவாக முதன்முறையாக இவ்வளநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவரிடம் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான கற்றற் பேறுகள், உத்தேச விடய உள்ளடக்க வழிகாட்டிகள், கற்றல்-கற்பித்தற் செயற்பாடுகள், உசாத்துணைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இவ்வளநூல் அமைகின்றது. இந்து நாகரிகம்-இந்துப் பண்பாடு, உலக நாகரிகங்களில் இந்து நாகரிகம், இந்து நாகரிகத்தின் மூலங்கள், தமிழகப் பண்பாட்டு மாற்றங்கள், வடநாட்டு வைணவ பக்தி நெறியாளர்கள், இந்து சமூக சீர்திருத்த இயக்கங்களின் எழுச்சி, இலங்கையில் இந்து சமய வரலாறு, இலங்கையில் சிவாலயங்களின் வரலாறும் பண்பாடும், உலக நாடுகளில் இந்து நாகரிகம், இந்துக் கோயிற் கலைகள்-அறிமுகம் ஆகிய பாடங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65692).*

### 14040

**இந்துக்களின் அற ஒழுக்கவியற் செல்நெறி.** *கலைவாணி இராமநாதன் (பிரதம ஆசிரியர்), இரா.கோபாலகிருஷ்ணன், எஸ்.கெங்காதரன் (இணை ஆசிரியர்கள்). கொழும்பு 6: ஆலயம் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2019. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xx, 387 பக்கம், விலை: ரூபா 1500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-0881-28-4.

இந்து இலக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்ட நூல் இதுவாகும். இந்துக்களின் அற ஒழுக்கக் கோட்பாடு, வடமொழி சமய இலக்கியங்களில் அறவியல் சிந்தனைகள், தமிழ் இலக்கியங்களில் அறவியல் கோட்பாடுகள், சங்க இலக்கியத்தில் அன்பு நெறியும் அறநெறியும், அற ஒழுக்க நியமங்களில் திருமந்திரத்தின் வகிபாகம், அவைதிக சமயங்களில் அறக்கருத்துக்கள், இந்து அற வாழ்வில் பக்தியும் ஒழுக்கமும், இந்து ஆலயங்களும் அறப்பணிகளும், கன்மக் கொள்கையும் அறநெறிக் கொள்கையும்: சைவசித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது, மெய்கண்ட சாஸ்திரங்களில் அறநெறியும் அன்பு நெறியும், நவீன அறவியற் செல்நெறியில் மேனாட்டு சிந்தனை வளர்ச்சி, சித்தர்களும் பொதுவுடைமை அறமும் ஆகிய பன்னிரண்டு இயல்களில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. பேராசிரியர் கலைவாணி இராமநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஓய்வுநிலைப் பேராசிரியர். அப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறையின் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் முதலாவது பெண் பேராசிரியர் என்ற பெருமையைப் பெற்றவர். சைவசித்தாந்த ஒழுக்கவியல் அடிப்படைகள், சைவசித்தாந்த மெய்ப் பொருளியல், வேத பாரம்பரியமும் சைவ சித்தாந்தமும் ஆகியன இவரது குறிப்பிடத்தகுந்த பிற நூல்கள். பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியதுடன் சைவ சித்தாந்தத்தில் சிறப்பாகப் பல ஆய்வுகளையும் மேற்கொண்டவர் இவராவார். இவர் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் 3 வருடங்களுக்கு மேலாக கலாநிதிப் படிப்பிற்கான ஆய்வினையும் மேற்கொண்டிருந்தார்.

### 14041

**ஈகையின் உயர்வு.** வே.கனகசபாபதி ஐயர். யாழ்ப்பாணம்: ஸ்ரீ வே.கனகசபாபதி ஐயர்,வேதாகம பண்டிதர், நல்லூர், 1வது பதிப்பு, 1917. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).

36 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13 சமீ.

யாழ்ப்பாணம் சைவசித்தாந்த மகா சமாசத்தின் பன்னிரண்டாவது வருஷாந்தக் கூட்டத்தில் ஸ்ரீமான் ச.சபாரத்ன முதலியார் (J.P.,Deputy Fiscal, Jaffna) அவர்கள் அக்கிராசனராயிருக்க யாழ்ப்பாணத்து நல்லூர் உபய வேதாகம பண்டிதர் ப்ரம்ஹ ஸ்ரீ வே.கனகசபாபதி ஐயர் அவர்கள் செய்த பிரசங்கம் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2587).

**14042**

**உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த திருவருட்பயன்.** உமாபதி சிவாசாரியார் (மூலம்), சு.சிவபாதசுந்தரம் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவபரிபாலன சபை, 12வது பதிப்பு, ஜனவரி 1980. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சகம்).

iv, 134 பக்கம், விலை: ரூபா 6.75, அளவு: 18x11.5 சமீ.

சைவ சித்தாந்தத்தை தமிழில் கற்றிட முனைவோருக்கென உரைநடையில் எழுதப்பட்டுள்ள இந்நூலில் பதிமுதுநிலை, உயிரவை நிலை, இருண்மல நிலை, அருளது நிலை, அருளுரு நெறி, அறியுநெறி, உயிர் விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுத்தருணிலை, அணைந்தோர் தன்மை ஆகிய தலைப்புகளில் திருவருட்பயன் விளக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள பதவுரை நிரம்பவழகிய தேசிகரின் பொழிப்புரையைத் தழுவியும், விசேடவுரை சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த சாத்திரங்களையும் அவற்றின் பேருரைகளையும் துணையாகக் கொண்டும் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24055).

**14043**

**கற்பு நிலை.** யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் (மூலம்). புதுவை: கலாநிதி பிரஸ், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (புதுவை: கலாநிதி பிரஸ்).

129 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் ஞானகுருவாகக் கருதப்படும் யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் அவ்வப்போது செய்யுள்களாகவும், உரைநடைகளாகவும் வழங்கிய உரைகளைத் தொகுத்துத் தந்துள்ளனர். செய்யுட் பிரிவில் கற்பு நிலை (பதி விளக்கம்), சித்தி விளக்கம், அகண்ட பரிபூரண விளக்கம், எழுத்துற்பத்தி விளக்கம் ஆகியவையும், உரைநடைப் பிரிவில் சத்திய விளக்கம், ஆட்டச் செயலின் விளக்கம், அநாதி நின்ற நிலை, லீலை விளக்கம், மவுன விளக்கம், கற்கை விளக்கம், மங்கள விளக்கம், சீவ விளக்கம், கூலி விளக்கம், கலைச்சூழலின் விளக்கம், தந்திர விளக்கம், திருமணக் காட்சி விளக்கம், துறவு விளக்கம், ஞானவிளக்கம், வினையெச்ச விளக்கம் ஆகிய தலைப்புக்களில் உரைநடை விளக்கங்களும் இடம்பெற்றுள்ளன. போதிய நூல்விபரத் தகவலின்றி இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3075).

**14044**

**சிவஞானதேசிகன் பிரார்த்தனை.** சி.அருணாசலம் சுவாமிகள் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: கிருஷ்ணானந்த சிவம், ஸ்ரீ சிவகுருநாத அறக்கட்டளை, 33-5/1, ருத்திரா மாவத்தை, 2வது பதிப்பு, 2019, 1வது பதிப்பு, 1983. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

98 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

சிவஞான தேசிகன் என்ற இச்சிறுநூலில் வேதாந்தக் கருத்துக்கள், திருமந்திரம், விவேகசூடாமணி, ரிபுகீதை, தாயுமான சுவாமிகள் பாடல்கள் என்பவை மூலம் பிரபல ஞானிகளால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட பாக்கள் தொகுத்து உரைநடையுடன் தரப்பட்டுள்ளன. சாவகச்சேரியைச் சேர்ந்த சி.அருளம்பலம் சுவாமிகள் 1983இல் முதலில் பிரசுரித்திருந்த இந்நூல் மீண்டும் 2019அம் ஆண்டு ஸ்ரீ சிவகுருநாத அறக்கட்டளை மூலம் மீள்பிரசுரம் காண்கிறது. ஸ்ரீமத் சி.அருணாசலம் சுவாமிகள் ஸ்ரீ சிவகுருநாத பீட தாபகரும், ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளின் மாணவரும், ஆத்மாத்ம அந்தரங்க வழித் தாபகரும், கொழும்பு ஆண்டவர் ஸ்ரீ தாளையான் சுவாமிகளின் சீடருமாவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64911).

## 14045

**ஞான மண்டலம் ஆலயம் வஜனாம்ருதம்.** சுவாமி கெங்காதரானந்தா. சென்னை 600005: குமரன் வெளியீடு, 13/2, கஜபதி தெரு, திருவல்லிக்கேணி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1992. (சென்னை 600024: அலைகள் அச்சகம், 36, தெற்குச் சிவன்கோவில் தெரு, கோடம்பாக்கம்).

176 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

ஞான மண்டலம், ஆலயம், வஜனாம்ருதம் (முதற் பாகம்), வஜனாம்ருதம் (இரண்டாம் பாகம்), பஜனை வழி, ஸ்ரீகிருஷ்ண அஷ்டோத்திரம், பஜனைப் பாடல்கள், திருக்கோணேசர் பாடல், திருக்கோணமலை காளி ஆச்சிப் பாடல் ஆகிய ஒன்பது தலைப்புக்களில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13720).

## 14046

**தத்துவ சிந்தனை மரபில் சைவசித்தாந்தம் கூறும் ஆன்மா.** பால. இந்திரக் குருக்கள். அவுஸ்திரேலியா: சைவப்புலவர் சிவஸ்ரீ பால. இந்திரக் குருக்கள், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2015. (நீர்கொழும்பு: சாந்தி அச்சகம்).

104 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ.

பிறப்பின் முன் ஆன்மாவின் நிலை, சைவசித்தாந்தம் கூறும் ஆன்மா, வேதாகமங்களில் சித்தாந்த ஆன்மா, உபநிடதங்களில் சித்தாந்த ஆன்மா, இலக்கியங்களில் சித்தாந்த ஆன்மா, திருமுறைகளில் சித்தாந்த ஆன்மா, இறப்பின் பின் ஆன்மாவின் நிலை ஆகிய ஏழு இயல்களில் இவ்வாய்வு நூல் எழுதப்பட்டுள்ளது. உலகில் தோன்றும் உயிர்வகைகள் முட்டை, வியர்வை, விதை, கரு என்ற நான்கு வகைகளிலேயே தோன்றுகின்றன. அவை தேவர், மாந்தர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், என எழுவகைப் பிறவிகளிலே பிறக்கின்றன என்கின்றது சைவசித்தாந்தம் என இந்நூல் குறிக்கின்றது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 63629).

## 190 சோதிடம், வானசாஸ்திரம்

### 14047

**அனைவரும் திருமணப் பொருத்தம் அறிந்திட.** என்.ராஜமணி. கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320, செட்டியார் தெரு).

vii, 72 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 28x21 சமீ.

இந்து மதத்தில் திருமணத்தின் போது ஆண், பெண் இருவருக்கும் அவர்கள் பிறந்த நட்சத்திரம், ராசி போன்றவைகளைக் கொண்டு பன்னிரண்டு வகையான பொருத்தங்கள் பார்க்கப்படுகிறன. இவற்றில் குறிப்பிட்ட பொருத்தங்கள் இருந்தால் மட்டுமே திருமணம் செய்து வைக்கப்படுகிறது. இல்லையென்றால் ஜாதகப் பொருத்தமில்லை என்று அந்தத் திருமணம் தவிர்க்கப்படுகிறது. சில பொருத்தங்கள் இல்லை என்றாகிவிடும். இந்நூலில் பொருத்த விதிகள், திருமண நாள் வைத்தல் ஆகியவை அடங்கலாக திருமணப் பொருத்தம் எளிதாக எவ்வாறு கணிப்பது என்று விளக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் என்.ராஜமணி, தமிழ்நாடு, ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த சோதிடராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31832).

### 14048

**சர்வஜாதக சந்தேக நிவர்த்தி.** ஏகாம்பர முதலியார். கொழும்பு: கலாநிலையம், 175, செட்டியார் தெரு, மீள்பிரசுர ஆண்டு விபரம் தரப்படவில்லை, 1வது பதிப்பு, 1914. (கொழும்பு 11: ஸ்டான்கார்ட் பிரின்டர்ஸ் லிமிட்டெட், 196, செட்டியார் தெரு).

96 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 21x14 சமீ.

யுகங்களின் பெயரும் வருடத் தொகையும், சப்த வருஷங்களின் பெயர், அரசர்களுடைய சகாப்தங்கள், வருஷங்களின் பெயர் என இன்னோரன்ன ஜாதக சம்பந்தமான உசாத்துணை தகவல்களுடன் வெளிவந்துள்ள நூல். இதன் மூலப்பதிப்பு தமிழகத்தில் 1914இல் வெளியிடப்பட்டது. இம்மீள்பதிப்பு இலங்கையில் கலாநிலைய அச்சகத்தினரால் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31685).

### 14049

**பலன்தரும் பெயர் சூட்டுவோம்.** திருச்செல்வம் தவரத்தினம். காரைநகர்: திருச்செல்வம் தவரத்தினம், சடையாளி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2018. (யாழ்ப்பாணம்: சப்தமி ஓப்செட் பிறின்டர்ஸ், நல்லூர்).

viii, (2), 63 பக்கம், விலை: ரூபா 200.00, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-38483-7-6.

ஒருவரின் பெயரிலேயே வாழ்வில் அவர் அடையும் உயர்ச்சியும் தாழ்ச்சியும் தங்கியுள்ளதெனக் கூறும் இந்நூலாசிரியர், வாழ்வியல் குறைபாட்டிற்கு மாற்றீடாக பெயர் மாற்றம் அல்லது பெயரில் எழுத்தைக் கூட்டவோ குறைக்கவோ தான் எண் சோதிடம் வழியைக் கூறுகின்றது என்கிறார். தனது கணிப்பின்படி, மாற்றீடாக ஒருவரது பிறந்த நட்சத்திரத்தின் முதல் எழுத்தை முதலில் அனுசரித்து அதனோடு இணைந்த ஒலி அதிர்வு எழுத்துக்களை கவனத்தில் கொண்டு ஒரு குழந்தையின் பெயரை தெரிவுசெய்து வைக்கவேண்டும் என்கிறார். இவர் தனது கண்டுபிடிப்பினை குழந்தைகளுக்கு பெயர் சூட்டும் முறை, ஒலி அதிர்வு சோதிடம், இருபத்தேழு நட்சத்திரங்களுக்குமுரிய முதல் எழுத்துக்கள், பிறந்த இராசிக்குரிய பெயரின் முதல் எழுத்து, தமிழ் முதல் எழுத்துக்களின் பெயர் ஓசைப் பலன்கள், பெயர் மாற்றம் செய்யலாமா?, பெயர் வசியம், நட்சத்திர முதல் எழுத்துக்கு நிகரான தமிழ் ஓசை எழுத்துக்கள், எண் சோதிடத்தில் பெயர், வீட்டுக்குப் பெயர் வைத்தல், கையெழுத்து தலையெழுத்தை மாற்றுமா?, கருத்துள்ள பலன் தரும் தமிழ்ப் பெயர்கள் ஆகிய பன்னிரண்டு இயல்களில் விளக்கியிருக்கிறார்.

# 200 சமயங்கள்

## 220 கிறிஸ்தவம்

*மேலும் பார்க்க: ஈழத்துத் தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியம் 14860*

## 220.1 கிறிஸ்தவ நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள்

### 14050

**திருச்சபை வரலாற்றுத் துளிகள்.** *சா.பி.கிருபானந்தன். யாழ்ப்பாணம்: தூய பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (கொழும்பு: கத்தோலிக்க அச்சகம்).*

*(30), 122 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 29.5x21 சமீ.*

*ஈழத் தமிழ் கிறிஸ்தவ பண்பாட்டுத் தளத்தின் வரலாற்று அசைவியக்கத்தின் மூல வேர்களைத் தேடும் முயற்சியே இந்நூலாகும் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். கிறிஸ்தவ பண்பாட்டுப் புலத்தில் அடையாளங்கள், குறியீடுகள், மொழிகள், சடங்குகள், பக்தி முயற்சிகள், பொது நிலைப் பணி இயக்கங்கள், மற்றும் தொடக்ககால இலக்கிய முயற்சிகள் போன்றவை ஆசிரியரின் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42755).*

## 294.3 பௌத்தம்

### 14051

**வெசாக் சித்திவில் 1991**. *ரஞ்சித் சமரநாயக்க (பிரதம ஆசிரியர்). பத்தரமுல்ல: ஐக்கிய பௌத்த மத்திய சபை, செத்சிரிபாய, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே, 1வது பதிப்பு, வைகாசி 1991. (கொழும்பு 7: முனிசிப்பல் அச்சகம்).*

*(26), 140 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x22 சமீ.*

*சமாதானம், ஒற்றுமை, அபிவிருத்தி, சுபீட்சம் தொடர்பான விசேட தொகுப்பு. மும்மொழிகளிலுமான கட்டுரைகளைக் கொண்டது. 24 சிங்கள ஆக்கங்களையும், 15 ஆங்கில ஆக்கங்களையும், இரண்டு தமிழ் ஆக்கங்களையும் இம்மலர் கொண்டுள்ளது. தமிழ் ஆக்கங்களை சி.தில்லைநாதன் (புத்தர் வழி அமைதியும் ஒற்றுமையும்), த.கனகரத்தினம் (இலங்கையின் தேசிய ஒற்றுமை, சமாதானம், அபிவிருத்தி பற்றிய பௌத்த நெறிச் சிந்தனைகள்) ஆகிய இருவரும் எழுதியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10989).*

### 14052

**வெசாக் சிரிசர 1999**. *ராஜா குருப்பு (பதிப்பாசிரியர்), த.கனகரத்தினம் (உதவிப் பதிப்பாசிரியர்). கொழும்பு 7: வெசாக் சிரிசர வெளியீட்டுக் குழு, அரச ஊழியர் பௌத்த சங்கம், 53-3, ஹோர்ட்டன் பிளேஸ், 1வது பதிப்பு, மே 1999. (கொழும்பு:* ANCL, Commercial Printing Department*).*

*(12), 96,* ii*, 14,* x*, 116 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*இலங்கையின் வெசாக் தினத்தை முன்னிட்டு 64ஆம் ஆண்டாக அரசாங்க சேவைகள் பௌத்த சங்கத்தின் பிரசுரக் கமிட்டியால் வெளியிடப்படும் மும்மொழி மூல ஆண்டு மலர். இதில் தமிழ்ப் படைப்பாக்கங்களாக பௌத்த நிர்வாணமும் இந்து மோட்சமும் (த.கனகரத்தினம்), போதனையால் உலகாண்ட பெருமான்-கவிதை (ஏ.ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), புத்த பெருமானின் போதனை முறை (வண. பியதசி நாயக்க தேரர்) ஆகிய மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17683).*

### 14053

**வெசாக் சிரிசர 2000**. *ராஜா குருப்பு (பதிப்பாசிரியர்), த.கனகரத்தினம் (உதவிப் பதிப்பாசிரியர்). கொழும்பு 7: வெசாக் சிரிசர வெளியீட்டுக் குழு, அரச ஊழியர் பௌத்த சங்கம், 53-3, ஹோர்ட்டன் பிளேஸ், 1வது பதிப்பு, மே 2000. (கொழும்பு:* ANCL, Commercial Printing Department*).*

viii, *102*, iv, *16*, xii, *99* பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: *21.5*x*14* சமீ.

இலங்கையின் வெசாக் தினத்தை முன்னிட்டு 65ஆம் ஆண்டாக அரசாங்க சேவைகள் பௌத்த சங்கத்தின் பிரசுரக் கமிட்டியால் வெளியிடப்படும் மும்மொழி மூல ஆண்டு மலர். இதில் தமிழ்ப் படைப்பாக்கங்களாக இந்துமத-சைவசித்தாந்த கன்மமும் பௌத்தமத கன்மமும் (கம்ம) (த.கனகரத்தினம்), போதனையால் சாதித்த புத்த மகான்-கவிதை (ஏ.ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), புத்த சமயத்தில் சகிப்புத் தன்மை (பி.எம்.விஜேக்கூன்) ஆகிய மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27267).

## 14054

**வெசாக் சிரிசர 2001**. ராஜா குருப்பு (பதிப்பாசிரியர்), த.கனகரத்தினம் (உதவிப் பதிப்பாசிரியர்). கொழும்பு 7: வெசாக் சிரிசர வெளியீட்டுக் குழு, அரச ஊழியர் பௌத்த சங்கம், 53-3, ஹோர்ட்டன் பிளேஸ், 1வது பதிப்பு, மே 2001. (கொழும்பு: ANCL, Commercial Printing Department).

x, *104*, iv, *18*, xii, *112* பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: *21.5*x*14* சமீ.

இலங்கையின் வெசாக் தினத்தை முன்னிட்டு 66ஆம் ஆண்டாக அரசாங்க சேவைகள் பௌத்த சங்கத்தின் பிரசுரக் கமிட்டியால் வெளியிடப்படும் மும்மொழி மூல ஆண்டு மலர். இதில் தமிழ்ப் படைப்பாக்கங்களாக பௌத்த இந்து மறுபிறப்புப் பற்றிய சிந்தனைகள் (த.கனகரத்தினம்), கவிதை போதை பற்றிப் புத்த பகவான்-கவிதை (ஏ.ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), இலங்கையின் புனித இடங்கள் (ருவன் பண்டார அதிகாரி) ஆகிய மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20766).

## 14055

**வெசாக் சிரிசர 2002**. ராஜா குருப்பு (பதிப்பாசிரியர்), த.கனகரத்தினம் (உதவிப் பதிப்பாசிரியர்). கொழும்பு 7: வெசாக் சிரிசர வெளியீட்டுக் குழு, அரச ஊழியர் பௌத்த சங்கம், 53-3, ஹோர்ட்டன் பிளேஸ், 1வது பதிப்பு, மே 2002. (கொழும்பு: ANCL, Commercial Printing Department).

vi, *106*, iv, *12*, x, *124* பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: *21.5*x*14* சமீ.

இலங்கையின் வெசாக் தினத்தை முன்னிட்டு 67ஆம் ஆண்டாக அரசாங்க சேவைகள் பௌத்த சங்கத்தின் பிரசுரக் கமிட்டியால் வெளியிடப்படும் மும்மொழி மூல ஆண்டு மலர். இதில் தமிழ்ப் படைப்பாக்கங்களாக கன்மம் தற்றுணிபு பற்றிய பௌத்த சைவ சித்தாந்தக் கொள்கைகள் (த.கனகரத்தினம்), சூழ்ச்சியை

வென்றிட்ட சீலம்- கவிதை (ஏ.ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), உறவினர் இடையில் ஒரு கலகம் (ருவன் பண்டார அதிகாரி) ஆகிய மூன்று கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23727).

### 14056

**வெசாக் சிரிசர 2004.** ராஜா குருப்பு (பதிப்பாசிரியர்), த.கனகரத்தினம் (உதவிப் பதிப்பாசிரியர்). கொழும்பு 7: வெசாக் சிரிசர வெளியீட்டுக் குழு, அரச சேவைகள் பௌத்த சங்கம், 90/15, வீரவ பிளேஸ், றாகம வீதி, கடவத்தை, 1வது பதிப்பு, மே 2005. (கொழும்பு: ANCL, Commercial Printing Department).

v, 116, (6), 14, x, 121 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இலங்கையின் வெசாக் தினத்தை முன்னிட்டு 69ஆம் ஆண்டாக அரசாங்க சேவைகள் பௌத்த சங்கத்தின் பிரசுரக் கமிட்டியால் வெளியிடப்படும் மும்மொழி மூல ஆண்டு மலர். இதில் பௌத்த தியானம்-தியானம் பௌத்த முறைகளும் பயன்களும் (த.கனகரத்தினம்), பட்டாச்சார - கவிதை (ஏ.ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), கடன் படாமல் இருப்பது பெரும் சுகம் (ருவன் பண்டார அதிகாரி) ஆகிய மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33042).

### 14057

**வெசாக் சிரிசர 2005.** ராஜா குருப்பு (பதிப்பாசிரியர்), த.கனகரத்தினம் (உதவிப் பதிப்பாசிரியர்). கொழும்பு 7: வெசாக் சிரிசர வெளியீட்டுக் குழு, அரச சேவைகள் பௌத்த சங்கம், 90/15, வீரவ பிளேஸ், றாகம வீதி, கடவத்தை, 1வது பதிப்பு, மே 2005. (கொழும்பு: ANCL, Commercial Printing Department).

iv, 120, (2), 16, iv, 112 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப் படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இலங்கையின் வெசாக் தினத்தை முன்னிட்டு 70ஆம் ஆண்டாக அரசாங்க சேவைகள் பௌத்த சங்கத்தின் பிரசுரக் கமிட்டியால் வெளியிடப்படும் மும்மொழி மூல ஆண்டு மலர். இதில் தமிழ்ப் படைப்பாக்கங்களாக பௌத்த வழிபாட்டில் கடவுளர் (த.கனகரத்தினம்), மனம் மாறிய மாது - கவிதை (ஏ.ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), தேன் பூச்சி-தேனீ (ருவன் பண்டார அதிகாரி) ஆகிய மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36467).

### 14058

**வெசாக் சிரிசர 2008.** ராஜா குருப்பு (பதிப்பாசிரியர்), த.கனகரத்தினம் (உதவிப் பதிப்பாசிரியர்). கொழும்பு 7: வெசாக் சிரிசர வெளியீட்டுக் குழு, அரச ஊழியர் பௌத்த சங்கம், 53-3, ஹோர்ட்டன் பிளேஸ், 1வது பதிப்பு, மே 2008. (கொழும்பு: ANCL, Commercial Printing Department).

iv, *116,* ii, *14,* iv, *116* பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, *அளவு: 21.5*x*14 சமீ.*

*இலங்கையின் வெசாக் தினத்தை முன்னிட்டு அரசாங்க சேவைகள் பௌத்த சங்கத்தின் பிரசுரக் கமிட்டியால் வெளியிடப்படும் மும்மொழி மூல ஆண்டு மலர். இதில் தமிழ்ப் படைப்பாக்கங்களாக மனம் என்பதன் பரம இரகசியம் (த.கனகரத்தினம்), புத்த பகவானின் உபதேசங்களும் முன்மாதிரியும்-கவிதை (ஏ.ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), பௌத்த தர்மமும் மனித வளர்ச்சியும் (ருவன் பண்டார அதிகாரி) ஆகிய மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45244).*

## 14059

**வெசாக் சிரிசர 2012**. *நெவில் பியதிகம (பதிப்பாசிரியர்), த.கனகரத்தினம் (உதவிப் பதிப்பாசிரியர்). கொழும்பு 7: வெசாக் சிரிசர வெளியீட்டுக் குழு, அரச சேவைகள் பௌத்த சங்கம், 1வது பதிப்பு, மே 2012. (கொழும்பு:* ANCL, Commercial Printing Department*).*

iv, *136,* iv, *16,* viii, *112 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப் படவில்லை, அளவு: 21*x*14 சமீ.*

*இலங்கையின் வெசாக் தினத்தை முன்னிட்டு 77ஆம் ஆண்டாக அரசாங்க சேவைகள் பௌத்த சங்கத்தின் பிரசுரக் கமிட்டியால் வெளியிடப்படும் மும்மொழி மூல ஆண்டு மலர். இதில் தமிழ்ப் படைப்பாக்கங்களாக இலங்கையில் கண்ணகி-பத்தினி தெய்யோ வழிபாடு (புலவர் த.கனகரத்தினம்), நிர்வாணம் அடைவது என்றால் என்ன? (ருவன் பண்டார அதிகாரி), நிலையற்ற வாழ்வு (ஏ.ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), சிலம்புச் செல்வி- கண்ணகி சிங்கள மக்களின் பத்தினி தெய்யோ ஆனாள் (த.கனகரத்தினம்), புத்தர் யார்? அவருடைய வழி என்ன? (மடுளுகிரியே விஜேரத்ன) ஆகிய ஐந்து கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51321).*

# 294.5 இந்து சமயம்

## 14060

**அறுபத்துமூவர்**. *சி.அப்புத்துரை. யாழ்ப்பாணம்: அமரர் காலிங்கர் நடராசா அந்தியேட்டித் தின நினைவு வெளியீடு, இணுவில், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19*x*12.5 சமீ.*

*நாயன்மார் அறுபத்து மூவர் பற்றிய குறிப்புகளுடன் கூடியதாக 18.10.2003 அன்று வெளியிடப்பட்ட இந்நூலில் அந்நாயன்மார் முத்தியடைந்த திருநாள் பற்றிய சிறப்புக் குறிப்புகளும் காணப்படுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32139).*

## 14061

**ஆன்மீக வாழ்க்கைக்கான வழிகாட்டுதல்கள்.** சுவாமி கோகுலானந்தா (ஆங்கில மூலம்), பெ.சு.மணி (தமிழாக்கம்). கொழும்பு 6: ராமகிருஷ்ணா மிஷன், 40, ராமகிருஷ்ணா சாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1997. (சென்னை 600 005: நடராஜ் ஆப்செட் பிரஸ், 28, முத்துகாளத்தி தெரு, திருவல்லிக்கேணி).

204 பக்கம், விலை: ரூபா 60.00, அளவு: 18x12.5 சமீ.

சுவாமி கோகுலானந்தாவின் பதினொரு சொற்பொழிவுகளைக் கொண்டுள்ள இந்நூல் ஆன்மீக வாழ்க்கைக்கான வழிகாட்டுதல் தேவைகளை நிறைவு செய்கிறது. இந்தப் பேருரைகள் பெரும்பாலும் விவேக சூடாமணி மற்றும் பகவத்கீதையில் இருந்து எடுத்துக்காட்டப்படும் மேற்கோள்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன. விவேக சூடாமணி, ஞான மார்க்கத்தின் மூலமாகவும், பகவத்கீதை பக்தி மார்க்கத்தின் மூலமாகவும் உடல் உணர்வைக் கடந்து மேலே செல்வதற்கு சாதகனைத் தூண்டுகிறது. இந்த ஆன்மீக போதனைகளை விளக்குமிடங்களில் மேலைநாட்டுப் பல ஞானிகள் போதனைகளையும் இணைத்திருப்பது இந் நூலில் தனிச்சிறப்பாகும். இப்பேருரைகள் உள்ளிருந்து எழும் ஆன்ம அழைப்பு, ஆன்மீக வாழ்க்கையில் தடங்கல்கள், ஆன்மீக வாழ்க்கைக்குரிய சாதனங்கள், விவேகம் வைராக்கியம் ஷட்சம்பத்தி, முமுக்ஷுத்வம், ஜபசாதனை முறை, வாசனைகளை கட்டுப்படுத்துவது எப்படி? அஹங்காரத்தை ஒழிப்பது எப்படி? தேகம்-மனத்தின் தூய்மைப்பாடு, சுயக்கட்டுப்பாடே ஆத்மஞானத்திற்கு திறவுகோல், மேலைநாட்டு ஞானிகள் காட்டிய பாதை, கடவுளுடன் இயைந்த வாழ்க்கை ஆகிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27446).

## 14062

**இலங்கையில் சைவ வாழ்வு.** பிரம்மஸ்ரீ சோ.குஹானந்த சர்மா. கொழும்பு 13: பிரம்மஸ்ரீ சோ.குஹானந்த சர்மா, 136/28, ஜோர்ஜ் ஆர்.த.சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 2001. (கொழும்பு: ஓட்டோ பிரின்டர்ஸ்).

viii, 44 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-96822-2-9.

சைவ இல்லம், கோவில் வழிபாடு, நவக்கிரக வழிபாடு, விபூதி-திருநீறு, ருத்திராக்ஷம், பஞ்சாக்ஷரம் - "ஓம் சிவாயநம", பயனுறு திருப்பாடல்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் இலங்கையில் சைவ மக்கள் கடைப்பிடிக்கும் சைவ அனுஷ்டானங்கள் பற்றியும், பாரம்பரிய சைவ வாழ்வுமுறை பற்றியும் இந்நூல் விபரிக்கின்றது. சைவ இல்லமொன்று எவ்வாறு காட்சிதரும் என்பதிலிருந்து சைவக் கடவுளரின் வழிபாடுகள் சிலவும் விபரிக்கப்பட்டுள்ளன. திருநீறு, உருத்திராட்ச மாலை, பஞ்சாட்சர மந்திரம் போன்ற சைவர்களின் சமயம்சார்ந்த விடயங்களை தனித்தனி அத்தியாயங்களில் விபரித்திருப்பது இந்நூலின் முக்கியத்துவமாகின்றது. நூலின் இறுதி அத்தியாயத்தில் சைவர்கள் அதிகமாகப்

பாடும் திருப்பாடல்கள் சிலவும் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29144).

### 14063

**கடவுள் வழிபாடும் தமிழ் மக்களும்**. ஆ.விஸ்வலிங்கம். கொழும்பு: டாக்டர் ஆ.விஸ்வலிங்கம், 26, உவார்ட் பிளேஸ், 1வது பதிப்பு, ஜுலை 1975. (சென்னை-01: Hoe and Co.,The Premier Press).

24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

அறமே மூலாதாரமாகக் கொண்டு வருவித்த மனித வாழ்வை விளக்கும் வகையில் எழுதப்பட்ட கட்டுரை. கடவுளைப் பற்றிய தெள்ளிய அறிவையும் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள சம்பந்தத்தையும், பாசத்தின் திறமையையும், ஜீவகாருண்யத்தின் மகிமையையும் தெய்வத்தின் கருணை கலந்த நீதிமயமான பூமிகளையும் குறித்து, சைவசமயத்தையும் சைவ சித்தாந்தத்தையும் மீறி வேறு எந்த மதத்திலும் இத்துணை அழகாயும் தெளிவாயும் எடுத்துக்காட்டப்படவில்லை என்று உறுதிபடக்கூறும் இக்கட்டுரை பாளையங்கோட்டை சைவ சபை மகாசங்கச் சொற்பொழிவாளர்களான திருவாளர்கள் தில்லைநாயக முதலியார், ரி.பக்தவத்சலம், ரி.செல்வகேசவ முதலியார், பண்டிதை அகலாம்பிகை அம்மாள் ஆகியோரின் உரைகளினின்றும் எடுத்துத் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24541).

### 14064

**கந்தபுராண நவநீதம்**. ஸ்ரீ காசிவாசி சி.செந்திநாதையர். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாண கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம், 411/1, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1969. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம்).

(3), xviii, 145 பக்கம், விலை: ரூபா 4.00, அளவு: 18x12.5 சமீ.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் அணிந்துரையுடனும், மகாவித்துவான் பிரமஸ்ரீ சி.கணேசையர் அவர்களின் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் பற்றிய அறிமுகவுரையுடனும் வெளிவந்துள்ள இந்நூல் சமயப் பிரகரணம், வேதாகமப் பிரகரணம், பதிபசுபாசப் பிரகரணம், சரியாபாதப் பிரகரணம், கிரியாபாதப் பிரகரணம், யோகபாதப் பிரகரணம், ஞானபாதப் பிரகரணம், பக்திப் பிரகரணம் ஆகிய அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. இது சி.செந்திநாதையரின் "ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்" என்ற நூலிலிருந்து மீள்பிரசுரமாகின்றது. செந்திநாதையர் அவர்கள் கந்தபுராணத்தைப் பல நூறுதரம் பயின்று கந்தபுராண நவநீதத்தை எழுதியுள்ளார் என்றும், "நவநீதம்" என்றால் வெண்ணெய் என்று பொருள்படும் என்றும் பண்டிதமணி குறிப்பிடுகிறார். யாழ்ப்பாண கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகத்தின் நான்காவது நூலாக இது வெளியிடப் பெற்றுள்ளது. முன்னதாக சேக்கிழார் நாயனார் புராணம், திருக்கேதீச்சரத் திருப்பதிகங்கள், சுவாமி பிள்ளைத் தமிழ் ஆகிய மூன்று நூல்களை இக்கழகம்

வெளியிட்டிருந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2913).

### 14065

**சந்தியாவந்தன இரகசியம்.** ஆசிரியர் விபரமோ வெளியீட்டு விபரமோ தரப்படவில்லை.

34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x10.5 சமீ.

சந்தியா என்றால் அந்தி நேரம் என்றாலும் காலை, மாலை என இரு வேளைகளிலும் சந்தியா வந்தனம் செய்யப்படுகின்றது. சூரியனைப் போற்றும் இச்சடங்கை நாம் "sandhyopāsana" என்றோ "sandhyāvandana" என்றோ அல்லது வெறுமே "sandhyā" என்றோ அழைக்கிறோம். "சந்தியா" என்பது இரவு பகலை சந்திக்கும் வேளையையோ (அதிகாலை) அல்லது பகல் இரவை சந்திக்கும் வேளையையோ (அந்திமாலையையோ) குறிக்கும் சொல். சந்தியா வந்தனத்தை ஒரு நாளைக்கு இரு முறை செய்வதே வழக்கம். காயத்ரி மந்திர ஜபமும், புனித மந்திரங்களின் ஜபமுமே சந்தியா வந்தனத்தில் பிரதானமாக செய்யப்படுகிறது. சந்தியாவந்தனம் பற்றிக் கூறும் இந்நூல் விபூதி சுத்தி, விபூதி ஸ்நானம், மந்திரஸ்நானம், ஆசமனம், மானதஸ்நானம், சகளீகரணம், கரசுத்தி, கரநியாசம், அங்கநியாசம், பிராணாயாமம், சிவதீர்த்தகரணம், சந்தியாத்தியானம், மந்திராபிஷேகம், மார்ச்சனம், அகமர்ஷணம், ஆசமனசகளீகரணம், கவசவேஷ்டனம், சதாசிவத் தியானமும் காயத்ரி செபமும், தருப்பணம், அசமன சகளீகரணம், தீர்த்தோபசங்காரம், சூரியோபஸ்தானம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3077).

### 14066

**சாயிபாபா அவதாரங்கள்.** வானதி ரவீந்திரன் (ஆங்கில மூலம்), சீமாட்டிதேவி குமாரசாமி, வானதி ரவீந்திரன் (தமிழாக்கம்). கொழும்பு: Ranco Printers and Publishers Ltd., 1வது பதிப்பு, 1992. (சென்னை 600005: கிராபிக் சிஸ்டம்ஸ், 67, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை).

xxviii, 183 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

திருமதி வானதி ரவீந்திரன் 1990இல் எழுதிப் பிரசுரித்திருந்த Saibaba Avatars என்ற ஆங்கில நூலின் தமிழாக்கமாக இந்நூல் வெளிவந்துள்ளது. முதல் தரிசனம், இறைவனிடமே புகலிடம், இறைவன் அவதரிக்கிறார், அவதாரத்தின் அரும்பணி, அவதாரத்தின் வருகை, சத்தியசாயி பாபா தோற்றம், தெய்வீகப் பிறவி, சீரடியில் சாயி, தன்னலமில்லாச் சேவை, சேவை மூலம் இறைவனை அடைதல், சாயி அவதாரத்தின் நோக்கம், அப்யாச யோகம், கலியுகத்தில் சாதனை, பிரகடனம், யார் இந்த சாயிபாபா? தெய்வீகத் தன்மை புலப்படுத்தப்படுகின்றது, சாயியின் அற்புதங்கள், தெய்வீக சக்தி, சாயியின் நாமம் பரவுகிறது, சாயி மந்திர்,

சாயியினுடைய சர்வதர்மம், கடவுளின் பிரசன்னம், முடிவுரை, கருத்துரை ஆகிய 24 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. சீமாட்டிதேவி குமாரசாமி, யாழ். இராமநாதன் கல்லூரி ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி 1988-91 காலகட்டத்தில் அதிபராகி, உதவி ஆணையாளர் பதவியேற்று, கல்விநூல் வெளியீட்டுத் திணைக்களத்தில் உயர்பதவியிலிருந்து 1992இல் ஓய்வுபெற்றவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24108).

## 14067

**சூரசங்காரம்**. மட்டுவில் ஆ.நடராசா. கொழும்பு 6: ஆ.நடராசா, 25-1/2, ஈ.எஸ். பெர்ணான்டோ மாவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 2001. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

(6), 44 பக்கம், விலை: ரூபா 70.00, அளவு: 22x14.5 சமீ.

மட்டுவில் ஆ.நடராசா அவர்கள், இந்நூலில் கந்தபுராணப் பாடல்கள் பலவற்றையும் இடையிடையே எடுத்துக்காட்டி, சூரசங்காரத்தினையும் அதன் தத்துவத்தையும் விரிவாக எழுதியுள்ளார். தக்க யாகம், சூரன் வரம் பெற்றான், கந்தக் கடவுள் போருக்குப் புறப்பட்டார், சூரன் போருக்குப் புறப்பட்டார், அமரர் அஞ்சினர், ஆறுமுகக் கடவுள் போரிடச் சென்றார், இவனோ பகைவன், குருதிக் குளம், சூரனது சூள், தூதனைக் கொல்லுதல் தகாது, அக்கினி தேவன் கொடியானான், சூரனது தேர் அழிந்தது, இந்திர ஞாலம் வந்தது, சூரன் அண்ட கூடஞ் சென்றான், திருமாலின் உபதேசம், மாயை வந்தாள், தேவர்கள் பறவைகள் ஆனார்கள், சூரன் சக்கரவாகமானான், இந்திகன் மயிலானான், சூரனது மாயவடிவங்கள், மீண்டும் மாயப்போர், திருப்பெரு வடிவம், சூரனது மனம் மாறியது, மீண்டும் மாயப்போர், வேல் இருளை அழித்தது, சூரன் மாமரமானான், வேற்படை சென்றது, சேவலும் மயிலும் ஆகிய தலைப்புகளினூடாக இந்நூலில் சூரசங்காரம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21222).

## 14068

**சைவ சமய ஒழுக்கங்கள்**. ச.ஏகாம்பரநாதன். கொழும்பு 6: ச.ஏகாம்பரநாதன், இல. 8, ரஞ்சன் வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(6), 58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

சைவசமயத்தினர் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்கள் பற்றிய தகவல்களைத் தாங்கிவரும் இந்நூல் நான்கு பகுதிகளைக் கொண்டது. முதற் பகுதியில் அறிமுகம், இரு முக்கிய சைவ சமயக் கோட்பாடுகள், ஆலயமும் வழிபாடும், நவக்கிரகங்கள் ஆகிய நான்கு அத்தியாயங்களையும், இரண்டாம் பகுதி சின்னங்களும் தத்துவங்களும் என்ற அத்தியாயத்தையும், மூன்றாம் பகுதி, தேவாரம் என்ற தனி அத்தியாயத்தையும், இறுதிப்பகுதி விரதம், பண்டிகைகள், சரணாகதி ஆகிய

மூன்று அத்தியாயங்களையும் கொண்டதாக மொத்தம் ஒன்பது அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32135).

### 14069

**சைவ சமய வாழ்வியற் சிந்தனைகள்.** சி.அப்புத்துரை (தொகுப்பாசிரியர்). தெல்லிப்பழை: சரவணமுத்து அம்பலவாணர் அந்தியேட்டித் தின வெளியீடு, சாயுடை, மாவிட்டபுரம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2004. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

xx, 58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.

கலாபூஷணம் பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் தொகுத்தளித்துள்ள இம்மலரில், பஞ்சபுராணம், சைவ சமய வாழ்வியற் சிந்தனைகள், சைவ சமய வாழ்வியலுக்கு உபகாரமானவை, சைவசமய நிகழ்வுகளில் மலர்கள், சைவசமய வாழ்வியலிற் சிவசின்னங்கள், சைவ சமய ஒழுகலாறுகள்-சைவ சமயிகள் கைக்கொள்ள வேண்டியவை, சைவ சமய ஒழுகலாறுகள்-சைவ வாழ்வியலுடன் தொடர்புபடக் கூடாதவை, சைவ சமயம் கூறும் தீட்சை நெறி, கோலமிடுதல், அதிசயிக்கத் தக்கதோர் ஆலவிருட்சம்: அம்பலவாணர், சீலம்நிறை தந்தையின் கோலம், பட்டினத்தார் பாடல்கள் ஆகிய 16 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32932).

### 14070

**சைவ விரதங்கள்: ஓர் அறிமுகம்.** ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). யாழ்ப்பாணம்: ப.சிவானந்த சர்மா, சிவன்கோவில் அருகாமை, ஆவரங்கால், புத்தூர், 1வது பதிப்பு, பெப்ரவரி 1987. (பளை: சிவ-அன்பன் க.குமாரசாமி, வேல் அழகன் பதிப்பகம், கண்டி வீதி).

(8), 24 பக்கம், விலை: ரூபா 7.50, அளவு: 19x13 சமீ.

இந்நூல் சைவ விரதங்களும் விழாக்களும், விரதங்கள் ஓர் ஆரம்ப விளக்கம், விரதங்கள் சில பொதுவான விதிமுறைகள், விரதங்கள் விழாக்கள் பண்டிகைகள், சைவ விரதங்கள் (வார விரதங்கள், விசேஷ வார விரதங்கள், பக்ஷ விரதங்கள், மாத விரதங்கள், வருஷ விரதங்கள், அபூர்வ விரதங்கள்) ஆகிய ஐந்து அத்தியாயத் தலைப்புகளின் கீழ் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 042727).

### 14071

**தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்துசமய வரலாறு.** என்.கே.எஸ். திருச்செல்வம். கொழும்பு 2: அகில இலங்கை இந்து மாமன்றம், இல. 91/5, சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xx, 426 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 800., அளவு: 21.5x14.5 சமீ.

தென்கிழக்கிலங்கையின் இந்துப் பாரம்பரியத்தைப் பற்றிக் கூறும் இவ்வாய்வு இப்பிரதேசத்தின் சைவ ஆலயங்களையும், பிராமிக் கல்வெட்டுகளையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இலங்கையின் சைவம் சார்ந்த முதலாவது வரலாற்று நிகழ்வாகக் கருதப்படும் கந்தன் படையெடுப்புடன் (கி.மு.7000-10000 ஆண்டுகளுக்கிடையில் நிகழ்ந்தது) இப்பிரதேசம் தொடர்பு பட்டுள்ளமையால்தான் தென்கிழக்கிலங்கையில் முருக வழிபாடு மேலோங்கிக் காணப்படுகின்றது என்று கூறும் ஆசிரியர், பண்டைய காலம் முதல் கதிர்காமம், உகந்தை மலை, சங்கமன்கண்டி மலை, திருக்கோயில் போன்ற இடங்களில் முருகன் வழிபாடு சிறப்புற்று விளங்கியதென்பார். இவரது களஆய்வின்போது, இப்பகுதியின் புராதன தொன்மைமிகு தெய்வச்சிலைகள், ஐம்பொன் படிமங்கள், மற்றும் கல்வெட்டுக்கள், கருங்கற் சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய தொல்பொருட் சின்னங்கள், புராதன கட்டிட இடிபாடுகள் போன்ற அரிய பொக்கிஷங்களைக் கண்டெடுத்து புகைப்படங்களின் வழியாக ஆவணப்படுத்தியுள்ளார். ஐதீகங்களுக்கும், கர்ணபரம்பரைக் கதைகளுக்கும் மாத்திரம் முன்னுரிமை வழங்காது, இவ்வாலயங்கள் பற்றிய ஆய்வுக்குறிப்புகள், இங்கு கிடைக்கப்பெற்ற தொல்பொருட் சின்னங்கள் ஆகியவற்றுக்கே இங்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இவ்வாய்வு தென்கிழக்கிலங்கையின் பூர்வீகம், தென்கிழக்கிலங்கையின் பண்டைய இராச்சியங்கள், தென்கிழக்கிலங்கையின் பெருங்கற்கால (ஆதி இரும்புக்கால) பண்பாட்டு தொல்பொருள் மையங்கள், தென்கிழக்கிலங்கையின் பண்டைய கிராமங்களும் குடியேற்றங்களும், பிராமிக் கல்வெட்டுக்கள், புராதன கோயில்கள், இந்துக்களின் (தமிழர்களின்) பாரம்பரிய சொத்துக்கள் ஆகிய ஏழு அத்தியாயங்களில் புகைப்படச் சான்றுகளுடன் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் 59 கோயில்கள் பற்றிய விபரங்களை எழுதியுள்ளார். தென்கிழக்கிலங்கையில் இருந்த பண்டைய பத்து இந்து இராச்சியங்களையும், ஒன்பது பெருங்கற்கால தொல்லியல் மையங்களையும், 36 பண்டைய இந்துக் கிராமங்களையும் சைவசமயம் பற்றிக் கூறும் 105 பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றியுமான தகவல்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவருகின்றது இவ்வாய்வு. என்.கே.எஸ்.திருச்செல்வம், சென்னைப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை பட்டதாரியாவார்.

## 14072

**நீறிருக்கப் பயமேன்: கட்டுரைத் தொகுப்பு.** கந்தையா பத்மானந்தன். காரைநகர்: அம்மாத்தை வெளியீட்டகம், வாரி வளவு, 1வது பதிப்பு, 2019. (தெகிவளை: அனுபவ பதிப்பகம், Creaze Digital, 14, அத்தபத்து டெரஸ்).

x, 125 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-624-5222-08-7.

கந்தையா பத்மானந்தன் காரைநகர் மண்ணின் கல்வித்துறை ஆளுமைகளில் ஒருவர். விஞ்ஞானப் பட்டதாரியான இவர், முதுநிலைக் கற்கையினையும், தொழில்வாண்மைக் கல்வியினையும் பல்வேறு நாடுகளிலும் பெற்றிருந்தவர்.

இலக்கியத்துறையில் ஈடுபாட்டுடன் எழுதி வருபவர். இந்நூலில் சைவ சமயிகளின் முக்கிய விடயமான திருநீறணிதல் தொடர்பிலான பல்வேறு தகவல்களையும் கட்டுரை வடிவில் திரட்டித் தந்துள்ளார். சைவசமயம், சிவசின்னம்-திருநீறு, திருநீறு என்பது, சிவன் திருநீற்றுப் பிரியன், திருநீற்றின் வரலாறு, திருநீற்றின் பெருமை, திருநீறு அணிவதன் பயன், நோய் தீர்க்கும் நீறு, வைத்தீசுவரன் கோவில் சாத்துருண்டைப் பிரசாதம், திருச்செந்தூர் பன்னீர் இலைத் திருநீறு, நோய் தீர்த்த குட்டையன் செட்டியார், தீராத நோய்களைத் தீர்க்கும் திருநீலகண்டப் பிள்ளையார், சங்கரன் கோவில் புற்று மண்ணும் திருநீறும், திருநீற்றின் வகைகள், கற்பநீறு, அநுகற்பநீறு, உபகற்பநீறு, வீடுகளில் திருநீறு செய்யும் முறை, திருநீறு பசுஞ் சாணத்தினால் செய்யப்படுவதற்கான காரணங்கள், திருநீற்றை வைத்திருக்கும் பாத்திரம், திருநீறு அணியும் முறை, உடலில் திருநீறு அணியும் இடங்கள், தரிக்கக்கூடாத திருநீறு, திருநீறு அவசியந் தரிக்க வேண்டிய நேரங்கள், திருநீறு தரிக்கக்கூடாத இடங்கள், திருநீறினை திரிபுண்டரமாக அணிவதற்கான காரணங்கள், அனுட்டானம் செய்வோர் திருநீறு தரிக்கவேண்டிய முறை, திருநீற்றை எவ்வாறு தரிக்கக்கூடாது, திருநீற்றின் விஞ்ஞான தத்துவம், அருணகிரிநாதரும் திருநீறும், திருஞானசம்பந்தரும் திருநீறும், சேக்கிழாரும் திருநீறும், திருநீறு போற்றி வாழ்ந்த நாயன்மார்கள், முழுநீறு பூசிய முனிவர், பாம்பாட்டிச் சித்தர் பாம்பன் சுவாமிகளும் திருநீறும், வாரியார் சுவாமிகளும் திருநீறும், நெசவாளியும் திருநீறும், திருநீற்றால் பயனடைந்த மேலும் சிலர், திருநீற்றோடு சம்பந்தமுள்ள சில திருத்தலங்கள், சரவணபவ என்னும் ஆறு எழுத்தும் திருநீறும் ஆகிய 40 தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது.

### 14073

**பசுவின் கதை.** காந்தளகம். யாழ்ப்பாணம்: காந்தளகம், 213, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, தை 1978. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

viii, 15 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

இந்நூல் காலயுத்தி ஆண்டு தைத்திங்கள் மாட்டுப் பொங்கல் திருநாள் வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது. பசுக்கள் வழிபாட்டிற்குரியன, பசு காத்தல், பசுவின் கதை ஆகிய மூன்று ஆக்கங்கள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 02112).

### 14074

**பிரணவக் கலை விளக்கு.** வி.சங்கரப்பிள்ளை. கொழும்பு 6: மா.வாமதேவன், சிவத்திருமன்ற வெளியீடு, 13A, 40ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 6: டெக்னோ பிரின்டர்ஸ், 581, 2/1, காலி வீதி, வெள்ளவத்தை).

xxiv, 32 பக்கம், விலை: ரூபா 75.00, அளவு: 22x14.5 சமீ.

*பிரணவம் என்ற ஓங்காரம் ஒளிர்ந்தது. ஓம் என்பதைப் பிரித்தால் அ+உ+அம் என்று வெளிப்படும். அது படைத்தல், காத்தல், அழித்தல் அதாவது பிரும்மா, விஷ்ணு, சிவன் என்ற மூவரையும் தன்னகத்தே கொண்டது. ஐந்து எழுத்து அகார உகார வகார மகார யகாரம்மே பிரணவம்."ஓம்" என்பதை "பிரணவ மந்திரம்" என்று சொல்கிறார்கள். பிரணவம் என்பதற்கு பொருள் "என்றும் புதியது" என்பதாகும். "ஓம் ஓம் ஓம்" என முழங்காத நாட்களே ஒரு பக்தனின் வாழ்க்கையில் இல்லை. அவரவர் இஷ்ட தெய்வத்தின் முன்னால் "ஓம் சக்தி விநாயகா, ஓம் நமசிவாய, ஓம் நமோ நாராயணாய, ஓம் நமோ பகவதே வாசுதேவாய, ஓம் முருகா, ஓம் காளி, ஓம் சக்தி" என்றெல்லாம் மந்திரம் சொல்லி பிரார்த்திக்கிறார்கள். சைவர் வாழ்வில் அத்தகு பிரசித்தி பெற்ற பிரணவ மந்திரம் பற்றி இந்நூல் விளக்குகின்றது. இந்நூலாசிரியர், கீரிமலை சிவநெறிக் கழகத்தின் சைவ சித்தாந்த ஆசிரியராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33211).*

## 14075

**பிரதோஷ வழிபாடு.** *திருச்செல்வம் தவரத்தினம். காரைநகர்: திருச்செல்வம் தவரத்தினம், சர்வசக்தி வெளியீடு, சடையாளி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2014. (யாழ்ப்பாணம்: ரூபன் பிரின்டர்ஸ், ஆனைக்கோட்டை).*

*52 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 18.5x12.5 சமீ.*

*சிவபெருமானுக்குரிய விரதங்களுள் மிகவும் விசேஷமானது பிரதோஷ விரதம். தோஷம் என்றால் குற்றம் என்றும், பிரதோஷம் என்றால் குற்றமற்றது என்றும் பொருள் தரும். மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையிலான காலம் பிரதோஷ காலமாகும். இதை சந்தியாகாலம் என்றும் அழைப்பார்கள். ஒவ்வொரு மாதமும் வளர் பிறை தேய்பிறை என்னும் இரண்டு காலங்களிலும், திரியோதசி திதியில் வருவது பிரதோஷ தினமாகும். இந்த வேளையில் சிவபெருமானை வழிபாடு செய்வதே இந்த விரதத்தின் நோக்கம். பிரதோஷ வேளையில் இறைவனை வழிபடுவதால் நமது முற்பிறவி குற்றங்கள், சகல தோஷங்கள் நீங்கி நலம் கிடைக்கும். பாவம் விலகி புண்ணியம் சேரும். வறுமை அகலும். பயம், மரண வேதனை நீங்கும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் மகப்பேறு பெறுவர். பிறவி ஒழித்து முக்தி பேற்றினை அடைவர். கல்வியில் மேன்மை பெறுவர் என்று பல்வேறு நம்பிக்கைகள் சைவர்களின் மத்தியில் காணப்படுவதால் இவ்விரதம் முக்கியமானதாகப் போற்றப்படுகின்றது. இந்நூல், பிரதோஷ வழிபாடு, பிரதோஷ வரலாறு, பிரதோஷ வழிபாட்டு முறையும் பலன்களும், நந்திதேவர் வணக்கம், சிவலிங்க வழிபாடு, நடராஜ பத்து, திருப்பதிகங்கள், சிவபுராணம், 2014ஆம் ஆண்டுக்குரிய பிரதோஷ விரத நாட்கள் ஆகிய ஒன்பது தலைப்புகளின்கீழ் இச்சிறுநூல் பிரதோஷ விரதம் பற்றிய பல்வேறு பயனுள்ள தகவல்களை வழங்குகின்றது. இந்நூலாசிரியர் சுழிபுரம் யாழ்/விக்டோரியாக் கல்லூரியின் ஆசிரியராவார்.*

## 14076

**புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள் (அனுராதபுர மாவட்டம்).**

*என்.கே.எஸ். திருச்செல்வம். கொழும்பு 5: அருந்ததி பதிப்பகம், 68/14, ஸ்ரீ சித்தார்த்த வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

xxvi, *321 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 850., அளவு: 21.5*x*14.5 சமீ.*

*அனுராதபுர மாவட்டத்தில் காணப்பட்ட புராதன இந்துக் கோவில்களை இந் நூல் சமூகவியல், தொல்லியல் சான்றுகளுடன் விரிவாக அடையாளப்படுத்தியுள்ளது. அறிமுகக் கட்டுரையாக அனுராதபுரம் மாவட்டத்தின் பண்டைய இந்துக் கோயில்கள்-ஓர் அறிமுகம் என்ற கட்டுரையுடன், 108 இந்து ஆலயங்கள் பற்றிய தனித்தனிக் கட்டுரைகளின் முடிவில், அனுராதபுர மாவட்டத்தில் இந்து தெய்வங்கள் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள், அனுராதபுர மாவட்டத்தின் தமிழ்க் கிராமங்கள், அனுராதபுர மாவட்டத்தில் சுடுமண் லிங்க வடிவங்களும், தெய்வ உருவங்களும், அனுராதபுரத்தில் இந்து சமய சின்னங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்கள் ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 63623).*

## 14077

**போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளிகோயில்.** *என்.கே.எஸ். திருச்செல்வம். கொழும்பு 5: அருந்ததி பதிப்பகம், 68/14, ஸ்ரீ சித்தார்த்த வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2018. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

x, *55 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 20.5*x*14 சமீ.*, ISBN: *978-955-3726-02-5.*

*பண்டைய காலம் முதல் தமிழ் மன்னர்களும், பௌத்த சிங்கள மன்னர்களும், அரச பிரதானிகளும் கட்டிய கோயில்களை ஐரோப்பாவில் இருந்து இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர்தான் பெருமளவில் அழித்தார்கள் என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. வடக்கிலும் கிழக்கிலும் இவர்கள் அழித்த கோயில்கள் ஆயிரத்துக்கும் மேல் எனக் குறிப்பிடும் ஆசிரியர் இந்நூலில் குறிப்பாக போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட 700 வருட வரலாற்றைக் கொண்ட பெந்தோட்டை காளி கோயில் பற்றிக் கூறமுற்படுகின்றார். 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இக்கோயில் 400 ஆண்டுகளின் பின் 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டது. அதன் பின் 300 வருடங்கள் கழிந்த நிலையில் சிதைந்து கிடந்த இக்கோயிலை மீள்நிர்மாணம் செய்ய 1884இல் ஆர்த்தர் ஜெயவர்த்தனா என்ற ஆராய்ச்சியாளர் மேற்கொண்ட முயற்சியும் தோல்வியடைந்தது. இன்றும் இக்கோயில் அழிவுற்ற நிலையிலேயே காணப்படுகின்றது. பெந்தோட்டை காளி கோயிலின் அமைவிடமும் அதன் தொன்மையும், பெந்தோட்டை காளி கோயிலைக் கட்டிய மன்னர்களும் திருப்பணிகளும், பெந்தோட்டை காளி கோயிலை முற்றாக இடித்து அழித்த போர்த்துக்கேயர், பெந்தோட்டை காளி கோயிலின் தொல்பொருள் சின்னங்கள்,*

*சர்வதேச நூல்களில் பெந்தோட்டை காளி கோயில், பெந்தோட்டையில் தமிழர் தொடர்பான கல்வெட்டு, பெந்தோட்டையில் விநாயகர் மற்றும் விஷ்ணு வழிபாடு, பெந்தோட்டை காளி கோயிலை மீண்டும் கட்டியெழுப்ப மேற்கொள்ளப்பட்ட முயற்சி, பெந்தோட்டை காளி கோயில் மீண்டும் கட்டப்பட வேண்டும் ஆகிய அத்தியாயங்களின் கீழ் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது.*

## 14078

**மேலைப்புலோலி நா.கதிரைவேற்பிள்ளையின் சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம்.** *நா.கதிரைவேற்பிள்ளை (மூலம்), தி.செல்வமனோகரன் (பதிப்பாசிரியர்). பருத்தித்துறை: பருத்தித்துறை நண்பர்கள், கல்வி, சமூக நலன்சார் அமைப்பு, 2வது பதிப்பு, ஓகஸ்ட் 2017, 1வது பதிப்பு, 1896. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).*

xxiv, *104+10 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5*x*14 சமீ.,* ISBN: *978-955-7347-01-1.*

*சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம் என்ற இந்நூல், நல்லை நகர் ஆறுமுகநாவலரின் மாணவ பரம்பரையைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மேலைப்புலோலி நா.கதிரைவேற்பிள்ளை (1871-1907) அவர்களால் இயற்றப்பட்டு சென்னை, மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில் துர்முகி ஆண்டு ஆனி மாதம் (1896) அச்சிட்டு வெளியிடப்பட்டிருந்தது. மீண்டும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரான தி.செல்வமனோகரன் அவர்களால் இந்நூல் 2017இல் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. இம்மீள்பதிப்பின் முதற் பகுதியில் வெளியீட்டுரை, அணிந்துரை, முன்னுரை, சிறப்புப் பாயிரம் என்பனவும், இரண்டாம் பகுதியில் நா.கதிரைவேற்பிள்ளை அவர்களின் சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம், சிவ விளக்கம், க்ஷேத்திராலய விளக்கம், மகோற்சவ விளக்கம் என்பனவும், மூன்றாவது பகுதியில் பின்னிணைப்புகளாக கதிரைவேற்பிள்ளையும் காலப் பின்புலமும், கதிரைவேற்பிள்ளையின் வகிபாகம் ஆகிய விபரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. பருத்தித்துறை நண்பர்கள், கல்வி, சமூக நலன்சார் அமைப்பு, தனது முதலாவது பிரசுரமாக இந்நூலை வெளியிட்டுள்ளது.*

## 14079

**மேலைப்புலோலி நா.கதிரைவேற்பிள்ளையின் சைவபூஷண சந்திரிகை.** *நா.கதிரைவேற்பிள்ளை (மூலம்), தி.செல்வமனோகரன் (பதிப்பாசிரியர்). பருத்தித்துறை: பருத்தித்துறை நண்பர்கள், கல்வி, சமூக நலன்சார் அமைப்பு, 3வது பதிப்பு, ஓகஸ்ட் 2017, 2வது பதிப்பு, 1902. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).*

xliv, *192 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5*x*14 சமீ.,* ISBN: *978-955-7347-02-8.*

*ஆரணி நகர சமஸ்தான வித்துவானும், அத்துவித சித்தாந்த மதோத்தாரணரும் மாயாவாத தும்சகோளரியும் ஆகிய யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி*

நா.கதிரைவேற்பிள்ளை அவர்களால் இரண்டாவது பதிப்பாக சுபகிருது ஆண்டு (1902) கார்த்திகை மாதத்தில் சென்னை சி.நா.அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப் பெற்றது. பருத்தித்துறை நண்பர்கள், கல்வி, சமூக நலன்சார் அமைப்பினர், தமது இரண்டாவது பிரசுரமாக இந்நூலை மீள்பதிப்புச் செய்து 2017இல் வெளியிட்டுள்ளனர். பிள்ளை அவர்கள் பன்முக ஆளுமை கொண்டவர். நூலாசிரியராக, உரையாசிரியராக, போதனாசிரியராக, சொற்பொழிவாளராக, சைவசித்தாந்த அறிஞராக அகராதிக் கலைஞராக விளங்கியவர். நாவலரின் நேரடி மாணவரான தியாகராச பிள்ளையிடம் வரன்முறையாக பாடம் கேட்டவர். நாவலரில் அதிக பக்தியும் பாசமும் உடையவர். நாவலருக்காக நீதிமன்றமும் சென்று வெற்றிவாகை சூடியவர்.

### 14080

**வைரவர் வழிபாடு.** திருச்செல்வம் தவரத்தினம். காரைநகர்: திருச்செல்வம் தவரத்தினம், சர்வசக்தி வெளியீடு, சடையாளி, 1வது பதிப்பு, ஜுன் 2014. (யாழ்ப்பாணம்: ரூபன் பிரின்டர்ஸ், ஆனைக்கோட்டை).

88 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 125.00, அளவு: 18.5x12.5 சமீ.

வைரவர் வழிபாடு பற்றிய விரிவான தகவல்களைத் தரும் இந்நூலில் வைரவர் வழிபாடு, சிவனின் வைரவத் திருக்கோலங்கள், வைரவர் திருக்கரத்தில் விளங்கும் முத்திரைகள், வைரவர் ஆயுதங்கள், வைரவருக்குரிய வாகனங்கள், காலவைரவர், வைரவமூர்த்தங்களும் அவர்தம் தேவியரும், வைரவருக்குப் பிரியமானவை, இலங்கையில் சிறப்புமிக்க வைரவர் ஆலயங்கள், காரைநகர் பதியுறை ஞான வைரவர் ஆலயங்கள், தலபுராணங்களில் வைரவர் பாடல்கள், வைரவர் காயத்திரி மந்திரம், அருள்மிகு ஞானவைரவர் அர்ச்சனை மாலை-108, ஸ்ரீ காலவைரவர் அஷ்டோத்திரம், திருமுறைகளில் வைரவர் பாடல்கள், வைரவர் வழிபாடும் சோதிடத்தில் தோஷ நிவர்த்தியும், வைரவர் பாடல்கள், சகஸ்ரநாம அர்ச்சனைப் பலன்கள், ஸ்ரீ வைரவர் சஹஸ்ர நாமாவளி ஆகிய 19 பிரிவுகளின்கீழ் விடயதானங்கள் ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளன.

## 294.5(1) இந்து சமய பாடநூல்கள்

### 14081

**இந்து சமய பாடத்திரட்டு: முதலாம் இரண்டாம் பாகங்கள்.** க.சி.குலரத்தினம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 2வது பதிப்பு, தை 1965, முதற் பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்).

viii, 323 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 21x13.5 சமீ.

சைவ சமயப் பகுதி முழுவதும் அடங்கிய இந்நூல் க.பொ.த. வகுப்பு 1965-1966ம் ஆண்டுகளுக்குரியது. இந்நூலின் 32 பாடங்களைக் கொண்ட முதற் பாகத்தில் நான்கு பகுதிகளும், 48 பாடங்களைக் கொண்ட இரண்டாம் பாகத்தில் நான்கு பகுதிகளுமாக மொத்தம் எட்டுப்பகுதிகளில் 80 பாடங்கள் விளக்கமாகத்

*தரப்பட்டுள்ளன. சைவப் புலவர் க.சி.குலரத்தினம் அவர்கள், யாழ்ப்பாணத்துச் சைவ பரிபாலன சபையிலும், அகில இலங்கை மத்திய மகாசபையிலும் நிர்வாக அங்கத்தவராய் இருந்து தொண்டு செய்தவர். சென்னை சைவசித்தாந்த மகாசமாசத்தினர் நடத்திய சைவப்புலவர் தேர்வில் 1946இல் முதல் வகுப்பில் திறமைச் சித்தியெய்தியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38623).*

## 14082

**இந்து சமயம் தரம் 12: வளநூல்.** *தேசிய கல்வி நிறுவகம். மஹரகம: சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித்துறை, மொழிகள் மானிடவியல் சமூக விஞ்ஞான பீடம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2018. (மஹரகம: அச்சகப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்).*

x, *156 பக்கம், விலை: ரூபா 330., அளவு: 29*x*21 சமீ.,* ISBN: *978-955-654-732-0.*

*2018ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்திற்கு அமைவாக முதன்முறையாக இவ்வளநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவரிடம் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான கற்றற் பேறுகள், உத்தேச விடய உள்ளடக்க வழிகாட்டிகள், கற்றல்-கற்பித்தற் செயற்பாடுகள், உசாத்துணைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இவ்வளநூல் அமைகின்றது. இந்து சமயம்-ஓர் அறிமுகம், தமிழகத்தின் இந்து சமயப் பண்பாடு, இந்து சமய நெறிகள், பக்தி மார்க்கங்களும் பக்தியாளர்களும் (சமயகுரவர்கள்), அனுபூதியும் சித்தர்களும், இந்துக் கோயிற் கலைகள்-ஓர் அறிமுகம், இந்துக் கலைகள், இலங்கையில் இந்து சமயம், இந்து சமய வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய பெரியார்கள், இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்புகள் ஆகிய பத்து இயல்களில் இவ்வளநூல் தயாரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65678).*

## 14083

**சைவ இலக்கியக் கதாமஞ்சரி.** *கா.அருணாசல ஆசிரியர். நாவலப்பிட்டி: ஆத்மஜோதி நிலையம், 1வது பதிப்பு, 1959. (நாவலப்பிட்டி: ஆத்மஜோதி அச்சகம்).*

xiv, *254 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18*x*12 சமீ.*

*மட்டக்களப்பு, சைவப்புலவர், தேசிகமணி கா.அருணாசல ஆசிரியர் அவர்களினால் எழுதப்பட்ட இந்நூல் சைவக்களஞ்சியம் வரிசையில் ஐந்தாம் பாகமாக வெளிவந்துள்ளது. இதில் விநாயகருக்கு விகடசக்கரவிநாயகர் என்ற பெயருண்டானது எவ்வாறு என்ற முதலாவது கதையில் தொடங்கி நவவீரர் தோற்றம் என்ற 105ஆவது கதை வரையிலான அனைத்துக் கதைகளும் சைவசமயத்தைப் பயிலும் மாணவர்கள் எளிதில் விளங்கிக் கொள்ளும்வண்ணம் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு கதையும் மூன்று முதல் நான்கு பக்கங்களுக்கு மேற்படாத வகையில், எளிதில் சலிப்பின்றிப் புரிந்துகொள்ளும் வண்ணம் எளிமையான நடையில் தேவைப்படின் ஒன்றிரண்டு செய்யுள்களுடன் சொல்லப்பட்டுள்ளன. பெரியபுராணம் தோன்றிய விதம்,*

பிரமன் சிரம் கொய்தது, குண்டோதரனுக்கு அன்னமிட்டது, மன்மதனை எரித்தது, நாரைக்கு முத்தி கொடுத்தது என்றவாறாக இந்நூலிலுள்ள 105 கதைகளும் சுவையானவை. சைவசமயத்தின் பல்வேறு ஐதீக, வரலாற்று அம்சங்களையும் கூறி இறுதியில் ஒரு படிப்பினையையும் மாணவர்களுக்குச் சொல்கின்றது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34341).

### 14084

**சைவ நெறி: தரம்8.** இ.மகேந்திரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு: நூல் வெளியீட்டுக் குழு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுருபாயா, பத்தரமுல்ல, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு: சென்வின் தனியார் நிறுவனம், இல. 35/3, கேரகல வீதி, ஹெலும்மஹர, தெல்கொட).

xii, 116 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 140.00, அளவு: 24x18 சமீ.

இது கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைச் சபையின் ஆலோசனைக்கமைய வெளியிடப்பட்டுள்ள பாடநூல். இந்நூல் வெளியீட்டுக் குழுவில் நந்தினி சண்முகலிங்கம், சி.ஞானசூரியம் ஆகியோரும் ஓவியராக ஆர்.கௌசிகனும் பணியாற்றியுள்ளனர். இந்நூலில் கடவுள், ஆலய வழிபாடு -1, சிவராத்திரி, நாள் மங்கலம், சம்பந்தர் தேவாரம், புது வருடப் பிறப்பு, கண்ணப்ப நாயனார், அப்பர் தேவாரம், விரதங்கள், ஆலய வழிபாடு -2, ஈழத்து ஆலயங்கள், உபநிடத சிந்தனைகள், சுந்தரர் தேவாரம், திருமுறைகளில் புராண இதிகாசக் கருத்துக்கள், சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார், மக்கள் சேவையே மகேசன் சேவை, திருவாசகம், விழுமியங்கள், சைவசித்தாந்தத்தில் பசு, திருவிசைப்பா-திருப்பல்லாண்டு, திருமந்திரம்-பெரியபுராணம்-திருப்புகழ், நாட்டார் வழிபாடு ஆகிய 22 பாடங்கள் இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்பாக எங்கள் நாட்டிலுள்ள சமயங்கள் என்ற கட்டுரைக் குறிப்பும் இடம்பெற்றுள்ளது.

### 14085

**சைவ போதினி மத்திய பிரிவு (எட்டாம் வகுப்புக்குரியது).** நூலாக்கக்குழு. கொழும்பு13: விவேகானந்த சபை, 34, விவேகானந்த மேடு, 3வது பதிப்பு, மார்ச் 1964. (கொழும்பு: மெய்கண்டான் அச்சகம், 161, செட்டியார் தெரு).

(4), 186 பக்கம், விளக்கச் சித்திரங்கள், விலை: ரூபா 2.00, அளவு: 18x12.5 சமீ.

கொழும்பு விவேகானந்த சபை நடத்தும் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சைக்குரிய புதிய பாடத்திட்டத்திற்கு உதவும் வகையில் தயாரிக்கப்பட்ட தொகுப்பு நூல். நான்கு பகுதிகளில் எழுதப்பட்டுள்ள இப்பாடநூலின் முதற்பகுதியான "அருட்பாடல்களும் நீதிப் பகுதியும்" திருஞான சம்பந்தர் தேவாரம், திருநாவுக்கரசர் தேவாரம், சுந்தரர் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு. திருப்புராணம், கந்தர் அலங்காரம், திருப்புகழ், நீதிப் பகுதி-திருக்குறள் ஆகிய பாடங்களைக் கொண்டுள்ளது. இரண்டாம் பகுதியான "சமய

*நூல்களில் பேசப்படும் பொருள்கள்" சைவசமயம், வேதம், ஆகமம், புராண இதிகாசம், பரமசிவம், சிவலிங்கம், உமாதேவியார், விநாயகர், சுப்பிரமணியர், இலக்குமி, சரசுவதி, ஆன்மா, ஆணவம், மாயை, தனுகரண புவன போகம், கன்மம், சிவபுண்ணியம், சரியை-கிரியை-யோகம்-ஞானம் ஆகிய பாடங்களைக் கொண்டுள்ளது. மூன்றாவது பகுதியான "வரலாறுகளும் கதைகளும்" திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள், மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார், மன்று தொழுத பதஞ்சலி, மங்கையர்க்கரசியார் ஆகிய பாடங்களைக் கொண்டுள்ளது. நான்காவது பகுதியான "திருக்கோயில்கள்" இராமேச்சுரம், பழநி, காசி ஆகிய பாடங்களைக் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 16645).*

### 14086

**சைவப் பிரகாசிகை: முதலாம், இரண்டாம்,மூன்றாம், நான்காம், ஐந்தாம் புத்தகங்கள்.** *ச.குமாரசுவாமிக் குருக்கள். கொழும்பு 4: அறநெறிப் பிரிவு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு: யுனைட்டெட் மேர்ச்சன்ட்ஸ் லிமிட்டெட், 529/19, கே.சிறில் சி.பெரேரா மாவத்தை).*

*250 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14.5 சமீ.*

*அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை முகாமையாளர் சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள் அவர்களால் எழுதப்பெற்று 1950களில் வெளிவந்துள்ள சைவப் பிரகாசிகையின் முதல் ஐந்து பாடநூல்களினதும் தொகுப்பாக இந்நூல் மீள்பிரசுரம் கண்டுள்ளது. இது ஆசிரியரின் சமயக் கட்டுரைகளின் தொகுப்பாக அமைகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50489).*

## 294.5(2) இந்து நிறுவனங்கள், ஆலய வரலாறுகள்

### 14087

**இரண்டாவது உலக இந்து மாநாடு சிறப்பு மலர்: மன்னார் மாவட்டம்.** *மலர்க் குழு. மன்னார்: மாவட்ட விழாக் குழு, இரண்டாவது உலக இந்து மாநாடு-2003, மன்னார் மாவட்டம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளுமெண்டால் வீதி).*

xx, *108 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29*x*22 சமீ.*

*இரண்டாவது உலக இந்து மகாநாடு தொடர்பான மன்னார் மாவட்ட நிகழ்வுகள், மன்னார் மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களின் விபரங்கள், இலங்கையில் சைவமும் அதன் தொன்மையும் மன்னார் மாவட்டத்தில் சைவப் பாரம்பரியங்களும்*

சைவக் கோயில்களும், திருக்கேதீச்சர திருத்தல வரலாறு, திருவானக்கூடம் சித்திவிநாயகர் ஆலயம்-மன்னார், இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்-உப்புக்குளம், ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்-பேசாலை, நானாட்டான் செல்வமுத்துமாரியம்மன் ஆலயம், தலைமன்னார் ஸ்ரீதேவி முத்துமாரியம்மன் தேவஸ்தானம், கட்டாடுவயல் முருகன் ஆலயம்-இலுப்பைக் கடவை, கோயிற்குளம் கற்பகப் பிள்ளையார் கோயில், புதுக்குளம் சித்திவிநாயகர் கோயில், பாலம்பிட்டி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், கோயிற்குளம் புதுக்குளம் நுங்குவெட்டி ஐயனார் கோயில், கள்ளியடி கற்பகப்பிள்ளையார் ஆலயம், பெரியபண்டிவிரிச்சான் சித்தி விநாயகர் ஆலயம், வெள்ளாங்குளம் வடக்கு ஐயனார் கோயில், வெள்ளாங்குளம் கரியலுப் பிள்ளையார் ஆலயம், வெள்ளாங்குளம் ஸ்ரீமுருகன் ஆலயம், சிலாவத்துறை ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில், தட்சனாமருதமடு முருகன் கோயில், விடத்தல்தீவு கற்பகப் பிள்ளையார் கோயில், மன்னார் வலயக் கல்விப் பாடசாலைகளில் சைவசமயம் கற்பித்தல்-ஓர் கண்ணோட்டம், திருக்கேதீச்சர மகா சிவராத்திரி மடம், சிவபூமியென்னும் திருக்கேதீச்சரத் திருக்கோயில் தொடர்பும் பணிகளும் பட்ட அவலமும் பெற்ற பலன்களும், சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் அதன் கல்வி சமய சமூகப் பணிகளும், மன்னார் மாவட்டத்தில் கலாசாரத் திணைக்களங்களின் செயற்பாடுகள் அதன் மூலம் மாணவர்கள் மக்கள் அடைந்த பயன்பாடுகள், மன்னாரில் இந்து சமய வளர்ச்சிச் சங்கம், சைவ நெறித் தொண்டர் கழகம்-மன்னார் மாவட்டம், அன்னை இல்லத்தின் தோற்றுவாயும் வளர்ச்சியும், சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியின் இந்து மாமன்றச் செயற்பாடுகள், மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) இந்து மாமன்றச் செயற்பாடுகள், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி (தேசிய பாடசாலை) இந்து மாமன்றச் செயற்பாடுகள், மன்னார் முருங்கன் மகாவித்தியாலய இந்து மன்றத்தின் செயற்பாடுகள், திருக்கேதீச்சரமும் மடங்களும், 20ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் சைவ சித்தாந்தம், மனிதப் பிறவியும் வேண்டுவதே, திருவாதிரைப் பெருமகிமை, பசுவின் பெருமை, நித்திய விரதம், அறநெறிப் பாடசாலைகள்-மன்னார் மாவட்டம், மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகள், ஆசிரியர் விபரம், விவாகக் கிரியை, இரண்டாவது உலக இந்து மாநாடு போட்டி முடிவுகள், இந்து நலன் வளர்ச்சி இளைஞர் மன்றம், மன்னார் மாவட்டம் ஆகிய 45 ஆக்கங்களை இச்சிறப்பு மலர் உள்ளடக்கியுள்ளது. (இந் நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12221).

### 14088

**ஈழத்து இந்துக் கோயில்கள்: ஆய்வரங்கச் சிறப்பு மலர் 2019.** ஏ.அனுசாந்தன், தேவகுமாரி ஹரன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, 2019. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

x, 190 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

*இலங்கையில், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 2019இல் நடத்திய ஆய்வரங்கின் போது வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். திருக்கோணேஸ்வரம் (நித்தியவதி நித்தியானந்தன்), திருக்கேதீஸ்வரம் (நித்தியவதி நித்தியானந்தன்), கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில் (நித்தியவதி நித்தியானந்தன்), ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோயில் (நித்தியவதி நித்தியானந்தன்), வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் -யாழ்ப்பாணம் (வசந்தா வைத்தியநாதன்), வல்வெட்டித்துறை சிவன்கோயில் (இந்திராதேவி சதானந்தன்), தேசத்துக் கோயில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் (த.ஜீவராஜ்), கீரிமலைச் சிவன்கோயில் நகுலேஸ்வரம் (சிவ.மகாலிங்கம்), வானவன் மாதேவீஸ்வரம் (சி.பத்மநாதன்), முன்னேஸ்வரம் (வி.சிவசாமி), முகத்துவாரம் ஸ்ரீசுவர்ணாம்பிகா சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வர சுவாமி ஆலயம் (இந்திரா சதானந்தன்), திருக்கரைசையம்பதி திருமங்கலாய் சிவன்கோவில் (இ.வடிவேல்), அனலைதீவு-புளியந்தீவு ஸ்ரீ நாகேஸ்வரன் கோயில் (நயினை ஆ.தியாகராசா), மட்டுவில் கல்வம் சிவசந்திர மௌலீசர் ஆலயம் (ஆர்.வி.கந்தசுவாமி), அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில் கோவில்குளம் வவுனியா(ஆறுமுகம் நவரத்தினராசா), நல்லூர் கைலாசநாதர் கோயில் (வி.சிவசாமி), திருநந்தீஸ்வரம்-இரத்மலானை (த.மனோகரன்), ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் கோவிலின் தோற்றம்: ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம் (செ.கிருஷ்ணராஜா), நாகர் கோயில் (க.கணபதிப்பிள்ளை), மண்டூர் முருகன் கோயில் (சி.சந்திரசேகரம்), திருக்கோயில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலயம் (தங்கேஸ்வரி கதிர்காமர்), நல்லூர்க் கந்தசுவாமி கோயில் (சி.பத்மநாதன்), தொண்டைமானாறு செல்வச்சந்நிதி (வல்வை. ந.அனந்தராஜ்), மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் (எஸ்.சுதாகரன்), உகந்தை ஸ்ரீ சித்திரவேலாயுதர் கோவில், கதிர்காமம் (சி.பத்மநாதன்), சித்தாண்டி சித்திர வேலாயுதர் கோயில் (வ. குணபாலசிங்கம்), திருகோணமலை வில்லூன்றிக் கந்தசாமி கோயில் (அ.ஆ.ஜெயரட்ணம்), வெருகலம்பதி சித்திரவேலாயுதர் கோயில் (ந.சுபராஜ்), இணுவில் கந்தசுவாமி கோயில், திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் (இ.வடிவேல்), பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயில் (சு.துஷ்யந்), நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் (ஆ.சசிநாத்), மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் ஆலயம் (இந்திரா சதானந்தன்), வாழைச்சேனை மருங்கையடிப் பூவல் கைலாய பிள்ளையார் கோயில் (வி.சி.கந்தையா), கண்டி கட்டுக்கலை செல்வவிநாயகர் ஆலயம் (இராசையா மகேஸ்வரன்), இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில், மாமாங்கப் பிள்ளையார் ஆலயம் (நா.வாமன்), வந்தாறுமூலை மகா விஷ்ணு கோவில் (வி.சி.கந்தையா), வல்லிபுர ஆழ்வார் கோவில் (இந்திராதேவி சதானந்தன்), பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் (ந.சுபராஜ்), மாத்தளை அருள்மிகு முத்துமாரியம்மன் தேவஸ்தானம் (மாத்தளை வடிவேலன்) ஆகிய 43 கட்டுரைகள் இச்சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ளன.*

### 14089

**உலக சைவப் பேரவை நான்காவது பொதுச்சபைக் கூட்டமும், உலக சைவ மாநாடும்: சிறப்பு மலர் 08-10 செப்டெம்பர் 1995.** *மலர்க்குழு. கொழும்பு: உலக சைவப் பேரவை-இலங்கைக் கிளை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).*

*(20+126) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19.5 சமீ.*

*ஆசியுரைகள் வாழ்த்துரைகளுடன், உலக சைவப் பேரவை இலங்கை கிளையின் அறிக்கை (ஏ.எம்.துரைசாமி), சைவ சித்தாந்த ஒழுக்கவியல் (சோ.கிருஷ்ணராஜா), சித்தாந்த சைவம் (இணுவையூர் கா.செ.நடராசா), பூத்து நிற்கும் பேரருள் (வசந்தா வைத்தியநாதன்), பிச்சை உகக்கும் பெம்மான் (பா.சி.சர்மா), பண்ணார் தேவாரத் திருமுறைகள் (சி.குமாரசாமி), பெரியபுராணமும் சைவசித்தாந்தமும் (தங்கம்மா அப்பாக்குட்டி), அத்தன் எனக்கு அருளியவாறு (ச.சாம்பசிவனார்), பொலநறுவைக் காலத்தில் சதுர்வேதி மங்கலங்கள்: ஒரு குறிப்பு (இரா.வை.கனகரத்தினம்), சைவ சித்தாந்தச் செந்நெறி (ஆ.குணநாயகம்), சேக்கிழார் காட்டும் அடியார் வழிபாடு (கோமதி சூரியமூர்த்தி), வள்ளுவம் ஒரு ஞான நூல் (க.ந.வேலன்), திருக்குறளின் உள்கிடை சைவசித்தாந்தமே (அ.பரசுராமன்), சைவசித்தாந்தத்தின் அநாதிப்பொருளியல் (கி.லோகநாதன்), நமச்சிவாய வாஅழ்க (மு.கந்தையா), சைவ நாற்பாதங்கள் (காயத்திரி பாண்டுரங்கன்), திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் (கே.ரவிச்சந்திரன்), திருமந்திரத்தின் சிறப்பு (மகாதேவன் சியரமணன்),* The Harmony of Science and Saiva Siddhanta Philosophy (Swami Siva Nandhi Adikalar), Saiva Sidhantham in the light of Modern Science and Cosmology (R.Namasivayam), Fate and Free Will (Satsorupavathy Nathan) *ஆகிய ஆக்கங்கள் இம்மலரை அலங்கரிக்கின்றன. இச்சிறப்பு மலர்க் குழுவில் பூமணி குலசிங்கம், சாந்தி நாவுக்கரசன், ம.சண்முகநாதன், வி.நடராஜா ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26343).*

### 14090

**உலக சைவப் பேரவையின் யாப்பு.** *உலக சைவப் பேரவை. கொழும்பு: உலக சைவப் பேரவை-இலங்கைக் கிளை, 1வது பதிப்பு, ஜுலை 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(2), 44 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 21.5x14 சமீ.*

*1998 செப்டெம்பர் 25ஆம்திகதி மலேசியா, பினாங்கில் நடைபெற்ற உலக சைவப் பேரவையின் பொதுக்குழுக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறாக, உலக சைவப் பேரவையின் இலங்கைக்கிளை அச்சிட்டு வெளியிட்டுள்ள யாப்பு. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25174).*

## 14091

**சந்நிதியான் ஆச்சிரமம்: சேவைகள் பணிகள்.** *செ.மோகனதாஸ் (பதிப்பாசிரியர்). தொண்டைமானாறு: சைவ கலை பண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரமம், ஸ்ரீ செல்வச்சந்நிதி, 1வது பதிப்பு, 2007. (தொண்டைமானாறு: அச்சகம், சந்நிதியான் ஆச்சிரமம்).*

*16+(56) பக்கம், புகைப்படங்கள், 56 தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.*

*சந்நிதியான் ஆச்சிரமம் தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் (1988-2007 வரை), சைவ கலை பண்பாட்டுப் பேரவை, வைகாசிப் பெருவிழா, விசேட கௌரவிப்பு, அதிவிசேட கௌரவிப்பு, மயில்வாகனம் சுவாமிகள் குருபூசை, ஞானச்சுடர், 100ஆவது ஞானச் சுடர் வெளியீட்டு விபரம், ஆண்டுதோறும் வாசகர் போட்டி, மறைந்த முருகேசு சுவாமிகள் குருபூசை, அறுபத்து மூவர் குருபூசையும் மகேஸ்வர பூசையும் திருவாசக விழாவும், அருணகிரிநாதர் விழாவும், சமுதாயப்பணி, முன்பள்ளிப் பேரவை, சமூக சேவை-இலவச வைத்தியப் பணி, குடாநாடு தாண்டிய கல்விப் பணி, ஏனைய நிகழ்வுகள், நூல் வெளியீடு, கடல் அநர்த்தம், சுவாமிகளுக்கு வாழ்த்து, நன்றிக்குரியவர்கள், மக்கள் மனம் கவர்ந்த மகேஸ்வரன் ஆகிய குறுந்தலைப்புகளில் ஏராளமான புகைப்பட ஆவணங்களுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 15117).*

## 14092

**சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோயில் வரலாறு.** *தம்பிப்பிள்ளை காசிநாதன். யாழ்ப்பாணம்: தம்பிப்பிள்ளை காசிநாதன், சுதுமலை தெற்கு, மானிப்பாய், 1வது பதிப்பு, வைகாசி 1986. (யாழ்ப்பாணம்: செட்டியார் பதிப்பகம், 411/1, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை).*

xvi, *40 பக்கம், புகைப்படங்கள், தகடு, விலை: ரூபா 10.00, அளவு: 18x12.5 சமீ.*

*சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவில் இலங்கையின் பிரசித்தி பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இக்கோயிலில் அம்பாள் எழுந்தருளப்பெற்று 200 ஆண்டுகளுக்கு மேலாகின்றன. இந்நூலில் மேற்படி கோயில் வரலாறானது பத்து அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. சுதுமலை ஓர் அறிமுகம், கண்ணகி அம்மனும் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளும், கோயில் சிறப்பும் கோயில் அமைப்பும், திருவிழாச் சிறப்பும் வழிபாட்டு மரபுகளும், கர்ணபரம்பரைக் கதைகளும் அற்புதங்களும், கோயிற் திருப்பணி வரலாறு, கோயிற் பரிபாலனம், (நிர்வாகம், கோயில் குருக்கள்மார்), பாயிரம்- மானியம்பதி ஸ்ரீ தா.சுவாமிநாதன்), திருவூஞ்சல் (மானியம்பதி வித்துவான் மகாஸ்ரீ அ.சுவாமிநாத முதலியார்), சந்தக் கவிமாலை (பண்டிதர் செ.சிவப்பிரகாசம்) ஆகிய தலைப்புகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. சுதுமலைக் கிராமவாசியான இந்நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளராகவிருந்தவர். (இந்நூல்*

கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16344).

### 14093

**திருக்கோணேஸ்வரம்.** வை.சோமாஸ்கந்தர், அ.ஸ்ரீஸ்கந்தராசா. திருக்கோணமலை: பொ.கந்தையா, தனசக்தி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1963. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி).

xi, 100 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 1.75, அளவு: 18x13 சமீ.

**திருக்கோணேஸ்வரம்.** வை.சோமாஸ்கந்தர், அ.ஸ்ரீஸ்கந்தராசா. திருக்கோணமலை: ஆலடி விநாயகர் தேவஸ்தானம், 2வது பதிப்பு, ஆகஸ்ட் 1996, 1வது பதிப்பு, ஏப்ரல் 1963. (திருக்கோணமலை: ஸ்ரீ கணேச அச்சகம், 28B புதிய சோனகத் தெரு).

66 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 18x13 சமீ.

திருக்கோணமலையின் பெயர் காரணம், புராண வரலாறுகள், கி.மு.2000 ஆண்டுகளுக்கு முன்னர், திருக்கோணேஸ்வரம் ஆதிகாலம், போர்த்துக்கீசர் காலம், பிரித்தானியர் காலம், திருக்கோணேசர் ஆலயக் கல்வெட்டுகள், திருக்கோணேசர் சாசனம், திருக்கோணமலைக் கோவில்கள், கன்னியா வெந்நீரூற்று, சமூக வளர்ச்சி, திருக்கோணமலைத் தமிழ்ப் புலவர்கள், திருக்கோணமலை வரலாற்று மூலங்கள் ஆகிய 13 இயல்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 002735).

### 14094

**தில்லைச் சிதம்பரமும் ஈழத்துச் சிதம்பரமும்.** சி.பொன்னம்பலம் (தொகுப்பாசிரியர்). காரைநகர்: ஈழத்துச் சிதம்பரம் சிவகாமசுந்தரர் சமேத ஆனந்த நடராசனின் நூற்றாண்டு நிறைவு வெளியீடு, 1வது பதிப்பு, சித்திரை 2010. (காரைநகர்: கூத்தபிரான் பதிப்பகம்),

xxi, 180 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x22 சமீ.

காரைநகர், ஈழத்துச் சிதம்பரம் சிவகாமசுந்தரர் சமேத ஆனந்த நடராசனின் நூற்றாண்டு நிறைவு சித்திரை 2008இல் அனுஷ்டிக்கப்பட்டதன் நினைவாக இந்நூல் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் பாயிரவியல், சிதம்பரவியல், ஈழத்துச் சிதம்பரவியல், நடனவியல், திருவாசகவியல், பொதுவியல் ஆகிய ஆறு இயல்களைக் கொண்டுள்ளது. "பாயிரவியலில்" கடவுள் வணக்கம், சிறப்புப் பாயிரம், முன்னுரை, ஆசியுரை, வாழ்த்துரை, அணிந்துரை, ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம் பற்றிய செய்தி என்பன தொகுக்கப்பட்டுள்ளன. "சிதம்பரவியல்" என்ற பிரிவில் சிதம்பரப் பாமாலை, சிதம்பர மகாதலம், சிதம்பர கும்பாபி ஷேகங்கள், திருக்கோவையார் காட்டும் தில்லையும் ஈசனும், திருவாசகம் காட்டும்

தில்லை, சிதம்பர நகர ஆலயங்கள், சிதம்பர நகர மடாலயங்கள், மாணிக்கவாசகரால் சைவம், தில்லைவாழ் அந்தணர், தில்லைக் கோவிந்தர் சிதம்பரக் கோவிலின் பரிவாரத் தெய்வம், நடராஜர் வணக்கம் ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. "ஈழத்துச் சிதம்பரவியல்" என்ற பிரிவில் திண்ணபுரம் அரசடி ஞானவைரவர் திருவூஞ்சல், ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் திண்ணபுரச் சிவனார் ஆலயம், காரைநகரின் தொன்மை, ஐயனார் வழிபாட்டின் தொன்மை, மகாசாஸ்த ஐயனார் தோற்றம், ஆண்டிக்கேணி ஐயனார் ஊஞ்சல், தீர்த்த விசேடம், ஈழத்துச் சிதம்பர திருப்பள்ளியெழுச்சி, சிவன் ஆலயம், சிவனார் ஆலய வழக்கங்கள், ஈழத்துச் சிதம்பர நடராஜர் பத்து, வடபத்திரகாளி திருப்பள்ளி எழுச்சி, வடபத்திரகாளி திருவூஞ்சல், வரலாறு தொடர்ச்சி, காரை நாட்டுக் கோயில்கள், மடத்துக்கரை அம்பாள் திருவூஞ்சல், ஈழத்துச் சிதம்பர பாலஸ்தாபன கும்பாபிஷேக விபரங்கள், ஐயப்பன் அவதாரம்-ஓர் மீள்வாசிப்பு ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. "நடனவியல்" என்ற பிரிவில் நடராஜவடிவமும் நடனமும், நடராஜவடிவின் தொன்மைநிலை, பொலநறுவை நடராஜர், நடராஜ வடிவங்கள் சில, புகழ்பெற்ற நடராஜ வடிவங்களும் தலங்களும், நடராஜர் அஷ்டோத்திர மாலை ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. "திருவாசகவியல்" என்ற பிரிவில் திருவாசகம் தொடர்பானதும் மாணிக்கவாசகர் தொடர்பானதுமான 17 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. "பொதுவியல்" என்ற இறுதிக் பிரிவில் கடவுள் வணக்கம்-நயினை நாகபூஷணி அம்பாள் திருப்பள்ளியெழுச்சி, சோமஸ்கந்த மூர்த்தி, கோலாலம்பூர் திருக்கோயில்கள், மகேஸ்வர வடிவங்களும் சக்திகளும் ஏனைய கணபதி வடிவங்கள் சுப்பிரமணியர் வடிவங்கள், சிவஞான முனிவரின் சிவஞானபோதச் சிற்றுரையின் தெளிவுச் சுருக்கம், கச்சியப்பரின் கந்தபுராணத்து மகேஸ்வர வடிவங்கள், பன்னிருசோதி இலிங்கத் தலங்கள், இமாலயப் பிரதேச ஆலயங்கள், சிவபராக்கிரமம் கூறும் 64 சிவமூர்த்தங்கள் மேலும் இறைவனின் வடிவங்கள் சில, பொலநறுவைச் சிவன் கோவில்கள், மேலைத்தேச சைவாலயங்கள், மத்திய கிழக்கு சைவாலயங்கள், சைவாலயங்களின் அழிவுகள், பஞ்சபூதத் தலங்கள், தென்கிழக்காசியாவில் இந்துமதம் பற்றிய குறிப்பு, இந்துமதம் தொடர்பான வரலாற்றுச் சிறப்புக்கள், மாமன்னன் இராசராசன் (பாடல்), ஏனைய அகத்தியரில் சிலர், குருக்கள் தியாகர், ஏறாவூர் சிவலிங்கம், தஞ்சைப் பெருவுடையார் பற்றிய குறிப்புகள், வியாவில் ஐயனார் ஒரு மீள்வாசிப்பு, கதிர்காமநாதன் திருவூஞ்சல் ஆகிய 22 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18798).

## 14095

**மட்டக்களப்பு சைவக் கோவில்கள் (இரண்டு பாகங்களில்).** வி.சீ.கந்தையா. கொழும்பு 07: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 98 வோட் பிளேஸ், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1997. (கொழும்பு 6: நியு கார்த்திகேயன் பிரின்டர்ஸ், 501/2 காலி வீதி, வெள்ளவத்தை).

(22), 364 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14. சமீ.

இந்நூலின் முதலாம் பாகம் 1983இலும் 2ஆம் பாகம் 1991இலும் வெளியிடப்பட்டிருந்தன. இந்நூல் அவ்விரண்டு பாகங்களையும் ஒருங்கிணைத்த தனிநூலாகும். முதற் பிரிவில் ஈச்சரங்கள், மலைக் கோவில்கள், திருப்படைக் கோயில்கள், பிள்ளையார் கோயில்கள், அம்மன் கோவில்கள் ஆகிய தலைப்புக்களில் கோவில்கள் வகைப்படுத்தப்பெற்று ஒவ்வொரு கோவிலுக்கும் உரிய விபரங்கள் தனித்தனிக் கட்டுரையுருவில் தரப்பட்டுள்ளன. 1ஆவது இயலில் நூற் பொது அறிமுகம், 2ஆவது இயலில் ஈச்சரம் இரண்டு (மாமாங்கேச்சரம், தான்தோன்றீச்சரம்), 3ஆவது இயலில் மலைக்கோவில் மூன்று (உகந்த மலை, தாந்தாமலை, சங்கு மண் கண்டி மலை), 4ஆவது இயலில் திருப்படைக் கோவில்கள் (திருக்கோவில், தில்லை மண்டூர்த் திருத்தலம், கோவில் போரதீவு சித்திரவேலாயுத சுவாமி, சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி, வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி), 5ஆவது இயலில் பிள்ளையார் கோயில்கள் (ஆனைப்பந்தி பிள்ளையார் கோயில், களுதாவளைப் பிள்ளையார் கோயில், அம்பாறை வில்லுப்பிள்ளையார் கோயில், காரைதீவு பாலையடிவால விக்னேஸ்வரர் கோயில், பழுகாமம் மாவேற்குடாப் பிள்ளையார் கோயில், ஆரையம்பதி திருநீலகண்டப் பிள்ளையார் கோயில், வாழைச்சேனை (முருங்கையடிப்பூவல்) ஸ்ரீகைலாயப் பிள்ளையார் கோயில்), 6ஆவது இயலில் அம்மன் கோயில் (கொத்துக் குளத்து முத்துமாரியம்மன் கோயில், புன்னையம்பதி (கோட்டமுனை) மகாமாரியம்மன் கோயில், காரைதீவு கண்ணகியம்மன் கோயில், களுவாஞ்சிக்குடி கண்ணகியம்மன் கோயில், பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயில், வெல்லாவெளி முத்துமாரியம்மன் கோயில், கோராவெளி கோல வள்ளிநாயகி கோயில், ஏறாவூர் பத்திரகாளி கோயில், பெரிய போரதீவு பத்திரகாளி அம்மன் கோயில்), 7ஆவது இயலில் பொதுக் கோயில்கள் (ஏறாவூர் வீரபத்திரன் கோயில், வந்தாறுமூலை கிருஷ்ணன் கோயில், பண்டாரியாவெளி நாகதம்பிரான் கோயில், மட்டக்களப்பு நரசிங்க வைரவ சுவாமி கோயில்), எனக் கோவில்களின் வரலாறுகள் பகுத்துத் தரப்பட்டுள்ளன. 8ஆவது இயலில் மட்டக்களப்பிலுள்ள சைவக் கோவில்கள் பெயர் வரிசை இடம்பெற்றுள்ளது. இரண்டாம் பிரிவில், மட்டக்களப்பில் எழுந்தருளியிருக்கும் மூன்று பிள்ளையார் கோவில்கள், ஒரு சிவன் கோவில், ஆறு முருகன் கோவில்கள், ஐந்து அம்மன் கோவில்கள், ஒரு விஷ்ணு கோவில், ஒரு வீரபத்திரர் கோவில் என்பனவற்றை அறிமுகப்படுத்தும் தனித்தனிக் கட்டுரைகளாக இவை தொகுக்கப்பட்டுள்ளன. 1ஆவது இயல் (அறிமுகம் பொது), 2வது இயல் (பிள்ளையார் கோவில்கள் மூன்று: கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில், வீரமுனைச் சிந்து யாத்திரைப் பிள்ளையார் கோவில், மண்டூர் - நாகஞ்சோலை மாணிக்கப்பிள்ளையார் கோவில்), 3வது இயல் (சிவன் கோவில் ஒன்று: செட்டிபாளையம் சோமநாத இலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோவில்), 4வது இயல் (முருகன் கோவில் ஆறு: ஈழத்து - திருச்செந்தூர் முருகன் ஆலயம், புது கல்லடி, திருப்பெருந்துறை - முத்துக்குமார வேலாயுத சுவாமி கோவில், குருக்கள் மடம் ஸ்ரீ செல்வக்கதிர்காமம் ஆலயம், கரைதீவு மாவடிக் கந்தசுவாமி கோவில், ஆரையம்பதி கந்தசுவாமி கோவில், கல்லடி வேலாயுத சுவாமி கோவில்), 5ஆவது இயல் (அம்மன் கோவில்கள் ஐந்து: மண்டூர் - மண்டூர்

கோட்டைமுனை துறையடி மாரியம்மன் கோவில், திருப்பழுகாமம் ஸ்ரீ திரௌபதியம்மன் கோவில், துறைநீலாவணை கண்ணகி அம்மன் கோவில், தம்பிலுவில் கண்ணகை அம்மன் கோவில், நாவலடி ஸ்ரீ கடலாட்சியம்மன் ஆலயம், 6ஆவது இயல் (பொது: களுவாஞ்சிக்குடி ஸ்ரீ மகாவிஷ்ணு கோவில், களுவாஞ்சிக்குடி ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் என்றவாறாக ஆறு இயல்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2387).

## 14096

**மட்டுநகர் ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலய வரலாறு.** த. நாகையா. (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: த.நாகையா, கோட்டைமுனை, 1வது பதிப்பு, ஆடி 1996. (மட்டக்களப்பு: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).

*(12), 44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.*

மட்டக்களப்பு ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் தொடர்பாக இதுவரை பல்வேறு நூல்களிலும் வெளிவந்த தகவல்களை அடிப்படையாக வைத்து முழுமையான கோவில் மற்றும் பிரதேச வரலாற்று நூலொன்றினை ஆசிரியர் தொகுத்தளித்திருக்கிறார். இதில் மட்டக்களப்பு மாநிலம், மட்டு மாநகர், கோட்டைமுனை, அமிர்தகழிக் கிராமம், மாமாங்கம், மாமாங்கக் குளம், மாமாங்கக் குளச் சிறப்பு, ஆலயச் சூழல், ஆலயம் அமைந்த வரலாறு, இலிங்கம் பற்றிய வரலாறு, ஆலய அமைப்பு, இறை சக்தி, சிவனும் விநாயகரும், மாசிமகம்-மகாமகம், கும்பகோணம், தீர்த்தங்கள்-பொது, ஸ்ரீ இராமபிரானும் பிரமகத்தி தோஷமும், மஹாயன பட்சம், ஆடிஅமாவாசை, வருடாந்த மஹோற்சவம், மஹோற்சவ விளக்கம், ஆலய விஷேச பூசைகள், ஆடக சவுந்தரியின் வரலாறுகள், இவ்வாலயத்தில் நிகழ்ந்துள்ள அற்புதங்கள், ஆலய நிர்வாகம், மடங்கள் ஆலய மடங்கள், இராஜகோபுரம் அமைத்தல் ஆகிய தலைப்புகளில் இவ்வரலாறு தொகுத்துத் தரப்பட்டுள்ளது. (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது).

## 14097

**முருகன் கதிர்காமம்.** மு.கணபதிப்பிள்ளை. சென்னை 17: அருள் நிலையம், 12, உஸ்மான் ரோடு, 1வது பதிப்பு, 1967. (சென்னை 17: சௌந்தரா பிரின்டர்ஸ்).

*100 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18x12 சமீ.*

இந்நூலில் தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய ஒன்பது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. முருக வழிபாடும் மூநாடும், பழந்தமிழகமும் கதிர்காமமும், கதிர்காமம் என்னும் பெயர், புராண வரலாறு, கதிர்காமத் தலம், வேலை வணங்குவது எமக்கு வேலை, வேல் திருவிழா, கதிர்காமத் திருப்புகழ், கதிர்காமம் பற்றிய நூல்கள் ஆகிய தலைப்புகளில் இந்து சமய இலக்கியக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18920).

## 14098

**வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வரலாறும் பிரபந்தங்களும்.** *நவறாஜினி சண்முகம் (தொகுப்பாசிரியர்). வட்டுக்கோட்டை: செல்வி நவறாஜினி சண்முகம், கள்ளி வீதி, வட்டு. தென்மேற்கு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*v, 54 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.*

*வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வரலாற்றை எழுதியும் தொகுத்துமிருப்பவர் அவ்வாலய நிறுவுநர் அமரர் கணபதியார் தம்பையா அவர்களின் பீட்டப்பிள்ளையாவார். அமைவிடம், தலம், மானங்காத்த பிள்ளையார், கந்தசுவாமியார் வெளிப்படுதல்-போர்த்துக்கேயர் காலம் (கி.பி.1505-1658), முதலாவது கோயில்-ஒல்லாந்தர் காலம் (கி.பி.1659-1795), இரண்டாவது கோயில் - ஆங்கிலேயர் காலம் (கி.பி.1796-1948), வழக்காடுதல், தீர்ப்பு, அடுத்து வந்த வழக்குகளின் தீர்ப்பு, மூன்றாவது கோயில் - தற்போதைய கோவில், பூசகர் வருதல், மகா கும்பாபிஷேகம், பூசைகள், திருப்பணி-கோயிலின் அபிவிருத்தி-கி.பி.1913-1932 வரை, ஆலய நிர்வாகம், மஹோற்சவம், மஹோற்சவப் பெருவிழா-திருவிழாக்கள், ஆலய உரிமை மாற்றம், ஆலய நிறுவுநரின் கடைசிக் காலம், ஆலய உரிமை சந்ததிவசம், பரிபாலன சபை, பராபரிப்புத் தத்துவம், இக்கோயில் கணபதியார் தம்பையா அவர்களால் கட்டுவிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள், கோவிலில் நடந்த அற்புதங்களும் தரிசனங்களும், மூர்த்தி-தலம்-தீர்த்தம், ஆலயத்தின் வீதிகள், கோபுரங்கள், பிரபந்தங்கள் (அடைக்கலங்கோவை, திருவூஞ்சல், கந்தரேசல்) ஆகிய தலைப்புகளின் கீழ் மேற்படி கோவில் பற்றிய விரிவான பல தகவல்களை ஆவணப்படுத்தியிருக்கிறார். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 053147).*

## 14099

**வீரகத்தி விநாயகரும் கொல்லங்கலட்டிக் கிராமமும்.** *அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன் (மலராசிரியர்). மாவிட்டபுரம்: வீரகத்தி விநாயகர் ஆலயத் தொண்டர்கள், கொல்லங்கலட்டி, 1வது பதிப்பு, 2017. (மல்லாகம்: ராம் பதிப்பகம், காங்கேசன்துறை வீதி).*

*81 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.*

*விநாயகர் வரலாறு, மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோவில் வரலாறு, கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய வளர்ச்சியில் சிவஸ்ரீ சண்முகானந்தக் குருக்களின் பங்கு, விநாயகப் பெருமான் அடிதொழுவோம், வீரகத்தி விநாயகருக்கு தேர்த்திருவிழா, எங்கள் பிள்ளையார், எழுச்சிமிகு எமது கிராமத்தின் ஒரு மீள்நோக்கு, எழில்மிகு திருவூர் எம்மூர் ஆகும், மறைந்தும் மனதில் மறக்கமுடியாதவர்கள், மாவை முதலியார், கொல்லங்கலட்டி, விநாயகர்*

திருவுருவின் தத்துவம், பிள்ளையாரும் கூட்டுப் பிரார்த்தனையும், மாவை கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் பேரில் பாடியவை, வீரகத்தி விநாயகர் திருவூஞ்சல், வீரகத்தி விநாயகனைப் பாடி மகிழ்வீர், வீரகத்தி விநாயகர் திருத்தல வெண்பா, மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் துதி, ஔவையார் அருளிச்செய்த விநாயகர் அகவல், ஸ்ரீ விநாயகர் நூற்றெட்டு நாமாவளி வழிபாடு, விநாயகர் கவசம் ஆகிய கட்டுரைகளினூடாக கொல்லங்கலட்டிக் கிராமம் பற்றியும் அங்குள்ள வீரகத்தி விநாயகர் வரலாறு பற்றியும் பல்வேறு பிரமுகர்களாலும் இம்மலரில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மலராசிரியர் அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன் வலிகாமம் கல்வி வலயத்தின் முன்னாள் ஆசிரிய ஆலோசகராவார்.

### 14100

**வெல்லாவெளி வழிபாட்டியலும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தல வரலாறும்.** வெல்லவூர்க் கோபால் (இயற்பெயர்: சீ.கோபாலசிங்கம்). மட்டக்களப்பு: ஆலய பரிபாலன சபை, அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருத்தலம், வெல்லாவெளி, 1வது பதிப்பு, 2019. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496 A, திருமலை வீதி).

150 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x19 சமீ., ISBN: 978-955-42694-6-0.

வெல்லாவெளி, மட்டக்களப்பிலிருந்து தெற்கில் 30 கி.மி. தூரத்தில் அமைந்துள்ளது. இப்பகுதி ஆரம்பகால குடியிருப்புப் பகுதிகளில் ஒன்றாகும். இங்கு ஆரம்ப கால பிராமிச் சாசனங்களும், வாழ்விட தடயங்களும், பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்களும் காணப்படுகின்றன. "வெல்லாவெளி வழிபாட்டியலும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தல வரலாறும்" என்ற இந்நூல் காலத்தின் தேவையால் முகிழ்ந்த வெல்லாவெளிக் கிராமத்தின் வரலாற்றுப் பொக்கிசமாகும். அந்தக் கிராம மக்களின் சமூக வரலாற்று வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ளதால் இந்த வரலாற்று ஆவணத்திற்கு உயிர்ப்பும் உணர்வும் உள்ளது.

## 294.5 (21) இந்து சமய ஆண்டிதழ்கள்

### 14101

**இந்து தருமம் 1962-63.** வ.கணபதிப்பிள்ளை, கு.கல்வளை சேயோன் (இதழாசிரியர்கள்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1962. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194A, பண்டாரநாயக்க மாவத்தை).

(12), 1-84+1-40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

இவ்விதழில் இந்து - இஸ்லாமிய கலாச்சாரத் தொடர்புகள் (எம்.ஏ.எம்.சுக்ரி), ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் நற்போதனை - யாழ்ப்பாணச் சமய நிலை, இறை உறையும் இடம் எதுவோ?-கவிதை (முத்து - சிவஞானம்), உபநிடத அறிவுரைகளும் சமய தத்துவங்களில் அவைதம் ஆதிக்கமும் (செல்வி சிவயோகம் பேரம்பலம்), இந்து சமயம் (க.நவரத்தினம்), ஸ்ரீ சுவாமி சிவானாந்தர்: "இந்து

மதத்தின் பெருமை", "இணையிலா இந்துமதம்" கலைஞன் மதம் (வை.அ.கைலாசநாதன்), தெய்வ நங்கை யசோதை பெற்றாளே (அ.சண்முகதாஸ்), முடிவு-கவிதை (சி.மௌனகுரு), இருபதாம் நூற்றாண்டில் சைவசமய நிலை (சுடர் மகேந்திரன்), மேதினியிற் காணவில்லை- கவிதை (வ.கோவிந்தபிள்ளை) ஆகிய கவிதை/கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து "சமயமும் பிற துறைகளும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் இடம்பெறுகின்றது. சமயமும் சமுதாயமும் என்ற தலைப்பில் கா.சிவத்தம்பியும், சமயமும் கலைகளும் என்ற தலைப்பில் க.நவசோதியும், சமயமும் உளவியலும் என்ற தலைப்பில் எஸ். கனகசிங்கமும், சமயமும் விஞ்ஞானமும் என்ற தலைப்பில் ஸ்ரீமத் சுவாமி சச்சிதானந்தாஜீயம் தத்தமது கருத்துக்களை கட்டுரை உருவில் பதிவு செய்திருக் கிறார்கள். இறுதியாக "பேரரசும் பெருந்தத்துவமும்" என்ற தலைப்பில் க.கைலாசபதியின் சிறப்புக் கட்டுரை இடம்பெற்றுள்ளது. இரண்டாம் பகுதியாக 40 பக்கங்களில் பின்வரும் ஆங்கில ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. Hindu Dharma: Live your religion, Saint Thayumanavar on Desire (S.Thananjayarajasingham), Hindu Civilization in the Gupta Period (S.Pathmanathan), The Pattini Cult in Ceylon (V.Muttu Cumaraswamy), Sri Ramakrishna and His Mission (P.Kanagaretnam),Maha Bharata has lost its character as an epic (S.Thiruganasampanthar), Hindu Temples of Ancient ceylon (Karthigesu Indrapala). (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 008482).

**14102**

**இந்து தருமம் 1998: மகா கும்பாபிஷேக சிறப்பு வெளியீடு.** இதழாசிரியர் குழு. பேராதனை: இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1998. (களுபோவில: டெக்னோ பிரின்ட், இல. 6, ஜெயவர்த்தன அவென்யூ, தெகிவளை).

xiii, 87+38 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

வாழ்த்துரைகள், ஆசியுரைகள் மற்றும் மன்ற அறிக்கைகளையும் சமயம் சார்பான கட்டுரைகளையும் இம்மலர் உள்ளடக்குகின்றது. இவ்விதழில் செல்வி.கோமதி கிருஷ்ணசாமி, ஸ்ரீ.பிரசாந்தன் ஆகியோரின் கவிதைகளுடன், பொருளாதார நெருக்கடிக்குள்ளான இந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம் (பா.சஞ்சயன்), பாட்டின் மூலம், அபிடேகக் கிரியை முறைகளும் தத்துவமும் (க.லோகப்பிரகாசம்), கிராமியத் தெய்வங்கள் - ஓர் அறிமுகம் (செல்வி கலாவல்லி பத்மநாதன்), மெஞ்ஞானம் சிரிக்கிறது (வல்லிபுரம் சுகந்தன்), இந்து சமயம் எதிர்நோக்கும் தற்கால இடர்கள் (நா.ஹரிதர்), இரண்டாம் பக்தியுகம் - சோழர்காலம் (க.விஷ்ணுகரன்), இலங்கையில் இந்து மதத்தின் செல்வாக்கு: வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் கி.பி. 10ம் நூற்றாண்டு வரை (க.ஜெயானந்தமூர்த்தி), தென்கிழக்காசிய நாடுகளில் இந்து மதத்தின் செல்வாக்கு (செல்வி.எஸ்.சிவதர்ஷினி), இந்து மதம் ஓர் அன்பு நெறி (செல்வி.ச.கவிதாஞ்சலி),

இந்து மத நூல்களில் ஒழுக்கக் கோட்பாடு (வீ.சுதேசன்), ஆறுமுக நாவலர் - ஒரு மறுபரிசீலனை (ச.பாஸ்கரன்), மனமும் மதமும் (சியாமளா சிவம்), நல்ல ஒழுக்கம் நன்மை தரும் (நவரட்ணம் நந்தரூபன்), கும்பாபிஷேக மகிமை (சோ.செந்தில்குமார்), கும்பாபிஷேகத் தத்துவம் (க.ஆனந்தகுமாரசர்மா), ஆலயத்தின் அமைப்பும் அதன் முக்கியத்துவமும் (ப.ஜெயகாந்த்), "அங்கு உரைக்கு என் அளவு?" (க.ஜெயநிதி), மக்கட் சேவையே மகேசன் சேவை (செல்வி வேழினி வல்லிபுரம்), ஆலய வழிபாடும் இன்றைய காலத்தில் அதன் தேவையும் (தி.சண்முகதாசன்), மட்டக்களப்புப் பகுதியில் நாகதம்பிரான் வழிபாடு (செல்வி.செ.செல்வராசா) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வாண்டு மலரின் இதழாசிரியர்களாக கோ.சுரேஷ், கு.பார்த்தீபன், ஐ.சதானந்தன், ஜெ.திவாகர், வி.மீரா ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20828).

### 14103

**இந்து தருமம் 2001**. சோ.ரவீந்திரன், பரா.ரதீஸ் (இதழாசிரியர்கள்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2001. (களுபோவில: டெக்னோ பிரின்ட், இல. 6, ஜெயவர்த்தன அவென்யூ, தெகிவளை).

xix, 106+30 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

வாழ்த்துரைகள், ஆசியுரைகள் மற்றும் மன்ற அறிக்கைகளையும் சமயம் சார்பான கட்டுரைகளையும் இம்மலர் உள்ளடக்குகின்றது. இம்மலரில் வாழ்த்தியல், வாழ்வியல், ஆய்வியல், சமூகவியல், படைப்பியல், பதிவியல் ஆகிய ஆறு பிரிவுகளின்கீழ் படைப்பாக்கங்கள் பகுத்துத் தரப்பட்டுள்ளன. வாழ்த்தியலில் ஆசியுரைகள், வாழ்த்துரைகள் என்பனவும், வாழ்வியலில் இந்துக்களின் கண்ணோட்டத்தில் பழந்தமிழர் திருமணமும் இன்றைய திருமண நடைமுறைகளும், கிழக்கிலங்கையாம் பாண்டிருப்பின் திப்பள்ளயம், முருக வழிபாடு, ஆலய அமைப்பும் ஆலய வழிபாட்டு முறைகளும் கடவுள் வடிவங்களும் ஆகிய நான்கு கட்டுரைகளும் உள்ளன. ஆய்வியல் என்ற பிரிவில், சோழப் பேரரசின் சதுர்வேதி மங்கலம்-உத்தர பேரூர், நாவலனார் உரைவளம்- கோயிற் புராணத்தை அடிப்படையாகக் கொண்ட தேடல், சமயத் தலைவர்களும் தனித்துவ ஆளுமைகளும், திருமந்திரத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள், தேவாரத்தில் காணப்படும் நாட்டியத்தின் மறுபெயர்களும் சிலவகை கூத்துக்களும், இலக்கியக் கண்ணோட்டத்தில் பெண்ணின் பெருமை, மதங்களின் புனிதத்தை உணராயோ மானிடமே, சிந்தனை செய் மனமே, புராணம் உணர்த்தும் உண்மைகள் ஆகிய ஒன்பது ஆக்கங்களும், சமூகவியல் என்ற பிரிவில், இந்து மதத்தின் நற்போதனைகள், இலங்கைக் குடிசன மதிப்பீட்டில் இந்துக்களின் நிலைமை, இன்றைய மனிதனும் இறைபக்தியும், இந்துக்களால் அழியும் இந்து மதம்-சில காரசார குறிப்புகள், ஈழத்தில் சைவத்தின் தோற்றமும் இன்று அதன் நிலையும், எது சரி-எது பிழை? நீங்களே தீர்மானியுங்கள் ஆகியஆறு ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. படைப்பியல் என்ற பிரிவில் மூன்று சிறுகதைகளும், 7 கவிதைகளும்

இடம்பெற்றுள்ளன. பதிவியல் என்ற பிரிவு செயலாளரின் அறிக்கையைக் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 47723).

### 14104

**சிவநெறி 1961**. க.ஜனநாயகம், இ.மகேஸ்வரன் (ஆசிரியர்கள்). கொழும்பு: இந்து சங்கம், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1961. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194யு, பண்டாரநாயக்க மாவத்தை).

(4), 90 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x18.5 சமீ.

இலங்கையில் சத்தியாக்கிரகப் போராட்டம் எழுச்சிமிக்கதொரு காலகட்டத்தில் இம்மலர் வெளியிடப்பட்டதால், ஆசிரியர் தலையங்கம் உள்ளிட்ட சில ஆக்கங்களும் தமிழுணர்வு கலந்ததாக உள்ளன. சுதந்திரன் அச்சகம் ஆட்சியாளர்களால் மூடப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு அச்சிடப்பட்ட இம்மலர் வெளிவருவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. இம்மலரில் தேசிய கீதம் (தேசியக்கவிஞர் பரமஹம்ஸதாஸன்), ஸ்ரீ மகா சன்னிதானர் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமி அடிகள் அருளிய ஆசிச் செய்தி, அன்பு நெறியே சிவநெறி (ஆ.வி.மயில்வாகனம்), வாழ்த்துப்பா (திருமதி அ.கனகராயர்), சிவநெறி சிவதத்துவம் (சுவாமி சச்சிதானந்த யோகிராஜ்), சிவநெறி அல்லது சைவம் (கலைப்புலவர் க.நவரத்தினம்), பக்திக் கண்கள் (ஆ.கந்தையா), ஆன்ம லாபம் (நல்.முருகேச முதலியார்), தீண்டாமையும் கோவிலும் (க.திருஞானசுந்தரன்), இன்றைய இந்து இளைஞர்கள் (ரமா.சைதன்யர்), தமிழர் கோவில்களில் தமிழ் ஏன் புறக்கணிக்கப்படுகிறது? (ஈழவேந்தன்), வாழ்வின் குறிக்கோள் (க.சி.பேரின்பநாயகம்), விவேகானந்தர் (க.கணேசலிங்கம்), மாயாவாதம் (சி.கணபதிப்பிள்ளை), திருவாசகக் காட்சி (க.வேந்தனார்), கோவில்களில் களியாட்டங்கள் (செ.கிருஷ்ணமூர்த்தி), மெய்ப்பொருள் எங்கோ? (என்.மாணிக்க இடைக்காடர்), வேண்டுவது யாது? (அடியான்), கடவுள் வழிபாடு (க.மு.சி.சுந்தரராசா), மூவர் தமிழ் (க.கி.நடராஜன்), யார்கொலோ சதுரர் (செல்வி தனம் கணபதிப்பிள்ளை), சில யோசனைகள் (நடேஸ்), ஆலய வழிபாடு (கே.சி.இராசரத்தினம்), The Practice of religion (Swami Vivekananda), Maha Sivarathri-Feast Of Feasts For The Saivaites (C.V.Rajendram), The Dance of Siva (A.Viswalingam), Hinduism and its meaning for the West (Swami Budhananda), Saint Dakshinamurthi (T.Thillainathan), The Challenge of Times (S.Thangarajan), The Essential and the Non-Essentials in Religion (Kenneth Walker), Bakthi Markam (S.Sabapathippillai), Tarmong in Diversity (Wolfram H.Koch), Brahmoins Ancient Ceylon (C.S.Navaratnam) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18250).

## 294.5 (3) ஆலயங்கள், சமய நிறுவனங்களின் சிறப்பு மலர்கள்

### 14105

**அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் மகாகும்பாபிஷேக சிறப்பு மலர்-2002.** *மலர்க் குழு. அளவெட்டி: கும்பழாவளைப் பிள்ளையார் (சந்திரசேகரப் பிள்ளையார்) ஆலயம், 1வது பதிப்பு, மார்ச் 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).*

*(36), 140 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், தகடுகள், விலை: அன்பளிப்பு, அளவு: 25.5x19 சமீ.*

*அளவெட்டி, கும்பழாவளை பிள்ளையார் கோவிலின் புனராவர்த்தனப் பிரதிட்டா மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம். 01.02.2002 நடைபெற்ற கும்பாபிஷேகச் சிறப்பு மலர். மண்டலாபிஷேகப் பூர்த்திநாளான 21.03.2002 அன்று வெளியிடப் பெற்ற இம்மலரில், ஆசியுரைகள் வாழ்த்துரைகளுடன், விநாயகர் வழிபாட்டின் தொன்மை (சி.க.சிற்றம்பலம்), தென்-தென்கிழக்காசிய நாடுகளில் கணபதி வழிபாட்டு மரபும் தொன்மையும்: ஒரு வரலாற்று அறிமுகம் (செ.கிருஷ்ணராஜா), அறுகு அணிவதில் அகம் மிக மகிழும் ஆனைமுகன் (துரை.கணேசமூர்த்தி), விநாயகப் பெருமானின் திருக்கரங்களில் உள்ள பொருட்கள் (செல்லையா பரமேஸ்வரன்), விநாயக வழிபாடு (மு.செல்லையா), பிள்ளையார் பெருமையும் வழிபாடும் (வ.ஆறுமுகம்), ஓங்காரத்துள்ளிருந்து உலகாளும் விநாயகன் (கா.தியாகராஜ சர்மா), தேவர்கள் தொழுதேந்தும் தெய்வம்-கவிதை (மு.திருநாவுக்கரசு), தன்னை நினையத் தருகின்றான் (மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம்), அளவை கும்பழாவளைப் பிள்ளையாரின் திருக்குடமுழுக்குப் பெருவிழா- கவிதை (வை.க.சிற்றம்பலம்), கும்பழாவளையானின் குடமுழுக்குக் கண்டு எமது தேசம் விடிகிறது-கவிதை (எம்.பி.அருளானந்தன்), அளவெட்டி கும்பழாவளைக் கோமான் (இராசமூர்த்தி தியாகராஜா), எனது அனுபவத்திற் கண்ட கும்பழாவளையான் அற்புதங்கள் (சுபத்திரா விவேகானந்தன்), வல்லபை கணபதியின் வடிவம் (க.சௌந்தரராஜ ஐயர்), விநாயகரின் தோற்றப் பின்னணி (அம்பிகைபாகன்), ஸ்ரீ கும்பழாவளை விநாயகர் திருத்தல வரலாறு (அருட்கவி விநாசித்தம்பி), ஆலயத் திருப்பணியின் மகத்துவம் (க.நாகலிங்கம்), பிள்ளையார் வகைகள், முதல்வர் (தெய்வத்தின் குரல் இதழிலிருந்து), ஆலயத்தின் அமைப்பும் திருவுருவங்களும், சிவ பூஜா தத்துவம், கும்பபூஜை அக்கினி கார்யம் என்பவற்றின் விளக்கம், கட்டளைக் கலித்துறை- செய்யுள் (சோ.சிவப்பிரகாசம்), விபூதியின் சிறப்பு, அட்டபந்தனம், கும்பாபிஷேக மகிமை, கும்பாபிஷேக பலன், யாகங்களும் அதன் பயன்களும், விநாயகருக்குரிய விரதங்கள், கணபதி, விநாயக மகிமை, மாங்கனி பெற்ற மாமுகன் (சோ.குஹானந்த சர்மா), விநாயகரும் ஔவையாரும் (மனோன்மணி நாகநாதன்), வேழமுகம் வெற்றிமுகம் (எஸ்.டீ.செல்லத்துரை), கந்தபுராணத்தில் விநாயகர் மான்மியம் (குமாரகுரு சுவாமி), கலசைச் செங்கழுநீர்: விநாயகர் பிள்ளைத்தமிழ் (வ.சிவராசசிங்கம்), பிறநாடுகளில் விநாயக வணக்கம்*

(நா.முத்தையா) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 034466).

## 14106

**அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேக மலர் 1990**. அம்பிகைதாசன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: தவளக்கிரி முத்துமாரி அம்மன் பரிபாலனசபை வெளியீடு, நியு உதயன் பப்ளிகேஷன்ஸ், த.பெ.எண் 23, 1வது பதிப்பு, ஜனவரி 1990. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 432, காங்கேசன்துறை வீதி).

xxviii, 100 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x18.5 சமீ.

தவளக்கிரி முத்துமாரி அம்மன் பேரில் பாடிய திருப்பள்ளியெழுச்சி, மாரித்தாய் குடமுழுக்கு வைபவம் (தங்கம்மா அப்பாக்குட்டி), ஸ்ரீ முத்துமாரியம்மை தோத்திரம் (சீ.விநாசித்தம்பி), பெருங்கருணைத் தெய்வம் (நா.பார்வதிநாதசிவம்). அருள்கெழு மந்திரத்தால் அபிஷேகம் ஆடும்தாய் (மா.மாணிக்கம்), தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் தலவரலாறு, உலகெங்கும் மாரி என்ற சக்தியின் நாமம் துலங்குகின்றது: மகாகவி பாரதியாரின் ஆய்வுரை, பெருஞ்சாந்தி விழா (இ.நவரத்தினக் குருக்கள்), லலிதா பஞ்சரத்தினம் (வி.சிவசாமி), சிவஞான போதத்திற்கு முன் சைவசித்தாந்தம் (வை.கா.சிவப்பிரகாசம்), கந்தபுராணத்தில் காசிபன் உபதேசமும் சுக்கிரனுபதேசமும் (நா.சுப்பிரமணியன்), அன்னையின் அருளும் வடிவும் (அ.சண்முகதாஸ்), மூலவர்க்கும் யாவர்க்கும் முதல்வி (க.சி.குலரத்தினம்), அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம் (கனகசபாபதி நாகேஸ்வரன்), இரண்டு பாட்டுக்கள் (இ.முருகையன்), ஆலயத்தில் நிகழும் கும்பாபிஷேகமும் நாமும் (ப.கோபாலகிருஷ்ணன்), மாரி அம்மன் வழிபாடு (இ.பாலசுந்தரம்), பண்டைய ஈழத்தில் சக்தி வழிபாடு (சி.க.சிற்றம்பலம்), ஒரு காவோலையின் சலசலப்பு-சிறுகதை (அ.செ.முருகானந்தம்), பரிபாலன சபை அறிக்கை (கோ.இரத்தினம்), தொண்டர் சபை அறிக்கை (கு.கிருபாகரன்), அளவைநகர்- தவளகிரி ஸ்ரீ மகா முத்துமாரி அம்மன் திருவூஞ்சல் ஆகிய 22 படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 8509).

## 14107

**அனலைதீவு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயம்: இராஜகோபுர கும்பாபிஷேகச் சிறப்பு மலர் 2012**. கணேசையர் சௌந்தரராஜன் சர்மா (தொகுப்பாசிரியர்). அனலைதீவு: நயினார்குளம் ஐயனார் ஆலய பரிபாலன சபை, 1வது பதிப்பு, ஜுலை 2012. (சுன்னாகம்: கிருஷ்ணா பிரின்டர்ஸ், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்).

x, 200 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

*அனலைதீவு நயினார்குளம் கூழாவடி ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேக சிறப்பு மலர் 31.07.2012 தேர்த்திருவிழா அன்று வெளியிடப்பட்டது. இம்மலரில் உள்ள ஆக்கங்கள் ஆசிச் செய்திகளும் வாழ்த்துச் செய்திகளும், ஆலய விடயங்களும் ஆய்வுகளும், ஐயனார் வழிபாடும் ஆய்வுகளும், இராஜகோபுரம், தோத்திரத் திரட்டும் அருட்பாக்களும் ஆகிய ஐந்து பிரிவுகளில் வகுத்துத் தரப்பட்டுள்ளன. "ஆலய விடயங்களும் ஆய்வுகளும்" என்ற பிரிவின்கீழ் அனலைதீவு-யாழ்ப்பாணம் ஹரிஹர புத்திர ஐயனார் கோவில் (வசந்தா நடராசன்), அற்புதம் செய்யும் அனலை ஐயனார் (மு.வே.மயில்வாகனம்), ஆலய அமைப்பின் தத்துவம் (சுதந்தினி ஸ்ரீமுரளிதரன்), ஆலயங்களும் அறப்பணிகளும் (தங்கம்மா அப்பாக்குட்டி), கோயில்களும் இன்றைய சைவர்களும் (நா.முத்தையா), சைவ சமயிகள் என்போர் யாவர்? (குமாரசாமி சோமசுந்தரம்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. "ஐயனார் வழிபாடும் ஆய்வுகளும்" என்ற பிரிவில் கோடி புண்ணியம் (குருசாமி க.தம்பிராசா), ஐயனார் வழிபாடு (சி.தில்லைநாதன்), ஐயனார் வழிபாட்டின் தொன்மை (சி.பொன்னம்பலம்), சாத்தனும் அரிஹரபுத்திரனும் (வ.மகேஸ்வரன்), ஐயனாரும் ஐயப்பனும் - ஒரு நோக்கு (சிவலிங்கம் துஜியந்தன்), இலங்கை இந்துமதத்தில் ஐயனார் வழிபாடு (ஜெயமலர் தியாகலிங்கம்), தமிழில் பக்தி இலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும் (வை. ரோகிணி), ஐயனார் வழிபாட்டு மரபு (செ.திருநாவுக்கரசு), ஐயனாரும் ஐயப்பனும் (அனலைதீவு சோ.நடராசா), சிவவழிபாடு (வே.சிவகரன்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. "இராஜகோபுரம்" என்ற பிரிவில் கோபுரமும் அதன் உட்பொருள் விளக்கமும் (கு.பிரபாகரக் குருக்கள்), இந்துக் கோயில் கோபுரங்கள் விமானங்கள் (ப.கணேசலிங்கம்), அனலைதீவு ஐயனார் ஆலய இராஜகோபுரத்தின் சிறப்பு (ப.லவன் பிரகலாத்) ஆகிய கட்டுரைகளும், "தோத்திரத் திரட்டும் அருட்பாக்களும்" என்ற இறுதிப் பிரிவில் சி.கணபதிப்பிள்ளை அவர்கள் பாடிய ஐயனார் அகவல், ஐயனார் காவியம் ஆகியவையும், அனலைதீவு ஐயனார் தோத்திரத் திரட்டு, ஐயனார் திருஊஞ்சல், ஐயனார் கவசம், கீர்த்தனைகள் ஆகியனவும் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20381).*

### 14108

**அனுமந்த மகரந்தம்: ரம்பொடை வெவண்டன் மலையுறை அருள்மிகு ஸ்ரீ பக்த அனுமன் ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்.** *மலர்க்குழு. கொழும்பு 4: இலங்கை சின்மய மிஷன், 21/1, டி கிரெட்சர் பிளேஸ், இணை வெளியீடு, ரம்பொடை: ஸ்ரீ பக்த அனுமன் ஆலயம், வெவண்டன் மலை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

*(16), 100 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17 சமீ.*

*இது உலகச் சின்மய இயக்க ஆன்மீகத் தலைவர் தவத்திரு பூஜ்ய குருஜி சுவாமி தேஜோமயானந்தா அவர்களினால் மேற்படி ஆலய மஹா கும்பாபிஷேக தினமான 08.04.2001 அன்று வெளியிட்டு வைக்கப்பெற்றது. இம்மலரில் ஆலயம் உருவான*

கதை (தெ.ஈஸ்வரன்), குருதேவரும் சின்மயானந்தரும் இலங்கைத் திருநாடும் (பத்மா சோமகாந்தன்), கூப்பிய கை (சக்திப்பெருமாள்), அஷ்ட பலன்கள் அருளும் அனுமன் (கீதா தெய்வசிகாமணி), தொண்டன் தலைவனானான் (ந.இராமலிங்கம்), கவிக்கு நாயகன் (சரஸ்வதி இராமநாதன்), உயிர் காத்த தொண்டன் (பூ.சொல்விளங்கும் பெருமாள்), யார்கொல் இச்சொல்லின் செல்வன் (க.சொக்கலிங்கம்), கம்பன் அனுமனைத் துதித்தது ஏன்? (மு.இராமசாமி), அனுமன்-தூதன்-தொண்டன்-தெய்வம் எனும் பரிணாமம் பற்றிய சில இலக்கியச் சிந்தனைகள் (கனகசபாபதி நாகேஸ்வரன்), கண்டேன் அனுமனை (க.சந்திரசேகரன்), கோயிலும் குடமுழுக்கும் (சி.தில்லைநாதன்), ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் கண்ட இராமபிரான் (வி.சிவசாமி), மகா கும்பாபிஷேகக் கிரியைகள் (சோ.பாலசுப்பிரமணியக் குருக்கள்), ஆலய வழிபாடு (லலிதா நடராஜா), ஆலய வழிபாடும் ஆத்மீக வழிபாடும் (பார்பதி கண்மணிதாசன்), மலையகத்தில் ஆன்மீகம் (கே.வெள்ளைச்சாமி), கோயிற் கலைகள் (அ.சண்முகதாஸ்), இந்துமதம் அன்றும் இன்றும் (க.அருணாசலம்), இந்துசமயக் கல்வி மரபு (சோ.சந்திரசேகரன்), சமயமும் சமுதாயமும் (சாரதா நம்பிஆரூரன்), அனுமன் என்னும் அறிவுக்கடல் (எல்.கே.சுபாஸ்சந்திரபோஸ்), பக்தி போகிற பாதை (தென்கச்சி சுவாமிநாதன்), பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க (மு.பாரிவள்ளல்) ஆகிய படைப்பாக்கங்களும் விநாயகர் அகவல், ஸ்ரீ குருஸ்தோத்திரம், ஸ்ரீ லிங்காஷ்டகம், ஸ்ரீராம ஸ்தோத்திரம், ஸ்ரீ ஆஞ்சநேய நாமாவளிகள், ரம்பொடை பக்த ஆஞ்சநேயர், புகழ்மாலை, மங்கள ஸ்லோகங்களும் சாந்தி பாடல்களும் ஆகிய பக்தி இலக்கியங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் அ. 0139).

### 14109

**ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேக மலர்.** யாழ்ப்பாணம்: தர்மபரிபாலன சபை, ஆத்தியடிப் பிள்ளையார் கோவில், 1வது பதிப்பு, ஜனவரி 1983. (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம், 17 B, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை).

64 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

26.01.1983 அன்று இடம்பெற்ற கும்பாபிஷேக நிகழ்வினையொட்டி வெளியிடப்பெற்றுள்ள இம்மலரில் வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன், ஆலயப் பெருமை (சு.சிதம்பரப்பிள்ளை), ஆத்தியடி விநாயகக்கடவுள் பதிகம், விநாயகக் கடவுள் பன்னீரவதாரப் பதிகம் (கோ.கணபதிப்பிள்ளை), ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் வரலாறு (ஆ.குமாரசாமி, ஆ.சிவபாதசுந்தரம்), ஆத்தியடிச் சுப்பிரமணியர்மேற் பதிகம் (கோ.கணபதிப்பிள்ளை), சனீஸ்வரன் (சோ.சிவசக்தி), ஊஞ்சல், வினை தீர்க்கும் நாயகன் (இ.கிருஷ்ணதாஸ்), விநாயக வழிபாடு (ச.சிவசுப்பிரமணியம்), விநாயகர் ஆலயமும் கும்பாபிஷேகமும் (சந்திரா தியாகராஜா), இளைஞர் கல்வி தேர்ச்சிக் சங்கமும் கோவிலும் (க.இராம்குமார்), ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த நிகழ்ச்சி நிரலும், உபயகாரர்களும், செல்வ விநாயகன் எங்கள் ஆத்தியடியான் (சிவஸ்ரீ லோகசகாயன்), ஆத்தியடிப்

பிள்ளையார் கோவில் தருமபரிபாலன சபை 1982 - 1983ம் ஆண்டு நிர்வாக சபை, குடமுழுக்கும் கிரியா விளக்கமும் (வ.வே.நவரத்தினக் குருக்கள்), திருக்குடமுழுக்குக் கிரியாகால நிகழ்ச்சிகள், மகா கும்பாபிஷேகத்தில் பங்கு கொள்ளும் குருமணிகள் (க.சண்முகநாதன்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39868).

### 14110

**இடைக்காடு அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர் 22.04.2005.** மலர்க்குழு. இடைக்காடு: ஆலய பரிபாலன சபை, அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

(6), viii, 84 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19.5 சமீ.

22.04.2005 அன்று வெளியிடப்பட்ட இச்சிறப்பு மலரில், ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன், இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை தலைவர் அறிக்கை (வே.சுவாமிநாதன்), கண்ணகி அம்மன் பொங்கல் மரபு, கண்ணகி அம்மை திருஊஞ்சல் (நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர்), இடைக்காடு புவனேஸ்வரி கோவில் பிரகாரத்தில் எழுந்தருளி இருக்கும் கண்ணகி அம்மை பேரில் பாடப்பட்ட ஊஞ்சல் பாடல்கள் (சு.இராமசாமி), புவனேஸ்வரியம்மை திருவூஞ்சல் தீர்த்த உற்சவம் அன்று பாடப்படும் பாடல் (க.சோமசுந்தரப் புலவர்), தை அமாவாசையைப் பூரணையாக்கிய அபிராமிப் பட்டர், அபிராமிப்பட்டர் அருளிய அபிராமி அந்தாதி, ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் தோத்திரம், ஸ்ரீ லலிதா நவரத்தின மாலை, துக்க நிவாரண அஷ்டகம், தம்பாலை, இடைக்காடு, வளலாய் கிராமங்களிலுள்ள ஏனைய ஆலயங்கள் (தம்பாலை வெல்லன் அம்பலவாணர் சித்தி விநாயகர் ஆலயம் (குடாக்கட்டுப் பிள்ளையார் கோவில்), தம்பாலை ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், தம்பாலை அருள்மிகு ஸ்ரீ நாச்சிமார் ஆலயம், தம்பாலை வடுகன் நாவலடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், தம்பாலை புளியடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், இடைக்காடு அருள்மிகு பெரிய நாச்சியார் தேவஸ்தானம், இத்திக்கலட்டி (இலந்தைக் கலட்டி) ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், கொட்டடி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம், வளலாய் நாகர் கோயில் பிள்ளையார் என வழங்கும் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம், இடைக்காடு ஸ்ரீ பெரிய தம்பிரான் ஆலயம், வளலாய் மண்திட்டி ஸ்ரீ ஞானவைரவர் கோயில், வளலாய் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், வளலாய் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம், அருள்மிகு ஸ்ரீ காளி தேவி ஆலயம் இடைக்காடு, இடைக்காடு ஸ்ரீ சோதி வைரவர் ஆலயம், நீர்ப்பெட்டி ஸ்ரீ வேலாயுத சுவாமி கோவில், கோணாவளை அன்னைமார் நாச்சிமார் ஆலயம் இடைக்காடு, வடகாட்டுப் புதுச் சந்நிதி ஆலயம், அருள்மிகு காசி விஸ்வநாதர் ஆலயம் (முன்னீஸ்வரர் ஆலயம்), - தகவல்: திரு.க.அருணாசலம், திரு.வை.தம்பு, திரு.வே.சுவாமிநாதன், அருள்மிகு மாணிக்கப் பிள்ளையார் தேவஸ்தானம் இடைக்காடு, வளலாய் பெரிய நாகதம்பிரான் ஆலயம்), இடைக்காட்டு

வள்ளிப்பிள்ளையின் அற்புதக் கதிர்காம யாத்திரை, தேசிக்காய் விளக்கின் சிறப்பு, இடைக்காடு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய தலபுராணம், தீராத வயிற்று நோயை நீக்கிய குலதெய்வம், எமது ஆலயம் பற்றிய சில விசேட குறிப்புகள், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய தலபுராணம், கல்லுமாடும் புல்லுத் தின்னுமா? பெண்குழந்தையுடன் பிறந்த நாகதம்பிரான் (புளியம் பொக்கனை நாகதம்பிரான் தல வரலாறு), இடைக்காடு அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை, பரிவார மூர்த்திகள் மற்றும் அவற்றுக்குரிய கோவில்களை அமைக்கவும், ஏனைய திருப்பணிகளுக்கும் உதவியவர்கள், அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் நிலங்கள் சொத்துக்கள், நித்திய, நைமித்திய பூசைகளும் விழாக்களும் அவற்றின் உபயகாரர்களும், வருடாந்த மஹோற்சவ உபயகாரர்கள், ஸ்ரீ கண்ணகி அம்பாள் வருடாந்தப் பொங்கல் திருக்குளிர்த்தி விழா, உபயகாரர்கள், இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வரைபட விபரம் ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26476).

### 14111

**இரண்டாவது உலக இந்து மாநாடு: யாழ்.பிராந்திய சிறப்பு மலர்-2003.** நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1வது பதிப்பு, 2003. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் பதிப்பகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர்).

x, 74 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

2003 ஆம் ஆண்டில் மே மாதம் 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை இந்து சமய விவகார அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்பெற்ற இரண்டாவது உலக இந்து மாநாட்டின் நினைவாக யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பெற்ற பிராந்தியச் சிறப்பு மலர். இதில் ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் இந்துக் கோயிலின் அமைப்பு (அ.சண்முகதாஸ்), திருமந்திரம் காட்டும் மனிதநேயச் சிந்தனைகள் (மா.வேதநாதன்), மறு ஒழித்த இளம்பிறை (மனோன்மணி சண்முகதாஸ்), இந்து அறிவியல் வளர்ச்சியில் வானியலும் சோதிடமும்- சில சிந்தனைகள் (ப.கோபாலகிருஷ்ண ஐயர்), நம்பினோர் கெடுவதில்லை (க.சொக்கலிங்கம்), மிகு சைவத் துறை விளங்க (கோ.சி.வேலாயுதம்), ஈழத்தின் தமிழர் மத பண்பாட்டு விளக்கத்திற்கு (கார்த்திகேசு சிவத்தம்பி), நல்லூர்ப் பெரிய கோவில் (க. குணராசா), கந்தபுராணம் காட்டும் சைவசித்தாந்தம் (கலைவாணி இராமநாதன்), தடுக்கப்பட வேண்டிய மதமாற்றம் (ந.விஜயசுந்தரம்) ஆகிய பத்து சிறப்புக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14535).

**14112**

**உலக இந்து மகாநாடு: ஆத்மஜோதி சிறப்பு மலர்.** நா.முத்தையா (ஆசிரியர்). நாவலப்பிட்டி: நா.முத்தையா, ஆத்மஜோதி நிலையம், 1வது பதிப்பு, 1982. (நாவலப்பிட்டி: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்).

(16), 168+(32) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21.5 சமீ.

ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன், மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம், நன்மார்க்க நெறிசென்றே நன்மையுற வாழி (விசூர் மாணிக்கம்), திருமுறைகளின் பெருமை (க. வெள்ளைவாரணனார்), கந்தப் பெருமான் கருணை வெள்ளம் (தவத்திரு சுந்தர சுவாமிகள்), பேரூராதீனத்தின் இந்து சமயப் பணிகள் (சாந்தலிங்க இராமசாமி அடிகளார்), ஸ்ரீ காசித் திருமடம் இந்து சமயத்திற்கு ஆற்றிய பணிகள் (முருகு சுவாமிநாதன்), மதுரை ஆதீனத்தின் வரலாற்றுக் குறிப்பு (ஆதீனத் தொண்டர்), நமது மதம் (சுவாமி விமலானந்தர்), மதங்களும் - மக்கள் சமுதாயமும் (ரா.சு.கோமதிநாயகம்), தமிழில் தத்துவ மணிகள் (ஏ.என்.பெருமான்), இந்து (சுவாமி கெங்காதரானந்தா), சிரவையாதீனத்தின் வரலாறு (ப.வெ.நாகராஜன்), நூரளை ஸ்ரீ இலங்காதீஸ்வரர் (வே.சதாசிவம்), பாரதியின் வழிபாட்டுக் கொள்கை (பொன்.தெய்வநாயகிச்சோதி), இந்தோனேசியாவிற்கு இந்து சமய வருகை (மோ.மு.ஸ்ரீராமுலு), இலங்கையில் இருந்து இந்து சமய வளர்ச்சிக்கு இராமகிருஷ்ண மடங்களின் சேவை (சுவாமி பிரேமானந்தா), பீஜித் தீவுகளில் இந்துமத வளர்ச்சி (சாயிநாதன்), மேற்கு மலேசியாவில் இந்து சமயம் (சீ.மு.பொன்னையா), நான்கு மனிதர்கள் (திருமுருக கிருபானந்தவாரியார்), ராமதாஸ் சுவாமிகள் (B.S.சர்மா), இருண்ட ஆபிரிக்காவில் இந்துசமய வளர்ச்சி (எஸ்.பாஸ்கரன்), பழைய கீழைத் தேசம்: நவீன மேலைத் தேசத்தைச் சந்திக்கின்றது (சுவாமி பிரகாஷானந்தமா), இந்து சமயமும் ஹித்தாச்ரமப் பணிகளும் (A.R.சொன்ராஜ்), ஸ்ரீ அரவிந்தர் இந்து சமயத்திற்கு ஆற்றிய பணி (சுவாமி கங்காதரன்), யோகாசன ஆலயம் இந்துசமய வளர்ச்சிக்கு ஆற்றிவரும் தொண்டுகள் (பா.ஆழ்வார்), திருப்புகழின் தாள நுட்பங்கள் (த.ஏகாம்பரம்), வாழ்க்கையின் அடியும் முடியும் (சி.கணபதிப்பிள்ளை), தியானத்தின் அங்காதி பாத சாஸ்திரம் (சுவாமி சிவலிங்கம், தமிழாக்கம்: ம. சி. சிதம்பரப்பிள்ளை), சமயப் பணியில் சைவ பரிபாலன சபையின் பண்பு (நம. சிவப்பிரகாசம்), பொங்கும் அருள் விளங்கும் மங்களத் திருவிளக்கு (காயத்ரி சுவாமிகள்), யாழ்ப்பாணம் யோக சுவாமிகள் (கி.துரைராசசிங்கம்), பசுவும் பசுபதியும் (டி.டி.நாணயக்கார), யோகத்தின் அவசியம் (ஜி. கண்ணையா யோகி), சகல சமயங்களிலும் சமரசம் காணும் உத்தம ஞானிகளே ஸீபியாக்கள் (K. M. P. முஹம்மது காசிம்), திருமேவு மொருமாவை வருமான்ம நாயகன் (மஹாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்), மகாதேவ ஆசிரமமும் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகளும் (ப.கணேசபிள்ளை), நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் (மு.சிவராசா), செல்வச் சந்நிதித் திருத்தலமும் ஆனந்தா ஆச்சிரம திருமடமும் (மீளா அடிமை), திருமுறை பேசும் தெய்வத் திருக்கோலங்கள் (பொ.கிருஷ்ணபிள்ளை), இந்து சமயத்தின் சிறப்பு (ஸ்ரீ வித்யா ஞானபாஸ்கரா), குருகுலம் - கிளிநொச்சி (வே.கதிரவேலு), வண்ணை ஸ்ரீ வேங்கடேச

வரதராஜப்பெருமாள் கோவில் வரலாறு (தேவஸ்தானத்தார்), இந்து ஜோதியின் திவ்விய ஜீவன சங்கம் (செல்வி சி. இராசலக்குமி), மேன்மை அடைவோம் (சுவாமி சித்ரூபானந்தா), தபோவனம் மக்களிடையில் பரப்பும் இந்து மதம் (ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்), கோப்பாய் இருபாலைச் சித்தர்கள் (கோவை வாணன்), ஆதி - நடு - முடிவு (பித்துக்குளி முருகதாஸ்), முல்லைத்தீவு மாவட்டத்தில் சைவ சமயம் (முல்லைமணி வே. சுப்பிரமணியம்), நகுலேஸ்வரத்தின் பெருமை (நகுலேஸ்வரக் குருக்கள்), திருக்கோணமலையில் சைவ வளர்ச்சி (இ.வடிவேலு), மெய்ஞானியும் கலைஞானியும் உண்மை ஞானிகளே (க.கார்த்திகேசு), கி. பி. 1500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் தென்கிழக்காசியாவில் இந்து சமய வளர்ச்சியும் செல்வாக்கும் (ச.சிங்காரவேலு), சைவ வரலாற்றில் இணுவிலின் பங்கு (கா.செ.நடராசா), நல்லை நகரில் வளர்ந்த சமயம் (க.சி.குலரத்தினம்), இந்து சமய வளர்ச்சிக்கு நயினாதீவு அளித்த பங்கு (நா.க.சண்முகநாதபிள்ளை), தனிச் சிறப்புவாய்ந்த தம்பலகமம் கோணேஸ்வரம் (க.வேலாயுதம்), மட்டக்களப்பு பிரதேசத்தில் சைவ சமயப் பணி (திமிலைக்கண்ணன்), முன்னேஸ்வர வரலாறு (பா.சிவராமகிருஷ்ண சர்மா), அறுபத்து மூவர் (க.லோகநாதக் குருக்கள்), வல்லிபுரக் கோவில்-சிங்கைநகர் (செங்கதிரோன்), வளர்ந்து வரும் கேதீச்சரம் (நா.முத்தையா), கரம்பனில் சைவ வளர்ச்சி (குல.சபாநாதன்), இந்துக் கோயில்கள் நிறைந்த மாத்தளையின் வரலாறு (மாத்தளை அருணேசர்), சைவம் வளர்த்த சுன்னாகம் (ச.அம்பிகைபாகன்), காரைநகரில் சமய வளர்ச்சி (க.வைத்தீசுவரக் குருக்கள்), வேலணையில் சைவம் வளர்ந்த வரலாறு (பே. சந்திரசேகரம்), ஏழாலைக் கிராமத்தின் சைவத் தமிழ் கலாச்சாரமகிமை (மு.கந்தையா), காலி மாநகரில் இரு கோயில்கள் (ஏ.பி.சேதுராமன்), இந்து சமய வளர்ச்சியில் புங்குடுதீவு (பொன்.அ.கனகசபை) ஆகிய படைப்பாக்கங்களை இச்சிறப்பு மலர் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 21934).

### 14113

**உலகளாவிய ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் நூற்றாண்டு விழா ஞாபகார்த்த மலர்: 1897-1997**. நூற்றாண்டு விழா மலர்க் குழு. கல்முனை: நூற்றாண்டு விழாக் குழு, ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1997. (மட்டக்களப்பு: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).

(6), 62 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x22.5 சமீ.

இம்மலரில் ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகளுடன், தலைவர் என். நாகராஜாவினதும் செயலாளர் க.பீதாம்பரம் அவர்களினதும் அறிக்கைகளும், இராமகிருஷ்ண சங்கம் சுவாமி விவேகானந்தரால் உலகிற்கு வழங்கப்பட்ட கொடை (சுவாமி அஜராத்மானந்தா), சர்வ சமய சிந்தனையில் இராமகிருஷ்ண மிஷன் (அருட்திரு.எஸ்.ஏ.ஐ.மத்தியு), இராமகிருஷ்ண மிஷனின் தோற்றமும் தொண்டுகளும் (எம்.முருகேசபிள்ளை), குருநாதரைப் போற்றுவோம் (மு.சடாட்சரம்), இராமகிருஷ்ண சங்கமும் முஸ்லிம்களின் கல்வியும் (எஸ்.எச். எம்.ஜெமீல்), மானுட மேம்பாட்டிற்கு சுவாமி விவேகானந்தர் (பொன்.

*ஏரம்பமூர்த்தி), ஆன்மீகத் துறவியின் அமெரிக்க முழக்கம் (திருமதி இ.பொன்னுத்துரை), ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் பாதையில் ஆங்கிலேயப் பெண் (எம்.கே.பேரின்பராஜா), பரமஹம்சரும் பராசக்தியும் (வி.ரி.சகாதேவராஜா), அன்னை சாரதாதேவியின் ஆன்மீக வாழ்வு (திருமதி க.லோகிதராஜா), இலங்கையில் இராமகிருஷ்ண சங்கத்தின் கல்விப் பணிகள் (பெ. விஜயரெட்ணம்),* Sri Ramakrishna: an Apostle of our time (B.Vengadasalam), *வில்லுப்பாட்டுக் கலை (கு.குணநாயகம்), இராமகிருஷ்ண சங்கமம் (கலி விருத்தம்), ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று, கிழக்கிலங்கையில் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம் (சி.காசிபதி தெய்வநாயகம்), வேதாந்த கேசரி சுவாமி விவேகானந்தர் - கவிதை - (வ.ஞானமாணிக்கம்), மானுடம் தழைக்க மழையாய் நின்றார்- கவிதை- (இரா.கிருஷ்ணபிள்ளை), அன்னை ஆனாரே-கவிதை (பூவை சரவணன்), சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் (செல்வி செ.ஜெயசித்திரா), நான் கண்ட விவேகானந்தர்: அவர் எமக்களித்த சேவை முத்துக்கள் (எஸ்.மனோகரன்பிள்ளை), ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் குருகுல வாழ்க்கை, சுவாமி விவேகானந்தரும் இந்துமத மறுமலர்ச்சியும் (செல்வன்.த.பிரபாகர்), இராமகிருஷ்ண சங்கரும் சுவாமி விபுலானந்தரும் (வே.தட்சணாமூர்த்தி), தென்நாட்டில் சுவாமி விவேகானந்தர் (செல்வி.சு.கேதிகா) ஆகிய படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21030).*

## 14114

**ஐங்கரன் அமிர்தம்: இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மணிமண்டபத் திறப்புவிழா சிறப்பு மலர் 2004.** *மலர்க் குழு. இணுவில்: ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில், 1வது பதிப்பு, மே 2004. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48* B, *புளூமெண்டால் வீதி).*

*(30), 192 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26*x*19 சமீ.*

*9.5.2004 அன்று நடந்த மணிமண்டபத் திறப்பு விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். இம்மலரில் ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் பிள்ளையார் சுழி (தமிழண்ணல்), மகா கணபதி மூலமந்திரம் (மு.சுந்தரலிங்க தேசிகர்), பிரணவ சொரூபி (வை.அநவரதவிநாயக மூர்த்தி), ஓங்காரத் திருவுரு (தங்கேஸ்வரியம்மா தங்கராசா), உள்சுற்றுப் பிரகாரச் சுவரில் காணப்படும் ஓவியங்கள், உற்சவ மூர்த்திகள் உலா வரும் ஊர்திகள், விநாயகர் தத்துவம் (பாபாவின் விளக்கம்), பிள்ளையாரின் தொல்வடிவங்கள் (மு.நளினி, இரா.கலைக்கோவன்), காணாபத்தியம் (ஆர்.வடிவேல்), ஆனைமுகனும் அறுகம்புல் வழிபாடும் (சபா ஜெயராசா), குட்டிக் கொள்ளல் (திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்), தோப்புக்கரணம் (பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள்), விநாயகர் விரதங்கள் (எஸ்ஸாரெம்), அறுகும் வன்னியும் (மாணிக்க விநாயகம்), மறுபிறவித் தத்துவம், பிள்ளையார் பெருமை (சுகி.சிவம்), தேவாரங்களில் விநாயகர் (தெய்வத்தின் குரல்), இலக்கியத்தில் விநாயகர் (செ.திருநாவுக்கரசு), ஸ்ரீ வித்யா கணபதி (மாணிக்க விநாயகம்), திருமுறை தந்த விநாயகர் (சுப. திண்ணப்பன்), பிள்ளையார் யார்?*

*(க.வி.விக்னேஸ்வரன்), கலசத் தத்துவம், விநாயகர் பரத்துவம் (சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்), விநாயகர் பெருமை (தங்கம்மா அப்பாக்குட்டி), பிரம்ம முகூர்த்தம், பிள்ளையார் கருவிகள் (ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா), இருமுறை இறை வணக்கம், பரராஜசேகர மன்னனுக்கும் ஆலயத்துக்கும் உள்ள தொடர்பு (கி.வா.ஜகந்நாதன்), கணபதி வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் (மு.நளினி, இரா.கலைக்கோவன்), கொழுக்கட்டை, ஈழநாடும் விநாயகர் வழிபாடும் (ஆறு திருமுருகன்), அயல் நாடுகளில் ஆனைமுகத்தோன் வழிபாடு (ஆர்.பி.வி.எஸ். மணியன்),* Ganesa in Southeast Asian Art (T.K.Sabapathy), Early Sculptures (M.Nalini and R. Kalaikkovan), *அகத்திய முனிவர் அருளிச் செய்த பிள்ளையார் கதை, விநாயகர் அகவல், விநாயகர் கவசம், விநாயகரின் 32 தோற்றங்கள், விநாயகர் புராணம், பஞ்சமுக விநாயகரே ஆடிரூஞ்சல் (மூதறிஞர்.வை.அ.கதிர்காமநாதன்), இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மீது பாடப்பெற்ற அருட்பாடல்கள், இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் புகழ்மாலை (பொன்.அம்பிகைபாக உபாத்தியாயர்), ஸ்ரீ பரராஜ்சேகரப் பிள்ளையார் திருஅந்தாதிக் கீர்த்தனைகள், இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கீர்த்தனைகள், ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் பாமாலை (இணுவை சுசீலா) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33063).*

## 14115

**கண்டி-கட்டுக்கலை அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஸ்ரீ மீனாட்சி சோமசுந்தரேஸ்வரர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக மலர்.** கே.வி. இராமசாமி *(ஆசிரியர்). கண்டி: அகிலம் பதிப்பகம், 308, டீ.எஸ்.சேனநாயக்க வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B, *புளூமெண்டால் வீதி).*

*(64) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25*x*19 சமீ.*

*கண்டியிலிருந்து வெளிவரும் அகிலம் கலை இலக்கிய அறிவியல் சஞ்சிகையின் வைகாசி-ஆனி மாதங்களுக்கான இதழ் மகா கும்பாபிஷேகச் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. இதில் சமர்ப்பணம்: ஆலய தரிசனம் அமைதியைத் தரும் (கே.வி.இராமசாமி), அருள் விருந்து (தர்ம சக்கரம்), தேவாரம் (திருஞானசம்பந்தர் சுவாமிகள்), ஆசிச் செய்திகள் ஆகியவற்றுடன், திருக்குறள் சிந்தனை (துறவறவியல்), கட்டுக்கலைப் பிள்ளையாரைக் கண்டாலே மேன்மை தரும் (தமிழோவியன்), கண்டி அருள்மிகு ஸ்ரீசெல்வவிநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் (திருமதி ஞானம் ஞானசேகர ஐயர்), உன் பாதம் சரணமையா -கவிதை (கவிஞர் குறிஞ்சி நாடன்), இணுவைச் சின்னத்தம்பிப் புலவரின் பக்தி இலக்கியங்கள் - ஒரு பார்வை (துரை மனோகரன்), கடவுள் சந்திதானங்கள் (பத்மா சோமகாந்தன்), தமிழ்க் கலைகளும், சைவசித்தாந்தமும், தமிழர் பண்பாடும் (அம்பலவாணர் சிவராஜா), பாரதியாரின் விநாயகர் நான்மணிமாலை (வ.மகேஸ்வரன்), கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய வரலாறு (க.ப.சிவம்), பக்திக்கு வித்திட்ட பாவை (இரா.சர்மிளாதேவி), மக்கள் சிந்தனையில் நிர்வாக அறங்காவலர் பணியும் திருப்பணிச் சபை தொண்டர்களும் ஆகிய ஆக்கங்களையும் காணமுடிகின்றது.*

*(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44426).*

### 14116

**கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை கொழும்பு: அரைநூற்றாண்டு நிறைவு 1925-1975: பொன்விழா மலர்.** *கு.குருசுவாமி, ச.த.சின்னத்துரை (பத்திராதிபர் குழு). கொழும்பு: கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை, 2வது பதிப்பு, ஜுன் 1976, 1வது பதிப்பு, மார்ச் 1976. (கொழும்பு 12: நியு லீலா அச்சகம்).*

*(50) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.*

*21.3.1976 அன்று மருதானை கப்பித்தாவத்தை செல்வவிநாயகர் கோவில் மண்டபத்தில் நடந்தேறிய பொன்விழாவின்போது வெளியிடப்பெற்ற மலரின் மீள்பதிப்பு இதுவாகும். வாழ்த்துரை, ஆசியுரைகள் என்பவற்றுடன் ஐம்பது ஆண்டுகள் அரும்பணி ஆற்றிவரும் கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை (தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை), கதிர்காம மூர்த்தி, கப்பித்தாவத்தை ஸ்ரீ விநாயகர் கோவிலின் சுவையான வரலாறு (செல்லப்பா நடராசா), கதிர்காம முருகன் (தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை) ஆகிய முக்கிய ஆக்கங்களும் தொண்டர் சபையின் நிகழ்ச்சிகளின் புகைப்படங்களும் குறிப்புரையுடன் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4579).*

### 14117

**கருநாகபூஷணம்: வவுனியா இறம்பைக்குளம் அருள்மிகு ஸ்ரீ கருமாரி நாகபூஷணி அம்பாள் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்டபஷ மஹாகும்பாபிஷேகம்.** *தளையசிங்கம் இரவீந்திரன் (மலராசிரியர்). வவுனியா: அருள்மிகு ஸ்ரீ கருமாரி நாகபூஷணி அம்பாள் ஆலயம், இறம்பைக்குளம், 1வது பதிப்பு, ஜனவரி 2008. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம், 2ம் குறுக்குத் தெரு).*

xxxxviii, *135 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x20.5 சமீ.*

*ஒன்பது பிரிவுகளைக்கொண்ட இம்மலரின் முதலாவது பிரிவில் ஆசியுரைகளும், வாழ்த்துச் செய்திகளும், அனுபவச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. இரண்டாவது பிரிவில் செயலாளரின் நன்றியுரையும் மலராசிரியர் உரையும் உள்ளன. மூன்றாவது பிரிவில் ஸ்ரீ கருமாரி நாகபூஷணி அம்பாள் ஆலயம் உருக்கொண்ட வரலாறு, பற்றிடம் கொண்டாள் புதுமை காணீர் என்பன இடம்பெற்றுள்ளன. நான்கு முதல் எட்டாம் பிரிவு வரை கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. வழிபாடு (சப்த மாதர்கள் வழிபாடு/ பெண்தெய்வ வழிபாடும் மனித வாழ்வும்/ ஸ்ரீசக்கரத்தின் வடிவ அமைப்பும் யந்திர பூஜையும்/ அம்பிகையின் வழிபாட்டில் நடனம்/ காளிதேவியின் அருள்/ யாக சமித்துக்களும் அவற்றின் பலன்களும்/ அம்பிகையின் நவராத்திரிச் சிறப்பு), தத்துவம் (கும்பாபிஷேகத் தத்துவம்/ ஆலய அமைப்பும் தத்துவமும்/ சைவத்திருக்கோவிலில் விமானம்/ ஸ்தம்பத் தத்துவம்/ கும்பாபிஷே*

*கக் கிரியை விளக்கமும் தீபாராதனையின் தத்துவமும்/ குத்துவிளக்கின் விளக்கம்/ சாக்த நெறியும் அதன் தொன்மையும்/ ஆகமம் கூறும் அம்பாள் ஆலய விதிமுறைகள்/ திருமந்திரம் கூறும் சக்தி/ வேள்வித் தத்துவங்கள்/ அம்பிகை விரும்பி அமரும் அபூர்வ வாகனங்கள்), மகத்துவம் (தேவி ஸ்ரீசண்டிகா பரமேஸ்வரியின் அவதார நோக்கமும் சிறப்பும்/ வாழ்வுமானவள் துர்க்கா வாக்குமானவள்/ மகா சக்தியின் மகத்துவ வடிவங்கள், அபூர்வ ஸ்லோகம்/ யாதுமாகி நின்றாய் என் அம்மா தாயே நீ யாதுமாகி நின்றாய்/ அன்னை ஆதிபராசக்தியின் பத்த வடிவங்கள்), சித்தாந்தம் (சைவசித்தாந்தத்தில் சக்தி தத்துவம்/ சைவ சித்தாந்தமும் திருக்கோவில் அமைப்பும்), சமயமும் வாழ்வும் (சைவ வாழ்வியலில் அறநோக்கும் அறிவியல் நோக்கும்/ கோமாதா தரிசனம்/ ஆலயங்கள் பயிற்சிக் கூடங்கள் சமயங்கள் பயிற்சி நெறிகள்/ மனம் எனும் மதயானை) ஆகிய விடயங்களில் இக்கட்டுரைகள் தனித்தனிப் பிரிவுகளில் உள்ளன. இறுதிப் பிரிவான அம்பிகையின் பாமாலையில் அம்பிகை தொடர்பான தமிழிசைப் பாடல்களும், திருவூஞ்சல், நாமாவளிகள், ஸ்தோத்திரங்கள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்மலரின் மலராசிரியர் குழுவில் ப.முருகராஜ், நந்தினி தர்மலிங்கம், குருசாமி சுந்தரசர்மா ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 048409).*

## 14118

**களுவாஞ்சிக்குடி சைவ மகாசபையின் பொன்விழா சிறப்பு மலர் 1952-2002.** *மலர் வெளியீட்டுக் குழு. களுவாஞ்சிக்குடி: சைவ மகாசபை, 1வது பதிப்பு, 2002. (களுவாஞ்சிக்குடி: நியு குட்வின் அச்சகம்).*

viii, *95 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5*x*18 சமீ.*

*இம்மலரில் ஆசிச்செய்திகளைத் தொடர்ந்து, சபையின் சரித்திரத்தில் சில நீங்கா நினைவுகள், களுவாஞ்சிக்குடி சைவ மகாசபைத் தலைவர்கள், பொன்விழாக் காணும் சைவ மகாசபையும் பணிகளும், செயலாளரின் இதயத்திலிருந்து, பொருளாளர் அழைக்கின்றார், இறைவழிபாட்டில் பெண்களின் பங்கு, இந்தக் கோட்பாடுகளில் காணப்படும் ஒழுக்கவியல் சிந்தனைகள் ஒரு கண்ணோட்டம், ஒரு சர்வதேச ஆத்மீகப் பிரார்த்தனை, அபிஷேகங்களினால் ஆன்மாக்கள் பெறும் பலாபலன்கள், இறைவழிபாடும் விநாயகர் வணக்கத்தின் முதன்மையும், புலம்பெயர்ந்த தமிழர்கள், களுவாஞ்சி பிரதேசத்தில் நிலைபெற்றுள்ள பாரம்பரிய கலை பறைமேளக் கலை, சைவநெறி காக்கும் சைவ மகாசபை, சுந்தரப் பொன்விழா வாழ்க, வானுறையும் தெய்வத்தினுள், இலகு தியானம், இந்து மாணவர்கள் எப்படி இருப்பார்கள், வாழ்த்துகிறோம், களுவாஞ்சிக்குடி சைவ மகாசபையின் பொன்விழாவன்று பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுபவர்கள், இந்து கலாசாரத் திணைக்களம் நடாத்திய அகில இலங்கை ரீதியான போட்டிகளில் பரிசில்களும் சான்றிதழ்களும் பெற்றவர்கள், பொன்விழா போட்டி முடிவுகள், பட்டிருப்பு கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள், சைவ*

*மகாசபையின் செயற்குழுவில் இருந்தவர்களும் இருப்பவர்களும், களுவாஞ்சிக்குடி சைவ மகாசபை உத்தியோகத்தர்கள், நன்றிகள் ஆகிய 25 தலைப்புகளில் விடயதானங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48889).*

## 14119

**கற்பக தீபம்-2014: ஸ்ரீ கற்பக விநாயகர்ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக மலர்.** *மலர்க் குழு. லண்டன்* E17 4SA: *ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்,* 2-4, Bedford Road, Walthamstow, *1வது பதிப்பு, ஜுலை 2014. (லண்டன்* E17 4SA: JR Print, 59-61, Hoe Street*).*

*120 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.*

*இம்மலரில் வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன், ஆலய வரலாறு (சி.ரஜீவ்), ஆலய வழிபாடு (ப.வசந்தக் குருக்கள்), புராதன கால இலங்கையில் சைவர்களான தமிழர்களும் அவர்கள் அமைத்த அரசுகளும் (சீனித்தம்பி யோகேஸ்வரன்), இந்துக்களின் வேத இலக்கியங்களில் மருத்துவ சிந்தனைகள்-ஒரு நோக்கு (சசிகுமாரக் குருக்கள்), ஸ்ரீ விநாயகர் மகிமை (ஏ.வீ. சாமிநாத சிவாச்சாரியார்), திருக்கோவிலும் கும்பாபிஷேகமும் (வி.சோமசுந்தரக் குருக்கள்), இந்து சமய வழிபாட்டு முறைகள்-ஓர் அறிவியல் நோக்கு (கோப்பாய் சிவம்),* Abhishekam Rituals in Temples: The Science behind it (C.P.Thiyagarajah), *தல விநாயகர் (சுந்தரமூர்த்தித் தம்பிரான் சுவாமிகள்), லண்டன் வோல்த்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் ஈழத்துப் பணி (வீ.ஆர்.மகேந்திரன்), தாய்த்திரு நாட்டில் வவுணை கோவிற்குளம் அருளகத்திற்கு வாரி வழங்கும் திருத்தலம் (ஆறுமுகம் நவரத்தினராசா) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.*

## 14120

**கனடா மொன்றியால் அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவில் மஹா கும்பாபிஷேக மலர்-1995.** *மலர்க்குழு. கனடா: அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவில்,* 71, Jean-Talon Quest Montreal, Quebec H2R 2X8, *1வது பதிப்பு, 1995. (கனடா: குவாலிட்டி பிரின்டிங் சேர்விசஸ்).*

*120 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21.5 சமீ.*

*இம்மலரில் வாழ்த்துரைகள், ஆசியுரைகள் ஆகியவற்றுடன் கோவில் நிர்மாணிப்பு தொடர்பான தகவல்கள், ஆவணப் புகைப்படங்கள், சமய இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள் என்பன இடம்பெற்றுள்ளன. கவிதைகளை வி.கந்தவனம், வசந்தம், பாலரேணு, பவளம் சண்முகம் ஆகியோர் படைத்துள்ளனர். சமய இலக்கியக் கட்டுரைகளை சிவஸ்ரீ விஸ்வநாராயண சர்மா, சிவஸ்ரீ பூரண தியாகராஜக் குருக்கள், ஆத்மஜோதி நா.முத்தையா, க.சண்முகம், மீனா தவரட்ணம், ராதாகிருஷ்ணன், சங்கரப்பிள்ளை திருநடராசா, சின்னையா சிவநேசன் ஆகியோர் எழுதியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 39863).*

### 14121

**காரைநகர் பண்டத்தரிப்பான்புலம் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமான் தேவஸ்தானம் மஹாகும்பாபிஷேக மலர் 2003.** *மலர்க் குழு. காரைநகர்: சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமான் ஆலயம், பண்டத்தரிப்பான்புலம், 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B, *புளுமெண்டால் வீதி).*

xx,*38 பக்கம் + 26 தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5*x*22 சமீ.*

*24.08.2003 அன்று நடைபெற்ற மஹா கும்பாபிஷேக வைபவத்தின்போது வெளியிடப்பெற்ற இம்மலரில் ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் கூடிய இம்மலரில் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான வரலாறு, கோயிற் கலைகள் (அ.சண்முகதாஸ்), மகோற்சவ விளக்கச் சுருக்கம் (ந.பரமசிவம்), அன்னை சிவகாமியின் புதுமை (அ.புண்ணியம்), ஆகமம் (தி.மதிவதனன்), கும்பாபிஷேகங்கள் ஏன் (க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்), சிவசக்தி வழிபாடு (பொன் கோபால்), சமய குரவர் காட்டிய அன்புநெறி (ஆ.குணரத்தினம்), நமது சமயம் ஒரு சுருக்க வரலாறு (கோபால் சிவம்), திருமுறைகள் பற்றிய சிந்தனை (சிவஞானம் சிவபாலன்), தேடி நீ ஆண்டாய் (மா.சிவஞானம்), மங்கல வாழ்த்து (கோப்பாய் சிவம்) ஆகிய படைப்பாக்கங்களுடன் சிவபுராணம்-திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி ஆகிய பக்தி இலக்கியங்களும் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 065182).*

### 14122

**கைதடி மேற்கு இணுங்கித்தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் முத்துக்குமரன் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்.** *சி.மதீசன் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: இணுங்கித்தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம், கைதடி மேற்கு, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2018. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).*

xxix, *111 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25*x*18 சமீ.*, ISBN: *978-955-7487-01-4.*

*05.08.2018 அன்று கும்பாபிஷேக தினத்தையொட்டி வெளியிடப்பட்ட இச்சிறப்பு மலரில், ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகள் ஆகியவற்றுடன், இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து (சி.மதீசன்), கைதடி மேற்கு இணுங்கித்தோட்ட அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வரலாறு (சி.மதீசன்), இணுங்கித்தோட்ட கந்தசுவாமி ஆலய ஊஞ்சல் பாட்டு, சைவ சமயமும் அறநெறி வாழ்வும் (அம்பலவாணர் லோகநாதன்), ஆறுபடை வீடுகொண்ட அழகன் முருகன் (சின்னத்தம்பி சிவரட்ணராஜா), கந்தசஷ்டியின் மகிமை (சீவரட்ணம் இலகுமீகரன்), ஆன்ம ஈடேற்றம் தரும் ஆலய வழிபாடு (ஸ்ரீ சிவசக்தி ஈஸ்வரி மகேந்திரன்), பக்தர்க்கு சஷ்டி கவசம் தந்த பாலதேவராயன் (சிவரட்ணராஜா ஸ்ரீ சிவ ஈஸ்வரி), செம்பொன் மயிலோனும் தைப்பூச நன்னாளும் (சு.பேரின்பலிங்கம்), அண்டர்பதி குடியேற்றமும்*

மண்டசுரர் உருமாற்றமும்- சூரசம்ஹாரம் (பூமகாதேவி அரசகிருஷ்ணன்), இணுங்கித்தோட்ட கந்தசுவாமியாரின் அற்புத மகிமை (நா.திருச்செந்திநாதன்), உலகு உய்ய உதித்த கௌரிபாலன் (இராசையா இரமேஷ்), வீரமகேந்திரபுரம் தூது சென்ற வீரபாகு (சிவமணி செல்வராஜா), திருமுருகனும் வைகாசி விசாகமும் (சிவராஜா சிவதர்சினி), சைவசமய விளக்கங்கள் சில (செ.றஜீத், சி.மதீசன்), கோபுரம் உயர்வாக இருப்பதன் அவசியம் (ச.சண்முகரத்தினம்), கோபுர தரிசனம் பாவவிமோசனம் (சி.தங்கரத்தினராஜா), அருளாளர்களால் இலக்கியத்தில் காட்டப்படும் சூரசம்ஹாரம் (சதாசிவம் யோகேஸ்வரன்), கோபுரம் இல்லையென்ற அடியார் குறையைக் களைந்தான் அழகான செம்பொன் மயிலோன் (சி.சிவரட்ணராசா) ஆகிய கட்டுரைகளும் கணக்கு வழக்கறிக்கை, கோவிலுக்குரிய ஆதன விபரம் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.

## 14123

**கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேக சிறப்புமலர்.** எச்.எச்.விக்ரமசிங்க (தொகுப்பாசிரியர்). கொழும்பு: ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம், கொட்டாஞ்சேனை, 1வது பதிப்பு, ஜுன் 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(52) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

11.06.2000 அன்று நிகழ்ந்தேறிய மஹா கும்பாபிஷேக நிகழ்வினையொட்டி வெளியிடப்பட்ட இச்சிறப்பு மலரில், ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன், இரண்டு வேத சாகரங்கள் கொழும்பில் சங்கமம் (எச்.எச்.விக்கிரமசிங்க), வளர்ந்து கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் (சிவஸ்ரீ நடராஜா சோமஸ்கந்தக் குருக்கள்), வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும் (கம்பவாரிதி இ.ஜெயராஜ்), அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய அமைவு (சி.அப்புத்துரை), கொழும்பு - கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் மூர்த்தி தேவஸ்தானம் ஆலயத் திருப்பணிகள் (ம.நடராஜா), வினை தீர்ப்பவனே.... விநாயகனே (மாவை. வானதி சச்சிதானந்தன்), ஒரு பக்தரின் மனதிலிருந்து (சி. பாலசுப்பிரமணியம்), பிள்ளையாரை வழிபட்ட பாலகன் (வே.தங்கராசா), கருணைக் கடல் (க.இராசேந்திரம்), கொழும்பு கொட்டாஞ்சேனை அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் திருவூஞ்சல், பிள்ளையார் வழிபாடு (பிரம்மஸ்ரீ சி.ஹரிஹர சர்மா), அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயக ஆலய நடராஜர் திருவூஞ்சல், புண்ணியஞ் செய்தவர்கள் (என்.சோமகாந்தன்), கும்பாபிஷேகத்தில் சைவ சித்தாந்தம் (இரா. மயில்வாகனம்), மண்ணவரும் விண்ணவரும் மகிழும் மகா கும்பாபிஷேகம் (ச.ஜெயகுமார்), ஐங்கரன் அறநெறிப் பாடசாலை (வி.குஞ்சரா), அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் இரட்டை மணிமாலை (சி.அப்புத்துரை), அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் வெளியிட்ட நூல்கள் ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 16640).

## 14124

**கொழும்பு-கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தங்கத்தேர் மலர்.** வசந்தா வைத்தியநாதன் (மலர் ஆசிரியர்). கொழும்பு: தேர்த் திருப்பணிச் சபை, அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், கொம்பனித்தெரு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1998. (கொழும்பு: மெய்கண்டான் அச்சகம், 161, செட்டியார் தெரு).

(11), 12-86 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x22.5 சமீ.

20.08.1998அன்று வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். கொழும்பு கொம்பனித்தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் நீண்ட வரலாற்றைக் கொண்டது. 1832 ஆம் ஆண்டளவில் கொழும்பு புறக்கோட்டை டாம் வீதியில் ஒரு சிறிய கட்டிடமொன்றில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. பெரியதம்பி என்ற சைவப் பெரியாருக்குச் சொந்தமான காணியில் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் இங்கு கோயில் கொண்டு அருள்பாலிக்கத் தொடங்கினார். அன்று கொழும்பு டாம் வீதியில் முதன் முதலில் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமானின் திருவுருவச் சிலை 180 ஆண்டுகள் கடந்த பின் இன்றும் கொழும்பு கொம்பனித்தெருவில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் நடைபெற்ற யுத்தமொன்றில் கலந்துகொள்ளச் சென்ற இந்திய போர் வீரர்களும் தளபதி முதலானோரும் இவ்வாலயத்திற்கு வந்து பூசை வழிபாடு செய்து தாயகம் திரும்பியதாக கூறப்படுகிறது. அன்று ஆட்சிபுரிந்த அரசாங்கத்திற்கு இந்த ஆலயம் அமைந்திருந்த இடம் தேவைபட்டதால்ஆலயத்தை இடமாற்ற வேண்டிய நிலை தோன்றியது. அந்த காலகட்டத்தில் சைவத்தொண்டில் சிறப்புற்று விளங்கிய பெரியார் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களிடம் இடத்தை தெரிவு செய்து ஆலயத்தை அமைக்கும்படி அரசாங்கம் கோரியது. இதற்கமைய 1887 ஆம் ஆண்டு பெரியார் அருணாசலம் தற்போது ஆலயம் அமைந்திருக்கின்ற கொம்பனித்தெரு கியூ வீதி வளவில் இந்த ஆலயம் கட்டுவிக்கப்பட்டதாக வரலாறுகள் சான்று பகிர்கின்றன. சிறியதாக இருந்த இந்த ஆலயத்தை, சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் 1902 ஆம் ஆண்டு பெரியளவில் கட்டுவித்ததுடன் இவ்வாலயத்திற்கு "கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்" என்ற திருநாமத்தையும் சூட்டினார். 1975 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி இவ்வாலயத்தில் புனராவர்த்தன அனாவர்த்தன மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதன் பின் ஆலயத்திற்கு 81 அடி உயரமும் 7 தளங்களும் கொண்ட இராஜகோபுரம் அமைக்கும் திருப்பணி 1988 ஆகஸ்ட் 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இராஜகோபுர திருப்பணியின் மற்றொரு அம்சமாக கோபுரத்தின் இரு மருங்கிலும் மணிக்கோபுரமும் மணிக் கோபுரமும் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. 1991 மார்ச் 10 ஆம் திகதி அதற்கான அடிக்கல் நடப்பட்டது. அதனுடன் இணைந்த வகையில் ஆலயத்தில் புனருத்தாரண வேலைகளும் செய்யப்பட்டு 1993 மார்ச் 29 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம்

செய்யப்பட்டது. அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு ஒரு தங்கத்தேர் அமைக்க வேண்டும் என்ற ஆலய திருப்பணிச் சபையினரின் விருப்பத்திற்கு அமைய சிற்பாசாரியார் சரவணமுத்து ஜெயகாந்தன் தலைமையிலான சிற்பக் கலைஞர்களால் தங்கத் தேரொன்று உருவாக்கப்பட்டது. இதன் வெள்ளோட்ட விழா 1998 ஆகஸ்ட் 9 ஆம் திகதியன்று நடைபெற்றது. அதே ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் திகதியன்று நடந்தேறிய தேர் திருவிழாவின்போது முருகப் பெருமான் புதிய தங்கத்தேரில் ஆரோகணித்து வீதியுலா வந்தார். சிறந்த முருக பக்தரும், மாமன்ற அறங்காவலர் சபை உறுப்பினருமான திருக்குமார் நடேசன் தலைமையிலான தேர்த் திருப்பணிச் சபையினரதும், க. பாலசுப்பிரமணியம் போன்ற செயல் வீரர்களின் உதவியுடனும் தேர்த் திருப்பணி வேலைகள் வெற்றிகரமாக நிறைவேறியது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24708).

### 14125

**கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில் கும்பாபிஷேக மலர்.** மலர்க் குழு. கொழும்பு: தர்மகர்த்தா சபை, புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில், 1வது பதிப்பு, பெப்ரவர் 1992. (அச்சக விபரம் தரப்படவில்லை).

85 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x22 சமீ.

09.02.1992 அன்றுவெளியிடப்பெற்றிருந்த இச்சிறப்பு மலரில் வாழ்த்துரை, ஆசியுரைகளுடன், கோயில் வரலாற்றுச் சிறப்பு (ஆலய தோற்றம், திரு.ஆர்.எம். பழனியப்பா செட்டியாரும், தருமகர்த்தா சபையும்), கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய விநாயகர், கதிர் வேலாயுத சுவாமி கோவில் தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு.ஆர்.எம்.பழனியப்ப செட்டியாருடன் ஒரு சந்திப்பு - சந்திப்பவர்: க.கனகலிங்கம், கும்பாபிஷேகக் காட்சிகள், சிந்தனைச் சிற்பி கட்டடக் கலைஞர் திரு.வி.எஸ். துரைராஜாவின் இதயம் பேசுகிறது, கும்பாபிஷேகமும் மண்டலாபிஷேகமும் (சி.அகிலேஸ்வரி), கொழும்பு நகர் ஆடி வேல் விழா வரலாறும் விழாக் கோவில்களும் (சி.சிவபாதசுந்தரம்), விநாயகர் தத்துவம் (திருமதி வி.சி.சர்மா), ஆலய வழிபாட்டில் செய்வனவும் செய்யத்தகாதனவும் (மானியூர் சி.குமாரசாமி), இறைவனின் உறைவிடங்கள் (பா.சி.சர்மா), The Role of Nattukottai Chettiars in Sri Lanka (ஆ.தேவராஜன்), விநாயகரின் திருவடிவங்களில் சில ஆகிய படைப் பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57157).

### 14126

**சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் சத்தியமான 18 படிகள்: 18ஆவது ஆண்டு மண்டலபூஜை சிறப்பு மலர்-1993.** க.ரவீந்திரகுமார் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழு, அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம், ஐயப்பன் இல்லம், இல. 69, வன்றோயன் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (கொழும்பு 12: ஸ்ரீ சக்தி பிரின்டிங் இன்டஸ்ட்ரீஸ், 61/1- F, பீர்சாய்பு வீதி).

*(40), 201 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.*

*இலங்கையில் சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமி வழிபாடுகள், சபரிமலை புனித யாத்திரை நடத்தும் அமைப்புக்கள், சங்கங்கள், சந்நிதானங்கள், தேவஸ்தானங்கள் பீடங்கள் பீடாதிபதிகள், இந்துமத பாராளுமன்ற உறுப்பினர்கள் குருஸ்வாமிகள் மற்றும் அடியார்களுக்கு உதவும் வகையில் 18ஆவது மண்டல பூஜையையொட்டி 26.12.1993 அன்று வழிபாட்டுப்பாடல்களுடன் கூடியதாக இச்சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38337).*

### 14127

**சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் தெய்வீகப் பாமாலை: 20ஆவது ஆண்டு மண்டலபூஜை சிறப்பு மலர்-1995.** *க.ரவீந்திரகுமார் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: சபரிமலை தீர்த்த யாத்திரைக் குழு, அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம், ஐயப்பன் இல்லம், இல. 69, வான்றோயன் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1995. (கொழும்பு 14: எக்செலென்ட் பிரின்டர்ஸ்,* FG1, *சமகிபுர தொடர்மாடி, சென்.ஜோசப் வீதி).*

*(32), 145 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 50.00, அளவு: 21.5x14 சமீ.*

*இலங்கையில் சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமி வழிபாடுகள், சபரிமலை புனித யாத்திரை நடத்தும் அமைப்புக்கள், சங்கங்கள், சந்நிதானங்கள், தேவஸ்தானங்கள் பீடங்கள் பீடாதிபதிகள், இந்துமத பாராளுமன்ற உறுப்பினர்கள் குருஸ்வாமிகள் மற்றும் அடியார்களுக்கு உதவும் வகையில் 20ஆவது மண்டலபூஜையையொட்டி வழிபாட்டுப் பாடல்களுடன் கூடியதாக இச்சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34408).*

### 14128

**சாந்தம் புதிய மண்டபத் திறப்பு விழா சிறப்பு மலர்.** *மலர் வெளியீட்டுக் குழு. வவுனியா: பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம், 1வது பதிப்பு, நவம்பர் 1998. (கொழும்பு 11: இராஜேஸ்வரி அச்சகம், 18, பிரின்ஸ் வீதி).*

*74 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.*

*சாயி சேவையிலுள்ள சி.முத்துலிங்கம் அவர்களை நிலையத் தலைவராகக் கொண்டியங்கிவரும் வவுனியா: பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம், தனக்கென ஒரு புதிய கட்டிடத்தினை பொதுமக்களின் நிதிவளத்துடன் கட்டிமுடித்து 2.11.1998 அன்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்த போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35694/34508).*

### 14129

**சாவகச்சேரி அருள்மிகு வாரிவன ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் 2008.** *மலர்க் குழு. சாவகச்சேரி: திருப்பணியாளர் வெளியீடு, அருள்மிகு வாரிவன ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2008. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).*

*228 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.*

*27.08.2008 அன்று நடைபெற்ற மஹா கும்பாபிஷேக வைபவத்தின்போது வெளியிடப்பெற்ற இம்மலரில் ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் ஊஞ்சற்பாட்டு, ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வரலாறு, அம்மா, வாரிவனம் உறை ஸ்ரீ முத்துமாரி அம்மன், மாரியாய் அருளவேண்டும், அம்மன் பக்தர் சிவாவுடன் ஒரு சந்திப்பு, மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம், கும்பாபிஷேக தத்துவம், கும்பாபிஷேக மகத்துவம், விமானம், அம்மன், சக்தி வழிபாடு, அன்னையின் அருள் ஆட்சி, சக்திரூப விருத்தி, சக்தியின் வடிவங்கள், சக்திபீடங்கள், அன்னையின் வடிவங்கள், வரமளிப்பாய் தாயே, நவராத்திரி, துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி, முத்துமாரி அம்மன், சக்தி விரதங்கள், சகலகலாவல்லி மாலை, தேவதேவியர், சப்த மாதர், அஷ்டலக்ஷ்மி, அருள்மழை பொழிந்திடும் அம்பிகை, காளி வழிபாடு, தென்மராட்சி வாரிவனம் அமர்ந்த தாயே, ஸ்ரீ வித்தையில் மாத்ருகா அக்ஷரங்கள், அன்னை அழித்த அசுரர்கள், பத்தாக வரும் பராசக்தி தச்வித்யா, சிவனின் நவதாண்டவங்களுக்குரிய தோலங்களும் தேவி வடிவங்களும், பக்தியின் ஒன்பது வகைகள், ஊருக்கொரு ஆலயம், கற்பகவல்லி, தீபவழிபாடும் தீபத்தின் பெருமையும், தீபவகைகள், தேரேறி வீதிவரும் முத்துமாரி, கடவுளுடன் இயைந்த வாழ்க்கை, அன்பே சக்தி, அம்மா ஓடிவா, நாட்டுப்புற பண்பாட்டில் பெண் தெய்வ வழிபாடு, துளசியை நாட்டிப் போற்றுவோம், துன்பத்தை வீட்டில் போக்குவோம், நாட்டுக்கும் வீட்டுக்கும் நலம் அருளும் சக்தி வழிபாடு, நவநிதி, சுத்த சைவ போசனம் உயர்வானது, அம்மன் அடியவர் பணிதொடர, அருள் மங்களம் ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18937).*

### 14130

**சிவஞானம்: ஏழாவது உலக சைவ மாநாடு கனடா, 1999: சிறப்புமலர்.** வீ.வ.நம்பி *(மலராசிரியர்). கனடா: உலக சைவப் பேரவை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1999. (கனடா:* Royal Graphic Inc., Unit 30, 3031, Markham Road, Scarborough, Ontario*).*

*114 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x21 சமீ.*

*உலக சைவப் பேரவை என்பது லண்டனில் சிவநந்தியடிகள் என்பாரால் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பாகும். இந்த பேரவை மூலம் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை உலக சைவ மாநாடு பல்வேறு நாடுகளில் நடத்தப்படுகிறது. இம்மாநாடு உலக சைவப் பேரவை மாநாடு என்றும் அழைக்கப்பெறுகிறது. இவ்வமைப்பின் ஏழாவது மகாநாடு கனடாவில் 1999ஆம் ஆண்டில் ஜுலை 30,31, ஓகஸ்ட் 1*

ஆகிய மூன்று தினங்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது. அவ்வேளை "சிவஞானம்" சஞ்சிகையின் சிறப்பிதழாக வெளியிடப்பெற்ற மலர் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25004).

## 14131

**சிவதொண்டன் நிலையப் பொன்விழா மலர் 2004.** எஸ்.வினாசித்தம்பி (ஆசிரியர்). யாழ்ப்பாணம்: சிவதொண்டன் நிலையம், 434 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2004. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 424, காங்கேசன்துறை வீதி).

(4), 94 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x20.5 சமீ.

சிவதொண்டன் இதழின் மலர் 68, இதழ் 4-5 (மார்ச்-ஏப்ரல்), பொன்விழா மலராகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு தரம் பார்க்க வேண்டும், ஞானதேசிகனின் திருவடிகள் போற்றி (மாதாஜி), நினைப்பற நினைந்தேன், பொன் விழா வாழ்த்து, சிவதொண்டு பரவுக (சுவாமி ஜீவனானந்த மகராஜ்), உனக்கினி என்ன பயமேடி (சிவசிந்தனை), அத்தியாயம் 01-அடியார் உறவும் அரன்பூசை நேயமும், புனிதர் (வை.இரத்தினசபாபதி), திருக்களிற்றுப் படியாரில் காணும் திருத்தொண்டர்கள் (கு.சுந்தரமூர்த்தி), ஒளிநெறி பெற்ற புண்ணியக்கண் மூன்று, பூசனை மாட்சி, திருவடி, அத்தியாயம் 2 - தோத்திரமும் சாத்திரமும், கோளறு பதிகம் (சி.பொன்னம்பலவாணர்), அம்மையார் பெருமை (பொ.இராசரத்தினம்), சைவசித்தாந்தக் கொள்கையும் பெரியபுராணமும், சிவயோக சுவாமிகளின் திருமுகங்கள் காட்டும் சமயமும் தத்துவமும் (மா.வேதநாதன்), திருவாசகமும், சிவஞானபோதத்து எட்டாம் சூத்திரமும் (சிவதொண்டன்), "எப்பவோ முடிந்த காரியம்" (க.கணேசலிங்கம்), ஏன் பிறந்தோம்? (சோ.பரமசாமி), புராணங்கள் கூறும் சிவனின் அட்ட வீரச் செயல்களின் சிறப்பு (பிரம்மஸ்ரீ சபா), அத்தியாயம் 3- ஐம்பது ஆண்டு ஆண்டகை, நற்சிந்தனை, செல்லப்பா சுவாமிகள் அருளிய மகா வாக்கியங்கள், சிவதொண்டன் நிலையப் புரவலர் (சிவதொண்டன்), சிவயோக சுவாமிகள் அருளிய மானிட வாழ்க்கையின் இரகசியம் (தில்லையம்பலம் சிவயோகபதி), சிவயோக சுவாமிகள் - சில சிந்தனைகள் (வி.சிவசாமி), சிவயோக சுவாமிகளும் சிவத்தியானமும் (நாச்சியார் செல்வநாயகம்), செல்லப்பா சுவாமிகள், The Glory of the Lord's Padukas ஆகிய ஆன்மீகப் படைப்பாக்கங்களுடன் இம்மலர் பொலிவுபெற்றுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33363).

## 14132

**சுழிபுரம்-பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் 04.04.2004.** பால. கோபாலகிருஷ்ண சர்மா (தொகுப்பாசிரியர்). சுழிபுரம்: பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில், 1வது பதிப்பு, ஏப்ரல் 2004. (கொழும்பு 12: வாக்மி அச்சகம், 258/3, டாம் வீதி).

iii, 92 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x21 சமீ.

ஆசிச் செய்திகள், கட்டுரைகள், கவிதைகள், அயலகத்திலிருந்து ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் இம்மலரின் ஆக்கங்கள் வகுக்கப்பட்டுள்ளன. "கட்டுரைகள்" என்ற பிரிவில் ஆலய வளர்ச்சியின் வரலாறு (வே.சத்தியமூர்த்தி சர்மா), கோபுர தரிசனம் கோடி புண்ணியம் (சிவ.பாலகுமார சர்மா), ஒரு திருமுருகன் வாந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய (பூரண. தியாகராஜக் குருக்கள்), இரதோற்சவ மகிமை (தியாகராஜ கமலராஜக் குருக்கள்), இந்துக் கலையில் சிற்பம் (ஞானபண்டித சபா வாசுதேவக் குருக்கள்), கந்தபுராணம் தோன்றிய வரலாறு (பா.முருகதாச சர்மா), குங்குமம் இடுவதற்குக் காரணம் (சு.வரதராஜ சர்மா), ஆகமங்களில் சுப்பிரமணியன் (ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா), நன்னெறி செலா அவுணர் நாயகன்முன் உய்த்தான் (பொன்னம்பலவாணர்), என் இரு கண்ணே கண்ணுள் இருக்கும் மாமணியே போற்றி (பொன். பாக்கியம்), சுழிபுரம் பறாளை காசி விசுவநாத சிவலிங்கப் பெருமான் (சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி) ஆகிய கட்டுரைகளும், "கவிதைகள்" என்ற பிரிவில் சு.சண்முகரத்ன சர்மா, செல்வி சந்திரா, பறாளை வே.சத்தியமூர்த்தி சர்மா, பண்டிதை பொன். பாக்கியம், சுழிபுரம் நடேசன் சிவசண்முகமூர்த்தி ஆகியோரின் கவிதைகளும், "அயலகத்திலிருந்து" என்ற பிரிவில் ஞானபூமி, மங்கை,திருவாவடுதுறை ஆதீனம், பாலபாடம் ஆகியவற்றிலிருந்து தேர்ந்த பகுதிகளாக, தேவாரத்தில் இலக்கணக் கூறுபாடுகள், திருஞானசம்பந்தரின் பாடல்களில் இசை, தமிழகக் கோயில் சிறப்பு, கும்பாபிஷேகமென்னும் பெருஞ்சாந்தி, சைவ சமயம், மங்களம் தரும் வேதம்-ஆகமம்-யாகம், அம்பிகை வழிபாட்டின் தொன்மை, பிரதோஷ விரதம், கும்பாபிஷேகங்கள் ஏன்?, இஷ்ட தெய்வ வழிபாடு-சிவன் ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. இச்சிறப்பு மலரின் ஆசிரியர் சுழிபுரம் பிரம்ம ஸ்ரீ பால.கோபாலகிருஷ்ண சர்மா, ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழ்பவர். (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18938).

## 14133

**சைவநெறிக்கூடம்: அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் செந்தமிழ்த் திருக்குடமுழுக்கு பெருவிழா மலர்.** சிவமகிழி (தொகுப்பாசிரியர்). சுவிட்சர்லாந்து: சைவநெறிக்கூடம், Europapaltz, 1,3008 Bern, 1வது பதிப்பு, பெப்ரவரி 2015. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

340 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19.5 சமீ.

வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன் கூடிய இம்மலரில் ஐரோப்பாத் திடலில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் திருப்பணி, ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் பாடல்கள் (ச.வே.பஞ்சபட்சரம்), அறிவே தெய்வம் (அருட்செல்வி யோகநாதன் ஜெயகௌரி), குடமுழுக்கு வாழ்த்துப்பா (தூபீஸ்), செந்தமிழால் எனை வளர்த்த (மு.பெ.சத்தியவேல் முருகன்), தெய்வத் தமிழில் வழிபடுவோம் (தர்மலிங்கம்

சசிகுமார்), தமிழில் சைவத்தின் சான்றுகள் (தூபீஸ்), ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வுகள் (சீவகன் பூபாலரட்ணம்), திருஞானசம்பந்தரின் தமிழ் பக்தி இயக்கத்தில் (த.ஜீவராஜ்), இளைய தலைமுறைக்கு (சுபாங்கி), உய்யும் சைவர்கள் (சிவ. உதயகுமார்), உயிர்களிடத்து அன்பே சிவம் (மறவன்புலவு க.சச்சிதானந்தன்), புலம்பெயர் நாடுகளில் (தி.குணசுதன்), புலத்தில் தமிழ் வழிபாடு (ஜேர்மன் ஆலன் தமிழ் வழிபாட்டுக் கழகம்), சைவம் என்னும் செந்நெறி (நிர்மலாதேவி தர்மலிங்கம்), எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் (பிரித்தானியா அன்பே சிவம் சைவநெறிக்கூடம்), கங்கை நதி (வசந்தி பிரேமச்சந்திரா), செந்தமிழாய் நறுந்தேனாய் (அனுஷியா சாந்தன்), சுவிஸ் நாட்டில் திருக்குடமுழுக்குக் காணும் அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சரர் (கணநாதன் ராஜ்கண்ணா), தமிழ் மொழியில் மந்திரங்கள் (கனடா ஆர்.ஜி.கல்வி நிலையம்), சிவ சிவ சிவசக்தி (தி.இலங்கேஸ்வரன்), மனிதனும் அவனது வாழ்வும் (வே.சண்முகராசா), குடமுழுக்குப் பாமாலை (சிவனடியான்), எமது ஆலயங்களில் இன்றைய தேவைகள் (அ.வேந்தர்கோன்) தமிழ்வழிபாடு முழக்கமும் பழக்கமும் (பா.சீனிவாஸ்), இறைவனை அடையும் வழிமுறைகள் (சிவப்பிரியன்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. மலரின் இறுதிப் பகுதியில் வெளியீடுகள் பத்திரிகைச் செய்திகள், மூரோவின் கவிதைத் தொகுப்பு, கோவில் படங்கள் என்பன பின்னிணைப்புகளாகக் காணப்படுகின்றன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22586).

### 14134

**சைவம் போற்றுதும் -2018**. கி.பிரதாபன், வி.துலாஞ்சனன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 6: இலங்கை சைவநெறிக் கழகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2018. (கொழும்பு: எஸ்.சி.எஸ். பிரின்ட்).

xiv, 50 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

30.06.2013 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இலங்கை சைவநெறிக் கழகத்தின் "சைவம் போற்றுதும் - 2018" விழா 07.04.2018 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றவேளையில் வெளியிடப்பெற்ற மலர் இது. அருளாசியுரை, வாழ்த்துரைகளுடன் வெளிவரும் இம்மலரில் இலங்கைச் சைவநெறிக்கழக உறுப்பினர் விபரம், மேற்படி கழகத்தால் அன்றையதினம் வழங்கப்பெற்ற சைவநெறிக் காவலர் விருது, சைவநெறிச் செல்வர் விருது, சைவமாமணி விருது, சைவசமூகச் செம்மல் விருது, மருத்துவமாமணி விருது, ஆசிரியமாமணி விருது, சைவநெறிப் புரவலர் கலாநிதி மு.கதிர்காமநாதன் விருது ஆகிய விருதுகளைப் பெறுவோர் விபரம் என்பனவும் இடம்பெற்றுள்ளன. மேலும் சைவ சமயம், சைவசமயத்தில் வழிபடு கடவுள், சைவசமய நூல்கள், விடைக்கொடி ஆகிய சைவசமய அறிவுக் கட்டுரைகளும், சிவபூமிச் சைவ முதலிகள் என்ற பிரிவில் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், ஸ்ரீ காசிவாசி சாம்பவஸ்ரீ செந்திநாத ஐயர், ஸ்ரீலஸ்ரீ நா.கதிரைவேற்பிள்ளை

ஆகியோர் பற்றியும், சிவபூமிச் சைவத் தேசிகர் என்ற பிரிவில் சைவப்பெரியார்களான மு.திருவிளங்கம், சு.சிவபாதசுந்தரம், காசிநாத அருணாசல தேசிகமணி, பண்டிதர் மு.கந்தையா ஆகியோர் பற்றியும் சிவபூமிச் சைவத் தாதையர் என்ற பிரிவில் கோமான் பொன். இராமநாதன், சைவப்பெரியார் கா.சூரன் ஆகியோர் பற்றியும் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. நூலகம் நிறுவன இணையத்தள நூலக சேர்க்கை இலக்கம் 071601).

## 14135

**தாந்தாமலை மாட்சி: தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய மலைப்பிள்ளையார் கோயில் குடமுழுக்கு மலர்-2011.** பாலிப்போடி இன்பராஜா (பதிப்பாசிரியர்). மட்டக்களப்பு: தாந்தாமலை முருகன் ஆலய பிள்ளையார் கோயில் குடமுழுக்கு விழா மலர்க்குழு, கொக்கட்டிச்சோலை, 1வது பதிப்பு, ஜுலை 2011. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).

215 பக்கம், 24 தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21.5 சமீ.

முன்னுரை, பதிப்புரை, ஆசியுரை, வாழ்த்துரைகளையடுத்து இம்மலரில் கவிதைப் பூங்கா என்ற பிரிவில் 12 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. தொடரும் கட்டுரைப் பகுதியில் 26 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தாந்தாமலை ஆலயத்தின் பண்டைய வரலாறு (க.தங்கேஸ்வரி), கிழக்கு மாகாணத்தில் முருக வழிபாடும் தாந்தாமலை முருகன் கோவிலும்-சில சிந்தனைகள் (சி.மௌனகுரு), தாந்தாமலை சில தொன்மைத் தகவல்கள் (திமிலைத் துமிலன்), தா என்போர்க்கு இந்தா என்று வரமளிக்கும் தாந்தாமலை முருகன் ஆலயம் (க.வி.விக்னேஸ்வரன்), வழிபாட்டியலில் தாந்தாமலை ஆலயத்தின் மறுமலர்ச்சி (க. கனகநாயகம்), தாந்தாமலை முருகன் ஆலயமும் சாதுக்களும் (மா.வன்னியசிங்கம்), தேரோட்டப் பாரம்பரியமும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரமும் (க.தங்கேஸ்வரி), வழிபாட்டியலில் தாந்தாமலை ஆலயம் (முருகு தயாநிதி), கொழும்பு அருங்காட்சியகத்திலே தமிழ்ச் சாசனம் எழுதப்பட்ட விளக்கு (சி.பத்மநாதன்), மலையில் பிள்ளையாரும் சிலிந்தி மரமும் (க.மாணிக்கவாசகர்), மட்டக்களப்பு கோவிற்குளம் காசி லிங்கேஸ்வரர் கோயிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவிலும் (மா.செல்வராஜா), மட்டக்களப்பு மாநிலத்தில் கண்ணகி வழிபாடு (வெல்லவூர்க் கோபால்), தாந்தாமலை வரலாற்று அம்மானை: சில அவதானிப்புகள் (சி.யோகராசா), தாய்வழிச் சமுதாயமும் தாய்த் தெய்வ வழிபாடும் (சாந்தி கேசவன்), இந்துப் பண்பாட்டில் கவனிக்கப்படவேண்டிய பக்கம்: மட்டக்களப்பின் தெய்வ வழிபாட்டினை மையப்படுத்திய சில சிந்தனைகள் (சி.மௌனகுரு), தாந்தாமலை (அன்புமணி), தாந்தாமலை பற்றி இதுவரை வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம் (ரஞ்சிதமலர் கருணாநிதி), தாந்தாமலை ஸ்ரீமுருகன் ஆலயம்: தாந்தாமலை அன்னதான சபையின் உருவாக்கமும் அது ஆற்றிவரும் மகத்தான சேவையும் (சின்னத்தம்பி குருபரன்), 1956இன் பின் தாந்தா வழிபாட்டின் தோற்றுவாய் (ஐ.சுப்பிரமணியம்),

*தாந்தாமலையின் உரித்துடைமையில் அமரர் சோ. உ. எதிர்மன்னசிங்கம் அவர்களின் பங்களிப்பு (பா.ஸ்ரீஸ்கந்தஜெயா), தாந்தாமலை பற்றிய ஒரு மீள்பார்வை (க.திருநாவுக்கரசு), கொக்கட்டிச்சோலை திருத்தான்தோன்றீச்சரத்தின் ஊடாக வெளிவரும் இந்துப் பண்பாடு (ச.சந்திரசேகரம்), கொக்கட்டிச்சோலை திருத்தான்தோன்றீச்சரம் மீது பாடப்பெற்ற பக்திப் பனுவல்கள் (த.மேகராசா), கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயமும் மகிமையும் (ந.ஜெயரூபன்), இந்து மதத்தின் பெருமை (கு.மகேஸ்வரமூர்த்தி), தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய பரிபாலன சபை 1981 முதல் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இம்மலரின் உருவாக்கத்திற்குப் பொறுப்பான மலர்க்குழு உறுப்பினர்களாக க.மாணிக்கவாசகர், க.சிவகுருநாதன், பூ.சுரேந்திரராஜா, இ.சாந்தலிங்கம், பா.சபாரெத்தினம், மு.கணேசலிங்கம், அ.தயாசீலன், செ.முருகுப்பிள்ளை, மு.தயாநிதி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது).*

## 14136

**தாய்மையின் பொலிவு: தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 150ஆவது ஜனன ஆண்டு விழாச் சிறப்பு மலர்.** *மலர்க் குழு. கொழும்பு 06: ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமிதி, 59, விவேகானந்தா வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).*

*(4), 74 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.*

*அன்னை சாரதா தேவி (22.12.1853-20.07.1920) ஆன்மீகவாதியும், இராமகிருஷ்ணரின் மனைவியும் ஆவார். இராமகிருஷ்ண இயக்கத்தின் வளர்ச்சிக்கு முக்கிய தூணாக இருந்தவர். அன்னை சாரதா தேவி கல்கத்தாவில் ஜெயராம்பாடி என்ற கிராமத்தில் 1853 டிசம்பர் 22 ஆம் நாள் ராமசந்திர முகர்ஜிக்கும் சியாமா சுந்தரி தேவிக்கும் முதல் குழந்தையாகப் பிறந்தார். இவர் பள்ளி சென்று படித்ததில்லை என்ற போதும் பிற்காலத்தில் தமது சொந்த முயற்சியால் சிறிது படிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார்.ஐந்து வயதில் இவர், ராமகிருஷ்ணரின் வாழ்க்கைத் துணைவியானார். அன்னை சாரதாதேவியின் 150ஆவது ஜனன தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்ட வேளை, வெள்ளவத்தை (கொழும்பு) ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமிதியின் சமய வகுப்பு ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து தமிழ் ஆங்கில சிங்கள மொழியில் ஆசியுரைகள், வாழ்த்துரைகள், அன்னை ஸ்ரீ சாரதா தேவி பற்றிய ஆக்கங்கள் என்பவற்றைக் கொண்டதாக இம்மலரைத் தொகுத்தளித்துள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39190).*

## 14137

**திருக்கேதீச்சரம்: திருக்குடத் திருமஞ்சன மலர்.** வெளியீட்டுக் குழு. மன்னார்: *திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை, திருக்கேதீச்சரம், 1வது பதிப்பு, ஜூலை 1976. (கொழும்பு 10: அல்பியன் அச்சகம், இல. 157, ஜயந்த வீரசேகர மாவத்தை).*

*(6),* xiii, *(26), 208 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5*x*21.5 சமீ.*

*04.07.1976 அன்று வெளியிடப்பட்டுள்ள இச்சிறப்பு மலரில் அருளாசிகள், வாழ்த்துரைகளுடன் சிவபுராண படன விதி (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்), திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும் (பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை), ஈழமும் பதிகம் பாடிய சம்பந்தரும் (ஏழாலை மு.ஞானப்பிரகாசம்), நித்திய பூசையும் அதன் தத்துவமும் (எஸ்.சுவாமிநாதசிவாசாரியார்), கும்பாபிஷேக முறைகளும் விளக்கமும் (நயினை ஐ.கைலாசநாதக் குருக்கள்), சிவலிங்க தத்துவ விளக்கமும் வழிபாடும் (சிவஸ்ரீ எஸ். காளஹஸ்தீஸ்வரக் குருக்கள்), இந்து சாதனம் (மு.மயில்வாகனம்), சைவமும் பௌத்தமும் (ஆ.வேலுப்பிள்ளை), ஈழத்துப் புராணங்கள் (பொ.பூலோகசிங்கம்), தேவாரப் பண்முறை (பி.சாம்பமூர்த்தி), இறைக் காதல் (சி.தில்லைநாதன்),* Chola Inscriptions From Mantai (S.Pathmanathan), *மலையகத்திற் சைவம் (நா.முத்தையா), பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்துச் சைவ மறுமலர்ச்சி (க.அருமைநாயகம்), மன்னார் மாவட்டத்தின் குடிசனத்தொகையும் வளங்களும் அபிவிருத்தியும் (பொ. பாலசுந்தரம்பிள்ளை), இலங்கையிற் சைவக்கல்வியின் எழுச்சி (வ.ஆறுமுகம்), திருக்கேதீச்சரம் - மரபுகளும் ஐதீகங்களும் (வி.சிவசாமி), திருவளர் திருக்கேதீச்சரம் (ஆர்.ராமசேஷன்), திருக்கேதீச்சரமும் திருமுறைகளும் (தி.பட்டுச்சாமி ஓதுவார்), திருவாசகத்தில் சைவசித்தாந்தம் (ந.ரா.முருகவேள்), ஈழத்திற் கண்ணகி வழிப்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் (எம்.சற்குணம்),* The Significance of the Vel Festival in Colombo (Maheswary Balakrishnan), *திருக்கோயிற் கிரியைகளில் இசைக்கருவிகள் (ஞானா.குலேந்திரன்), ஈழநாட்டில் சித்தர் மரபு (ச.அம்பிகைபாகன்), இலங்கையிற் சைவர்கள்: குடிசனப் புவியியல் நோக்கு (பொ.பாலசுந்தரம்பிள்ளை), கந்தபுராண கலாசாரம் (செ.தனபாலசிங்கன்), திருநீற்றின் பெருமை (தங்கம்மா அப்பாக்குட்டி), பிறவிப்பிணி (கோ.ஆழ்வாப்பிள்ளை), ஈழநாட்டுச் சைவக்கிரியைகளும் சடங்குகளும் (சிவஸ்ரீ கு.பாலசுந்தரக் குருக்கள்), கௌரியே காட்சியருள்வாய் (வ.கோவிந்தபிள்ளை), நாவலர் தாபித்த வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை (சி.கணபதிப்பிள்ளை), கேதீச்சரம் தொழ வைத்த செம்மல் சித.மு.பசுபதிச் செட்டியார் (க.சிவராமலிங்கம்), சிவாகமஞானபாநு சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் (அழலாடி), திருக்கேதீச்சர ஆலயமும் மாந்தைத் துறைமுகமும் (கந்தையா வைத்தியநாதன்), சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் பிள்ளை (பொ.பூலோகசிங்கம்), சிவமணி சேர்.கந்தையா வைத்தியநாதன் (சி.கணபதிப்பிள்ளை), வன்னியும் வன்னியரும் (சி.எஸ். நவரத்தினம்), வன்னி நாட்டுப் பிரிவுகள் - ஆறுகள் - ஊர்ப் பெயர்கள், சிவநெறியின் வளர்ச்சி (குன்றக்குடி அடிகளார்), சுத்த சைவ சித்தாந்தக் கொள்கைகள்*

(சு.நடேசபிள்ளை), The Philosophy of Yogar Swamigal (Ratna Navaratnam), முன்னேசுவரம் (செ.குணரத்தினம்), ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் (முல்லைமணி வே.சுப்பிரமணியம்), கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர் கோயில் (க.மகேஸ்வரலிங்கம்), வண்ணை வைத்தீசுவரன் கோயில் (சி.சிவகுருநாதன்), நயினாதீவு நாகபூஷணியம்மாள் கோயில் (தமிழடியான்), வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோயில் (நா.சுப்பிரமணியம்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 34624).

## 14138

**திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் தேவஸ்தானம் கும்பாபிஷேக மலர்.** இ.வடிவேல், மு.சுந்தரலிங்க தேசிகர், வே.வரதசுந்தரம் (தொகுப்பாசிரியர்). திருக்கோணமலை: அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் தேவஸ்தானம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2001. (திருக்கோணமலை: ஸ்ரீ கணேச அச்சகம், 28B புதிய சோனகத் தெரு).

(12), 160 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x21 சமீ.

07.02.2001 அன்று வெளியிடப்பட்ட இச்சிறப்பு மலரில் ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகள் என்பவற்றுடன், கர்வமடக்கிய காளிகா தேவி (சாமி விஸ்வநாதக் குருக்கள்), தமிழ் மறை கூறும் பொது அறங்கள், திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் (சோ.இரவிச்சந்திரக் குருக்கள்), கும்பாபிஷேகத்தின் சிறப்பு (ஸ்ரீலஸ்ரீ சு.கு.முத்துக்குமாரசாமிக் குருக்கள்), ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில் சப்த தள இராஜகோபுரம், கருவறை விமானம் ரசானு பவமும் பிரம்மானுபவமும் (பண்டிதர் இ.வடிவேல்), பூதசுத்தி அந்தர்யாகம் (சி.குஞ்சிதபாதக் குருக்கள்), அன்னையின் அருளாட்சி (பூரண தியாகராஜக் குருக்கள்), திருகோணமலை பத்திரகாளி கோவில் மஹா கும்பாபிஷேகம் ஒரு நோக்கு (சிவஸ்ரீ ப.முத்துக்குமாரசாமி குருக்கள்), பூத்து நிற்கும் பேரருள் (வசந்தா வைத்தியநாதன்), நல்ல காரியங்களைச் செய்ய முற்படும் போது மூன்று முறை சாந்தி என்று சொல்லப்படுவதன் நோக்கம் (சுவாமி ஏ.பார்த்தசாரதி), ஸ்ரீ சக்கரம் (மு.சுந்தரலிங்கம் தேசிகர்), சக்தி வழிபாடு பற்றிய சில வரலாற்றுச் சிந்தனைகள் (கனகசபாபதி நாகேஸ்வரன்), ஆலயமும் பிரார்த்தனையும் மனிதப் பிறவியின் உயர்நோக்கத்தை நிறைவு செய்கின்றன (குமாரசாமி சோமசுந்தரம்), அம்பிகை வழிபாட்டின் தொன்மை (எஸ்.இராமநாத சிவாச்சாரியார்), கும்பாபிஷே கமென்னும் பெருஞ்சாந்தி (என்.ஸ்ரீநிவாசன்), மங்களம் தரும் வேதம் - ஆகமம் - யாகம் (எஸ்.நாராயணசுவாமி), குறுமுனியால் வரமுனி பெற்ற சாபமும், அதனால் ஜகத்திற்குக் கிடைத்த பொக்கிஷமும் (பிரம்மஸ்ரீ சிவகுமாரக் குருக்கள்), கோபுர அமைப்பும் அதன் தத்துவங்களும் (ஸ்ரீ.க.பாலச்சந்திரசர்மா), அருள் தரு அன்னை அம்பிகை (திரு.கணேசர் சைவசிகாமணி), சக்திதாசன் காட்டிய பக்தி நெறி (சித்திரதேவி பத்மநாதன்), பாராயணஞ் செய்தற்குரிய தேவீஸ்தோத்திர மாலை

(பூரண. தியாகராஜ கமலராஜக் குருக்கள்), கண்டறியாதன கண்டோம் (கந்தையா இராசநாயகி), கோபுரமும் அதன் உட் பொருள் விளக்கமும் (கந்ததாஸ் இரவீந்திரராஜா), கும்பகோணம், வலங்கைமான் ஸ்தபதி திரு.மாரிமுத்து இராஜேந்திரனுடன் செவ்வி (செவ்வி கண்டவர்: இ.வடிவேல்), இலங்கையில் காளி அம்மன் வழிபாடு (சோ.குஹானந்தசர்மா), விளக்கு ஏற்றுவதற்கு பயன்படுத்தும் எண்ணெயின் பலன்கள், தீபம் ஏற்றும் நேரம், கவிஞர்கள் வாழ்வில் காளி (த.சிவநாதன்), சக்தியின் மகத்துவம் (அ.பரசுராமன்), அர்ச்சனைத் தட்டு எதற்காக? (பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள்), சக்தி (என்.ஆர். மகேந்திரன்), கால தேவதை அருள்மிகு காளி தேவி (க.இராசரெத்தினம்), கும்பாபிஷேக மகிமை, திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் திருப்பள்ளியெழுச்சி (பண்டிதர் இ.வடிவேல்), திருகோணமலை பத்திரகாளி அம்மன் திருவூஞ்சல் (வே.அகிலேசபிள்ளை), நாதஸ்வரமும், நாட்டியமும் ஆலயமும் (சோ.இரவீச்சந்திரக் குருக்கள்), திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் காவியம் (வ.கோ. வேலுப்பிள்ளை) திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் பதிகம், தீர்த்தம் ஆடும் முறை (சிவஸ்ரீ மு.சண்முகரெத்தினக் குருக்கள்), திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கலிவெண்பா, அன்னை வடிவே அருட் கோபுரம் (மணிமேகலாதேவி கார்த்திகேசு), திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்மை தோத்திரம் (சி.விநாசித்தம்பி புலவர்), என்றம்மா தீர்வு?(சி கண்டிதாசன்), திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் ஆதீனகர்த்தா - பிரதம குரு வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ சோமஸ்கந்த ஐயர் - இரவிச்சந்திரக் குருக்கள் அவர்களையும் அவர்தம் திருப்பணியினையும் மகிமைப்படுத்தும் வாழ்த்துப்பா மடல் காணாத கண்ணென்ன கண் (நா.சோமகாந்தன்), காளி தேவியின் ரூப பேதங்கள், எங்கள் பத்திரகாளி ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 039876).

## 14139

**திருக்கோணமலை இளைஞர் அருள்நெறி மன்றம்: 25ஆவதுஆண்டு நிறைவு வெள்ளிவிழா மலர்**. மலர்க்குழு. திருக்கோணமலை: இளைஞர் அருள்நெறி மன்றம், ஞானசம்பந்தன் வீதி, 1வது பதிப்பு, 1980. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம், 575, காங்கேசன்துறை வீதி).

(58), 60 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x22 சமீ.

திருக்கோணமலை இளைஞர் அருள்நெறி மன்றத்தினரின் 25ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளிவந்துள்ள இம்மலரின் தொகுப்பிற்கு மலர்க்குழுவிற்கு வழிகாட்டியாக க.சி.குலரத்தினம் அவர்கள் பணியாற்றியுள்ளார். ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் வெளிவரும் இம்மலரில், சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணக் கருத்துரைகள் (தவத்திரு. குன்றக்குடி அடிகளார்), உலகமே ஒரு பெரிய சர்வகலாசாலை (ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி), நாதனும் நல்லிசையும் (செல்வி விஜயகுமாரி இராமநாதபிள்ளை), சைவ சமய நெறியின்

சமரசம் (டி.டி.நாணயக்கார), அன்பு என்னும் அரண் (சிவஞானசித்தியார்), திருமுறைகள் ஓதித் திருவருள் பெறுவோம் (தி.ந.சிங்காரவேல் முதலியார்), ஒரு சொல் கேளீர் (நா.ரா.முருகவேள்), வழித்துணை (சிவத்திரு தற்புருஷ தேசிகர்), Nataraja (Evelyn Wood), நடராஜா (ஈவ்ளின் வூட்), பன்னிரு திருமுறைகள் (ந. ரா.முருகவேள்), திருவாசகத்தில் தேவர்கள் படும்பாடு (வ.சுப.மாணிக்கம்), இறையுணர்வு (மு.மு.இஸ்மாயில்), கல்வி (தி.சா.தியாகராஜா தேசிகர்), சைவத் திருமுறைகள் (தொகுப்பு), சேக்கிழார் பெருமை (கவியோகி சுத்தானந்த பாரதியார்), நமது குலதெய்வம் (ஞானசம்பந்தம்), அறிவோடு வழிபடுக (தவத்திரு குன்றக்குடி அடிகளார்), சைவசித்தாந்தமும் தமிழர் பண்பாடும் (ந.ரா.முருகவேள்), மறக் கருணை (தொகுப்பு), சமய உணர்வு (ஆர்.சதாசிவம்), அடிகளாரின் சமரச நெறி (ந.மகேந்திரன்), சைவசமய நூலகப் பணி (பெ.பொ.சிவசேகரனார்) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 004387).

### 14140

**திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேக மலர்1994.** மலர்க் குழு. திருக்கோணமலை: திருப்பணிச் சபை, வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில், 1வது பதிப்பு, ஜுலை 1994. (திருக்கோணமலை: ஸ்ரீ கணேச அச்சகம்).

(23), 66 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

27.07.1994 அன்று வெளியிடப்பெற்றுள்ள இச்சிறப்பு மலரில் வாழ்த்துச் செய்திகள், ஆசிச் செய்திகளுடன், இருநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தனின் வரலாறு (பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கன்), ஆலயத்தின் புதிய அமைப்புகள் (ஸ்தபதி ஸ்ரீ கந்ததாஸ் ரவிச்சந்திரராஜா), கும்பாபிஷேகம் - ஒரு விளக்கம் (கா.இரத்தின கைலாசநாதக் குருக்கள்), ஆலயம், மூர்த்தி, ஆராதனை (பண்டிதர் இ.வடிவேல்), கந்த விரதங்களின் மகிமை (திருமதி.சி. பத்மநாதன்), திருவூஞ்சல், திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி பத்துப் பதிகம் (வே.அகிலேசபிள்ளை), ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய (சிவஸ்ரீ பூரண தியாகராஜக் குருக்கள்), திருக்கோணமலை அருள்மிகு வில்லூன்றிக் கந்த சுவாமி கோவில் வரலாறு (சுதர்சம்பிகை ஏகாம்பரம்), வினைதீர்க்கும் வில்லூன்றிக் கந்தன் (பெ.பொ.சிவசேகரனார்), திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமியார் பக்திப் பாமாலை (பண்டிதர் இ.வடிவேல்), நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து (த.அமரசிங்கம்), வில்லூன்றிக் கந்தன் தேர்ச் சிந்து (பண்டிதர் இ.வடிவேல்), வில்லூன்றிக் கந்தன் கீர்த்தனை (த.சாம்பசிவம்), திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் நித்திய, நைமித்திக விசேட உற்சவங்கள் ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 027133).

## 14141

**திருநெறித் தமிழ்: வெள்ளிவிழா சிறப்பிதழ் 1998**. *சி.நடராசா (இதழாசிரியர்). கொழும்பு 6: ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம்,* 241-½, W.A.*சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, ஜுலை 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B, *புளூமெண்டால் வீதி).*

*(10), 100 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25*x*19 சமீ.*

*18.07.1998 அன்று வெளியிடப்பட்ட இம்மலரில் வாழ்த்துரைகளைத் தொடர்ந்து, பரப்பிரம்மம் (ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர்), திருவைந்தெழுத்து (ஆ.குணநாயகம்), சித்தாந்தக் கடலில் ஒரு சிந்தனை முத்து (வசந்தா வைத்தியநாதன்), வழிபாடும் தேவாரங்களும் (மனோன்மணி சண்முகதாஸ்), அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே (ஆ.குணநாயகம்), தமிழர் சமயமாய சமயம் சநாதன சைவமே (மு.கந்தையா), திருவாரூர் நான்மணிமாலை (வ.சிவராஜசிங்கம்), சைவ சித்தாந்த அத்துவித கோட்பாடு (பொன். பூலோகசிங்கம்), திருக்குறளைக் கற்பதனால் ஆகும் பயனென் கொல் (ஆ.குணநாயகம்), தமிழால் இறைவனை வழிபடுவோம் (கு.இராசேந்திரம்), ஏறுடைக் கொடி காட்டும் கொள்கை (சோ.பரமசாமி), சைவநாற்பாதங்கள் (க.இ.ஆறுமுகம்), மூவர் தேவாரமும் பண்களும் (வரதராசா மாணிக்கவேல்), கொடிக்கவியின் வரலாறு (த.செ.நடராசா), சைவசித்தாந்தத் துறையில் கையாளப்பட்டு வந்த எண்முறை (ஆ.குணநாயகம்), உலகு தழுவுஞ் சைவம் (க.நாகேஸ்வரன்),* Perfection through Self Conquest (Swami Vipulananda), A note on Hindu Meetings on World Languages (S.V.Subramaniam), Pegeants from the Thirukkovaiyar and some Aspects of Hindu Culture (A.Gunanayagam), An Introduction to the English Translation of The Natchinthanai Hymns (A.Gunanayagam) *ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மேலும் இம்மலரில் திருமதி சௌந்தரா கைலாசம், சுப்பிரமணியம், கலாபாரதி, கண்ணதாசன், புலவர் சிவ.கருணாலய பாண்டியனார், செ.வேலாயுதபிள்ளை ஆகியோரின் கவிதைகளும், வாழ்த்துப் பாக்களும், ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம் -கால்நூற்றாண்டு வரலாற்றுச் சுருக்கம் என்ற தலைப்பில் ஆ.குணநாயகம் எழுதிய வரலாற்றுக் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. நூலின் இறுதியில் நினைவில் மலரும் நிழலோவியங்கள் என புகைப்படத் தொகுப்பொன்றும் இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17281).*

## 14142

**திருவருள் மிகு ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேக சிறப்புமலர்**. *துன்னையூர் ராம்.தேவலோகேஸ்வரக் குருக்கள் (மலராசிரியர்). கொழும்பு 3: ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில், கொள்ளுப்பிட்டி, 1வது பதிப்பு, மே 1996. (கொழும்பு: உதயம் கிராப்பிக்ஸ்).*

*(12), 29+12 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25*x*19 சமீ.*

*0.05.1996 அன்று வெளியிடப்பட்ட இக் கும்பாபிஷேக மலரில், மலரும் மணமும் (துன்னையூர் ராம்.தேவலோகேஸ்வரக் குருக்கள்), நுழைவாயில் (மலர் ஆசிரியர்), ஸ்ரீ முகம் (ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள்), கொள்ளுப்பிட்டி அருள்மிகு கருமாரி அம்மன் கோவிலில் பத்மாவதி தாயார் சந்நிதி (சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்), யாதுமாகி நின்றாய் (சந்தனா நல்லலிங்கம்), ஆலய தத்துவ விளக்கம் (சிவஸ்ரீ குமாரசாமி குருக்கள்), அகத்தியமுனிவர் அருளிய மாதப் பதிகங்கள், கும்பாபிஷேக தத்துவம் (விஸ்வ நாராயண சர்மா), அகத்தியமுனிவர் அருளிய வாரப் பதிகங்கள், திருவிளக்கு பூஜையும் வழிபாடும் (துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்), திருவருள்மிகு அன்னை ஸ்ரீ தேவி கருமாரி அம்பாள் திரு ஊஞ்சல் பாமாலை (துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்), மெய்யருள் தரும் ஸ்ரீ ஐயப்ப சுவாமி (துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்), ஸ்ரீ அஷ்ட லக்ஷ்மி வழிபாடு (நயினை சுவாமிநாத பரமேஸ்வர குருக்கள்), ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் ஸ்ரீ ஐயப்பசுவாமி திருக்கோவில் அறங்காவலர்கள், ஆலயத்தில் நடைபெறும் வருட விழா நிகழ்வு உபயகாரர்கள், என்றும் இனிய நன்றியுடையோர் (ஆலய பிரதமகுரு ராம்.தேவலோகேஸ்வரக் குருக்கள்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34541).*

### 14143

**தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய மாமணி சிறப்புமலர்-2002.** *பொன்.புவனேந்திரன் (மலராசிரியர்). கனடா* L5 B4 B4: *செல்வச்சந்நிதி முருகன் ஆலய மாமணி நிர்மாண சபை,* 2584,Rugby Road, No.603, Mississauga, Ontario, *1வது பதிப்பு, ஓகஸ்ட் 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளுமெண்டால் வீதி).*

*(36), 109 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 27.5*x*21.5 சமீ.*

*ஆசியுரைகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றுடன்கூடிய இம்மலரில் செல்வச் சந்நிதி முருகப் பெருமான் கோவிலுக்கு கண்டாமணி மீள அமைத்தல் (வ.வேலும்மயிலும்), சந்நிதிச் செல்வமும் அமைவிடமும் (சந்நிதிச்செல்வம்), சந்நிதியின் மணி உருவாக்கம் ஒரு நோக்கு (கௌரி ஸ்ரீ ராகவன்), மின்னும் கதிர்வேல் கிருபைசூழ் சுடரே (திருமதி இந்திரா சிவயோகம்), தவத்திரு வே. முருகேசு சுவாமிகள் வரலாறு (சிவ.ஆறுமுகம்), செல்வச்சந்நிதி முருகப் பெருமானின் கண்டாமணி (து.பாலசுப்பிரமணியம்), பாவங்கள் போக்கும் கண்டாமணி (வல்வை ந.அனந்தராஜ்), ஸ்ரீ செல்வச் சந்நிதி வேலனே (சீ.விநாசித்தம்பி), முருக வழிபாட்டில் செல்வச் சந்நிதி ஓர் இலக்கிய நோக்கு (சாந்தனா நல்லலிங்கம்), சந்நிதி முருகனின் அருளும் ஆட்சியும் (துரைசாமி துரைரத்தினம்), ஆனிப் பொங்கலும் கடல் நீர் விளக்கும் (இந்திரா ஞான பண்டிதர்), செல்வச் சந்நிதி முறை (பொ.பூலோகசிங்கம்),* Selva chchannithy Temple (S.Kulasingam), *செல்வச் சந்நிதி முருகன் பேரில் அந்தாதி (சந்தனா நல்லலிங்க ஐயர்), சகல மார்க்க நிறைவான சரவணபவன் (காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள்), வேல், சேவல், மயில் (கி.வா.ஜகந்நாதன்), தொண்டைமானாறும் இடப்பெயர் ஆய்வும் (வல்வை ந.நகுலசிகாமணி), தொண்டமானும் தொண்டைமானாறும்*

(செ.நாகலிங்கம்), செல்வச் சந்நிதி முருகன் திருப்பள்ளியெழுச்சி (வல்வை ச.வைத்திலிங்கபிள்ளை), குன்று தோறாடும் குமரன் (சாவையம்பதி இ.சுப்பிரமணியம்), சகவாசம் (செல்லத்துரை சுவாமிகள்), திருச் சந்நிதித் தோத்திரமாலை (வல்வை ச.வைத்தியலிங்கம்பிள்ளை), செல்வச் சந்நிதி முருகன் 108 போற்றி மலர்கள் (திருமதி துரைரத்தினவதி இரவீந்திரன்), பன்னிரு கை வேலவன் சந்நிதியில் தனி வேல் அவன் (கனக மனோகரன்), முருகனருள் கிட்டும் முன்னே மணியோசை கேட்கும் பின்னே (சாமி அப்பாத்துரை), செல்வச் சந்நிதி சூழலில் சித்தர்களும் யோகியர்களும் (ஜீவகி பத்மராஜன்), பூக்காரர் (கைலைமணி வேல் சுவாமிநாதன்), செல்வச் சந்நிதிக் கந்தனின் கோயில் மணி ஓசை (சீ.விநாசித்தம்பி), சந்நிதியில் ஓங்கி நின்ற கோபுரமும், ஓங்கார மணி ஒலியும் (திருமதி அன்னலட்சுமி ஜெயபாபு), காந்த சக்தியுள்ள வேல் அவன் (வீ.ஆர். ராஜமோகன்), ஈழத்தின் தொன்மை வாய்ந்த இந்து மதத்தில் வேல் வழிபாடு (சி.க.சிற்றம்பலம்), செல்வச் சந்நிதி ஆலயம் (செ.வீரகுலசிங்கம்), ஓமானில் சந்நிதி முருகன் திருவிழா (க.இரவீந்திரன்), செல்வச் சந்நிதி முருகனின் அற்புதக் காட்சி (செல்வி பூர்ணிமா அழகேந்திரன்), குறிஞ்சிக் குமரன் (சரோஜினி நல்லந்துவன்), கந்த சஷ்டி கவசம், செல்வச் சந்நிதி முருகன் பாடல்கள் (சிவ. ஆறுமுகம்), முருகன் துதிப் பாடல்கள், வேலன் மணிக்குரல் வெல்லும் (காசி ஆனந்தன்), Bell Founders, Selvachchannithy Temple Bell Construction Donation From Devotees, செல்வச் சந்நிதி கோயில் மாமணி நிர்மாண சபை ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 27425).

## 14144

**நக்கீரம் 1995**. பாலச்சந்திரன் கௌதமன் (இதழாசிரியர்). கொழும்பு 12: சட்ட மாணவர் இந்து மகாசபை, இலங்கை சட்டக் கல்லூரி, 244, ஹல்ஸ்ரோப் வீதி, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(4), 180 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் இந்து மகா சபையின் 1997ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலர் இதுவாகும். பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன், நக்கீரர் வரலாற்றுச் சுருக்கம், Ancient Hindu Law (K.Kanageswaran), An Introduction to Modern Hindu Law (C.V.Wigneswaran), Hindu Jurisprudence and Society (Naresha Duraiswamy), Hindu Society and Law in Sri Lanka (K.Palakitnar), Laws relating to Hindu Temples and their Management (Kandiah Neelakandan), Hindu Law and the Customary Laws of the Tamil of Sri Lanka (H.W.Tambiah), Law, Religion and Society (S.Ananda Coomaraswamy & C.V.Wigneswaran), Hinduism and the Question of caste (Naresha Duraiswamy), The Customary Laws of the Tamils of Trincomalee (S.Pathmanathan), Basic Concepts of Buddhism & its Origin an Ovreview, Spiritual Significance of Gayatri (Indralogini Rajagopalan), தெய்வீக விலங்கே மனிதன் திருக்குறள் நோக்கு (மாணிக்க சிவபாதம்), இந்து சமயம்

என்றால் என்ன? (தயானச்சந்திரா செபநாயகம்), இந்து மதமும் அதன் அடிப்படைக் கொள்கைகளும் அவை புகட்டும் உண்மைகளும் - ஒரு பார்வை (மாணிக்கவாசகர் கணேசராஜா), சனாதன தர்மம் - ஓர் ஆய்வு (சுகிர்தா சோமசுந்தரம்), இந்து மதத்தின் பரந்த நோக்கு ஒரு குறிப்பு (சிவநேசன் மணிமேகலை), மனித வாழ்வில் சமயமும் சட்டமும் (பூர்ணிமா சோமசேகரன்), பிரார்த்தனை (நரேன் சிங்கம்), இந்து தர்மத்தில் நீதி (இரா.மணிவண்ணன்), தற்கால வாழ்வும் இந்து சமயமும் ஒரு நோக்கு (உருத்திராணி கதிர்காமத்தம்பி), அறத்துக்கு ஒரு அஸ்வமேதம் (இரா.யோகேஸ்வரி), எங்கே போகிறது எமது மதம்? (செல்லத்துரை பிருந்தாபன்), சமயம் வாழ்வின் பிற்பகுதிக்கு அவசியம் (இரா.செந்திற்குமரன்), சட்ட மாணவர் இந்து மகாசபையை இனிதே வழி நடத்தியவர்கள் ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 18773).

## 14145

**நல்லைக்குமரன் மலர் 1998**. நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1வது பதிப்பு, 2006. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

(12), 108 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 6ஆவது மலராக 1998 ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின் போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. பல்வேறு பிரமுகர்களின் வாழ்த்துக்களுடனும், ஆசிச்செய்திகளுடனும், தெய்வம் நமக்குத் துணை (இ.தெய்வேந்திரன்), சொல்லாய் முருகா நல்லைக்குமரா (நா.சு.சண்முகநாதபிள்ளை), திருமுருகன் திருநாமச் சிறப்புக் கண்ணிகள் (ச.தங்கமாமயிலோன்), நல்லைத் தேர்ப் புகழ் (அராலி பரமேஸ்வர சர்மா), நல்லூர் நாயகன் நாமாவளி (த.ஜெயசீலன்), நல்லூர்க் கந்தசுவாமியார் திருவூஞ்சற்பதிகம், முருகன் - அழகுத்தெய்வம் (வி.சிவசாமி), யாழ்ப்பாண முற்றவெளி: சில நினைவுக் குறிப்புகள் (க.குணராசா), யார்க்கெடுத்துரைப்பேன்? (ஆறு. திருமுருகன்), திருக்குமாரர் அவதாரம் (மட்டுவில் ஆ.நடராசா), சித்தாந்தச் சிவநெறி (செ.மதுசூதனன்), தேரின் தத்துவமும் நல்லூரான் தேரடி மகத்துவமும் (க.சொக்கலிங்கம்), ஆத்ம ஞானமளிக்கும் ஞானபண்டிதன் (கா.கணேசதாசன்), வேலே விளங்கு கையன் தாளே சரண் நமக்கு (வாசுகி சிவராமலிங்கம்), சிதம்பரம் (பொ.சிவப்பிரகாசம்), ஈழத்தின் தமிழர் மத - பண்பாட்டு விளக்கத்துக்கு (கார்த்திகேசு சிவத்தம்பி), பகவத்கீதை கூறும் தத்துவக் கருத்துக்கள் (சின்னத்தம்பி பத்மராஜா), முருக மந்திரம்-கந்தர் அநுபூதி (சிவ.மகாலிங்கம்), சுவாமி வினேகானந்தரின் சமூகவியற் சித்தாந்தம் (இ.ராஜாமகேந்திரசிங்கம்), ஆன்ம ஈடேற்றத்திற்கு அபரக் கிரிகைகளின் அவசியம் (கரணவாய் கை. திருஞானசம்பந்தக் குருக்கள்), நடராஜ வடிவமும் தத்துவமும்

(காரை செ.சுந்தரம்பிள்ளை), உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த கொடிக்கவி, நாதமணி கேட்கையிலே (நல்லைக் குகன்), உய்வினைத் தந்த தமிழினம் காப்பாய் நல்லூரானே (பொன். தன.சிவபாலன்), நல்லூரில் கோட்டை அமைத்த வேலவனே அருள் வள்ளலென்று ஓடி வந்தோம் (மீசாலையூர் கமலா), சிவப்பணி செய்த சிவதர்ம வள்ளலுக்கு (சைவசமய விவகாரக்குழு) ஆகிய படைப்பாக்கங்களுடனும் இம்மலர் வெளிவந்துள்ளது. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10662).

## 14146

**நல்லைக்குமரன் மலர் 1999.** நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1வது பதிப்பு, 1999. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

(6), 137 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 7ஆவது மலராக 1999 ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் நா.க.சண்முகநாதபிள்ளை, தங்கமாமயிலோன், த.ஜெயசீலன், எஸ்.இராஜேந்திரா, நல்லைக்குகன் ஆகியோரின் கவிதைகளும், அழிவைத் தடுக்கும் இறைசிந்தனை (இ.தெய்வேந்திரன்), பொது வரவேற்பும் பட்டமளிப்பும் (இரா.இரட்ணசிங்கம்), யாழ்ப்பாணத்துச் சைவக் கோயில் (அ.சண்முகதாஸ்), திருவாரூர் (பொ.சிவப்பிரகாசம்), நல்லூர் அன்றும் இன்றும் (வி.சிவசாமி), ஏல் ஓர் எம்பாவாய் (மனோன்மணி சண்முகதாஸ்), பண்பாட்டுக் கண்ணோட்டத்தில் நல்லூர்கள் (பரராஜசிங்கம் கணேசலிங்கம்), பழையரிற் பழையனாம் பரமன் சிறுவன் (க.சொக்கன்), சைவாலய வழிபாட்டு மரபில் சிவாச்சாரியார் மகத்துவம் நிலைபெற (கலைவாணி இராமநாதன்), வள்ளி மணாளன் (சற்சொரூபவதி), திருமுறைகளில் கிரியைகள் பற்றிய சில சிந்தனைகள் ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா), பேதமில்லா இனிய நெறியே சைவம் (கா.கணேசதாசன்), மேன்மைகொள் சைவநீதி (செ.மதுசூதனன்), முருக வழிபாடும் அருணகிரிநாதரும் (விக்னேஸ்வரி சிவசம்பு), சண்டேசுவரர் வழிபாடு (ப.கோபாலகிருஷ்ண ஐயர்), சிறப்புமிகு சைவசித்தாந்தம் (மட்டுவில் ஆ.நடராசா), சமய வாழ்வு (சுகந்தினி முரளிதரன்), மனிதப் பிறவியின் மாண்பு (மு.திருநாவுக்கரசு), வல்வினையின் வேர் தடிய (யோகேஸ்வரி சிவப்பிரகாசம்), முருகன் பெருமை (காரை சிவராஜசர்மா), இளைஞர் வாழும் வழி (தெல்லியூர் செ.நடராஜா), நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் (மாலினி வேதநாதன்), நல்லூர்க் கந்தன் கலிவெண்பா, நல்லூர் முருகன் திருப்புகழ், கற்றதனாலாய பயன் (இ.மா.சிவசுப்பிரமணியம்), எட்டுக்குடியேசல் ஆகிய படைப்பாக்கங்களும் இச்சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் D 1432).

### 14147

**நல்லைக்குமரன் மலர் 2002.** நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1வது பதிப்பு, 2002. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர்).

x, 104 + (22) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 10ஆவது மலராக 2002 ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. வாழ்த்துச் செய்திகள் மற்றும் ஆசிச்செய்திகளுடன் மேலதிகமாக நல்லைக்கந்தன் தேர் உலாப்பாடல் (நா.க.சண்முகநாதபிள்ளை), திருநல்லைக் கந்தன் தோத்திரம் (சீ.வினாசித்தம்பி), பன்னிரு திருமுறைச் சிந்தனைக் கண்ணிகள் (தங்கமாமயிலோன்), வேறு துணையற்ற விருத்தம் (த.ஜெயசீலன்), இந்த மண்ணில் வாழ அருள் நல்லூரானே (வே.த.இரத்தினசிங்கம்), நல்லைக்குமரன் (பூ.புலேந்திரராஜா), ஒன்பதொடொன்று (கனகசபாபதி நாகேஸ்வரன்), பாடும் பணியே பணியா அருள்வாய் (சீ.விநாசித்தம்பி), திருக்கோயில்கள் (சி.க.சிற்றம்பலம்), பேறுகளைத் தந்திடுவான் பேரின்பம் பெற்றிடுவீர் (வ.யோகானந்தசிவம்), திருமுறை ஓதலில் பெரியபுராணம் (கலைவாணி இராமநாதன்), விளக்கிட்டார் பேறு (இரா.கோபாலகிருஷ்ணன்), நல்லைக் குமரன் பாமாலை (இராசையா குகதாசன்), தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்கள்: ஒரு நோக்கு (சுமதி கனகரட்ணம்), பவவினையது தீரருள் தாராய் (இராசையா குகதாசன்), பழந்தமிழ் நூல்களில் முருக வழிபாட்டுச் சிறப்பு (நீர்வை மணி), குமாராய நம (கோ.சி.வேலாயுதன்), பிறவா முருகன் (க.சிவசங்கரநாதன்), பாடும் பணியே பணி (செ.கந்தசத்தியதாசன்), சிவமணப்பொடி பரப்பிய திருப்புகலி கவுணியப் புலவன் (நயினை ஆ.தியாகராசா), சிலப்பதிகாரத்தில் முருகன் (வி.சிவசாமி), திருவாலங்காடு (பொ.சிவப்பிரகாசம்), பெரியபுராணத்தில் முருகவேள் (சிவசண்முகவடிவேல்), மந்திரங்களின் மகிமை (காரை கு. சிவராஜசர்மா), முருகனும் மலையும் (அ.சண்முகதாஸ்), ஓங்காரம் (நாச்சியார் செல்வநாயகம்), தூயவாழ்வும் அமைதியும்தர குருநாதா அருள்தருவாய் (தங்கமுகுந்தன்) ஆகிய படைப்பாக்கங்களும் இம்மலரை அழகுபடுத்தியுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12108).

### 14148

**நல்லைக்குமரன் மலர் 2005.** நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1வது பதிப்பு, 2005. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

xii, 160 + (54) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

*நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 13ஆவது மலராக 2005 ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் அருட்கவி.சீ.விநாசித்தம்பி, விகடகவி.மு.திருநாவுக்கரசு, சீனாச்சனா, பொன். தெய்வேந்திரன், த.ஜெயசீலன், சி.இராஜேந்திரா, நாக.சண்முகநாதபிள்ளை, தாட்சாயணி, வ.யோகானந்தசிவம், சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் ஆகியோரின் இனிய தமிழ்க் கவிதைகளும், இந்து சமயத்தில் முருக வழிபாடு (சிவ. மகாலிங்கம்), அப்பர் அடிச்சுவட்டைப் பின்பற்றின் ஈழத்தமிழர் ஈடேற்றம் உறுதி (மா.க. ஈழவேந்தன்), உளமாரப் பணிந்தோமே வளமான வாழ்வு தாராய் (இராசையா ஸ்ரீதரன்), ஸ்ரீ முருக விரதங்கள் (கா.கணேசநாதன்), அருணகிரிநாதர் போற்றும் அழகன் (க.அருமைநாயகம்), ஆலய வழிபாடும் சுயநலமற்ற சமய சமூகத் தொண்டுகளும் (சி.சி.வரதராசா), தமிழ் மொழியில் வழிபாடு (சி.பொன்னம்பலவாணர்), உலகு (இராம ஜெயபாலன்), அறம் வெல்லும் (கு.சிவநந்தினி), கும்பியடிப்போம் (கிருஸ்ணசாமி துர்க்காம்பிகை), மாநகரசபையின் சமயப் பணியில் சொக்கனின் பங்கு (இ.இரத்தினசிங்கம்), யாழ்ப்பாணத்து நல்லூர் வேலின் சிறப்பு (வை.சி.சிவசுப்பிரமணியம்), மன்று(ள்)ளார் அடியார் (வ.கோவிந்தபிள்ளை), ஆண்டவனைப் பற்றினால் ஆனந்தமே (செ.பரமநாதன்), நால்வர் காட்டிய வழி (து.இராஜன்), அழகனைக் காண நாலாயிரம் கண், பழனி மலை முதல் சுவாமி மலை வரை (எஸ்.நடராசா), ஆலயங்களில் அமைதி பேணுவோம் (இ.இரத்தினசிங்கம்), திருநெல்வேலி (பொ.சிவப்பிரகாசம்), நான் யார்? (யோகர் சுவாமி), பண்டைத் தமிழரிடையே நிலவிய நீர் வழிபாட்டு மரபுகள் (ஆர்.எஸ்.சந்திரசேகர்), பதினெண் மேற்கணக்கு இலக்கியங்களில் முருக வழிபாடு (ச.முகுந்தன்), நல்லைக் குமரன் மலரின் இவ்வாண்டு கௌரவம் பெறும் மாவையாதீனகர்த்தா மஹாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள், யாழ் மாநகர ஆலயங்கள் (இ.இரத்தினசிங்கம்), நல்லூர் இராசதானியின் வரலாற்று ஆலயங்கள் (கலைவாணி இராமநாதன்), புலநரிச் சிவன் கோவில்கள் (வெள்ளவத்தை ஸ்ரீ குல.சபாநாதன்), நல்லூர் இராசதானி (க.குணராசா), அருள் வேண்டினோம் (இராசையா ஸ்ரீதரன்), ஈழத்துத் திருப்புகழ் - ஒரு குறிப்புரை (வி.சிவசாமி), சுப்பிரமணிய பராக்கிரமம் (மனோன்மணி சண்முகதாஸ்), முருக வழிபாட்டில் மரபுகளும் சம்பிரதாயங்களும் (மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்), நல்லூர் முருகன் அலங்காரச் சித்திரத்தேர் - அமைப்பும் வரலாறும் (வேலுப்பிள்ளை அம்பிகைபாகன்), முருகன் திருவருளை நிலைநாட்டிக் கந்தசஷ்டி நோற்கும் யாழ்ப்பாணத்துப் பெண்களின் பக்தி மேம்பாடு (கனகசபாபதி நாகேஸ்வரன்), இந்திய நாட்டுத் தமிழகக் கொடைக் கானலில் சேர் பொன் இராமநாதன் அமைத்த குறிஞ்சி ஆண்டவர் கோயில் (ப.கணேசலிங்கம்), நல்லூர்க் கந்தசுவாமி உற்சவங்கள் (வை.ஜெகதீஸ்வர சர்மா) ஆகிய படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13313).*

### 14149

**நல்லைக்குமரன் மலர் 2006.** நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1வது பதிப்பு, 2006. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

x, 136 + (48) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 14ஆவது மலராக 2006 ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் நல்லூரக் கந்தன் காட்சியும் மாட்சியும் (நா.க.சண்முகநாதபிள்ளை), கந்தன் போற்றி மாலை (வ.யோகனந்தசிவம்), இனியாவது அருள்வாய் (இரா.ஜெயபாலன்), இன்றைய இளைஞர் நாளைய தலைவர் இவ் இளைஞருக்கு ஒரு செய்தி (மு.திருநாவுக்கரசு), இளகாதோ இதயம் ? (த.ஜெயசீலன்), நல்லைக்கந்தன் கருணை (ஆறுமுகம் பேரின்பநாதன்), நல்லைக் கந்தன் வடிவேலவா (ச.தங்கமயிலோன்), ஏம வைகல் பெறுக யாம் (மனோன்மணி சண்முகதாஸ்), இந்து சமயத்தில் குரு தத்துவம் (சிவ. மகாலிங்கம்), கருப்பொருளும் தெய்வமும் (அ.சண்முகதாஸ்), அருள் தரும் முருகனே (கிருஸ்ணசாமி ஜமுனாதேவி), யாம் இரப்பவை (வி .சிவசாமி), மென்மை கொள் சைவநீதி (கோ.வேலாயுதம்), வெற்றிவேல் முருகா (ம.கணேசலிங்கம்), இறைவனையும் ஆன்மாவையும் இணைக்கும் அற்புதமான கலைவடிவம் தேர் (ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா), காஞ்சி மாவடி வைகுஞ் செவ்வேள் (பொ.சிவப்பிரகாசம்), பற்றுக்கள் நீக்கினால் காண்பது தண்டபாணி வடிவமே (செ.பரமநாதன்), முருக வழிபாடு (ஆ.சபாரத்தினம்), நல்லைக் குமரா எழுந்தே வா (மீசாலையூர் கமலா), யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமிகள் (க.குணராசா), மேற்கு நாடுகளில் சைவத் தமிழ் கலாசாரம் (கலைவாணி இராமநாதன்), குறிஞ்சிக் குமரன் (அம்பிகை நடராஜா), இந்துப் பண்பாடு மரபில் அன்னதானம் (ப.கணேசலிங்கம்), கந்தா சரணம் (கிருஸ்ணசாமி கிரிசாம்பாள்), அறிவியல் நோக்கில் இந்துமதம் (விக்னேஸ்வரி பவநேசன்), திருக்கார்த்திகை தீப மகிமை (சிவ. வை. நித்தியானந்தசர்மா), ஆதிரையில் ஆரம்பமான தைந் நீராடல் (மட்டுவில் ஆ. நடராசா), சாக்தத்தில் ஸ்ரீ சக்கரம் (நா.சிவசங்கரசர்மா), குமரவேள் திருமுன் உற்றால் தூயவர் ஆதல் திண்ணம் (சி.அப்புத்துரை), வரவேண்டும் முருகா (கிருஸ்ணசாமி சுவர்ணா), சிவலிங்க வடிவும் வழிபாடும் (வை.சி.சிவசுப்பிரமணியம்), யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் சோதிடம் (மா.வேதநாதன்), தமிழர்க்கு வாழ்வு தரும் வேல் (கனகசபாபதி நாகேஸ்வரன்), திருமந்திரம் கூறும் தத்துவக் கருத்துக்கள் (துரைராஜசிங்கம் இராஜன்), நேர்த்தியும் யாத்திரையும் - நல்லூர் (க.கனகராசா), ஆறுபடை வீடு கொண்ட முருகப்பெருமான் (கா.கணேசதாசன்), மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வரலாறுக் குறிப்பு (சு.து.சண்முகநாதக்குருக்கள்), செல்வச்சந்நிதி முருகன் ஆலய வரலாறும் அதன் மகிமையும் (கதிர்காமு நாகேந்திரராசா), தொல்லைவினை தீர்க்கும் நல்லைக் கந்தன் (இராசையா

ஸ்ரீதரன்), முருகாவெனு நாமங்கள் (அ.சுப்பிரமணியம்), கோபப் பிரசாதம் (யோகேஸ்வரி சிவப்பிரகாசம்), பொருளுணர்ந்து சொல்லுதல் (தி.பொன்னம்பல வாணர்), பெரியபுராணம் - அடியார் புராணமா? (வ.கோவிந்தபிள்ளை), எழுதிச் செல்லும் விதியின் கையில் (எஸ்.நடராஜா), ஈழத்தில் சைவ ஆலயங்களும், அறபோதனைகளும் (ஆறு. திருமுருகன்), நல்லைக்குமரன் மலர் 2006 இல் யாழ் விருது பெறும் எமது முன்னாள் தலைவர் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் அவர்கள் (இ.இரத்தினசிங்கம்), ஓராண்டு நிறைவில் (இ.இரத்தினசிங்கம்), நல்லைக்கந்தா (து.சோமசுந்தரம்) ஆகிய படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14012).

### 14150

**நல்லைக்குமரன் மலர் 2007**. நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக் குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1வது பதிப்பு, 2007. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

viii, 154 + (36) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 15ஆவது மலராக 2007 ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் நல்லூரெம் பெருமானை நான் கண்டவாறு (ச.தங்கமாமயிலோன்), உலகிற்கு ஓர் செய்தி (மு.திருநாவுக்கரசு), முறையீடு (த.ஜெயசீலன்), காதலியுங்கள் "நல்லைக்குமரனை" காலமெல்லாம் காத்தே அருளுவான் (வ. யோகானந்தசிவம்), ஆறுமுகசுவாமி அருளிட வா (மீசாலையூர் கமலா), பரமபதம் அருளிடுவாய் (இராசையா ஸ்ரீதரன்), நல்லைக்குமரன் கும்மி (க.முத்துவேலு), நல்லைப் பதியான் (அல்வாயூர் சி.சிவநேசன்), இரதமூர்ந்து வருக (கு.கமலாம்பிகை), உமைஅரனின் பாலகனே (அ.கி.ஏரம்பமூர்த்தி), காலம் வந்துவிட்டது (ஐ.சண்முகலிங்கம்), நல்லூரான் நல்லவழி காட்டிடுவார் (சு.அருமைநாயகம்), ஏழை எனக்கருள்வாய் (க.வள்ளியம்மை), சைவம் ஒரு வாழ்வியல் (மனோன்மணி சண்முகதாஸ்), திருச்செந்தூர் முருகன் தோத்திரம் (வி. சிவசாமி), கார்த்திகை நாதா வா முருகா (மீசாலையூர் கமலா), கந்தர் அலங்காரம் (சிவ.மகாலிங்கம்), வருவாய் வருவாய் முருகா (ம.புவனா), ஈழத்தில் செல்வாக்குற்ற மயூரகிரிப் புராணம் (ஈச்வரநாதபிள்ளை குமரன்), விழுமியப் பண்புகளை வளர்த்தெடுப்பதில் இந்து ஆலயங்களின் பங்களிப்பு (எஸ்.கே. யோகநாதன்), பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோற்றம்பெற்ற இந்து சமய நிறுவனங்கள் (சாந்தினி அருளானந்தம்), தனிப்பாடல் காட்டும் முருகன் (செல்வஅம்பிகை நடராஜா), பாரதியின் முருகன் பாடல்கள் (அ.சண்முகதாஸ்), கண்கண்ட தெய்வமே முருகா நல்லூரான் திருவடியே தஞ்சம் (சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்), நல்லையில் அமர்ந்திருந்து ஞானநடம் புரிபவனே (இராசையா ஸ்ரீதரன்), கந்தபுராணம் காட்டும் முருகன் (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), ஆலயங்களும் மகோற்சவங்களும் (சிவ.வை.

நித்தியானந்தசர்மா), உலக நாடுகளில் பாம்பு வழிபாடு (ப.கணேசலிங்கம்), ஐந்தும் அரனும் (ப.சிவானந்தசர்மா), முக்திக்கு வழிகாட்டும் முத்துக்குமரன் (சு.து.ஷண்முகநாதக் குருக்கள்), பெரிய(வன்) புராணம் (வ.கோவிந்தபிள்ளை), தமிழ் கடவுள் முருகனும் தெய்வத் தமிழும் (வை.சி.சிவசுப்பிரமணியம்), நவக்கிரக வழிபாடு (முருகேசு முரளிதரன்), சரவணபவ என்னும் திருமந்திரந்தனை சதா ஜெபியென் நாவே (கனகசபாபதி நாகேஸ்வரன்), மனமே என்னை மீட்டுவிடு (மலர் சின்னையா), பந்தவினையறுத்தே பரமபதம் தந்திருவாய் (இராசையா ஸ்ரீதரன்), அருள்சுரக்கும் நல்லைத் திருவூர் (மூ.சிவலிங்கம்), அபரக்கிரியை சில சிந்தனைகள் (ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா), பிரார்த்தனை செய்வோம் (யோகேஸ்வரி சிவப்பிரகாசம்), பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் ஒன்றே (யோகேஸ்வரன் அஜித்), கோயிலும் இசைக்கலையும் (தயாளினி நவநீதகிருஷ்ணன்), நல்லூரானே (சி.என்.துரைராஜா), சமகால செல்நெறியில் அருகிவரும் மனித விழுமியங்கள் (சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்), நடனம் ஆடினார் (பொ.சிவப்பிரகாசம்), சமய வாழ்விற்கும் சூழலுக்குமிடையிலான தொடர்பு விருத்தி பற்றிய ஒரு நிபந்தனை (கலைவாணி இராமநாதன்), சிவயோக சுவாமிகளின் நம்பிக்கை நட்சத்திரம் (த.ந.பஞ்சாட்சரம்), பதினாறும் பெற்று பல்லாண்டு வாழ்க (ஆறு. திருமுருகன்), திருமுருகப் பெருமானின் திரு அவதாரத் தோற்றங்கள் (கணேசன் சைவசிகாமணி), 2007 இல் யாழ் விருது பெறும் உயர்திரு வே.பொ. பாலசிங்கம் அவர்கள் (இ. இரத்தினசிங்கம்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 15052).

### 14151

**நல்லைக்குமரன் மலர் 2008**. நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1வது பதிப்பு, 2008. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

204 + (38) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 16ஆவது மலராக 2008 ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் ச.தங்கமாமயிலோன், கவிஞர் வ.யோகானந்தசிவம், செ.பரமநாதன், த.ஜெயசீலன், கோ.சி.வேலாயுதம், வி.சிவசாமி ஆகியோரின் பாமாலைகளும், கிரிசாம்பாள் கிருஸ்ணசாமி, கி.துர்க்காம்பிகை, ச.கனகரெத்தினம், த.தயாபரன், இராசையா ஸ்ரீதரன், வ.சின்னப்பா, வதிரியூர் கண.எதிர்வீரசிங்கம், காரை.எம்.பி.அருளானந்தன், கு.துரைராஜன், மு.க.சிவானந்தம், சந்திரவதனி தவராஜா, பா.பாலச்சந்திரன், குளப்பிட்டி க.அருமைநாயகம், அல்வாயூர்.சி.சிவநேசன், வை.க.சிற்றம்பலம், சிவசிதம்பரம் திருநாவுக்கரசு ஆகியோரின் கவிதைகளும் சிவகுமாரர் சிவபெருமானது பிரதி விம்பங்களா? (மட்டுவில் ஆ.நடராசா), முருக உற்பவம்

பற்றி ஓர் ஆய்வு (கே.எஸ்.ஆனந்தன்), இழையணி சிறப்பிற் பழையோள் குழவி (செல்வஅம்பிகை நடராஜா), குகையில் பிரார்த்தனை ஜனித்தது திருமுருகாற்றுப்படை (க.ஈஸ்வரன்), ஐந்தவித்தான் ஆற்றல் (யோகேஸ்வரன் அஜித்), பரம்பொருளும் பிரபஞ்ச இயக்கமும் ஊழிக்கால அழிவும் (கணேசன் சைவசிகாமணி), சைவ ஆலயங்களின் அமைப்பு (ஏ.எஸ்.ஞானம்), சைவாலய பரிபாலனங்கள் - சில சிந்தனைகள் (கா.சிவபாலன்), நூற்பாத சைவம் (ஆ.சபாரத்தினம்), சண்டேஸ்வரர் போலச் சண்டேஸ்வரியும் உண்டா? சிவாகமங்களும் பெரியபுராணமும் கூறும் விளக்கம் (ப.சிவானந்தசர்மா), மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம் (மனோன்மணி சண்முகதாஸ்), ஆண்டாள் பக்தி அனுபவம் (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), வைதிக இலக்கியங்கள் புலப்படுத்துகின்ற சில விழுமியச் சிந்தனைகள் (ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்த சர்மா), தெய்வ வாசகமாகிய திருவாசகம் (சிவ.மகாலிங்கம்), சைவசமயத்தின் விஞ்ஞானப் பார்வை (பா.பிரசாந்தனன்), திருநெறிய தமிழ் பாராயண மரபு (சி.கிருஷ்ணமூர்த்தி), ஆலயங்கள் அறப்பணிகளை ஆற்றுமா? (இ.இரத்தினசிங்கம்), இறைவனைக் காட்டலாமா? காணலாமா? (மலர் சின்னையா), திருச்செந்தூர்ப் புராணமும் வேல் வழிபாடும் (வ.கோவிந்தபிள்ளை), ஸ்கந்தோற்சவ விளக்கங்கள் குமார தந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட பொது நோக்கு (மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசாநாத சர்மா), கொடியேற்ற விழாவின் சைவசித்தாந்தப் பொருண்மை (பொ.சந்திரசேகரம்), சிவபாதசுந்தரனார் நோக்கில் ஆணவம் (ஹேமமாலினி கணபதிப்பிள்ளை), நல்லூர் இராசதானி காலத்தில் "கந்தன், ஆறுமுகன்" பெயர்களில் வெளியிட்ட நாணயங்கள் (ப.புஷ்பரட்ணம்), முருக வழிபாடும் யாழ்ப்பாண சித்த மருத்துவமும் பற்றிய இலக்கிய ஆய்வு (அ.ஸ்ரீதரன்), பக்தி இயக்கமும் சமுதாய மறுமலர்ச்சியும் (கலைவாணி இராமநாதன்), இந்து சமயமும் மனிதநேயமும் (விக்னேஸ்வரி பவநேசன்), பெரியபுராணம் கூறும் தமிழர் வாழ்வியல் நெறி (வை.சி.சிவசுப்பிர மணியம்), பஞ்ச கன்னிகைகள்: ஓர் பார்வை (மீனலோசினி பாரதி), இராமேஸ்வரம் (பொ.சிவப்பிரகாசம்), 2008 இல் "யாழ் விருது" பெறும் வைத்தியகலாநிதி திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி (சைவசமய விவகாரக் குழு), நாவலர் கலைத் தொண்டின் காவலன் இந்துபோட் இராசரத்தினம் (க.பேரம்பலம்), சிவத்தமிழ் அன்னையின் திருவடிகள் தொழுகின்றோம் (ந.விஜயசுந்தரம்) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 15624).

## 14152

**நல்லைக்குமரன் மலர் 2009.** நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1வது பதிப்பு, 2009. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

xii, 172 + (48) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 17ஆவது மலராக 2009 நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் தினமும் குமரன் திருநாமங்கள் செப்பிடுவோர்க்குச் சேரும் புண்ணியம் (வ.யோகானந்தசிவம்), தேடுமெம்முன் வந்து சிரி (த.ஜெயசீலன்), திருவருளே குருவடிவாம் திறம் (ஆனந்தி ஜெயரட்ணம்), பள்ளி எழுந்தருளாயே (மலர் சின்னையா), கூறுமடியார் குறை தீர்க்கும் குமரன் (இராசையா ஸ்ரீதரன்), உளமறிந்து இரங்காதும் இருப்பதேனோ (வதிரி கண. எதிர்வீரசிங்கம்), நல்லைச் சண்முகமாலையும் நல்லைத் திருவருக்கமாலையும் (கனகசபாபதி நாகேஸ்வரன்), கந்தன் திருப்பாத மகிமை (சண்முகயோகினி ரவீந்திரன்), திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாடு (ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா), சிலப்பதிகாரத்தில் முருக வழிபாடு (ஈஸ்வரநாதபிள்ளை குமரன்), கௌமார வழிபாட்டு மரபில் முருகக் கடவுளின் வடிவங்களும், நாமங்களும் (மகேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா), முத்தமிழையும் சுவைத்த ஞானபண்டிதன் (மூ.சிவலிங்கம்), சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி (வை.சி.சிவசுப்பிரமணியம்), திருப்புகழ் காட்டும் பெண்மை (மனோன்மணி சண்முகதாஸ்), சேயெனைக் காப்பாய் முருகா (சந்திரவதனி தவராசா), மூவர் தமிழ் (சிவ.மகாலிங்கம்), புறநானூறு கூறும் வைதிக சைவம் (மட்டுவில் ஆ.நடராசா), வைதிக தத்துவ நோக்கில் மனம் (க.திலகவதி), இராமாயணம் காட்டும் சிவவழிபாடு (ந.ஜெயபாரதி), வேலனிடம் வேண்டிடுவோம் (குளப்பிட்டி க.அருமைநாயகம்), இந்து திருமணச் சடங்குகள் வெளிப்படுத்தும் வாழ்வியற் பண்பாடு (கலைவாணி இராமநாதன்), இடர்கள் நீக்கும் கந்தன் வேல் (மீசாலையூர் கமலா), திருவாதவூரர் புராணம் - ஒரு சிறு ஆய்வு (வ.கோவிந்தபிள்ளை), தேரேறி வருகின்றான் திருக்குமரன் (கீழ்கரவை கி.குலசேகரன்), திருவருட்பயன்: பண்டிதமணி உரைச் சுருக்கம் (ச.தங்கமாமயிலோன்), தேர் - ஒரு வரலாற்று நோக்கு (வி.சிவசாமி), அஞ்சேல் என்றபயம் தாராய் (இந்திரா திருநீலகண்டன்), இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளை உலக அரங்கில் பரப்பிய ஈழத்து இந்து சமயப் பெரியார்கள் (ப.கணேசலிங்கம்), சிங்கார வேலா வருவாய் (கிருஷ்ணசாமி கிரிசாம்பாள்), தேரடியில் தேர்ந்த சித்தர்கள் (மயில்வாகனம் சிவயோகசுந்தரம்), வடிவும் வண்ணமும் (செல்வஅம்பிகை நடராஜா), தாயுமானவர் (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), விழுதெனத் தாங்குவாய் (அல்வாயூர் சி.சிவநேசன்), ஆலயந் தொழுவது சாலவும் நன்று பூசனை புரிவது போற்றுதற்குரியது (செ.மதுசூதனன்), மருத்துவத்தில் முருகன் - இலக்கிய ஆய்வு (க.ஸ்ரீதரன்), இசைக் கலையும் இந்துசமயக் கோயில்களும் (பா.பிரசாந்தனன்), தமிழகத்தில் உள்ள இந்துக் கோயில்களும் சிற்பக்கலை வளர்ச்சியும் (செ.பரமநாதன்), ஆன்மீக வாழ்க்கை - சில கருத்துக்கள் (க. சிவலிங்கம்), தர்மத்தை நிலைநாட்டும் அவதார புருஷர்கள் (கணேசன் சைவசிகாமணி), காவிரி நாயகன் (சிவ.வை.நித்தியானந்த சர்மா), செழுமை மிகுந்த பழமைகளுக்கு மீண்டும் புத்துயிரூட்டுவோம் (இ.இரத்தினசிங்கம்), பொருள் போகுனிடம் புண்ணிதமே (து.சோமசுந்தரம்), 2009 இல் யாழ் விருதினைப் பெறும் யாழ் மாவட்ட அதிபர் உயர்திரு. கே.கணேஷ் அவர்கள் (இ.இரத்தினசிங்கம்)

ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16152).

## 14153

**நல்லைக்குமரன் மலர் 2011.** நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1வது பதிப்பு, 2011. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

x, 176 + (56) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x18.5 சமீ.

நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 19ஆவது மலராக 2011 ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் நல்லையம்பதியானைப் பணிவோம் (ச.தங்கமாமயிலோன்), வேலை வணங்குவதே வேலை (ச.வாசுகி), நல்லைக்குமரன் நற்றமிழ் வெண்பாமாலை (வ.சின்னப் நின்முன்னே நீறிற்றென் நான் (த.ஜெயசீலன்), கந்தனுக்கு உகந்த ஆறு (வ.யோகானந்தசிவம்), நல்லைநகர் பதியாளும் நாயகனே (வதிரி கண. எதிர்வீரசிங்கம்), நல்லைக் குமரன் பாமாலை (இராசையா ஸ்ரீதரன்), நல்லூரும் மத்தியகால திராவிடர் மரபுகளும் (செல்லையா கிருஷ்ணராசா), நல்லைக்குமரன் மலர்வாழி (சு.குகதேவன்), கோட்டை அகழ்வாய்வில் கிடைத்த ஆலய அழிபாடுகள் நல்லூர்க் கந்தனுக்கு உரியதா? (ப.புஷ்பரட்ணம்), யாழ்ப்பாண மாநகரசபைப் பிரதேசத்து சைவக் கோயில்கள் (ப.கணேசலிங்கம்), உன்னருளைத் தாரும் ஐயா (இராம. ஜெயபாலன்), சிற்றடி (அ.சண்முகதாஸ்), அலங்காரக் கந்தனென அமர்ந்தாயே நல்லையிலே (நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்), வையைக் கரையில் ஒரு வாழ்வியல் (மனோன்மணி சண்முகதாஸ்), சங்க இலக்கியங்களில் காணப்படும் சமய நம்பிக்கைகள்: நற்றிணையை அடிப்படையாகக் கொண்டவை (கலைவாணி இராமநாதன்), திருமுறைகளில் வாழ்வியல் (சிவ.மகாலிங்கம்), கார்த்திகைக் குமரா வருவாய் போற்றி (மீசாலையூர் கமலா), கந்தபுராணம் - ஒரு நீதிநூற் கருவூலம் (2) (வ.கோவிந்தபிள்ளை), பெரியபுராணம் தந்த சேக்கிழார் சுவாமிகள் (பொ.சிவப்பிரகாசம்), இறைவன் ஒரு மாபெரும் சக்தி (து.ஷ இரத்தின சபாபதிக் குருக்கள்), பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை (வி. சிவசாமி), அஞ்ஞான இருளகற்றும் மெய்ஞ்ஞான வேல் (நா. சிவசங்கர்சர்மா), கோபுரதர்சனம்: ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா, இறைபணி நிற்றலும் பக்தி வைராக்கியமும் (வை.சி.சிவசுப்பிரமணியம்), பன்னிரண்டாம் திருமுறையில் சில கருத்துக்கள் (தி.பொன்னம்பவாணர்), சுப்பிரமண்ய ஆலய நிர்மாண விதி குமாரதந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு. (பாலகைலாசநாத சர்மா), கதிரவனும் தெய்வத் தமிழும் (இ. இரத்தினசிங்கம்), கோயிலும் நடனக்கலையும் (தயாளினி செந்தில்நாதன்), ஜெயதேவரின் கீதகோவிந்தத்தில் ராதா - மாதவ பண்பாடு (ஸ்ரீகலா ஜெகநாதன்), கதிர்காம மகிமையைக் கனவிலே காட்டினார் (மதிவாணர் செ.மதுசூதனன்), நல்லூரில் வாழ்ந்த ஞானியர் இருவர் (சின்னத்தம்பி பத்மராசா),

*யாழ்ப்பாணத்து ஆலயங்கள் ஆற்றக்கூடிய பணிகள் சோழர்கால ஆலயங்களை அடிப்படையாகக் கொண்ட பார்வை (சாந்தினி அருளானந்தம்), இந்து சமயத்தில் மனிதாபிமானப் பண்புகள் (பா.பிரசாந்தனன்), ஆண்டவனைக் காண ஆசைப்படுமனமே (சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்), அன்னை பராசக்தி அவதாரங்களில் லக்ஷ்மி-அலக்ஷ்மி (கணேசன் சைவசிகாமணி), நிம்மதி தருவாய் நம்மவர்க்கு (குளம்பிட்டி க.அருமைநாயகம்), ஈழத்துச் சித்தர் மரபில் இணுவில் பெரிய சந்நியாசியார் (இணுவையூர் மூ.சிவலிங்கம்), 2011 இல் யாழ். விருதினைப் பெறும் புற்றுநோயியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ந. ஜெயகுமாரன் அவர்கள் (இ. இரத்தினசிங்கம்), தேருதல் அளிப்பாய் முருகா (சு.நடனேஸ்வரி) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 011617).*

## 14154

**நல்லைக்குமரன் மலர் 2017.** *நல்லையா விஜயசுந்தரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சைவசமய விவகாரக்குழு, யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், 1வது பதிப்பு, 2017. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2*B*, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).*

xiv, *264 + (40) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26*x*18 சமீ.*

*நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் வெளியிடப்படும் மலர். 25ஆவது மலராக 2017 ஆம் ஆண்டு நல்லூர்த் திருவிழாவின்போது இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. ஆசிச்செய்திகளுடன் நல்லைநகர்க் கந்தர் பேரிற் பாடிய திருவூஞ்சல், நல்லூர்க் கந்தர் கலிவெண்பா, திருநல்லூர்க் குயிற்பத்து (சங்கரத்தையூர் சி.சபாநாதன்), நல்லூர் முருகன் நற்றமிழ்க் கீர்த்தனை (இராசையா ஸ்ரீதரன்), தீரம்கொண்டு வேலேந்தி வா (கை.பேரின்பநாயகம்), ஞானபலம் (த.ஜெயசீலன்), நல்லைக்கந்த சந்தப்பா (நவ.பாலகோபால்), நல்லைக் குருபரனை நம்பினேன் சரண் புகுந்தேன் (சின்னையா சிவபாலன்), வேலவனே குறை களைவாய் (கி.குலசேகரன்), தேரேறி நல்லருள் தருவாய் நல்லூரா (நா.கீதாகிருஷ்ணன்), ஓறாறு முகனே (கே.ஆர். திருத்துவராஜா), பாதத்தின் நிழல் தா (சிவ.சிவநேசன்), சுபீட்சம் நிலைத்திட வைப்பவனே (கண.கிருஷ்ணராஜன்), நல்லை நகரில் கோட்டை அமைத்த கந்தா உனக்கு வாடாத மாலைகள் (மீசாலையூர் கமலா), எமையாட்கொள்வாயே (கண. எதிர்வீரசிங்கம்), வெள்ளிவிழா மலருக்குத் தருகின்றோம் (க.அருமைநாயகம்), நல்லைநகர் வாழும் குமரேசா (க.சின்னராஜன்), வினைப்பலன்கள் தரும் அரன் தரணியொடு தராபதி போல (இ.ஜெயந்திரன்), அல்லல் போக்கி அடியவர்க்கு அருள்புரியும் ஆறுமுகப் பெருமான் (நீர்வை மணி), வேலவனும் வேலாயுதங்களும் பொதுப் பார்வை (ம.பாலகைலாசநாத சர்மா), குருவாய் வருவாய் அருள்வாய் குகனே (வை.பாலகிருஷ்ணன்), ஓம் சரவணபவ முருகா (இ.சரவணபவன்), கதிர்காம முருகன்: தொன்மையும் அடையாளமும் (நா.சண்முகலிங்கன்), யாழ்ப்பாணாயன் பட்டினமருவிய திருமால் மருகோன், திருமுருகனின் சாந்நித்தியமும் சந்நிதி முறையும் (தி.மனோஷன்), கந்தபுராணம் கூறும் முருகனது*

மகிமைகள் (ஆ.சசிநாத்), பெரியபுராணம் காட்டும் வாழ்வியல் (கே.தவசீலன்), கந்தரந்தாதி (அ.சிற்சபேசலிங்கம்), தொல்கதிக்கு வழிகாட்டும் கந்தர் அநுபூதி (கந்த.தியாகராஜா), உபநிடதத்தில் ஒரு தத்துவப் பார்வை (ஆரணி விஜயகுமார்), சைவ வைஷ்ணவ பேதங்கள் (கந்த.ஜெயராமக் குருக்கள்), பல்லவர் காலத்தில் சித்தர்களும் சித்தாந்த மரபும் (கலைவாணி இராமநாதன்), நாகபடுவானில் நாக இனக்குழுவின் தொடக்ககால வழிபாட்டுமையம் (ப.புஷ்பரட்ணம்), விஜயநகரப் பேரரசும் இந்து சமயமும் (சாந்தினி அருளானந்தம்), அறவியல் நோக்கில் திருமந்திரமும் திருக்குறளும் (சிவ.மகாலிங்கம்), புராணங்கள் (பொ.சிவப்பிரகாசம்), குமாரசுவாமிக் குருக்களின் முப்பொருள் விளக்கம் (ச.பத்மநாதன்), சும்மா இரு சொல் அற (தியாக. மயூரகிரிக் குருக்கள்), பண்டைத் தமிழர் வாழ்வியலில் தேன் (மனோன்மணி சண்முகதாஸ்), பிள்ளைத்தமிழ் (செ.பரமநாதன்), ஈழத்துச் சித்தர் யோக சுவாமிகளின் வரலாறும் பணிகளும் (இ.தனஞ்சயன்), ஆறுமுகநாவலரின் புனிதப் பணிக்கு பெருமை சேர்ப்பது அவரின் வழிநின்றுழைத்தல் (ஸ்ரீநதிபரன்), பக்தி வைராக்கியமும் சமூக அக்கறையும் மூவர் வாழ்வியலூடாக புலப்படும் விதம் (கு.கஜனா), பக்தி வைராக்கியத்தின் மூலம் மாணிக்கவாசகரின் பக்திநிலை (சரோஜினிதேவி சிவஞானம்), சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் ஈழத்து சைவ மரபில் ஏற்படுத்திய தாக்கம்-ஓர் ஆய்வு (தி.செல்வமனோகரன்), சித்தர்கள் வரிசையில் காரைக்கால் அம்பலவாணர் சுவாமிகள் (மு.சிவலிங்கம்), வளமுடன் வாழ வழிகாட்டும் விநாயகர் (நயினை எஸ்.சோமேஸ்வரபிள்ளை), நடராஜர் நடனத்தின் தாற்பரியம் (சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்), தாய்த் தெய்வ வழிபாடு (பத்மராசா பத்மநிருபன்), நன்னெறி நின்றி என்னில் (வ.கோவிந்தபிள்ளை), குறள் காட்டும் வழி (சு.சிவராசா), விருந்தோம்பலின் சிறப்பு (சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்), சரித்திர விசித்திரம் படைக்கும் சைவ பரிபாலன சபை (வை.இரகுநாத முதலியார்), சீனாவின் கண் மருத்துவம் மற்றும் கண் அறுவைச் சிகிச்சைக்கு பண்டைய ஆயுள்வேதப் பனுவல்களின் பங்களிப்பு (புவிலோகசிங்கம் அருள்நேசன்), 2017இல் யாழ் விருது பெறும் கலாநிதி ஆறு திருமுருகன் (பு.ஆறுமுகதாசன்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24804).

## 14155

**நவநாதம் 1998: நாவலப்பிட்டி-குயீன்ஸ்பரி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயம் மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர்.** இரா.ராஜகோபால் (நிர்வாக ஆசிரியர்), க. பொன்னுத்துரை (மலராசிரியர்), கனகசபாபதி நாகேஸ்வரன் (பதிப்பாசிரியர்). நாவலப்பிட்டி: மலர் வெளியீட்டுக் குழு, ஸ்ரீ தேவசேனாபதி சுவாமி ஆலயம், குயின்ஸ்பரி, 1வது பதிப்பு, ஜனவரி 1998. (கொழும்பு 13: லட்சுமி பிரின்டர்ஸ், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

(4), 142 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x22 சமீ.

05.01.1998 அன்று வெளியிடப்பட்ட இம்மலரில் சமர்ப்பணம் (இரா.இராஜகோபால்), பதிப்புரை (கனகசபாபதி நாகேஸ்வரன்), பல்வேறு சமயப் பிரமுகர்களின் வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன், ஆன்மீகப் பெருமலர் (க.பொன்னுத்துரை),

*சித்தரின் வித்து (மு.கோ.செல்வராஜா), சுவாமி விவேகானந்தரின் தெய்வீகச் செய்தி (தயா மகாதேவன்), தாயுமான சுவாமிகள் பாடல், லிங்காஷ்டகம்/ மகிஸா ஸுரமர்த்தனி துதி, ஸ்ரீ நவநாத சித்த சிவன் துதி (நயினைக்கவி தியாகர் அருணாசலம்), "நா" வாழ்வு உகந்தமை (நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர்), சித்தர்கள் யார்? (பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன் அவர்கள் முப்பெரும் சித்தர்கள் என்ற நூலிற்கு வழங்கிய ஆய்வுரை), திருமூலர் கண்ட சிவம் (சி.தில்லைநாதன்), செய்யும் பாவங்கள் (கி.வா.ஜகந்நாதன்), இந்துக்கள் ஏன் கல்லைக் கும்பிடுகிறார்கள்? (க.ந.வேலன்), சித்தர்கள்-ஒரு கண்ணோட்டம் (குமாரசாமி சோமசுந்தரம்), அமுதக் கடவுள் (வசந்தா வைத்தியநாதன்), சிவலிங்கமும் தத்துவங்களும் (சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்), திருவாசகம் சுட்டும் முல்லைப் பண்ணின் பூர்வீகம் இலங்கையா? (நயினை நா.வி.மு. நவரெத்தினம்), கும்பாபிஷேகத் தத்துவம் (சோமசேகரம் சபாநாதன்), நவநாதேஸ்வரம் (கனகசபாபதி நாகேஸ்வரன்), மனவலிமை (கி.வா.ஜகந்நாதன்), சித்தரும் சிவனும் (நயினை சுப்பிரமணியம் கனகரத்தினம்), எம் குல தெய்வம் குயின்பரி ஸ்ரீ நவநாத சித்தர் (இரா.இராஜகோபால்), மகான் நவநாத சித்தர் (எம்.ஜெயராம்), தமிழ்ச் சித்தர்கள் (ரேவதி ஜெயராம்), யம பயம் (கி.வா.ஜகந்நாதன்), குறிஞ்சிப்பூ (கி.வா.ஜகந்நாதன்), சித்தர்களுள் நவநாத சித்தர் (ந.பாலேஸ்வரி), சித்தத்தைச் சிவன்பால் வைத்த சித்தர்கள் (நா.விசுவலிங்கம்), இலங்கையும் சித்தர் சிவாலயங்களும் (விசாலாச்சியானந்த மாதாஜி), சித்தரின் நினைவில் சிவாலயம் (நாகமுத்து யோகநாதன்), நயினைச் சித்தரும் நவநாத சித்தரும் (க.இ.க.கந்தசுவாமி), நயினை - ஸ்ரீமத் முத்துலிங்கசுவாமி அவர்களின் திவ்விய சரித்திரச் சுருக்கம் (நா.விஸ்வலிங்கம்), சிவன் சிவலிங்கம் (முருகவே பரமநாதன்), தேவாரம் வேதசாரம் (சு.கணேசசுந்தரன்), சிவன் தடுத்த சுந்தரர் (ப.க.கனகசபாபதி), ஜெய் சீத்தாராம் (அருணாசலம் வைத்திலிங்கம்), புண்ணிய பூமியில் ஞானப் பயிர்கள்: நடமாடும் தெய்வம் ஞானச்சேரி நெரூர் சதாசிவ பிரும்மேந்திரர் (வ.சு.இராஜேந்திரன்), மெய்யடியார்கள் சொல்லும் பொய்யும் மெய்யாகும் (திருமதி வாமதேவன்), ஞானமது கைகூடும் ஞானத் திருத்தலம் (கனகமாலினி சுப்புரத்தினம்), நீதியே சைவம் (விஜயலெட்சுமி ராமஜெயம்), ஞானச்சேரி ஸ்ரீ யோக ஆனந்த மயி மாதா (பெ.சு.இராஜேந்திரன்), சைவசமய அனுட்டானங்கள் (மா.கனகலெட்சுமி), சைவசித்தாந்தம் (கி.வா.ஜகந்நாதன்), அகங்காரம் தவிர் நெஞ்சே (இணுவில் வி.என்.தில்லைநாதன்), உழைப்பாளிகளின் உயர்வுக்காக தன்னையே தியாகம் செய்த கல்விமான் அமரர் ஜெயராம் (முருக வே. பரமநாதன்), காமமென்னும் நோய் (கி.வா.ஜகந்நாதன்), பக்திவயல் விளைத்த பாரதி (ஆழ்கடலான்), ஆகிய படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17615).*

**14156**

**நாவலர் நூற்றாண்டு நினைவு விழாச் சிறப்பிதழ் 1979.** நா.சோமகாந்தன் *(பதிப்பாசிரியர்). கொழும்பு 7: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, இல. 4, ஹோர்ட்டன்*

டெரஸ், 1வது பதிப்பு, 1979. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

(148) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் 28.10.1979இல் நடைபெற்ற நாவலர் நினைவு நூற்றாண்டுச் சிறப்பு விழாவின்போது வெளியிடப்பெற்ற சிறப்புமலர் இது. ஆசிந் செய்திகள், வாழ்த்துரைகள், அருளுரைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து, இம்மலரில் பெருமளவிலான விளம்பரப் பக்கங்களுக்கிடையே கட்டுரைகள் இலைமறை காய்களாகத் தெரிகின்றன. நாவலர் நினைவு நூற்றாண்டு: நமது நோக்கமும் திட்டமும் (என்.சோமகாந்தன்), சென்ற காலத்தின் பழுதிலாத்திறனை நிகழ்காலத்திற்கு உணர்த்தும் விழா (வே.சிவராசா, ஆ.சிவநேசச் செல்வன்), நாவலர் நினைவு நூற்றாண்டு மாணவர் பேச்சுப் போட்டி (கி.லக்ஷ்மண ஐயர்), நாவலர் நினைவு நூற்றாண்டு மாணவர் கட்டுரைப் போட்டி (ஆ.சதாசிவம்), நாவலர் புத்தகக் கண்காட்சி (ச.அம்பிகைபாகன்), நூற்றாண்டு நிறைவு நினைவு மலர்: ஒரு முன்னோட்டம் (க.கைலாசபதி), நன்றி மறவோம் (கா.விசுவலிங்கம்), நாடெங்கும் நாவலர் விழாக்கள் (இடங்கள், நிகழ்வுத் திகதியுடனான பட்டியல்), நல்லூர் ஆறுமுக நாவலனார் -செய்யுள் (விபுலானந்த அடிகள்), நாவலர் பெருமான் (பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை), நாவலர் சைவக்காவலர்- செய்யுள் (சுத்தானந்த பாரதியார்), Pioneering Hero (A.M.A.Azeez), நாவலரும் தமிழ் மொழியும் (சொ.சிங்காரவேலன்), கல்வித்துறையில் நாவலரின் தீர்க்கதரிசனம் (கி.லக்ஷ்மண ஐயர்), நாவரசரும் நாவலரும் (தங்கம்மா அப்பாக்குட்டி), என் நெஞ்சினைக் கவர்ந்த இரு அஞ்சல்கள் (து.சிவசுந்தரம்) ஆகிய ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24827).

## 14157

**நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய ஸ்ரீ காயத்ரீ தேவி மஹா கும்பாபிஷேக விழா சிறப்புமலர் 1986.** மலர்க் குழு. நுவரெலியா: ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம், 1வது பதிப்பு, 1986. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

(142) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் வெளிவந்துள்ள இச்சிறப்பு மலரில், ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய வரலாறு (வே.சதாசிவம்), Sri Lankatheeswarar Temple (Yogashram): A Unique place of worship (R.Kandasamy), Spiritual Significance of Gayathri (Swami R.K.Murugesu), Secrets of Gayathri (Swami R.K.Murugesu), காயத்ரி மகிமை (ஸ்ரீ காயத்ரீ சித்தர்), மனிதனைத் தெய்வமாக்கவல்ல ஸ்ரீ காயத்ரீ மந்திரம், சுவர்க்க சுகம் கிடைக்கும் காயத்ரீ தந்திரம், வேதமாதா (யோகி), காயத்ரீயும் முத்தும் பவளமும் (யோகி), முழுமையான பயன் (ஸ்ரீ காயத்ரீ சித்தர்), காயத்ரீ ஜபம்,

மூன்றுவிதப் பிரகாசம் (யோகி), எது உகந்தது?: காயத்ரீ தந்திரம், தந்திர யோகம் (ஆர்.கே.முருகேசு சுவாமிகள்), துளசியின் மகிமை, பிரம்மலயத் தியானம் - Cosmo Mystis Meditation (ஸ்ரீ காயத்ரீ சித்தர்), ஆபத்துக்களைக் காக்கும் (மகாத்மா காந்தி), கைகொடுத்து காத்திடுவாள் (யோகி), குழந்தைகளே செல்லுங்கள் (ஸ்ரீ துர்க்கைச் சித்தர்), சகல வேதங்களின் சாரமே காயத்ரீ (வியாச முனிவர்), பரந்த உள்ளமும் காயத்ரீ சாதனையும் (காயத்ரீ ராமாயாணம்), மெய்ஞானம் தோன்றும் (ஸ்ரீ காயத்ரீ சித்தர்), தேவர்களும் ஜெபிக்கிறார்கள் (தேவி பகவதம்), மனிதனை உயர்த்தவல்லது (ஸ்ரீ காயத்ரீ சித்தர்), ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் பக்தர்களுக்கு ஜெப சக்தியேற்றி ஆசீர்வதித்து கொடுக்கப்படும் சக்தி வாய்ந்த போட்டோ யந்திரங்கள், விண்ணுலக சக்திகள் மண்ணுலகுக்கு வருகின்றன: உலகின் பொருண்மை, உயிர், அறிவுகளுக்கு ஆதாரமான சூரிய சக்தியின் செயல் விளக்கமான காயத்ரி பூஜை, Benefits of Gayatri Japa, பரமவித்யா விளக்கம், Gayathri Purascharana, காயத்ரீ ஜபத்தின் ப்ரபாவம் (சில மஹான்களின் அநுபவங்கள்), அறிவு சுத்தமாகும் (மதன்மோகன் மாளவியா), காயத்ரீயை ஜெபித்தால் பாவங்கள் விலகும் (யோகி), ஞான சக்தியைக் கொடுப்பவள் காயத்திரி (ஸ்ரீ காயத்ரீ சித்தர்), அனைத்தையும் இயக்கும் செயல் சக்தி (ஸ்ரீ காயத்ரீ சித்தர்), மாயைப் பிடியிலிருந்து விடுவிப்பவள் காயத்ரீ சித்தர், Gayatri (H.H.Kanchi Sankaracharyar), விரும்பியதெல்லாம் பெறலாம் (காயத்ரீ புரஸ்சரணம்), சப்தரிஷிகள் (ஸ்ரீ காயத்ரீ சித்தர்) ஆகிய ஆக்கங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39327).

## 14158

**பருத்தித்துறை கொட்டடி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்புமலர் 23.2.2017.** இ.திருமாறக் குருக்கள் (தொகுப்பாசிரியர்). பருத்தித்துறை: தேர்த் திருப்பணிச் சபை, கொட்டடி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2017. (பருத்தித்துறை: சிவா ஓப்செட் பிரின்டர்ஸ், வியாபாரிமூலை).

xxviii, 33 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17.5 சமீ.

மாறன் ஐயா என்றழைக்கப்படும் சைவப்புலவர் இ.திருமாறக் குருக்கள் அவர்களின் மலராசிரியர் உரையுடன் தொடங்கும் இச்சிறப்புமலரில், ஆசியுரைகள், வாழ்த்துரைகள் ஆகியவற்றைத் தொடர்ந்து, வினைதீர்க்க வந்த பருத்தித்துறை கொட்டடி ஸ்ரீ சித்திவிநாயகர் வரலாறு (ப.கோபாலகிருஷ்ணன்), விநாயக வழிபாடு, மஹோற்சவ தத்துவம், இரதோற்சவம், தேர்களின் அமைப்பும் தேரோட்டத் தத்துவமும் (ஜெயலட்சுமி ராஜநாயகம்), அன்பின் வழியது உயர்வு (மாறன் ஐயா), நன்றியுரை ஆகிய விடயதானங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 035834).

## 14159

**புங்குடுதீவு கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர ஸ்வாமி கோவில் (சிவன் கோவில்) 33 குண்ட, 100 ஸ்தம்ப உத்தமோத்தமபக்ஷயாக மஹா கும்பாபிஷேக மலர்.** க.சிவானந்தன், இ.கெங்காதரக் குருக்கள் (மலராசிரியர்கள்). புங்குடுதீவு 03: சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள், மண்டல பூர்த்தி வெளியீடு, சிவன் கோயில், 1வது பதிப்பு, மே 1977. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).

(150) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.,

புங்குடுதீவு கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர ஸ்வாமி கோவில் (சிவன் கோவில்) 33 குண்ட, 100 ஸ்தம்ப உத்தமோத்தமபக்ஷயாக மஹா கும்பாபிஷேகம் 03.04.1977 அன்று இடம்பெற்றபோது வெளியிடப்பட்ட சிறப்பு மலர்.

## 14160

**புதுக்கோயிலான் பெருங்கருணை: மஹா கும்பாபிஷேகம் சிறப்பு வெளியீடு.** எம்.எஸ்.ஸ்ரீதயாளன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்), காங்கேசன்துறை வீதி, கொக்குவில், 1வது பதிப்பு, மே 2014. (கொக்குவில்: சோதிடப்பிரகாச யந்திரசாலை).

(8), 142 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x18 சமீ.

கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் ஜீர்ணோர்தாரன நவகுண்ட பக்ஷ மஹா பெருஞ்சாந்திப் பெருவிழா தினத்தன்று புது நிர்மாணம் பெற்ற கோவிலுட் பிரவேசிக்கும் புனித நாள் நினைவாக ஆலயத்தினால் 05.05.2014 அன்று வெளியிடப்பட்ட சிறப்பு வெளியீடு இது. அருளாசி, வாழ்த்துச் செய்திகளுடன் கூடிய இம்மலரில், இன்றைய பெருஞ்சாந்தி விழா, நால்வர் திருமுறைகளில் குமரன் முருகன் துதி, ஆலய வரலாறு-ஒரு நோக்கு, கிருபாகரர் மீது பாடப்பெற்ற பனுவல்களும் பாடல்களும், புதுக்கோயிலான் பேரில் எழுதப்பட்ட திருப்பள்ளியெழுச்சி, ச.சபாரத்தின முதலியார் பாடிய ஆசிரிய விருத்தம், சுப்பிரமணிய சுவாமி கோவில் மான்மியம், கொக்கூர்க் குமர கிருபாகரரூஞ்சல் (மு.சி.), பிரார்த்தனை (தா.மஹாதேவக் குருக்கள்), கும்பாபிஷேக மகிமை, ஆலயத்தில் ஆசாரம் (இ.கலைவாணி), கோபுர தரிசனம் (க.கோபாலகிருஷ்ண ஐயர்), முருக வழிபாடு (பவானி முகுந்தன்), திருவடிகளில் (கனகசபாபதி நாகேஸ்வரன்), நாதாந்தம் (ஞானி சிவசுப்பிரமணியம்), நந்தி (கம்பவாரிதி இ.ஜெயராஜ்), கோவில்கள் பேணி வளர்த்த கலை, கருணைபெற பஜனைவழி கலை, கவிதைகள்-அருட்பாடல்கள்-பஜனைப்பாடல்கள், வேண்டும் புதுக்கோயிலானுக்கு ஒரு புதிய இராஜகோபுரம், புதுக்கோயிலடியார் தனிப் பெருமைகள், கொக்குவில் அமைவும் வழிபாடுகளும், ஆகிய படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 055071).

### 14161

**புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் ஆண்டுற்சவ மலர் 1971.** *மலர்க்குழு. கண்டாவளை: புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில், புளியம்பொக்கணை, 1வது பதிப்பு, 1971. (யாழ்ப்பாணம்: விவேகானந்த அச்சகம்).*

*(110) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.*

*இச்சிறப்பு மலரில் வாழ்த்துக்கள், ஆசியுரைகளையடுத்து, மலரைப் பற்றி (சி.சு.சின்னத்தம்பி), புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயில் சரித்திரச் சுருக்கம் (சி.சு.சின்னத்தம்பி), காத்திடும் தெய்வம்-கவிதை (கவிமணி வே. செல்வநாயகம்), அற்புதம் நிகழ்த்திய நாகதம்பிரான்-களவைக் காட்டிக் கொடுத்த நாகதம்பிரான் (சு.குமாரமூர்த்தி), அருள்மழை பொழி நாகதம்பிரானே- கவிதை (பச்சிலைப் பள்ளியூரான்), திருநீறு (கே.கணபதிப்பிள்ளை ஆசிரியர்), புளியம்பொக்கணையில் புயங்க அருட்பிரவாகம் (பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை), அமரர் விநாயகமூர்த்தி நவமணி (க.வே. அருணாசலம் உடையார்), அமரர் டாக்டர் மூர்த்தி-செய்யுள் (பொ.வேலாயுதபிள்ளை), புளியம்பொக்கணை நாகதம்பிரான் வரலாற்றுச் செய்யுள் (செல்வி இரத்தினம் இந்திரவதனி), ஸ்ரீ நாகதம்பிரான் கும்மி (சி.நளாயினி), நாவலரின் நாவன்மை (ஆர்.ரி.சுப்பிரமணியம்), பெருமானுடைய அற்புதங்கள்-தன் அடியாரைத் தண்டித்து இரட்சிக்கும் பான்மை (செல்வி பரமேஸ்வரி கனகசபை), அறிவியலும் அரும் சைவமும் (புலோப்பிள்ளையூர் ம.குமாரவேல்), வகுத்தான் வகுத்த வழி (கதைக் களஞ்சியம் இ.த.சுப்பிரமணியம்), தேவாலயத்தின் பெயரில் அமைந்த வித்தியாலயம் (வே.மயில்வாகனம்), புளியம்பொக்கணை நாகதம்பிரான் தாள்கள் போற்றி-செய்யுள் (சைவப்புலவர் அ.கி.ஏரம்பமூர்த்தி), நாகதம்பிரான் ஆண்டுற்சவப் பணியிலே..... (நா.வீரகத்திப்பிள்ளை), ஸ்ரீ புளியம்பொக்கணை நாகதம்பிரான் சுவாமி போற்றித் திருப்பதிகம்-செய்யுள் (செ.சிவப்பிரகாசம்), எங்கே? புளியம்பொக்கணையில்-கவிதை (மு.ஏ.சுப்பிரமணியம், மு.மகேசுவரன்), மணிக்கூட்டுக் கோபுர நிதி, புளியம்பொக்கணை நாகதம்பிரான் நமக்கோர் அன்பர் (நா.கணபதிப்பிள்ளை) ஆகிய படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39849).*

### 14162

**மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோயில் கும்பாபிஷேக சிறப்புமலர்.** *மலர்க் குழு. மட்டுவில்: பன்றித்தலைச்சி அம்மன் கோவில், மட்டுவில் வடக்கு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2007. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர்).*

*(6), 106 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.*

24.10.2007 இல் நடைபெற்ற மேற்படி ஆலய கும்பாபிஷேக விழாவையொட்டி வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். நூலின் அட்டையில் ஆண்டு 2008 என்று குறிப்பிடப்பட்டுள்ளமையைக் கவனத்திற் கொள்க. ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன் மஹா கும்பாபிஷேக நிகழ்ச்சி வர்ணனை, நித்தியநைமித்திய மஹோற்சவ விஞ்ஞாபனம், கும்பாபிஷேக தத்துவம், ஆலய வளர்ச்சி வரலாறு, உலகமே சக்தி மயம், பூஜாகால நேரங்கள், பூசை முறைகள், பராசக்தி வணக்கம், உற்சவங்கள், மஹோற்சவம் வாகன கிரமம், திருவூஞ்சல், திருஞான சம்பந்தர் தேவாரம், திருநாவுக்கரசர் தேவாரம், சுந்தரர் தேவாரம், மாணிக்கவாசகர் திருவாசகம், 9ஆம் திருமுறை- திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, 10ஆம் திருமுறை- திருமந்திரம், 11ஆம் திருமுறை, 12ஆம் திருமுறை- பெரியபுராணம், விநாயகர் தோத்திரம், சிவபெருமான் தோத்திரம், உமாதேவி தோத்திரம், திருமகள் துதி, சரஸ்வதி துதி, திருமாலை துதி, சுப்பிரமணியர் துதி, வீரபத்திரர் துதி, வைரவர் சுவாமி தோத்திரம், நந்திதேவர், சண்டேஸ்வர சுவாமி துதி, அபிராமி அந்தாதி, சிவசக்தி வணக்கம், சக்தி வணக்கம், நவரத்தினமாலை, லலிதா பஞ்சரத்தினம், மஹோற்சவத்தில் ஓதவேண்டிய திருமுறை, கொடிக்கவி, தேரிழுக்கமுன் ஓதவேண்டிய திருப்பல்லாண்டு, அருணகிரிநாதர் திருப்புகழ், சக்தி கவசம், மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம், நன்றியுரை ஆகிய 45 தலைப்புகளில் இம்மலர் பல்வேறு ஆக்கங்களை உள்ளடக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51087).

## 14163

**மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்மன் கோவில் பூர்வீக சரித்திர வரலாறும் கும்பாபிஷேக வைபவமும்.** க.சிவகுருநாதன், நா.நல்லதம்பி (தொகுப்பாசிரியர்கள்). மட்டுவில்: தேவஸ்தான வெளியீடு, பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் கோவில், மட்டுவில் வடக்கு, 1வது பதிப்பு, 1991. (யாழ்ப்பாணம்: யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்க அச்சகம்).

(16), 70 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 75.00, அளவு: 24.5x18 சமீ.

இம்மலரில் சமர்ப்பணம், நற்சிந்தனை, முகவுரை, ஆசிச் செய்திகள், தொடக்கவுரை ஆகியவற்றினைத் தொடர்ந்து, ஆலய வளர்ச்சி வரலாறு, ஒரு கண்ணோட்டம், பன்றித் தலைச்சி அம்மன், தேவஸ்தான பரிபாலனம், கோவில் பதிவு, சக்தி வழிபாடு, அம்பிகையும் தமிழும், கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் (வர்ணனை), கும்பாபிஷேக தத்துவம், சிவநெறி சீர்பெற அன்பு செய்வோம், அம்பிகை அருள், எல்லோருக்கும் பொதுவான சக்தி வழிபாடு, அன்னை வழிபாடு, துவாசாரோகணம், சக்தி தத்துவம், ஸ்ரீ சக்கர பூஜை, மஹோற்சவம், உற்சவங்கள், மகோற்சவ கால வாகனக் கிரமங்கள், ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் திருஊஞ்சல், பக்தரின் அற்புதத் தெய்வம், தோத்திர மாலை, ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அஷ்டகம், பன்றித் தலைச்சி அம்பாள் துதி, திருமுறைகள் ஆகிய தகவல்களும் 1946, 1955, 1964, 1991 ஆம் ஆண்டுகளுக்குரிய மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 051038).

### 14164

**மண்ணவரும் விண்ணவரும் மகிழ்ந்த மகாகும்பாபிஷேகம்: ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில்-1993**. மலர்க்குழு. கொழும்பு: ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில், ஸ்ரீ கதிரேசன் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1993. (கொழும்பு: மெய்கண்டான் அச்சகம், 161, செட்டியார் தெரு).

(2), 112 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x19 சமீ.

26.3.1993 அன்று இடம்பெற்ற மகாகும்பாபிஷேகத்தின்போது வெளியிடப்பெற்ற சிறப்பு மலர். இம்மலர் சமயப் பிரமுகர்களின் வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன் அருவமான கதிர்காமக் கந்தன் உருவமான கதிர்வேலாய்க் காட்சி தருகிறான் தலைநகரிலே (வசந்தா வைத்தியநாதன்), ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி குட முழுக்குக் காணலாம் வாரீரே- பாமாலை (சிவமயச் செல்வி விசாலாட்சி), மண்ணவரும் விண்ணவரும் மகிழ்ந்த மகா கும்பாபிஷேகம் (தி.செந்தில்வேள்), வாழ்க சீர் அடியார் எல்லாம் (சி.கு.செல்லையா), உலகம் உய்ய உதித்த திரு முருகன் (நா.க.மயில்வாகனம்), உலகம் போற்ற உயர்வளித்து உவப்பவன் உமைபாலன் (அ.கு.வீரசுப்பிரமணியம்), அண்ட சராசரங்கம் அனைத்தையும் காக்கும் கதிர்வேல் (கா.நமசிவாயம்), என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே (மல்லிகாதேவி சரவணபவன்), பக்தர் மறந்தாலும் பக்தரை மறவாதவன்: கதிர் வேலாயுதனின் கருணாகடாட்சம் (திரவியம் சபாரத்தினம்), கருங்கற்களையும் இரத்தினக் கற்களையும் ஒன்றாகவே கண்ட காட்சி திருப்புகலூரும் இரத்தினபுரியும் (நா.சு.தெய்வேந்திரன்), பக்தருடன் உறவாடத் துடிப்பவன் முருகன் (வீரபாகு ஐயர்), கதிரமலைக் காட்டில் கந்தன் கூட வந்து வழிகாட்டி மறைந்த கதை (மா. குமாரசுவாமி), கொழும்பு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி திருப்பாடல் உயர் பணி நீடு வாழி-பாமாலை (மா.குமாரசுவாமி), செக்கடித் திருமுருகன் வான்புகழ வாழவைப்பான்-பாமாலை (சந்தனா நல்லலிங்கம்), கதிர்வேல் முருகா-பாமாலை (சுவாமி சுத்தானந்த பாரதியார்), கதிர்வேற் கந்தன் பவனிக் காட்சி- பாமாலை (பரமஹம்ஸதாசன்), கண்ணொளி பெற்றுப் பாடியவை- பாமாலை (சி.கார்த்திகேசு-சேந்தன்), ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கீர்த்தனைகள்- பாமாலை (என்.வீரமணி), ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திரு ஊஞ்சல் -பாமாலை (என் வீரமணி), பழம்பெரும் புனித காலி மாநகர் மீனாட்சி சுந்தரேஸ்வரரை அநுமன் தரிசித்த புண்ணியபூமி (தி.செந்தில்வேள்), மண்டலம் ஆளும் மன்னவனுக்கு ஓர் மடல்: மண்டலம் ஆள் மன்னவா, தேவரைச் சிறை மீட்ட செல்வக்குமரனை சிறை எடுப்பதா (தி.செந்தில்வேள்), கடலில் வந்த கருணைமா கடலே நூதனச் சிறையினை உடைத்து நீ வருகவே- அந்தாதி (விசாலாட்சி), கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய கந்தபுராணம் (சில பாடல்கள்), அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ், அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி, ஆகிய ஆக்கங்களையும் கொண்டுள்ளது. நூலின் இறுதியில் ஆலய அர்ச்சகர்கள், சிறப்பு நிகழ்வுகள் ஆகியவற்றின் புகைப்பட ஆவணத் தொகுப்பும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14093).

## 14165

**மணிமொழிகள்: நாவலர் மணிமண்டப திறப்புவிழா நினைவுமலர் 19.05.1995.** மலர்க் குழு. கொழும்பு 15: வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம், 40, கோவில் வீதி, 1வது பதிப்பு, மே 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

152 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

19.05.1995 அன்று வெளியிடப்பெற்ற இச்சிறப்பு மலரில் ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன், மணிமண்டபம் கண்டோர் சிரஞ்சீவிகளாவர் (வி.ரி. வி.தெய்வநாயகம்பிள்ளை), இந்துக்களே சிந்தித்துப் பாருங்கள் (வித்துவான் க.ந.வேலன்), நாவலர் பற்றி ஒரு நோக்கு, ஆத்திசூடி விளக்கவுரையுடன், திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை, கொன்றை வேந்தன் ஆகியவை இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34626).

## 14166

**மத்திய மாகாண இந்து மாநாட்டுச் சிறப்பு மலர்-2003.** துரை. மனோகரன் (மலராசிரியர்). கண்டி: மத்திய மாகாணக் கல்வி இந்து கலாச்சார அமைச்சு, 1வது பதிப்பு, 2003. (கண்டி: கிராப்பிக் லாண்ட்).

x, (2), 85 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.

இந்து சமய அலுவல்கள் அமைச்சு ஏற்பாடு செய்திருந்த இரண்டாவது உலக இந்து மாநாட்டின் நிறைவு விழா 2003 மே 6ஆம்திகதி இடம்பெற்ற வேளை, வீடமைப்பு, பெருந்தோட்ட, உட்கட்டமைப்பு அமைச்சின் அனுசரணையுடன் மத்திய மாகாணக் கல்வி, இந்து கலாசார அமைச்சு வெளியிட்டுள்ள இந்து மகாநாட்டுச் சிறப்புமலர் இது. கலாநிதி துரை மனோகரன் அவர்களின் ஆசிரியத்துவத்தின்கீழ் மலர்ந்துள்ள இச்சிறப்பு மலரில் வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன், மலரும் இந்த மலரைப் பற்றி (துரை மனோகரன்), பட்டினத்தடிகள் அருளிச் செய்த திருப்பாடல்கள் (க.அருணாசலம்), கலைமகளும் கவிஞர்களும் (துரை.மனோகரன்), திருமூலரின் திருமந்திரம் (அரங்க. இராமலிங்கம்), யோகம் அழைக்கிறது (நவம் வெள்ளைச்சாமி), திருவாதிரைச் சிறப்பு (சுப.திண்ணப்பன்), சைவசமய வழிபாட்டில் மந்திரங்கள் (ஸ்ரீமத் சர்மா கிருஷ்ணானந்த சர்மா), தெய்வீக மந்திரமாகிய ஸ்ரீ காய்த்ரி மந்திரம் (பிரசாந்தினி மாயாவதாரன்), பல்லவர் காலக் கலை வரலாற்றில் முருகப் படிமங்களது முக்கியத்துவம் (அம்பிகை ஆனந்தகுமார்), இலங்கையில் இந்து சமயம் - ஐரோப்பியர் காலம் ஒரு கண்ணோட்டம் (ஜெயமலர் தியாகலிங்கம்), மலையகத்தில் இந்துசமய இலக்கிய வளர்ச்சி ஒரு நோக்கு (இரா.சிவலிங்கம்), மலையகத்தின் சமூக அசைவியக்கமும் இந்துப் பெண்களும் (இரா.சர்மிளாதேவி), மலையகத்தில் இந்து சமயம் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வு ஆலோசனைகளும் (ச.விஜேசந்திரன்), மலையகத்தில் இந்து சமயக் கல்வி (முத்து சம்பந்தர்),

முற்போக்கு எண்ணங்கள் முகிழ வேண்டும் (கே.வெள்ளைச்சாமி), மத்திய மாகாண இந்து ஆலயங்கள் (நுவரெலியா மாவட்டம்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 31061).

### 14167

**மத்திய மாகாண இந்து மாமன்ற இந்து கலாச்சார நிலையத் திறப்புவிழா சிறப்பு மலர் 12.06.1983.** செ.நடராஜா, தி.சிவசுப்பிரமணியம் (இணை ஆசிரியர்கள்).

கண்டி: இந்து கலாச்சார நிலையம், மத்திய மாகாண இந்து மாமன்றம், பேராதனை வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1983. (கண்டி: நந்தன் அச்சகம், இல. 8, காசில் ஹில் வீதி).

(6), 196 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

12.06.1983 அன்று கண்டியில் மத்திய மாகாண இந்து மாமன்றம், கண்டியில் இந்து கலாச்சார நிலையத்தினைத் திறந்து வைத்தபொழுது, வெளியிட்டுவைத்த சிறப்பு மலர். ஆசியுரைகள், பிரமுகர்கள், சகோதர சங்கங்கள் ஆகியவற்றின் வாழ்த்துரைகள், புகைப்பட வரலாற்று ஆவணப்பதிவுகள் ஆகியவற்றுடன், இம்மலரில், Ramalingam Swamigal ( A.C.Vadivel), மாமன்றத்தின் மணி மண்டபம்-கவிதை (உடப்பூரான்), மத்திய மாகாண இந்து மாமன்றத்தின் முக்கிய நிகழ்வுகள் (A.C.வடிவேல்), இந்து கலாச்சார நிலையத்திற்கான தளம் வெட்டும் வைபவம், மாமன்றத்தின் முதலாவது யாத்திரை, Highlights of the Central Province Hindu Association (A.C.Vedivel), கண்டி இந்து வாலிபர் சங்க அங்குரார்ப்பணம் (செ. நடராஜா), மத்திய மாகாண இந்து மாமன்ற பொதுச் செயலாளரின் அறிக்கை (க.செல்லமுத்து), தாய்ச் சங்க அடிச்சுவடுகளில் சேய்ச் சங்கம் (பொ.இராஜநாதன்), The Central Province Hindu Association (V.Sivasubramaniam), கசிந்துருகும் அடியவர் துயர் துடைக்கும் கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய மகிமையும் பெருமையும் (க.ப.சிவம்), தேர்த் திருவிழா (தி.சிவசுப்ரமணியம்), The "Ther" Festival in Kandy (T.Sivasubramaniam), கலாச்சார மண்டபமும் - மலையக இந்து மகளிரும் (திருமதி லலிதா நடராஜா), கண்டியில் இந்து கலாச்சார நிலையம் (நா.முத்தையா), மன்றத்தின் சிவராத்திரி விழாவும் திருமுறை மகாநாடும் (க.கா.மதியாபரணம்), இந்து கலாச்சார நிலைய கட்டட நிதி நன்கொடையாளர்களும் தொகைகளும், உள்ளத்தில் உள்ளான்-கவிதை (கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39873).

## 14168

**மாவடியான் திரு: மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக மலர்-2010.** கனகலிங்கம் சோமசேகரம் (தொகுப்பாசிரியர்). *மீசாலை: தர்மகர்த்தா சபை, மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில், 1வது பதிப்பு, 2010. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 424, காங்கேசன்துறை வீதி).*

xxxii, *300 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 1000., அளவு: 26*x*20 சமீ.,* ISBN: *978-955-0414-00-0.*

*ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றைத் தொடர்ந்து, இம்மலர் ஆலய விடயங்கள், ஆலய ஆய்வும் பிறவும், விநாயகர் (தத்துவம், வழிபாடு, பெருமை, ஆயுதங்கள்), பொது, பாடல்களும் தோத்திரங்களும் ஆகிய ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆலய விடயங்களில் ஆலய மான்மியம், மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் அமைவிடம், நித்தியநைமித்திய பூஜை விபரங்கள், வருடாந்த உற்சவ தினங்களின் விபரங்கள், மாவடியான் சேவையில் பொன்விழாக்கண்ட மணியகாரன் அமரர் விநாசித்தம்பி சபாரத்தினம், ஆலய இராஜ கோபுர மகிமை, ஆலய வளர்ச்சிக்கு உதவியோர் பற்றிய விபரம் என இன்னோரன்ன நிர்வாகத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆலய ஆய்வும் பிறவும் என்ற இரண்டாம் பாகத்தில் மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் மற்றும் சுற்றுவட்டத்தில் அமைந்துள்ள பிற கோவில்கள் பற்றிய வரலாற்றுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. விநாயகர்: தத்துவம், வழிபாடு, பெருமை ஆயுதங்கள் என்ற மூன்றாம் பாகத்தில் விநாயகர் பெருமை பேசும் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் உள்ளடங்கியுள்ளன. பொது என்ற நான்காவது பாகத்தில் சைவத் திருமுறைகளும் நம்மவர் செல்நெறியும் (ச.லலீசன்), இந்துப் பண்பாட்டு மரபில் பசுவின் பெருமை (ப.கணேசலிங்கம்), ஆலயங்களில் இசை (செல்வி கலாஜினி), ஞானத்தின் படிநிலைகள்-தசகாரியம் (பொ.சந்திரசேகரம்), உளநெருக்கீட்டுக்கான பரிகாரங்களில் ஆலயங்கள் (சந்திரராஜினி கணபதிப்பிள்ளை), பிள்ளைகளின் கற்றல் மேம்பாட்டில் குடும்பங்களின் பங்களிப்பு (மா.சின்னத்தம்பி), திருவும் தமிழும் பரதமும் (சபா ஜெயராசா), வடமொழியும் தென் தமிழும் (இ.குமாரவடிவேல்), மனித வாழ்வியலில் இந்துமதம் ஒரு குறிப்பு (க.தர்மசேகரம்), யாழ்ப்பாணத்தில் மரபுவழித் தமிழ்க் கல்வி (எஸ்.சிவலிங்கராஜா), வீரசைவ மரபில் பசவண்ணர் (சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்), பக்தி இலக்கியம் (ஸ்ரீகலா ஜெகநாதன்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இறுதிப் பாகத்தில் தோத்திரப் பாடல்கள் சில இடம்பெறுகின்றன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 063442).*

### 14169

**யாழ்.இந்துக் கல்லூரி சிவஞான வைரவர்கோவில் குடமுழுக்கு விழா மலர்.** கை.க.விசாகரத்தினம், இ.சங்கர் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பழைய மாணவர் சங்கம், யாழ். இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: செட்டியார் பதிப்பகம், 411/1, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை).

(52) பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 5.00, அளவு: 24.5x18.5 சமீ.

10.04.1989 அன்று குடமுழுக்கையும், 25.05.1989இல் மண்டல முழுக்கையும் கொண்டாடியதன் நினைவாக வெளிவந்துள்ள சிவஞான வைரவர் கோவில் குடமுழுக்கு விழாச் சிறப்பிதழில், படையல் (யாழ். இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்), அருளாசி (ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் குருமகா சந்நிதானம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்), ஆசியுரை (கி.சுப்பிரமணிய சாஸ்திரிகள்), கல்லூரியின் காவல் தெய்வம் (ச.பொன்னம்பலம்), சுபீட்ச நல்வாழ்வு மல்க (டபிள்யு.எஸ்.செந்தில்நாதன்), கஞ்சுகற்கு மகாபிடேகம் கல்லூரிக்கு இராஜயோகம் (நம.சிவப்பிரகாசம்), ஆலய வரலாறு - ஒரு நோக்கு (சி.சிவகுருநாதன்), கும்பாபிஷேக மகத்துவம் (ப.கோபாலகிருஷ்ணன்), சில நினைவுகள் (சிவனருட்செல்வன் சி.செ.சோமசுந்தரம்), யாழ்ப்பாணத்தில் வைரவ வழிபாடு (சிவ.மகாலிங்கம்), சிவஞான வைரவர் (சோ.பத்மநாதன்), நெஞ்சில் நிறைந்தவை (கை.க.விசாகரத்தினம்), நன்றி (சு.டிவகலாலா) ஆகிய படைப்பாக்கங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34635).

### 14170

**ராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை) நூற்றாண்டு விழா 1897-1997: சிறப்பு மலர் 1998.** மலர்க் குழு. கொழும்பு 6: ராமகிருஷ்ண மிஷன், இல. 40, ராமகிருஷ்ண வீதி, 1வது பதிப்பு, 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).

92 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

இச்சிறப்பிதழில் Ramakrishna Math Message (Swami Bhuteshananda), ராமகிருஷ்ண மிஷன் சின்னமும் விளக்கமும் (சுவாமி விவேகானந்தர்), முன்னுரை (சுவாமி ஆத்மகனானந்தா), சங்க ஜனனி, ராமகிருஷ்ண சங்கத் தோற்றம் (சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகளில்), ராமகிருஷ்ண மிஷனும் ராமகிருஷ்ணரின் துறவிச் சீடர்களும், ராமகிருஷ்ண இயக்கம் குறிக்கோளும் செயல்பாடும் (ஆங்கில மூலத்தின் மொழிபெயர்ப்புத் தொகுப்பு: ஆர்.விட்டல்), ராமகிருஷ்ண மிஷனின் உலகளாவிய பணிகள் ஒரு கண்ணோட்டம், இலங்கையில் சுவாமி விவேகானந்தர், ராமகிருஷ்ண மிஷன் - கொழும்பு: சில பரிமாணங்கள், ராமகிருஷ்ண மிஷன்-மட்டக்களப்பு: சில பணிகள், Dawn of a New Era (Swami Bhuteshananda), Self - Development and National Development (Swami Bhuteshananda) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21155).

## 14171

**வட்டுக்கோட்டை-தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய கும்பாபிஷேக மலர்.** மலர்க் குழு. வட்டுக்கோட்டை: கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம், மூளாய் வீதி, தெக்கணப்பாய், வட்டுக்கோட்டை மேற்கு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

(100) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x19.5 சமீ.

08.08.1998 அன்று வெளியிடப்பெற்ற இச்சிறப்பு மலரில் ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன், எல்லாம் இறைவன் செயலே (இ.பொன்னுராசா), வட்டுக்கோட்டை மேற்கு - மூளாய் வீதி தெக்கிணப்பாய் கண்ணகாம்பிகை சமேத கண்ணலிங்கேஸ்வரர் சரணம் (முருகேசு சவுந்தர சண்முகநாதன்), நம் கடன் பணி செய்து கிடப்பதே (சைவ மகளிர்), கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வரலாறு, கும்பாபிஷேகம், கும்பாபிஷேக முறைகளும் விளக்கமும், கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலய தொண்டர் சபையின் எழுச்சியும் வளர்ச்சியும், பெருஞ்சாந்திக்குச் சாந்தியாயமையும் மண்டலாபிஷேகம் அதற்கு அங்கமான சங்காபிஷேக மகத்துவம், சங்காபிஷேக மகத்துவம், சங்காபிஷேகம், அபிஷேக திரவியங்களும் அதன் பலாபலன்களும், விநாயகர் அகவல், 21 பெயர் கொண்ட சூரிய சுலோகம், விஷ்ணு சகஸ்ர நாமம், விநாயகர் கவசம், சிவபுராணம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், அபிராமியம்மை பதிகம், ஸ்ரீ துர்க்கா தேவி அஷ்டகம், இலக்குமி தோத்திரம், சகலகலா வல்லி மாலை, அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்திரம், கந்தர் சஷ்டி கவசம், பஞ்ச புராணம், கொடிக்கவி: சந்தானகுரவர் உமாபதி சிவாச்சாரியார் அருளியது, நவசந்திப் பண்கள், பிரம்மசந்தி - கோபுர வாசல் நீலாம்பரி, இந்திர சந்தி - கிழக்கு, இமய சந்தி - தெற்கு, நிருதி சந்தி - தென்மேற்கு, குபேரசந்தி - வடக்கு, வாயுசந்தி - வடமேற்கு, நவக்கிரக வழிபாடு, ஈசான சந்தி - வடகிழக்கு, ஆராத்தி, உன் கருணை வழியவேண்டும், தேவி தோத்திரம், லலிதா நவரத்னமாலை, ஸ்ரீ கிருஷ்ண நாமாவளி, கண்ணலிங்கேஸ்வர ஸ்வாமி திருவூஞ்சல், கண்ணகாம்பிகை திருவூஞ்சல், கண்ணலிங்கேசர் எச்சரிக்கை, கண்ணகாம்பிகை எச்சரிக்கை ஆகிய சைவசமயத்தினருக்குப் பயனுள்ள பல விடயங்களை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 17620).

## 14172

**வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கருணைமலர்: இராஜகோபுர மணிக்கோபுர மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்-2011.** க.ஜெயவீரசிங்கம், க.சபாஜிதன், ப.தங்கவடிவேலு (மலர்க்குழு). முல்லைத்தீவு: அருள்மிகு ஸ்ரீ வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் தேவஸ்தானம், வற்றாப்பளை, 1வது பதிப்பு, 2011. (வவுனியா: எஸ்.பி.எஸ். ஆதவன் அச்சகம், மில் வீதி/ தண்ணீரூற்று: கலைவாணி அச்சகம்).

(116) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x20 சமீ.

இச்சிறப்பு மலரில் ஆலயமும் பிரதேச வழமைகளும் (மு.குகதாசன்), வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் பொங்கல் கிரியா கரும விளக்கம் (சி.பாலகிருஷ்ணன்), அறநெறியும் நமது சமூக விழுமியமும் (த.சிவபாலன்), வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோவில் பொங்கலும் கதிர்காமக் கரை யாத்திரையும் (ந.மயில்வாகனம்), வாழ்த்துப் பாமாலை (பிரம்மஸ்ரீ செ.சண்முகநாதன்), வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் எதிர்கொண்ட சவால்களும் அவற்றின் பின்னான வளர்ச்சியும் (சு.கிருஷ்ணமூர்த்தி), என் தாயின் நினைவில் (ப.வரதன்), வற்றாப்பளைக் கண்ணகியின் அற்புதம் (கி.உதயகுமார்), ராஜகோபுரம் (ச.லலீசன்), ஈழத்து சக்தி வழிபாட்டு மரபில் வன்னிப் பிராந்தியம் (ஞானவேல்), சக்தி வழிபாடு (ஆ.வேதநாதன்), சிலம்பு கூறல் (அரியான் பொய்கை), அம்மன் ஆலய பூசாரிமார்களுக்கு அம்மன் காட்டிய அற்புதங்களும் வரலாறும் (கு.கிருஷ்ணபவன்) ஆகிய படைப்பாக்கங்களும், இறுதிப் பகுதியில் ஆலயக் காட்சிகள் கொண்ட புகைப்படத் தொகுப்பும் இடம்பெற்றுள்ளன.

## 14173

**ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜயந்தி மலர்-05.01.2000.** மலர்க் குழு. தெகிவளை: ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம், 3/11, ஸ்ரீபோதிருக்கம வீதி, களுபோவிலை, 1வது பதிப்பு, ஜனவரி 2000. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(12), 236 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x18.5 சமீ.

05.01.2000 அன்று ஜயந்தி தின வெளியீடாக வெளியிடப்பெற்றுள்ள இம்மலரில், ராமன் என்றால் ஆனந்தம், ஸ்ரீ ஹனுமார், அருள் தரும் ஆஞ்சநேயர் சிறப்பு, எங்கள் அருள்மிகு சந்திரசேகர சுவாமிகளும் அவர் அமைத்துத் தந்த ஆஞ்சநேயர் ஆலயமும், ஸ்ரீ ஆஞ்சநேயர் வழிபாடு, ஸ்ரீ ஆஞ்சநேயர் உபாசனையும் வழிபாடும், வல்லமை தரும் ஸ்ரீ ஆஞ்சநேய வழிபாடு, மக்கள் சுவாமி என்றழைக்கப்படும் சந்திரசேகர சுவாமிகள், ஹனுமத் தியான சுலோகம், ஆஞ்சநேயர் ஆலயம் மக்களுக்கு ஒரு சரணாலயம், இளைஞர்களின் இறைசிந்தனைக்குத் தற்காலத்திலுள்ள தடங்கல்கள், இருபத்தோராம் நூற்றாண்டில் இளைஞர்களும் ஆலய வழிபாடும், சமயப் பற்றும் அதனால் ஏற்படும் நன்மைகளும், கம்பரின் அனுமனும் ஒட்டக்கூத்தரின் அனுமனும், இளைஞர்களின் இறை சிந்தனைக்கு தற்காலத்திலுள்ள சில தடங்கல்களும் அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளும், ஆஞ்சநேயப் பெருமானின் சிறப்புக்கள், உருத்திராட்சத்தின் மகிமை, ஸ்ரீ ஆஞ்சநேயர் மந்திரம், அனுமன் நாமம் அனுபவ ஞானம், கூப்பிட்டவுடன் குரல்கொடுக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானுக்கு ஒர் ஆலயம், விஸ்வத்தின் விஷேசம், சனீஸ்வரனுக்குப் பிடித்த சனி, நவக்கிரகங்கள், ஆலய அமைப்பு, இந்து ஆலயங்களும் அவற்றின் சமுதாயப் பணிகளும், சுவாமி சின்மயானந்தரின் சிந்தனைகள், பத்துக் கட்டளைகள், இராமாயணங்களில் ஹனுமன் சரிதம்,

தூய்மையை அருளும் துளசி, ஏழு முக்கிய நெறிகள், ஸ்ரீ ஹனுமன் பாடல்கள், Guidelines to lead a Happy and Prosperous Life, Ways and means to lead a Happy and content life ஆகிய தலைப்புகளில் இம்மலரில் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 035623/024362).

## 14174

**ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சிறப்பு மலர்.** விசாகரத்தின ஐயர் தெய்வேந்திர ஐயர் (மலராசிரியர்). தொண்டைமானாறு: ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம், 2வது பதிப்பு, 2000, 1வது பதிப்பு, 2000. (கரவெட்டி: லெட்சுமி ஓப்செட் அச்சகம், நாவலர்மடம்).

ii, 56 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

துதிகள் (திருமுறைத் தொகுப்பு), செல்வச்சந்நிதி ஆலய வரலாறு, வழிபாடுகளும் உற்சவங்களும், திருப்பள்ளியெழுச்சி, திருஊஞ்சல், செல்வச்சந்நிதி அகவல், திருச்சந்நிதிப் பதிகம் (ஆ.வேதநாயகம்), திருத்தல புராணம் (சீ.வினாசித்தம்பி), ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகப்பெருமான் அந்தாதி (சந்தனா நல்லலிங்கம்), எதிர்பாரா இன்னல் -கட்டுரை, கே.கே.கிருஷ்ணபிள்ளை அவர்களின் செல்வச்சந்நிதி கீர்த்தனா மாலையில் இடம்பெற்ற பாடல்கள் (சந்நிதிக் கந்தனை, செல்வச் சந்நிதியானை, வரந்தருவாய் முருகா), பூக்காரர் (ந.இந்திரகுமார்), கலியுக வரதன்-சந்நிதி முருகன் (க.சிவக்கொழுந்து), ஸ்ரீ செல்வச் சந்நிதிக் கந்தப் பெருமான் (செ.யோகச்சந்திரன்), நீதிபதி அவர்களின் கருத்துரை (ந.யோகசிகாமணி), பிரதேசச் செயலாளரின் பாராட்டுரை (ஆ.சிவசுவாமி), தொடரும் பணிகள் (ஆலயத்தினர்) விசேட நன்றிகள் (ஆலய உரிமையாளர்கள்), வேலழகர் பாமாலை (சிவ.ஆறுமுகம்) ஆகிய ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50800).

## 14175

**ஸ்ரீ நகுலாம்பிகை (கீரிமலை) அருட்ஜோதி மலர், 1969.** து.சுந்தரமூர்த்தி ஐயர் (பதிப்பாசிரியர்). கீரிமலை: பிரமஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள், நகுலேஸ்வர ஆதீன வெளியீடு, 1வது பதிப்பு, 1969. (சுன்னாகம்: முத்தையா சபாரத்தினம், திருமகள் அழுத்தகம்).

(2), 26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர சுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற சகஸ்ர ஜோதிர் மண்டல சங்காபிஷேக வைபவத்தின்போது வெளியிடப்பட்ட சிறப்புமலர். வைதிகமும் ஆகமமும் இணைந்த வழிபாட்டு முறையில் இந்த அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றுள்ளன. தேவியை தீப ஜோதிகளில் ஆவாகித்து, ஜோதியிலிருந்து சங்கு தீர்த்தத்தில் ஒடுக்கிப் பின் சங்கு தீர்த்தத்தினால் அம்பாளை அபிஷேகிப்பதே இதில் முக்கிய அம்சமாகின்றது. அதன் காரணமாக இம்மலரும் அருட்ஜோதி மலராக வெளியிடப்பட்டுள்ளது. முன்னுரை (து.சுந்தரமூர்த்தி ஐயர்),

நன்றியுரை (நகுலேஸ்வர ஆதீனகர்த்தா), ஸ்ரீ நகுலாம்பிகாதேவி தோத்திரம் (அருட்கவி சீ.விநாசித்தம்பி), ஆசியுரை (ச.குமாரசுவாமிக் குருக்கள்), கீரிமலை நகுலேஸ்வர ஆலய வரலாறு (ஆ.சிவநேசச்செல்வன்), சோதி (வி.சங்கரப்பிள்ளை), வீர இலக்குமி (பண்டிதர் செ.சிவப்பிரகாசம்), விஜயலட்சுமி (பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி), திருமகளின் திருவருள் அல்லது லக்ஷ்மி கடாக்ஷம் (கு.பாலசுந்தரக் குருக்கள்) ஆகிய ஆக்கங்களை இம்மலர் உள்ளடக்குகின்றது. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் D 1425).

## 14176

**ஸ்ரீ முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னநாதஸ்வாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேக மலர்-1963.** தேவஸ்தானத்தார். சிலாபம்: ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், கார்யகலாமந்திரம், 1வது பதிப்பு, ஜுலை 1963. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(6) 87 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 5.00, அளவு: 25x19 சமீ.

01.07.1963 அன்று நடைபெற்ற முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னநாதஸ்வாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேக வைபவத்தையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். கோவில் சார்ந்த புகைப்படங்களுடன், வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன் கோவில் தொடர்பானதும், கும்பாபிஷேகப் பணிகள் தொடர்பானதுமான செய்தி அறிக்கைகளுடன் ஆன்மீக மணம் கமழ இம்மலர் வெளியிடப்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36366).

## 14177

**ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமித்தி: வெள்ளிவிழா மலர் 1995.** மலர்க் குழு. கொழும்பு 6: ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா குடீர், 59, விவேகானந்தா வீதி, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு: செவ்வந்தி அச்சகம்).

(72) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x20 சமீ.

வாழ்த்துரைகள், ஆசியுரைகளைத் தொடர்ந்து இம்மலரில் ஓம் எனும் மந்திரம் (ஒரு பக்தை), The Holy Mother Sarada Devi, ஈழமணித் திருநாட்டில் ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமிதியின் தோற்றம், வளர்ச்சி, இலக்கு, Sri Ramakrishna Sarada Samiti in Sri Lanka Its Inception, Objectives, and Growth, பிரார்த்தனையும் வழிபாடும் (சுவாமி அஜராத்மானந்தா), சேவையின் சிகரமான மூவர் (பத்மா சோமகாந்தன்), பெண் கல்வியும் இந்தியப் பண்பாடும் சுவாமி விவேகானந்தரின் கருத்துக்கள் (சிவமணி பரராசசிங்கம்), பெண்களும் ஆத்மீக வாழ்வும், மேவியே ஒன்றாய் வாழ்ந்திடுவோம் மேதினியில் நாம் உயர்த்திடுவோம்-கவிதை (விஜயகுமாரி தங்கராஜா), பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் பாதையிலே (P.ஈஸ்வரி), அன்னை சாரதா தேவியார் இல்லறத்தில் துறவறம் பேணிய பெருந்தகை (பா.சுபாஜினி), பெண்ணிற் பெருந்தகை அன்னை ஸ்ரீ சாரதா தேவி (சோ.ராகுலன்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27132).

## 294.5(4) பக்தி இலக்கியங்கள்

### 14178

**அவனருள்.** மங்கையர்க்கரசி மயில்வாகனம். கொழும்பு: அமரர் இரா.மயில்வாகனம் முதலாண்டு நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 12: லீலா பிரஸ், 182, மெசெஞ்சர் வீதி).

(10), 71 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

ஆழ்ந்தகன்ற சைவசமயத்தின் மையக் கருத்துக்களையும் அச்சமயத்தின் தூண்களாக விளங்கக்கூடிய மெய்யடியார்களைக் குறித்தும், சமயசாதனை முறைகளைக் குறித்தும் இன்னும் சமயம் சார்ந்த பல கருத்துக்களையும் உள்ளடக்கிய 15 ஆன்மீகக் கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. மனித சாதிக்கு மதிப்பளித்த அன்பு மதம் சைவம், சிவனுள் சிவன், ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு, சும்மா இரு, ஞானம் பிறந்தது, நாம பஞ்சாட்சரம், தொண்டர் தம் பெருமை, மதுரபக்தியே சிறந்த பக்தி, துணையிலி பிண நெஞ்சே, குரு, சீரிய மனித வாழ்க்கைக்கு சமயத்தின் பங்களிப்பு, சொல், தெய்வத் திருக்குறள், தெய்வப்புலமை ஔவை, ஞானக்கண் ஆகிய தலைப்புக்களில் இவை இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 23955).

### 14179

**அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கீர்த்தனங்களும் தோத்திரப் பாமாலையும்.** தொகுப்பாளர் விபரமில்லை. அளவெட்டி: கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயம், 4வது பதிப்பு, 2005, 1வது பதிப்பு, 1915, 2வது பதிப்பு, 1948, 3வது பதிப்பு, 1975. (கொழும்பு 2: கிரபிக் ஆட் பிரின்ட், 57, வெலோன்ஸ் பசேஜ்).

(6), 115 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: அன்பளிப்பு, அளவு: 21x15 சமீ.

இந்நூலின் முதலிரு பதிப்புகளும் கீர்த்தனைகளை மாத்திரம் கொண்டவையாக வெளிவந்திருந்தன. 1975இன் பின் வெளியிடப்பெற்ற மூன்றாவது நான்காவது பதிப்புகள் தோத்திரப் பாடல்களையும் உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளன. கீர்த்தனங்களில் விநாயகர் அகவல், விநாயகர் கவசம், விநாயகர் ஜெபம், முருகன் ஜெபம், கந்தர் கவசம், கந்தர் சஷ்டி கவசம், நாமாவளி, சம்பந்தர் தேவாரம், திருநீற்றுப் பதிகம், கோளறு பதிகம், அப்பர் தேவாரம், சுந்தரர் தேவாரம், மாணிக்கவாசகர் திருவாசகம், சிவபுராணம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமூலர் திருமந்திரம், பெரிய புராணம், திருப்புகழ், முருகன் பெயரில் கதிர்காமம் இராமலிங்க சுவாமிகள்

*பாடல்கள் என்பவையும் தோத்திரங்கள் என்ற பிரிவில் பட்டினத்தடிகள் பாடல், தாயுமானவர் பாடல், சுத்தானந்தர் பாடல், சரஸ்வதி தோத்திரம், சகலகலாவல்லி மாலை, திவ்விய பிரபந்தம், திருமுறையோதல், வாழ்த்து ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 40413).*

## 14180

**அற்புதங்கள் அறுபத்து நான்கு: சிவனார் திருவிளையாடல்கள்.** இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு *(தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு, 1வது பதிப்பு, 2019. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை,* F.L. *1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*

xlii, *252 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22*x*14 சமீ.,* ISBN: *978-955-705-256-4.*

*17ஆம் நூற்றாண்டில் பரஞ்சோதி முனிவரால் அருளப் பெற்ற திருவிளையாடற் புராணத்தில் அமைந்துள்ள சிவபெருமானின் 64 திருவிளையாடல்களையும் எளிமையான உரைநடையில் எவரும் புரிந்துகொள்ளும் வகையில் 64 அத்தியாயங்களில் ஆசிரியர் வடித்துத் தந்திருக்கிறார். மாணவரும் இளவயதினரும் வாசித்து எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய உரைநடை. பொருத்தமான இடங்களில் திருவிளையாடற் புராணப் பாடல்களையும் சுவைகருதி இணைத்திருக்கிறார். நூலின் ஆரம்பத்திலேயே மூல ஆசிரியர் பரஞ்சோதி முனிவர் பற்றியும், அக்காலத்தைய மதுரை மாநகரின் காட்சியினையும் தனித்தனி இயல்களில் தந்து எம்மை அந்தக் காலத்திற்கே அழைத்துச் சென்றுவிடுகிறார். திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு தன் ஆரம்ப இடைநிலைக் கல்வியை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கற்றுத்தேர்ந்தவர். சென்னையில் முதற் பட்டமும், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டமும் பெற்றவர். 1950களில் அரச கல்வித்துறையில் இணைந்து தனது ஆளுமைத் திறத்தினால் அதிபர் சேவையை அடைந்தவர். யாழ். உயர் தொழில்நுட்பக்கல்லூரியில் ஆங்கில விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். இலங்கை வானொலியில் சைவநற்சிந்தனைகள் ஆற்றிவந்த இவர், யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியர் சங்கத்தின் வெளியீடான "யாழ் நாதம்" மலரின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். இசைத்துறையில் ஈடுபாடு கொண்ட இவர் சிறந்ததொரு வீணைக் கலைஞருமாவார். இலங்கையின் பிரபல வீணைக்கலைஞர் திருமதி ராதை குமாரதாஸ் இவரது மகளாவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64659).*

## 14181

**ஆரையம்பதியும் ஆலயங்களும்.** *பதியூரான் ச.ஜெயந்தன். ஆரையம்பதி: சந்திரசேகரம் ஜெயந்தன், இராஜதுரைக் கிராமம், 1வது பதிப்பு, 2009. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 126/1, திருமலை வீதி).*

*52 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21*x*15 சமீ.*

மட்டக்களப்பின் மண்முனைப்பற்றின் பழம்பதியான ஆரையம்பதியில் பிறந்தவர் ஜெயந்தன். கவிவடிவில் அமைந்துள்ள இந்நூல், ஆரையம்பதி மண்ணின் பெருமையையும் அதில் அமைந்துள்ள கோவில்கள் பற்றிய பெருமைகளையும் இனிய தமிழ்க் கவிதைகளாகவே வழங்குகின்றது. தமிழ் மொழியும் ஆரையம்பதியும், ஆரையூர்க் கந்தன், அருள்தரும் கண்ணகி அம்மன், விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர், கிழக்கு பக்க சிவபெருமான், பௌர்ணமித் தாயாய் காளிஅம்பாள், பாங்குடனே பரமநயினார், பலமூர்த்தமாய் வைரவர், மகமாயி மாரியம்மா, பள்ளயத்துப் பேச்சியம்மன், அவதார புருஷராய் நரசிங்கர், வீரத்தின் சிகரம் ஆஞ்சநேயன், காத்தருளும் நாகதம்பிரான், குழல் ஊதும் கண்ணன், அழகு தரும் மதுரைவீரன், குடிமரபும் திருவிழாக்களும், கூத்துக்கலையும் ஆரையம்பதியும், ஆரையம்பதியும் ஆயுர்வேத வைத்தியமும், ஆரையம்பதியும் திருமந்திரமும், பெரும்பதியாய் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர், சமாதானம் வேண்டி இறைவனோடு ஆகிய 21 கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4308).

### 14182

**ஆறுமுகப் பாலன் இவன் ஆற்றங்கரை வேலன்.** வ.ஆ.அதிரூபசிங்கம். வல்வெட்டித்துறை: வ.ஆ.அதிரூபசிங்கம், அம்மன் கோவிலடி, 1வது பதிப்பு, ஜுலை 2010. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

x, 81 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ., ISBN: 978-955-52854-0-7.

முருகன் புகழ்பேசும் படைப்பாக்கங்களை இலக்கிய நயத்துடனும், ஆன்மீக மணத்துடனும் இந்நூலில் எழுதி வழங்கியுள்ளார் வ.ஆ.அதிரூபசிங்கம் (24.08.1938-06.07.2017). இந்நூலாசிரியர், வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49216).

### 14183

**இல்லைத் துன்பமே: மூவர் அருளிய திருவைந்தெழுத்துப் பதிகங்கள்.** சோ. சண்முகசுந்தரன். கொழும்பு 6: சோ.சண்முகசுந்தரன், இல.5, மூர் வீதி, வெள்ளவத்தை, 3வது பதிப்பு, வைகாசி 1998. (கொழும்பு 2: கலர் டொட்ஸ், 31/21,டோசன் வீதி).

40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 13.5x11 சமீ.

இச்சிறு பிரசுரத்தில் திருஞானசம்பந்தர் அருளிய ஐந்தெழுத்துத் திருப்பதிகம், மூன்றாம் திருமுறை ஆகியனவும், திருநாவுக்கரசர் அருளிய நான்காம் திருமுறையும், சுந்தரர் அருளிய ஏழாம் திருமுறையும் பாடிப்பணிந்தேத்த ஏற்றவகையில்

கையடக்கப் பதிப்பாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16710).

## 14184

**ஈசுபரன் அகவலும் கந்தசுவாமி காவியமும்.** சி.கணபதிப்பிள்ளை. நிந்தவூர்: சி.கணபதிப்பிள்ளை, இளைப்பாறிய தலைமை ஆசிரியர், அட்டப்பளம், 1வது பதிப்பு, நவம்பர் 1977. (கல்முனை: ஆனந்தா அச்சகம், 87, பிரதான வீதி).

(8) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x12.5 சமீ.

இந்நூலில் 191 வரிகளில் அமைந்த ஈசுபரன் அகவலும், பன்னிரு எண்சீரடிகளில் அமைந்த கந்தசுவாமி காவியமும் ஒருங்கே இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 02464).

## 14185

**கதிரேசன்பேரில் ஆனந்தக் களிப்பு.** ஆசிரியர் பெயர் அறியமுடியவில்லை. கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை, 175, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, 1947. (சென்னை: T.R.பாலகிருஷ்ண முதலியார், கலைமகள் விலாசம் பிரஸ், திருவொற்றியூர்).

54 பக்கம், விலை: 12 அணா, அளவு: 21x13 சமீ.

இந்நூல் 732 செய்யுள் வரிகளைக் கொண்ட, கதிரேசன்பேரில் ஆனந்தக்களிப்பு, 192 செய்யுள் வரிகளைக் கொண்ட கதிர்காமத்து யேசல், 536 செய்யுள் வரிளைக் கொண்ட கதிர்காமக் கும்மி, 14 வரிகளைக் கொண்ட மங்களம் ஆகிய நான்கு படைப்புகளை உள்ளடக்கியுள்ளது. இந்நூல் தமிழகத்தில் இராமசாமி பிள்ளை அவர்களால், சென்னை, ஸ்ரீ பத்மநாப விலாச அச்சுக்கூடத்திலும், சென்னை, வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திலும், 1903ஆம் ஆண்டில் பல பதிப்புகள் அச்சிட்டு வெளியிடப்பட்டிருந்தது. மேலும், டீ. இரத்தின நாயகர் அன்ட் சன்ஸ் கம்பெனியாலும் 1926இல் சென்னை திருமகள் விலால அச்சியந்திரசாலையில் அச்சிட்ட வெளியிடப்பட்டள்ளது. 1947இல் இலங்கையில் கொழும்பு சரஸ்வதி புத்தகசாலையினர் விற்பனையுரிமை பெற்று மீண்டும் இதனை இலங்கையில் வெளியிட்டுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 02460).

## 14186

**கந்தபுராண அமுதம்.** ஸ்ரீவிசுவாம்பா விசாலாட்சி மாதாஜி. தெல்லிப்பழை: அருள் ஒளி (மாத சஞ்சிகை), ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், 1வது பதிப்பு, நவம்பர் 2005. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(12), 132 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தினால் மாதாந்த ஆன்மீக சஞ்சிகையாக வெளியிடப்பட்டுவந்த "அருள் ஒளி" இதழ்களில் புலவர் ஸ்ரீவிசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அவர்கள் "கந்தபுராண அமுதம்" என்ற

தலைப்பில் தொடர் கட்டுரைகளை எழுதிவந்தார். அவற்றை ஒன்றுதிரட்டி நூலாக மேற்படி தேவஸ்தானத்தினர் வெளியிட்டுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37604).

## 14187

**கந்தபுராணச் சுருக்கம்.** த.குமாரசுவாமிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: த.குமாரசுவாமிப்பிள்ளை, ஆசிரியர், ஸ்ரீ இராமநாத வித்தியாலயம், 1வது பதிப்பு, 1948. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xii, 131 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

கந்தபுராணம் 10345 செய்யுள்களைக் கொண்டது. பல்வேறு உபகதைகளைக் கொண்டதால் விரிந்து செல்லுவது. இப்புராணக் கதைகளை இளஞ்சிறார்களும் படிக்கும் வண்ணம் சுருக்கி பல்வேறு படலக் கதைகளை ஒவ்வொரு தலையங்கங்களில் அடக்கி ஐம்பது பாடங்களாக இந்நுலை ஆசிரியர் எழுதியுள்ளார். திருக்கைலாசம், உமையம்மை மலைமகளானது, மேருமலையின் நிகழ்ச்சி, காமதகனம், மோனம் நீங்கியது, திருமணம், முருகன் திருவவதாரம், முருகன் திருவிளையாட்டு, பிரமனைச் சிறையிட்டது, பிரமனைச் சிறை நீக்கியது, விடைபெற்றுப் போருக்குப் புறப்படல், தாரகன் வதை, அசுரேந்திரன் மகேந்திரம் சென்றது, குமாரபுரி, மாயை வரலாறு, மார்க்கண்டேயர், மாயை உபதேசம், அசுரர் யாகஞ்செய்து வரம் பெற்றது, சுக்கிரன் உபதேசம், திக்கு விஜயம், பட்டாபிஷேகம், அரசு செய்தது, புதல்வரைப் பெறுதல், இந்திரன் மறைந்திருந்தது, விந்தமலை, வில்வலன் வாதாவி வதை, காவிரி நீங்கியது, திருக்குற்றாலம், தேவர் புலம்பல், மகாசாத்தா, அசமுகியும் அயிராணியும், சூரன் தண்டஞ்செய்தல், வீரவாகு தேவர் தூதுசெல்லல், சூரன் அமைச்சியல், போர் தொடங்குதல், சூரபதுமன் வதை, தெய்வயானை அம்மை திருமணம், விண்குடியேற்றியது, தக்கன் தவம், தக்கன் மகப்பெற்றது, உமை தக்கன் மகளானது, பிரமதேவன் யாகஞ்செய்தது, ததீசி முனிவர், ததீசி உத்தரம், கயமுகன் தோற்றம், தக்கன் யாகம், யாக சங்காரம், அடி முடி தேடியது, கந்த விரதம், வள்ளியம்மை திருமணம் ஆகிய 50 பாடங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21749).

## 14188

**கந்தபுராணம் ஒரு பண்பாட்டுக் களஞ்சியம்.** நா.சுப்பிரமணியன். சென்னை 600017: கலைஞன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2002. (சென்னை 600021: சக்தி பிரின்டர்ஸ்).

320 பக்கம், விலை: இந்திய ரூபா 90.00, அளவு: 18x12 சமீ.

காஞ்சீபுரம் குமரகோட்டத்து அருச்சகரான கச்சியப்ப சிவாசாரியார் வடமொழியில் எழுதப்பட்டிருந்த "ஸ்காந்த புராணம்" என்ற நூலைத் தழுவித் தமிழில் எழுதிய கந்தபுராணம் என்ற பேரிலக்கியம் பற்றிய திறனாய்வு நிலையிலான அறிமுக நூல் இது. கந்தன் எனப்படும் முருகப் பெருமானைத் தலைமைப் பாத்திரமாகக்

கொண்டு அவரை சிவபெருமானின் அம்சமாகக் காட்டுவதால் சைவ நூலாக அமைந்த இவ்வாக்கம் புராணப்பண்பு, காவியப்பண்பு என்பவற்றின் கலவையாக அமைந்ததாகும். சமயம் என்ற எல்லைக்கு அப்பால் சமூகம் சார்ந்த பொது மானுடத்தின் வாழ்வியல் நெறிகளையும் உணர்த்துவதால் இது ஒரு வாழ்வியல் நூலாகின்றது. இந்திய மண்ணின் ஒரு காலகட்டத்து கலை மற்றும் அறிவியல், பழக்க வழக்கங்கள் முதலியவற்றையும் பதிவு செய்வதால் இது பண்பாட்டுக் களஞ்சியமாகவும் மதிக்கப்பெறுகின்றது. அறிமுகம், தக்கன் கதை-ஒரு அதிகார நாடகம், அவுணர் எழுச்சி-ஒரு பழிவாங்கு படலம், ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய, தூதும் அமைச்சியலும்-ஒரு தத்துவ விவாத மேடை, கச்சியப்பர் காட்டும் போர்க்களம்-புறப்போரும் அகப்போரும், மணமங்கலம்-மரபுசார் சில பதிவுகள், கிளைக் கதைகள், சிறப்புச் செய்திகள்-பண்பாட்டுக் கோலங்களின் பதிவுகள், நிறைவாக ஆகிய பத்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 30991).

## 14189

**கந்தபுராணம்: சூரபன்மன் வதைப் படலம்.** நீர்வேலி கந்தசுவாமி கோவில் பரிபாலன சபை. நீர்வேலி: சிதம்பரநாதர் வல்லிபுரம் சந்ததியினர், கந்தசஷ்டி உற்சவகொடியேற்ற உபயகாரர், கந்தசுவாமி கோவில், 1வது பதிப்பு, 2017. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

viii, 381 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15.5 சமீ.

அமரர் சுவாமிநாதக் குருக்கள் இராசேந்திரக் குருக்கள் (22.06.1925-அவர்களது மறைவின் பதினேழாவது ஆண்டு நினைவு வெளியீடு. நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் பெரும் திருவிழாவுக்கு முன்பாக கந்தபுராணமும், கந்தசஷ்டிஉற்சவ காலத்தில் யுத்த காண்டமும், திருவெம்பாவைக் காலத்தில் திருவாதவூரடிகள் புராணமும் படித்துப் பயன் சொல்லும் மரபு தொன்றுதொட்டு இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## 14190

**கந்தபுராணம்: முதலாவது உற்பத்திக் காண்டம்.** கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் (மூலம்), பிரம்மஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: பிரம்மஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள், தும்பைநகர், பருத்தித்துறை, 1வது பதிப்பு, 1907. (பருத்தித்துறை: கலாநிதி யந்திரசாலை).

746 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

**கந்தபுராணம்: முதலாவது உற்பத்திக் காண்டம்.** கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் (மூலம்), பிரம்மஸ்ரீ ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: மறவன்புலவு மு.கணபதிப்பிள்ளை, காந்தளகம், 213, காங்கேசன்துறை வீதி, 3வது பதிப்பு, தை 1984, 1வது பதிப்பு, 1907. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி).

(20), 802 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 25x18.5 சமீ.

இந்நூல் கடவுள் வணக்கம், உபோற்காதம், சிவபுராண படனவிதி, கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் சரித்திரச் சுருக்கம், புராணபடன விதி (பாயிரம், கடவுள் வாழ்த்து, அவையடக்கம், ஆற்றுப்படலம், திருநாட்டுப் படலம், திருநகரப் படலம், பாயிரப் படலம்), ஆகிய ஆரம்பப் பக்கங்களைத் தொடர்ந்து, திருக்கைலாசப் படலம், பார்பதிப் படலம், மேருப் படலம், காமதகனப் படலம், மோனநீங்கு படலம், தவங்காண் படலம், மணம்பேசு படலம், வரைபுனை படலம், கணங்கள்செல் படலம், திருக்கல்யாணப் படலம், திருவவதாரப் படலம், துணைவர் வரு படலம், சரவணைப் படலம், திருவிளையாட்டுப் படலம், தகரேறு படலம், அயனை சிறைபுரி படலம், அயனைச் சிறைநீக்கு படலம், விடைபெறு படலம், படையெழு படலம், தாரகன்வதைப் படலம், தேவகிரிப் படலம், அசுரேந்திரன் மகேந்திரஞ்செல் படலம், வழிநடைப் படலம், குமாரபுரிப் படலம், சுரம்புகு படலம், திருச்செந்திப் படலம், ஆகிய அத்தியாயங்களில் கந்தபுராணத்தின் உற்பத்திக் காண்டம் விரிந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9122).

## 14191

**குஞ்சிதபாதம்: இந்து சமயச் சிந்தனைக் கட்டுரைகள்.** சோ.குஹானந்த சர்மா. கொழும்பு 13: சோ. குஹானந்த சர்மா, 136/28, ஜோர்ஜ் ஆர் த. சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 1999. (கொழும்பு: க.தியாகராசா, உரிமையாளர், ஓட்டோ அச்சகம்).

37 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இந்து வித்யாநிதி பிரம்மஸ்ரீ சோ. குஹானந்த சர்மா அவர்கள் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியிட்டுவந்த இந்து சமயச் சிந்தனைக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். மேற்படி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகத்தின் போது 23.06.1999 அன்று வெளியிடப்பட்டது. 1949ஆம் ஆண்டு முதல் ஐம்பது வருடங்களாக கொழும்பு ஸ்ரீ சிவகாமசௌந்தரி சமேத ஸ்ரீ பொன்னம் பலவாணேஸ்வரத்தில் சிவாச்சார்ய பணிகளை செய்து கொண்டிருப்பதுடன் தனது பணிக் காலத்தில் மூன்றாவது கும்பாபிஷேகத்தையும் இக்கோயிலில் செய்து முடித்தவரான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்களை கௌரவிக்கும் வகையில் இந்நூலுக்கு குஞ்சிதபாதம் என்ற பெயரை ஆசிரியர் இட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 025734).

## 14192

**கேதாரீஸ்வரர் விரத மகிமை.** அம்பிகா பான்சி றேடர்ஸ் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: அம்பிகா பான்ஸி றேடர்ஸ், 9, நவீன சந்தை, 1வது பதிப்பு, நவம்பர் 1986. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம், 575, காங்கேசன்துறை வீதி).

*16 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 18.5x12.5 சமீ.*

*1.11.1986 அன்று, வண்ணார்பண்ணை காமாட்சி அம்பாள் ஆலயத்தில் (நாச்சிமார் கோவில்), கேதாரகௌரி விரத நாளன்று அமரர்கள் சின்னையா முத்துக்குமாரு, செல்லம்மா முத்துக்குமாரு ஆகியோரின் ஞாபகார்த்தமாக அம்பிகா பான்சி றேடர்ஸ் வர்த்தக நிலைய உரிமையாளரால் வெளியிடப்பெற்ற சிறு நூல் இது. வரலாறும், விரதம் அனுஷ்டிக்கும் முறைகளும், பயன்களும் பற்றிய அறிமுகக் கட்டுரையுடன், கேதாரீஸ்வரர் விரத நோன்பு பூஜாவிதி, மந்திர சுலோக தோத்திரங்கள் என்பனவும் இதில் இடம்பெற்றுள்ளன. கேதாரகௌரி விரதம் என்பது சிவபெருமானுக்குரிய விரதங்களுள் ஒன்றாகும். ஆண்டுதோறும் புரட்டாதி மாதம் சுக்ல பட்ச தசமியில் இவ்விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. இவ்விரத்தத்தினைப் பொதுவாக பெண்களே அனுட்டிப்பர். கேதாரம் என்பது இமயமலைசாரலைக் குறிப்பதாகும். மலையைச் சார்ந்த வயல் பகுதியை கேதாரம் என்பர். இந்த இமயமலைக் கேதாரப் பகுதியில் சுயம்பு லிங்கமாக கேதாரேஸ்சுவரர் தோன்றினார். சக்திரூபமான பார்வதி தேவி சிவனை நினைந்து வழிபட்டு அதன் பலனாக அர்த்தநாரியாகவும், அர்த்தநாரீசுவராகவும் ஒன்றுபட்ட தினமே கேதார கௌரி விரதமாகும். வயலில் ஆலமரத்தடியில் இருந்து இவ்விரதம் அனுஷ்டிக்கப்பட்டதால் கேதாரகௌரிவிரதம் எனவும் ஈசனை வழிபடுகின்ற படியால் கேதாரேஸ்வரி விரதம் எனவும் பெயர் பெறுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 003001).*

## 14193

**கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) நால்வர் வழிபாடு.** *செ.இரத்தினப்பிரகாசம் (பதிப்பாசிரியர்). கொக்குவில்: கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்), 1வது பதிப்பு, நவம்பர் 2003. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).*

xviii*, 94 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.*

*இந்நூலில் செ.வேலாயுதபிள்ளை எழுதிய நால்வர் வழிபாடு (வரலாற்றுப் பின்னணி, சைவ வரலாறு, நால்வர் வாழ்க்கையும் சாதனையும் போதனையும், திருநாவுக்கரசர் வாழ்க்கைச் சுருக்கம், திருஞானசம்பந்தர் வாழ்க்கைச் சுருக்கம், சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்க்கைச் சுருக்கம், மாணிக்கவாசக சுவாமிகள் வாழ்க்கைச் சுருக்கம், நால்வர் தோத்திரப் பாடல்கள்), பண்டிதர் ச.சுப்பிரமணியம் எழுதிய நடராஜமூர்த்தி துதி (நடேச மகிமா தமிழாக்கம்), கா.நீலகண்டன் எழுதிய கொக்கூர் மும்மணி மாலை, ச.சபாரத்தின முதலியார் இயற்றிய கிருபாகர சுப்பிரமணியர் ஊஞ்சல் ஆகிய பக்தி இலக்கியங்கள் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 037072).*

### 14194

**சிவபுராணம்**. மாணிக்கவாசகர் (மூலம்). யாழ்ப்பாணம்: இந்து மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு 1988. (அச்சக விபரம் தரப்படவில்லை).

18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

1988 சிவராத்திரி தினத்தையொட்டி யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத்தினரால் அச்சிட்டு விநியோகிக்கப்பெற்ற நூல் இது. மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசக புராணத்தையும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பையும் இச்சிறுநூல் உள்ளடக்குகின்றது. சிவராத்திரி மகிமை பற்றி காஞ்சி காமகோடி பீடம் அருள்மிகு ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகளின் உரையும், கலாநிதி என்.ரமேசன் வழங்கிய "இலிங்கோற்பவ மூர்த்தி" என்ற கட்டுரையும் சிங்கள, ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட சிவராத்திரி தொடர்பான கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16710).

### 14195

**சிவராத்திரி மலர்**. பா.சிவராமகிருஷ்ண சர்மா (பதிப்பாசிரியர்). சிலாபம்: பா.சிவராமகிருஷ்ண சர்மா, 144, முன்னேஸ்வரம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 02: The Colombo Cooperative Printers' Society Ltd.,72, Kew Road).

40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

சிவபிரான் (ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி), சிவராத்திரி (ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடாதிபதி), வடிவழகி (கி.வா.ஜகந்நாதன்), சிவலிங்கத் தத்துவப் பொருள் (சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள்), கந்தபுராணத்தில் சிவராத்திரி மகாத்மியம் (சி.கணபதிப்பிள்ளை), சோதனை (கிருபானந்த வாரியார்), அம்பலத்தான் ஆடலிது (பா.சிவராமகிருஷ்ண சர்மா), அண்ணலின் அருளுங் கோலம் (கா.கைலாசநாதக் குருக்கள்), சிவமகிமை (எஸ்.ஸ்ரீநிவாச சர்மா), Important Phases of Hinduism (G.Sundaramoorthy), Gods and Goddesses of Hindus (Swami Tilak Bharat), Maha Sivaratri Vrata and it's Significance (K.Balasundarak Kurukkal), Maha Sivaratri (The Great Night of Lord Siva), Siva Ratriya (Sinhala Article by B.S.Sarma) ஆகிய ஆக்கங்கள் இப்பிரசுரத்தில் இடம்பெற்றுள்ளன.

### 14196

**சிற்றம்பலநாடிகள் அருளிய திருச்செந்தூரகவல் மூலமும் விளக்கவுரையும்**. சிற்றம்பல நாடிகள் (மூலம்), பொன்.அ.கனகசபை (விளக்கவுரை). புங்குடுதீவு 3: ச.தம்பையா, புங்குடுதீவு சிவதொண்டர் வெளியீடு, 1வது பதிப்பு, 1981. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 430,காங்கேசன்துறை வீதி).

xviii, 169 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

*"திருமுருகன் குருமூர்த்தியாய் எழுந்தருளி, திருவருள் செய்யப்பெற்ற பெரும்பேறு படைத்தவர்களுள் சீகாழிச் சிற்றம்பல நாடிகள் ஒருவர். மெய்கண்ட சந்தான சீட பரம்பரையில் உள்ளவர் இந்தச் சிற்றம்பல நாடிகள். இவர் திருச்செந்தூர்த் திருமுருகன் சந்நிதியில் தவமிருந்து, இளமையும் அழகும் ஒழுகி வழியும் திருமுருகன் திருவுருவை நேரில் தரிசித்த காட்சிகளையும், திருமுருக குருமூர்த்தி, தீட்சைசெய்து, உபதேசித்தவைகளையும், செய்யுள் வடிவில், சுப்பிரமணியர் அகவல் என்ற பெயரில் உபகரித்தருளி தாம் பெற்ற அருள்வளத்தை, பெறவிரும்பியோரையும், பெறுதற்கு ஆற்றுப்படையும் அருளியிருக்கிறார். அகவல் அடிப்படையிலிருந்து சுத்தாத்துவித முத்திவரை, சைவசித்தாந்த உண்மையை எடுத்துக்காட்டுவதாயும் அமைந்திருக்கின்றது. இந்த அருண்ஞான பொக்கிஷம் நித்திய பாராயணத்துக்கும் சமய சிந்தனைக்கும் கிடைத்ததொரு தேவாமிர்தம். சுப்பிரமணியர் அகவலைப் பன்னிரு வருடம் பாராயணம் செய்து, அதற்கு ஒரு நல்ல தெளிவான விளக்கவுரை செய்திருக்கின்றார் வித்துவான் திரு. பொன். அ.கனகசபை அவர்கள். வித்துவான் அவர்களின் மனத்தூய்மையும் ஆழமான சமய சிந்தனையும், விரிந்து பரந்த நூலாராய்ச்சியும் பிரசித்தமானவை. உரையில் எடுத்தாண்ட பிரமாண நூல்களின் அட்டவணை அநுபந்தமாய் வருவது நன்று". (பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, அணிந்துரையில்). (இந்நூல் புங்குடுதீவு சர்வோதய மத்திய நூலகத்தில் பார்வையிடப்பட்டது).*

## 14197

**சுவிஸ்-பேர்ண் ஞானலிங்கேச்சரர் திருப்பள்ளியெழுச்சி**. ச.வே.பஞ்சாட்சரம். *சுவிட்சர்லாந்து: செங்கோடன் பஞ்சாட்சரம், சூரிச், 1வது பதிப்பு, ஆடி 2019.* (Canada: Silver Print House, 5030, Heatherleigh Ave Unit No. 60, Mississauga, Ontario, L5V 2G7).

*8 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 13.5*x*10.5 சமீ.*

*கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள், தெய்வத் தமிழில் கருவறையில் செந்தமிழ்த் திருமறை வழிபாட்டினை ஓங்குவிக்கும் சுவிட்சர்லாந்தின் பேர்ண் நகரில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சரர் பெருமானுக்கு இறையின்பச் செவிகுளிர அழகு தமிழில் திருப்பள்ளியெழுச்சியை, இறை அடியார்கள் இலகுவில் விளங்கிக்கொள்ளும் வகையில் எளிமையான நடையில் கையடக்க நூலுருவில் அமைத்து இலவச வெளியீடாக வழங்கியுள்ளார்.*

## 14198

**சைவசமயத் திருமுறைப் பாராயணத்திரட்டு.** மகாதேவ ஆச்சிரமம். *கொழும்பு 12: தாளையான் அச்சகத்தினர், 115 மெசெஞ்சர் வீதி, 1வது பதிப்பு, 1975. (கொழும்பு 12: தாளையான் அச்சகத்தினர், 115 மெசெஞ்சர் வீதி).*

v, *(4), 104 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14 சமீ.*

மகாதேவ ஆச்சிரமம் தவத்திரு வடிவேல் சுவாமிகளின் வேண்டுகோளுக்கிணங்க கொழும்பு தாளையான் அச்சகத்தினரால் தொகுத்துப் பதிப்பிக்கப்பெற்று இலவசமாக அன்பர்களுக்கு வழங்கப்பெற்ற பிரசுரம். சற்குரு வணக்கம், அநுபூதி பெற வழி, முகவுரை, அணிந்துரை ஆகியவற்றுடன், திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம், திருமாளிகைத் தேவர் அருளிய திருவிசைப்பா, சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, தாயுமான சுவாமிகள் பாடல், திருமந்திரம், பட்டினத்தடிகள் பாடல், பரஞானத்தின் பயன், ஔவை குறள் ஆகிய 19 திருமுறைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33205).

## 14199

**சோமவார விரத மகிமை.** மறவன்புலோ மு.கணபதிப்பிள்ளை. யாழ்ப்பாணம்: காந்தளகம், 212 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1981. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி).

12 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

சோமவார விரதத்தின் மகிமை பற்றிப் பேசும் இச்சிறுநூல் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருவாலவாய் திருநூற்றுப் பதிகத்துடன் கூடியது. சோமவார விரதம் சைவ மக்களால் கடைப்பிடிக்கப்படும் சிவனுக்குரிய விரதங்களில் ஒன்று. கார்த்திகை மாதத்தில் வரும் திங்கட்கிழமை தோறும் சிவபெருமானை குறித்து அநுட்டிக்கப்படும் விரதமாகும். இவ்விரதத்தை உபவாசமாக அநுட்டிப்பது உத்தமமானது என்பர். இவ்விரதத்தை வாழ்நாள் முழுவதும் அநுட்டித்தல் வேண்டும். அப்படிச் செய்ய முடியாதவர்கள் பன்னிரண்டு வருட காலமாயினும், மூன்று வருட காலமாயினும் அநுட்டிக்கலாம். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 09499).

## 14200

**தடுத்தாட்கொண்ட புராணம்.** கனகசபாபதி நாகேஸ்வரன். யாழ்ப்பாணம்: திருவாளர் வைத்திலிங்கம் சுப்பிரமணியம், திருமதி சுப்பிரமணியம் பவளம் தம்பதியின் நினைவு வெளியீடு, மணியர்பதி, கொக்குவில், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1989. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ வாலாம்பிகா அச்சகம், 422, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை).

(10), 40 பக்கம், விலை: ரூபா 20.00, அளவு: 21x14 சமீ.

பல்கலைக்கழக உள்வாரி/வெளிவாரிப் பட்டதாரி மாணவருக்கென உருவாக்கப்பட்ட இப்பாடநூலில் செய்யுள் உருவில் தடுத்தாட்கொண்ட புராணம் முற்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இவ்வாசிரியர் எழுதி, 1978இல் யாழ்ப்பாண வளாக இந்து மன்ற வெளியீடான இந்துநெறி சஞ்சிகையில் பிரசுரமாகியிருந்த

"சேக்கிழார் காட்டும் ஆன்மீக உலகு" என்ற கட்டுரையும் பக்கம் 31-30களில் இடம்பெற்றுள்ளது.

### 14201

**தமிழ் அகதிகளுக்காக மாமாங்கப் பிள்ளையார் தோத்திரம்.** ந.மா.கேதாரபிள்ளை (பதிப்பாசிரியர்). மட்டக்களப்பு: ந.மா.கேதாரபிள்ளை, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, 1வது பதிப்பு, மார்ச் 2007. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).

(10) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

இந்நூலில் எட்டு வரிகளில் அமைந்த 40 செய்யுள்கள் இடம்பெற்றுள்ளன. சித்தாயுர்வேத வைத்தியராகப் பணியாற்றும் கவிஞர் ந.மா.கேதாரபிள்ளை, வழக்கிழந்துபோகும் பழம் நூல்களை மீளப் பதிப்பித்து விற்பனைசெய்யும் பணியிலும் மட்டக்களப்பிலிருந்து பலகாலம் ஈடுபட்டு வந்துள்ளார். (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது).

### 14202

**தமிழ் வேதப்பாமாலை.** அருள் சுவாமிநாதன் (தொகுப்பாசிரியர்). அச்சுவேலி: இடைக்காடு இந்துநெறிக் கழகம், இடைக்காடு, 1வது பதிப்பு, மார்ச் 1995. (கொழும்பு 6: கார்த்திகேயன் பிரின்டர்ஸ், 501/2 காலி வீதி, வெள்ளவத்தை).

60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

திருஞான சம்பந்த நாயனார் தேவாரம், திருநாவுக்கரசு நாயனார் தேவாரம், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம், மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராந் திருமுறை, பன்னிரண்டாந் திருமுறை, திருப்புகழ், வாழ்த்து, விநாயகரகவல்-ஔவையார், சிவபுராணம்-மாணிக்கவாசக சுவாமிகள், ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஸ்தோத்திரம், துக்க நிவாரண அஷ்டகம், கந்தசஷ்டி கவசம்-பாலன் தேவராயர், பெருமாள் திருமொழி, சரஸ்வதி தோத்திரம், இலக்குமி தோத்திரம், அபிராமி அந்தாதி ஆகிய பக்தி இலக்கியங்களின் தேர்ந்த தொகுப்பாக இந்நூல் பிரார்த்தனைகளில் பாடுவதற்கேற்ப பிரசுரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17274).

### 14203

**தமிழ் வேதம் தந்த கணபதி.** கந்தையா பத்மானந்தன். காரைநகர்: அம்மாத்தை வெளியீட்டகம், வாரி வளவு, 1வது பதிப்பு, 2019. (தெகிவளை: அனுபவ பதிப்பகம், Creaze Digital, 14, அத்தபத்து டெரஸ்).

x, 88 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-5222-05-6.

இந்நூலில் ஆசிரியர் அவ்வப்போது எழுதியிருந்த சிவபுராணம் எனும் சைவ சித்தாந்தத் தேன், தமிழ் வேதம் தந்த கணபதி, திருவாசகத்தில் அன்புநெறி, திருமுறைகளில் திருநீறு, திருமந்திர விஞ்ஞானம் ஆகிய ஐந்து கட்டுரைகள்

இடம்பெற்றுள்ளன. "சிவபுராணம் எனும் சைவ சித்தாந்தத் தேன்" என்ற கட்டுரை சைவ சித்தாந்த நோக்கில் சிவபுராணத்தின் பெருமைகளை எடுத்தியம்புகின்றன. ஏனைய தத்துவ இலக்கியங்களுடன் ஒப்புநோக்கி இக்கட்டுரையை ஆசிரியர் படைத்துள்ளார். "தமிழ் வேதம் தந்த கணபதி" என்ற இரண்டாவது கட்டுரை திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரைக் குறித்து நின்றாலும் இலக்கியங்களில் சுட்டப்படும் விநாயகர் பற்றிய செய்திகளைத் திரட்டித் தருகின்றது. "திருவாசகத்தில் அன்புநெறி" என்ற மூன்றாவது கட்டுரை தேனினிய திருவாசகத்தில் உள்ள பக்திநெறி பற்றிக் குறிப்பிடுகிறது. அன்புவாழ்வு தான் சைவநெறிநின்ற வாழ்வு, அன்பு நெறியே சைவநெறி என்பதைப் பொருத்தமான சான்றுகளுடன் கட்டுரையாளர் விளக்குகின்றார். "திருமுறைகளில் திருநீறு" என்ற கட்டுரை சிவசின்னங்கள் பற்றிய பெருமைகளை எடுத்தியம்புகின்றது. அவற்றுள் திருநீறு பெறும் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. "திருமந்திர விஞ்ஞானம்"என்ற இறுதிக் கட்டுரை விஞ்ஞான அணுகுமுறையுடன் திருமந்திரத்தை நோக்குகின்றது. திருமந்திரத்தை இயற்கை அறிவியலுடன் தொடர்புபடுத்தி பெருவெடிப்புக் கோட்பாடு, நிலைப்புக் கோட்பாடு, துடிப்புக் கோட்பாடு என்பவற்றைத் திருமந்திரம் ஊடாகத் தரிசிக்கிறார். நூலாசிரியரின் விஞ்ஞானப் புலமை இக்கட்டுரையின் செழுமைக்கு வாய்ப்பாகியுள்ளது.

## 14204

**தான்தோன்றுமீசுரர் தோத்திரப் பாடல்.** த.சதாசிவம். பளுகாமம்: ந.மா.கேதாரபிள்ளை, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, 1வது பதிப்பு, 1940. (மட்டக்களப்பு: ஜெஸ்கொம் அச்சகம்).

(8) பக்கம், விலை: ரூபா 30.00, அளவு: 21x15 சமீ.

இந்நூலில் எட்டு வரிகளில் அமைந்த 32 செய்யுள்கள் இடம்பெற்றுள்ளன. சித்தாயுர்வேத வைத்தியராகப் பணியாற்றும் கவிஞர் ந.மா.கேதாரபிள்ளை, வழக்கிழந்துபோகும் பழம் நூல்களை மீளப் பதிப்பித்து விற்பனைசெய்யும் பணியிலும் மட்டக்களப்பிலிருந்து பலகாலம் ஈடுபட்டு வந்துள்ளார். (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது).

## 14205

**திருக்கேதீச்சர கௌரிநாயகி பிள்ளைத் தமிழ்.** சி.இ.சதாசிவம்பிள்ளை. புங்குடுதீவு 12: சி.ஆறுமுகம், பதிப்பாசிரியர், தமிழகம், 2வது (மீள்)பதிப்பு, 2015, 1வது பதிப்பு, 1976. (கொழும்பு 6: குளோபல் கிறபிக்ஸ், கொழும்புத் தமிழ்ச்சங்க ஒழுங்கை, வெள்ளவத்தை).

86 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17.5x12.5 சமீ.

அணிந்துரை (சி.கணபதிப்பிள்ளை), பதிப்புரை (சி.ஆறுமுகம்), மீள்பதிப்புரை (சி.ஆறுமுகம்), முகவுரை (க.கைலாசபதி), நூன்முகம் (சி.இ.சதாசிவம்பிள்ளை), ஆகியவற்றைத் தொடர்ந்து இப்பிள்ளைத்தமிழ் பாமாலை இடம்பெற்றுள்ளது. காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலாட்டுப் பருவம், சப்பாணிப் பருவம்,

*முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், அம்மானைப் பருவம், நீராடற் பருவம், ஊசற் பருவம் ஆகிய பருவங்களின் கீழ் பாடப்பெற்றுள்ளன. நூலின் இறுதியில் அருஞ்சொற் பொருள் விளக்கம் காணப்படுகின்றது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65114).*

### 14206

**திருமந்திரம் சிறப்பு நிகழ்ச்சி மலர்.** *மலர்க் குழு. கொழும்பு 6: மௌனாஷ்ரம் ட்ரஸ்ட், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 1992. (கல்லச்சுப் பிரதியாக்கம்).*

*122 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.*

*09.11.1992 அன்று வெள்ளவத்தை, சைவ மங்கையர் கழகத்தின் சிவானந்த நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வின்போது சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இதில் முன்னுரை: திருமூலரும் திருமந்திரமும் (சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர்), திருமூலரும் குருவும் (சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர்), திருமந்திரத்தில் நல்லொழுக்கம் (வே.ந.சிவரரிஜா), திருமந்திரத்தில் அறவாழ்க்கை (க.ந.வேலன்), திருமந்திரத்தில் யோகப் பழக்கம் (பெ.கணநாதபிள்ளை), திருமந்திரத்தில் குருநெறி நிற்றல் (ஆ.குணநாயகம்), திருமந்திரத்தில் அகப்புற உணர்வு (சிவ. மகாலிங்கம்), திருமந்திரத்தில் அருள் நுகர்வு (கனகசபாபதி நாகேஸ்வரன்), திருமந்திரத்தில் பேராப் பெருவாழ்வு (நா.செல்லப்பா)ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13410).*

### 14207

**திருமுருக வழிபாடு.** *சி.அப்புத்துரை. யாழ்ப்பாணம்: அமரர் கிருஷ்ணபிள்ளை சுமன் நினைவு வெளியீடு, அரியாலை, 1வது பதிப்பு, நவம்பர் 2004. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).*

*70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.*

*சிறந்த முருக பக்தரான அரியாலை அமரர் கிருஷ்ணபிள்ளை சுமன் அவர்களின் மறைவின் அந்தியேட்டித் தின வெளியீடாக 30.11.2004 அன்று வெளியிடப்பட்டுள்ள பிரசுரம். முருக வழிபாட்டுடன் சம்பந்தப்பட்ட பக்தி இலக்கியங்களில் தேர்ந்த பாசுரங்களையும், முருக வழிபாடு பற்றிப் பல்வேறு தகவல்களையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. அறிமுகவுரை, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தர் கலி வெண்பா, கந்தசஷ்டி கவசம், சண்முக கவசம், இலங்கையில் முருக வழிபாடு, திருமுருக வழிபாடு, ஆகிய தலைப்புகளில் இந்நூலை பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் தொகுத்து வழங்கியுள்ளார். நூலின் இறுதியில் சி.சுமன் புலமைப்பரிசில் நிதியம் பற்றிய தகவல்களும் இணைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36091).*

## 14208

**திருமுறை, தோத்திரப் பாடல்களின் திரட்டு.** *சிவஸ்ரீ இராம. சசிதரக் குருக்கள் (தொகுப்பாசிரியர்). சுவிட்சர்லாந்து: அருள்நிறை இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம், லுற்சேர்ன், சுவிஸ், 1வது பதிப்பு, வைகாசி 2018. (கொழும்பு 6: விகடன் அச்சகம், 541/2, காலி வீதி, வெள்ளவத்தை).*

vi, *220 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*15 சமீ.*

*தோத்திரப் பாடல்கள், கோளறு பதிகம், நவசந்திகளில் ஓதவேண்டிய தேவாரப் பண்கள், திருப்பொற்சுண்ணம், திருமறைக்காடு, திருப்பல்லாண்டு, கொடிக்கவி, யாத்திரைப் பத்து, விநாயகர் அகவல், விநாயகர் கவசம், பிள்ளையார் கதை, சிவபெருமான் துதி, சிவபுராணம், லிங்காஷ்டகம்-தமிழ், லிங்காஷ்டகம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, நலம் சேர்க்கும் நந்தீஸ்வரர், தட்சிணாமூர்த்தி துதி, வைரவர் துதி, வீரபத்திரசுவாமி துதி, நந்திதேவர் துதி, உமாதேவியார் துதி, துர்க்கை துதி, இலக்குமி துதி, சரஸ்வதி துதி, சகலகலாவல்லி மாலை, கௌரிகாப்பு, அபிராமி அந்தாதி, ஸ்ரீலலிதா நவரத்தினமாலை, ஸ்ரீசக்கர ராஜ சிம்ஹாஸனேஸ்வரி, திருவூஞ்சற் பாடல்கள், முருகன் துதி, கந்த சஷ்டி கவசம், ஸ்ரீராமஜெயம், ராமர் தாலாட்டு, திருப்பாவை, மங்களம், ஆஞ்சநேயர் காயத்திரி மந்திரம், ஆஞ்சநேயர் சுலோகம், ஸ்ரீ ஆஞ்சநேயர் மங்களம், ஐயப்பன் சரணக்கோவை, பதினெட்டாம் திருப்படிப் பாடல், வழிநடைச் சரணம், ஸ்ரீ சாஸ்தா பஞ்சரத்தினம் ஸ்ரீ சாஸ்தா அஷ்டகம், ஹரிவராசனம், மாலை தரித்துக்கொள்ளும் போது ஜெபிக்கவேண்டிய மந்திரம், மாலை கழட்டுவதற்கான மந்திரம், நமஸ்காரம், சாஸ்தா ஆரத்தி, மங்களம், நவக்ரஹ தோத்திரப் பாடல்கள், நவக்ரஹ காயத்திரி மந்திரம், சனீஸ்வர கவசம், சனி பகவான் தோத்திரம் ஆகிய திருமுறை, தோத்திரப் பாடல்களின் விரிவான தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.*

## 14209

**திருமுறைத் தோத்திரப் பாடல்கள்.** *மூ.சிவலிங்கம். யாழ்ப்பாணம்: சைவத் திருநெறிக் கழகம், இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில், 1வது பதிப்பு, ஏப்ரல் 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(4), 104 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 20*x*14 சமீ.*

*இணுவில் சிவகாமி அறநெறிப்பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய சைவச் சிறார்களும் திருமுறைகளைக் கிரமப்படி பிழையறக் கற்கவேண்டுமென்ற நல்நோக்குடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. வருடத்தில் ஒருமுறை நடைபெறும் பிள்ளையார் கதை, திருவெம்பாவை, நவராத்திரி, கந்தசஷ்டி விழா காலங்களில் படிப்பதற்காகவும் பொருத்தமான பாடல்களைத் தேர்ந்தெடுத்து இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. பன்னிரு திருமுறைகளில் தேவாரங்கள், திருவாசகம் ஆகியவை மிக ஆழமான கருத்துடையவை. இவற்றுடன் பிள்ளையார் கதை, அபிராமி அந்தாதி, சகலகலாவல்லி மாலை, கந்தசஷ்டி கவசம், திருப்புகழ், போன்றவை எந்த நிகழ்வுக்கும் பயன்படக் கூடியவகையில் தொகுக்கப்பட்டுள்ளன.*

*(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38910).*

### 14210

**திருவாசகத் தேன்துளிகள்.** வே.திருநீலகண்டன். கொழும்பு 04: வே.திருநீலகண்டன், 166, காலி வீதி, 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

*38 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x12.5 சமீ.*

*மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தின் சில பாகங்களைத் தேர்ந்தெடுத்து இத்தொகுப்பில் இடம்பெறச்செய்து கொழும்பு ஸ்ரீ அம்பலவாணேஸ்வரர் தேர்த் திருவிழாப் பவனியின்போது அன்பளிப்பாக வழங்கியுள்ளார் கொழும்பு லட்சுமிஅச்சக அதிபர் திரு. வே.திருநீலகண்டன் அவர்கள். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16710).*

### 14211

**திருவாசகத் தேன்துளிகள் ஐந்து.** ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம். கொழும்பு 6: சைவ சித்தாந்த திருச்சபை, இல. 5, மூர் வீதி, 2வது பதிப்பு, ஜுலை 1992, 1வது பதிப்பு, டிசம்பர் 1989. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).

*(6), 25 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 18x14 சமீ.*

*ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம், ஆண்டுதோறும் நடாத்தும் திருவாசக முற்றோதல் நிகழ்வின் 13ஆவது ஆண்டு நிகழ்ச்சியின்போது, 31.12.1989 அன்று சைவ சித்தாந்த திருச்சபையின் கொழும்புக் கிளையினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட சிறு பிரசுரமாகும். இதில் திருப்பெருந்துறையில் அருளிய திருப்பள்ளியெழுச்சி, சிவபுராணம் என்பனவும், தில்லையில் அருளிய திருப்பொற்சுண்ணம், யாத்திரைப் பத்து என்பனவும், திருவண்ணாமலையில் அருளிய திருவெம்பாவையுமாக ஐந்து திருவாசகப் பதிகங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 034528).*

### 14212

**திருவாசகத்தில் சிவபுராணம்: இனிய இலகு தமிழ் உரைநடையுடன்.** சரோஜினிதேவி சிவஞானம் (உரையாசிரியர்). திருக்கோணமலை: திருமதி சரோஜினிதேவி சிவஞானம், தேவி கடாட்சம், 42B/1, தேன் தமிழ் வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, 2018. (திருக்கோணமலை: ஏ.ஆர். டிரேடர்ஸ், திருஞானசம்பந்தர் வீதி).

*206 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-42918-0-0.*

*மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகத்தின் சிவபுராணம் 108 வரிகள் கொண்டது. சிவனைப் போற்றிப்பாடும் சிவபுராணத்தின் ஒவ்வொரு வரியையும் ஒவ்வொரு தலைப்பாக்கிய உரையாசிரியர் ஒவ்வொரு வரிக்கும் ஒன்று முதல் மூன்று பக்கங்களுக்குக் குறையாத விரிவான உரைவிளக்கத்தினை வழங்கியுள்ளார்.*

## 14213

**திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, ஒன்பதாம் திருமுறை (மூலமும் உரையும்).** ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம். தெல்லிப்பழை: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், 1வது பதிப்பு, 2010. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

vi, 189 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

இந்நூல் தெல்லிப்பழை, பன்னாலை-இளைப்பாறிய அதிபர் திரு.க.திருநாவுக்கரசு, சிவபாக்கியம் தம்பதியினரின் திருமணப் பொன்விழா நினைவாக அவர்களால் நிதியுதவி வழங்கப்பெற்று நூலுருவாக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 62753).

## 14214

**தெகிவளை நெடுமால் கோவை.** வ.சிவராசசிங்கம் (மூலம்), க.கணபதிப்பிள்ளை (உரையாசிரியர்). தெகிவளை: தெகிவளை நெடுமால் விஷ்ணு கோவில் ஆதீனம், 1வது பதிப்பு, 2006. (கொழும்பு 5: ஆர்.எஸ்.ரி. என்ரபிறைஸஸ், நாரஹென்பிட்டிய).

xviii, 62 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

பிள்ளைக்கவி வ.சிவராசசிங்கம் அவர்களின் தெகிவளை நெடுமால் கோவை என்ற இப்பிரபந்த இலக்கியத்திற்கு சிலேடைக் கவிரத்தினம் க. கணபதிப்பிள்ளை உரை எழுதியுள்ளார். தெகிவளை நெடுமால் கோவிலின் தொன்மை பற்றிக் குறிப்பிடும்போது, இக்கோயிலின் தொன்மை 18ஆம் நூற்றாண்டுவரையில் எட்டுவதாகக் குறிப்பிடுகிறார்கள். இந்தக் கோயில் களுபோவில, நெடிமால ஆகிய இரு கிராமங்களுக்கான எல்லை வேலியாக நிற்கின்றது. அந்தக் காலத்தில் இது ஒன்றே கற்கோவில். தமிழில் கற்கோவில், பின்னர் களு(கறுப்பு) கோவில் என்றும், பின்னர் அதுவும் மருவி களுபோவில என்றும் ஆனதாகவும், நெடிமால என்ற கிராமப் பெயர் நெடுமால் என்ற பெயரின் மருவலாக இருக்கலாம் என்றும் குறிப்பிடுகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 41819).

## 14215

**தெய்வீகப் பாடல்கள்.** பொன். வல்லிபுரம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: மயூரபதி ஸ்ரீ பத்திரகாளியம்மன் தேவஸ்தானம், 1வது பதிப்பு, 1991. (கொழும்பு 10: இம்பீரியல் பிரஸ், 25, முதலாம் டிவிஷன், மருதானை).

114 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 19x13 சமீ.

இத் தெய்வீகப் பாடல்களின் தொகுப்பில், விநாயகரகவல், விநாயகர் திருவகவல், விநாயகர் நாமாவளி, குரு பஜனை, முருக நாமாவளி, முருக பஜனை, நடராச நாமாவளி, பஜனாவளி, சக்தி நாமாவளி, திருவிளக்கு பூசை, திருவிளக்கு வழிபாடு, திருவிளக்கு வழிபாட்டு முறை, நவக்ரஹ தோஷம் நீங்க, ஸ்ரீ ராகுகால துர்க்கா அஷ்டகம், போற்றிகள், ஸ்ரீரோக நிவாரணி அஷ்டகம், ராகுகால துர்க்கா வணக்கம், துக்க நிவாரண அஷ்டகம், ஸ்ரீ காளியம்மன் கவசம், அம்மன் தமிழ் அர்ச்சனை மலர், குங்கும மகிமை, அபிராமியம்மை பதிகம், சகலகலாவல்லி மாலை,

கேதாரீஸ்வரர் நோன்பு கதை, கேதாரீஸ்வரர் பூஜை விதி, கந்த சஷ்டி கவசம், திருவெம்பாவை, வாழ்த்து, மங்களம் ஆகிய பிரிவுகளின்கீழ் இப்பாடல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18467).

### 14216

**தென்கதிரை முருகன் பேரில் சிறைமீட்ட கும்மி.** ந.மா.கேதாரபிள்ளை. கொக்கட்டிச்சோலை: ந.மா.கேதாரபிள்ளை, தாளையடி தெரு, காளிகோயில் வீதி, முதலைக்குடா, 1வது பதிப்பு, ஆண்டு விபரம்தரப்படவில்லை. (மட்டக்களப்பு: ஜெஸ்கொம் பிரின்டர்ஸ்).

10 பக்கம், விலை: ரூபா 15.00, அளவு: 21x15 சமீ.

மட்டக்களப்பின் கொக்கட்டிச் சோலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் ந.மா.கேதாரபிள்ளை. ஏற்கெனவே நாராயண தோத்திரம், நல்லைக்கந்தன் தோத்திரம், தான்தோன்றீஸ்லரர் தோத்திரம், அமிர்தகழி விநாயகர் தோத்திரம் ஆகிய பக்தி இலக்கியங்களைத் தந்தவர். அத்தொடரில் தென் கதிரை முருகன் பேரில் பாடப்பெற்ற பக்தி இலக்கியம் இதுவாகும். (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது).

### 14217

**தோத்திரக் களஞ்சியம்.** நினைவு மலர்க் குழு. கொழும்பு 5: அமரர் வள்ளிநாயகி சிவசிதம்பரம் குடும்பத்தினர், 245, பொல்ஹேங்கொட வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 12: வக்மீ அச்சகம், 258/3, டாம் வீதி).

128 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 14.5x11 சமீ.

கையடக்கப் பிரசுரமாக வெளிவந்துள்ள அந்தியேட்டி நினைவு வெளியீடு இதுவாகும். விநாயகர் துதி, விநாயகர் திருவகவல், சிவபுராணம், கந்தர் சஷ்டி கவசம், திருவெம்பாவை, சகலகலாவல்லி மாலை, பஞ்சபுராணம், திருப்பொற்சுண்ணம், கோளறு திருப்பதிகம், திருக்கோணேசுவரப் பதிகம், திருக்கேதீச்சரத் திருப்பதிகம், அபிராமி அந்தாதி, செய்யவேண்டியன, பட்டினத்தார் பாடல், நவக்கிரக தோத்திரம், வாழ்வில் கொள்ளவேண்டியவை, கீதாச்சாரம் ஆகிய 17 தலைப்புகளில் இப்பிரசுரம் தொகுக்கப்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34208).

### 14218

**தோத்திரக் கோவை.** சிவஸ்வாமி ஐயர் (தொகுப்பாசிரியர்). பருத்தித்துறை: எஸ். சிவஸ்வாமி ஐயர், 1வது பதிப்பு, 1921. (பருத்தித்துறை: கலாநிதியந்திரசாலை).

118 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 21x13.5 சமீ.

இந்நூலில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம், திருப்புகழ், தாயுமான சுவாமிகள் பாடல், பட்டினத்துப் பிள்ளையார் பாடல்,

இராமலிங்க சுவாமி பாடல், ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த பாடல்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 02966).

### 14219

**தோத்திரத் திரட்டு.** வெளியீட்டுக் குழு. மன்னார்: மகா சிவராத்திரி மட பரிபாலன சபை, திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை, திருக்கேதீச்சரம், 1வது பதிப்பு, மார்ச் 2003. (மன்னார்: பிரான்சிஸ் அச்சகம்).

(8), 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

திருக்கேதீச்சரச் சிவாலயத்தின் திருப்பணிகளுள் ஒன்றாக மகா சிவராத்திரி மடம் புனரமைக்கப்பட்ட வேளையில் 01.03.2003 அன்று நடைபெற்ற சிவராத்திரி விழாவின்போது வெளியிடப்பட்ட தோத்திரத் திரட்டு. இந்நூலில் சிவராத்திரியின் மகிமை, திருக்கேதீச்சர ஆலயமும் மாந்தைத் துறைமுகமும், திருக்கேதீச்சர மகா சிவராத்திரி மடம், ஆகிய வரலாற்றுக் கட்டுரைகளும், திருக்கேதீச்சரப் பதிகம், பஞ்சபுராண பாடல்கள், கோளறு பதிகம், சிவபுராணம், சகலகலாவல்லி மாலை, திருவெம்பாவை ஆகிய தோத்திரங்களின் திரட்டும் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28189).

### 14220

**தோத்திரத் திரட்டு: திரு.கதிர்காமர் நாகநாதர் அவர்களது பிரிவு குறித்த நினைவு மலர்.** மலர்க் குழு. சுன்னாகம்: ஜெயராம்ஸ் ஸ்தாபனம், 1வது பதிப்பு, ஜூன் 1977. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

x, 70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12 சமீ.

இது தெல்லிப்பழை கிழக்கு விராங்கொடையைச் சேர்ந்தவரும் சுன்னாகம் ஜெயறாம்ஸ் ஸ்தாபனத்தின் உரிமையாளருமான அமரர் கதிர்காமர் நாகநாதர் அவர்களது பிரிவு குறித்த நினைவு மலர். இதில் நாயன்மார்களின் தேர்ந்த திருமுறைகள் தோத்திரத் திரட்டாகத் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17567).

### 14221

**நடராஜப்பத்து.** ந.மா.கேதாரப்பிள்ளை (பதிப்பாசிரியர்). மட்டக்களப்பு: ந.மா. கேதாரப்பிள்ளை, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, பதிப்பு ஆண்டு விபரம் தரப்படவில்லை. (மட்டக்களப்பு: ஜெஸ்கொம் அச்சகம்).

(6) பக்கம், விலை: ரூபா 15.00, அளவு: 21x15 சமீ.

செய்யுள்வடிவில் அமைந்துள்ள பக்தி இலக்கியம். சித்தாயுர்வேத வைத்தியராகப் பணியாற்றும் ந.மா.கேதாரப்பிள்ளை அவர்கள், வழக்கிழந்துபோகும் பழம் நூல்களை மீளப் பதிப்பித்து விற்பனைசெய்யும் பணியில் மட்டக்களப்பிலிருந்து

*பலகாலம் ஈடுபட்டு வந்துள்ளார். (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது).*

### 14222

**நல்ல சிந்தனைகள் அடங்கிய நல்ல சிவமலர்.** *நினைவுமலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு: அமரர் திருமதி சிவபாக்கியம் குமாரசாமி அவர்களின் ஞாபகார்த்த மலர், 1வது பதிப்பு, நவம்பர் 2002. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).*

*87 பக்கம், புகைப்படம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*சைவசமய வாழ்வியலிற் சிறப்புக்கள் பற்றிய உரைகளுடன் தேவார திருமுறைகளையும் உள்ளடக்கியதாக இச்சிறப்பிதழ் 08.11.2002 அன்று வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34610).*

### 14223

**நல்லை நாற்பது: பக்திக் கீர்த்தனைப் பாடல்கள்.** *சி.கார்த்திகேசு (புனைபெயர்: சேந்தன்). யாழ்ப்பாணம்: க.ஆறுமுகம், முருகன் அருட்பிரவாகம், 171/10, நல்லூர் வடக்கு வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஜுலை 1994. (கொழும்பு 11: லக்ஷ்மீஹர, 309, செட்டியார் தெரு).*

xii*, 32 பக்கம், விலை: ரூபா 30.00, அளவு: 20.5x14.5 சமீ.*

*விநாயகர், சிவன், சரஸ்வதி பேரிற் கடவுள் வணக்கத்தைச் செலுத்தித் தொடரும் 40 கீர்த்தனைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. நல்லைக் கோபுரம், நேரந் தவறாத பூசை, நல்லை மணியோசை, கந்தன் கருணை வேண்டும், உண்மையான தெய்வம், முருகனைத் தொழு மனமே, காண்பன எல்லாம், கைவிட மாட்டான், நெஞ்சே நீ பாடு, கூவு குயிலே, சொல்லு பல்லி, தூது சொல்வாய் குயிலே, என்ன குறையுண்டு, அச்சம் உனக்கொன்றுமே இல்லை, தமிழ்த் தெய்வம், அள்ளி உண்டிடலாம், நல்லைக் கந்தனை நாடிடத் தீரும், என்ன குறைதான் உண்டு, பிணி தீர வாரீர், நாடு அமைதிபெற, அன்புத் தெய்வம், சிந்தனை செய் மனமே, தாங்காது துன்பமையா, பாடிடும் ஆசையை மறவேன், திருவருளே சரண், கைவிடமாட்டான், பாடினேன் நானுன்னைப் பலபாட்டு, என்ன குறைதான் உனக்குண்டு, காணக் கண் கோடி வேண்டும், தங்கரதத்தில் வந்தான், தங்க மயில்மீது வந்தானடி, கார்த்திகைத் திருவிழா, திரு அருள் தா தா, சித்தம் இரங்காதா?, என்னால் மறப்பதும் உண்டோ?, ஆண்டு கொள்வாய், வீதியுள்ளே வந்து பாரும், ஆரிடஞ் சொல்லி ஆறுவேன், இன்னமுஞ் சின்னப் பிள்ளை தானோ நீ, நல்ல புகலிடம் ஆகிய தலைப்புகளில் இக் கீர்த்தனைப் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31792).*

## 14224

**நல்லைக் கந்தன்.** செ.இரத்தினசபாபதி. கொழும்பு 6: செ.இரத்தினசபாபதி, 54, 1/3, இராஜசிங்க வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: சரவணா அச்சகம்).

54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

இலங்கை ரயில்வே திணைக்களத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி 1965இல் ஓய்வுபெற்றபின் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிய இந்நூலாசிரியர் நல்லை முருகனின் பால் காதல்கொண்ட சிறந்த பக்தர். நல்லூர் முருகன் திருவிழாக்காலங்களில் நல்லை முருகன் பற்றியும் அவனுக்காக பக்தர்கள் நடத்தும் திருவிழாக்கள் பற்றியும் பக்திக் கட்டுரைகளை 1987 வரை எழுதிவந்தவர். இவை திருவிழாக் காலங்களில் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன. இந்நூலில் அவற்றில் சிலவற்றைத் தொகுத்து தனது 99ஆவது அகவையில் நூலுருவில் வெளியிட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 031008).

## 14225

**பஜனைப் பாடல்கள்.** திருச்செல்வம் தவரத்தினம். காரைநகர்: திருச்செல்வம் தவரத்தினம், சர்வசக்தி வெளியீடு, சடையாளி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2015. (யாழ்ப்பாணம்: ஷாம்பவி பதிப்பகம், நீர்வேலி).

v, 170 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 350., அளவு: 21x15 சமீ.

இந்நூலில் விநாயகர் பாடல்கள், பன்னிரு திருமுறைகள், சிவன் பாடல்கள், அம்மன் பாடல்கள், நாராயணர் பாடல்கள், முருகன் பாடல்கள், ஐயப்பன் பாடல்கள், ஆஞ்சநேயர் பாடல்கள் ஆகிய எட்டு பிரிவுகளின் கீழ் சைவத் தமிழ் பக்தி இலக்கியப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. நூலாசிரியர் சுழிபுரம் யாழ்/ விக்டோரியாக் கல்லூரியின் ஆசிரியராவார்.

## 14226

**பிரமமாய் நின்ற சோதி.** கே.வி.குணசேகரம். கோப்பாய்: கே.வி.குணசேகரம், ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர், பிள்ளையார் கோவிலடி, கோப்பாய் மத்தி, 1வது பதிப்பு, மார்ச் 2010. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1.14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

viii, 86 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ., ISBN: 955-0134-74-1.

முருகனின் கீர்த்தியை விளக்கும் இந்நூல், பல்வேறு கோணங்களில் நின்று பார்த்து முருகனின் திவ்யப் பெருங் கருணையை வெளிப்படுத்திநிற்கிறது. ஆறு திருமுகங்களையும் அழகிய பாணியில் விளக்குவதினூடாக சைவத் தத்துவார்த்த கருத்துகளை தெளிவாக விளக்கியிருக்கிறார். சிக்கலான சமயத் தத்துவங்களை கதைகளாக்கித் தரமுனையும் ஆசிரியரின் முயற்சியே இந்நூலாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48252).

### 14227

**பிள்ளையார் பெருங்கதை (வசனம்).** *ச.வே.பஞ்சாட்சரம். கனடா: வெள்ளி அச்சுப் பதிப்பகம், மிசிசாகா, ஒன்ராறியோ மாகாணம், 1வது பதிப்பு, புரட்டாதி 2019.* (Canada: Silver Print House, 5030, Heatherleigh Ave Unit No. 60, Mississauga, Ontario, L5V 2G7).

*24 பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 20x14.5 சமீ.*

*யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் வரத பண்டிதர் அவர்கள், கந்தபுராணம், இலிங்க புராணம், உபதேச காண்டம், முதலிய நூல்களில் சொல்லப்பட்ட விநாயகர் மகிமைகளையும் அருட்செயல்களையும் திரட்டிப் பிள்ளையார் கதை என்னும் காவிய நூலாக்கியுள்ளார். கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள், அதனை அடியார்கள் இலகுவில் விளங்கிக்கொள்ளும் வகையில் எளிமையான வாக்கிய நடையில் அமைத்து இலவச வெளியீடாக வழங்கியுள்ளார்.*

### 14228

**மகான்கள் அர்ச்சனை மாலை.** *க.இராமச்சந்திரன். கொழும்பு 4: அ.சீவரட்ணம், ஆனந்தசாகர, 42, சிறபறி காடின்ஸ், 2வது பதிப்பு, 2002, 1வது பதிப்பு, 1972. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).*

*102 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.*

*இந்த அர்ச்சனை மாலைகள் குறித்த சில மகான்களின் பிறந்ததின விழாக்களில் இறுதி வழிபாடாக பக்தி விஸ்வாசத்துடன் ஓதி அர்ப்பணஞ்செய்யப்பெற்றன. பக்தர் க.இராமச்சந்திரன் அவர்கள் தமது சொந்த சாதனைக்காக 20-30 ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பெற்றவை. அவரது 76அவது அகவையின்போது கொழும்பு சத்சங்கத்தினர் 1972இல் முதலில் நினைவுமலராக இவற்றை தொகுத்து வெளியிட்டிருந்தனர். இந்த அர்ச்சனை மாலைகளில் குறித்த பெரியார்களின் வரலாற்றுச் சுருக்கமும் உபதேசங்களின் சாரமும் எளிய இனிய நடையில் அமைந்துள்ளன. இதில் திருவள்ளுவர், ஸ்ரீ இராமகிருஷ்ணர், அன்னை ஸ்ரீ சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர், யோகர் சுவாமிகள், ஸ்ரீ ரமண மஹரிஷி, சுவாமி இராமதாஸர், அன்னை கிருஷ்ணாபாய், சுவாமி சிவானந்தர் ஆகியோருக்கான அர்ச்சனை மாலைகள், நயினை நாகபூஷணி அம்பாள் பாடல், கதிர்காமத் திருப்பதிகம், தோத்திரங்கள், க.ராமச்சந்திரன் ஐயாவைப் பற்றி மகான்கள், பெரியார்கள் புகழ்ந்து எழுதிய பாக்கள், கட்டுரைகள், முக்கிய கடிதங்கள் முதலியவற்றையும் சேர்த்து வெளியிட்டுள்ளனர். இந்நூல் அன்னை கிருஷ்ணாபாய் அவர்களது 99ஆவது பிறந்ததினமாகிய 06.10.2002 அன்று வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28164).*

### 14229

**மங்களேஸ்வரக் குருமணி**. சி.குஞ்சிதபாதக் குருக்கள். கொழும்பு: சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள், பிரதம சிவாசாரியார், ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

v, 116 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துடன் இணைந்திருந்த குருமணிகளுள் சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்கள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்களுக்குப் பின்னர் ஈழத்துச் சிதம்பரேஸ்வரப் பெருமானுக்கு தம்மை அர்ப்பணித்துச் சிவப்பணி புரிந்தவர் சிவஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்களாவார். அவர் 2001ஆம் ஆண்டு வைகுண்ட ஏகாதசிப் புண்ணிய தினத்தில் சிவகதி எய்தியவர். அவரது தமக்கையின் மகளை திருமணம் செய்தவர் இந்நூலாசிரியர். சிவஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்களின் வாழ்க்கையுடன் நித்திய வாழ்க்கைக்கே உரித்தான மிகவும் அவசியமான நித்திய கருமவிதி, சிவபுராணம், ஸ்ரீ சிவ சஹஸ்ர நாமாவளி (கிரந்தாக்ஷரம்), ஸ்ரீ சிவ சஹஸ்ர நாமாவளி (தமிழ்), ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமாவளி (கிரந்தாக்ஷரம்), ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாமாவளி (தமிழ்) ஆகிய வற்றை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39110).

### 14230

**மயில்வாகனம்**. மலர்க் குழு. புங்குடுதீவு: ந.க.மயில்வாகனம் நினைவுக்குழு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1995. (கொழும்பு 13: யுனைட்டெட் மேர்ச்சன்ட்ஸ் லிமிட்டெட், 529/19, கே.சிறில் சி.பெரேரா மாவத்தை).

128 பக்கம், புகைப்படம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

08.04.1995 அன்று வெளியிடப்பட்ட இந்நினைவு மலரில், அஞ்சலி உரைகளுடன், தேவாரப் பதிகங்கள், விநாயகர் கவசம், மற்றும் பக்தி இலக்கியங்கள் என்பன தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24456).

### 14231

**மயூரகிரி புராணம்**. வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை (மூலம்), ந.ச.பொன்னம்பலபிள்ளை (உரையாசிரியர்). ம.வே.திருஞானசம்பந்தபிள்ளை (விசேடவுரை), தி.செல்வமனோகரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: இந்துப் பண்பாட்டு நிதியம், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, மீள்பதிப்பு, ஓகஸ்ட் 2018, 1வது பதிப்பு, 1937. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

xviii, 204 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14.5சமீ.,ISBN: 978-955-9233-54-1.

மயூரகிரி என்பது பாண்டி நாட்டிலே தேவாரம் பாடப்பெற்ற சிவத்தலங்களுள் ஒன்றாகிய திருப்புத்தூருக்குச் சமீபத்திலுள்ள சுப்பிரமணியக் கடவுளுக்குரிய குன்றக்குடி என்ற முக்கிய திருத்தலமாகும். இம்மயூரகிரிப் புராணம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் மதுரையைச் சேர்ந்த சிவகங்கை வித்துவான் வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை என்பவரால் வடமொழி மயூரகிரி மான்மியத்தினின்றும் மொழிபெயர்த்துப் 13 சருக்கங்களுடயதாகச் செய்யுள்நடையில் இயற்றப்பட்டது. இந்நூலின் மீளச்சு 2018இல் மலேசிய திருமுருகன் திருவாக்கு திருபீடத்தின் நான்காவது அனைத்துலக முருகபக்தி மாநாட்டினையொட்டி கொழும்பில் வெளிவந்துள்ளது. இதில் மயூரகிரியின் வரலாற்றுரைத்த சருக்கம், மயூரகிரியிற் குமாரசுவாமி தோற்றிய சருக்கம், தீர்த்த மகிமையுரைத்த சருக்கம், மயூரம் முத்திபெற்ற சருக்கம், கார்த்திகை விரதமுரைத்த சருக்கம், சுக்கிரவார விரதமுரைத்த சருக்கம், சட்டி விரதமுரைத்த சருக்கம், அகத்தியச் சருக்கம், வசிட்டர் கதையும் விசுவாமித்தரர் கதையும் உரைத்த சருக்கம், பிரமாவின் கதையும் கருடேசன் கதையும் உரைத்த சருக்கம், இந்திரன் கதையும் ஆதித்தன் கதையும் மன்மதன் கதையும் உரைத்த சருக்கம், பாண்டவச் சருக்கம், அருச்சனைச் சருக்கம் ஆகிய 13 சருக்கங்களில் மயூரகிரிப் புராணம் இடம்பெற்றுள்ளது.

## 14232

**மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம் எட்டாந் திருமுறை மூலமும் பல ஆராய்ச்சி அகராதிகளும்.** மு.கணபதிப்பிள்ளை (பதிப்பாசிரியர்). சென்னை: சைவசித்தாந்தப் பெருமன்றம், 1வது பதிப்பு, வைகாசி 1992. (சென்னை 600002: காந்தளகம், 68 (834) அண்ணாசாலை).

xviii, 225 பக்கம், விலை: ரூபா 50.00, இந்திய ரூபா 15.00, அளவு: 21x14 சமீ.

மாணிக்கவாசக சுவாமிகள்அருளிய திருவாசகத்தையும் முழுமையான ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் கூடிய பதிப்பாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16667).

## 14233

**மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை.** திருச்செல்வம் தவரத்தினம். காரைநகர்: திருச்செல்வம் தவரத்தினம், சர்வசக்தி வெளியீடு, சடையாளி, 1வது பதிப்பு, 2016. (யாழ்ப்பாணம்: ரூபன் பிரின்டர்ஸ், ஆனைக்கோட்டை).

24 பக்கம், விலை: ரூபா 40.00, அளவு: 18.5x12.5 சமீ.

சைவ சமயம் அநாதியானது. பரம்பொருளான சிவன் சிவசக்தி சொரூபனாகவும் சிவகாமி சுந்தரனாகவும் விளங்குகின்றார். மாதங்களில் சிறந்த ஞான மாதமாக மார்கழி கருதப்படுகின்றது. இம்மாதத்தில் வருகின்ற மார்கழித் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி, விநாயகர் சஷ்டி விரதம் ஆகிய விரதங்கள் மூலம் சைவநெறிமுறை மனித வாழ்வை மேம்படுத்தி முத்திக்கு இட்டுச் செல்கின்றது.

சிவ விரதங்கள் பல உள்ளன. மார்கழித் திருவெம்பாவை மிகவும் சிறப்புப் பெற்றது. மார்கழி மாதத்தின் திருவாதிரை நட்சத்திரத்தை இறுதியாகக் கொண்டு பத்து நாட்கள் திருவெம்பாவை விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. திருவெம்பாவை என்றதும் சிவபிரானால் ஆட்கொள்ளப்பட்ட ஞானமுத்தர் மாணிக்கவாசகரின் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, சிவபுராணம் என்பன முக்கியப்படுத்தப்படுகின்றன. இந்நூலில் இம்மூன்று பக்தி இலக்கியங்களும் பக்தர்களின் தேவைகருதி விரிவுரைகளுடன் மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் சுழிபுரம் யாழ்/விக்டோரியாக் கல்லூரியின் ஆசிரியராவார்.

## 14234

**முருகன்கீர்த்தனைகள்: ஆறுமுக வேலவன் துதி.** பாமதி மயூரநாதன். யாழ்ப்பாணம்: திருமதி பாமதி மயூரநாதன், திருப்பதி, இணுவில், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2019. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில் கிழக்கு, இணுவில்).

xii, 24 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.

"முருகன் கீர்த்தனைகள் பெரும்பாலான சங்கீதக் கச்சேரிகளில் பாடப்பட்டு வருகின்றன. அதனுடைய தாக்கமும், தமிழ்மொழியின் ஆதரவும், தற்கால சமுதாய மனங்களில் உணர்வுடன் சிரங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுமாக இணுவைக் கந்தன் மீது பிள்ளையார் துதியுடன் ஆறு பாடல்களும், நல்லூர்க் கந்தன் மீது பன்னிரண்டு பாடல்களுமாக கீர்த்தனைப் பாடல்களைத் தொகுத்து ஒரு நூலாக்கி எனையாளும் செவ்வேள் பெருமானின் பாதார விந்தத்தில் பக்தியுடன் சமர்ப்பிக்கின்றேன்" (ஆசிரியர், முன்னுரையில்).

## 14235

**முருகன் புகழ்மாலை (தோத்திரப் பாடல்களுடன்).** வேல் சுவாமிநாதன், அருள் சுவாமிநாதன் (தொகுப்பாசிரியர்கள்). அச்சுவேலி: இடைக்காடு இந்துநெறிக் கழகம், இடைக்காடு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

viii, 190 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணம், அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த இடைக்காடு இந்து நெறிக் கழகத்தினரின் 16ஆவது ஆன்மீக வெளியீடாகிய இந்நூலை இடைக்காடு வே.சுவாமிநாதன் தம்பதியினர் இணைந்து தொகுத்துள்ளனர். கந்தர்சஷ்டி கவசம், திருப்புகழ், கந்தர் அனுபூதி, கந்தரலங்காரம், திருமுருகாற்றுப்படை வெண்பாக்கள், முருகன் பஜனாவளி, ஆறுமுகசாமி விருத்தம், அவிநாசிப் பத்து, முருகன் தோத்திரப் பாடல்கள், கச்சியப்பரும் கந்தபுராணமும், ஆயிரம் பக்தர்களை மீட்ட முருகாற்றுப்படை, கோபுரத்திலிருந்து குதித்த அருணகிரியை ஏந்திய முருகவேள், பாலன் தேவராச சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம், திருமுருகன் வரலாறு, ஆறுபடை வீடுகள், கதிர்காமக் கந்தன், நல்லூர் முருகன், மாவிட்டபுரம் ஆறுமுகன்,

தொண்டைமானாறு ஆற்றங்கரைச் சந்நிதியான், மண்டூர்க் கந்தன், முருகன் புகழ்கூறும் செய்திகள், கந்தபுராணம் கூறும் தத்துவம், ஞானவேல், முருகப் பெருமானின் தேவியர்கள், முருகப் பெருமானின் திருநாமங்கள், முருகப் பெருமானின் வாகனங்கள், இடும்பாசுரன் இன்றேல் எமக்கேது காவடி, சூரசங்காரம், கந்தனுக்குரிய முக்கிய விரதங்கள், பலாக்கனியைக் கவர்ந்திழுத்த கதிர்காமக் கந்தன், ஆற்றில் இறந்தவனுக்கு உயிர் கொடுத்த ஆற்றங்கரையான், துண்டித்த கையைப் பூரணமாக்கிய பரங்குன்ற முருகன், வீரபாண்டிய கட்டபொம்மனை மன்னிப்புக் கேட்கவைத்த திருச்செந்தூர் முருகன், மயில்வாகனனின் மயில்கள் எத்தனை விதம்?, ஆற்றுப்படை வீடுகள் முருகனின் ஆறுபடை வீடுகள் ஆனது, சுவாமிநாதர், உசாத்துணை நூல்கள், தென்னிந்திய திருத்தல யாத்திரைத் துணைவன், முருகன் தமிழ் அர்ச்சனை ஆகிய 44 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20848).

## 14236

**லீலாவிநோதன் முருகன்.** பாமதி மயூரநாதன். யாழ்ப்பாணம்: திருமதி பாமதி மயூரநாதன், திருப்பதி, இணுவில், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2019. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில் கிழக்கு, இணுவில்).

xvi, 60 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

முருகன் திருவருள் பற்றிக் கூறும் இந்நூலில் கச்சியப்பசிவாச்சாரியார் அருளிச்செய்த கந்தபுராணத்தின் சில பகுதிகள் இலக்கிய நயத்துடன் இன்றைய இளைஞருக்கு ஆன்மீக போதனையளிக்குமுகமாக எழுதி வழங்கப்பட்டுள்ளது. புராணபடன ஆசிரியரான தனது தந்தையாரின் கந்தபுராண படன உரைகளை சிறுவயது முதலே கேட்டுப் பக்குவப்படுத்தப்பட்ட பக்திசிரத்தையுடன் கூடிய நல்மனத்துடன் திருமதி பாமதி மயூரநாதன் இச்சிறு நூலை எழுதியுள்ளார்.

## 14237

**வாழைச்சேனைப்பிரதேசத்து திருத்தல பஜனைப் பாடல்கள்.** பெ.புண்ணியமூர்த்தி. வாழைச்சேனை: சிவநெறிப் புரவலர் வெளியீடு, புதுக்குடியிருப்பு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 126/1, திருமலை வீதி).

vii, 25 பக்கம், விலை: ரூபா 10.00, அளவு: 22x16 சமீ.

ஓய்வுபெற்ற பாடசாலை அதிபரும் பிரபல சோதிடரும் சிவநெறிப்புலவர் எனும் பட்டத்தினைப் பெற்றவரும் சிறந்த சமயச் சொற்பொழிவாளருமான பெ. புண்ணியமூர்த்தி அவர்கள் வாழைச்சேனைப் பிரதேசத்தில் அமர்ந்துள்ள பல்வேறு திருத்தலங்களின்மீதும் பாடியருளிய திருத்தல பஜனைப்பாடல்கள் இவை. வாழைச்சேனை விநாயகா, பிள்ளையாரப்பா, அரோகரா, விநாயகனே சரணம், என்று நீயும் அருள்வாய், வீரையடி நாதனே, பிள்ளையாரு பிள்ளையாரு, காகித

நகரின் கணநாதா, கல்குடாவின் நாயகா, சித்தி விநாயகனே, வட்டவானின் பிள்ளையார், அன்பருள்ளத் தமர்ந்தவனே, பட்டியடிச்சேனை கண்ணனே, காளியைப் போற்றுவோம், புதுக்குடியிருப்பு உறைபவள், சுகங்கள் தரும் சுந்தரி, ஆதி நீ-ஆதிசிவனின் பாதி நீ, வாருங்கள் வாணியைப் பாடுங்கள், மாரியம்மா மாரியம்மா, சரவண பவனே, முனையிலுறை முருகனே, சிவகுருநாதா, முருகா சரணம், மாவடியின் மாரியம்மா, ஆலங்குளத்தமர்ந்தவனே ஆகிய 25 தலைப்புகளில் இப்பாமாலை கோர்க்கப்பட்டுள்ளது.

## 14238

**விநாயகசட்டிப் புராணம்.** நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் (மூலம்), ச.பத்மநாபன் (பதிப்பாசிரியர்). சிலாபம்: ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், முன்னேஸ்வரம், 1வது பதிப்பு, நவம்பர் 2018. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

viii, 40 பக்கம், புகைப்பட தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x45 சமீ., ISBN: 978-955-0877-62-1.

மூலநூலாசிரியர் நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். வரகவி எனவும் நாவன்னா எனவும் சிறப்புப் பெற்ற தமிழ்ப் புலவர் இவர். அவரது பதிக்கப்படாததும் பனை ஓலைச்சுவடி வடிவிலேயே இன்றும் இருக்கும் விநாயகசட்டிப் புராணமான இந்நூல், நவீன கணனி வசதியுடன் ஏட்டுச் சுவடிகளை உள்ளபடி புகைப்படப் பிரதியாக்கம் செய்து உருவாக்கப்பட்டுள்ளது. 240 ஏட்டுப் பக்கங்கள் பக்கத்துக்கு ஆறு ஏடுகளாக 40 பக்கங்களில் பிரதியெடுக்கப்பட்டுள்ளன. நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியாரின் தென்கோயிற் புராணம் 12600 விருத்தங்களுடனும், விநாயகசட்டிப் புராணம் 1600 விருத்தங்களுடனும் பாடப்பெற்று பனை ஓலைச் சுவடிகளாகவே முன்னேஸ்வர ஆலயத்தில் பேணப்பட்டு வருகின்றன. 14 நூல்களின் ஆசிரியரான இவரது ஆக்கங்களுள் கந்தசஷ்டிப் புராணம் 1895இல் முதற்பதிப்பாக வெளிவந்தது. பதிப்பாசிரியர் பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் ஸ்ரீமுன்னேஸ்வரம் தேவஸ்தானத்தின் பிரதமகுருவும் தர்மகர்த்தாவுமாவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சம்ஸ்கிருதத்துறையின் தலைவராகவும் பணியாற்றுகின்றார்.

## 14239

**ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த கந்தபுராணம் இரண்டாவது அசுரகாண்டம் மூலமும் உரையும்.** கச்சியப்ப சிவாசாரியார் (மூலம்), ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள் (உரையாசிரியர்). பருத்தித்துறை: ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள், தருமாலய வெளியீடு, 2வது பதிப்பு, 1928, 1வது பதிப்பு, 1909. (பருத்தித்துறை: கலாநிதியந்திரசாலை).

656 பக்கம், விலை: 4ரூபா 8 அணா, அளவு: 20.5x14 சமீ.

கந்தபுராணக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ள ஆறு காண்டங்களில் இரண்டாவது காண்டமாகத் திகழ்வது அசுர காண்டமாகும். இக்காண்டம் மாயைப்

படலத்திலிருந்து அமரர் சிறைபுகு படலம் ஈறாக 43 படலங்களைக் கொண்டமைந்துள்ளது. இப்புராணத்தில் அதிக படலங்களையும் பாடல்களையும் கொண்ட காண்டமும் இதுவாகும். அசுரர், அவர்தம் இயல்பு, சூரபன்மன் முதலானோரின் செயல்கள், அரசு, அரசாட்சி, இந்திரன் முதலான தேவர்களின் துயர் என்பவற்றை இக்காண்டம் விபரித்து நிற்கின்றது. யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தும்பைநகர் ச.சுப்பிரமணிய சாஸ்திரிகள் எழுதிய இந்நூல் 1909இல் முதற்பதிப்பினைக் கண்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 004835).

### 14240

**ஸ்ரீ நாராயணன் தோத்திரம்: கெருட பத்து.** ந.மா.கேதாரம்பிள்ளை (பதிப்பாசிரியர்). மட்டக்களப்பு: ந.மா.கேதாரம்பிள்ளை, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, பதிப்பு ஆண்டு விபரம் தரப்படவில்லை. (மட்டக்களப்பு: ஜெஸ்கொம் அச்சகம்).

(8) பக்கம், விலை: ரூபா 25.00, அளவு: 21x15 சமீ.

இந்நூலில் எட்டுவரிகள் கொண்ட 16 செய்யுள்களில் ஸ்ரீ நாராயண தோத்திரப்பாவும், எட்டு வரிகள் கொண்டனவாக அமைந்த பன்னிரண்டு செய்யுள்களில் கெருட பத்தும் பதிப்பிக்கப்பட்டுள்ளன. சித்தாயுர்வேத வைத்தியராகப் பணியாற்றும் ந.மா.கேதாரப்பிள்ளை அவர்கள், வழக்கிழந்துபோகும் பழம் நூல்களை மீளப் பதிப்பித்து விற்பனைசெய்யும் பணியில் மட்டக்களப்பிலிருந்து பலகாலம் ஈடுபட்டு வந்துள்ளார். (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது).

### 14241

**ஸ்ரீ மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை.** க.சு.நவநீத கிருஷ்ண பாரதியார் (உரையாசிரியர்), இராஜ.சிவ. சாம்பசிவசர்மா (பதிப்பாசிரியர்). தெல்லிப்பழை: பத்மா பதிப்பகம், மாவிட்டபுரம், பெப்ரவரி 1954. (சென்னை 5: கபீர் அச்சக்கூடம்).

(32), 1192 பக்கம், விலை: ரூபா 15.00, அளவு: 21.5x13.5 சமீ.

மதிப்புரை, உரையாசிரியர் முன்னுரை, உரையாசிரியர் அறிமுகம், ஸ்ரீ மாணிக்கவாசகர் வரலாறு பற்றிய குறிப்பு, உரையுள் எடுத்தாண்ட நூல்கள், இந்நூலில் வந்துள்ள உவமைகள், திருவாசகப் பதிக வரிசை, திருவாசகப் பதிகத் தொகை, பதிகவகராதி, உரிமையுரை, திருவாசக ஆக்கம், கடவுள் வணக்கம், அவையடக்கம் ஆகியவற்றைத் தொடர்ந்து நூலும் உரையும் இடம்பெற்றுள்ளன. இறுதியில் செய்யுள் முதற் குறிப்பகராதி காணப்படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 002444).

### 14242

**ஸ்ரீ ஸ்தோத்திர மஞ்சரி.** தொகுப்பாசிரியர் விபரமில்லை. கொழும்பு 11: இராஜேஸ்வரி வெளியீடு, 1வது பதிப்பு, வெளியிட்ட ஆண்டு விபரம் இல்லை. (கொழும்பு 11: இராஜேஸ்வரி அச்சகம்).

32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

இந்நூலில் ஸ்ரீ கணேச தோத்திரம், ஸ்ரீ சுப்ரமண்ய தோத்திரம், சிவ தோத்திரம், ஸஹஸ்ராக்ஷ்ரி வித்யா என்னும் தேவி கட்கமாலா முகவுரை, ஓம் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாத ஸ்தோத்திரம், த்யானம், ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம், ஸ்ரீ தலிதா த்ரிஸதீ முகவுரை, ந்யாஸ, ஸ்ரீ லலிதா த்ரிசதீ ஸ்தோத்திரம் ஆகிய தோத்திரங்கள் கொண்ட மாலை இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24632).

## 297 இஸ்லாம்

### 14243

**இஸ்லாத்தின் வழியில் பெண்கள் சுத்தம்.** செய்க் முஹம்மத் பின் ஸாலிஹ் அல் உதைமின் (மூலம்), ஸாலிஹ் அஸ்.ஸாலிஹ் (ஆங்கில மொழிபெயர்ப்பு), எஸ். எம்.மன்சூர் (தமிழாக்கம்). சவூதி அரேபியா: I.P.C.Islam Presentation Committee, P.O.Box 1613, Safat 13017, 1வது பதிப்பு, ஜனவரி 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(10), 62 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

அறிமுகம், மாதவிடாய் என்றால் என்ன? மாதவிடாய் ஆரம்ப முடிவு வயது (மாதவிடாய் நீடிக்கும் கால எல்லை, கருத்தரித்த பெண்களின் மாதவிடாய்), மாதவிடாய் மாற்றங்கள், மாதவிடாய் சம்பந்தமான சட்டங்கள் (தொழுகை, அஸ்ஸவ்ம் -நோன்பு நோற்றல், தவாஃப் - கஃபாவை வலம் வருதல், பிரியாவிடை தவாஃபிலிருந்து விதிவிலக்களித்தல், பள்ளிவாயலில் தங்குதல், முறையான உடலுறவு, விவாகரத்து, விவாகரத்தின் இத்தாவும் மாதவிடாயுடனான தொடர்பும், சுதந்திரமான கருப்பை, குஸ்ல் -குளிப்பு கட்டாயமாதல்), இஸ்திஹாதாஹ், நஃபாஸ என்றால் என்ன?, மாதவிடாயைத் தடுத்தல், கருத்தடை, கருச்சிதைவு செய்தல், வினா-விடைகள் ஆகிய எட்டு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44595).

### 14244

**ஏன் தொழ வேண்டும்?.** ஹஸனுல் பன்னா(ரஹ்), மௌலானா மௌதூதி. கொழும்பு 9: இலங்கை ஜமாஅதே இஸ்லாமி வெளியீடு, 204/1, தெமட்டகொட வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1973. (கொழும்பு 10: டயமண்ட் அச்சகம், 98, டீன்ஸ் ரோட், மருதானை).

64 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 19x13 சமீ.

இஸ்லாமியர்கள் ஏன் தொழுகை செய்யவேண்டும் என்பதை விளக்கும் சிறு நூல். தொழுகை ஒரு விளக்கம், ஜமாஅத் தொழுகை, தொழுகை பயன்தர வேண்டுமானால், தொழுகையின் மொழி ஆகிய நான்கு கட்டுரைகளின் வாயிலாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இதில் முதலாவது இடம்பெற்றுள்ள கட்டுரை மத்திய கிழக்கின் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமான முஸ்லிம் சகோதரத்துவ

இயக்க ஸ்தாபகர் ஹஸனுல் பன்னா(ரஹ்) அவர்களுடையது. ஏனைய கட்டுரைகளின் ஆசிரியர் இஸ்லாமிய அறிஞர் மௌலானா ஸெய்யித் அபுல் அஃலா மௌதூதி என்பவராவார்.

### 14245

**புன்னகைக்கும் நபிகள்.** A.B.M .இத்ரீஸ். வாழைச்சேனை 05: சோனகம் வெளியீடு, மஹ்மூட் ஆலிம் தெரு, 1வது பதிப்பு, 2011. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

132 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-0697-03-8.

இறுதித் தூதர் என்று உலக முஸ்லிம்கள் அனைவராலும் நம்பப்படும் முஹம்மத் (ஸல்) தொடர்பாக இந்நூல் எழுதப்பட்டள்ளது. நபிகளின் ஆளுமை, அவரது அரசியல், நபிகளாரின் சிந்தனைகள் என மூன்று பிரிவுகளாக வகுத்து இந்நூல் நபிகளின் வாழ்வை மறுவாசிப்புக்கு உட்படுத்துகின்றது. "ஆளுமை" என்ற பிரிவில் நபிகளின் சுயவிபரக் கோவை, அழகை ஆராதிக்கும் இறைதூதர், புன்னகைக்கும் நபிகள், நபிகளும் காமமும், நபிகளின் ஆளுமை ஆகிய தலைப்புகளில் இவ்வாய்வை விரித்துச் செல்லும் ஆசிரியர் "அரசியல்" என்ற பிரிவில் இஸ்லாத்துக்கு முந்திய அரேபியா, சீறாவில் பெயரிடல்களின் உபாயம், நபிகளும் மனித உரிமையும், நபிகளும் விளிம்புநிலை மக்களும், நபிகளும் குடிமக்களும், நெருக்கடிகளை கையாள்வதில் நபிகளின் தொடர்பாடல், என்பவற்றைப் பற்றி விபரிக்கிறார். "சிந்தனை" என்ற இறுதிப் பிரிவில் நபிகளும் தியானமும், நபிகளின் சமூக மாற்றம், நபிகளும் கல்வியும், நபிகள்-தொழில்நுட்பம்-நுகர்வியம், நபிகளின் மருத்துவம் ஆகியவற்றை விளக்கிச் செல்கின்றார். சோனகம்-உயிர்ப்பைத் தேடும் வேர்கள் என்று முன்னர் அறியப்பட்ட பதிப்பகமாகும்.

## 297.4 சூபியிசம்

### 14246

**மயக்கத்தை அகற்றி துலங்கும் அறிவு.** ஷேக் முகையுதீன் குருபாவா. கொழும்பு: இலங்கை சூபி (ஞான) விளக்கக் குழு, 139, தர்மபால மாவத்தை, 1வது பதிப்பு, 1972. (யாழ்ப்பாணம்: கொம்மேர்ஷியல் அச்சகம், பிரதான வீதி).

viii, 144 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

விலங்குகளின் வாழ்வு, பழக்க வழக்கங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட 81 குட்டிக் கதைகளின் மூலமாக சூபியிசக் கருத்துக்களை இந்நூலில் வழங்கியுள்ளார். புத்தகப் படிப்பு, மனித உடம்பு, மதி, ஒரு தமிழ்ப் பழமொழி, பிறவிக் கடன், ஆண்டவன் மீது குற்றஞ்சாட்டுதல், அறிவுக்கும் படிப்புக்குமுள்ள தொடர்பு, புனிதமான மனிதர்கள், சமாதி, விஷ்ணுவின் அடையாளம், ஐந்தெழுத்து மந்திரம், கோழி உணவும் வைரமும், ஆசை நாய், பாட்டுக்கும் நடனத்திற்கும் அரசனின் பரிசு, தாமரைப்பூவும் உயிரும், ஒட்டகம், ஒட்டக் குதிரை, கடலாமை, செம்மறி ஆடு, முயல் குட்டிகள், புல்லுடன் முயலின் கோபம், மரங்களில் தங்கும்

பறவைகள், பாம்பின் விஷப்பற்கள், ஓணானுக்கு மாடு விற்றல், அரணை, நண்டு, உடம்பின் விளக்கம், கொக்கின் விளக்கம், கோழி முட்டையின் விளக்கம் என இன்னோரன்ன தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 03091).

# 300 சமூக விஞ்ஞானங்கள்

## 301 சமூகவியல்

### 14247

**கலைபடும் மௌனம்.** A.B.M .இத்ரீஸ். வாழைச்சேனை 05: காகம் வெளியீடு, (உயிர்ப்பைத் தேடும் வேர்கள்), மஹ்மூட் ஆலிம் தெரு, 1வது பதிப்பு, 2012. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

148 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18x10.5 சமீ., ISBN: 978-955-0697-06-9.

திருக்கோணமலையில் சந்திப்பொன்றை 2010 ஒக்டோபர் 2-3ஆம் திகதிகளில் A.B.M மீடியா ஒழுங்குசெய்திருந்தது, அதில் A.B.M. இத்ரீஸ், கலகம், இல்மா அமைப்புகளின் நண்பர்களுடனும் அ.வா.முஹ்ஸீன் அவர்களுடனும் மேற்கொண்ட கலந்துரையாடல் இங்கு தொகுக்கப்பட்டுள்ளது. நமது பண்பாட்டு வெளியில் சமயவாதங்களும் கல்விமுறைகளும் கால ஓட்டத்தில் ஏற்படுத்தியிருக்கும் இறுகிய மனப்பாங்குகள் மௌனப்படுத்தல்கள் கலாச்சாரக் காவல்கள் மூலம் நமது அசைவியக்கத்தை தடைப்படுத்தி இருக்கும் வரலாற்றுக் கட்டத்தில் இந்த உரையாடல் அவற்றை கலைத்தபடியும் உடைத்தபடியும் இன அரசியல் சூழலில் கஜீவனத்திற்கான திசைவழிகளையும் தேடிச் செல்கின்றது.

### 14248

**சமூகத்தை அணிதிரட்டல், வலுவூட்டல், சமூக நிலைமாற்றுதல் தொடர்பில் மாதிரிக் கட்டமைப்பையும் உபாயங்களையும் உருவாக்குதல்.** பிளன்டினா மகேந்திரன், சிரானி அனுசியா அன்ட்ரூ (ஆங்கில மூலம்), J.P.A. றஞ்சித்குமார். யாழ்ப்பாணம்: அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், யாழ்ப்பாண மாவட்டம், 1வது பதிப்பு, மார்கழி 2012. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).

39 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

நான்கு அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ள இவ்வறிக்கையின் முதலாவது அத்தியாயத்தில் ஆய்வுப் பிரதேசம், ஆய்வின் நோக்கங்கள், ஆய்வின் முறையியல், ஆய்வின் வரையறைகள், கருத்தியல் ரீதியான வரைவிலக்கணம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் அத்தியாயத்தில் சமுதாய அணிதிரட்டலின் கொள்கை மற்றும் இலக்கு, சமுதாய அணிதிரட்டலின் அளவீடு, சமுதாய அணிதிரட்டலுக்கான தேவைப்பாடுகள், சமுதாய அணிதிரட்டலின் படிமுறைகள், சமுதாய அணிதிரட்டல் சக்கரம், சமுதாய அணிதிரட்டலை ஒழுங்கமைப்பதில்

பங்குதாரர்களின் வகிபங்கு, அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்றிட்டங்களில் சமுதாய அணிதிரட்டல், சமூக வலுவூட்டல், சமூக வலுவூட்டலில் அரச சார்பற்ற நிறுவனங்களின் வகிபங்கு, சமூக வலுவூட்டலுக்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள், சமூக நிலை மாற்றம் ஆகியன விபரிக்கப்பட்டுள்ளன. மூன்றாம் அத்தியாயத்தில் சமூக அபிவிருத்தி மற்றும் வலுவூட்டலுடன் தொடர்புடைய அரச சார்பற்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள், யாழ்ப்பாணத்தின் சமூக-கலாச்சார நிலைக்கேற்ற சமூக அணிதிரட்டல் செயன்முறை, யாழ்ப்பாண மாவட்டத்தில் நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் சமூக அணிதிரட்டல் மற்றும் சமூக வலுவூட்டல் செயற்பாடுகள், சமூக அணிதிரட்டல் மற்றும் சமூக வலுவூட்டலுடன் தொடர்புடைய அரசாங்கத்துடன் சம்பந்தமுடைய பிரச்சினைகள், சமூக மட்ட அமைப்புகளுடனான சமூக அணிதிரட்டல் மற்றும் வலுவூட்டல், அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளில் சமூக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் ஆகியன விபரிக்கப்பட்டுள்ளன. நான்காவது இறுதி அத்தியாயத்தில் முடிவுரையும் சிபார்சுகளும் இடம்பெறுகின்றன. (இந்நூல் புங்குடுதீவு சர்வோதய மத்திய நூலகத்தில் பார்வையிடப்பட்டது).

### 14249

**நறுக்கென்று-மூன்று விரல் கேள்விகள்: சமூக சுயவிமரிசனப் பத்திகள்.** ஜெயந்தன் (இயற்பெயர்: செபஸ்தியாம்பிள்ளை போல் ஜெயந்தன் பச்சேக் அமதி). மன்னார்: விக்ரறீஸ் மீடியா, பேசாலை, 1வது பதிப்பு, புரட்டாதி 2019. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

xxiv, 92 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-5112-00-5.

நாம் அன்றாடம் கடந்துபோகும் பல விடயங்களின் பால் கூரிய பார்வையையும் சுய விமர்சனத்தையும் வேண்டிநிற்கும் சிந்தனை விரிதளத்திற்கு எம்மை ஜெயந்தன் அடிகளார் இட்டுச் செல்கிறார். களம் இது தான், தகவல் மையமும் சிந்தனையும், மனம்-சம்பிரதாயம்-புத்தி, கறிக்குழம்பும் சுயகுலமும், திருவிழா: சும்மா அந்த மாதிரி, சத்தமே நஞ்சாக, எர்வா மார்டீனும் எதிர்காலமும், கூடிவிளையாடு, எல்லை கடக்கும் தொல்லை, நீராவியும் புட்டுக் குழலும், முன்னேற இடமுண்டு, போலி மார்க்கம், தோற்றுப்போன கல்வி, செஞ்சோற்றுக் கடனுக்காக, கொழுத்த குட்டியும் மெலிந்த குழந்தையும், ஒன்று + ஒன்று = மூன்று, சீனக்குபேரன், தெய்வங்கள் தேவையில்லையா?, மடைமைத்தனமும் மூலதனமும், பாரபட்சம், பேயும் புத்தியும், சிபாரிசும் சாபம், இதற்குத்தானா இந்தப்பாடு? போங்கடா நீங்களும் உங்கட, எங்கள உய்ய விடயிலயே, மணியந்திடல் மேற்கைப் பிறப்பிடமாகவும், மனிதன் கடவுளுக்கே படியளக்கிறான், ஞாயிறு விடுமுறை, எதிர்த் தாக்கம், புதுவரவு ஏமாற்றம், வளத்தின் நிறம்தான் என்ன?, தக்கன பிழைக்கும், நித்தியத்திற்கும், வரப்புயர, எல்லோரும் எழுதலாம், அதே அளவையால் உங்களுக்கும், வெள்ளைக்கார சம்பந்தி, கடவுளையே மறைக்கும் பக்தி, அருளும் பொருளும், தீயை மூட்டவே, தமிழுக்கென்றொரு பெயர், நேற்றுத்தான் விஞ்ஞானி, இறக்குமதிச் சிரிப்பு, திரண்டால் மிடுக்கு, இருக்கவே இருக்கிறது, வேலை தெரிந்தவன் ஆகிய 46 தலைப்புகளில் எமது சமூகத்தில்

வேண்டிநிற்கும் நடைமுறை மாற்றங்களையும் சிந்தனைத் தெளிவையும் ஏற்படுத்தும் பத்தி எழுத்துக்கள் இவை.

## 301.01 சமூகவியல் சார்ந்த பாடநூல்கள்

### 14250

**சமூகக் கல்விப் பாடத்துக்கான தேசப்படப் பயிற்சி 10-11.** கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு: கல்வி வெளியீட்டுத்திணைக்களம், இசுறுபாய, பத்தரமுல்லை, 14ஆவது பதிப்பு, 1999, 1வது பதிப்பு, 1986. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

vii, 28 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

இந்நூலின் முதல் ஏழு பயிற்சிகளுக்கும் இலங்கையின் 1:50,000 பௌதிக உறுப்புத் தேசப்படங்களிற் காணப்படும் நிறங்களும் குறியீடுகளும் உபயோகிக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன. இறுதி 4 பயிற்சிகளும் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையின்போது மாணவர்களுக்கு விடையளிப்பதற்குக் கிடைக்கும் பயிற்சிகளைப் போன்று கறுப்பு வெள்ளை நிறத்தில் அச்சிடப்பட்டுள்ளன. இந் நூல் 1999ஆம் ஆண்டு விநியோகத்திற்காக இலங்கை கல்வித் திணைக்களத்தினால் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27421).

### 14251

**வரலாறும் சமூகக் கல்வியும்: சர்வதேச அமைப்புக்கள்-2.** கே.தயானந்த (மூலம்), எம்.ஜே.எம். அஸ்ஹர் (தமிழாக்கம்), உ.நவரத்தினம் (பதிப்பாசிரியர்). மஹரகம: தொலைக்கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1992. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

70 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

இந்நூலில் சர்வதேச தாபனங்களின் வகையீடும், வலயங்களுக்குரிய சர்வதேச பொருளாதார தாபனங்களும், வலயங்களுக்குரிய பாதுகாப்புத் தாபனங்கள், நாடுகளுக்கு இடையேயான தாபனங்கள், நாடுகளுக்கிடையே அரச சார்பற்ற தாபனங்களும் தனிநாட்டுத் தாபனங்களும் ஆகிய பாடப்பரப்புகள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 24504).

## 301.05 சமூகவியல் சார்ந்த ஆய்விதழ்கள்/சிறப்பு மலர்கள்

### 14252

**இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை.** லக்ஷ்மன் ஜயத்திலக்க (ஆணைக்குழுவின் தலைவர்). கொழும்பு 3: இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு, கிராமோதய நிலையம், 152, காலி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1990. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

xviii, 138 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 34.10, அளவு: 24x15 சமீ.

இளைஞர்களிடையே நிலவும் விரக்தி, அமைதியின்மை, சஞ்சலம் என்பவற்றுக்கான காரணங்களை கூர்ந்து நோக்கி இத்தகைய மனப்பாங்குகள் இல்லாதொழிக்கும் வழிமுறைகளைத் தேடும் வகையில் அன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை இது. பொதுமக்களிடமிருந்து 1862 எழுத்துமூலமான முறையீடுகளையும், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை ஆளுநர்கள், முதலமைச்சர்கள், உறுப்பினர்கள், அரசியற் கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளிட்ட 520பேரிடமிருந்து வாய்மொழி வாக்குமூலங்களையும் இவ்வாணைக்குழுவினர் பெற்றுள்ளனர். இளைஞர் அமைப்புகள், அரசாங்க, தனியார் துறைகள், கல்வி, உயர்கல்வி நிறுவனங்கள் தொழில் நிறுவனங்கள் சமயக் குழுக்கள், அரசுசார் நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நூற்றுக்கு மேற்பட்டோரும் இங்கு வாக்குமூலம் வழங்கியுள்ளனர். கண்டி, மாத்தளை, தெல்தெனிய, யாழ்ப்பாணம், காலி, அனுராதபுரம், குருநாகல் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்துள்ளனர். இவ்வாணைக்குழுவில் லக்ஷ்மன் ஜயத்திலக்க, ஜீ.எல் பீரிஸ், ராதிகா குமாரசுவாமி, ஏ.எஸ்.முகமது அலி, ஆ.ரி.அலஸ், மொனிக்கா ருவன்பதிரான, சவீந்திர பர்ணாந்து, லால் குருகுலசூரியா ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22676).

### 14253

**சமூக அறிவு: தொகுதி 1, இதழ் 1/2-ஆடி 2004.** வி.நித்தியானந்தம் (பிரதம ஆசிரியர்), கணேசலிங்கன் குமரன் (நிர்வாக ஆசிரியர்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி, 1வது பதிப்பு, ஆடி 2004. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

189 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISSN: 1391-9830.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வி.நித்தியானந்தனை ஆசிரியராகவும், பேராசிரியர்களான கா.சிவத்தம்பி, நா.பாலகிருஷ்ணன், அ.சிவராசா, சோ. சந்திரசேகரன், எம்.எல்.ஏ.காதர், வி.பி.சிவானந்தன், க.ரகுராகவன் ஆகியோரை ஆலோசகர் குழுவாகவும் கொண்டு வெளியிடப்பட்ட சமூகம் அதன் அசைவியக்கம் பற்றிய ஓர் ஆய்விதழ் இது. இவ்விதழில் "கட்டுரைகள்" என்ற பிரிவில் யாழ்ப்பாணச்

சமூகப் பாரம்பரியத்தில் கட்டடம் பற்றிய எண்ணக்கரு (கார்த்திகேசு சிவத்தம்பி), நிறுவன கோட்பாடுகளும் சந்தைப்படுத்தல் ஆய்வுகளும் அவை மத்தியிலான கருதுகோள் ரீதியான தொடர்பு (க.ரகுராகவன்), ஈழத்தமிழரும் மருத்துவக் கல்வியும்: அதன் சமூகப் பொருளாதார பரிணாமம் (வி.நித்தியானந்தம்), மேலாதிக்கமும் அதன் தடுமாற்றமும் (நோம் சொம்ஸ்கி), மோதலும் மோதல் தீர்வும் (ஜயதேவ உயங்கொட) ஆகிய ஆறு கட்டுரைகளும், "நூல் ஆய்வு" என்ற பிரிவில் வடக்கு கிழக்கு நிலைமையின் பின்னணியில் வறுமைக் குறைப்பும் இலங்கையை மீட்டெடுத்தலும் (வி.நித்தியானந்தம்), சங்க கால வரலாறும் தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களும் (கார்த்திகேசு சிவத்தம்பி) ஆகிய கட்டுரைகளும், "நூல் விமர்சனம்" என்ற பிரிவில் இலங்கையின் பொருளாதார வரலாறு: வடக்கு கிழக்கு பரிமாணம் (ந.பேரின்பநாதன்), உலக அபிவிருத்தி அறிக்கை -2004: சேவைகளை வறியோருக்காக இயங்கவைத்தல் (க.சண்முகலிங்கம்) ஆகிய கட்டுரைகளும், "அஞ்சலி" என்ற பிரிவில் எட்வர்ட் சயித் (1935-2003), போல் மார்லர் சுவிசி (1931-2004) ஆகியோர் பற்றிய அஞ்சலிக் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13699).

### 14254

**சமூக அறிவு: தொகுதி 2,இதழ் 1/2 - ஆடி 2005.** வி.நித்தியானந்தம் (பிரதம ஆசிரியர்), கணேசலிங்கன் குமரன் (நிர்வாக ஆசிரியர்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, ½, டாம் வீதி, 1வது பதிப்பு, ஆடி 2005. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 361, ½, டாம் வீதி).

128 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISSN: 1391-9830.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வி.நித்தியானந்தனை ஆசிரியராகவும், பேராசிரியர்களான கா.சிவத்தம்பி, நா.பாலகிருஷ்ணன், வி.பி.சிவானந்தன் ஆகியோரை ஆலோசகர் குழுவாகவும் கொண்டு வெளியிடப்பட்ட சமூகம் அதன் அசைவியக்கம் பற்றிய ஓர் ஆய்விதழ் இது. இவ்விதழில் "கட்டுரைகள்" என்ற பிரிவில் இலங்கை வரலாற்றின் பிரச்சினைகளும் வரலாறு பற்றிய பயமும் (சுதர்சன் செனிவிரட்ண), தமிழில் இலக்கியப் பாட மீட்பு (கார்த்திகேசு சிவத்தம்பி), முரண்பாட்டுத் தீர்வும் பேச்சுவார்த்தையும் (ஜயதேவ உயங்கொட), தகவலும் ஈழத் தமிழ்ச் சமூகத்தின் தகவல் அணுகையும் (எஸ்.அருளானந்தம்) ஆகிய நான்கு கட்டுரைகளும், "நூல் ஆய்வு" என்ற பிரிவில் இலங்கையிற் பொருளாதாரக் கொள்கை: எழு வினாக்களும் வாதங்களும் என்ற தலைப்பில் வி.நித்தியானந்தம் அவர்கள் Saman Kelegama பதிப்பித்த Economic Policy in Sri Lanka: Issues and debates என்ற நூலுக்கான ஆய்வுக் கட்டுரையும், "நூல் விமர்சனம்" என்ற பிரிவில் பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதிய "இலங்கை தேச வழமைகளும் சமூக வழமைகளும்" என்ற நூலுக்கான பொ.இரகுபதியின் நூல் விமர்சனமும், "அறிவின் இழப்பு" என்ற பிரிவில் ரெஜி சிறிவர்தன (1922-2004), தர்மரட்ணம் சிவராம்

(1959-2005), லால் ஜெயவர்தன (1934-2004) ஆகியோரின் வாழ்வும் பணிகளும் பற்றி கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் நினைவஞ்சலிகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39490).

## 14255

**பனுவல்: சமூக பண்பாட்டு விசாரணை (இதழ் 1-2003).** கசங்க பெரேரா, தா.சனாதனன் (பிரதான தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 8: சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பு, சமூக, பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம், 119A, கிங்ஸ் வீதி, 1வது பதிப்பு, 2003. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).

(4), 155 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ., ISBN: 1391-9156.

இவ்விதழில், முன்னுரை (பனுவல் ஆசிரியர் குழு), அடையாளத்தின் கட்டமைப்பு முறைகள் அரசியல், நடை, குழப்பம் (மூலம்: சசங்க பெரேரா, தமிழில்: தா.சனாதனன்), வர்த்தகர்களின் கடவுளாக முருகக் கடவுள் (கதரகம தெய்யோ): சிங்கள பௌத்த வர்த்தகர்களின் உடல்மொழி - (டெஸ்மண்ட் மல்லிகாராச்சி, தமிழில்: சாமிநாதன் விமல்), புராதன காலத்தில் இலங்கைக்கும், தமிழ்நாட்டிற்குமிடையில் நிலவிய கலாச்சார மற்றும் வணிகத்தொடர்புகள் பற்றிய புதிய சான்றுகள் (ஒஸ்மண்ட் போபெ ஆரச்சி, தமிழில்: சாமிநாதன் விமல்), குடும்பத்தின் பாணி இலங்கையில் வன்முறையும், கலையும் தொடர்பான ஓர் ஆய்வு (ஷெரன் பெல், தமிழில்: சாமிநாதன் விமல்), மொழிக்குறியின் இயல்பு (வெடினன் சசூர், தமிழில்: இ.முருகையன்), பனுவல் நூல் திறனாய்வு: இலங்கைத் தமிழர் தேசவழமைகளும், சமூகவழமைகளும் - சி.பத்மநாதன் (கே.ரி. கணேசலிங்கம்), தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டைய கால மதமும், கலையும் - பரமு.புஷ்பரட்ணம் (பாக்கியநாதன் அகிலன்) ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32884).

## 14256

**பனுவல்: சமூக பண்பாட்டு விசாரணை (இதழ் 4-2006).** கசங்க பெரேரா, தா.சனாதனன் (பிரதான தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 8: சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பு, சமூக, பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம், 119A, கிங்ஸ் வீதி, 1வது பதிப்பு, 2006. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 424 A , காங்கேசன்துறை வீதி).

(4), 132 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 22x15 சமீ., ISBN: 1391-9156.

இவ்விதழில், முன்னுரை: ஏ. ஜே. கனகரட்ணாவின் நினைவுகளுக்குச் சமர்ப்பணம் (பனுவல் ஆசிரியர் குழு), பண்பாடு என்ற கருத்தாக்கம் (தே. லூர்து), தொறுப்புசல்-

*வீரயுக மரபு: மேட்டுநில தமிழகத்தில் ஆநிரை-சார் சமூக உருவாக்கம் (க. குணசேகரன்), பொதிசெய்யப்பட்ட வினோதங்களாக தொடர்மாடி மனைகள்: இடமின்மைத் தன்மையின் அரசியலும், சுவையின் நியமப் படுத்தலும் (சசங்க பெரெரா), இருபால் ஒருடல்: அர்த்தநாரீஸ்வரர் அகழ்வாய்வுக் குறிப்புக்கள் (பாக்கியநாதன் அகிலன்), பனுவல் நூல் திறனாய்வு: கே.என்.ஓ.தர்மதாசவின் தேசப்பற்று-சமூக அறிவுசார் திறனாய்வு என்ற நூல் (சசங்க பெரேரா-மூலம், சாமிநாதன் விமல்-தமிழாக்கம்) ஆகிய ஆக்கங்களை இவ்விதழ் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 59866).*

## 14257

**பனுவல்: சமூக பண்பாட்டு விசாரணை (இதழ் 5-2007).** *சசங்க பெரேரா, தா.சனாதனன் (பிரதான தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 8: சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பு, சமூக, பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம், 119A, கிங்ஸ் வீதி, 1வது பதிப்பு, 2007. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 424 A , காங்கேசன்துறை வீதி).*

iv, *162 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ.,* ISBN: ***1391-9156.***

*இவ்விதழில், நுழைவாயில் (பனுவல் ஆசிரியர் குழு), படமும் பாடமும்: காலனிய யாழ்ப்பாணத்தில் ஓவியத்தின் நவீனத்துவமும் இருமை நிலையும் (தா.சனாதனன்), வட இலங்கையில் மது விலக்குப் போராட்டம்: தமிழ் அரசியல் தலைமைத்துவமும், சமூக யதார்த்தமும் 1900-1936 (சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்), பாலங்களாக மணப்பெண்கள்: இடப்பெயர்வுகள், பாத்திரங்கள், ஆவணங்கள் மற்றும் எதிர்பார்ப்புகளினூடே தமிழ்த் தன்மை (சித்தார்த்தன் மௌனகுரு), உடல்அரசியல்கள்: நவீன இந்தியாவில் தேசப்படங்கள் மற்றும் பெண்கடவுளர்கள் (சுமதி ராமசுவாமி), பனுவல் நூல் திறனாய்வு: யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் மடமும் மடக் கட்டிடக் கலையும் (ச.கார்மேகம்), வரலாற்றைக் கட்டுதலும், அவிழ்த்தலும்: இலங்கை வரலாறு தொடர்பான கலாநிதி கா.இந்திரபாலாவின் மறுவாசிப்பு (பாக்கியநாதன் அகிலன்) ஆகிய ஆய்வுக் கட்டுரைகளும், கலைச்சொற்றொகுதியும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 73488).*

## 14258

**பனுவல்: சமூக பண்பாட்டு விசாரணை (இதழ் 6-2008).** *சசங்க பெரேரா, தா.சனாதனன் (பிரதான தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 8: சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பு, சமூக, பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம், 119A, கிங்ஸ் வீதி, 1வது பதிப்பு, 2008. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 681, காங்கேசன்துறை வீதி).*

iv, *133 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 22x15 சமீ.,* ISBN: ***1391-9156.***

இவ்விதழில், நுழைவாயில் (பனுவல் ஆசிரியர் குழு), கிளத்தலும் நிகழ்த்தலும்: திருவாய்மொழியிற் பக்தி நிகழ்த்தல் (ந.கோவிந்தராஜன்), பிறரை உற்றுப்பார்த்தல்: லயனல் வென்ற் மற்றும் டேவிட் பெயின்ரரின் ஓவியங்களில் ஆண்தேகம் (தா.சனாதனன்), ஜா-எல பிரதேசத்தில் ஏற்பட்ட தமிழ் இந்து அடையாள மாற்றத்தில் எவான்ஜலியன் சமயச் செயற்றிட்டத்தின் தாக்கம் (அனுஷ்கா ஹகந்தகம), பொசன்: பின்-காலனிய இலங்கையில் பௌத்த யாத்திரையின் அரசியல் (ஜொனத்தன் எஸ்.வால்டர்ஸ்), பனுவல் நூல் திறனாய்வு: திராவிடச் சான்று-எல்லிசும் திராவிட மொழிகளும் (கி.நாச்சிமுத்து), Abiding by Sri Lanka: On Peace and Place and Post coloniality-தேசப்பற்று: சமூக அறிவுசார் திறனாய்வு (காயத்திரிதேவி) ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இறுதியில் கலைற்சொற்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 59880).

### 14259

**பனுவல்: சமூக பண்பாட்டு விசாரணை (இதழ் 7-2009).** கசங்க பெரேரா, தா.சனாதனன் (பிரதான தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 8: சமூக பண்பாட்டு விசாரணைக்கான கூட்டிணைப்பு, சமூக, பண்பாட்டு உயர் கற்கைகளுக்கான கொழும்பு நிறுவனம், 119A, கிங்ஸ் வீதி, 1வது பதிப்பு, 2009. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 681, காங்கேசன்துறை வீதி).

(4), 114 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 300., அளவு: 22x15 சமீ., ISBN: 1391-9156.

இவ்விதழில், நுழைவாயில் (பனுவல் ஆசிரியர் குழு), யாழ்ப்பாணத்தில் சாதியம் (மைக்கல் பாங்ஸ்-ஆங்கில மூலம், தா.சனாதனன், சாமிநாதன் விமல்-தமிழாக்கம்), யாழ்ப்பாண சமூகத்தின் புலப்பெயர்வு, பணவருவாய் மற்றும் சாதி, வகுப்பு, மத அடையாளங்களின் இயக்கு நிலைகள் (பரம்சோதி தங்கேஸ்), இடைக்காலத் தமிழகத்தில் கைவினைஞர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை: ஒரு வரலாற்று பார்வை (விஜயா இராமசாமி), சிங்கள சாதியத்தின் இயல்பு (பிறைஸ் ரயன்-ஆங்கில மூலம், சாமிநாதன் விமல், க.அருந்தாகரன் (தமிழாக்கம்), பனுவல் நூல் திறனாய்வு: கலகக் குரலில் கரைந்த தேசம் எனும் மதிப்பீடு (இரா. திருநாவுக்கரசு) ஆகிய ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 59856).

### 14260

**யாத்திரை: சமூக ஆய்விற்கான இலங்கைச் சங்கத்தினது ஆய்விதழ்.** ஆர். ஒபயசேகரா, எம்.சின்னத்தம்பி, கே.டியுடர் சில்வா (ஆசிரியர்கள்). பேராதனை: எம்.சின்னத்தம்பி, சமூக ஆய்வுக்கான இலங்கைச் சங்கம், பொருளியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1992. (கண்டி: றோயல் பிரிண்டர்ஸ், 190, கொழும்பு வீதி).

vi, 64 பக்கம், விலை: ரூபா 15.00, அளவு: 21.5x14 சமீ.

ஆசிய கல்விச் சங்கத்தினது தென்னாசிய சபையின் நிதியுதவியுடன் இவ்வாய்விதழ் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழில் இலங்கையின் ஆரம்ப வரலாறு: இரு முகத் தோற்றங்கள் (எஸ்.ஜே.தம்பையா), முரண்பாடும் தீர்வும் பற்றிய ஒரு பதின்மூன்றாம் நூற்றாண்டுக் கதை (ரஞ்சினி ஒபயசேகரா, கணநாத் ஒபயசேகரா), புத்தரினது உறவினர்கள்: இலங்கையினது புராதன, மத்திய கால முற்பகுதி இராச்சியங்களில் கற்பிதக் கதைகள் அரசியல் பட்டயங்களாக விளங்கியமை (R.A.L.H.குணவர்த்தன), இலங்கையில் பதட்ட நிலை முரண்பாடு என்பவற்றின் சமூக, அரசியல் அறிகுறிகள் (றொபர்ட் என்.கேர்ணி), பாரதர் (Baratas) இலங்கையினது ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் சமூக ஒருங்கிணைவு பற்றிய ஒரு ஆய்வு (சுதர்சன் செனவிரத்ன), துட்டகைமுனு அபயனது மனசாட்சி: அல்லது கற்பிதக் கதையினை ஆக்குவோனாக மானிடவியலாளர் (கணநாத் ஒபயசேகரா), பெருந்தோட்டப் பகுதிகளில் இனப்பிரச்சினை (கே.டியுடர் சில்வா), சிறுபான்மையினரின் நீதிக்காக புத்த மதத்தினர் (மஹிந்த பலிஹவதன) ஆகிய எட்டு ஆய்வுக் கட்டுரைகள் தமிழாக்கம் செய்து வெளியிடப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27160).

## 301.1 பண்பாடு

### 14261

**தமிழர் பண்பாடு**. ந.சி.கந்தையாபிள்ளை. சிங்கப்பூர் 209727: E.V.S. பப்ளிஷர்ஸ், 16, Cuff Road, மீள்பதிப்பு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

vi, 142 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ., ISBN: 981-3010-21-5.

1961 ஆம் ஆண்டளவில் "இந்துசாதனம்" வார இதழில் தமிழர் பண்பாடு தொடர்புள்ள பல கட்டுரைகளை ஆசிரியர் தொடர்ந்து எழுதிவந்தார். அக்கட்டுரைகளின் தொகுப்பு தமிழர் பண்பாடு என்ற நூலாக 1966ஆம் ஆண்டளவில் தமிழகத்தில் வெளிவந்திருந்தது. இந்நூல் அதன் மீள்பதிப்பாக சிங்கப்பூரில் வெளிவந்துள்ள பிரதியாகும். போதிய வெளியீட்டு விபரங்கள் தரப்படவில்லை. பண்டைக்காலத் தமிழகம், கடல்கோள், மக்கள் வடக்கு நோக்கிச் சென்று குடியேறுதல், கற்காலம், சிந்துவெளி நாகரிகம், ஆரியர் வருகை, இதிகாசங்களும் தமிழ்நாடும், புராணங்களும் தமிழ்நாடும், தமிழ்நாட்டெல்லை, தமிழ்நாட்டின் இயற்கை அமைப்பு, பாண்டி நாடு, சேர நாடு, சோழ நாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு, ஈழநாடு, மீனோவர் நாடும் தமிழகமும், ஈழமும் தமிழகமும், பினீசியா நாடும் தமிழகமும், ஆசியா மைனரும் தமிழ்நாடும், சீனாவும் இந்தியாவும், தென்னிந்தியர் குடியேறிய நாடுகள், பர்மா, மலாயா, சுமாத்திராவும் சாவகமும், போர்ணியோவும் பாலியும், பிலிப்பைன் தீவுகள், தாய்லாந்து (சீயம்), கம்போடியா, அங்கோர்வாட், சம்பா, ஊர், சிறுகுடி, பாடி, பாக்கம், மருத நிலத்து ஊர், பறந்தலை, நாடும் நகரும், பட்டினம், மக்கட்

பாகுபாடு, அரசன், ஆட்சி, உணவு, உடை, நெசவு, உழவு, வாணிகம், வழிபாடு, கோயில், பார்ப்பார், தத்துவஞானம், கல்வி, கைத்தொழில்கள், ஆபரண அலங்காரங்கள், பொழுதுபோக்கு, இசை, போர், படை, யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை, போர்க் கட்டளைகள், அணிவகுப்பு, போர் ஆயுதங்கள், கோட்டையும் பாசறையும், நம்பிக்கைகள், போக்குவரத்து, ஓவியம், சிற்பம், மருந்து, இரேகை நூல், வானாராய்ச்சி, செல்வன் வாழும் மாளிகை, கூத்து ஆகிய 75 தலைப்புகளில் இந்நூல் விரிந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48632).

## 305 மானிட சமத்துவம்

### 14262

**சகவாழ்வுக்கான அறிவு (Wisdom for Good Co-excistence).** *சிட்னி மார்க்கஸ் டயஸ் (மீளுருவாக்கமும் தொகுப்பும்), எஸ்.ஏ.சீ.எம். கராமத் (தமிழாக்கம்). ஆனமடுவ: தோதென்ன பப்ளிஷிங் ஹவுஸ், உஸ்வெவ வீதி, இணை வெளியீடு,* Colombo 07: Deutsche Gesellschaft fur Internationale Zusammenarbeit (GIZ) GmbH-Facilitating Initiatives for Social Cohesion & Transformation (FLICT), 207/17, Dharmapala Mawatha, *1வது பதிப்பு, நவம்பர் 2011. (கணேமுல்ல: ஜெயன் பிரின்ட் கிராப்பிக்ஸ், கலஹிட்டியாவ).*

viii, *88 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப் படவில்லை, விலை: ரூபா 250., அளவு: 20*x*14.5 சமீ.,* ISBN: *978-955-1848-67-5.*

*சகவாழ்வுக்கான அறிவு நூலில் கடந்த நான்கு தசாப்தத்தில் இலங்கைச் சமூகத்திலும் தொடர்புத் துறையிலும் ஏற்பட்ட முறையற்ற நிலைப்பாடுகளுக்கு மத்தியில் எடுத்துக்காட்டான மனிதநேயத் தன்மையை வெளிப்படுத்தும் சம்பவங்களின் தொகுப்பு இதுவாகும். யுத்தம் மோதல் போன்ற பயங்கரப் பிரச்சினைக்குள் வாழ்ந்த மக்களின் தனிப்பட்ட சமூக வாழ்வில் இடம்பெற்ற இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்ட மனிதநேயம் மிகுந்த சந்தர்ப்பங்களை இச்சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன. இங்கு பேசப்படும் விடயங்கள் சர்வதேச மானுட நல்லறவுக்கு அழைப்பு விடுப்பதாயும் அமைந்துள்ளன. உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட கதைகள் இவை. பெரும்பாலும் இனமத உணர்வுகளைப் புண்படுத்துகின்ற மானிட உறவைத் துவம்சம் செய்கின்ற சம்பவங்களையே ஊடகங்களிலும் இலக்கியங்களிலும் கேட்டு சோர்ந்து போயுள்ள எமக்கு, அவற்றிடையே காணப்பட்ட உண்மையான மனிதநேயம் பேணி பகிர்ந்துகொண்ட விடயங்கள் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன. நல்வாழ்வுக்கான அறிவு, புதுவாழ்வுக்கான அறிவு, சகவாழ்வுக்கான அறிவு, நல்லாட்சிக்கான அறிவு என நான்கு நூல்கள் வெளியிடப்பட்டன. அத்தொடரில் வெளிவரும் மூன்றாவது நூல் இது.*

## 305.31 ஆண்கள், ஆண்நிலைவாதம், ஆணாதிக்கம்

### 14263

**பால்நிலை சமத்துவத்தை நோக்கிய ஆண்களின் பயணம்.** ஜோ.கருணேந்திரா, *து.கௌரீஸ்வரன், சு.நிர்மலவாசன், சி.ஜெயசங்கர், கமலாவாசுகி (தொகுப்பாசிரியர் குழு). மட்டக்களப்பு: மூன்றாவது கண், உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழு, இல.30, பழைய வாடிவீட்டு வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2014. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

vi, *85 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*15 சமீ.*

*பால்நிலை சமத்துவம், பெண்நிலைவாதம், பற்றிய மூன்றாவது கண் நண்பர்களின் புரிதலும் செயற்படுத்தலும் பற்றிய கடந்த 10 வருடகால அனுபவங்களின் பகிர்வு இது. ஓயுமா-கவிதை (ச.ஸ்ரீபன்), பால்நிலைச் சமத்துவம் நோக்கிய எனது பயணம் (ஜோ.கருணேந்திரா), வேண்டாம் வேண்டாம் வேண்டாம் (செ.ஜோண்சன்), பெண்ணிலைச் சிந்தனைகள் என்னுள் வந்தவிதம்-ஓர் அனுபவப் பகிர்வு (துரை. கௌரிஸ்வரன்), ஓவியர் நிர்மலவாசனுடனான சந்திப்பு (கி.கலைமகள்), ஆளுமை கொண்ட ஆண்கள் பால்நிலை சமத்துவத்தை உள்வாங்கி வாழ்பவர்கள் (சி.ஜெயசங்கர்), இச்செயற்பாடு பற்றி (செ.ஜோண்சன்), மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டு நண்பர்கள் வட்டத்தின் பால்நிலைச் சமத்துவம் நோக்கிய செயல்வாதப் பயணம்: புகைப்படக் கதை, மூன்று கவிதைகள் (மோ. குகதாஸ்), நியாயக் கும்மி (ஜோ.கருணேந்திரா), பெண்களுக்கெதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவருதலை நோக்கிய எமது பாதையை நாமே வடிவமைப்போம் (கமலாவாசுகி-ஆங்கில மூலம், ஜோ.கருணேந்திரா-தமிழாக்கம்) ஆகிய பன்னிரு ஆக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

## 305.4 பெண்கள், பெண்ணியம், பெண்ணிலைவாதம்

### 14264

**பெண் என்றால் என்ன? ஆண் என்றால் என்ன?.** *கம்லா பாசின். கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 425/15, திம்பிரிகஸ்யாய வீதி, 1வது பதிப்பு, 2000. (நுகெகொட: தீபானி அச்சகம், 464, ஹைலெவல் வீதி, கங்கொடவில).*

iv, *49 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN*: 955-9102-33-8.*

*இந்நூல் மட்டுப்படுத்தப்பட்ட கல்வி அறிவுகொண்ட மக்களுக்காக கம்லா பாசினால் எழுதப்பட்டது. இது ஜகோரி* (Jagori) *என்ற பெண்ணிய வள நிறுவனத்தால் முதலில் வெளியிடப்பட்டது.* Proshika *என்ற மானிட அபிவிருத்தி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட நூலிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. நாடு சுதந்திரமடைந்து பல ஆண்டுகளானபோதும் சமூகத்தில் பெண் இரண்டாம்தரப் பிரஜையாகவே கணிக்கப்படுகிறாள். அவளுக்குத் தாராளமான அன்பு, ஆதரவு, சத்துணவு, உடல் நலக் கவனிப்பு என்பன மறுக்கப்படுகின்றன. ஆண்களுக்கு*

*வெண்ணெய்-பெண்களுக்கு மோர் என்ற நிலைப்பாடே மக்களின் மனங்களில் நிலைகொண்டுள்ளன. இந்நிலையில் குடும்பத்தில் இத்தகைய பேதநிலையை துடைத்தெறியும் வகையில் இச்சிறுநூல் எழுதப்பட்டுள்ளது. எமது பெண் பிள்ளைகள் எதிர்காலத்தில் பாரபட்சமின்றிக் குடும்பத்தில் நடத்தப்படவேண்டும் என்பதையும், ஆண் பிள்ளைகள் சமுதாயத்தால் நிர்ணயிக்கப்பட்ட பாத்திரங்களாக இயங்கக் கட்டாயப்படுத்தப்படக்கூடாதென்பதையும் எளிமையாக இந்நூல் வாசகரிடம் சிந்தனையை தோற்றுவித்து புரியவைக்கின்றது. பிந்தியா தோபரின் சித்திரங்கள் நூலின் கருத்துக்கு மேலும் தெளிவூட்டுவதாயுள்ளன.*

## 14265

**பெருந்தோட்ட உற்பத்தியில் பெண் தொழிலாளர்கள்.** *றேஷல் குரியன். கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 425/15, திம்பிரிகஸ்யாய வீதி, 1வது பதிப்பு, 2000. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

ii, *25 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25*x*17 சமீ.*

*இலங்கையில் பெருந்தோட்டத்துறை வளர்ச்சியில் பெண்கள் பெரும் பங்காற்றி உள்ளார்கள். 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் புலம்பெயர்ந்த ஊழிய படையில் இவர்கள் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தனர். தொடர்ந்துவந்த பிற்காலத்திலும் பெருந்தோட்டத்துறையில் வேலைக்கு அமர்த்தப்பட்டோரில் அரைப் பங்கிற்கும் மேலாகவே பெண்கள் இருந்தனர். இவர்களால் செய்யப்பட்ட வேலை கடுமையானதாகவும், ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்ய வேண்டியதாகவும் நேரத்தை உறிஞ்சுவதாகவும் அமைந்திருந்தது. பெருந்தோட்ட உற்பத்தி வரலாற்றில் அவர்களுடைய ஈடுபாடு தகுந்த அளவில் அங்கீகரிக்கப்படவோ கணக்கெடுக்கப்படவோ இல்லை. இந்தியாவிலிருந்து பெருந்தோட்டத்தில் வேலைசெய்ய வந்து, பின்னர் திரும்பிச் சென்றோர் தொகையின் புள்ளிவிபரங்கள் சில இவ்வாய்வாளருக்குக் கிடைத்துள்ளன. பெருந்தோட்டத்துறையின் ஊழியப் படையில் அவர்களும் அங்கம் வகித்ததாக ஆங்காங்கே குறிப்புகள் கூறுகின்றன. அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள், சோதனைகள் மற்றும் மனக் கொந்தளிப்புகளும், அவற்றை அவர்கள் எதிர்நோக்கிப் போராடி இறந்தது பற்றிய விபரங்களும், சொற்ப அளவிலேயே கவனத்திற்கெடுக்கப்பட்டுள்ளன. 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இவர்களுடைய வாழ்க்கை மற்றும் தொழில் அனுபவங்கள் பற்றி மீளாய்வு செய்வதே இத்தனிவரைபின் நோக்கமாகும்.*

# 320 அரசறிவியல் (குடியியல்)

## 14266

**அரசறிவியல் அறிமுகம்.** *எஸ்.கீதபொன்கலன். கொழும்பு: சந்தியாபிள்ளை கீதபொன்கலன், விரிவுரையாளர், வரலாற்று அரசறிவியல் துறை, கொழும்புப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1993. (கொழும்பு 12: சீ.வீ.ஆர். பிரின்டர்ஸ், குணசிங்கபுர).*

xii, *164 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21*x*14 சமீ.*

*அரசியல் விஞ்ஞானம், அரசு, இறைமை, சட்டம், உரிமைகள், ஜனநாயகம், மார்க்சிஸம், பாசிஸம் ஆகிய எட்டு அத்தியாயங்களில் இந்நூல் அரசறிவியலை சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிமுகம் செய்கின்றது. எஸ்.கீதபொன்கலன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் பட்டப்படிப்பினை மேற் கொண்டவர். பட்டதாரியாக வெளியேறியபின் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் விரிவுரையாளராக நியமனம் பெற்றவர். அக்காலகட்டத்தில் இந் நூல் இவரால் எழுதப்பட்டது. இவரது பல்வேறு சமகால அரசியல் கட்டுரைகள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்து இவரை அரசியல் புலமை மிக்கவராக மக்களிடையே இனம்காட்டியிருந்தன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28253).*

## 14267

**அரசியற் கொள்கையின் வளர்ச்சி.** *சாள்ஸ் வெரேக்கர் (ஆங்கில மூலம்), த.சபாரத்தினம் (தமிழாக்கம்). கொழும்பு 7: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1973. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).*

ix, *273 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*13.5 சமீ.*

*இந்நூல்* The Development of Political Theory *என்ற தலைப்பில்,* Charles Vereker *அவர்கள் எழுதி லண்டன்* Hutchinson University Library *நிறுவனத்தால் அச்சிட்டு வெளியிடப்பட்ட நூலின் தமிழாக்கம். அறம், அமைதியும் ஒழுங்கும், உரிமைகள், மிகு மகிழ்ச்சி, முன்னேற்றம், விடுதலை ஆகிய ஆறு அத்தியாயங்களில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28263).*

## 14268

**ஐக்கிய அமெரிக்க அரசாங்கம்.** *எம்.ஜே.எம்.சனீர். கொழும்பு 9:* I.B.H. *வெளியீட்டகம், 77, தெமட்டகொட வீதி, மருதானை, 1வது பதிப்பு, ஜூன் 2010. (கொழும்பு 9: இஸ்லாமிக் புக் ஹவுஸ், 77, தெமட்டகொட வீதி, மருதானை).*

*(8), 60 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 160., அளவு: 21.5*x*14.5 சமீ.*

*ஐக்கிய அமெரிக்க அரசாங்கம்-அறிமுகம், அரசியல் யாப்பினை நோக்கி, அடிப்படை மனித உரிமைகள், ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ், ஐக்கிய அமெரிக்க சனாதிபதி, ஐக்கிய அமெரிக்காவின் நீதித்துறை, ஐக்கிய அமெரிக்க வலு வேறாக்கமும் வரம்புகளும் அதிகாரச் சமநிலையும், ஐக்கிய அமெரிக்காவின் கட்சிகளும் அமுக்கக் குழுக்களும், ஐக்கிய அமெரிக்க சமஷ்டி அமைப்பினுள் மாநிலங்களும் உள்ளூராட்சி அமைப்புகளும், ஐக்கிய அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை, ஐக்கிய அமெரிக்க சனாதிபதிகள் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் விவரமாக எழுதப்பட்டுள்ளது. மேலும் பின்னிணைப்புகளாக ஐக்கிய அமெரிக்க நடைமுறைத் தகவல் (2010), யாப்புக் கையெழுத்துப் பிரதி ஆகியவை இடம்பெற்றுள்ளன.*

*(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49321).*

### 14269

**சமஷ்டி முறையும் சுயநிர்ணய உரிமையும்.** *மாற்றுக் கல்வி நிலையம். கொழும்பு 5: மாற்றுக் கல்வி நிலையம், சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் ரெரஸ், 2வது பதிப்பு, ஓகஸ்ட் 2006, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (ஹோமகம: கருணாரத்ன அன்ட் சன்ஸ் லிமிட்டெட், 67, கைத்தொழில் பேட்டை, கட்டுவான வீதி).*

iv, *47 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22*x*15 சமீ.,* ISBN: *955-9102-56-7.*

*சமாதானக் கல்வி வெளியீட்டுத் தொடரில் முதலாவது நூலாக இது வெளியிடப் பட்டுள்ளது. அரசியல்ரீதியாக மாற்றமுறும் பின்னணியினுள் நாட்டின் அரசியல் விவாதத்தை சனநாயக ரீதியில் வலுவூட்டுவதற்குப் பங்களிப்புச் செய்யும் பொருட்டு இக் கல்வி வெளியீடு வெளியிடப்பட்டுள்ளது. சமஷ்டி முறை மற்றும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை ஆகிய இரண்டு விடயங்களும் இச்சிறு நூலின் தொனிப்பொருள்களாகும். இலங்கைக்கு எவ்வாறான சமஷ்டிமுறை பொருத்தமானது என்பதை இலங்கையின் அரசியல் சக்திகளும் பொதுமக்களுமே தீர்மானித்தல் வேண்டும். அவ்வாறானதொரு தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு இந்நூல் வழிகாட்டுகின்றது. சமஷ்டி முறை ஓர் அறிமுகம், சமஷ்டி முறைக்கான வரைவிலக்கணம், சமஷ்டிஆட்சி முறையின் பண்புகள், சமஷ்டி முறையும் கூட்டாட்சி முறையும், சமஷ்டி முறையிலுள்ள சிறப்பியல்பு வாய்ந்த பண்புகள், சமஷ்டி முறை உருவாவதற்கான வழிகள், சமஷ்டி முறைகளில் அரச அலகுகளின் சுதந்திரமும் உரிமைகளும், அலகுகளின் சுதந்திரமும் மத்திய அரசும், பிராந்திய அரசுகளும் வெளிநாட்டுத் தொடர்புகளும், சட்டங்களை ஆக்குகின்ற அதிகாரம் தொடர்பான சிக்கல், நிறைவேற்றதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளல், சமஷ்டி முறையும் இரட்டைச் சட்டசபையும், நீதிமன்ற அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளல், பொருளாதாரத் தொடர்புகள், ஒத்துழைப்புரீதியிலான சமஷ்டிமுறை, இலங்கைக்குப் பொருத்தமான சமஷ்டி முறை யாது?, தேசிய இனங்களுக்குரிய சுயநிர்ணய உரிமையும் இலங்கையின் இனப்பிரச்சினையும், சுயநிர்ணய உரிமையும் தேசிய இனங்களும், லிபரல் எண்ணக்கரு, சுயநிர்ணய உரிமையும் சோஷ லிசவாதிகளும், சுயநிர்ணய உரிமையும் சர்வதேசச் சட்டமும், சர்வதேசச் சட்டமும் பிரிந்துசெல்லும் உரிமையும், கிழக்கு திமோரில் நடந்தது என்ன?, உள்ளக சயநிர்ணயமும் சர்வதேச சட்டமும், சுயநிர்ணயமும் மக்கள் உரிமையும் என இன்னோரன்ன விடயங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39484).*

### 14270

**சனநாயகம் என்றால் என்ன?.** *ஜோன் பி.பிராங், செஸ்டர் ஈஃபின், மத்தியூ ஹன்டல், எரிக் செனோவத் (ஆங்கில மூலம்), சோ.சந்திரசேகரன், டி.தனராஜ், மா.கருணாநிதி (தமிழாக்கம்), எஸ்.அன்ரனி நோபேட் (பதிப்பாசிரியர்).*

கொழும்பு 5: மார்கா நிறுவகம், 61, இசிப்பத்தன மாவத்தை, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

(4), 92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

இரண்டு பகுதிகளைக் கொண்ட இந்நூலில் "சனநாயகம் என்றால் என்ன?" என்ற பகுதி-1 இல் சனநாயகத்தின் வரைவிலக்கணம், உரிமைகள், சட்ட ஆட்சி, தேர்தல்கள், சனநாயக பண்பாடு, சனநாயக அரசாங்கம், அரசியல் பொருளியல் பன்மைவாதம் ஆகிய ஏழு அத்தியாயங்கள் இடம்பெற்றுள்ளன. "ஒரு சுதந்திர சமுதாயத்தில் அரசியல்" என்ற பகுதி-2 இல் குடியுரிமையும் அரசியல் பங்குபற்றலும், அரசியல் கட்சிகள், பொதுத் தேர்தலும் பிரச்சாரமும், கொள்கையை உருவாக்கும் ஒருவராக அரசியல்வாதி, தொடர்புச் சாதனங்கள் ஆகிய நான்கு அத்தியாயங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 21552).

### 14271

**நவீன அரசியற் கோட்பாடுகள்.** அ.சிவராசா. யாழ்ப்பாணம்: பட்டப் படிப்புகள் கல்லூரி, 148/1, ஸ்ரான்லி வீதி, 1வது பதிப்பு, 1989. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

viii, 176 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இந்நூல் அரசறிவியலின் இயல்பும் அணுகுமுறைகளும், அரசு, மாக்கியவல்லி கண்ட அரசு, அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகள், இறைமை, அதிகாரங்களை வேறாக்கும் கோட்பாடு, ஒற்றையாட்சியும் சமஷ்டியாட்சியும், சட்டம், உரிமைகள், சமத்துவம், சுதந்திரம், சொத்துடைமை, பொதுசன அபிப்பிராயம், அரசியற் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், சட்டசபை, நிர்வாகத்துறை, நீதித்துறை, ஜனாதிபதி ஆட்சிமுறையும் மந்திரிசபை ஆட்சிமுறையும், பாஸிஸம், அராஜரீகம், சனநாயகம், தாராண்மைவாதம், கற்பனா சோசலிசம், G.W.F.ஹெகல், மார்க்ஸ்வாதம், சிண்டிக்கலிசம், தொழிற்சங்கப் பொதுவாயம் அல்லது தொழிற் கூட்டுமுறை (கில்ட் சோசலிசம்), பேபியன் பொதுநலவாதம், லெனின்வாதம் ஆகிய பாடப் பரப்புகளை விளக்குகின்றது. நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் அரசறிவியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31033).

## 320.1 சமகால அரசியல் கட்டுரைகள், ஆய்வுகள்

### 14272

**இலங்கைத் தமிழ் அரசியல்: இனமோதலும் மிதவாதமும்.** கந்தையா சர்வேஸ்வரன். யாழ்ப்பாணம்: தொழில்துறை மற்றும் பட்டப் படிப்பகம், School of Professional and Degree Studies, கட்டப்பிராய், கோப்பாய் தெற்கு, கோப்பாய், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2018. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

xxii, 555 பக்கம், விலை: ரூபா 2000., அளவு: 21x15.5 சமீ., ISBN: 978-955-35924-0-8.

கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் தனது கலாநிதிப் பட்டத்திற்கான ஆங்கில மொழியில் மேற்கொண்ட ஆய்வேட்டின் தமிழாக்கமாக இந்நூல் வெளிவந்துள்ளது. மிதவாத இனத்துவக் கட்சிகளின் எழுச்சியும் சரிவும்-ஒரு கோட்பாட்டியல் வரையறை, காலனித்துவ காலத்தில் இனத்துவ அரசியல், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோற்றம்-ஓர் அரசியல் பின்னணி (1947-1976), தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஈழமும், சூடுபிடித்த களத்தில் செல்வாக்கிழந்த மிதவாதம், இருப்பிற்கான போராட்டம் (1987-2000), தமிழ் மிதவாதம் புகட்டும் பாடங்கள் ஆகிய ஏழு அத்தியாயங்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக பேராசிரியர் சகாதேவனின் அணிந்துரையின் ஆங்கில மூலம், ஈழ தேசிய விடுதலை முன்னணி புரிந்துணர்வு ஒப்பந்தம் (ஆங்கிலம்), உசாத்துணை நூற்பட்டியல் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. 1960ஆம் ஆண்டு கட்டப்பிராயில் பிறந்த கந்தையா சர்வேஸ்வரன், 1981இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞான சிறப்புக் கலைமாணிப் பட்டப்படிப்பைத் தொடங்கியவர். இனமோதல் காரணமாக கல்வியைத் தொடரும் நோக்கில் தமிழகம் சென்று, சென்னைப் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பைத் தொடர்ந்து முடித்தவர். 1988இல் டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் முதுமாணிப் பட்டத்தையும், 2005இல் சர்வதேச உறவுகள் துறையில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். 1994முதல் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல்துறை விரிவுரையாளராகப் பணியாற்றியவர். பின்னாளில் வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சராகப் பணியாற்றியவர்.

### 14273

**இலங்கைப் பாராளுமன்றில் நீதியின் குரல்.** சொலமன் சூ.சிறில் (மூலம்), துரை ஆரோக்கியதாசன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: நூல்வெளியீட்டுக் குழு, 1வது பதிப்பு, ஜுன் 2010. (யாழ்ப்பாணம்: அன்னை பதிப்பகம், பிரதான வீதி).

x, 125 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக மக்கள் சேவையாற்றிய சொலமன் சூசைப்பிள்ளை சிறில் அவர்கள் 2008 மார்ச் மாதம் தொடக்கம் 2010 ஏப்ரல் மாதம் வரை இலங்கைப் பாராளுமன்றத்தில் ஆற்றிய இருபதுக்கும் மேற்பட்ட உரைகள், அறிக்கைகளாக அவ்வப்போது ஊடகங்களில் வெளிவந்திருந்தன. இவை அனைத்தையும் தொகுத்து இந்நூல் உருவாக்கப் பட்டுள்ளது. அவரது உரைகள் தமிழரின் தேசிய வாழ்வையும் வரலாற்றையும் மையம் கொண்டு கொடூர அனுபவங்களையும் அதே வேளை சமாதானம், அபிவிருத்தி, தொழில் வாய்ப்புகள், விவசாயம், மீன்பிடி, கல்வி, மருத்துவம், சூழல், கூட்டுறவு போன்ற அனைத்துத் துறைகளையும் தொட்டு ஆதாரங்கள், அறிவியல்சார் நுட்பமான தரவு என்பவற்றை உள்ளடக்கியதாக இவ்வுரைகள்

அமைகின்றன. நூல் வெளியீட்டுக் குழுவில் அருட்கலாநிதி அ.பி.சே.ஜெயசேகரம், அ.பீற்றர் யேசுதாசன் (கனடா), துரை ஆரோக்கியதாசன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 49432).

## 14274

**இலங்கையில் பின்காலனித்துவ அரசு.** ஜயதேவ உயன்கொட (ஆங்கில மூலம்), க.சண்முகலிங்கம் (தமிழாக்கம்). கொழும்பு: க.சண்முகலிங்கம், 1வது பதிப்பு, 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

60 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

பேராசிரியர் நடராஜா சண்முகரத்தினம் அவர்களின் சேவையினைப் பாராட்டும் முகமாக The Political Econoy of Environment and Development in the Globalised world-exploring frontiers என்னும் நூல் கொழும்பு சமூக விஞ்ஞானிகள் சங்கத்தினால் 2012இல் வெளியிடப்பட்டது. அந்நூலில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையின் தமிழாக்கம் இது. இக்கட்டுரை "பிரவாதம்" பருவ இதழின் மே-செப்டெம்பர் 2012 (எண் 9-10) இதழில் வெளியிடப்பட்டிருந்தது. அதன் தனி நூல் வடிவமே இது. இலங்கையின் பின் காலனித்துவ அரசு தனது ஜனநாயக வடிவத்தை நெகிழ்ச்சியுடையதாக்கி அதனுள்ளே சர்வாதிகார நடைமுறைகளையும் இணைத்துக் கொண்டுள்ளது. இந்த அரசு சில திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்து ஜனநாயகத்தை தன்னுடன் வைத்துக்கொண்டது. அதனை முற்றாகத் தூக்கி வீசிவிடவில்லை. ஜனநாயகத்தின் இத்தகைய நெகிழ்வுத் தன்மை காரணமாக இலங்கையில் சர்வாதிகாரம் ஜனநாயகத்தோடு இணைந்து கொண்டது. ஜனநாயகத்துடன் சமரசம் செய்துகொண்ட சர்வாதிகார அரசே இலங்கையில் இன்ற நிலைபெற்றுள்ளது என்று நூலாசிரியர் முடிவுசெய்கின்றார். மேலும், இலங்கையில் ஜனநாயகத்தை மீளவும் உயிர்ப்பிக்கக்கூடிய அமைப்பியல் மாற்றங்களைச் செய்வதை சர்வாதிகார அரசு அனுமதிக்கமாட்டாது என்றும் குறிப்பிடுகின்றார்.

## 14275

**ஐக்கியமும் அபிவிருத்தியும்.** ஆர்.பிரேமதாச (மூலம்), கிறிஸ்டி குறே (தொகுப்பாசிரியர்). கொழும்பு: உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாண அமைச்சு, 1வது பதிப்பு, 1981. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

(2), 65 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இலங்கையின் மாண்புமிகு பிரதமர் ரணசிங்க பிரேமதாசவினால் 29.01.1981-01.02.1981 காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட யாழ்ப்பாண விஜயத்தின்போது ஆற்றிய உரைகளின் தொகுப்பு. அறிக்கைகளை பொ.இராசதுரை, செல்லப்பா நடராசா ஆகியோரும், மொழிபெயர்ப்பினை நா.சுப்பிரமணியன், செல்லையா குமாரசுவாமி, எம்.கே.இராகுலன் ஆகியோரும் மேற்கொண்டுள்ளனர்.

(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28875).

### 14276

**கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை.** சித்ரா றஞ்சன் த சில்வா (விசாரணை ஆணைக்குழுவின் தலைவர்). கொழும்பு: கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக்குழு, 1வது பதிப்பு, நவம்பர் 2011. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

xx, 433 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5x21 சமீ.

இவ்வாணைக்குழுவின் உறுப்பினர்களாக ஜனாதிபதி சட்டத்தரணிகளான சித்ரா றஞ்சன் த சில்வா, கலாநிதி அம்ரித் ரோஹான் பெரேரா ஆகியோரும், பேராசிரியர் கருணாரத்ன ஹங்கவத்த, சந்திரபால் சண்முகம், ஹேவா மாத்தற கமகே சிறிபால பளிஹக்காற, திருமதி மனோகரி இராமநாதன், மக்ஸ்வல் பராக்கிரம பரணகம, முஹம்மட் தவுபீக் முகமட் பாபீக் ஆகியோரும் பணியாற்றினர். இவ்வறிக்கை 2002 பெப்ரவரி 21ஆம் நாளுக்கும் 2009 மே 19ஆம் நாளுக்குமிடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்றிருக்கக்கூடிய சம்பவங்களை விசாரித்து அறிக்கையிடுகின்றது. அறிமுகம் மற்றும் செயல்முறைமையியல், போர் நிறுத்த உடன்படிக்கை, பாதுகாப்புப் படைகளினது நடவடிக்கைகளின் மீதான பொது நோக்கு, மனிதாபிமான சட்டப் பிரச்சினைகள், மனித உரிமைகள், காணிப் பிரச்சினைகள்: மீள்வருகை மற்றும் மீள்குடியேற்றம், மீளளிப்பு/நட்ட ஈட்டு நிவாரணம், நல்லிணக்கம், முக்கியமான அவதானிப்புகள் மற்றும் விதந்துரைப்புக்கள் ஆகிய ஒன்பது அத்தியாயங்களில் இவ்வறிக்கை எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54442).

### 14277

**குடிமைச் சமூகத்தை வலுவூட்டல்.** A.B.M.இத்ரீஸ். வாழைச்சேனை 05: காகம் வெளியீடு, (உயிர்ப்பைத் தேடும் வேர்கள்), மஹ்மூட் ஆலிம் தெரு, 1வது பதிப்பு, 2012. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

168 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18x10.5 சமீ., ISBN: 978-955-0697-08-3.

காத்தான்குடியில் 2011 ஏப்ரல் 23 அன்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்த சிவில் சமூகத்தை வலுவூட்டல்-என்ற தொனிப்பொருளிலான அரசியல் உரையாடலை யொட்டி வெளியாகியுள்ள நூல். ஜனநாயகமும் சிவில் சமூகமும், இலங்கையில் கட்சி அரசியலும் அனுபவமும், நிலையான அபிவிருத்தியும் அரசியலும், அரசியல் இஸ்லாம், சமூக வலைத்தளங்கள் ஊடாக சிவில் சமூகத்தை வலுவூட்டல் (புதிய மத்திய கிழக்கின் எழுச்சியை மையப்படுத்திய உரையாடல்) போன்ற தலைப்புக்களை ஒட்டி எழுந்த வாதவிவாதங்களும் அதற்குப் பின்னரான எதிர்வினைகளும் இதில் பதிவாகியுள்ளன. எவ்வளவு காத்திரமான புலமைசார்

உரையாடலுக்குள்ளும் பொதுப்புத்தி சார்ந்த சமூக மனநிலை எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளவும் இவ்வுரையாடல் உதவிகரமாய் அமைகிறது.

## 14278

**நீதியரசர் பேசுகிறார் (தொகுதி 1).** க.வி.விக்னேஸ்வரன். லண்டன்: R.D.இரத்தினசிங்கம், இல. 5, Cawdor Crescent, London W7 2DB, 1வது பதிப்பு, ஜுன் 2018. (யாழ்ப்பாணம்: அன்ரா பிறிண்டேர்ஸ், இல. 356A, கஸ்தூரியார் வீதி).

x, 432 பக்கம், விலை: ரூபா 1000., அளவு: 25.5x18 சமீ.

நாட்டுப்பற்றும் தமிழ்ப் பற்றும் மிகுந்த ஓய்வுநிலை உச்ச நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு க.வி.விக்னேஸ்வரன் அவர்கள் நீதியரசராக கடமையாற்றிய காலம்தொட்டு வடமாகாண முதலமைச்சராகக் கடமையாற்றிய காலம் வரையில் ஆற்றிய சட்டத்துறை சார்ந்த மறக்கமுடியாத சரித்திரத்தில் இடம்பிடித்த சில முக்கிய உரைகள், கட்டுரைகள் மற்றும் நேர்காணல்கள் அடங்கிய தொகுப்பு. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய உசாத்துணை நூலகப் பிரிவின் திறப்புவிழா 09.03.2008 அன்று நடைபெற்ற சமயம் வாசிக்கப்பட்ட சட்டமுந் தமிழும் என்ற உரை, ஆயிஷா சுஹைர் அவர்களுக்கு வழங்கிய ஆங்கில மொழிவழி நேர்காணல், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வட மாகாண சபை உறுப்பினர்கள் சார்பான திசைநெறிப்படுத்தும் நிகழ்வு யாழ்ப்பாணம் ரில்கோ ஹோட்டலில் 24.10.2013இல் நடந்தபோது ஆற்றிய உரை, வடமாகாண சபையின் முதலமர்வு அங்குரார்ப்பண நிகழ்வின்போது கைதடி வடமாகாண பேரவைச் செயலக மண்டபத்தில் 25.10.2013 அன்று ஆற்றிய முதலமைச்சர் உரை, நல்லூர் பிரதேச சபையினரின் கௌரவிப்பு விழா நல்லூர் பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் 27.10.2013 இல் நடந்தவேளை ஆற்றிய உரை, வேலணை மத்திய கல்லூரி பரிசளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் 01.11.2013 அன்று நடைபெற்ற வேளை ஆற்றிய விருந்தினர் உரை, கொடிகாமம், சாவகச்சேரி பிரதேச சபை உள்ளூராட்சி வாரம் கொண்டாடிய வேளை 22.11.2013 அன்று இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் ஆற்றிய முதன்மை விருந்தினர் உரை, யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவு சபை கூட்டுறவுப் பெரியார் அமரர் வி.வீரசிங்கம் அவர்களின் மறைவின் 50ஆவது ஆண்டு நினைவுதினக் கூட்டத்தில் 05.12.2014 அன்று ஆற்றிய உரை ஆகியன இதில் அடங்கியுள்ளன.

## 14279

**ரா.ப.வின் கட்டுரைகள்.** ரா.ப.அரூஸ். தெகிவளை: ரா.ப. இன்டர்நெஷனல் லிமிட்டெட், தபால் பெட்டி எண் 21, 1வது பதிப்பு, டிசம்பர் 2014. (தெகிவளை: ரா.ப. இன்டர்நெஷனல் லிமிட்டெட், தபால் பெட்டி எண் 21).

xvi, 104 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-52299-6-8.

நல்ல மானுடம் விதைப்போம், அநீதிகள் யாவையும் குழி தோண்டிப் புதைப்போம் என்ற பதாதையுடன் இந்நூல் சமூக சிந்தனை கொண்ட எழுத்தாளர் அருசினால்

எழுதப்பட்டுள்ளது. சமூகப் பண்பாடுகளில் வீழ்ச்சி, அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களை உள்ளடக்கி மேலும் இத்தகைய நிலை வரலாகாது என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற முனைப்பில் இக்கட்டுரைகள் எழுதப் பட்டுள்ளன. டெல்லி மாணவியின் மரணம் எமக்கு விட்டுச் சென்றுள்ள செய்தி, தமிழ்த் தலைமைகளின் அரசியல் நாகரீகமும் முஸ்லிம் தலைமைகளின் பேரினவாதத் தாவல்களும், மக்கள் வழங்கிய ஆணை பூனையாகிப் போன கதை, பெருகிவரும் இளவயதுத் தவறுகளுக்கு யார் காரணம்?, அதுவும் சரிதான் இதுவும் பிழையில்லை, இலங்கைத் தமிழர்கள்: முள்ளிவாய்க்காலுக்கு முன்னரும் பின்னரும், கறுப்புச் சந்தை வியாபாரத்தை திறைசேரி வெள்ளையாக்கியுள்ளது, முஸ்லிம் காங்கிரஸ்: ஆவேசப்படுதலும் அடங்கிப் போதலும், தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பொறியியல்பீடம் சாதிக்கப்போவது என்ன?, தற்கொலைக்கே வித்திடும் நாட்டின் தரமற்ற பொருளாதாரம், தமிழ் பேசுவோர் உறவு தளைத்தோங்க வழிசெய்வோம், ஆசிரிய தலையங்கங்கள் ஆகிய பன்னிரு சமகால அரசியல் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

### 14280

**வாழத் துடிக்கும் வன்னி: சமூகவியல் கட்டுரைகள்.** பொன்னையா மாணிக்கவாசகம். வவுனியா: தனேத்ரா வெளியீட்டகம், 7/3, 10ஆம் ஒழுங்கை, வைரவபுளியங்குளம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2019. (வவுனியா: பொய்கை பதிப்பகம், கந்தசாமி கோவில் வீதி).

xvi, 167 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-71254-1-1.

40 ஆண்டுகள் கடந்தும் ஊடகத்துறையில் நிலைத்து நின்று மக்களின் பிரச்சினைகளை நடுநிலையாக வெளிப்படுத்தி வரும் ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம் அவர்களின் "வாழத் துடிக்கும் வன்னி" என்ற இந்நூலில், வன்னி மக்கள் போரினால் அனுபவித்த துன்பங்களையும் அதிலிருந்து மீட்சிபெறத் துடிக்கும் இதயங்களையும் அவர்களின் ஏக்கத்தையும் போரின் பின்னரான வன்னியின் வளத்தையும், வனப்பையும் தனது கட்டுரையாக்கத்தின் வழியாக மீள்தரிசனம் செய்ய வைத்திருக்கிறார். கடந்து வந்த மறக்கமுடியாததொரு வாழ்வின் வலிமிகுந்த சம்பவங்களின் ஒரு ஆவணத்தொகுப்பு முயற்சி இதுவாகும். நெருக்கடிகளும் உயிர் அச்சுறுத்தல்களும் மிகுந்த யுத்த காலத்தில் கடினமான சூழலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச அரங்கிற்கு எடுத்துச் செல்வதற்காக அவர் அர்ப்பணிப்போடு பணியாற்றியவர் என்பதை அனைவரும் அறிவர். 2009ஆம் ஆண்டுக்குப்பின் வன்னியில் இடம்பெற்ற மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பற்றியும் அதன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகளைப் பற்றியும் இந்நூல் அதிகளவில் பேசுகின்றது. வன்னியின் யுத்தபூமி இரும்புத்திரை கொண்டு மறைக்கப்பட்டிருந்த ஒரு சூழ்நிலையில், 2010ஆம் ஆண்டு அப்பிரதேசத்துக்குச் செல்ல இராணுவத்தால் அனுமதியளிக்கப்பட்ட அரசியல்வாதிகளுடன் பத்தரிகையாளராக திரு. மாணிக்கவாசகரும் உள்ளே சென்று, தான் உள்வாங்கிக் கொண்ட நிலைமைகளையும் அங்கு திறந்தவெளிச் சிறை களுக்குள் வாழவிடப்பட்ட

தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் உய்த்து உணர்ந்து, அவற்றை அறிவுபூர்வமாக வெளிப்படுத்தும் வகையில் பல கட்டுரைகளை வீரகேசரியில் எழுதத்தொடங்கினார். 31.5.2010 முதல் 24.6.2010 வரை அவர் எழுதிய காத்திரமான புதிய செய்திகள் வெளி உலகின் பார்வையில் அதிர்ச்சி அலைகளை அந்நாளில் ஏற்படுத்தியிருந்தன. அத்தகைய கட்டுரைகளின் தொகுப்பாகவே இந்நூல் வெளிவந்துள்ளது. இந் நூலில் இவர் எழுதிய மரத்துல பாம்பு பிள்ளைகள் சொல்லத்தான் தெரிஞ்சது, சராசரியாக எட்டு மாணவர்கள் உயிரிழந்து போனார்கள், உழைப்புத் திறனை உணர்த்தியது, ஓடி ஓடிப் படம் எடுத்தனர், சனமெல்லாம் நடையிலதான் திரியுது, வாழ்கையின் உயிர்ப்பும் துடிப்பும், சமூகங்கள் ஒரே குடும்பமாக வாழும் சிறப்பு, இடிந்த வீட்டில் ஆண்டுத் திவசம், ஜோசப் ரிச்சர்ட்சன் பிராங்கோ, உக்கிர சண்டையில் உடைந்த தண்ணீர்த் தாங்கி, தேடாத இடமில்லை சொல்லாத ஆளில்லை, பிடித்துப்போன "மிதிவெடி", நெல்லும் மில்லும் கூடவே வந்தன, முள்ளாகத் தைக்கும் முறிகண்டி, அச்சம் அவமானம் வெளியில் சொல்லமுடியாத நிலை, தரைமட்டமாகியும் தன்னம்பிக்கை இழக்காத தர்மபுரம், பொன்னம்மாவின் பிள்ளைகள் போனதெங்கே?, அடுத்த கட்ட அரசியல் செயற்பாடு என்ன? ஆகிய 18 தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகள் இங்கு தொகுக்கப்பெற்றுள்ளன.

## 323 மனித உரிமை

### 14281

**இந்திய வம்சாவளி மக்கள் 94600 பேருக்கு பிரஜா உரிமை வழங்குவதற்கான சட்ட வரைவுக்கு ஆதரவாக நான் ஏன் வாக்களித்தேன்?** சரத் முத்தெட்டுவேகம (மூலம்), எல்.பீ.வணிகசேகர (தொகுப்பாசிரியர்). கொழும்பு: ஊடகத்துறைச் செயலாளர், அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 10: சமயவர்த்தன அச்சகம்).

38 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

1986ஆம் ஆண்டு 94600 இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமையினைப் பெற்றுக் கொடுப்பதற்கான சட்ட வரைவு பாராளுமன்றத்தின் முன் கொண்டுசென்ற சந்தர்ப்பத்தில் தோழர் சரத் முத்தெட்டுவேகம அவர்கள் இனவாத சந்தர்ப்பவாதிகளாலும், பிற்போக்குச் சந்தர்ப்பவாதிகளாலும் மூடி மறைக்கப்பட்டிருந்த திரையைக் கிழித்தெறியும் வகையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை தோட்டத் தொழிலாளர்களினது உண்மையான வரலாற்றை எடுத்துரைக்கும் முக்கியத்துவம் மிக்க ஒரு உரையாக அமைந்திருந்தது. இந்நாட்டு இனவாதப் பிரச்சினையோடு தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களினது பிரச்சினைகளும் தற்போது ஒன்றாகப் பின்னப்பட்டு இருப்பதால் அவர்களது சமுதாய வரலாற்றைப் புரிந்துகொள்வது காலத்தின் தேவையாகும் என்ற நம்பிக்கையில் இச்சிறு நூலை அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு வெளியிட்டுள்ளது.

**14282**

**இலங்கை சித்திரவதைக்கு உட்படுத்தப்படாதிருப்பதற்கான உரிமை: நீதிமுறை எதிர்வினை பற்றிய ஒரு பகுப்பாய்வு.** *கிஷாலி பின்ரோ ஜயவர்த்தன, லீசா கோயிஸ் (மூலம்), சட்ட சமுதாய அறநிலையம் (தமிழாக்கம்). கொழும்பு 8: சட்ட சமுதாய அறநிலையம், 3, கின்சி டெரஸ், 1வது பதிப்பு, ஜூன் 2008. (கொழும்பு: கருணாரட்ண அன் சன்ஸ்).*

xxv, *77 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 25*x*18 சமீ.,* ISBN: *978-955-1302-13-9.*

*இந்த ஆய்வு இலங்கையில் சித்திரவதைக்கும் கொடூரமான/மனிதாபிமானமற்ற, இழிவுபடுத்தும் முறையில் நடாத்துகைக்கும் உட்படுத்தப்படாதிருக்கும் சுதந்திரத்திற்கான உரிமை தொடர்பில் நீதித்துறையின் எதிர்வினையை நுண்ணாய்வு செய்கின்றது. இது 2000-2006ஆம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் 11ஆம் உறுப்புரையின் சார்த்துரைக்கப்பட்ட மீறுகைகளுக்கு உயர் நீதிமன்றத்தின் நீதித்துறை எதிர்வினைக்கும் அத்துடன் 1994ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சித்திரவதைக்கும் ஏனைய மனிதாபிமானமற்ற, இழிவுபடுத்தும் முறையில் தண்டிக்கப்படுவதற்கும் எதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் மேல் நீதிமன்றத்தின் நீதிமுறை எதிர்வினை பற்றிய பரிசீலனை ஒன்றுக்கும் அவற்றிற்கு இயைபான வழக்குத் தொடுத்தல் மற்றும் புலனாய்வு நடைமுறைகளுக்கும் பரந்தளவில் கவனம் செலுத்துகின்றது. அரசியலமைப்பு மற்றும் நியதிச் சட்டங்கள் சார்ந்த கடுமையான பாதுகாப்பு இருந்தபோதிலும் கூட இலங்கையில் சித்திரவதை, கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவுபடுத்தும் முறையில் நடாத்தப்படும் நடவடிக்கைகள் ஏன் நாடப்படுகின்றன என்பதையிட்டு இந்த ஆய்வு கேள்விக் கணைகளைத் தொடுக்கின்றது. இங்கு ஒருசில சூன்ய நிலைகள் இலகுவில் இனம் காணக்கூடியவையாக உள்ளன. சட்டத்தை அமுலாக்கும் அதிகாரிகள் (உதாரணம்-பொலிஸ்) நீதிமன்றத் தீர்ப்புகளை பாரதூரமானவையாகக் கருதுவதில்லை என்ற யதார்த்தம் இனம் காணப்படக்கூடிய ஒரு பிரச்சினையாகும். மனித உரிமை மீறல்களில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட பொலிஸ் அலுவலர்களான தனிநபர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை விதிக்கப்படுவதில்லை. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்ற மேற்பார்வை செய்யும் முகவராண்மைகள் இவ்விடயங்களையிட்டு பயனுறுதியுடன் செயற்படவில்லை என்பதும் வெளிப்படை. அரசியலமைப்பின் 17ஆம் திருத்தத்தில் விதித்துரைக்கப்பட்டவாறு அரசியலமைப்புப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட அரசியலமைப்புரீதியிலான பணிப்பாணை இல்லாமல் ஜனாதிபதியால் செய்யப்படும் அவற்றின் உறுப்பினர்களின் நியமனத்தின் விளைவாக அண்மைக்காலத்தில் அவர்களது சுதந்திரமும் நேர்மையும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளன. இவ்விடயங்களை இவ்வாய்வு விரிவாக முன்வைக்கின்றன.*

## 14283

**இலங்கையில் மனித உரிமைகளும் சமயங்களும்.** இலங்கை மன்றம். கொழும்பு 7: இலங்கை மன்றம், இல.27, சுதந்திரச் சதுக்கம், 1வது பதிப்பு, 1992. (தெகிவளை: திஸர அச்சகம், 129, துட்டுகெமுனு வீதி).

xxx, 454 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 955-9056-02-6.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம், சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரைகள் மீதான கருத்துரைகள் ஆகியவற்றைப் பிரதான உள்ளடக்கமாகக் கொண்டுள்ள இந்நூலின் பின்னிணைப்புகளாக, பௌத்தம், இந்து சமயம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய நான்கு சமயப் பாரம்பரியங்களுக்குமான முகவுரை, சர்வதேசப் பிரகடனம்- அதன் வரலாறும் அந்தஸ்தும், மனித உரிமைகள் பற்றிய கல்வி, பாளி நூல்களுக்கான குறுக்கங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17437).

## 14284

**காடு சார்ந்த மேட்டுநிலக் கமத்தொழிலைப் பிரதானமாகக் கொண்டுள்ள உலர்வலய சமுதாயமொன்றில் சிறுவர்உரிமைகளின் தன்மை.** ஆ.ர்.ஆ.சுனில் சாந்த (ஆராய்ச்சியும் கட்டுரையும்), நா.சுப்பிரமணியன் (மொழிபெயர்ப்பு மேற்பார்வை). கொழும்பு 7: ஆசியாவில் அபிவிருத்திக்கான ஆய்வு மற்றும் கல்விப் பணிகள் தொடர்பான முன்னோடி அமைப்பு (இனேசியா), 64, ஹோற்றன் பிளேஸ், 1வது பதிப்பு, 1999. (கொழும்பு: Publication Unit of INASIA).

(6), 91 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x16.5 சமீ.

பல்வேறு சமூகங்களையும் சார்ந்த இலங்கைச் சிறார்களின் உரிமைகளின் தேசிய பயன்பாடு எவ்விதம் இருக்கின்றதென்பதை சமூக விஞ்ஞான பகுப்பாய்வுக்கு உட்படுத்துதல் இவ்வாய்வுத் தொகுப்பின் நோக்கமாகும். தற்கால இலங்கை சமுதாயமும் சிறுவர் உரிமைகளும் நுணுக்கமான அடிப்படையில் ஆராயப்பட்ட சமூக விஞ்ஞான கற்கை என்ற தொடரில் வெளிவந்த 15 அறிக்கைகளில் இது 8ஆவதாகும். சமுதாயத்தின் சிறப்பியல்பு, ஆய்வுப் பிரதேசத்தின் பின்னணி, சமுதாயத்தின் வளங்களும் சமூக நிறுவனங்களும், பொருளாதார அடிப்படையும் வாய்ப்புக்களும், சமூக பொருளாதார அந்தஸ்தை அடைய சமூகம் மேற்கொள்ளும் மக்களின் பல்வேறு உபாய முறைகள், சமூகத்தின் சிறுவர் உரிமையின் இயல்பு. முடிவுரை வினாக்கொத்து ஆகிய இயல்களில் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா ரெட்பார்ணா நிறுவனத்தின் நிதி உதவியின்கீழ் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 14285

**சர்வதேச மனித உரிமைகள் பற்றிய சட்டங்களும் சட்ட அபிவிருத்தியும்.** வை.விவேகானந்தன். களுவாஞ்சிக்குடி: ம.சிவநேசம், சிவாபவனம், சிவன்கோவில்

வீதி, செட்டிபாளையம், 1வது பதிப்பு, ஆவணி 2002. (அக்கரைப்பற்று-01: செலெக்ஷன் ஒப்செட் பிரின்ட்).

xx, 347 பக்கம், விலை: ரூபா 600.00, அளவு: 21x14.5 சமீ.

இலங்கையில் மனித உரிமைகளின் வளர்ச்சியும் வரலாற்றில் இனத்துவ பண்பியலும் சமூக மாற்றமும் சமூக பொருளாதார அபிவிருத்தி நிலைகள் பற்றிய செயல்களின் வளர்ச்சி/ இலங்கையில் மனித உரிமைகளுக்கான சட்ட பிரகடனங்கள்/ மூன்றாம் உலகநாடுகளில் இன்று காணப்படும் புலம்பெயர்ந்த இந்திய சமூகங்களின் மனித உரிமைகளும் படிமுறை வளர்ச்சியும்/ தெற்காசிய, தென்கிழக்காசிய தென் ஆபிரிக்க நாடுகளில் மனித உரிமைகள்/ சர்வதேச மனித உரிமைகளுக்கான சட்டப் பிரகடனங்களும் இனத்துவ மேலாண்மை பிரயோகமும்/ சர்வதேச அரசியல் சட்ட மேலாண்மையில் இலங்கை சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமை/ உலக விவகாரங்களில் இன்றைய நிகழ்வுகள்/ சர்வதேச அரசியல் முறையும் அரசியல் சட்ட வலுவும்/ சட்டத்தின் உயர்நிலையும் நல்லாட்சி செயல் முறையும்/ இலங்கையில் அரசியல் கொள்கை உருவாக்குவதில் சட்டவலு கொண்டஅரசியல் பங்கேற்புகளில் சமூகம் பங்குபற்றுதல் இன்றியமையாதது/ மனித உரிமையின் தன்மையும் போராட்டங்களின் ஊற்றுகையும் தீர்வும்/ Minority Politics Law Rights Identity in Sri Lanka, ஆகிய பன்னிரு இயல்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இந்நூலாசிரியர் சிவத்திரு வை.விவேகானந்தன், மனித உரிமைகள் நிறுவனத்தின் மனித உரிமை கற்கைநெறி உயர்கல்வி இணைப்பாளராகவும், பத்தன, ஸ்ரீபாத தேசிய கல்வியியல் கல்லூரியின் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34797).

### 14286

**நாங்கள் யார்?** சிபில் வெத்தசிங்க. மொரட்டுவ: சிறுவர் உரிமைகள் கருத்திட்டம், சர்வோதய சட்டசேவை இயக்கம், தம்சக் மந்திர, 98, ராவத்தாவத்தை வீதி, 1வது பதிப்பு, 2001. (மொரட்டுவை: விஷ்வலேகா அச்சகம்).

(12) பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x17.5 சமீ., ISBN: 955-8270-18-0.

SIDA எனப்படும் சுவீடன் சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ள சிறு நூல். "பெயரையும் நாட்டினத்தையும் பெறுவதற்குள்ள உரிமை" என்ற பதாதையின்கீழ் சிறுவர் உரிமைகள் பற்றிய கருத்தியலை சிறுவர்களுக்கு விளக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள பதினைந்து நூல்களில் இதுவும் ஒன்றாகும். இந்நூல்களை சிபில் மாமி, சர்வோதய மாமா, சர்வோதய மாமி என பல்வேறு பாத்திரங்கள் வழங்கியுள்ளன. "நாங்கள் யார்" என்ற இந் நூலின் பாத்திரங்களாக தெருவில் அலையும் ஒரு நாய்க்குட்டியும் வீடு வாசலற்ற ஓர் அநாதைச் சிறுமியுமாவர். இவர்களுக்கிடையேயான உரையாடலே இந் நூலின் பிரதான அம்சமாகும். இவ்விரு பாத்திரங்களுக்குமிடையே உள்ள பொதுப் பண்பானது இரண்டு பேருக்கும் உறவுகள் என்று எவருமில்லை, அவர்களுக்கென்று

தனியான பெயரும் இல்லை. இந்த அடிப்படையில் மனித உரிமைகள் பற்றிய கருத்தை இவ்விரு பாத்திரங்களிடையேயான உரையாடல்வழியாக சிறுவர்களிடையே விதைப்பதை இந்நூல் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 14287

**மனித உரிமைகளைஉறுதிப்படுத்தும் பொறிமுறைகள்.** மேனகா ஹேரத், க.கபிலன் வில்லவராஜன். கொழும்பு 8: இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இல. 165, கின்சி வீதி, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 9: மெனிக் அச்சகம், 161, தெமட்டகொட வீதி).

iv, 44 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-8929-20-9.

மனித உரிமைகள் பொறிமுறைகள் தொடர்பான அம்சங்களைத் தெளிவுபடுத்தும் நோக்குடன் வெளியிடப்பட்டுள்ள சிறு பிரசுரம் இது. "சர்வதேச பொறிமுறை" (பட்டய அடிப்படையிலான மனித உரிமை பொறிமுறைகள், உடன்படிக்கை அடிப்படையிலான மனித உரிமை பொறிமுறைகள், ஏனைய சர்வதேச பொறி முறைகள்), "பிராந்திய மனித உரிமை பொறிமுறைகள்", "தேசிய மனித உரிமை பொறிமுறைகள்" (அடிப்படை உரிமை அடிப்படையிலான பொறிமுறைகள், ஏனைய மனித உரிமை பொறிமுறைகள்) ஆகிய மூன்று பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்பில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் தொடர்பு விபரங்கள், தேசிய மனித உரிமை அமைப்புகளின் விபரங்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்ளும் வழிமுறைகள் என்பன இணைக்கப்பட்டுள்ளன.

## 14288

**யாழ்ப்பாணத்தின் மன்றாட்டம்.** எஸ்.ஜி.புஞ்சிஹேவா (சிங்கள மூலம்), எம்.எச். எம்.ஷம்ஸ் (தமிழாக்கம்). இராஜகிரிய: ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான இயக்கம், 1149, கோட்டே வீதி, 1வது பதிப்பு, மே 1998. (தெகிவளை: சரண பதிப்பகம், சரணங்கார வீதி).

28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

1998 தை மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை கண்காணிக்கச் சென்ற குழுவில் ஒருவரும், பிரபல எழுத்தாளரும், மனித உரிமைச் செயற்பாட்டாளரும், வழக்கறிஞருமான திரு. எஸ்.ஜி.புஞ்சிஹேவா அவர்களினால் சிங்கள மக்களுக்காக எழுதப்பட்ட சிறுநூலின் தமிழ் மொழிபெயர்ப்பு இதுவாகும். யுத்தத்தில் வென்றெடுத்தவை, யாழ்ப்பாணம்-ஒரே பார்வையில், உள்ளூராட்சி சபை தேர்தல், சிங்களவர் என்றால் இராணுவமே, 630 பிள்ளைகள் காணாமல் போயினர் ஆகிய ஐந்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 14289

**யாழ்ப்பாணப் பகுதியில் காணாமற் போனோர் மீதான விசாரணைக்குழுவின் அறிக்கை.** காணாமற்போனோர் சம்பந்தமான விசாரணைக்குழு. கொழும்பு 8: இலங்கை

*மனித உரிமைகள் ஆணைக்குழு, இல. 36, கின்சி றோட், 1வது பதிப்பு, ஐப்பசி 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*239 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ., ISBN: 955-8929-08-5.*

*இவ்வறிக்கை ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினதும் (UNDP), சுவீடன் நாட்டு சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையத்தினதும் (SIDA) அனுசரணையுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப் பட்டது. காணாமற் போனோர் சம்பந்தமான விசாரணைக்குழுவின் உறுப்பினர்களாக கலாநிதி தேவநேசன் நேசையா (தவிசாளர்), திரு. கே.எச். கமிலஸ் பெர்னாண்டோ, திருமதி ஜெசிமா இஸ்மாயில், திரு. எம்.சீ.எம். இக்பால் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இவ்வறிக்கையை T.தனராஜ் தமிழாக்கம் செய்துள்ளார். வழங்கப்பட்டுள்ள ஆணையும் அதற்குள் அடங்கக்கூடிய முறைப்பாடுகளும், காணாமற்போனமையின் சூழ்நிலையும் அதன் விளைவுகளும், பொறுப்பானவர்கள் மீதான நடவடிக்கைகள், பொறுப்பையும் ஏனைய ஒழுங்கீனங்களையும் தட்டிக்கழித்தல், தடுப்பு ஏற்பாடுகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம், முடிவுரை ஆகிய ஏழு அத்தியாயங்களில் இவ்வறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. யாழ்ப்பாணம்-இடங்களும் காணாமற்போனோரின் எண்ணிக்கையும், காணாமற்போனமையை உறுதிப்படுத்தி குழு சான்றிதழ் வழங்கிய நபர்கள், காணாமற் போனவர்களை கைது செய்த/கடத்திய அல்லது அதற்குக் காரணமான நபர் எனப்படுபவர்களின் பட்டியல், நிவாரணம் விதந்துரைக்கப்பட்டோர், வழங்கப்பட்ட அத்தாட்சிப் பத்திரத்தின் மாதிரிப் படிவங்கள், குழுவின் இடைக்கால அறிக்கை, காணாமற்போனோர் மீதான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை (அகில இலங்கை) யிலிருந்து சில பகுதிகள், தடுப்பு ஏற்பாடுகள் குறித்த காணாமற் போனோர் மீதான ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையிலிருந்து சில பகுதிகள், நட்டஈடு தொடர்பான சுற்றறிக்கை-புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாண அமைச்சு, நட்டஈடு பற்றிய பொது நிர்வாக சுற்றறிக்கை, உதயன் பத்திரிகையின் சம்பந்தப்பட்ட பக்கம்: 10.12.1998, விசாரணைக்காக குழுவுக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் முழுமையான பட்டியல், பத்திரிகை அறிவித்தல், குழு விசாரணை நடாத்திய இடங்கள், காணாமற் போனமைக்குப் பொறுப்பான நபர்கள் பற்றி படைத் தளபதியுடன் மேற்கொண்ட கடிதத் தொடர்புகள், விசாரிக்கப்பட்ட ஒவ்வொரு முறைப்பாடு பற்றியும் வழங்கப்பட்ட சாட்சியங்களின் சுருக்கம் ஆகிய விரிவான 16 பின்னிணைப்புகளுடன் கூடியது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42266).*

## 323.445 தகவல் அறியும் உரிமை

### 14290

**தகவல் அறியும் உரிமை: ஒரு வழிகாட்டி.** *கிஹான் குணதிலக்க. கொழும்பு 5: இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, கிருள வீதி, 1வது பதிப்பு, 2014. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*91 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-1734-07-7.*

யுனெஸ்கோவின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ள இந்த நூல், தகவல் அறியும் உரிமை என்றால் என்ன, இலங்கையின் சட்டக் கட்டமைப்பு, சர்வதேச தரங்கள், பொதுமக்களைப் பொறுத்தவரை தகவல் அறியும் உரிமையின் முக்கியத்துவம், பத்திரிகையாளர்களுக்குத் தகவல் அறியும் உரிமையின் முக்கியத்துவம், தகவல் அறியும் உரிமைக்கான பிரச்சாரம், எதிர்காலத் திட்டம் ஆகிய அத்தியாயங்களின் கீழ் எழுதப்பட்டுள்ளது. தகவல் அறியும் உரிமையானது, மக்களின் இறைமையின் மேல் நிறுவப்பட்ட எந்த நவீன சனநாயகத்திலும் ஒரு மையப்பொருளாக விளங்குகின்றது. மக்கள் தமது அதிகாரத்தை தமது பிரதி நிதிகளின் ஊடாக, திறமையுடன் உபயோகிக்கமுடியும். அதற்கு ஆட்சிமுறையானது பொறுப்புச்சொல்லக்கூடியதாகவும், வெளிப்படையாகவும் இருந்தால் மாத்திரமே அது சாத்தியமாகும். இச்சந்தர்ப்பத்தில் இலங்கையில் ஒரு முக்கியமான பொது விவாதம் தகவல் வழங்கும் உரிமை விடயத்தில் தோன்றியுள்ளது. இவ்வழிகாட்டியின் நோக்கம் என்னவென்றால் இலங்கையின் தகவல் அறியும் உரிமையின் பிரச்சாரத்திற்காக ஊடக சமூகத்தின் உள்ளேயும் சிவில் சமூக நிறுவனங்களின் உள்ளேயும் இருக்கும் பரிந்து பேசுபவர்களுக்கு தகவல் அறியும் உரிமை பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குவதும் தயார் செய்வதும் ஒரு உந்துதலை அளிப்பது மாகும். இவ்வழிகாட்டி எதிர்கால உரையாடல்களுக்கு ஏற்ற ஒரு ஆதார ஸ்தானமாகவும் இதற்கு பரிந்து பேசுவதற்கு ஒரு கருவியாகவும் பணியாற்றுவதை நோக்கமாகவும் கொண்டுள்ளது.

## 325.21 அகதிகள்

### 14291

**பருத்தித்துறையிலிருந்து கற்றிங்கன் வரை: ஒரு புலம்பெயர்ந்தவனின் கதை.** ஜோர்ஜ் டயஸ். லண்டன்: அயோத்தி நூலக சேவைகள், ஐக்கிய இராச்சியம், 1வது பதிப்பு, 2019. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

*45 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.*

பருத்தித்துறையில் பிறந்து ஜேர்மனியில் பதியம் வைக்கப்பட்ட ஒரு முதலாம் தலைமுறை இளைஞனின் வாழ்க்கைப் பாதை இங்கு சுயசரிதையாக விரிந்துள்ளது. ஜோர்ஜ் டயஸ் கடந்து சென்ற கல்லும் முள்ளும் செறிந்த பாதை எவ்வாறு அவரை ஒரு அறிவுஜீவியாக மாற்றி விட்டிருக்கின்றது என்ற வெற்றிக் கதையை வாசகர் இந்நூலில் காணமுடிகின்றது. ஜோர்ஜ் டயஸ் போன்ற பல இளைஞர்களும் யுவதிகளும் இன்று வாழ்வில் உயர்நிலையை எய்தியுள்ளார்கள். புகலிடத் தமிழர்களின் "அகதி" என்ற துயர்கவியும் பெயரை இல்லாது செய்து அவர்களை ஆளுமையுள்ள ஒரு சமூகமாக உலகம் வியந்து நோக்க வைத்துள்ளார்கள். புகலிடத்தின் புலம்பல்களுக்கிடையே இத்தகைய வெற்றிக் கனிகளைப் பற்றியும் தாயகத்தில் வெளிப்படுத்தப்படவேண்டிய தேவை இன்றுள்ளது. அதனை இந்

நூல் ஓரளவு பூர்த்திசெய்துள்ளது. இது ஒரு தனிமனித சாதனையல்ல. தாயகத்தின் ஒடுக்கப்பட்ட ஒரு இனத்தின் வீறுகொண்ட எழுச்சியின் மற்றுமொரு பரிமாணம்.

## 327 சர்வதேசத் தொடர்புகள்

### 14292

**இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடு.** சோமவன்ச அமரசிங்க, ரில்வின் சில்வா. கொழும்பு 10: நியமுவா வெளியீட்டகம், மக்கள் விடுதலை முன்னணி, 198/19, பஞ்சிக்காவத்தை வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2008. (புறக்கோட்டை: ஆர்.சீ. பிரின்டர்ஸ், அன்ட் பப்ளிஷர்ஸ், 70, மிஷன் வீதி).

70 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-8696-12-5.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை என்ற தலைப்பில் தோழர் சோமவன்ச அமரசிங்கவும், இலங்கை பொருளாதாரத்தில் இந்தியாவின் தலையீடு என்ற தலைப்பில் தோழர் ரில்வின் சில்வா அவர்களும் நிகழ்த்திய உரைகளின் சாராம்சம் இது. இந்தியாவின் தலையீட்டினால் இன்று இலங்கையில் திரைமறைவில் நடைபெறும் பல்வேறு செயல்களைப் பற்றிய அறிவு பெரும்பாலான நாட்டு மக்களிடம் இல்லை. இதனை ஒரு கற்பனை எனக் கருதுவோரும் இருக்கின்றனர். இதைப் பற்றிய சரியான தகவல்கள் மக்களைச் சென்றடையாமையே இதற்குக் காரணம். மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்க மற்றும் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா ஆகியோரால் 19.09.2008 அன்று கண்டியில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டமொன்றில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவில் தெரிவித்த கருத்துக்களையே இந்த நூல்வடிவில் வழங்கியுள்ளனர்.

### 14293

**சீனாவுக்கான அமைதிவழி அபிவிருத்தியும் அதன் இரகசியமும்.** ஏ.சீ.எம். இப்றாஹீம். கிண்ணியா 4: பேனா பதிப்பக வெளியீடு, 118, நகரசபை வீதி, 1வது பதிப்பு, 2014. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

68 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-0932-09-2.

இளைப்பாறிய இராஜதந்திரியும் சட்டத்தரணியுமான ஏ.சீ.எம்.இப்றாஹீம் எழுதியுள்ள கட்டுரைத் தொகுப்பு நூல். சிறியதும் நீண்டதுமான 16 கட்டுரைகளில் பொதுவாக சீனாவைப் பற்றியும், விஷேடமாக மக்கள் சீனக் குடியரசின் அரசியல், பொருளாதார, சமூக அமைப்பைப் பற்றியும் சிறந்ததொரு அறிமுகமொன்றைத் தருவதாக அமைந்துள்ளது. சீனாவில் அவர் வாழ்ந்த மூன்றரை வருட சேவைக் காலத்தில் அனுபவித்தவை, கணடறிந்து, வாசித்தறிந்தவை அனைத்தும் இந்நூலின் உருவாக்கத்திற்குத் துணைநின்றுள்ளன. சீனாவுக்கும் இலங்கைக்குமிடையிலான அரசியல், இராஜதந்திர பொருளாதார மற்றும் முதலீடு சம்பந்தமான நட்புறவு

நடவடிக்கைகளை சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறியுள்ளார். இது ஆசிரியரின் முதலாவது நூலாகும். இந்நூல் சீனா பற்றிய ஓர் அறிமுகம், சீனாவில் நான் கழித்த சில காலம், பலம் பொருந்திய சீனா, சீனாவின் சிறப்பு, மாணவர் கிளர்ச்சியும் தியம்மன் சதுக்கமும், சீனாவின் அரசியல், சீனாவின் சமூக அமைப்பு, சீனாவுக்கான அமைதிவழி அபிவிருத்தியும் அதன் இரகசியமும், நவீன காலத்திற்கான மாற்றங்களின் ஆரம்பம், வளர்ச்சிப் பாதையில் சீனா, இலங்கை-சீனா உறவின் வரலாற்றுப் பின்னணி, பரஸ்பரம் புரிந்துணர்வும் நல்லிணக்கமுமே சீனா-இலங்கை நட்புறவுக்கு வித்திட்டது, சீனா-இலங்கை அரசியல் பிரமுகர்களின் பயணங்கள், சீனாவும் இலங்கையும் இன்று, சீனாவில் நான் கற்றறிந்த பாடங்கள், நான் சந்தித்த சில பிரபலங்கள் ஆகிய பதினாறு அத்தியாயங்களின் வழியாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திர சேவையில் இணைந்து, சீனக்குடியரசின் தலைநகரிலும், தாய்லாந்து, சவூதி அரேபியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் சேவையாற்றியவர்.

## 330 பொருளியல்

### 14294

**இலங்கை மத்திய வங்கி: பொருளாதார அளவீடு 1991இன் முதலரைப் பகுதி.** *இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, தபால் பெட்டி இலக்கம் 590, 1வது பதிப்பு, 1991. (கொழும்பு 14: ஸ்டார்லைன் பிரின்டர்ஸ், 213, கிரான்ட்பாஸ் வீதி).*

*(4), 59 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x16.5 சமீ.*

*1991ஆம் ஆண்டின் முதலரைப் பகுதிக்கான இலங்கையின் பொருளாதார அளவீடுகள், பொதுவான போக்குகள், வேளாண்மை, கைத்தொழில், பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள், விலைகள், வர்த்தகமும் சென்மதி நிலுவையும், அரசநிதி, பணமும் கொடுகடனும் ஆகிய எட்டு பிரிவுகளின்கீழ் அறிக்கையிடப் பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16879).*

### 14295

**ஐரோப்பிய பொருளாதார வரலாறு: 1760-1939.** *ஆதர் பெர்னி (ஆங்கில மூலம்), றெக்ஸ் ரொட்றீகஸ் (தமிழாக்கம்). கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், "சிறிமதி பாயா", 58, சேர் ஏர்னெஸ்ட் த சில்வா வீதி, 1வது பதிப்பு, 1967. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).*

xiv, *376 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*பிரித்தானிய பொருளியலாளரான* Arthur Birnie *அவர்கள் எழுதி லண்டன்* Methuen and Co. *வெளியிட்ட* An Economic History of Europe *1760-1939 என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். கைத்தொழிற் புரட்சி, விவசாயப் புரட்சி,*

போக்குவரத்திலேற்பட்ட புரட்சி, வர்த்தகத்திலேற்பட்ட புரட்சி, வர்த்தகக் கொள்கைகளில் ஏற்பட்ட புரட்சி, பணம்-வங்கித் தொழில் முதலீடு, சமூக வுடைமையும் சமுதாயப் பிரச்சினையும், அரசியல் சார்ந்த தொழிலாளர் இயக்கம், கைத்தொழில் சார்ந்த தொழிலாளர் இயக்கம், கூட்டுறவு இயக்கம், இலாபப் பங்கீடும் கூட்டுப் பங்கு வியாபாரமும், தொழிற்சாலைச் சட்டங்கள், வறுமைச் சட்டங்கள், சமூகக் காப்புறுதி, அண்மைக்காலப் போக்குகள் (பொருளாதார ஏகாதிபத்தியம், கைத்தொழிலில் டிரஸ்டு இயக்கம், ரஷ்யப் புரட்சி, அரசுக் கட்டுப்பாடும் பொருளாதார எதேச்சாதிகாரமும், முதலாளித்துவத்தின் கடந்த காலமும் எதிர்காலமும்) முடிவுரை ஆகிய 16 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 23458).

### 14296

**பொருளியற் பாகுபாடு.** எப்.ஆர்.சயசூரியா (சிங்கள மூலம்), ம.முகம்மது உவைஸ் (தமிழாக்கம்). கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 2வது பதிப்பு, 1968, 1வது பதிப்பு, 1962. (கொழும்பு: அரசாங்க அச்சுத் திணைக்களம்).

(6), 201 பக்கம், விளக்கப்படங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

பொருளியல் என்றால் என்ன?, பண்டமாற்றும் பெறுமானமும், கேள்வி விதிகளும் சந்தைகளும், கேள்வியின் நெகிழ்ச்சி, ஆக்கம், காரணிகளின் சேர்க்கை, பல்வேறு வகையான தொழிலமைப்புகள், ஆக்கச் செலவுகள், நிரம்பலும் நிரம்பல் விதியும், தேவையும் நிரம்பலும், சந்தைகளும் அவற்றின் அமைப்பும், நிறை வர்த்தகப் போட்டி, தனியுரிமை, நிறைவில் வர்த்தகப் போட்டி, பரம்பற் கொள்கை, வாடகை, சம்பள விதி, வட்டி வீதம், இலாபம், பணம், பணமுறை அமைப்பு, பொருளாதார வீக்கம், வங்கித் தொழின்முறை, வங்கிக் கடன், மத்திய வங்கி, நாடுகளிடை வியாபாரம், வெளிநாட்டு நாணய மாற்று, வியாபாரச் சகடவோட்டம் ஆகிய 28 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38374).

**மேலும் பார்க்க: பெருந்தோட்ட உற்பத்தியில் பெண் தொழிலாளர்கள்.14265**

## 333 நிலம் மற்றும் சக்திப் பொருளாதாரம்

### 14297

**மண்-நீர்: தேசிய கண்காட்சி-நீரேந்துப் பரப்புகளைப் பாதுகாத்தல்: ஞாபகார்த்த மலர்.** மலர்க் குழு. கொழும்பு: மேல்மட்ட நீர்த்தேக்க பிரதேச முகாமைத்துவ திட்டம், சூழலியல் இயற்கை வளங்கள் அமைச்சு, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (இலங்கை: அரசாங்க அச்சகம், கொழும்பு).

viii, 75+91 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x22 சமீ.

தமிழ் சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இச்சிறப்பிதழில் மண்ணால் நிறைவேறும் செயற்பாடுகள் (எம்.பி.திசாநாயக்க), பாதுகாப்பில்லாது மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக்குப் பலிக்கடாவாகும் மலையகத்தின் மண்ணையும் நீரையும் எவ்வாறு பாதுகாப்பது? (பீ.எச்.ஜயவர்த்தன), மண் நீர் வளங்களில் விவசாய நடவடிக்கைகளின் பாதிப்புக்கள் (எச்.பீ. நாயக்ககோராள), இலங்கையின் நீரேந்தும் பரப்புகளும் மண்ணரிப்பும் (நிலுசா சரங்கனி லியனகமகே), மண் சரிவை எதிர்கொள்வதாயின் (கபில தஷநாயக்க), இலங்கை சதுப்பு நிலங்களின் முக்கியத்துவம் (டி.எம்.கருணாதாச திசாநாயக்க), நீர் நிலைகள் மாசடைதல் (சரத் லால் அமரசிரி), மத்திய மலைநாட்டில் நிலங்களை முறையாகப் பயன்படுத்தாமையால் ஏற்படும் மண்ணரிப்புகள் வன அழிவுகளாகும் (டி.ஏ.சிரானி), மேல் நீரேந்துப் பரப்புகளில் பெயர்ஸ் தோடைச் செய்கை (டி.ஏ.சிரானி), மேல் நீரேந்துப் பரப்புகளில் மண்களில் ஏற்படக்கூடிய இரசாயன மாற்றங்கள் (அனந்த எஸ்.ஜயக்கொடி), மலைநாட்டில் உருளைக்கிழங்குச் செய்கையினால் ஏற்படும் மண்ணரிப்பும் கட்டுப்படுத்தலும் (எச்.ஆர்.ஜே.பீ. எரபதுபிட்டிய), மனித உயிர்களைப் பலிகொள்ளும் பீடை நாசினிகள் (சுமித் ஜயகொடி), ஒருங்கிணைந்த தாவரப் போசணை முகாமைத்துவம் (ஜே.டீ.எச். விஜேவர்த்தன), மூலிகை வனாந்தரங்களையும் பாதுகாக்கும் பாரம்பரிய முறை (பியல் மாரசிங்க), மேல் நீரேந்துப் பரப்பு முகாமைத்துவத் திட்டம் (பியல் மாரசிங்க), மேல் நீரேந்துப் பரப்புகளின் காடுகளைப் பாதுகாத்தல் (சுனில் கமகே) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37018).

## 14298

**மேல் நீரேந்துப் பரப்பு முகாமைத்துவ திட்டத்திற்கான பண்ணை மண் பாதுகாப்பு சிபார்சுகள்: பாதுகாப்பு முறைகளும் நியமங்களும்.** எச்.பி.நாயக்ககோராள (மூலம்), சீரங்கன் பெரியசாமி (தமிழாக்கம்). கொழும்பு: மேல் நீரேந்துப் பரப்பு முகாமைத்துவத் திட்டம், சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சு, 30, லக்சபான மாவத்தை, ஜயந்திபுர, பத்தரமுல்லை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

15 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x19 சமீ.

மண்ணரிப்பு, மண் பாதுகாப்பு முறைகள், பொறியியல் முறை, உயிரியல் முறை, பயிராக்கவியல் முறை, மண் பாதுகாப்பு முறைகளைத் தெரிவுசெய்தல், பொறியியல்முறை பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள், கட்டமைப்பும் கருத்திற் கொள்ளவேண்டிய விடயங்களும், கல்லணை பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள், கட்டமைப்பும் கருத்திற் கொள்ளவேண்டிய அம்சங்களும் என இன்னோரன்ன வழிவகைகள் இச்சிறுநூலில் வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42733).

## 335 சோசலிசம், அது தொடர்பான பிரிவுகள்

### 14299

**நிரந்தரப் புரட்சியும் சோசலிச அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும்.** *டேவிட் நோர்த். கொழும்பு 10: தொழிலாளர் பாதை வெளியீட்டாளர்கள், இல. 90, 1ஆம் மாளிகாகந்தை ஒழுங்கை, மருதானை, 1வது பதிப்பு, ஜுன் 1993. (மகரகம: பியதாச அச்சகம், இல. 51, நாகஹவத்த வீதி).*

*(2), 56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.,* ISBN: *955-9123-23-8.*

*இது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆரம்பம் தொடக்கம் அதன் பொதுச் செயலாளராக விளங்கிய தோழர் கீர்த்தி பாலசூரிய நினைவுப் பேருரையாக வெளிவந்துள்ளது. கீர்த்தி பாலசூரிய 1987 டிசம்பர் 18ஆம் திகதி காலமானார். அவரின் மறைவின் ஐந்தாம் ஆண்டு நிறைவை நினைவுகூரும் முகமாக அனைத்துலகக் குழுவின் கிளைகள் உலகம் பூராவும் நடாத்திய கூட்டங்களின் ஒரு அம்சமாக கனடிய ட்ரொட்ஸ்கி அனைத்துலகத் தொழிலாளர் கட்சி (*I.W.P*) 1993 பெப்ரவரி 6ஆம் திகதி மொன்ட்ரியலில் பொதுக்கூட்டமொன்றை நடாத்தியது. அக்கூட்டத்தில் அமெரிக்க ட்ரொஸ்கிக் கட்சியான வேர்க்கர்ஸ் லீக்கின் (*Workers' League*) தேசியச் செயலாளர் டேவிட் நோர்த் நிகழ்த்திய உரை இங்கு பிரசுரமாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து வரும் "இந்திய-இலங்கை உடன்படிக்கையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்" நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கையாக 1987 நவம்பர் 19இல் வெளியாகியது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39655).*

## 335.4 கம்யூனிசம்

### 14300

**அக்டோபர் புரட்சியின் பாடங்கள்.** *நா.சண்முகதாசன். கொழும்பு 2: தொழிலாளி பிரசுரம், இல.9, டீ மெல் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1965. (கொழும்பு 2: தொழிலாளி அச்சகம், இல.9, டீ மெல் வீதி).*

*36 பக்கம், விலை: 25 சதம், அளவு: 21x13.5 சமீ.*

*இலங்கை கம்யூனிசக் கட்சியின் தேசிய அமைப்பாளரான நா.சண்முகதாசன் அவர்கள் "அக்டோபர் புரட்சியின் பாடங்கள்", "இலங்கைப் புரட்சியும் வாலிபர் இயக்கமும்" ஆகிய தலைப்புகளில் நிகழ்த்திய இரு சொற்பொழிவுகள் இச்சிறுநூலில் இடம்பெற்றுள்ளன. "இலங்கைப் புரட்சியும் வாலிபர் இயக்கமும்" என்ற சொற்பொழிவு, இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தின் நான்காவது தேசிய மாநாட்டில் ஆற்றிய உரையாகும். "அக்டோபர் புரட்சியின் பாடங்கள்" என்ற சொற்பொழிவு, மகத்தான அக்டோபர் புரட்சியின் 47ஆவது ஆண்டு நிறைவுவிழா ஞாபகார்த்தமாக 07.11.1964இல் ஆற்றியது.*

## 14301

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆறாவது தேசிய மாநாட்டின் உத்தேச அறிக்கை.** இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி. கொழும்பு: இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1960. (கொழும்பு: லங்கா பிரஸ், பொரளை).

74 பக்கம், விலை: 25 சதம், அளவு: 22x13.5 சமீ.

1960 ஒக்டோபர் 15ஆம் திகதியும் 16ஆம் திகதியும் நடைபெற்ற மத்திய கமிட்டிக் கூட்டத்தில் விவாதித்து அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட அறிக்கை.

## 14302

**இலங்கை கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளனம்: 12ஆவது தேசிய மகாநாடு (நகல் அறிக்கை).** இலங்கை கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளனம். கொழும்பு: இலங்கை கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளனம், 1வது பதிப்பு, ஜுலை 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).

24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

இலங்கை கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளனம் தனது தேசிய மாநாட்டை 2007 ஜுலை 08 அன்று உயன்வத்தை விளையாட்டரங்கில் நடத்தியவேளையில் விநியோகிக்கப்பட்ட நகல் அறிக்கை இதுவாகும். இலங்கை கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளனம் பற்றிய அறிமுகம், உற்பத்தியும் தனி உடைமையும், சர்வதேச நிலைமைகள், புதிய தாராளமயம் சோசலிச அரச கட்டுமானங்கள் சரிந்து வீழ்ந்ததைப் பற்றி, புதிய லிபரல்வாதத்தினூடாக பாதகமான பாதுகாப்பற்ற உலகை நோக்கிய பயணம், புதிய லிபரல்வாதம் சவால்களுக்கு முகம்கொடுத்தல் என்பவை உள்ளிட்ட பல விடயங்கள் இவ்வறிக்கையின் பேசுபொருளாகியுள்ளன.

# 336 நிதியியல், வங்கியியல்

## 14303

**இலங்கை மத்திய வங்கி 1950-1975: நினைவு மலர்.** மலர்க்குழு. கொழும்பு 1: இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, 1975. (கொழும்பு: வரையறுக்கப்பட்ட திருவாளர்கள் எற்கின் ஸ்பென்ஸ் கூட்டுநிலையம்).

(32), 92 பக்கம், அட்டவணைகள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x25 சமீ.

இவ்வெள்ளி விழா மலரில் நாணயச்சபை 1950-1975, இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர்கள் 1950-1975, இலங்கை மத்திய வங்கி 1950-1975 (கட்டுரை), இலங்கைப் பொருளாதாரத்தின் ஒரு மதிப்பீடு, 1950-1975 (கட்டுரை) ஆகிய ஆவணங்கள் இடம்பெற்றுள்ளன. மலர்க்குழுவினராக தலைவர் ஜே.ஜீ.பி. ஜயசுந்தர, ஆர். இ.குணசிங்க, டபிள்யூ எட்டியாரச்சி, துணை ஆளுநர்களான டபிள்யூ. இராசபுத்திரம், எச்.எல்.டி. செல்வரத்தினம் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13455).

## 338 பொருளாதார வளங்கள், மீன்வளம்

### 14304

**நீரும் மீனும்.** திருச்செல்வம் தவரத்தினம். காரைநகர்: திருச்செல்வம் தவரத்தினம், சர்வசக்தி வெளியீடு, சடையாளி, 1வது பதிப்பு, ஜுன் 2017. (சுன்னாகம்: ஆரணன் பதிப்பகம், மருதனார்மடம்).

(4), 40 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 150.00, அளவு: 24x17.5 சமீ., ISBN: 978-955-38483-6-9.

ஆரம்பக் கல்வி - இடைநிலை மாணவருக்கான அரசின் பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ள நூல். இதில் நீரின் மகத்துவம், நீரின் விசேட இயல்புகள், நீர் தூய்மையாக்கும் வழிகள், நீர் மாசடையும் முறைகள், நீர் மாசடைவதால் ஏற்படும் நோய்களும் பாதிப்புக்களும், நகரங்களில் நீர் விநியோகம், மழைவீழ்ச்சி, நீரில் சேரும் ஆபத்தான பார உலோகங்கள், நீர் அருந்தாமையால் ஏற்படும் உடல் பாதிப்புகள், நீர் பற்றிய பாரம்பரிய அறிவுத் தேவைப் பயன்பாடுகள், நீரின் விஞ்ஞானக் கட்டமைப்பு, நீர் நிலைகளின் அமைவுகள், மீன்கள் அறிமுகம், அலங்கார மீன் வளர்ப்பு, உணவுக்கான மீன் வளர்ப்பு, மீன்பிடி ஆகிய 16 பாடத் தலைப்புகளின்கீழ் இந்நூலில் நீர்வளம் பற்றியும் மீன்வளம் பற்றியும் ஆரம்ப அறிவுத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 338.642 சிறுகைத்தொழில் முயற்சிகள்

### 14305

**சுயதொழில் வழிகாட்டி.** சி.வன்னியகுலம் (பதிப்பாசிரியர்). திருக்கோணமலை: திட்டமிடல் பிரதிச் செயலர் அலுவலகம், நிதி திட்டமிடல் அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாண சபை, 1வது பதிப்பு, மே 1992. (திருக்கோணமலை: பதிப்பகத் திணைக்களம், திருக்கோணமலை, அன்பு ஒழுங்கை, உப்புவெளி).

(12), 90 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x16.5 சமீ.

1992ம் ஆண்டு மே மாதம் 29, 30, 31ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறும் ஜனாதிபதி இடம்பெயர் சேவையின்போது இந்நூல் வெளியிடப்பட்டது. இதில் சுயதொழில் முயற்சி ஓர் அறிமுகம், சுயதொழிலும் வேலையில்லாத் திண்டாட்டத் தீர்வும், சுயதொழிலும் பொருத்தமான தொழில்நுட்பமும், பொருத்தமான தொழில்நுட்பத்தின் இன்றியமையாமை, சனசவிய நம்பிக்கை நிதியத்தின் சமூகநலத் திட்டங்கள், சுயதொழில் வேலைவாய்ப்புக்கான உதவித் திட்டங்கள், மக்கள் வங்கிக் கடனுதவித் திட்டம், ஹற்றன் நெஷனல் வங்கி, சுயதொழில் திட்டத்தை தெரிவுசெய்தலும் உருவாக்கலும் திட்ட அறிக்கை தயாரித்தலும், சுயதொழில்திட்ட அறிக்கை நிதிக்கூற்று, மாதிரி செயற்திட்ட அறிக்கை, மெழுகுவர்த்தி தயாரித்தல், பாடசாலை வெண்கட்டி தயாரித்தல், ஊதுபத்தி தயாரித்தல், கடதாசிப் பொம்மை தயாரித்தல், கடித உறை தயாரித்தல், அலுவலக பயன்பாட்டுக்கான மரப்பொருட்கள் தயாரித்தல், சீமெந்து புளொக்குகள் (கல்) தயாரித்தல், செங்கல் தயாரித்தல்,

கண்ணாடி இழைப்பொருட்கள் உற்பத்தி, சூட்கேஸ் தயாரித்தல், பனை ஓலைப்பொருட்கள் தயாரித்தல், பனந்தும்பு தயாரித்தல், தும்புக் கயிறு தயாரித்தல், கயிற்றுத் தும்புச் சுருள் தயாரித்தல், நெசவுத்தொழில், தலையணை உறை தயாரித்தல், புற்பாய் தயாரித்தல், பிரம்புப் பொருட்கள் தயாரித்தல், கைப்பொறி மூலம் தானியம் அரைத்தல், மாவகை பொதி செய்தல், மாவினால் தின்பண்டங்கள் தயாரித்தல், போசாக்கு உணவுப்பொதி தயாரித்தல், இனிப்புகள், ரொபிகள், தயாரித்தல், தக்காளிக் குழம்பு (சோஸ்) தயாரித்தல், யோகட் தயாரித்தல், ஜாம் தயாரித்தல், மார்ஷ்மெலோ தயாரித்தல், நூடில்ஸ் தயாரித்தல், அப்பளம் தயாரித்தல், குளிர்பானம் தயாரித்தல், பாணிப்பனாட்டு தயாரித்தல், பதநீரிலிருந்து உணவுப்பொருட்கள் தயாரித்தல், பதப்படுத்தப்பட்ட பனங்களி தயாரித்தல், கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல், முயல் வளர்த்தல், தேனீ வளர்த்தல், காளான் வளர்த்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், காஸ் வெல்டிங் தொழில், ஆர்க் வெல்டிங் தொழில், ஸ்பிரே பெயின்டிங் தொழில், வாகனங்களின் ரயர்களை கையால் மாற்றுதல், துவிச்சக்கரவண்டி பழுதுபார்த்தல், கடிகாரம் மணிக்கூடு பழுதுபார்த்தல், பி.வி.சி. ஈயக்குழாய் பழுது பார்த்தல், பிளாஸ்ரிக் எழுத்துக்கள், பெயர்த்தகடுகள் தயாரித்தல், படச்சட்டம் (பிரேம்) அமைத்தல், புத்தகம் கட்டுதல், புத்தக நிலையம் அமைத்தல் ஆகிய 61 சுயதொழில்களுக்கான வழிகாட்டியாக இந்நூல் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35626).

## 338.9 பொருளாதார அபிவிருத்தி

### 14306

**இலங்கை மத்திய வங்கி: அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் முக்கிய பண்புகள் 2002.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, மார்ச் 2002. (கொழும்பு 8: அரசாங்க அச்சுத் திணைக்களம், 118, பேஸ்லைன் வீதி).

61 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.

இவ்வறிக்கையில் முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள், அறிமுகம், தேசிய வருமானமும் பொருளாதார வளர்ச்சியும், முதலீடு மற்றும் சேமிப்புகள், விலைகள் மற்றும் பணவீக்கம், தொழில் நிலை மற்றும் கூலிகள், வேளாண்மை, கைத்தொழில், உட்கட்டமைப்பும் பணிகளும், அரச நிதி, பாதகாப்பு வலை- சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம், வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் சுற்றுலா, சென்மதி நிலுவையும் செலாவணி வீதமும், பணமும் வட்டி வீதங்களும், வங்கித் தொழிலும் நிதியும், புள்ளி விபரப் பின்னிணைப்புகள் ஆகிய பிரிவுகளின் கீழ் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23105).

### 14307

**இலங்கை மத்திய வங்கி: அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் 2002இன் முக்கிய பண்புகளும் 2003இற்கான வாய்ப்புகளும்.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (கொழும்பு: லேசர் கிராப்பிக் லிமிட்டெட்).

(4), 97 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.

இவ்வறிக்கையில் முதன்மைப் பொருளாதாரக் குறிகாட்டிகள், அறிமுகம், வெளியீடும் பொருளாதார வளர்ச்சியும், மொத்தக் கேள்வியும் சேமிப்புகளும், விலைகளும் கூலிகளும், தொழிற் சந்தை, வேளாண்மை, கைத்தொழில், உட்கட்டமைப்பும் பணிகளும், அரசநிதி, வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் சுற்றுலா, சென்மதி நிலுவையும் செலாவணி வீதமும், பணம் கொடுகடன் மற்றும் வட்டி வீதங்கள், புள்ளி விபரப் பின்னிணைப்புகள் ஆகிய பிரிவுகளின் கீழ் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34075).

### 14308

**இலங்கை மத்திய வங்கி: அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் 2005இன் முக்கிய பண்புகளும் 2006இற்கான வாய்ப்புகளும்.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 2005. (கொழும்பு: லேசர் கிராப்பிக் லிமிட்டெட்).

(6), 77 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ., ISBN: 955-575-120-X.

இவ்வறிக்கையில் பொது நோக்கு, தேசிய உற்பத்தியும் செலவும், பொருளாதார சமூக உட்கட்டமைப்பு, விலைகள் கூலிகள் தொழில் நிலை, வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள், இறைக்கொள்கையும் அரச நிதியும், நாணயக்கொள்கை, பணம், கொடுகடன் மற்றும் வட்டி வீதங்கள், நிதியியல்துறை அபிவிருத்திகளும் உறுதிப்பாடும், புள்ளி விபரப் பின்னிணைப்புகள் ஆகிய பிரிவுகளின் கீழ் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39561).

### 14309

**உலக வங்கியும் இலங்கையின் வறுமைக் குறைப்பும்.** சீமாஸ் கிளாரி (அபிவிருத்தி ஆலோசகர்), றிச்சர்ட் றியோச் (தலைவர்), ப்றைன் வோல்ப் (நிறைவேற்று செயலாளர்). லண்டன் SW8 1SJ: இலங்கைக்கான அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், இல. 3, பொண்ட் வே, 1வது பதிப்பு, 1993. (தெகிவளை: டெக்னோ பிரின்ட், இல. 6, ஜெயவர்தன அவென்யூ).

*(4), 67 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21 சமீ.*

உலக வங்கியின் வறுமை மதிப்பீடு பற்றிய எதிர்வினைகள். இது இலங்கை அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்திற்கான ஒரு அறிக்கை. இவ்வறிக்கையில் இலங்கையின் வறுமை பற்றிய கலந்துரையாடல், வறுமையின் பரப்பெல்லை, வறுமையின் இருப்பிடங்களைக் கண்டுகொள்ளல், மனித அபிவிருத்தி அனுபவங்கள், பரிந்துரைகள், வளங்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24326).

## 14310

**கிழக்கு ஆசியாவின் அற்புதம்: பொருளாதார வளர்ச்சியும் பொதுக் கொள்கையும்.** கொயிச்சி ரானி, உலக வங்கி (ஆங்கில மூலம்), எஸ்.அன்ரனி நோபேட், மா.கருணாநிதி (தமிழாக்கம்), எஸ்.அன்ரனி நோபேட் (பதிப்பாசிரியர்). கொழும்பு 5: பொதுசன கல்வி நிகழ்ச்சித் திட்டம், மார்கா நிறுவகம், 61, இசிப்பத்தன மாவத்தை, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

*86 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

இத்தொகுதியானது, சந்தைப் பொருளாதாரத்தின் இயல்பும் அதன் செயற்பாடுகளும் பற்றிய ஐந்து வெளியீடுகளில் நான்காவதாகும். இந்நூலில் இரண்டு பொருளாதாரக் கட்டுரைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. முதலாவது, "கிழக்காசியாவின் அற்புதம்: பொருளாதார வளர்ச்சியும் பொதுக் கொள்கையும்" என்பதாகும். இது உலக வங்கியின் ஒரு கொள்கை ஆய்வு அறிக்கை. இதனை கொழும்புப் பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் எஸ்.அன்ரனி நோபேட் தமிழாக்கம் செய்துள்ளார். கிழக்காசியாவின் வெற்றியை விளங்கிக்கொள்ளல், சூழ்நிலைகள், பொதுக்கொள்கைகள் மற்றும் வளர்ச்சி, பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையையும் ஏற்றுமதி வளர்ச்சியையும் அடைந்துகொள்ளல், வளர்ச்சிக்கு நிறுவனரீதியான தளத்தைக் கட்டியெழுப்புதல், மனித மற்றும் பௌதீக மூலதனத்தைத் திரட்டுதல், செயற்றிறன் மிக்க ஒதுக்கீட்டினையும் உற்பத்தித் திறன்மிக்க மாற்றத்தினையும் அடைந்துகொள்ளல், ஏனைய வளர்முகப் பொருளாதாரங்களுக்கான படிப்பினைகள் ஆகிய ஏழு அத்தியாயங்களில் இவ்வறிக்கை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டுரை கொயிச்சி ரானி, அவர்கள் எழுதிய "போருக்குப் பின்னரான யப்பானின் பொருளாதார உருமாற்றத்தில் பொருளாதாரத் திட்டத்தின் பங்கு" என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. இதனை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானக் கல்வித்துறை விரிவுரையாளர் மா.கருணாநிதி தமிழாக்கம் செய்துள்ளார். இக்கட்டுரை போருக்குப் பின்னரான பொருளாதாரக் கொள்கையின் ஆரம்பகால விருத்தி, பொருளாதாரத் திட்டமும் தேசிய பொருளாதாரத்தின் பேரினப்

பொருளாதாரக் கொள்கை முகாமைத்துவமும் ஆகிய இரு அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 22041).

### 14311

**சந்தைப் பொருளாதாரம் என்றால் என்ன?** மைக்கல் வாட்ஸ், எஸ்ரா சொலமன் (ஆங்கில மூலம்), டி.தனராஜ், எஸ்.அன்ரனி நோபேட் (தமிழாக்கம்), எஸ். அன்ரனி நோபேட் (பதிப்பாசிரியர்). கொழும்பு 5: பொதுசன கல்வி நிகழ்ச்சித் திட்டம், மார்கா நிறுவகம், 61, இசிப்பத்தன மாவத்தை, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

102 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

இருபகுதிகளாக வகுத்து எழுதப்பட்டுள்ள இந்நூலின் "சந்தைப் பொருளாதாரம் என்றால் என்ன?" என்ற முதலாவது பகுதியில் அறிமுகம், திட்டமிட்ட பொருளாதாரமும் சந்தைப் பொருளாதாரமும், சந்தைப் பொருளாதாரத்தில் நுகர்வோர், சந்தைப் பொருளாதாரத்தில் வர்த்தகம், சந்தைப் பொருளாதாரத்தில் தொழிலாளர், சந்தை முறைமை, சந்தைப் பொருளாதாரத்தில் நிதி, சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கம் ஆகிய ஏழு அத்தியாயங்கள் உள்ளன. "ஒரு சுதந்திர சமுதாயத்தில் பொருளாதாரம்" என்ற இரண்டாவது பகுதியில், அறிமுகம், சந்தை முறைமை, அடம்ஸ்மித்தும் மறைமுகக் கரமும், விலைகளின் பங்கு, ஒரு சந்தை முறைமையின் ஒழுங்கமைப்பு, சுதந்திர சந்தையின் அனுகூலங்கள், சந்தைப் பொருளாதாரங்களில் அரசாங்கத்தின் பங்கு, ஸ்மித்தின் பொருளாதாரத்தின் தாக்கம்: ஐக்கிய அமெரிக்கா குறித்த ஓர் ஆய்வு, சுதந்திர சந்தையும் கெயின்சியப் புரட்சியும், கெயின்சும் ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பும், சுதந்திர சந்தையும் உழைப்பும், கெயின்சின் காலம், அடம் ஸ்மித்துக்குத் திரும்புதல் ஆகிய பன்னிரண்டு அத்தியாயங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 022071).

### 14312

**பொருளாதார மத்திய வழி: பொதுமக்கள் செல்வ நிலையை உயர்த்த ஓர் திட்டம்.** ஜஸ்டின் கொத்தலாவலை (ஆங்கில மூலம்), ஏ.ஆர்.அமிர்தையா, டபிள்யூ. ஸ்டனிஸ்லாவுஸ் பெர்னாண்டோ (தமிழாக்கம்). கொழும்பு 4: பொருளாதார மத்திய வழி இயக்கம், இல. 2, கொத்தலாவலை டிரைவ், 1வது பதிப்பு, வைகாசி 1958. (மஹரகம: சமன் பிரஸ்).

(8), 67 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x14 சமீ.

மத்திய வழித் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளன. பொதுவுடமையினதும் முதலாளித்துவத்தினதும் நன்மையான அம்சங்களைக் கோர்த்தெடுத்து, நம் நாட்டின் நடைமுறைக்கு ஏற்ற ஒரு திட்டத்தை ஆக்குதல், வருமான வரியை நாட்டின் கட்டாய சேமநிதியாகப் பாவித்து, அதனை தேசிய பொருள் உற்பத்தித் திட்டங்களில் முதலீடாகச் சேர்த்தல், இலங்கையருக்கு

வருமான வரிக்குப் பதிலாக, திட்டங்களில் பங்களிப்பது, இப்பங்களிப்பு, வருமானவரி அதிகரிக்கப் பங்குகள் சிறிது சிறிதாகக் குறைக்கப்படும் முறையில் அமைத்தல் வேண்டும். வருட வருமானத்தில் 10 சதவீதத்தை தொழிலாளர் மத்தியிலே பங்கிட வேண்டும். இது அவர்கள் வேலை பார்க்கும் ஸ்தாபனத்தில் அவர்கள் எதிர்பார்க்கும் உபகாரப் பங்குப் பணமாக இருக்கச் செய்தல். சனப்பெருக்க வீதத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் வாழக்கைத் தரத்தை குடும்பங்களுக்குள்ளே உயர்த்துதல் என இன்னோரன்ன திட்டங்களை இந்நூல் விபரிக்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 002847).

## 340 சட்டவியல்

### 14313

**சான்றுக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 14).** நீதி அமைச்சு. கொழும்பு: நீதி அமைச்சு, இலங்கை அரசாங்கம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2016. (கொழும்பு: அரசாங்க அச்சுத் திணைக்களம்).

(2), 96 பக்கம், விலை: ரூபா 165.00, அளவு: 24x15 சமீ.

சான்று பற்றிய சட்டத்தினைத் தொகுப்பதற்கும், அதற்கு வரைவிலக்கணங் கூறுவதற்கும், அதனைத் திருத்துவதற்குமானதொரு கட்டளைச் சட்டம். இது நியதிச் சட்டமுறை மறுபதிப்புக் கட்டளைச் சட்டத்துக்கு (அத்தியாயம் 4) இணங்க நீதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளையின் அதிகாரத்தின் கீழ் அரசாங்க அச்சகரால் பதிப்பிக்கப் பெற்றதும், 2016, ஜனவரி 1ஆம் நாளன்று வலுவிலிருந்த சட்டத்தைத் தருவதும் 2005இன் 29ஆம் இலக்கச் சட்டத்தால் சான்றுக் கட்டளைச் சட்டத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கியதுமாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65698).

### 14314

**தேச வழமைச் சட்டம்.** செல்வநாயகம் அருட்குமரன் (தொகுப்பாசிரியர்). புத்தூர்: கலைக்குயில் கலை வட்டம், 1வது பதிப்பு, 2019. (யாழ்ப்பாணம்: எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

vii, 33 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-624-5304-00-4.

இந்நூல் வடமாகாணத் தமிழரின் வழக்காற்றுச் சட்டமான தேச வழமைச்சட்டம் பற்றியதாகும். இத் தொகுப்பு நூலானது, ஏற்கெனவே வெளிவந்த எச்.டபிள்யூ. தம்பையா அவர்களின் The Laws and Customs of the Tamils of Jaffna என்ற நூலின் உசாத்துணையுடன் 2001இல் சட்டத்தரணி சபா ரவீந்திரன் அவர்கள் வெளியிட்ட "தேசவழமை" என்ற நூலை முதன்மை அடிப்படையாகவும், மற்றும் சில இணையக் கட்டுரைகளின் உதவி கொண்டும் தொகுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக பொது மக்களிடையே காணப்படும் தேசவழமைச்சட்டம் தொடர்பான சில கேள்விகளை மையமாகக் கொண்டு, அவர்கள் அறிந்து வைத்திருக்கவேண்டிய விடயங்களைச் சுருக்கமாக இத்தொகுப்பு வழங்குகின்றது. இந்நூல் தேசவழமை பின்னூட்டம், மத்தியஸ்தர் சபை, தகவல் அறியும் உரிமை, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலங்கை நாடாளுமன்ற தேர்தல் முறை, கடல் எல்லை, ரண்பிம உறுதிப்பத்திரங்கள் ஆகிய பிரிவுகளின் கீழ் தற்கால தேச வழமைச்சட்டம் பற்றிய பல்வேறு தகவல்களையும் தருகின்றது.

## 14315

**நிர்வாகச் சட்டம்.** A.W.M.ஹன்ஸீர். தெகிவளை: பாத்திமா பப்ளிக்கேஷன்ஸ், 30, பெயர்லைன் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1989. (சென்னை: திரீயெம் பிரின்டர்ஸ், ஆர்மீனியன் வீதி).

112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

நிர்வாகச் சட்டத்தின் வரைவிலக்கணமும் செயற்பாடும், நிர்வாகச் சட்டத்தின் தன்மையும் நோக்கமும், நிர்வாகச் சட்டத்தின் வளர்ச்சி, அரசியல் சட்டமும் நிர்வாகச் சட்டமும், சிவில் சேவை அல்லது நிர்வாக சேவை, நிர்வாக அதிகார வர்க்கம், நிர்வாகச் செயல், தற்றுணிபு, நிர்வாக நீதி, நிர்வாக நியாய சபைகள், நியாயாதிக்கம், கையளிவதிகார வழிச்சட்டவாக்கம், கையளிவதிகார வழிச் சட்டவாக்கத்தின் வகைகள், கையளிவதிகார வழிச் சட்டத்திற்கான காரணங்கள், கையளிவதிகார வழிச் சட்டவாக்கத்தைக் கட்டுப்படுத்துதல், துணைவிதிகளின் செல்லுபடியாந் தன்மை, இயற்கை நீதி, பேராணை, அரசாங்கத்திற்கு எதிரான வழக்கு நடவடிக்கைகள் ஆகிய 22 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 09550).

**மேலும் பார்க்க: சர்வதேச மனித உரிமைகள் பற்றிய சட்டங்களும் சட்ட அபிவிருத்தியும். 14285**

## 340.05 சட்டவியல் ஆய்விதழ்கள், ஆண்டுமலர்கள்

## 14316

**நீதிமுரசு 1978.** கல்யாணி நடராஜா (இதழாசிரியர்). கொழும்பு 12: இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம், 244, ஹல்ஸ்டப் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1978. (பருத்தித்துறை: குமார் அச்சகம்).

(160) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 1978ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலர் பல்வேறு தமிழ்க் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன், திருமண வழக்குகளால் திசை திருப்பம், அனைத்துலக மனிதன், சட்டமும் சனப்பெருக்கமும், ஈழத்து நாடக

வளர்ச்சி, ஏன் நான் அவளைக் காதலித்தேன், உன்னையே நீ அறிவாய், புள்ளிவிபரங்கள் சேகரிக்கும் முறையும் அவற்றின் முக்கியத்துவமும், பலி ஆடுகள், நீதிக்கோர் சிலம்பு, அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு, தூங்காதே துணிந்து வா, சட்டக் கல்லூரியில் அன்று காந்தி சொன்னவை, புதிய சமுதாயம், தொழில் உறவுகள் மீதான வெள்ளை அறிக்கை, சாயல், இலக்கியத் தமிழரும் இன்றைய சட்டமும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, சட்டமும் சனத்தொகையும், பாலைவனத்துச் சங்கீதங்கள், உழைப்பின் வெற்றி, தென் ஆசியாவில் சனநாயகமும் அரசியற் சட்டப் பரிசோதனைகளும், செயலாளரின் ஆண்டறிக்கை, திரும்பிப் பார்க்கிறோம் ஆகிய தலைப்புகளில் பல்வேறு ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 04426).

## 14317

**நீதிமுரசு 1992.** கி.துரைராசசிங்கம் (மலராசிரியர்). கொழும்பு 12: இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம், 244, ஹல்ஸ்டப் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1992. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

(160) பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 1992ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலரின் 29ஆவது இதழ் (06-09-1992) பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன், உரோம டச்சுச் சட்டத்தில் உடைமை நிவாரணம் - Possessory Remedies in Roman Dutch Law (சி.வி.விக்னேஸ்வரன்), The Impact of 'NANDASENA V. THE REPUBLIC' (1983 ARISKANTHA LAW REPORTS P 48) on Section 27 of Evidence Ordinance (G. L. M. de SILVA), சட்ட உதவி ஆணைக்குழு: ஓர் அறிமுகம் - LEGAL AID COMMISSION (A. M. Mohamed Rauf, இங்கிலாந்து: குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் செயற்பாட்டு அமைப்பு முறை (எம்.மார்க்கண்டன்), Child's Consent to Contraception after ' Gillick' (Ameer Ismail), "நீதிமுறைக் கவனம்" The Doctrine of Judicial Notice (சந்திரிகா சிவதாசன்), நிருவாகச் சட்டம் தோற்றமும் வளர்ச்சியும் - Administrive Law - Its Origin and Growth – (ஜே.சுவாமிநாதன்), Cheques and Notice of Dishonour (V. Ratnasabapathy), சாய்ந்து கொள்ள ஒரு தோள் வேண்டும்- கவிதை (விஜித்தா சண்முகராஜா), எதிர்காலம் - கவிதை (றுமைஷா தாஹிர்), முதலாளி - தொழிலாளி உறவை ஓர் ஒப்பந்தம் கட்டுப்படுத்துமா? (எம்.சீ.எம்.சலீம்), An Interview with Retired Attorney General Hon. Sunil C. De Silva - Guided by: Mrs. F.R. C. Thalayasingham - Interviewed and Compiled by: Michael Johnson, U. A. Mawjooth, K. Thurairasasingham), அடிப்படை உரிமையும் அரசியல் யாப்பும் (கி.துரைராசசிங்கம்), கொலையும், குற்றத்திற்கிடமான மனித உயிர்போக்கலும்: Murdet and Culpable Homicide not amounting to Murder (பாஹிமா - தாஹா), The Rights of Man (Swami Vipulananda), சட்டத்தால் என்ன பயன்? - எமது சொத்தை அநியாயமாக இழந்து விட்டோமே?- மு.மகாலிங்கசிவம்), Apartment Ownership Law No. 11 of 1993 as

amended by the Apartment Ownership (Amendment) Act No. 45 of 1982 (A.B.W.Jayasekara), *முரண் வாதத்தடை* (Estoppel) *(சுபோஜனா பாலசுப்பிரமணியம்),* Taxation and the Proffessionals ( P.Karalasingam), *மனித உரிமைகள் மீறப்படுவதை தடுக்க ஐ. நா. வின் பாதுகாப்பு அவசியம் (கண. சுபாஷ் சந்திரபோஸ்),* The Legality of mixed marriages between Muslims and Non Muslims (T.C.Rajaratnam), *பிரித்தானியக கம்பனிச் சட்டத்தில் பங்குகளும் உரிமை மீறலும் -* Shares and Variation of Class Rights in the Company Law of Great Great Britain *(சின்னத்துரை மயூரன்), அசைவற்ற ஆதனமொன்றை வாங்கும்போது கவனிக்கவேண்டிய முக்கியமான விடயங்கள் (ஆ. கிருஷ்ணபிள்ளை),* Human Rights or Fundamental Rights (S.B.C.Halaldeen), *தாயின் கருப்பையில் உள்ள சேய்* (en ventre sa mere) *(ஜீ.எம்.சிவபாதம்), மனித உரிமைகள் சட்டமும் மனித நேயச் சட்டமும் (வாசுகி நடராசா), தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கௌவும் (பெ.இராஜதுரை),* The Unassisted Contracts of Minors in Sri Lanka (P.Samarasinghe), INTERVIEW: An Interview on Matters Relating to Labour Law with Mr. V. C. Motilal Nehru- Guided by: K. Mahalingasivam - Interviewed and Compiled by: M. Y. M. Zadurdeen - Assisted by: Michael Johnson, *புலமைச்சொத்துச் சட்டக்கோவை: வியாபாரத்தில் புலமைச் சொத்துரிமைகளை மீறுதலும் நேர்மையற்ற போட்டியும்* - Breach of Intellectual Property Rights & Unfair Competition in Trade *(கந்தையா நீலகண்டன்),* Rights and Duties of Illegitimate Children in Sri Lanka (Shemila Gunanathan), *மனித உரிமைகளை அங்கீகரிக்கும் நாடுகளிலேயே "சட்ட ஆட்சி" நிலவுகிறது (கே.ஜீ.ஜோண்) ஆகிய ஆக்கங்களை இம்மலர் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25203).*

**14318**

**நீதிமுரசு 1997**. *எம்.றிஸ்வி ஜவ்ஹர்ஷா (மலராசிரியர்). கொழும்பு 12: இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம், 244, ஹல்ஸ்டப் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48* B, *புளூமெண்டால் வீதி).*

*164 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5*x*19.5 சமீ.*

*இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 1997ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலரின் 33ஆவது இதழ் (12-09-1997) பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன், வாழியவே, அட்டையில் கண் பட்டவை (தயாள் சி.செபநாயகம்), ஒற்றுமை வேண்டும், மறவோம் மஃமூதை (எம்.பீ.எம். மாஹிர்), இறைவனின் இருப்பிடம் (மாணிக்கவாசகர் கணேசராஜா), நான் மனிதனாகவே மரணித்துப் போகிறேன் (சுவர்ணராஜா நிலக்ஷன்) ஆகிய கவிதைகளும், முத்தமிழ் வித்தகனுக்கு எமது சமர்ப்பணம், அவசரகாலச் சட்டத்தின் ஏற்பாடுகள் சம்பந்தமான தீர்ப்பொன்று (சீ.வீ.விக்னேஸ்வரன்),* Federalism and devolution *(*K. C. *கனகசபேசன்), மனித உரிமைகள் இயக்கம்: 21ஆம் நூற்றாண்டின் சவால்கள் (நீலன் திருச்செல்வம்),*

பரந்து, விரிந்த சர்வதேசச் சட்டம் பற்றிச் சிறந்த ஓர் நேர்முகம், The Status of the Tamil Language (Ram balasubramaniam), Legal responses to Information Technology Crime (Kolitha Dharmawardena), Termination of an Offer (Y.Balasubramaniam), சட்ட மாணவர் தமிழ் மன்றம் தமிழ் பேசும் மாணவர்களின் வரலாற்றுச் சான்று (எம்.ஹில்மி ஆதம் லெப்பே), பிரச்சினையிலிருந்து சமாதானத்திற்கு (ப.ச.மௌலீஸ்வரன்), கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர் பற்றிய பூர்வாங்க விசாரணையில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறை விதிகள் (P.J.Anthony), Interview with the Minister of Ports Development Rehabilitation and Reconstruction. Mr. M. H. M.Ashraff at his residence at 11.30 a.m on 19th of August, 1997. Interviewed by: Dayaal. C. Sebanayagam, Rizvi Jawharsha, V. Sasitharan, Shafana Gul Begum Junideen Interview with the Minister of Justice, Constitutional Affairs National Integration Ethnic Affairs and Deputy Minister of Finance De. G. L. Peiris – Interviewed by Dayaal C.Sebanayagam, Rizvi Jawharsha), சங்கத் தமிழும் தங்கத் தமிழும் (சந்திரவதனி அர்ஜுனராஜா), தற்போதைய அரசியல் அமைப்பிலும், உத்தேச அரசியலமைப்பிலும் அடிப்படை உரிமைகள் ஒரு ஒப்பு நோக்கு (அ.பிரேமலிங்கம்), பெண்ணின் நிலை - நேற்று, இன்று, நாளை(H. M. F. ஷமிலா), நலன்புரி முகாம் (க.பிரபாகரன்), மனிதனை மனமே மனிதனாக்குகின்றது (A. R. Nilufar Jehan), உள்ளூராட்சி சபையின் மீது மத்திய அரசு கொண்டுள்ள கட்டுப்பாடுகள் (உடுதெனிய பரீக்தீன்), இலக்கியங்களில் பெண்கள் அவமதிக்கப்படுகின்றனரா? (செல்வி பரீஹா ஜலீல்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27120).

## 14319

**நீதிமுரசு 1999.** க.ஜெயநிதி (இதழாசிரியர்). கொழும்பு 12: இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம், 244, ஹல்ஸ்டப் வீதி, 1வது பதிப்பு, 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(28), 190 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19.5 சமீ.

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 1999ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலர் பல்வேறு தமிழ்க் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன், முகப்புக் கவிதை (இரா. செந்திற்குமரன்), சொல்லுந்திறமை தமிழ் மொழிக்கில்லை-கவிதை (இதழாசிரியர்), உரோம - டச்சுச் சட்டத்தின் இரு முக்கிய தீங்கியல் நிவாரணங்கள் (நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன்), The Thirteenth Amendment and the Devolution of Legislative Power ( K. C. Kamalasabayson), பிள்ளைகளுக்கு எதிராகச் செய்யப்படும் தீங்குகள் தொடர்பான இலங்கைச் சட்டங்கள் (எஸ்.துரைராஜா), The Legislative Framework of Local Authorities in Sri Lanka: Some Reflections (N. Selvakkumaran), மானிடப் புவியியல் சட்டவியல் - ஓர் அறிமுகம் (மாணிக்கம் சிவபாதம்), How could a better balance be achieved between development and environmental concerns in International Law Developments in the field of sustainable development? (Fatima Rita Chandravathana

Thalayasingam), உரித்துப் பதிவுச் சட்டம் (கந்தையா நீலகண்டன்), Computers, Information Technology, Information and Crime (Kolitha Dharmawardena), Jurisdiction as a vital and central feature of State Sovereignty (N.Sivakumaran), தமிழன் கண்ட அறம் (அ.ச.ஞானசம்பந்தன்), நிதியும் நீதியும் (சி.கணபதிப்பிள்ளை), An Interview with Prof. (Rev. Fr.) A. J. V. Chandrakanthan, Matrimonial Property of People Governed by Thesa Walamai (Miss. K.Nagendra), SriLanka Contribution to the Development of Tamil Language and Literature - A Review (Deshamanya S. Sharvananda), The Contents of Thesawalamai (Deshamanya Dr. H. W. Tambiah), வழக்குகளின் கால தாமதமும் அதில் நீதிபதிகளின் பங்கும் சட்டத்தரணிகளின் பங்கும் (அன்னலிங்கம் பிரேமலிங்கம்), இலங்கையில் நிலவும் சட்ட முறைமைக்குள் ஒரு சீர்த்தன்மையை ஏற்படுத்துவதற்கு இலங்கை மக்களுக்கு ஒரு பொதுச் சட்டக் கோவையின் அத்தியாவசியம் (செல்வி சந்திரவதனி அருச்சுனராஜா), இலங்கையின் அரசியலமைப்பு உருவாக்கமும் மதச் சார்பின்மையும்- ஓர் இடரார்ந்த மெய்த்தேர்வு (சுவர்ணராஜா நிலக்ஷன்), மரண தண்டனை அமுல்படுத்தப்படல் வேண்டும். (பரிஹா ஜலீல்), தீங்கியல் சட்டத்தின் தன்மையும் நோக்கெல்லையும் (அஹமட் எம்.ஹுசைன்), இலங்கையின் தேர்தல் முறை - நேற்று, இன்று, நாளை (எம். எம்.முஹம்மத் மிஹான்), மாகாணசபை தேர்தல் திகதி மாற்றம் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பு - ஓர் விமர்சனம் (ஐ.பயஸ் றெஸ்ஸாக்), மனோவின் டயரி-சிறுகதை (இரா.செந்திற்குமரன்), யாருக்கு யார் சுமை? (சு.பிரபாகரன்), சிறுகதை (அகிலன், மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன் விழா மலர்), Equality and Justice for all (Justice Shirani Tilakawardena), மேற்கை விஞ்சிய கிழக்கு கிரேக்கத்தை விஞ்சிய இந்திய அரசியற் தத்துவங்கள் (வி.ரி. தமிழ்மாறன்), Globalization and Human Rights (Tissa Balasuriya), இஸ்லாத்தில் சமூகநீதி (எம்.ஏ.எம். சுக்ரி), HER Commission (Dr. Mario Gomez), இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டமும் கைதுகளும் (கே.எஸ்.பாலகிருஷ்ணன்), Cultural and Language Rights in the Multi - National Society (A. Jeyaratnam Wilson) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45284).

## 14320

**நீதிமுரசு 2000**. ஐ.பயஸ் றெஸ்ஸாக் (மலராசிரியர்). கொழும்பு 12: இலங்கை சட்டக் கல்லூரி தமிழ் மன்றம், 244, ஹல்ஸ்டப் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2001. (கொழும்பு 6: பரணன் அசோஷியேட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 403, 1/1 காலி வீதி).

(26), 134 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x19.5 சமீ.

இலங்கைச் சட்டக் கல்லூரியின் சட்ட மாணவர் தமிழ் மன்றத்தின் 2000ஆம் ஆண்டுக்கான ஆண்டு மலரின் 36ஆவது இதழ் (10-02-2001) பல்வேறு தமிழ் ஆங்கிலக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆசிச் செய்திகள், வருடாந்த அறிக்கைகளுடன், சட்ட ஆட்சியும் ஜனநாயக விழுமியமும் (எஸ்.சர்வானந்தா), எமது நாட்டின் நோக்கில் (கே.கனக ஈஸ்வரன்), வாடகைச் சட்டம் (எஸ்.

குமாரசுவாமி), இலங்கையில் உரித்துப் பதிவுச் சட்டத்தின் அறிமுகம் (கே.அருள்), பராமரிப்புச் சட்டம்: ஒரு மீள்பார்வை (கா.பாக்கியலிங்கம்), பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் அவர்களுடனான கருத்துப் பரிமாறல், ஆட்கொணர்வு மனு: ஒரு நோக்கு (செ.செல்வகுணபாலன்), அவதூறு தொடர்பான பாதுகாப்புக்கள் (கே.ஜீ.ஜோன்), வழக்குரைகளின் திருத்தம் மீது ஒரு கண்ணோட்டம் (எம்.எஸ்.எம். சம்சுதீன்), நின்றிடுவாய் நெஞ்சில் நிலைத்து (இ.ஜெயராஜ்), பிணை தொடர்பான இலங்கைச் சட்டம் (ஏ. எல். அவ்பர்), எழுத்தாணைகள் (ஐ.பயஸ் றெஸ்ஸாக்), சொல்லக்கேட்ட சான்று என்பது என்ன (வீ.கௌசல்யா), தண்டனைச் சட்டக் கோவைக்கான அண்மைக் காலத் திருத்தங்கள் (க.ஜெயநிதி), நம்பிக்கைப் பொறுப்புச் சட்டம் கூறுவது என்ன? (எம்.ஹைதர் ஹசன்), ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் திருத்தமும் (B.M.றஸீன்), சட்ட வலிதுடைமையான கைது ஓர் ஆய்வு (ஷஹீனா மொஹம்மட்), அப்பா-சிறுகதை (ஏ.ஜீ.சிறீன்), நானிலம் மகிழச் செய்வோம் (ஆரிகா ஆதம்பாவா), பெண்கள் மீதான தேசவழமைச் சட்டம் (T.ஜெயரூபன்), The Legal Fight Against Computer Programme Piracy (D.M.Karunaratne), Legal Definition of Defective Goods (I.Nizam Razzaq), An Interview with Mr. Upali A Goonaratne, The Doctrine of Liberty in Islam (H.M.M.Baari) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28522).

## 340.59 இஸ்லாமியச் சட்டங்கள்

### 14321

**ரிஸானா நபீக்: மனச்சாட்சியின் படுகொலை.** A.B.M.இத்ரீஸ். வாழைச்சேனை 05: காகம் (உயிர்ப்பைத் தேடும் வேர்கள்) வெளியீடு, மஹ்மூட் ஆலிம் தெரு, 1வது பதிப்பு, 2013. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

2005ம் ஆண்டு, கிழக்கிலங்கையிலிருந்து சவுதி அரேபியாவில் வீட்டுப் பணிப்பெண்ணாகத் தொழில்பார்க்கச் சென்றவர் ரிசானா நபீக் என்ற பெண். கடவுச்சீட்டில் 1982இல் பிறந்ததாகக் குறிப்பிடப்பட்ட றிசானாவின் உண்மையான பிறந்த ஆண்டு 1988ஆகும். தொழில்வாய்ப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களினால் இவ்வூழல் செய்யப்படுவது இலங்கையில் வழமையானபோதிலும், ரிசானாவின் வாழ்வில் அதுவே மீளமுடியாத பொருந்தவறாகிவிட்டது. உண்மையில் 17வயதையே அடையாத அச்சிறு பெண்ணின் பொறுப்பிலிருந்த குழந்தை மூச்சுத்திணறி இறந்துவிட்டதால், அவர்மீது கொலைப்பழியேற்றி றிசானாவிற்கு சவுதி அரசின் இஸ்லாமிய சட்டப்படி அல் தவாத்மி சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, பின்னர் மரணதண்டனை வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் பகைப்புலத்தில் எழுந்த நூல் இது. ரிஸானா கொலை செய்யப்பட்ட சம்பவத்தை, அதன் பின்புலத்தை, அந்த வழக்கு நடந்த விதத்தை, இஸ்லாமிய மற்றும் சமூகவியல் கண்ணோட்டத்தில் ஆய்வுசெய்து இந்நூலை ஆசிரியர் எழுதியுள்ளார்.

## 341.23 ஐக்கிய நாடுகள் தாபனம்

### 14322

**இலங்கையில் ஐக்கிய நாடுகள்.** ஐக்கிய நாடுகள் தகவல் நிலையம். கொழும்பு: ஐக்கிய நாடுகள் தகவல் நிலையம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1995. (கொழும்பு 8: அரசாங்க அச்சுத் திணைக்களம், 118, பேஸ்லைன் வீதி).

(12), 56 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.

ஐக்கிய நாடுகளின் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வெளியீடு. முதலாம் பகுதியில், அறிமுகமாக, இலங்கையில் ஐக்கிய நாடுகள் பற்றிய பொது நோக்கு, ஐ.நா.செயலாளர் நாயகத்தினதும், இலங்கை வெளிவிவகார அமைச்சரினதும், ஐக்கிய நாடுகள் வதிவிட இணைப்பாளரினதும் செய்திகள் என்பன இடம் பெற்றுள்ளன. இரண்டாம் பகுதியில் இலங்கையில் அலுவலகங்களைக் கொண்டிருக்கும் அமையங்களும் முகவராண்மைகளும் பற்றிய தகவல்களும், இலங்கையில் வதிவிட அலுவலகங்களைக் கொண்டிராத முகவராண்மைகள் பற்றிய தகவல்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17160).

## 342 அரசியலமைப்புச் சட்டம்

### 14323

**அரசியலமைப்பு 2000: பாராளுமன்ற விவாதங்கள்.** இரா.தர்மகுலசிங்கம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 3: இன விவகார, தேசிய ஒருமைப்பாட்டு பிரிவு, நீதி அரசியலமைப்பு விவகார, இன விவகார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, 152, காலி வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xviii, 557 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: அளவு: 22x14.5 சமீ., ISBN: 955-8059-03-X.

2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 3ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கைக் குடியரசு அரசியலமைப்புச் சட்டமூலம், தேசிய நெருக்கடிக்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதற்கான நிலைபேறான அடிப்படையை உருவாக்கு வதற்கான முயற்சிகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிப்பதாக கருதப்பட்டது. இது தொடர்பான கலந்துரையாடல்கள் 2000 ஜுலை மாதம் வரை நடைபெற்றிருந்தது. அது தொடர்பான விவாதங்கள், ஆவணங்கள் என்பவற்றை இந்நூல் உள்ளடக்குகின்றது. டிலான் பெரேராவின் நன்றியுரை, ஜீ.எல்.பீரிஸின் முன்னுரை ஆகியவற்றைத் தொடர்ந்து இலங்கைக் குடியரசின் அரசியலமைப்புச்சட்டம் -2000, முதல் 242 பக்கங்களில் இடம்பெற்றுள்ளது. தொடர்ந்து பக்கம் 245 முதல் 554 வரை உறுப்பினர்களின் விவாதங்கள், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணப் பிரதிகள் என்பன இடம்பெற்றுள்ளன. தொகுப்பாசிரியர் குழுவில் எம்.சோமசுந்தரம், இரா.

தர்மகுலசிங்கம், எம்.ஐ.செய்யத் அஹமத் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24310).

### 14324

**அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான அரசாங்க ஆலோசனைகள்.** இலங்கை அரசாங்கம். கொழும்பு: நீதி, அரசியலமைப்பு அலுவல்கள், இன அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1997. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்).

vi, 259 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21.5 சமீ.

இதிலடங்கியுள்ள அரசும் இறைமையும் மக்களும், பௌத்த மதம், அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும், மொழி, பிரசாவுரிமை, அரச கொள்கைக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும், மத்திய நிறைவேற்றுத்துறை குடியரசின் சனாதிபதி, மத்திய நிறைவேற்றுத்துறை சனாதிபதியும், அமைச்சரவையும், மத்திய சட்டவாக்கத்துறை-பாராளுமன்றம், மத்திய சட்டவாக்கத்துறை -பாராளுமன்றம்-நடவடிக்கை முறையும் தத்துவங்களும், மத்திய மத்திய சட்ட வாக்கத்துறை -அரசியலமைப்புக்கான திருத்தம், மக்கள் தீர்ப்பு, வாக்குரிமையும் தேர்தல்களும், அரசியலமைப்புப் பேரவை, பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்குதல், அரச காணி, நீர்நிலைகள் மற்றும் கனிப்பொருள்கள், நீதித்துறை- நீதி நிர்வாகத்துக்கான நிறுவனங்கள், உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், பிராந்திய மேல்நீதிமன்றங்கள், நீதித்துறை- நீதித்துறைச் சுதந்திரம், நீதித்துறை- உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், பிராந்திய மேல்நீதிமன்றங்களின் நியாயாதிக்கம், பகிரங்க சேவைகள், நிதி, ஆகிய 21 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34486).

### 14325

**அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான அரசாங்க ஆலோசனைகள்.** இலங்கை அரசாங்கம். கொழும்பு: நீதி, அரசியலமைப்பு அலுவல்கள், இன அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1997. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்).

vi, 161 பக்கம், 6 அட்டவணைகள், விலை: ரூபா 60.00, அளவு: 24x18.5 சமீ.

இதிலடங்கியுள்ள அரசாங்கத்தின் ஆலோசனைகள், அரசும் இறைமையும் மக்களும், பௌத்தமதம், அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும், மொழி, பிரசாவுரிமை, அரச கொள்கை பற்றிய நெறிமுறைக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும், மத்திய நிறைவேற்றுத்துறை குடியரசின் சனாதிபதி, மத்திய நிறைவேற்றுத்துறை சனாதிபதியும், அமைச்சரவையும், மத்திய சட்டமன்றம்-பாராளுமன்றம், மத்திய சட்டமன்றம்-பாராளுமன்றம்-நடவடிக்கை முறையும்

தத்துவங்களும், மத்திய சட்டமன்றம்-அரசியலமைப்பைத் திருத்துதல், மக்கள் தீர்ப்பெடுப்பு, வாக்குரிமையும் தேர்தல்களும், அரசியலமைப்புப் பேரவை, பிராந்தியங்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கல், அரச காணி நீர்நிலைகள் மற்றும் கனிப்பொருள்கள், நீதித்துறை-நீதி நிர்வாகத்துக்கான நிறுவனங்கள், நீதித்துறை-நீதித்துறைச் சுதந்திரம், நீதித்துறை- உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் பிராந்திய மேல்நீதிமன்றங்களினதும் நியாயாதிக்கம், பகிரங்க சேவை, நிதி, பாதுகாப்பு தேசிய பந்தோபஸ்து சட்டம் அத்துடன் ஒழுங்கமைதி, பொதுமக்கள் பாதுகாப்பு, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர், பொது, நிலைபெயர்கால ஏற்பாடுகள், பொருள்கோடல், ஆரம்பமும் நீக்கமும் ஆகிய 28 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இறுதிப் பகுதியில் பிராந்தியங்கள், நிரல்கள் (ஒதுக்கிய நிரல், பிராந்திய நிரல்), தேசியக் கொடி, தேசிய கீதம், சத்தியம்-உறுதியிடுதல், அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்கள், அட்டவணைப்படுத்தப்பட்ட பிராந்திய பகிரங்க அலுவலர்கள் என்பன ஆறு அட்டவணைகளில் தரப்பட்டுள்ளன.

## 14326

**இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு: முதலாம் பாகம்.** இ.முத்துத்தம்பி. வட்டுக்கோட்டை: இ.முத்துத்தம்பி, பொருளியல் விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி, 1வது பதிப்பு, 1974. (யாழ்ப்பாணம்: கவின் அச்சகம், 122, நாவலர் வீதி).

viii, 270 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 5.95, அளவு: 22x14 சமீ.

இரு பாகங்களைக் கொண்ட இந்நூலின் முதலாம் பாகத்தில் யாப்பின் பின்னணி, யாப்பமை மன்றம், யாப்பின் முக்கிய அம்சங்கள், அடிப்படை உரிமைகளும் அரச கொள்கை நெறிகளும், தேசிய அரசுப் பேரவை-1 (அமைப்பு-அதிகாரம்), தேசிய அரசுப் பேரவை-2 (செயல்முறை-சிறப்புரிமை), நிர்வாகமும் அமைச்சரவையும் ஆகிய ஏழு அத்தியாயங்களில் இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு மாணவர்களுக்கு ஏற்றவகையில் எளிமையாக விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30723).

## 14327

**இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு: இரண்டாம் பாகம்.** இ.முத்துத்தம்பி. வட்டுக்கோட்டை: இ.முத்துத்தம்பி, பொருளியல் விரிவுரையாளர், யாழ்ப்பாணக் கல்லூரி, 1வது பதிப்பு, 1975. (யாழ்ப்பாணம்: திருமகள் அழுத்தகம், சுன்னாகம்).

viii, 271-567 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 5.95, அளவு: 21x14 சமீ.

இரு பாகங்களைக் கொண்ட இந்நூலின் இரண்டாம் பாகத்தில் பிரதம அமைச்சர், ஜனாதிபதி, அரச அலுவலர், நீதி பரிபாலனம், மதம்-மொழி-குடியுரிமை, தலத் தாபன ஆட்சி, அரசியற் கட்சிகளும் தன்னலத் தொகுதிகளும் ஆகிய அத்தியாயங்களில் இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு மாணவர்களுக்கு ஏற்றவகையில் எளிமையாக விளக்கப்பட்டுள்ளது. அனுபந்தங்களாக, தேர்தல்களில்

பாராளுமன்ற உறுப்பினர்கள், வாக்குகள், தலத்தாபன வருமானம்-1968, சுயேச்சையாளர் பற்றிய புள்ளிவிபரங்கள், பெருங்கட்சிகளுக்குக் கிடைத்த சதவீத வாக்குகள் என்பன விளக்கமாகத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30724).

## 14328

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு.** இலங்கை அரசாங்கம். கொழும்பு: அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகள், மீள்பதிப்பு, 2002, 2வது பதிப்பு, டிசம்பர் 1988, 1வது பதிப்பு, 1978. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்).

145+110 பக்கம், விலை: ரூபா 170.00, அளவு: 24x15.5 சமீ.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்அரசியலமைப்பும், 2002வரையிலான 16 திருத்தங்களும் உள்ளடக்கப்பட்ட பிரசுரம். இதில் மக்கள், அரசு, இறைமை/ பௌத்த மதம்/ அடிப்படை உரிமைகள்/ மொழி/ பிரசாவுரிமை/ அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும்/ ஆட்சித்துறை: குடியரசின் சனாதிபதி/ ஆட்சித்துறை: அமைச்சரவை/ ஆட்சித்துறை: பகிரங்க சேவை/ சட்ட மன்றம்: பாராளுமன்றம்/ சட்ட மன்றம்: நடவடிக்கை முறையும் தத்துவங்களும்/ சட்ட மன்றம்: அரசியலமைப்பைத் திருத்துதல்/ மக்கள் தீர்ப்பு/ மேனிலை நீதிமன்றங்கள்: உயர்நீதி மன்றம்/ நிதி/ பொது மக்கள் பாதுகாப்பு/ நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர்/ பொது/ நிலைமாறுகால ஏற்பாடுகள்/ பொருள்கோடல்/நீக்கம்/ அரசியலமைப்பினை பிரசித்தஞ் செய்தல் ஆகிய 24 பிரிவுகளில் அரசியலமைப்பின் பல்வேறு அம்சங்களும் தனித்தனியாக விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33039).

## 14329

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்: அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தம்.** இலங்கை அரசாங்கம். கொழும்பு: பாராளுமன்ற செயலகம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (கொழும்பு: அரசாங்க அச்சுத் திணைக்களம்).

59 பக்கம், விலை: 49.25, அளவு 21x15 சமீ.

இவ்வரசியலமைப்புச் சட்டத் திருத்தப் பதிப்பானது 2001, ஒக்டோபர் 03ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளது. 2001 ஒக்டோபர் மாதம் 5ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் இரண்டாம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33052).

### 14330

**சுதந்திரத்தை நோக்கிய அரசியல் திட்ட வளர்ச்சி.** வேலு உதயசேகர். சாமிமலை: வே.உதயசேகர், அறிவகம், 7/1, கோவில் லேன், ஓல்டன் மே.பி., 1வது பதிப்பு, மே 2016. (மஸ்கெலியா: விக்டோரியா அச்சகம்).

(8), 111 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-43194-0-0.

க.பொ.த. உயர்தரத்தில் அரசறிவியல் பாடத்தினைக் கற்கும் மாணவர்களின் பரீட்சை வினாத்தாளானது, பாட அலகு மற்றும் பாடரீதியான துறைசார் அறிவு, தேர்ச்சியினை மாணவர்களிடம் அளவிடுவதை நோக்காகக் கொண்டு அமைகின்றது. இந்நூல் அத்தகைய தேர்ச்சியினை ஏற்படுத்துவதைப் பிரதான நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. உள்ளடக்கப்பட்ட மாதிரி வினாக்கள், அரசியல் திட்ட அறிமுகம், கோல்புறூக் சீர்திருத்தம், குறுமக்கலம், மனிங் அரசியல் சீர்திருத்தம், மனிங் டெவன்சயர், டொனமூர் (வினா-விடை), சோல்பரி (வினா விடை), 1947 நாமநிர்வாகியின் அதிகாரம் (வினா விடை), சோல்பரியின் சட்டவாக்கத்துறை (வினா-விடை), தேசிய இயக்கம் (வினா-விடை), யாப்புக் கட்டமைப்பு, சமய மறுமலர்ச்சி இயக்கம், இலங்கை இடதுசாரி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும், மாபெரும் அக்டோபர் புரட்சி, 1954 தனிச்சிங்களச் சட்டம், உசாத்துணை நூல்கள் ஆகிய 16 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65126).

## 344.01 தொழில் சட்டங்கள்

### 14331

**தொழில் சட்டங்கள்: இலகுவான முறையில்.** சாறுக்க சமரசேகர. கொழும்பு 3: நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டம், 4ஆவது மாடி, இல. 310, காலி வீதி, 1வது பதிப்பு, 2008. (மஹரகம: தரஞ்ஜி பிரிண்ட்ஸ், இல. 506, ஹைலெவல் வீதி, நாவின்ன).

viii, 64 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-08-05.

இந்நூலில் இலங்கையில் தொழிற் சட்டத்தின் வரலாறு, இன்றைய இலங்கையில் தொழில் சட்டம், 1935இன் 14ஆம் இலக்க தொழிற்சங்கங்களின் கட்டளைச் சட்டம், 1941இன் 27ஆம் இலக்க சம்பளச் சபையின் கட்டளைச் சட்டம், 1954இன் 19ஆம் இலக்க வியாபார நிலையம் மற்றும் அலுவலக ஊழியர் சட்டம், 1950இன் 43ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குச் சட்டம், 1958இன் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், 1980இன் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம், 1983இன் 12ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தும் சட்டம், தொழில் திணைக்களம் மற்றும் அத்திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் ஆகிய பத்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 344.032 சிறுவர் பாதுகாப்புச் சட்டம்

### 14332

**பிள்ளையின் உரிமைகள் மீதான பட்டயம் (Children's Charter).** *புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக சேவை அமைச்சு. கொழும்பு: புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக சேவை அமைச்சும் சிறுவர் நல்லொழுக்க விசாரணைத் திணைக்களமும், 1வது பதிப்பு, 1991.* (Colombo: Aitken Spence Printing, 90, St. Rita's Estate, Mawaramandiya, Siyambalape).

20+21+25 *பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28.5*x*21 சமீ.*

*இலங்கையிலும் அவ்வப்போது சிறுவர் பாதுகாப்புக் குறித்து பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. 18 வயதுக்கு உட்பட்டவர்கள் சகலருமே சிறுவர்களாக அடையாளப்படுத்தப்பட்டு உறுதிசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சிறுவர், சிறுமியர்களை பாதுகாப்பதற்கும், சிறுவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமைகள் பட்டயத்தை உருவாக்கியது. 1958 இல் ஐ.நா. சபை சிறுவர் உரிமைப் பட்டயத்தை பிரகடனம் செய்தது. 1989 நவம்பர் 09 இல் சிறுவர் உரிமை சாசனம் மீளவும் வலியுறுத்தப்பட்டது. 1991 ஆம் ஆண்டு இலங்கை அரசாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2002 இல் ஐ.நா. மனித உரிமை அமையம் நிறைவேற்றிய 1325 ஆவது தீர்மானம் போர்ச் சூழலில் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 38801).*

**மேலும் பார்க்க: காடு சார்ந்த மேட்டுநிலக் கமத்தொழிலை... 14284**

## 345 குற்றவியல் சட்டம்

### 14333

**1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை.** *இலங்கை அரசாங்கம். கொழும்பு 5: அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டு அலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2016. (கொழும்பு 8: அரசாங்க அச்சுத் திணைக்களம், 118, பேஸ்லைன் வீதி).*

*397+14 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 625.00, அளவு: 24*x*15 சமீ.*

*குற்றவியல் நீதிமன்றங்களின் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கும், 1973ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க, நீதி நிருவாகச் சட்டத்தின்* IIஆம் IVஆம் *அத்தியாயங்களை நீக்குவதற்கும், தொடர்புபட்ட கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டமாகும். இது நியதிச்சட்ட முறை மறுபதிப்புக் கட்டளைச் சட்டத்திற்கு (அத்தியாயம் 4), இணங்க நீதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளையின் அதிகாரத்தின் கீழ் அரசாங்க அச்சகத்தினரால் பதிப்பிக்கப்பெற்றதும், 2016, ஜனவரி 1ஆம் நாளன்று வலுவிலிருந்த சட்டத்தைத் தருவதும் 2006இன்*

7ஆம் இலக்கச் சட்டத்தால் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கியதுமாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65699).

## 350 பொது நிர்வாகம்

### 14334

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவை: 2ஆம் தொகுதி.** பி.ஏ.சேனாரட்ண (செயலாளர்). கொழும்பு: செயலாளர், அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, 3வது பதிப்பு, 2019, 2வது பதிப்பு, 2018, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1999. (கொழும்பு 8: அரசாங்க அச்சுத் திணைக்களம், 118, பேஸ்லைன் வீதி).

vi, 100 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 200., அளவு: 24x18 சமீ.

தாபன விதிக்கோவையின் இத்தொகுதி, பொது நடத்தையும் ஒழுக்கமும் (அத்தியாயம் xlvii), ஒழுக்காற்று நடவடிக்கை முறை பற்றிய ஒழுங்குகள் (அத்தியாயம் xlviii), அரச அலுவலர்களினால் புரியப்படும் குற்றங்கள் பற்றிய முதலாவது அட்டவணை, அரச அலுவலர்களினால் புரியப்படும் குற்றங்கள் பற்றிய இரண்டாவது அட்டவணை, பின்னிணைப்புகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. தாபன விதிக்கோவையின் இத்தொகுதி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 41,51,52,54 மற்றும் 144(1) ஆம் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அரச அலுவலர்களும், தரைப்படை, கடற்படை, வான்படை உறுப்பினர்களும் தவிர்ந்த ஏனைய அரச அலுவலர்கள் அனைவரினதும் ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்கு ஏற்புடையதானதாகும். இத்தொகுதியில் அடங்கிய ஏற்பாடுகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 55(4)ஆம் சட்டத்தின் பிரகாரம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தற்போது உபயோகத்திலுள்ள 1981.04.08ஆந் திகதிய 11ஆம் தொகுதிக்குப் பதிலாக இப்புதிய 11ஆந் தொகுதி 1999 நவம்பர் மாதம் 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65694).

### 14335

**நவீனமயப்படுத்தல்.** இஷானி கொல்லுரே. பத்தரமுல்ல: தேசிய உற்பத்தித் திறன் செயலகம், அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு, பத்தாம் மாடி, செத்சிரிபாய இரண்டாவது கட்டம், பத்தரமுல்ல, 1வது பதிப்பு, டிசம்பர் 2017. (நீர்கொழும்பு: சாந்தி அச்சகம், இல. 71/25, சென் ஜுட் பிளேஸ், கடோல்கலே).

128 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-1378-21-9.

தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தின் நவீனமயப்படுத்தல் பிரிவின் உதவிப் பணிப்பாளர் இஷானி கொல்லுரே அவர்கள் தயாரித்துள்ள இந்நூல், நவீனமயப் படுத்தலை அறிமுகம் செய்தல், நவீனமயப்படுத்தலுக்கான வகைகள், அரச சேவை நவீனமயப்படுத்தல், உலக நவீனமயப்படுத்தல் நூற்றாண்டு மற்றும் நவீனமயப் படுத்தல் கொள்கை, அரச சேவை நவீனமயப்படுத்தல் ஜனாதிபதி விருது போட்டித் தொடர் ஆகிய ஐந்து அத்தியாயங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அபிவிருத்தி யடைந்த ஒரு இலங்கையை உருவாக்கும் அலுவலில் ஈடுபட்டுள்ள தேசிய உறபத்தித் திறன் செயலகம் இலங்கையின் சகல துறைகளினதும் நவீனமயப் படுத்தலுக்கான அபிவிருத்தியைச் செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதற்கான பல வேலைத்திட்டங்களைத் தயாரித்துவருகிறது. அவற்றில் ஒன்றாக 2017ஆம் ஆண்டு தொடக்கம் அறிமுகப்படுத்தப்படும் அரச சேவை நவீனமயமாக்கல் ஜனாதிபதி விருது போட்டி அமைந்துள்ளது. நவீனமயமாக்கல் பற்றிய அறிவை ஏற்படுத்துவதற்கும் வாசகர்களுக்குள் நவீனமயமாக்கலை உருவாக்குவதற்கான ஊக்குவிப்பினை ஏற்படுத்துவதற்கும் வழிவகுப்பதே இந்நூலின் நோக்கமாகும்.

## 14336

**பிரதேச செயலகமும் பொது மக்களுக்கான சேவைகளும்-ஓர் அறிமுகம்.** சிவலிங்கம் புஷ்பராஜ், நயினாமலை முரளிதரன். கொழும்பு: மலையகப் பட்டதாரிகள் சமூகம், 1வது பதிப்பு, ஜுன் 2014. (கொழும்பு 12: காயத்திரி அச்சகம், J.L.G.4 டயஸ் பிளேஸ்).

xxiv, 171 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-41479-0-4.

நூலாசிரியர்களில் சிவலிங்கம் புஷ்பராஜ் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தராக கினிகத்தேனை, அம்பகமுவ பிரதேச செயலகத்தில் பணியாற்றுகின்றார். நயினாமலை முரளிதரன் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக மாத்தளை, இரத்தோட்டை பிரதேச செயலகத்தில் பணியாற்றுகின்றார். பிரதேச செயலகங்களின் வாயிலாக பொது மக்கள் தமது தேவைகளை பூர்த்திசெய்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு போதிய அறிவூட்டும் நல்நோக்கத்ததுடன் இந்நூல் பல்வேறு முக்கியமான தகவல்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுத் துறை நிர்வாகம், பிரதேச செயலாளர், நிர்வாகப் பிரிவு, பிறப்பு-இறப்பு மற்றும் திருமணப் பதிவாளர் பிரிவுகள், சமூக சேவைகள் பிரிவு, வெளிக்கள உத்தியோகத்தர் பிரிவு, கணக்காளர் பிரிவு, காணி மற்றும் அனுமதிப்பத்திரப் பிரிவு, அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளல், கிராம பிரிவுகள் மட்டத்திலான உத்தியோகத்தர்கள் என பத்துப் பெரும் பிரிவுகளின் கீழ் அவர்களின் கடமைகள், அவர்களின் மூலம் பொதுமக்களுக்கு ஆற்றப்பட வேண்டிய பணிகள் பற்றி விரிவான தகவல்களை இந்நூல் தருகின்றது.

## 14337

**மக்கள் சேவையில் ஈராண்டு.** மலர்க்குழு. வவுனியா: வவுனியா நகர சபை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1996. (கொழும்பு 2: வெட் பிரின்ட், 96, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை).

(2), 68 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

வவுனியா நகரசபை இயங்கிய இரண்டாண்டுக் காலப்பகுதியான 04.04.1994 முதல் 03.04.1996 வரையிலான நிர்வாகக் காலத்தில் அதன் சமூகப் பணிகள் பற்றிய புகைப்பட ஆவணங்களுடன் கூடிய மக்கள் அறிக்கையாக இம்மலர் வெளிவந்துள்ளது. ஈராண்டுக் காலத்தில் இச்சபை சுகாதாரம், சூழல் பாதுகாப்பு, வீதித் திருத்தங்கள், கலை-கலாசாரம், சமூக சேவைகள் என்பன தொடர்பாக ஆற்றிய பணிகளை சிறு அளவில் இவ்விதழ் வெளிக்கொணர்கின்றது. இம்மலரின் வெளியீட்டுக் குழுவில் பிரதம இலிகிதர் இரா.லோகநாதன், எழுதுநர்களான ச.விஜயதாஸ், வே.வசந்தகுமார், செல்வி ப.பத்மலீலா, செல்வி சு.சோதிநாயகி, சூழல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் செல்வி த.தனுசினி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 15066).

### 14338

**மக்கள் சேவையில் மூன்று ஆண்டுகள்**. சோதீ மணிவண்ணன் (இதழாசிரியர்). வவுனியா: வவுனியா நகர சபை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (கொழும்பு 2: வெட் பிரின்ட், 96, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை).

(6), 76, (24) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21 சமீ.

வவுனியா நகரசபை இயங்கிய ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியான 04.04.1994 முதல் 04.04.1997 வரையிலான நிர்வாகக் காலத்தில் அதன் சமூகப் பணிகள் பற்றிய புகைப்பட ஆவணங்களுடன் கூடிய மக்கள் அறிக்கையாக இம்மலர் வெளிவந்துள்ளது. இம்மலரின் வெளியீட்டுக் குழுவில் வி.எஸ்.எஸ்.செல்வராஜா, சு.விஜயதாஸ், வே.வசந்தகுமார், திருமதி சோதீ மணிவண்ணன், செல்வி சு.ராதிகா ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34506).

### 14339

**மக்களில் முதலீடு செய்தல்: நிறுவனத்தைக் கட்டியெழுப்புதலும் மனிதவளமும்: முன்னேற்ற அறிக்கை 1991**. உள்நாட்டலுவல்கள் அமைச்சு. கொழும்பு: பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, 1991. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

71+72+82 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை. பொது நிர்வாகத்துறை, மாகாணசபை, உள்நாட்டு விவகார அமைச்சு, அதிகாரப் பரவலாக்கல் முகாமைத்துவமும் உள்ளூராட்சிச் சபைகளைப் பலப்படுத்துதலும், மாகாண சபைகள் அமைச்சின் காரியாலயம், பன்முகப்படுத்தல்

முகாமைத்துவம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, அரசாங்க சேவை முகாமைத்துவம், ஸ்தாபன நிர்மாணத்துக்கு தொழில்துறை முயற்சி அணுகுமுறை, பதிவாளர் நாயக திணைக்களம், மொழிகளின் ஊடாக தேசிய இயக்கம் அரச கரும மொழித் திணைக்களம், கிராம வறியவர்களில் முதலீடு, கிராமிய அபிவிருத்திப் பயிற்சியும் ஆராய்ச்சி நிலையமும் ஆகிய எட்டு இயல்களை இவ்வறிக்கை கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 48324).

## 360 சமூக சேவை நிறுவனங்கள்

### 14340

**இளந்தளிர்-6**. சுதாகரன் ரஜிதா, வ.கபிலன். யாழ்ப்பாணம்: கந்தையா கனகம்மா நிதியம், 1வது பதிப்பு, ஜனவரி 2017. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, B.A.தம்பி ஒழுங்கை).

(4), xx, 106 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

தெளிந்த அறிவும் துணிவும் தம் மக்கள் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் இப்பிரதேச மாணவர்களும் மக்களும் தத்தம் சிந்தனையில் ஊற்றெடுக்கும் படைப்புக்களையும், இலக்கியவாதிகளின் கருத்துக்களையும் சேர்த்துத் தொகுத்து, கந்தையா கனகம்மா நிதியம், “இளந்தளிர்” என்ற தொடர் இதழின் வாயிலாகப் பதிவுசெய்து விநியோகித்து வருகின்றது. அவ்வகையில் வெளிவந்துள்ள ஆறாவது இதழ் இதுவாகும். இவ்விதழில் இப்பிரதேசத்தின் சான்றோனாகிய திரு. மு. கந்தப்பிள்ளை அவர்களின் புகைப்படத்தை அட்டைப்படமாக தேர்ந்துள்ளனர். மேலும், பல்வேறு போட்டிகளில் பரிசுபெற்றவர்களின் விபரங்களுடன் பொதுத் தேர்வுகளில் சிறப்புச் சித்தி எய்திய தம் பிரதேச மாணவர்களின் விபரங்களையும் சேர்த்து கௌரவித்துள்ளனர். வாழ்த்துச் செய்திகள், நிதிய அறிக்கைகள், பலவினக் கட்டுரைகள் என்பன இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றுள், செல்லப்பா சுவாமிகள், கற்றாங்கு வாழ்தல் நன்றே, மரங்களும் மண்ணின் மைந்தர்களும், எழுவோமடா தம்பி, சந்திரன், அப்பா, தலைவராவோம், கசடறக் கற்போம், நோயின்றி வாழ்வோம், வாசிப்போம் வாருங்கள், மரங்கள் வளர்ப்போம், எண்ணும் எழுத்தும் கற்றிடுவோம், வீட்டுச் சூழலை கற்றற் சூழலாய் மாற்றுவோம், கிராமத்து நிலமும் மனிதர்களும், ஆங்கிலக் கல்வி-ஒரு ஆய்வு நோக்கு, கிராமங்களில் பொருளாதாரம், கல்வி, ஒழுக்கம் என்பவற்றைக் கட்டியெழுப்புதல், குடும்பம் குதூகலமானதா?, எழில் கொஞ்சும் சுவிட்சர்லாந்து, சந்தோஷம் தரும் சயிக்கிள் சவாரி போவோம் ஆகிய கட்டுரைகளும் உள்ளடங்குகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 63631).

### 14341

**சேர்ந்து உழைத்தலில் சுய அபிவிருத்தி.** ஏ.ரி.ஆரியரத்ன. மொறட்டுவை: இலங்கை தேசிய சர்வோதய சிரமதானச் சங்கம், தலைமை அலுவலகம், மெத்மெதுர, 77, டி சொய்சா வீதி, 1வது பதிப்பு, 1976. (கொழும்பு: சீ.என்.பீ. பிரஸ்).

14 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இலங்கை சர்வோதய இயக்கத்தின் அமைப்புச் செயலாளரும், கௌரவ இயக்குநருமான ஏ.ரீ. ஆரியரத்ன அவர்கள் 'Co-operation with a view to Self -Development" என்ற தலைப்பில் எழுதிய ஆங்கிலக் கட்டுரை ஒன்றின் தமிழாக்கம் இது.

### 14342

**புன்னாலைக்கட்டுவன் கணேச சனசமூக நிலையம்: கட்டடத்திறப்பு விழா சிறப்பு மலர் 15.12.2002.** ம.துஷ்யந்தன் (மலர்த் தொகுப்பாசிரியர்). புன்னாலைக்கட்டுவன்: கணேச சனசமூக நிலையம், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, 1வது பதிப்பு, 2002. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர்).

vi, (4), 50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்திகளுடன் வெளிவந்துள்ள இச்சிறப்பு மலரில் கணேச சனசமூக நிலையத் தலைவரின் இதயத்திலிருந்து, கணேச சனசமூக நிலையத்தின் வரலாறு (1946-1996 வரை), கணேச சனசமூக நிலையத்தின் செயற்பாடுகள் (1996இன் பின்), எமது கிராமத்தின் பொது நிறுவனங்கள், கணேச சனசமூக நிலையமும் நானும்-சில நினைவுக் குறிப்புகள், அது ஒரு பொற்காலம், வித்துவசிரோமணி சி.கணேசையர், சனசமூக நிலையங்களும் முன்பள்ளிகளும் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கருத்துரைகளும் இடம்பெற்றுள்ளன.

### 14343

**மலாய இலங்கையர் சங்கம் (இலங்கை) யாழ்ப்பாணம்: வெள்ளி விழா 1962.** ஆர். நாகரட்ணம் (பிரதம ஆசிரியர்), ஏ.நாகலிங்கம் (உதவி ஆசிரியர்), ஈ.சபாரத்தினம் (உதவி ஆசிரியர்). யாழ்ப்பாணம்: மலாய இலங்கையர் சங்கம், 1வது பதிப்பு, 1962. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், பிரதான வீதி).

xxx, 112 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

இம்மலரில், ஆசியுரைகள் வாழ்த்துரைகளுடன், A Short History of the Malayan Ceylonese Association Jaffna (V.K.சின்னையா), Pioneers from Jaffna in the Development of Malaya (N.சுப்பிரமணியம்), Malaya and Singapore Island and the Ceylonese (R.நாகரத்தினம்), Ceylon and Malaya (சுவாமி சத்தியானந்தா), A Namaskar to the Past (S.துரைராஜசிங்கம்), Our Bread Winners of the East – Argus, The Hindu Civilization of Malaya (C.F.Andrews), Ceylon and the Malayan Ceylonese (R.நாகரத்தினம்), Mahajanan

Malayan Trip *(*T.T.*ஜெயரத்தினம்),* My Impressions of the Ceylonese in Malaya – *(*I.P.*துரைரத்தினம்),* Impressions of Malaya (H.Peto), Relections on Malaya *(*E.M.*பொன்னுத்துரை),* Regularisation of the Status of a Citizen by a Person Born in the Federation of Malaya or in Singapore and Resident in Ceylon *(*V.*சரவணமுத்து),* Land Tenure in the Federation of Malaya *(*K.*பொன்னையா),* The Religion of the Tamils – *(*A.*விஸ்வலிங்கம்),* Visit to Malaya (H.Peto), Malayan income Tax *(*T.*செல்லப்பா),* Merdeka Crest in Ceylon, Widows and Orphans Pension Fund *(*R.*நாகரத்தினம்),* The Selangor Ceylon Tamils Association Kuala Lumpur *(*Mr.A.*ஆறுமுகம்),* The Selangor Ceylon Saivites Association Kuala Lumpur *(*A.*செவ்வந்திநாதன்),* The Vivekananda Ashrama *(*K.*சிவப்பிரகாசம்),* The Jaffna Co - Operative Society Ltd *(*M.*கனகசபை), மலாயன் சைவசித்தாந்த சங்கம் குவாலலம்பூர் (சீ.தம்பையா), மலாய இலங்கையர் சங்கம் (அ.நாகலிங்கம்), மலாய இலங்கையர் சங்கம் இயன் மொழி வாழ்த்து, நமது சிந்தனைக்கு உரியன (ச.பொன்னுஸ்வாமி), உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் (அ.நாகலிங்கம்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும், மலாய-இலங்கையர்கள் சிலரான* A.E.*துரைசாமி, கேட் முதலியார் வி.பொன்னம்பலம்,* W.*பொன்னத்துரை,* K.*ஆறுமுகம்,* T.*ராஜசுந்தரம்,* S.*சின்னத்தம்பி,* A.*தம்பிராஜா,* V.K.*சின்னையா,* S.*வேலுப்பிள்ளை,* Dr.E.*மக்கின்டையர்,* R.*நாகரட்ணம்,* V.*சரவணமுத்து,* S.*ராஜா,* K.*பொன்னையா,* K. *வில்லியம்,* M.K. *முருகேசு,* A. *நாகலிங்கம்,* T.*நல்லதம்பி,* E.*சபாரத்தினம்,* S.*சீனிவாசகம்,* S.*செல்வநாயகம்,* M.*சேநாகரத்தினம்,* S.*தில்லையம்பலம் ஆகியோர் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளும் அவரவர் பெயர்களின் கீழ் தரப்பட்டுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42102).*

## 14344

**முள்ளிவாய்க்கால் பதிவுகள் Stories of Mullivaikkaal.** *அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம். யாழ்ப்பாணம்: அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம், இல. 70, மணல்தரை ஒழுங்கை, திருநெல்வேலி, 1வது பதிப்பு, மே 2018. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*126 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.*

*அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையத்தின் இச்செயற்றிட்டம் இறுதி யுத்தத்தின் பேரழிவுக்கு முகம்கொடுத்த மக்களின் அனுபவங்களையும் அவர்களை வெறுமனே பாதிக்கப்பட்டோர் என்ற கோணத்தில் அணுகாமல் அவர்களின் சுயத்திற்கு மதிப்பளித்து அப்பேரழிவிலிருந்து அவர்கள் மீண்டு வருவதில் எதிர்நோக்கும் சவால்கள், போராட்டங்களையும், அவற்றை எதிர்கொள்ளும் அவர்களின் ஓர்மத்தையும் பதிவுசெய்ய முயற்சிக்கின்றது. இத்தொடரானது போரின் இறுதி நாட்களில் தப்பிப் பிழைத்தோரின் போராட்டங்கள் மற்றும் மீண்டெழும் ஓர்மம் தொடர்பான விழிப்புணர்வைக் கொண்டுவருகின்றது. போரினால் பாதிப்புற்ற மக்களுக்கு உதவுவது தொடர்பிலான பரந்த கருத்தாடலுக்கு*

இது வழிவகுக்கின்றது. இதிலுள்ள கதைகள் அரைக் கட்டமைக்கப்பட்ட (semi-structured) நேர்காணல் முறைமூலம் பெறப்பட்டவை. இக்கதைகள் நேர்காணலில் பெறப்பட்ட தகவல்களுக்கு உண்மையாக இருப்பதுடன் எதுவிதமான தகவல்களோ கற்பனைகளோ சோடனைகளோ சேர்க்கப்படவில்லை. முதல் ஒன்பது நேர்காணல்களும் ஆங்கில மொழிமாற்றம் செய்யப்பட்டவை. பின்னைய ஒன்பது நேர்காணல்களும் தமிழ்மொழி மூலத்தில் தரப்பட்டுள்ளன. ஷாலினியின் கதை, வாசுகியின் கதை, கமலாவின் கதை, சாந்தியின் கதை, சிவநாதனின் கதை, தீபாவின் கதை, மேரியின் கதை, அன்னலட்சுமியின் கதை, மீராவின் கதை ஆகியவை இந்நூலில் பதிவுக்குள்ளாகியுள்ளன. முள்ளிவாய்க்கால் பதிவுகள் செயற்றிட்டமானது தர்ஷா ஜெகதீஸ்வரன், அனுஷானி அழகராஜா ஆகியோரினால் வடிவமைக்கப்பட்டு, திட்டமிடப்பட்டதுடன், பேரழிவினூடாக வாழ்ந்தவர் களுடனான நேர்காணல்களும் அவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டன. தர்ஷா ஜெகதீஸ்வரன் கீர்த்திகா உமாசுதன் ஆகியோர் நேர்காணல்களுக்கு எழுத்துரு வழங்கியுள்ளனர். இவற்றை திருத்துவதிலும் இற்றைப்படுத்துவதிலும் அபிநயா குமரகுருநாதன், அகில் குமாரசுவாமி ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். தேவைப்படும் இடங்களில் விளக்கப்படங்களை ஷிபானி சிவநாயகம், சிந்து சிவயோகம் ஆகியோர் வரைந்தளித்துள்ளனர்.

## 362.4 மாற்றுத்திறனாளிகளும் சேவைகளும்

### 14345

**வலு: காலாண்டிதழ் வெள்ளி மலர்: 25வது சிறப்பிதழ்.** *க.தர்மசேகரம் (பிரதம ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கருவி: மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம், இல. 1166/15, அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, 1வது பதிப்பு, மார்ச் 2020. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*96 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 25x17.5 சமீ., ISBN: 978-955-23-0019-3, ISSN: 2513-2989.*

*மாற்றுத் திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி வெளிவரும் "வலு" காலாண்டுச் சஞ்சிகையின் ஜனவரி-மார்ச் 2020 இதழ், 25ஆவது இதழாக வெளி வந்துள்ளது. பிரதம ஆசிரியராக க.தர்மசேகரம் அவர்களும், நிர்வாக ஆசிரியராக நா.கீதாகிருஷ்ணன் அவர்களும், ஆசிரியர் குழுவில் செ.சசிராஜ், ச.க.தேவதாசன், செ.பிரிந்தாபரன், திருமதி சு.சுபோதினி, திருமதி இ.ஸ்ரீரங்கநாயகி ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். இதழ் குழுவின் ஆலோசகராக கணபதி சர்வானந்தா பணியாற்றியுள்ளார். தமிழ்ச் சஞ்சிகை வரலாற்றில், மாற்றுத் திறனாளிகள் தொடர்பான செய்திகளையும் தகவல்களையும் வாசகர்கள் மத்தியில் கொண்டு சேர்க்கின்ற ஒரு சிறப்பான தனித்துவத்தை "வலு" தன்னகத்தே கொண்டுள்ளது.*

## 362.7 சிறுவர் பராமரிப்பு

### 14346

**குழந்தைகளும் வாழ்வும்.** A.B.M. இத்ரீஸ் (பதிப்பாசிரியர்). வாழைச்சேனை 05: காகம் (உயிர்ப்பைத் தேடும் வேர்கள்) வெளியீடு, மஹ்மூட் ஆலிம் தெரு, 1வது பதிப்பு, 2012. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

ix-10-304 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-4644-14-4.

இந்நூல் குழந்தைகளும் உடல் ஆரோக்கியமும் (குழந்தைகளும் உணவும், குழந்தைகளும் நோயும், குழந்தைகளும் விசேட தேவையும், குழந்தைகளும் பாலியலும், குழந்தைகளும் கழிவகற்றலும், குழந்தைகளும் படுக்கையில் சிறுநீர் கழிப்பதும்), குழந்தைகளும் உளஆரோக்கியமும் (குழந்தைகளும் தூக்கமும், குழந்தைகளும் பயமும், குழந்தைகளும் பாசமும்), குழந்தைகளும் கல்வியும் (குழந்தைகளும் கல்வியும், குழந்தைகளும் வீட்டுப் பாடசாலையும், குழந்தைகளும் வகுப்பறையும், குழந்தைகளும் கேள்வியும், குழந்தைகளும் கதைகளும், குழந்தைகளும் சினிமாவும், குழந்தைகளும் கணனியும், குழந்தைகளும் சுற்றுலாவும், குழந்தைகளும் கணிதமும், குழந்தைகளும் டிஸ்லெக்சியாவும்), குழந்தைகளும் திறன் விருத்தியும் (குழந்தைகளும் மொழியும், குழந்தைகளும் அசைவும், குழந்தைகளும் இசைவும், குழந்தைகளும் நொடியும், குழந்தைகளும் அரங்கும், குழந்தைகளும் கருவிகளும், குழந்தைகளும் கிறுக்கல்களும்), குழந்தைகளும் விளையாட்டும் (குழந்தைகளும் விளையாட்டும், குழந்தைகளும் பொம்மையும்), குழந்தைகளும் சமூகமும் (குழந்தைகளும் தேசபக்தியும், குழந்தைகளும் உரிமையும், குழந்தைகளும் உலகமயமாக்கலும், குழந்தைகளும் அரசியலும்), குழந்தைகளும் பண்பாடும் (குழந்தைகளும் நம்பிக்கையும், குழந்தைகளும் நபியும், குழந்தைகளும் நோன்பும்), குழந்தைகளும் பிரச்சினைகளும் (குழந்தைகளும் பிரச்சினைகளும், குழந்தைகளும் விபத்தும், குழந்தைகளும் ஆடையும்) ஆகிய எட்டு அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது.

### 14347

**குழந்தைகளை வளர்க்காதீர்கள் வளரவிடுங்கள்.** எஸ்.குருபாதம். சென்னை 600098: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2018. (சென்னை 14: பாவை பிரின்டர்ஸ், 16 (142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை).

vii, 500 பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 450., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-93-8805-050-0.

ஒருவர் கருவாக இருந்து வளரும் போது அவருக்குள் சென்ற செய்திகள் என்ன? சிசுவாக, குழந்தையாக மனதில் பதிந்தவை என்ன? வளர, வளர உணர்ந்தவை என்ன? சிறு வயதில் தங்களைப் பற்றி இருந்த எண்ணம்தான் என்ன? அவர்கள் ஆர்வம் என்ன? அவர்களில் மறைந்துள்ள நுண்ணறிவு, ஆற்றல்கள் என்ன? இதற்கான விடையை அறிய முற்பட்டவேளையில் ஆசிரியர் சந்தித்த

அனுபவங்களை, வாசித்து அறிந்தவைகளை, தனது ஆய்வுகளைத் தொகுத்து எல்லோருக்கும் பொதுவான, அவசியமான "குழந்தைகளை வளர்க்காதீர்கள், வளரவிடுங்கள்," என்ற பெயரில் பெற்றோர், பாதுகாவலர்களுக்காக வெளியிட்டுள்ளார். சிறார்களைப் பற்றி, கருப்பையிலிருந்து ஒரு சிசுவின் குரல், குழந்தைகளின் குமுறல், குழந்தையின் தனித்துவம், குழந்தையிலிருந்து ஜனநாயகம் பிறக்கிறது, குழந்தைகளின் உரிமை, பிள்ளைகளை உணர்ச்சிமயமான கவசத்தை உடைத்து வெளியே வரவிடுங்கள், எதிர்கால வாழ்விற்கு ஆயத்தமாகும் குழந்தை, இயற்கையும் இயல்பும் இணைந்த பராமரிப்பு, பிள்ளை பராமரிப்பு ஆன்மீகம் போன்றதே, வீட்டை பிள்ளைக்கு ஏற்ற மாதிரியாக அமையுங்கள், ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் நிர்ணயிப்பது அவரவர் குழந்தைப் பராயமே, குழந்தைகளை அவர்களது சுதந்திரத்திலேயே இருக்க வழிகாட்டுங்கள் என இன்னோரன்ன 55 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 363 சுற்றாடல், சூழல் மாசுபடுதல்

### 14348

**சுற்றாடல் நிலைமை அறிக்கை: இலங்கை-2001.** *ஐக்கிய நாட்டுச் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம். தாய்லாந்து: ஐக்கிய நாட்டுச் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம், ஆசிய பசுபிக் பிராந்திய வள நிலையம், (*UNEP-RRC.AP*), அவுட்ரீச் பில்டிங்-தொழில்நுட்பத்துக்கான ஆசியன் நிறுவனம், த.பெ.எண் 4, கெலோங் லுவாங், பத்தும் தனி 12120, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2001. (கொழும்பு: கல்யாணி கிராப்பிக்ஸ்).*

*(10), 168 பக்கம், வரைபடங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ.,* ISBN*: 92-807-2016-3.*

*நிறைவேற்றுச் சுருக்கம், இலங்கையின் சுற்றாடல்-முழுமைப் பார்வை, பிரதான தேசிய சுற்றாடல் பிரச்சினைகள், முன்னோக்கு ஆகிய நான்கு பகுதிகளில் வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கை, பிரதான தேசிய சுற்றாடல் பிரச்சினைகளாக மண்ணரிப்பினால் நிலவளம் குன்றல், கழிவு அகற்றுதல், உண்ணாட்டு நீர் மாசுறுதல், உயிர்ப் பல்வகைமை குறைதல், கரையோர வளங்கள் குறைவடைதல் ஆகிய ஐந்து விடயங்களை அடையாளப்படுத்தி அறிக்கையிடுகின்றது. அனுபந்தங்களாக வரைவு படங்கள், தலைப்பு முதற் சொற்கள், குறியீடு, தேசிய சுற்றாடல் நிலை அறிக்கையின் அம்சங்கள், தேசிய சுற்றாடல் அறிக்கை பயிற்சி நிகழ்ச்சியில் பங்குபற்றியவர்களின் பட்டியல், தேசிய சுற்றாடல் ஆராய்ச்சியாளர் குழுக்கள், பங்குபற்றியவர்களின் பட்டியல், பங்களித்தவர்களின் பட்டியல் ஆகியவற்றை சேர்த்துள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35847).*

**மேலும் பார்க்க: நீலமும் பசுமையும் நிறைந்த நல்ல உலகம். 14541**

## 370 கல்வியியல்

### 14349

**அரசியலும் கல்வியும்.** *சபா.ஜெயராசா. கொழும்பு 11: சேமமடு பொத்தகசாலை,* U.G.50, People's Park, *1வது பதிப்பு, 2018. (கொழும்பு 11: சேமமடு பதிப்பகம்,* U.G.50, People's Park*).*

viii, *148 பக்கம், விலை: ரூபா 460., அளவு: 21*x*15 சமீ.,* ISBN: *978-955-685-141-0.*

*அரசியல், பொருளியல் பண்பாட்டியல், சமூகவியல், தொழில்நுட்பவியல், உளவியல், தத்துவவியல் முதலிய துறைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் சமகாலக் கல்வியில் பல்வேறு எழுவினாக்களை, விமர்சனங்களை முன்வைக்கின்றது. மேலும் பின்காலனியச் சூழலில் இனக்குழும அடையாளங்களை முன்னெடுத்தல் ஒரு முக்கிய செயற்பாடாகவும் மாற்றம் பெற்றுள்ளது. இந்நூல் அரசியலையும் கல்வியையும் ஒன்றிணைத்து புதிய நோக்கில் ஆராய்வதற்கான களங்களை இன்னும் தெளிவாக அடையாளம் காட்டுகின்றது. இதில் அரசியலும் கல்வியும், அரசியலும் கல்வியும் பிளேட்டோவும், மக்களாட்சியும் கல்வியும், மார்க்சியமும் கல்வியும், புதிய இடதுசாரி இயக்கமும் கல்வியும், அரசியலும் கல்வியும் போலோபிரேரியும், பூக்கோவின் நோக்கில் அரசியலும் கல்வியும், சிவில் சமூகமும் கல்வியும், தேசியவாதமும் கல்வியும், பின்நவீனத்துவமும் கல்வியும், பூகோள அரசியலும் கல்வியும், தேசிய இனக்குழுமமும் கல்வியும், தாராண்மைவாதமும் சமகாலக் கல்வியும், மொழிக் காலனித்துவம், அறிவும் அதிகாரமும், மனித உரிமைகளும் கல்வியும், கல்விக் கொள்கையாக்கம், பிரதேசவாதமும் கல்வியும், தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சி ஆகிய 19 தலைப்புகளில் விரிவாக எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 65003).*

### 14350

**ஆசிரிய வகிபாக விவரணம்.** *சத்திஸ்சந்திர எதிரிசிங்க (சிங்கள மூலம்), மு.துரைசாமி (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2018. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).*

*(17), 18-135 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *978-955-30-8620-4.*

*இலங்கையில் கடந்த பல தசாப்தங்களாக சமூகத்தில் வீழ்ச்சியடையும் கல்விநிலை, ஒழுக்கச் சீர்கேடுகள் என்பவை உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகள் தொடர்பாக ஆசிரியரின் வகிபாகம் பற்றி இந்நூல் ஆராய்கின்றது. ஒரு சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கும் உயர்ந்த சமூகப் பெறுமானங்களுக்கும் அச்சமூகத்தின் ஆசிரியர்களின் பொறுப்பு மிகவும் முக்கியமாகும் என்ற அடிப்படையில் இந்தச் சீர்கேடுகளை எவ்வாறு எதிர்காலத்தில் நாம் வெற்றிகரமாக எதிர்கொள்ளலாம் என்பதை கல்விச் சிந்தனை மூலங்களைக் கருத்திற்கொண்டு இந்நூலாசிரியர் தெளிவாக*

விளக்கியுள்ளார். பிள்ளைகளின் கற்றல் வழிகாட்டியாகவுள்ள ஒவ்வொரு ஆசிரியரும் எதிர்கொள்ளவேண்டிய பிரச்சினைகள், தீர்வுகள் பற்றி இந்நூலில் குறிப்பிடுகிறார். பெற்றோரின் வகிபாகமும் இங்கு கணக்கில் எடுக்கப்பட்டுள்ளது. தனியாக ஆசிரியரால் மாத்திரம் இலங்கையின் கல்விசார் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கமுடியாது என்பதையும் நூலாசிரியர் வலியுறுத்துகின்றார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65501).

## 14351

**உசாத்துணையிடல் பாணிகள்: APA உசாத்துணையிடலுக்கான வழிகாட்டல் குறிப்புகளுடன்.** ப.மு.நவாஸ்தீன், M.U.M. ஸபீர். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, கார்த்திகை 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

60 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-0958-21-4.

APA உசாத்துணையிடல் பாணி, 6ஆம் பதிப்பு (APA Referencing style, 6th Edition) என்பது இன்று சமூக விஞ்ஞானங்களிலும் கல்வி, வர்த்தகம் போன்ற பிற துறைகளிலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுவரும் நியமமான முறையாகும். இந்நூலில் இவ்வகை உசாத்துணையிடல் நியமங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. அறிமுகம், மேற்கோள் காட்டல், உசாத்துணை மற்றும் நூல்விபரப் பட்டியல், குறிப்புரை நூல்விபரப் பட்டியல், குறிப்புரை நூல்விபரப் பட்டியல் வகைகள், உசாத்துணையிடல் பாணிகள், எந்த உசாத்துணை முறையினைப் பயன்படுத்தவது?, உசாத்துணை பாணிகளும் நவீன தொழினுட்பமும், APA உசாத்துணையிடல் பாணி, உசாத்துணைகளை கட்டுரைப் பந்திகளில் மேற்கோள் காட்டும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய அம்சங்கள், உசாத்துணைகளை கட்டுரைப் பந்திகளில் மேற்கோளிடல்: விசேட சந்தர்ப்பங்கள், உசாத்துணைகளில் இருந்து கட்டுரை உட்பந்திகளில் எடுத்துக்காட்டல் (Quotation) மேற்கொள்ளல், உசாத்துணைப் பட்டியல் தயாரித்தல்: அடிப்படை விதிகள், உசாத்துணை பட்டியல் தயாரித்தலுக்கான வழிகாட்டல் ஆகிய தலைப்புகளில் இந்நூல் விபரிக்கப்பட்டு இறுதியில் உதாரணங்கள் வழிகாட்டல் உதாரணங்கள் என்பனவற்றுடன் விளக்க மளிக்கப்பட்டுள்ளன. இந்நூல் ஜீவநதி வெளியீட்டகத்தின் 131ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது.

## 14352

**கற்க கசடற: அமரர் ஆறுமுகம் தில்லைநாதன் நினைவுமலர்.** தில்லைநாதன் கோபிநாத். கொழும்பு 13: தில்லைநாதன் கோபிநாத், 90/3, புதுச்செட்டித் தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை).

56 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

அமரர் ஆறுமுகம் தில்லைநாதன் (03.03.1955-02.10.2011) ஆசிரியத்துறையில் பணிபுரிந்தவர். அவரது மறைவின் 31ஆம் நாள் நினைவாக 04.11.2011 அன்று

வெளியிடப்பட்டுள்ள இந்நூல் கல்வித்துறை சார்ந்த பல ஆக்கங்களின் தொகுப்பாகும். திருவள்ளுவர் காட்டும் கல்வி (தமிழ் இணையக் கல்விக் கழகம்), திருவள்ளுவர் பார்வையில் அறிவுடைமை (தமிழ் இணையக் கல்விக் கழகம்), நாலடியார் (தமிழ்க் களஞ்சியம்), அறிவு (தமிழ் விக்கிபீடியா), கல்வியின் நோக்கங்கள் (அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி), இலங்கையின் கல்வித்துறை (கேசரி தகவல் களஞ்சியம், 2011), கற்றலுக்காகக் கற்றல் (க.பேர்னாட்), தரமான கல்விக்குத் தரமான வாசிப்பு (சபா.ஜெயராசா), பரீட்சைக்கான வாசிப்பின் படிமுறைகள் (க.சுவர்ணராஜா), பிள்ளைகளின் கல்வி: பெற்றோர்கள்/ ஆசிரியர்களுக்கான சில ஆய்வுக் குறிப்புகள் (சோ.சந்திரசேகரம்), கற்றலைப் பாதிக்கும் காரணிகளும் ஆசிரியரும் (ஆர்.லோகேஸ்வரன்) ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரில் தேர்ந்து தொகுக்கப்பட்டுள்ளன.

## 14353

**தமிழ் கற்பித்தலில் உன்னதம்: ஆசிரியர் பங்கு.** கார்த்திகேசு சிவத்தம்பி. வட்டுக்கோட்டை: தம்பிப்பிள்ளை சிவமோகன், தர்ஷனா பிரசுரம், வட்டு மேற்கு, 1வது பதிப்பு, 1993. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

36 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 21.5x14 சமீ.

இன்றைய நிலையில் தமிழைத் தாய்மொழியாகக் கற்பித்தலில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் பற்றிய ஓர் ஆய்வு. இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண் கலைத்துறைத் தலைவராக பேராசிரியர் கா.சிவத்தம்பி பணியாற்றிய 1990களில் எழுதப்பட்டது. பின்னாளில் இதே தலைப்பில் இந்நூல் 58 பக்கங்களில் விரிவாக எழுதப்பெற்று நியு செஞ்சுரி புக் ஹவுஸ் மூலம் 1996இலும், மேலும் விரிவாக 78 பக்கங்களில் இற்றைப்படுத்தப்பட்டு 2001இல் சென்னை, தரமணி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலமும் வெளியிடப்பட்டிருந்தமையும் குறிப் பிடத்தக்கது. (இந்நூல் புங்குடுதீவு சர்வோதய மத்திய நிலைய நூலகத்தில் பார்வையிடப்பட்டது).

## 14354

**நன்றி மறப்போம்.** எஸ்.ஐ.நாகூர் கனி. கொழும்பு 12: மிஹிந்து மாவத்தை முஸ்லிம் மகா வித்தியாலய நலவுரிமைச் சங்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (கொழும்பு 12: காயத்திரி அச்சகம், J.L.G.4 டயஸ் பிளேஸ்).

56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

மிகுந்து மாவத்தை முஸ்லிம் மகாவித்தியாலயமும் அதன் பெயர்மாற்ற வரலாறும் பற்றிக் கூறும் நூல். "ஆசிரியர்கள் வரலாம், போகலாம், அவ்வாறே அதிபர்களும் நியமனமாகலாம் நிறுத்தப்படலாம் இடம்மாறிப் போய்விடலாம். ஆனால் அவ்வூரில் ஜமாத் என்னும் மக்கள் கூட்டமொன்று தேங்கிய நீராக இருக்கின்றது. அங்கே ஒரு பள்ளிவாசல் இருக்கிறது. ஒரு வித்தியாலயம் எழுந்து நிற்கிறது. அங்கே ஊர்ப் பிள்ளைகள் படித்து வருகிறார்கள். எனவே - அவ்வூரின் பொது விடயம் தொடர்பாக, முடிவெடுக்கும் இறைமை அதிகாரம் அந்த ஊர்

ஜமாத்தாருக்கே விடப்படவேண்டும்" என்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் அல்ஹாஜ் எஸ். எம். சஹாப்தீன் அவர்களின் கூற்றுக்கு ஆதரவான கருத்தினை நூலாசிரியர் முன்வைக்கிறார். இதனை எழுதியவர் மேற்படி பாடசாலையின் பழைய மாணவராவார். 1952-1964 காலகட்டத்தில் இப்பாடசாலையில் கல்வி கற்ற இவர் பின்னாளில் மிஹிந்து மாவத்தை முஸ்லிம் மகா வித்தியாலய நலவுரிமைச் சங்கத்தின் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21044).

## 14355

**மாணவர்களின் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல்.** ப.மு.நவாஸ்தீன், ராஷிப் சிபானி. அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, சித்திரை 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

84 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-94-7.

இந்நூலில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் வரைவிலக்கணப்படுத்தல், சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் திறனுள்ள மாணவர்களிடம் காணப்படும் பண்புகள், சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் உத்திகள், சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள், சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் தொடர்பாக ஆசிரியர்களின் வகிபங்கு, சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் தொடர்பான கோட்பாடுகள், சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் பற்றிய அண்மைக்கால ஆய்வுகள் மீதான பார்வை ஆகிய ஏழு இயல்களின் வழியாக மாணவர்களின் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலாநிதி ப.மு.நவாஸ்தீன், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராவார். புத்தளம் காரைதீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஆசிரியராகக் கடமையாற்றும் குலாம் காதிர் பாத்திமா சிபானி மன்னார் முசலிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். இந்நூல் ஜீவநதி வெளியீட்டகத்தின் 124ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது.

**மேலும் பார்க்க: இலங்கையில் முஸ்லிம் கல்வி 14926**

# 370.05 கல்விநிறுவனங்களின் ஆய்விதழ்கள், ஆண்டு மலர்கள்

## 14356

**அணையா விளக்கு 1991-1992: சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு சிறப்பு மலர்.** மலர்க் குழு. கல்முனை: கார்மேல் பாத்திமாக் கல்லூரி, 1வது பதிப்பு, 1992. (மட்டக்களப்பு: சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).

(10), 68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

சுவாமி விபுலானந்தரின் தமிழ்த் தொண்டு (வி.ரி.செல்லத்துரை), பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் தமிழ்ப்பணி (சி.தில்லைநாதன்), விபுலானந்தரும் தமிழ் மொழியும் (சி.மௌனகுரு), பேராசிரியர் உவைஸின் தமிழ்த் தொண்டு

(S.H.M.ஜெமீல்), ஆறுமுக நாவலரின் சமய சமூகப் பணியும் தமிழ்த் தொண்டும் (பொ.கணபதிப்பிள்ளை), எண்பது கண்ட F.X.C.(பொன் ஏரம்பமூர்த்தி), புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை (ஈ.சிவானந்தநாயகம்), காடு அழிகிறது கேடு வழிகிறது (A.L.M.பளீல்), அடிகளாரும் புலவர்மணியும் (பரதன் கந்தசாமி), முத்தமிழ் வித்தகரின் கல்விப் பணிகள் (ராதா ஞானரெத்தினம்), இந்துப் பண்பாடு தன்னுள் அடக்கியிருக்கும் கலையம்சம் (வசந்தி சபாநாதன்), தவத்திரு தனிநாயகம் அடிகளார் தமிழ்த் தூது (A.W.அரியநாயகம்), அருட்திரு விபுலாநந்த அடிகளார் வாழ்க்கை வரலாறு (க.வெள்ளைவாரணர்), சுவாமி விபலாநந்தர் மறைவு (மு.கதிரேசச் செட்டியார்) ஆகிய ஆக்கங்களை இச்சிறப்பு மலர் கொண்டுள்ளது. சுவாமி விபுலாநந்தர் (27.03.1892-19.07.1947) கிழக்கிலங்கையில் பிறந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியவர். இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை முதலிய பல துறைகளில் கற்றுத் தேர்ந்தவர். சுவாமி விபுலாநந்தரின் இயற்பெயர் மயில்வாகனன் ஆகும். இவர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் காரைதீவு என்னும் ஊரில் 27-03-1892 அன்று சாமித்தம்பி, கண்ணம்மா தம்பதிகளுக்குப் பிறந்தார். 1992இல் அவரது நூற்றாண்டு விழா உலகெங்கும் கொண்டாடப்பெற்றது. இம்மலரும் அத்தகையதொரு சிறப்பிதழாகும். (இந் நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 111773).

## 14357

**ஆழிவித்து.** சுகுணலதா தவராஜா (இதழாசிரியர்). மட்டக்களப்பு: ஆனைப்பந்தி இந்துமகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, டிசம்பர் 2014. (மட்டக்களப்பு: ஷெரோணி பிரிண்டர்ஸ், கூழாவடி).

xi, 59 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

மட்டக்களப்பு-புளியந்தீவில், ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியின் ஈராண்டுக்கு ஒருமுறை மலரும் ஆண்டு மலராக மூன்றாவது இதழாக ஆசிரியர், அதிதிகள், பெரியோர்கள், மணவரகள் எனப் பல்திறத்தாரின் ஆக்கங்களுடன் "ஆழிவித்து" 04.12.2014 அன்று மலர்ந்துள்ளது. இதழ்க் குழுவினராக திருமதிகள் த.உதயகுமார், சோ.சுந்தரம், சு.தவராஜா, க.பரமானந்தம், வி.தங்கவேல், அ.திருக்கணேஷ் ஆகியோரும் திருவாளர்களான த.அருணகிரிநாதன், இ.வரதராஜா ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். இம்மலரில் பாடசாலை ஆளணி, பாடசாலை வரலாற்றில் ஒரு நோக்கு, கல்வி, அன்பிற்கும் அர்த்தம், குரு, பாடசாலையின் கடைசிநாள், கண்டுபிடிப்புக்கள், யுத்தத்தின் சாரல், மலர்ந்து வாடிய மலர்க்கொத்து, அனைவரும் வாருங்கள், தாயும் சேயும், மனிதன் மனிதனாக வாழ, வாலி வதம்-கொலையா?, எழில் கொஞ்சும் சிகிரியா, மாணவமணிகளே, நன்றின்பால் உய்வதறிவு, மழைத்துளி, கல்வியின் ஒளிதீபங்கள், பிள்ளைகளின் அபிவிருத்தியிலே, போர், ஒழுக்கம், வெற்றியால் விண்ணைத் தொடுவோம், நாட்டார் இசையும் வாழ்வியலும், அறிவின் விளைநிலமே, விஞ்ஞானத்தின் விந்தை, நம்பர் வண், பெற்றோர், எமது ஆசான், மூலிகைத் தாவரங்கள், பெற்ற மனம் பித்து, தாய், பொதுக் கல்வியில்

உடற்கல்வி, இணையமும் மனித நடத்தையும், சாதனை, புதுப்பொலிவு, இலங்கையில்அரசியற் பரிணாமம் ஒரு நோக்கு, வெற்றியின் படிகளில், நாவினிக்க நன்றிகள் ஆகிய 38 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 14358

**சிந்தனை: மலர் 2 இதழ் 2/3 (ஜுலை-ஒக்டோபர் 1968).** கா.இந்திரபாலா (பதிப்பாசிரியர்). பேராதனை: சிந்தனை வெளியீடுகள், பேராதனைக் கலைக் கல்விக் கழகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1968. (கண்டி: நேஷனல் பிரின்டர்ஸ், 241, கொழும்பு வீதி).

58 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 24.5x18 சமீ.

இவ்விதழில் தமிழ்நாட்டில் பௌத்தம் (க.அ.நீலகண்ட சாஸ்திரி), திருக்குறள் திருத்தப் பதிப்பு (அ.தாமோதரன்), தராதர இலங்கைத் தமிழ் -2 (தி.கந்தையா), ஈழநாட்டுத் தமிழ்ச் சாசனங்கள் -3: கிழக்கிலங்கைச் சாசனங்கள் (கா.இந்திரபாலா) ஆகிய நான்கு ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## 14359

**சிந்தனை தொகுதி XIII, இதழ் 2.(ஜுலை 2000).** சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் (இதழாசிரியர்), கே.சிவானந்தமூர்த்தி (இணை ஆசிரியர்), ஏ.எஸ்.சூசை (நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 2003. (யாழ்ப்பாணம்: எஸ்.எஸ்.ஆர். கொம்பியூட்டர் அன் ஓப்செட் பிரின்டர்ஸ், 537 சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி).

(6), 109 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ஆண்டு சந்தா ரூபா 600., அளவு: 25x19 சமீ.

இவ்வாய்விதழில் சமகால யாழ்ப்பாணத்து கடவுளர் ஓவியங்கள்- காண்பிய அர்த்தமும், சனரஞ்சக நம்பிக்கையும் (தா.சனாதனன்), வேத இலக்கியங்கள் காட்டும் இந்துக்களின் திருமண நடைமுறைகள் (கலைவாணி இராமநாதன்), யாழ்ப்பாணத்துப் புனைகதைகளில் சைவம் (மயில்வாகனம் இரகுநாதன்), மத்தவிலாசப் பிரஹசனம் (எஸ்.ஜெகநாதன்), ஈழத்தமிழர் நாட்டார் வழக்காற்றியல் பற்றிய ஆய்வு முயற்சிகள்-ஓர் ஆய்வு (கி.விசாகரூபன்), தொழில் வாழ்க்கை யோடிணைந்த கல்வி இருபதாம் நூற்றாண்டு இலங்கையின் அனுபவங்கள் (அனுஷ்யா சத்தியசீலன்), மீச்செலவு (க.சிவானந்தமூர்த்தி), கடல்மட்ட மாற்றங்களும் கடற்கரை சார்ந்த உருவவியல் அம்சங்களும்: இலங்கையின் வடபிரதேச கரையோர நிலப்பகுதிகளைச் சிறப்பாகக் கொண்ட ஆய்வு (எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன்), கந்தரோடையிற் கிடைத்த வெண்கல உலோகச் சிலைகள் (செ.கிருஷ்ணராஜா), தஞ்சை நாயக்கர் காசு (ஆறுமுக சீதாராமன்) ஆகிய பத்து ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## 14360

**சிந்தனை தொகுதி XIV, இதழ் 3 (நவம்பர் 2004).** கார்த்திகேசு குகபாலன் (இதழாசிரியர்), எஸ்.சிவலிங்கராஜா (இணை ஆசிரியர்), சோ.கிருஷ்ணராசா

(நிர்வாக ஆசிரியர்). யாழ்ப்பாணம்: கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, நவம்பர் 2004. (யாழ்ப்பாணம்: கரிகணன் தனியார் நிறுவனம், இல. 424, காங்கேசன்துறை வீதி).

(8), 126 பக்கம், விலை: ஆண்டு சந்தா ரூபா 600., அளவு: 23.5x18 சமீ.

இவ்வாய்விதழில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை ஓர் ஒப்பீட்டாய்வு (கே.ரகுநாதன்), போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்பு இலங்கையில் கிறிஸ்தவம் (ஞா.பிலேந்திரன்), கல்வியைத் தனியார்மயப்படுத்தலும் சந்தைப்படுத்தலும் (மா. சின்னத்தம்பி), புலம்பெயர்ந்தோர் புனைகதைகள் புலப்படுத்தும் பண்பாட்டுச் சிக்கல்கள் (ம.இரகுநாதன்), ஈழத்து நவீன இலக்கியமும் அறிவியல் கருத்துக்களும் (செல்வி செ.சிவசுப்பிரமணியம்), பொலநறுவைக்கால சைவநாயன்மார் வெண்கலப்படிமங்கள் காட்டும் ஈழத்து வார்வைக் கலைமரபு (செ.கிருஷ்ணராஜா), நாட்டார் வழக்காற்றியல் நோக்கில் பட்டப் பெயர்கள்: ஈழத்துத் தமிழ் நாவல்களை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு (கி.விசாகரூபன்), வாஸ்துவும் வீட்டுக் கட்டடக் கலையும் (ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா), இலங்கைக்கான தேசிய ஒருமைப்பாடும் சமாதானமும் (சமாதான அரசியல் பற்றி ஒரு நோக்கு (கே.ரி.கணேசலிங்கம்), யாழ்.பல்கலைக்கழக நூலகத்தின் முதல்நிலைத் தகவல் வளங்கள்: ஒழுங்கமைப்பு, பயன்பாடு, பராமரிப்பு (செல்வி ஸ்ரீ. அருளானந்தம்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 14361

**தமிழ்த் தீபம்-2018.** இதழாசிரியர் குழு. கொழும்பு 4: தமிழ் இலக்கிய மன்றம், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, 2018. (கொழும்பு 6: ஓசை டிஜிட்டல், 473, 1/1A, காலி வீதி, வெள்ளவத்தை).

(32), 33-176 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

இலங்கையின் புகழ் வாய்ந்த தமிழ்க் கல்வி நிறுவனங்களுள் ஒன்றாக பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி விளங்கி வருகின்றது. இக்கல்லூரியின் நாடளாவிய பெருமைக்குக் காரணம், இதன் கல்வி நிலைப்பட்ட செயற்பாடுகளும், மாணவரின் பல்வேறு துறைசார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர முற்படும் முயற்சிகளும் ஆகும். பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆண்டுதோறும் கொண்டாடும் முத்தமிழ் விழா, தமிழின் இனிமையையும், ஆற்றலையும், பெருமையையும் தமிழ்க்கலைகளின் சுவையினையும் வெளியுலகுக்கு தெரிவிக்கும் மேலும் ஒரு நிகழ்வாக அமைகின்றது. அதே வேளை மாணவர்களின் கலை வெளிப்பாடுகளையும், அவர்களுக்கு பின்னணியிலிருந்து அவர்களை ஊக்குவிக்கும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் பங்களிப்புக்களை புலப்படுத்துவதாயும் இவ்விழா அமைகிறது. விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலர் இதுவாகும். மாணவர்களின் சிறந்த ஆக்கங்களுடன் இது வெளிவந்துள்ளது. இம்மலரின் இதழாசிரியர் குழுவில் கி.கிருஷாந்த், ச.ரதுஷன், பா.ரஜீவன் ஆகிய மாணவர்கள் பணியாற்றியுள்ளனர்.

## 14362

**மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரி திறப்புவிழா மலர் 1953.** மா.வடிவேல் (மலர் ஆசிரியர்). மட்டக்களப்பு: திறப்பு விழாக் குழு, அரசினர் ஆசிரியர் கல்லூரி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1953. (கொழும்பு 1: சிலோன் பிரின்டர்ஸ் லிமிட்டெட், 20, பார்சன் வீதி, கோட்டை).

vi, 52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

30.08.1953 அன்று இடம்பெற்ற மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியின் கட்டிடத் திறப்புவிழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். 1948 முதல் மட்டுநகர் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்ற பழைய மாணவர்களின் முயற்சியினால் இம்மலர் சாத்தியமாகியுள்ளது. இதில் முன்னுரை, அறிமுகம், வாழ்த்துரை ஆகியவற்றுடன் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரி வரலாறு (த.செல்வநாயகம்), பிற்போக்கென்றால் என்ன? (சி.கந்தசாமி), தமிழ் ஆசிரியன்-பாட்டு (மு.தங்கசாமி), மட்டக்களப்புத் தமிழ் (எப்.எக்ஸ்.சி.நடராஜா), ஐன்ஸ்ரைனும் பிரபஞ்சமும் (எஸ்.சிதம்பரப்பிள்ளை), இலங்கையிற் கண்ணகி வழிபாடு (க.கணபதிப்பிள்ளை), தமிழ் மக்களும் அவர் கவின் கலைகளும் (தனிநாயக அடிகள்), ஆசிரியர் கடமை அன்றும் இன்றும் (பீ.சவரிமுத்து), திராவிட மக்களின் ஆதித் தாயகம் (வண. எச்.ஈ.டேவிட்), ஆசிரியர் கலாசாலை-பாட்டு (மூனா கானா), பேச்சுப் பாடங் கற்பிக்கும் ஆசிரியர் பேச்சு (எஸ்.பூபாலபிள்ளை), The Teacher and Human Personality (E.S.தம்பிராசா), பழந்தமிழர் பழக்க வழக்கம் (எஸ்.தம்பிராசா), அன்னை கொஞ்சும் மொழி (மா.வடிவேல்) ஆகிய ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (நூலகம் நிறுவன இணையத்தள நூலக சேர்க்கை இலக்கம் 74350. இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்திலும் பார்வையிடப்பட்டது).

## 14363

**மலைத்தென்றல் சிறப்பு மலர்- 2015.** கஜானனன் கணேசமூர்த்தி (இதழாசிரியர்). பதுளை: ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2015. (யாழ்ப்பாணம்: தேவி பிரின்டர்ஸ், 140/1, மானிப்பாய் வீதி).

x, 182 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

மாணவர்களின் பல்வேறு கவிதை உள்ளிட்ட ஆக்க இலக்கியப் படைப் பாக்கங்களுடன் பத்தாண்டு நிறைவில் ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம், உலகெங்கும் வியாபித்துள்ள தமிழரின் கலைகளும் கலாசார பண்பாடுகளும், ஈழத்துப் புராதன சமய நெறியில் இந்து சமய வழிபாடு, மருந்து இல்லாமல் மருத்துவம், குமரிக்கண்டம்-லெமூரியா, தஞ்சைப் பெரியகோயில், ஆங்கொர்வாட்-உலகின் பெரிய கோவில், விஞ்ஞானமும் பண்டைய வழக்கங்களும், நியூட்டனின் மூன்றாவது விதி என இன்னோரன்ன சுவையான கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. மலைத்தென்றல் மலர்க் குழுவில் க.கஜனன், ச.பைந்தமிழ், அ.கார்த்திகன், ந.வேணுசரண், கா.சுபாங்கன், பா.மகிந்தன், வி.சிந்துஜா, க.மாறன் ஆகியோர்

*பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61117).*

## 370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள், சிறப்பிதழ்கள்

### 14364

**அமுத மலர் 2017: யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம்.** *மலர்க்குழு. புங்குடுதீவு: இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம், 1வது பதிப்பு, 2017. (யாழ்ப்பாணம்: நிவாஸ் பதிப்பகம், சேர்.பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி).*

*106 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.*

*1937ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை போர்ச் சூழல் காரணமாக 1991இல் மூடப்பட்டு பின்னர் மீண்டும் 2013இல் தீவகத்தின் கல்விச் செயற் பாட்டுக்காக மீளவும் புத்துயிர்ப்புடன் எழுந்தது. இப்பாடசாலையின் எண்பதாவது அகவையை நினைவுகூரும் வகையில் இம்மலர் தயாரிக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையினர், சமூக அறிஞர்கள், சமயத் தலைவர்கள் போன்றோரின் வாழ்த்துரைகளுடன் கூடிய இம்மலரில், ஆசிரியர்கள், மாணவர்கள் அறிவுஜீவிகளின் படைப்பாக்கங்களும் பாடசாலையின் வரலாறு மற்றும் வளர்ச்சி பற்றிக் கூறும் அதிபர் அறிக்கையும் இடம்பெற்றுள்ளன. சிறுவர் உரிமைகளைப் பேணிக்காப்போம் (ஆசிரியை, திருமதி சா.கேதீஸ்வரன்), சிறந்த மனிதர்களை உருவாக்குவோம் (ஆசிரியர், சி.வின்சன்ராஜ்), வாசிப்பின் முக்கியத்துவமும் வாசிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளும் (ஆசிரியை ச.தர்மலோஜினி), பாடசாலையின் அமுதவிழா வாழ்த்துப்பா (கண்ணகைபுரம் சைவ இளைஞர் சங்கம்), முன்பள்ளிக் கல்வியே வாழ்க்கையின் உரம் (முன்பள்ளி ஆசிரியை ஜெயக்குமார் இராஜேஸ்வரி) ஆகிய முக்கியமான பல ஆக்கங்களுடன் மாணவர்களின் ஆக்கங்களும் இம்மலரைச் சிறப்பிக்கின்றன.*

### 14365

**இந்து தருமம்: 2005.** *வீ.மன்மதராஜன், கு.சாந்தகுமாரன் (இதழாசிரியர்கள்). பேராதனை: இந்து மாணவர் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2005. (பேராதனை: வினோ அச்சகம்).*

*(24), 98 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19.5 சமீ.*

*பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தின் இந்து மாணவர் சங்கத்தின் இறைபணிகளுள் ஒன்றாக விளங்குவது இந்து தர்மம் மலர் வெளியீடாகும். இம்மலரில் வாழ்த்துக்கள், ஆசியுரைகள், செயற்குழு அறிக்கைகள் ஆகியவற்றுடன் "வாழ்வியல்" என்ற பகுதியில், நம் உடம்பே ஆலயம் (தி.ஆனந்தமூர்த்தி), சௌர வழிபாடு (நாராயணன் மல்லிகா), ஆன்மீக வாழ்வு (ஜெ.நிவேதன்), காயமே*

கோயிலாக (ந.பாலமுரளி), சைவத்தமிழர் வாழ்வியலில் தாய்மை (செல்வி மகியினி பாலச்சந்திரன்), கிராமிய வழிபாட்டில் கண்ணகி (திரவியநாதன் தீலிபன்), திருவாசகமென்னுந்தேன் (க.தர்சினி) ஆகிய ஆக்கங்களும், "சமூகவியல்" என்ற பகுதியில், இந்து மதமும் இந்து மானுடரும் (சி.சிவசேகரம்), புதைந்து கொண்டிருக்கும் எமது கலாசாரம் கட்டியெழுப்பப்படுவது எப்போது (சிவறூபி பஞ்சாட்சரம்), சட்டமும் சமூகமும் (நவரத்தினம் சிவகுமார்), நமது சமய கலாசார அம்சங்கள் எங்கே போகின்றன? (ந.சங்கர்) ஆகிய ஆக்கங்களும், "ஆய்வியல்" என்ற பகுதியில், இந்து மதம் கூறும் அரசியல் சிந்தனைகள் (ச.பாஸ்கரன்), திருவாசகம், கிறிஸ்தவம், மேலைத்தேசம் ஒரு பண்பாட்டுக் கலப்புப் பார்வை (மா.ரூபவதனன்), மகாகவி பாரதியும் ஆத்மீக அடித்தளமும் (துரை.மனோகரன்), பொலநறுவைக் கால வெண்கலப் படிமங்கள் அப்பர் படிமத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு குறிப்பு (இரா.வை.கனகரத்தினம்) ஆகிய ஆக்கங்களும், "படைப்பியல்" என்ற பகுதியில், குன்றத்து வேலனே குறிஞ்சிக் குமரா (எஸ். சுதாகரன்), குறிஞ்சிக் கோலங்கள் (வே.சனாதனன்), அருள் புரிவாய் கதிர்வேலா (மாதங்கி பாலசுப்பிரமணியம்), நாம் ஏன் விளக்கு ஏற்றுகின்றோம்? (ந.ஜசீவன்), மன்னிக்க வேண்டுகிறோம் (பெ.தேவப்பிரியானி), அன்பின் நிலையது உயர் நிலை (சி.சிவசீலன்), குறிஞ்சிச்சாரல் 2005 (தொகுப்பு: வி.மன்மதராஜன்), கலைத்திட்டங்களுக்கு வெளியே பட்டதாரி மாணவர்களின் ஆக்கத்திறன் - (வ.மகேஸ்வரன்) ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37976).

## 14366

**இந்து தீபம்: 1999**. இரா.ரமேஷ்சங்கர் (இதழாசிரியர்), எம்.யோகேந்திரன், எஸ். சுபாஷ் (உதவி ஆசிரியர்கள்). கொழும்பு: இந்து மன்றம், கொழும்பு பல்கலைக்கழகம், 1வது பதிப்பு,ஓகஸ்ட் 1999. (கொழும்பு: ஜெயா ஓப்செட் பிரின்டர்ஸ்).

(100) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x17.5 சமீ.

கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஆண்டு மலர் இது. 06.08.1999 அன்று வெளியிடப்பெற்ற இம்மலரில், தமிழ்மொழி வாழ்த்து, ஒளி படைத்த கண்ணியாய்..... (கிருஷ்ணா கலைச்செல்வன், க.கமலாஜினி), திருமுறைகள் தொடரட்டும் (கம்பவாரிதி இ.ஜெயராஜ்), திருவாசகத்தில் விஞ்ஞானம் (ஆ.சா.ஞானசம்பந்தன்), கொழும்பு ஸ்ரீ சிவகாமசௌந்தரி அம்பிகா சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் (இந்து வித்யாநிதி), முன்னேற்றங்களும் பிரச்சனைகளும் (சோ.சந்திரசேகரன்), மனிதன் மனிதனாக வாழ வழி காட்டும் சைவசமய நித்திய விரதங்கள் (ஆறு.திருமுருகன்), இன்றைய காதல்..... (கு.குகப்பிரியா), கலாச்சாரம் என்பது என்ன? (பு.கீதவாணி), மதம் இங்கே மனிதம் எங்கே? (ஏ.இதயவாணி), அறமும் கலையும் வளர்த்த எமது சமயம் (த.மகிழ்நங்கை), திரை இசைப் பாடல்களில் தமிழ் இனிமை மத நம்பிக்கை (சோ.சுபாஷ்), காலத்தின் அருமை (சசிப்பிரபா ஸ்ரீ பத்மாதரன்) ஆகிய கட்டுரைகளும், எம்.ஜே.எம். இர்ஷாத், தி.திவாகரன், அநாமிகன், சி.பரமேஸ்,

மாதுமை சிவசுப்பிரமணியம், நி.சத்தியசுதன் ஆகியோரின் கவிதைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27128).

### 14367

**இந்து தீபம்: 2001**. க.முரளிதரன் (இதழாசிரியர்). கொழும்பு: இந்து மன்றம், கொழும்பு பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2001. (கொழும்பு: ஆர்.எஸ்.டி. என்டர்பிரைசஸ்).

136 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

12.08.2001 அன்று வெளியிடப்பட்டுள்ள இம்மலரில் ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகளுடன் கொழும்பின் தமிழ் - இந்து மதப் பயில்வுகள் - ஒரு மிகச் சிறிய குறிப்பு (கார்த்திகேசு சிவத்தம்பி), மணிவாசகரின் தாயும் சேயும் (அ.சண்முகதாஸ்), குற்றம் குற்றமே? (கம்பவாரிதி இ.ஜெயராஜ்), மொழிப்பெயர்ப்பில் சமயமும் தத்துவமும் (சுபதினி ரமேஷ்), எமது நாட்டின் பல்கலைக்கழகங்களின் போக்கு சரியானதா? (மொஹமட் மஹீஸ்), கவிதைகள் (மனிதமே -S.ஷாமினி, இனியும் ஏறான் - அநாமி, ஒன்றைத் தவிர ___சேது, கவிதைச் செண்டு - யோ.ருத்ரா), தேவாரத் தலங்கள் (ஆங்கிலம்), What the Buddha thought (Rev.Agalakada Sirisumana), தலப் பெருமை, Tirumala–Tirupathi, தஞ்சைப் பெரிய கோயில், மனித்தப் பிறவியும் வேண்டுவதே (கி.குருபரன்), ஆனந்த தாண்டவ நாயகனின் கலையழகு (கோபிகா பஞ்சாட்சரம்), வாழ்க்கையில் சைவநெறி (செல்வப்பிரியா சதாசிவம்), மாணவர்களே ஒரு நிமிடம் சிந்தியுங்கள் செயற்படுங்கள் (சாது சரன்), புராதன இலங்கையின் இந்து மதம் பற்றிய வரலாற்று மூலங்கள் (பிருந்தா பத்மநாதன்), உயிரையும் தருவர் (சசிலா கணேசமூர்த்தி), திரைப்படத்துறையில் கணனித் தொழில்நுட்பம்-விஞ்ஞானபீடம், மயானங்கள், இந்து மதம் (கஸ்தூரி சிவதாஸ்), சிவராத்திரி அனுஷ்டிப்பதற்கு சிறந்த தலங்கள், இந்து மதத்தின் தோற்றமும் அதன் தற்போதைய நிலைமையும் (ம.திருக்குமரன்), தமிழில் மென்பொருட்கள், நவக்கிரக தலங்கள்: சமய குரவரால் பாடப்பெற்றவை, 20ம் நூற்றாண்டில் அணு ஆயுதமும் உலக வலலரசுகளும் (வி.வத்சலாதேவி), வாழ்க்கையைப் பண்படுத்தும் இந்து சமயம் (பவானி மலர்கொழுந்து), அஷ்ட வீரட்டானம் கோவில்கள், இலங்கையின் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்கள் (ராதிகா வதனப்பிரகாசம்), சிவதீட்சை (இ.காயத்திரி), திருவடியின் பெருமை (உஷாந்தி சுந்தரலிங்கம்), Members of the Hindu Society, Thankfulness is always a better investment ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 39154).

### 14368

**இந்து நாதம்: 1985**. மலர்க் குழு. கொழும்பு 4: இந்து மாணவர் மன்றம், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1985. (கொழும்பு: மெய்கண்டான் அச்சகம், 161, செட்டியார் தெரு).

*(92) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.*

*கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் இந்து மாணவர் மன்றம், 21.10.1985 அன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடத்திய கலைமகள் விழாவின்போது இவ்வாண்டு மலர் வெளியிடப்பட்டது. வழமையான ஆசிச் செய்திகளுடன் மாணவர்களின் படைப்பாக்கங்களும், நிகழ்வுகளின் புகைப்படப் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. மன்றக் காப்பாளரின் ஆசிச் செய்தி (த. சங்கரலிங்கம்), வாழ்த்துச் செய்தி (ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்), பிரதம அதிதியின் ஆசிச் செய்தி (சௌ.தொண்டமான்), ஆசியுரை (சுவாமி பிரேமாத்மானந்தா), பதில் அதிபரின் ஆசிச் செய்தி (சு.பற்குணம்), உப அதிபரின் ஆசிச் செய்தி (திருமதி வி.சுந்தரமூர்த்தி), ஆசிச் செய்தி (திருமதி கே.சுந்தரலிங்கம்), "இந்து நாதம்" மலருக்கு ஆசியுரை (தங்கம்மா அப்பாக்குட்டி), இந்து வித்தியா விருத்திச் சங்கத் தலைவரின் ஆசிச் செய்தி (K.C.தங்கராசா), மன்றப் பொறுப்பாசிரியரின் ஆசிச் செய்தி (சி.சோமநாதன்), பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளரின் ஆசிச் செய்தி (N.மதுசூதனன்), இந்து மாணவர் மன்றத் தலைவரின் சிந்தனையிலிருந்து (இராமச்சந்திரன் துஷ்யந்தன்), இந்து மாணவர் மன்றச் செயலாளரின் சிந்தனையிலிருந்து (ஜெயந்தன் பாலசுப்பிரமணியம்), இந்து மாணவர் மன்ற செயற்குழு, இந்துக் கல்லூரி மாணவத் தலைவர் குழு, இந்து தர்மம் (சுவாமி ஜீவானந்தா), முருக வழிபாடு (ந.ராஜகணேஷ்), திருநீற்றின் மகிமை (க.பிரதீபன்), மேலான செல்வம் (அ.நரேந்திரன்), மாணவர் வாழ்வில் சமயம் (ஏ.எஸ்.எம்.ஷிஹாம்), இந்து சமயம் ஒரு உலகப் பொதுச் சமயம் (ச.அன்பழகன்), இந்து மதம் காட்டும் அன்பு வாழ்க்கை (யோ.ஜெகன்), சைவசித்தாந்த கோட்பாடுகளும் நாமும் (க.இராஜராஜேஸ்வரன்), சமய வாழ்வும் ஒழுக்கமும் (கந்தசாமி கிருபாகரன்), உள்ளத்தால் உவந்தளிக்கும் நன்றிகள் ஆகிய விடயதானங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34632).*

## 14369

**இந்து நாதம்: 1997**. *கணேசன் சாந்தகுமார் (இதழாசிரியர்). கொழும்பு 4: இந்து மாணவர் மன்றம், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, நவம்பர் 1997. (கொழும்பு: யாசீன் பிரின்டர்ஸ்).*

*(88) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19.5 சமீ.*

*கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியின் இந்து மாணவர் மன்றம், 10.10.1997 அன்று, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்திய கலைமகள் விழாவின்போது இவ்வாண்டு மலர் வெளியிடப்பட்டது. வழமையான ஆசிச் செய்திகளுடன் மாணவர்களின் படைப்பாக்கங்களும், நிகழ்வுகளின் புகைப்படப் பதிவுகளும் இடம்பெற்றுள்ளன. வாணி விழா (து.ஆதிரையன்), அருள் புரியும் அன்னை (சிவபாதசுந்தரம் திருப்பரன்), விவேகானந்தர் (த.திருக்குமார்), ஆலயத்தொண்டு*

(பாலக்குமாரன் சபேசன்), ஆறுமுகநாவலரின் சமயப் பணி (சு.சுரேஸ்குமார்), நாவலரின் சமயப்பணிகள் (ஸ்ரீ தர்னீஷ்குமார்), வையகம் மீதுன் புகழ் வாழ்க (ஈ.ஜெயந்தன்), அன்பே சிவம் (துரைசிங்கம் கஜன்), கலைமகள் விழா நிகழ்ச்சி நிரல், என் ஆசிரியர்களுக்கு நன்றி (சி.பாலதரன்), ஈழத்தில் இந்து சமயத்தின் இன்றைய நிலை (கணேசன் சாந்தகுமார்), விவேகானந்தரின் சமய மறுமலர்ச்சி (கு.காண்டீபன்), நவராத்திரி மகிமை (கணேசன் காந்தகுமார்), ஈழத்தில் இந்து சமயத்தின் இன்றைய நிலை (லோ.நிமலன்), இந்து சமயத்தவருக்கே உரித்தான சிறப்பம்சங்களும் இந்துமத வாழ்க்கை நடைமுறைகளும் (சிவா.கிருஷ்ணமூர்த்தி), சைவ சித்தாந்த சிந்தனைகள் (திருமதி.பு.ஞானலிங்கம்), எல்லோரும் வாழவேண்டும் (த.மனோகரன்) ஆகிய படைப்பாக்கங்களை இம்மலரில் இடம்பெறச் செய்துள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38005).

## 14370

**கலசம் 2009**. இதழாசிரியர் குழு. கொழும்பு: சாந்த கிளேயார் கல்லூரி, இந்து மாணவர் மன்றம், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 6: குளோபல் கிராப்பிக்ஸ், இல. 14, 57ஆவது ஒழுங்கை).

155 பக்கம், புகைப்படங்கள், விலை:குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x19 சமீ.

1964ஆம் ஆண்டில் மேற்படி பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட இந்து மாணவர் மன்றம் இது. வாழ்த்துச் செய்திகள், ஆசியுரைகள், பாடசாலை போட்டி முடிவுகள், பரிசு பெற்றோர் விபரம் ஆகிய விடயங்களுடன் புதுமை புகுத்திய நக்கீரர் (எஸ்.சிவலிங்கராஜா), மாணவர் எதிர்கொள்ளும் உளம்சார் பிரச்சினைகள் (கோகிலா மகேந்திரன்), கலைக்கோயில் (வானதி காண்டீபன்), அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் (மனோன்மணி சண்முகதாஸ்), நவராத்திரி (த.விமலேஸ்வரி), அவதாரமும் நற்போதனைகளும் (மு.ஞானசேகரம்பிள்ளை) ஆகிய அறிவியல் கட்டுரைகளும், பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. இம்மலரின் இதழாசிரியர் குழுவில் சு.மயூலா, ஜெ.ரேணுகா, ம.ஸ்ரீ.நிவேதா, இ.கிஷாந்தி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## 14371

**கொழும்பு இந்துக் கல்லூரியின் பொன்விழா மலர் 2002**. மலர்க் குழு. கொழும்பு: இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(34), 177 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21.5 சமீ.

பொன்விழாச் சிறப்பு மலரில் ஆசிச் செய்திகளைத் தொடர்ந்து வானளாவும் எம் கல்லூரி, கால அட்டவணை, மனப்பதிவில் சில துளிகள், சமயம், இலக்கியம், விழுமியங்கள், அறிவியல், கவிதைத் துளிகள், கலைகள், பொருளாதாரம், ஆளுமைக்கு உரமிடுபவை, கல்லூரிக் கண்ணோட்டம், படங்கள் எனப் பல்வேறு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு அவ்வப் பிரிவுக்குரிய ஆக்கங்கள் வகுத்துத்

தரப்பட்டுள்ளன. மனப்பதிவில் சில துளிகள் என்ற பிரிவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, இ.கலாமோகன்,கோ.ஜெனார்த்தனன், சி.க.இந்திரராசா, வித்துவான் வ.செல்லையா, டி.ஆர்.இராஜலிங்கம், B.S. சர்மா, I.கஜமுகன், S.G.S.அருளானந்தன். சந்திரபவானி இராமச்சந்திரா ஆகியோர் கல்லூரி பற்றிய தமது மனப்பதிவுகளை எழுதியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 34802).

### 14372

**கொழும்பு தொண்டர் வித்தியாலயம் புதிய மூன்று மாடி கட்டிடத் திறப்பு விழா: வெளியீட்டு மலர் 1977**. மலர் வெளியீட்டுக் குழு. கொழும்பு: தொண்டர் வித்தியாலயம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1977. (கொழும்பு 12: நியூ லீலா அச்சகம், 162, பண்டாரநாயக்க மாவத்தை).

(62) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ.

14.02.1977 அன்று இடம்பெற்ற கட்டிடத் திறப்பு விழாவையொட்டி வெளியிடப்பட்ட இச்சிறப்பு மலரின் ஆசிரியர் குழுவில் த.இராசரத்தினம், க.பாலச்சந்திரன், சு.கனகராசா, திருமதி கி.கா.இ.அல்போன்சஸ், செல்வி எம்.டி.ஏ பிரான்சிஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35526).

### 14373

**சங்கநாதம் 1976-1977**. சி.சிவானந்தராஜா (இதழாசிரியர்). கொழும்பு 6: வணிக கலை மன்றம், கொழும்புத் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, மார்ச் 1977. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

(4), 62 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

தமிழ் பேசும் மாணவர்களுக்குத் தமிழ் மூலம் விஞ்ஞானம், வணிகம், கலை முதலிய துறைகளுக்கான பாடங்களைக் கற்பித்து அவர்களுடைய கல்வி அபிவிருத்திக்கு உதவுதல் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் முக்கிய பணிகளுள் ஒன்றாகும். இவற்றுள் வணிகமும் கலையும் 1970களில் ஆரம்பிக்கப்பட்டவை. ஆயினும் அவை தமிழ்ச் சங்கத்தில் துரித வளர்ச்சியினை கண்டடைந்துள்ளன. ஆசிரியர்களும் மாணவர்களும் துறைசார்ந்த பயிற்சிகளில் மாத்திரமன்றித் தமிழ்மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றிலும் மிக்க ஈடுபாட்டுடன் செயலாற்றி வந்துள்ளனர். இவ்வகையில் வணிக மாணவ மன்றத்தினர் 1977 மார்ச் மாதம் 18ஆம் நாளன்று கலைவிழாவொன்றினை தமிழ்ச் சங்க மண்டபத்தில் ஒழுங்குசெய்திருந்தனர். இவ்விழாவையொட்டி வெளியிடப்பட்டசிறப்பு மலரே இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11080).

### 14374

**சண்முகநாதம்: யா/கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம் நூற்றாண்டுவிழா சிறப்பு மலர் 2017.** லக்சனா தேவகஜானனன் (மலர் ஆசிரியர்). ஊர்காவற்றுறை: யா/கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம், கரம்பொன் மேற்கு, 1வது பதிப்பு, 2017. (யாழ்ப்பாணம்: ஜெயஸ்ரீ பிரின்டர்ஸ்).

95 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

ஸ்ரீமத் மஹாதேவா சுவாமிகள் 1917இல் ஸ்தாபித்த மேற்படி கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழாவையொட்டி இச்சிறப்பு மலர் வெளிவந்துள்ளது. இம்மலரில் பல்வேறு சமய, சமூகப் பிரமுகர்களின் வாழ்த்துச் செய்திகள், ஆசிச் செய்திகள் போன்றவற்றைத் தொடர்ந்து பாடசாலையை நிர்வகித்த அதிபர்கள், அதிபர் பார்வையில், யா/ கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலய வரலாறு ஆகிய பாடசாலை பற்றிய தகவல்களுடன், தீவுகளின் அபிவிருத்திக்கான திறமுறைகள், மகாதேவாவின் கல்வியியல் அறம், கிராமப்புற பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவதால் கல்வி பாதிப்படைதலும் அதற்கான தீர்வுகளும், காலநிலை மாற்றமும் பயிராக்கவியல் முறைகளும், தோல்வியைக் கண்டு துவண்டுவிடாதே, விஞ்ஞான வளர்ச்சியும் மனித வாழ்க்கை முறையும், இணையம் இல்லா உலகம் இணையற்ற உலகம், தொழில்நுட்ப வளர்ச்சி, காய் கனி கீரை தானிய மருத்துவ குணங்கள், விடைபெறுகின்றன பட்டாம்பூச்சிகள், நனறியுள்ளவனாய் வாழ்க, அறிவியல் கருவிகள், இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள், பார் எங்கும் பறக்கும் பட்டாம்பூச்சி, ஒழுக்கக் கல்வி, எனது பள்ளி வாழ்க்கையில், முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார், வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான், எங்கள் பாடசாலை, ஆரம்பக் கல்வி எனும் அத்திவாரம், தகவல் பெட்டகம், C.W.W.கன்னங்கராவும் பொது அறிவும், நில் மழையே நில், A.P.J. அப்துல் கலாம், செல்லப்பிராணி, விடுகதை, ஆசிரியர் பாடல் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் புத்திஜீவிகளின் ஆக்கங்களும் இடம் பெற்றுள்ளன. மலர்க்குழுவில் தி.செல்வகஜானனன், ஜெ.ஜெயபிரியந்தன், கா.கார்த்திகா, த.டிஷாந்தி, திருமதி த.புஷ்பதீபன், திருமதி த.அன்ட்று கிரேஷியன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

### 14375

**சைவ மகாஜன தீபம்: மண்டபத் திறப்பு விழா மலர்-2015.** வே.மதியழகன் (மலராசிரியர்). யாழ்ப்பாணம்: இணுவில் மத்திய கல்லூரி, 1வது பதிப்பு, ஜூன் 2015. (இணுவில்: வைரஸ் பிரின்டர்ஸ்).

lvi, 240 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

இம்மலரில் ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் என்பவற்றுடன் கல்லூரி தொடர்பான வரலாறு, கல்வித்துறை சாதனைகள், இணை பாடவிதானச் செயற்பாடுகள் ஆகியவை அறிக்கையிடப்பட்டுள்ளன. மாணவர் பகுதியில்

மாணவமணிகளின் 39 படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. அறிஞர் பகுதியில் ஆசிரியத்துவம் தொடர்பாக, நவீன கல்வியில் ஒரு கருத்து -வினைப்பாடு உற்றறி ஆசிரியம், பாடசாலை மட்டத்தில் ஆசிரியர் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லலில் திட்டமிட்ட அணுகுமுறைகள், சிறுவர் இலக்கியப் பரப்பில் பாரதியாரின் பங்களிப்பு, உளவியல் ஆய்வு முறைகளில் உற்றுநோக்கல், இன்றைய ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படும் வாண்மைத்துவத் தேர்ச்சிகள், பாடசாலை மட்டத்தில் அணிகளை முகாமைசெய்தல் ஒரு யதார்த்த அணுகுமுறை, கணிதத்தில் கணிதமேதை இராமானுஜரின் பங்களிப்பு ஆகிய ஏழு படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. ஆசிரியர் பகுதியில் பாடசாலை ஆசிரியர்களின் பாடத்திட்டத்துடன் கூடியதும் பொது அறிவுக்கு உட்பட்டதுமான 26 ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

## 14376

**நால்வர் உதயம் கலைவிழா 1998: சிறப்பு மலர்.** லோஷினி தர்மலிங்கம் (மலராசிரியர்). கொழும்பு 2: நால்வர் சமயப பாடசாலை மாணவர் மன்றம், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(96) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17.5 சமீ.

13.12.1998 அன்று கொழும்பு நால்வர் மணிமண்டபத்தில் நடைபெற்ற நால்வர் சமய பாடசாலை மாணவமணிகளின் கலைவிழாவையொட்டி இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. ஆசியுரை, வாழ்த்துரைகளுடன் இச்சிறப்பிதழில் மாணவர்களின் ஆக்கங்களுக்கு முன்னுரிமையளித்துத் தொகுக்கப்பட்டுள்ளன. நால்வர் செய்த அற்புதங்கள் (S.உதயசந்தர்), ஞான விழிகள் (சுமதி செந்தில்குமார்), அன்பின் மகிமை (S.அகிலேஸ்வரி), கூசாதே கேள் ஏற்றுக்கொள் (வி.கஜேந்திரன்), திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், திருவைந்தெழுத்தின் மகிமை (யு.சுதர்சனி), பாரதியார் (ம.விபுலன்), விளையாட்டு (ச.வனிதா), நான் போற்றும் நால்வர் சமயப் பாடசாலை-கவிதை (தயாபரநாதன் கிருஷ்ணா), நட்பு-கவிதை (பூமிநாதன் இலங்கநாதன்), விழித்தெழு-கவிதை (ஆனந்த மொழி), அதிசயங்கள் (அ.விஜயசித்திரா), அறிவியலும் அழகியலும் வாழ்வின் இரு கண்கள் (பூமிநாதன் பாலநாதன்), வெற்றியின் ரகசியம் (கு.சசிகரன்), சமயமும் சமுதாயமும் (சுப்பையா மிலந்தகுமார்), விநாயகர் பெருமை (S.பிரசன்னா), பிரார்த்தனை (சந்திரகாசன் ஞானப்பிரசாந்தன்), மாணவனே (பெ.பூமிநாதன்), மனிதனும் தெய்வீக வாழ்க்கையும் (திருமதி.இராஜேஸ்வரி இராஜேந்திரன்), புராணங்கள் கூறும் சமயக் கருத்துக்கள் (M.T.சுதர்ஷனி), காலச் சிறகுகளில் கவிதைச் சக்கரங்கள் (இராதாகிருஷ்ணன் சசிதரன்), சிந்தனை புதிர்கள் சில (ஏ.மாதவன்), பிள்ளையார் (சஜீவன்), வாழிய சைவ முன்னேற்றச் சங்கம் (ம.வியாசிகா), தொலைக்காட்சியும் மாணவர்களும் (து.துஷ்யந்தி), கடமையைச் செய் பலனை எதிர்பாராதே (லோகேஸ்வரி நவரட்ணம்), மிருகக் காட்சிச் சாலை (ஏ.மோகனசுந்தர்), ஒன்றே கடவுள் (த.அஜந்தன்), சிவலிங்க வழிபாடு (பிரஷாந்தினி சந்திரகாசன்), ஞான தீபங்கள் (சுயதர்ஷினி சலிம்), ஸ்ரீ ராம கிருஷ்ணரின் மூலம் கடவுளைக் காணுங்கள்

(நமசிவாயம் முரளிதரன்), சக்தி வழிபாடு (ந.துஷ்யந்தி), அருள் மிகு ஆஞ்சனேயர் (செ.ஐஸ்வர்யா லக்ஷ்மிதேவி), நாளைய தலைவனே உனக்கொரு செய்தி (கிருபாம்பிகை), சுவாமி விபுலானந்த அடிகள் (வி.விஜயதாஸ், விவேக் ஆனந்த்), சமயத்துறைகள் (சுபாசினி), ஓங்கார நாயகனே (சந்திரகாசன் ஞானப்பிரசாந்தன்), ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைத் துளிகள் (வி.ரதீஷ்), பழம் பெரும் முருகன் ஆலயம் - தொகுப்பு: ரா.மேனகா, கல்வியின் சிறப்பு (ம.சுதன்), சேர். பொன்னம்பலம் இராமநாதனின் ஒப்பற்ற கல்விப்பணி (மு.விஜயகௌரி), விடுகதைகள், திருமுருகன் (ச.திரிபுரா), அருள் வாக்கு (வி.கஜேந்திரன்), சிவஞானத்திற்குப் பிரமாணம் உண்டா (கு.தீபா), சிந்தனைத் துளி (பா.டிலக்சன்), இரண்டு விழாக்கள் (ஆ.முனீஸ்வரன்), 63 நாயன்மார்கள் (அ.சசிக்குமார்) ஆகிய ஆக்கங்களை இம்மலர் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24826).

## 14377

**புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்க வெள்ளிவிழா மலர்.** மலர்க் குழு. புங்குடுதீவு: ஸ்ரீ கணேச வித்தியாசாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1951. (யாழ்ப்பாணம்: வே.சுந்தரம்பிள்ளை, விவேகானந்த அச்சகம்).

92 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.

பண்டிதமணி க.சு.நவநீதகிருஷ்ண பாரதியார், க.சோமசுந்தரப் புலவர், சரவணையூர் ஆ.தில்லைநாதப் புலவர் ஆகியோரின் வாழ்த்துரைகளுடன் கற்பின் தெய்வம் (கா.பொ.இரத்தினம்), யான் கண்ட புங்குடுதீவு (குல.சபாநாதன்), திருநாவுக்கரச நாயனார் (சி.கணபதிப்பிள்ளை), புங்குடுதீவின் கல்வி நிலை- அன்றும் இன்றும் (சி.இ.ச.), மாங்கல்யம் (த.வேதநாயகி), எங்கள் சங்கத்தைத் தரிசித்த பெரியார் சிலரின் குறிப்புகள், எந்நாள் வரும் (சி.ஆறுமுகம்), சமயமும் ஆன்ம ஈடேற்றமும் (சி.சரவணமுத்து), இளமை இன்ப நினைவுகளும் வயோதிபமும் (பொ. கிருஷ்ணபிள்ளை), பொன்னேட்டிற் புகழ்பெற்ற புங்குடுதீவு (மு.ஆறுமுகம்), சேக்கிழார் காட்டிய சைவநெறி (கை.சிவபாதம்), தந்தையும் மைந்தனும் (வீ.வ.நல்லதம்பி), பரிசில் வாழ்க்கை (பொன். அ.கனகசபை), பைத்திய உலகம் (மு.பொ.இரத்தினம்), நாம் விரும்புங் கல்வி (சி.ஆறுமுகம்), திருக்கேதீஸ்வரநாதன் துதி (தா.இராசலிங்கம்), பெண்ணே பெரியவள் (ஸ்ரீமதி என்.நல்லதம்பி), குருதட்சணை (நா.சோமசுந்தரம்), அந்தக் கிண்ணம் (கே.வீ.செல்லத்துரை), கிராமாபிவிருத்தி (ஜே.சீ.அமரசிங்கம்) ஆகிய படைப்பாக்கங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

## 14378

**மகுடம்: கலை விழா 2008.** இதழாசிரியர் குழு. கொழும்பு: தமிழ் இலக்கிய மன்றம், டீ.எஸ். சேனநாயக்கா கல்லூரி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு 2: Three N Printers, 50/15, சேர்.ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை).

(144) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

*07.11.2008 அன்று கொழும்பு R.I.T. அலஸ் மண்டபத்தில் நடைபெற்ற டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்றம் வழங்கிய கலைநிகழ்ச்சியின் போது வெளியிடப்பட்ட இச்சிறப்பு மலரில், அரசியல், ஆன்மீக, அறிவியல்துறைப் பிரமுகர்களின் ஆசியுரைகள், வாழ்த்துரைகள், பாடசாலை மன்ற அறிக்கைகள் என்பனவற்றுடன், மேற்படி பாடசாலை மாணவர்களின் படைப்பாக்கங்களும் இடம்பெற்றிருக்கின்றன. 2008ஆம் ஆண்டுக்குரிய இதழாசிரியர் குழுவில் க. சிந்துஜன், செ.ஷியாம், பா.சஞ்சித், ஐ.ஆர்.எம்.ஆதிப், எம்.ஜுஷான் ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.*

## 375 பாடத்திட்டங்கள்/பாடவிதானங்கள்

### 14379

**க.பொ.த.(உயர்தரம்) பாடத்திட்டம்.** தேசிய கல்வி நிறுவகம். மஹரகம: தொலைக்கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 1 B, P.T. டீ சில்வா மாவத்தை).

108 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x20.5 சமீ.

*அரசறிவியல் மூலதத்துவங்கள், புவியியல், வரலாறு, அளவையியலும் விஞ்ஞான முறையும், இந்து சமயம், கிறிஸ்தவ நெறி, இஸ்லாம், இந்து நாகரிகம், இஸ்லாமிய நாகரிகம், தமிழ் ஆகிய பத்து பாடநெறிகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. எவ்வாண்டுக்குரிய பாடத்திட்டம் என்பதை அறியக்கூடியதாக ஆண்டுவிபரம் தரப்படவில்லை. முக்கியமாக, இந் நூல் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு விபரமும் நூலில் தவறவிடப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39176).*

### 14380

**கல்விப்பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) ஆண்டு 12-13: இணைந்த கணிதம் பாடத்திட்டம்.** தேசிய கல்வி நிறுவகம். மஹரகம: கணிதத் துறை, விஞ்ஞான தொழினுட்பப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2017. (மஹரகம: தேசிய கல்வி நிறுவக அச்சகப் பிரிவு).

xii, 84 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x29.5 சமீ.

*2017ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் இணைந்த கணிதம் பாடநெறிகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. இது அறிமுகம், தேசிய பொது இலக்குகள், பொதுத் தேர்ச்சித் தொகுதி, பாடத்திட்டத்தின் நோக்கங்கள், தேசிய பொது இலக்குகளுக்கும் பாடத்திட்ட இலக்குகளுக்கும் இடையேயான தொடர்பு, இணைந்த கணிதம் தொடங்குபவர்களுக்கான அடிப்படைப் பாடநெறி, உத்தேசிக்கப்பட்ட தவணைரீதியான பாடத்திட்டம், விரிவான பாடத்திட்டம், கற்பித்தல்-கற்றல்*

முறைமை, பாடசாலைக் கொள்கையும் நிகழ்ச்சித் திட்டங்களும், கணிப்பீடும் மதிப்பீடும், கணிதக் குறியீடுகளும் குறிப்பீடுகளும் ஆகிய விடய உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 65683).

## 14381

**கல்விப்பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) ஆண்டு 12-13: பொறியியல் தொழினுட்பவியல் பாடத்திட்டம்.** தேசிய கல்வி நிறுவகம். மஹரகம: தொழினுட்பக் கல்வித் துறை, விஞ்ஞான தொழினுட்பப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2016. (மஹரகம: தேசிய கல்வி நிறுவக அச்சகப் பிரிவு).

vii, 75 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 19.5x29.5 சமீ.

2017ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் பொறியியல் தொழினுட்பவியல் பாடநெறிகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. தொழினுட்பவியல் துறையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விஞ்ஞானரீதியான கோட்பாடுகளைப் பயன்படுத்துதல், தகவல் தொழில்நுட்பவியல் தொடர்பாக ஆழமான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு ஊக்கத்தை ஏற்படுத்தல், நாளாந்த வாழ்க்கைக்கு முக்கியமான அடிப்படை கணிதக் கோட்பாடுகளை விருத்தி செய்தல், விஞ்ஞானரீதியான கோட்பாடுகள் பற்றிய அடிப்படை அறிவை தொழினுட்ப, சமூக, பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துதல், தேசிய மற்றும் பூகோள சூழல் பிரச்சினைகளை அவதானித்து நிலையான வளங்களை பயன்படுத்தும் முறை பற்றிய அறிவைப் பெறல் ஆகிய ஐந்து விடயங்களை இப்பாடநோக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65682).

## 14382

**கல்விப்பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) ஆண்டு 12-13: வரலாறு பாடத்திட்டம்.** தேசிய கல்வி நிறுவகம். மஹரகம: சமூக விஞ்ஞானத்துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2017. (கொழும்பு: NIE Press).

x, 56 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 20x29.5 சமீ.

2017ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் வரலாறு பாடநெறிகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியதாக இந்நூல் வெளி வந்துள்ளது. அறிமுகம், உள்ளடக்கம், தேசிய பொது இலக்குகள், அடிப்படைத் தேர்ச்சிகள், பாட இலக்குகள், தேசிய பொது இலக்குகளுக்கும் பாட இலக்குகளுக்குமான தொடர்பு, பாடசாலை தவணைக்கான திட்டம் தயாரித்தல், பாடத்திட்டம், பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டங்களும், கணிப்பீடும் மதிப்பீடும், பாடத்திட்டத் தயாரிப்புக் குழு ஆகிய பிரிவுகளின்கீழ் இந்நூல் ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65685).

### 14383

**கல்விப்பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) ஆண்டு 12-13: விலங்கியல் பாடத்திட்டம்.** *தேசிய கல்வி நிறுவகம். மஹரகம: தொலைக்கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1995. (கொழும்பு:* NIE Press*).*

*26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x20 சமீ.*

*1995 தொடக்கம் ஆண்டு 12இலும், 1996 தொடக்கம் ஆண்டு 13இலும் பயன்படுத்தப்படவிருக்கும் விலங்கியல் பாடநெறிகளுக்கான பாடத்திட்டங்களை உள்ளடக்கியதாக 12 அலகுகளில் இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35410).*

## 380 வர்த்தகம், வணிகத் தொடர்புகள், போக்குவரத்து

### 14384

**மும்மொழியிலான கலைச்சொற்றொகுதி.** *கல்வி வெளியீட்டுத்திணைக்களம். கொழும்பு: கல்வி வெளியீட்டுத்திணைக்களம், இசுறுபாய, பத்தரமுல்லை, 1ஆவது பதிப்பு, 2015. (ஹோமகம: சவிந்த கிராப்பிக்ஸ் சிஸ்டம்ஸ், இல. 145,* UDA Industrial Estate, *கட்டுவான வீதி).*

v, *417 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21x15 சமீ.,* ISBN*: 978-955-25-0019-0.*

*வணிகத்துறைக்கான மும்மொழிக் கலைச்சொற்றொகுதி* (Technical Terms in the Commerce Stream: English-Sinhala-Tamil). *(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65489).*

### 14385

**வணிகத்துளிர் 2002.** *தர்ஷனி கதிரேசன், பிரிசில்லா சுகந்தி இம்மானுவேல் (இதழாசிரியர்கள்). கொழும்பு 4: வர்த்தக மாணவர் மன்றம், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 6:* E.S.Printers, 257,-1E, *காலி வீதி, வெள்ளவத்தை).*

*110 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.*

*சுருங்கிவரும் உலக உருண்டையில் உலகமனைத்தும் ஒரு பொதுச்சந்தை என உலகமயமாக்கலை நோக்கி நடைபோடும் வணிகத்துறையின் சிறப்பினை பாடசாலை மாணவர்மட்டத்தில் விரிவுபடுத்தும் அல்லது தெளிவுபடுத்தும் நோக்கில் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் வணிக மாணவர் மன்றத்தினர் வெளியிட்டுள்ள ஆண்டு மலர் இதுவாகும். பாடத்திட்டத்துடன் தொடர்பான அத்துறை சார்ந்த கட்டுரைகளும் ஆசிரிய/மாணவர்களின் படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33957).*

## 380. (1) வர்த்தகவியல்/வணிகவியல் பாடநூல்கள்

### 14386

**க.பொ.த.உயர்தரம் வணிகக் கல்வி-2.** அ.சிவநேசராஜா, என்.கே.பாலச்சந்திர சர்மா. கொழும்பு 13: என்.கே.பாலச்சந்திர சர்மா, 160,கொட்டாஞ்சேனை வீதி, 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 15: விஜயா அச்சகம், 825/5, புளுமண்டல் வீதி).

(6), 150 பக்கம், விலை: ரூபா 140.00, அளவு: 21x14 சமீ.

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் வணிகக் கல்வித் துறையின் விரிவுரையாளரான அ.சிவநேசராஜா, கொழும்பு இந்துக் கல்லூரி ஆசிரியர் என்.கே. பாலச்சந்திர சர்மா ஆகிய இருவரும் இணைந்து வெளியிட்டுள்ள இரண்டு பாகங்கள் கொண்ட நூல் இது. இவ்விரண்டாம் பாகத்தில் தொழில் கொள்வோர் தொழிலாளர் தொடர்புகள், நுகர்வோர் பாதுகாப்பு, அரசாங்கத்துக்கும் வணிக முயற்சிகளுக்கும் இடையிலான தொடர்பு, முயற்சியாண்மையும் சிறிய நடுத்தர நிறுவனங்களும் ஆகிய நான்கு விடயப் பரப்புகள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38996).

### 14387

**வணிகக் கல்வி: இன்றைய வாணிப நடைமுறை.** வி.சிவா (இயற்பெயர்: வி. சிவானந்தபாலன்). கொழும்பு 6: வி.சிவானந்தபாலன், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 6: கார்த்திகேயன் வெளியீட்டகம், 501/2, காலி வீதி, வெள்ளவத்தை).

(8), 108 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான வணிகக் கல்வி தொடர்பான மேலதிக பாடநூல். இன்றைய வாணிப நடைமுறைகள் என்ற இந்நூலில் பாடத்திட்டம் தொடர்பான கோட்பாடுகள், எண்ணக்கருக்கள், என்பவற்றை விட அத்துறைகளில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுவரும் வளர்ச்சிகள், மாற்றங்களே அதிகளவு முக்கியப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வகையில் இந்நூல், பலவிடயங்களை இனம்கண்டு விளக்கமளிக்க முற்படுகின்றது. வதிவுள்ளோருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவற்றோருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்கு, தன்னியக்க கொடுக்கல் வாங்கல் இயந்திரம், வங்கிக் கிளைகளுக் கிடையிலான வலைப் பின்னல், அந்நியச் செலாவணிக்கான வங்கிக்கூறு, பேஜர், இடம்பெயர் வங்கிச்சேவை, திறைசேரி உண்டியல், திறைசேரி உண்டியலுக்கான மறு கொள்வனவுச் சந்தை, அரச முறி, தேசிய பாதுகாப்பு முறி, மீள் நிதியிடல், வைப்புக் காப்புறுதிகள் புதிய தொழிலாளர் சாசனம், மக்கள் மயப்படுத்தல், தனியார் மயப்படுத்தல், வர்த்தகமயப்படுத்தல், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இன்ரநெட், மத்திய வைப்புத் திட்டம், இரத்தினக்கல் வியாபார வங்கி, தொலைத் தொடர்புக் கம்பெனிகள், உரிமம் பெற்ற விசேட வங்கி என இன்னோரன்ன 63 தலைப்புகளில் இன்றைய வாணிப நடைமுறைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

*(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 031448).*

### 14388

**வணிகக் கல்வி பாடத்திட்டம்: கல்விப்பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்): தரம் 12,13**. தேசிய கல்வி நிறுவகம். மகரகம: வணிகக் கல்வித்துறை, விஞ்ஞான தொழினுட்பப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2017. (மஹரகம: அச்சகம், தேசிய கல்வி நிறுவகம்).

ix, 85 பக்கம், விலை: ரூபா 200.00, அளவு: 20.5x29.5 சமீ.

*2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் பாடத்திட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட இவ்வளநூலில் அறிமுகம், தேசிய பொது நோக்கங்கள், பொதுத் தேர்ச்சித் தொகுதி, பாடத்திட்டத்தின் நோக்கங்கள், தேசிய பொது நோக்கத்திற்கும் பாடத்திட்ட நோக்கத்திற்கும் இடையிலான தொடர்பு, தரம் 12இற்கான பாடத்திட்டம், தரம் 13இற்கான பாடத்திட்டம், பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டங்களும், கணிப்பீடும் மதிப்பீடும் ஆகிய எட்டு இயல்களில் விடயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65684).*

### 14389

**வணிகப் புள்ளிவிபரவியல்: மாதிரி எடுப்பும் புள்ளிவிபர அனுமானமும்: க.பொ.த.உயர்தரம்**. பொன்னுத்துரை ஐங்கரன். யாழ்ப்பாணம்: பொன்னுத்துரை ஐங்கரன், இணுவில் தெற்கு, இணுவில், 1வது பதிப்பு, பெப்ரவரி 1998. (கொழும்பு 6: அட்மிரல் கிராப்பிக்ஸ், 403, 1/1, காலி வீதி).

(4), 134 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

*கல்விச் சீர்திருத்தத்தில் ஓர் அம்சமாக புதிய பாடத்திட்டத்தில் வணிகப் புள்ளிவிபரவியல் க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கு ஒரு பாட மாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப் புதிய வணிகப் புள்ளிவிபரவியல் பாடத்தின் மாதிரி எடுப்பும் புள்ளி விபரவியல் அனுமானங்களும் என்னும் பகுதியில் மாதிரி எடுத்தல் முறை, அதன் நன்மை தீமைகள், புள்ளிவிபர மதிப்பீடு, கருதுகோள் சோதனை, கைவர்க்கச் சோதனை, மாறற்றிறன் பகுப்பாய்வு ஆகிய பகுதிகளை உயர்தர மாணவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய இலகு தமிழில் நூலாசிரியர் உதாரண விளக்கங்களுடன் தந்திருக்கிறார். நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணித புள்ளிவிபரவியல் துறையின் விரிவுரையாளராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21424).*

### 14390

**வணிகவியற் கட்டுரைகள்.** மலர் வெளியீட்டுக்குழு. யாழ்ப்பாணம்: வர்த்தக ஒன்றியம், சென். ஜோன்ஸ் கல்லூரி, 1வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி).

(8), 89 பக்கம், விலை: ரூபா 15.00, அளவு: 24.5x19 சமீ.

இத் தொகுப்பு நூலில் இலங்கையில் கம்பெனி அமைப்பு, இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்தின் அமைப்புரீதியான மாற்றங்கள், முகாமைத்துவம், விஞ்ஞான ஆய்வு முறைகளில் நோக்கலின் பயன்பாடு, தொழிற் சங்கங்கள், இலங்கையின் தேசிய வருமானக் கணிப்பீட்டிற்கும் அதன் சென்மதி நிலுவைக் கணிப்பீட்டிற்கும் இடையிலான சில தொடர்புகள், பங்கு வழங்கலும் பறிமுதலும் மீளவழங்கலும், விஞ்ஞானத்தில் ஒப்புமை முறை, மூலதனச் சந்தை, இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி ஒரு மைல் நோக்கு, கணக்கீட்டு எடுகோள்கள் அல்லது எண்ணக் கருக்கள், விஞ்ஞானத்தில் முறையியலின் பங்கும் அதன் அபிவிருத்தியும், வர்த்தக வங்கிகளின் நடைமுறை வைப்புப் பற்றிய ஓர் நோக்கு, இலங்கையின் பொதுப் படுகடன் அமைப்பு, தற்சமனாக்கும் பேரேடு ஆகிய 15 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் வெளியீட்டுக் குழுவில் கல்லூரி மாணவர்களான சு.சத்தியானந்தன், செ.யு.நரேந்திரபாலன், லெ.ந.சுரேஷ்குமார் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23646).

### 14391

**ஜீ.சீ.ஈ.(உயர் தரம்) வணிகக் கல்வி வழிகாட்டி-2.** இ.செல்வநாயகம். கொழும்பு: சரசு பதிப்பகம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 6: ஈ.எஸ். பிரின்டர்ஸ், 257, 1E, காலி வீதி, வெள்ளவத்தை).

80 பக்கம், விலை: ரூபா 80.00, அளவு: 23x16 சமீ.

க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான வணிகக் கல்வி தொடர்பான மேலதிக பாடநூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 28721).

## 390 நாட்டாரியலும் பழக்க வழக்கங்களும்

### 14392

**கண்ணகி வழிபாடு: பார்வையும் பதிவும்.** வெல்லவூர்க் கோபால் (இயற்பெயர்: சீ.கோபாலசிங்கம்). மட்டக்களப்பு: மனுவேதா வெளியீடு, 143/23, எல்லை வீதி, 1வது பதிப்பு, 2018. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496 A, திருமலை வீதி).

274 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 700., அளவு: 22x16 சமீ., ISBN: 978-955-42694-5-3.

கவிக்கோ அவர்கள் இவ்வாய்வு நூலை தன்னுடைய 21 ஆவது நூலாக வெளியிடுகிறார். இந்நூல் தமிழகத்திலிருந்து ஈழம் வரையான கண்ணகி வழிபாட்டின் நீண்ட வரலாற்றைப் படம்பிடித்துக் காட்டியுள்ளது. இதற்காகத் தமிழகத்தில் உள்ள வரலாற்றுப் பழமை வாய்ந்த கோயில்களுக்கு நேரில் சென்று ஆய்வுகளை மேற்கொண்டதுடன் இத்துறையில் புலமையுடைய தமிழக, கேரள மாநில அறிஞர்களுடன் கலந்துரையாடி தமிழகத்தின் வரலாற்றுப் புலமை வாய்ந்த

கண்ணகி வழிபாட்டு ஆலயங்கள் பலவற்றின் புகைப்படங்களையும் வழங்கியுள்ளார். ஈழத்திற்கு கண்ணகி வழிபாடு பரவிய வரலாற்றை விரிவாக ஆராய்ந்து தமிழர்களிடையே கண்ணகி வழிபாடாகவும், சிங்கள மக்களிடையே பத்தினி வழிபாடாகவும் பரிணமித்த வரலாற்றை ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டியுள்ளார். சேர நாட்டில் (கேரளம்) கண்ணகி வழிபாடு, தமிழகத்தில் கண்ணகி வழிபாடு, இலங்கையில் கண்ணகி (பத்தினி) வழிபாடு, பௌத்த சிங்கள மக்களின் பார்வையில் கண்ணகி (பத்தினி), வடபிரதேச கண்ணகி வழிபாடு, மட்டக்களப்புப் பிரதேச கண்ணகி வழிபாடு, திருக்கோணமலைப் பிரதேச கண்ணகி வழிபாடு, கொம்புமுறி விளையாட்டு, கண்ணகி வழிபாடு: பார்வையும் பதிவும், மட்டக்களப்புத் தேசத்தில் கண்ணகி வழிபாடு மேலோங்கக் காரணம், கண்ணகிக்கு மீண்டும் புகழ்சேர்க்கும் புகார் நகர் ஆகிய 12 அத்தியாயங்களில் இந்நூலை வெல்லவூர்க் கோபால் எழுதியிருக்கிறார். பின்னிணைப்புகளாக வழிபாட்டியலில் கண்ணகியின் வடிவங்கள், ஆய்வின் முக்கிய வழிபாட்டுத் தலங்கள் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

## 390.1 இடப்பெயர் ஆய்வு

### 14393

**பேரும் ஊரும்: இடப்பெயர் ஆய்வு.** ஞா.ஜெகநாதன். வவுனியா: ஞானப்பிரகாசம் ஜெகநாதன், இல. 97, 2ஆம் கட்டை, மன்னார் வீதி, நெளுக்குளம், 1வது பதிப்பு, 2019. (வவுனியா: வாணி கணனிப் பதிப்பகம், இல. 85, கந்தசுவாமி கோவில் வீதி).

xii, 245 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22x15 சமீ., ISBN: 978-624-95247-0-5.

இந்த நூலிலே, வட மாகாணத்தில் உள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் இடப்பெயர்களும், வடமத்திய மாகாணத்தில் உள்ள அனுராதபுரம் மாவட்டத்தின் தமிழ் இடப்பெயர்களும், வடமேல் மாகாணத்தில் உள்ள புத்தளம் மாவட்டத்தின் தமிழ் இடப் பெயர்களும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இடப்பெயர்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், புத்தளம், அனுராதபுரம் என்னும் ஒழுங்கில் தரப்பட்டுள்ளன. இடப்பெயர்களை நீர்நிலைகள், நில இயல்பு, குடியிருப்பு இடப்பெயர்கள், வேறு இடப்பெயர்கள் என்றவாறாகப் பகுத்துத் தந்திருக்கின்றார். இவை ஊர்ப்பெயராய்வு, ஆட்சி மாற்றங்களும் இடப்பெயர்களும், இடப்பெயர்களின் அடிப்படை, இடப்பெயர்களின் அமைப்புமுறை, இடப்பெயர்கள்- நீர்நிலைகள், இடப்பெயர்கள்- நில இயல்பு, குடியிருப்பு இடப்பெயர்கள், வேறு இடப்பெயர்கள், இடப்பெயர்களும் நமது கடமைகளும், பின்னிணைப்பு ஆகிய பத்து அத்தியாயங்களில் எழுதப் பட்டுள்ளன. குறிப்பாக இந்த நூலில் தமிழ் கிராமங்களின் பண்டைய அல்லது புராதன தமிழர் பெயர்கள் வைக்கப்பட்ட வரலாற்றினை குறிப்பிட்டிருப்பதானது, பல இளம் சமூகத்தினருக்கு எமது கிராமங்களின் வரலாற்றினை அறிவதற்கு இலகுவாக இருக்கும். கலைப்பட்டதாரியான நூலாசிரியர் ஓய்வுநிலை

*கோட்டக்கல்விப் பணிப்பாளராவார். சமாதான நீதவானாகவும், வவுனியா மத்தியஸ்த சபை உறுப்பினராகவும், வவுனியா கலாச்சார அதிகார சபையின் உபதலைவராகவும் சமூகப் பணியாற்றியவர். முன்னதாக 2013இல் நாகர் எழு வன்னி என்ற ஆய்வுநூலை எழுதியவர். எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், யாழ் இலக்கிய வட்டம் ஆகிய அமைப்புகளின் விருதுகளைப் பெற்றவர்.*

## 391.7 அணிகலன்கள், உடல் அலங்காரங்கள்

### 14394

**அணிகலன்கள்: தமிழர் பாரம்பரிய அணிகலன்கள் ஓர் விபரிப்பு.** *உமாச்சந்திரா பிரகாஷ். கொழும்பு 6: திருமதி உமாச்சந்திரா பிரகாஷ், இல. 51- 4/1, பெரேரா ஒழுங்கை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2019. (கொழும்பு 6: கே.ஐ.கிரியேஷன்ஸ்).*

vi, *58 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26*x*17 சமீ.*, ISBN: *978-624-95089-0-3.*

*2009இன் பிற்பகுதியில் வீரகேசரி ஊடாக பத்திரிகைத்துறையில் கால்பதித்தவர். "கலைக்கேசரி" மாதாந்த சஞ்சிகையின் வாயிலாக ஊடகத்துறையில் தனக்கெனவொரு இடம் பெற்றுக்கொண்டவர். பெட்டகம், நல்லூர்க் கந்தசாமி பெருங்கோயில்,* The Discovery of Jaffna *ஆகிய நூல்வரிசையில் இது இவரது நான்காவது நூல். தமிழர் வாழ்வியலில் முக்கியத்துவம் பெறும் கலை, கலாசார, பண்பாட்டு விடயங்களுடன் கூடிய தமிழர் பாரம்பரிய நகைகள், அணிகலன்கள், ஆபரணங்கள் தொடர்பான சுமார் 20 கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. தமிழறிஞரும் சமயப் பேச்சாளருமான அமரர் வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்கள், தமிழர் அணிகலன்கள் மற்றும் இந்துமத சம்பிரதாயச் சடங்குகள் ஆகியன குறித்து, சமய ரீதியானதும், மரபு ரீதியானதுமான அரிய தகவல்களை அவ்வப்போது வழங்க, இளம் ஊடகவியலாளராக வலம்வந்திருந்த திருமதி உமாசந்திரா பிரகாஷ், அவற்றினை அழகாகத் தொகுத்து, கலைக்கேசரியில் இரு வருடங்களுக்கு மேல் தொடராக எழுதிவந்திருந்தார். அக்கட்டுரைகளைத் தொகுத்தும், அதனுடன் வேறு சில கட்டுரைகளை இணைத்தும் இந்நூலை உருவாக்கியிருக்கிறார். அணிகலன்கள் ஓர் அறிமுகம், தமிழர் கலாசாரத்தில் குழந்தை அணிகலன்கள், மங்கையரின் பாதங்களை அணிசெய்யும் கொலுசும் மெட்டியும், கழுத்தணிகளும் மார்பணிகளும், இடுப்பணிகள், காதணிகள், உடலுக்கும் உறவுக்கும் சுகம்தரும் மோதிரம், மூக்கிற்கு அழகு மூக்குத்தி, தமிழர் வாழ்வியலும் வளையலும், அர்த்தமுள்ள திருமணமும் தாலியும், நன்மை பயக்கும் நவமணிகள், குணம் நிறைந்த மாணிக்கம், பெருமை அளிக்கும் முத்து, ஒளிவீசி வழிகாட்டும் வைரம், ஒளிரும் தன்மை கொண்ட மரகதம், நிறைவாய் மிளிரவைக்கும் நீலக்கல், மன அமைதியைத் தரும் கோமேதகம், தீ போன்று ஒளிவீசி மனதைக் கவரும் புட்பராகம், வைடூரியம், சகல செல்வங்களையும் நல்கும் பவளம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64692).*

## 392 வாழ்வியல் வழக்குகள், வாழ்க்கை முறைமைகள்

### 14395

**இனிக்கும் இல்லறம்.** வெற்றிவேல் விநாயகமூர்த்தி. சென்னை 600 017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, 7(ப.எண் 4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆஃப்செட்).

xiv, 170 பக்கம், விலை: இந்திய ரூபா 200.00, அளவு: 18.5x12.5 சமீ.

ஆறு பகுதிகளில் வகுத்துத் தரப்பட்டுள்ள ஆசிரியரின் வாழ்வியல் கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. பகுதி -1இல் திருமணமும் எட்டுவகைத் திருமணங்களும், ஆதன சீதனம், காதல் திருமணம், தரகர் திருமணம், தேன்நிலவுத் திருமணம், திருமணம் மணக்கச் சில போதனைகள், அழகு வடிவழகு ஆகிய கட்டுரைகளும், பகுதி -2இல் இலக்கிய இல்லறவின்பம், அழகுறுப்பு ஆறிரண்டு, தூக்கம் துரத்தும் ஊக்கம், வாய்த் தேன் அமுது ஆகிய கட்டுரைகளும், பகுதி -3இல் இல்லற இறைவின்ப இரகசியம், தேக-மனோ தத்துவக் கலை, ஆண்-பெண் குறிகள் தாரதம்மியம், குடும்பத்திட்டம் நான்கு, மாதத் தீட்டும் கருவும் பூப்படைதலும், புணர்ச்சிக்கு உணர்ச்சியூட்டும் கால-நேரங்கள் ஆகிய கட்டுரைகளும், பகுதி -4 இல் மக்கட்பேறு, குமரப் பருவக் கோளாறுகள், திருமணப் பருவம், புத்தி வந்த கதையொன்று, முதுமைப் பருவம் ஆகிய கட்டுரைகளும், பகுதி -5இல் தாலி, மனைவிக்கு மனை, திருமணவொழுங்கு, பெண்களின் நான்கு வகை, காமம் பொல்லாதது, நட்புக்கே முதலிடம், படிப்பினை இலக்கியம், சந்தர்ப்பம் செய்யும் சதி, கருத்தடைச் சாதனம், உச்சகட்ட உடலுறவின்பம், கற்பு இருபாலார்க்கும், குணவகையினர், அகலிகை கதை, மூடநம்பிக்கை, சைக்கிள் ஓட்டம் ஆகிய கட்டுரைகளும், பகுதி-6இல் இறைவழிபாடு, சிக்கன வாழ்வு, சாவும் விழாவும், காற்றுள்ள போதே தூற்றுவோம் ஆகிய கட்டுரைகளுமாக மொத்தம் 41 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 41279).

### 14396

**ருது நூல் சாஸ்திரம்.** ஆசிரியர் பெயர் அறியமுடியவில்லை. கொழும்பு: சரஸ்வதி புத்தகசாலை, 175, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ நிரஞ்சனா அச்சகம், நல்லூர்).

24 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18.5x12.5 சமீ.

பூப்பு என்பது வாழ்வின் அடிப்படைக் கூறுகளில் மிகமுக்கியமான ஒன்றான இனவிருத்திக்கு ஏற்ற வகையில் உடல் பக்குவப்படும் ஒரு நிலையாகும். இந்தப் பக்குவம் ஆண், பெண் இருபாலாருக்குமே ஏற்படுகின்றது. இதன் போது உடல், உள ரீதியான பல மாற்றங்கள் இருபாலாரிடமும் ஏற்படுகின்றன. பூப்புக்குரிய இந்த மாற்றங்கள் உடனடியாக நிகழ்ந்து விடுவதில்லை. படிப்படியாகத்தான் நிகழ்கின்றன. இந்த மாற்றங்கள் பெண் குழந்தைகளிடம் அவர்களது 8-10 வயதுகளிலும், ஆண் குழந்தைகளிடம் 10-12 வயதுகளிலும் ஏற்படத்

*தொடங்குகின்றன. இந்நூல் பெண்களின் பூப்படைதல் தொடர்பான தமிழில் வெளிவந்த முதல் சாஸ்திர நூலாகக் கருதப்படுகின்றது. மூலநுலாசிரியர் பெயர் வழியாகவன்றி பதிப்பாளர்களின் பெயர்வழியாக அறியப்பெற்று ஏராளமான பதிப்புகள் தமிழகத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்நூல், இலங்கையிலும் சரஸ்வதி புத்தகசாலையினரின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21884).*

## 392.5 சடங்கு முறைமைகள், திருமணங்கள், மரணச் சடங்குகள்

### 14397

**தகன ஸம்ஸ்கார.** *ச.சோமாஸ்கந்த சர்மா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் நினைவு வெளியீடு, மயிலணி, சுன்னாகம், 1வது பதிப்பு, 2000. (யாழ்ப்பாணம்: சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில்).*

*(12) பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.*

*ஜீவன் உடலெடுக்கும் போதும் உடலைவிட்டு நீங்கும்போதும் சில சம்ஸ்காரங்களை செய்யவேண்டும் என்று போசாயனர், ஆபஸ்தம்பர் முதலானவர்கள் விதித் திருக்கின்றனர். அவ்விதிகளின் அடிப்படையில் இந்தியாவில் சில விப்ரசிரேஷ்டர்கள் அபரப்பிரயோகம் என்னும் நூல்களை 1930களில் பிரசுரித்துள்ளனர். சம்ஸ்கிருதத்தில் ஆழ்ந்த ஞானமுடையோரே அந்நூல்களை படித்து விளங்கிக்கொண்டு உரிய கர்மாக்களை செய்யவும் செய்விக்கவும் கூடியவராயுள்ளனர். இந்நிலையில் யாழ்ப்பாணம் வடலியடைப்பு ஸ்ரீ அருணாசல சாஸ்திரிகளால் தமிழ் விளக்கத்துடன் பிரசுரிக்கப்பட்ட அபரப்பிரயோகம் என்னும் நூலே புரோகிதர்களுக்கு பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. பிராமண சமூகத்தவரின் வேண்டுகோளுக்கமைய ஸ்ரீ தி.நடனசபாபதி சர்மா அவர்கள் ஆபஸ்தம்ப தகன சம்ஸ்காரம் என்ற நூலை 1993இலும் அதன் தொடர்பாக ஸ்வஸ்தி ஆபஸ்தம்ப சிரார்த்தம் என்னும் நூலை 1995இலும் வெளியிட்டு அளப்பரிய சேவை யாற்றியுள்ளார். தற்போது வெளிவந்துள்ள "தகன ஸம்ஸ்கார" என்ற இந்நூல், வைதீக கிரியைகளை செய்துவைக்கும் உபாத்யாயர்கள் குறைவாக இருக்கும் நிலையில் தகன சம்ஸ்காரத்தில் ஆரம்பத்திலிருந்து தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாக என்ன விடயங்களைச் செய்யவேண்டும் என்பதை விளக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 02443).*

## 395 நாட்டார் வழக்காற்றியல்

### 14398

**ஈழத்தில் திரௌபதை வழிபாடு.** *பாஸ்கரன் சுமன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2019. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xii, 100 பக்கம், விலை: ரூபா 375., அளவு: 21.5x14.5 சமீ.,ISBN:978-955-659-631-1.

இவ்வாய்வு பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயத்தை மையப்படுத்தி கிழக்கிலங்கை திரௌபதை வழிபாட்டுச் சம்பிரதாயங்களை விபரிக்க முனைகின்றது. இவ்வாய்வில் அடிப்படையாக ஆசிரியர், திரௌபதையம்மன் வழிபாடு என்பது தமிழகத்திலிருந்து ஈழத்துக்கான சனவேற்ற காலத்தில் கடத்தப்பட்ட வழிபாடு என்ற கருத்தியலை முன்னிறுத்தி அவற்றின் வரலாற்றை விரிவாக ஆய்வு செய்துள்ளார். பாண்டிருப்பு மாத்திரமல்லாது உடப்பு வரலாற்றையும் அவர் இங்கு பதிவு செய்கின்றார். இன்னொரு உபகூறாக மலையகத்தில் மகாபாரதச் சடங்குடன் தொடர்புடைய "அருச்சுனன் தபசு", சடங்கு நிலையில் நிலை பெற்றிருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றார். இந்தக் குறுக்கம் ஏன் நிகழ்ந்தது என்பதை ஆய்வு வினாவாக முன்வைக்கிறார். தொடர்ந்து அவர் அடையாளப்படுத்தும் ஆலயங்களில் திரௌபதையம்மன் வழிபாடு சடங்காசார முறையில் நிகழ்வதை விபரமாகத் தருகிறார். ஈழத்தின் திரௌபதை வழிபாட்டின் பரவல், பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலயம் (அருச்சுனன் தவநிலைச் சடங்கு, அரவான் களப்பலிச் சடங்கு), மட்டக்களப்புத் திருப்பழுகாமம் திரௌபதையம்மன் ஆலயம், மட்டக்களப்பு கல்லடித்தெரு (பாஞ்சாலிபுரம்) ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம், மட்டக்களப்பு புதுநகர் ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம், மட்டக்களப்பு கற்குடா (மகிழவெட்டுவான்) ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம், மட்டக்களப்பு மட்டிக்கழி ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம், உடப்புத் திரௌபதையம்மன் ஆலயம், பாரத அம்மானை: விரிவடையும் ஆய்வுத் தளங்கள் ஆகிய ஒன்பது இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிழக்கிலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட பாஸ்கரன் சுமன் தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்த்துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார்.

## 14399

**கிராமிய வழிபாடு.** மு.மனோகரன். கொழும்பு 6: மு.மனோகரன், வானதி வெளியீடு, 100/16, றொபேட் குணவர்த்தன மாவத்தை, கிரிலப்பனை, 1வது பதிப்பு, ஜுன் 2000. (கொழும்பு 6: வின்னர்ஸ் அச்சகம், 30, நிஹால் சில்வா மாவத்தை, கிரிலப்பனை).

vi, 70 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14.5 சமீ.

இந்நூல் கிராமிய வழிபாட்டின் தோற்றம், கிராமிய வழிபாட்டில் சடங்குகள், கிராமிய வழிபாட்டில் பொதுத் தன்மைகள், கிராமிய வழிபாடு காணப்படும் பிரதேசங்கள், கிராமிய வழிபாட்டில் பொதுப் பண்புகள், கிராமிய வழிபாட்டில் சிறப்புப் பண்புகள், கிராமிய வழிபாடும் கலைகளும், கிராமிய வழிபாட்டில் ஆண் தெய்வங்கள், கிராமிய வழிபாட்டில் பெண்தெய்வங்கள், கிராமிய வழிபாட்டின் இன்றைய நிலை ஆகிய 10 தலைப்புக்களின் கீழ் இடைநிலை மாணவர்களின் கல்விப் பயன்பாட்டை நோக்காகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் மேல்மாகாண கல்விவள ஆலோசகராகப் பணியாற்றியவர்.

*(இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45298).*

**கிராமிய வழிபாடு.** *மு.மனோகரன். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை,* F.L. *1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 2வது பதிப்பு, செப்டெம்பர் 2018, 1வது பதிப்பு, ஜுன் 2000. (கொழும்பு 13: தேவி பிரின்டர்ஸ்).*

*85 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5*x*15 சமீ.*

*இவ்விரண்டாம் பதிப்பு 11 அத்தியாயங்களைக் கொண்டதாக உள்ளது. கிராமிய வழிபாட்டை ஆற்றுப்படுத்துபவர்கள் என்ற அத்தியாயம் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 64500).*

## 398 கிராமிய இலக்கியங்கள், நாட்டுக்கூத்துக்கள்

### 14400

**காமன் கூத்து: இலங்கை மலையகத் தமிழர் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு.** *பொன். பிரபாகரன். கொழும்பு: புதிய பண்பாட்டு அமைப்பு, 1வது பதிப்பு, மார்ச் 2015. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

xxiii, *127 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-955-42176-0-7.*

*சுமார் 2500 ஆண்டுக்கால வழிபாட்டைக் கொண்ட காமன் வழிபாடு இன்றும் மலையகத்தின் சில பகுதிகளில் இடம்பெறுகின்றது. நூலாசிரியர் இவ்வழிபாட்டின் வழியமைந்த காமன் கூத்து வடிவம் பற்றிய நாட்டார் இலக்கியக் கூற்றினை இந்நூலில் ஆய்வுசெய்துள்ளார். காமன்கூத்தின் வரலாறு, அவற்றின் பாத்திரங்கள், ஒப்பனைகள், அணிகலன்கள், கதையமைப்பு, பாடல்கள் என்ற பல்வேறு அம்சங்களையும் விரிவான ஆய்வுக்குட்படுத்தியுள்ளார். காமன்கூத்து ஒரு வரலாற்று அறிமுகம், மலையக சமூக வரலாற்றில் காமன்கூத்து, பண்டைத்தமிழர் பண்பாட்டில் காமன் மன்மதன் வரலாறும் கருத்தியல் வளர்ச்சியும்-இலக்கிய சாட்சியங்கள், காமன்கூத்து மலையகத் தமிழரின் மரபுரிமை அறிவியலும் தொழில்நுட்பமும், மலையகக் கூத்தின் தனித்துவமும் மண்வாசனையும், அரசியல் அதிகாரமற்ற மக்களின் போராயுதமாக பண்பாடு, பாரம்பரிய கூத்துக்களின் நிகழ்வெளியை பெயர்த்தல் பண்பாட்டுக் கறுவறுப்பின் தொடக்கம், திறந்தவெளி சமூக பாடசாலையாக காமன்கூத்து ஆகிய எட்டு அத்தியாயங்களில் இவ்வாய்வு விரிவாக எழுதப்பட்டுள்ளது.*

### 14401

**சம்பூர்ண அரிச்சந்திரா நாட்டுக்கூத்து.** *ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை (புனைபெயர்: செகராசசிங்கம்), செல்லையா மெற்றாஸ்மயில் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம், 21, முதலாவது*

ஒழுங்கை, பிறவுன் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2004. (யாழ்ப்பாணம்: ஹரிஹரன் பிறின்டேர்ஸ், 47, காங்கேசன்துறை வீதி).

xii, 80 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

அயோத்திய மன்னனான அரிச்சந்திரனையும் அவனது துணைவியார் சந்திரமதியையும் பிரதான கதாபாத்திரங்களாகக் கொண்ட இந்நாட்டுக்கூத்தில், அரிச்சந்திரனின் மந்திரியான சத்தியகீர்த்தி, தரகனான நட்சத்திரையன், தேவர்உலகு அரசனான இந்திரன், பிரம்மபுத்திரனான நாரதர், மகரிஷிகளான வசிட்டர், விசுவாமித்திரர், பிராமணரான காலகண்டர், அரிச்சந்திரனின் மகனான லோகிதாசன், மாயானம் காப்போனான தோட்டி, மற்றும் காசி அரசன் ஆகியோர் பிற பாத்திரங்களாவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 45855).

### 14402

**நாட்டார் பாடல்கள்(தொகுப்பு).** சு. சுசீந்திரராசா, A. சண்முகதாஸ், M.A.நுஃமான், செ.வேலாயுதம்பிள்ளை. கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1976. (ஹோமகம: கூட்டுறவு அச்சகம்).

(6), 98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இந்நூலில் நாட்டார் பாடல்களை பத்து பிரிவுகளாக வகுத்துத் தொகுத்துத் தந்துள்ளனர். வாழ்த்துப் பாடல் (மருத்துவிச்சி வாழ்த்து), தாலாட்டுப் பாடல்கள் (அணில் கோதா மாம்பழமே/ முதிர விளைஞ்ச முத்து/ முத்தாக நீயொருத்தன்/ தம்பி குதிபாய்வான் தன் தாயார் மடிமேலே/ கோவலரே நித்திரையோ/ சீதேவி நித்திரைசெய்/ உபதேசப் பிள்ளை தாராட்டுச் சிந்து), விளையாட்டுப் பாடல்கள் (சாய்ந்தாடு பாவா/ கிட்டியடித்தல்/ கும்மி-1/கும்மி-2/ கோலாட்டம்/ கொம்பு விளையாட்டு/ ஊஞ்சற் பாட்டு), வேடிக்கைப் பாடல்கள் (சந்தமாமா/ ஏண்டி குட்டி/ எலிப் பாட்டு/ சிங்கிலி நோனா), காதற் பாடல்கள் (காதலன் கூற்று/ காதலி கூற்று/ தோழி கூற்று/ காதலன் பிரிவுணர்த்தல்/ காதலர் சல்லாபம்), தொழிற் பாடல்கள் (ஏற்றப் பாட்டு/ ஏர் பூட்டும்போது பாடும் பாடல்/ ஏர்ப்பாட்டு/ அரிவி வெட்டுப் பாடல்/ அறுவடைப் பாடல்/ மீன்பிடிகாரர் பாடல்/ தோணிக்காரன் பாடல்/ தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பாடல்/ சாலை அமைப்போர் பாடல்), ஒப்பாரிப் பாடல்கள் (தாயாரின் ஒப்பாரி/ மனைவியின் ஒப்பாரி/ சீரழிவை யார் மதிப்பார்/ மையத்துப் புலம்பல்), வசந்தன் பாடல்கள் (முயிற்று வசந்தன்/ கிறுகு வசந்தன்/ களரி வசந்தன்), நாடகப் பாடல்கள் (அனுவுருத்திர நாடகம்/ அப்பாஸ் நாடகம்), கதைப்பாடல்கள் (கட்டபொம்மு கதை/ சைத் தூன் கிஸ்ஸா) ஆகிய பிரிவுகளின் கீழ் இப்பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் விளக்கக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 02499).

## 14403

**நாட்டார் பாடற் துளிகள்.** சு.குணேஸ்வரன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அமரர் நடேசன் பொன்னம்பலம் அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு, கெருடாவில், வடமராட்சி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (அல்வாய்: மதுரன் கிராப்பிக்ஸ்).

14 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

அமரர் நடேசன் பொன்னம்பலம் அவர்களின் ஞாபகார்த்தமாக ஈழத்தில் வழங்கி வரும் நாட்டார் பாடல்கள் சிலவற்றை இங்கு தொகுத்து வழங்கியுள்ளார். நாட்டாரியல் இன்று உலகெங்கும் மானிடவியல் சார்ந்த ஆய்வாக விரிவடைந் துள்ளது. நாட்டாரியலின் ஒரு பகுதியாகிய நாட்டார் பாடல்களிலே எமது மக்களின் உயிர்த்துடிப்பான வாழ்க்கையினைக் காணமுடிகின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை பின்னிப் பிணைந்துள்ள நாட்டார் பாடல்கள் இன்றும் எமது மக்களிடம் வாய்வழியாகவும் பேணப்பட்டு வருகின்றது.

## 14404

**பாட்டும் விளையாட்டும்(கிராமியச் செல்வங்கள்).** வெற்றிமகன் (இயற்பெயர்: வெற்றிவேல் விநாயகமூர்த்தி). திருக்கோணமலை: கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1997. (திருக்கோணமலை: பதிப்பகத் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம்).

(12), 32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x14.5 சமீ.

இந்நூல் நாட்டார் வழக்கியலில் புதியதொரு பரிமாணத்தை இனம்காட்டுகின்றது. சுதேச விளையாட்டுக்களுடன் கூடிய பாடல்களை இனம்காட்டும் அதே வேளையில் சுதேச விளையாட்டுக்கள் சிலவற்றையும் எமக்கு அறிமுகம் செய்கின்றது. தோற்றுவாய், கிராமிய இலக்கியச் செல்வங்கள், நாலாதிசையிலும் நாடோடி இலக்கியம், கிட்டி விளையாட்டு (பாட்டு), தும்பி விளையாட்டு, கண் பொத்தி விளையாட்டு, ஆடு-புலி விளையாட்டு, தெப்ப விளையாட்டு ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22109).

**மேலும் பார்க்க: பாஷையூரும் நாட்டுக்கூத்தும். 14982**

**கூத்துக் கலைஞர் சி.விஜேந்திரனுடனான நேர்காணல். 14509**

# 400 மொழியியல்

## 420 ஆங்கில மொழி

### 14405

**கொடகே சதர்த்தவாஹினி வாணி கற்பகம் ஆங்கில-தமிழ் அகராதி.** *வஜிர பிரபாத் விஜயசிங்க. கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661,665,675 பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2018. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).*

*(7), 8-1792 பக்கம், விலை: ரூபா 3500., அளவு: 22.5x14.5 சமீ.,* ISBN*: 978-955-30-9653-1.*

*கொடகே நிறுவனம் வெளியிட்டுள்ள பாரிய ஆங்கில-தமிழ் அகராதி இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65505).*

## 491.2 சமஸ்கிருத மொழி

### 14406

**சம்ஸ்கிருத முதற் பாலபாடம்.** *ச.சுப்பிரமணிய சாஸ்திரி. பருத்தித்துறை: ச.சுப்பிரமணிய சாஸ்திரி, தருமாலய வெளியீடு, வித்தியாவிருத்தித் தருமகர்த்தா, 3வது பதிப்பு, 1948. (பருத்தித்துறை: கலாநிதி யந்திரசாலை).*

*30 பக்கம், விலை: 50 சதம், அளவு: 18x12 சமீ.*

*தமிழ்மூலம் சம்ஸ்கிருதம் கற்கும் மாணவர்களுக்கான முதலாவது தரத்திற்கான பாலபாட நூல் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30799).*

## 491.48 சிங்கள மொழி

### 14407

**அரசகரும மொழித் தேர்ச்சி மேலதிக வாசிப்பு நூல்: எழுத்துச் சிங்களம்.** *அரசகரும மொழிகள் திணைக்களம். கொழும்பு: அரசகரும மொழிகள் திணைக்களம், தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு, பாஷா மந்திரய, 341/7, கோட்டே வீதி, ராஜகிரிய, 1வது பதிப்பு, 2018. (கொழும்பு 8: அரசாங்க அச்சுத் திணைக்களம், 188, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை).*

xvi, *218 பக்கம், விலை: ரூபா 550.,அளவு: 29.5x21 சமீ.,* ISBN*: 978-955-9180-44-9.*

*இந்நூலில் தமிழ்மூலம் சிங்கள மொழியைக் கற்பதற்கான 108 பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உங்களுக்குப் பழக்கமான உயிர் எழுத்துக்கள், உங்களுக்குப் பழக்கமில்லாத உயிர் எழுத்துக்கள், உங்களுக்குப் பழக்கமான எழுத்துக்கள், உங்களுக்குப் பழக்கமில்லாத எழுத்துக்கள் - வன்மையானவை,*

*உங்களுக்குப் பழக்கமில்லாத மஹாப்ராண எழுத்துக்கள், உங்களுக்குப் பழக்கமில்லாத சஞ்ஞுக்க எழுத்துக்கள், பூச்சியம், பூச்சியத்தின் பலம், தன்தஜ, மூர்த்தஜ எழுத்துக்கள் என இன்னோரன்ன 108 பாடங்கள் மூலம் எழுத்துச் சிங்களம் தமிழ்மொழி மூலம் விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65462).*

### 14408

**சிங்கள போதினி.** *நா.சுப்பிரமணியம். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், த.பெட்டி 160, 1வது பதிப்பு, ஜுலை 1955. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி).*

*(10), 118 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 1.00, அளவு: 17.5x11.5 சமீ.*

*இந்நூல் 25 பாடங்களில் சிங்கள மொழியை தமிழில் விளக்குகின்றது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 09621).*

### 14409

**தமிழ்-சிங்கள அகராதி: இரண்டாம் மொழி.** *தேசிய கல்வி நிறுவகம். மஹரகம: தொலைக்கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2019. (கொழும்பு:* Smart Print Solutions Centre, *230/15, கம்மல வீதி, கிரிவத்துடுவ, ஹோமாகம).*

xi, *252 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.*

*தமிழையும் சிங்களத்தையும் இரண்டாம் மொழியாகக் கொண்டு மொழிக்கல்வி பயிலும் மாணவர்களுக்கேற்ற வகையில் இந்த தமிழ்-சிங்கள அகராதி தயாரிக்கப் பட்டுள்ளது. மாணவர் நன்மை கருதி அகராதியின் இறுதியில் இணைப்பாக இணைப்பிடைச் சொற்கள், இணைப்பிடைச் சொற்கள் உள்ள சில வாக்கியங்கள், இலக்கங்கள், இலக்கணச் சொற்கள், இரட்டைக் கிளவி, உடல் உறுப்புக்கள், உணவுப் பொருட்கள், உயிர்க்குறிகள், ஊர்வன, கிழமை நாட்கள், குடும்ப அங்கத்தவர்கள்-உறவுமுறை, சுவைகள், தானியங்கள், திசைகள், நிறங்கள், நிறுத்தக் குறியீடுகள், பதவிகள்/தொழிற் பெயர்கள், பழங்கள், பறவைகள், பாடங்கள், பூக்கள், பூச்சி இனங்கள், கடல்வாழ் உயிரினங்கள், மரங்கள், மரக்கறி/கீரை வகைகள், மாதங்கள், மிருகங்கள்/பிராணிகள், மூலிகைகள்/மருந்துப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், விழாக்கள், வினாச்சொற்கள், வினாச்சொற்கள் கொண்ட சில வாக்கியங்கள் ஆகிய 32 தலைப்புகளின் கீழ் சொற்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 64664).*

### 14410

**பேச்சுச் சிங்களம் (Bahashana Sinhala Mattama 3).** *எஸ்.ஜே.யோகராஜா, டயனா குமாரி இத்தமல்கொட. ராஜகிரிய: அரசகரும மொழிகள் திணைக்களம், பாஷா மந்திரய, கோட்டே வீதி, 3ஆவது பதிப்பு, 2019, 1வது பதிப்பு, 2008, 2வது பதிப்பு, 2012. (கொழும்பு: அரச பதிப்பகத் திணைக்களம்).*

xi, 201 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-955- 9180-23-4.

அரசகரும மொழிகள் கொள்கையை பயனுள்ள வகையில் செயற்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கிலே பல வேலைத்திட்டங்கள் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றாக இந்நூல் வெளியீடும் அமைந்துள்ளது. தமிழ்அரச ஊழியர்கள் சிங்களப் பிரதேசங்களில் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அடிப்படை பேச்சுச் சிங்களத்தில் தேர்ச்சிபெறும் வகையில் இதிலுள்ள பாடத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடமும் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. முதலாவது பகுதியில் எழுத்துக்களின் அறிமுகமும், இரண்டாவது பகுதியில் ஏற்கெனவே 1வது பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்துக்களுக்குரிய சொற்களும் தரப்பட்டுள்ளன. மூன்றாவது பகுதியில் பேச்சுப் பயிற்சியும், நான்காவது பகுதியில் அதற்குரிய இலக்கணமும் விளக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது பகுதியில் பொருத்தமான பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65459).

### 14411

**பேச்சு சிங்களம்: அரசகரும மொழிகள் தேர்ச்சி-மேலதிக வாசிப்பு நூல்.** ஜே.பீ. திசாநாயக்க. கொழும்பு: அரசகரும மொழிகள் திணைக்களம், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு, பாஷா மந்திரய, 341/7, கோட்டே வீதி, ராஜகிரிய, 1வது பதிப்பு, 2017. (நுகேகொட: இமாஷி அச்சகம், இல. 96A, வனாத்த வீதி, கங்கொடவில).

viii, 9-188 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 29.5x20.5 சமீ., ISBN: 978-955-9180-43-2.

அறிமுகம், பேசும் முறை, சொற்களஞ்சியம் ஆகிய மூன்று பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் எழுத்தாளராக பேராசிரியர் ஜே.பீ.திசாநாயக்கவும், தமிழ் மொழிபெயர்ப்பு மற்றும் கணனித் தட்டெழுத்தாளர்களாக அரச கரும மொழிகள் திணைக்களத்தைச் சேர்ந்த திருமதி எம்.ஜீவராணி, செல்வி ஜே.பீ. பல்லவி ஆகியோரும், செவ்வை பார்த்தலில் திரு. எஸ்.சிவகுருநாதன் அவர்களும் உதவியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65463).

## 494.8 தமிழ் மொழி

### 14412

**இலங்கையில் தமிழியல் ஆய்வுகள்.** அ.சண்முகதாஸ். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2019. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 268 பக்கம், விலை: ரூபா 850., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-624-3.

தமிழ் இலக்கிய, இலக்கண ஆய்வுகளே தமிழாய்வு என முன்னர் கருதப்பட்டது. ஆனால் இன்று தமிழ் ஆய்வு என்பது தமிழியல் ஆய்வு என விரிவடைந்துள்ளது. தமிழ் இலக்கியம் இலக்கணம், தமிழ் மொழியியல், தமிழ் நாட்டார் வழக்காற்றியல், தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு, தமிழ் இசை, தமிழ் நாடகம், தமிழ் மருத்துவம், தமிழ்க் கல்வி முதலிய பல ஆய்வுக் களங்களை உள்ளடக்கியதாக தமிழியல் ஆய்வு அமைகின்றது. இந்நிலையில் இலங்கையில் இடம்பெற்ற தமிழியல் ஆய்வு முயற்சிகளை வரலாறு, பண்பாடு, இலக்கியம், மொழி, நாட்டார் வழக்கியல், அவைக்காற்று கலை, இதழியலும் பொதுமக்கட் சாதனமும், கல்வி, பிற ஆய்வுகள் ஆகிய தலைப்புகளினூடாக இந்நூல் விபரிக்கின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாட் பேராசிரியரான பேராசிரியர் அ.சண்முகதாஸ், தனது இளங்கலைமாணிப் பட்டத்தினையும் முதுகலைமாணிப் பட்டத்தினையும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டவர். முனைவர் பட்டத்தினை பிரித்தானியாவின் எடின்பரோ பல்கலைக்கழகத்தில் பெற்றவர். தமிழ்த்துறை, மொழிப்பண்பாட்டுத்துறை, இசைத்துறை ஆகியவற்றின் தலைவராகவும் கலைப் பீடாதிபதியாகவும், உயர்பட்டப் பீடாதிபதியாகவும் பதில் துணைவேந்தராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர்.

## 14413

**தமிழர் உறவுமுறைச் சொல்வழக்கு அகராதி.** வீ.பரந்தாமன். கிளிநொச்சி: பண்டிதர் வி.பரந்தாமன், கவின் கலைக் கல்லூரி, கனகபுரம், 1வது பதிப்பு, 2015. (யாழ்ப்பாணம்: நோபிள் பிறின்ரேர்ஸ்).

*56 பக்கம், விலை: ரூபா 150.00, அளவு: 19.5x14.5 சமீ.*

உறவுமுறைச் சொற்கள் ஒருவரை விளிக்கவும் (அழைக்கவும்) ஒருவரின் உறவுமுறை குறித்துச் சுட்டவும், சுற்றத்தின் தொடர்பு அல்லது உறவுநிலை அல்லது தன்மை பற்றிக் குறிக்கவும் வழங்கப்படுகின்றன. ஒருவரை பெயர்கூறி அழைப்பது சமூகத்தில் மதிப்புக் குறைவாகக் கருதப்பட்ட ஒரு காலம் எம்மிடையே இருந்துள்ளது. இந்நூலில் செழுமைமிகு தமிழரின் குடும்ப உறவுமுறைச் சொற்கள் அனைத்தையும் ஒரு தனிநூலில் கண்டு வியக்க முடிகின்றது. தமிழர் கூட்டுக் குடும்ப வாழ்க்கையுடையராய் இருந்தமையால் அவரிடையே உறவுமுறைச் சொற்கள் மிகப் பலவாகப் பெருகியுள்ளன. ஏழு தலைமுறைக்குத் தொடர்ந்த உறவுமுறைச் சொற்கள் உள்ளன. அவ்வுறவுமுறைச் சொற்களைத் தொகுத்து பண்டிதர் அவர்கள் இவ்வகராதியை உருவாக்கியுள்ளார். யாழ்ப்பாண அகராதி, தமிழ்ப் பேரகராதி, கலாநிதி சுபதினி ரமேஷின் ஈழத்துத் தமிழ்ச் சிறப்புச் சொற்கள் ஆகிய நூல்களுடன் ஒப்பிட்டு அவற்றுடன் அவற்றில் பதிவுபெறாத புதிய சொற்களையும் சேர்த்து இத்தொகுப்பினை ஆசிரியர் மிகுந்த உழைப்பினை நல்கி உருவாக்கியுள்ளார். பெற்றோர் அவர் உடன் பிறப்புகள் ஆகியோர், அவரின் பிள்ளைகள், அப்பிள்ளைகளின் பிள்ளைகளிடையே வழிவழியாக வரும் உறவு அரத்த உறவாகும். ஏனைய உறவு மணத்தாலும் அன்பு, நட்பு ஆகிய பிறவாலும் வரும். ஒரு கொடி வழியில் (கோத்திரம்) வந்த உறவுமுறையினர் அரத்தவுறவினராகக்

குறிப்பிடப்படுகின்றார். அடி, இனம், இனவழி, உரிமை, உறவு, கால்வழி, கான்முளை, கொடிவழி, கோத்திரம், சந்ததி, சரவடி, சுற்றம், சொந்தம், தலைமுறை, பரம்பரை, பரவணி, முறை, வமிசம், வழி ஆகிய இவையும் பிறவும் உறவுமுறைத் தொடர்ச்சியைக் குறிக்கும் பொதுச்சொற்களாகும். ஏழு தலைமுறைக்கு முறைப்பெயர்கள் வழங்கியிருந்தமையை இந்நூல்வழியாக நாம் காணமுடிகின்றது.

## 14414

**தமிழ் எழுத்துக்கள்.** நூலாசிரியர் குழு. கொழும்பு: அரசகரும மொழிகள் திணைக்களம், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு, பாஷா மந்திரய, 341/7, கோட்டே வீதி, ராஜகிரிய, 2வது பதிப்பு, 2016, 1வது பதிப்பு, 2015. (கொழும்பு 8: அரசாங்க அச்சுத் திணைக்களம், 118, பேஸ்லைன் வீதி).

x, 182 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-955-1948-02-3.

அறிமுகம், அடிப்படைத் தமிழ் எழுத்துக்கள், உயிர்மெய் எழுத்துக்கள், கிரந்த எழுத்துக்கள், பொது நிறுவனங்கள் பெயர் வரிசை, பொதுச் சொற்றொகுதி ஆகிய ஆறு பாடத்தலைப்புகளில் எழுதப்பட்ட இந்நூலின் இறுதியில் பின்னிணைப்பும் இடம்பெற்றுள்ளது. தமிழ் மொழியை வாசிக்கவும் எழுதவும் உதவும் வகையில் அவற்றின் எழுத்து முறையில் தேர்ச்சியை ஏற்படுத்துவதே இந்நூலின் நோக்கமாகும். நூலாசிரியர் குழுவில் கே.என்.ஓ.தர்மதாச, ஜே.பீ.திசாநாயக்க, எஸ்.தில்லைநாதன், எம்.ஏ.நுஃமான், எஸ்.ஜே.யோகராசா, சந்தகோமி கோப்பறஹேவா, தினாலி பெர்னாந்து, விஜிதா சிவபாலன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65464).

## 14415

**தமிழ் தலைப்புச் சொற்களுடன் முழுமையான பிரயோக மும்மொழி அகராதி.** எழுத்தாளர் குழு. கொழும்பு: அரசகரும மொழிகள் திணைக்களம், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு, பாஷா மந்திரய, 341/7, கோட்டே வீதி, ராஜகிரிய, 1வது பதிப்பு, 2019. (கொழும்பு 8: அரசாங்க அச்சுத் திணைக்களம், 118, பேஸ்லைன் வீதி).

555 பக்கம், விலை: ரூபா 3000., அளவு: 24x18.5 சமீ., ISBN: 978-955-9180-41-8.

தற்போதைய அரச கரும மொழிகள் கொள்கையான மும்மொழி கோட்பாட்டினை செயற்படுத்தல் மற்றும் மும்மொழி தொடர்பான வசதிகளை திட்டமிடும் பொறுப்புள்ள பிரதான அரச நிறுவனம் அரசகரும மொழிகள் திணைக்களமாகும். முதன்முறையாக தமிழ் தலைப்புச் சொற்களுடன் பிரயோக மும்மொழி அகராதி (Comprehensive Practical Trilingual Dictionary with Tamil Headwords) ஒன்றினை மிகவும் குறுகிய கால எல்லைக்குள் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் 60ஆம் ஆண்டு நிறைவு நிமித்தமாகப் பிரசுரித்துள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65465).

## 14416

**தமிழியல் தடங்கள்.** அருட்திரு தமிழ்நேசன் அடிகள் (இயற்பெயர்: அருட்திரு பாவிலு கிறிஸ்து நேசரெட்ணம்). மன்னார்: கலையருவி வெளியீடு, சமூகத் தொடர்பு அருட்பணி மையம், மன்னார் மறை மாவட்டம், புனித சூசையப்பர் வீதி, பெற்றா, 1வது பதிப்பு, டிசம்பர் 2017. (மன்னார்: ஸ்கை பிரின்டர்ஸ்).

xiii, 146 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-7351-02-5.

தமிழியல் சார்ந்து ஆய்வுநோக்கில் எழுதப்பட்ட கட்டுரைகள் இவை. "தமிழும் தனிநாயக அடிகளும்" என்ற முதலாவது பிரிவில் தமிழை சர்வதேச மயப்படுத்தியதில் தனிநாயகம் அடிகளாரின் தனித்துவமான பங்களிப்பு, தமிழில் அச்சேறிய முதல் நூல்களும் அவற்றைக் கண்டுபிடித்த தனிநாயகம் அடிகளாரின் பெருமுயற்சியும், ஈழத் தமிழரின் உரிமைகளுக்காக உரத்துக் குரல் கொடுத்த தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் ஆகிய கட்டுரைகளும், "தமிழும் செம்மொழித் தகுதியும்" என்ற இரண்டாவது பிரிவில் தமிழின் செம்மொழித் தகைமை, தமிழின் செம்மொழித் தகுதியை நிலைநாட்டிய பேராசிரியர் ஜோர்ஜ் எல். ஹார்ட், தமிழ் மொழியின் தனித்தன்மையை நிலைநாட்டிய வெளிநாட்டுத் தமிழறிஞர் டாக்டர் கோல்டுவெல், தமிழின் செம்மொழித் தகுதியை நிலைநாட்டிய அறிஞர்களின் கருத்துக்கள் ஆகிய கட்டுரைகளும், "தமிழும் இலக்கியமும்" என்ற மூன்றாவது பிரிவில், இலக்கியத்தின் இயல்பும் அதன் சமூக ஊடாட்டமும், இலக்கியத்தின் உள்ளீடாக அமையவேண்டிய மானிட உண்மைகள், நவீன கவிதைகளில் சமகாலப் பண்பாடு, இலங்கைத் தமிழ் ஆய்வில் பெண்கள் ஆகிய கட்டுரைகளும், "தமிழும் கிறிஸ்தவமும்" என்ற நான்காவது (இறுதிப்) பிரிவில் பண்பாட்டுச் சூழமைவில் கிறிஸ்தவம், ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் தோன்றிய முதல் கிறிஸ்துவ இலக்கியம் சந்தியோகுமையோர் அம்மானை, கத்தோலிக்க புலவர்களின் வரலாற்றைக் கூறும் மன்னார் மாதோட்டத் தமிழ்ப் புலவர் சரித்திரம் ஆகிய கட்டுரைகளும் என மொத்தம் 14 படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. மேலதிகமாக எட்டு புகைப்படங்களின் பின்னிணைப்புகளும் இறுதியில் காணப்படுகின்றன.

## 14417

**நடைமுறைத் தமிழ் வழிகாட்டி: அகரமுதலி.** தமிழ் வளர்ச்சிக் கழகம். இலங்கை: தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழீழ விடுதலைப் புலிகள், 1வது பதிப்பு, மே 1993. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(4), 59 பக்கம், விலை: ரூபா 35.00, அளவு: 20x14.5 சமீ.

"தமிழ்ப் பெயர்க் கையேடு மக்கட்பெயர் 46000" என்ற நூலைத் தொடர்ந்து வெளிவரும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் இரண்டாவது வெளியீடு இதுவாகும். நூலின் மேலட்டையில் "நடைமுறைத் தமிழ் வழிகாட்டி: அகரவரிசை" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வட சொற்களும் திசைச் சொற்களுமாகக் காலம்தோறும் தமிழிடையே பிற சொற்கள் எண்ணுக்கணக்கற்று வந்து கலந்துள்ள நிலையில் நாள்தோறும் எம்மிடையே பேச்சிலும் எழுத்திலும் தமிழ்ச் சொற்களைக் கையாளத் தூண்டும் நோக்கில் இந்த வடசொல்-தமிழ்ச்சொல் அகரமுதலி (அகராதி)

வெளியிடப்பட்டுள்ளது. இடப்புறம் தடித்த எழுத்துக்களில் உள்ள பிறமொழிச் சொற்களுக்கு எதிரே வலப்புறத்தில் மெல்லிய எழுத்துக்களில் தூய தமிழ்ச் சொற்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 14418

**நீரரர் நிகண்டு.** க.தா.செல்வராஜகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்), திருமதி பி.ப.செல்வராஜகோபால் (பதிப்பாசிரியர்). களுவாஞ்சிக்குடி: ஜீவா பதிப்பகம், பிரதான வீதி, தோற்றாதீவு, 1வது பதிப்பு, 1984. (தோற்றாதீவு: மனோகரா அச்சகம்).

(8), 34+12 பக்கம், விலை: இந்திய ரூபா 5.00, அளவு: 21x14.5 சமீ.

ஈழத்துப் பூராடனார் செய்யுள் நடையில் எழுதியுள்ள நிகண்டு இதுவாகும். அவரது துணைவியார் செய்யுள்களுக்கான விளக்கவுரை தந்துள்ளார். ஈழத்துப்பூராடனார் அவர்கள் 35 ஆண்டுகள் தேடித் திரட்டிய சொற்களை, உயர்திணைப் பெயர் மஞ்சரி (11 செய்யுள்), அஃறிணைப் பெயர் மஞ்சரி (12 செய்யுள்கள்), தொழிற்பெயர் மஞ்சரி (26 செய்யுள்கள்), இடப்பெயர் மஞ்சரி (9 செய்யுள்கள்), கலாசாரச் சொல் மஞ்சரி (23 செய்யுள்) என ஐந்து வகையாகப் பகுத்து இந்நூலை எழுதியிருக்கிறார். மட்டக்களப்பு மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் சொற்கள் இந்த நூலில் உள்ளன. 1984 இல் முதல்பதிப்பும், 1987 இல் இரண்டாம் பதிப்பும் கண்டது. (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 1024).

### 14419

**மட்டக்களப்புச் சொல்வெட்டு.** ஈழத்துப் பூராடனார் (இயற்பெயர்: கா.தா. செல்வராசகோபால், மூலம்), பி.ப.செல்வராசகோபால் (தொகுப்பாசிரியர்). களுவாஞ்சிக்குடி: ஜீவா பதிப்பகம், தோற்றாத்தீவு-2, 1வது பதிப்பு, 1984. (களுவாஞ்சிக்குடி: செ.இதயசோதி பெஞ்சமின், மனோகரா அச்சகம், தோற்றாத்தீவு).

40 பக்கம், விலை: ரூபா 10.00, அளவு: 21x14 சமீ.

மட்டக்களப்புச் சொல்வெட்டு என்னும் நூலில் அறிஞர் ஈழத்துப்பூராடனார், மட்டக்களப்பில் வழக்கிலுள்ள சில சொற்கள் சங்க இலக்கிய நூல்களிலும் வழக்கிலிருப்பதைச் சிறப்பாக ஆய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். சங்க இலக்கியச் சொற்களான கிளை, கல்லை வைத்தல், தூளியில் வைத்தல், முல்லைக்காரன், கடுக்கன், வண்ணக்கர், குடிதை, கட்டாடி, கட்டாடியார், பரிகாரி, பரிகாரியாள், கலத்திற் போடல், கால் மாறுதல், பரத்தை என்னும் சொற்கள் மட்டக்களப்புப் பகுதியில் எவ்வாறு இன்றும் வழக்கிலிருக்கின்றன என்பதை ஆராய்கின்றார். (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது).

### 14420

**மும்மொழிச் சொற்களஞ்சியம் (தமிழ்-ஆங்கிலம்-சிங்களம்).** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: நிறுவன அபிவிருத்திப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2010. (மஹரகம: அச்சகம், தேசிய கல்வி நிறுவகம்).

xxxv, *154 பக்கம், விலை: ரூபா 380.00, அளவு: 25.5x18.5 சமீ.*

*இந்திய மொழிகளுக்கான நடுவண் மையத்தின் ஆலோசனையுடன் தயாரிக்கப் பட்டுள்ள மும்மொழிச் சொற்களஞ்சியமானது இரண்டாம் மொழியாகத் தமிழை அல்லது சிங்களத்தினைப் புதிதாகக் கற்கும் ஒருவருக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த நூலாக அமைந்துள்ளது. மொழியியல் ஒலிப்பு முறைக்கு அமைவாக சொற்களை முறையாக ஒலிக்கும் முறை உள்ளடக்கப்பட்டுள்ளமை இதன் விசேட அம்சமாகும். இரண்டாம் தேசிய மொழியை முதன்முறையாகப் பயிலும் ஒருவருக்கு இது மிகப் பிரயோசனமாக அமையும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65697).*

## 14421

**மொழிபெயர்ப்பு மரபு.** *எப்.எக்ஸ்.சி.நடராஜா (இயற்பெயர்: பிரான்சிஸ் சேவியர் செல்லையா நடராசா). கொழும்பு: கலைமகள் கம்பெனி, 124 செட்டியார் தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 1954. (சென்னை 1: ஸ்ரீமகள் அச்சகம்).*

*40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.*

*"செந்தமிழ்" என்னும் சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரையின் நூலுரு இதுவாகும். "வேற்று மொழிகளிற் பயின்றுவரும் கலைப்பொருளைச் செந்தமிழில் மொழிபெயர்த்துப் பயின்று வரும் வழக்கம் தமிழகத்திற்குப் புதியதன்று. வழி நூல்கள் தோன்றும் முறையை வகுத்துக் கூறு முகத்தான், ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியர் தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்ததர்ப்பட யாத்தலோடன மரபினவே என்று சூத்திரஞ் செய்துள்ளார். "மொழிபெயர்த்து அதர்ப் படயாத்தல்" என்ற முறைமைப் பிரகாரம் வழி நூல் தோற்றுதல் கூடுமென்பது ஆசிரியர் கருத்தாகும். அந்தக் காலத்தில் சங்கத மொழியினின்றும் பல நூல் கள் தமிழ் மொழியினதர்ப்பட, மொழிபெயர்க்கப்பட்டுண்டு. இந்தக் காலத்தில் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு, தமிழ் நூல்கள் ஆக்கப்பட்டு வருதல் கண் கூடு. ஆனால் அதர்ப்பட யாத்தல் நடைபெறுவது குறைவு. தற்காலத்தில் மொழிபெயர்க்கின்ற ஆசிரியர்கள் வார்த்தைக்கு வார்த்தை வைத்து மொழிபெயர்க் கின்றார்களேயன்றி நெறிப்பட யாத்துத் தமிழ்மரபு வழுவாது, வேற்றுமொழி கோரிய பொருளைப் போற்று தமிழில், சீரிய வார்த்தைகளிற் பொதிந்து தருகின்றார்களில்லை. மொழிபெயர்ப்புக் கலைக்கு, எடுத்துக்கொண்ட இரு மொழி மரபினையும் அறிதல் வேண்டற்பாற்று." (நூலாசிரியர்). (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18945).*

## 14422

**மொழிபெயர்ப்புக் கலை.** *அ.க.சுப்பிரமணியம். கொழும்பு: அ.க.சுப்பிரமணியன், 43,கெஸ்பாவ வீதி, பொரளஸ்கமுவ, 1வது பதிப்பு, 1954. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், தபாற்பெட்டி இலக்கம் 1183).*

xvii, *107 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18x12 சமீ.*

அர்ப்பணம், அணிந்துரை (சேவியர் தனிநாயகம்), சிறப்புரைகள் (சுவாமி ஜே. மதுரநாயகம், சு.நடேசபிள்ளை, சேர். கந்தையா வைத்தியநாதன், முதலியார் செ.சின்னத்தம்பி, ஆத்மஜோதி கௌரவ ஆசிரியர் க.இராமச்சந்திரன், ஏ.எம்.ஏ. அஸீஸ்), முன்னுரை (அ.சுப்பிரமணியம்) ஆகியவற்றுடன் தொடங்கும் இந் நூலில் மொழிக்கு காரணம் உணர்ச்சி, மொழிப்பெயர்ப்பில் உணர்ச்சிப்பெருக்கு, கிறீஸ்துவப் பாதிரிமார் காட்டிய வழி, மொழி மரபு, கடிதங்களில் மரபு வழுவாமை, எழுத்திலக்கண நெறி பிறழாமை, எளிமையும் இனிமையும், சட்ட சம்பந்தமான மொழிபெயர்ப்பு, கலைச் சொற்கள், மொழிபெயர்ப்பில் பிறமொழிக் கலப்பு, கிரந்த எழுத்துக்கள், முடிவுரை ஆகிய பன்னிரு இயல்களில் மொழிபெயர்ப்புக் கலை பற்றிய விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. கொழும்பு விவேகானந்த சபைப் புத்தகசாலையினரை (இல. 34, மேட்டுத் தெரு, கொழும்பு 13) ஏக விநியோகஸ்தராகக் கொண்டு இந்நூல் வெளியிடப்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26763).

### 14423

**மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும்.** மு.கணபதிப்பிள்ளை. சென்னை 17: அருள் நிலையம், 12, உஸ்மான் ரோடு, 1வது பதிப்பு, 1967. (சென்னை 17: சௌந்தரா பிரிண்டர்ஸ்).

76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை பருத்தித்துறை புலோலி என்ற கிராமத்தில் தமிழ் வித்துவப் பரம்பரையில் பிறந்தவர். இலங்கை அரச மொழித் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றியவர். இலங்கை வானொலியிலும், இலக்கிய மேடைகளிலும் மற்றும் இலக்கிய நூலுருவாக்கத்திலும் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தவர். இவரது மனைவி தனபாக்கியம் ஒரு வயலின் இசைக்கலைஞர். இலங்கை வானொலிக் கலைஞர் கமலினி செல்வராஜன் இவர்களது மூத்த மகள் ஆவார். தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ் மொழி/தமிழ் இலக்கியம் தொடர்பாக அவ்வப்போது எழுதியிருந்த சுவையான கட்டுரைகள் ஆறின் தொகுப்பு இது. மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும், "பன்றியிரும்பு"ப் பதம் பார்த்த கதை, "திணைக் களம்" வந்த கதை, பாயிரமும் மதிப்புரையும், விமரிசனமும் மதிப்புரையும், சொல்லாக்கம் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18944).

## 494.8(01) தமிழ் மொழி ஆய்வுச் சிறப்பிதழ்கள்

### 14424

**இலங்கை மட்டக்களப்பு தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் மதிப்பீடு.** வே.அந்தனிஜான் அழகரசன். சென்னை 600015: தவத்திரு வே.அந்தனிஜான் அழகரசன், சின்னமலை

*ஆலயம், சைதாப்பேட்டை, 1வது பதிப்பு, ஜுலை 1976. (சென்னை 600005: வைரம் அச்சகம்).*

*52 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 2.25, அளவு: 19x12 சமீ.*

*மட்டக்களப்பில 1976ஆம் ஆண்டு பங்குனி 19,20,21 ஆம் நாட்களில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் நினைவலைகளின் பதிவு. 2014ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு தோற்றுவித்திருந்த எழுச்சி அலைகளால், பின்னாளில் தமிழர் பிரதேசங்களில் பல தமிழாராய்ச்சி மாநாடுகள் பிரதேச மட்டத்தில் நடைபெற்று வந்தன. அவ்வகையில் நடந்தேறிய மட்டக்களப்புத் தமிழாராய்ச்சி மாநாட்டின் தொடக்க விழா மட்டக்களப்பு மாநகர சபையிலும், ஆய்வுக் கருத்தரங்குகள் கல்லடி-உப்போடை விபுலாநந்தர் மணிமண்டபம், கோட்டைமுனை-ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றிலும் நடந்திருந்தன. இம் மூன்று நாட்களிலும் நடந்த நிகழ்ச்சிகள் பற்றி, பொதுமக்கள் கொண்டிருந்த எண்ணத்தை சீர்தூக்கிப் பார்ப்பதாக இந்நூல் அமைகின்றது. மாநாட்டில் கட்டுரைகளைச் சமர்ப்பித்த தமிழறிஞர்களின் புகைப்படங்களும் அவர்கள் பற்றிய பல தகவல்களும் இந் நூலில் வழங்கப்பட்டிருப்பது சிறப்பாகும். (இந்நூல் சென்னை 600113, தரமணி, ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84396).*

## 14425

**இன்பத் தமிழும் இலங்கையரும்: நான்காவது ஐரோப்பியத் தமிழ் ஆய்வியல் மாநாடு-ஆய்வரங்க மலர் (இரண்டாம் பாகம்).***சதாசிவம் சச்சிதானந்தம் (பதிப்பாசிரியர்). பன்னாட்டு உயர்கல்வி நிறுவனம்,* Institut International des Etudes Superieures, 70, Rue Philippe de Girard 75018, Paris*, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2019. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).*

x*, 336 பக்கம், விலை: 15 இயூரோ, அளவு: 24*x*18.5 சமீ.*, ISBN: *978-29-51012-27-1.*

*நான்காவது ஐரோப்பியத் தமிழ் ஆய்வியல் மாநாடு பாரிசில் 28,29 செப்டெம்பர் 2019இல் நடைபெற்றது. இவ்வாய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட தமிழியல் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். ஈழத்துப் பெண் ஆளுமைகள் (சுபதினி ரமேஸ்), பேரா.சிவத்தம்பியின் பன்முக ஆளுமை (ஏ.என்.கிருஷ்ணவேணி), ஈழத்தமிழரின் தமிழ் நூல்களை ஆவணப்படுத்துவதில் நூல்தேட்டத்தின் பங்களிப்பு (என்.செல்வராஜா), ஆறுமுக நாவலர் செய்த பைபிள் மொழிபெயர்ப்பு (சோ. பத்மநாதன்), தமிழகத்தில் தமிழ் வளர்த்த இலங்கைத் தமிழ் அறிஞர்கள் (ரவிசந்திரிகா), 19ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் பார்வையும் பதிவும் (சின்னத்தம்பி பத்மராஜா), இலங்கைப் புலவர்களின் குழந்தைப் பாடல்கள் (ராஜினி வைத்தீஸ்வரன்), குறிஞ்சித் தமிழனும் தமிழ் மொழியும் (கலா சந்திரமோகன்), சிங்கள அறிஞர்களின் தமிழ்த் தொண்டு: பேராசிரியர்* W.S.*கருணாதிலக அவர்களின் தமிழ்ப்பணி குறித்த ஓர் ஆய்வு (விஜிதா திவாகரன்), தமிழ் வளர்ச்சிப் பணியில் சிங்களவர் (விநோதினி அறிவழகன்), தமிழ்மொழியும்*

*இலங்கைவாழ் சிங்களவர்களும்-ஒரு சமூகவியல் பார்வை (மல்லிகாதேவி நாராயணன்), இஸ்லாமியத் தமிழ்க் கவிதை இலக்கியத்திற்கு இலங்கை இஸ்லாமியர்களின் பங்களிப்பு (ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), புகழ் அருள்வாக்கி: ஆ.பி.அப்துல் காதிர் புலவரின் வாழ்வும் தமிழ் இலக்கிய முயற்சிகளும் (M.N.F.ருஸ்னா), இசுவா அம்மானை போதிக்கும் கற்பொழுக்கமும் இறைநேசிப்பும் (சின்னத்தம்பி சந்திரசேகரம்), தவத்திரு டாக்டர் சேவியர் தனிநாயகம் அடிகள் (மைதிலி), மலையகச் சமூகப் பின்புலத்தில் கோ.நடேசையரின் வகிபாகம் (பெருமாள் சரவணகுமார்), இலங்கைத் தமிழ் நாடகத் துறையில் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் வகிபாகம் (S.R.தேவகுமாரி), ஈழத்துத் தமிழ் நாடகச் செல்நெறியில் வித்தியானந்தனின் பங்களிப்பு (பாஸ்கரன் சுமன்), ஈழத்து கலை இலக்கியச் செல்நெறியில் பேராசிரியர் கைலாசபதியின் வகிபாகம் (வ.மகேஸ்வரன்), ஈழத்தில் தமிழ் இலக்கண முயற்சிகள் (ரூபி வலன்றினா), அரங்கியலில் பேரா. சிவத்தம்பியின் வகிபாகம் (க.திலகநாதன்), தமிழ் வளர்ச்சியில் மலையக எழுத்தாளர் மு.சிவலிங்கத்தின் பங்களிப்பு (ச.டிசிதேவி), புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை (சோதிமலர் இரவீந்திரன் தேவர்), தமிழர் வரலாறு யாத்த சபாபதி நாவலர் (துரை. மனோகரன்), ஸி.வி.வேலுப்பிள்ளை 1914-1984 (M.M.ஜெயசீலன்), வித்துவான் வேந்தனாரின் ஆக்கங்கள்-சில குறிப்புகள் (கலையரசி சின்னையா), ஈழமும் தமிழும் (தலிஞான் முருகையா), புலம்பெயர் சிறுகதைகளில் தமிழரின் பண்பாட்டு அடையாளம் -மாறுதலும் மறைதலும் (கோ.குகன்), புலம்பெயர் நாடுகளில் இலங்கையர் ஆற்றும் தமிழ்ப்பணி-கனடாவை மையப்படுத்திய ஆய்வு (இளையதம்பி பாலசுந்தரம்), புலம்பெயர் இலக்கியம் என்பது ஈழ இலக்கியத்தின் நீட்சியா? (வி.ஜீவகுமாரன்), இலண்டன்வாழ் தமிழ்ச் சிறாரும் தமிழ்மொழியும் (அஜந்தன் ஜெயக்குமார்), கனடியத் தமிழ் ஊடகங்களில் கிழக்கிலங்கைத் தமிழர்களின் பங்களிப்பு (எஸ்.ஸ்ரீதரகுமார்), தமிழ்மொழியும் டென்மார்க் தமிழர்களும் (சிவனேஸ்வரி றொபர்ட் கெனடி), தமிழ் கற்பதில் இலண்டன் தமிழ் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் (சாகித்தியா சிவபாலன்), இலங்கை மலையக தற்கால நாவல்களும் சிறுகதைகளும்: இவற்றின் புதிய போக்கும் (இராசையா மகேஸ்வரன்), ஈழத்து ஊடகங்களும் தமிழும் (சண் தவராஜா), வணக்கத்துக்குரிய ஹிஸ்ஸெல்லே தம்மரத்தின தேரரின் தமிழ்ப் பணிகள் (தம்மிக்க ஜயசிங்க), இலங்கை வரலாற்றில் தமிழர் வரலாறும் மறைக்கப்பட்ட உண்மைகளும் மதப்பின்னணியும் (வெற்றிவேல் சிவகுமார்), கையகராதிப் பதிப்பு வேறுபாடுகள் (விருபா குமரேசன்) ஆகிய தமிழ் ஆக்கங்களும் நான்கு ஆங்கில ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.*

### 14426

**சுவாமி விபுலானந்தரின் தமிழியல் ஆய்வுகள்.** *அம்மன்கிளி முருகதாஸ். மட்டக்களப்பு: சுவாமி விபுலானந்தர் நினைவுப் பேருரை செயற்குழு, கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.*

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் சுவாமி விபுலானந்தர் நினைவுப் பேருரை செயற்குழுவினால் நடத்தப்படும் பேருரை வரிசையில் இந்த உரை 11ஆவது தமிழியல் நினைவுப் பேருரையாகும். இது 24.08.2007 அன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையைச் சேர்ந்த கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் அவர்களால் ஆற்றப்பட்ட நினைவுப் பேருரை. சுவாமி விபுலானந்தர் நினைவுப் பேருரைகள் மட்டக்களப்பு புளியந்தீவு கிராமோதய சபையின் அனுசரணையுடன் அப்போது தலைவராகவிருந்த சிவநேசராஜாவின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வுரைத் தொடரின் முதலாவது உரையை இலக்கிய கலாநிதி எப்.எக்ஸ்.சி. நடராஜா அவர்கள் நிகழ்த்தியிருந்தார். அவரைத் தொடர்ந்து, பேராசிரியர்கள் சி.தில்லைநாதன், சி.மௌனகுரு, மனோ சபாரத்தினம், அம்பலவாணர் சிவராஜா, எம்ஏ.நுஃமான், சி.பத்மநாதன், சித்திரலேகா மௌனகுரு ஆகியோரும் அருட்சகோதரி பஸ்டியனும் நிகழ்த்தியுள்ளனர்.

## 14427

**தமிழ் அகராதியியலின் பரிணாமம் மற்றும் பரிமாணம்: நான்காவது ஐரோப்பியத் தமிழ் ஆய்வியல் மாநாடு-ஆய்வரங்க மலர் (முதலாம் பாகம்).** சதாசிவம் சச்சிதானந்தம் (பதிப்பாசிரியர்). பன்னாட்டு உயர்கல்வி நிறுவனம், Institut International des Etudes Superieures, 70, Rue Philippe de Girard 75018, Paris, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2019. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).

xii, 245 பக்கம், விலை: 15 இயூரோ, அளவு: 24x18.5 சமீ., ISBN: 978-29-51012-23-3.

நான்காவது ஐரோப்பியத் தமிழ் ஆய்வியல் மாநாடு பாரிசில் 28,29 செப்டெம்பர் 2019இல் நடைபெற்றது. இவ்வாய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ் அகராதியியல் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். இதில் தமிழில் முதல் இருமொழி அகராதி (எச்.சித்திரபுத்திரன்), உலக அகராதியியல் வரலாறு அல்லது உலகச் சொற்புத்தக வரலாறு 6528 மொழிகள் (சதாசிவம் சச்சிதானந்தம்), தமிழ் அகராதிகளின் உருவாக்கத்தில் பேச்சு வழக்குச் சொற்களின் முக்கியத்துவம் (சுபதினி ரமேஸ்), தொல்காப்பியத்தில் பிறந்து நிகண்டுகளில் தவழ்ந்து அகராதிகளில் வளர்ந்த தமிழ் அகராதியியல்-ஓர் ஆய்வு (இ.பாலசுந்தரம்), தமிழ்ச் சொற்பிறப்பியலின் பிதாமகன் சுவாமி ஞானப்பிரகாசர் (விமலா பாலசுந்தரம்), உலக அகராதி உருவாக்கமும் தமிழ் அகராதியும் (ருவியே கமல்ராஜ்), ஈழத்தில் தமிழ்-சிங்கள அகராதி முயற்சிகள்: கேள்வியும் ஆக்கமும் (முகம்மது அஸ்ரப்), நிகண்டுகளும் அகராதிகளும் (சாம் தில்லையா), ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் ஆரம்பநிலை இலக்கிய வரலாற்றெழுதியல் முயற்சிகள்: நோக்கும் போக்கும் (கி.விசாகரூபன்), ஆவணவாக்க நோக்கில் வழக்குச்சொல் அகராதிகள்-இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்களை மையமாகக் கொண்ட ஆய்வு (மைதிலி விசாகரூபன்), தொல்காப்பியமும் நிகண்டும் (ப.சாந்தி), சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் இலக்கியச் சொல் அகராதி (எஸ்.சிவலிங்கராஜா), காகித வடிவ அகராதிக்கும் மின் அகராதிக்கும் உள்ள ஓர் ஒப்பீடு (தலிஞர் முருகையா), இணையத் தமிழ்

*அகராதிகள் (சந்ரிகா சுப்பிரமணியன்), டேனிஷ்- தமிழ் -ஆங்கில மருத்துவக் கையேடும் அகராதியும் (வி.ஜீவகுமாரன்), இலங்கையில் தமிழ்-சிங்கள மற்றும் சிங்கள-தமிழ் அகராதி முயற்சிகள்: ஒரு விமர்சன நோக்கு (மல்லிகாதேவி நாராயணன்), ஆர்னால்ட் சதாசிவம்பிள்ளையும் இலக்கிய வரலாற்று எழுத்தியலும்: பாவலர் சரித்திர தீபகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஆய்வு (ஜே.ஹர்சனா), தமிழ் அகராதியியலில் சமஸ்கிருத தாக்கமும் சமஸ்கிருத அகராதியியலில் தமிழ்மொழியின் தாக்கமும் (பத்மபிரியா ராகவன்), தமிழ்ச் செவ்வியல் அகராதிகள் (ந.தேவி), மட்டக்களப்புத் தமிழகத்தில் பிரதேச வழக்குச் சொற்கள் (முருகு தயாநிதி), புலவர் வரலாற்றெழுதுகையில் ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளையின் பங்களிப்பு (பாஸ்கரன் சுமன்), புலம்பெயர் நாடுகளில் தமிழ் அகராதியியல்: வேறுபட்ட பார்வை (ச.ஞானா பியாற்றிஸ்), தமிழ் அகராதிஇயலின் பரிணாமம் மற்றும் பரிமாணம் (பெஞ்ஜமின் இலெபோ), இலங்கைத் தமிழ் அகராதிக்கான தேவை (நடராசா ஸ்ரீரஞ்சன்), அமெரிக்க மிஷனரிமார் தொகுத்த அகராதிகள் (எஸ்.ஜெபநேசன்), தமிழ் அகரவரிசை: மரபும் தவறுகளும் (விருபா குமரேசன்),* Tamil Dictionaries in Russia (Alexander Dubyanskiy), Macro Structure of Amarakosa and Tivakaram: A comparison (V.Jayadevan), *அகநானூறு பழையவுரை-* Contribution of Anonymous Old Glosses to the Tamil Lexicon (Eva Wilden), Things as certain as dictionaries and taxes, can be more firmly believed (Gregory James), Contribution of Tamil Words to English Dictionary- An Etymological Study (K.S.Antonysamy) *ஆகிய 31 ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.*

### 14428

**பத்தாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு 2007**. *மலர்க் குழு. மலேசியா: பத்தாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டு அமைப்புக் குழு, மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர், 1வது பதிப்பு, ஜுலை 2007. (கோலாலம்பூர்: மால் ஜெயா என்டர்பிரைசஸ்).*

*116 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 சமீ.*

*குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் அவர்களை நிறுவனராகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் 1974இல் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவரும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், தனது 34ஆவது அகவையில், பத்தாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டினை 20-22, ஜுலை 2007 அன்று மலாயாப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்தியது. அவ்வேளையில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர் இதுவாகும். வாழ்த்துரைகள், ஆசியுரைகள் மற்றும் கட்டுரைகளுடன் கூடியது.*

### 14429

**பத்தாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டு மலர் 2008**. *மாநாட்டு மலர்க் குழு. கனடா: உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்-கனடா, 936,* Mc Cowan Road, Scarborough, Ontario, M1 P3 H6, *1வது பதிப்பு, ஜுலை 2008. (கனடா: விவேகா பிரின்டர்ஸ், 80,* Barbados Blvd No. 4, Scarborough*).*

*115 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21 சமீ.*

*வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன் கூடிய இச்சிறப்பிதழில், தமிழ்த் தாய் வாழ்த்து, புகலிட வாழ்வில் தமிழர் பண்பாடு (இ.சங்கரப்பிள்ளை), புகலிட வாழ்வில் தமிழர் பண்பாடு நோர்வே (பொன்னரசி கோபாலரட்னம்), பர்மா நாட்டில் தமிழர்களும் தமிழ்ப் பண்பாடும் (ரெ.மா.கண்ணன்), நகரும் கண்டத்தில் பண்பாட்டை நகர்த்தும் தமிழர் (இலட்சுமணன் முருகபூபதி), புகலிட வாழ்வில் தமிழர் பண்பாடு (கந்தசாமி கனகராசா), பண்டைய தமிழ்ப் பண்பாடும் சமயப் பண்பாடும் (பொதிகை கோமதி முத்துக்குமரன்), தனித் தமிழை தாங்கி நிற்போம் (ஆ.வீ.தட்சிணாமூர்த்தி), என்றும் வாழும் செந்தமிழ் (ஆ.சண்முகலிங்கம்), செம்மொழியாகிய செந்தமிழ் சிறப்புற வேண்டும் (செ.மதுசூதனன்), இருபத்தி இரண்டாம் நூற்றாண்டில் இன்பத் தமிழ் நிலைத்திருக்குமா (செ.பரமநாதன்), இந்துக் கல்வி மரபும் ஒழுக்க மேம்பாடும் (கலைவாணி இராமநாதன்), புகலிட வாழ்வில் தமிழ்ப் பண்பாடு (அலன் ஆனந்தன்), புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் வாழ்வும் தமிழ் மொழியின் எதிர்காலமும் (புதுவை வயி.நாராயணசாமி), தமிழரின் இசை வளம்: மரபு நெகிழ்ச்சி வளர்ச்சி (கௌசல்யா சுப்பிரமணியன்), பண்பாடும் பத்திரிகைகளின் நிலைப்பாடும் (தங்கராசா சிவபாலு), தமிழர் திருமணம் (லம்போதரன்),* History of the International Movement for Tamil Culture (Sivanesan Sinniah), Brief History of IMTC – South Africa Branch (Kris Kistan), Panchangam and it's Uniformity (Mahesh Sastri) *ஆகிய படைப்பாக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 06769).*

## 494.8(1) தமிழ் இலக்கணம்

### 14430

**நன்னூல் மூலமும் விருத்தியுரையும்.** *சங்கரநமச்சிவாயப் புலவர் (விருத்தியுரை), சிவஞான சுவாமிகள் (திருத்தியவர்), ஆறுமுக நாவலர் (பரிசோதித்தவர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், நல்லூர், மீள்பதிப்பு, ஐப்பசி 1947. (சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை).*

*292 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.*

*இவ்விருத்தியுரையானது திருநெல்வேலிச் சங்கரநமச்சிவாயப் புலவரால் செய்யப்பட்டு திருவாவடுதுறை ஆதீனத்துச் சிவஞானசுவாமிகளால் திருத்தப்பட்டது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் பரிசோதித்தபடி அச்சிற் பதிப்பிக்கப்பட்டுள்ளது. நன்னூல், 13ஆம் நூற்றாண்டில் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலாகும். தமிழ்மொழி இலக்கண நூல்களுள் தற்போது இருப்பனவற்றில் மிகப் பழமையானதான தொல்காப்பியத்தின் சில பகுதிகள் வழக்கொழிந்துபோய்விட்டன, மற்றும் சிலவற்றிற்குக் காலக்கிரமத்தில் கூடுதல் விளக்கம் தேவைப்பட்டது. வழக்கொழிந்த இலக்கணப் பயன்பாடுகளுக்கு*

இணையான சமகாலப் பயன்பாடுகளை வகுத்தும், ஏற்கனவே வகுக்கப் பெற்ற பயன்பாடுகளை மேலும் விளக்கியும், எளிமைப்படுத்தியும் நன்னூலில் விருத்தியுரைகள் எழுதப்பட்டன. தற்காலம்வரை, செந்தமிழுக்கான இலக்கணமுறை நன்னூலைப் பின்பற்றியே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நன்னூல் இரு அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தினை ஒட்டி எழுதப்பட்ட இந்நூலிலும் 5 அதிகாரங்கள் இருந்தன என்றும் பல காரணங்களுக்காக 3 அதிகாரங்கள் தொலைந்து போயிருக்கக்கூடும் எனவும் சான்றோர் கூறுவர். இவை: பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்பனவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35842).

### 14431

**பாரதீயம்: சிற்றிலக்கண நூல் (இரண்டாம் பாகம்).** க.சு.நவநீத கிருஷ்ண பாரதியார். யாழ்ப்பாணம்: க.சு.நவநீத கிருஷ்ண பாரதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை, 1வது பதிப்பு, 1948. (யாழ்ப்பாணம்: எஸ்.எஸ்.சண்முகநாதன் அண்ட் சன்ஸ்).

(5), vii, 146 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

"எழுத்திலக்கணம்" என்ற முதலாவது பகுதியில் எழுத்து, எழுத்தின் வகைகள், சுட்டும் வினாவும், குற்றியல் உகரம், முற்றியல் உகரம், குற்றியல் இகரம், இன எழுத்துக்கள், மாத்திரை, முதல் நிலை, இறுதி நிலை, போலி, ஆகிய 11 பாடங்களும், "சொல் இலக்கணம்" என்ற இரண்டாவது பகுதியில் சொல், பகுபதம்-பகாப்பதம், சொற்களின் வகை, அல்வழி, வினைச்சொற்களுக்குப் பகுதி காணும் முறை, தெரிநிலை வினைச் சொற்களுக்கு வாய்ப்பாடு, சொல்லிலக்கணம் கூறல், உரைநடைப் பங்கீடு ஆகிய 8 பாடங்களுமாக மொத்தம் 19 பாடங்களும் அவற்றுக்கான 39 விளக்கப் பயிற்சிகளும் இந்நூலில் தரப்பட்டுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24947).

## 494.8(2) தமிழ்ப் பாடநூல்கள்

### 14432

**அரசகரும மொழிகள் தேர்ச்சி மட்டம் 1: தமிழ்.** அரசகரும மொழிகள் திணைக்களம். கொழும்பு: அரசகரும மொழிகள் திணைக்களம், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு, பாஷா மந்திரய, 341/7, கோட்டே வீதி, ராஜகிரிய, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 8: அரசாங்க அச்சுத் திணைக்களம், 118, பேஸ்லைன் வீதி).

(8), x, 206 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 25x19 சமீ., ISBN: 978-955-9180-39-5.

இந்நூல் முதலாம் மட்ட அரசகரும மொழித் தேர்ச்சியில் சித்தியடைய வேண்டிய அரசகரும உத்தியோகத்தர்களுக்காக எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்களை முதலில் தராமல் உரையாடல் தரப்பட்டுள்ளது. இது மாணவர்களுக்குக் கடினமானதாக இருக்கலாம். ஆசிரியரின் உதவியோடு பேசப் பழகியிருக்கும் மாணவர்களுக்கு இது இலகுவாகவிருக்கும். முதலில் பேச்சுத்தமிழும் பின்னர் படிப்படியாக எழுத்துத் தமிழும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65467).

## 14433

**அரசகரும மொழிகள் தேர்ச்சி மட்டம் 2: தமிழ்.** எஸ்.ஜே.யோகராசா. கொழும்பு: அரசகரும மொழிகள் திணைக்களம், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு, பாஷா மந்திரய, 341/7, கோட்டே வீதி, ராஜகிரிய, 1வது பதிப்பு, 2016. (கொழும்பு 8: அரசாங்க அச்சுத் திணைக்களம், 118, பேஸ்லைன் வீதி).

(8), viii, 234 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 25x19 சமீ., ISBN: 978-955-9180-38-8.

இந்நூல் இரண்டாம் மட்ட அரசகரும மொழித் தேர்ச்சியில் சித்தியடைய வேண்டிய அரசகரும உத்தியோகத்தர்களுக்காக எழுதப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் பேச்சு மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதன்பின் எழுத்துக்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. பேச்சுத்தமிழ் எட்டாம் பாடத்திலிருந்து எழுத்துத் தமிழாக மாறும் விதம் கூறப்பட்டுள்ளது. ஆகவே ஆரம்பத்திலுள்ள பாடங்களை ஆசிரியரின் உதவியோடும் இறுவட்டின் உதவியோடும் பேசப்பழகவும். இந் நூலில் எல்லா வாக்கிய அமைப்புகளும் தரப்படவில்லை. தேவையானவைகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. மாணவர்கள் மேலும் தமது அறிவை ஆசிரியரின் உதவியோடும், ஏனைய நூல்களைக் கற்றும் வளர்த்துக்கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தமிழில் உச்சரிப்பு மாற்றம் கருத்தை மாற்றிவிடுமாதலால், உச்சரிப்பைச் சரியாக உச்சரிக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் களனிப் பல்கலைக்கழகத்தின் மொழியியல்துறை பேராசிரியராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65468).

## 14434

**உயர்வகுப்பு மாணவர்களுக்குரிய கட்டுரை எழுதுவது எப்படி?** பீ.பீ. அந்தோனிப்பிள்ளை. மன்னார்: நித்தியா புத்தக நிலையம், இல. 25, புதிய பஸ் நிலையம், 1வது பதிப்பு, ஆவணி 2001. (கொழும்பு 12: பேர்பெக்ட் பிரின்டர்ஸ்).

v, 88 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.

பரிசுபெற்ற கட்டுரைகள் உள்ளிட்ட 20 மாதிரிக் கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்கியது. கட்டுரை எழுதுவது எப்படி? அறிவியல் வளர்ச்சி, பத்திரிகைகள்-சஞ்சிகைகள், யுத்தமும் மனித உரிமைகளும், தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும், பாட்டுக்கொரு புலவன் பாரதி, தேசிய

ஒருங்கிணைப்பு, உள்ளூராட்சி மன்றங்கள், சூழல் மாசடைதலில் எமது பங்கு, இசையின்பம், மக்களின் முன்னேற்றப் பாதையில் மன்னார் துயர்துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் பங்களிப்பு, சர்வதேச அரங்கில் பெண்களின் நிலை, மக்களை ஈர்க்கும் பேச்சுக்கலை, மதியை வளர்ப்போம் மதுவை ஒழிப்போம், முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தர், சமூக வாழ்விலே இன்றைய மனிதர், புத்தாயிரம் ஆண்டில் புதுயுகம் படைக்கப் பறப்படு இளைஞனே, சேமிப்பும் வங்கிகளும், கல்விச் சிந்தனையாளர்களும் கல்விச் சீர்திருத்தமும், சிறுவர் உரிமையும் கடமையும் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 26576).

## 14435

**உரைநடைக்கோவை: ஆறுமுக நாவலர் தொடக்கம் சிவராமன் வரை.** சு.வேலுப்பிள்ளை (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, புரட்டாதி 1998, 1வது பதிப்பு, புரட்டாதி 1996. (கொழும்பு 12: ஸ்ரீ லங்கா வெளியீடு, F.L. 1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(5), 155 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

1995 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதும் 1997ஆம் ஆண்டு முதல் நடைபெறும் தேர்வுகளுக்குரியதுமான க.பொ.த. உயர்தர வகுப்புக்குரிய புதிய பாடத்திட்டத்தில் "தமிழ்" பாடத்தின் பொருட்பரப்பின் ஒரு கூறாக, உரைநடைப் பகுதியும் இடம்பெறுகின்றது. இவ்வுரைப் பகுதியில் 19ஆம் நூற்றாண்டு தொடக்கம் இக்காலப் பகுதி வரை உரைநடையில் நிகழ்ந்த மாற்றங்களைப் புலப்படுத்துவதாய் அமைந்த 15 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. திருத்தொண்டர் பெரியபுராண வசனம்-முகவுரை (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்), தமிழ்ப் பாஷைக்குள்ள குறைபாடுகள் (சுப்பிரமணிய பாரதியார்), தமிழர் கொள்கை (மறைமலை அடிகள்), மகாகவி பாரதியார்-10ஆம் பகுதி (வ.ராமசாமி), திரு வி.க. வின் வாழ்க்கைக் குறிப்புகள்-கல்வி (வி.கலியாணசுந்தர முதலியார்), இலக்கியச் சுவை (விபுலானந்த அடிகளார்), என் சரித்திரம்-ஆசிரியரை அடைந்தது (உ.வே.சாமிநாதையர்), தமிழும் பிற மொழியும் (க.கணபதிப்பிள்ளை), பண்பாடு (ராஜாஜி), சமதர்மம்- மேடைப்பேச்சு- ஓய்வுநேரம் (சி.என்.அண்ணாதுரை), தம்பிக்கு-கடிதங்கள்: முதலாவது கடிதம் (மு.வரதராசன்), பாட்டும் ஓசையும் (வி.செல்வநாயகம்), பகிரதப் பிரயத்தனம் (சி.கணபதிப்பிள்ளை), கலையும் காட்சியும் (ஏ.எம்.ஏ.அஸீஸ்), பிணைக்கப்பட்ட கடனை விட வெளிமுதலீட்டை வரவேற்பதே நலம் (ஏ.என்.சிவராமன்) ஆகிய மாதிரிக் கட்டுரைகள் தேர்ந்து தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35958).

## 14436

**எழுத்துத் தமிழ்** (Lekana Demala Basa). எஸ்.சுசீந்திரராஜா, எஸ்.தில்லைநாதன், அபேசிங்க ஜயக்கொடி. ராஜகிரிய: அரசகரும மொழிகள் திணைக்களம், பாஷா

*மந்திரய, 341/7, கோட்டே வீதி, 7ஆவது பதிப்பு, 2019, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு: அரச பதிப்பகத் திணைக்களம்).*

xxxii, *323 பக்கம், விலை: ரூபா 410., அளவு: 21*x*14 சமீ.*, ISBN: *978-955-8190-22-7.*

*அரசகரும மொழிகள் கொள்கையை பயனுள்ள வகையில் செயற்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கிலே பல வேலைத்திட்டங்கள் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றாக இந்நூல் வெளியீடும் அமைந்துள்ளது. சிங்கள அரச ஊழியர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அடிப்படை பேச்சுத் தமிழைக் கற்கும் வகையில் இதிலுள்ள பாடத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந் நூல் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 3/2007இலும் 7/2007இலும் குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சி மட்டம்* III *இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65461).*

## 14437

**க.பொ.த. (உயர்தரம்) தமிழ்: மாதிரி வினா-விடை பகுதி 1,2.** காரை செல்வராசா. *யாழ்ப்பாணம்: காரை. செல்வராசா, எக்கலம் கல்வி நிலையம், மனோகராச் சந்தி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*98 பக்கம், விலை: ரூபா 22.00, அளவு: 18*x*12.5 சமீ.*

*கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பில் பயிலும் மாணவர்களின் தமிழ் மொழிப் பரீட்சைத் தேவைகளுக்கெனத் தயாரிக்கப்பட்ட மாதிரி வினா-விடைகள் அடங்கிய நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34606).*

## 14438

**தமிழ் உரைநடைத் தொகுப்பு (க.பொ.த. உயர்தரம்).** த.துரைசிங்கம் *(தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1997. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை,* G.L. *1/2, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*

*(8), 166 பக்கம், விலை ரூபா 120., அளவு: 22*x*14 சமீ.*

*1997ஆம் ஆண்டு முதல் நடைபெறும் க.பொ.த. உயர்தர பரீட்சைக்குரிய பாட நூல் இதுவாகும். இதில் கட்டுரை ஆசிரியர்கள் பற்றிய குறிப்பு, அரும்பத விளக்கம், பயிற்சி வினாக்கள், உரைநடை வளர்ச்சிப் பாங்கு தொடர்பான கட்டுரை, ஆகிய அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் இதில் பல்வேறு தமிழறிஞர்களின் உரைநடைப் பாங்கு அவர்களது தேர்ந்த படைப்பாக்கங்களின் வழியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. திருத்தொண்டர் பெரியபுராண வசன முகவுரை (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்), தமிழ் பாஷைக்கு உள்ள குறைகள் (பாரதியார்),*

தமிழர் கொள்கை (மறைமலை அடிகள்), மஹாகவி பாரதியார் (வ.ரா.), கல்வி (வி.கல்யாணசுந்தரனார்), இலக்கியச் சுவை (சுவாமி விபுலானந்தர்), ஆசிரியரை அடைந்தது (உ.வே.சாமிநாதையர்), தமிழும் பிற மொழியும் (பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை), பண்பாடு (ராஜாஜி), ஓய்வுநேரம் (சி.என்.அண்ணாதுரை), தம்பிக்கு- கடிதம் (மு.வரதராசன்), பாட்டும் ஓசையும் (பேராசிரியர் வி. செல்வநாயகம்), பகிரதப் பிரயத்தனம் (பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை), கலையும் காட்சியும் (ஏ.எம்.ஏ.அஸீஸ்), பிணைக்கப்பட்ட கடனை விட வெளிமுதலீட்டை வரவேற்பதே நலம் (ஏ.என்.சிவராமன்) ஆகிய 15 கட்டுரைகள் மாதிரிக்கொன்றாகத் தரப்பட்டுள்ளன. பின்னிணைப்புகளாக தமிழ் உரைநடை வளர்ச்சிப் பாங்கு, அருஞ்சொல் பொருள் விளக்கம், பயிற்சி வினாக்கள் ஆகியன தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 31016).

## 14439

**தமிழ் மொழி உயர்தரம்.** அரசகரும மொழிகள் திணைக்களம். ராஜகிரிய: அரசகரும மொழிகள் திணைக்களம், பாஷா மந்திரய, 1வது பதிப்பு, 1999. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

(10), 159+9 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ., ISBN: 955-9180-03-7.

இப்பாட நூலில் தமிழ்மொழியைப் படிப்பது சிரமமானதா? இலக்கணம் அவசியமா? மொழிப் பயிற்சி, ஸ்ரீ லங்கா, அஞ்சலி, மொழிப் பயிற்சி, யாவருக்கும் புகலிடம், வேளாண்மை, சுப்பிரமணிய பாரதியார், பாப்பாப் பாட்டு, வெசாக் பண்டிகை, மொழிப் பயிற்சி, கோவில் வழிபாடு, அசோக சக்கரவர்த்தி, பாரதியும் பட்டிக்காட்டானும், என்னை நிம்மதியாக இருக்க விடுங்கள், சொற்புணர்ச்சி, புரூடியின் கதை, வசந்தம், மொழிப் பயிற்சி, தமிழ் எவ்வாறு வளர்ந்தது? தலையாலங் கானத்துப் பாண்டியன் நெடுஞ்செழியன், ஆறு, சிலப்பதிகாரம், காலைப்பாட்டு, மொழிப் பயிற்சி, யாம் ஐவோம், குதிரையின் குணம், கட்டடக் காவற் பொறுப்பாளர் பதவி, மகாபாரதம், மொழிப் பயிற்சி, இராமாயணம், மொழிப் பயிற்சி, வேற்றுமை, செய்வினையும் செயப்பாட்டு வினையும், மொழிப் பயிற்சி, நீதிநூல், வாக்குண்டாம் (செய்யுளும் பொருளும்), வாக்குண்டாம் (11) ஆகிய 39 பாடங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31194).

## 14440

**தமிழ் மொழி கற்போம் (முதலாம் பகுதி) பேச்சுத் தமிழ்.** ஆசிரியர் குழு. ராஜகிரிய: இனவிவகார, தேசிய நல்லிணக்க, கனிப்பொருள் வள, அபிவிருத்தி அமைச்சு, அரசகரும மொழிகள் திணைக்களம், பாஷா மந்திரய, 347/7, கோட்டே வீதி, 1வது பதிப்பு, 2001. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

(6), 20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x20 சமீ.

*தமிழைக் கற்கவிரும்பும் எவருக்கும் தேவையான அடிப்படை பேச்சுத் தமிழ் பயிற்சியை வழங்கும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர் குழுவில் களனிப் பல்கலைக்கழக மொழியியல்துறை விரிவுரையாளர் எஸ்.ஜே. யோகராஜா, அரச கரும மொழிகள் திணைக்கள மொழிபெயர்ப்புக் கண்காணிப் பாளர்களான திருமதி நந்தா கல்பாயா, செல்வி ஜெ.மகாதேவா, மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப் பகுதிக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.எம்.அஷ்ரப், கல்வி அமைச்சின் போதனாசிரியர் ஜனாப் எம்.எச். எம்.சிராஜ், கல்விநூல் வெளியீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த ஜனாப் வை.எல். எம்.ராசிக் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். கூட்டிணைப்பாளராக அரசகரும மொழிகள் திணைக்களக் கல்வியாளர் விக்ரமசிரி விக்கிரமாராச்சி பணியாற்றியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 31183).*

## 14441

**தமிழ் மொழியும் இலக்கியமும்: தரம் 7 (இன்பத் தமிழ் 2-செயல்நூல்).** *சோதிநாயகி பாலசுந்தரம், விக்னேஸ்வரி செல்வநாயகம், வானதி காண்டீபன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

*220 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 390., அளவு: 24x18 சமீ.,* ISBN: *978-955-659-549-9.*

*ஏழாம் தர மாணவர்களுக்குரிய இத்தமிழ் மொழிப் பாடநூலில் அந்தரே கதைகள், ஆறு, கடமை, காட்டு விலங்குகள், யாம் ஐவோம், காந்தியடிகள் கடிதம், தமிழ்த் தட்டச்சின் தந்தை, செந்தமிழ் போற்றிய சேரன், சிலேடை, பென்சிலின் கதை, உயிர் காக்கப் பயிர் காப்போம், ஈசன் உவக்கும் இன்மலர், கடலும் கிணறும், கருங்காற் குறிஞ்சி, படைப்பின் இரகசியம், பொய் சொல்லாதே, வீழ்ந்த ஆலமரம், பிள்ளை அழுத கண்ணீர், வெண்ணிலாவே, ஒழுக்கம் உடைமை, புதிய அத்திசூடி ஆகிய 21 பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. இன்பத் தமிழ் தொடரில் இரண்டாவதாக வெளிவந்துள்ள குமரன் வெளியீடு. குமரன் புத்தக இல்லத்தினரின் 737ஆவது பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது.*

## 14442

**பேச்சுத் தமிழ்(Katana Demala Basa).** *எஸ்.சுசீந்திரராஜா, எஸ்.தில்லைநாதன், அபேசிங்க ஜயக்கொடி. ராஜகிரிய: அரசகரும மொழிகள் திணைக்களம், பாஷா மந்திரய, கோட்டே வீதி, 10ஆவது பதிப்பு, 2019, 1வது பதிப்பு, மார்ச் 2007. (கொழும்பு: அரச பதிப்பகத் திணைக்களம்).*

xlv, *364 பக்கம், அட்டவணைகள், அளவு: 21x13.5 சமீ.*

*அரசகரும மொழிகள் கொள்கையை பயனுள்ள வகையில் செயற்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கிலே பல வேலைத்திட்டங்கள் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதில்*

ஒன்றாக இந்நூல் வெளியீடும் அமைந்துள்ளது. சிங்கள அரச ஊழியர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான அடிப்படை பேச்சுத் தமிழைக் கற்கும் வகையில் இதிலுள்ள பாடத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந் நூல் 2007.02.09ஆம் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 3/2007இல் குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சி மட்டம் IIII இலக்காகக் கொண்டு தயாரிக்கப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65460).

## 14443

**பேச்சுத் தமிழும் இலக்கியத் தமிழும்**. எஸ்.ஜே.யோகராஜா. கொழும்பு 15: எஸ்.ஜே. யோகராஜா, 65/322 காக்கை தீவு, மட்டக்குழி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

x, 71 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 28.5x21.5 சமீ., ISBN: 955-95655-8-3.

தமிழ் மொழி படிக்கும் சிங்கள மாணவர்களுக்கு பேச்சுத் தமிழ் படிக்கும்போது உதவும் வகையில் இந்நூல் 7 பாடங்களாக வகுத்து உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி பேச்சு மொழி, எழுத்து மொழி என இருவகைப்படும். இரண்டும் வேறுபட்டவை. இரண்டுக்கும் இலக்கணமுண்டு. இந்நூலில் பேச்சு மொழிக்கும் இலக்கிய மொழிக்கும் உள்ள வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளன. சொற்கள், எண்கள், வேற்றுமை, காலம், முக்கியமான சொற்கள், வினைச்சொற்களின் பல வடிவங்கள், வாசிப்பு ஆகிய ஏழு பாடங்களையும், கலந்துரையாடல், உசாத்துணை நூல்கள் என மேலும் இரு தலைப்புகளையும் இந்நூல் கொண்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28395).

## 14444

**மாணவர் கட்டுரைகள்: தரம் 7-8**. த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2002. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L 1.14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(2), 60 பக்கம், விலை: ரூபா 90.00, அளவு: 20.5x14 சமீ.

இடைநிலை வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் எழுத்தாற்றலையும் மொழி அறிவையும் விருத்தி செய்யும் வகையில் ஆக்கப்பெற்ற கட்டுரைத் தொகுப்பு. நூலாசிரியர் இலக்கிய வித்தகர் கவிஞர் த.துரைசிங்கம் கல்விப்பணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29884).

# 500 தூய விஞ்ஞானங்கள்

## 510 கணிதம்

### 14445

**க.பொ.த (உயர்தரம்) இணைந்த கணிதம்: எளிமை இசை இயக்கம்.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: விஞ்ஞான, கணித, சுகாதார, உடற்கல்விப் பிரிவு, கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2007. (மகரகம: அச்சகப் பிரிவு, தேசிய கல்வியியல் நிறுவகம், பானலுவ).

ix, *50 பக்கம், விலை: ரூபா 80.00, அளவு: 29.5*x*21 சமீ.*

*விசையியலிலும் இயற்பியலிலும், எளிமை இசையியக்கம் அல்லது தனிச் சீரிசை இயக்கம் என்பது மீள் விசைக்கு இடப்பெயர்ச்சி நேர் விகித சமமாக உள்ள அலைவு இயக்கமாகும். (அதாவது ஆர்முடுகல் எப்போதும் நிலைத்த புள்ளியை நோக்கி இருக்கும்). இது சுருளிவில்லின் அலைவு போன்ற பல்வேறு இயக்கங்களின் கணித மாதிரியாக கொள்ளப்படுகிறது. இதைவிட மற்ற இயக்கங்களான ஒரு எளிய ஊசலின் இயக்கம் மற்றும் மூலக்கூறு அதிர்வு போன்றவற்றையும் ஏறக்குறைய எளிய இசையியக்கமாக கொள்ளலாம். ஹூக் இன் விதிக்கு ஏற்ப மீள்விசைக்கு உள்ளாகும் சுருளி வில்லில் உள்ள ஒரு திணிவின் இயக்கத்தை எளிய இசையியக்கமாக வகைகுறிக்கலாம். எளிய இசை இயக்கம் நேரத்துடன் சைன் வளையியாகவும் ஒரேயொரு ஒத்ததிர்வு அதிர்வெண்ணைக் கொண்டதாகவும் உள்ளது. எளிய இசையியக்கமானது மிகவும் சிக்கலான இயக்கத்தை ஃபோரியர் பகுப்பாய்வு நுட்பங்கள் மூலம் வகைப்படுத்த ஒரு அடிப்படையை வழங்குகிறது. இந்நூல் எளிமை இசை இயக்கம், எளிமை இசை இயக்கத்தை, சீரான வட்ட இயக்கத்தின் மூலம் விவரணம் செய்தல், மீள்தன்மை இழையொன்றுடன் இணைக்கப்பட்டுள்ள துணிக்கையொன்றின் இயக்கம் ஆகிய மூன்று பாடங்களில் விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65688).*

### 14446

**க.பொ.த (உயர்தரம்) இணைந்த கணிதம்: ஏகபரிமாண உந்தமும் கணத்தாக்கும்.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: விஞ்ஞான, கணித, சுகாதார, உடற்கல்விப் பிரிவு, கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2007. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

vii, *35 பக்கம், விலை: ரூபா 60.00, அளவு: 29.5*x*21 சமீ.*

*க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணித பாடத்திட்டத்தின் கீழ் ஏகபரிமாண உந்தமும் கணத்தாக்கும் என்ற பாடப்பகுதிக்கான இவ்வளநூலானது ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. விசையொன்றின் கணத்தாக்கு, எகபரிமாண உந்தக் காப்பு விதி, கணத்தாக்கு தொடர்பான பிரசினங்கள், நெரடி மொத்தல் ஆகிய நான்கு அத்தியாயங்களில் பாடங்கள்*

வகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் Pam 5745).

## 14447

**க.பொ.த (உயர்தரம்) இணைந்த கணிதம்: கணிதத் தொகுத்தறி முறையும் ஈருறுப்பு விரிவும்.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: விஞ்ஞான, கணித, சுகாதார, உடற்கல்விப் பிரிவு, கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2007. (மஹரகம: அச்சகம், தேசிய கல்வி நிறுவகம்).

iv, 31 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 29x20 சமீ.

க.பொ.த. (உயரதரம்) இணைந்த கணித பாடத்திட்டத்தின் கீழ் கணிதத் தொகுத்தறி முறையும் ஈருறுப்பு விரிவும் என்ற பாடப்பகுதிக்கான இவ்வளநூலானது ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. கணிதத் தொகுத்தறி முறை என்ற பாடமும் நேர்நிறையெண் சுட்டிக்கான ஈருறுப்பு விரிவு என்ற பாடமும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் Pam5748).

## 14448

**க.பொ.த.(உயர்தரம்) இணைந்த கணிதம்: சுட்டிகள், அடுக்குக் குறிச் சார்புகள், மடக்கைகள்.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: விஞ்ஞான, கணித, சுகாதார, உடற்கல்விப் பிரிவு, கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2007. (மகரகம: அச்சகப் பிரிவு, தேசிய கல்வியியல் நிறுவகம், பானலுவ).

viii, 22 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 45.00, அளவு: 29.5x21 சமீ.

இந்நூலில் சுட்டிகள் (சுட்டிக் குறிப்பீடு, அடியும் அடுக்கும், சுட்டி விதிகள்), அடக்குக் குறிச் சார்புகள், இயற்கை மடக்கைகள், y=aX சார்பு, யாதுமொரு அடிக்கு மடக்கை ஆகிய பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் Pam 5746).

## 14449

**க.பொ.த (உயர்தரம்) இணைந்த கணிதம்: தளமொன்றின் மீது ஒரு துணிக்கையின் இயக்கம்.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: விஞ்ஞான, கணித, சுகாதார, உடற்கல்விப் பிரிவு, கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2007. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

vii, 59 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 90.00, அளவு: 29.5x21 சமீ.

இந்நூல் இடைநிலைக் கல்வியை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டது. இந்நூலில் தளமொன்றின் மீது ஒரு துணிக்கையின் இயக்கம், ஒரே தளத்தில் இயங்கும் இரண்டு துணிக்கைகளுக்கிடையில் உள்ள தொடர்பு வேகம், ஒரே தளத்தில் இயங்கும் இரண்டு துணிக்கைகளுக்கு இடையிலுள்ள கிட்டிய தூரமும் அக்கிட்டிய

தூரத்தில் அத்துணிக்கைகள் அமைவதற்கு எடுத்த நேரமும், துணிக்கை தரப்பட்ட பாதையைப் பூர்த்தி செய்வதற்கு எடுக்கும் நேரம், எறிபடை ஆகிய ஐந்து பாடங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65687).

## 14450

**க.பொ.த (உயர்தரம்) இணைந்த கணிதம்: தொடர்களின் கூட்டல்.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: விஞ்ஞான, கணித, சுகாதார, உடற்கல்விப் பிரிவு, கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2007. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

vii, 40 பக்கம், விலை: ரூபா 65.00, அளவு: 29.5x21 சமீ.

தொடரிகளும் தொடர்களும், கூட்டல் தொடர், பெருக்கல் தொடர், கூட்டல்-பெருக்கல் தொடர், தொடர்களைக் கூட்டும் விசேட முறைகள், தொடரொன்றின் ஒருங்கல் ஆகிய ஆறு பாடங்களின் மூலம் இணைந்த கணிதத்தில் வரும் "தொடர்களின் கூட்டல்" என்ற பகுதி விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் Pam5744).

## 14451

**க.பொ.த (உயர்தரம்) இணைந்த கணிதம்: நியூற்றனின் இயக்க விதிகள்.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: விஞ்ஞான, கணித, சுகாதார, உடற்கல்விப் பிரிவு, கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2007. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

ix, 34 பக்கம், விலை: ரூபா 60.00, அளவு: 29.5x21 சமீ.

க.பொ.த. (உயரதரம்) இணைந்த கணித பாடத்திட்டத்தின் கீழ் நியுற்றனின் இயக்க விதிகள் என்ற பாடப்பகுதிக்கான இவ்வளநூலானது ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. நியுற்றனின் இயக்க விதிகள் என்ற பாடமும் நியுற்றனின் இயக்க விதிகள் பிரயோகம்-1, நியுற்றனின் இயக்க விதிகள் பிரயோகம்-2, நியுற்றனின் இயக்க விதிகள் பிரயோகம்-3 ஆகிய பாடங்களும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் Pam5749).

## 14452

**க.பொ.த.(உயர்தரம்) இணைந்த கணிதம்: பயிற்சி வினாக்கள் விடைகளுடன்.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: கணிதத்துறை, விஞ்ஞான தொழில்நுட்ப பீடம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2018. (மகரகம: அச்சகப் பிரிவு, தேசிய கல்வியியல் நிறுவகம்).

ix, 150 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 325., அளவு: 29x20.5 சமீ., ISBN: 978-955-654-730-6.

2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும் 2019ஆம் ஆண்டு பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது. இதில் இணைந்த கணிதம் I பகுதி A, பகுதி B ஆகியவையும், இதில் இணைந்த கணிதம் II பகுதி A, பகுதி B ஆகியவையும் பயிற்சி வினாக்களுக்கான தீர்வுகளும் தரப்பட்டுள்ளன. மாணவர்களுக்குப் போதிய பயிற்சிகளை வழங்குமுகமாகவும், பாடப் பரப்பினைக் கற்றபின் பரீட்சைக்கு தயாராகுவதற்கான ஒரு மீட்டல் பயிற்சியினை வழங்கும் நோக்கிலும் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இது ஓர் மாதிரி வினாத்தாள் தொகுதி அன்று. விடைகளைச் சரிபார்ப்பதற்கும் படிமுறைகளை சரியாகப் பின்பற்றுவதற்கும் உதவியாக விடைகள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65691).

## 14453

**க.பொ.த.(உயர்தரம்) இணைந்த கணிதம்: பெறுதிகளின் பிரயோகம்.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: விஞ்ஞான, கணித, சுகாதார, உடற்கல்விப் பிரிவு, கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2007. (மகரகம: அச்சகப் பிரிவு, தேசிய கல்வியியல் நிறுவகம், பானலுவ).

ix, 42 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 70.00, அளவு: 29.5x21 சமீ.

அறிமுகம், சராசரி மாற்றவீதம், கணநிலை மாற்ற வீதம், ஆயிடை ஒன்றினுள் அதிகரிக்கும் அல்லது குறையும் சார்புகள், சார்பு உயர்வு, சார்பு இழிவு, திரும்பற் புள்ளிகள், முதற் பெறுதிச் சோதனை, நிலைக்குத்தான அணுகு கோடுகள், வளையி ஒளிறின் சுவட்டை வரைதல், நடமுறைப் பிரச்சினங்களைத் தீர்ப்பதற்கு பெறுதிகளை உபயோகித்தல் ஆகிய பத்துப் பாடங்களை இந்நூல் விளக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65690).

## 14454

**க.பொ.த (உயர்தரம்) இணைந்த கணிதம்: வகையீடு.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: விஞ்ஞான, கணித, சுகாதார, உடற்கல்விப் பிரிவு, கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2007. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

viii, 57 பக்கம், விலை: ரூபா 90.00, அளவு: 29.5x21 சமீ.

க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணித பாடத்திட்டத்தின் கீழ் வகையீடு அல்லது பெறுதிகள் என்ற பாடப்பகுதிக்கான இவ்வளநூலானது ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. சார்பொன்றின் பெறுதி, பெறுதி தொடர்பான முடிபுகள், திரிகோண கணிதச் சார்புகள், பரமானச் சார்புகள் என்பனவற்றின் பெறுதிகள், அடுக்குக் குறிச் சார்புகளினதும், மடக்கைச் சார்புகளினதும் பெறுதிகள், நேர்மாறு வட்டச் சார்புகளின் பெறுதிகள் ஆகிய ஐந்து பாடங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65689).

## 14455

**க.பொ.த (உயர்தரம்) இணைந்த கணிதம்: வேலை-சக்தி-வலு.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: விஞ்ஞான, கணித, சுகாதார, உடற்கல்விப் பிரிவு, கலைத்திட்ட அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2007. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

vii, 43 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 70.00, அளவு: 29.5x21 சமீ.

இந்நூலில் வேலை (வேலை-அறிமுகம்/ மாறா விசை ஒன்றினால் செய்யப்படும் வேலை/ புள்ளிப் பெருக்கத்தின் மூலம், மாறா விசையொன்றினால் செய்யப்படும் வேலையைக் கணித்தல்/ மாறும் விசையொன்றினால் செய்யப்படும் வேலை/ வேலையின் அலகு, பரிமாணம்), சக்தி (சக்தி-அறிமுகம்/ சக்தியின் அலகு பரிமாணம்/ வகைகள் சக்தி/ காப்பு நிலை விசை/ விரய விசை/ அழுத்த சக்தி), மீள்தன்மை அழுத்த சக்தி (மீள்தன்மை இழை/ மீள்தன்மை வில்/ ஊக்கின் விதி/ மீள்தன்மை அழுத்த சக்தி), பொறிமுறைச் சக்திக் காப்பு (அறிமுகம்/ பொறிமுறைச் சக்திக் காப்புக் கோட்பாடு), வலு (வலு/ வலுவின் அலகு, பரிமாணம்/ எஞ்சினொன்றின் வலு) ஆகிய பாடங்கள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் Pam 5747).

# 530 பௌதிகம்

## 14456

**மாற்றல் காரணிகளும் அட்டவணைகளும் (இலங்கைக் கட்டளை 99: 1975).** மெற்றிக் பகுதிக் குழு. கொழும்பு 3: இலங்கைக் கட்டளைகள் பணியகம், 53, தர்மபால மாவத்தை, 1வது பதிப்பு, 1975. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

180 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 7.50, அளவு: 29.5x21.5 சமீ.

இலங்கை மெற்றிக் முறைக்கு மாறிய வேளையில் பிரித்தானிய அலகுகளுக்குரிய மெற்றிக் முறைச் சமானங்களும் மெற்றிக் முறை அலகுகளுக்குரிய பிரித்தானிய அலகுச் சமானங்களும் அவசியமாயின. இக்கட்டளையில் (Standard) அடங்கியுள்ள பௌதிகப் பெறுமானங்கள் பிரதானமாக அளவையியல், பொறிமுறையியல், வெப்பவியல் சம்பந்தப்பட்டவை ஆகும். மெற்றிக் முறையில் எற்கெனவே இருந்த தனித்த மின்னலகுகளும், இரண்டு அலகு முறைகளிலும் ஒரே பெறுமானத்தைக் கொண்ட வேறுபட்ட அலகுகளுக்கிடையேயான மாற்றல்களும் தவிர்க்கப் பட்டுள்ளன. இக்கட்டளையில் பிரித்தானிய முறையிலிருந்து மெற்றிக் முறைக்கும் மெற்றிக் முறையிலிருந்து பிரித்தானிய முறைக்கும் மாற்றல் செய்வதற்கான காரணிகளும் அட்டவணைகளும் அடங்கியுள்ளன. அத்துடன் சில அமெரிக்க அலகுகளுக்கான மாற்றல் காரணிகளும் அடங்கியுள்ளன. நீளம், பரப்பு, கனவளவு, கொள்ளளவு, இரண்டாம் முறைத் திருப்புதிறன் பரப்பு, கோணம், வேகம், திணிவு, திணிவு/நீளம், திணிவு/பரப்பு, அடர்த்தி, விசை, அமுக்கம், தகைப்பு, வெப்பநிலை, வெப்பம் வேலை சக்தி, வலு, தன்வலு (கலோரி பெறுமானம், திணிவு அடிப்படை),

கலோரிப் பெறுமானம் (கனவளவு அடிப்படை), தன் வெப்பக் கொள்ளளவு (கனவளவு அடிப்படை), வெப்பப் பாய்ச்சல் வீதச் செறிவு, வெப்பக் கடத்துதிறன், வெப்பக் கடத்து சக்தி ஆகிய தலைப்புகளில் இந்நூலில் தகவல் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 34483).

## 540 இரசாயனம்

### 14457

**இயற்கை வளங்கள் தொடர்பான இரசாயனவியல்.** A.மகாதேவன். தெல்லிப்பழை: P.ஆறுமுகம், இரசாயனவியற் கழகம், குரும்பசிட்டி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (ஏழாலை: மகாத்மா அச்சகம்).

(2), 52 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 10.00, அளவு: 21.5x14 சமீ.

இயற்கை வளங்களான வளி வளம் (அமோனியா, நைத்திரிக் அமிலம், ஒட்சிசன், ஒட்சைட்டுகள்), கடல் வளம் (NaCl பிரித்தெடுப்பு, NaOH தயாரிப்பு, சவர்க்காரம், $NaHCO_3$/$NaCO_3$ தயாரிப்பு, இலங்கையின் கனியங்கள்), புவி வளம் (பாறைகள், கல்சியம் சேர்வைகள், களிமண், சீமெந்து, இரும்பு, கண்ணாடி, இரத்தினக் கற்கள், வைரம், பென்சிற் கரி, நீர், சல்பூரிக் அமிலம்), தாவர வளம் (பதநீரில் இருந்து பெறக்கூடியவை, சாறெண்ணெய்கள், நீராவி வடித்தல் முறை, இறப்பர்) ஆகிய நான்கு வளங்கள் தொடர்பான இரசாயனவியல் அறிவினை இந்நூல் வழங்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40654).

### 14458

**பிரவுணிங்கு, யோசேப்பு ஆகியோரின் செய்முறை இரசாயனம்.** எரிக்கு.L.பொன்சேக்கா, P.P.G.L.சிறீவர்த்தனா (ஆங்கில மூலம்), வே.பேரம்பலம் (தமிழாக்கம்). கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், சிறீமதிபாயா, 58, சேர் ஏணெஸ்ட் டி சில்வா மாவத்தை, மீள்பதிப்பு, 1978, 1வது பதிப்பு, 1957, 2வது பதிப்பு, 1967, மீள்பதிப்பு, 1974, (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானாலுவ).

xii, 193 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

எரிக்கு.L.பொன்சேக்கா, P.P.G.L.சிறீவர்த்தனா ஆகியோரால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்று கொழும்பு H.W.Cave and Company நிறுவனத்தால் 1957இல் வெளியிடப்பட்ட Practical Chemistry என்ற நூலின் தமிழாக்கம். அல்லுலோகங்கள், உலோகங்கள், சேதனவுறுப்புச் சேர்வைகள், கனமானப் பகுப்பு, பண்பறி பகுப்பு ஆகிய ஐந்து பகுதிகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35296).

## 576.83 வேற்றுக்கிரகவாசிகள்

### 14459

**வேற்றுக் கிரக மனிதர்கள்.** *கனி-விமலநாதன் (இயற்பெயர்: சின்னையா ரிட்ஜ்வே விமலநாதன்). சென்னை 600 017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, 7(ப.எண் 4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆஃப்செட் பிரிண்டேர்ஸ்).*

*128 பக்கம், விலை: இந்திய ரூபா 35.00, அளவு: 17.5x12.5 சமீ.*

*ஏலியன்ஸ் எனப்படும் வேற்றுக்கிரக ஜீவராசிகள் பற்றிப் பேசும் இந்நூலில் விண்வெளி, வேற்றுக்கிரக மனிதர்கள்- பழைய சான்றுகளில் பார்வை, வயல் வட்டங்கள், வேற்றுக்கிரக மனிதர்களின் விமான விபத்துக்கள், றொஸ்வெல் விவகாரம், றொஸ்வெல் விவகார முடிவு, இன்னமும் சில, முடிவாக, உயிரினத்தின் தோற்றம், வெளிக்கிரகவாசிகள் என்பது சாத்தியமா?, வெளி உலகவாசிகளுடன் தொடர்புகள், வேற்றுக்கிரக மனிதர்கள் -சான்றுகள் ஆகிய 12 கட்டுரைகளின் வாயிலாக வேற்றுக்கிரக மனிதர்கள் பற்றிய பல்வேறு தகவல்களை ஆசிரியர் பதிவுசெய்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியான விமலநாதன் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலங்கையில் கணித, பௌதிக ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் கனடாவிற்குப் புலம்பெயர்ந்து சென்று அங்கு குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32799).*

## 580 தாவரவியல்

### 14460

**கலைச்சொற்கள்: தாவரவியற் சொற்றொகுதி.** *சொல்லாய்ந்த குழுவினர். கொழும்பு 7: அரசகரும மொழி அலுவல் பகுதி, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 421, புல்லர்ஸ் வீதி, 3வது பதிப்பு, 1992, 1வது பதிப்பு, 1957, 2வது பதிப்பு, 1963. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).*

*(8), 228 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*அரசகரும மொழி அலுவல் பகுதியினரின் கல்விப் பிரிவினரால் வெளியிடப் பெற்றுள்ள இக்கலைச்சொற்றொகுதியின் தயாரிப்பில் ஈடுபட்ட சொல்லாய்ந்த குழுவில் கலாநிதி மோ.தம்பையா, திரு.வே.அரியரத்தினம், தா.வே.அரியநாயகம், கலாநிதி வ.பொன்னையா, திரு. அ.வி.மயில்வாகனன், திரு.செ.உ.வேதநாயகம் ஆகியோர் பணியாற்றியிருந்தனர். பொதுத் தகுதிப் பத்திரத் தேர்வின் தாவரவியற் பாடத் தேவைக்கு வேண்டிய கலைச்சொற்கள் யாவும் இங்கு இடம்பெற்றுள்ளன. சில தாவரவியற் சொற்கள் தமிழ் வடிவாக்கப்பட்டுள்ளன. வகுப்பு, கோத்திரம், தொகுதி ஆகியவற்றுக்கு ஏற்கெனவே தமிழில் வழங்கப்பெற்ற சொற்கள் கட்டளைச் சொற்களாகப் பட்டுள்ளன. வேண்டியவிடத்து, குறியீடுகளும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48129).*

# 600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்

## 612 உடற்கூற்றுத் தொழிலியல்

### 14461

**பிரயோக உடற்றொழிலியல் (முதலாம் பாகம்).** *சாம்சன் றைற் (மூலம்), சிரில் ஏ.கீல், எறிக் நீல் (புதுக்கியோர்), அ.சின்னத்தம்பி (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1974. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).*

*(8), 371 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 25.00, அளவு: 26x22 சமீ.*

*இரு பாகங்களில் அச்சிடப்பெற்ற இந்நூலின் முதற் பாகம் நான்கு பகுதிகளைக் கொண்டது. "அகச்சூழலின் மாறிலி நிலையின் சீராக்கம்" (கலமும் உடற்பாயிகளும், உடல்நீரும் உடற்பாயியும், குருதி), "இதயமும் சுற்றோட்டமும்" (பொது, மயிர்க்குழாய்ச் சுற்றோட்டம், நாளங்களும் நாள மீளடைவும், இதயத்தின் கட்டமைவும் இயல்புகளும், மனிதனில் இதய வெளியீட்டை அளவிடுதல், இதய வீதம், இதய மின்தொழிலியல், இதய கலனத் தொகுதியின் நரம்பாட்சி, தனித்திறன் பிரதேயங்களுடாகச் சுற்றோட்டம், உயர் குருதியமுக்கம்), "மூச்செடுத்தல் (சுவாசம்)" (மூச்செடுத்தலின் சீராக்கம், குருதியால் ஒட்சிசன் காவப்படல், உடலில் காபனீர் ஒட்சைட்டுக் கொண்டு செல்கை, மூச்செடுத்தலின் இரசாயன ஒழுங்காக்கம், இடர் மூச்சுயர்), "ஊறுநீரியும் உடற்பாயிகளின் சீராக்கமும்" (ஊறு நீரியின் கட்டமைவும் வினையங்களும், ஊறுநீரியால் நீர்ச் சமநிலையினதும் உடற்பாயிகளின் கூற்றமைவினதும் சீராக்கம், நோய் நிலையில் ஊறுநீரி வினையம், உணவுக்கால்வாய்ப் பிறழ்வுகள் உடற்பாயிகளுக்கு உறுத்தும் விளைவுகள்) ஆகிய பாடங்களாக இவை பிரிக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2829).*

## 613 பொது உடல்நலவியல்

### 14462

**சுகமான விடியலை நோக்கி.** *தொகுப்பாசிரியர் குழு. யாழ்ப்பாணம்: நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2014. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், முத்திரைச் சந்தியடி, நல்லூர்).*

*(12), 361 பக்கம், விலை: ரூபா 250.00, அளவு: 20.5x14.5 சமீ.*

*பல்வேறு துறைசார்ந்த வைத்திய அதிகாரிகளின் மருத்துவ சுகாதார அறிவியல் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்திருக்கும் இப்பாரிய மருத்துவக் கட்டுரைத் தொகுப்பில் "சுகாதார விடியலுக்காய்" என்ற முதலாவது பிரிவில் 36 கட்டுரைகளும், "குழந்தைகளை வளர்த்தெடுக்க" என்ற இரண்டாவது பிரிவில் 23 கட்டுரைகளும், "எம்மண்ணையும் சுற்றாடலையும் காத்திட" என்ற மூன்றாவது பிரிவில் 12 கட்டுரைகளும், "பெண்கள் பகுதி" என்ற நான்காவது பிரிவில் 13 கட்டுரைகளும்,*

"எம்மைத் தற்காத்துக் கொள்ள" என்ற ஐந்தாவது பிரிவில் 25 கட்டுரைகளும், "ஆரோக்கியமாக உண்பதற்கு" என்ற ஆறாவது பிரிவில் 10 கட்டுரைகளும், "கேள்வி-பதில்" என்ற ஏழாவது பிரிவில் 6 கட்டுரைகளுமாக மொத்தம் 125 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் தொகுப்பாசிரியர் குழுவில் வைத்தியத்துறையைச் சேர்ந்தவர்களான S.சிவன்சுதன், V.சுஜனிதா, R.பரமேஸ்வரன், P.செல்வகரன், ஏ.கஜேந்தினி, S.சகிலா, S.சுதாகரன், P.ஷாலின், S.கனிஸ்ரெலா, A.சர்மிளா, P.யோகநாதன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

### 14463

**வாழ்வை காக்கும் தகவல்கள் 2004.** ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம். ஐக்கிய அமெரிக்கா: யுனிசெவ், 3 யூ.என்.பிளாசா, நியுயோர்க் NY 10017, 2வது பதிப்பு, 2004, 1வது பதிப்பு, ஜனவரி 1991. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).

xvii, 172 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x18 சமீ., ISBN: 92-806-3664-2.

இப்பிரசுரம் யுனிசெவ்பின் உதவியுடன் சுகாதார, போசாக்கு, நலன்புரி அமைச்சின் சுகாதாரக் கல்விப் பணியகத்தால் இலங்கைவாழ் மக்களுக்குரிய வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கர்ப்பம் தரிக்கும் கால இடைவெளி, பாதுகாப்பான தாய்மை, சிறுவர் விருத்தி, தாய்ப்பால் ஊட்டுதல், போசாக்கும் வளர்ச்சியும், தடுப்பு மருந்து வழங்கல், வயிற்றோட்டம், இருமல் தடிமல் மற்றும் மிக அபாயகர மான நோய்கள், சுகாதாரம், மலேரியா, எச்.ஐ.வி./எயிட்ஸ், விபத்துக்களைத் தடுத்தல், பேரழிவுகளும் அவசரகால நிலைமைகளும் ஆகிய தலைப்புகளில் இந்நூல் ஆலோசனை வழங்கும் விதத்தில் எழுதப்பட்டுள்ளது.

## 614 பொதுச் சுகாதாரம்

### 14464

**மாணவர் ஆரோக்கிய மேம்பாடு (பாடசாலை ஓர் ஆரோக்கிய மேம்பாட்டு நிலையம்).** கா.வைத்தீஸ்வரன். தெகிவளை: கா.வைத்தீஸ்வரன், ஆற்றுப்படுத்தல் நிலையம், 7, அல்பேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, ஏப்ரல் 2013. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

160 பக்கம், விலை: ரூபா 325., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-97577-5-7.

அதிபர், ஆசிரியர், சமூக சேவையாளருக்கான ஆரோக்கிய வழிகாட்டியாக வெளிவந்துள்ள நூல். மாணவர் சமூகத்துக்கு அடிப்படையான ஆரோக்கியத்தினால் ஏற்படும் முக்கிய பிரச்சினைகள், அந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்வதில் ஆசிரியர்களின் பங்களிப்பு இன்றைய ஆசிரியர்களின் நிலையில் எவ்வாறு உள்ளது என்று ஆராய்ந்துள்ளார். ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறை களான பழக்க வழக்கங்கள், எளிமையான நிறையுணவு, சுறுசுறுப்பான வாழ்க்கை, உடல் அப்பியாசம், மற்றவர் மேல் அன்பு பாராட்டுதல், உண்மை பேசுதல், திருப்தியுடன் வாழ்தல், ஆடம்பர வாழ்க்கையினால் ஏற்படும் உடற் பருமனை குறைத்தல், பொறாமை கொள்ளாதிருத்தல் எனப் பலவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களுக்குரிய ஆரோக்கியம் தொடர்பான 16 அத்தியாயங்களும், ஆசிரியர்களுக்கான ஆரோக்கியம் சம்பந்தமான ஐந்து அத்தியாயங்களும் உள்ளன. பாலியல் துஷ்பிரயோகம்-முகம் கொடுக்கும் வழிமுறைகள், உடற்பருமன் முற்றாகத் தவிர்ப்போம், Benefits of Deep Breathing, Medicine Cupboard, தடுப்பு மருந்து அட்டவணை ஆகிய நான்கு பின்னிணைப்புகளும் இறுதியில் தரப்பட்டுள்ளன.

## 616 நோய்கள்

### 14465

**பாரிசவாதமும் பராமரிப்பும்.** பத்மா எஸ். குணரட்ண (மூலம்), ஹம்ஸானந்தி ஜீவாதரன் (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661,665,675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 2வது பதிப்பு, 2014, 1வது பதிப்பு, 2012. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(12), 13-136 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-30-3803-6.

இந்நூல் பாரிசவாதம் பற்றிய விடயங்களைப் பரந்த அளவில் உள்ளடக்குவதுடன் பாரிசவாத நோயாளிகளைப் பராமரிப்பவர்களின் நீண்டகால தேவைப் பாட்டினையும் பூர்த்திசெய்கின்றது. இந்நூல் வெளியீடானது, இலங்கைத் தேசிய பாரிசவாதச் சங்கத்தினரால் நடாத்தப்பட்டு வரும் பல்வேறு செயற்பாடுகளில் ஒன்றாகும். பாரிசவாதத்தை ஏற்படாது தடுப்பதற்காகவும் சிறந்த கவனிப்பைக் கொடுப்பதற்காகவும் இந்நூல் துறைசார் அறிவுரையினை வழங்குகின்றது. அறிமுகம், குணங்குறிகள், நோய் ஏற்படாது தடுத்தல், நோய் நிர்ணயம், சிகிச்சையும் தாதியர் கவனிப்பும், புனருத்தாரணம், உடற்பயிற்சி சார் சிகிச்சை, தொடர்பாடல், தொழிற்பயிற்சிசார் சிகிச்சை, போசணையும் உடற்பயிற்சியும், மனநல ஆலோசனைகள், நீண்டகாலப் பராமரிப்பும் சமூக உதவியும் ஆகிய பன்னிரு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. டாக்டர் பத்மா எஸ். குணரட்ண இலங்கைத் தேசிய பாரிசவாதச் சங்கத்தின் தலைவராக 2010-2012 காலப்பகுதிகளில் பணியாற்றியவர்.

## 619 கீழைத்தேய மருத்துவம்

### 14466

**ஆயிரம் வேரும் அருமருந்தும்.** கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம். திருக்கோணமலை: சுதேச வைத்தியத் திணைக்களம், கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, 2016. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 126/1, திருமலை வீதி).

250 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43218-1-6.

மூலிகை, பழம், பட்டை, வேர், விதை ஆகியவை தொடர்பிலான 1000 சுதேச மருத்துவக் குறிப்புகளைக் கொண்ட மூலிகை வைத்திய நூல். மூலிகைகளின்

*தன்மைக்கேற்ப அவற்றை வகைப்படுத்தி இந்நூலில் விளக்கியுள்ளார். மட்டக்களப்பு திருப்பழுகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்நூலாசிரியர், கமநல சேவைத் திணைக்களத்தில் பயிர்ச்செய்கை உத்தியோகத்தராகவும் பின்னர் கிராம உத்தியோகத்தராகவும் முப்பது வருடங்களுக்கு மேல் பணியாற்றி ஓய்வுபெற்றவர்.*

## 619.1 சித்த மருத்துவம்

### 14467

**சித்த மருத்துவம் 1985**. *எஸ்.எல்.சிவசண்முகராஜா, பி.வி.விமலதாஸ் (இதழாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ மாணவர் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1985. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

*(12), 40 +(28) பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.*

*யாழ் சித்த மருத்துவ மாணவர் ஒன்றியத்தால் இந்த இதழ் வெளியீடு செய்யப்பட்டது. முதலாவது இதழில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி, யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி என்.பாலகிருஷ்ணன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி, யாழ்.பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் எஸ்.பவானி அவர்கள் வழங்கிய ஆசியுரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. வே.ந.சிவராசா அவர்கள் வழங்கிய ஆசியுரை, அன்பார்ந்த வாசகருக்கு என்ற தலைப்பில் மலர் ஆசிரியர் எஸ்.எஸ்.சிவசண்முகராஜா வழங்கிய உரை என்பன ஆரம்பப் பக்கங்களை ஆட்கொண்டுள்ளன. தொடர்ந்து வரும் பக்கங்களில், யாழ்.பல்கலைக் கழகச் சித்த மருத்துவத்துறை ஓர் அறிமுகம், சித்த மருத்துவ வளர்ச்சிக்கு ஆய்வுகள் அவசியம் (வைத்தியகலாநிதி எஸ்.பவானி), சித்தர்களும் சித்தமருத்துவமும் (கலாநிதி இ.பாலசுந்தரம்), கவிதைகள் தமிழன்னை வாழ்த்துகிறாள் (க.நாகேஸ்வரன்), சித்தர் பெருமை (அ.பிரேமா), ஆராய்ச்சி (ஸ்ரீகாந்தா அருணாசலம்), யோகாசனமும் உடல்நலமும் (என்.சியாமா),* The Government and the Indigenous Systems of Medicine (K.Balasingham), Baby to be Born - Boy or Girl! (S.S.Sivashanmugarajah), How to Maintain Good Health? (T.Vasanthy), General Practice in a baffled and confused Community (S.S.Senathirajah), *சித்தமருத்துவம் - ஒரு கண்ணோட்டம் (பா.விக்னவேணி), கர்ப்பிணிகளின் உணவு - நடைமுறைகள் பற்றிச் சித்தமருத்துவம் கூறுவதென்ன? (க.இராமசுவாமி), எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள் (சித்த மருத்துவ மாணவர் மன்றம்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.*

### 14468

**சித்த மருத்துவம் 1986**. *ஐ.ஜெபநாமகணேசன் (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ மாணவர் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1986. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

iv, *53+(40) பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.*

*இவ்விதழில் வாழ்த்துரை (பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன்),* From the bottom of our Hearts (Sidha Medical Students), Approach to the Study of Shareera Vingnanam

(S.Bhavani), *ஈழத்துத் தமிழ் மருத்துவ நூல்கள்- ஓர் ஆய்வு (இ.பாலசுந்தரம்),* A green day keeps the doctor away (Gnana Amirtham Bhavani), *மதுமேகம்-நீரிழிவு நோய் (சே.சிவசண்முகராஜா), மின் வலிப்புச் சிகிச்சை (*ECT*) நவீன மருத்துவத்தில் ஒரு புதுமை முயற்சி (ஏ.செல்வரத்தினம்), தாய்ப்பால் கொடுத்தல் (வி.வியன்), தாமிரத்தின் உபயோகம் (எஸ்.திருநாவுக்கரசு),* Uses and Abuses of Opium and Ganja *(ஸ்ரீரஞ்சனி சிவபாலன்), இதயப் பராமரிப்பு (சி.வடிவேல்), செங்கண்மாரியும் -நிவர்த்திக்கும் வழிகளும் (ப.சாந்தநாயகி),* Panchakarma Therapy (M.Srikantha) *ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.*

## 14469

**சித்த மருத்துவம் 1987**. *சி.திலகேஸ்வரி (இதழாசிரியர்). யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ மாணவர் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: சிவா பிரின்டர்ஸ், த.பெ.எண் 1, கைதடி).*

xv*, 74 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24*x*18.5 சமீ.*

*இவ்விதழில் பேராசிரியர் அ.துரைராஜாவின் ஆசிச்செய்தியும், சித்தவைத்தியத் துறையின் பணியும் அதன் அபிவிருத்தியும் பற்றிய டாக்டர் எஸ்.பவானியின் சிறப்புச் செய்தியும், மாணவர் மன்றத்தினரின் குறிப்புகளும் முதலில் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்து, ஆசாரக் கோவையில் ஆரோக்கிய வாழ்வுப் போதனைகள் (இ.பாலசுந்தரம்), மதுபானம் மரணத்தின் வழிகாட்டி (சி.வடிவேல்),* Siddha Medicine-A Point of View (V.S.Pathmanathan), Rabies (Sri Ranjani Sivapalan), *குழந்தைகள் நலன் காக்க (த.சத்தியசீலன்),* Chemistry Drug and the Common Cold (S.Mohanadas), *உள்நாட்டு யுத்தத்தினால் விளைந்த உளத்தாக்க விளைவுகள் (ஆங்கில மூலம்-*D.J.*சோமசுந்தரம், தமிழாக்கம்- செல்வி அ.பிரேமா)*, Pharmacy adopted by Siddhas in the ancient time (S.Thirunavukkarasu), *ஆஸ்துமா (வே.கனகேஸ்வரி), ஆரோக்கியமும் மனமும் (பா.விக்னவேணி),* Traditional Meicine (R.Paskaran), *குழந்தைகளின் அதிசாரம் (வ.சின்னப்பு), வாந்திபேதியும் தடுப்புமுறைகளும் (பா.சைலஜா), கர்ப்பகாலப் பராமரிப்பு (க.சிவராஜா),* Oral Diseases and Preventive Measures (P.Mangaleswary) *ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.*

## 14470

**சித்த மருத்துவம் 1990/91**. *என்.ஸ்ரீசுப்பிரமணியம் (இதழாசிரியர்), க.ஸ்ரீதரன் (உதவி ஆசிரியர்). யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ மாணவர் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1991. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).*

xviii*, 64 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24*x*18.5 சமீ.*

*இவ்விதழில் ஆரோக்கியமான குழந்தைகள் எமது நாட்டின் எதிர்காலச் செல்வங்கள் (திரிபுரநாயகி சிதம்பரநாதபிள்ளை), தொற்றுநோய்களும் தடுப்புமுறைகளும் (சிவமலர் சின்னத்தம்பி), புகை, மது, போதைவஸ்து - இன்றைய இளைய சமுதாயத்திற்கு ஒரு சாவுமணி (ராஜீவி இராஜரட்ணம்), இயோசினோபீலியாவில்*

*கழற்சி விதை செயலாற்றும் திறன் பற்றி ஆராய்தல் (க.ஸ்ரீதரன், மோகமதி சிவானந்தன்),* Traditional medicine in Zambia (African Medicine) A Point of View (S.Rajkumar), *மலேரியாவும் தடுப்புமுறைகளும் (தி.சர்வானந்தன்), குடற்புண் (மனோரஞ்சிதமலர் மயில்வாகனம்),* A Pilot study on the deliveries conducted at the Maternity Ward at the Kaithady Teaching Hospital for the Siddha Medical Students (Gnana Amirtham Bhavani), *பச்சிலைத் தாவரங்களும் கடலை வகைகளும் அவற்றின் புரதச் செறிவும் (எஸ்.கே.வடிவேல்), வடக்கு-கிழக்கில் சித்த மருந்துகளின் பாவனையை அதிகரிக்கச் செய்தலும் அதற்கான வழிமுறைகளும் (சே.சிவசண்முகராஜா) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.*

## 14471

**சித்த மருத்துவம் 1992/93**. எம்.மனோரஞ்சிதமலர் (இதழாசிரியர்), பி.பிரதீபா *(உதவி ஆசிரியர்). யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ மாணவர் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1993. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(18), 44*, xx *பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24*x*18.5 சமீ.*

*இவ்விதழில் ஆசியுரைகள், சிறப்புச் செய்திகளுடன், பிரசவத்தின் பின் பராமரிப்பு (சி.சியாமளா), உளவியலின் உள்ளே சில நிமிடங்கள் (இ.ராஜீவி), அதி குருதியமுக்கமும் சமூகத்தில் அதனால் ஏற்படும் தாக்கமும் (மி.சிறீகாந்தன்), நீரிழிவு (க.சிவாதரன்), தெய்வீக பத்ரஸ்களும் சித்த மருத்துவ உண்மைகளும் (*R.T.S.*சபாநாதன்),* Rheumatic Fever- *கீல்வாதக் காய்ச்சல் (இ.சுமங்கலாதேவி), சித்த மருத்துவத்தில் ஆய்வுகள் (ந.சிவராஜா),* Identification Importance and usage of herbs in Siddha Medicine (V.Thevarajan), *முடக்குவாதத்தில் முடக்கொத்தான் மூலிகை (*P.*இராமநாதன்) ஆகிய மருத்துவத்துறை சார்ந்த ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.*

## 14472

**சித்த மருத்துவம் 1993/94**. கே.மனோன்மணி (இதழாசிரியர்), பி.ஸ்ரீகணேசன் *(உதவி ஆசிரியர்). யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ மாணவர் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: மஹாத்மா அச்சகம், ஏழாலை).*

*(20), 72 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24*x*18.5 சமீ.*

*இவ்விதழில் ஆசியுரைகள், சிறப்புச் செய்திகளுடன், தமிழ் மரபில் உளவியல் ஆய்வு நோக்கு (வெற்றிவேல் சக்திவேல்), செப்ற்றிஸீமியா (எஸ்.பி.ஆர்.சீர்மாறன்), கவிதை: மௌனத்தின் மொழி (இ.இராஜீவி), மாரடைப்பு (க.சிவாதரன்), சிரிப்போம் சிந்திப்போம் (மலர் வெளியீட்டுக் குழு), கவிதை: சித்தர் மருத்துவம் (பு.ஸ்ரீகணேசன்), இயற்கை தரும் மூலிகைகளினால் தீரும் நோய்கள் பற்றிய சில குறிப்புகள் (*T.*பூபதீஸ்வரி), மதுமேகத்தில் நாவல் விதை மாத்திரையின் செயல்திறன் பற்றிய ஆய்வு (மி.ஸ்ரீகாந்தன்), யோகமும் நல்வாழ்வும் (என்.ஜீவலதா), உயிர்ச்சத்து*

யுயும் அதன் உடற்றொழிற்பாடுகளும் (சுகந்தி தம்பிராசா), முக்கிய சில நோய் நிலைகளில் உணவின் பங்கு (நா.வர்ணகுலேந்திரன்) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 14473

**சித்த மருத்துவம் 1997/1998.** சியாமளா கந்தையா, லோஜனா சிவகுருநாதன், (இதழாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ மாணவர் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 1998. (யாழ்ப்பாணம்: தயா அச்சகம், 138 நாவலர் வீதி).

(16), 96 பக்கம், தகடு, அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19.5 சமீ.

சித்த மருத்துவம் இதழ் 1985 இல் வெளிவர ஆரம்பித்தது. யாழ் சித்த மருத்துவ மாணவர் ஒன்றியத்தால் இந்த இதழ் வெளியீடு செய்யப்பட்டது. இதன் ஆரம்பகால ஆசிரியர்களாக எஸ்.எஸ்.சிவசண்முகராஜா, பி.வி. விமலதாஸ் போன்றோர் விளங்கினார்கள். சித்தமருத்துவம், சித்த பயன்கள், சித்த மருத்துவ முறைகள், சித்தர்கள், யோகாசனம் போன்ற பல சித்த மருத்துவம் சார்ந்த விடயங்களை தாங்கி இந்த இதழ் வெளிவந்தது. 1997/98 ஆண்டுகளுக்குரிய இவ்விதழில் உற்சாகத்தைத் தூண்டும் உணர்வை மாற்றும் பதார்த்தங்கள் (எஸ்.சிவபாதம்), நீரிழிவும் மதுமேகச் சூரணமும் ஓர் ஆய்வு (சைலஜா சிவராஜா), காய்ச்சல் சொல்லும் கதை (லோஜனா சிவகுருநாதன்), மலச்சிக்கலும் இலகு தீர்வுகளும் (செ.பரமசிவம்பிள்ளை), கனவுகளும் நிஜங்களும் (வ.அனவரதன்), வட-கிழக்கு மாகாணத்தில் சுதேச மருத்துவத்தின் இன்றைய நிலையும் மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்குவதற்கு நாம் ஆற்ற வேண்டிய செயற்பாடுகளும் (சுப்பிரமணியம் பவானி), சித்த வைத்தியம் அது ஒரு சித்திரம் (ப.இந்திராணி), பெரியமஞ்சள் எண்ணெய் செயலாற்றும் திறன் பற்றி ஆராய்தல் (க.ஸ்ரீதரன்), கலை-சிறுகதை (சு.அரவிந்தன்), இயற்கையோடு வாழ்க்கை (என்.ஜீவலதா), சுதேச மருத்துவ வளர்ச்சியில் (த.திலீபன்), முத்தேசங்களை மேற்கத்திய வைத்திய உடற்றொழிலியலுடன் ஒப்பிட்டு நோக்கல் (எஸ்.தில்லைநாதன்), நெடுந்தீவுப் பிரதேசத்தில் காணப்படும் மூலிகைகளின் பரம்பல் பற்றிய ஆய்வு (செல்விகள் இ.இரத்தினசிங்கம், அ.நவரட்ணம், சி.சோமசுந்தரம்), கவலைகளைக் கலைக்கலாமா? (சி.கிளமென்ரீனா), தாய் சேய் நலன் (எஸ்.சிவலட்சுமி), சித்த மருந்துகளில் அதிகம் வீரியமும் வன்மையுமுடைய மாத்திரைக் கட்டு (பொன் இராமநாதன்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

### 14474

**பரராசசேகர நயனவிதி (மூலமும் உரையும்).** சே.சிவசண்முகராஜா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சே.சிவசண்முகராஜா, சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவ அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, வைகாசி 2012. (கோண்டாவில்: சிவரஞ்சனம் ஓப்செற் பிறின்ரேர்ஸ், பலாலி வீதி).

vi, 14 பக்கம், விலை: ரூபா 60.00, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-53216-5-5.

கி.பி. 12 - 15 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்துத் தமிழ் மன்னர் காலத்தில் பரராசசேகரம், செகராசசேகரம், இலங்கைச் சிங்கை மன்னன் நயனவிதி முதலான நூல்கள் தோற்றம் பெற்றன. இவை யாவும் தொகுப்பு நூல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றிலே கூறப்பட்டுள்ள மருந்துகளில் பல தற்போதும் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் பெருவழக்காயுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான நூலகத்திலுள்ள ஏட்டுச் சுவடிகளை ஆய்வுசெய்து இதுவரை அச்சில் வெளிவராத நூல்களை இனங்கண்டு அவற்றைப் பொருளுரையுடன் வெளியிடுவதுடன், ஏற்கெனவே பதிப்பிக்கப்பட்ட நூல்கள் தொடர்பாக, கிடைக்கும் ஏட்டுச் சுவடிகளுடன் ஒப்புநோக்கி தவறுகளைத் திருத்தியும் விட்டுப்போன பகுதிகள் இருப்பின் அவற்றைச் சேர்த்தும் பாடல்களுக்குப் பொருளும், தேவையான விளக்கவுரைகளும் எழுதி வெளியிடும் பணியை நூலாசிரியர் மேற்கொண்டு வருகிறார். அவ்வகையில் ஏட்டுச்சுவடி இலக்கம் -7 1904இல் பதிப்பிக்கப்பட்ட நயனவிதி நூல் பரராசசேகரம் சிரரோகநிதானம் (1928) ஆகியவற்றை ஒப்புநோக்கி ஆராய்ந்து "பரராசசேகர நயனவிதி" என்னும் இந்நூல் விளக்க உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந் நூலில், கண்நோய்களின் எண்ணிக்கையும் வகையும், சிலேட்டும காசகுணம், ஒடுக்கண்ணின் குணம், மலங்குகண், இரணகாசம், முடமயிர், நீலகாசம், கட்கட்டிகாசம், படலம், செவ்வரி, அதிமாங்கிஷம், கண்சிவப்பு, புருணி, சொறிகண், இழிகண், சொருகுகண், அந்திமாலை, மாலைக்கண், விரிகண், கண்புகைச்சல், கண்பூ, கண்ணெழுச்சி, அவிகண், பில்லம், கண்கோபம், பற்பரோகம், கண்காசம், செங்கலங்கல், கண்நெரிவு, அழுகண், சீழ்க்கண், குலாவுகண், கண்படலத்துக்கு சிகிச்சை, கண் வேதனைக்கு உண்டை, கண்கோபம் மாற மருந்து, இளநீர்க் குழம்பு, கண்படவனுக்கு, பச்சை மாத்திரை, கண்படவனுக்கு உண்டை, படலக்குளிகை அல்லது தாம்பிராதிக் குளிகை, ஆணிப்பூவுக்கு, விரிவுகண்ணிற் கிருமிக்கு, இழிகண்-முடமயிர்-ஆணிப்பூவிற்கு, அமரத்துக்கு, சீதுளாய்ச்சாற்றுக் குழம்பு, காரீயக்கோல் ஆகிய 46 பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

## 14475

**லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் 75ஆவது ஆண்டு பவளவிழா மலர் 1925-2000.** இதழாசிரியர் குழு. யாழ்ப்பாணம்: லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).

xx, 102 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

இம்மலரின் இதழாசிரியர் குழுவில் க.குணராசா, என்.மணிவண்ணன், திருமதி ஜீ.புவனலோஜனி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். ஆசியுரை, வாழ்த்துரைகளுடன் சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்விப் பாரம்பரியம் (திருமதி இந்துராணி தர்மராஜா),

மந்திரமும் தந்திரமும் மருந்தும் (அ.சண்முகதாஸ்), நிகழ்கால மருத்துவச் சமூகவியல் சிந்தனைகள் (என்.சண்முகலிங்கன்), சித்த வைத்தியமும் மக்களும் (செ.பரமசிவம்பிள்ளை), சுரம் என்றால் என்ன (வேடகுகமூர்த்தி), தெய்வீக ஆரோக்கியம் (சிவகுமாரி சிதம்பரப்பிள்ளை), ஒவ்வாமை நோய்கள் கிரந்தித் தோய்வும் தமக சுவாசமும் (பொ.சண்முகரத்தினம்), பொங்கு தமிழ் போல புகழ் பெறுக (ந.மணிவண்ணன்), சித்தாயுள் வேத சித்தாந்தங்கள் (திருமதி.க.பரமசிவம்), நல வாழ்வின் பரிமாணங்கள் (நாகேஸ்வரி நாகலிங்கம்), பெரும் பாட்டு ரோகமும் அதன் சிகிச்சை முறைகளும் (சாந்தினி செல்வராஜா), உளச்சிதைவு நோய் (மொழிபெயர்ப்பு: ஜி. ராஜேந்திரம்), புற்று நோய் (இதயராஜி பாலசுப்பிரமணியம்), இலங்கை மருத்துவ முறை (சண்முகரத்தினம் பிஹேமனந்தி), இயற்கை மரணம் (புவனலோஜினி ஜீவானந்தம்), திருக்குறளில் மனித மேம்பாடு பற்றிய சில சிந்தனைகள் (சோபனா வேணுகோபாலசர்மா), ஆடாதோடை (கஜீபா புஷ்பராஜா), மலருக்குள் மறைந்திருக்கும் மொட்டுக்கள் (க.இராசதேவி), குறிக்கோளை நோக்கி (கிருஷாந்தி), மருத்துவத்தில் பனை நுங்கு (பனைச்செல்வம்), வர்மக்கலை -மர்மக்கலை / நரம்படிக்கலை (செல்வம் ஜே.ஜெயலன்), கடிவளம் (ந.நகுலரசி), எயிட்ஸ் என்றால் என்ன (நா.சிவராதிரன்), உடல் பருமன் (யோ.காயத்ரி), நவீன காலணிகளால் ஏற்படும் பாதிப்புக்கள் (நிஷா நித்தியானந்தன்), மூலிகைகளும் அதன் மருத்துவமும் (இ.வசந்தராஜ்) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31486).

## 630 விவசாயமும் அது சார்ந்த துறைகளும்

### 14476

**கொவி செவன முகவர் பயிற்சி: விவசாயத் தொழில்நுட்பப் பாடநூல் (இரண்டாம் பாகம்).** மனிதவள அபிவிருத்தி நிலையம். பேராதனை: மனிதவள அபிவிருத்தி நிலையம், விவசாயத் திணைக்களம், விவசாய காணி அமைச்சு, 1வது பதிப்பு, 1998. (பேராதனை: விவசாயத் திணைக்கள அச்சகம், கண்ணொறுவை).

(12), 214 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப் படவில்லை, அளவு: 29x20.5 சமீ.

பூங்கனியியல் (மரக்கறிப் பயிர்கள், பழப்பயிர்கள்), விலங்குப் பரிபாலனம் (பாற்பண்ணைப் பசு பராமரிப்பு, கோழிப் பராமரிப்பு), உணவு விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் (அறுவடைக்குப் பின் தொழில்நுட்பம், உணவுப் பாதுகாப்பு), விவசாய விரிவாக்கம் (விவசாய அபிவிருத்தி, விவசாய விரிவாக்கம், விரிவாக்கமும் தொடர்பும், முதியோர் கல்வி, விரிவாக்கக் கற்பித்தல் முறைகள், விவசாய விரிவாக்க அணுகுமுறைகள், விவசாயத் துறையுடன் தொடர்புடைய நிறுவனங்கள்) ஆகிய விடயங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29220).

### 14477

**மரக்கறிச் செய்கை.** கே.என். மான்கோட்டே (மூலம்), சீரங்கன் பெரியசாமி (தமிழாக்கம்). பேராதனை: பணிப்பாளர், விரிவாக்க பயிற்சிப் பிரிவு, த.பெட்டி எண். 18, விவசாயத் திணைக்களம், விவசாய கால்நடை அமைச்சு, 1வது பதிப்பு, 2003. (பேராதனை: விவசாயத் திணைக்கள அச்சகம், கண்ணொறுவ).

(4), 82 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 50.00, அளவு: 29x21.5 சமீ.

இந்நூலில் மரக்கறிப் பயிர்ச்செய்கை பற்றிய விபரங்கள் ஒவ்வொரு மரக்கறி வகையின் கீழும் விரிவாகத் தரப்பட்டுள்ளது. கத்தரி, பீர்க்கு, புடோல், பாகல், கெக்கரி, பூசணி, வெண்டி, மரக்கறிக் கௌபீ, சிறகவரை, தக்காளி, போஞ்சி, முள்ளங்கி, கரற், பீற்றூட், லீக்ஸ், கறி மிளகாய், கோவா, மரக்கறி நாற்று மேடை, சேதன இரசாயன பசளைப் பாவனையின் முக்கியத்துவம், மரக்கறிகள் வீணாவதைத் தவிர்த்தல், அறுவடை செய்யும்போது கவனிக்க வேண்டியன ஆகிய தனித்தனித் தலைப்புகளில் இவை விபரிக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34516).

## 640 இல்லப் பொருளியல், குடும்பக் கலை

### 14478

**கல்விப்பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்புக்களுக்கான மனைப் பொருளியல்: உசாத்துணை நூல்.** தேசிய கல்வி நிறுவகம். மஹரகம: தொழினுட்பக் கல்வித் துறை, விஞ்ஞான தொழினுட்பப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, ஆணடு விபரம் தரப்படவில்லை. (மஹரகம: அச்சகம், தேசிய கல்வி நிறுவகம்).

x, 225 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 470., அளவு: 29.5x20.5 சமீ., ISBN: 978-955-654-649-1.

புதிய கலைத்திட்ட மீளாய்வு, 2007இல் மேற்கொள்ளப்பட்டு 2008இல் க.பொ.த. உயர்தர வகுப்பகளுக்கான தேர்ச்சி மையக் கலைத்திட்டம் பாடசாலை முறைமையில் அறிமுகம் செய்யப்பட்டது. மனைப் பொருளியல் என்னும் இந்தப் பாடத்துறையானது நான்கு பாடப் பரப்புகளின் தொகுப்பாக அமைகின்றது. மனை முகாமைத்துவம், உணவும் போசணையும், புடவைத் தொழினுட்பவியல், பிள்ளை விருத்தி ஆகியனவே அவை. இந்தப் பாடப்பரப்புகள் காலவோட்டத்துடன் மாறி வருபவை என்பதால் ஆசிரியர்களை இற்றைப்படுத்தவும் மாணவர்களுக்கு வழிகாட்டவும் இந்நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதில் மனைத்திட்டமிடலும் அழகுபடுத்தற் கோட்பாடுகளும், கலைத்துவ அடிப்படைகள், மனை அலங்கரிப்பும் திட்டமிடற் கோட்பாடுகளின் பயன்பாடும், பிரதான போசணைப் பதார்த்தங்கள், உணவு வேளைகளைத் திட்டமிடல், நோய்களைத் தவிர்ப்பதில் உணவின் பங்களிப்பு, தொழினுட்பத்தைப் பயன்படுத்தி உணவின் தரத்தை மேம்படுத்தல், உணவு நற்காப்பு, புடைவைகளதும் ஆடைகளதும் தரத்தை மேம்படுத்தும் நுட்பமுறைகள், தாய்மையைப் பேணல், உணவுச் சமிபாட்டுச் செயன்முறை, அனுசேபம், உணவுப் பாதுகாப்பு, ஆடைகளைத் தூயதாக்கல், கட்டிளமைப்

பருவத்தின் பிரச்சினைகள், வீட்டு மின் உபகரணங்களின் பயன்பாடு ஆகிய 16 பாடங்கள் இடம்பெறுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65696).

## 650 முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம்

### 14479

**செய்முறை முகாமைத்துவ கைநூல்: இலங்கையின் கிராமிய, நகர, மக்கள் அமைப்புகளுக்காக: தொகுப்பு 1- அமைப்பு, நிர்வாகம், தொடர்பு முறைகள்.** பிரனாந் வின்செட். இராஜகிரிய: இரெட் வெளியீடு, ஆசிய பங்காளருக்கான இரெட் அபிவிருத்தி சேவை, இல.562/3, நாவல வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 1995. (கொழும்பு: கருணாதாச அச்சகம்).

iv, 57+(99) பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

இரெட் தலைமைச் செயலாளர் பிரனாந் வின்செட்டின் நூலிலிருந்து முக்கிய பகுதிகளை இப்பிரசுரம் கொண்டுள்ளது. இதில் சங்கத்தின் ஆரம்பமும் அதன் அபிவிருத்தியும், உற்சாகத்துடன் கடமையாற்றுதலும் பங்குபற்றுதலும், சுற்றாடற் கல்வி, திட்டமிடலும் மற்றும் வேலைத்திட்டம் தயாரித்தல் பற்றிய திட்டம் தயாரித்தல், நடைமுறைப்படுத்தும் திட்டமும் அதன்பின் வரும் நடைமுறைகளும், கல்வி, செய்திகள் மற்றும் செய்திகளை பதிவுசெய்தல், தொலைத்தொடர்பு முறைகள் ஆகிய ஏழு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக 99 பக்கங்களில் மாதிரிப் படிவங்களும், வேலைத்திட்டத்திற்கு பயன்படும் பிற ஆவணங்களும் வகை மாதிரிகளாகத் தரப்பட்டுள்ளன.

### 14480

**தமிழ் மொழிப் பிரயோகம்: கணக்கெடுப்பும் பிரச்சினைகளும்: ஆய்வரங்கக் கட்டுரைகள்-1996.** எஸ்.எதிர்மன்னசிங்கம் (வெளியீட்டாளர்). திருக்கோணமலை: கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1997. (திருக்கோணமலை: பதிப்பகத் திணைக்களம், வடக்கு கிழக்கு மாகாணம்).

viii, 84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17 சமீ.

நிர்வாகத்தில் தமிழ்மொழிப் பிரயோகம்: மொழித் திட்டமிடல் நோக்கிற் சில அவதானிப்புகள் (க.சண்முகலிங்கம்), நிர்வாகத்தில் தமிழ்மொழிப் பிரயோகம்: கொள்கை செயற்படுத்துகை நிலை (ஜனாப் மு.இ.அ.ஜபார்), நிர்வாகத்தில் தமிழ்மொழிப் பிரயோகம்: கள நிலை (எஸ்.ஸ்கந்தராஜா), தமிழில் நிர்வாகம்: கணனிப் பயன்பாடு (இ.இரங்கராஜா), இலங்கை ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைக் கல்வியில் தமிழ்மொழிப் பிரயோகம் (கு.சோமசுந்தரம்), உயர் கல்வியில் தமிழ்-மொழிப் பிரயோகம் (சோ.சந்திரசேகரன், மா.கருணாநிதி), தொழிற் கல்வித் துறை (வெ.சுந்தரலிங்கம்), கல்விக்கான வளங்களும் ஆய்வுகளும்

(ந.சிதம்பரநாதன்), தமிழ் மொழி மூலம் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (து.தவசிலிங்கம்), தமிழ்மொழிப் பிரயோகம்-வைத்தியத்துறை (ஏ.ஞா. ஞானகுணாளன்), சட்டம், நீதித்துறை என்பவற்றில் தமிழ்மொழிப் பிரயோகம் (சோ.தேவராசன்) ஆகிய கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 14481

**முகவரிகள்: தமிழ்மொழி மூல பயிற்சிபெற்ற பட்டதாரிகள்.** T.குகதாஸ், S.றஸ்மி (இதழாசிரியர்கள்). கொழும்பு 12: தமிழ்மொழி மூல பயிற்சிபெற்ற பட்டதாரிகள், கொழும்பு கச்சேரி, டாம் வீதி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு 6: டெக்னோ பிரின்டர்ஸ், 581, 2/1, காலி வீதி, வெள்ளவத்தை).

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

பட்டதாரிகளின் பயிற்சியும் பயிலுநர்களும் (மா.கணபதிப்பிள்ளை), நினைவுகளை நிரந்தரமாக்கிட, முகங்களின் முகவரிகள், இன்றைய கல்வி முறையும் வேலைவாய்ப்பும் (சித்தீக் றஸ்மி), நெஞ்சத்து நினைவுகள் கவித்துளிகளாக ஆகிய ஐந்து தலைப்புகளின் கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தமிழ்மொழிமூலம் நிர்வாகப் பயிற்சியை பெற்றுக்கொள்ள அனுப்பப்பட்ட பயிலுநர்கள் தமது சகபாடிகளின் மலரும் நினைவுகளுடன் தயாரித்துப் பகிர்ந்துகொண்ட ஒரு சிறப்பிதழ் இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 36188).

# 657 கணக்கியல்

## 14482

**அரச கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக்கான கற்பித்தல் கைநூல்.** கணக்கியல் பயிற்சிப் பிரிவு. கொழும்பு: நிதி அமைச்சு-ஆசிய அபிவிருத்தி வங்கி, மனித வள அபிவிருத்தி, 2வது பதிப்பு, ஜுன் 1998, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1994. (கொழும்பு: குளோப் பிரின்டிங் வேர்க்ஸ்).

(2), 121 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x22 சமீ.

அரச முறைமையின் அமைப்பு, நிதி முகாமை முறையில் பிரதேச அலுவலகங்களும் அதன் பிரச்சினைகளும், நிதி அமைச்சின் அமைப்பும் தொழிற்பாடும், அரச நிதியின் மூலங்கள், அரசிறையை மதிப்பீடு செய்தல், சேகரித்தல், ஏற்றுக்கொள்ளல், பாதீட்டு நடைமுறைகள், கருத்திட்ட முகாமைத்துவம், அரச கணக்குகள், உள்ளூ ராட்சி நிதிக்கான அறிமுகம், காசு ஒழுங்கு, அனுமதி அளித்தல், அங்கீகாரம், சான்றுப்படுத்தல், கொடுப்பனவு, பெறுகைகளை உத்தரவாதமளித்தல், பணம், சில்லறைக் காசு, சில்லறைக்காசு ஏடு, பணத்தின் கட்டுக்காப்பு, இருப்புப் பெட்டிச் சாவிகள், வங்கிக் கணக்குகள், வங்கிக் கணக்கிணக்கம், உத்தியோகத்தர்களின் பிணைப் பணம்-காசும் முறிகளும், லீவு, ஒப்பந்த நிர்வாகம், ஒப்பந்த நிர்வாகம், கலந்துரையாடலுக்கான விடயங்கள் ஆகிய 18 பாடங்கள் இந்நூலில் விளக்கப்

படுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38829).

### 14483

**இலங்கைக் கணக்கீட்டு நியமங்களும் காசுப்பாய்ச்சல் கூற்றும்.** எஸ்.கே.பிரபாகரன். கொழும்பு 4: அன்னை வெளியீடு, எஸ்.கே.பப்ளிக்கேஷன்ஸ், 27A 3/1, கொத்தலாவல அவென்யூ, 2வது பதிப்பு, ஜுன் 2001, 1வது பதிப்பு, ஜுன் 1998. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

vi, 94 பக்கம், அட்டவணை, விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ.

க.பொ.த. உயர்தரம் மற்றும் கணக்கீடுசார் மாணவர்களுக்குரிய இந்நூல் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (03, 05, 08, 09, 10, 12), புதிய கணக்கீட்டு நியமம் 03, காசுப் பாய்ச்சல் கூற்றுகள், கணக்கியற் பதங்கள், நியமங்கள் எண்ணக்கருக்கள் தொடர்பான கடந்தகால வினா-விடைகள் ஆகியவற்றை விளக்குகின்றன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31446).

## 658.15 நிதி முகாமைத்துவம்

### 14484

**இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1996.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: நாணயச் சபை, இலங்கை மத்திய வங்கி, 35ஆவது மாடி, மேற்குக் கோபுரம், உலக வர்த்தக நிலையம், எக்சலன் சதுக்கம், இலங்கை வங்கி மாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1996. (கொழும்பு 12: ஜே அன்ட் எஸ். சேர்விஸஸ் அச்சகம், 115 மெசெஞ்சர் வீதி).

(30), 292 பக்கம், lxi, xxiii, cxxix, 111 அட்டவணைகள், விலை: ரூபா 100.00, அளவு: 27x20 சமீ.

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 35ஆம் பிரிவானது பொருளாதார நிலைமை, மத்திய வங்கியின் நிலைமை மற்றும் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள், வழிமுறைகள் என்பன பற்றிய ஆய்வு மீதான ஆண்டறிக்கையை ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து நான்கு மாதங்களுக்குள் மத்திய வங்கியின் நாணயச்சபை நிதி திட்டமிடல் அமைச்சுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. அவ்வகையில் 47ஆவது ஆண்டறிக்கையாகத் தயாரிக்கப்பட்ட 1996ம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை இதுவாகும்.

### 14485

**இலங்கை மத்திய வங்கி: நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/2004: கண்டறியப்பட்ட முக்கிய விடயங்கள்.** இலங்கை மத்திய வங்கி. கொழும்பு 1: இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, 1வது பதிப்பு,

செப்டெம்பர் 2005. (கொழும்பு: இலங்கை மத்திய வங்கி அச்சகம், இல. 58, ஜெயவர்த்தனபுர மாவத்தை).

xii, 25 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ., ISBN: 955-575117-8.

ஆளுநரின் செய்தி, முன்னுரை, இலங்கையின் முதன்மை சமூக பொருளாதாரக் குறிகாட்டிகள் 1953-2003/04, இலங்கையின் முதன்மை சமூக பொருளாதாரக் குறிகாட்டிகள் - மாகாண ரீதியாக 2003/04, குறிக்கோள்களும் முறைமையியலும், கண்டறியப்பட்ட விடயங்கள் ஆகிய விடயதானங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39560).

### 14486

**பொது முதலீடு 1990-1994**. கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு. கொழும்பு: தேசிய திட்டமிடல் திணைக்களம், கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1990. (கொழும்பு 12: குமரன் பதிப்பகம், 201, டாம் வீதி).

(4), 157 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

பொது முதலீட்டுத் திட்ட வரிசையில் வெளியிடப்படும் 1990-1994ஆம் ஆண்டுக்கான இந்த வெளியீடு, இலங்கையின் பொருளாதாரம் புதுப்பிக்கப்பட்ட இயக்க ஆற்றலை வெளிப்படுத்தும் ஒரு காலப்பகுதியில் முன்வைக்கப்படுகின்றது. அடுத்த ஐந்தாண்டு காலத்திற்கான அரசாங்கத்தின் முழுமையான பொருளாதார உபாயத்தையும் கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் இவ்வறிக்கை விளக்குகின்றது. இது பொருளாதார கண்ணோட்டமும் செயற்பாடும், அரச துறையினது மறுசீரமைப்பு, பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் 1990-1994 ஆகிய மூன்று அத்தியாயங்களையும் அதைத் தொடர்ந்து அரச மூலதனச் செலவின ஒதுக்கீடு 1990-1994 அறிக்கையையும் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23613).

## 660.6 உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்

### 14487

**விஞ்ஞான தொழில்நுட்பவியல் G.C.E.A/L: நீரியல் வளங்கள்**. திருச்செல்வம் தவரத்தினம். கொழும்பு 6: இனிய தென்றல் பதிப்பகம், 135, கனல்பாங்க் ரோட், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2015. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

xii, 69 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-0254-37-8.

க.பொ.த. உயர்தர வகுப்பில் விஞ்ஞான தொழில்நுட்பவியல் துறையில் கற்கும் மாணவர்களின் கல்வித் தேவையை அடிப்படையாகக் கொண்டு உயிர்வளத் தொழில்நுட்ப முறைமைகளும் (Bio Resource Technology), உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியலும் (Bio System Technology) ஆகிய இரு அலகுத் தேர்ச்சி மட்டங்களுக்கு அமைவாக எழுதப்பட்ட நூல். இந்நூலில் கடலடிநிலவுருவவியலும் பிரதான கடல் வலயங்களும், நீர், மீன்பிடி உபகரணங்கள், மீன்பிடி முறைகள், கப்பலோட்டமும் மாலுமி சாஸ்திரமும், கடல் தகவல்களைத் தெரிவிக்கும் சமிக்ஞை கொடிகள் (வர்ணப் படங்களில்) ஆகிய பாடங்கள் இடம்பெற்றுள்ளன. பாடத்திட்டம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

# 700 கலைகள், நுண்கலைகள்

## 701 பொதுக்கலைகள்

### 14488

**ஆர்ட் லாப் (Art Lab) இதழ் 1.** ஜெகத் வீரசிங்க (பிரதம ஆசிரியர்), அனோலி பெரேரா (முகாமைத்துவ ஆசிரியர்), ஆனந்த திஸ்ஸகுமார, தா.சனாதனன், பாக்கியநாதன் அகிலன். கொழும்பு: தீர்த்த சர்வதேச கலைஞர்களின் கூட்டிணைப்பு, இணை வெளியீடு, ஹுவோஸ் நிறுவனம், 1வது பதிப்பு, 2004. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672 B, காங்கேசன்துறை வீதி).

117 பக்கம், புகைப்படங்கள், ஓவியங்கள், விலை: ரூபா 250., அளவு: 20x14.5 சமீ., ISSN: 1800-0320.

இவ்வாய்விதழ் அரையாண்டிதழாக 2004 முதல் தமிழில் சில இதழ்கள் வெளியிடப்பட்டன. கலை மற்றும் பேறு தொடர்பான வெளியீட்டு வரிசை கட்டுரைத் தொகுதி என்ற வகையில் இது தமிழில் முன்னோடி முயற்சியாகும். இவ்விதழில் சமகாலக் கலை, ஆடை அலங்காரக் கலை, கைப்பணி, கட்டடக் கலை, அரும்பொருளகவியல், தொல்பொருளியல், பேறு முகாமை மற்றும் பேறு முகாமைத்துவம், போன்ற துறைசார் படைப்பாக்கங்கள் இச்சஞ்சிகையில் இடம்பெற்று வந்தன. இவ்விதழில் இலங்கையில் சமகாலக் காண்பியக் கலை நடைமுறைகளும் தொண்ணூறுகளின் போக்கும் (ஜெகத் வீரசிங்க), கலைஞனின் சுதந்திரம் பேரத்திற்குரிய தன்னுரிமையா? (அனோலி பெரேரா), தீர்த்த சர்வதேச கலைஞர்களின் பட்டறை 2003 (ஜெகத் வீரசிங்க, அனோலி பெரேரா), தீர்த்த சர்வதேச கலைஞர்களின் பட்டறை 2003 (அசங்க பெரேரா), நெசவு (சீ.ஞானராஜ்), யாழ்ப்பாணத்து 13 ஓவியர்களின் ஓவியங்களின் காட்சி (தர்ஷினி விக்னமோகன்) ஆகிய ஆறு ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. எழுத்தாளர்கள் தொடர்பான தகவல்கள் இதழின் இறுதியில் தரப்பட்டுள்ளன.

### 14489

**ஆர்ட் லாப் (Art Lab) இதழ் 2**. ஜெகத் வீரசிங்க (பிரதம ஆசிரியர்), அனோலி பெரேரா (முகாமைத்துவ ஆசிரியர்), ஆனந்த திஸ்ஸகுமார, தா.சனாதனன், பாக்கியநாதன் அகிலன் (ஆசிரியர் குழு). கொழும்பு: தீர்த்த சர்வதேச கலைஞர்களின் கூட்டிணைப்பு, இணை வெளியீடு, ஹுவோஸ் நிறுவனம், 1வது பதிப்பு, 2005. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672 B, காங்கேசன்துறை வீதி).

(4), 132 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 250., அளவு: 22x18 சமீ., ISSN: 1800-0320.

இவ்வாய்விதழ் அரையாண்டிதழாக 2004 முதல் தமிழில் வெளியிடப்பட்டது. கலை மற்றும் பேறு தொடர்பான வெளியீட்டு வரிசை கட்டுரைத் தொகுதியாகும். சமகாலக் கலை, ஆடை அலங்காரக் கலை, கைப்பணி, கட்டடக் கலை, அரும்பொருளகவியல், தொல்பொருளியல், பேறு முகாமை மற்றும் பேறு முகாமைத்துவம், போன்ற துறைசார் படைப்பாக்கங்கள் இங்கு இடம்பெறுகின்றன. இவ்விதழில் பதிப்பாசிரியர் குறிப்பு (ஜெகத் வீரசிங்க), கலை தொடர்பான சிந்தித்தலின்/எழுதுதலின் வரலாறு அதாவது கலை வரலாற்றினை எழுதுதல் (ஜெகத் வீரசிங்க), கண்டி ஓவியப் பள்ளியின் "இயமனைத் தோற்கடித்தல்" ஓவியம் வழியாக கீர்த்தி சிறி இராஜசிங்க அரசனால் தோற்கடிக்கப்பட வேண்டிய மற்றவர் தொடர்பான விசாரணை (பிரசன்ன இரணபாகு), கலையின் அரசியல்: கதளுவாவின் நவமுனி விஹாரை ஒல்லாந்தச் சுவரோவியங்களின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் தொடர்பான ஒரு வாசிப்பு (சசங்க பெரேரா), புகைப்படங்கள் ஊடாக யாழ்ப்பாணத்து வரலாறு தொடர்பான ஒரு கணம் (சுஜாதா மகாலிங்கம்), Exhale: கராச்சி கன்வஸ் கலைக்கூடத்தில் காட்சிப்படுத்தப்பட்ட நைஸா கானின் காட்சி (சலீமா ஹஷ்மி), எமது வாழ்க்கை உல்லாசப் பயணிகளுக்கான அஞ்சலட்டை அல்ல (தர்ஷன் அம்பலவாணர்), கடந்த காலமும் கழிவிரக்கமும்: மீண்டெழும் நினைவுகள் (பப்சி மரியதாசன்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

### 14490

**ஆர்ட் லாப் (Art Lab) இதழ் 3-4**. ஜெகத் வீரசிங்க (பிரதம ஆசிரியர்), அனோலி பெரேரா (முகாமைத்துவ ஆசிரியர்), ஆனந்த திஸ்ஸகுமார, தா.சனாதனன், பாக்கியநாதன் அகிலன் (ஆசிரியர் குழு). கொழும்பு: தீர்த்த சர்வதேச கலைஞரகளின் கூட்டிணைப்பு, இணை வெளியீடு, ஹுவோஸ் நிறுவனம், 1வது பதிப்பு, 2005. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672 B, காங்கேசன்துறை வீதி).

117 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 21.5x18 சமீ., ISSN: 1800-0320.

இவ்வாய்விதழ் அரையாண்டிதழாக 2004 முதல் தமிழில் வெளியிடப்பட்டது. கலை மற்றும் பேறு தொடர்பான வெளியீட்டு வரிசை கட்டுரைத் தொகுதியாகும். சமகாலக் கலை, ஆடை அலங்காரக் கலை, கைப்பணி, கட்டடக் கலை, அரும்பொருளகவியல், தொல்பொருளியல், பேறு முகாமை மற்றும் பேறு

முகாமைத்துவம், போன்ற துறைசார் படைப்பாக்கங்கள் இங்கு இடம்பெறுகின்றன. இவ்விதழில், பதிப்பாசிரியர் குறிப்பு (ஜெகத் வீரசிங்க), "கலை வரலாறுகளில் பெண்ணியத் தலையீடு (கருத்தாடல்- கிறிஸில்டா பொலக்)", "இலங்கைப் பெண் கலைஞர்கள்: பெண்களது சுமைதாங்கிகளா?" (அனோலி பெரேரா), "திரிசங்கு வெளி: காலனிய கொழும்பில் பெண் படைப்பாளிகள்" (தா.சனாதனன்), "காட்சிப் புலத்தில் பாலியல்பு: சிகிரிய சுவரோவியங்களுக்கு உடையணிவித்தல்" (மாலதி டி அல்விஸ்), "காண்பியமாக்கப்பட்ட பெண் உடல்: ஜோர்ஜ் கீற்றின் ஓவியங்களில் மரபும் நவீனத்துவமும்" (தா.சனாதனன்), "யாழ்ப்பாணக் காட்சிப் பண்பாட்டில் பெண் அழகு: யாழ்ப்பாணக் கடைகளின் விளம்பரப் பலகைகளை மையமாக கொண்ட ஓர் வாசிப்பு" (சுதர்சினி விக்கினமோகன்) ஆகிய ஆக்கங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

### 14491

**இந்தியக் கலை-1.** உ.நவரத்தினம் (பதிப்பாசிரியர்). மஹரகம: தொலைக்கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1993. (கொழும்பு: யூ.ஆர்.ஜீ. பிரின்டர்ஸ்).

76 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x21.5 சமீ.

சித்திரக்கலை ஆசிரியர்களுக்கான கல்விப் பாடநெறி. மூன்று பகுதிகளில் பாடங்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன. முதற் பகுதியில் இந்து நதிக்கரை நாகரிகம் பற்றியும், இரண்டாம் பகுதியில் அஜந்தா சுவர் ஓவியங்கள் பற்றியும், பகுதி மூன்றில் இந்தியச் சிற்பக்கலை, பொழிப்பு, பிற்சோதனை, ஒப்படை, விடைகள், மேலதிக வாசிப்பு ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23231).

### 14492

**சுருதி 1996.** மலர்க் குழு. மட்டக்களப்பு: மட்டக்களப்பு விபுலாநந்த அடிகள் இசை நடனக் கல்லூரி, நொச்சிமுனை, 1வது பதிப்பு, 1996. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).

(10), 52 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

இவ்வாண்டு மலரில் இசை விளக்கமும் கிழக்கு மாகாணத்தில் தற்கால இசை வளர்ச்சியும் (சங்கீத பூசணம் என்.ராஜு), ஆகம நூல்களும் சங்கீதமும் (பாலாம்பிகை இராஜேஸ்வரன்), சுவாமி விபுலாநந்தரின் இசைப்பணி (பாரதி குணரெத்தினம்), முத்துஸ்வாமி தீட்ஷிதர் (ச.யோகேஸ்வரி), கலைகளுள் இசைக் கலை (கே. றூபாஜினி), சங்கீத சாகரத்தில் மூழ்கித் திளைத்த அன்னாள் (வே.கணபதிப்பிள்ளை), முத்தமிழ் இலக்கியமும் கலையும் (குமுதினி கதிர்காமத்தம்பி), நாட்டியத்திற்கு விருந்தளிக்கும் அபிநயங்கள் (சசிகலாராணி பேரின்பநாயகம்), இசை (சரோஜினி இராஜேஸ்வரன் பாய்வா), பாமர இசை (ஞா.கலைச்செல்வி), இசைக்கலை ஓர்

நோக்கு (கமலா ஞானதாஸ்), ஆளுமை விருத்திக்கு அழகியற்கலையின் பங்கு (இ.தெட்சணாமூர்த்தி) ஆகிய பன்னிரு ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இதழ் வெளியீட்டுக்குழுவில் சரஸ்வதி சுப்பிரமணியம், பிரியதர்சினி ஜெகதீஸ்வரன், ம.சுகந்தி, தெ.பிரதீபன், சு.அகிலேஸ்வரி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32280).

### 14493

**நெய்தல்: நான்காவது ஆண்டு மலர்.** *மு.புஷ்பராஜன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: நெய்தல் வளர்பிறை மன்றம், குருநகர், 1வது பதிப்பு, 1971. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.*

*தொகுப்பாளர் கருத்து (மு.புஷ்பராஜன்), நெய்தல் வளர்பிறை மன்றத்தார் இன்று (செயலாளர்), ஈழமும் இரு கண்ணும் (நீ.மரியசேவியர்), நெய்தல் (புலவர் வேல்மாறன்), சிற்பக் கலைஞரிடம் சில கேள்விகள், ஊழின் வலி (தூயமணி), அகப் பரிசோதனையற்ற இன்றைய நாடகங்கள் எதற்காக? (ஜே.எம்.இராசு), ஓர் இதயம் வறுமை கொண்டிருக்கிறது (அ.யேசுராசா), மனிதா (ச.தங்கராசா), தற்கால ஓவியக் கலை (அ.மாற்கு), விரக்தி (வேங்கைமார்பன்), பல்துறைக் கலைஞர் எஸ்.என்.ஜேம்ஸ் அவர்களின் பேட்டி, சலிப்பு (யோ.மரியாம்பிள்ளை), இசைக்கலையும் எமது சமூகமும் (ரீ.பாக்கியநாதன்), ஒரு வாசகனின் அபிப்பிராயம் (குருநகரோன்), திரைப்படத்துறையில் வடக்கின் வீழ்ச்சியும் தெற்கின் எழுச்சியும் (மு.புஷ்பராஜன்) ஆகிய படைப்பாக்கங்கள் இச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34684).*

## 740 வரைதல், அலங்கரித்தல்

### 14494

**கவின்கலைகளில் சித்திரக்கலை: க.பொ.த.(சாதாரண)தரம் 7-11.** *ஞா.ஞானதயாளன். கொழும்பு 6: தென்றல் பப்ளிக்கேஷன்ஸ், 135, கனல்பாங்க் வீதி, 1வது பதிப்பு, ஆவணி 2003. (சென்னை 600001: மாணவர் மறுதோன்றி மையம்).*

viii, *182 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 28x22 சமீ.,* ISBN: *955-8621-56-0.*

*நூலாசிரியர் வவுனியா கல்வித் திணைக்களத்தின் கல்வி வள (சித்திரக்கலை) ஆலோசகராகப் பணியாற்றுபவர். இந்நூலில் வர்ணச்சக்கரம், ஒளியும் நிழலும், அச்சுப் பதித்தல், தூரதரிசனம், பரவுருவச் சித்திரம், அலங்கார மாதிரி வடிவங்கள், கொலாஜ் சித்திரம் (ஒட்டுச் சித்திரம்), மொசாக் முறை, ஆரம்பகாலச் சித்திரக்கலை, அலங்கார வகைகள், இலங்கையின் கட்டிடக்கலை, இலங்கையின் சிற்ப வளர்ச்சி, தாதுகோபுரத்தின் வடிவங்கள், தாதுகோபுரத்தின் வாயிற்படி மாதிரி வடிவம்,*

அநுராதபுரக் காலச் சந்திரவட்டக்கல், பொலநறுவைக்கால சந்திரவட்டக்கல், கண்டிக்கால சந்திரவட்டக்கல், காவற்சிலை (அநுராதபுரக் காலம்), காவற்சிலை (பொலநறுவைக் காலம்), சிற்பத்தூண்கள் (போதிகை), இலங்கையில் உள்ள புராதன சுவர் ஓவியங்கள், அநுராதபுரக் கால ஓவியங்கள், சிகிரியாச் சுவர் ஓவியங்கள், பொலநறுவைக்கால ஓவியங்கள், கல்விகாரை ஓவியங்கள், இலங்காதிலக சிற்பக்கூடம், திம்புலாகலை கற்குகை சுவர் ஓவியங்கள், கண்டியுகத்தின் சித்திரங்கள், தெகல்தொருவை, தம்புல்ல குகை ஓவியங்கள், தலதா மாளிகை ஓவியங்கள், பமரகல விகாரைச் சித்திரம், முல்கிரிகலை விகாரை, கடலதெனிய விகாரை ஓவியம், அமரர் ஏ.ஜீ.சீ.எஸ்.அமரசேகர, அமரர் எம். சார்லிஸ், ஜோர்ஜ் கீற், ஜே.டீ.ர.பெரேரா, எல்.டீ.பீ.மஞ்சுரி, டபிள்யூ.ஜே.ஜீ.பீலீன், ஜஸ்டின் தரணியகல, டேவிட் பேன்டர், ரிசட் கப்ரியேல், தற்காலச் சிலைகள், மறுமலர்ச்சிக் காலம், ஐரோப்பியர் வரலாறு, எகிப்தியர் கலை, கிரேக்க கலை, உலகப் பிரசித்திபெற்ற ஓவியர்கள், ஐரோப்பிய கலைக் காலங்களில் குகைச் சித்திரங்களில் காணப்படும் குகைகள், சாஞ்சி தாதுகோபுரம், குகை விகாரைகள், ஹரப்பா மொஹஞ்சதாரோ கலைப் படைப்புக்கள், சாரநாத் புத்தர் சிலை, அஜந்தா ஓவியம், எல்லோரா குகை ஓவியம், பார்க் குகை ஓவியம், தாஜ்மஹால், சங்கமித்தை வெள்ளரசு கொண்டுவரும் காட்சி, அலங்காரச் சித்திரம், சுயாதீனமான ரேகைச் சித்திரமும் வரைதலும், களனி விகாரையின் ஓவியங்கள், கோதமி விகாரையின் ஓவியங்கள், கண்டி திருத்துவக் கல்லூரி ஆலயத்தின் ஓவியங்கள், பொரல்ல சகல அர்ச்சிஸ்டர் ஆலயததின் ஓவியங்கள், நவீன ஓவியக் கலையின் நிகழ்வுகள், கம்பளைக் கால மரச் செதுக்கல்கள், அவுக்கண புத்தர் சிலை, தொலுவில புத்தர் சிலை, சமாதி புத்தர் சிலை, கந்தக சைத்திய, மகரதோரணம், கல்விகாரை பொலநறுவை, கொரவக்கல் (கைபிடிக்கல்), பொலநறுவைக் காலம், புத்தரின் முத்திரைகள், இந்துமத திருக்கோவிலின் கர்ப்பக்கிரக அமைப்பு, இந்து ஆலயக் கோபுரம், நடராஜர் வடிவம், கிராமியக் கைத்தொழில், இலங்கை ஓவியர்கள் ஆகிய 79 பாடங்களில் இந்நூல் விளக்கி எழுதப்பட்டுள்ளது. இறுதியில் கடந்தகாலப் பரீட்சை வினாக்கள் தரப்பட்டுள்ளன.

## 14495

**சிங்கள அலங்காரங்கள்**. உ.நவரத்தினம் (பதிப்பாசிரியர்). மஹரகம: தொலைக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 1994. (தெகிவளை: ஏ.ஜே. பிரின்ட்ஸ், இல. 1 B, P.T. டீ சில்வா மாவத்தை).

52 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x21 சமீ.

நான்கு பகுதிகளைக் கொண்ட இந்நூலின் முதற் பகுதியில் சிங்கள அலங்கார வடிவங்கள் பற்றிய அறிமுகம் இடம்பெற்றுள்ளது. இரண்டாம் பகுதியில் தாவர அலங்கார வடிவங்கள் பற்றியும், மூன்றாம் பகுதியில் பிராணிகளினதும் கற்பனையானதுமான அலங்காரங்கள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளன. நான்காவது பகுதியில் சடத்துவமான வடிவங்கள், பொழிப்பு, பிற்சோதனை, ஒப்படைகள்,

விடைகள் என்பன தரப்பட்டுள்ளன. நூலாக்கக் குழுவின் அங்கத்தவர்களாக சுகிரிபால மாரியம்பட, ஜீ.ஜீ.ஈ.ஜயவீர, டீ.எம்.எஸ்.பிரேமானந்த, மிரண்டா ஹேமலதா ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23297).

## 741.5 கருத்தோவியங்கள் (கார்ட்டூன்)

### 14496

**காலவரை காட்ரூன்கள்.** செல்வன் (இயற்பெயர்: எஸ்.தர்மதாஸ்). சுன்னாகம்: நர்த்தனவர்ணா கலையகம், மானிப்பாய் வீதி, உடுவில், 1வது பதிப்பு, ஐப்பசி 2019. (யாழ்ப்பாணம்: எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

xiv, 250 பக்கம், கருத்தோவியங்கள், விலை: ரூபா 3000., அளவு: 30x21.5 சமீ., ISBN: 978-624-95633-0-8.

ஈழநாடு பத்திரிகையில் கார்ட்டூனிஸ்டாகத் தொடங்கிய தர்மதாசின் கலைப்பயணம் ஈழநாதம், உதயன், சுடரொளி, வீரகேசரி, தாய்வீடு, ஐபீ.சீ. தமிழ், புது விதி, தீபம், சமகளம் எனப் பல்வேறு தளங்களில் விரிவுகண்டுள்ளது. தான் வரைந்த 250 கருத்தோவியங்களை வண்ணப் படைப்புகளாக இந்த நூலில் பக்கத்துக் கொன்றாகத் தொகுத்துத் தந்துள்ளார். இன்று எமது மண்ணினதும் மக்களினதும் வாழ்வியல் இயக்கத்தை வரையறை செய்ய முயலும் வரைமுறையற்ற அரசியலால் தடம் பிடித்து தம் வசதிக்கேற்ப மேடென்றும், பள்ளமென்றும் பாராது இழுத்துச் செல்லும் அரசியல்வாதிகளை செல்வன் தனது குறும்புத்தனம் செய்யும் கோடுகளால் கோமாளிகளாக நையாண்டி செய்து, அதனூடாக மக்களை சிந்தித்து செயற்படத் தூண்டும் முறை ரசனைக்குரியது. இவரது தூரிகையின் இலாவகமான அசைவுகளினால் பதியும் கோடுகளுள் சிக்கிக்கொள்ளும் அரசியல்வாதிகள், சமூகத் தலைவர்களின் குணாதிசய இயல்புகளின் வெளிப்பாடுகளே இவரது வெற்றிகரமான கேலிச்சித்திரங்களின் முக்கியத்துவமாகும்.

## 750 ஓவியக்கலை

### 14497

**கண்டிக்கால ஓவியங்கள்: க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கானது.** து.துசியந்தன். பருத்தித்துறை: எஸ். பதிப்பகம், வியாபாரி மூலை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2012. (கொழும்பு 13: தேவி பிரின்டர்ஸ்).

71 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 20x14.5 சமீ.

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் து.துசியந்தன், யாழ்ப்பாணம்-வலயக் கல்வி அலுவலகத்தில் சித்திரக்கலைக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகராவார். கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர் கல்வியை பூர்த்திசெய்த பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும், பட்டப்பின் டிப்ளோமா கல்வியையும் பூர்த்திசெய்தவர். சித்திரக்கலையில்

சிறப்புப்பயிற்சி பெற்றவர். யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

## 780 இசைக்கலை

### 14498

**தண்ணுமைத் தண்ணொலி.** நாகரட்ணம் மாதவன். யாழ்ப்பாணம்: கலாவித்தகர் நாகரட்ணம் மாதவன், சண்டிலிப்பாய், 1வது பதிப்பு, தை 2011. (யாழ்ப்பாணம்: S.T.G. பிரிண்டர்ஸ், தாவடி).

xviii, (2), 119 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 25x18 சமீ.

வட இலங்கை சங்கீத சபை, பல்கலைக்கழக மிருதங்கத்துறை மாணவர்களுக்கான செயன்முறை பாடநூல். இந்நூலில் தரம் 1 முதல் ஆசிரியர் தரம் வரை உள்ள பாடங்களைத் தொகுத்து தாளக் குறியீட்டின்படி பாடங்கள் யாவும் எழுதப் பட்டுள்ளன. இது தவிர, இசைக் கச்சேரிகளுக்கு வாசிக்கக்கூடிய பெரிய மோறாக்கள், கோர்வைகள், இறுதிக் கோர்வைகள் என்பனவும் மேலதிகமாக எழுதப்பட்டுள்ளன. இறுதிக் கோர்வைகள் யாவும் இசைக் கச்சேரிகளில் முத்தாய்ப்பாகப் பயன்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன. வட இலங்கை சங்கீத சபை பாடத்திட்டத்திற்கும் பல்கலைக்கழக பாடத்திட்டத்திற்கும் ஏற்றவகையில் இந்நூல் மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவே அமைந்துள்ளது. இந்நூல், நூலாசிரியரின் குருநாதர் க.ப.சின்னராசா அவர்களின் வழிநடத்தலிலும் மேற்பார்வையிலும் தாளக் குறியீடுகள், அட்சரங்கள், கோர்வைகள் என்பன சரிபார்க்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வட இலங்கை சங்கீத சபையின் கலாவித்தகர் பட்டம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறையின் மிருதங்க இசைமாணிப் பட்டம் எனப் பல்வேறு பட்டங்களைப் பெற்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதுகலைமாணிப் பட்டத்தை "லயவியலில்" பெற்றுக்கொண்டவர். அதே பல்கலைக்கழகத்தில் ஆய்வியல் நிறைஞர் (எம்.பில்) பட்டத்திற்கான ஆய்வில் ஈடுபட்டு வருகிறார்.

### 14499

**தமிழ் சினிமா இசையில் அகத்தூண்டுதல்.** T.சௌந்தர் (இயற்பெயர்: தங்கவடிவேல் சௌந்தர்). சென்னை 600 078: டிஸ்கவரி புக் பேலஸ், இல. 6, மஹாவீர் கொம்ப்ளெக்ஸ், முனுசாமி சாலை, கே.கே.நகர் மேற்கு, பாண்டிச்சேரி கெஸ்ட் ஹவுஸ் அருகில், 1வது பதிப்பு, ஜுலை 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(24), 25-160 பக்கம், விலை: இந்திய ரூபா 140., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-84301-72-9.

தொடக்ககால இசை முயற்சி, ஜி.ராமநாதன் காலம்- பேச்சோசைப் பாடல்கள், நவீன தமிழ்த் திரை இசையின் தொடக்கப்புள்ளி - சி.ஆர்.சுப்பராமன், விஸ்வநாதன் - ராமமூர்த்தி வருகை: மெல்லிசைப் பாங்கான இசையை உள்ளீடு செய்தது,

இளையராஜா, உலகமயமாக்கல் பொருளாதாரச் சூழல் தகவமைக்கும் இயந்திர இசைக் கோலம் ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் விரிவாக தமிழ் சினிமா இசை பற்றி விபரிக்கின்றது. புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் இந்நூலாசிரியர் சௌந்தர், இலங்கையில் கம்பர்மலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சிறந்த ஓவியர். நுண்கலைப் புலமையாளர் பாரம்பரியத்தில் வந்த குடும்பம் இவருடையது. தந்தையார் தங்கவடிவேல் புகழ்பெற்ற ஆசிரியரும் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் செயற்பாட்டாளருமாவார். கர்நாடக சங்கீத ஞானம் மிகுந்தவர். இவரது பெரியதந்தையார் குழந்தைவேல் புகழ்பெற்ற கர்நாடக இசைப்பாடகர்.

## 14500

**திருமுறைப் பண்ணிசை.** தெ.ஈஸ்வரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு: அருள்மிகு வரதராஜப் பிள்ளையார் கோவில், கொட்டாஞ்சேனை, 1வது பதிப்பு, ஜனவரி 1995. (சென்னை 600002: மறவன்புலவு க.சச்சிதானந்தன், காந்தளகம், 68 (834) அண்ணாசாலை).

80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 13x21 சமீ.

கொட்டாஞ்சேனை அருள்மிகு வரதராஜப் பிள்ளையார் கோவிலில், நடைபெறும் பண்ணிசை வகுப்புகளில் பயன்படுத்தும் நோக்கில் த.நீதிராஜா, தெ.ஈஸ்வரன், பொ.பாலசுந்தரம் ஆகியோரின் முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்நூலுக்கான முக்கிய பங்களிப்பினையும் ஆலோசனையையும் சென்னை இசையாசிரியை திருமதி செ.சுப்புலட்சுமி, சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் வித்துவான் இரா.அம்பை சங்கரனார், இசைமாமணி தருமபுரம் ப.சுவாமிநாதனார் ஆகியோர் வழங்கியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 35838).

## 14501

**பஞ்ச கதிகள்.** நல்லை க.கண்ணதாஸ். யாழ்ப்பாணம்: ஏழிசை வெளியீட்டகம், ஏழிசை மிருதங்க நர்த்தனாலயம், 203, புங்கன்குளம் வீதி, அரியாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2019. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், முத்திரைச் சந்தியடி, நல்லூர்).

vi, (4), 221 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 25x18.5 சமீ., ISBN: 979-0-9006505-0-4.

பஞ்ச கதிகள் என்ற இந்நூல், ஆதிதாளம், ரூபகதாளம் ஆகியவற்றில் பஞ்ச கதியிலும் பாடங்கள் அமைக்கப்பட்டும், தனித்தனியாகவும், பஞ்சகதிகள் கலந்தும் வரும் தனியாவர்த்தனங்கள் அமைக்கப்பட்டும் வெளிவருகின்றது. இவை அனைத்தும் லயக் கணித ரீதியாகக் கணிக்கப்பட்டு, தாளக் குறியீடுகளில் எழுதப்பட்டும் இருக்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசை நடனத்துறை, மட்டக்களப்பு விபுலானந்தா அழகியற் கற்கைகள், நிறுவக இசை, நடனத்துறை, வட இலங்கை சங்கீத சபையின் ஐந்தாம் ஆசிரியர் தர மாணவர்களுக்கும், அனைத்துலகத் தமிழ்க் கலை நிறுவகத்தின் ஆற்றுகைத்துறை மிருதங்க

மாணவர்களுக்கும் லயத்துறை ஆற்றுகையாளர்களுக்கும் உகந்த வகையில் எழுதப்பட்டுள்ளது. மிருதங்க கலா வித்தகர், இசைமாணி, நல்லை க.கண்ணதாஸ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறையின் மிருதங்க ஆசானாவார்.

## 14502

**பரத இசை மரபு.** ஞானா குலேந்திரன். தஞ்சாவூர் 5: கிருஷ்ணி பதிப்பகம், முன்றில் எண் 5 (சீ-5), முன்றில் சாலை, குடியிருப்பு வளாகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (மதுரை 16: அமுது அச்சகம்).

149 பக்கம், விலை: ரூபா 75.00, இந்திய ரூபா 50.00, அளவு: 21x13.5 சமீ.

இந்நூலில் பரதக்கலை இசை மரபு, மேளப் பிராப்தி, தோடய மங்களமும் துதிப் பாடலும், அலாரிப்பு, மல்லாரி, புட்பாஞ்சலி, கவுத்துவம், ஜதிசுவரம், சப்தம், பதவர்ணம், பதம், கீர்த்தனை, ஜாவளி, தில்லானா, விருத்தம், குறத்திப் பாடல், மங்களப் பாடல், நட்டுவாங்கத் திறமை, பாடகர் தகைமை, தாள இசைக்கருவியாளர் பங்கு, பண்ணிசைக் கருவியாளர் பங்கு, வழிமுறைக் கலைஞர்கள், மரபும் மாற்றங்களும் ஆகிய 23 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. முனைவர் ஞானா குலேந்திரன் இலங்கை தமிழ் அறிஞரும், எழுத்தாளரும், பேராசிரியையுமாவார். இசை, மற்றும் பரத நாட்டியம் தொடர்பாக ஆங்கிலத்திலும், தமிழிலும் பல நூல்களை எழுதியுள்ளார். இலங்கையில் கே. சிவசுப்பிரமணியம் தம்பதிகளின் இரண்டாவது மகளான ஞானா குலேந்திரன், கொழும்பு மெதடிஸ்த கல்லூரியில் கல்வி பயின்றவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை, முதுகலை, கலாநிதி பட்டங்கள் பெற்றவர். யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய இவர் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக சேர்ந்தார். பின்னர் இவர் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுப் படிப்பை மேற்கொண்டு, அதே பல்கலைக் கழகத்திலேயே பேராசிரியராகவும், இசை, மற்றும் பரத நாட்டியத்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். இவரது கணவர் பேராசிரியர் ஏ. குலேந்திரன் அவர்களாவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37541).

## 14503

**விரலிசை: ஹார்மோனியம் கற்றலுக்கான வழிகாட்டி நூல்.** தவநாதன் றொபேட். யாழ்ப்பாணம்: தவநாதன் றொபேட், கலைத்திறள் வெளியீடு, தெட்சணாமணி இல்லம், இணுவில், 1வது பதிப்பு, 2008. (யாழ்ப்பாணம்: அன்ரா பிறிண்டேர்ஸ், இல. 356A, கஸ்தூரியார் வீதி).

xii, 52 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x15 சமீ.

வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறையில் இசைமாணிக் கற்கைநெறியில் முதற்பிரிவில் சித்திபெற்று, தற்போது அங்கு விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். வட இலங்கை சங்கீத சபையின் முதலாவது கலாவித்தகர் பட்டத்தினைப் பெற்றவர்.

இந்நூல் ஹார்மோனியத்தின் சுருதிகளும் ஸ்வரங்களும், ஸ்வரஸ்தானங்கள், கமகங்களை வாசிக்கும் முறை, பயிற்சி செய்யவேண்டிய முறை, அறிவுரைகள் சில, ஆரோகண அவரோகணங்கள், ஸ்வர வரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள், ஜதீஸ்வரம், ஸ்வரஜதி, திவ்ய நாம கீர்த்தனை, வர்ணங்கள், கீர்த்தனங்கள், சௌக்ககாலக் கீர்த்தனை, தேவாரம், நாட்டார் பாடல், திருப்புகழ், மெல்லிசைப் பாடல் ஆகிய 19 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது.

## 791 நாட்டியக் கலை

### 14504

**நடனம் (பரத நாட்டியம்).** சாரதாதேவி ஸ்ரீஸ்கந்தராஜா. திருக்கோணமலை: ஸ்ரீ சண்முக வித்தியாலயம், 56,உட்துறைமுக வீதி, உவர்மலை (கண்ணகிபுரம்), 1வது பதிப்பு, ஏப்ரல் 1991. (திருக்கோணமலை: ஸ்ரீ கணேச அச்சகம்).

(10), 54 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 32x20 சமீ.

கல்லச்சுப் பிரதியாக வெளிவந்துள்ள நூல். கல்வி அமைச்சின் பரதநாட்டிய பாடத்திட்டத்திற்கு அமைவாக ஆண்டு 6 முதல் 11 வரையும் பயிலும் மாணவர்கள் பயன்படுத்தவும், வட இலங்கை சங்கீத சபையின் 1ஆம் 2ஆம் 3ஆம் தரங்களுக்கும் அமைவாகவும் தயாரிக்கப்பட்ட நூல் இது. தட்டிக் கும்பிடுவதின் நோக்கம், ஆரம்ப அடவு (தட்டடவு), த்யான ஸ்லோகம் (அரங்க தேவஸ்துதி, புஷ்பாஞ்சலி, நாட்டிய கிரமம்), மிருதங்கம், அசம்யுத ஹஸ்தம் (ஒற்றைக் கை முத்திரைகள் 28), ஸம்யுத ஹஸ்தம் (இரட்டைக் கை முத்திரை 24), அசம்யுத ஹஸ்த விநியோகங்கள் 28, சம்யுத ஹஸ்த விநியோகங்கள் 24, பாத்திரப் பிராணன், பஞ்ச நடை, தேவஹஸ்தம், நவக்கிரக ஹஸ்தம், தசாவதாரஹஸ்தம், பாந்தவஹஸ்தம், பாதபேதம்: மண்டபபேதம், ஸ்தாகைபேதம், உத்ப்னவனபேதம், பரமகி, ஸாரிபேதம், சிரஸ், திருஸ்டி, கிரீவா பேதம், அரும்பத விளக்கம் (பாவம், ராகம், தாளம், தாண்டவம், வாஸ்யம், நாட்டியதர்மி, லோகதர்மி, லயம், அட்சரகாலம், பஞ்சபானம், தீர்மானம், முத்திரை, கதி, கோர்வை), கிராமியம் என்றால் என்ன?, நம் நாட்டு கிராமிய நடனவகைகள், பாரத நாட்டு நடனவகைகள், 35 தாளங்களின் விபரம், நடன உருப்படிகள், புராண வரலாறு, உலகியல் வரலாறு, பாத்திர லட்சணம், அபாத்திர லட்சணம், சபாநாயகன், சபை, சபாலட்சணம். 12 மாதங்களும் சமய சம்பந்தமான பண்டிகைகளும், நான்கு வித அபிநயங்களின் உட்பிரிவுகளும் உபபிரிவுகளும் ஆகிய நடனத்துறை தொடர்பான ஆரம்ப பாடங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11083).

### 14505

**பரத நாட்டிய செய்முறைத் தாள விளக்கம்.** சிறீதேவி கண்ணதாசன். சுழிபுரம்: பொன்னாலை சந்திர பரத கலாலயம், பறாளாய் வீதி, 1வது பதிப்பு, ஜூன் 2011,

1வது பதிப்பு, நவம்பர் 2007. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672 B, காங்கேசன்துறை வீதி).

xiv, 146 பக்கம், விலை: ரூபா 675., அளவு: 29x21 சமீ., ISBN: 978-955-50660-0-6.

இலங்கைப் பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற பரத நாட்டிய பாடத்திற்கான கலைத்திட்டத்திலே சேர்க்கப்பட்டுள்ள பரத நாட்டிய செய்முறை விடயங்கள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பந்தனை நல்லூர் பாணியிலான பரத நாட்டிய அடவுகளின் சொற்கட்டுகள் மற்றும் அலாரிப்பு முதல் தில்லானா வரையான உருப்படிகளின் செய்முறைகள், பாடல்கள் என்பன தாள அங்கக் குறியீடுகளுடன் எழுதப்பட வேண்டிய முறைகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. அடவு, அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், கௌத்துவம், பதவர்ணம், தில்லானா, பதம், கீர்த்தனம், சௌக்ககால கீர்த்தனம், அஷ்டபதி, ஜாவளி, தோடய மங்களம், யதி அமைப்பும் கோர்வை ஆக்கமும், திரிகாலத் தீர்மானம் ஆகிய 15 அத்தியாயங்களுடன், மேலதிகமாக க.பொ.த. சாதாரணதரம், க.பொ.த உயர்தரம், வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சை ஆகியவற்றுக்கான கடந்தகாலப் பரீட்சை வினாக்கள் தனித்தனி அத்தியாயங்களாக மேலும் மூன்று அத்தியாயங்களுமாக மொத்தம் 18 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 14506

**பரதநாட்டியம்: வாசிப்புத் துணை நூல்-தரம் 8.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: அழகியற் கல்வித்துறை, மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞானபீடம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2017. (மஹரகம: அச்சகம், தேசிய கல்வி நிறுவகம்).

vii, 42 பக்கம், விளக்கப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 125.00, அளவு: 29x20.5 சமீ., ISBN: 978-955-654-762-7.

2017ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்ட துணை நூல். இதில் அபிநயம், தட்டடவு தாளம் 1-8 கார்வைகளுடன், நாட்டடவு தாளம் கார்வைகளுடன், தெய்ஹத் தெய்ஹி தாளம் கார்வைகளுடன், தா தெய் தெய் த தாளம் கார்வைகளுடன், தெய்யா தெய்யி தாளம் கார்வைகளுடன், சிரோ பேதம், பாத பேதம், வேப்பிலை நடனம், தத் தெய் தாம் தாளம் 1,2,3,6 கார்வைகளுடன், திருஷ்டி பேதம், கண்ட பேதம், பாத்திர லஷ்சணம், அபாத்திர லஷ்சணம், அரங்க தேவதாஸ்துதி, பரத நாட்டியம், வேடனும் புறாவும், கண்ணன் மாடு, தத் தெய் தாஹா தாளம் 1,2,3,4 கார்வைகளுடன், இசைக் கருவிகளின் வகைகள், நாதசுரம், இலங்கையில் பரதநாட்டியம் ஆகிய பாடங்கள் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65670).

### 14507

**பரதநாட்டியம்: வாசிப்புத் துணை நூல்-தரம் 11.** தேசிய கல்வி நிறுவகம். மகரகம: அழகியற் கல்வித்துறை, மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞானபீடம், தேசிய கல்வி நிறுவகம், 1வது பதிப்பு, 2018. (பிட்டகோட்டே: சிசாரா பிரின்ட்வே பிரைவட் லிமிட்டெட், 110, பாகோடா சாலை).

vii, 80 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 420.00, அளவு: 29.5x21 சமீ.

இந்நூலில் பரதநாட்டியக் கச்சேரி அமைப்பு முறை, தாண்டவம், பதினொரு வகைக் கூத்து, வழுவூர் இராமையாபிள்ளை, வாள் நடனம், குறவன்-குறத்தி நடனம், வேடுவ நடனம், சப்தம், பஞ்சபாணம், சிஷ்ய லட்சணம், பரதநாட்டியம், கதகளி குச்சுப்புடி, ஜதீஸ்வரம் சாவேரி 3,4,5 கோர்வையின் தாளம், ஜதீஸ்வரம் சாவேரி 3,4,5 கோர்வையின் தாளம், சங்கமருவிய காலம், ஏந்தல் நடனம்-செம்பு நடனம்-சுளகு நடனம், சப்தம் (ஆயர்சேரியர் 3, 4கண்டிகை), சப்தம் (தண்டை முழங்க 3, 4கண்டிகை), நவரசம், கதக், ஒடிசி, மோகினியாட்டம், மணிப்புரி, நட்டுவாங்கத் தாளம், மிருதங்கம், வீணை, புல்லாங்குழல், வயலின், தஞ்சாவூர் க.பொன்னையாபிள்ளை, பல்லவர் காலம், ஜதீஸ்வரம் ஆரபி பாடல், தாளம், ஜதீஸ்வரம் சாவேரி பாடல், தாளம், சப்தம்-ஆயர் சேரியர் பாடல், சப்தம்- தண்டை முழங்க ஆகிய பாடத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65671).

## 792 அரங்கியல், நாடகக்கலை

### 14508

**ஆரையம்பதிப் பிரதேச நாடக மரபுகள்.** த.மலர்ச்செல்வன். மட்டக்களப்பு: மறுகா, உள்வீதி, ஆரையம்பதி 3, 1வது பதிப்பு, ஏப்ரல் 2016. (அக்கரைப்பற்று-01: நியூ செலெக்ஷன் ஓப்செட் பிரின்ட்).

ix, 162 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 450., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-7983-00-4.

உலகளாவிய ரீதியில் இன்று பாரம்பரிய அரங்குகள் தொடர்பான ஆய்வுகள் பெரும் முக்கியத்துவம் பெற்றுவருகின்றன. ஒருகுறிப்பிட்ட பிரதேச மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டையும் அவர்களின் பேறுகைகளையும் புரிந்து கொள்வதற்கு அரங்குகளின் செயல்வாதம் துணைநிற்கின்றது. இவ்வகையில் ஈழத்து நாடக வளர்ச்சியில் குறிப்பாக மட்டக்களப்பு நாடக இயங்கியலில் ஆரையம்பதியின் அரங்கு ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்கியுள்ளது. மரபுவழி நாடகச் செயற்பாட்டிலிருந்து நவீன நாடக முயற்சிகள் வரை அதன் எல்லைகள் விரிவடைந்துள்ளன. இந்தப் பின்னணியில் 19ஆம் நூற்றாண்டு தொடக்கம் 21ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் உச்சமான நாடகப் பேறுகளை வழங்கியுள்ளது. இவ்வாய்வு ஆரையம்பதிப் பிரதேச நாடக மரபுகளை ஆரையம்பதிப் பிரதேசம்-அறிமுகம், பாரம்பரிய அரங்கின் செயற்பாடும் அதன் பிரிவுகளும், தென்மோடி, வடமோடிக் கூத்துக்களும் இசை நாடகமும், ஆரையம்பதி பிரதேச நவீன நாடக முயற்சிகள், மதிப்பீடும் விமர்சனமும் ஆகிய ஐந்து இயல்களில் தன் கருத்துக்களை முன்வைக்கின்றது. ஆரையம்பதி த.மலர்ச் செல்வனால் தனது பல்கலைக்கழக முதுமாணிக் கற்கைநெறியின் தேவைக்காக இவ்வாய்வு 11 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டதாயினும், ஆய்வில்

சொல்லப்பட்ட விடயங்களில் இன்றளவில் பாரிய மாற்றங்கள் எதனையும் காணமுடியவில்லை.

### 14509

**கூத்துக் கலைஞர் சி.விஜேந்திரனுடனான நேர்காணல் (கூத்து மீளுருவாக்கம் அனுபவப் பகிர்வு-3).** த.விவேகானந்தராஜா (நேர்கண்டவர்). மட்டக்களப்பு: மூன்றாவது கண், உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாடுகளுக்கான நண்பர்கள் குழு, இல.30, பழைய வாடிவீட்டு வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2012. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 496 A, திருமலை வீதி).

48 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

கிழக்குப் பல்கலைக்கழக நாடகத் துறை விரிவுரையாளர் த.விவேகானந்தராசா அவர்கள் சீலாமுனையைச் சேர்ந்த கூத்துக் கலைஞர் சி.விஜேந்திரன் அவர்களுடன் உரையாடித் தொகுத்த நேர்காணல் தொகுப்பு நூல். இந்நூல் அரங்க அறிவியல் வரலாற்றில் பாரம்பரியக் கலைஞர்களை பாமரர்கள், படிப்பறிவற்றவர்கள் என்று காலனித்துவ அறிவு ஓரங்கட்டியுள்ள பின்னணியில், பாரம்பரியக் கலைஞர்களின் வல்லமையினையும், சீலாமுனையில் நிகழ்ந்த கூத்து மீளுருவாக்கச் செயற்பாட்டின் முக்கியத்துவத்தினையும் வெளிக்காட்டுவதாக உள்ளது. சின்னையா விஜேந்திரன் அவர்கள் மட்டக்களப்பு சீலாமுனைக் கிராமத்தின் வடமோடிக் கூத்துப் பாரம்பரியத்தில் சிறு வயதிலிருந்தே மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குகொண்டு வருகின்ற மூத்த கூத்துக் கலைஞர்களுள் ஒருவர். கூத்துக் கலையில் தேர்ச்சிமிக்க விஜேந்திரன், சீலாமுனைக் கூத்துப் பாரம்பரியத்தின் கூத்து ஆட்ட முறைகளை அடுத்த தலைமுறையினருக்கு பயிற்றுவித்து வருபவர்.

### 14510

**சர்வதேச கலைப்பாலம்-2016 (பயணக் கட்டுரை).** யோ.யோண்சன் ராஜ்குமார், வைதேகி செல்மர் எமில் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 1வது பதிப்பு, டிசெம்பர் 2017. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், முத்திரைச் சந்தியடி, நல்லூர்).

iii, (3), 105 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250.00, அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-7530-03-1.

இந்நூலில் திருமறைக் கலாமன்றத்தினரின் மன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் அவர்களின் தலைமையில் ஒக்டோபர் 2016இல் மேற்கொண்ட கடல் கடந்த கலைத்தூதுப் பயணங்கள் பற்றி அவ்வப்போது எழுதப்பட்ட கட்டுரைகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அப்பயணத்தின் போதும் அப்பயணத்தின் முன்னும் பின்னும் நிலவிய சூழல், பின்புலம் பற்றியும், அரங்கேற்றப்பட்ட அளிக்கைகள், அவற்றின் எதிரொலிகள் பற்றியும் அப்பயணத்தில் பங்குபற்றிய கலைஞர்கள் தமது பட்டறிவையும், நினைவின் நிழல்களையும் பகிர்ந்துகொள்ளும் ஆவணமாக இது அமைந்திருக்கிறது. கண்டங்களைக் கடந்த கலைப்பயணம் (யோ.யோண்சன் ராஜ்குமார்), கனேடிய நகரிற்கான நம்

கலைப்பயணம் ஓர் அனுபவப் பகிர்வு (சுகன்யா அரவிந்தன்), சிந்தனைகளைக் கிளறிய கனடா கலைப்பயணம் (பொ.தை.ஜஸ்ரின் ஜெலூட்), கடல் கடந்த ஒரு கலை உலா (திருமதி வைதேகி செல்மர் எமில்), வடலிகள் வளரும் மேப்பிள் மரக்காடு ஒரு பயண அனுபவக் குறிப்பு (இ.ஜெயகாந்தன்), கனடா திருமறைக் கலாமன்றத்தின் சர்வதேச கலைப்பாலம் - 2016 (பேராசிரியர் இ.பாலசுந்தரம்), திருமறைக் கலாமன்றம் கட்டிய கலைப்பாலம் (ப.ஸ்ரீஸ்கந்தன்), திருமறைக் கலாமன்ற கடல் கடந்த கலைப் பயணங்கள் (யோ.யோண்சன் ராஜ்குமார்) ஆகிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 14511

**சோனக அரங்கு: உரையாடல்.** A.B.M .இத்ரீஸ் (பதிப்பாசிரியர்). வாழைச்சேனை 05: காகம் (உயிர்ப்பைத் தேடும் வேர்கள்) வெளியீடு, மஹ்மூட் ஆலிம் தெரு, 1வது பதிப்பு, 2012. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

127 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 300., அளவு: 17.5x11 சமீ., ISBN: 978-955-0697-07-6.

21ஆம் நூற்றாண்டில் அரங்கு ஆற்ற வேண்டிய பங்கு, முஸ்லிம் சினிமா முயற்சிகளும் சவால்களும், இஸ்லாமிய நிகழ்த்து கலைகளும் பிரச்சினைகளும் போன்ற தலைப்புக்களை ஒட்டி சமகாலத்தில் சோனக அரங்கு எதிர்கொள்ளும் சவால்கள் அதன் எழுச்சி, வீழ்ச்சிகள், எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய பணிகள் போன்ற சமகால அரங்கோடு தொடர்புபட்ட பல விடயங்கள் இவ்வுரை யாடலில் பேசுபொருள்களாக மாறியுள்ளன. காகம் பதிப்பகம் கிழக்கிலங்கையின் வாழைச்சேனையைத் தளமாகக் கொண்டு இயங்கும் நூல்வெளியீட்டு நிறுவனமாகும். எழுத்தாளர் A.B.M. இத்ரீஸ் தனது சகோதரர்களின் உதவியுடன் 1998 ஆம் ஆண்டு இதனைத் தொடங்கினார். ஏபிஎம் மீடியா எனும் நிறுவனத்தின் துணை நிறுவனமாக இப்பதிப்பகம் செயற்பட்டு வருகிறது. தொடக்க நிலையில் யாத்ரா என்ற பெயரைக் கொண்டு இயங்கியது. 1999ஆம் ஆண்டு முதல் உயிர்ப்பைத் தேடும் வேர்கள் என பெயரை மாற்றியிருந்தனர். மாறிவரும் இலங்கைப் பதிப்புச் சூழலுக்கு ஏற்ப புதிய திட்டங்களுடன் 2010ஆம் ஆண்டு தொடக்கம் காகம் பதிப்பகம் எனும் பெயரில் இலக்கியம், சமயம், பண்பாடு, வரலாறு மற்றும் ஆய்வு நூல்களையும் சிறுவர் மற்றும் திறன்விருத்தி நூல்களையும் வெளியிட்டு வருகிறது.

## 14512

**திருமறைக் கலாமன்றம் எனது பார்வையில்.** பி.எஸ். அல்விறட். கொழும்பு: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ், திலக பிரஸ், 257, டாம் வீதி, 2வது பதிப்பு, ஜனவரி 2016, 1வது பதிப்பு, டிசம்பர் 2015. (கொழும்பு: சொப்ட் பிரின்ட்).

112 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-4531-01-7.

திருமறைக்கலாமன்றத்தின் கடந்த ஐம்பது வருட வரலாற்றுப் பாதை பற்றிய ஓர் அழகியல் பார்வையாகவும், மதிப்பீட்டுத் தேடலாகவும், ஒரு கலைஞனின் கண்ணோட்டமாகவும் தன் அனுபவங்களைச் சேர்த்து இந்நூலில் பதிவாக்கியுள்ளார். முன்னாள் புகையிரத நிலைய அதிபரான பி.எஸ். அல்விறட், மரியசேவியர் அடிகளாருடன் இணைந்து 1962இல் கலைப்பணியாற்றத் தொடங்கியவர். 25 ஆண்டுகள் திருமறைக் கலாமன்றத்தின் அறிவிப்பாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, கலைமுகம் இதழின் இணை ஆசிரியராக, ஊடகத் தொடர்பாளராக எனப் பல்வேறு பங்களிப்புகளையும் ஆற்றியவர். இந்நூலில் தனது அனுபவப் பகிர்வினை அந்த ஒரு மாலை நேரம், ஒரு விதை விருட்சமாகிறது, தலைமைத்துவத்தின் தனித்துவம், பன்முகப் பார்வையில் திருமறைக் கலாமன்றம், யுத்தமும் திருமறைக் கலாமன்றமும், கடல் கடந்த கலைப்பயணங்கள், தென் இலங்கைக் கலைஞர்களுடன் திருமறைக் கலாமன்றம், விழாக்களும் நிகழ்வுகளும் 1965-2015, யுத்த பேரிகையின் மத்தியிலும் சமாதான முழக்கம், திருப்பாடுகளின் காட்சியும் திருப்பு முனைகளும், பெண்ணியமும் திருமறைக் கலாமன்றமும், மன்றத்தின் கலையுலக மேதைகள்-கலைஞான பூரணர்கள், ஒரு புதிய சகாப்தத்தின் உதயம், சிறுவர்களே நம் எதிர்காலம், சமூக அரசியல் நீரோட்டத்தில் திருமறைக் கலாமன்றம், இலக்கம் 238-பிரதான வீதி சொல்லும் ஒரு வரலாற்றுக் கதை, கலை வளர ஒரு கவின்கலைகள் பயிலகம், கலையோடு மட்டுமல்ல சுனாமி அலையிலும் மன்றக் கலைஞர்கள், கலைத்துறையின் சிறப்பான சேவைக்கு, மன்றமும் புதிய தலைமுறையும், திருமறைக் கலாமன்றமும் சைவ சித்தாந்தமும், கலை வளர்க்க எழுந்து நிற்கும் கட்டிடத் தொகுதிகள், குடாநாட்டுக்கு வெளியே, இலட்சியத்தை நோக்கிய பணிகள், திருமறைக் கலாமன்றத்தின் பலம்-பலவீனம் ஆகிய தலைப்புகளினூடாகப் பதிவுசெய்கின்றார்.

## 14513

**நாடகமும் அரங்கியலும்: பரீட்சை வழிகாட்டி**. வனிதா-சுரேஷ். களுவாஞ்சிக்குடி: திருமதி வனிதா-சுரேஷ், வாகரையார் வீதி, களுதாவளை-01, 1வது பதிப்பு, ஜனவரி 2006. (மட்டக்களப்பு: நியூ கீன் அச்சகம், 81, முனை வீதி).

(4), 90 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 175., அளவு: 28.5x21 சமீ.

க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்களின் பரீட்சைத் தேவையினைப் பூர்த்திசெய்யும் வகையில் 1997 முதல் 2005 வரையிலான ஒன்பது வருடங்களுக்கான நாடகமும் அரங்கியலும் பரீட்சையின் வினா-விடைகளை தொகுத்து வெளியிட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38517).

## 14514

**வட்டுக்கோட்டை அரங்க மரபு**. ச.தில்லை நடேசன். சென்னை 600 005: கருப்புப் பிரதிகள், பி 55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1வது பதிப்பு, ஜூலை 2017. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).

367 பக்கம், விலை: இந்திய ரூபா 300.00, அளவு: 21.5x14 சமீ.

*யாழ்ப்பாண மாவட்டத்தில் வட்டுக்கோட்டையில் பிறந்த நூலாசிரியர் 1988இல் பிரான்சுக்கு புலம்பெயர்ந்தவர். வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து குழுவின் பிரான்ஸ் கிளையை 1989இல் சுகனுடன் சேர்ந்து உருவாக்கியவர். நடிகர், எழுத்தாளர், நாடக நெறியாளர், கூத்து அண்ணாவியார், ஆய்வாளர் என பல்துறைகளிலும் இயங்கி வருபவர் இவர். வட்டுக்கோட்டை அரங்க மரபு என்னும் இந்நூல் வட்டுக்கோட்டையின் சமூகம், கலை, பண்பாடு ஆகியன சமூக வரலாற்று நிலைகளுக்கு ஏற்ப மாறியவிதம் கலைநுட்பங்கள் அதற்கு பங்களித்தவர்கள் பற்றிய ஆய்வாக விரிகின்றது. இந்நூலில் முனைவர் வீ.அரசுவின் முன்னுரையாக வட்டாரம்-கலை-வாழ்க்கை என்ற அறிமுக உரை இடம்பெற்றுள்ளது. 10 இயல்களைக் கொண்ட இந்நூலில் தமிழ் அரங்க மரபு அறிமுகம், யாழ்ப்பாணம்-வலிகாமம் மேற்கு-வட்டுக்கோட்டை வரலாறும் சமூக அமைப்பும், வட்டூர் சமூகமும் மரபுகளும், வட்டுக்கோட்டை அரங்க வகைகள், வட்டுக்கோட்டை கூத்துகளும் வகைகளும், முகப்பரங்கும் மரபுக் கலைகளும், நாடகம், நவீன நாடகம், புலம்பெயர் சூழலில் கலைகள், போர்க்காலச் சூழலில் அரங்கு, நிறைவுரை ஆகிய பிரதான தலைப்புகளின்கீழ் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

## 793 திரைப்படக்கலை

### 14515

**தமிழ் மரபில் நடிகர்திலகம் சிவாஜிகணேசனின் நடிப்புப் பண்பாடு.** பால. சுகுமார். *சென்னை 600020: உயிர்மை பதிப்பகம், எண். 5, பரமேஸ்வரி நகர் முதல் தெரு, அடையார், 1வது பதிப்பு, டிசம்பர் 2019. (சென்னை 600077: மணி ஓப்செட்).*

*(16), 17-54 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 18x12 சமீ.,* ISBN*: 978-0-9919755-3-2.*

*திருக்கோணமலை மாவட்டத்தின் சேனையூர் கிராமத்தில் பிறந்தவர் பாலசிங்கம் சுகுமார். சேனையூர் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பயின்ற இவர் ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் பணியாற்றி, பிரித்தானியாவுக்குப் புலம்பெயரும் வரை கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவராகவும் பணியாற்றியவர். அரங்கியல் துறையில், கூத்துப் பண்பாட்டுத்துறையில் மிகுந்த ஆளுமை மிக்கவர். இவரது பார்வையில் தமிழகத்தின் திரைப்படக் கலைஞர் சிவாஜி கணேசனின் நடிப்புப் பண்பாடு பற்றிய திறனாய்வுக் கருத்துக்கள் இந்நூலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. முன்னுரையில் "சிவாஜி கணேசனுக்குப் பிரியாவிடை கூறல்" என்ற தலைப்பில் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் கட்டுரை அமைகின்றது. நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் நடிப்புக் கோட்பாடுகளும், நானும் நடிகர் திலகமும், கற்பனைக்கு மிஞ்சிய நடிப்பு, தமிழின் அடையாளமாய் நடிகர் திலகம், மரபிலிருந்து நவீனத்திற்கு ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.*

### 14516

**தமிழ்த் திரைப்படக் களஞ்சியம்: தொகுதி நான்கு.** செ.ஜோர்ஜ் இதயராஜ், நிழல் எட்வேட் சந்திரா (தொகுப்பாசிரியர்கள்). கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, வே வீதி, தொரன்ரோ, 1வது பதிப்பு, மார்கழி 1992. (கனடா M5S 2W9: ஜீவா பதிப்பகம், ரிப்ளக்ஸ் அச்சகம், 1108, வே வீதி, தொரன்ரோ).

xxiv, 256 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: கனேடிய டொலர் 20., அளவு: 21x14 சமீ.

தமிழ்த் திரைப்படங்களின் அறுபது ஆண்டுக்கால வளர்ச்சியும் பெயர் அகரவரிசையும் இந்நூலின் பிரதான அம்சங்களாகும். அறுபதாண்டுக் காலத்தில் தமிழில் 4000 திரைப்படங்கள் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளனவென்றும் அவற்றுள் வேற்றுமொழிப் படங்கள் 800 உள்ளனவென்றும் வருடாந்தம் 100 நேரடித் தமிழ்ப்படங்கள் சராசரியாக எடுக்கப்பட்டுள்ளனவென்றும் இந்நூலின் வழியாக அறியமுடிகின்றது. பொருளடக்க அகரவரிசை/ தமிழ்த் திரைப்படத் தயாரிப்புத் தகவல்கள்/ இத் தொகுதியில் உள்ள திரைப்படக் காட்சிகளின் அகரவரிசை/ இத் தொகுதியில் உள்ள திரைப்படக் காட்சிப் படங்கள் மூலமாக அறியப்படும் நடிகர் நடிகைகள்/ 1992ஆம் ஆண்டில் வெளிவந்த தமிழ்த் திரைப் படங்களின் அகரவரிசை/ 1992ஆம் ஆண்டில் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பில் சிறப்புமிக்க சில விசயங்கள் ஆகிய இயல்களில் 359 தமிழ்த் திரைப்படங்களின் விபரங்கள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14586).

### 14517

**திரைப்படத்துறையில்.** கே.எஸ்.சிவகுமாரன். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661/665/675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2019. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(6), 7-96 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5x14 சமீ.,ISBN: 978-624-00-0197-7.

திரைப்படத்துறை தொடர்பான தகவல்களும், திறனாய்வுகளும், ஊடகவியலாளர்கள் சிலரினதும் நூலாசிரியர்கள் சிலரினதும் பற்றிய சில பார்வைகளும் இந்நூலில் இடம்பெறுகின்றன. திரைப்படத் திறனாய்வு, சினமா சினமா எனது பார்வை, எனக்கும் பிடித்த உலக சினமா, மலையாள தேசத்தில் சலனச் சித்திரங்கள், பிரஸன்ன விதானகேயின் "நீதிமன்றம் மௌனமாயிற்று" ஒரு மனப்பதிவு, மாநகர மறைவுலகத்துள் ஒரு பிரவேசம், சிங்களப் படங்கள் பற்றிய விபரக் கொத்து, சினமாவில் புதிய அலை, இரவின் மூன்றாம் பாகம், கொரிய திரைப்பட விழா-பெண்மையின் பிற கோணங்கள், மலையாள சினமா, ரதன் எழுதிய "ஒளி தேடும் நிழல்கள்", சரோஜா, பிரிட்டிஷ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட படங்கள், திரைப்பட விழாக்கள்-திறனாய்வுக்கு உதவுமா?, இலங்கையில் முதல் தடவையாக ஒரு மலேசியப் படம், சில இந்திய மொழிப் படங்கள்-சின்னச் சின்ன செய்திக் குறிப்புகள், பெண்ணியப் படங்கள் மூன்று-சின்னச் சின்ன குறிப்புகள், ஊடகவியலாளர் பார்வைகள்-கணபதி சர்வானந்தா எழுத்துக்களினூடாக

சினமாவைப் பார்த்த கே.எஸ்.சிவகுமாரன், யேசுராசா பற்றிய கட்டுரை- (கே.எஸ். சிவகுமாரன் பற்றிய குறிப்புகள்) கணபதி சர்வானந்தா, ரதனின் நூல் அறிமுக விழா-கே.விஜயனின் செய்தி விமர்சனம் ஆகிய 21 கட்டுரைகள் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65502).

## 800 இலக்கியம்

## 800. (1) இலக்கிய அமைப்புகள்

### 14518

**சைவநாதம்: சைவப் புலவர் பொன்மலர் 1960-2010.** சு.செல்லத்துரை (மலராசிரியர்). யாழ்ப்பாணம்: அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம், 153, காங்கேசன்துறை வீதி, கொக்குவில், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).

232 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x19 சமீ.

30.10.1960இல் மல்லாகம் இந்துக் கல்லூரியில் இந்து சாதனம் பத்திரிகையாளர் நம. சிவப்பிரகாசம் அவர்களின் தலைமையில் கால்கோளிடப்பட்டது. அன்றிலிருந்து புலவர் பரீட்சை, நூல்வெளியீடு உள்ளிட்ட பல்வேறு தமிழ்ப் பணிகளை இச்சங்கத்தினர் ஆற்றிவருகின்றனர். இச்சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு 03.10.2010 அன்று இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. வாழ்த்தியல் நாதம், வரலாற்று நாதம், தத்துவ நாதம், தோத்திர நாதம், வாழ்வியல் நாதம் ஆகிய பிரிவுகளின் கீழ் தமிழியல்சார் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்புகளாக சங்கம் வளர்த்த சான்றோர்கள், சங்கம் கௌரவித்த சான்றோர்கள், சங்க அமைப்பு விதிகள், பரீட்சைகளும் பாடத்திட்டமும், தேர்வு விண்ணப்பப் படிவம், பொன்விழாவில் பட்டம் பெறுவோர், பொன்விழாப் போட்டிகளில் பரிசுபெற்றோர், பொன்விழா நிகழ்ச்சி நிரல் ஆகிய தகவல்கள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 49374).

## 801 சிறுவர் இலக்கியங்கள்

### 14519

**பாரதக் கதைகள்.** ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி. கொழும்பு: உலக சைவப் பேரவை, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

viii, 88 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

கிளிநொச்சி மகாதேவ பரமானந்தவல்லி ஞாபகார்த்த சைவ மகளிர் இல்லக் கட்டிட நிதிக்காக இப்பாரதக் கதைகளைத் தொகுத்துத் தந்துள்ளார். மகாபாரதம் என்ற அறநூலை ஒரு கைந்நூலாகச் சுருக்கி, சுலபமாகக் கற்றுக்கொள்ளக் கூடிய

*வகையில் மாணவர்கள் மத்தியில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் 18 நாள் நடந்த யுத்த சரிதையை, 18 அத்தியாயம் கொண்ட நூலாக வடித்திருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 32101).*

### 14520

**மகா பாரதக் கதை: பழகு தமிழ் நூல்.** *சு.சிவராஜா. யாழ்ப்பாணம்: இலக்கிய நண்பர் வெளியீடு, 1வது பதிப்பு, புரட்டாதி 2004. (முல்லைத்தீவு: அந்திவானம் பதிப்பகம், புதுக்குடியிருப்பு).*

*68 பக்கம், விலை: ரூபா 60.00, அளவு: 21x14 சமீ.*

*ராஜாஜி 105 அத்தியாயங்களில் "வியாசர் விருந்து" என்ற பெயரில் பழகு தமிழில் எழுதிய மகா பாரதக் கதையைப்போன்று, இந்நூலாசிரியர் 22 அத்தியாயங்களில் புகலிடத் தமிழ்ச் சிறார்களை மனதில் இருத்தி எழுதி வழங்கியுள்ளார். கங்காதேவி, பரிமளகந்தி, அம்பை-அம்பிகை-அம்பாலிகை, குந்தியும் மந்தரையும், அரங்கேற்றம், வாரணாவதம், வேத்திரகீயம், திருமணம், தீர்த்தயாத்திரை, இராஜசூயம், சூதும் வாதும், தவமும் பவமும், சாபமும் சோகமும், கனியும் பொய்கையும், வண்ண மகளும் பேடி மகளும், தூதுவர் மூவர், தூதும் சூதும், படைகள் எழுந்தன, வீட்டுமரும் துரோணரும் வீழ்ந்தனர், கர்ணனும் சல்லியனும் வீழ்ந்தனர், துரியோதனன் வீர சுவர்க்கம், தருமபுத்திரன் அரசாட்சி ஆகிய தலைப்புகளில் மகாபாரதக் கதை சுவையாகவும் சுருக்கமாகவும் சொல்லப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39948).*

## 801. (1) சிறுவர் பாடல்கள், கவிதைகள்

### 14521

**கை விளக்கு: சிறுவர் நூல்.** *இராஜசெல்வி சுஜந்தன். யாழ்ப்பாணம்: திருமதி இராஜசெல்வி சுஜந்தன், 1வது பதிப்பு, நவம்பர் 2009. (யாழ்ப்பாணம்: கிராப்பிக்ஸ் விஜய்).*

*36 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.*

*ஓசைநயத்துடன் பாடக்கூடிய சிறுவர் பாடல்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் கல்வித்துறையில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். இந்நூல் நுட்பமான விடுகதைகள், சமூகம், சுகாதாரம், கல்வி சார்ந்த பாடல்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. குழந்தைகளின் உலகம், அவர்கள் இரசிக்கும் விடயங்கள் எல்லாம் இங்கே சின்னச்சின்ன வரிகளில் அழகாகச் சொல்லப்படுகின்றன. அவர்களுக்குரிய போதனைகள், நற்சிந்தனைகள், கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குமுறைகள் நற்பழக்க வழக்கங்கள் எல்லாம் குழந்தைகளுக்கேற்ற தமிழில் இதிலுள்ள தலைப்புகளற்ற 24 கவிதைகளிலும் அழகாகச் சொல்லப்படுகின்றன.*

குழந்தைகளின் எதிர்காலம் கருதி அவர்களை இருட்டில் வழிநடத்தும் கைவிளக்காக ஆசிரியர் இந்நூலை உருவாக்கியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 14522

**சிறுவர் சிந்தனைத் தமிழ்(கவிதைத் தொகுப்பு).** வீரசிங்கம் பிரதீபன். வவுனியா: அன்னலீலா கலைக்கூடம், இல.9, 4ஆவது ஒழுங்கை, சாந்தசோலை வீதி, மகாறம்பைக்குளம், 1வது பதிப்பு, ஜனவரி 2019. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xvi, 52 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-955-06821-2-6.

ஆசிரியத் தொழிலோடு தன் இலக்கியப் பயணத்தையும் தொடர்ந்தவர் வீ.பிரதீபன். தற்போது கலாசார உத்தியோகத்தராக வவுனியா பிரதேச செயலகத்தில் பணியாற்றுகின்றார். இவரது ஆறாவது நூலாக இது வெளிவந்துள்ளது. இந்நூலில் மழலைகள், சிறுவர் எமது ஆசை, நாம் இலங்கையர், எம்மதமும் எம் மதம், ஒன்று படுவோம், மரங்களைக் காப்போம், வெண்ணிலவே, விபத்து, பாட்டியும் தாத்தாவும், தங்கத் தாத்தா, வீரக் கும்பி, ஆலமரம், இயற்கை அன்னை, முற்றத்து ஒற்றைப்பனை, கூவு குயிலே, செருப்பு, பனம்பழம், தம்பளப் பூச்சி, கோழியும் குஞ்சுகளும், பெய்யாதோ பெரிய மழை, தைப்பொங்கல், கூண்டுக்கிளி, விளையாட்டு, வெண் சுருட்டு, இராவணன் ஆகிய 25 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கவிதையின் இறுதியிலும், அக்கவிதையில் பயன்படுத்தப்பட்ட அருஞ்சொற்களும், அவற்றிற்கான விளக்கங்களும் தரப்பட்டுள்ளன.

### 14523

**செந்தமிழ் குழந்தைப் பாடல்கள்.** பத்மா இளங்கோவன் (புனைபெயர்: பத்மபாரதி). யாழ்ப்பாணம்: நாவேந்தன் பதிப்பகம், மயூரன் இல்லம், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, 1வது பதிப்பு, ஜுன் 2017. (யாழ்ப்பாணம்: ஸ்ரீமாருதி பதிப்பகம், 555, நாவலர் வீதி).

(4), 60 பக்கம், விலை: ரூபா 425.00, அளவு: 20.5x14.5 சமீ.

நாவேந்தன் பதிப்பக வெளியீட்டு இலக்கம் ஐந்து. சிறுவர் இலக்கிய வரிசையில் பத்மா இளங்கோவனின் எட்டாவது நூலாக இது வெளிவந்துள்ளது. பாலர் கல்வியில் விஷேட பயிற்சிபெற்ற முன்னாள் ஆசிரியையான இவர் கல்லூரிக் காலம் முதல் இலக்கிய வாஞ்சையுடன் எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருபவர். கவிதை, கட்டுரை, சிறுகதை பல இவர் படைத்திருப்பினும் இவரது, குழந்தைகள்-சிறுவர்களுக்கான படைப்புக்கள் பிரபல்யமானவை. "பரிசு" என்ற சிறுவர் சஞ்சிகையை பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளியிட்டவர். தமிழ்நாடு கு.சின்னப்பபாரதி இலக்கிய அறக்கட்டளையின் சிறுவர் இலக்கியத்துக்கான விருதினை 2012இல் பெற்றுக்கொண்டவர்.

## 14524

**பிள்ளை நிலா: சிறுவர் பாடல்கள்.** செல்லையா குமாரசாமி. யாழ்ப்பாணம்: செ.ல்லையா குமாரசாமி, நாவற்குழி மேற்கு, கைதடி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2018. (யாழ்ப்பாணம்: வைரஸ் கிரப்பிக்ஸ், இணுவில்).

(8), 60 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 25x18 சமீ.

"மாங்கனி", "பாட்டுப் பாடுவோம்" ஆகிய சிறுவர் பாடல் நூல்களை வழங்கியுள்ள கவிஞர் செ.குமாரசாமியின் மூன்றாவது குழந்தைப் பாடல் தொகுதி இதுவாகும். பேராசை கொண்ட நரியார், தேர்த்திருவிழா, கோடை மழை, வௌவால், கோழியாரே, வேட்டை, புதிய பள்ளி, உறவுக்குள்ளே சண்டை, வேட்டை ஆட, பாடிப் பிழைக்க வந்தோம், அன்புடையோராய் வாழ்வோம், அம்மாவுடன் உறங்க, தூங்கம்மா, ஓடும் முகிலே, என்னை வளர்ப்பேன், இயல்பலாதன செய்யேல், சின்ன மாமா, வன்னி வளம், ஆகாயக் கப்பல் ஏறி, வேலி பாய்ந்த கலைமான், எந்தக் கதை சொல்ல, நான் நல்ல பிள்ளை, தம்பிப் பாப்பா, வீட்டுத் தோட்டம், விடுமுறை நாட்களில், எங்கள் ஆட்டுக்குட்டி, எளியாரும் வலியாரும், ஆசிரியரின் அறிவுரை, பெற்றோர் சொற் கேளுங்கள், கொழும்புக்குப் போனேன், இயற்கை, பிள்ளை நிலா, சேமிப்போம், பிறந்த நாள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 34 பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## 14525

**மழலை அமுதம் (கவிதைத் துளிகள்).** பீ.பீ.அந்தோனிப்பிள்ளை. மன்னார்: பீ.பீ. அந்தோனிப்பிள்ளை, ஆத்திக்குழி, முருங்கன், 1வது பதிப்பு, மார்கழி 2011. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

vii, 51 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-0635-30-6.

கவிஞர் பீ.பீ.அந்தோனிப்பிள்ளை அவர்கள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர். கலை, இலக்கியம், நாட்டுக்கூத்து, நாடகம், பாடல்கள் எனப் பலவிதமான அழகியல்சார் முயற்சிகளில் ஈடுபடுபவர். வடமாகாண ஆளுநர் விருது, செம்மொழி மாநாட்டில் சிறுவர் இலக்கியப் படைப்புக்கான விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர். சிறுவர் இலக்கியத்தில் இருபதுக்கும் அதிகமான நூல்களை எழுதியவர். 47 கவிதைகளை உள்ளடக்கிய இந்நூல் புதுக்கவிதை வடிவில் அமைந்துள்ளது. சிறுவர்களின் மனக்குறைகளை பதிவுசெய்யும் சில கவிதைகள், பெற்றோரின் திணிப்பால் குழந்தைகள் அவதியுறும் நிலைமைகளையும் சித்திரிக்கின்றன. சில கவிதைகள் சமூக ஒழுக்கக் குறைபாட்டை சுட்டிக்காட்டி நிவாரணம் தேடுகின்றன. பெற்றோரின் கடமையை ஒரு கவிதை மீள்நிர்ணயம் செய்கின்றது. சுமைதாங்கி என்ற கவிதை தாயின் கஷ்டத்தை பிள்ளையிடம் ஒப்பித்து அவர்களையும் உணரவைக்கின்றது. இவரது கவிதைகளில் கவிஞரின் கருத்துநிலை, சமூகப் பார்வை, அரசியல் சித்தாந்தம் முதலியன தெளிவாகத் தெரிகின்றன. தான் கண்டதையும் கேட்டதையும் காண விரும்பியதையும் ஒரு நேர்கோட்டில் வைத்து நோக்குவதாக இவரது கவிதைகள் அமைகின்றன.

## 14526

**மழலை ஓவியங்கள்.** த.அஜந்தகுமார். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

24 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-0958-25-2.

கவிதை, கட்டுரை, சிறுகதை, பத்தி, விமர்சனம் என தமிழ் இலக்கியத்தின் பல்வேறு தளங்களிலும் பயணிக்கும் த.அஜந்தகுமாரின் கைவண்ணத்தில் எழுந்த குழந்தைகளுக்கான பாடல்களின் தொகுப்பு இது. மழலைகளின் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் மலர்ச்சியையும் அடையச் செய்யும் கனிவான இப்பாடல்கள், அம்மா, மழை, நாய்க்குட்டி, பாட்டி, விளையாடுவோம், மழைப்பாட்டு, வண்ணத்துப் பூச்சி, கோழி, சைக்கிள், வெண்ணிலா, சூரியன், அப்பா, ஆசான், பொம்மை, பட்டம், பூனைக்குட்டி, தமிழ், பூனைக்குட்டி-2, அம்மா அப்பா பிடிக்குமே, வீட்டுத்தோட்டம் ஆகிய இருபது தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன. ஜீவநதி வெளியீட்டகத்தின் 137ஆவது பிரசுரமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

# 801. (2) சிறுவர் நாடகங்கள்

## 14527

**எங்கள் காடு: சிறுவர் நாடகம்.** அகளங்கன் (இயற்பெயர்: நா.தர்மராஜா). கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2018. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

22 பக்கம், விலை: ரூபா 110.00, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-7461-28-1.

சிறுவர் நாடகங்கள் மூலம் பல விடயங்களை மாணவர்களுக்குக் கற்பிக்கமுடிகின்றது. மாணவர்களின் மகிழ்ச்சியான கல்விச் செயற்பாட்டிற்கு நாடகப் பயிற்சி பெரிதும் துணைநிற்கின்றது. பாத்திரங்களாக மாறி மாணவர்கள் நடிக்கும்போது கருத்துக்கள் எளிதாக மனதில் பதிகின்றன. பார்ப்பவர்களுக்கும் பார்த்தல் கேட்டல் ஆகிய இரண்டு புலன்கள் மூலம் கருத்துக்கள் இலகுவாக உள்ளத்தை ஊடுருவுகின்றன. சிறுவர்களுக்கான நாடகப் பிரதிகள் பரவலாக இல்லாத சூழ்நிலையில் அகளங்களின் இந்நாடகநூல் வெளிவருகின்றது. "எங்கள் காடு" என்ற இந்நாடக நூல் படிக்கவும் நடிக்கவும் என இரண்டு வகையான பயன்பாட்டினைக் கொண்டுள்ளது. பறவைகள், விலங்குகளைப் பாத்திரங்களாகக் கொண்டிருந்தாலும், சமூகம் சார்ந்த நாடகம் என்பதால் பேச்சு மொழியையே ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

## 14528

**கல்லூரி நாடகங்கள்: ஆறு நாடகங்களின் தொகுதி.** பா.இரகுவரன். பருத்தித்துறை: பா.இரகுவரன், பிராமின் வீதி, தும்பளை, 1வது பதிப்பு, ஜுலை 2007. (பருத்தித்துறை: நியு S.P.M. ஒப்செட் பிரின்டர்ஸ், வீ.எம்.வீதி).

xiii, *(4), 92 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 20.5x14 சமீ.*

*இந்நூலில் சிட்டுக் குருவிகள், முற்றத்து வேம்பு, அழிதல் காணும் பூவுலகம், குருபீடம், மெல்லத் தமிழினி, கணித மேதை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கல்லூரி நாடகங்கள் இடம்பெற்றுள்ளன. சமூகத்தில் காணப்படும் நடைமுறைப் பிரச்சினைகளையே ஆசிரியர் இந்நாடகங்களின் கருவாக்கியுள்ளார். நாடகங்கள் சமுதாயத்தில் நிலவும் குறைபாடுகளை, பிரச்சினைகளை புட்டுக்காட்டுவதோடு மட்டும் நின்றுவிடாது, அவற்றைத் திருத்திக் கொள்ளவேண்டும் அல்லது மாற்றியமைக்கவேண்டும் என்ற மனோபாவத்தை ரசிகர்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும் என்ற மன எழுச்சியை தோற்றுவிக்கும் நோக்கத்தில் இந்நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன. பாத்திரங்களின் பேச்சுகளும் ஏச்சுகளும் நகைச்சுவையாகவும், அதேவேளை கருத்தாழத்தையும் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கின்றன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50127).*

### 14529

**சிறுவர் ஞானத் தமிழ் நாடகம்.** *ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி அம்மையார். கொழும்பு: பேலியகொடை ஸ்ரீ பூபாலவிநாயகர் ஆலயம், 1வது பதிப்பு, 1997. (வத்தளை: காரைநகர் பாலா அச்சகம்).*

*(6), 94 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 22x14 சமீ.*

*பெரிய புராணம், கந்தபுராணம் ஆகிய பக்தி இலக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்ட பல்வேறு கருத்துக்கள் அடங்கிய 18 சிறுவர் நாடகங்களைக் கொண்ட நூல். குழந்தைகளின் சமய அறிவையும் பண்பாட்டையும் வளர்ப்பதில் இந்நாடகங்கள் அக்கறை கொண்டுள்ளன. கடவுள் எங்கும் இருக்கிறார், நீதி, திருமணம் நின்றது, தெய்வத் தமிழ் தந்த பெருமான், பெண்ணாசையை வென்றவர், இல்லை என்று கூறாதவர், அமுது படைத்தார் அன்பர், கோவணத்தின் பெருமை, அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ், கல் தோணியாகிறது, அன்பின் வெற்றி, மாங்கனி, அழுத பிள்ளை பால் குடிக்கும், பையவே சென்று பாண்டியற்காகவே, குருவருள் பெற்ற ஞான போதகர், மண் சுமந்த பொன் மேனியர், ஊமைப்பெண் பேசியது, விதியை வென்ற இளைஞர் ஆகிய 18 தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17545).*

## 801. (4) சிறுவர் சிறுகதைகள்

### 14530

**அன்பான சிறுவர்களே: குழந்தைக் கதைகள்.** *செ.யோகநாதன். கொழும்பு 11: வரையறுக்கப்பட்ட எம்.டி.குணசேனா அன் கொம்பெனி, 217, ஒல்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு 11: எம்.டி.குணசேனா அன் கொம்பெனி).*

*(6), 42 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-21-1122-6.*

*செ. யோகநாதன் (01.10.1941 - 28.01.2008) ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர். பெருமளவு சிறுகதைகளையும் குறும்புதினங்களையும் எழுதியவர். புனைவுகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், குழந்தை இலக்கியம் என தொன்னூறுக்கும் மேற்பட்ட நூல்களை இவர் எழுதியுள்ளார். யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட யோகநாதன் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர். ஆரம்பத்தில் கண்டியில் ஆசிரியராகப் பணியாற்றி, பின்னர் இலங்கை நிர்வாகச் சேவையில் தேர்ச்சி பெற்று மட்டக்களப்பு, பூநகரி ஆகிய இடங்களில் உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றினார். மார்க்சிய சித்தாந்தத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர். 1980களில் தமிழ்நாடு சென்று அங்கு பதினாறு ஆண்டுகள் வாழ்ந்து 1996 இல் இலங்கை திரும்பினார். இறுதியாக கொழும்பில் உள்ள எம். டி. குணசேனா நிறுவனம் தமிழ் நூல்கள் வெளியிடத் தொடங்கிய போது அதற்குப் பொறுப்பாளராகப் பதவி ஏற்றார். அக்காலகட்டத்தில் இச்சிறுவர் கதைத் தொகுதியும் வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31177).*

### 14531

**கல்: சிறுவர் சிறுகதைகள்.** *பா.இரமணாகரன் (புனைபெயர்: மாவையூர்க் கவி). அச்சுவேலி: பா.இரமணாகரன், சந்நிதி வீதி, இடைக்காடு, 1வது பதிப்பு, 2017. (யாழ்ப்பாணம்: அன்ரா பிறிண்டேர்ஸ், இல. 356A, கஸ்தூரியார் வீதி).*

*xii, 68 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 500., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43539-3-0.*

*காலில் தடுக்குப் பட்டு காலைப் பதம்பார்த்த ஒரு கல்லைக் குறிபார்த்து எறிந்து வயிற்றுப் பசியை மட்டுமல்லாது, நிகழவிருந்ததொரு களவையும் தடுத்து, பெண்ணின் தாலியையும் காத்த கந்தனின் திருவருளும், சும்மா கிடந்த கல்லை பிள்ளையாராக வடிவமைத்த சிற்பி அதனை எல்லோரும் வழிபடும் நிலையை அக்கல்லுக்கு ஏற்படுத்தியமையும், மறைந்திருக்கும் இறைவனை மனிதனால் மட்டுமே வெளிக்கொண்டுவர முடியும் என்றும் அதற்கும் அதற்குரிய படிமானமுள்ளவர்களால் மட்டுமே முடியும் என்ற செய்தியையும் உணர்த்தும் கதைகள் இவை. இக்கதைகள், கல், நான் பிரயோசனமானவன், கடவுள் ஏன் கல்லானார், விளையாட்டுப்போட்டி ஆகிய நான்கு தலைப்புகளில் இடம் பெற்றுள்ளன. பிள்ளைகளிடையே நற்போதனைகளை ஊட்டுவதுடன் ஆன்மீகச் சிந்தனையைப் பெருக்கும் வகையிலும் அமைந்துள்ளன.*

## 801. (41) சிறுவர் மொழிபெயர்ப்பு சிறுகதைகள்

### 14532

**எங்கள் கிராமம்.** *மார்ட்டின் விக்கிரமசிங்க (சிங்கள மூலம்), இரா.சடகோபன் (தமிழாக்கம்). இராஜகிரிய: சரச (பிரைவேட்) லிமிட்டெட், 18/3, கிரிமண்டல*

*மாவத்தை, நாவல, 1வது பதிப்பு, 2012. (இராஜகிரிய:* KSU *கிராபிக் பிறைவேற் லிமிட்டெட், 510, இராஜகிரிய வீதி).*

xx, *220 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 17.5*x*12 சமீ.,* ISBN: *978-955-0201-19-8.*

*மார்ட்டின் விக்கிரமசிங்க சிங்களத்தில் எழுதிய "அப்பே கம" என்ற இளையோருக்கான சிங்கள நூலின் மொழிபெயர்ப்பு. சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான 2012ஆம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய விருது, இந்நூலுக்கு 11.9.2013 அன்று கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் வைத்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதிலுள்ள 1960-1970 காலத்தையொட்டிய ஆசிரியரின் இளமைக்கால அனுபவங்களைத் தாங்கிய கதைகளினூடாக மறைந்துவரும் கிராமியக் கலாச்சாரம், பண்பாடு, பொருளாதாரம் என்பவற்றை மீளநினைவுறுத்து கின்றார். பிள்ளைகளின் அழகிய உலகம், மனிதன் வேடனாக இருந்தபோது, மண்டூகங்களின் துயரம், பிள்ளைகளின் வனவாசம், பயந்தாங்கொள்ளி, புதிய உலகொன்றிற்குள் நுழைதல், வரித்துக்கொண்ட உணர்வுகள், மீன் பிடிக்கும் ஆசை, கிரிபாபாவின் கதை, கிரிபாபாவின் நகைச்சுவை, தொவில் நடனம் சாத்திரமல்ல, கிராமத்துக் கலைஞர்கள், நொத்தாரிஸ் அப்புவின் பொம்மலாட்டாப் பாவை, புண்ணியோத்சவ பூமி, அண்டப் புளுகும் ஆகாசப் புளுகும், கிராமத்து நாடகக் கலைஞர்கள், திருவிழா ஊர்வலம் பார்த்தல் ஆகிய 17 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சில சொற்களுக்கான பதவிளக்கம் இறுதியில் தரப்பட்டுள்ளது.*

## 801. (5) சிறுவர் கதைகள்/நாவல்கள்

### 14533

**அகப்பட்ட கள்வன்.** *ஜின்னாஹ் ஷரிபுத்தீன். கொழும்பு:* Pearl Island Readers, *2வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, 2003. (ஹோமகம: கருணாரத்தின அன் சன்ஸ்,* Unit 67, UDA Industrial Estate, Katuvana Road*).*

*12 பக்கம், சித்திரம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21*x*15 சமீ.,* ISBN: *955-597-898-0.*

*கொழும்பு பிரிட்டிஷ் கவுன்சிலின் வேலைத்திட்டத்தின் கீழ்* DFID *அமைப்பின் நிதி உதவியுடன் வெளியிடப்பெற்றுள்ள இந்நூல், இலங்கைப் பாடசாலைகளில் அடிப்படை கல்விகற்கும் சிறார்களுக்கான உப வாசிப்பு நூல்களாக தமிழ் சிங்கள மொழிகளில் வெளியிடப்பெற்ற 54 சிறுவர் நூல்களில் ஒன்றாகும். இக்கதையில் உணவைக் களவெடுத்துச் சாப்பிட்டு வந்த ஒரு பூனை இறுதியில் சிக்கலில் மாட்டிக்கொள்கின்றது.*

### 14534

**அதிசயத் தீவினில் ஆனந்தன்: சிறுவர்களுக்கான நவீனம்.** *செல்லையா குமாரசாமி. தென்மராட்சி: தென்மராட்சி கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், தென்*

மராட்சி, 1வது பதிப்பு, டிசம்பர் 2015. (யாழ்ப்பாணம்: வைரஸ் பிரின்டர்ஸ், காங்கேசன்துறை வீதி, இணுவில்).

82 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ.

11 அத்தியாயங்களைக் கொண்ட இச் சிறுவர்கதை, துணிவு, நாட்டுப்பற்று என்பவற்றை சிறுவர்களிடம் வளர்ப்பதாக அமைந்துள்ளது. கதைசொல்லியாக ஆசிரியரே இருந்து, சிறார்களை அதிசயத் தீவுக்கு அழைத்துச் செல்கிறார். இலகு மொழிநடையில் அமைந்த உரையாடல்களைக் கொண்டதாக நாவல் வளர்த்துச் செல்லப்படுகின்றது. செல்லையா குமாரசாமி, யாழ்ப்பாணம்- நாவற்குழியைச் சேர்ந்த எழுத்தாளராவார். 1956 ஆம் ஆண்டிலிருந்து வானொலி நாடகங்களில் நடித்துள்ள இவர், 1957 ஆம் ஆண்டில் அல்லி நாடகத்தினையும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய நிகழ்வில் தந்தையும் மகனும் நாடகத்தினையும் மேடையேற்றியவர். கவிஞராக, நாடக எழுத்தாளராக, நாவலாசிரியராகப் பல்துறை விற்பன்னராக விளங்கும் இவர், 50களில் அல்லி என்னும் மாதச் சஞ்சிகையையும் நடாத்தியுள்ளார். மேலும் இவர் கிள்ளை விடு தூது, கூடில்லாக் குஞ்சுகள், மண்ணைத் தொடாத விழுதுகள் ஆகிய நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

## 14535

**கண்ணன் எங்கள் கண்ணன்: குழந்தை இலக்கியம்.** செ.யோகநாதன். தெகிவளை: ஏ.ஜே.பதிப்பகம், 44, புகையிரத நிலைய வீதி, 1வது பதிப்பு, 2001. (தெகிவளை: ஏ.ஜே.பதிப்பகம், 44, புகையிரத நிலைய வீதி).

40 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80.00, அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-97520-0-6.

சிறுவர்க்குரிய நற்பழக்கங்கள், பொது அறிவுக்குரிய செய்திகள், அநீதியை எதிர்த்தல் முதலிய கருத்துக்கள் செறிந்த கதை. நற்பழக்கங்கள் கொண்ட கண்ணன் பொலிசாரின் கண்ணில் படாதிருந்த ஏழு திருடர்களை தந்திரமாகப் பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்து இரண்டுலட்சம் ரூபா பரிசினைப் பெறுகின்றான். கண்ணனும் அவனது நண்பர்களான பாரதியும் பாபுவும் மிகச் சிறந்த மாணவ மணிகளென்ற விருதுகளை அரசிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29082).

## 14536

**சிறுமியும் மந்திரக்கோலும்.** ஜின்னாஹ் ஷரிபுத்தீன். கொழும்பு 6: Room to Read Sri Lanka, 14, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2010, 1வது பதிப்பு, 2008. (மஹரகம: தரஞ்ஜீ பிரின்டர்ஸ், 506, ஹைலெவல் வீதி, நாவின்ன).

20 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x29.5 சமீ., ISBN: 978-955-1520-19-9.

குமாரி என்ற சிறுமி பாடசாலை விட்டு வீடு திரும்பிவரும் வழியில் மந்திரக் கோலொன்றினைக் கண்டெடுத்தாள். அவள் ஏதாவதொன்றினைச் சொல்லியபடி

தட்டினால் அது உடனே அவள்முன் தோன்றியது. பசிக்கிறது உணவு வேண்டுமென்றாள். மேசைக்கு உணவு வந்தது. பூ வேண்டுமென்றாள். புத்தகம் வேண்டுமென்றாள். அனைத்தும் கிடைத்தன. சக்தி வாய்ந்த அந்த மந்திரக்கோலை வைத்துக்கொண்டு குமாரி அம்மாவுக்காகக் காத்திருந்தாள். வீட்டுக்கு வந்த அம்மா குமாரி கூறிய எதனையும் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. அதுபற்றி மீண்டும் மீண்டும் குமாரி கூறியபோதுகூட அம்மா குமாரியை ஏசினாரே தவிர, அவளை நம்ப மறுத்தார். கவலையடைந்த குமாரி, அம்மாவை நம்ப வைப்பதற்கு மந்திரக் கோலினைப் பிரயோகித்தாள். அம்மாவை எலியாக்கினாள். என்ன கொடுமை. அவளுடைய செல்லப் பூனை எலியைத் துரத்திப் பிடித்துக்கொண்டு தின்னவும் தயாரானது. அச்சமடைந்த குமாரி, அழுகையுடன் ஓடியோடி எலியை மீண்டும் அம்மாவாக்கப் போராடினாள். பூனையும் தன் பிடியை விடாமல் அம்மா எலியைத் தூக்கிக்கொண்டு ஓடியது. குமாரியால் அம்மாவைக் காப்பாற்ற முடிந்ததா இல்லையா என்பதை இக்கதை சுவாரஸ்யமாகச் சொல்கின்றது. அருண கீர்த்தி கமகேயின் ஓவியங்கள் கதைக்கு உயிரூட்டுகின்றன.

## 14537

**பிங்கலன் கதை.** நவாலியூர் சோ.நடராசன். கொழும்பு 11: எம்.டி.குணசேனா, 217, ஒல்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 1971. (கொழும்பு 11: எம்.டி.குணசேனா, 217, ஒல்கொட் மாவத்தை).

xi, 84 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

பிங்கலன் என்ற குரங்கின் கதை இது. ஆசிரியர் முன்னர் எழுதிய வினோதனின் சாகசம் என்ற சிறுவர் நாவலின் தொடர்ச்சியாக அமைவது. அதிலுள்ள பாத்திரங்களில் சிலவும் இந்நாவலில் வருகின்றன. பிங்கலன் என்ற சிறு குரங்கு பல வீரதீரச் செயல்களைச் செய்து கடைசியில் உலகச் சுற்றுப்பயணமும் மேற்கொள்கின்றது. பிரயாணக்கட்டுரைகூட எழுதுகிறார். ஆனால் பாவம் அவருக்கு அழகையும் பெருமையையும் கொடுத்த வாலைத்தான் அவர் இழந்து விட்டார். கிம்பலன் தாத்தாவின் கூத்தை தனது நண்பர்களுக்கு காட்டப்போய் தனது அழகான திருவாலை இழந்து அவதிப்படுகிறார். ஆயினும் வாலில்லாமலே பல ஆபத்துக்களையும் கடந்து செல்கிறார். இவர் செய்யும் குறும்புகளைப் படிப்பவர்களுக்கு இது ஒரு குரங்கின் செயலா என்று ஆச்சர்யத்தை ஏற்படுத்தவும் கூடும். திருடனின் சட்டைப் பையிலிருந்து சாமர்த்தியமாகத் தப்பி அதே சடடைப்பையில் ஒரு பூனையை லாவகமாக அடைத்துவிட்டு ஓடிய பிங்கலனின் சாமர்த்தியத்தைக் கதையில் காணலாம். இத்தகைய வீரச் செயல்களினால் அவர் பின்னர் மகாராஜா பதவியைக்கூட அடைகின்றார். நகைச்சுவை நிரம்பிவழிய எளிய நடையில் தமிழில் பிங்கலனின் கதை எழுதப்பட்டுள்ளது. காட்டில் நடக்கும் இக்கதையைப் படிக்கும் சிறார்களையும் காட்டுக்கே அழைத்துச் சென்று விடுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23523).

**14538**

**மந்திரவாதியின் தலையைத் தாக்கிய மாயச்செம்பு.** எம்.பாலகிருஷ்ணன். கொழும்பு 10: Books Prishanmi, 33-B, N.H.S.Siri Dharma Mawathe, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (கொழும்பு: ஏ.எஸ். டெஸ்க் டொப் பப்ளிஷிங் சென்டர்).

(2), 22 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 30.00, அளவு: 25x18.5 சமீ.

சிறுவர்களுக்கு உகந்த வகையில் விறுவிறுப்பாக எழுதப்பட்டுள்ள இந் நெடுங்கதை ஆத்தர் தான் செய்திருப்பான், ஆத்தரும் கோயில் மணியும், ஆத்தரின் படபடக்கும் கடிதவுறை, வேலியோரம் நடமாடும் தீச்சுடர், மாயமாய் மறைந்த சூனியச் செம்பு, மந்திரவாதியின் தலையைத் தாக்கிய மாயச்செம்பு ஆகிய ஆறு அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 29173).

## 801. (7) சிறுவர்க்கான பலவின நூல்கள்

**14539**

**சின்னஞ்சிறிய பூக்கள்-5.** உதவி. நண்பர்கள் (தொகுப்பாசிரியர்கள்). ஜேர்மனி: Uthawi.Media, Postfach 1226, 59884, Eslohe, 1வது பதிப்பு, நவம்பர் 2015. (கொழும்பு: Crescendoo Link).

(4), 78 பக்கம், ஓவியங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

சின்னஞ்சிறிய பூக்கள் என்ற தொடரில் ஜேர்மன், உதவி டொட் நெட் இணையத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிச் சிறுவர்களான சின்னஞ்சிறியோரின் ஆக்கங்களை தொகுத்து உதவி இணையத்தள நண்பர்களால் 2011 முதல் அவ்வப்போது நான்கு பாகங்கள் வெளியிடப்பட்டன. சின்னஞ்சிறிய பூக்கள்-1, கதை சொல்லிகளின் தொகுப்பாக ஒக்டோபர் 2011இல் மட்டக்களப்பு சண் அச்சகத்தினரால் அச்சிடப்பட்டு 36 பக்கங்களில் வெளியானது. இவ்வாக்கங்கள் மழலைகளின் பேச்சுவடிவிலேயே இடம்பெற்றுள்ளன.

**14540**

**தமிழிசைக்கு புத்துயிர் அளித்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார்.** உடுவை எஸ்.தில்லை நடராஜா. கொழும்பு 4: இந்து சமய அறநெறிக் கல்விப் பிரிவு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு, 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 6: விகடன் அச்சகம், 541/2C, காலி வீதி).

71 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-955-9233-52-7.

இயல், இசை, நாடகம் என முத்தமிழிலும் வித்தகராக, தமிழ் மொழியோடு ஆங்கிலம், சமஸ்கிருதம், சிங்களம், லத்தீன் எனப் பல மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவராக மதுரைத் தமிழ்ப் பண்டிதராக இந்தியாவிலும்

இலங்கையிலும் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியராக நியமனம் பெற்ற பெருமைக்குரியவர் சுவாமி விபுலாநந்தர். சிறுவர்களுக்கேற்ற வகையில் எளிமையான தமிழில் இப்பெரியாரைப் பற்றி இந்நூல் கூறுகின்றது. சுவாமி விபுலாநந்த அடிகளாரின் பிறப்பு, சுவாமி விபுலாநந்த அடிகளாரின் ஆரம்ப நாட்கள், சுவாமி விபுலாநந்த அடிகளாரின் கல்விச் சிந்தனைகளும் கல்விப் பணிகளும், சுவாமி விபுலாநந்த அடிகளாரின் பன்மொழி ஆற்றல்கள் மற்றும் பல்துறை ஆளுமைகள், சுவாமி விபுலாநந்த அடிகளாரின் தமிழ்ப் பணிகள், சுவாமி விபுலாநந்த அடிகளாரின் சமூகப் பணிகள் மற்றும் சமயப் பணிகள், சுவாமி விபுலாநந்த அடிகளாரின் கலை இலக்கியப் பணிகள், சுவாமி விபுலாநந்த அடிகளாரின் எழுத்தாக்கங்கள், சுவாமி விபுலாநந்த அடிகளாரின் வாழ்வில் தமிழிசை மற்றும் தமிழிசைக் கருவிகள், சுவாமி விபுலாநந்த அடிகளாரின் மதங்க சூளாமணி, சுவாமி விபுலாநந்த அடிகளாரின் யாழ்நூல், சுவாமி விபுலாநந்த அடிகளார் தொடர்பான தகவல்கள் சில, சுவாமி விபுலாநந்த அடிகளார் நினைவு நிகழ்வுகள் சில ஆகிய 13 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

### 14541

**நீலமும் பசுமையும் நிறைந்த நல்ல உலகம்.** உடுவை எஸ்.தில்லை நடராஜா. கொழும்பு 4: இந்துப் பண்பாட்டு நிதியம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு, 248, 1/1 காலி வீதி, 1வது பதிப்பு, மார்கழி 2016. (கொழும்பு 6: விகடன் அச்சகம், 541/2C, காலி வீதி).

vi, 138 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 400., அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-955-9233-44-2.

இயற்கையை நேசித்து சமாதானத்தை மதித்து மனிதப் பண்புகளை உருவாக்கும் வகையில் வளர் இளம் பருவத்தினருக்கு அறிவூட்டும் ஆக்கங்களை உள்ளடக்கிய நூல். நீலமும் பசுமையும் நிறைந்த நல்ல உலகம், அந்திநேர நிலவொளியில் அழகான கடலோரம், அப்பனின் வீட்டுத் தோட்டம், ஒவ்வொரு துளி தண்ணீரும் பெறுமதியானது, வளங்களைப் பயன்படுத்தலும் நல்ல பழக்கங்களை வழக்கப்படுத்தலும், மரங்களை நாட்டி வளர்ப்பதால் மக்கள் பெறும் பயன்கள் பலப்பல, ஆடிப்பாடிப் பேசிக் கதைத்து ஆனந்தம் தரும் உயிரினங்கள், மனங்களைக் கவர்ந்து உடலைக் குளிரவைக்கும் எழிலான மலையகம், வளங்கள் நிறைந்துள்ள வனாந்தரக் காடுகள், அழகான ஊரில் ஆனந்தமான வாழ்வு, காட்டில் வாழும் வானில் பறக்கும் தரையில் ஊரும் நீரில் நீந்தும் உயிரினங்கள் நல்ல நண்பர்கள், உலகம் முழுவதும் சமாதானமும் அமைதியும் ஆகிய 12 கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. ஒவ்வொரு கட்டுரையின் தொடக்கத்திலும் சிந்தனையைத் தூண்டும் பொன்மொழிகள் ஒவ்வொன்றும், கட்டுரைகளின் இறுதியில் அக்கட்டுரை தொடர்பான வினாக்களும் இடம்பெற்றுள்ளன.

## 891.48 சிங்கள இலக்கியம்

### 14542

**மொழி வேலி கடந்து: நவீன சிங்கள இலக்கியங்கள் பற்றிய ஒரு பார்வை.** மேமன்கவி. *கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661,663,675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2013. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).*

xxv, *26-135 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *978-955-30-4591-1.*

*ஹேமச்சந்திர பத்திரனவின் முன்னுரையுடனும், நூலாசிரியர் மேமன்கவியின் "மொழி வேலி கடந்த இலக்கியங்கள்: என் பார்வையில்" என்ற என்னுரையுடனும் விரியும் இந்நூலில், மொழிவேலி கடந்து மனிதர்களைக் காட்டும் "வலை", ஒரு கதை சொல்லியின் கதை: உபாலி லீலாரத்னாவின் "விடைபெற்ற வசந்தம்", சிட்னியின் படைப்புலகம், யதார்த்தத்தின் பதிவுகள் "கமல் பெரேராவின் கதைகள்", பின்காலனிய மனோபாவமும் சுற்றுப்புறச் சூழலும் ரஞ்சித் தர்மகீர்த்தியின் "சங்கமம்" நாவலின் ஊடாக, பின் காலனிய ராஜாவின் கதை: டெனிசன் பெரேராவின் "மலையுச்சி மாளிகையில்", வண. பிதா* W.A.T.*பீற்றரின் "டிங்கி" ஜீவகாருண்யத்தின் அலைச்சல், அனுலா டீ சில்வாவின் "நாம் நண்பர்கள்- அபி யாலுவோ" தேசத்திற்குத் தேவையான தருணம், தெனகம சிரிவர்த்தன "நண்பர்கள் (மித்துரோ)" ஆத்ம சுத்தம் எதிர்கொள்ளும் நெருக்கடி, கே.சுனில் சாந்தவின் "சுடுமணல்" பன்முக அனுபவங்கள் உலாவும் வெளி, ஜயத்திலக்க கம்மல்லவீரவின் "பொய் சொல்ல வேண்டாம்" வாழ்வியல் உண்மைகளின் ஆவணம், குணசேன விதானவின் "பாலம்" இனப்பிரச்சினைக்கான தீர்வின் வாழ்வியல் மார்க்கம் ஆகிய இலக்கியக் கட்டுரைகளை இந்நூலில் காணமுடிகின்றது.*

## 894.8(01) தமிழ் இலக்கியப் பாடநூல்கள்

### 14543

**இலக்கியத் தொகுப்பு: க.பொத.(உ.த.) தமிழ் 1.** தேசிய கல்வி நிறுவகத் தமிழ் மொழித்துறை. *கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுறுபாய, பத்தரமுல்ல, 1வது பதிப்பு, 1997. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).*

vii, *242 பக்கம், விலை: ரூபா 65.00, அளவு: 21*x*14 சமீ.*

*கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணத் தேர்வுக்கான தமிழ் இலக்கிய பாடத்திட்டத்துக்கு அமைவாக 1997ஆம் ஆண்டும் அதன் பின்னரும் நடைபெறும் உயர்தர பரீட்சைகளுக்குப் பயன்படுத்தக்கூடியதாக எழுதப்பட்டுள்ள பாடநூல். இத்தொகுப்பின் ஆக்கத்திற்கு மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தின் தமிழ் மொழித் துறையினர் இயங்கியுள்ளனர். தெரிவுசெய்யப்பட்ட செய்யுள்கள், திருக்குறள்-ஒழிபியல், கம்பராமாயணம், உரைநடைத் தொகுப்பு, புனைகதை,*

பாரதி பாடல்கள் ஆகிய ஆறு பிரிவுகளின்கீழ் இந்நூல் பாடங்களை உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 34747).

### 14544

**கம்பராமாயணம் சுந்தரகாண்டம்: பகுதி 1-காட்சிப் படலம் (விளக்கவுரையுடன்).** செ.நடராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 4வது பதிப்பு, மாசி 1981. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63 B.A. தம்பி ஒழுங்கை).

(4), 1-97 பக்கம், விலை: ரூபா 6.75, அளவு: 20x14 சமீ.

இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ள காட்சிப் படலம், க.பொ.த.ப. சாதாரணதரம், தமிழ்மொழி "அ" பாடத்திட்டத்திற்கேற்ற வகையில் தயாரிக்கப்பட்டது. இப்பாடற் பகுதிக்குக் கொண்டுகூட்டு (எண்வகைப் பொருள்கோளுள் செய்யுளின் அடிகள் பலவற்றிலும் உள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்றவிடத்தில் எடுத்துக்கூட்டிப் பொருள்கொள்ளுமுறை), பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை, விஷயத் தொகுப்பு என்பன அமைய மாணவர்கள் இலகுவில் விளங்கக்கூடியவகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மேலும் செய்யுள் நயமும், உவமான உவமேய விளக்கங்களும் விரிவாகத் தரப்பட்டுள்ளன. பொருள்நிலைக்குப் பொருத்தமாக விடயங்களைத் தொகுத்து ஏற்ற தலையங்கங்கள் தந்து பண்டிதர் செ.நடராஜா இந்நூலை எழுதியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14861).

### 14545

**கம்பராமாயணம் யுத்தகாண்டம் -கும்பகருணன் வதைப்படலம் (முதல் 170 செய்யுள்கள்).** பா.பரமேசுவரி (உரையாசிரியர்). கொழும்பு: கொழும்பு அப்போத்திக்கரிஸ் கம்பெனி லிமிற்றெட், குமார வீதி, கோட்டை, 1வது பதிப்பு, பெப்ரவரி 1956. (கொழும்பு: அப்போத்திக்கரிஸ் கம்பெனி லிமிட்டெட், குமார வீதி, கோட்டை).

(2), 152 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.

யுத்தகாண்டம் இராமபிரான் தம் பகைவனான இராவணனைப் போரிற் கொன்று வென்றதைக் கூறுவது. யுத்தத்தைப் பற்றிக் கூறும் காண்டம் இது.

### 14546

**சிறுகதைத் திரட்டு: தரம் 12-13.** நித்தியானந்தன், எம்.பொன்மீரா, க.கருப்பு (தொகுப்பாசிரியர்கள்). தெகிவளை: அகவெளி வெளியீட்டகம், 22-1/3, அப்பன்சோ மாவத்தை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(4), 164 பக்கம், விலை: ரூபா 280.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1641-15-3.

அகவிழி குழுவினர், கல்வித் திணைக்களத்தினால் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்காக விதித்துரைக்கப்பட்ட அனைத்துப் பாடப்பகுதிகளையும் விரிவாகக் கற்கும் செயற்பாட்டில் மாணவர்களை உள்ளீர்ப்பதற்கு இலகுவான வழியில் உப பாடநூல்களை தயாரித்து வெளியிட்டு வருகின்றனர். அவ்வகையில் இது 2009 முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான சிறுகதைகள் தொடர்பான திரட்டு நூலாகும். இதனூடாக முக்கியமான ஆறு சிறுகதைகளைப் படித்தறியவும், சிறுகதைகளின் அமைப்புகள், பண்புகள், பரிமாணம் என்பவற்றை விளங்கிக்கொள்ளவும் சிறுகதைகளை எழுதுவதற்கான வழிகாட்டுதலை பெறவும் குறிப்பிட்ட சிறுகதை ஆசிரியர்கள் பற்றிய அறிமுகக் குறிப்பை தெரிந்துகொள்ளவும் சிறுகதைகளை விமர்சனப் பார்வையோடு நோக்கும் பயிற்சியைப் பெறவும், குறிப்பிட்ட கதைகளிலிருந்து தொகுக்கப்பட்ட வினா-விடைப் பயிற்சிகளை வாசிக்கவும். பயிற்சிப் பட்டறையில் ஈடுபடவும் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகின்றது. அவ்வகையில் இந்நூல் சிறுகதை என்றால் என்ன? (ஜெயமோகன்), புதுமைப்பித்தனும் தொன்ம மரபும் (சாபவிமோசனம் கதையை முன்வைத்து), சாபவிமோசனம், வெறும் சோற்றுக்கே வந்தது, தமிழ் சிறுகதை வரலாற்றில் ஜெயகாந்தன், யுகசந்தி, தாய், ஒரு கூடைக் கொழுந்து, ஒளி ஆகிய ஒன்பது அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 47405).

## 14547

**தேர்ந்த சிறுகதைகளும் நாகம்மாள் நாவலும் ஒரு நோக்கு.** தம்பிஐயா தேவதாஸ். கொழும்பு 13: வித்தியாதீபம் பதிப்பகம், 90/9, புதுச்செட்டித் தெரு, 1வது பதிப்பு, ஜனவரி 1998. (கொழும்பு 12: Sharp Graphics Limited, D.G.2, Central Road).

vi, 56 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 20x13.5 சமீ.

ஆசிரியர் தம்பிஐயா தேவதாஸ் இந்நூலில் புதுமைப்பித்தன் எழுதிய "ஒரு நாள் கழிந்தது", கு.ப.ராஜகோபாலன் எழுதிய "கனகாம்பரம்", கு.அழகிரிசாமி எழுதிய "தவப்பயன்", இலங்கையர்கோன் எழுதிய "வெள்ளிப் பாதசரம்", சி.வைத்திலிங்கம் எழுதிய "பாற்கஞ்சி" ஆகிய சிறுகதைகள் பற்றியும், ஆர்.சண்முகசுந்தரம் எழுதிய "நாகம்மாள்" நாவல் பற்றியும் தனது திறனாய்வுக் கருத்துக்களை வழங்கியிருக்கிறார். இந்நூலாசிரியர் கொழும்பு, கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றிய வேளையில் க.பொ.த உயர்தர தமிழ்மொழி மாணவர்களின் பயன்பாட்டுக்கென எழுதியிருந்த நூல் இதுவாகும். க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக புனைகதை இலக்கியங்கள், பாடவிதானக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு பாடவிதானத்தில் சேர்க்கப்பட்டுள்ளமை தமிழ்ப் பாடவிதானத்தில் முக்கிய திருப்பமாகும். அவ்வகையில் தமிழகப் படைப்பாளியான "நாகம்மாள்" நாவல் பாடவிதானத்தின் முக்கிய இடத்தினை வகித்துள்ளது. இந்நாவல் முழுவதும் கிராமிய மணம் கமழ்ந்த, இலக்கியப் பிரவாகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. கொங்குநாட்டுக் கிராமியமக்கள் வாழ்க்கையை பேச்சுத் தமிழில் பல நாவல்களில் பதித்த பெருமைக்குரியவர்

*இந்திய எழுத்தாளர் ஆர்.ஷண்முகசுந்தரம். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24387).*

### 14548

**மகாபாரதம் சபாபருவ மூலமும் புத்துரையும்.** *வில்லிபுத்தூராழ்வார் (மூலம்), வ.குமாரசுவாமிப் புலவர் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: க.வேற்பிள்ளை, வண்ணார்பண்ணை மேற்கு, 1வது பதிப்பு, மார்கழி 1899. (யாழ்ப்பாணம்: க.வேற்பிள்ளை, விவேகானந்த யந்திரசாலை, வண்ணார்பண்ணை மேற்கு).*

*(5), 232 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 24.5x16 சமீ.*

*ஆறுமுக நாவலருக்கும், சைவசிரோன்மணி ந.ச.பொன்னம்பலபிள்ளையவர்களுக்கும், உடுப்பிட்டி சிவசம்புப் புலவரவர்களுக்கும் மாணாக்கரும், அனந்தபுரத்து மகாராஜா காலீஜில் தமிழ்-சமஸ்கிருத பண்டிதர் கணபதிப்பிள்ளையவர்களுக்குச் சகோதரரும், மாணாக்கருமாகிய, யாழ்ப்பாணம் பருத்தித்துறை சார்ந்த புலோலி ஸ்ரீ வ. குமாரசுவாமிப் புலவரவர்கள் செய்த புத்துரையுடன் கூடியதாக வெளிவந்துள்ள நூல் இது. சபாபருவம், இராசசூயச் சருக்கம், சூது போர்ச் சருக்கம் ஆகிய மூன்று பிரிவுகளில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 314).*

## 894.8 (05) இலக்கிய அமைப்புகளின்/சஞ்சிகைகளின் சிறப்பிதழ்கள்

### 14549

**சமாதானம்: தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கான இலக்கியப் போட்டி எழுத்தாக்கங்கள் 2002.** *தொகுப்புக் குழு, சிபில் வெத்தசிங்க (சித்திரங்கள்). கொழும்பு: ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பகம், 1வது பதிப்பு, 2002. (மஹரகம: தரஞ்ஜீ பிரின்டர்ஸ், 506, ஹைலெவல் வீதி, நாவின்ன).*

*(9), 10-96 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ.,* ISBN: *955-9393-03-0.*

*2002ஆம் ஆண்டு தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்காக நடத்தப்பெற்ற இலக்கியப் போட்டிகளில் பங்குபெற்றோரினது படைப்பாக்கங்களை உள்ளடக்கியதாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39177).*

### 14550

**திருக்கோணமலைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முதலாண்டு மலர்-ஆனி 1961.** *மஹாகவி, பாலேஸ்வரி, ஈழவாணன் (தொகுப்பாசிரியர்கள்). திருக்கோணமலை: திருக்கோணமலைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், 1வது பதிப்பு, ஆனி 1961. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(9), 10-96 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 21.5x14 சமீ.*

இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகளின் பல்வேறு சிறந்த படைப்பாக்கங்களுடன் இந்த முதலாம் ஆண்டு மலர் வெளிவந்துள்ளது. கனக.செந்திநாதன் (படித்திருக்கிறீர்களா?-கட்டுரை), வை.சோமாஸ்கந்தர் (திருக்கோணமலை தந்த தமிழ்ச் சான்றோர்கள்-கட்டுரை), உதயணன் (நிறைவு-சிறுகதை), நவம் (அருகில் வந்தாள் உருகி நின்றாள்- சிறுகதை), பவானி (பிரார்த்தனை-சிறுகதை), ஆ.பொன்னுத்துரை (உண்மைக்கு ஒருத்தி-சிறுகதை), முருகையன் (உலாவி வா-கவிதை), அ.ந.கந்தசாமி (நான் செய் நித்திலம்-கவிதை), கதிரேசன் (காட்டுவழி-கவிதை), அமுது (காலன் கதை-கவிதை), நவாலியூர் சோ.நடராசன் (நவீன சூர்ப்பனகை வருகை-கவிதை), திமிலைத் துமிலன் (நாளை பிறப்பது நம்முலகு-கவிதை), செ.வேலாயுதபிள்ளை (விதி ஒறுத்த மாந்தர் -கவிதை), மா.பார்வதிநாதசிவம் (அறம் கூறும் வாழ்வு-கவிதை), ஜி.எஸ்.யோசேப் (அமரனாவாய்-கவிதை), சோமலிங்கம் (வாய்க்காரி-கவிதை), அ.சண்முகதாசன் (நினைவு போதும் -கவிதை), கா.சி.ஆனந்தன் (பிறை நிலவு-கவிதை), பத்மலோசனி முத்துக்குமாரு (இலக்கிய நிதி-கவிதை), நீலாவணன் (இன்றுனக்கும் சம்பளமா? -கவிதை), தனலட்சுமி சுப்பிரமணியம் (கிளிப்பாட்டு-கவிதை), இராஜபாரதி (மூட்டைவிடு தூது-கவிதை), புரட்சிக் கமால் (நாளை வருவான் ஒரு மனிதன் -கவிதை), பரமஹம்சதாசன் (விண்ணமுதம் தருவாள் -கவிதை), அண்ணல் (சிற்றிடையை என் கரத்துள் சேர்ப்பாள் -கவிதை), ஈழவாணன் (கல்லாகிப் போ-கவிதை), மஹாகவி (கண்களும் கால்களும் -கவிதை), ரீ.பாக்கியநாயகம் (பார்த்தல் பலவிதம் -கட்டுரை), பத்மாசனி ஏரம்பு (கைகூடியது- சிறுகதை), தங்கன் (ஆசையினாலே மனம் - சிறுகதை), வி.சிங்காரவேலன் (நேர்மை- சிறுகதை), பா.பாலேஸ்வரி (தண்டனை- சிறுகதை) ஆகிய படைப்பாக்கங்களை இம்மலர் உள்ளடக்குகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 43612).

## 14551

**தினகரன் தமிழ்விழா சிறப்பு மலர் 1960.** மலர்க்குழு. கொழும்பு: தினகரன் வெளியீடு, அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்டெட், 1வது பதிப்பு, ஏப்ரல் 1960. (கொழும்பு: லேக் ஹவுஸ் அச்சகம், மக்கலம் வீதி).

144 பக்கம், புகைப்படங்கள், ஓவியங்கள், விலை: ரூபா 1.25, அளவு: 25.5x19.5 சமீ.

சமர்ப்பணம், வெல்க தமிழ் வெல்க தமிழர், முருக வழிபாடு (கே.கணபதிப்பிள்ளை), மொழி ஆராய்ச்சி (தெ.பொ.மீனாட்சிசுந்தம்பிள்ளை), ஈழத்திலே தமிழ்க்கல்வியும் பல்கலைக்கழகமும் (சு.வித்தியானந்தன்), சைவம் வளர வழிகள், கலங்குவதேன் தமிழரசி (சாரண பாஸ்கரன்), எண்ணுங்கால் (திருச்சிற்றம்பலக் கவிராயர்), அனாதை (இலங்கையர்கோன்), முந்து தமிழுக்கு முஸ்லிம்கள் தொண்டு (மதுரை. ம.கா.மு.காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர்), நாடகக் கலை (ஔவை. டி.கே.சண்முகம்), காக்கை உகக்கும் பிணம் (வி.செல்வநாயகம்), பதினேழாம் நூற்றாண்டில் இந்திய பத்திரிகைகள் (ஆர்.பி.எம்.கனி), அபேதவாதி (வ.அ. இராசரத்தினம்), சமூகமும் இலக்கியமும் (வ.மகாலிங்கம்), தமிழ் வளர்ச்சியில் இஸ்லாம் (ஐ.எல்.எம்.மஷ்ஹூர்), மட்டக்களப்பு வாவியில் பாடும் மீன்கள்

(செ.கணபதிப்பிள்ளை), மணமக்களும் குடிமக்களும் (வெள்ளவத்தை மு.இராமலிங்கம்), புழுதிக்குள் (முருகையன்), முஸ்லிம் பண்பாடு (முஹம்மது சமீம்), ஒன்றும் நினைவில்லையாம் (செந்தாமரை), தமிழ் விழாத் தூது (ஆ.சி.நாத பண்டிதர்), மட்டக்களப்பு நாட்டுக் கூத்துகள் (பண்டிதர் வி.சீ.கந்தையா), இலட்சியமுள்ளது இலக்கியம் (புலவர்மணி ஏ.பெரியதம்பிள்ளை), பிறப்பு (நீலாவணன்), பிஞ்சுக்கீதம் (குருபரன்), தமிழுணர்ச்சி (இளங்கீரன்), இலக்கியமும் மலைநாட்டுத் தமிழரும் (சி.வி.வேலுப்பிள்ளை), நானூறு தொல்லை நமக்கு (மஹாகவி), ஊரறியாச் செய்தி (அப்துஸ் ஸமது), ஈழத்து முஸ்லிம்களின் தமிழ்த் தொண்டு (எம்.எம்.உவைஸ்), மூதுரை முத்துக்கள் (கி.ஆ.பெ.விசுவநாதம்), சென்ற இருபது ஆண்டுகளில் நம் நாட்டுக் கல்வித் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் (கி.லக்ஷ்மணன்), அக்கா (அ.முத்துலிங்கம்), நாமும் நம் ஏடும், ஆறுமுக நாவலர் வசன நடை (கனக. செந்திநாதன்), ஏன் இந்தத் தமிழ் உணர்ச்சி? (க.கைசாபதி), முஸ்லிம் மக்களின் வரலாறு (ஜே.எம்.எம்.றாஜி), வெவ்வேறு நூற்றாண்டுகளின் உடையலங்காரங்கள் (சிங்கர்), தினை விதைக்காதவர்கள் (எஸ்.பொன்னுத்துரை), அரசியலிலக்கணம் ஆகிய படைப்பாக்கங்கள் இச்சிறப்பு மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25001).

### 14552

**மருதம் கலாசார விழா சிறப்பு மலர். 2005.** மலர் வெளியீட்டுக் குழு. வெல்லாவெளி: கலாசாரப் பேரவை, பிரதேசச் செயலகம், போரதீவுப் பற்று, 1வது பதிப்பு, 2005. (களுவாஞ்சிக்குடி: பப்ளிக்கேஷன் அச்சகம், பட்டிருப்பு).

xii, 63 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

சமூகப் பிரமுகர்கள், அரச நிர்வாகிகளின் வாழ்த்துச் செய்திகளுடன் வெளிவந்துள்ள இம்மலரில் தமிழ்மொழி வாழ்த்து, போரதீவுப்பற்று கலாசார கீதம் (க.நல்லரெத்தினம்), வெல்லாவெளியில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ முத்துமாரியம்பாள் (மு. பேரின்பராசா), போரதீவுப் பற்று பிரதேச வளங்களும் வளங்களினூடான வெளிப்பாடும் (சுந்தரேசன்), சுனாமி (கடற்கோள்) உருவாக்கமும் அதன் தாக்கமும் (த.விவேகானந்தம்), காலம் என்பது-கவிதை (த.சேரலாதன்), சமகாலத்தில் போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் ஒரு நோக்கு (ச.கணேசமூர்த்தி), எயிட்ஸ் இடம் பெயர்வு-கவிதை (சாம்பகீ), எமது பிரதேசத்தில் மறைந்து செல்லும் கலைகளும் ஊக்குவிக்க மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களும் (வே.ஆ.புட்கரன்), ஆயகலைகள் அறுபத்திநான்கும் இவை, மட்டக்களப்பின் மாண்புமிகு மரபுக் கூத்துக்கள்:வடமோடி-தென்மோடி (க.தருமரெத்தினம்), நீங்கள் விரும்பினால், இயற்கையின் சீற்றம்-கவிதை (க. வினு), மனித குலத்துக்கு கிடைத்த மாபெரும் அருங்கொடை (கே.ஜெயராஜா), இன்றைய அரசியலும் இலங்கையும் (ஆர்.கோபாலபிள்ளை), போரதீவுப் பற்றில் வேள்ட் விஷன் (பி.விபாஞ்சனி), சிறுவர்களின் உலகை அவர்களுக்கே பெற்றுக்

கொடுப்போம்- கவிதை (செல்வி. சோ.சோதிமலர்), கௌரவிக்கப்படும் கலைஞர்கள், கலாசார விழா போட்டி முடிவுகள் ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37386).

## 14553

**ஜீவநதி தை 2011: சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு-2011.** க.பரணீதரன் (பிரதம ஆசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, தை 2011. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

72 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 24.5x17.5 சமீ.

"ஜீவநதி" யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் கலை இலக்கிய மாத இதழ் ஆகும். 2007ஆம் ஆண்டு ஆவணி மாதம் இரு மாத இதழாக ஆரம்பிக்கப்பட்டு 2010 தை மாதத்திலிருந்து மாத இதழாக தொடர்ச்சியாக வெளிவருகின்றது. மூத்த எழுத்தாளர்களினதும் இளைய தலைமுறையினரதும் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், கலை இலக்கிய நிகழ்வுகள், அரங்குசார் ஆய்வுக் குறிப்புகள், நூல்மதிப்புரைகள், நூல் அறிமுகங்கள் முதலிய பல உள்ளடக்கங்களைக் கொண்டு பிரசுரமாகின்றது. தை 2011இற்குரிய 28ஆவது இதழ் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டையொட்டி சிறப்பிதழாக வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதழில் தமிழில் சிறுவர் இலக்கிய வளர்ச்சி (சபா.ஜெயராஜா), இலங்கையில் தேசியம்: மாறிவரும் சிந்தனைகள்- ஈழத்துத் தமிழ்க் கவிதைகளினூடான ஒரு தேடல் (ம.இரகுநாதன்), சங்க இலக்கியங்களை எவ்வாறு அணுகுவது (அம்மன்கிளி முருகதாஸ்), சைவ சமய இலக்கிய வரலாறு ஒரு பார்வை (க.அருந்தவராஜா), தெணியான் அவர்களுடனான நேர்காணல் (க.பரணீதரன்), நீரும் பண்பாடும் (செல்லையா கிருஷ்ணராஜா), தமிழ் நாவல் வரலாற்றில் அசன்பே சரித்திரம்: சில அவதானிப்புகள் (செ.யோகராசா), பயிலரங்க படைப்பு இலக்கியம்: அனுபவப் பகிர்விற்கான மகாநாடு (லெ.முருகபூபதி), நிறம் மாறும் உயிருள்ள சிற்பம் (க.ரதிதரன்), கவிஞர் சு.வில்வரத்தினத்தின் கவிதைகள்: ஓர் ஆய்வு நோக்கு (ஈஸ்வரநாதபிள்ளை குமரன்), மனதைக் கவரும் "மைனா"- தமிழ்த் திரையுலகில் ஆரோக்கியமான மாற்றங்கள் (ச.முருகானந்தன்), சிங்கள நாவல் இலக்கியத்தின் தோற்றமும் அதன் சமூகப் பின்னணியும் (சாமிநாதன் விமல்), ஜெயகாந்தன் பரிச்சயமும் பணிவான வந்தனங்களும் (கெக்கிராவ ஸஹானா) ஆகிய படைப்பாக்கங்களும் வழமையான கதை, கவிதைகள், தொடர்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொதுசன நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் A 647).

## 14554

**ஜீவநதி ஆடி 2011: உளவியல் சிறப்பிதழ்.** க.பரணீதரன் (பிரதம ஆசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி,

அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஆடி 2011. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

48 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 60., அளவு: 25.5x18 சமீ.

"ஜீவநதி" யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் கலை இலக்கிய மாத இதழ் ஆகும். 2007ஆம் ஆண்டு ஆவணி மாதம் இரு மாத இதழாக ஆரம்பிக்கப்பட்டு 2010 தை மாதத்திலிருந்து மாத இதழாக தொடர்ச்சியாக வெளிவருகின்றது. இச்சஞ்சிகையின் 34ஆவது இதழில், வெலிப்பன்னை அத்தாஸ், வெலிகம ரிம்ஸாமுகம்மத், அல்வாயூர் சி.சிவநேசன், அபிஷேகன், இ.ஜீவகாருண்யன், தியத்தலாவ எச்.எவ்.ரிஸ்னா, ஈழத்துக்கவி, நாச்சியாதீவு பர்வீன், த.ஜெயசீலன், எல்.வஸீம் அக்ரம் ஆகியொர் எழுதிய கவிதைகளும், சபா.ஜெயராசா (அமைதியின் சுவாலை), இ.இராஜேஸ்கண்ணன் (இரகசியமாய் கொல்லும் இருள்), கே.எஸ். சிவகுமாரன் (உறைவிடம் மேலிடம்), ச.முருகானந்தன் (விலகிடும் திரைகள்) ஆகியோரின் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன. மேலும் இவ்வுளவியல் சிறப்பிதழில் உறவுப் பிரச்சினைகளுக்கான மனக் காரணிகள் (இராசேந்திரம் ஸ்ரலின்), தற்கொலை ஓர் உள சமூக நோக்கு (கு.கௌதமன்), வன்முறையற்ற தொடர்பாடல் (வி.மேனகா), குற்ற உளவியல் பற்றிய எண்ணக்கருக்கள் (க.பரணீதரன்), சிகிச்சை உளவியல் சில குறிப்புக்கள் (எஸ்.பார்வதி), விமர்சனங்களை எதிர்கொள்வது எப்படி (எம்.கே.முருகானந்தன்), ஆளுமை விருத்திக்கு வழிகாட்டும் சுயபிரதிமை (ப.தனபாலன்), எனது இலக்கியத் தடம் (தி.ஞானசேகரன்), கட்டிளமைப் பருவம் (ம.சுதர்சன்), முதுமை பருவத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் (அர்ச்சுனன்), மட்டு மீறிய உடற்பருமன் (எ.தர்மராஜா) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொதுசன நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் P 529).

## 14555

**ஜீவநதி ஐப்பசி 2011: கே.எஸ்.சிவகுமாரனின் பவளவிழாச் சிறப்பிதழ் 2011.** க.பரணீதரன் (பிரதம ஆசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஒப்டோபர் 2011. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

68 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 24x17.5 சமீ.

"ஜீவநதி" யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் கலை இலக்கிய மாத இதழ் ஆகும். 2007ஆம் ஆண்டு ஆவணி மாதம் இரு மாத இதழாக ஆரம்பிக்கப்பட்டு 2010 தை மாதத்திலிருந்து மாத இதழாக தொடர்ச்சியாக வெளிவருகின்றது. இச்சஞ்சிகையின் 37ஆவது இதழில், பவளவிழா காணும் கே. எஸ். சிவகுமாரன் (க.பரணீதரன்), கே.எஸ். சிவகுமாரனின் எழுத்துக்கள் (சோ.சந்திரசேகரம்), கே.எஸ்.சிவகுமாரன் சில குறிப்புகள் (எம்.ஏ.நுஃமான்), இலக்கியத் திறவுகோல் கே. எஸ். சிவகுமாரன் (ஏ. இக்பால்), நன்றியுடன் நினைவுகூர்தல் (அ.யேசுராசா), பதிவு இலக்கியத்தின் முன்னோடி (அந்தனி ஜீவா), கே.எஸ்.சிவகுமாரனின்

படைப்புலகம் (மேமன்கவி), ஒலிபரப்பாளர் கே.எஸ்.சிவகுமாரன் (தம்பிஜயா தேவதாஸ்), பன்முக ஆளுமை கொண்ட கே.எஸ் சிவகுமாரன் எம்மவருக்குக் கிடைத்தற்கரிய பொக்கிஷம் (எஸ்.விஸ்வநாதன்), தாழ்வு மனப்பான்மை (கே.எஸ். சிவகுமாரன்), கே.எஸ்.சிவகுமாரனின் நான்கு கவிதைகள், பல்துறை வல்லுநர் கே.எஸ்.சிவகுமாரன் (சாந்தன்), கே.எஸ்.சிவகுமாரன் எனும் பன்முக ஆளுமை (நாச்சியாதீவு பர்வீன்), உற்சாகத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும் கே.எஸ். சிவகுமாரன் (எஸ்.தில்லைநாதன்), அநுராதபுர பிரதேச இலக்கிய நேசமும் கே.எஸ்.சிவகுமாரன் அவர்களும் (வஸீம் அக்ரம்), கே.எஸ்.சிவகுமாரன் ஒரு பன்முக ஆளுமை (வ.மகேஸ்வரன்), கலை இலக்கிய உலகில் கே.எஸ்.சிவகுமாரன் (மு.சிவலிங்கம்), கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் (சபா. ஜெயராசா), நடுநிலையாளர் (வெலிப்பன்னை அத்தாஸ்), கே.எஸ்.சிவகுமாரனும் ஈழத்து விமர்சன வளர்ச்சியும் (செ.யோகராசா), சிவகுமாரன் என்னும் தனித்துவமான ஆளுமை (தெணியான்), கைலாயர் செல்லநயினார் மகனின் இன்றைய இடம் நாளை வெற்றிடம்? (மானா மக்கீன்), இளம்குமரன் கே.எஸ்.சிவகுமாரன் (வதிரி. சி.ரவீந்திரன்), அகவை எழுபைத்தைந்தில் கால் பதிக்கும் கே.எஸ்.சிவகுமாரன் (ஏ.என்.கிருஷ்ணவேணி), பவளவிழா காணும் ஒலிபரப்பாளர் கே.எஸ்.சிவகுமாரன் (ஊரெழு அ.கனகசூரியர்), இருமை (கே.எஸ்.சிவகுமாரன்), விமர்சனத்துறை ஜாம்பவான் கே.எஸ்.சிவகுமாரன் (அன்புமணி), கலா விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரனும் கலை இலக்கிய ஈடுபாடுகளும் ஓர் அவதானிப்பு (கனகசபாபதி நாகேஸ்வரன்), இலையுதிர்காலமும் கதிர் பொறுக்கும் பெண்ணும் புதுக்கவிதைப் போராளியும் (சண்முகம் சிவலிங்கம்), பவளவிழா கண்டு வாழ்க (புலோலியூர் வேல். நந்தன்), விமர்சனத்துறையில் கே.எஸ்.சிவகுமாரனின் பங்களிப்பு (க.தங்கேஸ்வரி), கே.எஸ்.சிவகுமாரனின் "ஈழத்துச் சிறுகதை ஆசிரியர்களும் ஒரு பன்முகப்பார்வை" பாகம் I, பாகம் II" ஓர் விமர்சனப் பார்வை (இ. இராஜேஸ் கண்ணன்), வாழும் தகவற் களஞ்சியம்: "பத்தி" எழுத்துத் தொகுப்பு நூலொன்றினூடான ஒரு தரிசனம் (த.கலாமணி), வார்த்தைகள் (கே.எஸ்.சிவகுமாரன்), நூல் விமர்சனம்: கே.எஸ்.எஸ்ஸின் சொன்னாற்போல 1, 2, 3...(மன்னார் அமுதன்), நூல் விமர்சனம்: காலக் கண்ணாடி ஊடாக கலை இலக்கிய உலகை நோக்கும் கே.எஸ். சிவகுமாரன் (எம்.கே. முருகானந்தன்), 25 படைப்பாளிகளின் ஜீவநதி சிறுகதைகள் (தொகுதி 1) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொதுசன நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் P 647).

## 14556

**ஜீவநதி மார்கழி 2011: இளம் எழுத்தாளர்கள் சிறப்பிதழ்.** க.பரணீதரன் (பிரதம ஆசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, மார்கழி 2011. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

52 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 60., அளவு: 25.5x18 சமீ.

"ஜீவநதி" யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் கலை இலக்கிய மாத இதழ் ஆகும்.

2007ஆம் ஆண்டு ஆவணி மாதம் இரு மாத இதழாக ஆரம்பிக்கப்பட்டு 2010 தை மாதத்திலிருந்து மாத இதழாக தொடர்ச்சியாக வெளிவருகின்றது. இச்சஞ்சிகையின் 39ஆவது இதழில், தலைமுறை கடந்த எழுச்சி (க.பரணீதரன்), தமிழில் நவீன இலக்கியம் இன்றைய பார்வையில் மேற்கிளம்பும் சில புரிந்துணர்வு அனுபவங்கள் (பெரிய ஐங்கரன்), ஒரு இனத்தின் துடிப்பு (எஸ்.மதி), மயில்வாகனத்தின் மனசாட்சி (சுதர்மமகாராஜன்), தமிழ்த் திரைப்படத் தலைப்புகள் ஒரு குறும்பார்வை (இ.சு.முரளிதரன்), இறந்தகாலத்தின் இழப்புக்களா அன்றேல் எதிர்காலத்தின் எழுச்சியா? இளங்கவிஞர்களின் பாடுபொருளாக வேண்டியது எது? (மன்னரான் ஷிஹார்), புதுப்புனல்: எங்கே போகிறது எம் சமூகம், அவளுக்கென்றொரு பாதை (ச.நிரஞ்சனி), நேர்காணல்: நாச்சியாதீவு பர்வீன் சந்திப்பு க. பரணீதரன், இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் (மா.செல்வதாஸ்), மறப்பேனோடி? (அ.விஷ்ணுவர்த்தினி), பட்டும் படாத பனைகள், அச்சங்களால் அதிரும் எனது "படுக்கையறை" (வெற்றி துஷ்யந்தன்), நீங்கள் நல்லாயிருக்கோணும் (இ.தனஞ்சயன்), மணியக்கா (மன்னார் அமுதன்), சொர்க்கம் வேறெங்குமில்லை (க.பரணீதரன்), தோல்வியின் வடிவம் (வை.சாரங்கன்), எழுத வந்தவர்களும் எழும்பி ஓடியவர்களும் (பி.அமல்ராஜ்), குயில்கள் இப்போது குரைக்கின்றன (பொத்துவில் அஸ்மின்), அண்மைக்கால நவீன ஈழத்து தமிழ்க் கவிதைச் செல்நெறி "முதற்கட்ட குறிப்புகள்" (எல்.வஸீம் அக்ரம்), என் செய்வேன் நான்?-கவிதை (தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா), குழந்தாய்-கவிதை- (வெலிகம ரிம்ஸா முஹம்மத்), அழிக்கப்பட முடியாத அடையாளங்கள் சிவரமணி கவிதைகள் ஒரு நோக்கு (கு.றஜீபன்), கவிதை - இடாஹோ மார்ச்சிப்பானி (ஆரையூர்த் தாமரை), புலம் பெயர் உறவுகளுக்கு (புலோலியூர் வேல் நந்தன்), பத்து நிமிடப் பௌர்ணமி (பேருவளை றபீக் மொஹிடீன்), கனவுச்சாலையில் நிஜத் தடங்களின் பதிவுகள் 7ஆம் அறிவை நோக்கிய பயணம் (எஸ். நிமலன்), த. அஜந்தகுமாரின் 2 கவிதைகள், மிருகம் அல்ல (வீரகுமார்), எனது இலக்கியத் தடம் 22: "யாத்திரையும் சுற்றுலாவையும் இணைக்கும் ஒரு பயண இலக்கியப் புது முயற்சி வட இந்தியப் பயண அனுபவங்கள் (தி.ஞானசேகரன்), கலை இலக்கிய நிகழ்வுகள் ஆகிய படைப்பாக்கங்கள் இவ்விதழை அலங்கரித்துள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொதுசன நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் P 529).

## 894.8(1) தமிழ்க் கவிதைகள்

### 14557

**அஞர்: சேரன் கவிதைகள்.** சேரன். நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2018. (சென்னை 600077: மணி ஓப்செட்).

(14), 15-87 பக்கம், விலை: ரூபா 390., இந்திய ரூபா 100.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-88631-04-4.

அஞரின் வழியே சேரன் கோடிக்கணக்கான தமிழர்களின் வாதையைப் பதிவு செய்திருக்கிறார். லட்சக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் வாதைகளை, கோபங்களை, ஆற்றாமைகளை, நினைவுகளைக்

கவிதைமொழியாக்கினால் அதுதான் "அஞர்". 1980-களில் எழுதத் தொடங்கிய சேரனின் பத்தாவது கவிதைத் தொகுப்பு இது. போரின் துயரை முன்வைத்து வாழ்வின் மீதான வேட்கையை அதிகரிக்கச் செய்கின்றன இக்கவிதைகள். நீர், கவிஞனை நினைவு கொள்வது எப்படி?, ஆற்றில் நடந்தமை, பறவை, உயிர், அந்திரேசுவும் ஏர்வினும், அம்மாவின் நிழல்கள், நினைவிலி, கவிஞன் இருந்த அறை, வீடு, மாயப் பிசாசு, அது தான், மிதக்கும் வெளி, எந்த இடத்திலிருந்து வந்திருக்கின்றோம், முடிவு, நிழல் முகம், ரோஹிங்யாவுக்கும் எமக்கும், அந்த இடம் எனக்குத் தெரியும், படத்திலுள்ள சிறுவர்கள், பெண்கள், ஆண்கள், விரல், சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தமிழ் விசுவாசியின் ஆனந்தக் கண்ணீர், காவல் முகாம், சுந்தரி, நிலம், நிலாவணனுக்கு, பெயர், கவிஞர்கள், தோழர் நிக்கொலாய் புக்காரினுக்கு, பிரியாவிடை, தாத்தாவின் கஞ்சாச் செடி, தாலாட்டு, பொதி, சசிக்கு, உப்புமுத்தம், எஞ்சி இருக்கும் சொற்கள், பொன்மீன், ஐயோ, அளற்ற தனித் தீவில் அழியாத காலடியும் எழுதாத கவிதையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், நல்லூர், அஞ்சலி, புதைகுழி, நிலை, அறம் பாடியது, கவி, எனக்கானது, இசை, உதிரா இலை, தேற்றம், அஞ்சனிக்கு, எல்லோனுக்கு என ஈழப் போர் இழப்புகளின் சாட்சியமாய் உலகின்முன் வைக்கப்பட்டிருக்கும் அஞர் கவிதைகள் தனித்துவமானவை. ஆனந்தவிகடன் இதழின் "நம்பிக்கை விருதுகள்" எனப்படும் 2019ஆம்ஆண்டுக்கான சிறந்த கவிதைத் தொகுப்புக்கான விருதைப் பெற்றது.

## 14558

**அடையாளமற்றிருத்தல்.** சம்பூர் வதனரூபன். சென்னை 600024: வடலி வெளியீடு, F-1, ஸ்ரீவாரி பிளாட்ஸ், 8A, அழகிரி நகர் 4வது குறுக்குத் தெரு, லட்சுமிபுரம், வடபழனி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-0-9919 755-0-1.

பிரிவினைவாதத்தை ஒழித்தல், பயங்கரவாதத்தைத் தோற்கடித்தல், நக்சல்பாரிகளை நசுக்குதல், ஜனநாயகத்தை நிலைநாட்டுதல் என்ற நூற்றுக்கணக்கான அழகான பெயர்களைச் சூடிய போர்கள் உலகம் முழுவதும் மக்களை வேரோடும் வேரடி மண்ணோடும் அவர்களது வாழ்விடங்களிலிருந்து பிய்த்தெறிந்துவிட்டு வளம் மிக்க அம்மக்களது நிலத்தை இலாப வேட்டைக்கும் பேராசைக்கும் தாரைவார்க்கின்ற கதைகள் சமகாலத்தின் அன்றாடச் செய்திகள். இன்றைய உலக ஒழுங்கின் மாபெரும் சதுரங்கப்பலகையில் எவரெவரதோ ஆட்டங்களுக்காக எதற்கு வெட்டப்படுகிறோம் என்றே தெரியாமல் வெட்டப்பட்டு வீழும் மதிப்பற்ற வெறும் காய்களான மக்களது உள்ளத்தினை சம்பூர் வதனரூபனின் இக்கவிதைகள் சிறிதளவிலேனும் பதிவு செய்ய முயன்றிருக்கின்றன. இலங்கையின் அண்மைக்கால அரசியல் நடப்புக்கள் பற்றியும் இலங்கையின் தேசிய இன முரண்பாடு பற்றியும் போர் பற்றியும் ஓரளவுக்கேனும் அறிந்து வைத்திருக்கும் வாசகர்களுக்கு, சம்பூர் வதனரூபனின் இக் கவிதைத் தொகுப்பிலுள்ள கவிதைகள் சொல்லவரும் பொருளையும் தொற்ற நினைக்கும் உணர்வினையும் புரிந்துகொள்வதிற் சிரமங்கள்

அதிகம் இராது. இங்கே தொகுக்கப்பட்டிருக்கும் வதனரூபனின் கவிதைகள் பெரும்பாலும் 2005-2006 இற்குப் பின்னான சம்பூரினதும் மூதூர் கிழக்கினதும் அரசியல் நிலவரத்தின் உறுத்தலாலும் உந்துதலாலும் உருவானவை. வெறும் வாய்ச்சவடால் தமிழ்த்தேசிய அரசியலின் பொய்முகத்தையும் மிகுந்த கோபத்தோடு விமர்சிக்கும் கவிதைகள் பல இத்தொகுப்பினுள் அடங்குகின்றன.

## 14559

**அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் கரையொதுங்கும் துறவாடைகள்.** தமிழ் உதயா (இயற்பெயர்: பசுபதி உதயகுமாரி விவேகானந்தராஜா). தமிழ்நாடு: நன்செய் பிரசுரம், அபுபேலஸ், திருவாரூர் சாலை, திருத்துறைப் பூண்டி 614713, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2017. (சென்னை 600005: சாய் தென்றல் பிரிண்டர்ஸ்).

80 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-930475-1-4.

பசுபதி உதயகுமாரி விவேகானந்தராஜா எனும் இயற்பெயர் கொண்ட தமிழ் உதயா, ஆரம்பகாலத்தில் தமிழ்ப்பிரியா, தமிழ்மதி, தமிழினி ஆகிய புனை பெயர்களிலும் தனது கவிதைகளை ஊடகங்களில் வழங்கி வந்தவர். 1996இல் ஆசிரிய சேவையில் இணைந்த இவர், வவுனியா மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய பின்னர் புலம்பெயர்ந்து தற்போது லண்டனில் வாழ்ந்து வருகிறார். தமிழ் உதயாவின் இந்நூலிலுள்ள கவிதைகள் மிகை யதார்த்தவாதப் பண்பு (சர்ரியலிசம்) கொண்டவை என்று தனது முன்னுரையில் கூறும் அனஸ், அவரது ஆழ்மன எண்ணங்களின் வெளிப்பாடுகளாக இக்கவிதைகள் அமைவதாகக் குறிப்பிடுகின்றார். தமிழ் உதயாவின் ஒவ்வொரு கவிதையும் ஒரு சிறு கதையையே சொல்லிவிடும் என்கிறார். ரசனை நிறைந்த வாழ்வின் எல்லா உணர்வுகளையும் தமிழ் உதயாவால் சொல்ல முடிகின்றது. வாழ்வை கவிதைகளின் சொற்களால் மூடியபடி அவரது கவிதைகள் பயணிக்கின்றன.

## 14560

**அப்படியே இரு: தேர்ந்த கவிதைகள்.** அழ.பகீரதன். யாழ்ப்பாணம்: தேசிய கலை இலக்கியப் பேரவை, 62, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில், 2வது பதிப்பு, மே 2017, 1வது பதிப்பு, நவம்பர் 1997. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

(2), 40 பக்கம், விலை: ரூபா 100.00, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-38214-0-9.

தேசிய கலை இலக்கியப் பேரவை பல்வேறு கவிஞர்களினதும் எழுத்தாளர்களினதும் அறிஞர்களினதும் கட்டுரை, சிறுகதை, கவிதை நூல்களை தமிழகத்திலும், கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பதிப்பித்து வெளியிட்டுவரும் பாரம்பரியத்தைக் கொண்டது. இக் கவிதைத் தொகுதி இப்பேரவையின் ஐந்தாவது வெளியீடாக 1997இல் வெளிவந்தது. சுன்னாகம் இலங்கை வங்கியில் எழுதுவினைஞராகப் பணியாற்றியவர் அழ.பகீரதன். 1988இலிருந்து 1997 வரை இவர் எழுதிய

கவிதைகளில் தேர்ந்த சிலவற்றை இத்தொகுப்பில் சேர்த்துள்ளார். அக்காலகட்ட யாழ்ப்பாணச் சமூகச் சூழலை இதிலுள்ள கவிதைகள் பிரதிபலிக்கின்றன. இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதைகளைப் படிக்கும்வேளை அவற்றைக் கூட்டு முயற்சி என்று கொள்வதற்கு சில காரணங்கள் உண்டென்று இந்நூலுக் கான தனது அணிந்துரையில் கூறும் கவிஞர் முருகையன் இவற்றுட் பல, நிகழ்கால நடப்புகளின் விமரிசனமாக உள்ளதெனவும், இவை சமூக நடத்தைகளையிட்டு கருத்துரை கூறுவதுடன் வினாக்களையும் எழுப்புகின்றன என்கிறார். நெருக்கமான தனிமனித உறவுகளின் ஓவியமாய்த் தோற்றங் காட்டும் உணர்வுகள் கூட, பொதுமையான அக்கறைகளின் பரிமாணங்களை உள்ளடக்குமாறு இந்தப் படைப்பகள் உருவாக்கம் பெற்றுள்ளன என்கிறார்.

## 14561

**அம்மா எனும் ஆசியாவின் அதிசயம்**. கந்தையா பத்மானந்தன். காரைநகர்: அம்மாத்தை வெளியீட்டகம், வாரி வளவு, 1வது பதிப்பு, 2019. (தெகிவளை: அனுபவ பதிப்பகம், Creaze Digital, 14, அத்தபத்து டெரஸ்).

viii, 64 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-5222-00-1.

இந்நூலில் காரைக் கவிஞரின் அம்மா எனும் ஆசியாவின் அதிசயம், வனப்புவக்கும் வன்னி, விபச்சாரிகள், அந்திப் பொழுது, நீத்தாய், அம்மம்மா, மகனுக்கு ஓர் மடல், வன்னி விவசாயி, ஆசைப்பத்து, அப்பா, ஏன்தான் பிறந்தேன், கடவுளுக்கு ஒரு கடிதம், கடைசி மிச்சம், கணபதிக்கு குடமுழுக்கு, பாரதியெனும் பாட்டாளிப் புலவன், காதலித்துப் பார், காவியகால வாழ்வு, ஊழ்வினை, கொஸ்லாந்தைக் கொடுமை, தண்ணீரில் தமிழகம், தமிழே நீயே ஐம்பூதம், தேயிலை நிலத்துத் தேவதை, கோச்சி ஏறிய கொச்சியும் கொப்புவும், வீதியே உனக்கு வீடானதோ? ஆகிய தலைப்புகளில் இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. சமகால சமூக நிகழ்வுகளுக்கு இக்கவிதைகளில் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. காரைக்கவி கந்தையா பத்மநாதன் அவர்களின் மற்றுமொரு கவிதைத் தொகுதி. நூலாசிரியர் பல்துறை ஆளுமையுடையவராகத் தன்னை இனம்காட்டிக்கொண்டவர்.

## 14562

**அம்மாவிடம் சேகரமாகிய முத்தங்கள்: கவிதைகள்**. துவாரகன் (இயற்பெயர்: சு.குணேஸ்வரன்). யாழ்ப்பாணம்: புத்தகக் கூடம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, பங்குனி 2016. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

xvi, 83 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x13 சமீ., ISBN: 978-955-51949-4-5.

துவாரகனின் கவிதை மொழி மிக எளிமையானது, சிக்கலில்லாதது. கடந்துபோன காலத்தின் காயப்பட்ட மனிதர்களின் பாடுகளைச் சொல்வது. இன்றைய காலத்தில் நாங்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கை நெருக்கடிகளையும் அதிகாரத்தின் கோர முகங்களையும், மனிதர்களின் போலித் தனங்களையும், மனித மனங்களின்

அலைக்கழிப்புகளையும் வெளிப்படுத்துவன. சுப்பிரமணியம் குணேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் தொண்டைமானாறு கெருடாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். கவிதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு என்பவற்றில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறார். இவரது முதலாவது கவிதைத் தொகுதி "மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள்" (2008) வடக்கு மாகாணத்தின் சிறந்த நூலுக்கான விருதினையும், யாழ் இலக்கிய வட்டத்தின் கவிஞர் ஐயாத்துரை நினைவு விருதினையும் அவ்வாண்டு பெற்றுக்கொண்டது.

## 14563

**அம்மை: கவிதைகள்**. பா.அகிலன். யாழ்ப்பாணம்: பேறு வெளியீடு, 71/2, கச்சேரி-நல்லூர் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2017. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

(4), 86 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-53902-3-1.

"காணாமற் போனாள்", "மழை" ஆகிய இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டிருக்கும் இந்நூலிற்கு "காணாமற் போனாள்" என்ற முதலாவது பகுப்பிலுள்ள "அம்மை" என்ற ஒரு கவிதையின் தலைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. முழுத்தொகுப்புக்குமான பொருத்தமான தலைப்பாக இது அமைகின்றது. கடந்த காலத்தின் யுத்தத்தின் அவலங்களை அகிலன் காண்கிற குறியீட்டுச் சொல்லாகவும் "அம்மை" அமைகின்றது. நாற்பத்திரண்டு கவிதைகளைக்கொண்ட "அம்மை" இருபத்தொன்பது கவிதைகளைக் கொண்ட "காணாமற் போனாள்" என்றாகவும், மீதி பதின்மூன்று கவிதைகள் "மழை" என்றாகவும் இடம்பெற்றுள்ளன. தன்னுடையதும், பிறருடையதுமான போர்க்கால அனுபவங்களிலிருந்து சுழித்தெழுந்த இத் தொகுப்பின் பெரும்பாலான கவிதைகளின் ஊற்று, மன உடல்ரீதியாக அடைந்த அவலங்களினதும் வடுக்களினதும் மையத்திலிருந்தே பீரிட்டெழுகிறது. கைகால்கள் போன்ற பொறிகள் மட்டுமில்லை, புலன்களும்கூட இழக்கப்பட்டன. மிகக்கொடூரமான மனித அவலம் சம்பவித்தது. ஆனால் அந்த அவல உணர்வுகள் மீளுதல் சாத்தியமற்ற நிர்கதியின் இருளாய் உறைவடைந்து மேலும் பகுக்கக்கூடிய திண்மமாய் "அம்மை" கவிதைகளில் மாற்றம் பெறுகின்றன. கீதா சுகுமாரனின் "உளப்பாடும் திருப்பாடும் யுத்தம், அகம், வெளி" இந்நூலின் அறிமுகக் கட்டுரையாக இடம்பெற்றுள்ளது.

## 14564

**அமுதப் பிரவாகம்**. அன்பழகி கஜேந்திரா. மன்னார்: மன்னார் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2019. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xx, 80 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-06820-3-4.

உனக்குள் நீ என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் ஈழத்துத் தமிழ்க் கவிதை உலகுக்கு அறிமுகமானவர் அன்பழகி. யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ். உடுவில் மகளிர் கல்லூரியின் பழைய மாணவி. தற்போது மன்னாரில் வாழ்ந்து வருகின்றார். உணர்வுகளின் உதயம்,

சமூக அலைகள், இதய ஓசை ஆகிய மூன்று பிரிவுகளில் இவரது கவிதைகளை வகுத்துத் தந்திருக்கிறார்.

## 14565

**அவளும் நானும்: தேர்ந்த கவிதைகள்.** மாதவி உமாசுத சர்மா. யாழ்ப்பாணம்: தேசிய கலை இலக்கியப் பேரவை, 62, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2018. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

xvi, 72 பக்கம், விலை: ரூபா 300.00, அளவு: 20x14.5 சமீ.

மாதவியின் கன்னிப்படைப்பாக இக்கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. நிலவு வார்ப்பவர்கள், சுகமான சுமைகள், போராளி இவன்-சேகுவரா, கல்லறைக் காடு, கையளவு சாம்பல் தான், திரும்பிப்பார், சில்லறை, காக்கைக் கூட்டத்திற்கு, செல்லாக்காசு ஆனாய் நீ, காற்று, அவளும் நானும், நதியின் குரல் இது, யாதுமாகி, பழைய பாதை திரும்புவோம் இனி, சோபை இழந்த தேசம், அமிழ்து அமிழ்து, மரணம் தேடி, ஆலமரத்தின் கதை, வேகிறாள், இப்படிக்கு தமிழ், மழையின் இரவில், தேடல், நம்பிக்கை தேவை, விதவையின் மறுமணம், அகிலா அக்கா, ஈர விழிகள், அன்புள்ள ஆசிரியருக்கு, அப்பா, நான் யார், ஹைக்கூ கிறுக்கல்கள், மௌனத்தின் தேடலில் நான், சக்தி, விஞ்ஞானம் என்பது, காற்றில் ஒரு கவிதை, உழவன் ஆகிய 35 கவிதைகள் இத்தொகுப்பில் தேர்ந்து தரப்பட்டுள்ளன.

## 14566

**ஆதிக் கிழவனின் காதல்.** தமிழ் உதயா (இயற்பெயர்: பசுபதி உதயகுமாரி விவேகானந்தராஜா). தமிழ்நாடு: நன்செய் பிரசுரம், அபுபேலஸ், திருவாரூர் சாலை, திருத்துறைப் பூண்டி 614713, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2017. (சென்னை 600005: சாய் தென்றல் பிரிண்டர்ஸ்).

80 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-930475-0-7.

மழைக்குப் பிந்தைய குடையில் வீசும் ஈர மணத்தைப் போல இவரது கவிதைகள் வசீகரமாய் மணம் வீசிக்கொண்டே இருக்கின்றன. ஒரு விதைக்குள் ஆலமரத்தை ஒளித்து வைக்கும் மொழியின் சூத்திரம் அறிந்தவர் இவர். சிறகுகள் இருந்தும் காலைச் சுற்றி சிந்தும் இரைகளில் கோழிகள் திருப்திப்பட்டுக் கொள்கின்றன. நாரைகளே நம்பிக்கையோடு கண்டங்கள் தாண்டிய உலகைத் தரிசிக்கின்றன. தமிழ் உதயாவும் அப்படி நம்பிக்கையோடு சிறகு விரிப்பவர் தான் - (முருக தீட்சண்யா).

## 14567

**ஆராரோ ஆரிவரோ: மனிதம் விளையும் தாலாட்டு (கவிதைத் தொகுதி).** தென்பொலிகை குமாரதீபன். வல்வெட்டித்துறை: ஆதிரை வெளியீட்டகம், வீரபத்திரர் கோவிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை, 1வது பதிப்பு, மே 2016. (தொண்டைமானாறு: உயிர்மெய் பதிப்பகம், பிரதான வீதி).

xxiv, 70 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-43251-0-4.

தென்பொலிகை குமாரதீபனின் இருபது வருட காலக் கவிதைப் படைப்புகளை உள்ளடக்கிய முதலாவது கவிதைத் தொகுதி இதுவாகும். இதில் இவரது பல்கலைக்கழகக் கால கவிதைகள் உள்ளிட்ட 36 தேர்ந்த கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இருப்பின் மௌனம், தாலாட்டு, வாழ்க்கைப் பயணம், மை வாழ்க்கை, நமதுகள், அறுவடைக் காலத்து மழை, நரகம், ஆக்கவிழி, தூக்கு, இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல, நாகரிகம், அதிசயம், நாளை, சூனியப் பறவை, மிருகம் அல்ல, மிருகம் எதற்கு, வித்தியாசமானவர்கள், வாழ்த்து, எல்லை, விழி, இருப்பு, விமர்சனம், எச்சரிக்கை, அருவம், முரண், சுதந்திர மனிதன், புரட்சி, நிலமசை விம்பம், இரசம் தீர் கண்ணாடிகள், முரண்நகை, வேட்டை, சாவீடு, நம்பிக்கை, சுயம், ஏலம், இடம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

## 14568

**ஆனந்த இராகங்கள்: பொன்விழா சிறப்பு மலர்.** நெல்லை லதாங்கி (இயற்பெயர் திருமதி ஆனந்தராணி நாகேந்திரன்). கரவெட்டி: ஆனந்தா நாடக மன்றம், மகாத்மா வீதி, நெல்லியடி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2012. (பருத்தித்துறை: வெற்றிவிநாயகர் ஒப்செட் பிரிண்டர்ஸ், செட்டித் தெரு).

xiii, 75 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 20x14.5 சமீ.

15.10.2012 அன்று நெல்லை லதாங்கியின் ஐம்பதாவது அகவை நிறைவையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர். இது பாடல், கவிதை, நாட்டிய நாடகம் (காரைக்கால் அம்மையார்), வில்லுப்பாட்டு (ஸ்ரீ இராமகிருஷ்ணர், புரந்தரதாசர், முத்துத் தாண்டவர்), தாளலயம் (பட்டால்தான் புத்தி வரும்) என ஐந்து பிரிவுகளின் கீழ் படைப்பாக்கங்களை ஒழுங்குபடுத்தியுள்ளார். பாடல், கவிதை, ஆகிய பிரிவுகளில் பாராமுகம் ஏனையா பராபரனே, புதியதோர் உலகம் செய்வோம், அன்பும் அறனும் வேண்டுமப்பா, சுகம் காண வாருங்களேன், சிதைந்து போனதடா, சந்நிதிக் கந்தனே, இசை எனும் கோவிலிலே (பிரதேச மட்டத்தில் மூன்றாமிடத்தையும், மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்ற பாடல்), அம்மன் துதி, முருகன் துதி, சக்திப் பாமாலை, மரங்களின் பயன்பாடு பற்றிய பாடல், அன்புத் தெய்வம் அன்னைக்கு, தாயே நீ எந்தன், ஆசான் புகழ்மாலை, கப்பற் பாடல், கண்ணன் துதி, ஆசான் தினப்பாடல், கால்கோள்விழாப் பாடல், சுனாமி, வடக்கின் வசந்தம், பிரிவுபசாரப் பாடல், வாழ்த்துப் பாடல், எல்லோரும் இன்புற்றிருக்க (பிரதேச மட்டத்தில் 2012இல் முதலாமிடம் பெற்ற கவிதை), நாம் சிறுவர், மனித மனங்கள், யாரென்று புரிகிறதா?, உலகை மலர்விக்கும் காலைப் பொழுது, எல்லாம் அறிந்திருந்தும், அறிவின் விளைநிலம் கல்விச் சாலைகள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.

## 14569

**இப்படிக்கு அக்கா: கவிதைத் தொகுதி.** வெற்றிச்செல்வி. (இயற்பெயர்: வேலு சந்திரகலா). கிளிநொச்சி: தவமணி வெளியீட்டகம், 2வது பதிப்பு, ஏப்ரல் 2017, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2007. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், முத்திரைச் சந்தியடி, நல்லூர்).

*(10), 41 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 17.5x12 சமீ.,* ISBN: *978-955-41027-6-7.*

பேரினவாத அரசின் அடக்குமுறை வடிவங்களின் சிறைப்படுத்தலிற்கு இலக்கான பெருமளவிலான தமிழ்க் குடும்பங்கள் படுகின்ற அவஸ்தைகளை, அவர்கள் பகிர்ந்து கொள்கின்ற சுகதுக்கங்களை, அவற்றினால் துவண்டுவிடாது எதிர்மறையாக மேலிடும் வீரம் செறிந்த விடுதலை உணர்வினை பிரதிபலிக்கின்றன வெற்றிச் செல்வியின் கவிதைகள். இந்தக் கவிதைகளும் அனைவருக்குள்ளேயும் வீரத்தை ஊற்றும். கிளிநொச்சி கப்டன் வானதி வெளியீட்டகத்தினால் ஓகஸ்ட் 2007இல் முதற்பதிப்பாக வெளியிடப்பெற்ற இக்கவிதைத் தொகுதியின் இரண்டாவது பதிப்பு இதுவாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒளிப்படப் பிரிவின் போராளி ஈழமொழியின் புகைப்படங்கள் கவிதைகளுக்கு மெருகூட்டியுள்ளன.

## 14570

**இப்படிக்கு தங்கை: புனர்வாழ்வு காலத்தின் உண்மைப் பதிவு-2010.** வெற்றிச்செல்வி (இயற்பெயர்: வேலு சந்திரகலா). மன்னார்: வேலு சந்திரகலா, 1வது பதிப்பு, மார்ச் 2017. (யாழ்ப்பாணம்: அன்றா பிறிண்டேர்ஸ், இல. 379, கஸ்தூரியார் வீதி).

*32 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 16x10.5 சமீ.,* ISBN: *978-955-41027-3-6.*

மன்னாரில் அடம்பன் கிராமத்தில் பிறந்த வெற்றிச்செல்வியின் இயற்பெயர் சந்திரகலா. இளமைக்கனவுகளை துறந்து ஈழக்கனவுடன் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் 1991 இல் இணைந்துகொண்டவர். 1993 இல் தமது ஒரு கையையும் ஒரு கண்ணின் பார்வையையும் இழந்தவர். அத்துடன் அவர் ஓய்வுபெறவில்லை. வீட்டுக்குத்திரும்பவில்லை. 2009 இல் முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற இறுதிப்போர் வரையில் வெற்றியின் நம்பிக்கையோடும் ஓர்மத்துடனும் களத்தில் நின்றவர்.நடந்து முடிந்த யுத்தத்தின் இறுதித்தருணம்வரையில் களத்தில் நின்றவர்கள் பலராயிருந்தபோதிலும், அங்கே என்ன நடந்தது என்பதை எல்லோராலும் ஆவணப்படுத்த முடியாது. வெற்றிச்செல்வி, மக்களின் இழப்புகளையும் அவர்கள் தக்கவைத்திருக்கும் வலிகளையும் அவர்களின் எதிர்காலம் பற்றிய ஏக்கங்களையும் உணர்ச்சிபொங்க பதிவுசெய்துள்ளார். அதேசமயம் போர்வலயத்தில் சிக்குண்டிருந்த மக்களின் மனநிலையையும் அவர்கள் போராளிகளை எவ்வாறு மதிப்பீடு செய்தார்கள் என்பதையும் சித்திரிக்கின்றார். வெற்றிச்செல்வி ஓராண்டு காலம் பம்பைமடு புனர்வாழ்வு முகாமில் இருந்தபோது எழுதிய கவிதைகள் இவை. தடுப்ப முகாம்களில் வாழ்ந்தவர்களது சிரமங்கள் சொல்லில் அடங்காதவை. அவற்றில் சில பகுதிகளை, தவிப்புகளை ஒரு அண்ணனுக்கு எழுதும் தங்கையின்

கடிதங்களாக இக் கவிதைகள் பதிவுசெய்கின்றன. புனர்வாழ்வு முகாம் வாழ்வின் நெருக்கடிகளுக்குள் எழுதப்பட்டவை இவை.

## 14571

**இப்படியும் (தேர்ந்த கவிதைகள்).** *அழ.பகீரதன். யாழ்ப்பாணம்: அழ.பகீரதன், தேசிய கலை இலக்கியப் பேரவை, செருக்கற்புலம், சுழிபுரம், 1வது பதிப்பு, நவம்பர் 2012. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).*

*98 பக்கம், விலை: ரூபா 200.00, அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-955-8637-32-6.*

*பகீரதனுடைய கவிதைகளில் இழந்துபோன வாழ்வு பற்றிய துயரம் துலக்கமாகத் தெரிகின்றது. அவருடைய கவிதைகள் மக்களிடமிருந்து போரும் பலவாறான அராஜகங்களும் பறித்தவற்றைப் பேசுகின்றன. எனினும் அவருடைய அழுத்தம் நமது விழுமியங்களின் சீரழிவால் நாம் இழந்து வருபவற்றின் மீதாகப் பதிகின்றது. இக்கவிதைத் தொகுதியில் என்னத்தச் சொல்ல?, ஊருக்குப் பொதுவாய், நினைப்பு, கற்றுத்தந்தபடி வாழ்வேன், பெண்ணாய்ப் பிறந்ததன் பேறு, இரை மீட்கலாம், நகரம், மாண்டவர் யாரோ?, ஐந்தாம் வகுப்பில், இவர்க்காய், பூமியைப் புரிந்தோமா?, துக்கிக்காமல் எழு, எண்ணாரோ?, தொண்டரின் பாடல் அல்லது அடிமையின் பாடல், விதைச்சாத்தானே அறுவடை, அரை வயதில் சாவு வரும், தகுமோ, ஒன்றீரோ உலகோரோடு, இப்படியும், எழுந்து வாரீரோ?, என்றோ ஒரு நாள், விரித்த பாடப் புத்தகம், இந்த நாளிலிருந்து, பிள்ளைகளிற்காய், முதியோர் இல்லங்கள், நாளைய வாழ்வு யாரின் கையிலோ?, பேப்பர் அவுட்டாம், மீனவரின் குமுறல், சினிமாவும் சுவரொட்டியும், போதை வஸ்து, ஈழ நாட்டில், நாளைய மனிதர் நன்றாய் வாழ்வர், பூக்கலாம் புதிசாய், விதைத்த விதைப்புக்கள், காட்சிகள்: பழைய நினைவுகள், கற்பனையே கொல்லும், நிலைமை ஆகிய 37 கவிதைகள் இத்தொகுப்பில் தேர்ந்து வழங்கப்பட்டுள்ளன.*

## 14572

**இரட்டைக்கரு முட்டைகள்.** *இ.சு.முரளிதரன் (மூலம்), கே.எம்.செல்வதாஸ் (தெளிவுரை). அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, நவம்பர் 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

iv, *52 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17.5x12.5 சமீ.,* ISBN: *978-955-4676-87-9.*

*ஜீவநதி வெளியீட்டகத்தின் 113ஆவது நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தமிழ் மொழியின் தனித்துவங்களில் இரட்டுற மொழிதலும் ஒன்றாகும். சிற்றிலக்கியங்களில் சிலேடையணியை பிரத்தியேகமாகப் பலர் கையாண்டிருப்பினும் தனிப்பாக்களில் காளமேகப் புலவரே ஏகாதிக்கம் செலுத்தினார். அவரது ராஜபாட்டையில் முரளிதரனும் தன் நடைவண்டியோடு களமிறங்கியுள்ளார். தன் கவித்திறத்தால் இரட்டைக்கரு முட்டையாய் பிரசவித்துள்ள இக்கருவிதைகள் முன்னதாக ஜீவநதி சஞ்சிகையின் ஐந்து இதழ்களில் பதிற்றுப் பத்தாகத் தொடர்ந்து வெளிவந்திருந்தன. மாதிரிக்கு "கண்ணபிரானும் எம்ஜிஆரும்" என்ற தலைப்பிலான ஒரு கவிதையும், அதற்கான விளக்கமும்:*

"ஆண்டவர் என்பதால் ஆலயத்தால் வள்ளன்மை
பூண்டதால் ராதாகை துப்பாக்கி தீண்டியதால்
பெண்விருப்பால் நம்பியார்க்கும் புத்திசொல் வேடத்தால்
கண்ணனுக்கு எம்.ஜி.ஆர். நேர்"

தெளிவுரை: கண்ணபிரான் கடவுள் என்னும் பாங்குடையவர். கோயில்கள் பலவற்றை உடையவர். அருளை அள்ளி வழங்குவார். ராதா தனது கையினால் உணவை சமைத்துக் கொடுத்து மெய்யினைத் தழுவிக்கொண்ட சிறப்பினை உடையவர். பெண்கள் பலராலும் விரும்பப்படுபவர். நம்பிய அனைவருக்கும் அறிவுரை சொல்லிக் காப்பாற்றும் பாத்திரமாக அவதாரம் செய்தவர். அவ்வாறே எம்.ஜி.ஆர். தமிழகத்தை ஆண்ட தலைவராவார். எம்.ஜி.ஆருக்கு கோயில் கட்டப்பட்டுள்ளது. அள்ளித் தந்த வள்ளல் என்று போற்றப்படுகின்றார். எம். ஆர்.ராதாவின் கையிலிருந்த துப்பாக்கியின் தோட்டா கழுத்தைத் துளைத்துச் சென்றது. பெண்களால் அதிகம் விரும்பப்பட்டார். திரையிலே "நம்பியாருக்கு" அறிவுரை சொல்கின்ற வேடத்தினை ஏற்றுக்கொண்டவர். ஆதலால் கண்ணபிரானுக்கு எம்.ஜி.ஆர். நிகராவார்.

## 14573

**இராப்பாடிகளின் நாட்குறிப்பு.** தி.வினோதினி. மன்னார்: மன்னார் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2016. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர்).

105 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43437-0-2.

சர்மிலா திருநாவுக்கரசு என்ற இயற்பெயர் கொண்ட வினோதினி, கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தில் உள்ள வேரவில்லை பிறப்பிடமாகக் கொண்டவர். மன்னாரை வசிப்பிடமாகக் கொண்ட இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல் சிறப்புப் பட்டதாரியாவார். சமூக உளவியலும் ஆற்றுப்படுத்தலும், ஊடகத் தொடர்பாடலும் அறிவிப்புத்துறை சார் நுட்பங்களும் ஆகிய துறைகளில் பட்டய நெறிகளையும் நிறைவு செய்துள்ளார். கவிதை, சிறுகதை, நாடகம், மேடைப்பேச்சு போன்ற துறைகளில் தேசிய ரீதியில் வெற்றிகளையும் ஈட்டியுள்ளார். இந்நூலில் வினோதினியின் எழுந்துவா, நகர(நரக) வாழ்க்கை, எனக்கும் முளைக்கும் சிறகுகள், பலிக்கடா, சூனியப் பெருவெளி, ருத்திர தாண்டவத்தில் சுற்றத்தைக் காத்தருளும், தமிழ் பேசு, அறிவியல் ஆரவாரம், மறக்கச் சொல்லித் தாருங்கள், புதிய பூமி, இரவுகளின் இராட்சசி, இன்றுவரை தேடுகின்றோம், பிறப்பிற்கு அர்த்தம் சொல்வோம், பிரித்தானியா, சுயம் உன் சுயம்பு, கடைசிக் காதலும் கரையும் நேரம், கோடியில் தேடி என்ன பலன்?, இயற்கை பேண், சந்தித்துக் கொள்வோம் வா, மௌன நடை, கூடாப்போதை கேடுகள் தருமே, ஏக்கம், உங்கள் வசைகள் அவள் காதுகளை எட்டப்போவதில்லை, கலாநிதி அப்துல் கலாம், தென்றலின் தவம், காலத்தின் பதில் என்ன, கோர்ப்பு, இரவுகளின் குழந்தைகள், அகன்று போகிறேன் அதிகமாய் நேசித்ததால், வஞ்சகப் பேய்கள், சில உறவுகள், பருந்துகள் பிரசங்கம் செய்வதில்லை, அவளின் உலகில்,

குரோதம் மற, நம்பிக்கை நூல், தெளி, ஊமைக் கண்ணீர், என்ன வளம் என்ன வளம் இதுவல்லோ அலுவலகம், பேய்களின் தாண்டவம், காதல் முத்தம் தரவே வா, ஏதேனும் ஒரு புள்ளியில் நானும் நீங்களும் சந்திக்கக்கூடும், விழித்துக்கொள் வாலிபமே, பிசாசுகளின் கலகம், வேறென்ன வேண்டும் எனக்கு, புதைந்த விதை மடிவதில்லை ஆகிய 45 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## 14574

**இலைகளே என் இதயம் (கவிதைத் தொகுதி).** நீ.பி.அருளானந்தம். நாவலப்பிட்டி: திருமகள் பதிப்பகம், இல. 10, பெனடிக்ட் அவென்யூ, பவகம, 1வது பதிப்பு, மார்கழி 2018. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

vi, 77 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 400., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-1055-17-2.

நீ.பி.அருளானந்தம் அவர்களின் கவிதைகள் வாயிலாகத் தமக்கு அவ்வப்போது தோன்றும் எண்ணங்களையும் உணர்ச்சி நிலைகளையும் பூடகமின்றி வெளிப் படையாக பதிவுசெய்கிறார். பெரும்பாலானவை அவரது பிரத்தியேக உலகில் காணும் இயற்கையாகவும், தனிப்பட்ட பார்வையில் பிறர் பற்றிய அவதானிப்பு களாகவும், தன் பாரம்பரிய முதுசொத்துக்கள் அழியும்போது வெளிப்படுத்தப்படும் வேதனையாகவும், இன்னும் பலவாகவும் காணப்படுகின்றன. அடுத்த நிலை, இந்த இருப்பு, கபளீகரம், அலைச்சல் விடாய், ஏன் இந்தச் சிரிப்பு, சுகத்தின் நிலைப்பு, அங்கேயே மனம், ஆகாய வீதியில், உறவுகள் இப்படித்தான், பாதுகாப்பு, முதிர்நிலை, மனம் மாறும், மரம் விளக்கிடும் அவஸ்தை, சிரி-சிரி-சிரி-சிரிப்பு, மனதுக்குள் பழைய கதை, அறைந்து சொல்லிடுமே, சீரழிந்திருக்கிறது, உரு மாறி, நூல் அகம், சுகம் இங்கே ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64540).

## 14575

**இவள் கிறுக்கி.** கிறுக்கி ஆதிரா (இயற்பெயர்: செல்வி. நிரோஜினி பரமேஸ்வரன்). யாழ்ப்பாணம்: செல்வி. நிரோஜினி பரமேஸ்வரன், அரியாலை, 1வது பதிப்பு, 2019. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 672 B, காங்கேசன்துறை வீதி).

x, 48 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-624-95678-0-1.

அரியாலையைச் சேர்ந்த செல்வி. நிரோஜினி பரமேஸ்வரன், யாழ்/ கனகரத்தினம் மகா வித்தியாலயத்தின் உயர்தர வகுப்பு மாணவியாவார். 2019இல் தனது க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோன்றியுள்ள இவரது கன்னிப் படைப்பு இக் கவிதைத் தொகுப்பாகும். தன் உள்ளத்தில் துளிர்விட்ட உணர்வுகளை, வலிகளை, சுமைகளை, தான் கண்ட காட்சிகளை இங்கே வரி வடிவில் கவிதைகளாக்கிப் பதிவுசெய்துள்ளார். முதுமை, காதல், குடும்பம் என இவரது கவிதைகளின் கருக்கள் பெரும்பாலும் தன்னைச் சுற்றியுள்ள சமூகம் சார்ந்தவையாக உள்ளன.

## 14576

**இறுகியிருக்கும் வரிகளுக்குள் நீ திரவமென ஓடிக்கொண்டிருக்கிறாய்.** *அசரீரி (இயற்பெயர்: பதீக் அபூபக்கர்). வாழைச்சேனை 05: காகம் வெளியீடு, (உயிர்ப்பைத் தேடும் வேர்கள்), மஹ்மூட் ஆலிம் தெரு, 1வது பதிப்பு, 2012. (தெகிவளை: ஏ.ஜே. பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).*

*60 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 18x12 சமீ.,* ISBN: *978-955-53885-1-1.*

*பத்தீக் அபூபக்கர் காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். லண்டன் யூ.சீ.எல். பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் பயிலும் இவர், 2004இலிருந்து கவிதை மற்றும் ஆக்க இலக்கியங்களில் ஈடுபாடு கொண்டிருந்துள்ளார். "காற்றில் மிதந்து வரும் சவர்க்காரக் குமிழிகள் நம் முகத்தில் மோதி உடையும் போது ஏற்படும் சிலிர்ப்புப் போல இவரது கவிதைகள் பரவசமூட்டுகின்றன. பதிவு செய்தல் என்பதையும் தாண்டி இன்மைப் பொருளாக கவிதைகள் மிதக்கத் தொடங்கியிருக்கின்றன. அத்தருணங்களே இங்கு கவிவரிகளாகின்றன. திரை விலகும்போது தரிசனம் கிடைப்பதைப் போல நான், நீ எனும் இருமைகளின் உறவிலும் முரணிலும் இறுகுவதும் வழிவதுமாக இவரது கவிதைகள் ஓடிக்கொண்டிருக்கின்றன" (பின்னட்டைக் குறிப்பு).*

## 14577

**உப்புச் சாடிக்குள் உறையும் துயரக்கடல்.** *தமிழ் உதயா (இயற்பெயர்: பசுபதி உதயகுமாரி விவேகானந்தராஜா). தமிழ்நாடு: நன்செய் பிரசுரம், அபுபேலஸ், திருவாரூர் சாலை, திருத்துறைப் பூண்டி 614713, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2017. (சென்னை 600005: சாய் தென்றல் பிரிண்டர்ஸ்).*

*80 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-81-930475-2-1.*

*"எழுத்துகள் எனக்கு வெறும் எழுதுகோலின் பிரசவம் இல்லை. எல்லா உறவுகளாலும் நிராகரிக்கப்பட்ட என் ஏக்கங்களை கூர் உடைந்த பேனாக்களால் எழுதித் தீர்க்கிறேன்" என்று சொல்லும் ஈழத்துக் கவிஞர் தமிழ் உதயாவின் ஐந்தாவது கவிதை நூல். துயர்மிகு வாழ்வின் வலிகளுக்கிடையே சுரக்கும் அன்பை மிகக் குறைந்த சொற்களால் கவிதையாக்கியுள்ளார். உடைந்துபோன உப்புச் சாடிக்குள் சொற்களாலான ஒரு துயரக் கடலை உருவாக்குகின்றார். கடலலை, சொல், துயரம் மூன்றுமே ஒன்றையொன்று அள்ளியணைத்துக்கொண்டு விஞ்சத் துடிப்பவை. கவிதை மூலமே நமக்கெல்லாம் அறிமுகமான தமிழ் உதயா ஈழத்தின் வடபுலத்தில் மல்லாவிக் கிராமத்தில் பிறந்தவர். தன் கல்வியை மல்லாவி மத்திய கல்லூரியிலும், யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் கற்றவர். அவரது வாழ்வியற் சூழல் கிராமங்கள் ஊடாகவே நகர்ந்துள்ளன. எனினும் பலருடனும் பழகும் வாய்ப்புக்கள் அதிகம் பெறக்கூடிய ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டு பல இடங்களிலும் கற்பிக்கும் பொழுது இன்னும் வாசிக்கும் ஆற்றலை, எழுதும்*

பழக்கத்தை தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முடிந்ததால் பலருக்கும் தெரிந்த நல்லதொரு படைப்பாளியாய் நமக்குத் தெரிகிறார்.

### 14578

**உயிர் விதைப்பு (கவிதைகள்).** சோதியா (இயற்பெயர்: சிவதாஸ் சிவபாலசிங்கம்). நோர்வே: தமிழர் கலை பண்பாட்டுக் கழகம், தாய்நிலம் பதிப்பகம், ஒஸ்லோ, 1வது பதிப்பு, மாசி 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

71 பக்கம், விலை: 50 குரோணர்கள், அளவு: 18x11.5 சமீ.

சோதியாவின் தேர்ந்த கவிதைகளின் தொகுப்பு. இதில் சொல்லாமல் சுருங்கிவிட்ட சூரியன்கள், உன் குருதிச் சுவடுகளில் எம் உறுதித் தடங்கள், எழுக இளைஞனே எழுக, தண்ணீரில் ஓர் தகனம், நினைவில் நனைகிறோம், உயிர் விதைப்பு, மாறா ரணம், யு(பு)த்த தர்மம், முள்ளுத் தடியெடுத்து முதுகு சொறியவோ, வேற்றுருவில் வருவீரோ?, கண்ணீர் கரை உடைக்கும், நலிந்த நாரைக்கு கொளுத்தி ஆசையா?, மூட்டிய தீயில் முடிவானாய், புதிய மொந்தையும் பழைய கள்ளும், வன்னி வாகை சூடும், நிரப்பப்படாத வெளிகள், நெஞ்சுருகிக் கூவு, ஓயாது அலையெழும், அமைதியாய் இருப்பது அடங்கிப் போனதாய் அர்த்தப்படாது, சாய்ந்த பெருமலை, விதையாய் வீழ்ந்து விருட்சமாய் எழுந்தோர், கடல்தாண்டி ஒரு காற்றுவழி தூது, இலையுதிர் காலம், தமிழனாகத்தான் இல்லை மனிதனாகவேனும், தொல்லை தொலைந்த முல்லை ஆகிய தலைப்புகளில் தாயக விடுதலை உணர்வுடன் எழுதப்பட்ட கவிதைகள் இடம்பெற்றுள்ளன. நோர்வே அன்னை பூபதி தமிழ்க் கலைக் கூட்டத்தின் கல்விப் பணி மேலாளரும் கவிஞருமான இவருக்கு நோர்வே மாநகர சபையின் சிறந்த சமூகச் செயற்பாட்டாளர் விருதும் 2006இல் வழங்கப்பட்டிருந்தது.

### 14579

**உருக்கி வார்த்த உணர்வுகள் (கவிதைகள்).** பிறேமா எழில். யாழ்ப்பாணம்: சாரல் வெளியீட்டகம், சித்தங்கேணி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2019. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xvi, 80 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-1245-13-9.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சித்தங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் பிறேமா எழில். 1995இல் இடப்பெயர்வின்போது மாங்குளத்தில் தங்கி மாங்குளம் மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பில் தேறியவர். "செந்தமிழ்ப் பயிற்சிப் பள்ளி" மாணவியான இவர் அங்கு பண்டிதர் பரந்தாமனிடம் செந்தமிழ் இலக்கணம் கற்றுத் தேறியவர். தனது ஆளுமையினால் தமிழகத்தில் யோகக் கலை பயின்று தாயகம் திரும்பி, அங்கு யோகப் பயிற்சி ஆசிரியராகவும், அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவள ஆற்றுகைகள் வழங்கும் கலைஞராகவும் பணியாற்றி வருகிறார். உருக்கி வார்த்த உணர்வுகள் இவரது முதலாவது பிரசுரம். "உணர்வோடு ஒரு நிமிடம்" தொடங்கி, "உயிரில் கலந்த உறவு" ஈறாகத் தன் வாழ்வின் கனதிகளை, தான்

அடைந்த வலிகளை, வெற்றிகளை, கண்ட கனவுகளை, கைவிட்டுப்போன உண்மைகளை, ஏற்றுக்கொண்ட ஏமாற்றங்களை, வாழ்வியல் அனுபவங்களை யதார்த்த வடிவில் எழுபத்தி இரண்டு கவிதைகளாக்கிப் பரிமாறியிருக்கின்றார். இந்நூல் பண்டிதர் வி.பரந்தாமனின் விரிவான அணிந்துரையுடன் கூடியது.

## 14580

**உனக்குள் நீ.** அன்பழகி கஜேந்திரா. மன்னார்: மன்னார் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2018. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xxi, 77 பக்கம், விலை: ரூபா 220.,அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-06820-2-7.

உனக்குள் நீ என்ற இக்கவிதைத் தொகுப்பின் மூலம் ஈழத்தத் தமிழ்க் கவிதை உலகுக்கு அறிமுகமாகின்றார் அன்பழகி. உள்ளத்தில் எழுந்த எண்ணங்களுக்கு கருக்கொடுத்து முகநூல்வழியாக வண்ணக் கவிதைகளை வடித்துவரும் இவர் கவிதைக் குழுமங்களில் இணைந்து அவர்களால் நடாத்தப்பெறும் போட்டிகளின் வாயிலாக இருநூறுக்கும் மேற்பட்ட சான்றிதழ்களையும் கிராமிய நாயகி விருது, இளங்கவி விருது, கவிச்சரம் விருது, கவிச்சாகரம் விருது என்பவற்றையும் அண்மைக்காலத்தில் பெற்றுக்கொண்டவர். தனது கவிதைகளில் தேர்ந்த சிலவற்றைத் தொகுத்து இந்நூலை ஆக்கியுள்ளார். யாழ்ப்பாணம், வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மன்னாரை வாழ்விடமாகக் கொண்டவர்.

## 14581

**எதனை வேண்டுவோம்: கவிதைத் தொகுதி.** சுமதி குகதாசன். கொழும்பு 6: ஆர். ஜனாதன், 28, 4/2, பசல்ஸ் லேன், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2013. (கொழும்பு 6: ஆர்.எஸ்.டி. என்டர்பிரைசஸ், 114, W.A.சில்வா மாவத்தை).

(18), 19-77 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 17.5x12 சமீ., ISBN: 978-955-44029-1-1.

தமது சுயநல அரசியல் இலாபங்களுக்காக இன அடக்குமுறை என்ற பிரச்சினையைத் தூக்கிப்பிடிக்கும் அரசியல்வாதிகளும், அவர்களின் தாளத்திற்கேற்ப அறிந்தோ அறியாமலோ ஆடிக்கிடக்கும் பிரகிருதிகளும் தன் மனதில் அவ்வப்போது ஏற்படுத்திய சலனங்களே இதிலுள்ள பெரும்பாலான கவிதைகள் என்றுரைக்கும் இக்கவிஞர், இத் தொகுப்பில் தன் படைப்பாக்கங்களில் தேர்ந்தெடுத்த தாய், பெருங்கவிஞன், கவிதை, படைப்பு, விநோதம் பார், கொடுமையிது தானோ, சாயங்கள், நிஜமெது, முடக்கம், எளிமையின் செழுமை, வறுமை, தலைமைக் குரல், தேர்தல், சுட்டது, உணர்த்துவதாய் உரைப்பீரோ, எதனை வேண்டுவோம், புரிதல், கல்வி, விழிப்பு, மானம், புதினமே புதினமாகி, பகிர்தலின் பாரங்கள், உணர்வு, தருணங்கள், பட்டதும் பெற்றதும், தீர்க்கதரிசனம், திருமணத் திருவிழா, ஏற்றம் காண், உறுதியாய் உரைத்திடுங்கள், சிதறுது நெஞ்சம், மனக்கோலம், உள்ளமதே புதையலதாய், மனத்தீரமே தீர்வாக ஆகிய 33 கவிதைகளை இணைத்துள்ளார்.

## 14582

**எல்லையற்ற பெருவெளி.** க.முத்துராஜா. அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xii, 90 பக்கம், விலை: ரூபா 450.,அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-98-5.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துப் படைப்பாளி கந்தசாமி முத்துராஜாவின் தேர்ந்த கவிதைத் தொகுப்பு இது. கனடாவில் இயங்கும் விளம்பரம், தமிழ் வணக்கம் ஆகிய இணையத்தளங்களிலும், அங்கு வெளிவரும் விளம்பரம் பத்திரிகையிலும் அவ்வப்போது பிரசுரமானவை இவை. கவிஞர் க.முத்துராஜா இலங்கையில் தபால் அதிபராகப் பணியாற்றியவர். முதுமாணிப் பட்டதாரியான இவர் ஒரு அரங்கக் கலைஞருமாவார். தனது சமூகத்துக்குக் கூறவேண்டியவற்றை நயம்பட உணர்ச்சியுடன் கூறுவதன்மூலம் இச்சமூகத்தை ஓரளவாவது தன் கவிதைகளால் மாற்றமுடியும் என்ற இதய தாகத்துடன் இத்தொகுப்பை வழங்கியுள்ளதாகக் குறிப்பிடுகிறார். "மூத்த இனிய செம்மொழி" என்ற கவிதையில் தொடங்கி, "இனிய தமிழ் 2019 தைப்பொங்கல்" என்ற கவிதை ஈறாக 40 தேர்ந்த கவிதைகள் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. ஜீவநதி வெளியீட்டகத்தின் 123ஆவது பிரசுரமாக இக்குறுநாவல் தொகுதி வெளிவந்துள்ளது.

## 14583

**எல்லையற்ற வான்வெளியில்.** அனுராதா. கொழும்பு 6: ஸ்ரீநிதி பதிப்பகம், 42/11, முதல் தளம், சுவி சுத்தர்ராம வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2016. (சென்னை 14: சீனிவாசா ஆப்செட்).

112 பக்கம், விலை: ரூபா 250., இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

ஈழத்தின் தமிழ் இலக்கிய ஆர்வலரான வீ.அனுராதா, சிவஸ்ரீ கி.சோமசுந்தரக் குருக்கள்-இராஜேஸ்வரி தம்பதிகளின் இரண்டாவது புதல்வியாவார். அனுராதாவின் முகநூல் பக்கத்தில் வெளிவந்து பாராட்டுப்பெற்றவற்றுள் தேர்ந்தெடுக்கப்பட்ட 90 புதுக் கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இவரது முதலாவது நூல் வெளியீடு இது. இவரது கவிதைகளின் பாடுபொருளாக பாடசாலைப் பருவம், இளமைக் குமுறல், நண்பர்கள், குடும்பச் சூழல், மானுட மேம்பாடு என்பனவே பெரும்பாலும் காணப்படுகின்றன.

## 14584

**எழுக அதிமானுடா (கவிதைகள்).** வ.ந.கிரிதரன். கனடா: மங்கை பதிப்பகம், 38, Thorncliff Park Dr – 510, Toronto, Ontario, M4H 1J9, 1வது பதிப்பு, தை 1994. (அச்சக விபரம் தரப்படவில்லை).

40 பக்கம், விலை: கனேடிய டொலர் 2.00, அளவு: 18x12.5 சமீ.

இத்தொகுப்பிலுள்ள பெரும்பாலான கவிதைகள் தாயகம் பத்திரிகையில் வெளிவந்தவை. எஞ்சியவை குரல் கையெழுத்துச் சஞ்சிகையிலும், வீரகேசரி, தினகரன், நுட்பம் ஆகியவற்றிலும் வெளியானவை. இது 1987இல் வெளிவந்த

குறுநாவல் தொகுதியான "மண்ணின் குரல்" என்ற நூலை அடுத்து ஆசிரியரின் இரண்டாவது நூலும் முதலாவது கவிதைத் தொகுதியுமாகும். சமகால அரசியலோடு, அகதிவாழ்வின் அவலத்தைப் பதிவுசெய்யும் பாடல்களையும், மானிட விடுதலை பற்றிய தொலைநோக்குடனான பாடல்களையும் இத்தொகுப்பு அகப்படுத்திக் கொண்டுள்ளது. கவிதைகளின் இறுதியில் அக்கவிதைகளின் பின்னணி பற்றிய புரிதலை வழங்கும் சிறு குறிப்புகளும் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. விடிவெள்ளி, இயற்கைத் தாயே, தாஜ்மஹால், சுடர்ப் பெண்கள் சொல்லும் இரகசியம், எங்கு போனார் என்னவர்?, விழி-எழு-உடைத்தெறி, நியதியை உணர்ந்தவர்கள், எழுக அதிமானுடா, தை பிறக்க, விளங்கிச் செல்வோம், பாரதி என் தலைவன், மும்மூர்த்திகள், எங்கோ இருக்கும் ஒரு கிரகவாசிக்கு, தமிழா, எதிர்பார்ப்பு, ஆசை, எழுக மானிடா, ஐன்ஸ்டைன், என்ன நியாயம், அழிவு, அ.ந.கந்தசாமி, மார்க்ஸ், மேப்பிள் மண்ணின் மைந்தர்களே i-iii, துருவத்தை நோக்கி, காடு, பெண்கள், இழந்துபோன பொழுதுகள், பிறப்பின் பயன் ஆகிய 30 கவியாக்கங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 071518).

## 14585

**எறிகணைத் தாலாட்டு.** சாத்தானின் சகோதரன் (இயற்பெயர்: ஆ.கண்ணப்பன்). மருதமுனை: ஹிஸ் ஸபாப் கம்பியூட்டர் சேர்விஸஸ், 1வது பதிப்பு, ஜுலை 2002. (கல்முனை: க்ரேட் ட்ரஸ்ட் அச்சகம், மட்டு வீதி).

60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x15 சமீ.

பட்டிருப்புத் தொகுதியின் பழம்பெரும் கிராமமான களுதாவளையில் பிறந்தவர் கண்ணப்பன். இலங்கை வானொலியின் தமிழ்ச்சேவையில் இவரது ஆக்கங்கள் களம் கண்டன. இத்தொகுதியில் இவரது 36 கவிதைகள் இடம்பெறுகின்றன. முடிவுகளின் தொடக்கத்தில், கணனி எதிர்வுகள், காற்றலை நியாயங்கள், ஈ மெயில் சங்கதி, மூளைச் சலவைகள், வெள்ளைப் பிரம்பு, தொலைபன்னி உபதேசம், முதல் மூச்சு, மின்சார ஜோசியம், கணிப்பொறி ஞானம், கறுப்பு நிலா, மனிதம் வாழ, செய்மதிச் செய்திகள், பிணங்களும் சவங்களும், தேவையும் நிவாரணமும், முடிவை எடு, எறிகணைத் தாலாட்டு, சமாதிகளின் சமாதானம், மின்வெட்டு வாசகங்கள், பற்றிக்கொள், அந்தரங்கச் சமாச்சாரம், செவிகளைத் தாருங்கள், உன்னிலே நான், நிதர்சன நிகழ்வுகள், கவிதையிலே மட்டும், படலைக் கிரகணர்கள், உண்மையின் உண்மைகள், சத்தமில்லாச் சம்மதக் கதவாலே, புளுதிப் பூக்கள், நான், மூன்றாம் பிறை முன்மொழிவு, வழக்கம் போல, எழுந்து நடக்கும் எலும்புக் கூடுகள், பெயர்வுகளின் பெயர்ப்புகளில், உதிரும் நட்சத்திரம், களஞ்சியத்திலிருந்து ஆகிய தலைப்புகளில் இக்கவிதைகள் வெளிவந்துள்ளன.

## 14586

**என் இதயம் பேசுகிறது.** ஏ.சீ.எம்.இப்றாஹீம். கிண்ணியா 4: பேனா பதிப்பக வெளியீடு, 118, நகரசபை வீதி, 1வது பதிப்பு, 2015. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

108 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-0932-13-9.

ஆசிரியரின் ஐம்பது வருடகால கவிதைகளின் தொகுதி. இத்தொகுதியிலுள்ள கவிஞர் A.C.M. இப்றாஹீம் அவர்களின் கவிதைகள் அனைத்தும் மரபின் கடந்தகால, நிகழ்கால வர்ணனைகள் ததும்பும் தெளிவுமிக்க சொற்களின் கலவைகள் எனலாம். இவர் தனக்கானதொரு பாதையில் தன் கவிதைகளை வளர்த்து மனதுக்கு மிகவும் இதமளிக்கும் வகையில் சிந்திக்க வைக்கும் கருத்துக்களை எங்கெங்கோ இருந்து தேடிப்பிடித்து அவற்றை மரபின் சுவையுடன் கவிதைகளாக இங்கு தன் இதயத்தின் வாயிலாகப் பேசவைத்திருக்கிறார். ஆசிரியரின் இரண்டாவது கவிதைத் தொகுப்பாகவும், பேனா பதிப்பகத்தின் 17ஆவது வெளியீடாகவும் இந்நூல் வெளிவந்துள்ளது. ஏ.சீ.எம். இப்றாஹீம் இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திர சேவையில் இணைந்து, சீனக்குடியரசின் தலைநகரிலும், தாய்லாந்து, சவூதி அரேபியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் சேவையாற்றியவர்.

### 14587

**என்னத்தை எழுதி என்னத்தை கிழிக்க.** கந்தையா பத்மானந்தன். காரைநகர்: அம்மாத்தை வெளியீட்டகம், வாரி வளவு, 1வது பதிப்பு, 2019. (தெகிவளை: அனுபவ பதிப்பகம், Creaze Digital, 14, அத்தபத்து டெரஸ்).

vi, 70 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-624-5222-03-2.

காரைக்கவி கந்தையா பத்மானந்தன் காரைநகர் மண்ணின் கல்வித்துறை ஆளுமைகளில் ஒருவர். அவர் எழுதிய புதுக் கவிதைகளின் தொகுப்பு இது. மாதிரிக்கு ஒன்று: வேலியை விட்டு நட்ட/ கதியால் கொஞ்சம் விலகியதால் பக்கத்து/ வீட்டுக்காரனுடன் வந்த/ வேலிச் சண்டை வில்லங்கத்தை/ முறையிடக் கோவிலுக்குப் போனால்/ அம்மன் வழக்கு விசாரணைக்காக/ கோட்சுக்குப் போய்விட்டதாக/ ஐயர் குறைபட்டுக் கொண்டார். விஞ்ஞானப் பட்டதாரியான கந்தையா பத்மானந்தன், முதுநிலைக் கற்கையினையும், தொழில்வாண்மைக் கல்வியினையும் பல்வேறு நாடுகளிலும் பெற்றிருந்தவர். இலக்கியத்துறையில் கவிதை, கட்டுரை என ஈடுபாட்டுடன் எழுதி வருபவர்.

### 14588

**என்னமோ இருக்கிறம்.** கந்தையா பத்மானந்தன். காரைநகர்: அம்மாத்தை வெளியீட்டகம், வாரி வளவு, 1வது பதிப்பு, 2019. (தெகிவளை: அனுபவ பதிப்பகம், Creaze Digital, 14, அத்தபத்து டெரஸ்).

vi, 71 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-624-5222-02-5.

காரைக்கவி கந்தையா பத்மநாதன் அவர்களின் மற்றுமொரு கவிதைத் தொகுதி. நூலாசிரியர் பல்துறை ஆளுமையுடையவராகத் தன்னை இனம்காட்டிக்கொண்டவர். விஞ்ஞானத்துறையில் ஆரம்ப பட்டத்தினை பெற்றுக்கொண்டவர். தொடர்ச்சியாக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பல்வேறு முதுநிலை பட்டக் கல்விநிலைகளை பூர்த்தி செய்துள்ளார். இவரால் படைக்கப்பட்ட இந்நூலில் உள்ள கவிதைகளில் இறையியல், சமூக நடப்பியல் சார்ந்த பிரச்சினைகள் பேசப்பட்டுள்ளன.

## 14589

**எனது மகள் கேள்வி கேட்பவள்.** *கற்பகம் யசோதர (இயற்பெயர்: பிரதீபா கனகா-தில்லைநாதன்). சென்னை 600005: வடலி வெளியீடு, பி-55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1வது பதிப்பு, ஜனவரி 2020. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*102 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-1-7752392-8-4. (நூலின் உட்புறத்தில் ISBN: 978-1-7752392-7-7 என்று பதிவாகியுள்ளது).*

*அரசாங்கங்கள் தமது ஒற்றைத் தன்மையுடைய வழிமுறைகளை தமக்கான அதிகாரங்களை தக்கமைத்த நாட்டில், தான் வாழ்ந்த-எதிர்கொள்கின்ற பல்வேறு அரசியல் சிக்கல்களையும், அதிகார சமமின்மைகளையும், வன்முறைகளையும், சனநாயக மீறல்களையும், அதிகாரத்திற்கு எதிராக நின்று பேசுகின்ற கவிதைகள் கற்பகம் யசோதரவினுடையவை. ஒடுக்கப்படும் சிறுபான்மையினரின் அரசியலை-அவர்கள் எதிர்கொண்ட கீழைத்தேய வன்முறைகளை மேலைத்தேய அரசின் வன்முறையுடன் ஒப்பிடுவதினூடாக-சிறுபான்மையினராய் எங்கும் இணைந்துவிடாத அசமத்துவத்தின் பயங்களையும் அதன் அரசியலையும் இவை பேசுகின்றன. "எனது மகள் கேள்வி கேட்பவள்" வளர்ந்து கட்டமைக்கப்பட்ட கருத்தியல்களுடன் முரண்படப் போகின்ற மகள்களை எதிர்வுகூறுவது. சமத்துவமற்ற இந்த வாழ்வில்- முரண், இயல்பு. ஆதலால் முரண்படவும் தங்கிப் போதலன்றி ஒப்புவித்தலன்றி அநீதிக்கெதிராய் கேள்வி கேட்கவும் ஒன்றிணையவும் வேண்டிநிற்கின்றன இக் கவிதைகள். வன்னிப் பிரதேசத்தின் மல்லாவியில் 1980களில் பிறந்தவர் பிரதீபா கனகா-தில்லைநாதன். இவரது தந்தையார் கே. தில்லைநாதன் ஒரு விடுதலைப் போராளியாவார். சில காலம் இலங்கைப் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர். 1990இல் போராளிகளின் முடிவுக்கிணங்க பதவியைத் துறந்து வெளியேறியவர். கற்பகம் யசோதர தற்போது புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்துவருகிறார்.*

## 14590

**ஒரு சென்ரி மீட்டர் சிரிப்பு பத்து செகன்ட் கோபம்.** *ஜே.பிரோஸ்கான். கிண்ணியா 3: ஜே.பிரோஸ்கான், பேனா பப்ளிக்கேஷனஸ், 92/4, உமர் ரழி வீதி, மஹ்ரூப் நகர், 1வது பதிப்பு, ஏப்ரல் 2013. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).*

*104 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 12x16 சமீ., ISBN: 978-955-0932-03-0.*

*காதல் என்பது ஓர் அழகான உணர்வு. காதலை ஆழமாக, அழகாக இரசிக்காதவர் உலகில் இல்லை எனலாம். அத்தகையதொரு காதல் பதிவினை வெளிப்படுத்துவதாய் இக்கவிதை நூல் அமைகின்றது. சிறு சிறு கவிதைகளாய் அமைந்து படிப்பவரின் வாசிப்பு ஆர்வத்தை இக்கவிதைகள் தூண்டிவிடுகின்றன. கையடக்க அளவில் வெளிவந்துள்ள நூல்.*

### 14591

**ஒரு தேவதையின் சிறகசைப்பு.** *பாலசுகுமார். மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2018. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 126/1, திருமலை வீதி).*

*72 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x15 சமீ.,* ISBN: *978-955-4041-13-4.*

*உலக இலக்கியத்தின் பெரும் தொகையான கவிதைகள் துன்பியல் உணர்வுகளையே விதம்விதமாகப் பேசுகின்றன. பிரிவுகளைப் பேசும் பாலைக் கவிதைகளே தமிழ் செவ்வியல் பரப்பிலும் அதிகம். 2004இல் சுனாமிப் பேரலைக்குத் தன் மகளை அவளது பிறந்தநாள் குதூகலத்தின் பின்னணியில் இழந்த ஒரு தந்தையின் சோகம் இங்கே வார்த்தைகளாக வார்க்கப்பட்டுள்ளது. இதுவரை நேசங்களை மட்டுமே பாடித் திரிந்த கவிதைகள் தமிழ்க் கவிதைப் பரப்பிற்கு அறிமுகமாகியிருக்க இன்று ஒரு தந்தையின் பாசத்தை பாடும் கவிதைகள் புது வரவாகின்றது. அவளது பிரிவின் சோகத்தில் தான் காணும் அனைத்தையும் தனது மகளாய் காணும் ஒரு தந்தையின், அவள் பிரிவின் பின்னரும் அவள் தன்னுடன் பயணிப்பதான உணர்வில் கரைந்துபோகும் ஒரு தந்தையின் புலம்பல் வரிகளாய் இக்கவிதைகள் உணர்வும் சதையுமாய் நம்முடன் பேசுகின்றன. இந்நூல் மகுடம் வெளியிட்டகத்தின் 19ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது. வேலணை.கொம் (கனடா) இன் நிதி அனுசரணையில், தட்டுங்கள்.கொம் (கனடா) இன் ஊடக பங்களிப்புடன், மகுடம் கலை இலக்கிய சமூக பண்பாட்டு காலாண்டிதழ் வருடந்தோறும் வழங்கிவரும் "உலகப் பெரும் கவிஞர் பிரமிள் என்கிற தர்மு சிவராம் நினைவு, பிரமிள்விருது-2018" இற்கு இந்நூலும் தேர்வுபெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.*

### 14592

**ஒரு நதியின் தேடல்.** *கு.றஜீபன். யாழ்ப்பாணம்: சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி நினைவுமலர்க் குழு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்மார்ட் பிரின்ட்ஸ், 717, காங்கேசன்துறை வீதி).*

*(4), 24 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x10.5 சமீ.*

*வாழ்க்கையில் பெற்ற அனுபவ விதைகளை சிந்தனைத் தோட்டத்தில் பதியம்வைத்து முளைத்த நாற்றுக்களே இக்கவிதைகள். வாழ்க்கை என்னும் தத்துவ நூலின் ஓரிரு வரிகள் இவை. வாழ்க்கை என்னும் நூலகத்தில் வாலிபம் என்னும் பிரிவுக்குள் காகிதம் நனையக் கரைந்து கரைந்து இக்கவிஞன் ஈரவரிகளால் தன் கவிதைகளைப் பிரசவித்துள்ளான். அனுபவ முத்திரைகளை அன்பாலும் கண்ணீராலும் பெற முயலும் ஒரு குழந்தையின் மழலைப் பேச்சுக்களாக இவை உதிர்ந்துள்ளன. அன்பின் ஆழத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் எண்ண அலைகள் இங்கு ஒரு நதியின் தேடலாக வடிவம்கொண்டுள்ளன. அமரர் சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி அவர்களின் 21ஆம் நாள் நினைவஞ்சலியை முன்னிட்டு அவரின் ஞாபகார்த்தமாக இக்கவிதைத் தொகுதி தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.*

## 14593

**ஒரு வேள்வி ஆட்டின் விண்ணப்பம்: அனாதியன் கவிதைகள்.** *மார்க் ஜனாத்தகன். லண்டன்: தொலைநோக்கி வெளியீடு, 1வது பதிப்பு, நவம்பர் 2016. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).*

xvi, *129 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5*x*12.5 சமீ.*, ISBN: *978-955-42815-0-9.*

*புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் இங்கிலாந்து தேசத்தில் வசிக்கும் ஈழத்தின் முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவியைச் சேர்ந்த அனாதியன் என்கின்ற மார்க் ஜனாத்தகன் எழுதிய கவிதைத் தொகுதி இது. முகநூலில் "அனாதியன் கவிதைக் களம்" எனும் கவிதைப் பக்கம் ஒன்றினையும் இவர் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வலிசுமந்த, கட்டிழந்த சமூகத்தின் உள்ளுடைப்புகளை இவரது தன்னுணர்வுக் கவிதைகளில் காணலாம். மிகையான வேகநடையில் ஆக்ரோஷ மாக அமைந்த சொற்கோவைகளினூடாக காலப்பாதையில் இவரது கவிதையூர்தி பயணிப்பதாகவும், வறண்டுபோயுள்ள பிரதேசக் கவிப்பாதைக்கு புத்துயிர் தருவதாக இத்தொகுப்பு அமைந்துள்ளதாகவும் நூலாசிரியர் அறிமுகத்தில் கவிஞர் வே.முல்லைத்தீபன் குறிப்பிட்டுள்ளார்.*

## 14594

**கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும்.** *வேலணையூர் ரஜிந்தன் (இயற்பெயர்: பாலசுந்தரம் ரஜிந்தன்). வேலணை: பாலசுந்தரம் ரஜிந்தன், 4ம் வட்டாரம், வேலணை கிழக்கு, 1வது பதிப்பு, ஒக்டோபர், 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

xiv, *82 பக்கம், விலை: ரூபா 300., அளவு:17.5*x*12.5 சமீ.*, ISBN: *978-955-71331-2-6.*

*கவிஞர் ரஜிந்தன் எழுத்தாணி முனையில் பயணப்பட்டிருக்கும் தனது பயணத்தில் பொற்கனவு, நிலா நாழிகை, ஆகிய கவிதை நூல்களைத் தொடர்ந்து மூன்றாவது கவிதைத் தொகுப்பாக இந்நூலை வெளியிட்டுள்ளார். கடந்தகால அனுபவங்கள், நிகழ்காலப் படிப்பினைகள், எதிர்கால எதிர்வுகூறல்கள், என்ற அடிப்படையில் தன் சிந்தனையில் உதித்த முத்துக்களைப் பத்திரப்படுத்தி வைத்திருந்து அவற்றில் "வரம் வேண்டும்" என்ற கவிதையில் தொடங்கி, "மீள் பிரசவம்" என்ற கவிதை ஈறாக 50 கவிதைகளைத் தேர்ந்து கவி மாலையாகக் கோர்த்திருக்கின்றார். இக்கவிஞர் யாழ். நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயத்தின் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.*

## 14595

**கலாபம்(கவிதைத் தொகுப்பு).** *ம.கலையரசி. ஹட்டன்: மகேந்திரன் கலையரசி, செனன், 1வது பதிப்பு, 2015. (ஹட்டன்: காயத்திரி அச்சகம்).*

*112 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20*x*14 சமீ.*

*ஹட்டன்-செனன் தமிழ் மகாவித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரம் வரை கற்றிருக்கும் இக்கவிஞர், தமிழிலே தன்னைச் செழுமைப்படுத்திக்கொண்டவர். இயல், இசை, நடனம் என இன்னோரன்ன துறைகளில் ஈடுபாடுகொண்ட*

இவரின் விருப்புக்குரிய தெரிவாக கவிதையும் அமைந்துவிட்டது. தன்மனக் கதவினைத் தட்டிநின்ற சமகால வடிவங்களை, வக்கிரங்களை, எழுச்சிகளை, வீழ்ச்சிகளை, மன உளைச்சல்களைத் தன் நூலிலே வெளிப்படுத்தியுள்ளார். இவரது கன்னி முயற்சியாக இக்கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது. அன்புத் தாயே, குழந்தையாகிறேன், மரணித்த மனிதம், கொழுந்துப் பெண், காதல் வழக்கு, உன் முகம் காண, மன்னிக்கலாமா?, அறிந்தவனானேன், இன்னுமொரு முறை, க(இ)ஷ்டம், கலையாத சோகம், சாத்தான், தனிமை, கள்ளி, கணவனின் கல்லறையில், மலடியின் தாலாட்டு, விதியின் சதியில், ஆட்டுக்காரி, சுரம் தந்த வரம், பெண்ணே, நீயெனக்கு, பூப்பூக்கும் ஓசை, மத்தாப்பூ? களவொழுக்கம், மாற்றம் தான், தொடரும் பயணம், இறந்துபோனவள், வெட்டிவைத்த புதைகுழி, ஆயாமரம், சிருஷ்டி, கலிக்காதல், மலை தே(ந)சம், நீ என் காதலியானால், எனக்கும் தருவீர்களா?, காதலித்துப் பார், கலாபம், ஒரு முறையாவது பாருங்களேன், அகதிகளானோம், போற்றிப் பாடடி கண்ணே, திறனற்றவன், அம்மாவின் கணவன் ஆகிய 41 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## 14596

**கலையுருக்காட்டி** (**Kaleidoscope**). இ.சு.முரளிதரன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஐப்பசி 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

vii, 54 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN:978-955-0958-18-4.

தமிழ் ஆசிரியராக முரளிதரன் பல்வேறு காலங்களில் தோன்றிய கவிதை மரபுகளை மாணவர்களுக்கு கற்பித்து வருவதால் கவிதைகளுடனான இணக்கம் இவருக்கும் ஏற்பட்டு கலையுருக்காட்டியினுள் வீழ்ந்த சொற்கள் நுண்ணதிர்வால் பன்முகத் தோற்றத்தில் இவருக்குத் தென்படுகின்றன. அதுவே இவரால் காத்திரமான கவிதைகளைப் படைப்பதற்கான கற்பனா விரிவினை ஏற்படுத்தியுள்ளது. அந்த உணர்விலேயே இக்கவிதைத் தொகுப்பின் தலைப்பினையும் "கலையுருக்காட்டி" என்று வைத்திருக்கிறார். இத் தொகுப்பில் சங்கப் பத்து, நீதிப் பத்து, பாதீனியம், பள்ளி எழுச்சி, நானோப்பதிகம், புட்பக விமானம் பலம்பல், வான்புகழ், தமிழ் அந்தாதி, மால் மாலை மாற்று, நடராசா திருத்தசாங்கம், எறிகணை விடு தூது, சிலேடை வெண்பா, காடு, குறும்பா, கும்மி, ஹைக்கூ, மலர்கள், இங்கே எங்கே, துயரின் பாடல், மிகப் பொருத்தமான விடை ஆகிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. சங்ககால கவிதை மரபினைப் பின்பற்றி இக்கவிதைகள் ஒவ்வொன்றும் வடிக்கப்பட்டிருப்பினும் அவற்றின் பேசுபொருள் சமகாலமாகவே உள்ளன. இந்நூல் ஜீவநதி வெளியீட்டகத்தின் 129ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது.

## 14597

**கவிதைச் சாரல்**. பாமதி மயூரநாதன். யாழ்ப்பாணம்: திருமதி பாமதி மயூரநாதன், திருப்பதி, இணுவில், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2019. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில் கிழக்கு, இணுவில்).

viii, 72 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ.

பல காலமாக இயல்பாகவே திருமதி பாமதி மயூரநாதனுக்கு அமைந்துவிட்ட சிந்தனைச் சிதறல்களை புதுக்கவிதை உருவில் எமக்கு வழங்கியிருக்கிறார். அவ்வப்போது மனதை வருடும் உணர்வுகள் புதுக்கவிதைகளாக இடைக்கிடையே ஆன்மீக அறநெறிக் கலவையுடன் உருவெடுத்துள்ளன.

## 14598

**கறுப்பு வானம்.** நெடுந்தீவு முகிலன். சென்னை 600078: நீர் வெளியீடு, எண் 10, ஆறாவது தெரு, முதல் பிரிவு, கே.கே.நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

72 பக்கம், விலை: இந்திய ரூபா 65.00, அளவு: 21x14 சமீ.

"எனது நிலா சூரியன் உடுக்கள் கோள்கள் மின்னலைக்கூட எனது வானத்தில் இருந்து யாரோ களவாடி விட்டார்கள். இருட்டுக்கு பழகிய என் வாழ்தலில் கறுப்பு இரட்டிப்பாகிவிட்டது. கறுப்பை சோகத்தின் பாசையாகவோ தேசத்தின் பாசையாகவோ நான் அப்பிக்கொள்ளவில்லை. இருந்த வெளிச்சமும் அணைந்து புகையே மேலெழ இருண்ட தெருவில் பயணம் போகிறேன். வண்டல் வண்டலாய் என் வண்ணக் கனவுகள் இரண்டே விழிக்குள் பதுங்கியிருந்தன. இப்போது இறந்து கிடக்கின்றன. எங்கேயாவது மின்மினிப் பூச்சியைப் பார்த்தால் பின்னால் ஓடும் பழக்கமும் எனக்கில்லை. விண்வெளியில் பெரும் கறுப்பு ஓட்டைகள் நட்சத்திரங்களை விழுங்குகின்றனவாம். கறுப்பு இங்கே என்னை துப்பி விட்டிருக்கின்றது. கறுப்பு என்பது ஒரு நிறம் அல்ல. அது எந்த நிறங்களினதும் இல்லாமையே. அதனால் தான் எனது வாழ்க்கையும் ஒத்துப்போகின்றது போலும். கறுப்பு எனது வானம் மட்டும் அல்ல. என் தேசமும் கூடவே விடுதலையும் தான்"(ஆசிரியர், முன்னுரையில்).

## 14599

**காலநதி: கவிதைத் தொகுப்பு.** வட்டக்கச்சி வினோத். கிளிநொச்சி: தொலைநோக்கி, வட்டக்கச்சி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2017. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xiv, 66 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-43466-0-4.

யாழ்ப்பாணத்தில் பிறந்து, வடபகுதியின் நீரேந்துப் பிரதேசமான இரணைமடுக்குளக் கரையில் அமைந்துள்ள வட்டக்கச்சியை வாழ்விடமாகக் கொண்டவர் வினோத். சமூகவலைத்தளங்களில் தன் கவிதைகளால் அறிமுகமானவர். இது நூலுருவில் வெளியாகிய இவரது முதலாவது கவிதைத் தொகுதி. தனக்குத் தெரிந்த தமிழில் எளிமையான வரிகளைத் தொடுத்து கவிதை படைக்கும் இவரை முகப்புத்தகமே அறிமுகப்படுத்தியது. காலநதி இவரது முதலாவது நூலாக வெளிவந்தது. போராட்டம், புனர்வாழ்வு என்று எல்லாத் தமிழ் இளைஞர்களையும் போல இக்கவிஞனையும் தொட்டுப் போன ஒன்றே. கவிதை இவரது பாடசாலை முடிவுக் காலத்தில் தொடங்கி போர்காலம், சிறைக் கூடம் என்பவற்றில் தனது அப்பியாசப்

புத்தகத்தில் எழுத்துக்களாக தொடர்ந்ததாகக் குறிப்பிடுகின்றார். முகப்புத்தகம் இவருடைய பாதையில் புதிய திருப்பத்தையும் இலக்கிய வட்டத்தையும் அறிமுகம் செய்திருந்தது. இவரது முதல் பாடல் வரிகளாக குப்பிளான் கன்னிமார் அம்மன் கோயிலில் வெளியீடு செய்யப்பட்ட "கருணை அழகே கௌரியம்மா" என்னும் இறுவெட்டில் சுதர்சன் அவர்களின் இசையில் தமிழகப் பாடகி அனுராதா ஸ்ரீராம் பாடி இருந்தார். தமிழகத்தின் கந்தப்பூக்கள் யுகபாரதி அவர்கள் இவரது ஹைக்கூ கவிதைகளை சீர்மைப் படுத்தி ஹைக்கூ எழுதக் கற்றுத்தந்ததாகக் குறிப்பிடுகிறார்.

## 14600

**குறுக்கால போவானே கோதாரி விழுவானே.** கந்தையா பத்மானந்தன். காரைநகர்: அம்மாத்தை வெளியீட்டகம், வாரி வளவு, 1வது பதிப்பு, 2019. (தெகிவளை: அனுபவ பதிப்பகம், Creaze Digital, 14, அத்தபத்து டெரஸ்).

viii, 62 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-624-5222-01-8.

இந்நூலில் காரைக் கவிஞரின் மாற்றத்தின் மாற்றம், வெள்ளத்தை விரும்புகிறேன், உடைந்த விளக்கு, அரங்கப் பேச்சு, எங்கள் வீட்டு குசினி, எல்லைப் பிரச்சினை, ஐ டோன்ட் நோ டமில், தேர்த் திருவிழா, நிவாரணமே என்றும் நீ வாழி, தென்றல், பறவை, மரம், குறுக்கால போவானே கோதாரி விழுவானே, வாளேந்திய யாழ்ப்பாணத் தம்பி, ஒளிந்துபோன ஊர், பச்சை வீட்டு விளைவு, எழுதி முடியாத கதை, விதவையின் விசும்பல், பதின்மூன்றாம் திருத்தம், விதவை மரங்கள், சும்மா வந்த சுதந்திரம், கோச்சியும் வந்திட்டுது, பொங்கல், மாற்று வலுவோர், முதிர் கன்னிகள் ஆகிய தலைப்புகளில் இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளன.

## 14601

**சமுத்ராவும் அவளிசைக்கும் புல்லாங்குழலும்.** சப்னா செய்னுல் ஆப்தீன். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661,663,675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2018. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

88 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22.5x14 சமீ., ISBN: 978-955-30-9624-1.

தடாகம் கலை இலக்கிய வட்டத்தின் மூலம் 2018இல் "மாயாவின் பேனா" என்ற கவிதைத் தொகுப்பினை வழங்கிய இக்கவிஞரின் மற்றுமொரு கவிதை நூல் இது. இதில் கடலலை கூறும் கதை, நிலவும் அவளும், கற்பழிப்பு, பகல்கள், அதிர்ஷ்டம், அவள் இறந்துவிட்டாள், இதுதான் மழை, புரிதல், வித்தியாசமான உலகம், இரவு, கறுப்பி, கவிதையின் வடிவம், அது அமாவாசை, காதலெனும் நதியினிலே, ஊதா, வேர்விடும் கனவுகள், மழையின் ஈரம், அவன் இமைகளைப் பிடித்திருக்கிறது, முதற்படி, பூக்கள் பறிமுதல், அவள் ஒருத்தி, சுயநலக்காரி, என்னை ஏமாற்றி விட்டாய், எதிர்பார்ப்பு, அவர்கள் நல்லவர்கள், அது ஓர் அறிமுகம், புதிர்கள், ஒற்றை முத்தம், அர்ப்பணிப்பு, ஒரு கோப்பை தேநீர், பயணங்கள், தாய்மை, விதவை, பிச்சை, வண்ணங்கள், அழகு, கடிகாரம், குருடிக்குத் தெரிந்த நிறம், நட்சத்திர பூமி, மீன்கள், மன்னிப்பதென்பது அத்தனை இலகுவானதா, புதையல்,

அவள், காடு, அது ஓர் ரகசியம், உள்ளத்தின் தீ, கனவுகள் கரைகின்றன, நிழலொன்று நிஜமானது, வாழ்த்துக்கள், காகிதப் பூவாகிறேன் ஆகிய தலைப்புகளில் கவிதைகள் தேர்ந்து தரப்பட்டுள்ளன.

### 14602

**சாமரையில் மொழிகலந்து: கவிதைத் தொகுதி.** அன்புடீன் (இயற்பெயர்: பீ.எம். கலந்தர் லெவ்வை). அக்கரைப்பற்று: பாலம் கலை இலக்கிய பேரவை, ஏ.ஜே. கொம்ப்ளெக்ஸ், பிரதான பாதை, 1வது பதிப்பு, ஜனவரி, 2002. (அக்கரைப்பற்று-01: செலெக்ஷன் ஒப்செட் பிரின்ட் ).

xvi, 116 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 21x15 சமீ.

அம்பாறை மாவட்டம் பாலமுனை கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அன்புடீன். அட்டாளைச்சேனை பிரதேசத்தின் மூத்த கலை இலக்கியப் படைப் பாளிகளுள் ஒருவராகக் குறிக்கப்படுபவர். கலை, இலக்கியச் செயற்பாடுகளில் இவர் சுமார் 35 வருட காலமாக ஈடுபட்டு வருகின்றார். முகங்கள், சாமரையில் மொழிகலந்து போன்ற கவிதைத் தொகுதிகளும், நெருப்பு வாசல் எனும் சிறுகதை தொகுதியும் இவருடைய படைப்பு நூற்களாகும். தபால் திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள அன்புடீன் - பல்வேறு சமூக சேவை அமைப்புக்களில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்து வருகின்றார். கவிதை, சிறுகதைகள், உருவக்கதைகள், வானொலி/மேடை நாடகங்கள் என இவர் பதித்த தடங்கள் பல. மக்கள் சுதந்திரம், மானுட மகிழ்ச்சி, மனித சமத்துவம் இவைகளை இலட்சியமாகக் கொண்ட இக்கவிஞரின் கவிதைகளிலும் இவற்றைக் காணமுடிகின்றது. "காற்றும் கவிஞனும்" என்ற கவிதையில் தொடங்கி "சூரியன் வரைக்கும் என் தொனி கேட்கும்" என்ற கவிதை ஈறாக 49 கவிதைகள் இங்கு இடம்பெற்றுள்ளன. "சாமரையில் மொழி கலந்து-சில அவதானக் குறிப்புகள்" என்ற தலைப்பில் குறிப்புரையும் இறுதியில் இடம்பெற்றுள்ளது. பாலம் கலை இலக்கிய பேரவையின் முதலாவது பிரசுரமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

### 14603

**சிகண்டி: தன்னைக் கடந்தவள்.** கவிதா லட்சுமி. சென்னை 600 042: யாவரும் பப்ளிஷர்ஸ், 214, புவனேஸ்வரி நகர் 3வது மெயின் ரோடு, வேளச்சேரி, 1வது பதிப்பு, ஜனவரி, 2020. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(8), 9-114 பக்கம், விலை: இந்திய ரூபா 140., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-88133-63-0.

புலம் பெயர்ந்த ஈழத்தவரின் இரண்டாவது பரம்பரையின் அசுரவளர்ச்சிக்கு ஓர் சிறந்த உரைகல்லாக விளங்குபவர் கவிதா லட்சுமி. ஈழத்தின் வடபுலத்தில் குரும்பசிட்டியை பிறப்பிடமாகக் கொண்ட கவிதா லட்சுமி மிகச்சிறிய வயதில் புலப்பெயர்வுக்கு ஆளாக்கப்பட்டவர். முதலில் தமிழகத்திலும், பின்னர் தற்பொழுது நோர்வே நாட்டிலும் வசித்துவரும் கவிதா, கவிதை, இலக்கியம், நடனம் என்று

பன்முக ஆற்றல்களை தன்னகத்தே கொண்டவர். ஈழத்தின் இரண்டாம் புலம்பெயர் தலைமுறையில் தனக்கென்று தனிமுத்திரை பதித்த கவிதா பெண்ணிய, சமூக சிந்தனைகளை உடையவராகவும் எம்மிடையே அடையாளப் படுத்தப்பட்டுள்ளார். இவரது கவிதைகள் பெண், சமூகம் போர், வாழ்தல், காதல், மொழியாக்க கவிதைகள் என்று பல்வேறுபட்ட தளங்களில் பாடுபொருள்களைக் கொண்டவை. இவரது கவிதைகளிலே இலகு சொல்லாடல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்தொகுதியில் இவரது படைப்புக்களான கிறுக்கல்கள், தன்னைக் கடந்து, என்னை வரையும் நான், நான் பெண்மையின் உச்சமாகிறேன், பேரழகு, மகனுக்கு, ஊஞ்சல், ஒரு பறவையைக் கொல்வது எப்படி?, கவிதை, கனவு விரிப்பு, சூர்ப்பனகை, அப்பம்மாவின் வீடு, தற்கொலை செய்தவனின் நாட்குறிப்பு, முத்தங்கள், மழைப்பெண், அப்படியே விடு, ஞானம் தேடிச் சென்றவர் கதை, நதியானவள், காலவெளி, ஒரு கவிதை, இரவல் முகத்தவர், நிராகரிப்பு, எல்லாவற்றிலும் நீ, நோர்வேஜிய சுதந்திரதினம், பிரபஞ்சம் மொய்க்கும் நிலவு, கிரவுஞ்சப் பறவை, என் மகனின் காதலிக்கு, இதயம் எனக்குச் சொந்தமல்ல, எனது பாட்டியின் கண்கள், கடவுள்தான் காப்பாற்றவேண்டும், பாம்புகள், எழுத்தென்பது தொடர் கனவு, வேதாளம் சொல்லும் கதை, உலகினை ஒரு பந்தாக்கி அவர்கள் விளையாடத் தொடங்கினர், இயக்கம், கடவுளோடான சந்திப்பு, காத்திருப்பு, தெளிவுகள், தூரிகைத் தீ, கனத்த மிடுக்கு, அவள்கள் அப்படித்தான், பயணம், முத்தத்தின் இறகு, பெண்கள் தினம், ஆண் என்பது எருமையைப் போன்றது, என் முகம், மழை சுமந்த மேகம், வனத்தீ, பரிசுத்தமற்ற நான், ஆட்டம், சிறுமியர் உலகு, மனம் மனம் மனம், பேரழகி, வனச்சிறுக்கி, ஒரு என்பது நீ, வீடு, நோர்வே நாடும் அமேசோன் காடும், குளிர்காலத்து இரவு, பழையோள், உடல் மனம் நிறம் ஆகிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## 14604

**சிவப்பு டைனோசர்கள்**. சு.தவச்செல்வன். நுவரஎலிய: பெருவிரல் இலக்கிய இயக்கம், கொட்டகலை தமிழ்ச்சங்கம், 1வது பதிப்பு, ஜுன் 2013. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர். இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

xi, 85 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-44552-07.

மலையகக் கவிதைச் சூழலில் பரவலாகப் பேசப்பட்ட கவிதைத் தொகுதி. கொடகே தேசிய விருது பெற்ற நூல். கவித்துவமான படிமங்களை உருவாக்குவதில் தவச்செல்வனின் ஆற்றலை இக்கவிதைத் தொகுதி சிறப்பாக வெளிப்படுத்துகின்றது. "தவச்செல்வனின் கவிதைகள் பற்றிச் சில வரிகள்" என்ற தலைப்பில் பேராசிரியர். சி. சிவசேகரம் அவர்களின் அறிமுகவுரையுடன், "கவிதை வெளியில் கால் ஊன்றும்போது" என்ற தலைப்பில் சு.தவச்செல்வனின் என்னுரையும் இந் நூலின் நுழைவாயிலாகின்றன. உள்ளே அவரது தேர்ந்த கவிதைகளான சாய்மனை, சிறுமியின் பாடல், காலத்தை சுமக்கும் கூடை, இரவில் உலாவும் நாய்கள், பூனூலும் சவரக்கத்தியும், வெண்மையாகும் கரும்புள்ளிகள், இருத்தலும் பறத்தலும், சூரியன் தீட்டும் ஓவியம், பொம்மைக் காதல், குப்பைத் தோட்டி, செங்காற்று, நட்பின் நிழல், அகிலத்தின் பிரம்மன்கள், இறந்தகாலமும் நிகழ்காலமும், சிவப்பு

நிற தேயிலைச் சிட்டு, நிர்வாண வெளி, டிராகுலாக்கள், நொறுங்கிய பழங்கண்ணாடி குறித்து, முற்றத்தில் வாழும் தூசுக்கள், மெல்ல நுழைதல், அடுத்த நூற்றாண்டில் நான் தொலைத்தவை, உன்னருகில் ஓர் உயிர், இயல்புப் புணர்ச்சி, தேவியின் தனிமை, புதைமேட்டில் பூக்கும் செவ்வரத்தம் பூக்கள், உணர்ச்சி பூக்கும் அடையாளங்கள், மரங்கள் பேசுகின்றன, பசுமை வார்க்கும் கரங்கள், மலைப்புறக் கழுகுகள், சிவப்பு பற்றி, முடிந்த கதையின் படிமங்கள், தலையிழந்த பனந்தோப்பு, போர்க்கால இரவுகள், முற்றத்துக் கோழிகள், தொலையும் தேசம், மீட்சி, சுனாமி, எச்ச வினைகள், விழிப்பு, வாழ்வுக் கோலம், சித்திரம், ஜூலை சுவடுகள், மா விருட்சம், உனது ஏழு அற்புதங்கள், தபுதாரப் பிரயத்தனம், தேர்தல் விண்ணப்பம், விண்மீன்கள் உருவான கதை, நிகழ்கால மாயை, ஒரு நதியின் வாழ்க்கைப் பயணம், பத்து தலை(முறை), இராவணன், உனது அதிசயக் கண்கள், சிவப்பு டைனோசர்கள், கூடு கலைப்பு, வைகறையில் ஒலிக்கும் விடுதலைப் பாடல், ஆராய்ச்சி, நானும் நீயும் மண்ணும், இதயச் செடி, இரவுச் சிறை என்பன இடம்பெற்றுள்ளன.

## 14605

**சிறகிழந்த கிளிகள்**. தானா. மருதமுத்து. ஹட்டன்: பாக்யா பதிப்பகம், இல. 4A, ஸ்டார் சதுக்கம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2014. (கொழும்பு 13: GOD Creative Lab).

xix, 50 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-1805-07-4.

பதுளையைச் சேர்ந்த இளம்கவிஞர் தானா மருதமுத்துவின் 25 கவிதைகளைக் கொண்ட முதலாவது கவிதைத்தொகுப்பு நூல். மல்லியப்பூ சந்தி திலகர் இந் நூலின் பதிப்பாசிரியராவார். பாடசாலையிலிருந்து இடைவிலகல் கண்ட மாணவனின் இலக்கியத் திறமையை இந்நூல் பறைசாற்றியிருப்பதிலிருந்து அவனது திறமை பாடசாலையில் கல்வியாளர்களால் இனம்காணப்படவில்லை என்ற வருத்தத்தை பதுளை கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் ஹாலிஎலவில் 11.11.2014 அன்று இடம்பெற்ற இந்நூலின் வெளியீட்டு விழாவில் சமூக ஆய்வாளர் வாழைச்சேனை ஏ.பி.இட்ரெஸ் முன்வத்தார். இந்நூலில் தானா மருதமுத்துவின் வாழியவே, தாய், உயிர்மூச்சு, கல்வி, அன்புக்கு உயிர்கொடு, உயிரே, தோள் நிறுத்து, என்னவர் காதல், உலகே தாழ் கிடக்கு, பெண் அடிமை இல்லையே, விலைமாது, கண்ணீரில் கரைத்த பொட்டு, வேலி, சிறகிழந்த கிளிகள், ஒரு வேளை சிரிப்பில், துயிலும் உள்ளம், இறைவா சாபமிடு, பொறுமையுடன் ஒருநாள், வீர வணக்கம், கலங்கி நில்லாரோ, இறைமனம் என்ன செய்யும்?, மொழிபேசும் இடைகள், இன்னல் துடைப்பாயா?, மரண முள், மரண சான்றிதழ் ஆகிய தலைப்புகளில் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## 14606

**சிறு கீற்று (கவிதைகள்)**. தாரணி இந்திரச்செல்வன். நுவரெலியா: வேலு இந்திரச்செல்வன், அலகல தோட்டம், 1வது பதிப்பு, ஜூன் 2011. (கொழும்பு 6: Fast Printers, 289-1/2 காலி வீதி, வெள்ளவத்தை).

*44 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.*

*மலையகத்தைச் சேர்ந்த வேலு இந்திரச் செல்வன்-தாரணி துரைராஜ் திருமண வாழ்வில் இணையும் வேளை முதல் பிரசவமாக இக்கவிதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார்கள். வாழ்வை ஆரம்பிக்கும்போதே சமூகத்திற்காக வாழ்வோம் என்று அவர்கள் கவிதை மூலம் பிரகடனப்படுத்திக்கொள்கிறார்கள். வேலு இந்திரச் செல்வன் அலகல தோட்டத்தைச் சேர்ந்தவர். க.பொ.த.உயர்தரத்துடன் ஆசிரியராகி கொட்டகல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியைப் பெற்றவர். நு/வ/ரிலாமுல்ல தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார். சென் லெனாட்ஸ் தோட்டத்தினைச் சேர்ந்த தாரணி சென்லெனாட்ஸ் தமிழ் வித்தியாலயம், ராகலை தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கற்று வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் ஆசிரியக் கல்வியைப் பெற்றவர். இவர் நு/ஹ/எலமுல்ல தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.*

**14607**

**சிறையில் இருந்து மடல்கள்**. *மாயன் (இயற்பெயர்: இரா.சிறீஞானேஸ்வரன்). திருக்கோணமலை: இரா. சிறீஞானேஸ்வரன், 159A, கடல்முக வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2016. (திருக்கோணமலை: சிறீராம் அச்சகம், 159A, கடல்முக வீதி).*

*106 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-44182-1-4.*

*உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் வெளிப்படுத்தியாகவே வேண்டும் என்ற நிலை தோன்றிய நேரமெல்லாம் இக்கவிஞரின் எழுத்தாணி வரைந்த ஓவியங்களே இக்கவிதைகள். நினைவு தெரிந்த நாள் முதல் சுதந்திரப் போரின் பல்வேறு பக்கங்களிலும் பயணித்த தனது வாழ்வில் போரைப் பாடாது தனது எழுத்து சாத்தியமாகாது என்கிறார். அகிம்சையையும் பொறுமையையும் சகிப்புத்தன்மையையும் எமக்கு மட்டும் போதித்துவிட்டு அருவருக்கத்தக்கதும் மனித இன மாண்புகளுக்கு எதிரானதுமான அவல வாழ்வைப் பரிசளித்தபோதே போதனைகளால் எம்மைப் பாதுகாக்க முடியாது என்பதைப் புரிந்துகொண்ட இனத்தின் ஒரு அங்கத்தினனாக இருந்து இக்கவிதைகளைப் பாடுகிறார். இயல்பாகவே இக்கவிதைகளில் எழும் தார்மீகக் கோபங்களுக்கு அதுவும் ஒரு காரணமாகின்றது. தமிழின உறுதியும், அவலமும், நம்பிக்கையும், நிராசையுமாக தன்னை அலைக்கழித்த வாழ்நிலையை உணர்ச்சிபொங்கும் கவிதைகளால் பதிவுசெய்திருக்கிறார். மீளக் குடியமர்வு, காணாமற் போனவர்கள், கடந்த இரவும் எனது நிலமும், தொலைந்த நீயும் தெருவிளக்கொளியும், உயிர்ப்பேன் நான் மறுபடியும், அலைதல், ஒரு போர்வீரனாய், பொடிமெனிக்கே, துளிர்ப்போம் தாயே, சிறையில் இருந்து மடல்கள் என இவரது கவிதைக்களம் இத்தொகுப்பில் பரந்து விரிந்துள்ளது.*

## 14608

**சீயக்காய் வாசக்காரியும் சில்வண்டுக் காதலனும்.** *அனாதியன் (இயற்பெயர்: மார்க் ஜனாத்தகன்). கனடா: ஐங்கரன் கதிர்காமநாதன், நிறுவுநர், படைப்பாளிகள் உலகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2017. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).*

xvii, *80 பக்கம், விலை: ரூபா 220.00, அளவு: 20.5*x*14 சமீ.*, ISBN: *978-955-3981-00-5.*

*சீயக்காய் வாசம் அதன் நுரை இன்றளவும் இக்கவிஞரால் மறக்கமுடியாத சிறுபராய நினைவுகள். மணம் எம்மைச் சூழ்கின்றபோது நாசி வழியாக அதனை நுகர முடிகின்றது. ஆனால் சீயக்காய் வாசம் நினைத்தாலே மணந்துவிடுகின்றது. அதுபோலவே காதலை நினைக்கும் போதே இதயத்தில் பேரானந்தமும் சில சமயம் பெருவலியும் ஏற்படுகின்றது. இந்த ஒற்றுமையே கவிஞர் கண்ட காதலிக்கு சீயக்காய் வாசக்காரி என்று பெயரிடுகிறார். சில்வண்டுகளின் ஓசை செவிப்பறையை ஊடறுத்துச் செல்வதையும் மறக்க முடியாதுள்ளது. சில்வண்டின் ஓசை சிலசமயம் பாடலாக இசைக்கிறது. சிலசமயம் நாராசமாக ஒலிக்கின்றது. சில்வண்டுகளைத் தேடி அலையும் போதெல்லாம் அதன் மீதான காதலையும் கவிஞர் உணர்ந்துகொள்கிறார். ஒரு காதலில் எத்தனை பெரிய துரோகங்கள், ஏமாற்றங்கள், முரண்பாடுகள் இருப்பினும் அந்தக் காதலை களற்றி எறிய முடியாதளவு நம்பிக்கையூட்டும் வார்த்தைகளால் யாரோ ஒரு கவிஞர் எப்போதும் நிலைநிறுத்தி வருகிறார். காதல் ஒரு புகைவண்டி போல நகர்ந்துகொண்டே உள்ளது. அதில் பயணிக்கும் காதலர்கள் துரோகம் இழைத்துக்கொண்டாலும் காதல் வண்டியின் பயணங்கள் என்னவோ இன்றுவரை தொடர்கின்றன. இந்நூலில் அனாதியன் காதலை அழகாகப் படம்பிடித்திருக்கிறார். இவரது இரண்டாவது கவிதைத் தொகுதி இது.*

## 14609

**சுவாசம் மட்டுமே சுடுகலனாய்.** *வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா (இயற்பெயர்: லதா கந்தையா). கிளிநொச்சி: லதா கந்தையா, 1வது பதிப்பு, பெப்ரவரி 2018. (யாழ்ப்பாணம்: எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).*

xxvi, *98 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20.5*x*14.5 சமீ.*

*கரடிப்போக்கு கிராமத்தைச் சேர்ந்த கந்தையா-நாகம்மா தம்பதியினருக்கு ஏக புத்திரியாக 1979.04.24 இல் பிறந்தவர் வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா. தனது ஆரம்பக் கல்வியை கிளிநொச்சி சென் திரேசா மகளிர் கல்லூரியில் பெற்றவர். எறிகணை வீச்சில் பெற்றோர்களை 1986 இல் இழந்தபின் செஞ்சோலை இல்லத்தில் பராமரிக்கப்பட்டவர். அங்கிருந்து உயர் கல்வியை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் கற்று, சட்டமும் பயின்று கலைமானி பட்டமும் பெற்றவர். மூன்று பிள்ளைகளுக்கு தாயான இவர் இறுதி 2009 யுத்தத்தில் தனது இரண்டரை வயது மகனையும் இழந்திருந்தார். தான் வளர்ந்த செஞ்சோலையிலேயே ஆசிரியராகப் பணியாற்றிய இவருக்கு தலைவரால் வழங்கப்பெற்ற பெயர் சஞ்சிகா*

*என்பதாகும். அதனையே தன் புனைபெயராகக் கொண்டு ஊடகத்திலும் எழுத்துத் துறையிலும் கால் பதித்தார். "விடுதலைக் கனல்", என்ற கவிதை நூலை 15 ஆவது வயதிலும் "சுவாசம் மட்டுமே சுடுகலனாய்..." என்ற கவிதை நூலை போர் முடிந்த பின்பு 2018 இலும் வெளியிட்டுள்ளார். தன் மன உணர்வுகளின் தொகுப்புத்தான் சுவாசம் மட்டுமே சுடுகலனாய்... என்ற கவிதைப் புத்தகம் என்று கூறும் இக்கவிஞர் அரசியல், காதல், விரக்தி, ஏளனம் போன்ற பல்வேறுபட்ட உணர்வுகளை உள்ளடக்கிய கவிதைகளைக் கொண்டதாக இதனை வெளியிட்டுள்ளார். நீதியின் குரலாய், இயலாமையின் குரலாய், ஏக்கத்தின் குரலாய், விரக்தியின் குரலாய் இவரது 77 கவிதைகளும் வாசகருடன் பேசுகின்றன.*

### 14610

**செவ்விலை.** *ஓ.ஏ.வேலுசாமி. பண்டாரவளை: ஏ.தியாகலிங்கம், தலைவர், தமிழ் இலக்கியப் பேரவை (ஊவா), 282/11*A*, பதுளை வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2017. (பண்டாரவளை:* W.A.S.*அச்சகம்).*

xiv, *77 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-43885-0-5.*

*மலையகத்தின் "சிவப்புச்" சிந்தனைக் கவிஞராக அறியப்பட்டவர் ஓ.ஏ.வேலுசாமி. இவரது கவிதைகள் கற்பனை நிழலையும் காதலையும் பாடியதைவிட, அதிகமாக மலையக மக்களின் வாழ்வியலையும், தன்னுடனிருந்த-நலிவுற்ற உறவுகளையும், அடிமைத் தனத்தையும் பாடியதே அதிகமாகும். இத்தொகுதியிலுள்ள 50 கவிதைகளும் ஒருபிடி மண், என்ன உலகமடா?, சிறப்பிக்கோர் செந்நாள், விழிகளில் மிதந்த முத்து, அடுத்த நெர, அன்பின் மலரே, இதயத்தில் இவள், குருதிச் சிதறல், இதுவா உலகம், விடிவைத் தேடி, தலைவிதி மாறுமோ?, சாயத்தண்ணி, ஓணான் உடலில் உதிர்ந்த இரத்தம், வாழ்வதைப் பார், மலையக வாழ்வு, பெண்கள் உலகின் கண்கள், நல்லவுங்க நாலுபேர், ஒப்பந்தக் கொடுமை, மாறாத காதல் சுவை, புள்ளி போட்ட பெட்டி, இதயம் எங்கே?, கைக்குழந்தை தெருவிலே கவனித்தோர் மண்ணிலே, வாழவிடு, மிஞ்சியது, படிச்சவன் கிழிச்சது என்ன?, நல்ல தமிழ் நாலெழுத்து, மறு ஜென்மம் வேண்டும், அலையும் மலையும், தட்டிப் பார் கட்டிப் பாலை, திரும்பிப் பாரம்மா, என்னுயிரில் அவள், மண்ணுலகில் என்ன விலை, முகிலுக்குள் முத்தமிர்தம், விதைத்ததை அறுத்தான், ஊருக்குப் பெரிசு யாருக்கு இலாபம்?, கரை சேரா கண்ணீர், நினைவலைகள், நிலைமாறா நெஞ்சங்கள், உயிருள்ளவரை ஓடும் இரத்தம், நிலையற்ற நெஞ்சங்கள், சொர்க்கத்தின் வாயில் வரை, போய்விடு புது இடம் தேடி, வாழ்வு ஒரு வானவில், உன் கையில் என்னுயிர், சிலை கூறும் சிற்பங்கள், மண் மீது நீ ஒருவன், எது இனிது, முதலும் முடிவும், உயிர் கொடுத்த உத்தமி, ஏனிந்த வாழ்க்கை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன.*

### 14611

**சொல்லோவியம்(கவிதை நூல்).** *ஏ.எஸ்.சற்குணராஜா. யாழ்ப்பாணம்: தணிகா நுண்கலைக் கல்லூரி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜனவரி 2020. (பருத்தித்துறை:*

SPM பிறின்டர்ஸ், வி.எம். வீதி).

xiv, 86 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-70533-9-4.

நூலாசிரியர் சுப்பிரமணியம் சற்குணராஜா, பருத்தித்துறை வியாபாரிமூலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியவர். பாடசாலை மாணவர்களுக்கான பாட நூல்களை எழுதிவந்த இவரின் கவிதைகளின் முதலாவது தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இவரது கவிதைகள் எளிமையானவை. இலகுவில் விளங்கக்கூடியவை. சிறந்த பொருத்தமான சொற்பதங்களைக் கொண்டவை.

## 14612

**தமிழோடு இசை பாடல்.** லயனல் திலகநாயகம் போல். ஆனைக்கோட்டை: திருமதி பத்தினியம்மா திலகநாயகம், மெதடிஸ் மிசன் பாடசாலை வீதி, வண். வடமேற்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2011. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).

xxiv, 81 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300.00, அளவு: 21x14 சமீ.

முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், கலாபூஷணம், சங்கீதபூஷணம், லயனல் திலகநாயகம் போல் அவர்களின் இசைத்துறைப் பங்களிப்பு போற்றுதற்குரியது. தனது செவ்விசைக் குரலினால் மக்களைக் கட்டிப் போட்டவர். ரூபவாஹினியிலும், இலங்கை வானொலியிலும் அவரது இசைக்கு மயங்கியோர் ஏராளம். அவரது சங்கீதக் கச்சேரிக்கென ஒரு தனி ரசிகர் பட்டாளமே இருந்தனர். அவரது துணைவியார் சிதம்பரபத்தினி (பத்தினியம்மா) யாத்த பாடல்களை சுர தாளக் குறிப்புடன் முன்னர் "புதிய நோக்கில் செந்தமிழ் செவ்விசைப் பாக்கள்" என்ற நூலாக வெளியிட்டிருந்தார். "தமிழோடு இசை பாடல்" நூலும் அமரர் திலகநாயகம் போல் அவர்களது பாடல்களின் தொகுப்பாகவே வெளிவந்துள்ளது. தமிழ்த்தாய் வணக்கம், யேசுநாதரின் தோத்திரங்கள், யேசு கிறிஸ்து சரிதம் (பஜனை வடிவில்), கத்தோலிக்க தேவாலயங்கள் மேற் பாடிய பாடல்கள், சைவத் திருத்தலங்கள்மீது பாடப்பட்ட கீர்த்தனைகள், சமுதாய நலன் நோக்கிய சிறுவர்களுக்கான கவிதைகள், செந்தமிழும் சான்றோரும் பற்றிப் புகழ்பாடும் பாடல்கள், புதிய நோக்கில் செந்தமிழ் செவ்விசைப் பாக்கள் ஆகிய எட்டு பிரிவுகளின்கீழ் இவை வகுத்துத் தரப்பட்டுள்ளன.

## 14613

**தாயுமானவன்(கவிதைத் தொகுப்பு).** லியோநிஷா பாலசிங்கம். வவுனியா: லியோநிஷா பாலசிங்கம், 273/4, 2ஆம் குறுக்குத் தெரு, கூமாங்குளம், 1வது பதிப்பு, ஜனவரி 2018. (வவுனியா: ஏ-பிரின்ட்).

viii, 52 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-38879-0-0.

செல்வி லியோநிஷா பாலசிங்கம் வவுனியா மாவட்டத்தின் இளமருதங்குளம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யுத்தத்தின்போது இடம்பெயர்ந்து வேப்பங்குளம் பங்கில் வாழ்ந்து வருகின்றார். வேப்பங்குளம் பங்கு கத்தோலிக்க

இளைஞர் ஒன்றியம், வவுனியா ரோட்றக் கழகம் என்பவற்றின் செயலாளராகப் பணியாற்றும் இவரின் கன்னிப் படைப்பாக இக்கவிதைத் தொகுதி வவுனியா FME நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளிவந்துள்ளது. இந்நூல்பற்றி அதன் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்."என் தாயுமான இறைவனை மனதிற் கொண்டும், ஆண்களை வெறுக்க எனக்கு ஆயிரம் காரணங்கள் இருப்பினும், தாயாகி நின்று காக்கும் தாய் வழிச் சகோதரர்களின் நேசத்தையும், தாயுமாகி நிற்கும் அவர்களையும் இச்சமூகம் என்கண்முன் காட்டியவண்ணமே உள்ளது. தனக்குள் வாழும் தாய்மையை ஒவ்வொரு ஆணும் உணரும்போது, பெண்ணிற்கான பாதுகாப்பு, பெண்மீதான ஆணின் பொறுப்பு என்பன உணரப்பட்டு "பெண்களுக்கு எதிரான வன்முறைகள்" ஒழியும் என்ற நம்பிக்கை எனக்குள் உண்டு. அதற்கான ஒரு தொகுப்பாக இந்நூலைப் படைத்துள்ளேன்."

## 14614

**திணை மயக்கம் அல்லது நெஞ்சொடு கிளர்தல்.** சேரன். நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜனவரி 2019. (சென்னை: 600017: சுதர்சன் கிராப்பிக்ஸ்).

112 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-5244-116-7.

கனடாவின் வின்சர் பல்கலைக்கழகத்தில் சமூகவியல், மானிடவியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றும் சேரன், ஈழத்தின் "மகாகவி" உருத்திரமூர்த்தியின் மகனாவார். சேரனின் "இருவருக்கிடையிலும் ஒரு பெரும் பாலை" தொடங்கி "வீடு திரும்புகிறேன்" என்ற கவிதை ஈறாக, தேர்ந்த 100 கவிதைகளை இத்தொகுப்பு கொண்டுள்ளது. "சேரனின் இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் திணை மயக்கமாகவும், நெஞ்சொடு போரிடுவனவாகவும் உள்ளன. மிக ஆழமான கருத்துச் செறிவுள்ள கவிதைகள். இக்கவிதைகளில் அகமும் புறமும் பிரிய இயலாத நிறங்களின் திணைகளாக விரிகின்றன. அரேபியக் கவிதை வடிவமான கஜல், பசவண்ணாவின் வசனங்கள் ஆகியவற்றையும் நினைவுபடுத்தும் இக்கவிதைகள் மெல்லிய இசையைத் தூவுகின்றன. காமம், அகதிநிலை, போர், காதல், சஞ்சலம், வன்முறை, பிரிவின் வெளி என வியப்பூட்டும் நவீன உள்ளார்ந்த பார்வையை இவை வெளிப்படுத்துகின்றன". (பின்னட்டைக் குறிப்பு).

## 14615

**தீக்கங்குகள் (கவிதைத் தொகுதி).** வே.ஐ.வரதராஜன் (மூலம்), வரதராஜா வித்தியாபரன் (தொகுப்பாசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஜூலை 2015. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xiv, 46 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ.

"37 வருட அரசசேவை அனுபவம், மனம்கூச வைக்கும் சிறுமைகளும் ஏமாற்றங்களும் மிக்க வாழ்வு தந்த தரிசனம், வாசிப்பின் பேறாய் வாய்த்த பின்புல வீச்சு, என்பன என்னை எழுது எழுது எனத் தூண்டின" எனக் கூறும்

*வே.ஐ.வரதராஜனது ஆரம்பகாலக் கவிதைகள் மரபு சார்ந்தவையும் பக்திச்சுவை மிகுந்தவையுமாகும். இவருடைய "என் கடன்" கவிதைத் தொகுதியிலும் "தீக்கங்குகள்" என்ற இக்கவிதைத் தொகுதியிலும் உள்ள கவிதைகள் மரபை உடைத்துக் கொண்டு நவீனத்துவப் பிடிப்புடன் முகிழ்ந்தவையாகும். சராசரியான நடுத்தரக் குடும்பப் பின்புலத்தில் தோன்றிய வரதன்-தன்னைச் சூழ உள்ள மனிதர்களை, அவர்தம் உறவுகளை, உணர்வுகளைக் கையகப் படுத்தி அரிய கவிதைகள் பலதை நமக்குத் தந்துள்ளார். அத்துடன், அரச உத்தியோகம் தந்த அனுபவங்களையும் சமூக நிலைப்பட்ட தாக்க வலுவுடன் இவரால் தர முடிந்திருக்கிறது. இவரது அண்மைக்காலக் கவிதைகள் துல்லியமானவை. படிமச் செழுமையுடன் நவீன கவிதைக்கே உரிய சகல பண்புகளையும் கொண்டு விளங்குகின்றன. வாசிப்பும் ரசனையுமே தனது வாழ்வின் பேறாகக் கருதி வாழ்ந்து வந்த இவ்வரிய மனிதரின் சடுதியான முடிவு மிகுந்த துயரத்தைத் தருகிறது. இவரது இழப்பு தமிழுக்கும் தமிழ் ரசனைக்கும் ஏற்பட்ட தவக்குறைவாகும்" (க.சட்டநாதன்). இந்நூல் 51ஆவது ஜீவநதி பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது.*

## 14616

**துயரம் தரும் அழகு.** *க.சட்டநாதன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, வைகாசி 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

viii, *96 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-4676-97-8.*

*"க.சட்டநாதனின் துயரம் தரம் அழகு எனும் இக்கவிதைத் தொகுதி துயரம் தருகின்ற துயரத்துக்கப்பால், அதனுள் ஊறி வெளிப்படும் அழகை இரசிக்கின்றது. துயரத்தை இரசனைக்குரியதாக்குகின்றது. தனிமையும் வெறுமையுமாகிப்போன வாழ்வுக்கு கடந்தகால வாழ்வின் நினைவுகளினூடு ஒத்தடங்கள் கொடுத்து இசைமீட்டுகின்றது. துயரிசையில் வழிந்தொழுகும் வாழ்வின் விளிம்பில் ஒட்டி யிருக்கும் நாட்களைக் கடந்து செல்ல மாய யதார்த்தத்தைப் பயன்படுத்துகின்றது. இத்தொகுதியில் ஐம்பது கவிதைகள் உள்ளன. சூனியப் பெருவெளியின் விரிவினுள் கிடக்கும் தம் வாழ்வைக் கடந்தகால எண்ணங்களால் நிரப்பப் பல கவிதைகள் முயற்சிசெய்கின்றன." (தி.செல்வமனோகரன், அணிந்துரையில்). முன்னதாக இவர் நீரின் நிறம் என்ற கவிதைத் தொகுதியை ஆடி 2017இல் வெளியிட்டிருந்தவர். ஜீவநதி வெளியீட்டகத்தின் 125ஆவது பிரசுரமாக இந்நூல் வெளிவந்துள்ளது.*

## 14617

**துளிர் விடும் அரும்பு: கவிதைகள்.** *வேலணையூர் என்.கண்ணதாஸ். வேலணை: கலை இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2015. (யாழ்ப்பாணம்: குரு பிரிண்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).*

xii, *51 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20*x*14.5 சமீ.,* ISBN: *978-955-42729-0-3.*

தன் மாணவப் பருவத்தில், 2002இலிருந்து தன் இலக்கியப் பயணத்தைத் தொடங்கியவர் நடராஜா கண்ணதாஸ். இவர் எழுதிய "இளஞ் சிறகுகள்" என்ற பல்சுவை அம்சங்களைக் கொண்ட நூல் 2002இலும், "பொது அறிவு" நூல் 2003இலும், "மலரும் மலர்கள்" என்ற சிறுகதை நூல் 2004இலும் வெளிவந்தன. இவரது நான்காவது நூலாக வெளிவரும் இக்கவிதைத் தொகுதி வரம் ஒன்று வேண்டும் உனை வாயாரப் போற்ற, விடியுமா எனது பொழுது?, ஆச்சரியம், உன்னால் முடியும், கானல் நீர், ஏன் இந்தப் பாசாங்கு, பூசைகள் புதுவிதம், மா(ற்) றிய சமூகம், இறுதி நிமிடம், உனக்காகக் காத்திருப்பேன், யாரோடும் பகை கொள்கிலேன், முதியோர் இல்லம், அன்புள்ள அம்மா, பசுமையான நினைவுகள், பொய், சித்திரகுப்தனிடம் சில கேள்விகள், மண்வாசனை, ஆழிப்பேரலை, அழகான எமதூர், அவல வாழ்க்கை, கலியுகம், தந்தையுள்ளம், துளிர்விடும் அரும்பு, தாலாட்டு, புத்தாண்டு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 25 கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

### 14618

**தேவதையின் அந்தப்புரத்தில் பட்டாம்பூச்சிக் குடியிருப்பு.** *ராஜகவி ராஹில். தமிழ்நாடு: அகநாழிகை பதிப்பகம், 26, ஜெயராமன் தெரு, கோகுலபுரம், செங்கல்பட்டு 603001, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*80 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 100.00, அளவு: 17.5x12 சமீ., ISBN: 978-93-84921-13-2.*

காதல் ரசம் விரவியிருக்கும் இக்கவிதைத் தொகுப்பில் பேசும் படங்களும் கவிதைகளுக்கு நிகராக கூடுதல் அழகை அள்ளித் தெளிக்கின்றன. "காதல் ஒரு இனிய உணர்வு. மணற்கடிகாரத்தின் துகள்கள் மெல்ல இறங்கிப் பரவுவதைப்போல அவ்வுணர்வு நம்முள் பரவும். அந்தத் தருணத்தை முழுவதுமாக விபரித்துவிடுவதென்பது சாத்தியமில்லாத ஒன்று. இருப்பினும் அதனைத் தன் நுட்பமான ரசனைக் கண்கொண்டு பார்த்து விபரிக்கமுனைந்துள்ளார் இக் கவிஞர். அதனை எழுத்தாக்கும்போது மனோலயத்துடன் வசீகரமும் ஈர்ப்பும் ஒன்று சேர்ந்துவிடுகின்றது. கிழக்கிலங்கையின் நிந்தவூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜகவி ராஹில். பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர் தற்போது சீசெல்ஸ் நாட்டில் பணிபுரிகின்றார்.

### 14619

**தொடுவானின் சிதறல்கள்(கவிதைத் தொகுதி).** *சிவரமணி. திருக்கோணமலை: சிவரமணி, உவர்மலை, 1வது பதிப்பு, ஆவணி 2015. (வவுனியா: செந்தணல் பதிப்பகம், பண்டாரிக்குளம், ஒட்டுசுட்டான்).*

*72 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-7762-08-1.*

இதயத்தை வருடிச்சென்ற விடயங்களும், ஒவ்வொரு நொடிப்பொழுதும் அனுபவித்த அனுபவங்களும் உள்ளத்தின் உணர்வுகளும் ஒன்றாய் சங்கமித்ததன் பயனாக அழகான கவிவரிகள் துளிர்விட்டுள்ளன. அக்கவிவரிகளின் தொகுப்பாக கவிச்சுடர்

சிவரமணியின் இத்தொகுப்பு வெளிவந்துள்ளது. புதுவரவு தொடங்கி அகந்தை ஈறாக மொத்தம் 42 தலைப்புகளில் இக்கவிதைகள் இடம்பெற்றுள்ளன. நுணுக்கமான வர்ணனை மெருகூட்டலால் அனைத்துக் கவிதைகளும் உயிர் பெறுகின்றன. இவரது கவிதைகள் பெண்ணியத்தின் உள்ளத்து உணர்வுப் பிரவாகத்தின் விம்பமாகவும் வலிகளில் பிறந்த வரிகளாகவும் சமூகத்தில் இவர் கொண்ட அக்கறையின் வெளிப்பாடுகளாகவும் தொனித்து நிற்கின்றன. இவை தோல்வியால் துவண்டுகிடக்கும் சமூகத்திற்கு ஏதோ ஒரு செய்தியைச் சொல்லிவைக்கின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தின் மீசாலைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவரமணி, திருக்கோணமலையில் உவர்மலைப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றார்.

### 14620

**நஞ்சுமிழும் காளான்கள்.** பால. சுகுமார். சென்னை 600020: உயிர்மை பதிப்பகம், எண். 5, பரமேஸ்வரி நகர் முதல் தெரு, அடையார், 1வது பதிப்பு, டிசம்பர் 2019. (சென்னை 600077: மணி ஓப்செட்).

(8), 9-80 பக்கம், விலை: இந்திய ரூபா 110.00, அளவு: 21.5x14 சமீ.

"நந்திக் கடல் /சிவந்து போனது/கண்ணீரோடு கலந்து/சென்னீரும் சேர்ந்து/ உப்புக் கரித்த/கடற்கரையெங்கும்/குண்டுகள் துளைத்த/உப்பிய உடல்களாய்/ நுரைத்துக் கிடந்தன" ஆசிரியரின் ஐந்தாவது கவிதை நூல். தான் வாழும் சூழலில் தன்னைப் பாதித்தவற்றை அவ்வப்போது கவிதைகளாக எழுதிவைத்ததாகக் குறிப்பிடும் இவர் தான் அதிகாலைப் பொழுதில் காலாற நடைப்பயிற்சி மேற்கொள்ளும் வேளைகளில் ஏற்படும் நினைவுத் தெறிப்புகளையும் கவிதை வரிகளாக உருவகித்துக் கொள்கிறார். நம்மைச்சூழ நாம் நஞ்சுமிழும் காளான்களின் மத்தியில் வாழ்கின்றோம் என்று கூறும் கவிஞர், வாழ்வின் சூழல் கவிதைகளை இங்கு நஞ்சுமிழும் காளான்களாகவே பதிவுசெய்து விடுகின்றார்.

### 14621

**நட்சத்திரங்கள் நனைந்துபோன மழைநாட்கள்.** எஸ்.பி.பாலமுருகன். கிண்ணியா: பேனா பப்ளிகேஷன், 1வது பதிப்பு, 2017. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்).

58 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-0932-23-8.

பொன்னையா பாலமுருகன் 90களின் பிற்பகுதியில் இருந்து எழுதி வருகிறார். மலையகத்தின் பதுளைக்கு அருகில் குயீன்ஸ் டௌன் தோட்டத்தில் பிறந்த இவர் ஒரு விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றிவருகிறார். "சொற்களின் சேர்க்கையில் மொழியை செழுமைப்படுத்திப் பார்க்கின்ற அபூர்வ களங்களை உருவாக்குகின்ற இக்கவிஞரின் கவிதைகள் மாயங்களற்ற வெளிகளில் வாசகனை மேய்ந்து விடுகின்ற வித்தைகளைக் கற்று வருகின்றன. இருண்மையைக் கடந்து பொருண்மையை மட்டும் சுமந்துகொண்டு அவை சொல்லுகின்ற யாத்திரீகங்களில் ஒரு தேசாந்திரி போல நம்மை அலையச்செய்து விடுகின்றன" என்கிறார் இந் நூலுக்கு அணிந்துரை வழங்கிய கிண்ணியா சபருள்ளாஹ்.

### 14622

**நா இடறு வாய்தவறி.** *காத்தான்குடி பாத்திமா (இயற்பெயர்: பாத்திமா முஹம்மட்). காத்தான்குடி: வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான பெண்கள் அமைப்பு,* WEDF, *1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (மட்டக்களப்பு: எவகிறீன் அச்சகம், 185*V, *திருமலை வீதி).*

*50 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ.*

*கிழக்கிலங்கையின் காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கலாபூஷணம் பாத்திமா முஹம்மட். அரச முகாமைத்துவ உதவியாளராக முப்பதாண்டுகாலம் பணியாற்றி ஓய்வுபெற்றவர். தன் மன உணர்வுகளின் குவியல்களாக இக்கவிதைத் தொகுப்பினை வெளியிட்டிருக்கிறார். ஏற்கெனவே அத்தனையும் முத்துக்கள் (2003), பொய்த் தூக்கங்கள் (2004) ஆகிய சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டவர். இது இவரது முதலாவது கவிதைத் தொகுப்பாகும். இதில் அந்த இளமைக்காலம், இதுவும் ஒரு வாய் தவறி, இதுவொரு பிதற்றல், நா இடற வாய்தவறி, அன்பான மகனுக்கு, இளமைக்கு என்னாச்சு?, மனசாட்சியே மறுத்துவிடு, அவனுக்கென்று, உடன்பிறப்பென்று, நானும் நீயும், எழுத்தாளன் மட்டுமே, நீயும் நானும், இலக்கியவாதி, கனவுகள் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.*

### 14623

**நான்.** *அப்துல் காதர் லெப்பை (மூலம்), அமீர் அலி (பதிப்பாசிரியர்). அவுஸ்திரேலியா: கலாநிதி அமீர் அலி,* School of Social Inquiry, Murdoch University, Western Australia 6150, *1வது பதிப்பு, மார்ச் 1986. (புதுவை 605001: ஆண்டவர் அச்சகம், 140, அம்பலதாடையர் மடத்து வீதி).*

*42 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13 சமீ.*

*பழமையில் வேரூன்றி நின்றுகொண்டு புதுமையைப் புறக்கணிக்காது மனிதாபிமானத்தோடு காலத்துக்கேற்ற கருத்துக்களைத் தன் செய்யுள்களின் வழியாக எமக்கு வழங்கியுள்ளார் கவிஞர் அப்துல் காதர் லெப்பை. கடவுள்-இயற்கையும் அதன் சட்டமும்-மெய்யறிவு-மனிதன் என்ற சட்டத்தினுள் தனது தத்துவார்த்தக் கவிதைகளை இங்கு எமது ரசனைக்கு விட்டுள்ளார். நவ உலகின் நுட்பங்களும் கலைகளும் தத்துவங்களும் சட்டங்களும் மானிடத்தின் சாதனைகள் என்பதில் உறுதியான நம்பிக்கை பூண்ட எமது கவிஞர், மனிதன் தன் சுயத்துவத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் என விரும்புகின்றார். சுயமற்ற சருகுகளாகவும் சுழலும் பொம்மைகளாகவும் தமது வாழ்வை வாழ்ந்துவிட்டு தாம் வாழ்ந்த சுவடுகளே தெரியாது உலகைவிட்டுப் போய்விடும் மனிதர்களையிட்டு இவர் அதிருப்தி கொள்கிறார். முன்னோர் வகுத்த வழியினை மந்தைகளாகப் பின்பற்றும் முறைமையை இவர் வெறுக்கின்றார். மனித சுயத்துவத்தை வலியுறுத்தும் கவிஞர் முன்னோர் வகுத்த நெறிகளை வழிகாட்டிகளாகவே கொள்ளவேண்டும் என்கிறார். சுருக்கமாகக் கூறின் தெளிவற்று ஒளியற்ற "நான்"களை ஒழித்து, தெளிவுற்று*

ஒளிர்வுற்ற "நான்"களையே உருவாக்க இந்நூல் வழியாக கவிஞர் அப்துல் காதர் லெப்பை முனைகின்றார்.

### 14624

**நானும் என் தேவதையும்.** சி.இதயராசன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, 2017. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xii, 48 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-0958-02-3.

சிறுகதைகள், கவிதைகள், விமர்சனங்கள் என இலக்கியத்தின் பல்வகைகளிலும் தன் ஆளுமையைப் பதித்து வருபவர் இதயராசன். இந்தக் கவிதைத் தொகுப்பின் ஊடாக, எமது சமூகத்தின்-மக்களின் இடர்கள், வாழ்வியல் முறைகள் என்பன வற்றை தனக்கேயுரிய கவிதை மொழியில் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறார். மட்டுவில் வடக்கைச் சேர்ந்த இவர், தன் தந்தையைப் பின்பற்றி, ஆரம்பகால இடதுசாரி இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். 1964இல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மொஸ்கோ-சீன சார்புநிலைகளில் இரண்டாகப் பிரிந்தபோது, தந்தையார் மொஸ்கோ சார்பாகவும், இவர் சீன சார்பாகவும் இயங்கினர். ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியாகவும் சேவையாற்றி ஓய்வுபெற்றுள்ள நூலாசிரியரின் மணி விழாவையொட்டி ஜீவநதி வெளியீட்டகத்தின் 87ஆவது பிரசுரமாக இக்கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

### 14625

**நிலா நாழிகை.** வேலணையூர் ரஜிந்தன் (இயற்பெயர்: பாலசுந்தரம் ரஜிந்தன்). வேலணை: பாலசுந்தரம் ரஜிந்தன், 4ம் வட்டாரம், வேலணை கிழக்கு, 1வது பதிப்பு, ஒக்டோபர், 2018. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

110 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-71331-0-2.

விசேட கல்வி ஆசிரியரான பாலசுந்தரம் ரஜிந்தன், ஈழத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வேலணை என்ற ஊரில் பிறந்து வேலணையூர் ரஜிந்தன் எனும் பெயரில் கவி படைத்து வருகின்றார். கவி ஆர்வம் கவித்துவம் பல காலமாக தன்னுள் அடைபட்டுக் கிடந்தாலும் கடந்த சில வருடங்களாக கவிதைத் துறையில் கலைஞனாக வலம் வரும் வேலணையூர் ரஜிந்தன் யாழ்.இலக்கிய குவியத்தினுடாக சமூகத்தில் கவிதை நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பதோடு, வேலணை துறையூர் கலை இலக்கிய வட்டத்தின் தலைவராகவும் இளைய தலைமுறையினரை ஊக்குவித்தும் வருகின்றார். நிலா நாழிகை என்ற இந்நூல், காதல் சார்பான ஒருதலைக் காதல், இரு மனம் இணைந்த காதல், காதலின் இன்பம், துன்பம், பிரிவு என்ற இன்னோரன்ன விடயங்களை சுவைபடக் கூறும் கவிதைகளின் தொகுதியாகும். இவரது கவிதைகளுக்கான கரு சமூகப் பிரச்சினைகள் மட்டுமல்லாது நெஞ்சைத் தொடும் முக்கிய விடயங்களையும் உள்ளடக்கியே உருவாகின்றன. அந்த வகையில்

கரு இரண்டு வகைகளில் உருவாகின்றன ஒன்று உள்ளதை உள்ளபடி கவிநயத்துடன் பதிவு செய்வது, மற்றயது பிரச்சினைக்கு தீர்வாக இருக்கும் கரு. இக்கவிதைத் தொகுதியில் இவை இரண்டையுமே காணமுடிகின்றது.

### 14626

**நிறம் பூசும் குழந்தைகள் (கவிதைகள்).** ஏ.எம்.சாஜித் அஹமட். அக்கரைப்பற்று: பெருவெளி பதிப்பகம், 31/C, உப தபாலக வீதி, பதுர் நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2014. (அக்கரைப்பற்று: சிற்றி பொயின்ட்).

(20), 40 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ.

கிழக்கிலங்கை அக்கரைப்பற்றில் பிறந்த ஏ.எம்.சாஜித் அஹமட், அக்கரைப்பற்று மாநகர சபையின் உத்தியோகத்தராகப் பணியாற்றுகின்றார். எழுத்தாளர் றியாஸ் குரானா அக்கரைப்பற்றிலிருந்து வெளியிட்டுவந்த "பெருவெளி" இதழில் இவரது கவிதைகளும் கதைகளும் பிரசுரம்பெற்றுள்ளன. போர், அதிகாரத்திடம் மண்டியிடல், பின்பு, புலம், அரசமரம், உம்மா இதனை மழைக்காலம் என்று சொல்வார்கள், நிறம் பூசும் குழந்தைகள், வண்ணத்துப் பூச்சி, அவர்கள்-குழந்தைகள்-சுவனம்?, கிறிஸ்துவுக்கு முன் எனதூரில் காகம் தேசியப் பறவை, போராளி, சொல்லுதல் எனும் திசையில் இருந்து விலகி புரிதல் எனும் மாற்றம், சப்தங்களற்ற இரவு, கவிதைகளைப் பாடவிடுங்கள், தண்டவாளம், கதைசொல்லி, நாற்காலி, ஒரு படைப்பாளி மரிக்கிறான், அம்மணம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 19 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 14627

**நினைவுகள் துணையாக.** பொலிகையூர் ரேகா. ஜேர்மனி: வெற்றிமணி வெளியீடு, Brinker Höhe 13, 58507 Lüdenscheid, 1வது பதிப்பு, மார்ச் 2020. (சென்னை 600 106: மலர்க்கண்ணன் பதிப்பகம், 24/1, பச்சையப்பா தெரு, சான்றோர் பாளையம், அரும்பாக்கம்).

86 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-945312-1-0.

1950இல் ஆசிரியர் மு.க.சுப்பிரமணியம் அவர்களால் தொடங்கப்பெற்ற சிறுவர்களுக்கான இதழ் வெற்றிமணி. சஞ்சிகை வெளியீட்டுடன் நில்லாது பல்வேறு படைப்பாளர்களின் நூல்களையும் வெளியிட்டுப் பெருமை கொண்டது. அதன் தொடர்ச்சியான பாரம்பரியத்தில் மற்றொரு முத்தாகவே இந்நூல் வெளிவந்துள்ளது. இலங்கையில் பிறந்து தமிழகத்தில் வாழும் பொலிகையூர் ஜெயாவின் காதல் கவிதைகளைக் கொண்ட கவிதைத் தொகுதி இதுவாகும். இது (1994இல்) ஜேர்மனில் தடம்பதித்துத் தொடர்ந்த வெற்றிமணியின் வெள்ளி விழாவையொட்டி வெளியிடப்படும் இலக்கியப் பிரசுரமாக அமைகின்றது. பொலிகையூர் ஜெயா தன் அகவுணர்வுகளை அழகியல் மொழிகொண்டு சிறப்பான காதல் கவிதைகளாக வடித்துள்ளார். இசையருந்தும் சாதகப் பறவையாக, மழைநீரருந்தும் சக்கரவாகப் பறவையாக, சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ்

பறவையாக காதலின் நினைவுகள் நோக்கியே ரேகாவின் உள்ளப்பறவை நூல் முழுவதும் வட்டமிடுகின்றது. இது வெற்றிமணியின் 25ஆவது வெளியீடாகும்.

### 14628

**நூங்கு விழிகள் (கவிதைகள்).** இ.சு.முரளிதரன். யாழ்ப்பாணம்: மேதினிகா வெளியீடு, 34/3, செட்டித் தெரு, நல்லூர், 1வது பதிப்பு, மே 2007. (கொழும்பு 13: ஈ-குவாலிட்டி கிராப்பிக்ஸ், 315, ஜம்பெட்டா வீதி).

(12), 39 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 18x12 சமீ.

அக்கினிக் குஞ்சொன்றை அன்றொருநாள் காட்டிடைப் பொந்தில் வைத்து காடே பொசுங்கியதைக் கண்டார் பாரதி. இங்கு அறுபது அக்கினிக் குஞ்சுகளை மனிதக் காட்டின் மனமெனும் பொந்துகளுள் கவிஞர் முரளிதரன் ஹைக்கூ கவிதைகளாகப் பதியம் வைத்திருக்கிறார். யாழ்பாணத்தின் வடமராட்சியினை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாக கொண்ட இவர் கவிஞர், சிறுகதை எழுத்தாளர், கட்டுரையாளர், சினிமா விமர்சகர், சஞ்சிகையாளர் என விரிந்து செல்லும் ஆளுமைகளுக்குச் சொந்தக்காரர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் கற்றுத்தேர்ந்து பட்டதாரியான இவர், தற்போது ஹாட்லிக் கல்லூரியில் தமிழ் கற்பித்து வருகிறார். இவர் ஏகலைவன் என்னும் சஞ்சிகையின் 7 இதழ்களை வெளியிட்டுமுள்ளார்.

### 14629

**நெஞ்சுறுத்தும் நிஜங்கள்: கவிதைத் தொகுப்பு.** வயலூரான் (இயற்பெயர்: செல்வராஜா சுதாகரன்). சாவகச்சேரி: செ.சுதாகரன், முத்துமாரி அம்மன் கோவில் வீதி, மட்டுவில் வடக்கு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2017. (சாவகச்சேரி: திருக்கணித பதிப்பகம்).

72 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-38036-0-3.

பக்தி முதல் சமூகத்தில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் வரை பலதையும் இக்கவிதைகள் பதிவாக்கியுள்ளன. தான் வாழும் சமூகத்திலும், குறிப்பாக அலுவலகத்தில் கண்டும் கேட்டும் அறிந்ததும் அனுபவித்ததுமான சம்பவங்களின் பிரதிபலிப்பாக இக்கவிதைத் தொகுப்பு அமைகின்றன. பொருத்து வீடு முதல் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வரை அத்தனையும் எளிய தமிழில் அழகுக் கவிதைகளாக்கியுள்ளார். இறைவணக்கத்தை விநாயக வணக்கமாகத் தொடங்கி பொதுமக்களின் வாழ்வியல் தளங்களைத் தேடித் தனது கவிதைப் பயணத்தை இந்நூலில் தொடர்கின்றார். பொருத்து வீடு என்ற கவிதை பொருத்தமற்ற வீடமைப்புத் திட்டத்தை நொறுக்கித் தள்ளி கனல் கக்குகின்றது. இது தந்தை பாடும் தாலாட்டு என்ற கவிதை எதுகை மோனை சந்தம் சீர்தளையுடன் உன்னத கவிதை நடையுடன் அசைகின்றது. கவிஞர் அரசபணியின் நிமித்தம் வறியோருக்கான பொதுசன மாதாந்த உதவிப்பண மீளாய்வின்போது காசுக்காக மக்கள் சொல்லும் பொய்களை தத்ரூபமாகக் காட்டுகிறார். பிரதேச செயலகங்கள் கலை இலக்கியம் வளர்க்கச் செய்யும் பண்பாட்டுப் பெருவிழாவையும் பாடத் தயங்கவில்லை.

மாறிடும் பண்பாடு, சுயதொழில், அங்காடிகளாகும் ஆலயங்கள், அடுத்தவர் சொத்து, கூடி விளையாடுவோம் எனக் கவிதைகள் வாழ்வின் நயங்களை நயம்படச் சொல்கின்றன. 1996இல் யாழ். மாவட்டச் செயலகத்தில் எழுதுநராகப் பணியில் சேர்ந்த சுதாகரன் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேசச் செயலகத்தில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றும் வேளையில் இத்தொகுப்பை வெளிக்கொணர்ந்துள்ளார்.

### 14630

**நெருநல் (கவிதைகள்).** இ.சு.முரளிதரன். யாழ்ப்பாணம்: மேதினிகா வெளியீடு, 34/3, செட்டித் தெரு, நல்லூர், 1வது பதிப்பு, ஜுன் 2015. (யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி).

xii, 39 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x11.5 சமீ., ISBN: 978-955-7790-00-8.

ஈழத்து இலக்கியப் படைப்பியலின் தன்மையினை நோக்கும்போது, போர், போரின் வலி, போர்ச் சிதைவு, போரின் அவலம் என நீண்டு வந்து போரின் பின்னரான சமூகத்தின் பெறுமானம் எனத் தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு வழியுருவாக்கம் கட்டமைக்கப்பட்டு வருவது தெளிவிற்குட்கிடையானது. இது தவிர்க்க முடியாத ஒரு அம்சம் தான். எமது வாழ்வு போருக்குள்ளானது என்பதால் அதனை விடுத்து இலக்கியம் படைப்பது சாத்தியமற்றது. இருந்தாலும் அதனைத் தாண்டி தண்ணுணர்வுசார் கவிதைகள் தோன்றிய வண்ணம் தான் இருக்கின்றன. இவ்வாறான கடந்தேகு தன்மையானது இ.சு.முரளிதரனுடைய கவிதைகளில் இருப்பது திருப்திக்குரியது (தானா விஷ்ணு, முன்னுரையில்).

### 14631

**பகலில் காணும் கனவுகள்: கவிதைத் தொகுப்பு-01.** வட வரணி சி.சபா. கொடிகாமம்: நதியோர நாணல்கள்- கலை இலக்கிய மன்றம், நாவற்காடு, வரணி, 1வது பதிப்பு, 2018. (யாழ்ப்பாணம்: சிவகஜன் பதிப்பகம்).

(4), 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

கொடிகாமம் வரணி வடக்கைச் சேர்ந்தவர் கவிஞர் சி.சபா. அவர் அவ்வப்போது ஊடகங்களில் எழுதியிருந்த கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இரவில் கேட்கும் பாடலில் தொடங்கி, பகலில் காணும் கனவுகள் ஈறாக இவரது 40 பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 14632

**பட்டது.** முகில்நிலா (ஆசிரியர்), ஜெரா (புகைப்படங்கள்). தமிழ்நாடு: திணை வெளியீட்டகம், மீனாட்சிபுரம், நாகர்கோவில், 1வது பதிப்பு, பெப்ரவரி 2015. (ஆனைக்கோட்டை: றூபன் பிரின்டர்ஸ்).

vi, 57 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 10x15.5 சமீ.

தன் இன விடுதலைக்காகப் பல இன்னுயிர்களை இழந்த ஈழ மண்ணின் தவிப்பே "பட்டது" என்ற கவிதைத் தொகுப்பாகியுள்ளது. ஓர் அழுகுரல், ஒரு தவிப்பு, ஓர் ஏக்கம் என மனிதத் துயரத்தின் மொத்தமும் கலந்த ஒளிப்படக் கலவைகொண்ட கவிதைகள் இவை. கவிதைகள் முழுவதும் இழப்பின் வலிகளை நமக்கு உணர்த்துகின்றன. முகில்நிலாவின் கவிதை வரிகளுக்கு ஜெராவின் புகைப்படங்கள் அழுத்தம் தருகின்றன. "வலி, வேதனை, விரக்தி, அவமானம், ஆர்ப்பரிப்பு எல்லாவற்றையும் சேர்த்துக் கட்டிய கூடாய் நாம். கண்மூடி இருக்கும் என் சமூகத்தின் நினைவிற்கு மட்டுமல்ல இன்றும் நாளையும் இனிவரும் நாட்களிலும் கடத்தப்பட வேண்டிய கட்டாயமாக-பட்டது. இந்தப் பட்டதுக்காக நாம் பட்டிருக்கின்ற வலி முதல் குழந்தைப் பிரசவிப்பில் ஒரு அன்னை படுகின்ற வலிக்கும் அதிகமானது" (முகில்நிலா, வன்னி).

## 14633

**பழுத்தோலை.** ஏ.சீ.எம். இப்றாஹீம். கிண்ணியா 4: பேனா பதிப்பக வெளியீடு, 118, நகரசபை வீதி, 1வது பதிப்பு, 2018. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

83 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-0932-30-6.

யாப்பிலக்கண சூத்திரங்களைப் பின்பற்றி சமகாலத்தில் தரமான கவிதைகளைத் தந்துகொண்டிருக்கும் ஒரு முதிய இளைஞனாக, தனித்துவமான மரபுக் கவிஞராக அல்-ஹாஜ் ஏ.சீ.எம். இப்றாஹீம் நம்மிடையே இயங்கிவருகின்றார். பிறந்த மண்ணிலும் கடல்கடந்தும் ஓடியாடித் தொழில்புரிந்து தான் பெற்ற அனுபவங்களின் நிதர்சன நிகழ்வுகளின் வெளிப்பாடுகளாகவும் இதிலுள்ள கவிதைகள் அமைந்துள்ளன. இந்நூலில் இடம்பெற்றுள்ள நாற்பது கவிதைகளும் ஒட்டு மொத்தமாக மனித விழுமியம், வாழ்க்கைநெறி, அனுபவப் பகிர்வு, ஆன்மீகம் என்பவற்றையே பாடுபொருளாகக் கொண்டு கவித்துவப் புலமையுடன் படைக்கப்பெற்றுள்ளன. இதில் 12 கவிதைகள் இஸ்லாமிய மார்க்க விடயங்களைப் பற்றியதாக உள்ளன. தான் பிறந்த மண்ணான கிண்ணியாவின் எழிலையும் முஸ்லீம்கள் செறிந்துவாழும் காத்தான்குடியைப் பற்றியும் பெருமைப்பட்டு சிறப்பான வகையில் சில கவிதைகளையும் இங்கு வடித்துள்ளார். இவர் இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திர சேவையில் இணைந்து, சீனக்குடியரசின் தலைநகரிலும், தாய்லாந்து, சவூதி அரேபியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் சேவையாற்றிய இவர், கலாபூஷணம், வித்தகர் விருது போன்ற இலக்கியப் பூடணங்களாலும் பொலிவூட்டப்பெற்றவர்.

## 14634

**பள்ளத்தாக்கில் சிகரம்.** ராஜகவி றாஹில். நிந்தவூர்-05: கரீமா ராஹில், ஆர்.கே. மீடியா, 318, புதிய நகரம், 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (மாவனல்லை: பாஸ்ட் கிராப்பிக்ஸ்).

xii, (4), 86 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 19x11 சமீ., ISBN: 978-955-567-9.

*இருபது கவிதைகள் கொண்ட தொகுப்பு. இலகுவான மொழிநடையில் கருத்துள்ள கவிதைகளாக அமைகின்றன. பூமியின் சுவாசம் என்ற கவிதை இயற்கை வளங்களை அழிக்கும் மனிதர்கள் பற்றியும், அதன் பாதிப்புகள் பற்றியும் பேசுகின்றது. இரவுகள் வெள்ளை என்ற கவிதை துவேஷம், வெறி என்பனவற்றின் ஆதிக்கத்துக்குட்பட்ட மனிதத்தின் நிலை பற்றிக் கவலைகொள்கின்றது.*

### 14635

**பறவையாய் அவளை மாற்றிப் பார்ப்போமா?.** *மீரா குகன். முல்லைத்தீவு: செல்லமுத்து வெளியீட்டகம், வள்ளுவர்புரம், விசுவமடு, 1வது பதிப்பு, ஜனவரி 2017. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).*

xii, *88 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5*x*11 சமீ.,* ISBN: *978-955-4096-02-8.*

*ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்தும் தாயக நினைவுகளுடன் வாழும் உறவொன்றின் பறவையாய் மாறிய பறப்புகளே இந்தக் கவிதைகள். மீரா குகன், ஈழத்துப் படைப்பாளி. கொழும்பு-பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவி. வர்த்தக முகாமைத்துவ பாடநெறியை நிறைவுசெய்து ஹட்டன் நெஷனல் வங்கியில் சிலகாலம் பணியாற்றியவர். புலம்பெயர்ந்து ஜேர்மன் தேசம் சென்றபின்னர் ஜேர்மன்-தமிழ் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றுகின்றார். அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கும் "வெற்றி" நிறுவனத்தின் பகுதிநேர செயற்பாட்டாளராகவும், இணையத்தள நிர்வகிப்பின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றுகிறார். இது இவரது முதலாவது கவிதைத் தொகுதி. காதலும், தத்துவமும், சமூகப் பிரச்சினைகளும், விடியல் நமக்கு வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளுமாக இக்கவிதைகள் விரிகின்றன.*

### 14636

**பார்வைகள் (கவிதைத் தொகுதி).** *அபீர்ராஜன் (இயற்பெயர்: அன்ரனி பீற்றர்). யாழ்ப்பாணம்: அபீர்ராஜன், 36, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2015. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், முத்திரைச் சந்தியடி, நல்லூர்).*

viii, *84 பக்கம், விலை: ரூபா 250.00, அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-42677-0-1.*

*யாழ்ப்பாணக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றிய அபீர்ராஜனின் சமூக விழிப்புணர்வுக் கவிதைகள் இவை. அவரது மணிவிழா நினைவாக வெளியிடப்பட்டுள்ளது. உண்மைக்கு மிக நெருக்கமான இக்கவிதைகள், தனது நேர்கொண்ட பார்வையால், மனித வாழ்வின் அனைத்து முகங்களையும் ஆழத் தரிசிக்கின்றன. மேலான வாழ்வுக்கு உகந்த விழுமியங்களை ஆராதிக்கும் அதே வேளையில் சமூகத்தில் நிலவும் அநீதியான மேலாண்மைகளையும் கேடுகளையும்*

சாடிநிற்கின்றன. செம்மொழியாம் தமிழ் என்ற கவிதையில் தொடங்கி மருதமடு என்ற கவிதை ஈறாக இத்தொகுப்பில் அறுபது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## 14637

**பிரமிள்: தேர்ந்தெடுத்த கவிதைகள்.** பிரமிள் (மூலம்), சுகுமாரன் (தொகுப்பாசிரியர்). நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 2வது பதிப்பு, டிசம்பர் 2017, 1வது பதிப்பு, மே 2016. (சென்னை 600077: மணி ஓப்செட்).

*127 பக்கம், விலை: இந்திய ரூபா 140.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-5244-049-8.*

“தீயின் தெளிவு” என்ற தலைப்பில் தொகுப்பாசிரியரின் முன்னுரையுடன் கூடிய இந்நூலில் பிரமீள் படைத்த கவிதைகளில் தேர்ந்த படைப்புகளான, நான், மறைவு, நிழல்கள், பேச்சு, விசாரம், கதவு, சாவு, கோவில், எல்லை, தேடுதல், வினா-விடிவு, பார்வை, சொல், பிரமிட், பிரதி, பழைமை, அடிமனம், தவம், உன் பெயர், கோத்ரம், அறைகூவல், நாளை புரட்சி, பாலை, அற்புதம், தாசி, ஊமை, ராமன் இழந்த சூர்ப்பநகை, குறுங்காவியம்: கண்ணாடியுள்ளிருந்து, காவியம், அருவுருவம், பிறவாத கவிதை, மூன்று இந்தியக் குழந்தைகள், குமிழிகள், பசி, நிகழ மறுத்த அற்புதம், பசுந்தரை, முதல் முகத்தின் தங்கைக்கு, என் பெயர், கன்னி, மோஹினி, வண்ணத்துப் பூச்சியும் கடலும், மண்டபம், பியானோ, கடல் நடுவே ஒரு களம், 24 மணிநேர இரவு, உதிர நதி, இரும்பின் இசை, கீற்று, கிரணம், இடம் ஆகிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இறுதிப் பிரிவில் “பிரமிள் கவிதைகள்: ஓர் உரையாடல்: கடலாய் விரியும் நீர்மொக்குகள்” -எம்.யுவன், சுகுமாரன் ஆகியோரின் உரையாடல் இடம்பெற்றுள்ளது.

## 14638

**புலமையும் வறுமையும்.** குலசேகரம் கமலேஸ்வரன் (தொகுப்பாசிரியர்). தெல்லிப்பழை: கு.கமலேஸ்வரன், துர்க்காபுரம், 1வது பதிப்பு, டிசம்பர் 2011. (சுன்னாகம்: மகிந்தன் கணனி அச்சகம்).

*150+84 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17 சமீ.*

தெல்லிப்பழை துர்க்கையின் அதி அற்புதத்தின் நிலைகொண்டு உருவாக்கம்பெறும் ஐந்து புலவர்களின் சிந்தனைத்துளிகளே இந்நூலாகும். துர்க்கா கவிஞானி குலசேகரம் கமலேஸ்வரன், அவர்களின் 56ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு இந்நூல் 25.12.2011 அன்று வெளியிடப்பட்டுள்ளது. துர்க்கா கவிஞானி குலசேகரம் கமலேஸ்வரன், கரகத் திலகம் மு.ஐயாத்துரை, புலவர் மு.காளிதாசர், லயன வாத்திய திலகம் ஐ.சிவபாதம் பெண்பாற்புலவர் சண்முகலிங்கம் சிவயோகம் ஆகியோரின் பாடல்களை இத்தொகுப்பு உள்ளடக்கியுள்ளது. இந்நூலின் இறுதியில் தனியாக எண்ணிடப்பட்டுள்ள 84 பக்கங்களில் “நாம இன்பரசம்” என்ற தலைப்பில் கு.கமலேஸ்வரன் அவர்கள் இயற்றியுள்ள முதலாவது தொகுப்பு இணைக்கப்பட்டுள்ளது. இதில் பல்வேறு வடிவங்களில் எழுந்தருளியிருக்கும்

தெய்வங்களைப் போற்றி அவர்களின் பேரிற் பாடப்பெற்ற பாடல்களாக இவை உள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18973).

## 14639

**பூகம்பப் பூக்கள்(கவிதைத் தொகுப்பு).** ச.வே.பஞ்சாட்சரம். கிளிநொச்சி: சி.மகேந்திரன், நிர்வாகி, ஆதவன் கல்வி நிலையம், இல. 65, ஸ்கந்தபுரம், 1வது பதிப்பு, சித்திரை 2000. (கிளிநொச்சி: கன்னிநிலம் பதிப்பகம், ஸ்கந்தபுரம்).

x, 26 பக்கம், விலை: ரூபா 40.00, அளவு: 20.5x14.5 சமீ.

விடுதலை போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த வேளையில் படிப்பவர்களின் நரம்புகளில் சூடேற்றும், நெஞ்சங்களில் சிலிர்ப்பூட்டும் பாடல்களைக் காலத்தின் குரலாக, காலத்தின் தேவையை பூர்த்தி செய்யும் படைப்பாக ஆதவன் கல்வி நிலையத்தின் உதவியுடன் கவிஞர் ச.வே.ப. அவர்கள், 2000ம் ஆண்டு சித்திரை மாதத்தில் இப்படைப்பை நூலாக வெளியிட்டார். கவிஞர் அவர்கள் மரபிலக்கியத்தில் ஊறித் திளைத்தவர். ஆனாலும் நவீன இலக்கியத்தை மறுதலிப்பவர் அல்லர். அவரும் தனது கவிதைக்குள் நவீன உத்திகளையும் புதுமைகளையும் புகுத்தி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாறுடைய தமிழ் கவிதை மரபினையும் மீறாமல் கவிதை வடிப்பதில் வல்லவர். சிந்து, குறள், வெண்பா போன்ற யாப்பு வடிவங்களில் இயற்றப்பட்டவை இக்குறும்பாக்கள். அத்தோடு பண்டிதர் அவர்கள் பல்வேறு சமுக, அரசியல் செய்திகளையும் மிகவும் சுவைபட இப்பாக்களில் விதைத்துப் பரிமாறியுள்ளார். இந்நூலில் 100 குறும்பாக்கள் இடம்பெற்றுள்ளன.

## 14640

**பொற்கனவு.** வேலணையூர் ரஜிந்தன் (இயற்பெயர்: பாலசுந்தரம் ரஜிந்தன்). சுவிட்சர்லாந்து: I.T.R. ஊடக வலையமைப்பு, 1வது பதிப்பு, ஒக்டோபர், 2018. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

135 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-71331-1-9.

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, முகநூல், இணையத்தளம் என்று வீசிய வேலணையூர் கவிக்காற்று முதற் படைப்பாக பொற்கனவு என்னும் கவிதைத் தொகுப்பை சுமந்து வருகின்றது. கவிதை என்பது உள்ளத்து உணர்வுகளின் பிரசவம். அது படிப்போரையும் படைப்போரையும் செம்மைப்படுத்தும் ஊடகம். அழகையும், இனிமையையும் நல்ல சிந்தனையையும் வாசகனில் நல்ல மாற்றத்தையும் ஏற்படுத்தும் கவிதைகள் காலத்தால் அழியாது நின்று நிலைக்கும். அவ்வகையில் சமூகக் கருத்துக்களைச் சுமந்துவரும் இக்கவிதைத் தொகுதி வாசகர் மனதில் நிச்சயமாக இடம்பிடிக்கும்.

## 14641

**மடிவேன் என்று நினைத்தாயா?** *மு.தயாளன். மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2019. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 126/1, திருமலை வீதி).*

*120 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 18x12.5 சமீ.,* ISBN: *978-955-4041-15-8.*

*இலக்கியம் என்பது மக்களுக்கானது என்ற கருத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவரான மு.தயாளனின் 60 மரபுக் கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இவரது கவிதைகள் மரபு சார்ந்து இருந்தாலும் அவை சொல்ல வந்த விடயங்கள், நவீன சிந்தனை கொண்டவை. மரபும்-நவீனமும் இங்கு கைகுலுக்கிக் கொள்கின்றன. இவரது கவிதைகள் வாசிக்க இலகுவானவை மாத்திரமல்ல. ஓசை நயத்துடன் பாமர மக்களும் அவற்றைப் புரிந்து கொள்ள முடிகின்றது. இந்நூல் மகுடம் வெளியீட்டகத்தின் 21ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது.*

## 14642

**மணற்கும்பி.** *ரஜிதா இராசரத்தினம். பருத்தித்துறை: கலாசாரப் பேரவை, வடமராட்சி கிழக்கு பிரதேச சபை, 1வது பதிப்பு, ஜுன் 2019. (அல்வாய்: மதுரன் கிராப்பிக்ஸ்).*

*72 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x12.5 சமீ.,* ISBN: *978-955-3681-02-7.*

*நகர்தலின் சுவடு, இரவல் பேனா, அளாப்பி, இருளுமிழும் வெண்முத்தம், சப்பாத்துச் சாத்தான்கள், ஏழையின் ஒரு நாள், பல்லி சொல்லுதணை, வாத்தம்மா, தேடல்கள் எல்லாம் தேடப்படும், கடைசிவரை காதலை மட்டும்தான், யன்னலோரம், பிரபஞ்சக் காதலியாய், காதலானவன்-அவன் கக்குமணி, எப்படித்தான் கிடைக்குமாம், எண பூட்டம்மா, எங்க இருக்கிறீங்க அப்பா, ப்ரியத்தின் ஆத்மார்த்த ஆவிகள், இரு பயணம், பேரன்பு, சவுக்கம்காடுகளும் மணற்கும்பிகளும், ஒற்றைக் கொலுசு, முதலே இறுதியுமானது, துயர்தோய் இருள், அனாதியா, அவல வாய்க்கால், மாயோனே, மனிதசாதி, மாரித்தவளை, மூன்று நூறு, பனை உயரக் கும்பி, துயர்மலை, அமுக்குவான்கள், வெற்றிடம், கண்ணம்மா, உயிர்ச் சூடேற்றல், நிகழ்கொல்லி, பனி அதிகாலை, தறுதலை, கானவேட்கை, நிர்வாண வெட்கம் ஆகிய தலைப்புகளில் ரஜிதா இராசரத்தினம் எழுதிய கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கவிதையும் வடமராட்சி கிழக்கின் தனித்துவமான இயல்புகளையும் வாழ்வியல் நெறிகளையும் மண்வாசனை குழைத்துப் பதிவுசெய்கின்றது.*

## 14643

**மழலையும் மறக்குமா?.** *காங்கேயன் (இயற்பெயர்: வி.சு.விஜயலாதன்). யாழ்ப்பாணம்: வி.சு.விஜயலாதன், சிறப்புக் கலை மாணவன், சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 2019. (யாழ்ப்பாணம்:* Focus Printers*).*

xiv, 78 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x11.5 சமீ.

இறுதிப் போர்க்காலத்தில் மிகக் கடுமையாக காயமடைந்து கண்பார்வையை முற்றாக இழந்தவர் விஜயகுமார் விஜயலாதன். முடங்கிக் கிடக்காமல் முயற்சியினால் இன்று பல்கலைக்கழக மாணவராக, விளையாட்டு வீரராக, பல்துறைக் கலைஞராக பரிணமித்து நிற்கிறார். மீண்டும் பெறமுடியாத விழிப்புலனை எமக்காக இழந்த இந்த இளைஞன், தனது கண்களால் அன்று பதிவுசெய்த காட்சிகளை, தமிழினம் சுமந்த பெரும் துயரங்களை, ஈழத் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை, வரலாற்றின் நேரடிச் சாட்சியாக இருந்து இன்று எழுத்தில் வடித்திருக்கிறார். இக்கவிதை நூலை விழிப்புல வலுவிழந்த மாற்றுத்திறனாளிகளும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில் கவிஞரால் ஒலி வடிவில் இறுவட்டு ஒன்றும் வெளியிடப்பட்டது. வரலாற்றை முதற்தர பட்டறிவோடு பதிவுசெய்யும் இந்த இளம் படைப்பாளியின் முயற்சிக்கு யாழ் பல்கலைக்க சமூகம் உறுதுணையாய் இருந்தமை வரவேற்கத் தக்கதொரு முன்மாதிரியாகும். 2009ஆம் ஆண்டு வைகாசி மாதம் 18ஆம் திகதி இலங்கைப் படையினரால் முள்ளிவாய்க்கால் மண்ணிலே கொல்லப்பட்ட தமிழ் மக்களின் வலிகளையும் வடுக்களையும் கண்டு அனுபவித்த இவ்விளைஞன், பத்து ஆண்டுகளாகியும் அதனை மறவாது உள்ளத்தில் தேக்கி வைத்து கவிதையாக்கியிருக்கிறார். இறுதி யுத்த காலப்பகுதியில் தமிழீழ இலட்சியப் பாதையில் பயணித்து தன் விழிப்புலன்களையும் இழந்து யுத்தத்தின் வடுக்களோடு வாழ்ந்துகொண்டிருக்கும் இளைஞன் இவர். முள்ளிவாய்க்கால் புத்தாண்டு நிறைவு நினைவோடு இக்கவிதைத் தொகுதியைப் படைத்திருக்கிறார். ஜெர்மன் தமிழ் இளையோர் அமைப்பினரதும், லண்டன் புதிய வாழ்வு நிறுவனத்தினரதும் நிதி உதவியுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. காங்கேசன்துறையைச் சேர்ந்த விஜயகுமார்-சுமதி தேவி தம்பதியரின் மகனான விஜயலாதன், இளமைக்காலக் கல்வியை மானிப்பாய் சென்ட் ஆன்ஸ் பாடசாலையிலும், கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும், இறுதி யுத்தத்தில் பார்வை இழந்த பின்னர் கைதடி நபில்ட் பாடசாலையிலும், பயின்று தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையில் சிறப்புக் கலையில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகிறார்.

## 14644

**மனப் பூக்கள்(கவிதைத் தொகுதி).** செ.திருநாவுக்கரசு. யாழ்ப்பாணம்: திருமதி விஜயலட்சுமி திருநாவுக்கரசு, 15, பண்டாரக் குளம் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, மே 2018. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ்.பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

ix, 95 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250.00, அளவு: 20.5x13.5 சமீ., ISBN: 978-955-52960-9-0.

சுதந்திரன், வலம்புரி, உதயன், கலைமுகம், கலைமலர், அருள் ஒளி, சிவபூமி-முதியோர் இல்லப் பத்தாவது ஆண்டுச் சிறப்புமலர் ஆகிய ஏடுகளில் பிரசுரமான ஆசிரியரின் 47 கவிதைகளின் தொகுப்பு. பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, "அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்" என்ற கவிதையில் தொடங்கி "சாந்திகப்

பேரொளியே" என்ற கவிதையுடன் இத்தொகுப்பை நிறைவுசெய்துள்ளார். கவிஞர் திருவின் கவிதைகளிலே சொற்கள், சொற்றொடர்கள் இசைவுபெற்று வருவதைக் காணமுடிகின்றது. பொருளுக்கு ஏற்றவகையில் சொற்களைத் தெரிவுசெய்து பொருத்தமுற அமைத்துச் செல்கின்றார். சமூகச் செய்திகள், வாழ்த்துக்கள், வழிபாடுகள், இரங்கல்கள், பழைய நினைவுகள், உள்ளத்தைத் தொட்ட உணர்வுகள் எனப் பல்வேறு விடயங்கள் உள்ளடங்குகின்றன.

## 14645

**மனமெனும் கூடு: கவிதைத் தொகுப்பு.** கந்தர்மடம் அ.அஜந்தன். சாவகச்சேரி: அரியராசா அஜந்தன், சண்முகம் வீதி, 1வது பதிப்பு, சித்திரை 2016. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டேர்ஸ், முத்திரைச் சந்தியடி, நல்லூர்).

xi, 96 பக்கம், விலை: ரூபா 300.00, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43107-0-4.

முல்லைத்தீவில் Save the Children நிறுவனத்தின் சிரேஷ்ட செயற்றிட்ட அலுவலராகப் பணியாற்றும் கந்தர்மடம் அ.அஜந்தனின் "முதுமை" தொடக்கம் "கைம்பெண்" ஈறாக 82 கவிதைகளைத் தாங்கிய முதலாவது கவிதைத் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் தன் வாழ்வில் தான் சந்தித்தவற்றில் சிந்தித்தவற்றை சிறு வரிகளுக்குள் அடக்கி ஊடகங்களில் அவ்வப்போது வெளியிட்டுவந்தவர். தம்மைப் பாதிக்கும் சந்தர்ப்பங்களை வெறும் சம்பவங்களாகப் பார்த்துக் கடந்து செல்லாமல், அதனை யதார்த்த வாழ்வியலோடும் தேடலுடன்கூடிய உணர்வுபூர்வமாகவும் இயற்கையோடு ஒத்துணர்ந்தும் பொருத்தமான கற்பனையுடன் சில வரிகளில் சொல்லத் துடிக்கிறார். கவிதைகளுக்குப் பொருத்தமான ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன. "கனவுகள் சமைந்திட்ட வாழ்வு, இதில் பலித்திட்ட கனவுகள் எத்தனை கூறு" என மானிட வாழ்வு என்ற கவிதை சந்தங்களுடன் தொடர்கின்றது. சிறைக்கதவு திறந்திடுமோ, ஊனம் இங்கு ஏது, கலைந்திடும் கனவுகள், மனமெனும் கூடு எனக் கவிதைகள் நீள்கின்றன. தேசிய/ யாழ். பிராந்தியப் பத்திரிகைகள்,சஞ்சிகைகளில் இவரது கவிதைகள் ஏற்கெனவே வெளியாகியுள்ளன.

## 14646

**மனித விழுமியப் பாடல்கள்.** கல்வயல் வே.குமாரசாமி. சாவகச்சேரி: கல்வயல் வெ.குமாரசாமி நினைவு மலர், 1வது பதிப்பு, ஜனவரி 2017. (சாவகச்சேரி: திருக்கணித பதிப்பகம்).

28 பக்கம், புகைப்படம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.

2016இல் இல் இறைபதமடைந்த கல்வயல் வே.குமாரசாமி (01.01.1944-10.12.2016) அவர்களின் பெயரால் வெளியிடப்பெற்ற நினைவு மலர். கல்வயல்-சாவகச்சேரியில் பிறந்த கவிஞரான இவர் கலைமாணி, முதுகலைமாணிப் பட்டங்களைப் பெற்றவர். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற இவர், முருகையன், கைலாசபதி, மகாகவி போன்றேரிடம் கவிதைத்துறையில் பயின்று அதன் வாயிலாக சமூக அவலங்களைக் கூறும் உணர்ச்சிமிக்க பல கவிதைகளை எழுதியிருந்தவர். முறுகல் சொற்பதம், சிரமம் குறைகிறது, மரண நனவுகள் ஆகிய கவிதைத் தொகுப்புகளுடன் பல குழந்தைப்பாடல் நூல்களையும் எமக்கு வழங்கியுள்ளார். இவருக்கு 2000ஆம் ஆண்டில் இந்து சமயப் பேரவையினர் "கவிமாமணி" விருதினையும், 2009இல் கலாசார அலுவல்கள் திணைக்களம் கலாபூஷணம் விருதினையும், 2011இல் அகில இலங்கை கம்பன் கழகம் மகரந்தச் சிறகு விருதினையும், கொழும்புத் தமிழ்ச் சங்கம் உலகத் தமிழ் இலக்கிய மாநாடு விருதினையும், 2014இல் தென்மராட்சி பிரதேச செயலகம் கலைச்சாகரம் விருதினையும் வழங்கியிருந்தனர். இவரது 45 ஆண்டுகளுக்கும் மேலான கலைச்சேவையை பாராட்டி 2015இல் கௌரவ முதலமைச்சர் விருதினையும் வழங்கியிருந்தனர். 2016இல் தேசத்தின் உயர் கௌரவ விருதான காவ்யாபிமானி விருதினையும் பெற்றிருந்தவர் இவர். இந்நூலில் வாழும் வழி, அம்மா அப்பா, நற்செல்வம், கடமை, வேண்டுதல், ஆவல், அன்பு, நடத்தைகள், உயர்வின் வழி என இன்னோரன்ன தேர்ந்த கவிதைகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

## 14647

**மனுவுக்கு மனு.** செ.அன்புராசா. மன்னார்: முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2018. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

xxiv, 88 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4609-04-4.

"மனு" என்ற சொல் மனிதனையும், அதே வேளை குறை அல்லது புகார் தெரிவித்து எழுதும் கடிதத்தையும் குறிக்கின்றது. மனுவுடன் மனு நடந்துகொள்ளும் நிலைகண்டு மனுவுக்கு-ஒரு மனுக் கொடுக்கலாம் எனச் சிந்தித்ததன் வெளிப்பாடாக இக்கவிதைத் தொகுதி உருவாகியுள்ளது. தனி மனிதனாகவும், குழுவாகவும், சமூகமாகவும், மனு மனுவுடன், மனு-மனுவோடு நடந்துகொள்ளும் நிலையினை ஆசிரியர் எண்ணிப்பார்த்தபோது மனிதன் ஏன் இத்தனை தூரத்துக்கு மலினப்பட்டுப் போய்க் கிடக்கிறான் என்ற சிந்தனை இக்கவிஞரின் உள்ளத்தில் எழுந்துள்ளது. தன்னைக் கடந்து செல்லும் மனிதர்களையும், தன்னைச் சுற்றி நடக்கும் சம்பவங்களையும் மையமாக வைத்துத் தன் இதயத்தை வருடிக்கொண்டும் நெருடிக்கொண்டும் இருந்தவற்றை அருட்திரு செ.அன்புராசா அடிகளார் இனிய கவிதைகளாக்கித் தந்துள்ளார். 2015-2018 காலகட்டத்தில் இக்கவிதைகள் ஜீவநதி, ஞானம், தாயக ஒலி, நான் ஆகிய சஞ்சிகைகளில் வெளிவந்திருந்தன. ஏற்கெனவே 13 நூல்களையும் 5 இறுவட்டுக்களையும் வெளியிட்டு தனது கலை இலக்கியப் பயணத்தைத் தொடரும் செ.அன்புராசா அடிகளாரின் இந்நூலில் 79 கவிதைகள் அடங்கியுள்ளன. இக்கவிதைகள் சமூகம் சார்ந்து பலதரப்பட்ட மனித நடத்தைகளை விமர்சிப்பவையாக அமைந்துள்ளன. இக்கவிதைகளில் விரவிநிற்கும் ஆசிரியது கவிதை மொழி தனித்துவமானதும் வீச்சானதுமாகும். ஆசிரியரது சமூகப்பார்வை

புதிய நோக்குடையது. சமகால ஈழத்து அரசியல் பற்றியும் கவிஞர் பல கவிதைகளைத் தந்துள்ளார்.

### 14648

**மானுடமும் மணிக்கவிதைகளும்.** இராமையா மணிசேகரன் (புனைபெயர்: பூண்டுலோயா இரா.மணிசேகரன்). பூண்டுலோயா: இராமையா மணிசேகரன், 225/05, நகரசபை வீடமைப்பு, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு: கிராப்பிக்ஸ் லாண்ட்).

xii, 75 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x16 சமீ.

இந்நூலில் பூண்டுலோயா இரா.மணிசேகரன் எழுதித் தொகுத்துள்ள அவரது தேர்ந்த கவிதைகள் இடம்பெற்றுள்ளன. பெருங்காயம், பிரளயம், மகிழ்வோம், போதுமம்மா, விதியா, காண்போமம்மா, ஆரறிவாளர், விடிவு எப்போ? மொட்டுகள், எரிமலை, மறப்பதாகாது, ஏன் வந்தாய்?, அதிகம் அதிகம், இளைஞர் எண்ணம், சந்தோசமா சாகலாம், நன்மையடி, தருவாளா?, சிகரம், காண்கிறேன், தாயே நீ வாராயோ?, ஏழைக்கும் வேண்டும், ஆட்டம், சுவீஸ், மூலந்தான், செஞ்சோலை, அவசரம், என்மொழி, திருமணம், மழலை பேசுகிறேன், இன்று, தேயிலை பேசுகிறேன், தத்துவங்கள், தத்தளிப்பு, சட்டங்களும் ஒப்பந்தங்களும், போலி, தூரநோக்கு, காற்று, காடுகள், பறிக்காதீர்கள், நலமாகும், நிழல் நிஜமாகும், வருவாய், காய்ந்ததடி, தம்பியரே தங்கையரே, கூடாது, சின்ன சின்ன, எங்கள் கோஷம், வேறெங்குமில்லை, எங்களூர் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

### 14649

**மிகுதியை எங்கு வாசிக்கலாம்.** றியாஸ் குரானா. வாழைச்சேனை 05: காகம் (உயிர்ப்பைத் தேடும் வேர்கள்) வெளியீடு, மஹ்மூட் ஆலிம் தெரு, 1வது பதிப்பு, ஜுன் 2013. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

128 பக்கம், விலை: ரூபா 400.00, அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-4644-12-0.

றியாஸ் குரானா இலங்கையில் அக்கரைப்பற்றை சேர்ந்தவர். 2005 முதல் 2007 வரை "பெருவெளி" என்ற சிற்றிதழை நடத்திவந்தார். "ஆதி நதியிலிருந்து கிழக்குப் பக்கம் பிரிகிறது ஒரு கிளை", "வண்ணத்துப்பூச்சியாகி பறந்த கதைக்குரிய காலம்", "நாவல் ஒன்றின் மூன்றாம் பதிப்பு", "செய்வினை" போன்ற தலைப்புகளில் அரசியல் இலக்கியப் பிரதிகளையும் கவிதைத் தொகுப்புகளையும் இவர் வெளியிட்டுள்ளார். பின்நவீனம் குறித்த எழுச்சியை அதற்குள்ளிருக்கும் மாற்றுத் தளங்களை எழுத்துச் சூழலில் அறிமுகப்படுத்தப் பல்வேறு உரையாடல்களையும் கட்டுரைகளையும் எழுதி வருகிறார். சொற்கள் குறித்த பெரும் ஆய்வுகளைத் தன் கவிதைகள் தோறும் நிகழ்த்திக் காட்டியபடி இருக்கிறார். அது இயல்பாய் நடந்ததா அல்லது அதுதான் அவரின் இயங்கு தளமா என்பதை அவரது கவிதைகளை நீந்திக் கடந்தால் மட்டுமே நம்மால் விளங்கிக்கொள்ள முடியும். (பூங்குழலி வீரன், வல்லினம்).

### 14650

**முகிலெனக்கு துகிலாகும்: வடிவழகையன் கவிதைகள்.** வடிவழகையன். சுவிட்சர்லாந்து: சுகர்யா வெளியீட்டகம், 1வது பதிப்பு, வைகாசி 2018. (யாழ்ப்பாணம்: நியு பாரதி பிரின்டர்ஸ், அளவெட்டி தெற்கு, அளவெட்டி).

xviii, 126 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 28.5x14 சமீ., ISBN: 978-955-3535-00-9.

"இது கவிதைகள் எழுதவெனப் புறப்பட்ட கத்துக்குட்டியொன்றின் கிறுக்கல்கள். உள்ளத்தில் பொங்கிய உணர்வுகளையெல்லாம் ஊற்றிவைத்த கூஜா. சமூகத்திற்காக ஆத்திரம் பொங்கிய பொழுதுகளில் அதை அடக்கமுடியாமல் கொட்டிவைத்த பாத்திரம். தமிழ் ஓலை எடுத்து தனித்திருந்தே பின்னிப்பின்னி தமிழுணர்வால் வேய்ந்து அழகுணர்வோடு கட்டிய கவிதைக் குடில். எழுதத் தொடங்கிய காலத்தில் எழுதியவை கவிதைகள் தானா என்கிற கடும் சந்தேகம் எனக்கிருந்ததென்னவோ நிஜம். ஆனால் எழுதியவைகளில் கவித்துவம் இருப்பது நிஜத்திலும் நிஜம். இந்தப் பயணம் சில பொழுதில் மரபின்மேல் ஏறியும் சில பொழுதில் மரபை மீறியும் நிகழ்ந்திருக்கிறது. இப்பயணத்தினை தொடங்கிய காலங்களில் வாய்ப்பளித்து வளர்த்த இலங்கை வானொலியின் கவிதைக் கலசம், இதய சங்கமம், பத்திரிகைகள், சிற்றிதழ்கள் சில சிரம் தாழ்த்துதற்குரியன. கண்டதையும் எழுதக்கூடாதென்பதில் கண்டிப்போடு இருந்திருக்கிறேன். அதனால் கண்டதையே எழுதியிருக்கிறேன். ஆனால் நீங்கள் காணாதவைகளைக்கூட அவற்றில் நான் கண்டிருக்கிறேன். அதையே விண்டிருக்கிறேன்." (கவிஞரின் வாக்குமூலம்). இந்நூலில் ஆசிரியரின் "முது தமிழே" என்ற கவிதை முதல் "அள்ளிச் சொரிந்தவற்றுள் கிள்ளமுடிந்தவை" என்ற படைப்பாக்கம் வரை 124 தலைப்புகளில் கவிதைப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

### 14651

**முகை விடும் மொட்டுக்கள் (கவிதைத் தொகுப்பு).** எம்.ரஸ்லான் ராஸீக். கொழும்பு 6: இலங்கை தமிழோசை இணைய வானொலி, 10 ½, 42ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 2011. (மாவனல்ல: ஸ்மார்ட் அச்சகம்).

xiv, 57 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 21.5x12 சமீ., ISBN: 978-955-51323-1-2.

கவிஞர் எம்.ரஸ்லான் ராஸீக், மாவனல்லை மாலியத்தையைச் சேர்ந்தவர். இலங்கை தமிழோசை இணைய வானொலியின் பகுதிநேர அறிவிப்பாளராகப் பணியாற்றுபவர். இத்தொகுப்பில் இவர் எழுதிய மொட்டவிழும் மலர்கள், மன்னிக்க வேண்டும் தோழா, மலர் இழந்த செடி, அழைப்பு, ந(த)ங்கைக்கு நன்றி, வாழ்க தமிழ் வளர்க தமிழோசை, (சீ)தானம், பைத்துல் முகத்தீஸ், பைத்தியக்காரன், சுவனப் பாதையில், ஆசானே, இஸ்லாமியக் கடமையில், விலைபோகும் ஆண்மை, என் சாச்சிக்காய், அடுப்பங்கரை விளக்கல்ல, ஐமிய்யாவே, ஓர் ஆத்மா ஒய்கிறது, உலக அரசாட்சி, நண்பர்கள், இலங்கையில் முஸ்லிம்கள், பேனை, இலங்கை மண்ணிலே, சுவனத்தை நோக்கி, அரசியல்வாதிகள், எனக்கொரு உதவி, நானும் உன்னில், ஒளிமயமான எதிர்காலம் ஆகிய 27 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

## 14652

**முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி அவர்களின் பாடல்கள்.** *மு.நல்லதம்பி (மூலம்), ம.ந.கடம்பேஸ்வரன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன், சிந்துபுரம், வட்டுக்கோட்டை, 1வது பதிப்பு, மே 2016. (வட்டுக்கோட்டை: மாயன் பதிப்பகம், சிந்துபுரம்).*

x, *65 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-955-41042-3-5.*

*01.06.1937இல் வட்டுக்கோட்டை மு.நல்லதம்பிப் புலவர் அவர்களால் கொழும்பு சாஹிறாக் கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டிற்காக இயற்றப்பட்ட பாடல்கள் இவை. கல்லச்சுப் பிரதியாக வெளியிடப்பட்டிருந்த இப்பிரசுரத்தைப் புலவர், பண்டிதர் கடம்பேஸ்வரன் அவர்கள் 08.05.2016 அன்று இந்நூல் விரிவான வாசகர்களை சென்றடையும் வண்ணம் நூலுருவில் வெளியிட்டுள்ளார். முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி, கொழும்பு சாஹிறாக் கல்லூரியிலே தலைமைத் தமிழ் ஆசிரியராக இருபத்தெட்டு ஆண்டுகள் பணியாற்றி முஸ்லிம் மக்கள் மத்தியிலே தமிழார்வத்தை வளர்த்துவந்தவர். கொழும்பு சாஹிறாக் கல்லூரிக் கீதங்களும், இசைக் கலைக் கல்லூரி அமைப்புவிழா இசைப்பாடல்களும், வேறு சில ஆரம்பகாலக் கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஒழுக்கம், அறநெறி, தூய்மையான வாழ்க்கைக்கான புத்திமதிகள், வேண்டுதற் பாடல்கள், கிராமியக் கலைப்பாடல்கள் என்பன இதில் அடங்கியுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 63630).*

## 14653

**மூசாப்பும் ஒரு முழு வெயிலும்.** *எஸ்.ஜனூஸ். (இயற்பெயர்: ஜனூஸ் சம்சுதீன்). முல்லைத்தீவு: செல்லமுத்து வெளியீட்டகம், வள்ளுவர்புரம், விசுவமடு, 1வது பதிப்பு, ஜனவரி 2016. (கொழும்பு 10: யூ.டீ.எச். பிரின்டர்ஸ், 277/6, முதலாவது டிவிசன், கிங்ஸ் கோர்ட், மருதானை, ).*

ix, *74 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-54019-1-3.*

*2012இல் "தாக்கத்தி" என்ற தனது முதலாவது கவிதைத் தொகுப்பை வழங்கிய இலங்கை வானொலி ஒலிபரப்பாளர் கவிஞர் எஸ்.ஜனூஸ் மீண்டும் மற்றொரு கவிதை நூலை இலக்கிய உலகிற்கு வழங்கியுள்ளார். கவிஞர் ஜனூஸ் எழுதிய 44 தேர்ந்த கவிதைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. மனிதாபிமான அரவணைப்புக்களாக சில கவிதைகள் அமைகின்றன அஃறிணைப் பொருட்களோடு தனது உணர்வுகளைப் பதிவுசெய்யும் சில கவிதைகள் ஆழமான கருத்துக்களை பொதிந்துவைக்கின்றன. குதிரையோடுதல், வீதிகளும் வீதிக்கு வரும், கலப்படமாகிய மழை, மனிசப் பழங்கள், கள்ளப்பட்ட காற்று, உப்புச் சிரட்டைக்கள் உழுந்து சாகு, கடதாசி மாளிகை, நெட்டி மறித்த நிலா ஆகிய கருப் பொருள் அமைந்த வடிவங்களும் உயிர்ப்பு நிறைந்த தூக்கலான கவிதைகளாக ஒளிர்கின்றன. ஜப்பானிய ஹைக்கூ, "சென்" வடிவில் அமைந்த கவிதைகளும் ஒன்றிரண்டு தலைகாட்டியுள்ளன. உயர்திணையின் சாபக்கேடுகள் என்ற நெடுங்கவிதையில் சிறுவர் துஷ்பிரயோகத்தையும் சாடுகின்றார். மொத்தத்தில் இவரது*

கவிதைத்தொகுப்பில் கவிதா உணர்வையும் தாண்டிய மானுடநேயம் நமது மனதைக் கனக்கச் செய்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65081).

### 14654

**மொழிபெயர்க்கப்பட்ட மௌனம்.** வேல். சாரங்கன். யாழ்ப்பாணம்: வேல். சாரங்கன், 30ஆம் அணி, மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).

xvi, 79 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18.5x13 சமீ., ISBN: 978-955-52013-0-8.

மூன்றாமாண்டு மருத்துவபீட மாணவரான வேல் சாரங்கனின் கவிதைத் தொகுதி. மௌனம் எந்த வரையறைகளுக்குள்ளும் சிக்காமல், எந்த இன-மத-தேச எல்லைகளுக்குள்ளும் கட்டுண்டு போகாமல், வார்த்தைகளுக்குள் தன்னைத் தொலைக்காமல், வசனங்களினூடான மொழிக்கலப்புகளில் வசப்பட்டுப் போகாமல், என்றும் இளமையாய், என்றும் புதுமையாய் இருக்கும் ஒரே மொழி இது. புரிதல் என்னும் எல்லையில் போரிட்டுக் கொண்டிருக்கும் மௌனம் அவ்வப்போது வெற்றிவாகை சூடுகின்றது. அடிக்கடி தொலையுண்டும் போகின்றது. பலவேளைகளில் புரிந்தும் புரியாமலும் புதிராகவே போய்விடுகின்றது. இந்த மௌனத்தைத் தன் கவிதைகளினூடாக மொழிபெயர்த்திருக்கிறார் இவ்விளம் கவிஞன்.

### 14655

**வலித்திடினும் சலிக்கவில்லை: கவிதைத் தொகுப்பு.** ஷியா (இயற்பெயர்: கே.ஷிபானா). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661/663/675 பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2019. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(7), 8-88 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 22x14 சமீ., ISBN: 978-624-00-0189-2.

கே.ஷிபானாவின் இத்தொகுப்பிலுள்ள கவிதைகள் புதுக்கவிதைப் பாங்கில் அமைந்துள்ளன. அவரது தனிப்பட்ட வாழ்வியல் பற்றிய அறிதலை "என்னுரை"யில் குறிப்பிட்டிருக்கிறார். அதை வாசித்தபின்னர் கவிதைகளை வாசிக்கும்போது இக்கவிதைகளையிட்டு புதியதொரு தரிசனம் கிட்டுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65494).

### 14656

**வாப்பாடம்மா (கவிதைகள்).** மு.இ.உமர் அலி. நிந்தவூர் 18: மு.இ.உமர் அலி, 20A, 1ம் குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 10: யூ.டீ.எச். கம்ப்யுபிரின்ட், மொஹிதீன் மஸ்ஜித் வீதி).

xiv, 66 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-38118-0-6.

கிழக்கிலங்கை முஸ்லீம் கிராமத்துப் பெண்களின் பண்புகளையும் கரைந்துபோய் மறைந்துவிட்ட வாழ்வியல் பண்புகளையும் பழக்க வழக்கங்களையும், தாய்மையின் விழுமிய எச்சங்களையும் இக்கவிதைத் தொகுதி பதிவுசெய்துள்ளது. கிழக்கிலங்கை முஸ்லீம்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த அவர்களது மண்வளச் சொற்கள் கேட்கக் கேட்க இனிமையானதும் இயற்கையின் எழிலோடு சங்கமித்து வரும் பண்பும் சிறப்பும் கொண்டவை. கவிஞர் மு.இ.உமர் அலி, தன் தந்தையின் தாயைப் பற்றி கொண்டுள்ள நினைவுச் சிதறல்களை இக்கவிதைகளில் மிகத் தத்ரூபமாக மனச் சித்திரமாக்கியுள்ளார். இப்பெண்ணின் தாய்மை உணர்வுகள், பண்பாடுகள், இயற்கையை உயிர்த்துடிப்போடு நேசிக்கும் அவரது பண்புகள் பாசங்கள் அனைத்தும் இந்நூலில் மிகச் செழுமையோடு கவிதைகளாக்கப்பட்டுள்ளன. இன்று வழக்கொழிந்துபோன பரிசார முறை, பெருநாள் தின்பண்டங்கள், மரண வீட்டுக் கடமைகள், பிறருக்கு அவரின் துன்பத்தில் கடன் கொடுத்து உதவுதல், வீட்டுச் சூழலில் குடும்பத்துக்கென வீட்டுத் தோட்டம் அமைத்துப் பராமரித்தல், சுயதேவைப் பூர்த்திக்கான கோழி/கால்நடை வளர்ப்பு என்பன போன்றவற்றுடன் சமூக வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் மூனறாம் தலைமுறையின் நெஞ்சத்தில் நிழலாட வைக்கின்றார்.

## 14657

**விசித்திரங்களால் நிறமூட்டப்பட்ட உலகு.** ஏ.எம்.குர்ஷித். மருதமுனை-04: புதுப்புனைவு இலக்கிய வட்டம், 23B, மசூர் மௌலானா வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2012. (அக்கரைப்பற்று-01: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்ட்).

xvi, 80 பக்கம், விலை: ரூபா 290.00, அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-54129-0-2.

அப்துல் மஜீத் குர்ஷித் மருதமுனையைச் சேர்ந்த கவிஞர். இவரது "விசித்திரங்களால் நிறமூட்டப்பட்ட உலகு", யாருடைய ஒப்பனையும் பாவனையுமில்லாத தனக்கேயுரிய தனி மொழியொன்றுடன் வலம்வருகிறது. இவரது கவிதைகள் பாவ ஒப்புக்கோடலாய் பெண்ணுணர்வுகளை உள்வாங்கி வலிகளாய் வெளிப்படுகின்றன. குரல்வளை நெரிபட்டுக்கொண்டிருப்பவர்களின் குரல்களாயும் அவை கேட்கின்றன. எதிரே நடப்பவற்றுக்கு ஏதும் செய்யவொண்ணா பெருமூச்சுகளாயும் அவை வெளிவருகின்றன. பெண்களை தாழ்வுபடுத்தும் சமூக, அரசியல், பொருளாதார நடைமுறைகள், கட்டமைப்புக்கள் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கும்/ கவனப்படுத்தும் சமூக, கலாசார, அரசியல் இயக்கங்கள், செயற்பாடுகள், கோட்பாடுகளின் கோர்வைகளைக் கொண்ட பெண்நிலைச் சிந்தனைகளை குர்சித் உள்வாங்கி வெளிப்படுத்துகிறார். ஆண்கள் செய்த பாவங்களுக்காய் பெண்ணாக மாறி பாவ ஒப்புக்கோடலாய் மாறிய ஒத்துணர்வுக் கவிதைகளுக்கும் அவரின் படைப்பின் உளவியலுக்கும் இடையே சிறிய கடக்கக்கூடிய இடைவெளிதான் காணப்படுகின்றது.

## 14658

**விண்ணில் நிகழ்ந்த விந்தை (கவிதைகள்).** எஸ்.கருணானந்தராஜா. சென்னை 600 017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, 7(ப.எண் 4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2018. (சென்னை 94: ஆதிலட்சுமி பிரிண்டேர்ஸ்).

xxii, 202 பக்கம், விலை: இந்திய ரூபா 140.00, அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-86031-80-8.

கவிஞர் யுகசாரதியின் தேர்ந்த 100 கவிதைகளின் தொகுப்பு இது. பாரதியின் தீவிர பக்தனான கவிஞர் எஸ்.கருணானந்தராஜாவின் கவிதைகளிலும் அவ்வப்போது பாரதியின் கவிதைகளின் தாக்கங்கள் புலப்படுகின்றன. "தனிமையோடு பேசுங்கள்" என்ற கவிதையில் "தனிமை கண்டதுண்டு-அதிலே சாரமிருக்குதம்மா" என்ற பாரதியின் வரியை நினைவூட்டுகின்றார். கவிதைத் தொகுதிகளில் பொதுவாகக் கவிதைகளுக்குப் பொருத்தமாகப் படம் வரைந்திருப்பார்கள். ஆனால் இவரோ படங்களுக்குப் பொருத்தமாக, அபார கற்பனை வளத்துடன் கவிதைகளைத் தருகின்றார். ஒரு சிறு பெண்குழந்தை இடுப்பில் குடமெடுத்து வெற்றுக் கால்களோடு வெயிலில் நடக்கிறாள். குழந்தையின் கால்கள் சுடுமே என்று கவலைப்படுகிறார் கவிஞர். சிந்தனைக்குரிய தத்துவங்கள் அவரது கவிதைகளில் இழையோடுகின்றன. குழப்பத்திலிருந்து உலகம் தோன்றியது என்ற பொதுவாகக் கூறுவர். இவரோ அன்பிலிருந்துதான் எல்லாமும் தோன்றின என்கிறார். அழியா இருப்பு என்னும் கவிதை ஆன்மாவின் நிலைத்த தன்மையை வெளிப்படுத்துகின்றது. நாம் இந்த உலகில் ஒரு புள்ளி அளவுகூட இல்லை. ஆனால் நம்மை பெரிய புள்ளிகளாகக் கருதி ஆர்ப்பாட்டம் பண்ணுகிறோம் என்கிறார். பக்தியில்லா வெற்றுச் சடங்குகளால் இறைவனைத் தேடுவதில் பயனில்லை என்று இத்தொகுதிக் கவிதைகளில் பல இடங்களில் கூறிப் பதிய வைக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64852).

## 14659

**விரல்சூப்பி.** ப.கனகேஸ்வரன் (புனைபெயர்: கே.ஜி). முல்லைத்தீவு: செல்லமுத்து வெளியீட்டகம், வள்ளுவர்புரம், விசுவமடு, 1வது பதிப்பு, மார்ச் 2017. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

xii, 85 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12 சமீ., ISBN: 978-955-4096-04-2.

அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் மலையகக் கவிஞர் கேஜீயின் புதுக்கவிதைகளின் தொகுப்பு. "துளிர்" என்ற இவரது முதலாவது தொகுப்பின் மூலம் இலக்கிய உலகில் அறியப்பட்டவர் பொகவந்தலாவை ப.கனகேஸ்வரன். இவரது கவிதைகளில் புதுமைகள் இருக்கும். அனுபவத்தை கவித்துவத்துடன் சுருக்கமாகச் சொல்லிச்செல்லும் போக்கும் காணப்படுகின்றது. இத்தொகுப்பில் 74 புதுக்கவிதைகள் இடம்பெற்றுள்ளன. ஆவேசம், தாளாத கோபம், பாசம், உருக்கம், வெறுப்பு, விரக்தி, பலவித ஏக்கங்கள், பச்சாத்தாபம், நட்பின் உயர்வு,

பெண்மையின் நிலை, எனப் பல கோணங்களில் இவரது கவிதைகள் கருக்கொண்டுள்ளன.

### 14660

**விழித்திருங்கள்.** நெல்லை லதாங்கி (இயற்பெயர்: ஆனந்தராணி நாகேந்திரன்). நெல்லியடி: திருமதி ஆனந்தராணி நாகேந்திரன், மகாத்மா வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

v, 55 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-53908-5-9.

நெல்லை லதாங்கி சமூகம் பற்றிய உணர்வுள்ள ஒரு கவிஞர். போர் ஏற்படுத்திய பேரழிவு, பொறுப்பில்லாத இளைஞர்கள் ஏற்படுத்திவரும் சமூகச் சீரழிவு, நீறுபூத்த நெருப்பாகக் கிடக்கும் சாதியத்தின் கூறுகள் என்பனவற்றை தன் கவிதைகளில் பதிவுசெய்கின்றார். துடக்கு, தொல்லைபேசி, அன்னை, நேசி, மந்தை போல வாழ்வது ஏன்?, நாய்களா பேய்களா? உம்மணாமூஞ்சிகள், உழைப்பு, துவேசம், எது அழகு, நம்ப முடிகிறதா? எல்லோரும் இன்புற்றிருக்க, நாம் மாறோம், இணைவேன் உன் மனைவியாக, அந்தரத்தில் தொங்கினவே, அன்பு செய்ய, மறந்து வாழ, விதிவிலக்கு, காதலர் தினத்தினிலே, குனிவு, விழித்தெழுங்கள், யாரவள், விதி-சதி-மதி ஆகிய 23 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 14661

**விளம்பரம் ஒட்டாதீர்.** ப.கனகேஸ்வரன் (புனைபெயர்: கே.ஜி). முல்லைத்தீவு: செல்லமுத்து வெளியீட்டகம், வள்ளுவர்புரம், விசுவமடு, 1வது பதிப்பு, மார்ச் 2017. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

viii, 46 பக்கம், விலை: ரூபா 150.,அளவு: 17.5x11.5 சமீ., ISBN: 978-955-4096-05-9.

கவிஞர் கேஜீயின் புதுக்கவிதைகளின் தொகுப்பு. துளிர் என்ற தொகுப்பின்மூலம் இலக்கிய உலகில் அறியப்பட்டவர் ப.கனகேஸ்வரன். இவரது கவிதைகளில் புதுமைகள் இருக்கும். அனுபவத்தை கவித்துவத்துடன் சுருக்கமாகச் சொல்லிச் செல்லும் போக்கு காணப்படுகின்றது. மேலோட்டமாக வாசிக்கும்போது சாதாரணமாகத் தோன்றும் இவரது கவிதைகளின் உள்ளோட்டம் ஆழமான கருத்தைப் பொதிந்து வைத்திருப்பதை தீவிர வாசகர்கள் உணரலாம். பசுமையைப் போற்றும் பாங்கு இவரது கவிதைகளில் துலக்கமாகக் காணப்படுகின்றது. மரங்களைப் பாதுகாத்து இயற்கையைப் பேணுதல், சீவகாருண்யம், சூழல் மாசுபடுதலுக்கான எதிர்ப்புக்குரல்கள் என்பவை இவருடையவை.

### 14662

**வெளியே புன்னகை அரசி உள்ளே கண்ணீருக்கு அடிமை.** நெடுந்தீவு முகிலன். முல்லைத்தீவு: செல்லமுத்து வெளியீட்டகம், வள்ளுவர்புரம், விசுவமடு, 1வது பதிப்பு, மார்ச் 2019. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

viii, 99 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 18.5x12.5 சமீ.,ISBN: 978-955-40961-3-4.

இக்கவிதைத் தொகுப்பு பெண்கள் பற்றிப் பேசப்பட்ட பல விடயங்களை உள்ளடக்குகின்றது. "உடைந்த நிழலின் குரல்" என்னும் கவிதையில் தொடங்கி "முடிவுறாத துயர்களுக்கான முற்றுப்புள்ளி" என்ற கவிதை வரை 70 கவிதைகள் இருக்கின்றன. காதல் துயரங்களும், தவிப்புக்களும், பிரிவுகளும், அதனால் வேதனைகளும், விபச்சாரங்களும் ஆண்களின் காமப்பசிக்கு ஆளாகும் பெண்களின் அவலங்களும் நாட்டை நேசித்த பெண்ணின் கனவு, எனத் தன்னை ஒரு பெண்ணாகப் பாவனை செய்து அந்த இடத்தில் நின்று இக்கவிஞர் கவிதை புனை கின்றார். தான் கண்கூடாகக் கண்ட பல பெண்களின் உண்மை நிலைகளைத்தான் இந்நூலில் தந்திருப்பதாகச் சொல்லுகின்றார்.

### 14663

**வேர்கள்: கவிதைத் தொகுதி.** தி.வேல்நம்பி. யாழ்ப்பாணம்: தமிழ் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ மீனாட்சி அச்சகம், நல்லூர்).

56 பக்கம், விலை: ரூபா 18.00, இந்திய ரூபா 12.00, அளவு: 18x12 சமீ.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் சிறந்த ஆய்வாளராகவும் விளங்குபவர் பேராசிரியர் தி.வேல்நம்பி. 28.04.1968 இல் புத்தூர் கிழக்கு, அந்திரானையில் திருநாவுக்கரசு-யோகமணி தம்பதியரின் மகனாகப் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியையும் உயர் கல்வியையும் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியில் கற்றார். 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டு வரை மூன்றாண்டுகள் மல்லாவி மத்திய கல்லூரியில் பயின்றுள்ளார். 1990 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத்துறை மாணவனாக உள்நுழைந்த இவர் 1996 இல் இதே பல்கலைக்கழகத்தில் நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்று பல உயர்வுகளைக் கண்டு இன்று பேராசிரியராகவும் வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் தலைவராகவும் விளங்குகின்றார். இளம் விரிவுரையாளராக பல்கலைக்கழகத்தில் வலம்வந்த வேளையில் வெளியிடப்பெற்ற "வேர்கள்" தொகுதி அவரை ஒரு கவிஞராக எமக்கு இனம் காட்டியுள்ளது. "நீ எந்தன் உயிரல்லவோ" என்ற கவிதை அவருடைய தொகுதிக்கான தமிழ் வாழ்த்தாக அமைகின்றது. காதல், சமூகம், சமகால நிலைமைகள் என்பன பற்றியெல்லாம் அவர் பாடியுளளார். சில வரலாற்று நிகழ்வுகளையும் கவிதையுருவில் பதிவுசெய்துள்ளார். வன்னிப் பயணம், ஏன் இந்தக் கோலம் என்பன சில மாதிரிகள்.

## 894.8(11) மொழிபெயர்ப்புக் கவிதைகள்

### 14664

**பூவரசம்பூ.** மகாகவி அல்லாமா இக்பால் (உருது மூலம்), வ.அ.இராசரத்தினம் (தமிழாக்கம்). மூதூர்: தங்கம் வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 1977. (மூதூர்: அமுதா அச்சகம்).

*53 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x12 சமீ.*

*மகாகவி அல்லாமா இக்பால் அவர்களின் உருதுமொழிக் கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பை வ.அ.இராசரத்தினம் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். பொருள் ஊறுபடாமல், உருவம் சிதையாத விருத்தப் பாக்களால் இக்கவிதைகளை அவர் வடித்துள்ளார். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் உமர் கையாம் தமிழாக்கத்துடன் ஒப்புநோக்கத்தக்க செழுமையை இக்கவிதைகள் கொண்டுள்ளன.*

## 894.8(2) தமிழ் நாடகங்கள்

### 14665

**அலகில் சோதியன்(நாடகங்கள்).** *பொ.சத்தியநாதன். வவுனியா: இந்து மன்றம், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, ஜுன் 2019. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).*

xix, *78 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-624-5000-00-5.*

*இந்நூலில் ஏகலைவன் -ஓர் அறிமுகம், ஏகலைவன் (ஆடற்கதை, புத்தாக்க நாடகம்), அலகில் சோதியன் -ஓர் அறிமுகம், அலகில் சோதியன் (ஆடற்கதை), வந்ததே வசந்தம் -ஓர் அறிமுகம், வந்ததே வசந்தம் (ஆடற்கதை, புத்தாக்க நாடகம்), பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார் -ஓர் அறிமுகம், பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார் (ஆடற்கதை), நளதமயந்தி-ஓர் அறிமுகம், நளதமயந்தி (ஆடற்கதை), உணவைப் பேணுவோம் -ஓர் அறிமுகம், உணவைப் பேணுவோம் (வீதி நாடகம்), நஞ்சுண்ட கண்டம் -ஓர் அறிமுகம், நஞ்சுண்ட கண்டம் (வீதி நாடகம்). தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் (வீதி நாடகம்), ஆகிய படைப்பாக்கங்களை இடம்பெறச்செய்துள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட இந்நாடகாசிரியர், தனது பின்கல்விப் பட்டத்தினை கல்வியியலில் பெற்றுக்கொண்டவர். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ஆசிரிய கல்வியியல் முதுமாணிப் பட்டமும் தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி முகாமைத்துவப் பட்டயமும் பெற்றவர். வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் துணைநிலைப் பேராசிரியராக பணியாற்றுகிறார்.*

### 14666

**உமர் முக்தார்(வானொலி நாடகத் தொகுப்பு).** *ஏ.ஏ.ஜுனைதீன். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661,665,675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2018. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).*

*(9), 10-240 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 22x14.5 சமீ.,* ISBN: *978-955-30-9375-2.*

*இத்தொகுப்பில் உமர் முக்தார், அனார்கலி, வீர சிவாஜி, மரணமே வெல்லும், மானபங்கம், அந்த ஏழு மணி இருபது நிமிடம், மனிதன் இன்னும் மாறவில்லை,*

*மதி செய்த சதி, மதியை வென்ற விதி, வழித் துணை ஆகிய பத்து வானொலி நாடகங்கள் அடங்கியுள்ளன. இவை பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன் அவர்களால் எழுதப்பட்டவை. இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவையில் எம்.அஷ்ரப்கான் அவர்களாலும், தமிழ்ச் சேவை, கல்விச் சேவைகளில் காலஞ்சென்ற எஸ். கணேஸ்வரனாலும் ஒலிபரப்பப்பட்டவை. ஏ.ஏ.ஜுனைதீன் வழங்கும் இரண்டாவது நாடகத் தொகுப்பு இது. முன்னர் "எனது வானொலி நாடகங்கள்" என்ற தலைப்பில் 1999இல் இவரது முதலாவது வானொலி நாடக நூல் வெளிவந்துள்ளது.*

## 14667

**ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்.** கே.செல்வராஜன். கொழும்பு *15:* திருமதி கௌசலாதேவி செல்வராஜன், சினிலேன்ட் வெளியீடு, *162/626/ 1/1,* கிம்புலாஎல, *மாதம்பிட்டி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2018. (கொழும்பு: பிருந்தா எண்டர்பிரைசஸ்).*

xxi, *99 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5*x*15 சமீ.,* ISBN: *978-955-38038-1-8.*

*தன் மனைவியை இழந்த, 38 வயதான கௌரவமான மனிதர் ராஜசேகர், 28 வயதான அவரது தம்பி திலீபன், குடும்ப நண்பரும் பிரம்மச்சாரியுமான மாணிக்கம், ராஜசேகரின் மாமனாரான குடிகாரரான மாதவன், மாதவனின் இளம் மகள் நந்தினி, மாணிக்கத்தின் தூரத்து உறவினரான இளம்பெண் கவிதா மற்றும் குடும்ப டாக்டர் சரவணன் ஆகியோரைச் சுற்றி இந்நாடகம் சுவையாகப் பின்னப்பட்டுள்ளது. கடந்த 45 ஆண்டுகளாகக் கலைப் பணியாற்றிவரும் கே.செல்வராஜன், 1973இல் தனது 20ஆவது அகவையில் "கேளுங்கள் தரப்படும்" என்ற சமூக சீர்திருத்த நாடகத்தை எழுதிக் கலையுலகில் தடம் பதித்தவர். 1974இல் "சிலோன் யுனைட்டெட் ஆர்ட் ஸ்டேஜ்" என்ற கலை நிறுவனத்தை ஆரம்பித்து அதன்மூலம் தனது கதை-வசனம்-நெறியாழ்கையில் "உறவுகள்" என்ற நாடகத்தை மேடையேற்றினார். தொடர்ந்து நாடகம், பாடலாக்கம், குரல்மாற்றம் (டப்பிங்), சமூகம், ஆன்மீகம் எனப் பல துறைகளிலும் அவரது பணி தொடர்கின்றது. 1992இல் அரச தமிழ் நாடகவிழாவில் கலைஞர் உதயகுமாரின் "சலங்கையின் நாதம்" வரலாற்று நாடகத்திற்கான சிறந்த தயாரிப்பாளர், சிறந்த நெறியாளர் விருதுகளையும், 1994 நாடகவிழாவில் "பூகம்பம்" நாடகத்துக்காக பணப் பரிசையும், 2000ஆம் ஆண்டு அரச நாடக விழாவில் "மௌனத்திரை" நாடகத்திற்காக சிறந்த தயாரிப்பாளர் விருதினையும் பெற்றுக்கொண்டவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 63628).*

## 14668

**கிறிஸ்துவின் அருள் வரங்களும் தெய்வீக வெளிப்பாடுகளும் (நாடகங்கள்).** *ஈழத்துப் பூராடனார் (மூலம்), எட்வேட் இதயச்சந்திரா (தொகுப்பாசிரியர்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், 1108* Bay Street, Toronto, Ontario M5S 2W9, *1வது பதிப்பு, ஒக்டோபர் 1992. (கனடா: ஆணர்ல்ட் அருள், ரிப்ளெக்ஸ் அச்சகம், 1108* Bay Street, Toronto, Ontario M5S 2W9*).*

xiv, *178 பக்கம், புகைப்படங்கள், விலை: கனேடிய டொலர் 10., அளவு: 21.5*x*13.5 சமீ.*

*கிறிஸ்துவின் இருபது அற்புதங்களை இருபது நாடகங்களாக்கி "கிறிஸ்துவின் அருள் வரங்கள்" என்ற முதலாவது பகுதியிலும், அற்புதங்கள் அல்லாத விதத்தில் இயேசுவின் வாழ்க்கையில் நடைபெற்ற அவரது தெய்வீக வெளிப்பாடுகளைக் காட்டுவனவாக மேலும் பன்னிரண்டு நாடகங்களை "கிறிஸ்துவின் தெய்வீக வெளிப்பாடுகள்" என்ற இரண்டாவது பகுதியிலும் ஈழத்துப் பூராடனார் தந்துள்ளார். இவை ஓரங்க நாடகங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. முதலாவது பகுதியில் கடவுளின் பரிசுத்தர், சுகந் தரும் கரங்கள், உள்ளச் சுகமே சுகம், குஷ்ட ரோகியைக் கூசாமற் தொட்டார், சொன்னதும் சுகமானது, சூம்பின கை சுகம் பெற்றது, வல்லமை புறப்பட்டு வாழ்வளித்தது, வார்த்தையே போதும் வாழ்க்கைக்கு, பாடையைத் தொட்டார் மரித்தவன் உயிர்த்தான், பேய் பிடித்ததால் குருடு செவிடு ஊமையானவன் குணமாகினான், பன்றிக் கூட்டத்திற் புகுந்து பசாசுகள் மாய்ந்தன, ஆடையைத் தொட்டார் பீடை போனது, மரிக்கவில்லை எழுந்திரு, நம்புகிறபடி ஆகக் கடவது, படுக்கையில் வந்தவர்கள் பரமசுகம் பெற்றனர், சிந்துஞ்சிறு துணிக்கை போதும், திறவுண்டு போ எனச் செவிகள் திறந்தன, விசுவாசித்தால் எல்லாம் இயலும், விடுபட்டாய் எனப் பிணி விலகிற்று, பதில் சொல்ல முடியாதளவான சுகம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 20 நாடகங்களும், இரண்டாவது பிரிவில் இவர் என் நேசன், அப்பாலே போ சாத்தானே, என் வேளை இன்னும் வரவில்லை, ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்கள், கடலுக்கும் காற்றுக்கும் கட்டளை, ஆசீர்வதித்த ஏழு அப்பங்கள் பல்லாயிரவரின் பசியைத் தீர்த்தது, நான் தான் பயப்படாதீர்கள், இவருக்குச் செவி கொடுங்கள், சிலுவையின் தெய்வீகம், இயேசு மரணத்தை வென்றார், எம்மாவூரில் சீடருக்குத் தரிசனம், இன்னுமா நம்பிக்கை இல்லை? ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பன்னிரு நாடகங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36617).*

## 14669

**கேட்டிருப்பாய் காற்றே (பத்து நாடகங்களின் தொகுப்பு): கல்லூரி நாடகங்கள் தொகுதி -2.** பா.இரகுவரன். பருத்தித்துறை: தேடல் வெளியீடு, பிராமின் தெரு, *தும்பளை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2019. (பருத்தித்துறை: தீபன் பிரின்டர்ஸ்).*

xi, *137 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 24.5*x*17.5 சமீ.,* ISBN: *978-955-43055-4-0.*

*ஏறுவெய்யில் (2016), பயணம் (2007), டெங்கு மங்கிடவே (2010), மீண்டும் தொடங்கும் மிடுக்கு (2015), ஒளி நமக்கு வேண்டும் (2009), தொ(ல்)லைக்காட்சி (2008), செல்லும் வழி இருட்டு (2019), யு9 (2003), பரமார்த்தகுருவும் சீடர்களும், பாகம் -1 (2002), பரமார்த்தகுருவும் சீடர்களும், பாகம் -2 (2018) ஆகிய பத்து நாடகங்களை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. ஒன்பதாவது தேடல் வெளியீடாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.*

### 14670

**பத்தினித் தெய்வம்: சிலப்பதிகார நாடகங்களும் வில்லுப்பாட்டுக்களும்.** *சு.செல்லத்துரை. தெல்லிப்பழை: தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, ஜுலை 2016. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).*

*(4), 100 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22*x*15 சமீ.,* ISBN*: 978-955-7973-02-9.*

*அமரர் சிவகாமிசுந்தரி செல்லத்துரையின் ஆறாவதாண்டு நினைவு நூலாக 03.07.2016 அன்று வெளியிடப்பட்டது. உடுவை தில்லை நடராசாவின் வாழ்த்துரை, கோகிலா மகேந்திரனின் அணிந்துரை ஆகியவற்றுடன் தொடங்கும் இந்நூல், "புலவர் செய்த நாடகத் தமிழ்" என்ற தலைப்பிலான காப்பியக்கோ ஜின்னா ஷெரிபுத்தீனின் ஆக்கத்தையும், பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன் அவர்களின் "சாத்துகவி"யையும் தொடர்ந்து பத்தினித் தெய்வம் நாடகங்களான கோவலன் பிரிவு, கண்ணகி வழக்குரை, கற்புக்கனல், பத்தினித் தெய்வம் ஆகிய நாடக எழுத்துருக்களையும், பத்தினித் தெய்வம் வில்லுப்பாட்டுக்களான கோவலன் பிரிவு, கண்ணகி வழக்குரை, கற்புக்கனல், பத்தினித் தெய்வம் ஆகிய வில்லுப்பாட்டு எழுத்துருக்களையும் கொண்டுள்ளது. கொழும்பு இந்து மகளிர் பாடசாலை மேடைகளில் அரங்கேற்றம் காணவென இப்படைப்பாக்கங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.*

### 14671

**விதை: வானொலியில் விதைத்த நாடகங்கள்.** *மறவன்புலோ செல்லம் அம்பலவாணர். கொழும்பு 15: மறவன்புலோ செல்லம் அம்பலவாணர், 478/28, அளுத்மாவத்தை வீதி, 1வது பதிப்பு, 2019. (கொழும்பு 6: கே.ஜே.என்டர்பிரைசஸ், 63, விகாரை ஒழுங்கை).*

xxxii*, 146 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN*: 978-955-42626-6-9.*

*இலங்கை வானொலியில் 1990களில் இருந்து தொடர்ந்து எழுதியும் நடித்தும் வரும் இந்நூலாசிரியர் ஏற்கெனவே பஞ்சாமிர்தம் (சிறுவர் வானொலி நாடகங்கள், 2015), சட்டத்தின் திறப்பு விழா (வானொலி நாடகங்கள், 2016), பஞ்சாயுதம் (நாடகங்கள், 2017), மனவைரம் (வானொலி நாடகங்கள், 2018), வண்டல் மண் (சிறுவர் கதைகள், 2018) ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தில் 39 வருடகாலம் சேவையாற்றியவர். இந்நூலில் இடம்பெறும் ஐந்து நாடகங்களில் நான்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பானவை.*

## 894.8(21) மொழிபெயர்ப்பு நாடகங்கள்

### 14672

**நாற்காலிகள் (மேடை நாடகம்).** *இயூஜீன் இயோனெஸ்கோ (பிரெஞ்சு மூலம்), பி.விக்னேஸ்வரன் (தமிழாக்கம்). சென்னை 600024: வடலி வெளியீடு,* D*2/5,*

டி.என்.ஹெச்.பி., தெற்கு சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).

88 பக்கம், விலை: இந்திய ரூபா 55.00, அளவு: 21.5x14 சமீ.

1952இல் வெளிவந்த, ருமேனிய நாடகாசிரியர் யூஜினது "நாற்காலிகள்" நாடகத்தின் தமிழாக்கம் இது. Les Chaises என்ற பெயரில் இது பிரெஞ்சு மொழியில் பிரசுரமாகியிருந்தது. இயூஜீன் இயோனெஸ்கோ (1912-1994) ரோமானியாவில் பிறந்திருந்தாலும் தனது நாடகங்களை பிரெஞ்சு மொழியிலேயே எழுதிவந்தார். நாடகத்தில் இரண்டு பாத்திரங்கள்: அதிமுதுமையிலும் தனிமையிலும் பைத்தியத்திலும் வாடும் கணவன்-மனைவி. வாழ்வில் தாம் எட்ட முடியாதவற்றையும் சாதிக்க முடியாதவற்றையும் நினைத்து ஆதங்கப்பட்டுத் தொடர்ந்து சோர்வும் விரக்தியும் பெறுகின்றவர்கள் அவர்கள். இறப்பதற்கு முன்பாக முக்கியமான நண்பர்கள், பிரமுகர்களை அழைத்துத் தங்களுடைய சாதனைகளையும் சிறப்பையும் சொல்லிவிடுவது என்று தீர்மானித்து எல்லோரையும் அழைக்கிறார்கள். தங்களைப் பற்றிய ஒரு பேச்சை நிகழ்த்துவதற்கு காது கேளாத, வாய் பேசமுடியாத ஒருவரையும் பேச்சாளராக அழைத்திருந்தார்கள். பேச்சாளரைத் தவிர எல்லா விருந்தினர்களும் வீட்டில் வந்து அமர்வதான கற்பனையிலேயே நாடகம் நகர்கின்றது. ஒவ்வொரு வருக்குமான நாற்காலிகளை மேடையில் கொண்டு வந்து வைப்பதே ஒரு முக்கிய செயலாக மனைவிக்கு அமைகின்றது. மேடை முழுவதும் நாற்காலிகளால் நிறைகின்றது. பேச்சாளர் வருவார். கணவனும் மனைவியும் மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்துவிடுகிறார்கள். இலங்கை வானொலியிலும் இலங்கைத் தொலைக்காட்சியிலும் (ரூபவாஹினி) நீண்டகாலம் பணியாற்றிய அனுபவம் கொண்ட விக்னேஸ்வரன் இதனை மொழிபெயர்த்திருக்கிறார். அவர் ஒத்தெல்லோ உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களை வானொலிக்காகவும் மேலும் நாடகங்களை தொலைக்காட்சிக்காகவும் தயாரித்து நெறியாள்கை செய்தவர். மிகுந்த கவனத்துடனும் நுட்பத்துடனும் நாற்காலிகள் நாடகத்தை தமிழுக்குத் கொண்டு வந்துள்ளார் விக்னேஸ்வரன்.

## 894.8(3) தமிழ்க்கவிதை/இசை நாடகங்கள்-காவியங்கள்

### 14673

**இலங்கைக் காவியம்: முதற்றொகுதி: பருவப் பாலியர் படும் பாடு.** க.சச்சிதானந்தன். காங்கேசன்துறை: க.சச்சிதானந்தன், மாவிட்டபுரம், 1வது பதிப்பு, 2002. (யாழ்ப்பாணம்: நவயோக அச்சகம்).

xxiv, 608 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x14.5 சமீ.

இளம் வயதினரின் செயல்களை சித்திரிக்கும் இக்காவியம், 4300 கவிதைகளில் விரிந்துள்ளது. 1958ஆம் ஆண்டு முதலான இனக்கலவரங்களை இக்காவியத்தின் கருப்பொருளாகக் காணலாம். இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் பாலியப் புயற் பருவம், சூறாவளிப் பயணமாயிற்று.

பாதுகாப்பின்மை, பஞ்சம், பட்டினி, கண்ணீர், நிச்சயமற்ற தன்மை, இரத்தம், பிணம், பயங்கரம், மனித உயிரின் மலிவு, துப்பாக்கிக் கலாச்சாரம், சட்ட வாழ்க்கைக் குலைவு, இடம்பெயர்வு, என்பன தமிழ்ப் பகுதிகளின் அரசியல் சமூக மண்டலம் (Social Political Millieu) ஆயிற்று. இம்மண்டலத்தில் தமிழ்ப் பாலியரின் உள்ளம் எவ்வாறு அலைவுற்றது என்பதே இக்காவியத்தின் கருவாகும். காங்கேசன்துறை, மாவிட்டபுரத்தில் கணபதிப்பிள்ளை (தும்பளை), தெய்வானைப்பிள்ளை (மாவிட்டபுரம்) ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர் சச்சிதானந்தன் (10.10.1921-21.03.2008). ஈழத்துக் கவிஞரும் எழுத்தாளருமான இவர் சச்சிதானந்த என்ற பெயரிலும், ஆனந்தன், யாழ்ப்பாணன், பண்டிதர், சச்சி ஆகிய புனைபெயர்களிலும் எழுதிவந்துள்ளார். மகாவித்வான் நவநீதகிருஷ்ண பாரதியிடம் முறையாகத் தமிழ் கற்ற இவர், காங்கேசன்துறை நடேசுவரா கல்லூரி, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரி, யாழ்ப்பாணம் பரமேசுவரா கல்லூரி (1938-1940) ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றார். தந்தையாரிடம் வானியலும் சோதிடமும் சிவப்பிரகாச தேசிகரிடமும் சுப்பிரமணிய சாஸ்திரிகளிடமும் பாலசுந்தரக் குருக்களிடமும் சமஸ்கிருதக் கல்வியும் பயின்றார். மதுரைத் தமிழ்ப் பண்டிதர் பட்டமும் பெற்றார். 1971 ஆம் ஆண்டில் லண்டனில் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். 2001 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார். ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் புலமை உடையவர்.யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

## 14674

**உலக காவியம்: அறிவியல் ஆன்மீக காவியம்.** பாரதிபாலன் (இயற்பெயர்: ஜெயகுமார் குமாரசுவாமி). யாழ்ப்பாணம்: மகரிஷி பதிப்பகம், 55, ஆடியபாதம் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, மார்ச் 2014. (யாழ்ப்பாணம்: அன்ரா பிறிண்டேர்ஸ், இல. 356A, கஸ்தூரியார் வீதி).

(24), 98 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 310., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-7546-00-1.

இவ்வறிவியல் ஆன்மீகத் துறையில் எழுந்துள்ள இக் காவியம் மனிதர், விலங்கு, பறவை, தாவரங்கள் முதலான அனைத்து உயிரினங்களினதும் இன்ப இணைவு, ஒரு புதிய உலகம் பற்றிய கனவினை நனவாக்கும் என்கின்றது. கணனி உலகின் நஞ்சூட்டலால் பாதிப்புற்ற மானிடத்தின் மென்மை உள்ளத்தைக் கழுவிச் சீராக்கி மீட்டெடுத்து சுயமாகச் சிந்திக்கும் இயற்கையுடன் இணந்து வாழும் ஆற்றலை இனிவருங்காலத்திற்கு வழங்கும் வகையிலான கருத்துக்களை இக்காவியப் பாத்திரங்கள் தருகின்றன. 2003இல் வெளிவந்த ஆசிரியரின் முன்னைய நாவலான "சமரசபூமி"யின் தொடர்ச்சியாக இக்காவியத்தைக் கொள்ளமுடிகின்றது. டென்மார்க்கில் வசிக்கும் கவிவேளம் பாரதிபாலன் ஈழத்து மொழிபெயர்ப்பாளர், எழுத்தாளர். டென்மார்க்கின் புகழ்பெற்ற எழுத்தாளரான ஆன்சு கிறித்தியன் ஆன்டர்சனின் The Little Mermaid என்ற காவியத்தை தமிழில் கடற் கன்னி காவியம்

என்று மொழிபெயர்த்தவர். இவர் "உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் அனைத்துலக உதவித் தலைவர்களுள் ஒருவராகவும் மேற்படி தமிழியல் இயக்கத்தின் ஸ்கன்டிநேவிய நாடுகளின் அமைப்பாளருமாகத் தன் சேவையை ஆற்றி வருகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 64719).

### 14675

**செய்னம்பு நாச்சியார் மான்மியம்**. அப்துல் காதர் லெப்பை. கல்ஹின்னை: மணிக்குரல் பதிப்பகம், 1வது பதிப்பு, ஜூலை 1967. (பண்டாரவளை: முகைதீன்ஸ் அச்சகம்).

(12), 55 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 19x13 சமீ.

"மணிக்குரல்" சஞ்சிகையில் அங்கதச் சுவையுடன், ஜனாப் அப்துல் காதர் லெப்பை அவர்களால் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களின் திருமணச் சம்பிரதாயங்களை முன்வைத்து எழுதப்பட்ட மான்மியம். இவ்வழகிய நூலிலே கதை இருக்கிறது, கவிதை இருக்கிறது, சமூகவியலும் அடங்கியிருக்கின்றது. கவிஞரது இளமைக் கால நினைவுகளும் அடங்கியுள்ளன போலும். அந்த வகையிலே இதனை ஒரு சமுதாய வழக்கக் குறிப்பேடு (Social document) எனத் துணிந்து கூறலாம். சிறந்த சிந்தனையாளரும், கவிஞருமான கவிஞர் அப்துல் காதர் லெப்பை (1913-1984) கிழக்கிலங்கையின் காத்தான்குடிக் கிராமத்தைத் தாயகமாகக் கொண்டவர். ஒரு ஆசிரியராகப் பணியாற்றிய இவர் கல்வித்துறையினரால் பெரிதும் போற்றப்பட்டவர். மணிக்குரல் பதிப்பகத்தினரின் "அருகிவரும் ஆசாரங்கள்" என்ற தொடரில் வெளிவரும் நூல் இது. அருகிவரும் ஆசாரங்கள் -1 என்ற பிரிவில் மணம் சரிகாண் படலம், செப்பு அனுப்பும் படலம், நாச்சியார் படலம், மணம் பேசு படலம், மணமகன் படலம், மணமகள் படலம், மௌலூதுப் படலம், பரசம் கொண்டுபோகும் படலம், தாலிகட்டும் படலம், நீராட்டும் படலம், பெண்பார்க்கும் படலம், செய்னம்பு சீறிய படலம், பிணக்குத் தீர்த்த படலம், மருமகன் படலம், சோதனைப் படலம், நாச்சி அறிவுபெற்ற படலம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. அருகிவரும் ஆசாரங்கள் -2 என்ற பிரிவில் காட்டாறு பாவா படலம், கருமாரிப் படலம், சுன்னத்துக்கலியாணப் படலம், ஓதுகிற பள்ளிப் படலம், நோன்பில் ஹதீது சொல்லும் படலம், ஹஜ்ஜுப் பெருநாட் படலம், களிக்கம்படித்தல் படலம், பள்ளிவாசற் படலம், வழக்குச் சொல் விளக்கம் ஆகியன இடம்பெற்றுள்ளன.

## 894.8(4) தமிழ்ச் சிறுகதைகள்

### 14676

**அசை: சிறுகதைத் தொகுப்பு.** க.கோபாலபிள்ளை. கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661/663/675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, ஜூலை 2019. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(8), 9-176 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22x14 சமீ., ISBN:978-624-00-0188-5.

*இச்சிறுகதைத் தொகுப்பில் க.கோபாலபிள்ளை எழுதிய பிராயச்சித்தம், யாருமில்லா உலகத்திலே, கொள்ளி, பிறந்த மண், காலமெனும் நல்லாசான், பிரளயம், பதுங்குகுழி, காட்சியில் ஒரு மாற்றம், இன்னும் எத்தனை உயிரோ, தீர்வைத் தராத தீர்ப்புக்கள், தலைமுறை இடைவெளி ஆகிய பதினொரு கதைகள் இடம்பெற்றுள்ளன. 1948 புரட்டாதி மாதத்தில் ஆறுகால்மடம்-ஆனைக் கோட்டையில் பிறந்த கோபாலபிள்ளை, தனது ஆரம்பக் கல்வியை யாழ். பெரியபுலம் மெதடிஸ்த பாடசாலையிலும், உயர் கல்வியை யாழ். இந்துக் கல்லூ ரியிலும் கொக்குவில் பல்தொழில்நுட்பக் கல்லூரியிலும் மேற்கொண்டார். 1973இல் இலங்கைக் கடற்படையின் தலைமைக் காரியாலயத்தில் தட்டெழுத்தாளராக முதல் நியமனம் பெற்று 1974இல் சுருக்கெழுத்தாளராக யாழ். மேல் நீதிமன்றில் நியமனம் பெற்றார். 1989 முதல் இலங்கை பாராளுமன்றத்தின் ஹன்சார்ட் திணைக்களத்தில் இணைந்து படிப்படியான பதவி உயர்வுகளைப் பெற்று ஹன்சார்ட் பிரதிப் பதிப்பாசிரியராக* (Deputy Editor of Hansard*) பதவி வகித்து 2008இல் ஓய்வுபெற்றார். 1973இல் இருந்தே எழுத்துலகில் ஈடுபட்ட இவர் 2014இல் தனது முதலாவது சிறுகதைத் தொகுதியை "யாரிலிகள்" என்ற தலைப்பில் வெளியிட்டவர். இது இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுப்பாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65511).*

## 14677

**அவர்கள் அப்படித்தான்.** *யோகா யோகேந்திரன். திருக்கோவில்: திருமதி யோகா யோகேந்திரன், யோகவாசா, 1வது பதிப்பு, 2015. (அக்கரைப்பற்று: மல்ட்டி ஓப்செட் அச்சகம்).*

xvi, *153 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-955-41546-1-2.*

*எழுத்தாளர் ஓய்வுநிலை ஆசிரியை கலாபூஷணம் மண்டூர் அசோகா அவர்களின் அறிமுகவுரையுடன் வெளிவந்துள்ள இச்சிறுகதைத் தொகுப்பில், அவர்கள் அப்படித்தான், பிரிவுகளும் பிணைப்புக்களும், விதியின் கட்டளை, கனவு பலிக்குமா?, விட்டகுறை தொட்டகுறை, நட்பென்பது வரமா சாபமா?, உறவைத் தேடி, குற்றமென்ன நாம் செய்தோம், கங்காரு நாட்டிற்கொரு கனவுப் பயணம், பிள்ளையார் சுழி, தாய் மண், மூலதனம் ஆகிய சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 61354).*

## 14678

**ஆற்றங்கரை மற்றும் பிற கதைகள்.** *ஸபீர் ஹாபிஸ். சாய்ந்தமருது: அல்ஹுதா பப்ளிகேஷன், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

vi, *130 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20*x*14 சமீ.,* ISBN: *955-8911-01-*X.

*நான்-மனம்-அவள், பசி, அறு, பயணம், பாத்தும்மா, வெளிச்சம், வயல், நிறங்கள், அயல்வீடு, ஆற்றங்கரை ஆகிய பத்துச் சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு இது.*

*பின்னிணைப்பில் "ஆற்றங்கரை மற்றும் பிற கதைகளுடன் ஸபீர் ஹாபிஸ்", "பசுமை நினைவுகள்" ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. "தமது ஆற்றங்கரை கதை மூலம் நவீன கதைசொல்லிகளில் ஒருவராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர் ஸபீர் ஹாபிஸ். தமது மண்ணின் வாழ்வையும் வாழ்வு சார்ந்த மனிதர்களையும் எழுத்தில் கோட்டுச் சித்திரங்களாக உயிர்கொண்டு உலவவிடுகிறார். நம்மோடு நேற்று வாழ்ந்தவர்கள் இன்று வாழ்பவர்கள் எல்லோரும் கதாமாந்தர்களாக கைகோர்த்து வருகிறார்கள். உன்னதமானதோர் தமிழ்நடை இவை எல்லாவற்றையும் சாத்தியமாக்கியிருப்பது ஸபீரின் பாக்கியமா? நமது பாக்கியமா? ஸபிரின் ஒரு கதைக்கும் மற்றொரு கதைக்கும் இடையே ஒரு மாயப்பாலம் இணைக்கின்றது. ஒட்டுமொத்தமாக ஒரே மூச்சில் கதைகளை வாசிக்கும்போது கதைகளனைத்தும் ஒரு நேர்கோட்டில் சென்று நிறைவது அலாதியானதோர் அனுபவம்" (எஸ்.எல்.எம்.ஹனிபா. மன்னுரையில்).*

## 14679

**ஆனந்தனும் அவவும்: சுருக்(க) கதைகள்.** *காரைக்கவி கந்தையா பத்மானந்தன். காரைநகர்: அம்மாத்தை வெளியீட்டகம், வாரி வளவு, 1வது பதிப்பு, 2019. (தெகிவளை: அனுபவ பதிப்பகம்,* Creaze Digital, *14, அத்தபத்து டெரஸ்).*

xii, *62 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN*: 978-624-5222-07-0.*

*தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் அதனூடாக தனது அபிப்பிராயத்தையும், கருத்துக்களையும் இணைத்து பொதுமைப்படுத்தி சுருக்கக் கதைகளாகத் தன் முகநூல் பதிவுகளில் பத்மானந்தன் எழுதிவந்துள்ளார். அவற்றின் தேர்ந்த தொகுப்பு இதுவாகும். கனவு, உண்ணாவிரதம், அடுத்த வீட்டில் பூசை, சந்தை, வாத்தியார், பதுக்கல், லண்டன் பவளம், வேட்டி, அடியார், பிரசங்கம், டீச்சரின் பிறந்தநாள், பாராட்டு, ஆச்சிக்கு கிறுவை, கொழுக்கட்டை, சயிக்கிள், அப்டேட்ஸ், பிரால் சட்டி, கோயிலுக்குக் கொடுத்த லைட், அருச்சனை, கிளினிக், சொற்பொழிவு, சாத்திரம், பிரிட்ஜ், பூசை, வாத்தியார் மகன், சாப்பாடு, பேஸ்புக், எஞ்சினியர், பரிமளம் வீடு, புரட்டாசிச் சனி, ஸ்மார்ட் போன், தேவியக்காவின் புருஷன், ஆனந்தனின் வருத்தம், சுமதியின் சப்பாத்து, நிகழ்ச்சித் தொகுப்பாளர், வைக்கல் பட்டறை நாய், திருவிழாவுக்கு வெளிக்கிட்டவள், சாத்திரியார், சின்ன மகளின் சொக்கலேட், மெல்லத் தமிழ் சாகிறது, வரவேற்பாளினி, தண்ணீர் பந்தல் முருகேசன், விரத ஆடு, பஞ்சாங்கம், இடியப்பம், பிச்சை, கடவுள், கத்தி, நாய், மயிர், முருங்கைக்காய் ஆகிய 51 சுருக்கக் கதைகள் இத்தொகுப்பில் தேர்ந்து வழங்கப்பட்டுள்ளன.*

## 14680

**இறைவற்கொரு பச்சிலை: சிறுகதைத் தொகுதி.** *வில்வம் பசுபதி. யாழ்ப்பாணம்:* The Hindu Board of Education, *கலாசாலை வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2006. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 56, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).*

iv, *98 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 18*x*13 சமீ.*

இத்தொகுதியிலுள்ள சிறுகதைகளிற் பெரும்பாலானவை அமரர் பசுபதி அவர்களால் 1989-1990 காலப்பகுதியில் எழுதப்பட்டு சமய மஞ்சரியாக வெளிவந்த "ஞானக்கதிர்" சஞ்சிகையில் வெளிவந்தவை. தெய்வத்தைத் தொழுதல், பெரியோரைப் பேணல், அறஞ் செய்தல் முதலியவற்றை வலியுறுத்தும் அதே வேளை, கள்ளுண்பதாலும் கையூட்டுப் பெறுவதாலும் வரும் கேடுகளை இக்கதைகள் தெளிவுபடுத்துகின்றன. இத்தொகுப்பில் இறைவற்கொரு பச்சிலை (புரட்டாதி 1989), நிழல் நிஜமாகிறது, வேண்டத்தக்க தறிவோய் நீ (மார்கழி 1989), மனம் வெளுக்க வழியில்லையே, வெள்ளிக்கிழமை விரதம் (சித்திரை 1989), நாளை முதல், மரண சாஸனம், வற்றாப்பளைச் சாமியார், கொல்லாதே மன்னித்துவிடு, நாய் கடிச்சிட்டுது செல்லத்துக்கு, இரடி பில்டிங், மண்வாசனை ஆகிய 13 கதைகள் இடம்பெற்றுள்ளன.

## 14681

**இனிப்புக் கதைகள்**. த.அஜந்தகுமார். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

viii, 52 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-0958-03-0.

அனுபவங்களும் சிறு புனைவுகளும் இணைந்த எளிமையான மொழிநடையில் உருவான பதின்நான்கு கதைகளும் யாழ்ப்பாணத்தில் வெளியாகிவந்த "புது விதி" என்ற வார இதழில் அவ்வப்போது பிரசுரமாகியவை. நாட்குறிப்பு எழுதுதலின் சுயசரிதைப் பாணியில் அமைந்துள்ள இக்கதைகள் நினைந்துருகல் மற்றும் நினைவில் தோய்தலுக்கான வழியைத் திறக்கின்றது. மறைந்துபோன வாழ்வின் மனதை நெருடும் இனிய நினைவுகளைப் பதிவாக்கும் இப்பதிவுகளைப் படிப்பவர் அனைவரும் தத்தமது அனுபவங்களை வைத்துப் பொருத்திப் பார்க்கும் தூண்டுதலை இக்கதைகள் தருகின்றன. மேலும் ஒவ்வொரு படைப்பின் இறுதிப்பகுதியில் காணப்படும் பதிவுகள், நெருக்கடிகளின் உளவியல் பரிமாணங்களை படைப்பாளியின் தன்விசாரணையாகக் காணமுடிகின்றது. ஒவ்வொரு தலைப்பின் கீழும் நான்கு நான்கு பகுதிகள் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலைப்பிலும் முதல் மூன்று பகுதிகள் ஆசிரியரின் வாழ்வனுபவங்களைப் பேசுவனவாகவும் நான்காம் பகுதி அவ்வனுபவங்களின் படிப்பினைகளை அலசுவதாகவும் உள்ளன. ஜீவநதி வெளியீட்டகத்தின் 136ஆவது பிரசுரமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

## 14682

**ஈழத்து உளவியற் சிறுகதைகள்**. கே.எஸ்.சிவகுமாரன் (ஆசிரியர்), லேனா தமிழ்வாணன் (பதிப்பாசிரியர்). சென்னை 600 017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, 7(ப.எண் 4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2018. (சென்னை 94: ஆதிலட்சுமி பிரிண்டேர்ஸ்).

xxii, *74 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 17.5x12 சமீ.*

*இத்தொகுப்பில் உறைவிடம் மேலிடம், தாழ்வு மனப்பான்மை, இனம் இனத்துடன், அவர்கள் உலகம், பகட்டு, இழை, குறிஞ்சிக் காதல் ஆகிய ஏழு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. மட்டக்களப்பு-புளியந்தீவில் சிங்களவாடி என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கே.எஸ்.சிவகுமாரன். பெற்றோர்கள் திருகோணமலையையும் மட்டக்களப்பையும் பூர்வீகமாகக் கொண்டவர்கள். இலங்கையிலும் பின்னர் ஓமானிலும் 1998 முதல் 2002ஆம் ஆண்டு வரை ஆங்கில இலக்கிய ஆசிரியராகப் பணியாற்றிய இவர் மாலைத்தீவுகளிலும் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். ஈழத்துத்தமிழ்ப் படைப்பாளிகளை ஆங்கில ஊடகங்களின் வாயிலாக சிங்கள இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்துவதில் இவர் முக்கிய பங்களிப்பினை வழங்கிவருபவர்.*

## 14683

**உதிரிப் பூக்கள்.** *நிதனி பிரபு, ரோசி கஜன் (இணை ஆசிரியர்கள்). வவுனியா: நிதனி பிரபு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2019. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).*

*165 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18x12.5 சமீ.,* ISBN: *978-955-40962-6-2.*

*இந்நூலில் நிதனி பிரபு எழுதியுள்ள சமாளிக்கலாம், நெஞ்சள்ளிப் போனவளே, உனக்கொன்று சொல்லவேணும், செந்தூரன், உதிரிப்பூக்கள், நெஞ்சே நீ வாழ்க ஆகிய ஆறு சிறுகதைகளும், ரோசி கஜன் எழுதியுள்ள பசி, விட்டில் பூச்சிகள், கார்த்திகை பதினொன்று, மறுதலிப்பு, வாழ்க்கை வாழ்வதற்கே, கண்ணம்மா இறந்துவிட்டாள், உன்னைப்போல் ஒருவன்அவள் என் உயிர் இல்லை ஆகிய எட்டு சிறுகதைகளுமாக மொத்தம் பதினான்கு கதைகள் இடம்பெற்றுள்ளன. பந்தம் பாசத்திற்காக ஒருவர் செய்யும் தியாகங்களின் வலியைப் பேசுவதாக "சமாளிக்கலாம்" அமைந்துள்ளது. "துணை", வாழ்க்கைத் துணையின் தேவை அருகாமை என்பன எதிர்பார்க்கும் தருணங்களில் கிட்டாமல் போவதால் ஏற்படும் நிகழ்வை விபரிக்கின்றது. "உனக்கொன்று சொல்லவேணும்" என்ற கதை நெஞ்சில் ஆழமாகப் பதிந்துபோன துணை மீதான நேசத்தின் மொழியாகின்றது. "மறுதலிப்பு" என்ற கதையில் பாலியல்ரீதியாகத் துன்புறுத்தும் எண்ணம் கொண்டவனின் காமுகத்தனமும், இறைஞ்சலின் உதாசீனமும் துல்லியமாக வெளிப்படுகின்றது. "செந்தூரன்"- கல்யாணச் சந்தையில் விலைபோகாமல் தங்கும் கன்னியொருத்தியின் மன உளைச்சலைக் கூறுகின்றது. துன்பத்தையும் தோல்வியையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலை வளர்க்க "வாழ்க்கை வாழ்வதற்கே" ஆலோசனை தருகின்றது. இவ்வாறு எமது சமூகத்தில் நடக்கும் அன்றாடப் பிரச்சினைகளை மையப்படுத்தி இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன.*

## 14684

**உள்மனச் சித்திரம்.** *முத்து இராதாகிருஷ்ணன். திருக்கோணமலை: மதுஷா வெளியீட்டகம், 164/1, திருஞானசம்பந்தர் வீதி, 1வது பதிப்பு, 2013. (யாழ்ப்பாணம்: எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).*

*113 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-955-9817-3-4.*

*வட மாகாண கல்வித் திணைக்களத்தில் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் நூலாசிரியரின் சிறுகதைத் தொகுப்பு இது. இதில் மனவெளி, அப்பா, நானே நானா, எரிநட்சத்திரம், கூழ்ப்பானை, கரிக்கோச்சி, பஞ்சநாதன் போட்ட எட்டு, வழித்துணை, பந்தம், தகசாக்காவும் நானும், யூட்டா என்கிற யூட் கென்றி ராஜ்குமார், அவனும் ஓர் பாரதி, எப்பவோ முடிந்த காரியம் ஆகிய 13 கதைகள் இடம்பெற்றுள்ளன. இவரது மானிடச் சிக்கல் என்ற நாடக நூல் 1998இலும், சிறுவர் அரங்கு என்ற நூல் 2002இலும் துயரப்பாறை என்ற மற்றொரு நாடக நூல் 2006இலும் பசுமைத் தாயகம் என்ற சிறுவர் இலக்கிய நூல் 2009இலும் தேசிய சாகித்தியப் பரிசில்களைப் பெற்றுக்கொண்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 55061).*

## 14685

**என் கண்களே சாட்சி.** *எஸ்.பி.கிருஷ்ணன் (புனைபெயர்: வேரற்கேணியன்). யாழ்ப்பாணம்: எஸ்.பி.கிருஷ்ணன், பிரவின் இல்லம், 224/4, கண்டி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2019. (யாழ்ப்பாணம்: யாழ்ப்பாண மாநகர கூட்டுறவுச்சங்க அச்சகம்).*

*98 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ.*

*பரிசுபெற்ற நான்கு கதைகள் உட்பட பதினொரு சிறுகதைகளின் தொகுப்பு. காயங்கள் (கொழும்பு நதி சஞ்சிகையின் பரிசு பெற்றது), வாழ்ந்து காட்டுகிறேன் (கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பரிசு பெற்றது), முட்கம்பி வேலிக்குள்ளே (ஞானம் மாத இதழின் பரிசு பெற்றது), மற்றவை நேரில் (ஞானம் மாத இதழின் பரிசு பெற்றது), பெண்ணிற் பெருந்தக்க, கற்புச் செல்வி, தன்மானம், அந்தப் பதினைந்து நாட்கள், மாற்றங்கள், எங்கிருந்தோ வந்தவள், என் கண்களே சாட்சி ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. இந் நூல் ஆசிரியரின் பத்தாவது இலக்கியப் படைப்பாகும்.*

## 14686

**ஒரு நெக்லசும் ஆண்குழந்தையும்: சிறுகதைகத் தொகுப்பு.** M.I.M.*முஸம்மில். கல்முனை: இஸ்லாமிய நூல்வெளியீட்டுப் பணியகம், சாய்ந்தமருது, 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (சென்னை 600034: மலர் கிறாப்பிக்ஸ்).*

viii, *117 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17.5x12 சமீ.*

*உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரிமதிப்பீட்டாளரான* M.I.M. *முஸம்மில், ஒரு படைப்பிலக்கியவாதியுமாவார். இவர் எழுதிய ஒரு நெக்லசும் ஆண் குழந்தையும், சிறைப்படுத்தும் சுமைகள், மாறாத உள்ளங்கள், திசைமாறும் பறவைகள், பிம்பங்கள், வெளியேற்றம், வட்டாக் கடன், அழியாத பதிவுகள், வாப்பா வருவார், கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன ஆகிய சிறுகதைகள்*

*இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54572).*

## 14687

**ஒன்பதாவது குரல்.** *தாட்சாயணி (இயற்பெயர்: திருமதி பிரேமினி பொன்னம்பலம்). அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஐப்பசி 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

viii, *168 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-0958-17-7.*

*இச்சிறுகதைத் தொகுதியில் ஒரு பிள்ளையாரின் கதை, சிவப்புக்கோடு, சாருமதியின் வீடு, தொடராத சொந்தங்கள், பொய்மையும் வாய்மையிடத்து, ராகவி ஆகிய நான், நாளை இனி யாரோ?, இரண்டு ஆசிரியர்கள்-இரண்டு மாணவிகள், நர்மதாவின் கடிதங்கள், முடிச்சிடப்பட்ட மூன்று காலங்கள், உள்ளே தான் உள்ளாயோ?, நியாயங்களும் கேள்விகளாகின்றன, மெட்டி, எல்லாப் பாதையிலும் முட்கள், ஒன்பதாவது குரல் ஆகிய பதினைந்து சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இலங்கை அரச நிர்வாக அதிகாரிகளாக இருந்துகொண்டு ஆக்க இலக்கியப் படைப்பாளிகளாகவும் மிளிரும் பெண் எழுத்தாளர் வரிசையில் தாட்சாயணி குறிப்பிடத்தக்கவர். இவரிடம் தெளிவான சமூகப் பார்வை இருக்கின்றது. நீரோடை போன்று பிசிறில்லாத மொழி ஓட்டம் இவருடையது. தனது ஆக்க இலக்கியப் படைப்புகளை சராசரி வாசகர்களும் வாசித்து ரசிக்க வேண்டும் என்னும் இலக்கிய சமூக அக்கறை இவரது எழுத்துக்களில் புலப்படுகின்றது. இந்நூல் ஜீவநதி வெளியீட்டகத்தின் 128ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது.*

## 14688

**கடைசி வேரின் ஈரம்: சிறுகதைகள்.** *எம்.எம்.அலி அக்பர். கிண்ணியா: பேனா வெளியீடு, பழைய இலங்கை வங்கி வீதி, கிண்ணியா-4, 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

xvi, *112 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 21*x*15 சமீ.,* ISBN: *978-955-0932-01-6.*

*ஓய்வுபெற்ற அதிபரான கலாபூஷணம் எம்.எம்.அலி அக்பர் கல்வித்துறையில் நீண்டகாலம் பணியாற்றியவர். பணி ஓய்வுபெற்றபின் 2008முதல் எழுதி வருகிறார். உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் கற்பனை கலந்து எழுதப்பட்ட இவரது தேர்ந்த 12 சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஜன்னல் தாரகை, அவளின் விதி அப்படி, புதிய வாழ்க்கை, இனி உன் பிள்ளை உன்னிடமே, கமால் ஐயா மௌத்து, ஷாஹிப் ஹாஜியார், அறுந்த உறவு அறுந்தது தான், இந்துஜா, கடைசி ஆசை, இறைவன் நியதி, கடைசி வேரின் ஈரம், இதயத் தாகம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டன. தான் காணும் வாழ்வியல் கோலங்களை சமூக அக்கறையுடன் அவலச்சுவை கொண்டமைந்த ஜன்னல் தாரகை, அவளின் விதி அப்படி என்பன போன்ற சிறுகதைகளின் மூலம் விளக்குகின்றார்.*

14689

**கள்ளக்கணக்கு.** ஆசி.கந்தராஜா. நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2018. (சென்னை 600077: மணி ஒப்செட்).

128 பக்கம், விலை: இந்திய ரூபா 145.00, அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-86820-49-5.

பல்வேறு நாடுகளின் பண்பாட்டுப் பின்புலத்தில் எழுதப்பட்டிருக்கும் பதின்மூன்று சிறுகதைகள் அடங்கியது இத்தொகுப்பு. அறிவும் அனுபவமும் ஒன்றையொன்று நிறைவு செய்யும் விதமாகப் புனையப்பட்டிருக்கும் இக்கதைகளில் எழுத்தாளனுக்குரிய நுண்ணுணர்வோடு ஓர் அறிவியலாளனுக்குரிய கூர்நோக்கும் ஒருங்கே வெளிப்படுவதைக் காணலாம். இக்கதைகளினூடே மிக மெலிதாகத் தொனிக்கும் அங்கதம் மேலெழுந்தவாரியான நமது நாகரிக நடத்தைகளைப் பரிகசிக்கும் அதேவேளையில், உள்ளார்ந்த மனநெகிழ்வையும் மனிதாபி மானத்தையும் வலியுறுத்துவதாகவும் அமைந்திருக்கிறது. இந்நூலில் ஆசிரியரினால் பத்தோடு பதினொன்று, ஒட்டு மரங்கள், வெள்ளிக்கிழமை விரதம், காதல் ஒருவன், புகலிடம், எதிலீன் என்னும் ஹோர்மோன் வாயு, மிருகம், யாவரும் கேளிர், அன்னை, கள்ளக்கணக்கு, அந்நியமாதல், சூக்குமம், வேதி விளையாட்டு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. 829ஆவது காலச்சுவடு வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

14690

**கறுத்த கோடுகள்: சிறுகதைகள்.** ஏ.எஸ்.எம்.நவாஸ். கொழும்பு 14: திருமதி ஹபீலா நவாஸ், சினிலேன்ட் பதிப்பகம், 1வது பதிப்பு, 2017. (வத்தளை: ஏஞ்சல் அச்சகம்).

89 பக்கம், விலை: ரூபா 200.00, அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-38038-0-1.

எண்பதுகளில் தனது மணிக் கவிதையை சிந்தாமணி (தினபதி-சிந்தாமனி)யில் வடித்த ஏ.எஸ்.எம்.நவாஸ், கால் நூற்றாண்டையும் கடந்து தேசியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இன்னமும் எழுதிவருகின்றார். 1995-2015 காலகட்டத்தில் மித்திரன், தினகரன், மல்லிகை, இருக்கிறம், இனிய நந்தவனம், ஆகிய ஊடகங்களில் எழுதப்பட்ட சிறுகதைகளில் தேர்ந்த 14 கதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. கருவைத் தொட்ட உயிர் (மித்திரன், 1995), யாழ்ப்பாணம் பார்ப்போமா? (2002), கறுத்த கோடுகள் (தினகரன், 2006), பொறியில் எலி (மல்லிகை, 2008), நிழல் (மல்லிகை, 2006), திறப்பு (மல்லிகை 2008), அவன் அவள் (இருக்கிறம், 2008), அந்த ஒன்றுக்காக (2010), அம்மாவின் அழகான மனசு (இனிய நந்தவனம், 2010), பரிசோதனைகள் (தினகரன், 2011), மோசமானவர்கள் (மித்திரன், 2013), பசிக்குள் பசி (மித்திரன், 2014), தலைகுனிவு (மித்திரன், 2015), மண்ணின் மணம் (மல்லிகை, 2006) ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 14691

**குதிரைக்காரன்: சிறுகதைகள்.** *அ.முத்துலிங்கம். நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2012. (சென்னை 600005: மணி ஓப்செட்).*

*(10), 11-151 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-81969-10-6.*

*நவீனத் தமிழ் உரைநடைக்கு ஒரு புதிய பரிமாணத்தையும் வசீகரத்தையும் வீச்சையும் சேர்ப்பது அ.முத்துலிங்கத்தின் எழுத்துக்களாகும். இந்நூலில் அவரது 15 சிறுகதைகள் அடங்கியுள்ளன. இவற்றின் நிகழ்புலங்கள் அமெரிக்கா, கனடா, ஆப்பிரிக்கா, இலங்கை என மாறினாலும் கதை மாந்தர்களின் மனிதநேயமும் மகிழ்ச்சியும் துயரமும் தியாகமும் மாறாமல் முற்றிலும் பரிச்சயமில்லாத தருணங்களைத் தமிழ் வாசகர் மனதில் நிறுத்துகின்றன. முத்துலிங்கத்தின் புனைவின் நிழல் யதார்த்தத்தை மறைப்பதில்லை. அவற்றை அதன் மந்தகதியிலிருந்து விடுவித்து பிரகாசமடையவைக்கிறது. அவரின் அனுபவங்கள் ஒரு மென்மையான ரசவாதத்தால் வாழ்வின் தரிசனமாகிவிடும் வித்தை திரும்பத் திரும்ப நிகழ்கின்றது. இதில் குதிரைக்காரன், குற்றம் கழிக்கவேண்டும், மெய்க்காப்பாளன், பாரம், ஐந்துகால் மனிதன், ஜகதலப்ரதாபன், புளிக்கவைத்த அப்பம், புதுப்பெண்சாதி, 22 வயது, எங்கள் வீட்டு நீதிவான், தீர்வு, எல்லாம் வெல்லும், மூளையால் யோசி, ஆச்சரியம், கனகசுந்தரி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட தேர்ந்த சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.*

### 14692

**சமாதானத்தின் கதை.** *ஜேகே (இயற்பெயர்: ஜெயக்குமரன் சந்திரசேகரம்). சுவிட்சர்லாந்து: ஆதிரை வெளியீடு,* Neugasse 60, 8005 Zurich, *1வது பதிப்பு, ஜனவரி 2020. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).*

*214 பக்கம், விலை: இந்திய ரூபா 170.00, அளவு: 20x13 சமீ.*

*இச்சிறுகதைத் தொகுப்பில் கனகரத்தினம் மாஸ்டர், உஷ் இது கடவுள்கள் துயிலும் தேசம், சந்திரா என்றொருத்தி இருந்தாள், சைக்கிள்கடைச் சாமி, தூங்காத இரவு வேண்டும், விசையறு பந்து, சமாதானத்தின் கதை, நகுலனின் இரவு, மறை சாட்சி, வெம்பிளி ஒஃப் ஜஃப்னா, விளமீன் ஆகிய 11 கதைகள் தேர்ந்து தரப்பட்டுள்ளன. ஜேகே (ஜெயக்குமரன் சந்திரசேகரம்) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். தற்பொழுது அவுஸ்திரேலியாவில் வசிக்கிறார். படலை இணையத் தளத்தில் வெளியாகும் இவருடைய நனவிடைதோய்தல் எழுத்துக்களின் வாயிலாக இலங்கையிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் நன்கு அறியப்பட்டவர். இவர் ஈழப்போர்ச் சூழலின் வாழ்வனுபவத்தை பால்யத்தின் பார்வைக்கூடாக எழுதிய "என் கொல்லைப்புறத்துக் காதலிகள்" என்ற தொகுப்பும் அரசியல் விஞ்ஞானப் புனைவான "கந்தசாமியும் கலக்சியும்" என்ற நாவலும் வாசகர்களிடையே வரவேற்பைப் பெற்றிருந்தன. இறுக்கமான ஒரு சமூகத்தில் பேணப்படுவதாக நம்பப்படும் விழுமியங்களும் கட்டுப்பாடுகளும் முரண் காரணிகளால்*

*ஒன்றுமில்லாததாக ஆக்கப்படும் காலக் கட்டாயத்தை இத்தொகுப்பில் உள்ள பதினொரு கதைகளும் பேசுகின்றன.*

## 14693

**சமுதாய அகதிகள் (சிறுகதைகள்).** *இளநெஞ்சன் முர்ஷிதீன். கொழும்பு 10: அல்லாமா இக்பால் பப்ளிகேஷன்ஸ், 239, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 1990. (கொழும்பு 12: வீனஸ் பிரின்டர்ஸ்).*

*116 பக்கம், விலை: ரூபா 67.50, அளவு: 18.5x13 சமீ.*

*தினபதி ஆசிரிய பீடத்தில் சிலகாலம் பணியாற்றிய B.M.முர்ஷிதீன் எழுதிய இஸ்லாமிய தமிழ்ச் சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இவை சிந்தாமணி வார மஞ்சரியில் பிரசுரமானவை. சமாதானப் பரிசு, வசந்தத்தை தேடும் மலர்கள், வாசமிலா ரோசாவொன்று, ஒரு பொருளுக்காக, காணாமல் போன நியாயங்கள், உண்மைகள் அழுகின்றன, சமுதாய அகதிகள், அவர்களும் நம்மவர்களே, வெளிச்சத்துக்கு வந்த உணர்வுகள், புதிய எழுச்சி, அறிமுகம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. இடையிடையே இவரது சிறுகதைகள் பற்றிய கருத்துரைகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21630).*

## 14694

**சிவப்புக் கோடு: சிறுகதைகள்.** *சி.சிறீறங்கன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, கார்த்திகை 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

xiv, *70 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *978-955-0958-19-1.*

*உயர்தர கணக்கீட்டு ஆசிரியராக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கடமையாற்றும் சிறீறங்கன், எமது சமூகத்தில் நடக்கின்ற அநீதிகளைக் கண்டு மனம்வெதும்பி அவற்றுக்கெதிரான குரலை இக்கதைகளில் பதிவுசெய்திருக்கின்றார். பல்வேறு காலச் சூழ்நிலைகளில் நாம் பட்ட இடர்ப்பாடுகளையும் சவால்களையும் சுட்டிக்காட்டுவது மட்டுமின்றி அவை எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டன அல்லது சமாளிக்கப்பட்டன என்பதையும் இக்கதைகள் வாயிலாக சிறப்பாக எடுத்துக் காட்டியிருக்கின்றார். இந்நூலில் சிவப்புக் கோடு, கனவு மெய்ப்பட வேண்டும், நீறு பூத்த நெருப்பாய், வலி தாங்கும் இதயம், மனிதத்தைத் தேடி, மாறாத வடுக்கள், கல்வியே எங்கள் மூலதனம், கல்லாதது உலகளவு, வாழ்க்கை வாழ்வதற்கே, புரிதல், தக்கணப் பிழைக்கும், விட்டில் பூச்சிகள் ஆகிய பன்னிரு கதைகள் இடம்பெற்றுள்ளன.இது ஜீவநதி வெளியீட்டகத்தின் 130ஆவது நூலாகும்.*

## 14695

**சுவர்க்கத்து நறுமணம்: சிறுகதைகள்.** *எம்.எம்.ஹிதாயத்துள்ளாஹ். பண்டாரகம: எம்.எம்.ஹிதாயத்துள்ளாஹ், அப்zல் பதிப்பகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).*

viii, *118 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22.5*x*16 சமீ.*, ISBN: *978-955-99258-2-8.*

*இந்நூலில் கற்பாரைகளும் கரையும், பாலகன், அப்பா, சுவர்க்கத்து நறுமணம், எதிர்பார்ப்பு, தலநஸீபு, அஸ்தமிக்கும் அதிகாரங்கள், மனிசத்தனம், நிராசை, வேகும் உள்ளங்கள், முகங்கள், விட்டில் பூச்சிகள் ஆகிய 12 கதைகள் இடம் பெற்றுள்ளன. ஹிதாயத்துள்ளாஹ் களுத்துறை மாவட்டத்தின் அட்டுளுகமவைச் சேர்ந்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றும் இவர், சட்டத்துறையில் பட்டப்படிப்பை நிறைவுசெய்து சட்டத்தரணியாகவும் உள்ளார். 1995 முதல் இலக்கியப் புலத்தில் இயங்கிவரும் இவர் மாவட்ட, தேசிய ரீதியில் பரிசுகளையும் பெற்றவர். இவரது முதலாவது "நூல் விரியத் துடிக்கும் மொட்டுக்கள்"- 2005இல் வெளிவந்தது.*

## 14696

**சொர்க்கபுரிச் சங்கதி (சிறுகதைகள்).** எம்.எம்.நௌஷாத். *சம்மாந்துறை: தேசிய கலை இலக்கியத் தேனகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2016. (கொழும்பு 10: லீட் பிரின்டர்ஸ்).*

xxxiv, *404 பக்கம், ஓவியங்கள், விலை: ரூபா 750., அளவு: 22*x*14.5 சமீ.*, ISBN: *978-955-3966-00-1.*

*கடந்த 35 வருடங்களாக எழுதப்பட்டவையான ஆசிரியரின் 33 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு. வைத்தியரான நூலாசிரியர் வைத்தியத்துறைசார்ந்த சில சுவாரஸ்யமான கதைகளையும் இங்கு தந்துள்ளார். காதல் கதைகளும், உளவளத்துணை சார்ந்த கதைகளும், அங்கதக் கதைகளுமாக இந்நூல் பல்வேறு ரசனைப் பொலிவுகளுடன் வாசகருக்கு விருந்தாகியுள்ளது. சிலசமயங்களில் எமக்குள் எழுகின்ற தத்துவ விசாரங்களுக்கும் குடும்பச் சிக்கல்களுக்கும் பரிகாரம் தேடித்தருபவையாகவும் சில கதைகளைக் காணமுடிகின்றது. கல்முனை சீ.ருத்ராவின் ஓவியங்கள் ஒவ்வொரு கதைக்கும் அழகூட்டுகின்றன. இத்தொகுதியில் ஆசிரியர் எழுதிய அதிதுடிமை குணாம்சம், அரசனும் அரசனும் நிறுவனம், அழகு என்பதற்கான நிறமூர்த்த ஒழுங்கு, அன்டிலோப்பின் நளினநடை, இரு வீடுகள் உள்ள ஒரு கிராமம், எலும்புக்கூடு சித்தாந்தம், கசாப்புக் கடைக்காரனும் கணிதப் பேராசிரியரும் தத்துவஞானியும், கடிகாரம் களவுபோயிற்று, இருபதாம் நூற்றாண்டுக் கணவன்மார்கள், காணாமற்போகக் கடவாய், காலத்தைத் தொலைத்தவர்கள் செல்லுமிடம், சின்ன மனிதர்கள் வாழும் தீவு, மரப்பாச்சியின் செல்லக் குழந்தை, சொர்க்க மயானத்திலே நாட்டுப்புறத்தான், ஞவர்களும் ஙவர்களும், உன் பெயர் என்ன?, தீர்க்கதரிசியின் புதிய முகவரி, நாகபாம்பு மனைவி, நிழலைப்பிடிக்க ஓடுகிறேன், நைல்நதிக் குழந்தை, நோயாளியும் பஞ்சுமிட்டாயும், மலையுச்சி பங்களாவாசிகள், ஒரு பற்குச்சி சமாச்சாரம், திருமதி பூச்சியியலாளன், 1989 மரணபீதியும் அச்சவியலும்-திறப்பின் மீள்வருகை, மலைக்கு அப்பால் யுத்தம் நடக்கிறது, முன்னொரு காலத்து யானை, மெர்ஸ லீனாவுக்கு மோட்சம், மனசு ஒடிந்த நகரம், விருத்தோப்பியனின் சவப்பெட்டி,*

வீரர்கள் அழிவதில்லை, ஜன்னலில் குடியிருத்தல், கசாப்புக் கடையில் புல்புல் பறவை ஆகிய கதைகள் இடம்பெற்றுள்ளன.

### 14697

**தண்ணீர்: சிறுகதைத் தொகுப்பு.** க.சின்னராஜன். யாழ்ப்பாணம்: ஜீவநதி, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, மார்ச் 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xii, 84 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-4676-93-0.

இத்தொகுப்பில் தமிழ் இலக்கியப் படைப்பாளி க.சின்னராஜன் அவர்களின் தேர்ந்த 14 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. தண்ணீர், சிங்கை நகர்க் காவலன் உக்கிரசிங்கன், காசுமாலை, சவாரி, குலப்பெருமை, உழைப்புக்கேற்ற ஊதியம், வில்லுப்பாட்டு, காய்ந்த ரோஜா, தொலையும் சத்தியங்கள், அந்தியேட்டிக் குருமார், சிறைமீட்டல், ஒரு வங்கியும் வாடிக்கையாளரும், விடிவின் பாதைக்கு, குறிஞ்சி மலர் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. கவிஞராக எழுத்துலகில் நுழைந்த சின்னராஜன், நல்லதொரு சிறுகதைப் படைப்பாளியாகவும் தன்னை இனம்காட்டியுள்ளார். ஜீவநதி வெளியீட்டகத்தின் 119ஆவது பிரசுரமாக இந் நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 270958).

### 14698

**தமிழினி (சிறுகதைத் தொகுதி).** சமரபாகு சீனா உதயகுமார். வல்வெட்டித்துறை: குபேந்திரா பதிப்பகம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2018. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ மாருதி பிரின்டர்ஸ், 555 நாவலர் வீதி).

vi, 155 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 19.5x14.5 சமீ., ISBN: 978-955-7363-02-8.

பதினொரு சிறுகதைகளைக் கொண்டதாக தமிழினி என்ற இந்தத் தொகுப்பு வெளிவந்துள்ளது. வீரகேசரி, தினக்குரல் ஆகிய தேசியப் பத்திரிகைகளிலும், ஞானம், ஜீவநதி, ஒளி அரசி, ஆகிய சஞ்சிகைகளிலும் 2014 முதல் 2017 வரையான காலப்பகுதியில் வெளிவந்த சிறுகதைகளையே சமரபாகு சீனா உதயகுமார் தொகுத்து நூலாக்கியுள்ளார். தமிழினி என்பது இந்நூலில் இடம்பெற்றுள்ள ஒரு சிறுகதையின் பெயர். அதுவே நூலின் பெயராகவும் ஆகியிருக்கிறது. சிறுவர்களையும் இளைஞர்களையும் இலக்கு வைத்தே இந்தக் கதைகளைப் படைத்திருக்கிறார். சொல்லப் போனால் இந்தச் சிறுகதைத் தொகுப்பு ஒரு "இளைஞர் சீர்திருத்த சிறுகதைத் தொகுப்பு" என்றே சொல்லலாம். தமிழினி, காசிருந்தால் வாங்கலாம், சுயம் உரிப்பு, அம்மா, மகேஸ்வரன் சேர், முதுசொம், கிறுக்கல் சித்திரங்கள், மழைக்குமிழ் கர்வம், அவளும் ஒரு பெண், புலமைப் பரிசில், மைதிலி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பதினொரு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் வடமராட்சியின் வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகக் கொண்ட சமரபாகு சீனா உதயகுமார், உயிரோட்டமான

எழுத்துகளால் இயல்பான மொழிநடையில் எல்லோரையும் கவரும் விதமான சொல்லாடல்கள் இவருடையவை. இவரது பதின்நான்காவது நூல் இதுவாகும்.

## 14699

**தாய்மை: தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள்.** உ.நிசார் (இயற்பெயர்: H.L.M. நிசார்). மாவனல்லை: பானு வெளியீட்டகம், 70/3, புதிய கண்டி வீதி, 1வது பதிப்பு, 2019. (மாவனல்ல: எம்.ஜே.எம். அச்சகம், 119, பிரதான வீதி).

xi, 108 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-0503-16-2.

ஏற்கெனவே கவிதை, சிறுகதை, சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள் என 25 இற்கும் அதிகமான நூல்களைத் தந்துள்ள உ.நிசார் எழுதிய மற்றுமொரு சிறுகதைத் தொகுதி இது. இந்நூலில் உடுநுவர நிசார் எழுதிய தாய்மை, பறந்து செல்லும் பறவைகள், காலம் பதில் சொல்லட்டும், பட்டுச் சாரம், மனம் கொண்டது மாளிகை, வன்முறைகள், பெரிய மீன்கள், பச்சை மனிதன், உறுத்தும் உள்ளங்கள் ஆகிய ஒன்பது சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25664).

## 14700

**தாயக பூமி.** கா.தவபாலன் (இயற்பெயர்: கா.தவபாலச்சந்திரன்). அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, வைகாசி 2017. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

104 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43867-1-6.

முள்ளியவளை- கணுக்கேணி கிழக்கைச் சேர்ந்த இந்நூலாசிரியர், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறையில் பீ. ஏ. பட்டம் பெற்றவர். 2000களில் கண்டியில் அரச உத்தியோகத்தராக-வரிமதிப்பாளராகப் பணியாற்றிய வேளை ஞானம் மாத இதழின் மூலம் இலக்கியத்துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்தவர். 2015இல் இலக்கியத்துக்கான கலாபூஷணம் விருதினை பெற்றுக்கொண்டவர். இச்சிறுகதைத் தொகுப்பில் திருமணப்பேச்சுக்களின்போது செய்யப்படும் தில்லுமுல்லுகள், மதுவினால் குடும்பத்தில் கணவன்-மனைவிக்கிடையே ஏற்படும் மோதல்கள், கலப்புத் திருமணம்/ கலப்புக் குடியேற்றம் என்பவற்றால் அழிந்துவரும் தமிழரின் இன அடையாளங்கள், மண்ணாசை ஏற்படுத்தும் காணித் தகராறுகள் எனப் பல்வேறு சமூகப் பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றார். இத்தொகுப்பில் தண்ணிமுறிப்புக் குளம், திருமணப் பேச்சு, மெல்லத்திறந்தது கனவு, தேமாவடி, குடிக்காதேங்கோ, சின்ன வயசு ஆசைகள், கலப்புத் திருமணம், காதல் திருமணம், டொனேஷன், தனிக்குடித்தனம், குடி குடியைக் கெடுக்கும், இரவல் சங்கிலி, அகதியாய் ஓடமாட்டேன், சூனியப் பிரதேசம், நிலவே நீ சாட்சி, மீள்குடியேற்றம், சம்பளக் காசு, கொண்டுவந்த சீதனம், பட்டம், தாய்மண், இப்படியும் மனிதர்கள், காரில் வந்த காரிகை, உண்மைக் காதல், காணவில்லை, தாயகபூமி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 25 கதைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் ஜீவநதி வெளியீட்டகத்தின் 77ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது.

### 14701

**திருந்திய உள்ளங்கள்: சிறுகதைத் தொகுதி.** அட்டாளைச்சேனை எஸ்.எல். மன்சூர். திருக்கோணமலை: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, 2015. (திருக்கோணமலை: சண் பிரிண்டர்ஸ், 224, மத்திய வீதி).

xii, 78 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4628-18-2.

சுமைதாங்கி சாய்ந்தால், பகல் கொள்ளை, நாற்காலி ஆசை, நாளை விடிந்தால் நோன்புப் பெருநாள், சில வேளைகளில் சில மனிதர்கள், பிரிவெல்லாம் பிரிவல்ல, அவனுக்கு அவனே எடுக்கும் விழா, திருந்திய உள்ளங்கள், மாற்றம், இறைவன் கொடுத்த பரிசு, மாஸ்டர் ஹஜ்ஜுக்குப் போகிறார், பிழையான சம்பாத்தியம் கொடுத்த பரிசு, நோன்புக் கஞ்சி தந்த வாழ்வு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 13 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. திருந்திய உள்ளங்கள் நூலின் ஆசிரியர் மன்சூர் இந்த நூலின் ஊடாகச் சொல்ல விளைவது மாணவர் சமூகத்திற்குள்ளும், ஆசிரியர் சமூகத்திற்குள்ளும் ஒரு மாற்றம் வரவேண்டும் என்பதுதான். அந்த மாற்றம் குறித்து பேசுகின்ற போது பல விஷயங்களை துணிச்சலுடன் வெளிப்டையாகப் பதிவுசெய்கின்றார். பாடசாலை என்கின்ற சூழல் குறித்த அதிகம் கவனம் செலுத்துகின்றார். ஊழல்கள் வெளியில் இல்லை அவை பாடசாலைக்குள் தான் இருக்கின்றன என்பதை அவர் கதைகள் மூலமாக வெளிக் கொண்டு வந்திருக்கிறார். நூலாசிரியர் மன்சூர் ஆசிரியராக இருந்து, ஆசிரிய ஆலோசகராக உயர்ந்ததினால் தான் அனுபவித்த பல விடயங்களை ஆதங்கங்களாக இந்த நூலில் வெளிக்காட்டியிருக்கிறார். அட்டாளைச்சேனை எஸ்.எல்.மன்சூர், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றுபவர். சிறந்த விமர்சகராகவும், எழுத்தாளராகவும் அறியப்பட்டவர்.

### 14702

**நாங்கள் மனித இனம்: உருவகக் கதைகள்.** U.L.ஆதம்பாவா. கல்முனை: சாஹிறாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், 1வது பதிப்பு, நவம்பர் 1991. (சாய்ந்தமருது: நெஷனல் அச்சகம்).

80+18 பக்கம், விலை: ரூபா 40.00, அளவு: 17.5x12 சமீ.

கல்முனை ஸாஹிறா கல்லூரியின் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய வேளை வெளியிடப்பெற்ற இந்நூலில், ஆசிரியரின் தேர்ந்த 21 உருவகக் கதைகள் (Metaphor Stories) இந்நூலில் இடம்பெற்றுள்ளன. 1961இல் கவிதைப்படைப்பொன்றின் மூலம் இலக்கியத்துறையில் கால் பதித்தவர் யூ எல். இதில் அனுபவம், சிறுமையும் பெருமையும், இரை, பெருந்தன்மை, பழக்கம், மாற்றம், வெற்றியும் தோல்வியும், நாங்கள் மனித இனம், கர்வம், பழம் பெருமை, சுமை, மதிப்பு, வாழ்வு, இப்படியும் சில போலிகள், அந்த மனிதன், அழகு அழுகிறது, உறவு, குருவுக்குக் கௌரவம், பொறுப்புணர்ச்சி, இறப்பு, உண்மை தெளிந்தது ஆகிய தலைப்புகளில் இவை

எழுதப்பட்டுள்ளன. இது கல்முனை சாஹிறாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆறாவது வெளியீடாக வெளிவருகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46374).

### 14703

**நாட்குறிப்பு (சிறுகதைத் தொகுப்பு).** தங்கராசா செல்வகுமார். கொழும்பு 10: எஸ். கொடகே சகோதரர்கள், 661,663,675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2018. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

160 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-30-9625-8.

18 தவறிய அழைப்புக்கள், கடமை-காதல்-கட்டுப்பாடு, மோகம், நாட்குறிப்பு, நடிகர் கிரிதரன் பேட்டி, எதிரியை உருவாக்குவது எப்படி? தன்முனைப்பு, கைபேசி, கலைஞன் ஆகிய ஒன்பது சிறுகதைகளை இத்தொகுப்பு உள்ளடக்கு கின்றது. குப்பிழானைச் சேர்ந்த தங்கராசா செல்வகுமார், தன் ஆரம்பக் கல்வியை குப்பிழான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் தொடங்கியவர். தொடர்ந்த இடப்பெயர்வுகளினூடாகப் பயணித்து, இறுதியாக வசாவிளான் மகாவித்தியாலயத்தில் தன் பாடசாலை வாழ்விற்கு முற்றுப்புள்ளி கண்டவர். உடுவில் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகப் பணியாற்றுகின்றார். நாட்குறிப்பு இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு.

### 14704

**நிலவு குளிர்ச்சியாக இல்லை.** வடகோவை வரதராஜன் (இயற்பெயர்: S.T.வரதராஜன்). சென்னை 600017: சிவவாசுகி பதிப்பகம், J.8, காஞ்சி காலனி, தெற்கு போக் சாலை, தி.நகர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (சென்னை 5: சென்னை பிரிண்டர்ஸ்).

xvi, 144 பக்கம், விலை: இந்திய ரூபா 60.00, அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கையில் கோப்பாய் வடக்கில் வதியும் வடகோவை வரதராஜன் 1980-1990 காலப்பகுதியில் இலங்கை இதழ்களில் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு நிலவு குளிர்ச்சியாக இல்லை. நிலவு ஏன் குளிர்ச்சியாக இல்லாமல்போனது என்பதை தான் வாழும் கிராமத்தின் மண்வாசனையுடன் பதிவுசெய்கிறார். இந்த நூலின் மற்றும் ஒரு சிறப்பு இதற்கு அணிந்துரை எழுதியிருப்பவர் மறைந்த மூத்த கவிஞர் கலாநிதி இ.முருகையன். ஆனால் இந்நூலைப் பார்க்காமலேயே விடைபெற்று விட்டார். இந்நூலில் வரதராஜனின் அது ஒரு மழைக்காலம், மொழி பெயர்ப்பு, மனவுரிவும் மரவுரிவும், மழைப் பஞ்சாங்கம், எறும்புக்குத் தெரியுமா?, நேர்முக வர்ணனை, மலினப்பட்ட மானிடங்கள், நிலவு குளிர்ச்சியாக இல்லை, வெளிறிகள், உப்பு, மனோபாவம், தாய்ப் பறவையும், சேய்ப் பறவையும் ஆகிய பன்னிரு சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. வடகோவை வரதராஜன் யாழ்ப்பாணம்-கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர். குண்டகசாலையில் விவசாய விஞ்ஞான டிப்ளோமா பட்டம் பெற்ற இவர் தற்போது தனது சொந்த ஊரான

கோப்பாய் வடக்கிலே கிராம சேவகராகக் கடமையாற்றுகின்றார். இவர் அண்மையில் சிறந்த கிராமசேவகருக்கான விருதினைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் மட்டுமன்றி தமிழகத்தில் வெளிவரும் கணையாழி, தாமரை போன்ற சஞ்சிகைகளிலும் இவரது சிறுகதைகள் வெளிவந்து பரிசில்களையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளன.

## 14705

**நிலவுக்குள் சில ரணங்கள் (சிறுகதைத் தொகுதி).** *வஸீலா ஸாஹிர். நீர்கொழும்பு: பைந்தமிழ் பதிப்பகம், 121, கல்கட்டுவ வீதி, பெரியமுல்லை, 1வது பதிப்பு, ஜுன் 2016. (கொழும்பு 10: யூ.டீ.எச். கம்ப்யூபிரின்ட், 51/42, மொஹிதீன் மஸ்ஜித் வீதி).*

vii, *56 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, விலை: ரூபா 350., அளவு: 20x14.5 சமீ.,* ISBN: *978-955-43260-0-2.*

*கல்லொளுவ மினுவாங்கொட வஸீலா ஸாஹிர் சிந்தாமணி, தினகரன், நவமணி, போன்ற இதழ்களின் வழியாகவும், இலங்கை வானொலியின் மூலமும் எழுத்துலகில் தடம் பதித்துக் கொண்டவர். நீர்கொழும்பு முகர்ரமா சர்வதேசப் பாடசாலையின் ஆசிரியையான இவர் இன்றைய நவீன யுகப் பெண்கள் படும் அவலங்கள், திருமணமான பெண்களும் விதவைப் பெண்களும் எதிர்கொள்ளும் அன்றாட வாழ்வியல் போராட்டம், இஸ்லாமிய சமூகத்தில் ஆணாதிக்கத்தின் இறுக்கம், அதன் கொடூரம் ஆகியவற்றைத் தனது கதைகளின் வழியாகப் பதிவுசெய்பவர் இவர். வஸீலா ஸாஹிர் எழுதியதில் தேர்ந்த சில சிறுகதைகளின் தொகுப்பு இதுவாகும். இத்தொகுப்பில் கானல் நீர், எதிர்பார்ப்பு, என் ஒளி, விடியும் நாட்கள், அவள் ஒரு தொடர்கதை, அந்த நிமிடம், பாதி உறவே, அந்த நாலு பேர், மீள் அழைப்பு, வேரில் துடிக்கும் இதயங்கள் ஆகிய பத்துச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65120).*

## 14706

**நினைவுப் பகடைகள் (சிறுகதைகள்).** *நந்தவனம் சந்திரசேகரன் (தொகுப்பாசிரியர்). திருச்சி 620 003: இனிய நந்தவனம் பதிப்பகம், எண். 17, பாய்க்காரத் தெரு, உறையூர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2017. (சென்னை: கெப்பிட்டல் இம்ப்ரஷன்).*

*136 பக்கம், விலை: இந்திய ரூபா 110., அளவு: 22x15 சமீ.*

*தமிழகத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்த வேளையில் மறைந்த ஈழத்துப் பத்திரிகையாளர் அமரர் கே.ஜீ.மகாதேவா அவர்களின் நினைவாக நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியின் வெற்றியாளர்களின் சிறுகதைகளைத் தொகுத்து அமரர் மகாதேவாவின் நினைவுநூலாக வெளியிட்டிருக்கிறார்கள். தலைப்புச் சிறுகதை "நினைவுப் பகடைகள்" கட்டிட வேலையாளான பத்திரியம்மாளின் உணர்வுகளுக்கு உயிரோட்டம் தந்துள்ளது. கதாசிரியர் பவித்ரா நந்தகுமார் சென்னை மொழி வழக்கில் இக்கதையை எழுதியுள்ளார். விதியின் சூதாட்டத்தில் ஏழ்மையின் பகடைக்காய் மனிதனே என்பதை குறிப்பால் உணர்த்தும் கதை இது.*

*கமலவேலனின் "நாக்குறுதி", குடும்பச் சூழ்நிலைகளின் யதார்த்தங்களை நடைமுறை வாழ்வியலில் பின்பற்றத் தவறும் சூழலொன்றை விபரிக்கின்றது. உமா கல்யாணியின் "வேற்றுமை இல்லை" என்ற கதை மத ஒருமைப்பாட்டை பள்ளிப் பருவத்திலேயே புகுத்த வேண்டும் என வலியுறுத்துகின்றது. வேலூர் நந்தகுமாரின் "உடைந்த மனக்கோட்டையும் திறந்த மனக்கதவும்" என்ற கதை வாழ்வியல் தத்துவத்தை அழகாக வெளிப்படுத்துகின்ற வசனநடையைக் கொண்டுள்ளது. பூதலூர் முத்துவின் "ஈரம்"- மனிதனை ஆளும் பணத்தின் சர்வாதிகாரம் பற்றிச் சொல்கின்றது. இராம இளங்கோவனின் "சூரியச் சிறகுகள்", பெண்ணியம் போற்றும் எழுத்தாக்கமாகும். பெண்கள் சந்திக்கும் அன்றாடக் கொடுமைகளயும் அவர்களின் மனத்தாக்கங்களையும் இக்கதை பதிவுசெய்கின்றது. ஆர்.கே.சண்முகத்தின் "குட்டை மனிதர்கள்", எஸ்.செல்வசுந்தரியின் "பிராயச்சித்தம்", எம்.பெனட் ஜெயசிங் எழுதிய "ஜன்னலைத்திற", தங்க ஆரோக்கிய தாசனின் "மாரி", அகரம் செ.தர்மலிங்கம் எழுதிய "மெல்லத் திறந்தது மனசு", எஸ்.ஜே.ஜெயக்குமார் எழுதிய "போரே நீ போ", மாணிக்கம் பஞ்சலோரஞ்சன் எழுதிய "உருமாறும் உள்வட்டங்களும் உறுதியான நேர்கோடுகளும்" ஆகிய கதைகளும் மனித வாழ்வின் பல்வேறு சமூகப் பிரச்சினைகளைப் பேசுகின்றன. எஸ்.ஜே.ஜெயக்குமார். மாணிக்கம் பஞ்சலோரஞ்சன் ஆகியோர் இலங்கையைச் சேர்ந்தவர்கள். மற்றையோர் தமிழக எழுத்தாளர்களாவர்.*

## 14707

**நூறு குறளும் நூறு கதையும்.** *ஆ.வடிவேலு. பருத்தித்துறை: ஆ.வடிவேலு, வடிவகம், தும்பளை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2019. (சுன்னாகம்: கிருஷ்ணா பிறின்ரேர்ஸ், டாக்டர் சுப்பிரமணியம் வீதி).*

xiv, *126 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-44548-2-8.*

*இந்நூலில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் உள்ள அறிவுடைமை, குற்றம் கடிதல், பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினம் சேராமை, தெரிந்து செயல்வகை, வலி அறிதல், காலம் அறிதல், இடன் அறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் ஆகிய பத்து அதிகாரங்களில் உள்ள ஒவ்வொரு குறளுக்கும் பொருத்தமான ஒவ்வொரு கதையை எழுதித் தொகுத்திருக்கிறார்.*

## 14708

**பனிச்சங்கேணி அரசி: வரலாற்றுச் சிறுகதைகள்.** *வாகரைவாணன். மட்டக்களப்பு: ஆரணியகம், 479/5, புதிய கல்முனை வீதி, நாவற்குடா, 1வது பதிப்பு, ஜுன் 2007. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 126/1, திருமலை வீதி).*

vii*, 70 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 21*x*14.5 சமீ.*

*தமிழ் அரசர்களின் வியக்கத்தக்க ஆட்சிமுறைமையையும் அவர்கள் மக்கள் மேம்பாட்டிற்காகவும், சமய வளர்ச்சிக்காகவும், ஆற்றிய அளப்பரிய பங்கினையும்*

கற்பனையுடன் கலந்து இதிலுள்ள கதைகளின் வாயிலாகத் தரிசிக்க முடிகின்றது. எகிப்தில் இருந்து விரட்டப்பட்ட மக்கள் கூட்டமொன்று காயல்பட்டணம், கள்ளிக்கோட்டை, மதுரை போன்ற இடங்களிலும் குடியேறி பின்னர் காயல் பட்டணத்திலிருந்தவர்களில் சிலர் இலங்கையின் பேருவளைப் பகுதியில் வந்து குடியேறியதாக இந்நூல் குறிப்பிடுகின்றது. பனிச்சங்கேணி அரசி, பண்டார வன்னியன், ஒரு மகாகவியின் சாயங்காலம், மகா பராக்கிரமபாகு, ஒரு கிராமத்தின் கதை, நந்திக்கொடி, காயல், முப்பது வெள்ளிக்காசுகள், கோகர்ணம், கி.பி. எட்டாம் நூற்றாண்டிலே, நாகதேசம், யாழ்ப்பாண மன்னன் சங்கிலியன், கந்தளாய்- அது ஒரு காலம், முத்துக்கல், நடுகல், அரசி உலக நாச்சியார் ஆகிய பதினாறு தலைப்புகளில் வரலாற்றுக் காட்சிகள் சுவையான சிறுகதைகளாக நகர்த்திச் செல்லப்படுகின்றன. தமிழகத்தின் இனக் குழுமமான வன்னியருக்கும் மட்டக்களப்பிற்கும் இடையிலான தொடர்புநிலை சம்பந்தமான விரிவான பார்வையையும் இந்நூல் வழங்குகின்றது. வன்னியர் என்ற தமிழ்ச் சமூகத்தின் பழமை, போர்க்கலையில் அவர்களின் வல்லமை, மட்டக்களப்பில் வாழ்ந்திருந்தமைக்கான ஆய்வுச் சான்றுகள் என்பன இந்நூலில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 43181).

### 14709

**புத்தரின் கடைசிக் கண்ணீர்.** இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Vetlandsveien 117, 0686 Oslo, 1வது பதிப்பு ஜனவரி 2019. (மின்நூல் வடிவமைப்பு lulu.com சுய வெளியீடு உதவி).

138 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-0-244-74694-0.

பதினைந்து சிறுகதைகளையும் ஒரு குறுநாவலையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது. நரகம் சொர்க்கம் மோட்சம், தெய்வமில் கோயில், பலசரக்குக் கடைகள், சாத்தான்கள், குருவும் சிஷ்யனும், இருப்பல்ல இழப்பே இன்பம், பொக்கிசம், கணேசர் வீட்டுப் பேய், அவனே அவனைப் பார்த்து, புத்தரின் கடைசிக் கண்ணீர், சங்கீதாவின் கோள், புத்தரும் சுந்தரனும், வேதாளம், உடன் பிறப்பு, கூத்தனின் நரகம் ஆகிய சிறுகதைகளுடன் தன்னைத் தான் உண்ணும் என்ற குறுநாவலும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இக்குறுநாவல், இயற்கையின் இயக்கம், தெற்கு ஈழத்தில், மஞ்சஸ்ரர், மருத்துவரிடம், அடுத்த சந்திப்பு, தாய் நாட்டிற்கு, மூன்றாவது பயணம் ஆகிய ஏழு இயல்களில் எழுதப்பட்டுள்ளது.

### 14710

**பூ (சிறுகதைகள்).** க.பரராஜசிங்கம் (புனைபெயர்: துருவன்), செங்கை ஆழியான் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: யாழ் இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

ix, 92 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 100., அளவு: 20x14.5 சமீ.

துருவன் என்ற புனைபெயரைச் சூடிக்கொண்ட அமரர் க.பரராஜசிங்கம் (22.11.1943-07.04.1989), "பசூன் இரத்தினம்" எனப் பிரபல்யம் பெற்ற கலைஞர் நமசிவாயம் கனகரத்தினம் அவர்களின் மகனாவார். யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் பேராதனைப் பல்கலைக்கழக புவியியல்துறை சிறப்புப் பட்டதாரியுமாவார். சிறுகதையாளராக மாத்திரமின்றி நடிகராகவும் இயக்குநராகவும் பல்கலைக்கழக நாடகத்துறையில் பிரபல்யம் பெற்றிருந்தவர். கலைச்செல்வி ஆசிரியர் சிற்பி சிவசரவணபவனின் வழிகாட்டலில் தன் இலக்கியப் பாதையை வகுத்துக்கொண்ட இவர் பல்வேறு சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் எழுதிய சிறுகதைகளுட் சில ஒரு தொகுதியாக அவரின் மறைவின் 20 ஆண்டுகளின் பின்னர் நூலுருப்பெற்றுள்ளன. இத்தொகுப்பில் குருடு, விளாம்பழம், வாய்க்கால், வியாபாரம், பூ, நானும் ஒருவன், ஒரு குலை உள்ளிட்ட பத்துச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 51172).

## 14711

**பொத்தானை வயல்.** A.C.M.இப்றாஹீம். கிண்ணியா 4: பேனா பதிப்பக வெளியீடு, 118, நகரசபை வீதி, 1வது பதிப்பு, 2018. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

144 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-0932-27-6.

சட்டத்தரணி கலாபூஷணம் A.C.M.இப்றாஹீம் அவர்கள் எழுதிய 19 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு இது. மத்திய கிழக்கின் வேலைக்காரி, பொன்நகையை வென்ற புன்னகை, முடிவில்லாத சோதனைகள், மனச்சாட்சி, தீர்ப்பு, அடைய முடியாத இலக்கு, திசை மாறிய மாடப்புறா, எட்டாக்கனி, உணர்வுகள் உறங்குவ தில்லை, உடைந்துபோன ஏணி, வைராக்கியம், நன்றியுள்ள நல்ல மனிதர்கள், கலைந்து சென்ற கனவு, பொறுப்புணர்ச்சி, பிரயத்தனம், மக்காப் பயணம், பொத்தானை வயல், துறவு, தூரத்துச் சொந்தம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. ஆசிரியரின் நிஜ வாழ்க்கையில் தன்னைக் குறுக்கறுத்துச் சென்ற சம்பவங்களும் நிகழ்வுகளுமே கற்பனை கலந்து இக்கதைகளில் சொல்லப் பட்டுள்ளன. அரச சேவைகளில் தான் அனுபவித்த கசப்பான சம்பவங்களும், சமூக அமைப்பில் காணப்பட்ட கலாச்சாரப் பிறழ்வுகளின் பிரதிபலிப்புகளும், இன்றைய நவீனகாலச் சமூக அமைப்புகளில் காணப்பட்ட குளறுபடிகளும் குத்துவெட்டுக்களும், பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் நிலவும் ஊழல்களும் உணர்வுகளின் அத்துமீறல்களும் இதிலுள்ள கதைகளின் பேசுபொருளாகியுள்ளன. ஏ.சீ.எம். இப்றாஹீம் இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திர சேவையில் இணைந்து, சீனக்குடியரசின் தலைநகரிலும், தாய்லாந்து, சவூதி அரேபியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் சேவையாற்றியவர். இது இவரது நான்காவது நூலாகும்.

## 14712

**போர்க்குணம் கொண்ட ஆடுகள் (சிறுகதைகள்).** ஜிஃப்ரி ஹாஸன் (இயற்பெயர்: ஏ.எச்.எம். ஜிஃப்ரி). வாழைச்சேனை 05: எதிர்ச்சொல் வெளியீட்டகம்,

கே.கே.வீதி, 1வது பதிப்பு, மே 2018. (அச்சக விபரம் தரப்படவில்லை).

84 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-43206-1-1.

இந்நூலில் ஜிஃப்ரி ஹாஸன் எழுதிய மீதமிருக்கும் கனவு, வேலை இல்லாப் பட்டதாரி, மே புதுன்கே தேசய (இது பௌத்தரின் தேசம்), கம்யூனிஸ்ட், கணக்கு வாத்தியார், நினைவின் மரணம், சலீம் மச்சி, மண்வாசகம், போர்க்குணம் கொண்ட ஆடுகள், இரண்டு கரைகள் ஆகிய பத்து சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. ஆசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். ஜிஃப்ரி ஹாஸன் 1983இல் வாழைச்சேனை பாலைநகர் கிராமத்தில் பிறந்தவர். பெற்றோர் அபுல் ஹஸன், ஆமினா உம்மா தம்பதியர். பாலைநகர் ஜிஃப்ரி என்ற பெயரில் ஆரம்பத்தில் கவிதைகளை எழுதத் தொடங்கியவர். பின்னர் சிறுகதைகள், விமர்சனங்கள், இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் எனத் தன் எழுத்துப் பணியை விரிவாக்கியவர். சபரகமுவ பல்கலைக்கழகத்திலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்திலும் பட்டம் பெற்ற இவர் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். ஏற்கெனவே அரசியல் பௌத்தம் என்ற கட்டுரை நூலையும், விலங்கிடப்பட்ட நாட்கள் என்ற கவிதைத் தொகுதியையும், மூன்றாம் பாலினத்தின் நடனம் என்ற மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார்.

### 14713

**மலைமகள் கதைகள்.** மலைமகள். சென்னை 600024: வடலி வெளியீடு, F-1, ஸ்ரீவாரி பிளாட்ஸ், 8A, அழகிரி நகர் 4வது குறுக்குத் தெரு, லட்சுமிபுரம், வடபழனி, 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).

103 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 21x13.5 சமீ., ISBN: 978-0-9919755-5-6.

பதினைந்து கதைகள் அடங்கிய இத்தொகுதி பல தளங்களில் முக்கியமானது. அவர் எழுதிய விலை, எதுவரை, ஒரு கோப்பை தேநீர், முறுங்கையை விட்டு இறங்காதவர்கள், புதிய கதைகள், பயணம், அங்கோர் காட்டிடைப் பொந்திலே, யாரோ யார் இவர் யாரோ?, யார் உன்னை அழைத்தார், கதவுகள் திறந்துதான் உள்ளன, எனது மனிதர்கள்-1, எனது மனிதர்கள்-2, அனுமதி, முற்றுகை, இறுதி வணக்கம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பெற்றவை. திரும்பிப் பார்த்தல் என்பதற்ற போர்க்களத்தில் உரிய வேளையில் துப்பாக்கி ஒரு கணம் தாமதித்தாலும் தம் உயிர் மௌனித்துவிடும் ஆபத்து நிறைந்ததான களங்களில் இந்தப் பெண்கள் எவ்வளவு லாவகமாக "எதிரியை" எதிர்கொண்டார்கள், உயிரைத் துச்சமென மதித்து தாம் நம்பிய விடுதலைக்காகப் போராடினார்கள், கூடவே "வெளியில்" மரபான சமூகத்தால் மலரிலும் மென்மையானதென அணுகப்பட்ட உடல் உறுப்புகள் எவ்வாறு தமக்கான மரபான பணிகளை மீறி "வழமை"யை உடைத்து இயங்கின என்பதைக் காப்பரண்களும் வேலிகளும் போட்ட காந்தள் விரல்களால் எழுதிச் செல்கிறார் மலைமகள். இந்நூலின் பின்னிணைப்புகளாக, காலத்தின் சாட்சி-முதலாவது பதிப்பிற்கான தாமரைச்செல்வியின் முன்னுரை, புதையல் -

*என்ற தலைப்பில் ஆ.உலகமங்கை எழுதிய முதலாம் பதிப்பிற்கான பதிப்புரை, சொல்லாத செய்திகள் - என்ற தலைப்பில் மலைமகள் முதற்பதிப்பிற்கு எழுதிய பின்னுரை ஆகியன இடம்பெற்றுள்ளன. மலைமகள் தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பின் மாலதி படையணியில் 2ஆம் லெப்டினன்ட் தரப் போராளியாவார். இந்நூலின் முதற் பதிப்பு, கப்டன் வானதி வெளியீட்டகத்தினால், கிளிநொச்சியிலிருந்து 2004இல் வெளியிடப்பட்டிருந்தது.*

## 14714

**மனுஷ்யா**. *முகில்வண்ணன். (இயற்பெயர்: வேலுப்பிள்ளை சண்முகநாதன்). கல்முனை: கண்மணி பிரசுரம், நெசவுநிலைய வீதி, பாண்டிருப்பு-01, 1வது பதிப்பு, மார்கழி 2017. (தெகிவளை: ஏ.ஜே.பதிப்பகம்).*

x, *11-108 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20*x*14.5 சமீ.,* ISBN*: 978-955-38729-2-0.*

*இது பாண்டிருப்பைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பொறியியலாளரான முகில்வண்ணன் எழுதிய பன்னிரு சிறுகதைகளின் தொகுப்பாகும். இதில் தமிழ்- சிங்கள கதாபாத்திரங்கள் உலாவும் கதைகளான மனுஷ்யா, இன்பத்தைத் தேடி, கருணா, இறைவன் போட்ட முடிச்சு, எனக்கென்ன?, நங்கீ, நான் மலடியா?, ஏ டாக்சி, சித்திரை பிறந்தது, அப்பா இல்ல சார், மிஸ் மாலா, உயிர் இருக்கும் வரை ஆகியவை இடம்பெற்றுள்ளன. இதில் உள்ள "நங்கீ" சிறுகதையே ஆசிரியர் எழுதிய முதலாவது சிறுகதையாகும்.*

## 14715

**மானுடம் தோற்றிடுமோ?**. *எஸ்.கருணானந்தராஜா. சென்னை 600 017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, 7(ப.எண் 4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2019. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆஃப்செட்).*

xii*, 180 பக்கம், விலை: இந்திய ரூபா 100.00, அளவு: 18*x*13 சமீ.,* ISBN*: 978-93-86031-82-2.*

*மானுடம் தோற்றிடுமோ? துணையானாள், நீலநிற வான்கடிதம், சாகாத ராசு, தொல்லைபேசி, வீட்டுக்கு வீடு, அண்ணாவும் அக்காவும், காதலி சீமா, யார் செய்த குற்றம்? ஐயோ எங்கள் மகள், சங்கரி ஆகிய தலைப்புகளில் எழுதப்பெற்ற 11 சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இவை வீரகேசரி, ஞானம், ஒரு பேப்பர், உதயசூரியன், மாணவர் உதவி மைய வெளியீடுகள், காற்றுவெளி, யாழ்.கொம், பிரதிலிபி ஆகிய ஊடகங்களில் வெளிவந்திருந்தன. "யுகசாரதி" என்ற கவிஞனாக அடையாளம் பெற்றிருந்த இப்படைப்பாளியின் முதலாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். மட்டக்களப்பில் பிறந்து வளர்ந்து தற்போது பிரித்தானியாவில் குடும்பத்தினருடன் வாழ்ந்து வருகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64858).*

### 14716

**மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம் (கதைகள்).** *யதார்த்தன் (இயற்பெயர்: பிரதீப் குணரத்னம்). பிரான்ஸ்: ஆக்காட்டி,* 63, Rue de Lisbonne, *77550* Moissy-Cramayel, *1வது பதிப்பு, ஜுலை 2017. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).*

*134 பக்கம், தகடுகள், விலை: ரூபா 300., அளவு: 22*x*15 சமீ.,* ISBN: *978-955-7481-00-5.*

*இலங்கைப்பூச்சி, கோழிக்கால் பட்டியின் கடைசிப் பசுமாடு, தீட்டுத்துணி, கோலியாத், லெப்ரினன்ட் கேணல் இயற்கை, மிளகாய்ச் செடி, மக்ரலின் அறுபதாயிரம் புறாக்கள், மரநாய், மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம், இறைச்சி, வோண்டர் கோன் ஆகிய பதினொரு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. யுத்தத்தின் போதும் யுத்தத்தின் முடிவுக்குப் பின்பும் உள்ள மக்களின் மனநிலையில் உறைந்திருக்கும் கீழ்மையையும் அன்பையும் சொல்வதாக இக்கதைகள் அமைகின்றன. அனைத்துக் கதைகளின் நிகழ்களங்களும், அங்கிருக்கும் கதைமாந்தர்களும் கதைசொல்லிக்கு நெருக்கமானவரக்களாகவே தோற்றம்பெறுகின்றனர். வெவ்வேறு கதைபிரதித் துண்டுகளை இணைக்கும், கோர்க்கும் மையச் சரடாகவே கதைசொல்லி இருக்கிறார். இது தொண்ணூறு களுக்குப்பின் பிறந்து தன் பதின்ம வயது இறுதிவரை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வாழ்ந்த அனுபவங்களுடன் எழுத ஆரம்பித்த தலைமுறையைச் சேர்ந்த யதார்த்தனின் முதலாவது சிறுகதைத் தொகுப்பு. இறுதி யுத்தத்தின் விளிம்புவரை சென்று மீண்டு முகாம் வாழ்க்கையைக் கழித்து, தற்போது பல்கலைக்கழக மாணவராக இவர் இருக்கிறார். இணைய வெளியில் எழுத ஆரம்பித்து, இலங்கை சிற்றிதழ் சூழலுக்குள் வந்த இவர், ஆரம்பத்தில் கவிதைத்துறையில் ஈடுபாடு கொண்டு பின்னர் கதைகள் எழுதுவதில் தன் படைப்புலக விரிவாக்கத்தைக் கண்டவர்.*

### 14717

**மொட்டப்பனையும் முகமாலைக்காத்தும்.** *சர்மிலா வினோதினி. வவுனியா: பூவரசி வெளியீடு, 371, மதவடி ஒழுங்கை, மன்னார் வீதி, வேப்பங்குளம், 1வது பதிப்பு, டிசம்பர் 2018. (வவுனியா: பூவரசி வெளியீடு, மன்னார் வீதி, வேப்பங்குளம்).*

*108 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *978-624-5018-00-0.*

*சர்மிலா திருநாவுக்கரசு என்ற இயற்பெயர் கொண்ட சர்மிலா வினோதினி கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தில் உள்ள வேரவில்லை பிறப் பிடமாகக் கொண்டவர். மன்னாரை வசிப்பிடமாகக் கொண்ட இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல் சிறப்புப் பட்டதாரியாவார். சமூக உளவியலும் ஆற்றுப்படுத்தலும், ஊடகத் தொடர்பாடலும் அறிவிப்புத்துறை சார் நுட்பங்களும் ஆகிய துறைகளில் பட்டய நெறிகளையும் நிறைவு செய்துள்ளார். கவிதை, சிறுகதை, நாடகம், மேடைப்பேச்சு போன்ற துறைகளில் தேசிய ரீதியில் வெற்றிகளையும் ஈட்டியுள்ளார். "இராப்பாடிகளின் நாட்குறிப்பு" என்ற கவிதைத்*

தொகுப்பினை 2016இல் வெளியிட்டவர். இச்சிறுகதைத் தொகுதியில் இவர் எழுதிய வலசை, நெருடல், செந்தாமரை, நீங்க போங்க ராசா, நீர்க்குமிழி, போயிற்று வாறன், புதுச் சப்பாத்து, உப்புக்காற்றில் உலரும் கண்ணீர், பூக்களைத் தொலைத்த பூந்தொட்டி, ஆகிய பத்துக் கதைகள் உள்ளன. ஒவ்வொரு கதையும் போரியல் வாழ்வின் அச்சங்களையும், கண்ணீரையும், இழப்புகளையும் இயலாமைகளையுமே சொல்கின்றன. காதலாக இருந்தாலும், இல்வாழ்வாக இருந்தாலும் போரும் காதலும், போரும் இல்வாழ்வும் என்றே உணர முடிகின்றது.

## 14718

**மௌன வலிகளின் வாக்குமூலம்.** சமூக சிற்பிகள் (மூலம்), சர்மிளா சுப்பிரமணியம் (தமிழாக்கம்), கௌரி அனந்தன் (தொகுப்பாசிரியர்). ராஜகிரிய: சமூகச் சிற்பிகள், The Social Architects, 1003/4, Park Lane, 1வது பதிப்பு, மே 2017. (கொழும்பு 13: Crescerdoo Link, 426/11, J 4/5, K Cyril C Perera Mawathe).

x, 242 பக்கம், விலை: ரூபா 350.,அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-7435-00-8.

இந்தக் கதைகளில் வரும் சம்பவங்களும் கதை மாந்தர்களும் நிஜத்தைப் பிரதி பலிப்பவை. வரலாற்றை ஆவணப்படுத்தும் நோக்கில் உண்மைக் கதாபாத்திரங்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் போர்ச் சூழலுக்குள் வாழத்தலைப்பட்ட இளைஞர்களின் 21 கதைகள் இதில் இடம்பெறுகின்றன. தமிழ் சிங்கள முஸ்லிம் இளைஞர்களின் கூட்டு முயற்சியாக இத்தொகுப்பிலுள்ள கதைகள் அமைந்துள்ளன. யாழ்ப்பாணம் ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலை (ஜெயப்பிரசாந்தி ஜெயபாலசேகரம், யாழ்ப்பாணம்), நான் இன்னும் உன்னைத் தேடுகிறேன் (லக்மாலி கௌசல்யா பஸ்நாயக்க, கெப்பித்திகொல்லாவ), ஆர்.டீ.ஓ.காக்கா (ஐ.எல்.ரிப்நாஸ், ஒலுவில்), அமுதாவாகிய நான் (அமுதமலர் செல்வராசா, கிளிநொச்சி), புழுதி குமார (எஸ். சிசிர குமார, கெப்பித்திக்கொல்லாவ), மரணங்கள் மலிந்த பூமி (தட்சணாமூர்த்தி லிசாலினி, அக்கரைப்பற்று), சோனகத் தெரு (பிரதௌவுஸ் மொஹமட் பஸாரத், யாழ்ப்பாணம்), வெற்றியின் நினைவுச் சின்னம் (தங்கராசா அஜந்தன், பெரிய பரந்தன்), சலிம் முதலாளி எங்கே? (முஹம்மது ஹசைன் முகம்மது சியான், சாய்ந்தமருது), கறை படிந்த சட்டைப் பை (மரினா மரியநாயகம், பளை), குருவிக்கூடு (பெனடிக் ஸ்ரீபன்), வீடு நோக்கிய பயணம் (துஸ், தினு, கேதி, கண்டாவளை), கால்நடைகளாக புத்தளம் நோக்கி (நைனா முஹமட் அப்துல்லாஹ், யாழ்ப்பாணம்), வயல்மீது கவிந்த போர்க்கால மேகங்கள் (அருளானந்தராஜா நவேந்திரராஜா, திருக்கோவில்), சந்தேகத்தின் பேரில் (நஜிமுடீன் மொஹமட் நிப்ராஸ், மொஹமட் ரில்வான் ரில்சான், யாழ்ப்பாணம்), பூனைகள் ஒருபோதும் புலியாகாது (வரதராசா நவநீதன், வட்டுக்கோட்டை), உயிர்காத்த பலிபீடங்கள் (காளிதாசன் சனுஜன், காரைதீவு-1), குண்டு துளைத்த தரப்பாள் கூரைகள் (யோகவதனி குணபாலசிங்கம், பிரமந்தனாறு, கிளிநொச்சி), அழியாத ரணங்கள் (கந்தையா மகேந்திரன், டிக்கோயா), குருதியில் நனைந்த வெண்கொடிகள் (சமூக சிற்பி), துறவியுடன் ஒரு சந்திப்பு (கிறிசாந்தி ராஜகருண) ஆகிய சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

### 14719

**வந்தனா**. நீர்வை பொன்னையன். கொழும்பு 6: இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றம், 18, 6/1, கொலிங்வுட் பிளேஸ், 1வது பதிப்பு, மார்ச் 2019. (கொழும்பு 6: R.S.T. என்டர்பிரைசஸ், 114, W.A.சில்வா மாவத்தை).

110 பக்கம், விலை: ரூபா 275., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-1810-30-6.

1947இல் தன் அரசியல் பயணத்தைத் தொடங்கிய நீர்வை பொன்னையன், 1957இலிருந்து இலக்கியப் பயணத்தைத் தொடர்ந்தவர். குறிப்பாக இவரது சிறுகதை இலக்கியங்களே இவரை இலக்கிய உலகில் முதலில் அறிமுகப்படுத்தின. 1957 முதல் 2019 வரை 122 சிறுகதைகளை எழுதியுள்ள இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி "மேடும் பள்ளமும்"என்ற பெயரில் 1961இல் வெளிவந்தது. "வந்தனா" என்ற இத்தொகுதிவரை இவர் 11 சிறுகதைத் தொகுதிகளை எமக்கு வழங்கியுள்ளார். இத்தொகுதியில் வீம்பு, மன்னிப்பு, வந்தனா, மனச்சரிவு, பசி, சொத்து, கண்ணகி, பிணைப்பு, சாயல், நிர்மூலம், தற்குறி, சோதினை, சவால், ஐயாயிரம் ஆகிய 14 கதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64869).

### 14720

**வப்பு நாய்: சிறுகதைகள், குறுநாவல் தொகுதி**. இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Tyristubbveien 77, 0687 Oslo, 1வது பதிப்பு ஜுலை 2016. (மின் நூல் வடிவமைப்பு lulu.com சுய வெளியீடு உதவி).

212 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-1-326-72713-0.

அல்லல், அகப்பைக்காம்பு, காதல், எங்கள் நீதி, அம்மா, வானத்தால் குதிக்கும் வடலிகள், கிறிஸ் பூதம், இரதி அக்கா, புதிய ஆத்மாக்கள், தாரணி, ஊத்தொய்யா, புகையின் பின், மீள்வு, வளையா முதுகுகள், வப்பு நாய், இனி எந்தக் காடு, கர்ண வேஷம், அநித்தியம், சீதாயனம்,அவன், இயற்கைக்கு, பிரம்ம ஞானம் ஆகிய 22 சிறுகதைகளையும் பனி தேசத்தில் என்ற குறுநாவலையும் உள்ளடக்கிய தொகுப்பு. பனி தேசத்தில்- குறுநாவல், தொடக்கம், புதிய நண்பர்கள், சுகன்யா, பழக்கமும் நெருக்கமும், மனவோட்டம், புதிய வாழ்க்கை, உறைந்து கிடக்கும் உண்மை, தாவும் மனசு, இரங்கனும் இரதியும், புதிய சிக்கல், இலண்டனும் இரதியும், உண்மை உறைத்தது ஆகிய பன்னிரு அத்தியாயங்களில் விரிந்துள்ளது.

### 14721

**வாழ்தல் மீதான வன்முறைகள்: சிறுகதைகள்**. காத்தநகர் முகைதீன் சாலி. கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2010. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

viii, 09-80 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 23x15 சமீ., ISBN: 978-955-30-2957-7.

வாத்தியார், பேரீத்தம்பழம், வெட்டியான், மஹ்ஜபீன், ஆயிரம் ரூபாவும் அரிசி பேக்கும், வாக்குமூலம், புனிதத் தெருக்களில் வன்முறை பயிரிட்டு, வாழ்தல் மீதான வன்முறைகள், புளியங்குளத்து வேப்பமரம், மெழுகுவர்த்தி அணைகிறது, பன் பாயும் வேப்பமரமும், மாப்புள்ள விற்கப் போறம் ஆகிய பன்னிரு சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. 2011ம் ஆண்டு கொடகே தேசிய சாகித்திய விருது வழங்கும் நிகழ்வில் இந்நூலுக்கு 2011ம் ஆண்டுக்கான திறமையான இளம் எழுத்தாளருக்கான கொடகே தேசிய சாகித்திய விருது கிடைக்கப்பெற்றுள்ளது.

## 14722

**வானம்பாடி: போர்க்கால வாழ்வியல் பதிவுகள்-பகுதி 02.** வெற்றிச்செல்வி (தொகுப்பாசிரியர்). மன்னார்: குருவி வெளியீட்டகம், மாற்றுத்திறனாளி மாதர்களின் அமைப்பு, Women's Organisation Working on Disability, WOWD, 1வது பதிப்பு, ஜுன் 2019. (யாழ்ப்பாணம்: எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).

x, 184 பக்கம், விலை:ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-624-5121-00-7.

இந்நூலில் தடுப்பு முகாமில் அவளைக் கண்டேன் (சந்தனா), மலரும் நினைவுகள் (திருச்செல்வி, வெற்றிச்செல்வி), கனியனுடனான காதல் (பிரபா அன்பு), பிரிவின் வலிகள் (சுகந்தி, வெற்றிச்செல்வி), வாழவைக்கும் நினைவுகள் (வெற்றிச்செல்வி), தாய்நாட்டின் பாசமும் தமக்கையின் நேசமும் (ஜெனா), துயரங்களை வென்ற நம்பிக்கை (அகமொழி), தண்ணி தண்ணி (பெனடிக்ரா), நினைவுகள் தொடரும் (கமலம்), ஆனந்தபுரம் (கீர்த்தி, வெற்றிச்செல்வி), புதையா நினைவுகள் (அரவி), விக்கினாக்கா (சுதா, வெற்றிச்செல்வி) ஆகிய பன்னிரு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றை சிறுகதைகள் என்பதைவிட பன்னிரு மாற்றுத் திறனாளிச் சகோதரிகளின் சொந்த அனுபவங்களாகவும் மனதில் பொதித்து வைத்த வீரியம்மிக்க உண்மைகளாகவும் கொள்ளலாம். தாயக விடுதலை என்ற இலக்கை அடைவதற்காக இவர்களிடம் இருந்த அர்ப்பணிப்பையும் தியாக சிந்தையையும் நாம் தொடர்ந்து முன்னெடுத்தால் இந்த இயந்திர வாழ்விலிருந்து சக வாழ்விற்கு மீளலாம் என்ற பாடத்தை ஏனையோருக்கும் கற்பிக்கின்றன.

## 14723

**விடியலின் விழுதுகள்.** ஸக்கிய்யா ஸித்தீக் பரீத். மாவனல்லை: எக்மி பதிப்பகம், 19, கமந்தெனிய வீதி, கிரிங்கதெனிய, 1வது பதிப்பு, ஜுலை 2010. (மாவனல்லை: எம்.ஜே.எம். பிரின்டர்ஸ், 119, பிரதான வீதி).

xviii, 122 பக்கம், விலை: ரூபா 175.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-98766-1-8.

இத்தொகுதியில் திருப்பம், மங்காவடு, காலத்தின் கோலம், கண்ணீர் எழுப்பிகள், இறைத் தீர்ப்பு, திசை மாறிய பறவை, நிரபராதிகள், கோக்கி யார்?, மின்னும் தாரகை, இணங்கிப் போ மகளே, இலவு காத்த கிளி, முக்காட்டினுள் மாமி, நியதி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பதின்மூன்று சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. மாவனல்லை தெல்கஹகொடையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு

தெகிவளையை வாழ்விடமாகவும் கொண்டவர் ஸக்கிய்யா ஸித்தீக் பரீத். இவர் தனது ஆரம்பக் கல்வியை தெல்கஹகொடை முஸ்லிம் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை உயன்வத்தை நூராணியா முஸ்லிம் மகா வித்தியாலயத்திலும் பெற்றுக்கொண்டவர். அப்பாடசாலையில் கையெழுத்துப் பிரதியாக வெளிவந்த “தேனருவி” இதழில் தனது கன்னிப் படைப்புக்களை தவழவிட்டவர். ஆசிரியராகப் பணியாற்றும் வேளையிலேயே பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பையும் முடித்தவர். தற்போது ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வுபெற்றபின் முழுநேர எழுத்துப் பணியிலும் சமூகப்பணியிலும் ஈடுபட்டு வருகிறார்.

## 14724

**விடைபெறல்.** தெல்லிப்பழையூர் சிதம்பரபாரதி (இயற்பெயர்: சிதம்பரபாரதி திருச்செந்திநாதன்). யாழ்ப்பாணம்: எழு வெளியீட்டகம், எழு கலை இலக்கியப் பேரவை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2019. (யாழ்ப்பாணம்: புதிய எவகிரீன் அச்சகம்).

x, 46 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

எம்மத்தியில் வாழ்ந்து மறைந்த மூத்த எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்களின் ஓராண்டு நினைவுகளுக்காக 15.10.2019இல் அவரது புதல்வி தெல்லியூர் சிதம்பரபாரதியினது உணர்வுகளின் தொகுதியான விடைபெறல் வெளியிடப்பட்டுள்ளது. தந்தையாரின் நூல் தோட்டத்துள் உலவியும் இலக்கிய உரையாடல்களை செவிமடுத்தும் பெற்ற அறிதலோடும் தனக்கான சமூக, குடும்ப உறவுநிலையோடும் தன்னைப் பாதித்த அல்லது அருட்டிய உணர்வுகளைத் தொகுத்துள்ளார். இது அவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு. மீண்டெழுவேன் எனும் அசையாத நம்பிக்கையில் தனது மருத்துவமனை வாழ்வைப் பதிவுசெய்யும் அவாவுடன் இருந்து மறைந்த தந்தை கூற நினைத்த கதை: அது அவரது இவ்வுலக வாழ்வின் விடைபெறுதலாகிப் போன நிலையில் அவரது வழியில் மகள் பேனா எடுத்து முதலடி வைத்துள்ளார்.

## 14725

**விபச்சாரி 80 ரூபாய்.** யாழ். தர்மினி பத்மநாதன். சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 20/2, சக்காரியா காலனி, முதலாவது தெரு, சூளைமேடு, 2வது பதிப்பு, ஜனவரி 2016, 1வது பதிப்பு, ஜனவரி 2015. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 20/2, சக்காரியா காலனி, முதலாவது தெரு, சூளைமேடு).

80 பக்கம், விலை: இந்திய ரூபா 100.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-81322-40-6.

இந்நூலில் விபச்சாரி எண்பது ரூபாய், வாடகை வீடு, வித்தகி, பட்டாம்பூச்சி, தந்தையின் தாலாட்டு, முக்கோணத் தலைநரகங்கள் ஆகிய சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. போரில் மனைவியை இழந்த கணவன், கணவனையும் தந்தையையும் இழந்த பெண் மற்றும் அம்மாவை பார்க்காத பிள்ளை என்று ஒட்டுமொத்த

ஈழத்து மக்களின் ஒருமித்த பிரதிபலிப்பாக இக்கதைகளை யாழ். தர்மினி பத்மநாதன் எழுதியுள்ளார். ஈழத் தமிழர்களின் ஆசைகள் எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்கள் போரினால் அவர்கள் இழந்த வாழ்க்கை என நம்மை வேதனையுடன் கரைய வைக்கின்றது. எல்லாவற்றிக்கும் மேலாக தாய் நாடான தமிழ் நாட்டிலேயே அவர்களை அகதிகள் என்று அடையாளபடுத்துவது எவ்வளவு பெரிய குற்றமென்பதை கன்னத்தில் அறைந்து உணர்த்துகிறது.

## 14726

**வெட்டிய வேரில் ஒரு முளை: சிறுகதைகள்.** மருதமைந்தன் (இயற்பெயர்: M.S.S. ஹமீட்). காத்தான்குடி-02: M.S.S. ஹமீட், 128/7, பிரதான வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2010. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

viii, 114 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x16 சமீ., ISBN: 978-955-52293-1-9.

சமூகத்தில் காணப்படும் விருப்பத்துக்குரியவை, விரும்பத் தகாதவை, உயர்வு, உறுத்தல், தலைகுனிவு, அருவருக்கத்தக்கவை, போன்றன ஏற்படுத்திய தாக்கங்கள் சிறுகதைகளாக முளைகொண்டுள்ளன. சமூக விழுமியங்களை நிலைநிறுத்தி அவற்றின் மூலம் சமூக மேம்பாட்டைக் காணவேண்டும் என்ற ஆதங்கத்தினை இக்கதைகள் மூலம் ஏற்படுத்துகின்றார். மனிதம், தூரம் சென்ற உறவு, முறைச் செலவு, கபளீகரம், சிவப்புக்கோடு, அக்கினிச் சக்கரம், நெஞ்சிற் பட்ட உதை, கறந்த பால், மெத்தைப் பள்ளி பீரங்கி, மறுபாதிப் பொறிகள், கறுப்பும் ஒரு நிறம் தானே?, வெட்டிய வேரில் ஒரு முளை, இருளில் தேடிய விடியல், நச்சு மனங்கள், வந்ததும் வந்தான் ஆகிய கதைகள் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

## 14727

**வெளிச்சம்: இலங்கேஷின் சிறுகதைகள்.** இலங்கேஷ் (மூலம்), பூனாகலை அருள்கார்க்கி (இயற்பெயர்: இராஜேந்திரன் டேவிட் அருளானந்தன், தொகுப்பாசிரியர்). பண்டாரவளை: மாரிமுத்து ஜோதிகுமார், பொருளாளர், ஊவா-தமிழ் இலக்கியப் பேரவை, 1வது பதிப்பு, ஜனவரி 2016. (பண்டாரவளை: W.A.S. பிரின்டர்ஸ், 20/14, சேனநாயக்க மாவத்தை).

80 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-42917-0-6.

இந்நூலில் இலங்கேஷின் பரிசுபெற்ற படைப்புக்கள் உள்ளிட்ட ஒன்பது சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. "இல்லையென்பதில்லை" (1996ஆம் ஆண்டு கண்டி-அகிலம் சஞ்சிகை நடத்திய போட்டியில் முதற்பரிசு பெற்றது), "மக்கள் சேவையே" (2001ஆம் ஆண்டு ஊவா மாகாண தமிழ் சாகித்திய விழாவில் இரண்டாம் பரிசு பெற்ற கதை), "வெளிச்சம்" (1994ஆம் ஆண்டு ஊவா மாகாண தமிழ் சாகித்திய விழாவில் முதலாம் பரிசு பெற்றது), "முடிச்சு" (1999ஆம் ஆண்டு பதுளை கலை இலக்கிய வட்டம் நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்றது), "பேதமில்லா நெஞ்சங்கள்" (1995ஆம் ஆண்டு மாத்தறை மக்கள் சமாதான இலக்கிய மன்றம் நடத்திய போட்டியில் முதலாம் பரிசு பெற்ற சிறுகதை), "மனித நேயம்" (1994ஆம் ஆண்டு ஊவா சமூக அபிவிருத்தி நிலையம்

USCOD *நடத்திய இலக்கியப் போட்டியில் முதலாவது பரிசு பெற்ற கதை), "மாயை" (1997ஆம் ஆண்டு பதுளை கலை இலக்கிய வட்டத்தின் மூன்றாவது பரிசுபெற்ற கதை), "தெரிந்தம் தெரியாததும்", "தாத்தாவும் ஒரு போராளியே" (25.11.2015 அன்று ஞாயிறு வீரகேசரியில் பிரசுரமான கதை) ஆகிய ஒன்பது சிறுகதைகளே இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

**14728**

**ஜீவநதி சிறுகதைகள் தொகுதி 1**. *கலாமணி பரணீதரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2011. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).*

*216 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 23x15 சமீ.,* ISBN: *978-955-30-3148-8.*

*இத்தொகுப்பில் காணி நிலத்திடையே (யோகேஸ்வரி சிவப்பிரகாசம்), தாய்மாமன் (தெணியான்), பாண் போறணை (கே.ஆர்.டேவிட்), காலிழப்பும் பின்பும் (குந்தவை), கருமுகில் மூடாத வானம் (செங்கை ஆழியான்), நிழல் கொஞ்சம் தா (பவானி சிவகுமாரன்), பேரிளமை (க.சட்டநாதன்), கசிவு (த.கலாமணி), தாய்மை (எம்.எஸ்.அமானுல்லா), குடை (சந்திரகாந்தா முருகானந்தன்), சிதைவுகள் (ப.ஆப்டீன்), பள்ளிவாசலும் பத்து ரூபாவும் (திக்குவல்லை கமால்), கனவாய் கானலாய் (புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்), கெடுபிடி (தாட்சாயணி), குழந்தைகள் உலகம் (ச.முருகானந்தன்), வெள்ளைப் புறா (க.நவம்), சமூக மேம்படுத்துநர்கள் (அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின்), சப்பைக்கட்டு (இ.இராஜேஸ்கண்ணன்), கறுப்பும் வெள்ளையும் (கெக்கிறாவ ஸஹானா), வண்ணக்குளம் (அன்புமணி), ஆர்கொலோ (அ.விஷ்ணுவர்த்தினி), தவிப்பு (மு.அநாதரட்சகன்), மீண்டும் துளிர்ப்போம் (க.பரணீதரன்), சுபியானின் சாகசங்கள் (அஷ்ரஃப் சிஹாப்தீன்), உதயம் (கார்த்திகாயினி சுபேஷ்) ஆகிய 25 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன.*

## 894.8(41) மொழிபெயர்ப்புச் சிறுகதைகள்

**14729**

**கைக்குட்டை: சிறுகதைகள்.** *டபிள்யூ. ஏ.சில்வா (சிங்கள மூலம்), திக்குவல்லை கமால் (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2015. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).*

*(8), 9-144 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x14 சமீ.,* ISBN: *978-955-30-6537-7.*

*சிங்கள இலக்கியத்துறையில் முன்னோடிப் படைப்பாளிகளுள் ஒருவர் டபிள்யூ. ஏ.சில்வா. வெள்ளவத்தையில் மத்தியதரக் குடும்பமொன்றில் பிறந்த இவர் 1890-1957 வரையிலான தன் வாழ்நாளில் 50 ஆண்டுகளை சிங்கள இலக்கியத்திற்கு*

அர்ப்பணித்து மறைந்தவர். 1907இல் தனது 17ஆவது வயதில் தனது முதலாவது நாவலை (சிரியலதா) எழுதிப் பிரமிப்புக்குள்ளாக்கியவர். சிங்களம், பாளி, சம்ஸ்கிருதம் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அவர் கொண்ட பரிச்சயம் பலரும் அறிந்தது. இவரது "கெலே ஹந்த" நாவல் சிங்களத் திரைப்படமாக்கப்பட்டிருந்தது. சிங்கள சினிமாவில் முதன்முறையாக நாவல் ஒன்று திரைப்படமானதென்ற வரலாற்றுப் பதிவு "கெலே ஹந்த" அவரது நாவலுக்கே உரியது. "கைக்குட்டை" என்ற இந்நூலில் டபிள்யூ. ஏ.சில்வா எழுதிய 11 சிறுகதைகள் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. பேயின் கடிதம், பழக்கதோஷம், சுவர்க்கம், பரிசு, வைடூரியம், அமங்சிரால, நோன்மதி தினம், கைக்குட்டை, மாமாவின் விருப்பம், தலையணை உறை, முகராசி ஆகிய தலைப்பகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65495).

## 14730

**பாலம்: குணசேன விதானேகே அவர்களின் வாழ்வியலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளும்.** குணசேன விதானகே (சிங்கள மூலம்), மடுளுகிரியே விஜேரத்ன (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661/665/675 பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2013. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(21), 22-92 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-30-4397-9.

குணசேன விதானகே எழுதிய பாலம், என் மகனின் கதை, ஆடு பிடித்தல், மானுடத்திற்கு குண்டு, தெய்வமே ஆகிய ஐந்து சிங்களச் சிறுகதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. "குணசேன விதானகேயின் வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும்" என்ற தலைப்பில் மடுளுகிரியே விஜேரத்ன அவர்கள் எழுதிய கட்டுரையும் இடம்பெற்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65510).

## 14731

**வானம்பாடியும் ரோஜாவும்.** கெக்கிறாவ ஸுலைஹா. கெகிறாவ: கெக்கிறாவ ஸுலைஹா, 32/21, செக்குபிட்டிய தெற்கு, செக்குபிட்டிய, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2014. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xi, (3), 78 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-53263-2-2.

அம்ரிதா ப்ரிதம் எழுதிய "மண்ணெண்ணெய் நெடி", ஆர்.கே.நாராயணன் எழுதிய "அந்த இருப்பிடம்", ஏர்னஸ்ட் ஹெமிங்வே எழுதிய "மழையில் நனைந்த பூனை", என்டன் செக்கோவ் எழுதிய "தும்மல்", என்டன் செக்கோவ் எழுதிய "அந்த வளைந்த கண்ணாடி", ப்ரேம்சந்த் எழுதிய "தாகூரின் கிணறு", ஜேம்ஸ் ஜொய்ஸ் எழுதிய "ஈவ்லின்", கேட் வோல்கர் எழுதிய "காதற் கடிதங்கள்", ஒஸ்கார் வைல்ட்

எழுதிய "வானம்பாடியும் ரோஜாவும்", வில்லியம் சோமசெட் மோம் எழுதிய "மச்சத்துடனான அம்மனிதன்" ஆகிய பத்துச் சிறுகதைகள் இந்நூலில் மொழி பெயர்த்துத் தரப்பட்டுள்ளன. பெண்ணுக்குள் மறைந்து நிற்கும் காதலின் தவிப்பும், அவளது சிதைக்கப்பட்ட மனோச் சித்திரங்களும், அறியாமையினால் பெண் விடும் தவறுகளும், ஆக்கிரமிப்பின் பூதக் கரங்களில் நசுங்கிச் சிதையும் அவளது வாழ்வுகளும், அடுத்தவரின் வக்கிரங்களுக்குள் சிதைந்துபோன, தொலைந்துபோன பெண்ணவளின் தன்மான உணர்ச்சிகளும் இக்கதைகளை எம்மவருக்கு மிக நெருக்கமாகக் கொண்டுவருகின்றன.

## 894.8 (5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள்

### 14732

**அபோபிஸ்-2036 (விஞ்ஞான நாவல்).** *எம்.எஸ்.எம். ஜிப்ரி. கொழும்பு 10: எஸ். கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2011. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).*

*(7), 8-56 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-30-3065-8.*

*அபோபிஸ் என்ற இராட்சத விண்கல் (Asteroid Apophis) பற்றிய விடயம் முதலில் 2004ஆம் ஆண்டு மொஸ்கோ விண்ணியல் விஞ்ஞானிகளுக்குத் தெரியவந்துள்ளது. சுமார் 1150 அடி விட்டம் கொண்ட இவ்விண்கல் கி.பி.2029ஆம் ஆண்டு பூமிக்கு சுமார் 3,00,000 கி.மீ. தூரத்தில் வந்து செல்வதோடு கி.பி.2036ஆம் ஆண்டு பூமியில் மோதி பெரும் அநர்த்தத்தையும் உண்டாக்கும் என்று ரஷ்ய விண்வெளி விஞ்ஞானிகளும் அமெரிக்க நாசா விஞ்ஞானிகளும் எதிர்வு கூறியுள்ளனர். இவ்வாறு இந்த விண்கல் பூமியில் மோதும் பட்சத்தில் அந்தப் பிரதேசத்திலுள்ள தாவரங்கள், விலங்குகள், நீர்நிலைகள் முற்றாக அழிவதோடு அப்பிரதேசம் பாலைவனமாகிவிடும் என்றும் அஞ்சப்படுகின்றது. அத்துடன் உலகின் பெரும்பாலான பிரதேசங்களில் பூமியதிர்ச்சியுடன் சுனாமி ஏற்படுவதோடு இலட்சக்கணக்கான மக்களும் உயிரிழக்கும் சாத்தியம் உள்ளதாகவும் கருதப் படுகின்றது. 2036ஆம் ஆண்டளவில் நிகழவிருக்கும் இச்சம்பவத்துடன் பின்னப்பட்டு உலகிலும், விண்ணிலும் ஏற்படும் அரசியல் பொருளாதார, தொழில்நுட்ப, புவியியல் மாற்றங்களையும் கருத்திற்கொண்டு இப்புனைகதை எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65509).*

### 14733

**அமெரிக்கா.** *வ.ந.கிரிதரன். மட்டக்களப்பு: மகுடம் பதிப்பகம், இல. 90, பார் வீதி, 2வது பதிப்பு, மே 2019, 1வது பதிப்பு, 1996. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 126/1, திருமலை வீதி).*

*58 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ.,* ISBN: *978-955-4041-14-1.*

*ஈழத்துத் தமிழ் அகதிகள் சிலரின் நியூயார்க்கிலுள்ள சட்ட விரோதக் குடிகளுக்கான தடுப்பு முகாம் வாழ்வினை விபரிக்குமொரு நாவல். 83 இனக்கலவரத்தைத் தொடர்ந்து புகலிடம் நாடிச்சென்ற இலங்கைத் தமிழ் அகதியொருவனின் புரூக்லீன், நியூயார்க்கில் அமைந்துள்ள அமெரிக்கத்தடுப்பு முகாம் அனுபவத்தை இந்நாவல் விபரிக்கின்றது. இதன் முதற்பதிப்பு தமிழகத்தில் ஸ்நேகா பதிப்பகத்தின் மூலமும், கனடாவில் மங்கை பதிப்பகத்தின் மூலமும் கூட்டாக வெளியிடப்பட்டிருந்தது. இந்நாவலின் திருத்திய இரண்டாம் பதிப்பு மட்டக்களப்பு மகுடம் பதிப்பகத்தினரின் இருபதாவது வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நாவலாசிரியர் 2000ம் ஆண்டிலிருந்து "பதிவுகள்" இணையத் தளத்தை வடிவமைத்து அதன் ஆசிரியராகவும் இருந்து வருகின்றார்.*

## 14734

**அரங்கத்தில் நிர்வாணம்.** இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Tyristubbveien 77, 0687 Oslo, *1வது பதிப்பு மார்ச் 2016. (மின்நூல் வடிவமைப்பு* lulu.com *சுய வெளியீடு உதவி).*

*132 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-1-326-66357-5.*

*ஈழத்தைவிட்டு புலம் பெயர்ந்த எமது முதற் பரம்பரையின் வாழ்வு அனுபவம் எப்படி இருந்ததென்பதைப் பொறுத்து அவர்கள் சமுதாய எல்லைகள் வகுக்கப்பட்டன. அவர்கள் புலம்பெயர்ந்த போதும், தாங்கள் சிறுபிராயத்தில், தமது நாட்டில் கற்ற சமுதாய எல்லைகளைத் தொடர்ந்தும் கடைப்பிடித்தனர். கடைப் பிடிக்க போராடுகின்றனர். அந்த எல்லைகளே உலகில் உன்னதமானது என்பதை வலுவாக நம்புகின்றனர். தங்களது அதே சமுதாய எல்லைகளை தங்கள் பிள்ளைகள் மேலும் கண்மூடித்தனமாய் திணிக்கின்றனர். தங்களால் எது சரியான எல்லை என்று கணிக்கப்படுகிறதோ அதற்குள் அவர்களும் நிற்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்நாவலில் விட்டுக்கொடுப்பில்லாத எதிர்பார்ப்பு உறவின் முறிவுகளை வரவழைக்கின்றது. எமது இரண்டாம் தலைமுறையினரிடம் எங்கள் கலாசாரத்தைத் திணிப்பதற்குக் காட்டும் அக்கறையை அவர்களோடு சேர்ந்து, அவர்களின் வளர்ச்சிக்கு ஊக்கம் ஊட்டுவதில், அவர்களின் பால்யப் பிராயத்தில் செலவிடத் தவறிவிடுகிறோம் என்பதை வலிமையாகச் சொல்லமுனைகின்றது. தனிமையில் அல்லது நிறுவனங்களில் காலத்தை போக்கும் பிள்ளைகள், தொலைக்காட்சி, நண்பர்கள், ஆசிரியர் என்பதாக அவர்களின் சமுதாயத்தில் ஒன்றி அந்த எல்லைகளை வரித்துக் கொள்கிறார்கள். சங்கீதமோ தமிழ் வகுப்புகளோ அவர்கள் சிந்திக்கும் மொழியையும், சிந்திக்கும் விதத்தையும், இந்தச் சமுதாயத்தைப் பார்க்கும் முறையையும் மாற்றிவிட முடியாதுள்ளது. பிள்ளைகள் பெரியவர்கள் ஆனவுடன் அவர்கள் பெற்றோரின் கட்டுப்பாட்டை மீறி தமது எல்லைகளுக்குள் உள்ள சுதந்திரத்தை எடுக்க இது வழிவகுக்கின்றது. பெற்றோரால் அதைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. விருப்பம் வேறு திணிப்பு*

வேறு. அதுவும் இங்கு எதையும் யார் மீதும் திணிக்க முடியாது. அது சட்ட விரோதம்கூட. அப்படித் திணித்தால் அவர்கள் பதின்ம வயது தாண்டியதும் தங்கள் சுதந்திரத்தை தாங்களே எடுத்துக் கொள்வார்கள். புகலிடத்தில் உள்ளவர்கள் தங்கள் வருங்காலச் சந்ததிகளைப் புரிந்து தங்களைத் தாயார் செய்து கொண்டால் வருங்காலச் சமுதாயத்தோடான உறவைப் பேணிக் கொள்ளலாம். மாற்றம் காலத்தின் கட்டாயம். அதற்கு மாறாக வளைந்து கொடுக்காவிட்டால் அவர்கள் வேறு ஒரு பிரபஞ்சத்தை நோக்கிப் பயணிக்கலாம். நாங்கள் என்ன செய்யப் போகின்றோம்? இந்நாவல் ஒரு விவாதத்தின் தொடக்கமாக இருக்கின்றது.

## 14735

**அலுவாக்கரை (நாவல்).** எஸ்.ஏ.உதயன். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, ஜூலை 2018. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(15), 16-216 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-30-9626-5.

தெம்மாடுகள், சொடுதா, வாசாப்பு, லேமியா- ஆகிய நாவல்கள் மூலம் அறிமுகமாகிய மன்னார் பிரதேசத்தின் எழுத்தாளர் எஸ்.ஏ.உதயனின் மற்றுமொரு பேசாலை மண்மணம் கமழும் நாவல் இது. கூர்மையான சமூகப் பார்வையும், பிசிறற்ற மொழிவாண்மையும், பாத்திரங்களை உயிர்த்துடிப்புடன் யதார்த்தம் குன்றாமல் உலவவிடும் திறன் மிக்கவர் உதயன். கடல்நீர் தரையைத் தொடும் நிலப்பகுதியை "அலைவாய்க் கரை" என்று அறிகிறோம். கடற்கரைக் கிராம மக்களின் பேச்சாடலில் அது "அலுவாக்கரை" என்றாகி நாவலின் தலைப்புமாகியது. இன்று நாட்டின் "சமுத்திரத்தின் மழைக்காடுகள்"என்று கடற்சூழலியலாளர்களால் வர்ணிக்கப்படும் கடலடிப் பவளப்பாறைகளும் பிளாந்தங்களும் மீன் பிடியாளர்களால் அழித்தொழிக்கப்படுகின்றன. இந்தியாவில் இருந்து நமது கடல் எல்லைக்குள் இறால் பிடிக்கவென வரும் ஏராளமான இழுவைப் படகுகள் நமது கடற் பிராந்தியங்களின் கடலடி உயிர்களின் உற்பத்தி மையங்களின் முதுகில் தினமும் ஏற்படுத்தும் கீறல்களும், காயங்களும் அழிவுகளும் சாதாரணமானவையல்ல. அவை எமது அடுத்த தலைமுறைகளின் பொருண்மியத்தை இல்லாதாக்கிவிடுகின்ற அபாய சமிக்ஞைகள் என்பதைச் சொல்லும் விதமாக இந்நாவல் எழுதப்பட்டுள்ளது.

## 14736

**அவள் (நாவல்).** இ.விஜயேந்திரன் (இயற்பெயர்: இ.இராஜேஸ்வரன்). மல்லாகம்: விஜயா பிரசுரம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1968. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).

54 பக்கம், விலை: ரூபா: 1.25, அளவு: 18x12 சமீ.

ஆசிரியரின் முதலாவது நாவல். மதுவுக்கு அடிமையான ஒரு பள்ளி ஆசிரியரின் மகளான மைதிலியையும் அவளது கணவனான இராணுவ அதிகாரியான சுந்தரத்தையும் சுற்றி வளர்த்துச் செல்லப்படும் கதை. பிரிவு, அவள், கடிதங்கள்,

*காதற் புறாக்கள், எண்ணத்தில் வீழ்ந்த இடி, சுந்தரம், உலகம் இருண்டது, ஆறுதல், தம்பி, சோதனை, அம்மா, விசாரணை, விடிவு, புயல் ஓய்ந்தது ஆகிய 14 இயல்களில் இந்நாவல் விரிந்துள்ளது.*

## 14737

**அவளுக்கு தெரியாத ரகசியம்.** *வெலிவிட ஏ.சீ.ஜரீனா முஸ்தபா. மாவனல்ல: எக்மி பதிப்பகம், 19, கமந்தெனிய வீதி, கிரிங்கதெனிய, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2014. (கொழும்பு 14: ஐ.பீ.சீ.அச்சகம், 24, டி வாஸ் ஒழுங்கை).*

xvii, *218 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20*x*14 சமீ.,* ISBN: *978-955-1825-13-3.*

*2009/2010 காலகட்டத்தில் மித்திரன் வார மலரில் 59 அத்தியாயங்களில் பிரசுரிக்கப்பட்ட தொடர்கதை. நூலுருவில் 49 அத்தியாயங்களாகச் சுருக்கப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது. இரண்டு மூன்று குடும்பங்கள், ஏழெட்டுப் பாத்திரங்கள், ஆகியவையே இந்நாவலை நகர்த்திச் செல்கின்றன. சிறுநீரக நோயாளியான-நித்தமும் படுக்கையில் கிடக்கும் தாய் சுலைதா, அவளது மகன் டாக்டர் அஸார், மற்றொரு மகனான கர்வம் மிகக்கொண்ட அரூஸ், அரூசின் மனைவி நிஷாபா, வளர்ப்பு மகள் ரிலாயா ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குடும்பம். லாஹிர் ஹாஜியார், ஹாஜியாரின் மனைவி ரலியா உம்மா, மகன் அர்ஷாத், ஆமினாவின் தம்பி ஆதில் ஆகியோரை உள்ளடக்கிய மற்றும் ஒரு குடும்பம். இந்த இரண்டு குடும்பங்களே இந்நாவலின் பிரதான பாத்திரங்கள். அலீமாவும் ரஷீதும் தம்பதிகள். வெளிநாட்டில் வாழ்ந்து வரும் ரஷீத், மனைவி அலீமா மீது சநதேகம் கொள்கிறான். ஓர் ஆணின் உண்மையான காதல் உணர்வு அஸார்தீன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. இந்நாவலைப் பொறுத்தவரை, சமூகத்தில் சாதாரணமாக, ஆனால் அதிகளவில் நடைபெறும் சம்பவங்களின் தொகுப்பாகவே கருதமுடிகின்றது. கதைக்கரு சாதாரணமாக இருப்பினும் ஒரு மர்மம் அல்லது புதிர் நாவலின் போக்கில் மெல்லிதாக இழையோடிச் செல்கின்றது.*

## 14738

**அவனுக்குள் ஆயிரம் (நாவல்).** *தினேஷ் ஏகாம்பரம். சென்னை 600 017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, 7(ப.எண் 4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2018. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆஃப்செட்).*

x, *242 பக்கம், விலை: ரூபா 500.00, அளவு: 18*x*12 சமீ.*

*குறும்பட இயக்குநராகவும் எழுத்துத்துறைக் கவிஞனாகவும் தன்னைப் பிரகடனப்படுத்தும் தினேஷ், யாழ்ப்பாணம், சுதுமலையைப் பிறப்பிமாகக் கொண்டவர். குண்டுவீச்சுக்கும் கொள்கைப் பேச்சுக்கும் இடையே ஓரினம் தன் அடையாளத்தை ஆவணப்படுத்தும் முயற்சியாகவே இந்நாவல் உருவாக்கப் பட்டுள்ளது. கதை சொல்லும் உத்தி சிறப்பானது. கதை முடிவதற்கு முன்னர் இடம்பெற்ற ஒரு பரபரப்பான நிகழ்வே நாவலின் முதல் அத்தியாயமாகிறது. அடுத்து என்னவோ என்ற எதிர்பார்ப்பினை வாசகர் மனதில் ஏற்றிவிடுகிறார். நட்பு என்று வந்துவிட்டால் அதனை எப்படியாவது சிறப்புறப் பேண வேண்டும்*

என்பதை நாவல் வலியுறுத்துகின்றது. கோபியுடன் கொண்ட நட்பினை சர்மிலனும் சத்தியகுமாரும் நன்கு பேணுவதை நாவல் நமக்கு அதன் போக்கில் உணர்த்திச் செல்கின்றது. சர்மிலன், மலேசிய பொலிஸ் அதிகாரி சத்தியகுமார், கோபி, காயத்திரி, சண்முகவேலு ஆகிய கதாபாத்திரங்கள் முக்கியமானவர்கள். கோபி-காயத்திரி காதல் கதையின் கருவாகின்றது. கனவுலகில் வாழ்ந்த போதிலும் தனது நண்பர்களுடன் நிதானமாகப் பழகுபவன் சர்மிலன். இலங்கையிலிருந்து மலேசியாவுக்குச் சென்று தங்கும் சிலருடன் அவன் வாழ்வதாக கதை புலப்படுத்துகின்றது. கோபியின் மலேசிய வருகை அவர்களுடனான தொடர்பினை வலுப்படுத்துகின்றது. கோபியின் பார்வையில் இலங்கையின் இனப்பிரச்சினை இந்நாவலில் அவதானத்துடன் விளக்கப்படுகின்றது.

## 14739

**அன்று வந்ததும் இதே நிலா.** குகனேந்திரன். யாழ்ப்பாணம்: நிலாமலர் பதிப்பகம், காங்கேசன்துறை சாலை, கொக்குவில், 1வது பதிப்பு, ஆவணி 2001. (யாழ்ப்பாணம்: ஷாமளி அச்சகம்).

(6), 168 பக்கம், விலை: ரூபா 95.00, அளவு: 18.5x12 சமீ.

தமிழக ஜனரஞ்சகப் பாணியில் விறுவிறுப்பாக எழுதப்பெற்ற ஆசிரியரின் இரண்டாவது நாவல். பாடசாலை மாணவி வித்யா கனவில் தான் கண்ட ஒரு இளைஞனுக்காகக் காத்திருக்கிறாள். தோழியருடன் நயினாதீவுக்கு கடல் மார்க்கமாகச் சென்றவேளை நயினாதீவு இறங்குதுறை மீண்டும் கனவில் வந்த அவ்விளைஞனை நினைவூட்டுகின்றது. அங்கு சந்திக்கும் ஒரு சாமியார் "ஒரு இளைஞன் உன்னைத் தேடிவந்து கைப்பிடித்து வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லும் பாக்கியம் உனக்குண்டு" என்கிறார். வித்யாவும் அந்தக் கனவுக்காதலனைத் தேடியபடியே வாழ்கிறாள். இடையில் வித்தியா காதலித்துக் காதல் கைகூடாமல் குளத்தில் பாய்ந்து தற்கொலை செய்துகொண்ட இளம் காதல் ஜோடியொன்றின் பழங்கதையொன்றையும் கேள்விப்படுகின்றாள். இதே வேளை லண்டனில் பிறந்து வளர்ந்த தீபனும் அதே மாதிரியானதொரு கனவுடன் வாழ்கின்றான். ஓவியனான அவன் கனவில் வந்த பெண்ணையும் அதே கனவில் தான் கண்ட கோவிலொன்றின் சுற்றாடல் காட்சிகளின் பின்னணியில் வரைந்து வைத்திருக்கிறான். அந்த ஓவியத்துடன் தனது கனவுக் காதலியைச் சந்திக்கவென இலங்கையில் உரும்பிராயில் வசிக்கும் தன் பெரியம்மாவிடம் வருகின்றான். அங்கு தற்செயலாக தான் கனவில் கண்ட வித்தியாவையே சந்திக்கிறான். வித்யாவும் தன் கனவுக்காதலன் அவனே எனக்கண்டு அதிசயிக்கிறாள். இறுதியில் இறந்த அந்த பாரதி-பரதன் சோடியே மீண்டும் மறுபிறவியில் தீபன்- வித்தியா ஜோடியாக இணைவதாக கதை சுவாரஸ்யமாகச் சொல்லப்படுகின்றது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 068773).

## 14740

**ஆனந்தியின் இரு குறுநாவல்கள் (புது வீடு, குருஷேத்திரம்).** ஆனந்தி (இயற்பெயர்: மாதினியார் ஆனந்தநடராஜா). அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, வைகாசி 2017. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

viii, 80 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-955-4676-63-3.

நிறைவான அன்பின் மூலம் பெறப்படுவதே கடவுள் தரிசனமாகத் தோன்றுகின்ற அருள்நிலை என்ற கருத்தினை இந்நூலிலுள்ள இரண்டு குறுநாவல்களும் போதிக்கின்றன. "புது வீடு" என்ற குறுநாவல், தடம்மாறிப் போய்க்கொண்டிருக்கும் விபரீதமான வாழ்வியல் மாற்றங்களை எதிர்கொள்ள நேர்ந்த மனவருத்தத்துடன் நீண்ட காலத்துக்கு முன் 1986ஆம் ஆண்டில் இந்நாவல் எழுதப்பட்டது. கிராமத்துப் பாமரத்தனமான தெய்வீகக் களையுடன் நின்று நிலைத்த ஒரு பெண்ணையே மையமாக வைத்து, சிறுவயதில் அவளோடு கொண்ட களங்கமற்ற அன்பின் நிமித்தம் வந்து உறவாடி உயிர் கலந்த ஒரு சிறுவன், சூழ்நிலை சாபத்துக்காளாகி மனம் திரிந்துபோய் மண்ணில் ஒரு மறைபொருளாகி, நீண்டகாலமாக வெளிநாட்டில் அஞ்ஞாதவாசம் செய்துவிட்டு, மீண்டும் அவள் வாழ்கின்ற அந்த மண்ணுக்கே திரும்பிவந்து அவளது புனிதமான பார்வை படுவதன் மூலம் முற்றிலும் மனம்திருந்தி உயிர்த்தெழும் ஒரு புதிய மனிதனாக மீண்டுவருவதை உணர்ச்சிபூர்வமாகச் சொல்கின்றது. இரண்டாவது கதை "குருஷேத்திரம்" கல்யாணமென்ற கனவுகளோடு காத்திருக்கும் பெண்களுக்கு ஒரு புரட்சிகரமான வாழ்வியல் மாற்றத்தை வலியுறுத்தும் ஒரு செய்தியாக அமைகின்றது. கற்பு என்னும் சமூக மரபுகளைக் கட்டிக்காக்க விரும்பும் சாஸ்திர விதிக்குட்பட்டு தீக்குளித்தே செத்து மடியும் அபலைப் பெண்களின் கண்களில் வழிந்தோடும் கண்ணீர் நதியில் குளித்து எழும் சோகம் மாறாமலே அதற்குப் பரிகாரம் தேடமுனையும் ஆத்மதிருப்தி இக்குறுநாவலில் பிரதிபலிக்கின்றது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 063294).

## 14741

**இச்சா.** ஷோபாசக்தி. சென்னை 600005: கருப்புப் பிரதிகள், பி-55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 2வது பதிப்பு, ஜனவரி 2020, 1வது பதிப்பு, நவம்பர் 2019. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).

304 பக்கம், விலை: இந்திய ரூபா 290., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-943310-0-1.

இலங்கையில் இரண்டாயிரத்துக்குப் பிறகு புலிகளுக்கும் ராணுவத்துக்கும் இடையிலிருந்த போர்நிறுத்த காலகட்டம் முடிந்து இறுதிப் போர் தொடங்கும் காலகட்டத்தில் மையம் கொள்கிறது. 1989-ல் ஒரு அடைமழைக் காலத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு இலுப்பங்கேணியில் பிறந்த வெள்ளிப்பாவை என்ற

கிராமப்புறச் சிறுமியான ஆலா, பாலினரீதியாகவும், சாதியம், இனவாதம், அரசு பயங்கரவாதம் என அனைத்துவகையிலும் சிறுவயதிலிருந்து சந்தித்த துயரங்களையும் அதிலிருந்து தப்புவதற்குச் செய்த முயற்சிகளையும் "இச்சா" அதிநுட்பத்துடன் சொல்கிறது. ஆலா பின்னர் தற்கொலைப் போராளியாக மாறுகிறாள். பின் சிறைசெல்ல நேர்கிறது. அவள் அனுபவிக்கிற அந்த நரக வாழ்க்கையை அவள் சிறைக் குறிப்புகளாக ஒவ்வொரு நாளும் சங்கேத மொழியில் எழுதிவருகிறாள். 2019ஆம் ஆண்டு இஸ்லாமிய பயங்கரவாதிகள் நடத்திய ஏப்ரல் ஈஸ்ரர் குண்டுவெடிப்பில் ஒரு முன்னாள் சிறை பொறுப்பதிகாரி இறந்துபோகிறாள். இதற்கு முதல் அவள் பாரிஸ் வந்தபோது "இச்சா" எழுத்தாளரைச் சந்தித்து அந்த குறிப்புகளை ஒப்படைத்திருந்தார். அதன் சங்கேத சொற்களை உடைத்து அதை தொகுப்பாக்கி இந்த நாவலை உருவாக்குகிறார். இலங்கையில் குண்டுவெடிப்பு நடந்த ஈஸ்டர் ஞாயிறில் நின்று தன் இலக்கை நோக்கி நாவல் நிலைகொள்கிறது. இலங்கையில் தாயை விட்டுவந்திருக்கும் கதைசொல்லி, அம்மாவையோ உறவினர்களையோ தொடர்புகொள்ள இயலாமல் அலைக்கழிந்து கொண்டிருக்கும் போது, குண்டுவெடிப்பில் இறந்தவர்களின் புகைப்படத்தில் மர்லின் டேமி என்ற வெள்ளைப் பெண்ணின் புகைப்படத்தைப் பார்க்கிறான். கதைசொல்லிக்கு அறிமுகமான அந்த "ஆலா" சிறையிலிருந்து கற்பனை மொழியான "உரோவன்" மொழியில் எழுதிய குறிப்புகளைக் கொடுத்தவள் இவளே. நாவலின் வடிவமும் சோபாசக்தியின் எழுத்தாளுமையும் இந்த நூலில் இன்னொரு பரிணாமத்துக்கு மாறியிருக்கிறது. சோகத்தை அதன் ஆன்மாவுக்குள் ஊடுருவி பேசும் மொழி பல இடங்களில் திரும்பத் திரும்ப வாசித்து பரவசமடைய வைக்கிறது. புராணிகக் கதைகளும் கதாபாத்திரங்களும் தலையிட்டுக் கொண்டேயிருக்கும் நாட்டார்புலப் பின்னணி கொண்ட இந்நாவலில் யுத்தம், வன்முறை, காமம் சார்ந்த பொன் மொழிகள் நூறையாவது பொறுக்கியெடுத்துவிட முடியும். நவீன தமிழ் இலக்கியத்தில், அவலத்தின் அத்தனை லட்சணங்களையும் கொண்டு யுத்தச் சுவையைத் தனது தனித்தன்மையான அழகியலாக ஆக்கியவர் ஷோபாசக்தி. யுத்தம் என்ற பெரிய பாம்பின் வாயாகத் திகழும் காமம், அதன் வாலான மரணத்தைக் கவ்வ முயன்று கொண்டேயிருக்கும் படைப்புதான் "இச்சா". கிறிஸ்துவின் கடைசி இரவில் தொடங்கும் கதை, உலகெங்கும் நடந்துகொண்டிருக்கும் போராட்டங்களில் மையம்கொண்டு, உலகம் முழுக்க அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மக்கள் அனைவரும் வாதைப்பட்ட இயேசுவாக மாறும் சித்திரம் ஒன்றை ஆசிரியர் இங்கு வரைகிறார்.

## 14742

**இந்த மண்ணும் எங்களின் சொந்த மண் தான்.** இணுவில் ஆர்.எம். கிருபாகரன். *சென்னை 600037: இராமநாதன் பதிப்பகம், நெ.25, 3வது தெரு, ஆபீசர்ஸ் காலனி எக்ஸ்டென்ஷன், முகப்பேர், 1வது பதிப்பு, 2015. (சென்னை 600094: ஸ்கிரிப்ட் ஆஃப்செட்).*

xvi, *160 பக்கம், விலை: இந்திய ரூபா 80.00, அளவு: 18x12 சமீ.*

*15 அத்தியாயங்களில் விரியும் சமூக நாவல் இது. இலங்கையில் மலையகத்தை ஒரு தளமாகவும், கிழக்கின் தம்பலகாமத்தை மற்றொரு தளமாகவும் கொண்டு மலையகத் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களின் சோக வரலாற்றினை நாவலாகப் புனைந்துள்ளார். பிரித்தானியரால் தென்னிந்தியாவிலிருந்து கூலிகளாக அழைத்துவரப்பட்டவர்கள் ஒன்றரை நூற்றாண்டுக் காலமாக முன்னேற்றம் எதையும் அடையவிடாமல் கண்ணுக்குத் தெரியாத விலங்கிட்டு, அவர்கள் அரசியல் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்படும் அவலத்தை இந்நாவல் சித்திரிக்கின்றது. இலங்கை பெயருக்குச் சுதந்திரமடைந்தாலும் இவர்களின் வாழ்வில் கவ்விய இருள் இன்னும் அகலவேயில்லை என்பதை இந்நாவல் வெளிச்சமிடுவதுடன், இவர்களின் வாழ்வை வளம்பெற வைப்பதற்கு என்ன செய்யலாம் என்று சில கருத்துக்களையும் ஆசிரியர் நாவல் வழியாகப் பதிவு செய்திருக்கிறார். கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் இணுவில் ஆர்.எம். கிருபாகரன் முன்னதாக நீறுக்குள் நெருப்பு என்ற சிறுகதைத் தொகுதியையும், இவர்கள் எப்போதும் விழுதுகள், வசந்தம் வரவேண்டும் ஆகிய இரு சமூக நாவல்களையும், கல்யாணிபுரத்துக் காதலன் என்ற சரித்திர நாவலையும் எழுதியுள்ளார். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் C 000221).*

## 14743

**இரண்டகன்?.** இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Vetlandsveien 117, *0686* Oslo, *1வது பதிப்பு டிசம்பர் 2019. (மின்நூல் வடிவமைப்பு* lulu.com *சுய வெளியீடு உதவி).*

*82 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN*: 978-0-244-54706-6.*

*பிரவேசம், அறிமுகம், சுவை புதிது, புதிய நாள், தொடர்கதை, அடுத்தநாள், பறக்க நினைத்த பட்சி, தொடர்ந்த சோதனை, மருத்துவக் கல்லூரி, அகப்பட்ட அபலைகள் ஆகிய 10 அத்தியாயங்களில் இக்குறுநாவல் எழுதப்பட்டுள்ளது. "தியாகிகள் துரோகிகள் என்பது இன்றும் வாதப் பொருளாய்த் தொடரும் எமது சமுகத்தில் இனியாவது அதற்கான அர்த்தத்தைக் கண்டு கொள்வார்களா என்னும் ஏக்கத்தோடு இருக்கும் எமது உறவுகளுக்கு, இது என் அலசலுக்கான உந்துகோலும் சமர்ப்பணமும்." (ஆசிரியர்). தியாகலிங்கம் இலங்கையின் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1967 ஆம் ஆண்டில் வேலுப்பிள்ளை இரத்தினம், இரத்தினம் பரமேஸ்வரி ஆகியோருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை காரைநகர் யா/யாழ்ற்றன் கல்லூரியின் கனிஷ்ட பிரிவிலும், தொடர்ந்து சாதாரண தரத்தை யா/யாழ்ற்றன் கல்லூரியிலும், உயர்தரத்தை காரைநகர் இந்துக் கல்லூரியிலும் பயின்றவர். நோர்வேயில் மேற்கொண்டு படித்துக் கணினிப் பொறியியலாளரான இவர், அங்கிருந்து தனது எழுத்துப்பணியை 1987 தொடக்கம் ஆற்றிவருகின்றார்.*

14744
**உயிர்வாசம் (நாவல்).** தாமரைச் செல்வி (இயற்பெயர்: ரதிதேவி கந்தசாமி). பரந்தன்: சுப்ரம் பிரசுராலயம், இல. 77 , குமரபுரம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2019. (யாழ்ப்பாணம்: நியூ எவகிறீன் அச்சகம், இல. 369, கே.கே. எஸ். வீதி).

xviii, 550 பக்கம், விலை: ரூபா 900., அளவு: 21.5x13.5 சமீ.

தற்போது அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற்றிருக்கும் தாமரைச்செல்வி, அவுஸ்திரேலியாவில், அரசிடத்திலும் ஊடகங்களிடத்திலும் பிரதான பேசுபொருளாகவிருந்த படகு மக்களைப் (Boat People) பற்றிய புதினத்தை உயிர் வாசம் என்ற பெயரில் எழுதியிருக்கிறார். இலங்கையில் நீடித்தபோரையடுத்து, வாழ்வா சாவா என்று உயிரைக் கையில் பிடித்தவாறு வாழ்ந்த மக்கள், அங்கிருந்து தப்பி எங்காவது சென்றுவிடத்துடித்தமை தொடர்பான வலிநிரம்பிய கதை உயிர்வாசம். எதிர்காலம் குறித்த கனவுகளை சுமந்தவாறு அவுஸ்திரேலியாவுக்கு உயிரைப் பணயம் வைத்து கடல்மார்க்கமாக படகுகளில் வந்தவர்கள் நடுக்கடலில் எதிர்கொண்ட உயிர்ப் போராட்டத்தையும், கரை ஒதுங்கிய பின்னரும் சுமந்த வலிகள் பற்றியும், புகலிடத்தின் வாழ்வுக்கோலத்தையும் உயிர்வாசம் நாவல் சுமார் 540 பக்கத்தில் சொல்கிறது. இலங்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தனில் பிறந்திருக்கும் தாமரைச்செல்வி, 1973 ஆம் ஆண்டு முதல் சிறுகதைகள், நாவல்கள் எழுதிவருகிறார். இதுவரையில் 200 இற்கும் மேற்பட்ட சிறுகதைகளும் மூன்று குறுநாவல்களும், ஆறு நாவல்களும் எழுதியுள்ளார். இவரது சில சிறுகதைகள் குறும்படங்களாகவும் வெளியாகியுள்ளன. தமிழக பிரபல திரைப்பட இயக்குநர் "முள்ளும் மலரும்" மகேந்திரனும் போர்க்காலத்தில் வன்னியில் நின்ற சமயத்தில், தாமரைச்செல்வியின் சில கதைகளை குறுந்திரைப்படமாக்கியுள்ளார். தாமரைச்செல்வி, எழுதத் தொடங்கிய காலம் முதல், வடபுலத்தில் குறிப்பாக வன்னிப் பிரதேச வயலும் வயல் சார்ந்த மாந்தர்கள் குறித்த புனைவுகளை எழுதிவந்திருப்பவர்.

14745
**உயிரில் கலந்த வாசம்.** க.சட்டநாதன். கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆடி 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

vi, 105 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-3491-20-6.

சட்டநாதன், ஈழத்தின் சிறந்த கதைசொல்லியாக அறியப்பட்டவர். சிறந்த பல சிறுகதைகளைத் தந்த அவரது முதலாவது நாவலாக இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நாவல் ஒரு தனிமனிதனின் சுயசரிதையாக விரிகின்றது. தனது மனைவியாரை கதையின் நாயகியாக்கி இனிய காதலர்களின் கதையாக நனவிடைதோய்ந்து இதனை வளர்த்துச் சென்றுள்ளார். வேலணை மண்ணின் ஈரமும், யாழ்ப்பாண மனிதர்களின் மனங்களும், மத்தியதர மனிதர்களின் வாழ்வியற்புலமும் சிறப்பாக இந்நாவலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கதைக்களம் வேலணை மண்ணிலிருந்து

தமிழகம் வரை விரிந்துசெல்கின்றது. மனித மனத்தின் ஆசைகள், நிலைகுலைவுகள், பல்வேறுபட்ட சமூகநிலைப்பட்ட அனுபவங்கள் என்பன கதையை சுவாரஸ்யமாக வளர்த்துச் செல்கின்றது. இந்நாவல் கழிவிரக்கம் மிகுந்த மனோரதியக் கசிவுகளைக் கொண்டிருப்பதான தோற்றத்தைத் தந்தபோதும் அப்படி அல்ல என்று வாசகர்களுக்குச் சொல்லவேண்டும் என்று குறிப்பிடுகிறார் நாவலாசிரியர் சட்டநாதன்.

## 14746

**உள்ளத்தனைய உயர்வு (நாவல்).** ஆ.மு.சி.வேலழகன் (இயற்பெயர்: சி.வேல்முருகு). மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல.64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2012. (தெகிவளை: ஏ.ஜே. பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

191 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-8715-76-5.

1972 முதல் இலக்கியத்துறையில் எழுதி வருபவரும், கிழக்கிலங்கையின் மூத்த படைப்பாளியுமான கவிஞர் ஆ.மு.சி.வேலழகன் எழுதிய 18ஆவது நூலாக இந்நாவல் வெளிவந்துள்ளது. சாதி, இனம், குலம், மதம் முதலிய பேதங்களற்ற சமூகத்தினைக் காண்பதையே தவமாகக் கொண்ட வேலழகன் அவர்களின் ஆக்கங்கள் அனைத்திலும் அத்தவத்தின் ஆழமான தடங்களை காணமுடிகின்றது. கிழக்கிலங்கையின் கிராமியச் சூழலையும் அங்கு வாழும் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் காட்சிப்படுத்தும் போக்கு இந்நாவலில் காணப்படுகின்றது. இக்கதையின் நாயகன் கந்தன் என்னும் கந்தவனம், தன் தந்தையின் பால் பற்றும் மதிப்பும் கொண்டவன். தந்தையின் இழப்பு அவனை நிலைகுலைய வைக்கின்றது. சகலதையும் இழந்த உணர்வில் வாழ்வில் தான் தனித்து விடப்பட்டதாக உணர்கிறான். அவனது நிலைகண்டு கலங்கும் நண்பன் ஞானன் ஆன்மீகமே அவனை இயல்பு வாழ்க்கைக்கு மீளக்கொண்டுவரும் என்று நம்புகின்றான். தமது ஊரிலிருந்து கதிர்காமம் பாதயாத்திரைக்குச் செல்லும் யாத்திரீகர் குழுவில் கந்தனையும் இணைத்துவிடுகின்றான். பற்றற்ற ஞானியாகப் பாதயாத்திரை செல்லும் கந்தனின் பாதயாத்திரையில் இணையும் பிரெஞ்சுப் பெண்ணான மீனாட்சி, வாழ்க்கையின் வேறுபட்ட அனுபவங்களையும் வாழ்க்கை முறையினையும் அவனுக்குத் தெரியவைக்கிறாள். கதிர்காமத்தில் அப்பெண்ணுக்கு நேரும் ஒரு விபத்தின் காரணமாக மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறாள். கந்தவனம் அவளுக்கு உதவுகின்றான். தன் தாயின் அனுமதியுடன் தன் வீட்டில் அவளைத் தங்க வைக்கின்றான். காலக்கிரமத்தில் இருவரும் காதல்வசப்பட்டு இல்லறவாழ்வில் இணைகின்றனர். இக்கதை யினூடாக ஆசிரியர், தன்னலமற்ற நட்பு, ஆபத்தில் உதவும் மனிதாபிமானம், தன் கலாசாரத்தைப் பேணும் உறுதி, பிற இனங்களின் பண்பாட்டை மதிக்கும் பண்பு ஆகிய விழுமியங்களைப் பதிவுசெய்துள்ளார். பட்டிப்பளை-கதிர்காமம்-மொனராகலை என முக்கோண இணைப்பினூடாக இக்கதையை ஆசிரியர் வடிவமைத்திருக்கிறார். (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4562).

## 14747

**உறவும் பிரிவும்.** K.S.ஆனந்தன். யாழ்ப்பாணம்: இணுவில் தமிழ்மன்ற வெளியீடு, இணுவில், 1வது பதிப்பு, நவம்பர் 1964. (சுன்னாகம்: நாமகள் அச்சகம்).

(2), 61 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 20x13.5 சமீ.

காதலை முதன்மைப்படுத்தும் இக்குறுநாவலில் வரும் சபேசன்-ராஜி காதல் ஜோடியின் காதலை பொருளாதார ஏற்றத்தாழ்வு, மத வேறுபாடு என்பவை பிரிக்கின்றன. சபேசனை ராஜி காதலிக்கிறாள். தானாகவே மனதைவிட்டுச் சொல்லவும் செய்கிறாள். நிறைவேறும் என நம்பியிருக்கும் வேளையில் தாயின் விருப்புக்கேற்ப, பணக்காரப் பெண்ணான ரஞ்சிதத்திற்கு சபேசன் தாலி கட்டுகின்றான். ரஞ்சிதம் ஒழுக்கம் கெட்டவள் என்று சில நாட்களிலேயே தெரியவருகின்றது. தாய் மரணிக்க, ரஞ்சிதமும் மரணிக்க, ராஜி கன்னியாஸ்திரி மடத்தில் சேர, தன் உறவுகளைப் பிரிந்து, முன்பொரு நாள் ஒரு புத்தபிக்கு சொன்ன ஆரூடத்தின்படி தனிமரமாகின்றான் சபேசன். இரவீந்திரரையும் திருவள்ளுவரையும் இடைக்கிடையே மேற்கோள் காட்டி நிற்கும் நாவலாசிரியர் இந்நாவலில் நற்பண்புகளைப் போதிக்கும் வழிநடையொன்றை பின்பற்றுகின்றார். இந்நாவலில் வரும் கதாபாத்திரங்கள் உயிரோட்டம் மிக்கவை. எழுத்தாளனும் மாணவனுமான சபேசன், ஓய்வுபெற்ற ஒரு ஆசிரியரின் நான்காவது பிள்ளையான ஜோசப்பின் என்ற ராஜி, கல்லூரிப் பெண்களாக வரும் பாமா, லூஸி, பத்மா, மார்க்கிரட் முதலானோர், பணத்திமிரும் பொறாமை நெஞ்சமும் கொண்ட ரஞ்சிதம், பிறமதத்தவளை மருமகளாக ஏற்றுக்கொள்ள மறுக்கும் சபேசனின் தாய் சரஸ்வதி, காதலைத் தியாகம் செய்து கற்பைக் காத்துக்கொள்ளும் கோமதி என எல்லோரும் இக்கதையில் மாத்திரமல்ல எம்மிடையே அன்றாடம் நடமாடுபவர்களே. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 018638).

## 14748

**ஊற்றை மறந்த நதிகள்(சமூக நாவல்).** சுலைமா சமி இக்பால். மாவனல்ல: எக்மி பதிப்பகம், 19, கமந்தெனிய வீதி, கிரிங்கதெனிய, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (மாவனல்ல: எம்.ஜே.எம். பிரின்டர்ஸ், 119, பிரதான வீதி).

xvi, 108 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1825-04-1.

ஈழத்தின் முஸ்லிம் பெண் படைப்பாளிகளுள் ஒருவரான சுலைமா சமி இக்பாலின் முதலாவது சமூக நாவல் இதுவாகும். தென் இந்திய ஓர்கீஸ் சஞ்சிகையும், மல்லாரி பதிப்பகமும் இணைந்து அனைத்துலக ரீதியில் நடத்திய முகம்மது இஸ்மாயில் இப்ராஹீம் பீவி நினைவு நாவல் போட்டியில் ஆறுதல் பரிசுபெற்ற நாவல் இது. வஞ்சகமறியாத ஆயிஷா டீச்சரையும் இரண்டாம் தாரத்திற்கு ஆசைப்பட்டு குடும்பத்தைச் சீரழித்து இறுதியில் அவரது காலடியில் ஊனமுற்றவராக வந்து தஞ்சமடையும் ஆயிஷா டீச்சரின் கணவனையும் சுற்றிக் கதை நிகழ்கின்றது. 17 அத்தியாயங்களில் வளர்த்துச் செல்லப்படும் இந்நாவல் தர்க்காநகர், பாணந்துறை,

களுத்துறை போன்ற பிரதேசங்களுக்குரிய பேச்சுமொழியில் எழுதப்பட்டுள்ளது. நாம் அன்றாட வாழ்வில் சந்திக்கும் கதாமாந்தர்களாக ஆயிஷா டீச்சரும், அன்சாரும், அபுல் ஹஸன் மாஸ்டரும், கதீஜாவும், பஸ்லியா, நிரோஷா போன்ற அனைத்துப் பாத்திரங்களும் வடிவமைக்கப்பட்டுள்ளனர். ஊற்றை மறந்துவிடும் நதியைப்போன்று நன்றி மறந்த மனிதர்களைப்பற்றிய கதை இது. இக்கதையில் உலவும் கதாமாந்தர்கள் செய்யும் துரோகம், பொறாமையால், அன்புடன் இணைந்து வாழும் ஒரு தம்பதியினரைப் பிரிக்கும் ஈனச் செயல், நன்றி மறக்கும் நயவஞ்சகம் போன்ற இழிகுணம் கொண்ட மனிதர்களுக்கு அல்லாஹ்வே தண்டனையும் கொடுப்பதாக கதை நகர்கின்றது. இந்நூலாசிரியர் 2008இல் இன நல்லுறவு ஒன்றியத்தினால் கலாஜோதி விருது வழங்கப்பட்டு கௌரவம்பெற்றவர்.

## 14749

**எரிமலை: நாவல்.** தி.ஞானசேகரன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2018. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xx, 208 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-8354-81-0

1984ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டு, பதினெட்டு அத்தியாயங்களில் விரியும் இந்நாவலில் அரசியலே பேசுபொருளாக விளங்குகின்றது. ஈழத்தமிழினத்தின் நிலைபற்றி, இன ஒடுக்குமுறை பற்றி, அதனால் விளைந்த பின்னடைவு துயரம் பற்றி, இனத்துவேசம் வளர்ந்ததால் தலைவிரித்தாடிய இனவன்முறைக் கலவரம் பற்றி, இவைகளுக்காக நடந்த சாத்வீகப் போராட்டங்கள் பற்றி, சாத்தியமாகாத பட்சத்தில் ஆயுதப் போராட்டம் வளர்ந்தோங்கியது பற்றியெல்லாம் இந்நாவல் பேசுகின்றது. சாதவீகப் போராட்டங்களாகத் தொடங்கி ஒருகட்டத்தில் ஆயுதப் போராட்டமாகப் பரிமாணம்பெற்ற இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினை பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் ஒரு முழுமையான பார்வையை வாசகருக்குத் தருகின்றது. இந்நாட்டில் வாழும் சகலமக்களது நல்வாழ்வுக்கும் நாட்டின் சுபீட்சத்துக்கும் தடையாக அரசியல்வாதிகள் எவ்வாறு இனத்துவேஷத்தைக் கையாண்டு வருகிறார்கள் என்பதையும் இந்நாவல் தோலுரித்துக்காட்டுகின்றது. ஒரு காலகட்டத்து மக்களின் அரசியல், பண்பாடு, சிந்தனைகள், உணர்வுகள், செயற்பாடுகள் பற்றிக் கலைத்துவத்தோடு உணர்த்துகின்றது. போர் தொடங்கிய காலத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்து மக்களின் மனநிலை எவ்வாறிருந்தது எத்தகைய அவலங்களை அவர்கள் எதிர்கொண்டனர்? இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும்போது மலையக மக்கள், முஸ்லிம் மக்கள் நிலை யாது? சிங்கள மக்களின் மனநிலையில் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தலாம்? என்று பல கோணங்களில் நின்று அகன்ற, ஆழமான, தெளிவான, திடமான பார்வையோடு இந்த நாவல் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த நாவலில் சிங்களப் புத்திஜீவிகளும் பாத்திரங்களாக வருகின்றனர். தென்னிலங்கையில் இருந்து வந்த ஒரு சிங்கள குடும்ப நண்பர்கள் மூலமாக அவர்கள்தம் நிலைப்பாட்டையும் வாதப் பிரதிவாதங்களையும் சொல்லவைத்து, எமது நிலைப்பாட்டையும்

நியாயப்பாட்டையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தி தெளிவுபடுத்தியிருக்கின்றார். சந்திரன் அனுலா தமிழ் சிங்கள காதல் ஜோடியை இடைக்கிடை உலாவவிட்டு பூங்காற்றையும் கதாசிரியர் வீசவைக்கிறார். 1948 முதல் 1984 வரையான பின்புலத்தில் ஒவ்வொரு காலகட்ட இனசங்காரங்களை ஆவணப்படுத்தும் நோக்கிலும் இன்றைய இளைய தலைமுறையினருக்கு அவற்றைத் தெரிவிக்கும் வகையிலும் இந்நாவல் வடிவமைக்கப்பட்டுள்ளது. சுயநிர்ணய உரிமையோடுகூடிய பிரதேச சுயாட்சியே, எல்லோருக்கும் சுபீட்சம் தரும் வழியாகும் என்று முன்மொழிந்து கதையை நிறைவு செய்கிறார்.

### 14750

**என்றும் ஒளிரும் விளக்கு.** திக்குவல்லை கமால். பண்டாரகமை: பரீதா (Fareedha) பிரசுரம், 104, அத்துலுகம, 1வது பதிப்பு, 2016. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

(9), 10-98 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-7301-00-6.

தென்னிலங்கை திக்குவல்லையைச் சேர்ந்த முகம்மது கமால் எனும் இயற் பெயருடைய திக்குவல்லை கமால் எழுதியுள்ள எட்டாவது நாவல் இதுவாகும். வறுமை காரணமாகத் தன் வாழ்வை ஒரு வகையில் தியாகம் செய்யும் ஒரு இளம்பெண்ணுக்கு அதுவே ஒரு சவாலாகவும் மாறி விடுகின்றது. அவள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவளது துணிச்சலையும் இந்நாவல் பேசுகின்றது. தென்னிலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகளை வெளிக் கொணர்வதிலும் அம்மக்களின் தனித்துவமான சில பண்புகளை அடையாளப் படுத்துவதிலும் திக்குவல்லை கமாலின் நாவல் சிறப்பிடம் பெறுகின்றது. கதை நிகழ்களத்தின் கலாச்சாரம், மண் வாசனை, பேச்சு வழக்கு இப்படி அனைத்துமே இந்நாவலுக்குக் கைகொடுக்கின்றன. தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் அனுசரணையுடன் இந்நாவல் வெளியிடப்பட்டுள்ளது. பன்முக படைப்பாற்றல் கொண்ட நூலாசிரியர் நீண்டகால இலக்கியப் பரிச்சயம் கொண்டவர். இவரது நாவல்கள் பத்திரிகைகளில் தொடர்கதைகளாகவும் வெளிவந்துள்ளன. உயர்கல்விப் பீடங்களில் பட்டப்படிப்பின் பரீட்சைத் தேவைகளுக்காக ஆய்வு செய்யப்பட்டுமுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65534).

### 14751

**என்னைக் காப்பாற்றிய காதலியின் துல்லிய பார்வை (நாவல்).** அமிர்தா ராஜகோபால். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2013. (சென்னை: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

vi, 306 பக்கம், விலை: இலங்கை ரூபா 500., அளவு: 18x12 சமீ., ISBN: 978-955-44754-0-3.

இக்கதையின் நாயகனுக்கு வரும் காதலால் அவன் எவ்வாறு திசைமாறிப் போகின்றான் என்பதே இந்நாவலின் போக்காகும். தமிழக கதாசிரியர்களின் கதைசொல்லும் பாணியை பெருமளவில் பின்பற்றிய எழுத்துநடை இவருடையது. அமிர்தா ராஜகோபால் (1968.02.11) கொழும்பில் பிறந்தவர். இவரது தந்தை அல்லிமுத்து தாய் ராஜேஷ்வரி. கொழும்பு பம்பலப்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்றார். பாடசாலையில் கல்வி கற்கும் காலத்திலேயே எழுத்துத்துறையில் பிரவேசித்துள்ளார். என்னைக் காப்பாற்றிய காதலியின் துல்லிய பார்வை, போகாதே என் சகியே ஆகிய இரு நாவல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவரின் பெரும்பாலான ஆக்கங்கள் தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் "வாங்க பேசலாம்" என்னும் மாத இதழில் சிறுகதை, கவிதை, கட்டுரை ஆகிய வடிவில் வெளிவந்துள்ளன. இலங்கைப் பத்திரிகையான தினகரனிலும் இவரின் சிறுகதைகள் வெளிவந்துள்ளன. ஆடை வடிவமைப்பு தொழிலில் தற்பொழுது ஈடுபட்டு வருகிறார் எழுத்தாளர் அமிர்தா ராஜகோபால்.

## 14752

**ஒரு கூடும் இரு முட்டைகளும்.** கெக்கிராவ ஸஹானா. கெக்கிறாவ: கெக்கிராவ ஸஹானா, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2009. (கல்ஹின்ன: விங்ஸ் கிராப்பிக்ஸ் லிமிட்டெட்).

*94 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-955-51679-0-1.*

இந்நூலில் ஒருகூடும் இரு முட்டைகளும் என்ற குறுநாவலும், 1990களில் மல்லிகை இதழ்களில் வெளியான புருஷோத்தமன், உண்மைக் காதல் என்பது, உள்ளும் புறமும் பேய்கள், பெண் என்றால், அகதிகள் ஆகிய ஐந்து சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன. சிறுகதைகள் பெரும்பாலும் பெண்-பெண்மை, மென்மை, தாய்மை, அவளது மனோவியல்புகள் அவளது உடம்பு ஆகியவை ஒரு சந்தர்ப்பத்தில் அவளுக்கே எதிரியாகி விடுகின்றமையை எடுத்துக்காட்டுகின்றன. ஒரு கூடும் இரு முட்டைகளும் என்ற குறுநாவலில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தம்மளவில் சுயாதீனமானவர்கள் என்பதை ஆசிரியர் வலியுறுத்துகின்றார். பெற்றோரின் குணாதிசயங்கள் அனைத்தும் பிள்ளைகளுக்கு சமமாக வாய்ப்பதில்லை என்பதும், ஒரு பிள்ளையிடம் காணப்படும் நல்லியல்பு மற்றொரு சகோதரத்திடம் காணப்படுவதில்லை என்பதும் எமது சமூகத்தினரால் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டு தவறான உயர்வு தாழ்வுச் சிக்கல்களை ஏற்படுத்துவதை ஆசிரியர் அறவே வெறுப்பதை இந்நாவலின் வாயிலாகச் சொல்லியிருக்கிறார். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளின் இரு வேறுபட்ட உணர்வுகளுக்கு சமவளவில் முக்கியத்துவம் கொடுக்கவும், மனிதனின் போலி வேஷத்திலும் முகமூடியிலும் மயங்காது, அவனது உண்மைக் குணத்தை கண்டறிய முயலும் வண்ணம் அறிவுறுத்துகின்றார். இந்நாவல் புளியங்குளம் கிராமத்தின் வாழ்வியல் பண்புகளின் பின்னணியில் வளர்க்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54193).

## 14753

**ஒரு துளி நிழல்.** இ.தியாகலிங்கம். சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 20/2, சக்காரியா காலனி, முதலாவது தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 20/2, சக்காரியா காலனி).

168 பக்கம், விலை: இந்திய ரூபா 160., அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-81322-22-2.

ஓர் ஈழப்பெண்ணின் நாள்காட்டா நாட்குறிப்புகளிலே இந்நாவல் சூல்கொண்டுள்ளது. ஆயுதம் கொடுக்கும் பலமும், நிராயுதபாணியாய் நிற்கும் பலவீனமும் ஈழத்தமிழர் கடந்துவந்த பாதையாகும். ஈழவிடுதலை ஈன்றெடுத்த வேதனை, அழிவு, அரசியல் வியாபாரம், பொதுச் சொத்துக்களைப் போட்டிக்குப் பதுக்குதல், பாதிக்கப்பட்டவர்களைப் பற்றிப் பாராமுகமாய் இருந்துகொண்டு கோடம்பாக்கத்தை நோக்கி அலையும் புலம்பெயர்ந்த பினாமிகளின் கூட்டம், பதுக்கிய சொத்துக்காய் பரிமாறப்படும் துப்பாக்கி வேட்டுக்கள் எனத் தொடரும் ஈழத்தமிழரின் அவலவாழ்வின் ஒரு குறுக்குவெட்டு முகத்தோற்றமே இந்நாவல். ஈழப்போராட்டத்தில் வாழத்துடித்த ஒவ்வொரு உயிரும் எத்தனை தீமிதிப்புகளைத் தாண்டி வந்தார்கள்? சோதனைகளையே வாழ்க்கையாக்கிக் கொண்டார்கள்? ஈழத்தில் தமிழ்ப்பெண்ணாய் பிறந்து வேதனை மட்டுமே வாழ்க்கை என்கிற விரக்தியின் விளிம்பிற்குப் போனவளுக்கு ஒரு கைவிளக்கை கொடுத்து அவளுக்கு ஒரு துளி நிழலைக்கொடுத்த திருப்தியுடன் ஆசிரியர் கதையை நிறைவுசெய்துள்ளார். இ.தியாகலிங்கம் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1967 ஆம் ஆண்டில் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை காரைநகர் யா/யாழ்ற்றன் கல்லூரியின் கனிஸ்ட பிரிவிலும், தொடர்ந்து சாதாரண தரத்தை யா/யாழ்ற்றன் கல்லூரியிலும், உயர்தரத்தை காரைநகர் இந்துக் கல்லூரியிலும் பயின்றார். பின்பு நோர்வேயில் மேற்கொண்டு படித்துக் கணினிப் பொறியியலாளரான இவர், அங்கிருந்து தனது எழுத்துப்பணியை 1987 தொடக்கம் செய்து வருகிறார்.

## 14754

**ஒரு நிலமும் சில சுயசரிதங்களும்.** சமரபாகு சீனா உதயகுமார். வல்வெட்டித்துறை: குபேந்திரா பதிப்பகம், 1வது பதிப்பு, ஜுன் 2020. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

x, 265 பக்கம், விலை: ரூபா 550., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-7363-03-5.

சமரபாகு சீனா உதயகுமார் எழுதிய முதலாவது நாவல் இது. சமூகத்தில் ஒருவன் எப்படியான துன்பங்களையும் விமர்சனங்களையும் சவால்களையும் சந்திக்கவேண்டி வருகின்றதென்பதை இந்நாவலில் சுவாரஸ்யமாகச் சொல்கிறார். இக்கதையில் நாயகன் எத்தகையவர்களால் துன்புறுத்தல்களுக்கும் மனக்கிலேசத்திற்கும் உள்ளாகிறான் என்று விபரிக்கும் ஆசிரியர் துன்புறுத்தல்களை நிகழ்த்தும் அல்லது மனக்கிலேசத்தை ஏற்படுத்தும் நபர்களின் நடத்தைப் பிறழ்வுகள் பற்றி எதுவும் சொல்லமுற்படவில்லை. அதனை நியாயப்படுத்தும் ஆசிரியர் "ஒரு சமூக

இயங்கியல் தளத்தில், அச்சமூகத்திலுள்ள எவரும் தனிமனித வசைபாடலைத் தவிர்க்கின்றபோது தான் அந்தச் சமூகம் மனதளவில் மிக வளர்ச்சிபெற்ற சமூகமாகப் பார்க்கப்படும்" என்கிறார். இந்நாவலில் ஒரு நிலம், அந்த நிலத்து மக்கள், அவர்களின் அரசியல், போர், போராளிகள், தலைவர் என்று சொல்ல வேண்டிய தேவை ஏற்பட்டதால் அதனையும் கதையின் பின்புலத்தில் சேர்த்திருக்கிறார்.

## 14755

**கடலின் நடுவில்.** கே.எம்.எம்.இக்பால். கிண்ணியா 4: கலாநிதி கே.எம்.எம்.இக்பால், கட்டையாறு, 1வது பதிப்பு, டிசம்பர் 2008. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L. 1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(4), 60 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 சமீ.

கடலின் நடுவில் கே.எம்.எம்.இக்பால் அவர்களின் பத்தாவது நூலாகவும், முதலாவது நாவலாகவும் வெளிவந்துள்ளது. சரவணன், சேகுத்தம்பி, இஸ்மாயில் ஆகிய மூன்று மீனவர்கள் ஆழ்கடலுக்குத் தொழிலுக்காகச் செல்கின்றனர். கடலின் நடுவிலே திசைமாறி படகு ஆழ்கடலுக்குள் சென்றுவிடுவதிலிருந்து அவர்களுக்கு ஏற்படும் திகில் மிக்க அனுபவங்களை மிகவும் விறுவிறுப்பாக இந்த நாவல் சித்திரிக்கின்றது. ஆபத்தில் உதவுவதற்கு மதம், மொழி என்பன தடைக்கற்களாக அமையாது என்ற மத ஐக்கியத்தை வலியுறுத்தும் நாவல். கொட்டியாரப் பிரதேச வழக்காற்றுச் சொற்களும் மீன்பிடித் தொழில்முறையின் நுணுக்கங்களும், மீனவச் சமூகத்தினரின் வாழ்க்கை முறைகளும் இந் நாவலில் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன. இக்கதை மித்திரன் பத்திரிகையில் தொடர் கதையாக முன்னர் வெளிவந்திருந்தது. தினகரன் பத்திரிகையில் வெளிவந்திருந்த ஒரு செய்தியின்படி கடலுக்குத் தொழிலுக்குப் போன மூவர், படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக சிலநாட்கள் ஆழ்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தனர். இவர்களில் இருவர் இறந்துவிட, எஞ்சியவரான ஜனாப் அபூபக்கர் என்பவர் அவ்வேளையில் இலங்கையில் அமைச்சராகவிருந்த பேரியல் அஷ்ரப்பின் உதவியுடன் தாயகம் மீண்டிருந்தார். இச்செய்தியை அடிப்படையாக வைத்தே இந்நாவல் எழுதப்பட்டுள்ளதென ஆசிரியர் குறிப்பிடுகிறார். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 065326).

## 14756

**கலாபன் கதை (நாவல்).** தேவகாந்தன். நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2019. (சென்னை 600077: மணி ஓப்செட்).

(8), 9-199 பக்கம், விலை: இந்திய ரூபா 240., அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-88631-45-7.

கலாபன் என்னும் மனிதனின் பதினோராண்டுக் கால வாழ்க்கையே இந்நாவல். குடும்பச் சூழலோடு தொடங்கி கரையில் கடலின் ஏக்கத்திலும், கடலில் கரையின் ஏக்கத்திலும் தொடரும் பயணம், கடலோடிகளுக்கு வரம் அருளும் முகவர்கள், கொண்டாட்டமும் ஏக்கமும் நிறைந்த கடல் வாழ்வு, மரண பயத்தைத் தரும் "கடல் நோய்மைகள்", தீராததும் கட்டறுந்ததுமான காமம், உறவுகளின் முகம் தேடும் காத்திருப்பு, நாளையின் எதிர்பார்ப்புக்கள், நிலங்களும் காலநிலைகளும் அறிமுகப்படுத்தும் பல்வேறு மனிதர்கள் என கலாபனின் வாழ்வு பற்றிய உள்ளார்ந்த மடிப்புகளுடன் விரிவுகொள்கின்றது இந்த மீகாமனின் நாவல். கடல் அள்ளியும் கொடுக்கின்றது, பரிதவிக்கவும் விடுகின்றது. மனித வாழ்வைப் பரிகசிக்கிறது. பெரும் நம்பிக்கைகளையும் அவநம்பிக்கைகளையும் உருவாக்கு கின்றது. நெருக்கமானவர்களிடமிருந்து பிரித்து வைக்கின்றது. பின் அதுவே இரக்கங்கொண்டு சேர்த்தும் வைக்கிறது. மீண்டும் சந்நதம் கொண்டு தாயங்களை உருட்டி விளையாடிப் பகடி செய்கின்றது. கப்பல், மனிதர்கள், கடல் பிரதேசங்கள், காலநிலைகள், தரும் குளிர்ச்சி, வறண்ட காற்று, மாறும் நிலம், போக்குவரத்தின் நுட்பங்கள், போன்றவற்றோடு புனைவின் உத்திகளும் நிறைந்த சீரான மொழியைக் கைப்பற்றியிருக்கிறார் தேவகாந்தன். நாவலின் சில அத்தியாயங்கள் சிறுகதைகளாக வாசிக்கப்படக்கூடிய செறிவையும் கொண்டிருக்கின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65554).

## 14757

**கலிங்கு 2003-2015 (நாவல்).** தேவகாந்தன். சென்னை 600005: வடலி வெளியீடு, பி-55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2017. (அச்சக விபரம் தரப்படவில்லை).

644 பக்கம், விலை: இந்திய ரூபா 550., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-0-9919755-9-4.

இறுதி யுத்தத்தின்போது மக்கள் அடைந்த அவலங்களைவிட, அதன் பின்னால் அவர்களின் வாழ்வு மீட்சியற்ற விதமாய் சிதைந்து போயிருப்பதையும், மனிதத்தை, கலாசாரத்தை, சகலதையும்தான் சிதைத்துக்கொண்டிருக்கும் போரின் உப விளைவுகளையும் இந்நாவல் பேசுபொருளாகக் கொண்டிருக்கிறது. வரலாற்றில் இன்னும் ஒரு அரை நூற்றாண்டுக்கு யுத்தத்தின் அழிவின் தழும்புகளும் நோவுகளும் இருக்கவேதான் போகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோரை எண்ணி ஏங்கித் தவித்த இதயங்களும், காணாமலானோர் காரணமாய் இன்னும் யுத்தவடுக்கள் நீங்காது வாழ்பவர்களின் துடிப்புகளும் இருக்கத்தான் போகின்றன. இரவின் கொதி மூச்சுக்கள் சமுத்திரப் பேரோசையாய் இந்த மண்ணை நடுங்கவைக்கப் போகின்றன. இந்தத் தலைமுறையின் சாபமாக இது இருக்கின்றது. இதன் நியாயமென்ன என்ற கேள்வியிலிருந்தே "கலிங்கு" நாவல் எழுதப்பட்டிருக்கின்றது. யுத்தம் பற்றிய நினைவுகள் விழுப்புண்களென ஈழத்தமிழ்ச் சமூகத்தைத் தொந்தரவு செய்தபடியிருக்கிறது. சொற்கள் கொண்டளக்க முடியாத நோவு கொண்டழும் சமூகத்தின் உளவியலை, அவர்களது மீண்டெழும் முயற்சிகளை, குற்றவுணர்வின்

கண்ணீரை, தோற்றும் துவளாத மனிதர்களை பிழைத்து இருத்தலின் சாகசத்தை 2003-2015 காலப்பகுதியைக் களனாகக் கொண்டிருக்கும் கலிங்கு பேசுகின்றது. அதே வேளை இலங்கைத் தீவினைச் சூழ்ந்து இறுக்கும் இனத்துவேசத்தின் மூலவேர் எதுவெனவும் அது விசாரணை செய்கிறது. இரணைமடுக் குளத்தின் மிகைநீர் வெளியேற்றம், பாசனநீர் வெளியேற்றமாகிய இரண்டின் செயற்பாடுகளையும் துல்லியமாய் பிரித்துநின்ற சொல் "கலிங்கு". அது திறக்கப் பாய்தலின் உத்தியாயும் அங்கே அமைந்திருந்தது. அதனைச் சூழ்ந்த பிரதேசங்களுக்கும் அந்த அணைக்கட்டுக்குமே அது ஒரு பாதுகாப்பின் அம்சமாகும். கலிங்கு பூட்டப்பட வேண்டிய நேரத்தில் பூட்டி, திறக்கப்படவேண்டிய நேரத்தில் திறக்கப்படாவிடில் அநர்த்தங்கள் நிகழும். 1973இல் கிளிநொச்சியின் வெள்ள அநர்த்தம் கலிங்கு திறக்கப்படாததன் விளைவு. அதையே புத்தாயிரத்தின் முதல் தசாப்த இறுதியில் விளைந்த ஓர் அரசியல் அவலத்தினை நுட்பமாய் விபரிக்க கலிங்கின் பொறிமுறையை ஒரு பூடகமாக தேவகாந்தன் தன் நாவலில் பொதிந்து வழங்கியிருக்கிறார். 1947இல் பிறந்த தேவகாந்தன் யாழ்ப்பாணத்தில் தன் கல்வியை முடித்து, 1968இல் "ஈழநாடு" நாளிதளின் ஆசிரியபீடத்தில் இணைந்து பணியாற்றியவர். 1984இல் தமிழகம் சென்று நீண்டகாலம் அகதியாகத் தங்கியிருந்தவர். அக்காலகட்டத்தில் கலை, இலக்கிய, சினிமா முயற்சிகளில் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்டவர். கனவுச்சிறை உள்ளிட்ட எட்டு நாவல்களையும் மூன்று சிறுகதைத் தொகுப்புகளையும் எமக்கு வழங்கியவர். தற்போது கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்கின்றார்.

## 14758

**காகிதப் படகு (குறுநாவல்கள்).** மலரன்னை (இயற்பெயர்: திருமதி அற்புதராணி காசிலிங்கம்). அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, நவம்பர் 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

vi, 130 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-4676-88-6.

மலரன்னை எழுதிய உயிர்த்துளி, காகிதப்படகு, காலத்திரை ஆகிய மூன்று குறுநாவல்களின் தொகுப்பு இது. ஒரு குடும்பப் பெண் இந்தச் சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழ குழந்தைப்பேறு எவ்வளவு முக்கியமானதொன்று என்பதை "உயிர்துளி" வலியுறுத்துகின்றது. கணவனது துணையில்லாமல் வாழும் ஒரு பெண், கையில் குழந்தையுடன் இச்சமூகத்தில் தனியொருத்தியாக நின்று எத்தகைய இன்னல்களை அனுபவிக்கவேண்டியுள்ளது என்பதை "காகிதப்படகு" விபரிக்கிறது. ஒரு குடும்பத்தில் மனைவியின் முக்கியத்துவத்தையும் இறப்பினால் அவளைப் பிரியும்போது குடும்பத்தினரிடையே ஏற்படும் உளத்தாக்கத்தையும், உயிருடன் இருக்கும் மகளைப் பிரிந்து வாழும்போது ஏக்கத்தினால் மனம் சோர்ந்து வாடும் ஒரு தந்தையின் உணர்வுகளை "காலத்திரை" பிரதிபலிக்கின்றது. ஜீவநதி வெளியீட்டகத்தின் 114ஆவது பிரசுரமாக இக்குறுநாவல் தொகுதி வெளிவந்துள்ளது.

## 14759

**காமமே காதலாகி.** இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Tyristubbveien 77, 0687 Oslo, *1வது பதிப்பு செப்டெம்பர் 2016. (மின்நூல் வடிவமைப்பு* lulu.com *சுய வெளியீடு உதவி).*

*253 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN*: 978-1-326-80433-6.*

*காதலே மூச்சு என்கின்ற கற்பனையில் மிதக்கும் ஒருவனுக்கு அல்லது ஒருத்திக்கு அந்தக் காதலே பொய், அவன் அல்லது அவள் காதலித்தவர் பொய்யின் உருவம் என்பது தெரிகிறபோது அவர்கள் மனதில் தோன்றும் உணர்வுகளுக்கு இந்தப் பிரபஞ்சத்தின் எல்லையைத் தாண்டியும் சொற்களைக் கொண்டுவர முடியாது. காதல் போதை. அதுவே தோல்வி அடையும்போது அவனைத் தற்கொலை செய்யத் துண்டும் காலனின் பாசக்கயிறாகிறது. காதல் வயப்படாதவனுக்கு இவன் ஏன் தற்கொலை செய்தான் என்றிருக்கும். அந்தப் போதையில் அகப்பட்டவனுக்கு இனி வாழ்ந்தென்ன பயன் என்றிருக்கும். பலர் காதல் கைகூடாத போது ஏன் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்பதற்கு இந்தக் கதாநாயகனோடு பயணிக்கும்போது ஓரளவு புரிதல் உண்டாகும். அதற்காக அதுவே வழியென்று யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. காதலின் காயத்திற்கும் காலம் மருந்து தரும். காதல், ஏமாற்று, துரோகம், கோபம், துக்கம், இயலாமை, அதீத நம்பிக்கை என்கின்ற உணர்ச்சிகளில் கொந்தளித்து, தனது வாழ்வை அழித்துக் கொண்ட ஒருவனை இந்த நாவலில் நீங்கள் பார்க்கலாம்.*

## 14760

**காலங்கள் மாறும்.** கே.எஸ்.ஆனந்தன். *(இயற்பெயர்: கார்த்திகேசு சச்சிதானந்தம்). சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2002. (சென்னை 4: ஸ்கிரிப்ட் ஆஃப்செட்).*

ii*, 202 பக்கம், விலை: இந்திய ரூபா 45.00, அளவு: 18.5*x*12.5 சமீ.*

*முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த முரசொலி பத்திரிகையின் வார இதழில் தொடர்கதையாகப் பிரசுரமான சமூக நாவல் இது. திருமணமான இளவயதில் பொறுப்புணர்வு கெட்ட கணவனான சத்தியமூர்த்தியைக் கைவிட்டு, ஒரே மகனான ரகுவரனையும் சத்தியமூர்த்தியிடமே விட்டுத் தன் முன்னாள் காதலன் மாசிலாமணியுடன் ஊரைவிட்டு ஓடிச்சென்று குடும்பத்திலும் சமூகத்திலும் அவப்பெயரைச் சம்பாதித்த சந்திரஞானத்தின் வாழ்வின் பின்னணியில் கதையின் ஒரு பகுதி நகர்ந்து செல்கின்றது. மறு தளத்தில், மகன் ரகுவரன், சமரசிங்க என்ற சிங்களவரிடம் வளர்ப்பு மகனாக வளரும் பின்னணியில் கதை நகர்த்தப்படுகின்றது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்றுத்தேர்ந்து உயர்பணியில் ரகு அமர்வதும், சிந்துவுடன் காதல்வசப்படுவதும், தாயின் பின்னணியை இறுதியில் ரகுவரன் அறியவருவதும் மற்றொரு தளத்தில் கதையை வளர்த்துச் செல்கின்றது. தன்னை சமரசிங்க என்ற தனது தந்தையின் சிங்கள*

நண்பரிடம் ஒப்படைத்துவிட்டு தன்னை இளவயதிலேயே அநாதையாக வாழ வைத்துவிட்டு, தமிழகத்துக்குச் சென்று விட்ட தந்தையைப் பற்றி இறுதியில் தெரிந்துகொள்வதும், இறுதியில் ரகுவரன்- சிந்து திருமண வைபவத்தினை மாசிலாமணி-சந்திரஞானம் இணைந்து நடத்திவைப்பதும், அருண்மொழி தன் தங்கை என்பதை அறிந்து தான் இனி அநாதையில்லை என்று ரகுவரன் மகிழ்வெய்துவதும் எனப் பல்வேறு சமூகச் சிக்கல்களுடன் இந்நாவல் பயணிக்கின்றது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 018626).

## 14761

**கானல் தேசம்.** நொயல் நடேசன் (இயற்பெயர்: என்.எஸ்.நடேசன்). நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2018. (சென்னை: 600077: மணி ஒப்செட்).

399 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-86820-88-4.

கானல் தேசம் நாவல், இலங்கையில் நீடித்த ஈழவிடுதலைப்போராட்டம் குறித்து விமர்சனப்பார்வையுடன் எழுதப்பட்டுள்ளது. போருக்காகக் கட்டமைக்கப்படும் நியாயப் புனிதங்களின் இருள் ஆழங்களில் புதையுண்ட வரலாற்று உண்மைகளை மானுட அறத்தின் ஒளிமூலம் பேச விழையும் பிரதி இது. இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்களது தவறுகளை மட்டுமல்ல, அயல்நாடான இந்தியாவின் பங்கையும் விவரிக்காமல் இந்தப் போரை பற்றி எழுதமுடியாது. போரின் இறுதிக்காலத்தில் மேற்கு நாடுகள் பலவும் இதில் பங்குகொண்டன. இந்தப்போரில் முக்கிய பங்குகொண்ட விடுதலைப்புலிகள் இயக்கம், தமிழர்களுக்காக இலங்கை அரசோடு போராடியதுடன் மட்டும் நிற்கவில்லை. ஏனைய விடுதலை இயக்கங்களை எதிர்த்தும் போராடியது. அத்துடன் உள்நாட்டில் வாழ்ந்த ஏனைய இனத்தினரோடும் போராடியது. வெளிநாடுகள் முன்வைத்த தீர்வு யோசனைகளுக்கு எதிராகவும் போராடியது. ஒரு விதத்தில் பல முனைகளில் போரிடவேண்டிய நிலையை தங்களுக்குள் அவர்களே உருவாக்கினார்கள் என்று இந்நாவலாசிரியர், கானல் தேசம் நாவலை தான் ஏன் எழுதினேன் என்பதற்கான நியாயத்தை கற்பிக்கின்றார். சிறுகதை, நாவல், விமர்சனம், நூல் அறிமுகம், பயண இலக்கியம் முதலான துறைகளில் எழுதிவரும் நடேசன், அவுஸ்திரேலியாவில் தொழில் ரீதியில் விலங்கு மருத்துவருமாவார். அதனால், தனது தொழில்சார் அனுபவங்களையும் புனைவுகளாக்கிவருபவர். அவ்வாறு எழுதப்பட்ட இவரது வாழும் சுவடுகள் நூலும் இரண்டு பதிப்புகளை கண்டுள்ளது. ஏற்கனவே இவர் எழுதியிருக்கும் வண்ணாத்திக்குளம், உனையே மயல்கொண்டு ஆகிய நாவல்கள் ஆங்கிலத்தில் வெளியாகியுள்ளன. இதில் வண்ணாத்திக்குளம் சிங்கள மொழியிலும் வரவாகியுள்ளது. இவரது சிறுகதைகளும் ஆங்கிலம், சிங்களம் மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. காலச்சுவடு பதிப்பகத்தின் 856ஆவது நூலாக வெளிவந்துள்ளது.

### 14762

**குட்டி**. *யோ.பெனடிக்ற் பாலன். கொழும்பு 12: எழுத்தாளர் கூட்டுறவுப் பதிப்பகம், 230, மெசஞ்சர் வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1963. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).*

vi, *88 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 19*x*13 சமீ.*

*பருவத் தவறால் பெற்ற மகனைத் தம்பி முறையிட்டு வளர்க்கும் ஒரு தாயின் கதையே இக் குறுநாவலாகும். சமூகத்தில் அவள் எதிர்கொள்ளும் சவால்கள், சோதனைகள் என்பன கதையை வளர்த்துச் செல்கின்றன. யோ. பெனடிக்ற் பாலன், (1939 - 1997) முற்போக்கு இலக்கியப் பேரியக்கத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு, எழுத்துத்துறையில் தன் 19ஆவது வயதில் காலடி பதித்து, இளவயதில் (23வயதில்) எழுதிய குறுநாவல் இது. இவர் பின்னாளில் கல்வித்துறையில் முதுகலைமாணிப் பட்டம் பெற்று உளவியல் விரிவுரையாளராகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 1984 முதல் 8 ஆண்டுகள் பணியாற்றிப் பின்னர் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றினார். இவர் பல சிறுகதைகளையும் நாடகங்களையும் எழுதியுள்ளார். இவரது "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக" என்ற சிறுகதைத் தொகுதிக்கு 1995 இல் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. இவரது "நீயொரு பெக்கோ" என்ற நாடகம் நன்கறியப்பட்டதாகும். இவர் கல்வி உளவியல் அடிப்படைகள் போன்ற கல்வியியல் சார் நூல்களையும் எழுதியுள்ளார்.*

### 14763

**கும்பிட்ட கையுள்ளும் கொலைசெய்யும் கருவி (நாவல்)**. *ஆ.மு.சி.வேலழகன். மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, 2015. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).*

*217 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-7654-01-0.*

*இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சாரதியாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற கவிஞர் ஆ.மு.சி.வேலழகன், மட்டக்களப்பு திருப்பழுகாமத்தைச் சேர்ந்தவர். 1960ம் ஆண்டு முதல் எழுதிவருவதுடன், 18 நூல்களுக்கு மேல் படைத்துள்ள பன்னூலாசிரியரான இவரது நாவலாக இந்நூல் வெளிவந்துள்ளது. இவரது "மூங்கில் காடு" நூலினை தமிழ்நாடு பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியர் சோ.இளங்கோ அவர்கள் ஆய்வுசெய்து* M.Phil *பட்டம் பெற்றுள்ளார். பேராசிரியர் திரு. இரா. கோவிந்தன் அவர்கள் இவரது நூலான "சில்லிக்கொடி ஆற்றங்கரை" நாவலினை தமிழ்நாடு தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுசெய்து* M.Phil *பட்டம் பெற்றுள்ளார். இதுபோல் இவருடைய நாவல்கள், சிறுகதைகள், கவிதைகளை முறையே மூவர் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில்* M.A. *பட்டத்திற்கென ஆய்வு செய்தமையும் குறிப்பிடத்தக்கது.*

**14764**

**கொலம்பசின் வரைபடங்கள்.** யோ.கர்ணன். சென்னை *600024:* வடலி வெளியீடு, F-*1*, ஸ்ரீவாரி பிளாட்ஸ், *8*A, அழகிரி நகர் *4*வது குறுக்குத் தெரு, லட்சுமிபுரம், வடபழனி, *1*வது பதிப்பு, டிசம்பர் *2013*. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*72* பக்கம், விலை: இந்திய ரூபா *55.00*, அளவு: *21*x*13.5* சமீ., ISBN: *978-0-9919755-3-2*.

“தேவதைகளின் தீட்டுத் துணி”, “சேகுவேரா இருந்த வீடு” ஆகிய இரு சிறுகதைத் தொகுதிகளைத் தொடர்ந்து வெளிவரும் யோ.கர்ணனின் மூன்றாவது நூல் இந்நாவலாகும். இறுதிகட்ட போரின் இறுதிகட்ட நிமிடங்களை தன்னுடைய சுயவாழ்க்கைப் பதிவுகளாகச் சொல்கிறார். தான் தேடிவந்த நாட்டை கொலம்பஸ் மிகச் சரியாகக் கண்டுபிடித்துவிட்டார். ஆனால், ஈழத் தமிழ் மக்கள் பலரால் அப்படி கண்டுபிடிக்க முடியவில்லை. அதனை குறிப்பால் உணர்த்துகிறார் ஆசிரியர். எத்திசையென்று இன்றி மரணம் விதியாக நின்ற யுத்த நிலத்திலிருந்து பொருளாதார பலம், அதிகார பலம், உடற் பலம் இன்ன பிற வலிமையுடன் தப்பிச் செல்ல முடிகிறவர்கள் மற்றும் அத்தகையை வலிமைகளுள் அடங்கா தவர்களது தப்ப முனையும் முடிவறியாப் பயணத்தை இந்நாவல் விபரிக்கிறது. கற்பனைகளுக்கு அப்பாற்பட்ட இவ் அனுபவங்களை அச் சூழலிலிருந்து வந்தவரான ஒரு கதைசொல்லியின் மூலம் இந்நாவல் பதிவுசெய்கின்றது. மக்களை வெளியேறவிடாமல் இலங்கை ராணுவம் ஒரு பக்கமும், புலிகள் அமைப்பு இன்னொரு பக்கமுமாக துப்பாக்கி மூலமாக தடுத்த காட்சிகள் இந்நூலில் விரிகின்றன. கொலம்பஸுக்கு இருந்தது ஒரு சவால். கடலுக்கு மட்டுமே வரைபடம் வரைய வேண்டியிருந்தது. ஈழத்தமிழருக்கோ இரண்டு சவால்கள். கடற்பயணங்கள் புறப்படுவதற்காக கடற்கரைகளைச் சென்றடைவதற்கும் வரைபடங்கள் வரைய வேண்டியிருந்தது. முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற போரின் இறுதிக் காட்சிகளின் யதார்த்தத்தை உணர்வுபூர்வமாகப் பதிவுசெய்கின்றது. புலிகள் அமைப்பின் அரசியல் துறைக்கும் புலனாய்வு துறைக்குமான இடைவெளியை அம்பலப் படுத்துகிறது. தாக்குதல் அணிப் போராளிகளுக்கும் அரசியல் போராளிகளுக்கும் இருந்த இடைவெளியையும் சொல்கிறது. “மன்னன் இல்லை. தளபதிகள் இல்லை. போர் வீரர்களென்று யாரும் இல்லை. நம்பிக்கையின் சிறு துரும்பெதுவும் மிதக்காத கரைகளற்ற கடலின் திசையறியாத பயணிகள். கடலடிக்கும் எல்லை வரையாகவும் இருகரையும் விரிந்திருந்த ராஜ்யம் சுருங்கி ஒரு பொட்டல்வெளியில் எரிந்தழிந்தது. உயிராலும் ரத்தத்தினாலும் சதைகளினாலும் கட்டியெழுப்பப்பட்டிருந்த கனவு சிதறிக்கிடந்தது. நந்திக்கடலில் கலந்த இன்னோர் ஆறாக ரத்த ஆறுமிருந்தது” என இதனை யோ.கர்ணன் விபரிக்கிறார். இந்த நிலைக்கு முன்னதாக இறுதி கட்டத்தில் நடந்த கலங்கவைக்கும் நிகழ்வுகளை மனக்கண் முன் கொண்டுவருகிறார். இவர் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் போராளியானவர். போரில் ஒரு காலை இழந்தவர்.

## 14765

**சர்வஉடூருபிகரம்.** இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Tyristubbveien 77, 0687 Oslo, *1வது பதிப்பு மே 2016. (மின்நூல் வடிவமைப்பு* lulu.com *சுய வெளியீடு உதவி).*

*169 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14.5 சமீ.,* ISBN: *978-1-326-64802-2.*

*புலிகள் என்றும் விமர்சனத்திற்கு உட்படாதவர்கள் என்பது பலரின் எண்ணம். இந்த நாவல் புலிகளை விமர்சனம் செய்வதை நோக்காகக் கொண்டதல்ல. புலிகளின் பெயரைப் பயன்படுத்தி வெளிநாட்டில் வாழ்ந்த பினாமிகள் செய்த சில கூத்துக்களின் சிறிய அம்பலம் இது. அதுவும் ஒருகோணத்தில் இருந்து பார்க்கப்பட்டது. இதற்கு மறுகோணங்கள் இல்லை என்பது ஆசிரியரது வாதமில்லை. அப்படியான பார்வைகளும், பதிவுக்கு வரவேண்டும் என்பதே அவரது விருப்பம். போராட்டம் நடக்கும் போது வைக்கப்படும் விமர்சனம் போராட்டத்தை நலிவுறுத்தும் என்பதை தனது கருத்தில் வைத்திருந்த ஆசிரியர் தற்போது புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனித்துவிட்ட நிலையில் தன் கருத்துக்களை எதிர்காலப் பாதையை செப்பமிடும் வகையில் தன் பாத்திரங்களின் ஊடாக முன்வைக்கிறார். ஈழம் என்பது கனவாகிவிட்டது. இனி ஆயுதப் போராட்டம் என்பதே மீண்டும் வரக்கூடாது. இருந்தும் உரிமைக்கான போராட்டம் தொடர வேண்டும் என்பது இந்நாவலாசிரியரின் நிலைப்பாடாக உள்ளது.*

## 14766

**சாதிகள் இல்லையடி பாப்பா (நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை *600026:* குமரன் பப்ளிஷர்ஸ், *12/3,* மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7வது தெரு, வடபழநி, *1வது பதிப்பு, 2019. (சென்னை: சிவம்ஸ்).*

*124 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12 சமீ.*

*வேம்பும் வெண்ணிலாவும் ஒரே கல்லூரியில் ஆய்வு வரை கற்றவர்கள். வேம்பு தனிக் கல்லூரி ஆரம்பிக்கிறார். வெண்ணிலா தாயாரின் முதுமை காரணமாக அவரது மறைவின் பின்னர் வேம்புவுடன் இணைகின்றார். இருவரும் புரட்சிக் கோட்பாட்டுடன் கல்லூரியை விரிவாக்குகின்றனர். வெண்ணிலாவும் இன்றைய குடும்ப அமைப்பை உடைப்பதில் ஆர்வம் காட்டுகின்றார். கல்லூரி விடுதியிலும் பாலியல் வேற்றுமை காட்டாது விடுதி அறைகள் ஒதுக்குவதையும் மாணவியர் ஏற்றனர். வாடகை பாதியாகக் குறைவதையும் கல்லூரிப் பாடங்களில் உதவி பெறும் வாய்ப்பையும் பெற அவர்கள் விரும்பினர். நாவலில் புற வாய்ப்பாக வளரும் சீவகன், ஆடுகள் முழு பாலியல் சுதந்திரம் பெற்றதாகக் கூறுவார். மனித இனம் குறிப்பாக சிறையுள் பெண்ணை வைத்துள்ளது. சொத்து வாரிசுக்கே வீட்டு அடிமைச் சாதியாக, கழுத்தில் மஞ்சள் கயிறு, கால் விரலில் மெட்டிகள் என்பார் வெண்ணிலா. கதாபாத்திரங்களிடையே வளர்க்கப்படும் மார்க்சியப் பார்வையுடனான உரையாடல்களின் வழியாக நாவல் நகர்த்தப்படுகின்றது. இந்நாவல் போன்றே, செ.கணேசலிங்கனின் முன்னைய பல நாவல்களிலும்*

பெண்விடுதலை மற்றும் பெண்ணியச் சிந்தனைகளை மிக ஆழமாகவும் தெளிவாகவும் விவாதிக்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணின் கதை, ஒரு குடும்பத்தின் கதை, இரண்டாவது சாதி, நீ ஒரு பெண், கவர்ச்சிக் கலையின் மறுபக்கம், குடும்பச் சிறையில், நான்கு சுவர்களுக்குள், புதிய சந்தையில், நரகமும் சொர்க்கமும் ஆகிய நாவல்களில் பெண்கள் எதிர் கொள்ளும் பன்முகப்பட்ட அழுத்தங்கள், பிரச்சனைகள் குறித்து ஆராய்ந்துள்ளார். கலை, இலக்கியங்கள் மயக்க மூட்டும் மதுவாக்கப்படக் கூடாது. கலை, இலக்கியங்கள் மூலம் நல்ல உயர்ந்த கருத்துகளை மனதில் பதிய வைக்கலாம். புறநிலைப் பண்ட உற்பத்திகள் எவ்வாறு விஞ்ஞான ரீதியாக வளர்க்கப்படுகிறதோ, அதே போல அகநிலை உற்பத்தியான கலை, இலக்கியங்களும் விஞ்ஞான ரீதியாக, மனித சமுதாயத்தை மாற்றி அமைக்கக் கூடிய உந்து சக்தியாக வளர்க்கப்பட வேண்டும்." என கலை இலக்கிய வளர்ச்சி குறித்து செ. கணேசலிங்கன் தமது சிந்தனையை பதிவு செய்துள்ளார்.

## 14767

**சுடர் விளக்கு (நாவல்).** *பா.பாலேஸ்வரி (இயற்பெயர்: செல்வி பாலேஸ்வரி பாலசுப்பிரமணியம்). திருக்கோணமலை: திருக்கோணமலைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், 471, திருஞானசம்பந்தர் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1966. (மட்டக்களப்பு: ராஜன் அச்சகம், 25, முனைத்தெரு).*

*154 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 2.50, அளவு: 18x13 சமீ.*

*செல்வி பா.பாலேஸ்வரி (பின்னாளில் திருமதி பாலேஸ்வரி நல்லரத்தினசிங்கம்) வீரகேசரி வாரவெளியீட்டில் 1965இல் தொடராக எழுதிவந்த தொடர்கதையின் நூல்வடிவம் இது. இது அவரது முதலாவது நாவலாகும். திருக்கோணமலைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இதனைத் தமது இரண்டாவது வெளியீடாக வெளியிட்டுள்ளது. பெற்றோரின் சம்மதமின்றி திருமணம் செய்யவரும் ஆண்களைப் பெண்கள் ஏற்கலாகாது என்ற கருத்தை 20ம் நூற்றாண்டு நடுப்பகுதியின் ஈழத்து நடுத்தரவர்க்கப் பின்னணியில் நின்று கதாமாந்தர்களின் வாயிலாக வலியுறுத்துகின்றார். டாக்டர் சுமதி, டாக்டர் சங்கருடன் நெருங்கிப் பழகுகின்றாள். இது காதலாக மலர்கின்றது. சுமதியின் இலட்சியமும், பெற்றோரின் நோக்கமும் காதலைத் தடுக்க-அதனால் ஏற்படும் மனப்போராட்டம், இறுதியில் அவர்களின் இணைவு என்பன கதையை நகர்த்துகின்றன. அன்பெனும் அருமருந்து, உதயம் கண்ட தாமரை, கவ்விக்கொண்ட ஜோடிக்கண்கள், அவளை அறியா அன்பு மனம், துணிந்தபின் பயமெதற்கு, என் எதிர்கால மனைவி நீ, என்னுயிராய் நீயிருந்தாய், இரு சொட்டுக் கண்ணீர், தொண்டு செய்யும் தேவதைப் பெண், விடு அவன் போகட்டும், இறுகப் பற்றிய இன்பக் கரங்கள், எனக்கும் ஒரு இதயம் உண்டு, வெந்த புண்ணில் பாய்ந்த கூர் நெடும் வேல், இவள் வேண்டாம் அவள் போதும், அத்தான் இட்ட தயிர்க்கட்டி, கைவளை தந்த இரத்தக் கறை, வந்த விருந்து வறிதே திரும்புவதோ, தூது நீ சென்று வாராய், தூக்கி வளர்த்த கை சும்மா இருக்குமா?, நானென்னும் நிலைகெட்டு நாமாகும் தனிவாழ்வு, ஒட்டாது ஒருபோதும் வெட்டிவிட வேண்டுமையா, எல்லோரும் கூடி எதை முடிக்க*

நினைத்தனரோ?, சேர்ந்து நின்ற சிறப்பான ஜோடிகள் ஆகிய 24 அத்தியாயங்களில் இச் சமூகநாவல் விரிந்துள்ளது.

### 14768

**சேற்றின் நடுவில்**. கற்பகன் தம்பிராஜா (மூலம்), தம்பிராஜா ஈஸ்வரராஜா (பதிப்பாசிரியர்). கொழும்பு: கற்பகம் பிரசுரம், 2A, கிராமோதய மாவத்தை இராஜகிரிய, 1வது பதிப்பு, 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B புளுமென்டால் வீதி).

xi, 39 பக்கம், விலை: ரூபா 40.00, அளவு: 17x12 சமீ.

1974ஆம் ஆண்டு அமரர் கற்பகன் தம்பிராஜா அவர்களால் எழுதப்பட்ட இந்நாவல் 1999 இல் அவரது குடும்பத்தினரால் நூலுருவாக்கப்பட்டுள்ளது. அமரர் கற்பகன் தம்பிராஜா ஆசிரிய சேவையில் நீண்டகாலம் ஈடுபட்டவர். பணிக்காலத்திலும், ஓய்வூதியம் பெற்ற வேளையிலும் பல்வேறு கட்டுரைகள், நாடகங்கள், நாட்டுக்கூத்துக்கள் என எழுதிவந்தவர். அவரது வாழ்நாட்காலத்தில் இவை நூலுருவாகும் வாய்ப்பினைப் பெற்றிருக்கவில்லை. 1974இல் எழுதப்பட்ட இக்குறுநாவலே அவரது முதலாவது நூலாக வெளிவந்துள்ளது. கற்பகன் தம்பிராஜா ஆசிரியர் 1970 களில் கூத்துக்கலையை மாணவர்கள் மத்தியில் பரப்ப அர்ப்பணிப்போடு பாடுபட்ட ஒரு கூத்துக் கலைஞர் ஆவர். அவர் 1970களில் வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் தயாரித்த பவளக்கொடி, குருக்கேத்திரன் போர் ஆகிய இரண்டு கூத்துக்களும் முக்கியமானவை (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21050).

### 14769

**தீவிரவாதி? (நாவல்)**. செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பதிப்பகம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2010. (சென்னை: சிவம்ஸ்).

176 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12.5 சமீ.

"தீவிரவாதி" என்ற வார்த்தை இன்று முதலாளித்துவ ஊடகங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது. இன்றைய சமூக அமைப்புக்கு எதிராகச் செயல்படுபவர் அனைவரும் தீவிரவாதி என்ற வரையறைக்குள் எளிதாகப் பொருந்தி விடுகின்றனர். இந்நாவலின் கதாநாயகன் குணசேகரன் கோவை கிராமத்தில் பிறந்து, நகரில் கல்வி கற்று, வக்கீல் தொழிலைவிட்டு அரசியல் தொழிற்சங்கப் பணியில் ஈடுபடுகிறான். அண்ணன் வற்புறுத்தியபடி முறைப்பெண்ணான முத்தம்மாவை ஒப்பந்தத்துடன் மணக்கிறான். ஒரு குழந்தையுடன் முத்தம்மாவை விட்டு அரசியல், தொழிற்சங்கப் பணியில் சிறை செல்கிறான். பெண்ணியம், பாலியல், சினிமா, தொழிற்சங்கம், உலக அரசியல் யாவிலும் புதிய புரட்சிகரக் கருத்துக்களைக் கூறுகின்றான். தலைமறைவு வாழ்வு, நீண்ட சிறைவாசத்தின் பின்னர் மீண்டும் தொழிலாளியாக, தொழிற்சங்கப் பணிகளில் ஈடுபடுகிறான். கல்லூரி நண்பன் சினிமா டைரக்டர் முருகேசன், பெண்ணியம் கற்கும் விடுதலை பெற்ற பெண்

நந்தினியும் அவனோடு இணைகின்றனர். குணசேகரனின் கதையே இங்கு தீவிரவாதி நாவலின் கருவாகின்றது.

## 14770

**துர்கா.** மொழிவாணன். கொழும்பு 13: நீரஜா பப்ளிக்கேஷன்ஸ், 248/83, ஆட்டுப்பட்டித் தெரு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1982. (கொழும்பு: மொடர்ன் பிரின்டர்ஸ்).

viii, 100 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 9.90, அளவு: 17.5x12 சமீ.

இது ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் ஆறாவது நாவல். தினகரன் வார மஞ்சரியில் தொடராக வெளிவந்தது. இலங்கையின் மாடல் அழகியான குமாரி அஞ்சலாவின் (துர்கா) கவர்ச்சிப் புகைப்படங்களுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. ஒரு பெண் பயங்கரவாதியின் உண்மைக்கதை என்ற விளம்பரத்துடன் வெளிவந்துள்ளது. இந்தியாவின் மத்திய பிரதேசத்துப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தின் பதிவேடுகளில் உள்ள குறிப்புகளின்படி துர்காதேவி 10.10.1933இல் நாஜிபாபாத் கோட்டையில் பிறந்துள்ளதாகவும், சுமார் 700 கொலைகளையும், 699 கொள்ளைகளையும் மேற்கொண்டதாவும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். மென்மையான உள்ளம் கொண்ட ஒரு பெண் எப்படி கொடுமையான பயங்கரவாதியானாள் என்பதை சுவையுடன் இந்நாவலில் விபரித்துள்ளார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17371).

## 14771

**துருவத்தின் கல்லறைக்கு.** இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Tyristubbveien 77, 0687 Oslo, 1வது பதிப்பு ஓகஸ்ட் 2016. (மின்நூல் வடிவமைப்பு lulu.com சுய வெளியீடு உதவி).

258 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-1-326-76434-0.

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்பு மேற்படிப்புக்காகவும், தொழிலுக்காகவும் ஈழத்தில் இருந்து உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாகும் முன்னர் பலர் புலம்பெயர்ந்து சென்றிருக்கிறார்கள். கப்பலுக்கு, மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று திரும்பி வந்து செல்வந்தர்களாக வாழ்ந்தவர்கள் பலர். யுத்தம் தொடங்குவதற்கு முன்னர் ஐரோப்பாவுக்குச் சென்று அங்கு உண்டான நட்பின் நிமித்தம் அங்கேயே தங்கிவிட்ட நண்பர்களைச் சுற்றிப் புனையப்பட்ட நாவலே இது. ஈழத்திலிருந்து யுத்தத்தால் புலம் பெயர்ந்தவர்கள் இது ஒரு தற்காலிகப் புலப்பெயர்வே என்று ஆரம்பத்தில் கருதியிருந்தனர். முடிவில் அந்த நண்பர்கள் தங்கள் இறுதிக் காலத்தை இந்த ஐரோப்பிய, கனேடிய அல்லது அவுஸ்திரேலிய மண்ணில் கழிப்பதற்குத் தங்களைத் தாயார் செய்கிறார்கள். எரிப்பதா புதைப்பதா என்கின்ற விவாதமும், ஓய்வூதியம் சேர்ப்பது பற்றிய விவாதமும் தொடர்கிறது. அரச முதியோர் காப்பகங்கள் இருந்தாலும் அதைவிடப் பாதுகாப்பு வேண்டும் என்று

சிலர் நினைக்கிறார்கள். இருந்தும் அவர்களின் அசைபோடல்களும், தாய்நாட்டைப் பற்றிய அங்கலாய்ப்புக்களும் ஆத்மாக்களோடு ஒன்றியதாகக் கூடு விட்டு மேலுலகம் செல்லவும் தயாராக உள்ளன. ஒருவனுடைய முதுமைக் காலம் ஐரோப்பாவில் எப்படி இருக்கும் என்பதையும், அதனால் உருவாகும் ஆத்ம விசாரணைகளையும் உள்ளடக்கியதே இந்நாவல். மொழிக்கலப்பைக் குறைப்பதற்காக வட்டார வழக்கிற்கே ஐரோப்பிய மொழி உரையாடல்கள் மாற்றப்பட்டுள்ளன.

### 14772

**துன்பக் கேணியில்... (ஒரு நாவல்).** செ.யோகநாதன். கொழும்பு: சத்யபாரதி பதிப்பகம், 202/1 காலி வீதி, மவுன்ட் லவீனியா (கல்கிசை), 1வது பதிப்பு, 1997. (சென்னை 5: மாசறு பதிப்பகம், திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை).

101 பக்கம், விலை: இந்திய ரூபா 40.00, அளவு: 19.5x13 சமீ.

1985 காலப்பகுதியிலிருந்து இக்கதை தொடங்குகின்றது. இலங்கைத் தமிழரின் அகதிவாழ்வு பற்றிப் பேசும் நாவல். இது பின்னர் "நிரய" என்ற தலைப்பில் மடுளுகிரியே விஜயரத்னவால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. 1942ல் பிறந்த செ.யோகநாதன் அவர்கள் மாரடைப்பால் 28.01.2008 ல் இறக்கும் வரை நிறையவே எழுதிக்குவித்தவர். 1962ல் தன் முதல் சிறுகதையான "மனக்கோலத்தை" எழுதியது முதல் தொடர்ந்து சிறுகதை, நாவல், குறுநாவல், சிறுவர் இலக்கியம், திரைப்பட விமர்சனங்கள் என எழுத்தை விரிவுபடுத்தியவர். இலங்கையில் வாகரையிலும், பூநகரியிலும் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய பின் நாட்டு நிலைமை காரணமாக 1983ல் இந்தியாவிற்கு செல்ல நேரிட்டது. இந்நாவல் இவரது இந்திய அகதி வாழ்வின்போது எழுதப்பட்டது. மேலும் இவரது கைவண்ணத்தில் 13 நாவல்களும், 15 குறுநாவல்களும், 17 சிறுகதைத் தொகுதிகளும், 11 சிறுவர் நூல்களும், சினிமா, வாழ்க்கைவரலாறு என இரு நூல்களும் வெளிவந்துள்ளன. இவர் சஞ்சயன் எனும் புனைபெயரிலும் எழுதிவந்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21139).

### 14773

**நதிமேல் தனித்தலையும் சிறுபுள்.** தேவகாந்தன். சென்னை 600077: நற்றிணை பதிப்பகம், பிளாட் எண் 45, சாய் கவின்ஸ் குமரன் அபார்ட்மென்ட்ஸ், தேவி கருமாரியம்மன் நகர், கிருஷ்ணா நகர் பிரதான சாலை, நூம்பல், ஐயப்பன் தாங்கல், 1வது பதிப்பு, ஜனவரி 2019. (சென்னை 600005: சாய் தென்றல் பிரின்டர்ஸ்).

(6), 7-104 பக்கம், விலை: இந்திய ரூபா 130., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-939017-3-1.

"மூதினங்கள் பலவற்றின் ஐதீகங்களிலும் உள்ளோடியுள்ள ஆன்மீக ஒருமையே இந்நாவலின் ஆதாரமாய் அமைகின்றது. நைல் ஆரஸ் தைகிரிஸ் நதிதீர இனக்

*குழுமங்களினதைப் போலவே, நீர்வளமேயற்ற இலங்கை வடபகுதியிலுள்ள தமிழ்க் குமுகாயத்தின் ஐதீகங்களும் ரத்தமும் சோகமுமான நீள் வரலாறுகொண்ட கனடாவின் செந்நதிதீரத்தில் கொள்ளும் உறவு தமிழ் நாவல் பரப்பின் புதிய பிரதேசம். சிவப்பிரகாசமும் மங்களநாயகியும் வின்ஸியும் ஒரே சமூகத்தினதும் கலாசாரத்தினதும் பிரதிநிதிகள்தான். ஆயினும் புத்துலகின் இறுகும் கண்ணிகளிடையே ஒரு புள்ளியில் எவ்வாறு அவர்கள் இணங்கியும் பிணங்கியும் சேர்ந்தும் பிரிந்தும் மகிழ்ந்தும் துயருற்றுமான நொருங்கிய மனநிலைகளுக்கு உள்ளாகிறார்கள் என்பதையே நாவலின் மய்யம் உணர்த்துகிறது. இத்துடன் ஒப்புநோக்குகையில் வெவ்வேறு கலாசார பின்னணிகொண்ட சிவப்பிரகாசமும் கிநாரியும் கொள்ளும் உறவுச் சிக்கல்கள் பெரிய அதிர்ச்சியைத் தருவதில்லை. ஆனால் அவற்றின் மூலமாக மனித உறவின் விழுமியங்களே இருப்பது பேரதிசயமாக நாவலில் விரிகின்றது. புலப்பெயர்வின் சோகம் பெருமளவு கரைந்தாயிற்று. இன்றைய புதிய உலகச் சூழ்நிலையில் ஒவ்வொரு புலம்பெயர் சமூகமும் கொள்ளும் புதிய பிரச்சினைகள் படைப்புலகின் பேசு பொருளாயிருக்கின்றன. ஆங்கில புலம்பெயர் நாவல் இலக்கியத்தில் இவை ஏற்கனவே பேசப்பட்ட பொருள். தமிழ் இப்போதுதான் இப்புதிய பிரதேசத்தைச் சென்றடைந்திருக்கிறது. ஆனாலும் தமிழினத்தின் ஆயிரமாயிரமாண்டுக் கலாசார பின்னணியில் இவைகொள்ளும் நேர்மறையானதும் எதிர்மறையானதுமான சங்காத்தங்கள் துல்லியமான பிரிகோடுடையவை. மேற்குலகும் கீழ்த்திசையும் வெகு கவனம் கொண்டிருக்கிற விமர்சனப் பக்கமிது. "நதிமேல் தனித்தலையும் சிறுபுள்" இவற்றை ஒரு ஒழுங்கிலும் சமகால வரலாற்றிலும் வைத்து புரிய முயல்கிறது. இப் புரிதல் இச்சமூகங்களது இருத்தலின் தன்மையை இனிவரும் காலங்களில் தீர்மானிக்கப்போகின்ற அளவு முதன்மை கொண்டிருக்கிறது. கலையை முதன்மைப் படுத்தினாலும் இதைப் பேசுகிற அக்கறையை இப்படைப்பு தன் அறமாகக் கொண்டிருக்கிறது." (தேவகாந்தன் -என்னுரையில்).*

## 14774

**நான் என் அம்மாவின் பிள்ளை (பாகம் 1).** *இளையதம்பி தங்கராசா. கனடா: நாவற்குடா இளையதம்பி தங்கராசா,* 4000 King Road, King City, Ontario L7 B1K4, ***1**வது பதிப்பு, **2015**.* (Canada: A Fast Print, 2703 Eglinton Avenue East).

xxvii, *484 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*14 சமீ.*

*மட்டக்களப்புப் பிரதேசத்தின் நாவற்குடாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இ.தங்கராசா. இலங்கை மத்திய வங்கியில் ஆய்வுத்துறையில் 38 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்றபின்னர் கனடாவிற்குப் புலம்பெயர்ந்த இவர் 22.08.2017இல் அங்கு அமரத்துவமடைந்தவர். இந்நாவலில் கிழக்கிலங்கை மக்களின் பண்பாட்டு மரபுகள் மிக நுட்பமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மக்களின் வாழ்வியல், பொருளாதாரம், பண்பாடு, மொழி வழக்கு, இலக்கியம், கலைகள், தொழில்முறைகள், சமூக அமைப்பு எனப் பல செய்திகளைப் பதிவுசெய்துள்ளார். இலங்கையில் பிறந்த அகத்தியன் என்னும் இளைஞன் இனப்பிரச்சினை காரணமாக நாட்டைவிட்டு வெளியேறி கப்பலில் பயணம் செய்து, அமெரிக்கத்*

துறைமுகம் ஒன்றில் அகதியாக இறங்குகின்றான். பத்தி என்ற பெயருடன் கப்பலில் பணிசெய்த பணியாளன் ஒருவன் அந்த நேரத்தில் இறந்துவிட, அவன் பெயரில் அமெரிக்காவில் நுழைந்து கல்வி கற்று, அணுசக்தி குறித்த பேரறிவு பெற்ற அறிவியலாளனாக, அமெரிக்காவின் சொத்தாக உயர்வு பெறுகின்றான். பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவிலிருந்து, தாயக நினைவுடன் இலங்கை வந்து, தம் மட்டக்களப்பு மக்களின் கல்வி முன்னேற்றத்திற்குப் பல வகை முயற்சிகளைச் செய்வதும், தாயகத்தில் தாம் திருமணம் செய்துகொள்வதுடன் தம்மைச் சார்ந்தவர்களுக்குத் திருமணம் செய்துவைத்து, அனைவருடன் மீண்டும் அமெரிக்காவுக்குச் செல்லும் நிகழ்வுகளும்தான் புதினத்தின் கதைக்களமாகும்.

## 14775

**நான் என் அம்மாவின் பிள்ளை (பாகம் 2).** இளையதம்பி தங்கராசா. கனடா: நாவற்குடா இளையதம்பி தங்கராசா, 4000 King Road, King City, Ontario L7 B1K4, 1வது பதிப்பு, 2015. (Canada: A Fast Print, 2703 Eglinton Avenue East).

xxvii, 560 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் இயற்கை வளம், விருந்தோம்பல், வழக்கில் உள்ள மந்திரச்சடங்கு, வழிபாடுகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மீன் பிடித்தொழில்கள், அறுவடைத்தொழில்கள், உணவுப் பழக்கவழக்கம், மக்களின் திருமண உறவுகள், நாட்டார் வழக்குகள், பாடல்கள், பழமொழிகள், கல்விமுறைகள் என யாவற்றையும் இந்தப் புதினத்தில் பொருத்தமான இடங்களில் அமைத்து, கற்பார்க்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் வழங்கியுள்ளார். அமெரிக்காவிலிருந்து ஆப்பிரிக்கா செல்லுதல், அங்கிருந்து பாகிஸ்தானின் கராச்சிக்கு வருவது, அங்குச் சரயு என்ற பெண்ணைச் சந்திப்பது, மெனிக்கே என்ற சிங்களப் பெண்ணைக் காண்பது, சென்னைக்கு வருதல், சிதம்பரம், மதுரை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் உள்ளிட்ட ஊர்களில் அமைந்துள்ள கோயில்களைப் பார்த்துக்கொண்டு, சென்னைக்குத் திரும்புவது என்பவை கதைப்போக்காக உள்ளன. இடையிடையே கோயில்கள் குறித்து அளித்துள்ள விளக்கங்கள் தங்கராசா அவர்களின் சமய ஈடுபாட்டையும் இசைப்புலமையையும் காட்டுகின்றன. மட்டக்களப்புப் பிரதேசத்தின் நாவற்குடாவைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இ.தங்கராசா. இலங்கை மத்திய வங்கியில் ஆய்வுத்துறையில் 38 ஆண்டுகள் பணியாற்றியவர். இவர் மட்டக்களப்பு மாமாங்கேசுவரப் பிள்ளையார் மான்மியம் என்ற நூலை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி 2008இல் வெளியிட்டவர்.

## 14776

**நான் நீயானால் (குறுநாவல்).** இராகி (இயற்பெயர்: இரா.கிருஷ்ணபிள்ளை). காரைதீவு 5 (கிழக்கு மாகாணம்): கணேஸ்வரி குடிசார் நிர்மாணங்களும் ஆலோசனைகளும், 36A, மத்திய வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (சாய்ந்தமருது: ரோயல் பிரின்டர்ஸ்).

viii, 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

இந்நாவல் கிராமியச் சமூகத்தில் நடக்கும் மண்வெட்டிக்கு புடி போடுதல் என்ற நிகழ்வோடு ஆரம்பித்து பல்வேறு குடும்பச் சூழல்களில் நடைபெறும் விடயங்களை எமது கண்முன் படம் பிடித்துக்காட்டி மனிதனின் உயர் பண்புகள் இன்னும் எம் மண்ணில் நிலைத்திருப்பதை உணர்த்துவதோடு சமூகத்திலுள்ள ஒவ்வொரு மகனும் சிந்திக்கவேண்டிய பல நல்ல பண்புகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. கதையில் ஆங்காங்கே முதுமொழிகளும், மேற்கோள்களும் பொருத்தமான வகையில் கையாளப்பட்டுள்ளன. "பாண்டியூர் இராகி" என்ற பெயரிலும் ஆக்க இலக்கிய உலகில் தடம் பதித்தவர் கலாபூஷணம் இரா. கிருஷ்ணபிள்ளை. ஆன்மீக இலக்கிய ஈடுபாடுடைய இவர் மிகச்சிறந்த பேச்சாளருமாவார். சிறுகதை மாத்திரமன்றி, 1954 முதல் இன்று வரை இருபதுக்கும் அதிகமான நாடகங்களையும் எழுதியிருக்கிறார். ஒரு சிறுகதையாளராக, கவிஞராக, நாடகக் கலைஞராக பல்துறைகளிலும் மிளிர்ந்துவரும் இவரது முதலாவது நாவல் இதுவாகும். கலைப்பட்டதாரியான "பாண்டியூர் இராகி" ஏறத்தாழ ஐம்பதாண்டுகால இலக்கியப் பரிச்சயம் உள்ளவர். ஆசிரியராகப் பணியாற்றி, அதிபராக ஓய்வுபெற்ற இவர் ஒரு பன்னூலாசிரியருமாவார். அரங்கியல் பின்புலத்தில் வளர்ந்த இவரது முதலாவது நாடகம் "மன்னிப்பு" என்ற பெயரில் கல்முனை பாத்திமா கல்லூரியில் மேடையேறியது. அப்போது இவர் எட்டாம் ஆண்டில் கல்வி பயின்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 57341).

## 14777

**நித்தியாவின் அர்த்தமுள்ள மௌனம்.** மாலினி வசந்த். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2013. (சென்னை 4: ஸ்கிரிப்ட் ஆஃப்செட்).

iv, 160 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 55.00, அளவு: 18x12 சமீ.

வாழ்வில் நாம் எல்லோரும் கடந்து வந்த உன்னதமான தருணங்கள் அவை. ஒரு மனோவையோ, ஒரு குணசீலனையோ, கண்டிப்பாக நாம் ஒவ்வொருவரும் சந்தித்திருக்கிறோம். நித்யாவின் உணர்வுகளாக ஒரு நாளாவது வாழ்ந்திருக்கிறோம் எல்லை மீறிய கற்பனையோ, ஏற்றுக்கொள்ள முடியாத தத்துவங்களோ இல்லாமல் ஒரு தெளிவான நீரோடையாக நாவல் இயல்பாக பயணிக்கின்றது. களத்தில் கருக்கொண்டாலும், புகலிடத்துச் சங்கதிகளோடு கதை விரிகிறது. பொதுவாக ஒரு முக்கோணக் காதல் கதை.போர்க்காலச் சூழலில் சிக்கி சின்னா பின்னமாகச் சிதைந்து போயிருக்கும் ஈழத்தமிழர்களின் சின்னப் புத்திகளையும், அதன் சில்லறைத் தனங்களையும் மிகவும் அழகாகவும், நாகரிகமாகவும் நயத்தோடும் செதுக்கிக் காட்டுகின்றார். வாழ்வியலின் சிக்கலான தத்துவங்களில் தன்னை மாட்டிக்கொள்ளாமல் மிகவும் நுட்பமாகத் தள்ளி நின்று கதையை நடத்திச் செல்லும் பாங்கு வியக்க வைக்கின்றது. காதலிப்பதும், காதலியைத் தவிக்க வைப்பதும், தள்ளி வைப்பதுவும், தமிழ்ச் சமூகத்தில் ஒன்றும் புதுமையானது அல்ல. நண்பனுக்குத் துரோகம் செய்வதும், நண்பனின் காதலியைத் தான் தட்டிகொள்வதும், மணம் முடிப்பதுவும், உலகில் நடக்காதவைகள் அல்ல. காதலி

கனவு காண்பதுவும், கனவுலகில் காதலனோடு கூடிவாழ்வதுவும், நிஜமான உணர்வுகள் தான். இருப்பினும் இவற்றை மறைமுகமாக எடுத்துச் சொல்ல மாலினி கையாளும் யுத்தி முறைகள் வாசகரைக் கவரக்கூடும்.

## 14778

**நெருஞ்சி முள்ளு.** இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Vetlandsveien 117, 0686 Oslo, 1வது பதிப்பு மே 2019. (மின்நூல் வடிவமைப்பு lulu.com சுய வெளியீடு உதவி).

61 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-0-244-48250-3.

இந்நூல் "நெருஞ்சி முள்ளு" என்ற குறுநாவலையும், உதயம், முகமூடிகள் என்ற இரு சிறுகதைகளையும் கொண்டுள்ளது. குறுநாவல், றிக்ஸ் ஹொஸ்பிட்டல், சுகந்தி, மீண்டும் சந்திப்பு, சுபமுகூர்த்தம், உணவகத்தில், காலநதியில், காதலாகி, மீண்டும், மாறாத மனிதர்கள் ஆகிய ஒன்பது அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளன.

## 14779

**நேசவினை (சமூக நாவல்).** ஹிதாயத்துல்லாஹ் மீர்சா. நிந்தவூர் 07: மிர்சா வெளியீட்டகம், 105, தபாலக வீதி, 1வது பதிப்பு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (கல்முனை 13: அந்-நூர் ஒப்செட், அலியார் வீதி).

xiv, 162 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-52414-2-7.

கதை நாயகன் தாஹீரின் தியாகத்தையும்அவனுடைய மூத்த வாப்பாவின் பாசப் பிணைப்பையும் இந்நாவல் உணர்வுபூர்வமாக விபரிக்கின்றது. ஏழையாகப் பிறந்த தாஹிரின் கஷ்டங்களுக்கு மத்தியிலான படிப்படியான வளர்ச்சிகள் கதையை நகர்த்திச் செல்கின்றன. கதாநாயகனின் வறுமைநிலை, அவன் வளர்க்கப்பட்ட விதம், படிப்பில் அவனுக்கு ஏற்பட்ட வெறுப்பும் ஈர்ப்பும், அவனுடைய எதிர் பார்ப்புகளும் அவன் விரும்பிய காதல் வாழ்க்கையும் பொய்மையால் மெய்மையை வாழவைத்த ஆள்மாறாட்ட நாடகமும் என இவையெல்லாம் இணைந்து வாசகர்களை கதையுடன் ஒன்றிக்க வைக்கின்றன.

## 14780

**பஞ்சம் பிழைக்க வந்த சீமை: வரலாற்று நெடுங்கதை.** மு.சிவலிங்கம். கொட்டகலை: குறிஞ்சித்தமிழ் இலக்கிய மன்றம், தமயந்தி பதிப்பகம், 1வது பதிப்பு, ஜுலை 2015. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

xviii, 323 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-52818-1-2.

பஞ்சம் பிழைக்கவந்த சீமையின் கதாநாகன் வேலாயுதம் என்ற இளைஞன், திருச்சி மாவட்டம், வாலி கண்டபுரத்தில், முருக்கன்குடி என்ற குக்கிராமத்தைச் சேர்ந்தவன். தனது நண்பர்களான அர்ச்சுனன், தாண்டவன், பழனி, சீரங்கன் ஆகியோருடன் 1867ம் ஆண்டில் இலங்கைக்கு ஆள்கட்டி கங்காணி மூலம்

கண்டிச் சீமையை நோக்கிப் புறப்படுகிறான். முருக்கன்குடி கிராமத்திலிருந்து, திருச்சி வரை காட்டு வழியாக நடந்து வருகிறார்கள். திருச்சியிலிருந்து நடந்து பாம்பனில் தங்கி ராமேஸ்வரம் கடந்து, தனுஷ்கோடியிலிருந்து படகு வழியாக தலைமன்னார் வருகின்றனர். அந்தப் படகுப் பயணத்தில் அர்ச்சுனன், தாண்டவன் ஆகிய இருவரையும் படகு விபத்தில் வேலாயுதம் பறிகொடுக்கிறான். எஞ்சியவர்களுடன் மன்னார் காட்டிலிருந்து மாத்தளை முகாம் வரை 150 மைல் தூரத்தை நடைப் பயணத்தோடு முடிக்கின்றனர். மாத்தளையிலிருந்து கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த மேமலை தோட்டத்தில் சில வருடங்கள் கோப்பித் தோட்ட வேலையில் நண்பர்கள் மூவரும் ஈடுபடுகின்றனர். கோப்பிநோய்க் காலத்திற்கும் கொலரா நோய்க் காலத்திற்கும் முகம் கொடுத்து தப்பிப்பிழைத்து ஒத்தக்கடை என்னும் கினிகத்தேனை பிரதேசத்து அல்லித் தோட்டத்திற்கு அனுப்பப்படுகின்றனர். அங்கே சிலகாலம் இருந்து தோட்ட நிர்வாகத்தினால் சீரங்கனும் வேலாயுதமும் வேறு தோட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். பழநி தனியாக அல்லித் தோட்டத்திலேயே தொழில்செய்ய நிறுத்தப்படுகின்றான். பின்னர் அல்லித்தோட்டத்திலிருந்து வேலாயுதம் அட்டன் தொப்பி தோட்டத்திற்கும், சீரங்கன் அப்புத்தளை தங்கமலை தோட்டத்திற்கும் அனுப்பப்படுகிறார்கள். இவர்கள் வாழ்க்கையில் எட்டு ஆண்டுகளோடு சீரங்கனும் பழனியும் கிராமத்துக்குத் திரும்புகிறார்கள். வேலாயுதம் மேலும் இரு ஆண்டுகள் தொழில் செய்து 1877ம் ஆண்டளவில் தன் கிராமத்திற்குத் திரும்புகின்றான். இந்த இடைப்பட்ட பத்தாண்டு காலத்தில் கண்டி மேமலை தோட்டத்து நண்பர்களோடும் அல்லித்தோட்டம் தொப்பித் தோட்டம் ஆகிய இடங்களில் காத்தான், கணவதி, அரப்புலி, மகாலிங்கம், பூபதி, வீரமன் பெரியப்பா என்ற நட்புகளோடும் கண்டிச் சீமையில் வாழ்ந்த காலத்தை வேலாயுதம் முடித்துக் கொள்கின்றான். அவனது நண்பர்களினதும் அடுத்த பரம்பரையினரான பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப் பேரப்பிள்ளைகள் வரை தோட்டத்தோடும் தொழிலோடும் சமூகத்தோடும் அரசியலோடும் தேசத்தோடும் 1977ம் ஆண்டோடு 110 ஆண்டுகளுக்கான வாழ்க்கையில் எப்படி வாழ்ந்தார்கள்? அவர்களது அடுத்த பரம்பரை எப்படி வாழப் போகின்றது என்ற தகவலோடும் கதை முற்றுப்பெறுகின்றது. வேலாயுதம் தனது பத்தாண்டு (1867-1877)கால வாழ்க்கையை முடித்துவிட்டு தாயகம் திரும்புவதோடு கதை முடியாமல், வேலாயுதம் ஊர் திரும்பிய பின்னர் அவன் வாழ்ந்த தோட்டத்திலேற்பட்ட வரவேற்கத்தக்க மாற்றங்களும், வேண்டத்தகாத மாற்றங்களும் சுருக்கமாக நாவலாசிரியரால் விபரிக்கப்படுகின்றன. நம்பிக்கைக் கீற்றோடு நாவல் நிறைவுறுகின்றது. ஆரம்பத்தில் சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் தமிழ் இலக்கிய படைப்புகளுக்கு மாத்திரம் வழங்கிவரப்பட்ட "கரிகாற்சோழன் விருது" கடந்த 2015ஆம் ஆண்டு முதல் புரவலர் சிங்கப்பூர் முஸ்தபாவினால் இலங்கைக்கும் விரிவுபடுத்தப்பட்டது. மலையக எழுத்தாளர் மு.சிவலிங்கம் தனது "பஞ்சம் பிழைக்க வந்த சீமை" நாவலுக்காக இவ்விருதைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 14781

**பணிக்கர் பேத்தி.** ஸர்மிளா ஸெய்யித். நாகர்கோவில் 629001: காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2018. (சென்னை 600077: மணி ஓப்செட்).

104 பக்கம், விலை: இந்திய ரூபா 125.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-86820-83-9.

சகர்வான் அலிமுகம்மது சக்கரியாவிற்கு தான் அலிமுகம்மது என்பவரின் மகள் என்பதை விட, சக்கரியா என்பவரது மனைவி என்பதை விட தான் பணிக்கரின் பேத்தியென்பதில் தான் எத்தனை பெரிய கௌரவம்? துயர்களை சிரித்துக்கொண்டே வலிமையுடன் கடக்கின்ற ஒரு பெண்ணாக சகர்வான் நாவல் முழுவதும் வலம் வருகிறார். சகர்வான், தன்னை யானையைக் கட்டி மேய்த்த பணிக்கரின் பேத்தி என்று சொல்லிக் கொள்கிறாள். அது பொய்யோ புனைவோ அல்ல. தன்னை உதாசீனம் செய்த கணவனை உதறிவிட்டு தன் உழைப்பின்மூலம் குடும்பத்தைப் பேணுகிறாள், செல்வத்தை திரட்டுகிறாள். ஆண்களிடையே சரிசமமாக நின்று போராடி தன்னை நிறுவுகிறாள். தாத்தா பணிக்கரின் யானை உயிருள்ள விலங்கு. பேத்தி சகர்வானின் யானை உருவமற்றது. அதற்குப் பல பெயர்கள். உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை. இலங்கையின் சிறுபான்மையினமான ஏறாவூர் முஸ்லிம் மக்களின் கலை, கலாசாரம், வாழ்வியல், அரசியல், அவர்கள் எதிர்நோக்கிய சமூகப் பிரச்சனைகள் எனப் பலவற்றைப் பேசிச் செல்லும் சிறந்த படைப்பாக "உம்மத்" நாவல் மூலம் வாசகர்களை ஈர்த்த ஸர்மிளா ஸெய்யித் எழுதிய இரண்டாவது நாவல் பணிக்கர் பேத்தி. 852ஆவது காலச்சுவடு வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது.

### 14782

**பராரி கூத்துகள்.** இ.தியாகலிங்கம். சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 20/2, சக்காரியா காலனி, முதலாவது தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, ஜனவரி 2014. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 20/2, சக்காரியா காலனி).

230 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-81322-27-7.

நோர்வே நாட்டுக்குப் பல பெருமைகள் உள்ளன. தனிநபர் வருவாய் அதிகம் கொண்ட முதல் ஐந்து நாடுகளில் நோர்வேயும் ஒன்று. அதிக எண்ணெய் வளம் கொண்ட நாடு. சமத்துவ, சமூகநலன் சார்ந்த கொள்கைகள் கொண்ட நாடு. இந்த சொர்க்கபுரியின் மற்றொரு பக்கத்தை ஆசிரியர் இந்நாவலில் ஆரவாரமின்றித் திரைநீக்கம் செய்துவைத்துள்ளார். நோர்வேயில் ஈழத்தமிழர் மட்டுமல்ல, பாக்கிஸ்தான், போலந்து, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் பலர் புலம்பெயர்ந்து இங்கே வாழ்கின்றார்கள் இவர்கள் புலம்பெயர்ந்தோரா அல்லது பராரிகளா என்ற கேள்விக்கு இந்நாவல் விடைகாண முயல்கின்றது. பலரின் போலி நம்பிக்கைகளை இந்நாவல் தகர்த்தெறிந்துள்ளது. ஒஸ்லோ என்னும் மாநகரின் பகட்டுத் திரைகளுக்குப் பின்னால் நடக்கும் ஒன்பது

அவலங்களை ஒரு மனிதனின் அன்றாட வாழ்வினூடாக, அவன் பார்வையூடாக சொல்லவிளைகின்றது இந்நாவல்.

## 14783

**பனங்கூடல் (நாவல்).** செங்கை ஆழியான் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, நவம்பர் 2015. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B புளூமெண்டால் வீதி).

(6), 7-77 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300.00, அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-1624-18-7.

சாஹித்ய ரத்னா செங்கை ஆழியான் எழுதிய 54ஆவது நாவல். தினகரன் வார மஞ்சரியில் 2011இல் தொடராக வெளிவந்திருந்தது. கடந்து சென்ற முப்பது ஆண்டுகள் நடந்த யுத்தமும், இடப்பெயர்வும், அழிவுகளும், மனித உயிர்களின் இழப்புகளும் எவ்வாறு சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை இந்நாவலின் கருவாகக் காணமுடிகின்றது. அத்துடன் புலம்பெயர் மக்களிடையே ஏற்பட்டுள்ள சமூக, கலாச்சார மாற்றத்தையும் இந்நூல் மூலம் ஆசிரியர் எடுத்துக்கூறியுள்ளார். வடமாகாணத்தில் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தனித்துவமாகவிருந்த கலாச்சாரம், ஒழுக்க விழுமியங்கள், பிரதேச வழமைகள் என்பன போரின் காரணமான இடப்பெயர்வுகளாலும், கலாச்சார குழப்பங்களாலும் மாறுபட்டுக்கிடப்பதையும் ஆசிரியர் இந்நாவலில் வெளிச்சமிட்டுக் காட்டத் தவறவில்லை.

## 14784

**பாடிப்பறந்த பறவைகள்: திரைக்கதை வசனம்.** செங்கை ஆழியான் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: கந்தையா குணராசா, 82, பிரவுண் வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, பதிப்பித்த ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கல்லச்சுப்பிரதி).

(2), 63 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 32x20 சமீ.

31 காட்சிகளில் எழுதப்பட்ட திரைக்கதைப் பிரதி இதுவாகும். "யானை" என்ற தலைப்பில் முன்னர் வரதர் வெளியீடாக 1978இல் வெளிவந்திருந்த நாவலின் திரைக்கதைவடிவம் இது. அடக்கு முறைக்கு எதிரான ஒரு மனிதனின் போராட்டம் இந்நாவலில் கூறப்பட்டுள்ளது. யானையும் காடும் குறியீடுகளாக அமைகின்றன. தம்பலகமத்தில் வீட்டாருக்குத் தெரியாமல் இரு காதலர்கள் வீட்டைவிட்டுக் கிளம்பி காட்டுப்பாதையால் செல்கின்றனர். நொண்டி யானையினால் காதலி கொல்லப்படுகிறாள். காதலன் அந்த யானையைத் தொடர்ந்து சென்று பழிவாங்குவதாகக் கதை அமைகின்றது. The Beast என்ற பெயரில் ஆங்கிலத்தில் இந்நாவல் மொழிபெயர்க்கப்பட்டுமுள்ளது. செங்காரன் என்ற மனிதன் பழிவாங்கல் என்ற உணர்வினால் "நொண்டி யானை"யின் நிலைக்கு இறங்கியிருப்பதும், இறந்துபோன யானை, மனித நிலைக்கு உயர்ந்து நிற்பதும் நாவலின் இறுதியில் மனதில் நிலைக்கின்றது. பழிவாங்கல் மனிதனை மிருக நிலைக்கு இறக்கிவிடுகின்றது என்பதை இந்நாவல் சித்திரிக்கின்றது. மனித குலத்திற்கு ஒவ்வாத பழிவாங்கல்

*உணர்ச்சிகளின் தீமையை ஆசிரியர் இந்நாவலில் சுட்டிக்காட்டுகின்றார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 55180).*

### 14785

**பாதி உறவு: குறுநாவல்.** *பார்த்திபன்.* ஜேர்மனி: தென்னாசிய நிறுவனம், Sud Asien Buro Kiefern str. 45, 5600, Wuppertal -2, West Germany, *1வது பதிப்பு, ஜுலை 1987. (கல்லச்சுப் பிரதி).*

*92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13.5 சமீ.*

*1987-1988 காலப்பகுதியில் ஜெர்மனியில் இருந்து வெளியாகிய சிறு சஞ்சிகைகள் 20இற்கும் மேற்பட்டவையாகும். இவற்றில் அனேகமானவை கையெழுத்துப் பிரதிகளாகவும் ஒரு சில தட்டச்சில் எழுதப்பட்டவையாகவும் காணப்பட்டன. கலைவிளக்கு, சிந்தனை, தூண்டில், வெகுஜனம், புதுமை, பெண்கள் வட்டம், ஏலையா, அறுவை, வண்ணத்துப்பூச்சி, யாத்திரை, நம்நாடு, தாயகம், யதார்த்தம் போன்றவை அவற்றுட் சில. பார்த்திபன் அவர்கள் "தூண்டில்" என்ற சஞ்சிகையின் ஆசிரியர் குழுவான கடலோடிகளில் முக்கியமானவர். பார்த்திபன் 1984 செப்டம்பரில் இலங்கையிலிருந்து ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்தவர். தூண்டில் என்ற சஞ்சிகையை இவர் 50 இதழ்கள் வரை வெளியிட்டுவந்துள்ளார். இவற்றைவிட நிஜங்கள் (நான்கு சிறுகதைகள், 1986), ஜனனம்(மூன்று சிறுகதைகள், 1986), வித்தியாசப்படும் வித்தியாசங்கள்(குறுநாவல்,1987), பாதி உறவு (குறுநாவல்,1987), ஆண்கள் விற்பனைக்கு(நாவல்,1988) ஆகிய தலைப்புகளில் பார்த்திபன் தான் எழுதிய குறு நாவல்கள், நாவல் நூல்களை ஜெர்மனியில் இருந்து தட்டச்சின் மூலம் வெகு நேர்த்தியாக வெளியிட்ட முன்னோடியாவார். இவரது குறுநாவல்கள் ஆழ்ந்த மனிதநேயங் கொண்டவை. கதைகளின் மொழி, உரையாடல், நகைச்சுவை போன்றவை புகலிடத்தின் பொது முகாம்களில் இளைஞர்களுக்கு இடையில் நடைபெறும் அன்றாட சம்பாஷனையில் இருந்து பெறப்பட்டவை போன்றிருக்கும். குழந்தைகளுடன் அவர்களின் மனங்களும் படிப்படியான அனுபவங்களினாலும் படிப்பினாலும் தான் வளர்ச்சியடைகின்றன. திடீரென அவர்கள் பெரியவர்களாகி விடுவதில்லை. குழந்தைப் பருவத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள்தான் அதன் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன. குழந்தைகளைப் பெற்றோர்களுடன் சூழ்நிலைகளும் சேர்ந்தே வளர்க்கின்றன. தமது பிள்ளைகள் தீயவர்களாக வளரவேண்டும் என எந்தப் பெற்றோரும் திட்டம் போட்டு வளர்ப்பதில்லை. ஆனால் தங்களது கவனக் குறைவால் பிள்ளைகளை அழிவுப் பாதையில் செல்ல அனுமதித்து விடுகிறார்கள். இதைத் தடுக்க முடியாதா? முடியும் என்பதனை, ரவீந்திரன்-நந்தினி ஆகியோரின் குடும்ப வாழ்க்கையினூடாக வெளிப்படுத்துகின்றார். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 071432).*

### 14786

**பால் வனங்களில் (நாவல்).** மலரன்பன். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2019. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

xix, 20-248 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-624-00-0042-0.

இந்நாவல் இலங்கையின் றப்பர் தோட்டங்கயையும் அங்கு வாழும் மக்களின் வாழ்வியலையும் பேசுபொருளாகக் கொண்டது. பழைய மலை இறப்பர் மரங்களை விறகுக்காகப் பேரம் பேசுதல், கமிஷன் பெறுதல், வேலை நாட்குறைப்பு, தொழிற்சங்கப் போராட்டம் என்று படிப்படியாக கதை சுவாரஸ்யமாக வளர்க்கப் படுகின்றது. வாசகரை மாத்தளை மாவட்டத்தின் தோட்டங்கள் பல வெள்ளையர்களால் உள்ளூர் தனவந்தர்களுக்கு விற்கப்பட்டு, அத்தோட்டங்களை வாங்கிய சில உள்ளூர் தனவந்தர்கள், வெள்ளையர்களின்கீழ் பணியாற்றிய உள்ளூர் உத்தியோகத்தர்களையே தோட்டத்துரைகளாகவும் நியமித்துவந்த அறுபதுகளின் பின்னிறுதியில் மாத்தளைப் பிரதேசச் சமூகச் சூழல் எவ்வாறு இருந்ததென்பதை விபரிக்கும் ஆசிரியர், அதன் ஆரம்பகாலச் சூழ்நிலையை தத்ரூபமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றார். தோட்ட வாழ்க்கை முறை மாற்றமடைந்து கிராம வாழ்க்கை முறைக்கு மக்கள் பரிமாண வளர்ச்சியடையும் இக்காலகட்டத்தில் இப்பிரதேசத்தின் முன்னைய தோட்டப்புற வரலாறு எவ்வாறிருந்தது என்பதை ஆவணப்படுத்துகின்றது இந்நாவல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65499).

### 14787

**பாலைவனத்துப் புஷ்பங்கள் (நாவல்).** மலரன்னை (இயற்பெயர்: திருமதி அற்புதராணி காசிலிங்கம்). அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, மார்கழி 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 78 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-0958-23-8.

விவாகரத்தின் மூலம் பிரிந்து வாழும் இருவரின் தவிப்பினையும், அவர்களின் மன உணர்வுகளையும் இந்நாவல் விபரிக்கின்றது. திருமண பந்தத்தில் இணையப்போகும் இளம் தம்பதியினருக்கு இந்நாவல் ஒரு அறிவூட்டலாக அமையும். இல்லற வாழ்க்கை என்பது நிலை தளம்பாமல் இருக்க புரிந்துணர்வு, பிறரை அனுசரித்துப் போகும் தன்மை, விட்டுக் கொடுத்தல் என்பன இன்றியமையாத காரணிகளாகும். இவற்றை மையமாகவைத்து இந்நாவல் உருவாக்கப்பட்டுள்ளது. மொழியின் வழியே எளிமையாக கட்டமைக்கப்படும் மலரன்னையின் கதையாடல்கள் அவலப்படும் மக்களின் வாழ்வை பின்புலமாகக் கொண்டவை. தனி மனித ஒழுங்கு, சமூக ஒழுங்கு குறித்து எழுதப்படும் இவ் வகையான புனைவுகள் நன்னெறியைப் புகட்டி சன்மார்க்க நெறியில் பயணிப்பவை. இந்நூல் ஜீவநதி வெளியீட்டகத்தின் 134ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது.

### 14788

**பின்நோக்கினளே.** தவபாக்கியம் கிருஷ்ணராசா. உரும்பிராய்: திருமதி கி.தவபாக்கியம், ஓஸ்கா ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (யாழ்ப்பாணம்: மெகா பதிப்பகம், 101, கண்டி வீதி, கச்சேரியடி).

(2), 132 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

"கடந்துபோன தன் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கிறாள் தனேஸ்வரி. தன்னைக் கொடுமைப் படுத்தியவர்கள் மீது-தானும் வஞ்சம் தீரக்காமல் எவ்வளவு மன உறுதியுடன் வாழ்ந்து காட்டுகிறாள்? குடும்பப் பெருமை வெற்றியடைகிறது. கீதோபதேசம் அவளின் வாழ்வைச் செம்மைப்படுத்தியது. கொடுமையில் அவள் யாரிடமும் கடுமையாக நடந்துகொள்வில்லை. பொறுமை கடலிலும் பெரிது என்பர். ஆம், அவள் பொறுமையைக் கடைப்பிடித்ததால் இப்போ அவள் தனிக்காட்டு ராணியாக இருக்கிறாள். ஆண்டவனை வாழ்த்தியபடி. இனி வேண்டுவதொன்றில்லை" - நூலாசிரியர் முகவுரையில்.

### 14789

**புள்ளிகள் கரைந்த பொழுது (நாவல்).** ஆதிலட்சுமி சிவகுமார். சென்னை 600078: கலைமாறன் வெளியீட்டகம், தோழமை பதிப்பகம், எண் 10, 6ஆவது தெரு, முதல் பிரிவு, கே.கே.நகர், 1வது பதிப்பு, மே 2018. (அச்சக விபரம் தரப்படவில்லை).

272 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-80369-68-6.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் ஆதிலட்சுமி சிவக்குமார் அவர்களின் இந்நாவல், முள்ளிவாய்க்கால் மண்ணில் நடந்தேறிய மனிதப் பேரவலத்தை உலகிற்கு எடுத்துச்சொல்லுகின்றது. இந்த நாவலில் எங்கள் மண்ணில் நடந்த பேரவலத்தை கற்பனையோ, கனவுகளோ, புனைவுகளோ இன்றி, தான் கண்ணால் கண்ட காட்சிகளையும், காதால் கேட்டதையும், கூடவே இருந்து அனுபவித்து உணர்ந்ததையும், உள்ளதை உள்ளபடி தோலுரித்துக் காட்டியிருக்கின்றார். நாவலுக்கே உரித்தான இலக்கியப் பண்பில் இருந்து வழுவாமல், ஓர் உண்மைச் சம்பவத்தைப் பிரச்சாரப் போக்கின்றி, நாவலுக்குரிய உருவப்பண்பையும் மீறாமல், அழகியல் உணர்வையும் மீறாமல், இலக்கியத்துக்குரிய தன்மையோடும், அதே நேரத்தில் மண்வாசனையும் யாதார்த்தப் பண்பும் குன்றாமல், மிக அழகுறப் படைத்திருக்கின்றார். இதில் செல்வராசு என்கின்ற பாத்திரம் பிரதான பாத்திரமாக வருகின்றது. கூடவே அவரது மனைவி இரண்டு பிள்ளைகள், அயல்வீட்டு சுந்தரமண்ணை குடும்பம், இடம்பெயர்ந்து செல்லும்போது புதிதாக அவர்களுடன் இணையும் சுகியும் கைக்குழந்தையும், அப்படியே கொஞ்சத்தூரம் போக தனிமனிதனாக இணையும் பரமேசு என்கின்ற பாத்திரம், தேவிபுரத்திலிருந்து இவர்களோடு இணையும் முருகேசு அண்ணர் குடும்பம் என இந்தக் கதையில் பல பாத்திரங்கள் இணைந்து பயணிக்கின்றன. அந்தக்காலத்தின் கோலத்தை எடுத்துக்காட்டும், பதிவிட்டுக் காட்டும், உண்மைகளைத் தொகுத்துச் சொல்லும் வரலாற்று ஆவணத்துக்குரிய தகைமைகளையும் இந்த நாவல் கொண்டிருக்கின்றது.

கடந்த 37 ஆண்டுகளாக ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் தொடர்ந்து பயணிக்கும் ஓர் இலக்கியப் படைப்பாளி ஆதிலட்சுமி. பெண் விடுதலை, பெண்ணியம் சார்ந்த தெளிவு, சமூக விடுதலை, இன விடுதலை, சமூக விழிப்புணர்வு, சமூக அக்கறை, எனப் பல்வேறு பரிமாணங்களில் இவரது ஆளுமை மிக்க படைப்புக்கள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன. 1990 ஆம் ஆண்டு "புயலை எதிர்க்கும் பூக்கள்" சிறுகதைத் தொகுதி, 2000 ஆம் ஆண்டு "என் கவிதை" கவிதைத் தொகுப்பு, 2006 ஆம் ஆண்டு "மனிதர்கள்" சிறுகதைத் தொகுப்பு என இவரது படைப்புகள் ஏற்கனவே வெளிவந்திருக்கின்றன. இவரது நான்காவது படைப்பாக இந்நாவல் வெளிவந்திருக்கின்றது. புலிகளின் குரல் வானொலி தொடங்கிய காலத்தில் இருந்து இறுதிக் காலம் வரை கண்ணம்மா என்ற புனைபெயர் மூலம் பல்வேறு வகையான படைப்புக்களால் மக்கள் மனங்களில் தனக்கென்றோர் இடத்தைப் பிடித்துக்கொண்டவர்.

## 14790

**பூலான் தேவி.** மொழிவாணன். கொழும்பு 13: நீரஜா பப்ளிக்கேஷன்ஸ், 104/36, சங்கமித்த மாவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 1990. (கொழும்பு 13: பெர்ணான்டோ பிரின்டர்ஸ்).

(8), 90 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 29.90, அளவு: 17.5x12.5 சமீ.

இது ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் பத்தாவது நாவல். ஒரு பெண் பயங்கரவாதியின் உண்மைக்கதை என்ற விளம்பரத்துடன் வெளிவந்துள்ளது. இந்தியாவின் மத்திய பிரதேசத்துப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தின் பதிவேடுகளில் உள்ள குறிப்புகளின்படி பூலான்தேவி 5.10.1948இல் நாஜிபாபர் கோட்டையில் பிறந்துள்ளதாகவும், சுமார் 800 கொலைகளையும், 789 கொள்ளைகளையும் மேற்கொண்டதாவும் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். பூலான்தேவியின் வாழ்க்கை வரலாற்றை கற்பனை கலந்து விறுவிறுப்பானதொரு மர்ம நாவலாக தினகரன் வாரமஞ்சரியில் முன்னர் தொடராக வெளியிட்டிருந்தார். அதன் நூல்வடிவம் நீரஜா பப்ளிக்கேஷன்ஸ் வெளியீட்டுத் தொடர் இலக்கம் 7 ஆக வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17370).

## 14791

**போரும் அமைதியும் (நாவல்).** செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 12/3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 2018. (சென்னை: சிவம்ஸ்).

160 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12 சமீ.

தேசிய யுத்த நெருக்கடி காலம். கொழும்பு மாநகரில் அச்சக வேலை தேடிய சுப்பிரமணி நான்கு ஆண்டுகள் வரை அங்கு பணியாற்றி விட்டு, திடீரெனக் காணாமல் போய்விடுகிறார். போலிசில் மாட்டுப் பட்டாரா, போரில் கொல்லப்பட்டாரா, சிறையில் வாடுகின்றாரா என யாவரும் கவலையோடு

*பேசிக்கொண்டனர். திடீரென நான்கு ஆண்டுகள் கழிந்த நிலையில் ஒரு வெள்ளையினப் பெண்ணுடன் அச்சகத்திற்கு நன்றி கூற, சுப்பிரமணி வந்தார். அங்கு தான் ஜெர்மனுக்குச் சென்றுவிட்டதாகக் கூறி, தன் நாடுகடந்த பயணம் பற்றி விபரமாகக் கூறினார். இடையே அன்னி, தன் காதலியைப் பற்றியும் சொன்னார். யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களைச் சார்ந்து அவரது முன்னைய ஆசிரியர் முருகேசன் வாத்தியார் கவலைப்படவில்லை. பகவத்கீதையில் போராளிகளின் உடலே அழிந்தது ஆத்மா அழிவதில்லை. வானத்தில் சுற்றும். மீண்டும் போரில் சேர்ந்து வெற்றி தரும் என விளக்கியிருந்ததாகத் தெரிவிக்கிறார். இலங்கையில் தங்கிய வேளை அண்ணனைப் போரில் இழந்த தன் பழைய காதலி சிவகாமியைப் பார்த்து ஆறுதல் கூறுவதோடு அவளுக்கு உதவுவதாகவும் உறுதி கூறுகின்றார். மற்றொரு தோழி மலர்விழியையும் பார்த்து ஜேர்மன் திரும்புகின்றான். பின்னர் தாயையும் இழந்துவிட்ட தன் பழைய காதலி சிவகாமியை ஜெர்மனிக்கு வரவழைக்கிறான். ஜெர்மனியில் அண்மையில் வாழ்ந்த தமிழர் சிறு அரங்கில் சிவகாமியும் பங்கேற்கிறாள். ஷேக்ஸ்பியரின் வெனிஸ் வர்த்தகன் நாடகத்தில் சைலக என்ற யூதர் எதிர்ப்புப் பிரச்சாரமே ஹிட்லர் இரண்டாவது உலக யுத்தத்தில் 60 லட்சம் யூதர்களைக் கொலைசெய்யத் தூண்டியது என்பது மட்டுமல்ல, ஐன்ஸ்டீன் என்ற யூத அறிஞர் மூலம் அணுவைப் பிளக்கும் விஞ்ஞானத்தையும் அமெரிக்க ஜனாதிபதி பெற்றுக்கொள்ள முடிந்தது. ஜெர்மனோடு இணைந்து போரிட்ட ஜப்பானின் ஹீரொஷிமா, நாகசாக்கி அணுகுணடால் அழிந்துபோகவும் இதுவே காரணமாகியது என்ற வாதத்தை அங்கு முன்வைக்கிறான். இவ்வாறு பல்வேறு வாதப்பிரதிவாதங்களுடன் இந்நாவல் நகர்த்திச் செல்லப்படுகின்றது.*

### 14792

**மகளிர் இருவர் (நாவல்).** *செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 12/3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2014. (சென்னை: சிவம்ஸ்).*

*160 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18x12 சமீ.*

*அம்பிகா சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள். மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறாள். அக்காவின் திருமண வாழ்வைப் பார்த்தும் கேட்டும் குடும்ப வாழ்வில் தான் நுழைவதை வெறுக்கிறாள். அக்காவின் அறிவுரையின்படி மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் அலெக்சிடம் உதவி வேண்டுகிறாள். போராளிப் பெண்ணாக பயிற்சிக்கு வந்த சந்திரா பயிற்சி முடியும் வேளை தனித்துப் போகிறாள். தேனியில் ஆசிரியர் தொழிலுடன் விவசாயத்திலும் ஈடுபட்டிருந்த முருகேசன் சந்திராவுக்கு உதவ முன்வருகின்றான். அவன் அலெக்சின் ஆசிரியப் பயிற்சிக்கால நண்பன். சந்திராவின் திடீர் மரணத்தின் பின்னர் அம்பிகா அவளது தனித்துவ வாழ்வுநிலையை அறிய ஆவல் கொள்கிறாள். அலெக்ஸ் உதவுகின்றான். குடும்ப வாழ்க்கை, கர்ப்பம், மகப்பேற்றுத் துன்பம் இயற்கையின் ஓரவஞ்சமா? ஆணாதிக்கம் அமைத்த குடும்ப அமைப்பின் குரூரமா? என்று குழம்புகின்றாள். இவர்களைச் சுற்றிப் பின்னப்பட்ட கதையாக மகளிர் இருவர் அமைந்துள்ளது.*

## 14793

**மதுவின் இரகசியம்.** இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Vetlandsveien 117, 0686 Oslo, *1வது பதிப்பு மார்ச் 2020. (மின்நூல் வடிவமைப்பு* lulu.com *சுய வெளியீடு உதவி).*

*68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-0-244-27386-6.*

இந்நூலில் மதுவின் இரகசியம், எதிரிகள், சதை உண்ணும்.. ஆகிய மூன்று குறுநாவல்கள் இடம்பெற்றுள்ளன. தியாகலிங்கம் இலங்கையின் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1967 ஆம் ஆண்டில் வேலுப்பிள்ளை இரத்தினம், இரத்தினம் பரமேஸ்வரி ஆகியோருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை காரைநகர் யா/யாழ்ற்றன் கல்லூரியின் கனிஷ்ட பிரிவிலும், தொடர்ந்து சாதாரண தரத்தை யா/யாழ்ற்றன் கல்லூரியிலும், உயர்தரத்தை காரைநகர் இந்துக் கல்லூரியிலும் பயின்றவர். 1984 ஆம் ஆண்டில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் இணைந்து, தமிழரின் கனவான தனி நாட்டிற்காகப் போராடப் புறப்பட்டுச் சென்றவர். தமிழகத்தில் அதற்கான இராணுவப் பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டதோடு, சென்னையில் அரசியல் பயின்று, அதைத் தோழர்களுக்குப் பயிற்றுவிக்கும் ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். பின்பு முகாம் ஒன்றிற்குப் பொறுப்பாளராகவும் பணி புரிந்துள்ளார். அங்கு இருக்கும் போதே முகாமில் வெளியிடப்பட்ட கையெழுத்துப் பிரதிகளிலும், தமிழீழ மாணவர் பேரவையால் வெளியிடப்பட்ட சஞ்சிகையிலும் இவரது படைப்புகள் வெளிவந்தன. கடைசியாகத் திருவாரூரில் நடைபெற்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மாநாட்டில் பங்குபற்றி, அதில் கிடைத்த ஞானத்தின் முடிவில் அந்த இயக்கத்தைத் துறந்து, தனது வழியில் புறப்பட்ட இவர் சென்னையில் ஏற்பட்ட தொந்தரவால் அங்கிருந்து புலம்பெயர்ந்து நோர்வேக்கு வந்து அங்கு வாழ்ந்துவருகின்றார்.

## 14794

**மர்ம மாளிகை.** அருள் செல்வநாயகம். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், த.பெட்டி 160, 1வது பதிப்பு, ஜுன் 1973. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் வீதி).

*(4), 243 பக்கம், விலை: ரூபா 2.90, அளவு: 18*x*12 சமீ.*

மர்ம மாளிகையொன்றில் கோடீஸ்வரர் ஒருவர் கொலைசெய்யப்படுகிறார். அதையடுத்துப் பல விறுவிறுப்பான நிகழ்ச்சிகள் அங்கு இடம்பெறுகின்றன. துப்பறியும் நிபுணர் ராஜா கொலையைத் துப்பறிந்து கொலையாளியைக் கண்டறிகின்றார். அருள் செல்வநாயகம் (06.06.1926 - 02.09.1973) வரலாற்றுச் சிறுகதைகள், நாவல்கள் மற்றும் நாடகங்கள், கட்டுரைகள் எனப்பலவற்றை எழுதிய ஈழத்து பிரபல எழுத்தாளராவார். இவரது முதற் சிறுகதையான "விதியின் கொடுமை" 1946 இல் மின்னொளி என்ற சஞ்சிகையில் வெளிவந்தது. பின்னர் இவரது சிறுகதைகள் கலைமகள், அமுதசுரபி, காவேரி, உமா, கல்கி போன்ற

இதழ்களில் வெளிவந்துள்ளன. திருவருட் செல்வம், ரி.டி.எஸ். வழிகாட்டி, குருசெல்வம், செல்வா, ரி. டி. செல்வநாயகம், குபேரன் ஆகிய புனைபெயர்களிலும் சிறுகதைகள், கட்டுரைகள் இவரால் எழுதப்பட்டுள்ளன. நுவரெலியா அக்கரைப் பத்தனையில் தலைமையாசிரியராகப் பணியாற்றிய போது "பசுமலைப் பார்பதி" என்னும் கதையை எழுதி வெளியிட்டார். இவர் 20க்கும் அதிகமான நூல்களை படைத்துள்ளார். "சீர்பாத குல வரலாறு" என்னும் இவரது ஆராய்ச்சிக் கட்டுரை 1968 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் வாசிக்கப்பட்டு அறிஞர்களால் பாராட்டப்பட்டது. சென்னை சாகித்திய அகடமி வெளியிட்ட கலைக்களஞ்சியத்திலும் இவரது கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 28048).

## 14795

**மர்மப் பெண்: திகில் சித்திரம்.** கே.எஸ்.ஆனந்தன். (இயற்பெயர்: கார்த்திகேசு சச்சிதானந்தம்). கொழும்பு 14: ஜனமித்திரன் வெளியீடு, எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் ரோட், 1வது பதிப்பு, 1973. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட், 185 கிராண்ட்பாஸ் ரோட்).

(2), 126 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 1.90, அளவு: 18x12 சமீ.

ஈழத்தின் மர்ம நாவல் மற்றும் துப்பறியும் நாவல் பாரம்பரியம் பற்றி ஆய்வுசெய்யப்புகும் எவருக்கும் ஜனமித்திரன் வெளியீடுகள் தவிர்க்கமுடியாதவை. விறுவிறுப்பான மர்மநாவலாக வளர்த்துச் செல்லப்படும் மர்மப் பெண் என்ற திகில் சித்திரத்தின் அத்தியாயத் தலைப்புகளே சுவாரஸ்யமானவை. எலும்புக்கூடு நகர்ந்தது, பிணம் பேசியது, ஆவி உலகம், மாயத்தீ, மோகினிப் பேய், கீதாவின் குரல், அறையில் கண்ட அதிசயம், கதவைத்தட்டிய கை, சுருளி வந்தான், டாக்டர் மனிதனா, நாய்கள் ஓலமிட்டன, நிர்வாணப் பெண், மர்ம மரணம், கீதாவின் குழப்பம், கீதாவின் மூளை குழம்பியது, உயிர்ப் பரீட்சை, பசியைக் கொன்ற பாதகி, மாயக் குளிகைகள், காதல் மயக்கம், பாழடைந்த மண்டபம், பயங்கர டாக்டர், அசுர உருவம், மர்ம நிழல், அழுகிய அழகி கொலை, டாக்டரின் டயறி ஆகிய 25 அத்தியாயங்களில் இந்நாவல் விறுவிறுப்பாக நகர்த்திச்செல்லப்படுகின்றது. யாழ்ப்பாணம், இணுவிலில் பிறந்த கா.சச்சிதானந்தம் அவர்கள் கே.எஸ்.ஆனந்தன் எனும் புனை பெயரில் ஈழத்து இலக்கிய துறையில் அறியப்பட்டவர். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 018639).

## 14796

**மரணம் ஒரு முடிவல்ல.** அனிஸ்டஸ் ஜெயராஜா. கொழும்பு 6: பூங்காற்று பதிப்பகம், 59, 1/1, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 2வது பதிப்பு, செப்டெம்பர் 2011, 1வது பதிப்பு, 1994. (அச்சக விபரம் தரப்படவில்லை).

x, 66 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12 சமீ., ISBN: 978-955-0700-01-1.

தென்னிலங்கையின் என்டெரமுல்லை- வெலப்பிரதேசத்தில் "நாக்கியா" என்ற போராளிக் கிழவனைக் கதாபாத்திரமாகக் கொண்டு இலங்கையின் இனப் பிரச்சினையை புதியதொரு கோணத்தில் அலசும் நாவல். தீவிரவாத சிந்தனை கொண்ட இளைஞர்களை அடக்க முனையும் பொலிஸ் கெடுபிடிகள் நாவலை வளர்த்துச் செல்கின்றன. சிங்களப் பிரதேசத்தினைக் கதைக்களமாகக் கொண்டதால் உரையாடல்களில் சிங்கள மொழி கலந்து காணப்பட்ட போதிலும், ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் அவ்வத்தியாயத்தில் பயன்படுத்தப்பட்ட சிங்கள சொற்பிரயோகங்களின் தமிழாக்கமும் காணப்படுகின்றன. ஒவ்வொரு அத்தியாயத்தின் தொடக்கத்திலும் மகாகவி, சி.சிவசேகரம், இ.சிவானந்தன், சன்மார்க்கா, இ.முருகையன், இ.அனுரதன், க.தணிகாசலம், இப்னு அஸூமத், எஸ்.ஆர்.நிஸாம் ஆகியோரின் கவிவரிகள் இடம்பெற்றுள்ளன.

## 14797

**மரணமழையில் நீந்திக்கடந்த நெருப்பாறு.** நா.யோகேந்திரநாதன். கிளிநொச்சி: சூரிய மலர்கள் வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஜுலை 2019. (யாழ்ப்பாணம்: ரூபன் அச்சகம், ஆனைக்கோட்டை).

xvi, 398 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-42746-3-1.

தமிழீழ விடுதலைப் போரின் இறுதிக் கட்டத்தில் எமது மக்களின் அளவிடப் படமுடியாத இழப்புகளும் போராளிகளின் அர்ப்பணிப்புகளும் கரைந்தோடிய குருதி வரைந்த சுவடுகளில் வெடித்தெழுந்த இலக்கியப் படைப்பு இது. 4x1.5 கி.மீ மட்டுமேயான பரப்பளவைக்கொண்ட ஒரு கடற்கரைப் பிரதேசத்தில் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்களை வந்தடையவிட்டு, முப்படையினரும் குண்டுமழைபொழிந்து பெரும்பாலானவர்களை அழித்தனர். அங்கு இடம்பெயர்ந்த மக்களில் ஒருவராகவிருந்து தப்பிப் பிழைத்தவர் இந்நாவலாசிரியர். தான் கண்டனுபவித்ததை அடுத்த தலைமுறையினருக்குக் காவிச்செல்லவேண்டும் என்ற வரலாற்று விருப்பில் இந்நாவலை படைத்துள்ளார். முன்னதாக இரு பாகங்கள் நீந்திக்கடந்த நெருப்பாறு வெளிவந்துள்ளன. இது அந்த வரலாற்று நாவலிலக்கியத்தின் மற்றுமொரு தொடராகும். புது மாத்தளனிலிருந்து வட்டுவாகல் வரை நகர்ந்த அந்த வலி மிகுந்த நாட்களை ஒரு கண்கண்ட சாட்சியின் வழியாக இந்நாவல் பதிவுசெய்கின்றது. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25358).

## 14798

**மலைச்சாரலின் தூவல் (நாவல்).** மலரன்னை (இயற்பெயர்: திருமதி அற்புதராணி காசிலிங்கம்). அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஆனி 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 142 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-0958-12-2.

மலரன்னையின் நூலுருப்பெறும் மூன்றாவது நாவல் இது. பலவித இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் மலையக மக்கள் எவ்வித சிரத்தையுமில்லாமல்

இதுதான் எமக்கு எழுதப்பட்ட வாழ்க்கையின் நியதி எனக்கொண்டு காலத்தைக் கழிக்கின்றார்கள். இருப்பினும் அவர்களுக்கிடையே இலைமறை காய்களாக துளிர்த்திருக்கும் சிலர் உணர்வுகளின் உந்துதலால் எழுச்சி பெற்று கடின முயற்சியினால் தமது வாழ்க்கையில் முன்னேறி தமது இனத்திற்கே ஒரு வழிகாட்டியாக மாறுகின்றனர். அத்தகைய ஒரு கதாபாத்திரமாக இந்நாவலில் சரஸ்வதி வருகிறாள். மலைச்சாரலில் துளிர்த்த ஒரு இளம் தளிர் தன் இனத்தவர் படும் அவலங்களைக் கண்டு வேதனை அடைகிறாள். ஏழைத் தொழிலாளர்களிடமும் திறமையிருக்கிறது. அத்திறமை தட்டியெழுப்பப்பட வேண்டும். சமூகத்தில் மேம்பட்ட வாழ்க்கையை அவர்களாலும் வாழமுடியும். அதற்கு மன ஓர்மமும், கடின உழைப்புமே தனி வழி என்பதை நிரூபித்து சாதனைப் பெண்ணாகும் சரஸ்வதியின் கதையே இந்நாவலாகும். நாடறிந்த எழுத்தாளர் கச்சாயில் இரத்தினம் அவர்களின் புதல்வியே மலரன்னை. மறையாத சூரியன் (நாவல், 2010), வேர் பதிக்கும் விழுதுகள் (சிறுகதைத் தொகுதி, 2015), கீறல் (சிறுகதைத் தொகுதி, 2016), மௌனத்தின் சிறகுகள் (நாவல், 2017), அனலிடைப் புழு (சிறுகதைத் தொகுதி, 2017) ஆகிய நூல்களை எமக்களித்தவர் மலரன்னை. ஈழ விடுதலைப் போராளியும் படைப்பாளியுமான மலரவனின் அன்னை இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நூல் ஜீவநதி வெளியீட்டகத்தின் 96ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது.

### 14799

**மறுபடியும் நாங்கள்**. இந்துமகேஷ் (இயற்பெயர்: சின்னையா மகேஸ்வரன்). ஜேர்மனி: சி.மகேஸ்வரன், Volta Str. 51, 2800 Bremen-33, West Germany, 1வது பதிப்பு, ஜனவரி 1987. (கல்லச்சுப் பிரதியாக்கம்).

68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

ஐரோப்பிய மண்ணில் தமிழ் வானொலிகளோ, தொலைக்காட்சிகளோ இல்லாத கால கட்டத்தில் ஜேர்மனியின், பிறேமனில் இரு மாதத்துக்கு ஒரு சஞ்சிகையாக பூவரசு சஞ்சிகை 1991 இல் முகிழ்ந்தது. இதன் ஸ்தாபக ஆசிரியராக இந்து மகேஷ் விளங்கினார். புலம்பெயர் மண்ணில் பல எழுத்தாளர்களை உருவாக்கி, வளர்த்து விட்ட பெருமை, பல் வேறுபட்ட நாடுகளிலும் வாசகர்களைக் கொண்டிருந்த "பூவரசு" சஞ்சிகைக்கும் அதன் ஆசிரியர் இந்துமகேசுக்கும் உண்டு. சஞ்சிகையின் மேலதிக செயற்பாடுகளாக ஒவ்வோர் ஆண்டும் சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடாத்தப்பட்டு ஆண்டு நிறைவை ஒட்டிய விழா கொண்டப்பட்டு அந்த விழாவில் போட்டிகளில் வென்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டு வந்தன. 2006க்குப் பிற்பட்ட காலங்களில் இணைய வளர்ச்சியின் மேலோங்கலில் பூவரசின் வருகையில் தள்ளாட்டம் ஏற்பட்டது. ஆண்டுக்கு இரு இதழ்களே வெளிவருவதுகூடச் சில காலங்களின்பின்னர் சாத்தியமாகவில்லை. பூவரசின் பின்னணியில் அக்காலகட்டத்தில் நாவல்கள் சிலவும் கையெழுத்துப் (கல்லச்சுப்) பிரதிகளாக வெளிவந்திருந்தன. "மறுபடியும் நாங்கள்" அவற்றில் ஒன்றாகும். ஜேர்மன் கலாச்சாரப் பின்னணியையும் எமது தமிழ் கலாச்சாரப் பின்னணியையும் இவரது நாவல் கோடிட்டுக்காட்டுகின்றது. மௌனத்தில் அழுகின்ற மனங்கள்,

விடியலுக்கில்லை தூரம், நீலவிழிப் பாவைகள் ஆகிய நாவல்களையும் இவர் எழுதி வெளியிட்டிருக்கிறார். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 071191).

### 14800

**மானிடம் வீழ்ந்ததம்மா**. இ.தியாகலிங்கம். சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 20/2, சக்காரியா காலனி, முதலாவது தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, மார்ச் 2015. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ், 20/2, சக்காரியா காலனி).

168 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-1-329-02347-5.

வரலாற்றை மனிதன் மறக்கும் போது அது மீண்டும் மீண்டும் உயிர்பெற்றுக் கொள்ளும். உலகம் பல மனிதநேயச் சுடலைகளை உருவாக்கி வைத்திருக்கிறது. வசதிக்கு ஏற்ப அவற்றை மறக்கப் பார்க்கிறது. சுடலைகளை மறந்ததால் உருவாக்கப்பட்ட பிணமலைகளை இரண்டாம் உலகயுத்தம் கண்டது. உலகம் பிரயாணிக்கக்கூடாத தடத்தில், தெரிந்தோ தெரியாமலோ பிரயாணிக்கிறது. வரலாறு மீண்டும் உயிர் பெற்றுவிட்டது. போகங்கள் தங்களுக்கு மட்டுமே என்கின்ற சுயநலத்தில் வெறுப்புகள் விளைகின்றன. மனிதம் வதைபடுகிறது. பொருளாதாரத்தில் மனிதநேய ஆதாரங்கள் அடிபட்டுப் போகின்றன. சிறிய தவறுகள் தட்டிக் கேட்கப்படாத போது, அதுவே பெரிய தவறுகளின் விளை நிலமாகிறது. மனிதம் வஞ்சிக்கப்படுவதைப் பார்த்தும் பாராமல் இருப்பது எதற்கு உரம் இடுவதற்கு? மனிதகுலம் இனியாவது விழிப்படைய வேண்டும். நாசகாரமான அந்த வரலாற்றை மீண்டும் ஓடவிடலாகாது. அதை நிறுத்தப் போராடவேண்டும். அந்த நாசகாரம் உலகத்தில் மீண்டும் ஏற்படக்கூடாது என்கின்ற ஆதங்கத்தில் இந்த நாவல் எழுதப்பட்டது.

### 14801

**மீண்டும் ஒரு காதல் கதை (நாவல்)**. யோகா யோகேந்திரன். திருக்கோவில்: யோகா யோகேந்திரன், யோகவாசா, 1வது பதிப்பு, 2014. (திருக்கோவில்: A.T. அச்சகம்).

viii, 157 பக்கம், விலை: ரூபா 250.00, அளவு: 18x12 சமீ., ISBN: 978-955-41546-0-5.

செங்கதிர் சஞ்சிகையில் தொடராக வெளிவந்த நாவல். கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டவர் யோகா யோகேந்திரன். அரச எழுதுவினைஞராகப் பணியில் இணைந்த இவர் பின்னர் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றி அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர். சர்வதேச பெண்கள் அமைப்பினால் சிறந்த பெண் எழுத்தாளர் விருது, திருக்கோவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தினரின் அரியநாயகம் விருது, திருக்கோவில் பிரதேச கலாச்சார விருது,

*கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது, கலாபூசணம் விருது ஆகியவற்றைப் பெற்றவர்.*

### 14802

**மூவுலகு (நாவல்).** *தெணியான். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2018. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).*

*216 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 22*x*14 சமீ.,* ISBN: *978-955-30-9275-5.*

*இந்நாவல் பேசும் மூவுலகு என்பது சாமானியர்களின் மேலுலகு, பூவுலகு, பாதாளவுலகு (நரகம்) ஆகிய மூன்றுமல்ல. இந்தப் பூவுலகிலுள்ள மூன்று வர்க்கங்கள் பற்றியதே இந்நாவலின் பேசுபொருள். வர்க்கம் சார்ந்த இந்நாவல் அந்த வர்க்க அரசியலுடன் வர்க்கங்களிடையே உருவாகும் காதல், அதனை மீறிய சாதி, அதன் முடிவுகள் என்பவற்றைப் பேசுகின்றது. அத்தோடு இன ஐக்கியத்தின் மேன்மையையும் இந்நாவல் காட்டிநிற்கின்றது. மூன்று இளம் சோடிகளின் கதைகளைப் பேசும் இந்நாவலில் இரண்டு காதல் கதைகள் குறிப்பிடத்தக்கவை. முதலாவதும் பிரதான கதையுமானது மாணவப் பருவத்தில் கிளர்ந்தெழுந்து பல்கலைக்கழகம் தாண்டி, இடர்களுக்கு முகம் கொடுத்து மருத்துவர்களான பின்னரும் தொடரும் காதல். குமரன் வாணி ஆகியோரின் காதல் ஆழமான காதல். ஒருவரை ஒருவர் புரிந்து ஒருவர் ஆற்றலை மற்றவர் கண்டு வியந்து, ஒத்த மனம் கொண்டோரிடையே பிறந்த காதல் அது. ஏற்கனவே சொல்லப்பட்டது போல ரியூசன் வகுப்பில் ஆரம்பித்து பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து மருத்துவர்களாக பணியேற்ற பின்னரும் தொடரும் காதல். வெளிக் கவர்ச்சிகளால் பிறந்தது அல்ல. ஆழமான அர்ப்பணிப்புடன் கூடிய உண்மையான காதல். தடைகளை மௌனமாக எதிர்கொண்டு மேவிச் செல்லும் காதல். ஆயினும் சமூகச் சூழல் பெரும் திரையாக விலக்கி வைக்க முனைகிறது. இரண்டாவது காதல் கதை இரு பாடசாலை ஆசிரியர்களிடையே எழும் காதல் பற்றியது. தனிமையின் வெற்றிடத்தை நிரப்பவும், பாலியல் உணர்வுகளால் உந்தப்பட்டும் எழுகின்ற சந்தர்ப்ப சூழ்நிலைக் காதல் அது. இங்கு ஆத்மார்த்த ஈடுபாடு சந்தேகத்திற்கு உரியது. காதலே இல்லாமல் காலத்தின் கோலத்தால் இளம் பாராயத் திருமணத்திற்கு தள்ளப்பட்ட சமூகத்தின் அடித்தள மக்களின் கதை மூன்றாவது. கடுமையான யுத்த காலப் பகுதியில் வலுக் கட்டாயமாக போராளியாக இழுத்துச் செல்லப்படுவதிலிருந்து தப்புவதற்காக செய்யப்படும் நிர்ப்பந்தத் திருமணம். இந்த மூன்று கதைகளையும் இணைத்து மூவுலகு நாவலை சுவையாகப் புனைந்ததில் தெணியானின் அனுபவப்பட்ட எழுத்தாளுமை கைகொடுக்கிறது. இது காதல் பற்றிய நாவலாகவே இருக்கிறதே ஒழிய காதல் நாவல் அல்ல.*

### 14803

**மொழியா வலிகள் பகுதி 1.** இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Vetlandsveien 117, 0686 Oslo, *1வது பதிப்பு ஒகஸ்ட் 2018. (மின்நூல் வடிவமைப்பு* lulu.com *சுய வெளியீடு உதவி).*

*229 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN*: 978-0-244-40626-4.*

*வாழ வந்த இந்தத் துருவ தேசத்தில் இன்றைய சிறந்த பொருளாதார நிலைக்கு வருவதற்கு ஒவ்வொரு தமிழனும் தாங்கிய வேதனைகள் ஓங்கிய மலைகளைவிட உயர்ந்து நிற்கும். எம்மவர்கள் உதாரண புருசர்களாக இன்று இங்கே காட்டப் படுவதற்கு அவர்கள் இழந்தவை நிறையவே உள்ளன. இழப்புக்களின் யாகத்தில் வெற்றிகள் விளைவது இந்த உலக நியதி ஆகிவிட்டது. தமிழர்களின் இழப்புக்களில் அவர்களின் இன்றைய வெற்றி, பனி தேசத்திலும் துளிர் விட்டு, வேரூன்றி, குளிர் வென்று, இங்கே பரிணமித்து நிற்கிறது என்பது மிகைப்படுத்தல் அல்ல. அவர்கள் தமது ஒவ்வொரு அடியையும் எவ்வளவு வேதனையோடு, ஓர்மத்தோடு, எடுத்து வைத்திருப்பார்கள்? அதை எல்லாம் வென்று இன்றைய காலத்திற்கும், வருங்காலச் சந்ததிக்கும் நாம் கடந்து வந்த பாதையில் சிலவற்றைப் பார்ப்பதற்கு ஒரு காலதர் தேவைப்படுகிறது. அந்தப் பேசாப்பொருளை, அழியாத அந்த இரணத்தை, மொழியா அந்த வலிகளை ஆசிரியர் இங்கு இந்நாவலில் மீண்டும் மொழிய முனைந்துள்ளார். அதற்கான காலதரை முழுமையாகத் திறக்க முடியாவிட்டாலும் ஒரு சிறிதளவேனும் திறக்கவேண்டும் என்ற முயற்சியின் வெளிப்பாடே இந்நாவலாகும். நாவலின் முதலாம் பாகத்தில் மற்றாஸ் விமான நிலையம், அவர்கள், தொடர்ந்த பயணம், உலகம் விரிந்தது, பாரிஸ் விமான நிலையம், ஒஸ்லோ விமான நிலையம், சண்வீக்கா, ஐரோப்பா என்னும் சொர்க்கம், விசாரணை, அழகிய விடுதி, அவன் நினைவு, தோணிகள் ஓட்டி, அனாகி, மலைதேசத்திற்கு, விடுதி வாழ்க்கை, பிரியாவிடை ஆகிய 16 அத்தியாயங்கள் விரிந்துள்ளன.*

## 14804

**மொழியா வலிகள் பகுதி 2.** இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Vetlandsveien 117, 0686 Oslo, *1வது பதிப்பு ஒகஸ்ட் 2018. (மின்நூல் வடிவமைப்பு* lulu.com Ra *வெளியீடு உதவி).*

*282 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN*: 978-0-244-40626-4.*

*நாவலின் இரண்டாம் பாகத்தில் "*TS*"இன் பயணம், வேலை, அந்த மர்மம், பாய்ந்த வேல்கள், பெடியள் வந்தார்கள், புதுமனை, சிவா வந்தான், இந்திய இராணுவம், தொலைபேசிக் கட்டணம், நோஸ்க் வகுப்பு, நீலக் கடவுச் சீட்டு, மாற்றங்கள், விருந்து, "*TS*" இன் பயணம், மீண்டும் ஒஸ்லோவில், மாற்றங்கள், அந்த நாள் வந்தது, இனி, தாமோதரன் குடும்பத்தின் வருகை, கற்பனைகளோடு, காலவெள்ளத்தின் கட்டுடைப்பில், தாம்பத்தியம், சண்முகன், தீண்டல், வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில், சந்திப்பு, விருந்து, ஆகிய 27 அத்தியாயங்கள் விரிந்துள்ளன.*

### 14805

**மொழியா வலிகள் பகுதி 3.** இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Vetlandsveien 117, 0686 Oslo, *1வது பதிப்பு ஒகஸ்ட் 2018. (மின்நூல் வடிவமைப்பு* lulu.com *சுய வெளியீடு உதவி).*

*269 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21*x*14.5 சமீ.*, ISBN*: 978-0-244-10631-7.*

*நாவலின் மூன்றாம் பாகத்தில் தமிழ், நல்ல மாட்டிற்கு, அருளன் குடும்பம், கடைத் திறப்புவிழா, கப்பல் பயணம், அழியாத் தடங்கள், நிமலனும் குடும்பமாக, சொரூபனுக்கு வந்த சோதனை, றூபனின் புதுவாழ்வு, சொரூபனின் சுந்தரி, தத்தில் தாமோதரன், நிர்மூலமாகிய நிமலன், திசை மாறிய காற்று, இடியாக வந்த செய்தி, ஜனனம், மீன் பாடும் நகரத்தார், புரியாத அந்நியர்கள் ஆகிய 17 அத்தியாயங்கள் விரிந்துள்ளன.*

### 14806

**மொழியா வலிகள் பகுதி 4.** இ.தியாகலிங்கம். நோர்வே: இ.தியாகலிங்கம், Vetlandsveien 117, 0686 Oslo, *1வது பதிப்பு ஒகஸ்ட் 2018. (மின்நூல் வடிவமைப்பு* lulu.com Ra *வெளியீடு உதவி).*

*282 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21*x*14.5 சமீ.*, ISBN*: 978-0-244-40632-5.*

*நாவலின் நான்காம் பாகத்தில் பிறந்த நாள், சுதி மாறிய இராகம், சண்முகன் சரணடைந்தான், பூவும் புனிதமும், தடம் ஏறிய வண்டி, வடக்கின் பறவைகள், சிவ தரிசனம், திசையில்லாப் பயணம், பல்லுக் கொழுக்கட்டை, நகரத்தின் ஆபத்து, நிமலன் வீட்டுத் திருவிழா, வளர்ச்சிக் கோர்மோன், திருநாளைப் போவார்கள், சரிஸ்காவின் சன்னியாசம், இறக்கை முளைத்த கிளிகள், விதியின் வலிய கரங்கள், திருந்தாப் பார்வை, கற்கால மதங்களின் நவீன வாழ்விடங்கள், அனாமோதய அப்பா, ஒன்று பலதாகி பலது ஒன்றாகி, சுனாமியான மூச்சடைப்பு, கடற்கரையில், பேய்கள் அரசாண்டால், நான் என்பதால் அழிந்த நாம், அகத்தைத் தின்ற அதிர்ச்சி, சுகந்தி, நிமலனும் தேவியும், மீண்டும் ஆரம்பித்த அநர்த்தம், மாறிய கோலங்கள், இங்கும் கலவரம், பற்றிய வீடு, தைப்பொங்கல், ஓயாத ஒப்பாரி ஆகிய 33 அத்தியாயங்களில் நான்கு பாகங்கள் கொண்ட இந்நாவல் முடிவுக்கு வந்துள்ளது.*

### 14807

**யக்கடையாவின் வர்மம்: துப்பறியும் நாவல்.** M.A.*அப்பாஸ். கொழும்பு 11: விஸ்டம் ஹவுஸ் (அறிவகம்), இல. 7, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1957. (கொழும்பு 11: ஆவ்ரா அச்சகம், 19, செட்டியார் தெரு).*

*(4), 135 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18.5*x*13 சமீ.*

*மரதன்கடவல யக்கடயாவின் பிறப்பிடம் பேராதெனியவில் உள்ள குடா இரியாகம வளவ்வையாகும். இவருக்கு ஒரே ஒரு சகோதரி மாத்திரமே இருந்திருக்கிறாள்.*

சிறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு, படிப்படியாக ஒரு கொள்ளைக்காரனாக மாறியவன் யக்கடயா. கெக்கிராவ தபால் நிலைய அதிபரை 1950ம் ஆண்டு சுட்டுக் கொன்ற பின்னர், யக்கடயா பற்றி நாடெங்கிலும் பரவலாக பேசப்பட்டது. இக்கொலைக் குற்றச்சாட்டின் பேரில் மரண தண்டனை பெற்று 16 வருட சிறைவாசத்தின் பின்னர் விடுதலை பெற்றான். 111ஆவது வயதில் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் 09.10.2011 இல் மரணமானான். யக்கடையா (இரும்பு மனிதன்) பாக்தாத் திருடன், ரொபின் ஹூட் போன்று தான் திருடிய பணத்தை ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கும் வழமையைக் கொண்டவன். யக்கடயா என்பது அவனது வீர தீர செயல்களைப் பார்த்து கிராமத்து மக்கள் வைத்த காரணப் பெயராகும். அவனது உண்மையான பெயர் சாஞ்சி ஆராச்சிகே ஜினதாஸ என்பதாகும். யக்கடயாவை பொலிஸார் நாடெங்கிலும் வலை விரித்து தேட ஆரம்பித்த வேளையில் பொலிஸாரிடம் இருந்து தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக வடபகுதிக்கு ரயிலில் சென்று, பருத்தித்துறையில் இருந்து 20 மைல் தூரத்தை நீந்தியே கடந்து இந்திய கரையை அடைந்திருக்கிறான். யக்கடயாவிற்கு நன்றாக தமிழ் பேச முடியும். அதனால் யக்கடயா இந்தியாவில் எவ்வித பிரச்சினையுமின்றி பல வருடங்கள் வாழ்ந்திருக்கிறான். 7 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்ட யக்கடயா, இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு அவனுக்கு எதிரான கொலை குற்றத்திற்காக மரண தண்டனை வழங்கப்பட்டது. 16 ஆண்டுகள் சிறையில் அடைபட்டிருந்த யகடயா பின்னர் நன்னடத்தையில் விடுவிக்கப்பட்டான். அவன் சைவ உணவையே அருந்தியதுடன், தனது வாழ்க்கையில் என்றுமே புகைத்தல், மது அருந்துதல் பழக்கத்திற்கு அடிமையானதே இல்லை என்பர். சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட எந்தவொரு தகவலும் பலவருடங்களாக எவருக்குமே தெரியவில்லை. யக்கடயா ஒரு கொலை காரனாக இருந்தாலும் அவன் அப்பாவி மக்களை துன்புறுத்தும் பழக்கத்தை கொண்டிருக்கவில்லை. செல்வந்தரிடம் அடித்து பறிக்கும் பணத்தை ஏழை மக்களுக்கு பகிர்ந்து கொடுத்தான் என்பதால் அவனை ஊர்மக்கள் போற்றி வந்தனர். அவனைப்பற்றிய வீரதிரக்கதைகள் பல கர்ணபரம்பரைக் கதைகளாக ஐம்பதுகளில் உலாவிவந்தன. தனது மரணத்துக்கு சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் யக்கடயா சுத்தமான தேசிய வெள்ளை உடை அணிந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து நீண்ட நேரம் உரையாடியுள்ளான். யக்கடையாவின் வாழ்வின் முற்பகுதியை தான் கண்டு கேட்ட தகவல்களை வைத்து சுவாரஸ்யமான நாவலாக ஆசிரியர் 1957இல் எழுதியுள்ளார்.

### 14808

**யோகி (நாவல்).** நீ.பி.அருளானந்தம். நாவலப்பிட்டி: திருமகள் பதிப்பகம், இல. 10, பெனடிட் அவென்யூ, பவகம, நாவலப்பிட்டி, 1வது பதிப்பு, மார்கழி 2018. (தெகிவளை: ஏ.ஜே. பிரிண்ட், இல. 44, புகையிரத நிலைய வீதி).

xii, 229 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 22x15.5 சமீ., ISBN: 978-955-1055-16-5.

ஆன்மீக ஈடுபாடுள்ள ஒரு இளைஞன் சில குருமார்களால் வழிப்படுத்தப்படுகின்றான். அவனது அறிவு, "யோகம்" பற்றிய தேடலில் இறங்குகின்றது. உண்மை யோகம்

பற்றி அறிய முற்படும் அவன், ஒன்றுதல் தான் யோகம் எனும் உண்மையை உணர்கின்றான். அவ்வொன்றுதலை உலகியலைக் கடக்காமல், இயற்கையிலேயே அனுபவிக்க முடியும் எனத் தெளிந்து, இயற்கையுடன் ஒன்றுதலையே தனது வாழ்வாக்கி, உலகியலைத் துறக்காமலே வாழ்வியலில் யோகத்தைப் புரிந்துகொள்ள அவன் முடிவுசெய்வதாய் இந்நாவல் தொடர்கின்றது. பல்துறை சார்ந்த ஈர்ப்புகளுக்கும் கவனச் சிதறல்களுக்கும் மத்தியில், இன்றைய ஒருசில இளைஞர் மனங்களிலும் யோகமுயற்சி படிப்படியாய் பதிவாவதை, ஆசிரியர் காட்டியிருக்கும் விதம் அற்புதமானது. அதே நேரத்தில் இயற்கையோடு ஒன்றிச் சமூக வாழ்க்கைக்குப் பயன்செய்யும் வண்ணம் யோகத்தைப் புதுமையாய்ப் பதிவுசெய்ய விரும்பும் அவ்விளைஞனின் முயற்சியினூடாக, மேற்சொன்ன யோகம் போன்ற சமய விடயங்கள், சமூகத்தைப் புறக்கணிப்பவை அல்ல என்பதையும் ஆசிரியர் பதிவுசெய்திருக்கிறார். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 066408).

### 14809

**ரஸ்யாவின் ரஸ்புட்டீன் தீர்க்கதரிசியா? மக்கள் புரட்சிக்கு வித்திட்டவரா? (சரித்திர நாவல்).** எம்.ரி. செல்வராஜா. சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2013. (சென்னை 94: பி.வி.ஆர். ஆப்செட்).

xxx, 390 பக்கம், விலை: இந்திய ரூபா 160., அளவு: 18x12 சமீ., ISBN: 978-81-927041-2-8.

மதப் போர்வையில் புகுந்துகொண்டு மக்களை ஏமாற்றி மன்னனை மயக்கி ருஷ்ய நாட்டைச் சீரழித்த வஞ்சகப் பாதிரி என்றே ரஸ்புடீன் பற்றிய கருத்தியல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ரஸ்புட்டீன் ஒரு தீர்க்கதரிசியா? மக்கள் புரட்சிக்கு வித்திட்டவரா? என்பதை ரஸ்புட்டீனின் வாழ்க்கைச் சம்பவங்களினூடாக எழுதப்பட்டுள்ள இந்தச் சரித்திர நாவல் மூலம் விடைகாண முற்பட்டுள்ளார். இந்நாவல் விண்ணிலே எரிநட்சத்திரம் மண்ணிலே ரஸ்புட்டீன், முதல் சோகம், வயதுக்கு மிஞ்சிய வார்த்தைகள், வயதுக் கோளாறு, திருமணம், புதிய அனுபவங்கள், சமயமும் சல்லாபமும், புனிதமான யாத்திரையா?, புகழின் ஆரம்பம், தலைநகரில் பதித்த கால்கள், அரச பரம்பரை, அரச பரம்பரையின் அறிமுகம், மீண்டும் பிறந்த இடத்தில், தலைநகரில் ஆரம்ப எதிரிகள், குற்றவாளியா? சுற்றவாளியா?, அரசியாரின் அழைப்பு, அரசியல் பிழைத்தல், உயிருக்கு வந்த ஆபத்து, பக்தியா? போலியா?, வெற்றியும் தோல்வியும், அழிவின் உச்சியில், ஃபீலிக் யுசெப்போ, கடைக்கண் பார்வை செய்த கொடூரம், உயர்கல்வியும் திருமணமும், திடமான முடிவு, திட்டங்களும் தீர்க்கதரிசனமும், கொலைக்களம் நோக்கி, கொடூரங்கள் அடங்கின, மகிழ்ச்சியும் மனச்சோர்வும், சாம்ராஜ்யம் சரிந்தது, கனவிலும் காணாத முடிவுகள், பொலிஸ் அறிக்கை, முடிவு ஆகிய 33 அத்தியாயங்களில் விரிந்துள்ளது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 065198).

### 14810

**லைலா மஜ்னு.** முஹம்மது ஸெயின். கொழும்ப 14: முஹம்மது ஸெயின், ஸெயின்ஸ்தான் டிரேடிங் கம்பெனி லிமிட்டெட், 703, சிரிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, 1வது பதிப்பு, 1977. (கொழும்பு 3: த டயமண்ட் பிரின்டர்ஸ், 41, செயின் மைக்கல் வீதி).

(2), 88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 16.5x12 சமீ.

இந்நூலாசிரியர் கண்டி மாவட்டத்தின் தஸ்கஹ என்ற கிராமத்தில் 29.04.1918இல் பிறந்தவர். பிரபல வர்த்தகரான இவர், எழுத்தாளராகவும், சிங்களத் திரைப்படத் தயாரிப்பாளரும் ஸெயின்ஸ்தான் படமாளிகையின் உரிமையாளருமாவார். தாருல் இஸ்லாம் பத்திரிகையிலும் உள்ளூர் பத்திரிகைகளிலும் கட்டுரைகள் பலவற்றை எழுதியிருக்கும் இவர் இஸ்லாமிய தாரகையின் ஆசிரியருள் ஒருவராகவும் பணியாற்றியவர். பின்னாளில் அப்பத்திரிகையின் உரிமையாளரானார். லைலா மஜ்னு இவரது இலக்கியப் படைப்பாக்கங்களுள் ஒன்றாகும். இந்நூல், லைலா என்பதின் கருத்து நள்ளிரவின் முத்து என்பதாகும், காதலர்கள் செய்துகொண்ட கடும் பிரதிக்கினை, காதலரைப் பிரித்துவைத்த காதகன் இப்னு ஸலாம், பஸரா மீது ஏமனின் யுத்தப் பிரகடனம், சடுதியில் தோன்றிய யுத்த மேகமும் விடுதியினுள் வருந்திய வனிதையும், பஸராவின் படுதோல்வி, அதிகாலையில் மூண்ட அகோர யுத்தமும் மதிகேட்டினால் மாண்ட மன்னர்களும், மஜ்னூனின் வருகை, பிரிந்து கூடிய காதலர்களும் விரைந்து வந்த வினையும் ஆகிய ஒன்பது இயல்களில் இந்நாவல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2687).

### 14811

**வண்டொன்று இரு மலர்கள்(நாவல்).** எம்.சி.ஜெஸீல். கொழும்பு 13: சபிகலா வெளியீடு, 250-BG 3, ஆட்டுப்பட்டித் தெரு, 1வது பதிப்பு, நவம்பர் 1987. (கொழும்பு 13: ஸபீனா அச்சகம், 250-BG 3, ஆட்டுப்பட்டித் தெரு).

(8), 67 பக்கம், விலை: ரூபா 58.50, அளவு: 18.5x13 சமீ.

கல்ஹின்னையிலிருந்து புறப்பட்டுள்ள இளம் படைப்பாளியின் கன்னி முயற்சியே இங்கு நாவலாகப் பிரசவமாகியுள்ளது. கதாநாயகன் ரமேஷ் நித்யாவை விரும்புகின்றான். அவளும் அவனை விரும்ப இருவரும் அன்புப் பெருக்கில் அணைந்து மகிழ்கின்றார்கள். இடையில் சிலகாலம் பிரிவு ஏற்படுகின்றது. இக்கால இடைவெளியில் ரமேஷ் தன் அத்தை மகள் பொன்னியிடமும் மயங்கு கின்றான். அங்கும் அவர்களிடையே காதல் மலர்கின்றது. நித்யாவின் காதலையும், பொன்னியின் காதலையும் எத்தகைய பேதமுமின்றி நெஞ்சில் வளர்க்கும் ரமேஷ், ஒரு உதாரண புருஷனாக மாறி அன்புக் காதலியர் இருவரையும் மணந்து கொள்கிறான். இல்லற வாழ்வை நல்லறமாக வாழ்வதாக கதை முடிகின்றது. இந்நூலுக்கு சிறப்புரை வழங்கிய எம்.சி.எம்.சுபைர் அவர்கள் "இளைஞன் ஜெஸீல் அவரது முதல் நாவலிலேயே இதய நலன் கண்டு வாழ்ந்தால் இப்படியும் வாழலாம் என்று காட்ட முனைந்துள்ளார். சமூகம் என்ன நினைக்கின்றதோ?

எப்படி ஏற்றுக்கொள்ளப்போகின்றதோ? எப்படியிருந்தாலும், இளைஞன் ஜெஸீல் உடைய எழுத்துத்துறை எதிர்காலம், அறிவுயர்ச்சியும் அனுபவ முதிர்ச்சியும் வளர வளர ஒளிபெற்றுத் திகழும் அறிகுறி இந்த நாவலில் தென்படுகின்றது" என்று குறிப்பிடுகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21629).

### 14812

**வலசைப் பறவைகள்**. சிவ.ஆரூரன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, மார்கழி 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

vi, 230 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 20.5x15 சமீ., ISBN: 978-955-0958-22-1.

எமது சமகாலப் பிரச்சினைகளை மிகத்திறம்பட உணர்த்துவதில் சிவ ஆரூரன் வெற்றிகண்டுள்ளார். நம் இனம் அனுபவித்த, அனுபவித்து வருகின்ற இடர்மிகுந்த வாழ்வை தன் படைப்புகளின் வாயிலாக உயிரோட்டமாகப் படைப்பதில் சிவ.ஆரூரனின் திறன் வியக்கவைக்கின்றது. இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த 1987-1990 காலப்பகுதியில் கதை நிகழ்கின்றது. அக்காலப் போர்ச் சூழல் எவ்வாறு கீழ் மத்தியதர வர்க்க குடும்பங்களில் தாக்கம் செலுத்தியது என்பதை இக்கதை சொல்கின்றது. அருமையான கதை நகர்வும் பாத்திரங்களின் தேர்வும் மொழித் தேர்ச்சியும் அனுபவ வெளிப்பாடுகளும் மிகச்சிறந்த முறையில் கையாளப்படுகின்றன. இலங்கை அரசின் சிறைச்சாலைக்குள்ளிருந்து பூக்கும் சிவ.ஆரூரனின் ஐந்தாவது நூலாகவும், மூன்றாவது தமிழ் நாவலாகவும் வெளிவரும் இந்நூல் ஜீவநதி வெளியீட்டகத்தின் 133ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது. இவரது நாவலொன்று ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளது.

### 14813

**வாக்குமூலம்**. அப்துல் றஸாக். அக்கரைப்பற்று 01: துயரி வெளியீடு, 37, பழைய பொலிஸ் நிலைய வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (அக்கரைப்பற்று-01: நியூ செலெக்ஷன் ஒப்செட் பிரின்ட்).

xii, 152 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ.

பல்கலைக்கழக வாழ்வின் அந்திம நாட்களில் அந்த வாழ்வின் இரைமீட்டலாக இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. வளாக வாழ்வில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் மனதை அரிக்கும் சில பொறிகளை மட்டும் ஆசிரியர் பிய்த்தெடுத்தத் தர முன்வந்துள்ளார். அவரால் நம்முடன் பகிர்ந்துகொள்ள முடியாத மீதிப் பொறிகளே கதை முடிந்த பின்னரும் எமது மனங்களில் வளரச்செய்கின்றன. முர்ஷித், ஷெ ரீன், நபிஸா, பவாஸ் இலாஹி, சமீர், ஷாகிதா, ஆகில் ஆகிய ஏழு பாத்திரங்களின் ஞாபக அடுக்குகளிலிருந்து வாக்குமூலங்களாக வெளிவருகின்றன. இந்த வளாக வாழ்வின் விரிந்த பரப்பில் அன்பின் இழைகளால் அவர்கள் அனைவரும் கட்டுண்டு கிடக்கிறார்கள். முர்ஷித், இந்த எல்லாப் பாத்திரங்களையும் இணைக்கும் கண்ணியாக எல்லாவற்றுக்குள்ளும் வந்து போகின்றான். அன்பு தான் இந்த

*வாக்குமூலங்களின் அடியாழத்தில் ஊடுபாவி நிற்கின்றது. ஒன்றில் அது நட்பாக ஒளிர்கின்றது. இல்லாவிடில் காதலாகிக் கசிந்துருகி நிற்கின்றது. இந்த அன்பின் இழை பிரதான ஏழு பாத்திரங்களினுள்ளும் வெவ்வேறு விகிதங்களில் கலக்கின்றது. தனிப்பட்ட வாக்குமூலங்களினூடாக கதைசொல்லி நடமாடும் கையாளுகை இந்நாவலை மரபுரீதியானதொரு நாவலாகவன்றி பல சிறுகதைகளின் தொடராகவோ அல்லது ஒரு சிறுகதையின் நீட்சியாகவோ காணத்தூண்டுகின்றது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 001829).*

## 14814

**வாழ்க்கைச் சோலை: பாகம் 1.** *பூனாகலை நித்தியஜோதி. பண்டாரவளை: ஷிஹாப்தீன், நுஸ்ரத், பதிப்பாளர், தமிழ் பட்டதாரிகள் ஒன்றியம், கெப்பெட்டிப்பொல வீதி, பதுளை, 1வது பதிப்பு, ஜுலை 2016. (பண்டாரவளை: வடிவேல் இளையராஜா, இராஜ் கிராப்பிக்ஸ்).*

xii, *88 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 290., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-43391-0-1.*

*ஊவா மாகாணம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு,அனுராதபரம் ஆகிய பல பிரதெசங்களை கதைக்களனாகக் கொண்ட எழுதப்பட்டுள்ள இந்நாவல் பிரதேச வாதத்தை மறியடித்து இன ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கில் எழுதப் பட்டுள்ளது. கவிஞர் பூனாகலை நித்தியஜோதி கல்வியமைச்சில் பிரதிக் கல்வி அமைச்சின் ஊடக செயலாளராகவும், அதிபராகவும் கடமை புரிந்துள்ளார்.*

## 14815

**வீட்டுக் கிணறு (நாவல்).** *செ.கணேசலிங்கன். சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 12/3, மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி 7வது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2019. (சென்னை: சிவம்ஸ்).*

*160 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 18*x*12 சமீ.*

*இலங்கை வரைபடத்தின் தலையாக அமையும் யாழ்ப்பாணம் 1000 சதுர கிலோ மீட்டர் நிலம். 5-7 இலட்சம் மக்களைக் கொண்டது. ஐரோப்பிய கத்தோலிக்கர் ஆட்சியின் பின்னர் புரட்டஸ்தாந்தரும், டச்சுக்காரரும், பிரிட்டிஷ் வெள்ளையரும் ஆண்டனர். இந்தியா 1947-இல் சுதந்திரப் போராட்டத்தில் விடுதலை பெற்றதோடு 1948-இல் இலங்கையும் சுதந்திரம் பெற்றது. பெரும்பான்மை சிங்கள மக்கள் ஆட்சியில் சிறுபான்மை தமிழர்கள், முஸ்லிம்கள் ஆட்சி உரிமை வேண்டிப் போராடினார்கள். யாழ்ப்பாணத்திலுள்ளதொரு கிராமத்திலேயே நாவல் மையம் கொள்கின்றது. அங்கு வீட்டுக்கு ஒரு கிணறு, ஊற்று நீரில் பெருமைபெற்றது. கதையின் படி, மணமான அக்கா பரமேஸ்வரி, தங்கை தவமணியின் குடும்பம், கணவர் மலைநாட்டு தேயிலை, ரப்பர் தோட்டத்தில் பணியாற்றி வருபவர், மாதச் சம்பளம் பெறுபவர். இளைய தங்கை தவமணியின் கிணற்றில் இடம்பெற்ற அகால மரணமே நாவலின் திருப்புமுனை. அவர்களின் தோழி வைதேகி, கிணற்று*

அகால மரணத்தை தன் தோழிசார்ந்து ஆராய்கின்றாள். அவர்கள் வீட்டில் பரமேஸ்வரியின் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லித் தர ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்வீட்டுப் பையன் சந்திரன் முதன்மை பெறுகின்றான். செ.கணேசலிங்கன் ஈழத்தில் மார்க்சியப் பார்வையுடன் எழுத ஆரம்பித்தோரில் தரமான நாவல்களைத் தந்தவர். நாவல், சிறுகதை ஆகிய ஆக்க இலக்கியத் துறைகளில் மட்டுமல்லாது சமயம், சமூகவியல், அரசறிவியல், பெண்ணியம், கலை, திறனாய்வு போன்ற பல்வேறு துறைகளிலும் பெருமளவு எழுதி நூல்களை வெளியிட்டுள்ளார். குமரன் பதிப்பகத்தை ஆரம்பித்து அதன் மூலம் பெருமளவு தரமான நூல்களைப் பதிப்பித்துள்ளார். 1971இல் குமரன் என்ற மாத இதழை ஆரம்பித்து பொதுவுடமைக் கருத்துக்களுக்கான களமாக அதனை சில ஆண்டுகள் வெளியிட்டுள்ளார்.

## 14816

**வீடு**. திக்குவல்லை கமால் (இயற்பெயர்: முகம்மது ஜெலால்தீன் முகம்மது கமால்). பத்தரமுல்ல: கலாசார அலுவல்கள் திணைக்களம், 8வது மாடி, செத்சிரிபாய, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (ராகம: நெலும் பிரின்டர்ஸ்).

viii, 101 பக்கம், விலை: ரூபா 280.00, அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-0353-34-7.

வீடு என்ற ஒற்றை வார்த்தையில் தனி மனிதனின் போராட்ட வாழ்க்கை மிக அழகாக இந்நாவலில் சித்திரிக்கப்பட்டுள்ளது. கமாலின் படைப்பாக்க முயற்சிகளுள் குறிப்பிடத் தக்கது அவரது நாவலிலக்கிய முயற்சியாகும். "ஒளி பரவுகிறது" (1995), "நச்சு மரமும் நறு மலர்களும்" (1998),"பாதை தெரியாத பயணம்" (2000),"உதயக் கதிர்கள்" (2006),"ஊருக்கு நாலுபேர்" (2007),"தெளிவு" (2009) ஆகிய நாவல்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன. "உதயகதிர்கள்" என்ற நாவல் எஸ்.ஏ.ஸி.எம். கராமத்தினால் சிங்களமொழிக்கு "ராழியா" எனும் பெயரில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. வீடு நாவல், கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2013ஆம் ஆண்டுக்கான திறந்த கையெழுத்துப் பிரதியாக்கப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட வெற்றிப் படைப்பு.

## 14817

**வெண்ணிலா: குறுநாவல்**. வெற்றிச்செல்வி. (இயற்பெயர்: வேலு சந்திரகலா). மன்னார்: வேலு சந்திரகலா, 1வது பதிப்பு, ஜனவரி 2017. (மன்னார்: சைபர் சிற்றி, அச்சுக் கலையகம்).

40 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-955-41027-2-9.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் போராளியான இந்நாவலின் கதாநாயகனின் முதற் காதல் பற்றிய உண்மை கலந்த கதை. போர்க்காலங்களில் அழகிய இளமை உணர்வுகளை ஒறுத்து விடுதலைப் போருக்காய் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவன் இளங்கோ. அதன் காரணமாக சிறையில் அடைபட்டு சொல்லொணாத சித்திரவதைகளுக்கு ஆளானான். அதன் விளைவாய் பாடுபட்டுப் பொருளீட்ட முடியாத அளவு உடல் உபாதைகளை நாளாந்தம் சுமக்கின்ற உடல்,

உள நோயாளியாகிவிட்டான். உடலும் மனமும் சமூகமும் பாதுகாப்பும் பொருளாதாரமும் ஒத்துழைக்க மறுக்கின்ற வாழ்க்கையை, சமாளித்து வாழத் தெரியாத ஒருவனாகவே நாடோடி வாழ்க்கை வாழ்கின்றான். அவனுக்குள் இருந்து அவ்வப்போது வழியும் துயரத்தின் கண்ணீரில் அவனது காதலி மஞ்சு கலந்திருக்கிறாள். உறங்காத அவனது முதல் காதல் பற்றி எழுதப்படும் இந்தக் கதைக்குள் எழுதப்படாத பல கதைகளையும் வாசகர்கள் புரிந்துகொள்ள முடிகின்றது. புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியான வெற்றிச் செல்வியின் எழுத்தின் சிறப்பு அது.

## 14818

**வெள்ளைச்சேலை: நாவல்.** கலையார்வன் (இயற்பெயர்: குருசுமுத்து இராயப்பு). யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்டர், 165 வேம்படி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2016. (பண்டத்தரிப்பு: ஜே.எஸ்.பிரிண்டர்ஸ்).

xxiv, 216 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 400., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-0197-06-4.

இலங்கையின் தேசிய இனங்களுக்கிடையே மனித நேய நோக்கையும் செயற் பாட்டையும் வளர்க்கும் பாங்கில் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. படைப்புக்கான மையக்கருத்தை விபரிக்கும் வேளையில் சமூகவியல் பற்றியதும், கதையின் களம்சார்ந்த புவியியல் பற்றியதும், இயற்கை பற்றியதுமான விபரிப்புகளையும் சுவையாகப் பரவவிட்டுள்ளார். குருசுமுத்து இராயப்பு (கலையார்வன்) 10.11.1949 இல் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். அரங்கியல், கவிதை, கட்டுரை, சிறுகதை மற்றும் பல்துறை சார்ந்த எழுத்தாக்கங்களில் தடம் பதித்தவர். 1960-1981 வரை 40 இற்கும் மேற்பட்ட நாடகங்களை இவர் எழுதியுள்ளார். 1968 இல் குருநகர் இளைஞர் கலைக்கழகத்தால் வெளியீடு செய்யப்பட்ட "உலகின் ஒளி" என்னும் தொகுப்பு நூலின் ஆசிரியராகப் பணியாற்றிய கலையார்வன், 1969 இல் குருநகர் இளைஞர் கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட "நம் ஒளி" எனும் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். யாழ். குருநகர் மண்மணம் கமழும் இவரது பல்வேறு ஆக்கங்கள், வரலாற்று ஆவணப்படைப்புகள் நூலுருவில் வெளிவந்துள்ளன. மேலும் கடலலைகள், கொஞ்சும் குருநகர், குருதிக் குளியல்கள் போன்ற பிரபல நூல்களையும் இவர் எமக்களித்துள்ளார். இவரது ஆக்கங்கள் பல வெளிநாடுகளிலும் வெளியீடு செய்யப்பட்டுள்ளன. இலக்கிய நூல் பரிசுப் போட்டியில் 2006 இற்கான பல்துறைப் பரிசு இவருக்கு கிடைத்தது.

## 14819

**வேப்பமரம் (நாவல்).** கலையார்வன் (இயற்பெயர்: குருசுமுத்து இராயப்பு). யாழ்ப்பாணம்: ஜெயந்த் சென்டர், 28 மார்ட்டின் வீதி, 1வது பதிப்பு, ஐப்பசி 2013. (பண்டத்தரிப்பு: ஜே.எஸ்.பிரிண்டர்ஸ்).

xii, 144 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-0197-03-3.

கலையார்வனின் 16ஆவது நூலும் இரண்டாவது நாவலும் இதுவாகும். முன்னர் இவரது உப்புக்காற்று என்ற நாவல் மீனவரின் வாழ்வியலைச் சித்திரித்து 2012இல் வெளிவந்திருந்தது. வேப்பமரம், யாழ்ப்பாணத்து மண்ணின் போர்க்காலத்து வாழ்வியலை சித்திரிக்கும் கதை. கனகம்-சின்னையா தம்பதியரின் இரண்டாவது மகளான சந்திராவின் குடும்பத்தை மையமாகக் கொண்டு பின்னப்பட்ட கதை. வீட்டுவாசலில் அன்னை பேணிவளர்த்த வேப்பமரத்தை சந்திரா, தாயின் மறைவின்பின் தன் அன்னையாகவே கருதிப் பராமரிக்கிறாள். சந்திராவின் மூத்த மகன் பிரியந்தன் போராளிகளால் பிடித்துச் செல்லப்படுகின்றான். அவனை மீட்பதற்காக சந்திரா-ஆனந்தன் தம்பதியனரின் போராட்டம் நாவலில் சொல்லப்படுகின்றது. மகனை போராளிகளிடமிருந்து வெற்றிகரமாக மீட்ட போதிலும் அவனது 21ஆவது வயதில் கிளைமோர் தாக்குதலில் இழந்துவிடுகிறார்கள். பாதுகாப்புக் கருதி மகள் பிரியாவை நஜீமா என்ற முஸ்லிம் பெயரில் மத்திய கிழக்கு நாடொன்றுக்கு அனுப்பிவைக்கிறார்கள். அவளது வருமானத்தில் சந்திராவின் குடும்பம் தளைக்கின்றது. இருப்பினும் பிரியாவும் மத்தியகிழக்கு எஜமானனின் பாலியல் துன்புறுத்தலுக்கு இலக்காகி நாடு திரும்புகின்றாள். சந்திராவின் மற்றொரு மகள் பிரியவதனி ஜேர்மன் மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்பட்டு அவனால் ஏமாற்றப்படுகின்றாள். இவ்வாறு ஏராளமான உப கதைகளுடன் இந்நாவல் வேப்பமரமாகக் கிளைபரப்பி நிற்கின்றது. இறுதியில் சந்திராவின் குடும்பம் மீண்டும் ஒன்று சேர்கின்றது.

### 14820

**வேரும் விழுதும்**. செ.யோகநாதன். சென்னை 600030: என்.டி.எஸ்.பதிப்பகம், 32, கிழக்கு பூங்கா சாலை, ஷெனாய் நகர், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1993. (சென்னை 600005: ஜீவோதயம் அச்சகம், 65, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை).

viii, 120 பக்கம், விலை: இந்திய ரூபா 20.00, அளவு: 17.5x12 சமீ.

செ. யோகநாதன் ஈழத்தின் குறிப்பிடத்தக்க பிரபல எழுத்தாளர். ஈழத்து இலக்கியத்துறையில் முன்னோடிகளில் ஒருவர். தமிழ்த் தேசியத்திலும் மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் கொண்ட இவர் ஐந்து தடவைகள் இலங்கை அரசின் சாகித்திய மண்டல பரிசு பெற்றவர். தமிழகத்திலும் தமிழக அரசின் பல விருதுகளைப் பெற்றதோடு அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதியாலும் பாராட்டும் பரிசும் வழங்கப்பெற்றவர். யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி. பெருமளவு சிறுகதைகளையும், குறுநாவல்களையும் எழுதியவர். கலைச்செல்வி பண்ணையில் வளர்ந்த இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 1960, 1964 களில் முகிழ்த்த சிறுகதை எழுத்தாளர் குழுமத்தில் ஒருவர். இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி அவர் பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்த வேளையிலேயே வெளிவந்து விட்டது. தமது குறுநாவல்களையும் மூன்று தொகுதிகளாக வெளியிட்டிருந்தார். யோகநாதன் அவர்கள் ஆரம்பத்திலே இன உணர்வு, மொழி உணர்வு மிக்கவராக தமிழரசுக் கட்சியின் பால் கவரப்பட்டவர்.

பின்னர் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபடத்தொடங்கியதும் ஒரு மார்க்சிய முற்போக்குவாதியாகி தேசியம், மண்வாசனை, யதார்த்தம் ஆகிய கரிசனைகளுக்கு உட்பட்டிருந்தார். அவர் மார்க்சிய முற்போக்குவாதியாகக் கடைசிவரை வாழ்ந்திருக்கின்றார். 1983 இலே தமிழ்த் தேசியவாதம் இவரின் கதைகளில் ஆழவே வேரூன்றி உள்ளதைக் காணலாம். இதில் மூன்று நிலை அவரிடம் இருந்திருக்கின்றது. முதலில் சமஷ்டி நிலையில் இருந்திருக்கின்றார், பிறகு கொம்யூனிஸ்ட் கட்சி முற்போக்கு எழுத்தாளராக இருந்திருக்கின்றார், பிற்காலத்திலே தமிழ்த் தேசியம் அவரது கதைகளிலே ஆழவே வேரூன்றி இருப்பதைக் காணலாம். வேரும் விழுதும் என்ற இந்நாவல் அவரது மேற்குறிப்பிட்ட கருத்தியல்களுக்கு இலக்கிய வடிவம் கொடுப்பதாக அமைந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38376).

## 14821

**ஜெப்னா பேக்கரி.** வாசு முருகவேல். சென்னை 600 042: யாவரும் பப்ளிஷர்ஸ், 214, புவனேஸ்வரி நகர் 3வது மெயின் ரோடு, வேளச்சேரி, 1வது பதிப்பு, டிசம்பர், 2017. (அச்சக விபரம் தரப்படவில்லை).

128 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21.5x14.5 சமீ.

இது ஒரு இலக்கிய புனைவுப் பிரதி. இலங்கையின் வட பகுதியிலிருந்து முஸ்லீம்களைப் புலிகள் வெளியேற்றியது குறித்த உண்மைகளை உள்ளபடியே சித்திரிப்பதுதான் இந்தப் புத்தகத்தின் நோக்கம் என ஆசிரியர் இந்நாவலின் முன்னுரையிலே குறிப்பிட்டுள்ளார். "இலங்கைத் தீவிலிருந்து இந்திய ராணுவம் வெளியேறுவதற்கு முன்பாக ஊர்க்காவல் படை என்ற பெயரில் இஸ்லாமிய இளைஞர்களைக் கொண்டு ஒரு தனிப்படை அமைத்து அவர்களுக்கென அதிகாரம் கொடுத்தது. தமிழர் - இஸ்லாமியர் வெறுப்பின் குழப்பமான சூழல் தீவிரமடைந்தது இங்கிருந்துதான். அதன் பிற்பாடு நடந்த பெரும்பாலான வன்முறைகளுக்கான துவக்கத்தை இந்திய அமைதிப்படை விதைத்துவிட்டுப் போனது. வாசு முருகவேலின் ஜெப்னா பேக்கரியின் கதையும் இதன் பின்புலத்தில் தான் உருவாகியுள்ளது". லக்ஷ்மி சரவணகுமார் (நாவலுக்கான முன்னுரையில்). இந்நாவலின்படி ஒருநாள் திடீரெனப் புலிகள் யாழ்ப்பாணத்தில் 85 முஸ்லீம் இளைஞர்களையும் அவர்களோடு கூட்டுச் சேர்ந்திருந்த ஒரு தமிழரையும் கைது செய்கிறார்கள். இவர்களால் யாழ்ப்பாணத்து வீடொன்றில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்களையும் இவர்களுக்கும் இலங்கை இராணுவத்திற்குமான தொடர்பையும் புலிகள் கண்டுபிடிக்கிறார்கள். இதைத் தொடர்ந்து அனைத்து யாழ்ப்பாண முஸ்லீம்களையும் ஒஸ்மேனியா கல்லூரிக்கு அழைத்த புலிகள் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உட்பட ஒட்டுமொத்த முஸ்லீம்களையும் 2 மணிநேர அவகாசத்துள் யாழ்ப்பாணத்திலிருந்து அனைத்து உடமைகளையும் கைவிட்டு வெளியேறுமாறு துப்பாக்கி முனையில் ஆணையிட்டு வெளியேற்றுகிறார்கள். இவ்வாறாக இந்நாவலில் கதை வளர்த்துச் செல்லப்படுகின்றது. ஊர்காவல் படைகளின் உருவாக்கம் பற்றிய மற்றுமொரு

*வரலாற்றுக் குறிப்பினையும் இங்கு குறிப்பிடவேண்டும். ஊர்காவல் படை என்பது அரச பாதுகாப்புப் பிரிவினால் உருவாக்கப்படும் தற்காலிக துணைப்படை.* Shot gun *வகைத் துப்பாக்கிகளும் அவற்றுக்கான சிறு எண்ணிக்கையான ரவைகளுமே இவர்களுக்கு வழங்கப்பட்டன. ஆயுதக் குழுக்களால் தாக்கப்பட்ட முஸ்லிம் ஊர்களிலும் எல்லைச் சிங்கள ஊர்களிலும் மக்கள் வேண்டிய பாதுகாப்பை வழங்க போதிய ராணுவம் இல்லாத நிலையில் குறித்த ஊர் பிரஜைகளைக் கொண்டு இவை உருவாக்கப்பட்டன. தாக்கப்படும் ஊரைக் காக்க ராணுவம் வந்து சேரும் வரையான தற்காப்பே ஊர்காவல் படையின் பொறுப்பு. பெரும்பாலும் இப்படைகளில் உள்ளூர் சண்டியர்களின் மேலாதிக்கம் இருந்தது, அரச படைகளுக்கேயுரிய மனோபாவங்களுமிருந்தன. முஸ்லிம் மக்கள் மத்தியில் அச்சுறுத்தும் "மூன்றாம் படை"யாக அவர்கள் தேறினர். அரச படையுடன் பொருதிய பலமிக்க ஆயுதக் குழுக்கள் இவர்களை மிக எளிதாக ஊர் ஊராக இரவிரவாக வேட்டையாடின. பதிலுக்கு அப்பாவித் தமிழ் மக்களை ஊர்காவல் படையினர் அவ்வப்போது பழி தீர்த்தனர். கடைசியில் ஊர்காவல் படைகள் கலைக்கப்பட்ட போது எஞ்சியவர்கள் அரச இராணுவத்தில் உள்ளீர்க்கப்பட்டார்கள்.*

## 894.8(5) மொழிபெயர்ப்பு நாவல்கள், குறுநாவல்கள்

### 14822

**அசையாத மலைத்தொடர்.** *கமல் பெரேரா (சிங்கள மூலம்), திக்குவல்லை கமால் (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2015. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).*

*280 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 23*x*15 சமீ.,* ISBN: *978-955-30-6576-6.*

*சிங்கள புனைகதை உலகில், எண்பதுகளில் பிரபல முன்னணிப் படைப்பாளிகளில் ஒருவர் கமல் பெரேரா. சிறுகதை, நாவல், பத்தி எழுத்து போன்ற பல்துறை சார்ந்த நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ளார். இவரது திறந்த கதவு என்ற சிறுகதைத் தொகுதியும் பொன்தாமரைக்குளம் என்ற இளையோர் நாவலும் முன்னர் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. இது இவரது மூன்றாவது தமிழ் மொழிபெயர்ப்பு நூலாகும். இந்நாவல், சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளில் சிக்குண்டு அப்பாவிகளாக வாழும் மலைக் கிராமத்தவர்களின் கண்ணீர்க் கதையின் ஒரு வெட்டுமுகத்தை, 1971இல் இடம்பெற்ற இளைஞர் கிளர்ச்சிப் பின்னணியில் நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துவதில் வெற்றிபெற்றுள்ளது.*

### 14823

**அம்பரய.** *உசுல பி.விஜயசூரிய (சிங்கள மூலம்), தேவா (தமிழாக்கம்). சென்னை 600005: வடலி வெளியீடு, பி-55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).*

*136 பக்கம், விலை: இந்திய ரூபா 110., அளவு: 21.5*x*14 சமீ.,* ISBN: *978-0-9919 755-7-0.*

*19 பாகங்களில் எழுதப்பட்ட இச்சிங்கள நாவலின் ஆசிரியர் உசுல பி.விஜயசூரிய. பெருமளவு ஆங்கில நூல்களை எழுதிய இவ்வெழுத்தாளரின் "அம்பரய" நாவல் 1970இல் வெளிவந்தது. (அம்பரய -அம்பர், ஓர்க்கோலை, மீனம்பர், செம்மீன் வயிரம், கற்பூரமணி என்னும் பல சொற்களால் குறிக்கப்படுகின்றது. ஸ்பேர்ம் திமிங்கிலத்தின் ஓர் கழிவுப்பொருள். கெட்ட நாற்றம் வீசும் அதிலிருந்து உலகின் விலை உயர்ந்த வாசனைத் திரவியத்தைத் தயாரிக்கின்றார்கள்). இந்த அம்பரயவைத் தேடி கடற்கரை எங்கும் அலையும் சுமனே என்பவனைப் பற்றிய கதையே இது. பதினாறு வயது நிரம்பிய சிறுவன் சுமனே. தாய் இறந்துவிட்டார். தந்தையார் வெலிக்கடை ஜெயிலில் இருக்கின்றார். சுமனே தனது பாட்டியுடனும்,சிரியா, றூபா என்ற இரு தங்கைமார்களுடனும் வாழ்ந்து வருகின்றான். சுமனே தான் அக்குடும்பத்தின் பொருளாதார மூலம். மீன் பிடிப்பதுடன் கூலி வேலை செய்தும் தங்கைமாரின் கல்வியில் அக்கறை கொள்கின்றான். அம்பரயவைத் தேடி அலைந்த சுமனேக்கு ஒரு தடவை அது கைக்கெட்டுகின்றது. உண்மையில் அது எப்படி இருக்கும் என்றே சுமனேக்குத் தெரியாததால் மார்ட்டீன் என்பவனிடம் அதனைக் கொடுத்து ஏமாந்து விடுகின்றான். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற கதைதான். அம்பரய தேடி மூர்க்கமாக அலையும் சுமனேக்கு இறுதியாகக் கிடைத்த "அம்பரய" என்ன என்பதுதான் கதை. ஒரு குடும்பத்தைக் காப்பாற்றப் போராடும் சிறுவனாக, குழப்படிப் பையனாக, சண்டியனாக, குறும்புகள் செய்பவனாக, கசிப்பு விற்று ஜெயில் தண்டனை பெறுபவனாக எனப் பல அவதாரங்கள் எடுக்கின்றான் சுமனே. இடையிடையே நகைச்சுவை இழையோடும் விறுவிறுப்பான சம்பவங்களைக் கொண்டது இந்நாவல். கதை நிகழும் அக்காலத்தில் பிரதமராக இருந்த ஆர். பிரேமதாசாவின் கிராம மறுமலர்ச்சித் திட்டம் பற்றியெல்லாம் இந்நாவல் விபரிக்கின்றது. இடையிடையே பில்லி சூனியம் மந்திரித்தல் பேயோட்டுதல் என்று வேறு விடயங்களும் சுவாரஸ்யத்தை அதிகரிக்கினறன. ஒரு மனிதனுக்கு எத்துனை இடர் வந்த போதிலும், அவற்றையெல்லாம் முறியடித்து முன்னேற்றப் பாதையில் சென்று உயர்ந்து நிற்கின்றான் சுமனே.*

## 14824

**அமுத மழை.** *ஜயசேன ஜயக்கொடி (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2018. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).*

*(6), 7-335 பக்கம், விலை: ரூபா 850., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-955-30-9569-5.*

*சிங்கள இலக்கியத்தில் பிரபல்யம் வாய்ந்த ஓர் எழுத்தாளராக வாசகர் மத்தியில் தன் அடையாளத்தைப் பதியவைத்த ஜெயசேன ஜெயக்கொடியின் "அமாவெஸ்ஸ" என்ற சிங்கள நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு இது. கௌதம புத்தரின் நற்குணங்களைப் பற்றியும் உலக ஜீவராசிகள் மீது அவர் பரப்பிய பெருங்கருணை பற்றியும் பக்தி நிறைந்த மனப்பாங்குடன் இந்நாவலில் விளக்கியுள்ளார். பாரத*

தேசத்தின் வடக்கிலிருந்த கபிலவஸ்து இராச்சியமே புத்தபகவானின் ஜன்மபூமி. அவரது தந்தையார் சுத்தோதனன் அத்தேசத்தின் தந்தை. அரசாள இராச்சியமும் பணிவிடை செய்ய சேவகர்களும் வாழ்வின் வளங்கள் அனைத்தும் இருந்தபோதிலும், கௌதமர் அவற்றையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு மனிதன் படும் துயரத்துக்கு பரிகாரம் தேட முனைகிறார். அதன் உண்மையைக் கண்டறிந்து தன் மக்களுக்குத் தெளிவுபடுத்தினார். ஆசையினால் வரும் கேட்டையும் அன்பின் பெருமையையும் போதித்த வண்ணம் பாரதத்தின் பலகாத தூரம் நடக்கின்றார். சிரசில் கிரீடம் தரித்த மன்னரெல்லாம் அவரை நாடி வருகிறார்கள். சாதாரண குடிமக்களும் அவரது போதனைகளுக்காகக் காத்திருக்கிறார்கள். அவர் பொழிந்த அமுத மழையே இந்நாவலாகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65493).

### 14825

**அழியாக் குறிகள் (நாவல்).** மஹிந்த பிரசாத் மஸ்இம்புள (சிங்கள மூலம்), மு.துரைசாமி (தமிழாக்கம்). கொழும்பு: கலாசார அலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு, 8ஆவது பதிப்பு, டிசம்பர் 2013, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2012. (கொழும்பு: அரசாங்க அச்சகத் திணைக்களம்).

164 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-955-0353-48-4.

"செங்கொட்டான்" என்ற தலைப்பில் சிங்களத்தில் வெளிவந்த இந்த மூலநாவல், 2012ஆம் ஆண்டுக்கான சிறந்த நாவலுக்கான அரச இலக்கிய விருதினையும், வித்தியோதய இலக்கிய விருதினையும், கொடகே இலக்கிய விருதினையும் பெற்றதுடன், தங்க புத்தக விருதுக்கான அங்கீகாரத்தையும் இந்நாவல் பெற்றிருந்தது. மூலநூல் 2012-2013 காலகட்டத்தில் எட்டுப் பதிப்புகளைக் கண்டிருந்தது.

### 14826

**காற்சட்டை அணியும் பெண்மணி: சீனக் குறுநாவல்.** வாங் நுன்சி (சீன் மூலம்), ந.சுரேந்திரன் (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: நதி வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1986. (அச்சக விபரம் தரப்படவில்லை).

32 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 20x13.5 சமீ.

நான்கு அத்தியாயங்களில் எழுதப்பெற்ற குறுநாவல். 60 வயதான சூ செங் தைரியமற்ற எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடிய ஒருவர். அவரது மனைவி லீ குயலான் அவரது குடும்பத்தில் ஒரு காற்சட்டை அணியும் பெண்மணி. வீட்டின் தலைவராக அவரது கணவருக்குப் பதிலாக லீ குயலான் தனது பெயரையே பதிவுசெய்திருப்பதிலிருந்து அவர் தாங்கும் குடும்பப் பொறுப்பு புலனாகும். அவரது கிராமத்தில் விவசாயிகளிடையே குழாய்க் கிணறு தோண்டும் ஆவல் ஏற்படுகின்றது. சூ செங் அதற்கு விருப்பப்பட்டாலும் அதனை மேற்கொள்வதற்கான மனத்தைரியம் அவருக்கில்லை. அவரது மனைவி லீ குயலான் கணவர் கொண்ட மூடநம்பிக்கைகளுக்கும் நம்பிக்கையீனங்களுக்கும் மத்தியில் சீன அதிகாரிகளின்

இடையூறுகளையும் தீரத்துடன் சமாளித்து எவ்வாறு தன் காணியில் கிணற்றை அமைத்துத் தம் வீட்டுத் தண்ணீரை கணவனுக்கு வழங்குகின்றார் என்பதே இக்குறுநாவலின் கதையாகும். (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 001397).

## 14827

**குருதிப் பூஜை (நாவல்).** நிஹால் பீ.ஜயதுங்க (சிங்கள மூலம்), திக்குவல்லை கமால் (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2018. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(11), 12-528 பக்கம், விலை: ரூபா 1350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-30-9651-7.

இலங்கையின் முப்பது வருடகால யுத்தத்தைப் பின்னணியாகக்கொண்ட நாவல். இருபக்க நியாயங்களையும் அநியாயங்களையும் இந்நூல் பேசுகின்றது. கேர்ணல் சிரிதாசவும் பேராசிரியை தேவகியும் கதையின் பிரதான பாத்திரங்களாவர். இந்நாவலில் கள நிலவரங்கள் யதார்த்தமாகவும், வரலாற்றுக் கண்ணோட்டத்துடனும் முன்வைக்கப்பட்டுள்ளன. குறுகிய இனவாதங்களுக்கப்பால் பாரபட்சமற்ற வகையில் தமிழ்- சிங்கள மக்கள் மனித நேயத்துடன் இணைந்து வாழ்வதை இந்நாவல் வேண்டிநிற்கின்றது. இலங்கையில் பெரும்பாலான சிங்கள எழுத்தாளர்கள் இனவாதத்தை முதன்மைப்படுத்திய நாட்டுப்பற்றாளர்களாகத் தமது படைப்புக்களை எழுதுகின்றனர். அதனூடாக தமது இனம் உயர்வானதென்றும் ஏனையோர் முக்கியமற்றவர்கள் என்றும் தெரிவிக்கின்றனர். குருதிப் பூஜை சிங்களவர்களைப் போலவே தமிழர்களும் மனிதர்களே என்பதை தத்ரூபமாக வெளிக்காட்டுகின்றது. சிங்கள மூல நூல் பாடசாலைகளின் நூலகங்களுக்குப் பொருத்தமானதென கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65498).

## 14828

**மாய மீட்சி.** மிலான் குந்தேரா (செக்கோஸ்லோவாக்கிய மூலம்), மணி வேலுப்பிள்ளை (தமிழாக்கம்). சென்னை 600087: வாழும் தமிழ், பிளாட் நம்பர் 44, 5ஆவது தெரு, ஓம் சக்தி நகர், வளசரவாக்கம், 1வது பதிப்பு, நவம்பர் 2009. (சென்னை 5: ஜோதி ஆப்செட்).

167 பக்கம், விலை: இந்திய ரூபா 210., அளவு: 21x14 சமீ.

52 அத்தியாயங்களில் விரியும் நாவல் இது. மணி வேலுப்பிள்ளையின் மூன்றாவது நூலாகவும் வெளிவந்துள்ளது. ஈழத்தமிழரின் அலைந்துழல் வாழ்க்கையை ஈரானியர்களின் பார்வையில் சொல்லப்பட்டது போன்ற ஒரு மாயையை இந்நாவல் தோற்றுவிக்கும் அளவுக்கு இரண்டு வேறுபட்ட சமூகங்களின் அவலவாழ்வும் தாயகக் கனவும் ஒரே மாதிரியான அனுபவங்களையே ஆங்காங்கே

கொண்டிருக்கின்றன. "அறியாமை" என்ற தலைப்பில் மிலான் குந்தேரா எழுதிய நாவலின் ஆங்கில வழி மொழிபெயர்ப்பு இதுவாகும். மிலான் குந்தேரா செக்கோஸ்லோவாக்கிய நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து பிரான்சில் வாழ்ந்தவர். இரு மொழிகளிலும் எழுதிவரும் ஓர் இலக்கியவாதி. இந்நாவலில் பேசப்படும் பாத்திரங்களுள் இரினாவும் செக். நாட்டிலிருந்து பிரான்சுக்குக் குடிபெயர்ந்தவளாகச் சித்திரிக்கப்படுகிறாள். பிரான்சில் அவளுடன் கூடிவாழும் கஸ்தாவ் சுவீடனிலிருந்து பிரான்சுக்குக் குடிபெயர்ந்தவன். அவர்கள் தாயகம் நோக்கிய பயணிகளாக செக் நாட்டிற்குத் திரும்புகிறார்கள். யோசெப் செக் நாட்டிலிருந்து டென்மார்க்கிற்கு குடிபெயர்ந்தவன். தாயகத்து மனைவியைக் கைவிட்டு டென்மார்க்கில் ஒரு பெண்ணைக் கைப்பிடித்தவன். அவனும் செக் நாடு திரும்புகின்றான். நாடு திரும்பும் வழியில் இரினாவும் யோசெப்பும் சந்திக்கிறார்கள். தாய்நாடு திரும்பியது குறித்து இரினா ஏமாற்றம் அடைகிறாள். யோசெப் கூட இறுதியில் தாயகக் கனவைக் கைவிட்டு டென்மார்க்குக்குத் திரும்புகிறான். பிரதான பாத்திரங்கள் அனைவருக்கும் தாயக வேட்கை உண்டு. எனினும் எவருக்குமே மீட்சி கைகூடவில்லை. நினைவில் புதையுண்ட மீட்சி, நனவில் கைகூடாது போகின்றமையே இக்கதையின் பிரதான கருவாகும். அதுவே மாய மீட்சியாகின்றது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 066488).

### 14829

**மிகப் பெரும் ஆயுதக் களைவு.** யுஆன் ஹெளசுன் (ஆங்கில மூலம்), மு.பொன்னம்பலம் (தமிழாக்கம்). பத்தரமுல்ல: நெப்யூன் பப்ளிக்கேஷன்ஸ், 302, பஹலவெல வீதி, பெலவத்தை, 1வது பதிப்பு, 2018. (பத்தரமுல்ல: நெப்யூன் பப்ளிக்கேஷன்ஸ், 302, பஹலவெல வீதி, பெலவத்தை).

(4), 274 பக்கம், விலை: ரூபா 680., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-7496-54-2.

யுஆன் ஹெளசுன் இன்றைய சீனாவின் படைத்தரப்பின் சீர்திருத்த எழுத்தாளராகவும் படைத்துறை ஊடகவியலாளராகவும் பணியாற்றுபவர். அச்சமில்லாத ஆக்கபூர்வமான எழுத்தாற்றல் கொண்டவர். இவர் இந்நூலை ஆய்வுரீதியான சீன வரலாற்று நாவலாகவும், கவித்துவச் செறிவுள்ள கட்டுரையாகவும் எழுதியுள்ளார். 1985இல் டெங்சியா ஓபிங் தன் எதிர்காலப் பார்வைக்கு எட்டிய அளவில் உலக யுத்தம் ஏற்படப் போவதில்லை என்று எதிர்வுகூறி, நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்ல விரும்பி, சீனாவின் படைத்தரப்பினை அடியோடு மாற்றியமைக்கத் தீர்மானம் எடுத்தார். 1987இல் ஒரு மில்லியன் படையினர் படைத்தரப்பிலிருந்து கலைக்கப்பட்டனர். இந்த அடிப்படை மாற்றத்தின் மூலம் சீனாவின் ஆண்களும் பெண்களும் முகம்கொடுத்த முற்றுமுழுதான துன்பியல், இன்பியல் அனுபவங்களானது சீனா, சீனப்படைத்தரப்பு, பற்றிய இக்காலத்திற்குரிய தரிசனத்தை சுவையோடு வழங்குகின்றது. அவர்களது காதல், வெறுப்பு, விசுவாசம், அவாஞ்சை ஆகியவற்றின் கதைகள் உங்களோடு

*நீண்டகாலத்திற்கு நிற்கும் வகையில் இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65515).*

### 14830

**வடவாமுகாக்கினி (நாவல்).** *அனுலா விஜேரத்ன மெனிகே (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு: இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை வளர்க்கும் செயற்றிட்டம், மாணவ மதியுரையாளர் பணிமனை, கொழும்புப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொட்டாவ: சார பிரசுரத்தார், 1/94, அதுறுகிரிய வீதி).*

*(8), 9-258 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 19*x*14 சமீ.,* ISBN: *955-584-259-0.*

*ஒருவர் தான் பிறந்து வளர்ந்த பண்பாட்டைத் துறந்து புதியதொரு கலாச்சாரத்துடன் ஒன்றிவிட விரும்புகிறார் என்றால் அவர் அந்தப் புதிய கலாச்சாரத்தை மனமார விரும்புபவராக இருக்கவேண்டும். இந்தப் புதிய கலாச்சாரப் பண்புகள் அவரை முழுதாக ஆட்கொள்ளும்வரை அவர் அந்தக் கலாச்சாரத்திற்கு ஒரு அந்நியர்தான். அவர் அதன் புற ஓட்டில் ஒட்டி வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருவரேயாவார். அந்தப் புற ஓட்டைக் குத்திக் கிழிக்க முயலும் ரங்கசாமி போன்றவர்கள் செயற்கைத் தோற்றம் பூண்ட ஒரு சமுதாய அலையில் அகப்பட்டு அதனால் முற்றாக அந்நியராக்கப்படுவதைத் தான் இந்த நாவல் சித்திரிக்கின்றது. நம்பிக்கைக்குப் பாத்திரமான அல்லது நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கவேண்டிய சகோதரர் கூட்டம், தமக்கிடையே துரோகிகளாக மாறிவிடும் சம்பவம் வர்க்கப்போராட்டத்தில் முடிவுறுகின்றது. ஆழ்கடலின் அடியில் மறைந்திருக்கும் ஊழித் தீ போல அது ஒரு கட்டத்தில் வெளிப்பட்டு எங்கள் அபிலாஷைகள் அனைத்தையும் பொசுக்கி விடுகின்றது. "வடபாகின்ன" என்ற சிங்கள மூலநூல் 1991இல் வெளிவந்தபோது அவ்வருடத்திற்கான சிறந்த நாவலுக்கான சாஹித்திய மண்டலத்தின் விருதைப் பெற்றிருந்தது. 1992ஆம் ஆண்டில் இதே நாவல் இலங்கை மக்கள் இலக்கிய விழாவில் சிறந்த நாவலுக்கான மக்சிம் கொர்க்கி விருதினையும் பெற்றது. (பெண்குதிரை முகத்தின் வடிவோடு கடலுக்குள் தங்கியிருந்து யுகாந்தத்தில் மேலே கிளம்பி உலகத்தை எரித்து விடுவதாகக் கருதப்படும் தீ - ஊழித்தீயை வடவாமுகாக்கினி என்பர். வடவை + முகம் + அக்கினி).*

## 894.8(6) பொது இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வு

### 14831

**அதிவீரராம பாண்டியரின் நைடதம்: யாவர்க்கும் ஒரு ஔடதம்: ஒரு ஆய்வுக் கண்ணோக்கு.** *ஈழத்துப் பூராடனார் (இயற்பெயர்: க.தா.செல்வராசகோபால்). கனடா: நிழல் வெளியீடு, சீவன் பதிப்பகம், இல. 3,* 1292, Sherwood Mills Bloved, Mississauga, L5V 1S6, *1வது பதிப்பு, 2007. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம்,* # 3, 1292, Sherwood Mills, Mississauga, Ontario, L5V 1S6*).*

xxviii*, 260 பக்கம், விலை: 20 கனேடியன் டொலர், அளவு: 21*x*14 சமீ.*

அதிவீரராம பாண்டியர் பிற்கால பாண்டிய மன்னர்களுள் ஒருவர். 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் ஏறக்குறைய 40 ஆண்டுகள் (1564-1604) ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. இவர் ஒரு அரசர் என்பதோடன்றித் திறமையான தமிழ்ப் புலவராகவும் விளங்கினார். வடமொழியிலும், தமிழிலும் தோன்றிய, நளன் கதை கூறும் நூல்களைத் தழுவி "நைடதம்" என்னும் நூலை இவர் இயற்றினார். இது சிறந்த தமிழ் நூல்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது தவிர நீதிகளை எடுத்துக் கூறும் வெற்றி வேற்கை என்னும் நூலையும், காசி காண்டம், கூர்ம புராணம், மாக புராணம் ஆகிய நூல்களையும் ஆக்கியுள்ளார். நைடதம் நூல் பற்றிய ஈழத்துப் பூராடனாரின் இலக்கியக் கண்ணோட்டம் கனடா, டொரன்டோ ஈழநாடு பத்திரிகையில் தொடர்ந்து பிரசுரமானது. அக்கட்டுரைத் தொடரின் நூல்வடிவமே இதுவாகும். நூற்சிறப்பு நோக்கு, நைடதம் என்னும் நூற்படைப்புப் பற்றிய நோக்கு, காவியத்தின் பின்புலக் கண்ணோக்கு, நைடதமென்னும் ஔடதக் கண்ணோக்கு, மாவிந்த நகரத்தின்கண் ஒரு கண்ணோக்கு, அன்னத்தைக் கண்ணுற்ற படல கண்ணோக்கு, அன்னத்தைத் தூதுவிட்ட படலக் கண்ணோக்கு, கைக்கிளைப் படலத்தில் ஆய்வுக் கண்ணோக்கு, மாலைப் படலம் பற்றிய ஆய்வுக் கண்ணோக்கு, நிலாத் தோற்றுப் படல ஆய்வுக் கண்ணோக்கு, சந்திரோபாலம்பனப் படல ஆய்வுக் கண்ணோக்கு, மன்மத ஆலம்பனப் படலம் பற்றிய ஆய்வுக் கண்ணோக்கு, இந்திரப் படல ஆய்வுக் கண்ணோக்கு, நளன் தூதுப் படலக் கண்ணோக்கு, சுயம்வர படலத்தில் ஒரு ஆய்வுக் கண்ணோக்கு, போர்புரி படல ஆய்வுக் கண்ணோக்கு, மணம்புரி படல ஆய்வுக் கண்ணோக்கு, மீட்சிப் படல ஆய்வுக் கண்ணோக்கு, கலி தோன்று படல ஆய்வுக் கண்ணோக்கு, இளவேனிற் படல ஆய்வுக் கண்ணோக்கு, போதுகொய் படல ஆய்வுக் கண்ணோக்கு, புனல் விளையாட்டுப் படல ஆய்வுக் கண்ணோக்கு, சூதாடு படல ஆய்வுக் கண்ணோக்கு, நகர் நீங்கு படல ஆய்வுக் கண்ணோக்கு, கான் புகு படல ஆய்வுக் கண்ணோக்கு, பிரிவுறு படல ஆய்வுக் கண்ணோக்கு, வேற்றுரு அமைந்த படலம், வீமன் தேடவிட்ட படல ஆய்வுக் கண்ணோக்கு, கலி நீங்கு படல ஆய்வுக் கண்ணோக்கு, தேவியைக் கண்ணுற்ற படலக் கண்ணோக்கு, அரசாட்சிப் படல ஆய்வுக் கண்ணோக்கு, ஆதிக் கிரேக்க இலக்கியங்கள் நாடகங்களின் தமிழாக்க நூல்களின் தகவற் களஞ்சியம், தமிழ் இலக்கிய நூல்களின் ஆய்வுப்பட்டியல் ஆகிய 35 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இறுதி இரு அத்தியாயங்களும் நூலாசிரியரின் பிற நூல்கள் பற்றியவை. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44355).

### 14832

**இலக்கியம்: விசேட மலர் 2014**. சபா ஜெயராசா, எஸ்.ஜே.யோகராஜா, க.இரகுபரன் (தொகுப்பாசிரியர்கள்), சு.முரளிதரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு: அரச இலக்கிய ஆலோசனைக் குழு, கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 1வது பதிப்பு, 2014. (கொழும்பு: Fast Ad அச்சம்).

224 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

*இவ்விதழில் மலையக வாழ்வு-ஆங்கில மலையாள மொழிகளில் (சாரல்நாடன்), சுதந்திரத்தின் பின் இலங்கையில் நிகழ்ந்த இலக்கியக் கோட்பாடுகள் நிலைப்பட்ட கருத்தாடல்கள் (சபா.ஜெயராசா), புனைகதைகளிற் பேச்சு வழக்கு (க.இரகுபரன்), இலக்கியக் கோட்பாடுகளும் இலக்கிய விமர்சனக் கோட்பாடுகளும் (நதிரா மரியசந்தனம்), யாழ்ப்பாணத்தில் சாதியும் மதமும் ஈழத்துத் தமிழ் நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேடல் (ம.இரகுநாதன்), இலங்கையில் வாய்மொழிப் பாடல் மரபில் வழங்கிவரும் எண்ணெய்ச்சிந்து: ஒரு பன்முக நோக்கு (செ.யோகராசா), யாழ் மாவட்டத்தின் சிறுகதை இலக்கியப் போக்குகள் (வ.மகேஸ்வரன்), தமிழ் மொழியில் "அ" எழுத்துக்குள்ள மாற்றொலிகளின் முக்கியத்துவம் (எஸ்.ஜே.யோகராஜா), எழுத்து-சிந்தனை-இலக்கியம் (கனகசபாபதி நாகேஸ்வரன்), சாதியம் நாத்திகம் நவ-பிராமணியம் (ந.இரவீந்திரன்), கைகேயி சூழ்வினைப் படலத்தின் ஊடாக வெளிப்படும் கம்பனின் கவித்துவம் (ச.லலீசன்), புதிய நூற்றாண்டில் ஈழத்து வடபுலத் தமிழ்க் கவிதைகள் (தி.செல்வமனோகரன்), ஈழத்து இலக்கிய மொழிபெயர்ப்புக்கள் (கந்தையா ஸ்ரீகணேசன்), மலையகம் தந்த ஓராளுமை-சாரல்நாடன் குறித்த ஒரு நேச பதிவு (சு.முரளிதரன்), ஈழத்து இனப்பிரச்சினையும் தமிழில் மொழிபெயர்ப்புக் கவிதைகளும் (மார்க்கண்டன் ரூபவதனன்), தமிழ்ப் பதிப்புலகில் சி.வை.தா. (ஸ்ரீ.பிரசாந்தன்), பேராசிரியர் கைலாசபதியை முன்னிறுத்தி முற்போக்கு இலக்கியம் பற்றிய ஒரு மதிப்பீடு (லெனின் மதிவானம்), உழைக்கும் மக்களை அடையாளப்படுத்துகின்ற மலையக இலக்கியம் (தெளிவத்தை ஜோசப்), ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறியும் தென்னிலங்கை கவிதையும் (மேமன் கவி) ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன.*

## 14833

**ஈழத்தில் தமிழ்நாவல் இலக்கியம்: சில குறிப்புகள்.** *ஆ.சிவநேசச்செல்வன். யாழ்ப்பாணம்: கலைப்பெருமன்ற வெளியீடு, ஏப்ரல் 1973. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

*12 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.*

*கலைக்கண் இதழில் 23.4.1973 அன்று வெளிவந்த கட்டுரையின் தனி நூல்வடிவம். நூலாசிரியர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தமிழ் விரிவுரை யாளராகப் பணியாற்றிய வேளையில் எழுதிய இக்கட்டுரையில் தமிழ்நாவல் இலக்கியத்தின் இருபதாம் நூற்றாண்டு வளர்ச்சிப் போக்குடன் சமகாலத்தில் எழுச்சிபெற்றிருந்த ஈழத்துத் தமிழ்நாவல் இலக்கியம் பற்றிய வரலாற்றுத் தகவல்களைப் பரிமாறிக் கொண்டுள்ளார்.*

## 14834

**உரைநடைச் சிலம்பு (பரல்-க).** *தொகுப்பாசிரியர் குழு. சுன்னாகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 3வது பதிப்பு, வைகாசி 1949, 1வது பதிப்பு, மார்கழி 1940, 2வது பதிப்பு, தை 1942. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

*(4), 118 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

இலக்கியம், வரலாறு, தத்துவம், கலை, கைத்தொழில் முதலிய துறைகளில் கைதேர்ந்த ஆசிரியர் பலர் எழுதிய கட்டுரைகளின் திரட்டு. இலக்கியச் சுவை (சுவாமி விபுலாநந்தர்), புரவலரும் புலவரும் (ரா.பி.சேதுப்பிள்ளை), புராதன திரிபுரி (நா.பொன்னையா), ஆருயிர் தந்த அரும்பெறலாழி (பண்டிதர் மு.நல்லதம்பி), ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணம் (டொக்டர் க.கணபதிப்பிள்ளை), நாகரிகம் (எஸ்.சோமசுந்தர பாரதி), தமிழ் நூல்களில் மகளிர் மாண்பு (வித்வான் வே.சிவக்கொழுந்து), பரிமேலழகர் (பண்டிதர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்), பூ (குல. சபாநாதன்), வசனத்தமிழ் (சோ.சிவபாதசுந்தரம்), சங்கீதம் (மு.ஆறுமுகம்), உழுதொழில் (பண்டிதர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்) ஆகிய பன்னிரு கட்டுரைகளும், ஈற்றில் உரைக் குறிப்பும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18929).

## 14835

**உரைநடைச் சிலம்பு (பரல்-உ).** தொகுப்பாசிரியர் குழு. சுன்னாகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, மாசி 1948. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(4), 94 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 20.5x13.5 சமீ.

இலக்கியம், வரலாறு, சங்கீதம், விஞ்ஞானம், கலை, வணிகம் முதலிய துறைகளில் கைதேர்ந்த ஆசிரியர் பலர் எழுதிய கட்டுரைகளின் திரட்டு. இதில் இளங்கோவடிகளும் கம்பரும் (வித்துவான் சி.கணேசையர்), வண்ணமும் வடிவும் (சுவாமி விபுலானந்தர்), உண்மைத் தைரியம் (பெ.நா.அப்புசுவாமி ஐயர்), புனலாட்டு (பண்டிதர் க.சிவசம்பு), தமிழ் வளர்த்த தாமோதரன் (எஸ்.வையாபுரிப் பிள்ளை), நாட்டுப் பாடல்கள் (பண்டிதர் க.சிவசம்பு), மனையறம் நடாத்தும் மாண்பு (வித்துவான் வி.சிவக்கொழுந்து), தமிழ் இசை (இராஜ அரியரத்தினம்), வணிகம் (க.நவரத்தினம்), சேர மன்னன் கடற்படைச் சிறப்பு (பண்டிதர் ச. ஆனந்தர்), வானொலி (அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி வகுப்பு மாணவன்), மெய்ப்புலவன் (பண்டிதர் சோ.இளமுருகனார்), இந்திரனும் கன்னனும் (முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி), ஆற்றுப் படை (பண்டிதர் க.சிவசம்பு), பெண்பாற் புலவர்கள் (பண்டிதர் க.சிவசம்பு) ஆகிய கட்டுரைகளும் உரைக்குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2657).

## 14836

**கண்ணகி கற்பு அல்லது வினைச் சிலம்பால் விளைந்த கதை.** தொல்புரக்கிழார் (இயற்பெயர்: நா.சிவபாதசுந்தரம்). யாழ்ப்பாணம்: நா.சிவபாதசுந்தரன், தமிழ் நிலை, தொல்புரம், 1வது பதிப்பு, 1955. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி).

iv, (8), 56 பக்கம், விலை: 75 சதம், அளவு: 20.5x14 சமீ.

மூன்று அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ள இந்நூல், கண்ணகி-கோவலன் கதையை இலக்கிய நயத்துடன் கூறுகின்றது. புகழ் நிலைபெற்ற பூம்புகார் என்ற

முதலாவது பாகத்தில் பூம்புகாரின் பொலிவு நிலை, பூம்புகாரில் பூத்த புதுமணம், கணிகை இன்பத்தில் கண்ணகி துன்பம், இந்திர விழாவும் இன்பமுறிவும், மனம் நொந்த கோவலன் மதுரை நோக்கல், நாடும் காடும் நடந்த காட்சி ஆகிய இயல்களும், மறைவினைக்கு உறவான மதுரை என்ற இரண்டாம் பாகத்தில் மதுரை வீதியில் மலர்ந்த விதி, கணவனை இழந்த கண்ணகி, பாண்டியன் முன் பத்தினிப்பெண், விண்ணுலகடைந்த வீரக்கண்ணகி ஆகிய இயல்களும், வஞ்சி வணங்கிய வானுறை தெய்வம் என்ற இறுதிப் பாகத்தில் குன்றக் குறவரில் குடிகொண்ட கண்ணகி, சிலை எடுக்க எழுந்த சித்திரம், நீள்வீரர் நின்ற நீலகிரி, வீரத்தமிழர் விரித்த போர், மன்னர் முடியெறிய மாடலன் கண்ணகி, ஆர்வமும் உவகையும் அளந்த வஞ்சி, கண்ணகி கோயிலில் கண்ணகி ஆகிய இயல்களும் இடம்பெற்றுள்ளன. இறுதி நான்கு பக்கங்களில் அரும்பதவுரை இடம்பெற்றுள்ளது.

## 14837

**கம்பன் கடலமுதம்.** முருகுப்பிள்ளை சிவநேசன். பருத்தித்துறை: டொக்டர் நீரஜா ஞாபகார்த்த வெளியீடு, வியாபாரி மூலை, 1வது பதிப்பு, மார்ச் 2018. (பருத்தித்துறை: S.P.M. பதிப்பகம்).

(4), viii, 150 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ.

அவ்வப்போது முகநூலில் பதிவிடப்பட்ட ஆசிரியரின் இராமாயணம் தொடர்பான ஆக்கங்களின் தேர்ந்த தொகுப்பு இது. கவிதை ஒழுங்கில் கருத்துக்களைப் பகிரும்போது, விலாவாரியாக எழுத முற்படாமல் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் மேலோட்டமாகத் தந்திருக்கிறார். பல இடங்களில் கம்பர் தந்த கருத்துக்களை காலத்திற்கு ஏற்ப அடக்கி வாசிக்கவேண்டிய தேவையும் ஆசிரியருக்கு இருந்துள்ளதாக அவரே முகவுரையில் குறிப்பிடுகிறார். முருகுப்பிள்ளை சிவநேசன், பருத்தித்துறைப் பிரதேசத்தின் வியாபாரி மூலையைச் சேர்ந்தவர். யா/ஹார்ட்லி கல்லூரியின் பழைய மாணவர். 1978இல் மக்கள் வங்கியில் இணைந்து 34 வருடங்கள் வங்கிச்சேவையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். 1991 முதல் இலக்கியப் படைப்புகளை ஊடகங்களுக்கு வழங்கி வருபவர்.

## 14838

**கலை இலக்கிய கட்டுரைகள்.** எஸ்.மோசேஸ். மட்டக்களப்பு, எஸ்.மோசேஸ், கிருஷி வெளியீடு, 1வது பதிப்பு, 2010. (மட்டக்களப்பு: R.S.T. என்டர்பிரைசஸ்).

x, 11-140 பக்கம், விலை: ரூபா 475., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-51403-2-4.

இந்நூலில் கலை-இலக்கியம் தொடர்பான 11 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் சங்க காலம் தொடக்கம் சமகாலம் வரையிலான கலை இலக்கிய விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியச் செய்யுள் அமைப்பில் திணைக் கோட்பாடும் திணைப் பகுப்பில் அடங்காத பாடல்களும், சங்க மருவிய காலம் அறநூற் காலமா?, தமிழ் பக்தி இலக்கிய பாரம்பரியத்தில் காரைக்காலம்மையார், இராமாயணம் ஒன்றல்ல பல்வேறு இராமாயணங்கள்

*தென்னாசியாவில் வழங்குகின்றன, சிலப்பதிகாரம்- செய்யுள் மரபும் பொருள் மரபும், தண்டியலங்காரம் கூறும் காவிய இலக்கணமும் சீவகசிந்தாமணியும், தமிழ்ச் சிறுகதையும் வ.வெ.சு.ஐயரும், கலையை விளங்கிக் கொள்வதெப்படி?, ஓவியத்தில் நவீனத்துவத்தைக் கொண்டு வந்தவர்களில் முக்கியமானவர்கள், நவீனத்துவம் கொணர்ந்த கலை இலக்கியக் கோட்பாடுகள், நவீனத்துவமும் அது ஊடுருவியுள்ள துறைகளும் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.*

## 14839

**காப்பியதாசன் கட்டுரைகள்.** *ம.ந.கடம்பேசுவரன். தெல்லிப்பளை: கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2016. (யாழ்ப்பாணம்: வரன் பதிப்பகம், நீராவியடி).*

vii, *140 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-410 42-1-1.*

*காப்பியதாசன் என்ற பெயரில் ஆசிரியர் எழுதிய 23 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவை, சமூக இசைவு இல்லாத வாழ்வு வாழ்வன்று, பகுத்தறிவும் பண்பாடும், நக்குண்டார் நா இழப்பாரா நா காப்பாரா?, மருந்தும் விருந்தும்- எது உயர்ந்தது?, விருந்து ஏன்-அதனை விடலாமோ?, பூவையர் பூச்சூடலாமா?, சமூக வாழ்வின் இசைவாக்கத்திற்கு இல்லறத்தானின் விருந்துக்குச் சிறப்புப் பங்குண்டு, இன்சொல்லோடு வழங்கும் உபசாரம் நிகரற்றது, மூன்றாவது மனிதனாக்கும் அந்நிய உணர்வுகள், முதியோரைக் காத்து உதவுவது மட்டுமே உலகப் பொது வாழ்வைச் சாத்தியமாக்கும், எமது முந்தையரின் சம்பிரதாயங்கள் பலவும் மற்றவர்களை உள்ளன்புக்கு ஆளாக்குபவையே, பேருந்தில் மங்கையைப் பின்தொடர்ந்த வாலிபனை நெறிப்படுத்திய வள்ளுவநெறி, ஆடவனை அவன் மார்பின் பூணூல் அடையாளம் காட்டியது- சங்கடத்தான் படலையடியில் இருந்தவருக்கு விருந்தும் கிடைத்தது, ஒருவன் கற்றதைத் தனக்குத் துணையாக்குவானாயின் சுற்றம் அவனுக்குத் தானாகவே ஓடிவந்து துணை தரும், இலகுவாகக் கையாளவும் நெடுநாள் பேணவும் முடிவதால் தகவல் சேகரிப்பில் நூல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன, ஆன்மீக வாழ்வும் ஆரோக்கியமும், அன்பாகி அருளான ஆதிமூலமே அன்னை, வாழிய முருகே, சுக்ரீவன் நன்றி மறந்ததேன், மொழியும் கலைத்துறைகளும், அரங்க விதானிப்புக்குக் காண்மியமாகக் கோல் இடம்பெறுமா? ஓரங்க நாடகமும் நாடகமாடுதலும், தமிழர் திருநாள் மகத்துவம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.*

## 14840

**கேண்மை.** *ஐயாத்துரை சாந்தன். கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661,665,675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2018. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).*

*160 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 22*x*14.5 சமீ.,* ISBN: *978-955-30-9143-7.*

பல்வேறு இலக்கியவாதிகளுடனான பரிச்சயங்கள் பற்றி எழுந்த எழுத்துக்களின் தொகுப்பு இந்நூல். இந்த உறவுகள் வெவ்வேறு விதமானவை. நேரடித் தொடர்பின்றி, நூல்வழித் தொடர்புடன் ஏற்பட்ட அறிமுகங்களும், ஒரு பொழுது சந்திப்புகளும், கலந்துரையாடல்களில் ஈடுபட்டவேளை இடம்பெற்ற சந்திப்புக்கள் எனப் பல்வேறு நட்புவட்டத்தினர் பற்றிய சித்திரிப்புக்களே இவை. யாழ்ப்பாணத்தின் தத்துப் புத்திரன், வரதர் நினைவுகள், அசோகமித்திரன், A.A.H.K. கோரி அவர்களுடன் ஒரு சந்திப்பு, சின்னுவ-அச்சிபே, திரு.சோ.சிவபாதசுந்தரம் அவர்களுடன் ஒரு சந்திப்பு, ஒரு முன்னோடியின் மௌனம், ஒரு கவிஞனும் ஒரு தொழிற்சங்கவாதியும், ஒரு "தேவதை", ஓய்வெடுக்கின்ற உளி ஒன்று, மலையாள மண்வாசனை, ருஷ்ய மொழியில் இலங்கைச் சிறுகதைகள், எதிர்பாராமல் சந்தித்தோம், இலக்கிய ராஜாக்கள், மகாகவி தராஸ் ஷெவ்சேன்கோ, எழுத்தை நம்பியே வாழ்ந்தவர், வித்தாலி /புர்ணீகா, சோவியத்தில் தமிழாய்வு, ஆன் ரணசிங்க, அன்ரனி என்றொரு புனிதன், "வலை", ஜான்-மாறிகுஸ்தாவ் லே கிளேசியா, A.A.H.K.கோரி, எஸ். பொ.நினைவுகள், சிமமண்டா என்கொசி அடிச்சி, மிஹாயில் ஷோலக்கவ், மேதைமையின் எளிமை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 28 ஆக்கங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65500).

## 14841

**சதுரங்கத்தில் வாழ்க்கை (கட்டுரைத் தொகுப்பு).** மைதிலி தயாபரன். வவுனியா: கிருஷ்ணிகா வெளியீட்டகம், வேப்பங்குளம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2017. (வவுனியா: வாணி கொம்பியூட்டர் பிரின்டிங் சென்டர்).

xiv, 15-210 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-38691-0-4.

கிருஷ்ணிகா வெளியீட்டகத்தினரின் எட்டாவது பிரசுரமாக வெளிவந்துள்ள நூல் இது. மைதிலி தயாபரனின் பதினொராவது நூலாகவும் இது அமைந்துள்ளது. இந்நூலில் உள்ள இலக்கியக் கட்டுரைகள், மகாபாரதத்தினை நுண்ணாய்வுக்கு உட்படுத்தி இன்றைய எமது வாழ்வியலோடு அதனை ஒப்பிட்டு விளக்குவனவாக உள்ளன. கலியுகத்திற்குத் தேவையான பாரதத்தின் சாரம், புயலுக்குப் பின்னதான அமைதி, மகாபாரதச் சுருக்கம், இழந்தது ஏதும் உன்னுடையதா?, மாற்றம் எனப்படும் மாறாத உண்மை, அண்ட பிரபஞ்சத்தில் எமக்குரிய பங்கு, சதுரங்கமும் வரலாறும், கதைக்கு ஆசிரியர் வரவு, அரங்கை அமைத்தனர் ஆடுவதற்கு, ஆட்டத்தைத் தொடங்கவென வந்தவர்கள், ஆடுகளத்திற்குக் குருகுல வீரர் வருகை, தந்தை வயிற்றில் உதித்த தனயன், ஏட்டிக்குப் போட்டியாகும் வாழ்க்கை, வளைந்து செல்லும் வாழ்க்கைப் பாதை, கதாநாயகனின் முதல் நகர்வு, தேவர்க்கு மேலாக மானுடர்க்கு அன்னை, செயற்கரியன செய்த பீஷ்மர், பேதை என்பதாற் பேதமையா?, இடம்மாறும் இளமையும் முதுமையும், மன்னரை மயக்கவந்த மான், நம்பிக்கைப் பயிரிலே விளைவாகும் துரோகம், காலமின்றிக் கவர்ந்திழுக்கும் களவியல், நற்பிரசைகளை உருவாக்குவதில் இன்றைய கல்வியின் பங்கு ஆகிய 23 கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

## 14842

**சமூகவெளி: தரிசனங்களும் பதிவுகளும்.** மு.அநாதரட்சகன் (இயற்பெயர்: முருகேசு இராஜநாயகம்). யாழ்ப்பாணம்: ஜீவநதி, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஜுலை 2015. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

xviii, 90 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-28-2.

அநாதரட்சகன் "நிமிர்வு" என்ற சிறுகதைத் தொகுதி மூலமும், பல்வேறு சஞ்சிகைகளில் பிரசுரமாகும் அவரது சமூக-இலக்கியக் கட்டுரைகள் மூலமும் எம்மிடையே அறியப்பெற்றவர். வடமராட்சியில் அல்வாய்க் கிராமத்தில் பிறந்த இவர் நல்லூரரை வதிவிடமாகக் கொண்டவர். கலைப்பட்டதாரியான இவர் ஆசிரியத் தொழிலில் இணைந்து, தற்போது யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றுகின்றார். அநாதரட்சகனின் 14 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அவை கலை இலக்கியங்களில் சமூக நோக்கு: அவசியப்பாடு குறித்த பதிவு, சித்தர் பாடல்களில் சமூக நீதிக் கருத்துக்கள்: புறவய நோக்கு, பின்நவீனத்துவம் குறித்து- சாராம்சப் பகிர்வு, ஈழத்து நவீன கவிதைப் போக்கு சில குறிப்புகள், தமிழில் சினிமா சிலஅவதானங்களும் ஆதங்கமும், முற்போக்கு இலக்கியம்-புரிதல்கள் மீதான நோக்கு, நவீன கவிதைகளில் குறியீட்டு பிரயோகம், மார்க்சிய நோக்கில் அறம்-ஒரு தத்துவ நிலைப் பார்வை, ஒடுக்கப்பட்டோரின் கலகக் குரல்: தலித் இலக்கியம்-ஓர் அறிமுகக் குறிப்பு, கலை அழகியல், சமூகம் மார்க்சிய நோக்கின் அடிப்படைகள், உலகமயமாக்கலும் கல்வியும் வளர்முக நாடுகள் எதிர்நோக்கும் சவால்களும், கவிதையில் சமூகம் என்ற கருத்தாக்கம் சில குறிப்புகள், தமிழியல் வரலாற்றில் பேராசிரியர் க.கைலாசபதியின் பங்களிப்பு ஒரு பார்வை, பேராசிரியர் கா. சிவத்தம்பி தமிழ் இலக்கிய சூழலில் தவிர்க்க இயலாத ஆளுமை ஆகிய 14 தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளன. ஜீவநதி வெளியீட்டகத்தின் 47ஆவது பிரசுரமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

## 14843

**சிந்தனைத் திடரில் சிதறிய துகள்கள்.** கண்ணன் கண்ணராசன். யாழ்ப்பாணம்: சாரல் வெளியீட்டகம், சித்தங்கேணி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2019. (வவுனியா: விஜய் அச்சுப் பதிப்பகம், 172 மில் வீதி).

x, 89 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-624-2596-45-2.

கொடிகாமம் கச்சாயில் பிறந்தவர் கண்ணராசன். ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் இவர், ஏற்கெனவே கிறுக்கிப்போட்ட காகிதங்கள், கற்பனையில்லா ஒப்பனைகள் ஆகிய இரு கவிதை நூல்களை வழங்கியவர். அவரது மூன்றாவது நூலாக இக்கட்டுரைத் தொகுதி வெளிவந்துள்ளது. இதில் பயம் என்பதே பயம். பயத்தின் பயம். பயமறியும்/ சண்டைக்குப் பிந்து சபைக்கு முந்து/ காகத்துக்குச் சோறு வைப்பது ஏன்?/அரசனைப் பார்த்த கண்ணுக்குப் புருசனைப் பார்க்கப் பிடிக்காது/ கொன்றால் பாவம் தின்றால் தீரும்/ வேடிக்கையும் வேதனையும்/

*பொறுத்தார் நாடாளுவார் பொங்கினார் காடாளுவார்?/ குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படவேண்டும்/ அன்பென்றால் என்ன?/ தேர் முடியும் திரு திருமதியும்/ தம்பியுடையான் படைக்கு அஞ்சான்/ காகம் திட்டி மாடு சாவதில்லை (சாகாது)/ குங்குமப் பொட்டும் குட்டிக்கரணமும்/ ஊரோடு ஒத்து வாழு (வாழ்வு)/ சோழியன் குடும்பி சும்மா ஆடாது/ பூப்புனித நீராட்டுச் சடங்கில் தாய்மாமன்/ தேங்காய் உடைப்பது ஏன்?/தும்பிக்கை ஆகாத நம்பிக்கை/ தனக்கு மிஞ்சியே தானமும் தர்மமும்/ பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்/ காதில் பூ வைப்பது ஏன்?/ போன காய்ச்சலை புளிவிட்டு கூப்பிடு (கூப்பிடாதே)/ இல்லறம் நல்லறம் ஆவது யார் கையில் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட சுவையான இலக்கியக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.*

## 14844

**ஞாபகிக்கத்தக்கதோர் புன்னகை.** *கெக்கிறாவ ஸுலைஹா. கெகிறாவ: கெக்கிறாவ ஸுலைஹா, 32/21, செக்குபிட்டிய தெற்கு, செக்குபிட்டிய, 1வது பதிப்பு, டிசம்பர் 2014. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

viii*, 120 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22*x*15 சமீ.,* ISBN*: 978-955-53263-3-9, (*ISBN*: 978-955-53260-1-6 என்ற இலக்கமும் ஒரே நூல்விபரப் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது).*

*இந்நூலில் முன்னுரையைத் தொடர்ந்து, இயற்கையை அதிகமதிகமாய் ஆராதித்த ஏரிக்கரைப் புலவன் வில்லியம் வேட்ஸ்வேர்த், மௌனமாய் அழும் ஒரு சமூகம் தலித் இலக்கியம் - ஒரு பார்வை, சத்தியத்தின் நித்திய தரிசனம் மகாத்மா காந்தி, நினதான தியாகத்தையும் விட அன்புள்ளத்தை மெச்சி, நெல்சன் மண்டேலா, கீழ்மட்ட அமெரிக்க மக்களின் ஆஸ்தான கவி சார்ல்ஸ் புகோவ்ஸ்கி, அரசியலும் இலக்கியமும் கைகுலுக்கிக் கொள்கின்றன, கென்னடியின் பதவியேற்பு வைபவத்தில் கவிஞர் றொபர்ட் ஃப்றொஸ்ட், ஒரு கம்யூனிஸவாதிக்குள்ளிருந்து ஒலித்த கவிதைக்குரல் மாவோ சே துங் - மாபெரும் வரலாறு ஆகிய கட்டுரைகள் இந் நூலில் இடம்பெற்றுள்ளன.*

## 14845

**தமிழ்மறைக் கட்டுரைகள்.** *கா.பொ.இரத்தினம் (பதிப்பாசிரியர்). சென்னை 04: இன்ப நிலையம், மயிலாப்பூர், 1வது பதிப்பு, மே 1959. (சென்னை 14: மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு).*

viii*, 9-244 பக்கம், விலை: இந்திய ரூபா 3.50, அளவு: 18*x*12.5 சமீ.,*

*23.11.1952 இல் பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்களால் தமிழ்மறைக் கழகம் தாபிக்கப்பட்டது. அவ்வமைப்பினூடாகத் தமிழ்மறைத் தேர்வுகள் ஆண்டுதோறும் நடத்தப்பெற்று பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இலங்கைத் தமிழ்மறைக் கழகம் நடத்திய அகில உலகத் தமிழ்மறைக் கட்டுரைப் போட்டியில் பரிசில்களும் பாராட்டிதழ்களும் பெற்ற கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும். இதில் வித்துவான் கா.பொ.இரத்தினம் அவர்களின் முன்னுரையுடன் திருவள்ளுவர்*

காலம் (நா.தங்கவேலன், மதுரை), திருக்குறளில் நவரசங்கள் (க.குகதாசன், நயினாதீவு), திருவள்ளுவ மாலை (வை.அபரஞ்சி, திருப்பத்தூர்), பொது மறை (அ.ச.அப்துல் சமது, அக்கரைப்பற்று), வாழ்வுக்கலை (பொ.அரும்பொன், விராச்சிலை), தேடக் கிடைக்காத செல்வம் (த.சபாரத்தினம், அரியாலை), வள்ளுவர் வகுத்த அரசு (ரா.சாம்பசதாசிவம், கோயம்புத்தூர்), வள்ளுவர் கண்ட பெண்மை (சி.சிவபாக்கியம், அரியாலை), திருக்குறளும் சிலப்பதிகாரமும் (சு.தியாகராசன், திருப்பதி), திருக்குறளும் கீதையும் (சோ.பரமசாமி, இணுவில்), நான் கண்ட வள்ளுவர் (வ.பெருமாள், கொரடாச்சேரி), வாழ்க்கை நூல் (அ.மாணிக்கவாசகன், மேலைச் சிவபுரி), வள்ளுவர் கண்ட வாழ்க்கைத்துணை (மு.மோகனரங்கன், திருப்பதி), வள்ளுவரின் சொல்நயங்கள் (ச.விவேகானந்தசாமி, குன்னூர்) ஆகிய கட்டுரைகள் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31547).

## 14846

**தமிழியல் ஆய்வுச் சோலை: தமிழ் இலக்கியச் சிந்தனை ஆய்வுகள்.** கனகசபாபதி நாகேஸ்வரன். கொழும்பு: தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், கொழும்புக் கிளை, 1வது பதிப்பு, மே 2006. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

xxvii, 203 பக்கம், புகைப்படம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-98962-3-7.

இந்நூலில் இலக்கியமும் திறனாய்வும், சோழப் பெருமன்னர் காலத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, கவிச்சக்கரவர்த்தி கம்பன் கண்ட இராமனின் பெரெழில், ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி: 1930 முதல் 1950கள் வரை, கதிர்காமப் பிரபந்தங்கள், பெண்கள் ஒடுக்கப்படும் இனமா?, தமிழில் அகப்பாடல்களும் பக்திப் பாடல்களும், அறநெறிப் போதனையில் தமிழிலக்கியங்கள், மலையகக் கூத்துக்களிலே சமயக் கருத்துக்கள், தமிழ்க் காதல், சைவமும் தமிழும், இந்துக் கல்லூரிகளும் தமிழ்க் கல்வி மரபும், சைவத் திருமுறைகள் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40378).

## 14847

**திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்.** காரைக்கவி கந்தையா பத்மானந்தன் (தொகுப்பாசிரியர்). காரைநகர்: அம்மாத்தை வெளியீட்டகம், வாரி வளவு, 1வது பதிப்பு, 2019. (தெகிவளை: அனுபவ பதிப்பகம், Creaze Digital, 14, அத்தபத்து டெரஸ்).

xxii, 139 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-624-5222-09-4.

இந்நூல் நூல்முகம், திருவள்ளுவம் வழங்கும் முகாமைத்துவ வரைவிலக்கணம், திருவள்ளுவத்தில் திட்டமிடல் எண்ணக்கருக்கள், திருவள்ளுவத்தில் ஒழுங்கமைத்தல், திருவள்ளுவத்தில் இயக்குதல், திருவள்ளுவத்தில் மனிதவள முகாமைத்துவம், திருவள்ளுவத்தில் முரண்பாடுகளைக் களைதல், திருவள்ளுவத்தில் தொடர்பாடல், திருவள்ளுவத்தில் கட்டுப்படுத்தல், திருவள்ளுவத்தில் வரவு செலவுத் திட்டமும் நிதி முகாமைத்துவமும், திருவள்ளுவத்தில் சந்தைப்படுத்தல், திருவள்ளுவத்தில் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல், திருவள்ளுவத்தில் செயல்திட்ட முகாமைத்துவம், திருவள்ளுவத்தில் நேர முகாமைத்துவம், முடிவாக ஆகிய பதினாறு அலகுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. காரைநகரைச் சேர்ந்த க.பத்மானந்தன் கல்வித்துறை ஆளுமையாக மிளிர்பவர். விஞ்ஞானபீட பட்ட தாரியான இவர், தொடர்ந்து உள்நாட்டிலும் அயல்நாட்டிலும் தன் முதுநிலைப் பட்டக் கல்வியைப் பெற்றவர். தொழில்வாண்மைப் பட்டங்களையும் மேலதிகமாகப் பெற்ற இவர், கல்வி, விஞ்ஞானம், மொழி, கலை, இலக்கியம், சமயம், திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஈடுபாடு காட்டி வருபவர். தமிழர் வாழ்வியலில் உள்ள விஞ்ஞானபூர்வமான அறிவியல் இருப்புக்களை வெளிக்கொணரும் வகையில் உண்மைகளைத்தேடி எழுதும் ஆர்வத்தின் வெளிப்பாடாக பல நூல்களை எழுதியுள்ளார்.

### 14848

**தென்திசை அதிபருக்கு ஓர் அதிபரின் அஞ்சல்.** பொ.கனகசபாபதி. கனடா: அமரர் பொ. கனகசபாபதி நினைவு வெளியீடு, ஜனவரி 2015. (கனடா: பிரின்ட் பாஸ்ட்).

xi, 110 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-

கனடா மண்ணில் சுமார் கால் நூற்றாண்டை தமிழினப் பண்பாட்டின் அடையாளமாகவே வாழ்ந்து மறைந்தவர் மஹாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர், அமரர் பொன்னையா கனகசபாபதி. அவர் 2013 ஜூன் மாதம் கனடாவில் சுகவீனமுற்றார். அவரது உடல்நிலை படிப்படியாகப் பாதிப்படையத் தொடங்கிய வேளையில் பல மருத்துவர்களிடமும் மருத்துவ நிபுணர்களிடமும் சென்றுவர வேண்டி ஏற்பட்டது. முற்றிலும் குணமடையாத நிலையில் தனது ஆதங்கத்தையும் அனுபவத்தையும் காலத்துக்குக் காலம் தாய்வீடு பத்திரிகையில் நினைவின் பதிகைகளாக எழுதத் தலைப்பட்டார். அத்தகைய "நோயில் இருத்தல்" பற்றிய ஆக்கங்களின் தொகுப்பே இதுவாகும். இந்நூலில் நோயாளி விதியாளியானால் பரியாரி பேராளி, ஆண்டவன் படைச்சான் அனுபவி ராசா என நோயையும் அனுப்பிவைச்சான், அவனுக்கென்ன சொல்லிவிட்டான் அகப்பட்டவன் நானல்லவா, உறக்கம் இல்லாவிட்டால் ஞானம் பிறக்குமா?, உப்பற்ற சாப்பாட்டை குப்பையில் போடு, கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே, எல்லோரும் ஏறிய வண்டியில் சக்கிடுத்தார் ஏறிச் சறுக்கி விழுந்தாராம், நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி, சோதனைமேல் சோதனை போதுமடா சாமி, காடு வா என்கிறது வீடு போ என்கிறது, உற்றான் அளவும் பிணியளவும் காலமும் மருத்துவன் கருதிச் செயல், விகடராமன் குதிரை மாதம் போம் காத

*வழி, நாளொரு வைத்தியசாலை பொழுதொரு வைத்தியர், அதாயிருக்கலாம், இதாயிருக்கலாம், எதாயிருக்கலாம்?, டொக்டர் லம்போவின் வினா வினயமானதே, டொக்டர் லம்போவின் வினாவிற்கு இதுதான் விடையா?, இரவல் புடவையில் இது நல்ல கொய்யகமாம், ஒவ்வொருத்தராகக் கை கழுவி விடுகிறார்களா? ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. இந்நூல் அமரர் பொ. கனகசபாபதி அவர்களின் மறைவின் 31 வது நினைவு தினத்திலன்று அவரது குடும்பத்தினரால் வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65156).*

## 14849

**நவீன இலக்கியம்: ஈழம்-புகலிடம்-தமிழகம்.** *தேவகாந்தன். கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202, கடற்கரைச் சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2019. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல.39, 36ஆவது ஒழுங்கை).*

xi, *167 பக்கம், விலை: ரூபா 550., அளவு: 21.5*x*14.5 சமீ.*, ISBN: *978-955-3491-21-3.*

*அவ்வப்போது தேவகாந்தனால் எழுதப்பெற்று சஞ்சிகைகள், இணையத்தளங்களில் பிரசுரமான இலக்கியக் கட்டுரைகளின் தேர்ந்த முதலாவது தொகுப்பு. சமகால தமிழ்க் கவிதைகளின் செல்நெறி குறித்து/ சமகால தமிழ்க் கவிதைகளின் செல்நெறி குறித்து மேலும் சில விவரணங்கள்/ ஈழத்துக் கவிதை: மரபுக் கவிதையிலிருந்து புதுக்கவிதை ஈறாக தொடரும் மரபு/ ஈழத்துப் புதுக்கவிதைத் துறையின் புதிய பிரதேசம்: அஸ்வகோஷின் "வனத்தின் அழைப்பு" குறித்து/ ஈழத்து நாவல் இலக்கியத்தின் தோற்றம் வளர்ச்சி போக்குகள் பற்றி/ யதார்த்தப் போக்கும் வட்டார வழக்கும்: வல்லிக்கண்ணனது நாவல்களை முன்வைத்து/ தமிழ் நாவல் இலக்கியம்/ சமகால தமிழ் நாவல் இலக்கியத்தில் ஜெயகாந்தன் நாவல்களின் வகிபாகம்/ நா.பா.வின் எழுத்துக்களில் தனி மனித அறம்/ பதிப்பு, படைப்பு, வாசிப்புகளின் பொது இயங்குதளமும் சமகால ஈழத்து இலக்கியத்தில் அவற்றின் தாக்கமும் தாக்கமின்மையும்: மொழிவெளியினூடான ஓர் அலசல்/ படைப் பினூடாக படைப்பாளியை அறிதல்: மு.த. குறித்தான ஓர் இலக்கிய விசாரணை/ அரசியல், சமூக எதிர்ப்புநிலைகளின் இன்னொரு முகாம்: பின்-காலனித்துவ இலக்கியம் குறித்து/ புலம்பெயர் இலக்கியமும் ஈழத்து இலக்கியமும்/ தமிழ்ப் புனைகதைப் பரப்பில் புலம்பெயர்ந்தோர் படைப்புக்கள்/ மலேசிய சிறுகதைகளின் வளர்ச்சி-தேக்கம்-நிவாரணம்/ கனடாவில் இலக்கியச் சஞ்சிகைகள்: அவற்றின் எழுச்சி வீழ்ச்சிகளின் காரணம் குறித்து ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 16 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.*

## 14850

**நான் பேசும் இலக்கியம்.** *கௌசி (இயற்பெயர்: சந்திரகௌரி சிவபாலன்). ஜேர்மனி: வெற்றிமணி வெளியீடு*, Brinker Höhe 13, 58507 Lüdenscheid, *1வது பதிப்பு, 2020. (யாழ்ப்பாணம்: அன்றா பிறிண்டேர்ஸ், இல. 379, கஸ்தூரியார் வீதி).*

*128 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-7377-92-6.*

புதிய தலைமுறையினர் தமிழிலக்கியத்தின் சிறப்புகளை, ஆளுமைகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பினை இதிலுள்ள கட்டுரைகள் வழங்குகின்றன. சில கட்டுரைகள் புகலிடத் தமிழரின் பொது வாழ்க்கை வளம்பெற அறிவுரைகளை வழங்குகின்றன. இலக்கியத்தில் வரும் பாடல்களை இன்றைய சமூகத்துடன் பொருத்தி அதனை இலகு தமிழில் புரியவைக்கின்றார். புலமைக்காய்ச்சலும் பாய்ச்சலும், பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல, நாட்டிலுள்ள விஷத்தையெல்லாம் நான் குடிக்க வைத்துவிட்டான், புலவனுக்கு மதம் எனப்படுவது ஆண்-பெண் காதலே, மட்டக்களப்புப் பகுதியின் நாட்டுப்புறப் பாடல்கள், உதவிக்கு மட்டுமே உறவா?, காலமும் நேரமும் பெரிய மேதாவிகள், நாமும் உங்களில் ஒருவரா?, காலந்தோறும் தமிழ்க் காதல், ஈழத்துச் சிறுவர் இலக்கிய உலகில், பல முதல்களின் முதல்வன் மு.க.சு.சிவகுமாரன், நெஞ்சம் மகிழவைக்கும் ஔவையார் என்னும் நாமம்கொண்ட பெண்பாற் புலவர்கள், நெஞ்சம் மட்டும் பேசும் காதல், வாழ்க்கை என்பது வழுக்கையா?, பெண் உளவியலும் வெள்ளி வீதியார் பாடல்களும், சுவாமி விபுலானந்த அடிகளாரின் பன்முகப் புலமையும் வாய்க்கப்பெற்ற சந்தர்ப்பங்களும், கடமையைச் செய்யுங்கள் பலனை எதிர்பார்க்க வேண்டாம், ஹைக்கூ பற்றிய புதிய கண்ணோட்டம், கம்பரும் அவர் வாழ்வியலும், பெண்ணென்னும் ஒரு அதிசயப் பிறவி, சொல்லும் செயலும் ஒன்றாக வேண்டும், சத்தியம் வெல்லும், விமர்சிப்பவர்களே ஒவ்வொரு நாளும் இந்நிகழ்ச்சியில் மூழ்கிப் போகின்றார்கள், பழமைக்குத் திரும்பும் உலகம், முதுவேனிற்காலச் சிறப்பு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 25 கட்டுரைகளை இத்தொகுப்பு அடக்கியுள்ளது.

## 14851

**நினைவுகளும் கனவுகளும்.** வே.சு.கருணாகரன். புங்குடுதீவு: சூழலியல் மேம்பாட்டு அமைவனம் (சூழகம்), 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 13: சண் பதிப்பகம், இல. 44A, ஸ்ரீ கதிரேசன் வீதி).

xiii, 120 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

புங்குடுதீவைச் சேர்ந்த நூலாசிரியர் ஒரு வர்த்தகராவார். தான் வாசித்தறிந்த தகவல்களை பலரும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற அவாவில் சிறு கட்டுரைகளாக இந்நூலில் வழங்கியிருக்கிறார். எனது தாய்மண், இயற்கையோடு இணைந்த வாழ்வு, எமது கிராமத்தின் இயற்கை வளம், பொருளாதார வளத்தைத் தரும் மரங்கள், பனைகளை வளர்ப்பது காலத்தின் கட்டாய தேவை, கடற்தாவரங்கள், நிலம் வளமடைய நீர்வளம் வேண்டும், வடக்கிலுள்ள ஆற்று வாய்க்கால்கள், வீட்டுத் தோட்டம், இயற்கை வளம் நிறைந்திருந்த நெடுந்தீவு, அம்பாள் வீற்றிருந்து அருள் சுரக்கும் நயினாதீவு என இன்னோரன்ன பெரியதும் சிறியதுமான 40

கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 71563).

### 14852

**நுண்பொருள்: அறம்-பொருள்-காமம்.** தேவகாந்தன். தெகிவளை: அகம் வெளியீடு, 29/28-1/1, சிறீ சரணங்கரா தெரு, 1வது பதிப்பு, மார்ச் 2019. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

viii, 126 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-624-50300-0-2.

எப்போதும் திருக்குறள் குறித்த உரைகள் தோன்றிய வண்ணமே உள்ளன. அது சமூகமும் மொழியும் சிந்தனா போக்குகளும் ஆய்வுநெறிகளும் கொள்ளும் வளர்சிதை மாற்றத்தில் நிகழ்கிறது. நுண்பொருள் என்பது நுண்மையாகக் காணப்பட்டது என்றல்ல, நுண்மையாய்க் கிடந்த பொருளைக் கண்டடைந்தது என்ற அர்த்தத்திலேயே தேவகாந்தனின் "நுண்பொருள்: அறம் பொருள் காமம்" என்ற இந்நூலின் பயன்பாடு கொண்டுள்ளது. இலக்கிய உலகில் திருக்குறள் இலக்கியமா, நீதிநூலா என்ற வாதப் பிரதிவாதங்களில் அது நீதிநூல் தானென முடிவு சாய்வு கொள்ள ஆரம்பித்திருந்தும், அதை இலக்கியமாகவே தேவகாந்தன் தனதுஆழ்ந்த வாசிப்பினூடாகக் கண்டறிகிறார். உரையாசிரியர்கள் தமக்குள் முரண்படுவதை அறிந்து ஆச்சரியம் கொள்ளும் இவர் தனக்குள் முகிழ்க்கும் குறட்பாக்களுக்கான வேறு அர்த்தங்களுக்கு அர்த்தமிருப்பதை எண்ணி உரையற்ற தனிக் குறட்பாக்களுள் துணிந்த புகுந்து அத்தகைய அர்த்தங்களை கண்டறிந்து இந்நூலில் சுவையாகப் பதிவுசெய்கின்றார். உரையாசிரியர்களின் பாதிப்பின்றியும், மறைப் புனித மரபுகள் போன்றனவற்றின் செல்வாக்குக்கு ஆட்படாது, தன் கருத்தை வெளிப்படுத்தத் துணிந்துள்ளார். ஆசிரியர் 2004இல் கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் "வைகறை" பத்திரிகையில் "உள்ளது உணர்ந்தபடி" என்ற தலைப்பில் 22 அத்தியாயங்களில் இதனை எழுதியிருந்தார். ஏறக்குறைய அறுபது குறள்கள் அதில் இடம்பெற்றிருந்தன. அத்தொகுப்புடன் மேலும் சிலவற்றைச் சேர்த்து இந்நூலாக்கப்பட்டுள்ளது.

### 14853

**நோக்கு: ஆய்வுக் கட்டுரைகள்.** சோ.பத்மநாதன் (மூலம்), தி.செல்வமனோகரன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: தூண்டி இலக்கிய வட்டம், 141, கேணியடி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2019. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

xvi, 232 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-52603-2-9.

கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களின் 80ஆம் அகவை வெளியீடாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. கவிஞர் சோ.ப. எழுதியிருக்கும் பல்வேறு திறனாய்வுக் கட்டுரைகளில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 24 ஆக்கங்கள் இத்தொகுப்பில்

*இடம்பெற்றுள்ளன. கவிதை என்னும் கலை, தமிழ்க் கவிதை மரபில் பாரதி ஏற்படுத்திய திருப்பம், ஓசை தரும் இன்பம், புதுக் கவிதைக்கும் ஓசை உண்டு, கம்பன் சொல்வளம், இனிமை குலவும் ஒரு புகழ்ப்பா, பெரியபுராணம்: ஒரு குடிமக்கள் காப்பியம், பதினொராந் திருமுறையில் இலக்கிய உத்தி, "பாலை நெய்தல் பாடியது"-ஒரு பார்வை, ஆறுமுக நாவலர் செய்த பைபிள் மொழிபெயர்ப்பு, தமிழ்க் கவிதை மொழிபெயர்ப்பில் ஒரு முன்னோடி: தாயுமானாரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஐசாக் தம்பையா, போப் செய்த திருவாசக மொழிபெயர்ப்பு: ஒரு மதிப்பீடு, கவிதை மொழிபெயர்ப்பு: சாத்தியப்பாடுகளும் சவால்களும், ரிது சம்ஹாரமும் பருவ மாதரும், தேவகாந்தனின் "கதாகாலம்" மற்றொரு மகாபாரத மறுவாசிப்பு, பிளேற்றோவும் திருவள்ளுவரும், சொஃபொகிளிஸின் அன்ரிகனி, ஒரு பாவையின் வீடு, மு.பொ.வின் கவிதைக் கோட்பாடும் படைப்புலகமும், ஈழத்துப் போர்க்காலக் கவிதை, ஈடிணையில்லாக் கதைசொல்லி, ஆக்க சிந்தனை, நமது கல்வி முயற்சிகள்: முடிவுறாத பயணங்கள், தாய்மொழி பேணாத தமிழர்கள் ஆகிய தலைப்புகளில் இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

## 14854

**மணற்கேணி: திருக்குறட் கட்டுரைகளின் தொகுப்பு.** *மனோன்மணி சண்முகதாஸ், செல்வ அம்பிகை நந்தகுமாரன் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: கோகுலம் வெளியீடு, 1வது பதிப்பு, 2017. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).*

ix, *301 பக்கம், விலை: ரூபா 590., அளவு: 22*x*15 சமீ.,* ISBN: *978-955-43934-2-4.*

*இந்நூலில் வையகத்திற்கு வழிகாட்டும் நூல் திருக்குறள் (மனோன்மணி சண்முகதாஸ்), குறள் தரும் நல்வாழ்வு (மனோன்மணி சண்முகதாஸ்),* Universal nature of Tirukkural *(அ.சண்முகதாஸ்), திருக்குறளில் உடலும் உயிரும் (மனோன்மணி சண்முகதாஸ்), ஐந்தவித்தான் யார்? (க.இரகுபரன்), வள்ளுவர் வகுத்த இல்லறமும் துறவறமும் (மனோன்மணி சண்முகதாஸ்), நிலையான செல்வம் தேடுவோம் (மனோன்மணி சண்முகதாஸ்), செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் (மனோன்மணி சண்முகதாஸ்), திருக்குறளும் சங்கப் பாடலும் (அ.சண்முகதாஸ்), திருக்குறள் பாவடிவமும் பண்டைய ஜப்பானிய பாவடிவமும் (அ.சண்முகதாஸ்), பாயிரப் படைப்பில் கம்பனும் வள்ளுவனும் (க.இரகுபரன்), திருக்குறள் விதந்துரைக்கும் இயற்கை (பூலோகம் செல்வதியம்மா), திருக்குறளில் மலர்ப் பண்பாடு: ஒரு நோக்கு (மனோன்மணி சண்முகதாஸ்), வள்ளுவர் வகுத்த அறம்-1 (மனோன்மணி சண்முகதாஸ்), வள்ளுவர் வகுத்த அறம்-2 (மனோன்மணி சண்முகதாஸ்), வள்ளுவர் காட்டும் பெண்மை (செல்வ அம்பிகை நந்தகுமாரன்), முப்பாலில் பெண்பாலார் மாண்பு (மனோன்மணி சண்முகதாஸ்), திருக்குறளில் ஒரு பண்பாட்டு மறுதலிப்பு (மனோன்மணி சண்முகதாஸ்), திருக்குறளில் வினாவும் விடையும் (மனோன்மணி சண்முகதாஸ்), திருக்குறளில் கல்வி பற்றிய கருத்தியல்: தொடக்க நிலை நோக்கு (அ.பௌநந்தி), திருக்குறட் பாக்களில் சொற்பயன்பாடு-1 (மனோன்மணி சண்முகதாஸ்), திருக்குறட் பாக்களில் சொற்பயன்பாடு-2 (மனோன்மணி சண்முகதாஸ்), திருக்குறட் பாக்களில்*

சொற்பயன்பாடு-3 (மனோன்மணி சண்முகதாஸ்), திருக்குறட் பாக்களில் சொற்பயன்பாடு-4 (மனோன்மணி சண்முகதாஸ்) ஆகிய 24 திருக்குறள் விளக்கக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## 14855

**மாத்து: கலை இலக்கியக் கட்டுரைகள்.** த.மலர்ச்செல்வன் (தொகுப்பாசிரியர்). வாழைச்சேனை: கோறளைப்பற்று பிரதேச செயலகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2017. (மட்டக்களப்பு: துர்க்கா அச்சகம்).

v, 69 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-50710-3-1.

இந்நூலில் உள்ள கட்டுரைகள் கூத்துச் சார்ந்து, நாடகம் சார்ந்து, வாய்மொழிக் கதைகள் சார்ந்து, நவீனம் சார்ந்து படைக்கப்பட்டுள்ளன. இவை மட்டக்களப்புக் கூத்தரங்கின் ஆற்றுகை முறைமை (த.விவேகானந்தராசா), மட்டக்களப்புத் தமிழர்களின் அன்றாட உணவும் உணவுசார் வழக்காறுகளும் (சி.சந்திரசேகரம்), கல்வியியல் அரங்கும் இணைந்த கலைகளின் பிரயோகமும் (து.கௌரீஸ்வரன்), சடங்குகள் கட்டமைக்கும் தெளிவற்ற குறியீடுகளும் நிலையற்ற நம்பிக்கைகளும் (வ.இன்பமோகன்), மட்டக்களப்பில் சமூக ஜனநாயக மரபினைப் பேணிய வடிவமாக வாய்மொழிக் கதைகள்: ஓர் அமைப்பியல் அணுகுமுறை (சு.சிவரெத்தினம்), கூத்தரங்கில் உடுப்புக் கட்டுதலும் பெண்களும் (ச.சந்திரகுமார்), எமது படைப்பாளிகளும் இலக்கிய மரபுகளை உறிஞ்சுதலும் (செ.யோகராசா), கிழக்கிலங்கை பின் நவீனத் தமிழ்ச் சிறுகதை வெளி (ஜிப்ரி ஹஸன்) ஆகிய எட்டு தலைப்புகளில் எழுதப்பட்ட ஆக்கங்களாக அமைகின்றன.

## 14856

**வள்ளுவரின் வழி நடப்போம்.** பா.விக்கினேஸ்வரன் (தொகுப்பாசிரியர்). சாவகச்சேரி: தென்மராட்சி இலக்கிய அணி, கிராம்புவில், 1வது பதிப்பு, மார்ச் 2014. (யாழ்ப்பாணம்: ஷாம்பவி பதிப்பகம், 276 கஸ்தூரியார் வீதி).

viii, 127 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 19x12.5 சமீ.

இந்நூலில் பல்வேறு தமிழ் புத்திஜீவிகள் எழுதியுள்ள திருக்குறள் சார்ந்த இலக்கியக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவ்வகையில் அ.வாசுதேவா (வள்ளுவரின் வழிநடப்போம்), ஸ்ரீ.பிரசாந்தன் (சங்க அகத்திணை மரபும் திருக்குறட் காமத்துப்பாலும்), பா.செந்தூரன் (இன்றைய இளைஞர்களுக்கு வள்ளுவர் காட்டும் வாழ்வியல் நெறிகள்), சி.வே.ஞானசம்பந்தன் (வள்ளுவருக்குப் பிடித்த மலர்), க.க.ஈஸ்வரன் (சைவசித்தாந்த சிந்தனை மரபில் திருக்குறள்), சோ.கோகுலன் (பெண்மை இலக்கணம்), க.ரஜனிகாந்தன் (வள்ளுவர் காட்டும் காதல் வாழ்வு), மீ.பாரதி (திருவள்ளுவர் கூறும்அறிவு), செ.செல்வரமணன் (திருக்குறளில் அரசியல் கோட்பாடு), த.நாகேஸ்வரன் (வள்ளுவர் வகுத்த அமைச்சுக்காம் அறிவுரை), வே.உதயகுமார் (வள்ளுவர் காட்டும் இல்லறம்), பா.விக்கினேஸ்வரன் (வள்ளுவரும் வாய்மொழியும்), ச.மார்க்கண்டு (ஒரு திருக்குறள்), சோ.பத்மநாதன் (பிளேற்றோவும்

*திருவள்ளுவரும்) தி.வேல்நம்பி (வள்ளுவர் காட்டும் வாழ்வியல் கருத்துக்கள்), இ.ஜெயராஜ் (வள்ளுவப் புதுமை) ஆகியோர் எழுதிய 18 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.*

### 14857

**வாழ்வியல்: அனுபவ பகிர்வு பாகம் 1.** வீ.என்.சந்திரகாந்தி. திருக்கோணமலை: *ஜெயகாந்தி கலை கலாச்சார விளையாட்டு மேம்பாட்டுக் கழகம், 572 A, ஏகாம்பரம் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (திருக்கோணமலை: A.R.Trader, திருஞானசம்பந்தர் வீதி).*

*152 பக்கம், விலை: ரூபா 250.00, அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-98979-0-3.*

*திருக்கோணமலைப் படைப்பாளி, வீ.என்.சந்திரகாந்தியின் வாழ்வியல் அனுபவங்களின் பதிவாக இந்நூல் வெளிவந்துள்ளது. இரண்டு பாகங்களில் வெளிவந்துள்ள நூலின் முதலாவது பாகம் இதுவாகும். தனது எழுபது வருட வாழ்க்கைப் பயணத்தில் தான் எதிர்கொண்ட சவால்கள், அடைந்த வெற்றிகள், சறுக்குண்ட சம்பவங்கள் தனது ஆழ்மனதில் பதிந்தவை அனைத்தையும் ஒரு நாவலாசிரியனுக்கேயுரிய சுவையுடன் இப்படைப்பாக்கங்களில் சொல்லியிருக்கிறார். திருக்கோணமலையிலிருந்து வெளிவரும் மலைமுரசு, ஒளி அரசி, வீரகேசரி ஆகிய இதழ்களில் காலத்திற்குக் காலம் எழுதப்பட்டவை. நிகழ்காலத்தில் வாழ்தல், அனுசரித்துப் போதலும் முரண்படுதலும், குழுவும் குரோதமும்-கோஷ்டியும் மோதலும், திறமையும் புகழும், சிந்தித்தலும் நிந்தித்தலும், அர்ப்பணிப்பும் அபகரிப்பும், உறவுகளும் பிளவுகளும், நட்பும் எதிர்ப்பாலாரும், கண்ணனை சந்திப்போமா?, வெற்றியும் தோல்வியும்-ஒரு மாற்றுச் சிந்தனை, தலைமைத்துவமும் சமூகமும்-ஒரு மாற்றுச் சிந்தனை, எம்மை நாமே தேற்றுவோமாக, முகநூல் என்கின்ற சமூக வலைத்தளம், அன்பை சம்பாதித்தல், பகையை விலைக்கு வாங்கல், முயற்சி திருவினையாக்கும், சிந்தனை செய் மனமே, பக்கசார்பும் நடுவு நிலைமையும், முதுமையிலும் ஆனந்தமாக வாழலாம், முக நூலின் மறுபக்கங்கள், ஆசியும் சாபமும், கொலையும் தற்கொலையும், அன்னதானமும் சிரமதானமும், மாதரும் மன ஓர்மமும், சமூக நோக்கு, ஜனனம் திட்டமிடப்பட்டதா விபத்தா?, என் வழி தனி வழி, உயர்வும் தாழ்வும், விஞ்ஞானம் எதனைத் தேடுகின்றது?, உல்லாசமும் மகிழ்ச்சியும் ஆகிய தலைப்பகளில் வெளியாகியுள்ள 30 ஆக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.*

## 894.8 (621) இஸ்லாமியத் தமிழ், அரபுத்தமிழ் இலக்கியம்

### 14858

**அல் ஜாமிஆ: மூன்றாவது இதழ்-1422/2001.** ஆசிரியர் குழு. பேருவளை: நளீமிய்யா *மாணவர்களுக்கான இதழ், ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமியா, தபால் பெட்டி எண் 1, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2001. (கல்கிஸ்சை: டெக்னோ பிரின்டர்ஸ், 7, 15A, பின்தலியா வீதி, மவுண்ட் லவீனியா).*

*(10), 128 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 28x21 சமீ.*

எம்.டீ.கே. ஸமான், எஸ்.எச்.எம். பழீல், ஏ.பீ.எம். இத்ரீஸ் ஆகியோரைக் கொண்ட ஆசிரியர் குழுவின் பங்களிப்பில் வெளியிடப்பெறும் மூன்றாவது இதழ் இது. இஸ்லாமியக் கிராமங்களும் அதற்கான சாத்தியங்களும் (எம்.ஏ.எம்.மன்சூர்), ஹிப்ளுல் குர்ஆன் (எஸ்.எச்.எம்.பழீல்), மூன்று கவிதைகள்: அறிவுத் தந்தை, பெற்றார் பெருமை, ஜாமிஆ வாழ்வு (கைருல் பஷர்), அல்குர்ஆனின் நிழலில் ஒரு மானிடன் (எம்.ஏ.அப்துல் மலிக்), உலகமயமாக்கலும் உலகம் தழுவும் இறுதித் தூதும் (எம்.எம்.நியாஸ்), சூழலைப் பாதுகாக்கும் இஸ்லாம் (ஏ.எஸ். எம்.ஜெலீஸ்), தண்டனைக் கோட்பாடுகள்: மேலைத்தேய நோக்கும் இஸ்லாமிய நோக்கும் (எஸ்.எம்.அய்யூப்), இஸ்லாமிய சமூகத்தின் எழுச்சிக்கான நியதிகள் (எம்.ரீ.எம்.றியாஸ்), குடும்பத் திட்டம் - ஓர் இஸ்லாமிய நோக்கு (எம்.என்.ஷம்ஸ் அஹ்மத்), இருபதாம் நூற்றாண்டின் இஸ்லாமிய அறிஞர்கள்-சில நினைவுக் குறிப்புகள் (ஏ.ஏ.எம்.பஸீல்), இஸ்லாமிய பொருளாதாரத்தின் ஒழுக்க மாண்புகள் (எம்.ஜீ.ஷஹ்மி அஹ்மத்), பிராணிகள் அறுப்பு முறை ஒரு பகு நோக்கு (எம்.எஸ். றியாஸ் முஹம்மத்), ஒழுக்க விழுமியங்களில் தங்கியிருக்கும் நாகரிகங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் ஒரு சமூகவியல் நோக்கு (பீ.எம்.எம்.பெறோஸ்), இஸ்லாமிய தஃவாவும் விளிம்பு நிலைப் போராட்டங்களும் (எம்.ஏ.எம்.அஜுன்), பெற்றோர் - பிள்ளைகள் தொடர்பான உரிமைகளும் கடமைகளும் (ஸீ.எம்.எம்.அமானி), தஃவாவில் ஊடகத்துறையின் அவசியப்பாடு (ஏ.ஆர்.பர்ஸான்), இலங்கை முஸ்லிம்களின் பொருளாதாரம் நேற்று-இன்று-நாளை (எம்.எச்.எம்.றஹ்மான் ஹசன்), ஓர் அகதிப் பெண்ணின் நாட்குறிப்பு (றஜீப் அல்மகலானி), என் நிரந்தர முகவரி- கவிதை, ஸின்னீரா (அப்துல்லாஹ் பின் அஹ்மத்), நளீமிக்களின் பன்முகப் பதிவுகள், 2001 - வரை வெளியிடப்பட்ட நூல்கள் சஞ்சிகைகள், பத்திரிகைகள், நளீமிய்யா கலாபீடப் பட்டப் பரீட்சைக்கு 1995 ஆம் ஆண்டிலிருந்து 1999 ஆம் ஆண்டு வரையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தலைப்பு என்பன இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20825).

### 14859

**உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு கொழும்பு: 22,23,24 ஒக்டோபர் 2002: சிறப்புமலர்.** சிறப்பு மலர் தயாரிப்புக் குழு. கொழும்பு: இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம், துறைமுகங்கள் அபிவிருத்தி கப்பற்றுறை அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(22)+296+ (14) பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21.5 சமீ.

ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகளைத் தொடர்ந்து இம்மலரில், வள்ளல் நபி கற்றுத்தந்த வழிபாடும் வாழ்வும் (கு.ஜமால் முகம்மது), இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள், பெருவிழாக்கள் (மணவை முஸ்தபா), இஸ்லாமியர்களின் மத நல்லிணக்க மாண்பு (செ. இராசு), இந்து இஸ்லாம் சமய ஒருமைப்பாடு

*(ம.சா.அறிவுடைநம்பி), யானை பிடித்த பாரம்பரியம் (மு.அப்துஸ் ஸமது), நாடகத் துறையில் இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பு (காவலூர் இராசதுரை), எக்காலத்திற்கும் நிற்கும் ஹிஜ்ரி கணக்கு (மு.கா.தமிழடியான்), இலங்கை முஸ்லிம் புலவர்களின் வாய்மொழிப்பாடல் பாரம்பரியம் ஒரு அறிமுகம் (செ.யோகராசா), இலங்கை வானொலியும் இஸ்லாமிய கீதமும் (என்.எம்.நூர்தீன்), சூபித்துவத் தமிழிலக்கியங்கள் (பீ.மு.அஜ்மல்கான்), தமிழக முஸ்லிம் கல்விக்கூடங்களும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பணியும் (N.A. அமீர் அலி), இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் பெண்ணியச் சிந்தனைகள் (நசீமா பானு), தஸவ்ஃப் ஒரு விளக்கம் (ஏ.வி.எம்.நஸீமுத்தீன்), திப்பு இன்றைய ஆட்சியாளர்கள் பின்பற்றத் தக்க முன்மாதிரி (வீ. ஜீவானந்தம்), இலக்கியத்திற்குத் தமிழக முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு (ஓ. நசீமா அகமது), இஸ்லாமும் இலக்கியமும் (வி.எஸ்.முகம்மது அமீன்), முஸ்லிம்கள் ஆடிய மகிடிக் கூத்து (காரை.செ.சுந்தரம்பிள்ளை), ஐக்கிய அரபு அமீரகத்தில் தமிழ் முஸ்லிம் அமைப்பு (முதுவை ஹிதாயத்), மரபுவழிக் கவிதையில் இலங்கை முஸ்லிம்கள் (முருகையன்), தினகரனும் முஸ்லிம் படைப்பாளிகளும் (ராஜ ஸ்ரீகாந்தன்), உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் ஒரு பார்வை (ஜே.எம்.சாலி), இலங்கை சட்டவாக்க மன்றங்களில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் (எம்.எம்.ராஸிக்), சீறாப் புராண விளக்கம் நபி வளர்ந்தனரே (அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன்), சின்னாலிம் அப்பா (எஸ்.ஏ.ஆர். செய்யது ஹஸன் மௌலானா), கசாவத்தை ஆலிம் புலவர் (ஏ.எம்.நஜிமுதீன்), இறைவாக்குப் பெற்ற அருள்வாக்கி (சாந்தி முஹியித்தின்), அட்ட நாக பந்தமும் சுல்தால் மரைக்கார் புலவரும், வரகவி செய்கு அலாவுத்தீன் (எம்.எஸ்.எம்.அனஸ்), மீரா முகைதீன் ஆலிம் புலவர் (அஷ்ரப் சிஹாப்தீன்), நாவலர் ஈழமேகம் பக்கீர்த் தம்பி அவர்களின் வாழ்க்கை வரலாறு (யூ.எல்.அலியார்), மன்னாரில் மின்னிய முத்து - தமிழ் முழக்கம் புலவர் எம். பீ. எம். முஹம்மது காஸீம் ஆலிம் (பாத்திமா றம்ஸானி), அப்துஸ் ஸமது ஆலிம் புலவர் (வாழைச்சேனை அமர்), அ.மு.அசனா லெப்பைப் புலவர் (எஸ்.எம்.ஏ. ஹஸன்), யாழ்ப்பாணம் பத்றுதீன் புலவர் (கே.எம்.எம்.இக்பால்), கலையரசு மர்ஹூம் எம்.ஏ.முஹம்மத் (திக்குவல்லை ஸப்வான்), புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபூத்தீன் (எம்.வை.எம்.முஸ்லிம்), இலக்கிய ஆய்வறிவாளர் ஜே.எம்.எம்.அப்துல் காதிர் (வி.எம். இஸ்மாயில்), கவிமணி எம்.சி.எம்.ஸுபைர் (ஏ.எம்.எம்.புவாஜி), புதுமைப் போக்கும் புரட்சி நோக்குங் கொண்ட பெருங் கவிஞர் புரட்சிக் கமால் (கபூர் பின் ஷா), அண்ணல் கவிதைகள் ஒரு பார்வை (அன்பு முகையதீன்), மறைந்த கவிஞர் யுவன் (கபூரும்) பொத்துவில் கவிஞர்களும் (அன்புடீன்), முதல் தமிழ்த் தினசரி "தினத்தபால்" தந்த மர்ஹூம் கே.ஏ.மீரான் முஹிதீன் (எஸ்.ஐ. நாகூர் கனி), எச்.எம்.பி.முஹைதீன் (திக்குவல்லை கமால்), கலாநிதி ஏ.எம்.ஏ.அஸீஸ் (எஸ்.எம்.கமால்தீன்), "இன்ஸான்" அபூதாலிப் அப்துல் லத்தீஃப் (பண்ணாமத்துக் கவிராயர்), பிறையன்பன் பேராசிரியர் சு. வித்தியானந்தன் (எஸ்.எம்.எம்.ஜெமீல்), முதல் முஸ்லிம் சிறுகதையாளர், "பித்தன்" கே.எம்.முஹம்மது மீரா ஷா (ஏ.எம்.ஏ. அப்துல் ரஹ்மான்), ஈழத்து இலக்கியத்தின் உந்து விசை சுபைர் இளங்கீரன் (ப.ஆப்டீன்), அ.ஸ.வின் எழுத்துக்கள் ஒரு சமூகப் பதிவு (றமீஸ் அப்துல்லாஹ்),*

எழுத்துக்கு இலக்கணமாக வாழ்ந்த வை.அஹ்மத் (ஏ.ஜி.எம்.ஸதக்கா), காலக் கல்வெட்டில் எழுத்தாளர் - சித்தி ஜுனைதா (கே.ஜெய்புன்னிஸா), எம்.எச்.எம். ஷம்ஸ் பன்முகத் திறமை கொண்ட ஓர் ஆளுமை (திக்குவல்லை கமால்), எஸ்.டி.எஸ். என்னும் ஆலவிருட்சம் (ஜின்னாஹ்), மறைந்தும் மறையாத எம். எச். எம். அஷ்ரஃப் (மருதூர் ஏ.மஜீத்), சித்தி ஜுனைதா பேகமும் முதுசொல் இலக்கியக் கூடமும் (நா.கண்ணன்), முஸ்லிம் இலக்கியவாதிகள் பற்றிப் படர, கொழுகொம்பாகவிருந்த இனிய சிவா-ஆர்.சிவகுருநாதன் (எஸ். முத்துமீரான்), இலக்கியத் தகவல்களைத் தந்துதவும் ஒரு தகவல் நிலையம் மர்ஹூம் அல்லாப்பிச்சை (அபூரவ்ஷன்), மலையக இலக்கியமும் முஸ்லிம்களும் (தெளிவத்தை ஜோசப்), தமிழும் இஸ்லாமும் சில சிந்தனைகள் (சி.மௌனகுரு), ஆசாரக்கோவை என்ற அற்புத ஒழுக்க நூல் (நயீமா சித்தீக்), ம.மு. உவைஸ் இஸ்லாமிய தமிழ் இலக்கியத் துறையில் பாரிய சாதனை (எஸ்.எம். ஹனிபா) ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. தொடர்ந்து "கவிப்பூக்கள்" என்ற பிரிவில் கவிக்கோ அப்துல் ரகுமான், ஜின்னாஹ், உள்ளிட்ட தமிழறிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. சிறப்பு மலர்க் குழுவில் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், ஏ.ஜீ.எம்.சதக்கா, வாழைச்சேனை அமர், அல் அஸூமத், நியாஸ் ஏ.ஸமத் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27443).

## 894.8(622) கிறிஸ்தவ தமிழ் இலக்கியம்

### 14860

**ஈழத்துத் தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியம்(போர்த்துக்கேயர் காலம்).** ஹறோசனா ஜெயசீலன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2019. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiii, 126 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-644-1.

தமிழ்ச் சமூக வரலாற்றில் காலத்திற்குக் காலம் இந்தியப் பண்பாட்டுக்கு உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வெவ்வேறு சமயங்களின் ஊடாட்டம் நிகழ்ந்து வந்துள்ளது. இவ்வூடாட்டமும் பரவுகையும் தமிழ்ச் சமூக அசைவியக்கத்தில் பெருமாற்றங்களை ஏற்படுத்திவந்துள்ளன. குறிப்பாக, தொடக்க காலத்தில் தமிழ்ச் சமய மரபுகளுடன் இந்தியப் பெரும் பண்பாட்டுக்குள்ளிருந்து வைதீக, அவைதீக மதங்களின் ஊடாட்டமும் இணைவும் ஏற்பட்டன. அதே போல இந்தியப் பண்பாட்டுக்கு வெளியிலிருந்து வந்த, உலகின் இரு பெரும் மதங்களாகிய இஸ்லாமும் கிறிஸ்தவமும் அடுத்தடுத்த கால கட்டங்களில் தமிழ்ச் சூழமைவில் மற்றுமொரு மடைமாற்றத்தைத் திறந்துவிட்டன. இவ்வாறு உள்நுழைந்த சமயங்கள் யாவும் தமது சமயச் சித்தாந்தக் கொள்கைகளுக்கு இணங்க தமிழ்ச் சூழலில் நிலைபெற்றுள்ளதோடு ஒவ்வொரு சமயமும் பூர்வீக தமிழ்ப் பண்பாட்டிலிருந்தும் ஏனைய மதங்களின் பண்பாட்டுக் கூறுகளிலிருந்தும் தேவையானவற்றை ஏற்றுக்கொண்டுள்ளன. அந்தவகையில் கிறிஸ்தவம் தமிழ்ச் சூழலுடன் ஊடாடி

உருவாக்கிய தமிழ்க் கிறிஸ்தவப் பண்பாட்டை ஈழத்தின் போர்த்துக்கேயர் காலத்தை அடிப்படையாகக்கொண்டு ஆராய்வதாக இந்நூல் அமைந்துள்ளது. தோற்றுவாய், கிறிஸ்தவமும் தமிழ்ப் பண்பாடும், அர்ச் யாகப்பர் அம்மானை, ஞானப்பள்ளு, போர்த்துக்கேயர் காலக் கிறிஸ்தவ இலக்கியங்களில் பிற சமயக் கண்டனம், நிறைவு ஆகிய ஆறு பிரதான இயல்களில் இவ்வாய்வு விரிகின்றது. பின்னிணைப்புகளாக கிறிஸ்தவமும் அடித்தள மக்களும், கலைச்சொல் விளக்கம் ஆகியன தரப்பட்டுள்ளன. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சிறப்பு இளங்கலைமாணி, முதுகலைமாணி பட்டங்களைப் பெற்ற திருமதி ஹறோசனா ஜெயசீலன் இலங்கை சப்பிரகமுவப் பல்கலைக்கழகத்தின் மொழிகள் துறையில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார்.

## 894.8 (63) சங்க இலக்கியங்கள் தொடர்பானவை

### 14861

**கொங்கு வேளீர் இயற்றிய கொங்குவேண் மாக்கதை எனும் பெருங்கதை: ஆய்வு நோக்கு.** க.தா.செல்வராஜகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்). கனடா: சீவன் பதிப்பகம், இல. 3, 1292 Sherwood Mills Blvd, Mississauga L5V1S6, Ontario, 1வது பதிப்பு, 2008. (கனடா: ரீ கொப்பி, டொரன்டோ).

280+56 பக்கம், புகைப்படம், விலை: கனேடிய டொலர் 25.00, அளவு: 21x14 சமீ.

ஈழத்துப் பூராடனார் என அழைக்கப்படும் க. தா. செல்வராசகோபால் (13 டிசம்பர், 1928 - 21 டிசம்பர் 2010) ஈழத்துப் பன்முகத் தமிழறிஞர். இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும் பதிப்பித்தும் உள்ளார். புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்ந்தவர். வட இந்தியப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தமிழ்ச் சாயலோடு படைக்கப்பெற்ற முதல் தமிழ்க் காப்பியம் என்ற பெருமை கொங்குவேண் மாக்கதை என்னும் பெருங்கதைக்கு உண்டு. வேறு எந்தத் தமிழ்க் காப்பியத்திற்கும் இல்லாத தனிச் சிறப்புப் பெருங்கதைக்கு உண்டு என்று அறிஞர் கருதுவர். இது பலவகைக் கருவிகள், பழக்க வழக்கங்கள், கட்டட அமைப்புகள், விளையாட்டுகள் பற்றிய சமுதாயச் செய்திகளை எல்லாம் நுட்பமாகப் பேசும் ஒரு காப்பியம். பெருங்கதை பற்றிப் பழைய உரையாசிரியர்கள் பலர் புகழ்ந்து பாராட்டியுள்ளனர். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் இக்காப்பியத்தைப் பாராட்டி உள்ளார். "கபாடபுரத்தில் இருந்த இடைச் சங்கத்தில் இயற்றப்பட்டவை கலியும் குருகும் வெண்டாளியும் முதலிய செய்யுள் இலக்கியங்கள் இந்த இலக்கியங்களை எல்லாம் ஆராய்ந்து செய்ததே "உதயணன் கதை" என்று அவர் கூறியுள்ளார் (உதயணன் கதை - பெருங்கதை). பேராசிரியர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர். தொன்மை முதலிய இலக்கணக் கூறுகளை விளக்கும் இவர் "இயைபு" என்ற இலக்கணத்தை விளக்கி, அதற்குச் சான்றுகளாகச் சீத்தலைச் சாத்தனாரால் செய்யப்பட்ட மணிமேகலை யையும், கொங்குவேளிரால் செய்யப்பட்ட இந்தப் பெருங்கதையையும் குறிப் பிட்டுள்ளார். நச்சினார்க்கினியர், மயிலை நாதர், நேமிநாத உரையாசிரியர், யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர், வீரசோழிய உரையாசிரியர் முதலியோர்

உரைகளிலும் "பெருங்கதை" மேற்கோளாக இடம் பெற்றுள்ளது. இத்தகைய பெருமை பெற்ற பெருங்கதை, உதயணன் என்னும் காவியத் தலைவனின் வாழ்க்கையை விவரித்துச் செல்கிறது. இக்காப்பியத்தை இயற்றிய கொங்குவேளிர் சமண சமயத்தைச் சேர்ந்தவர். எனவே இக்காப்பியம் சமணக் கொள்கைகளை மிகுதியும் முன்னிலைப் படுத்துவதாக அமைந்துள்ளது. கொங்குவேண் மாக்கதை எனும் பெருங்கதை பற்றிய ஆய்வினை இந்நூலில் ஈழத்துப் பூராடனார் விபரமாகப் பதிவுசெய்துள்ளார். நூல் முகப்பு, பதிப்புத் தகவல்கள், சமர்ப்பணம், பதிப்பகத்தார் பகர்வன, மின் யுகத்தில் தமிழ் எழுத்து வரிவடிவங்களின் நிலைப்பாடு, படைப்பாசிரியர், நூலாசிரியர் நுகல்வது, நூலின் உள்ளே, ஆய்வு நோக்குகள் (பெருங்கதை ஆய்வு நோக்கு/ காப்பியக் கதைப் பகுதி பெருங்கதையின் சாரம் பற்றிய ஆய்வு நோக்கு/ காப்பிய வரலாற்றுப் பகுதி பெருங்கதையின் படைப்புப் பற்றிய ஆய்வு நோக்கு), பெருங்கதை நூலின் ஆய்வு நோக்கு (உஞ்சைக் காண்ட ஆய்வு நோக்கு/ இலாவண காண்ட ஆய்வு நோக்கு/ மகத காண்ட ஆய்வு நோக்கு/ வத்தவ காண்ட ஆய்வு நோக்கு/ நரவாண காண்ட ஆய்வு நோக்கு/ துறவுக் காண்ட ஆய்வு நோக்கு/ முடிவுரை ஆய்வு நோக்கு) ஆகிய தனித்தனி இயல்களில் இவ்வாய்வு நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4076).

## 894.8 (64) சமகால இலக்கிய ஆய்வுகள், கட்டுரைகள்

### 14862

**அனுபவத்தினூடே: கட்டுரைகள் விமர்சனங்கள்.** ஆ.கந்தையா. பருத்தித்துறை: சித்தம் அழகியார் வெளியீடு, ஞானாலயம், 117, வி.எம்.வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: அன்ரா பிறிண்டேர்ஸ், இல. 356A, கஸ்தூரியார் வீதி).

v, 106 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-42750-0-3.

அமரர் ஆ.கந்தையா அவர்கள் அச்சுவேலியில் உள்ள தம்பாலை கிராமத்தில் பிறந்து, உத்திராவத்தை, பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவர். ஆங்கிலப் பட்டதாரியான இவர் ஆங்கிலப் பாட ஆசிரியராகவும், தமிழ்-ஆங்கில இலக்கியங்களின்மீது பரிச்சயம் மிக்கவராகவும், தொடர்வாசிப்பைக் கொண்டவராகவும் இருந்தவர். 90களில் பல்வேறு இலக்கியம் மற்றும் திறனாய்வுக் கட்டுரைகள் ஊடகங்களில் வெளிவந்திருந்தன. இவரது மறைவின் பின்னர் நலன்விரும்பிகளால் இவற்றில் 17 கட்டுரைகள் இந்நூலில் தொகுத்து வழங்கப் பட்டுள்ளன. சித்தம் அழகியார் வெளியீட்டுத் தொடரில் இரண்டாவது நூல். இந்நூலில் புராதன இந்தியாவில் ஓவியக் கலை, நா.ஞானகுமாரனின் நயந்தரு சைவசித்தாந்தம், 35ஆவது ஆண்டு மலர் பிரவேசம், இலக்கியப் பார்வையில் இப்சன், 20ஆம் நூற்றாண்டின் இன்பியல் நாடக ஆசிரியர் பேர்ணாட் ஷோ, படைப்புக்களில் படைப்பாளி தெணியான், புத்துயிர் வேண்டிநிற்கும் அழகு சுப்பிரமணியம், அழகு சுப்பிரமணியத்தின் ஆக்கங்கள், அழகு சுப்பிரமணியத்தின்

வாழ்க்கை வரலாறு, வால்ட் விட்மன் புதுக்கவிதையின் தந்தையும் அமெரிக்காவின் ஆன்மீகக் குரலும், கலாபூஷணம் விருது பன்முகப்பட்ட படைப்பாற்றலுக்கான பரிசு, சோல் பெலோவின் மழை அரசன் கொண்டர்சன், ஐ.ஏ.ரிச்சர்ட் நவீன இலக்கியத் திறனாய்வின் முன்னோடி, முருகானந்தனின் இந்த மண் ஒரு சாதாரண வாசகனின் திறனாய்வு, ஆபிரிக்கக் கவிதை இரண்டு மண்டலத்தின் ஓர் ஒளிக்கீற்று, பா.இரகுவரன் கல்லூரி நாடகங்கள், அவலம் ஒரு மின் வாசிப்பு ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## 14863

**அனைத்தும்: படைப்பிலக்கியம் பற்றிய பார்வை.** முருகேசு ரவீந்திரன். யாழ்ப்பாணம்: அருணோதயம் வெளியீடு, 22/10, கச்சேரி நல்லூர் வீதி, 1வது பதிப்பு, 2014. (யாழ்ப்பாணம்: அன்ரா பிறிண்டேர்ஸ், இல. 356A, கஸ்தூரியார் வீதி).

xvii, 138 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-54221-2-3.

இலங்கை வானொலி அறிவிப்பாளரும், சிறுகதை எழுத்தாளருமாகிய முருகேசு ரவீந்திரன் 2009 முதல் 2011 வரை தினகரன் வார மஞ்சரியில் கூராயுதம் என்ற பகுதியில் தொடர்ச்சியாக எழுதி வந்த கட்டுரைகள் இத்தொகுப்பின்வழி நூலுருவாகியுள்ளன. தனது வாசனைப் பரப்பில் தன்னைக் கவர்ந்த எழுத்தாளர்களின் நூல்கள் பற்றிய கருத்துக்களின் தொகுப்பாக அமைந்த இக்கட்டுரைகளை, அக்கால இலக்கியப் போக்குகள், பண்பாட்டு நிலைமை என்பவற்றைப் பற்றிய தகவல் தேட்டமாகக் காணமுடிகின்றது. கவிதை இலக்கியம், சிறுகதைகள், நாவல்கள், படைப்புக்களும் படைப்பாளிகளும், நாடக இலக்கியம், இலக்கியமும் பண்பாடும் எனப் பல்வேறு பிரிவுகளுள் இதிலுள்ள 25 கட்டுரைகளும் அடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 63633).

## 14864

**இலக்கியமும் உளவியலும்: கட்டுரைத் தொகுப்பு.** த.கலாமதி. யாழ்ப்பாணம்: ஜீவநதி, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஆனி 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

vi, 94 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-0958-07-8.

இலக்கியத் திறனாய்வும் உளவியல்சார் அணுகுமுறையும், உளம் வரைந்த ஓவியம்: கபிலரின் குறிஞ்சிப்பாட்டு, தீரன் ஆர்.எம்.நௌஷாத் எழுதிய "ஒய்த்தா மாமா" சிறுகதை பற்றிய ஓர் உளவியற் பார்வை, தேவமுகுந்தனின் "நாங்கள்" ஆசிரியம்சார் உளவியலை வலியுறுத்தும் படைப்பு, கே.டானியலின் "கானல்" ஓர் உளவியல் மீள்பார்வை, உளவியல் நோக்கில் தெணியானின் "காத்திருப்பு", தெணியானின் "கானலில் மான்" ஆளுமை உளவியல் வழியே ஒரு மீள்பார்வை, இரா.நடராசனின் நாவலான "ரோஸ்" பற்றிய ஒரு மதிப்பீட்டு ஆய்வு: ஓர் உளவியல் அணுகுமுறை ஆகிய கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. ஜீவநதி வெளியீட்டகத்தின்

101ஆவது பிரசுரமாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65193).

### 14865

**கனடாவில் கதைத்தது.** எஸ்.பொன்னுத்துரை. கனடா: தமிழ் இலக்கியத் தோட்டம், ரொரன்ரோ, 1வது பதிப்பு, ஜுன் 2011 (அச்சக விபரம் தரப்படவில்லை).

18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

கனடிய தமிழ் இலக்கியத் தோட்டம், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், விமர்சகர்கள், கொடையாளர்கள் ஆகியவர்களின் ஆதரவுடன் ஓர் அறக் கட்டளையாக 2001ம் ஆண்டு ரொறொன்ரோவில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் பொதுவான நோக்கம் உலகமெங்கும் பரந்திருக்கும் தமிழை வளர்ப்பதாகும். தமிழ், ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்பு, அரிய தமிழ் நூல்களை மீள் பதிப்பு செய்வது, தமிழ் பட்டறைகள் நடத்துவது, நூலகங்களுக்கு இலவசமாக தமிழ் நூல்கள் அளிப்பது, தமிழ் சேவையாளர்களுக்கு விருதுகள் வழங்குவது ஆகியவை இதனுள் அடங்கும். 2010ம் ஆண்டுக்கான இயல் விருது தமிழ் இலக்கியத்தின் முக்கியமான முன்னோடியான எஸ்.பொன்னுத்துரை ஆகிய எஸ்.பொவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கனடாவில் இயங்கும் தமிழ் இலக்கியத் தோட்டம் அளிக்கும் இந்த வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது, கேடயமும் 1500 டொலர்கள் மதிப்பும் கொண்டது. இவ்விருதினைப் பெற்றபின்னர் எஸ் பொ. அவர்கள் ஆற்றிய ஏற்புரை நூல்வடிவில் வெளியிடப்பட்டுள்ளது.

### 14866

**தரிசனப் பார்வைகள்.** த.கலாமணி. பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, புரட்டாதி 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

iv, 64 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-85-5.

இந்நூலில் கவித்துவச் சொல்லாடலும் புனைவும்: இ.சு.முரளிதரனின் "கடவுளின் கைபேசி எண்" சிறுகதைத் தொகுதியை முன்னிறுத்தி, மனசின் பிடிக்குள் சிக்கிய தரிசனத் தேன்துளிகள், தன் வரலாறு கூறும் சிறுகதைகள்: "காவியமாய் நெஞ்சின் ஓவியமாய்" சிறுகதைத் தொகுதி பற்றிய வாசகர் நிலை மனப்பதிவுகள், கவிஞர் மு.செல்லையாவும் வளர்பிறையும், சூழலியல் தத்துவம் உணர்த்தும் நாவல்: செங்கை ஆழியானின் "ஓ அந்த அழகிய பழைய உலகம்" நாவல் குறித்த சில மனப்பதிவுகள், நறுக்காக சில வார்த்தைகள்: மொழிவரதனின் "நறுக்" கவிதைத் தொகுதியை முன்வைத்து, மன ஆதங்கங்களுக்கு வடிகால் தேடும் மானசீகப் படைப்பாளி: நெலோமி, அந்தனி ஜீவாவின் "தலைநகரில் தமிழ் நாடக அரங்கு", ஜப்பானிய ஹைக்கூ இலக்கண மரபை மீறாத ஹைக்கூத் தொகுதி: "இயற்கை இயல்பு" பற்றிய ஒரு பார்வை, வலி சுமந்த கூத்துக் கலைஞரின் அனுபவ தரிசனங்கள், "முடிவல்ல ஆரம்பம்" இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் நாவல் பற்றிய சில குறிப்புகள் ஆகிய பதினொரு திறனாய்வுக் கட்டுரைகள்

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. ஜீவநதி வெளியீட்டகத்தின் 110ஆவது பிரசுரமாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65186).

## 14867

**நீட்சி பெறும் சொற்கள்: கட்டுரைகள்.** லறீனா அப்துல் ஹக். சென்னை 600005: மணற்கேணி பதிப்பகம், முதல் தளம், புதிய எண் 10, பழைய எண் 288, டாக்டர் நடேசன் சாலை, திருவல்லிக்கேணி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2015. (தஞ்சாவூர்: அகரம் அச்சகம்).

110 பக்கம், விலை: இந்திய ரூபா 80.00, அளவு: 21x14 சமீ.

இந்நூலில் குமாரி ஜயவர்தனவின் ஆய்வுலகம்: சில அறிமுகக் குறிப்புகள், அழகுத் தமிழில் அரபுக் கதைகள், ஊடறு.கொம்: விழுமிய வாழ்தலை நோக்கி, மொழியின் விடியலை முழங்கும் குரல்கள், ஊருக்கு நாலு ஆளுமைப் பெண்கள், மழைமரத் தவத்தில் திளைத்தபடி, ஈழத்துக் கவிதை இதழ்கள் வரிசையில் "கவிஞன்" இதழ்: சில குறிப்புகள், யாதுமாகி நிற்கும் ஓர் இளைய பாரதி, இலங்கையின் இக்பால், புலவர் அப்துல் காதர் லெப்பை (1913-1984), நீட்சி பெறும் சொற்கள் ஆகிய பத்து இலக்கியக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65145).

## 14868

**பதிவுகளின் சங்கமம்.** எஸ்.எல்.மன்சூர். அட்டாளைச்சேனை-01: எஸ்.எல்.மன்சூர், அனாசமி பதிப்பகம், டீன்ஸ் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 2014. (சாய்ந்தமருது: டிசைன் வேர்ள்ட் பிரின்டர்ஸ்).

132 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-4975-01-9.

அட்டாளைச்சேனை எஸ்.எல்.மன்சூரினால் திறனாய்வு செய்யப்பட்ட நூல்கள், சஞ்சிகைகளின் விமர்சனத் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. சமயம், அரசியல், கல்வியியல், இலக்கியம்-வரலாறு, சிறுகதைகள், காவியம்-குறும்பா-கவிதைகள் ஆகிய துறைகளில் எழுதப்பட்ட நூல்கள் இவரது திறனாய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளன. இதில் 30 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும் நூலாசிரியர் எஸ்.எல்.மன்சூர் சிறந்த விமர்சகராகவும், எழுத்தாளராகவும் அறியப்பட்டவர். மொழியின் செழுமை என்ற தன் முதலாவது நூலை முன்னதாக வெளியிட்டவர். இது இவரது இரண்டாவது நூல். இந்நூல் பற்றிய தனது உரையில், நூல்களில் சரி-பிழை காண்பது தனது நோக்கமல்ல என்றும், இலக்கிய வடிவத்தினுள் கொண்டுவரப்பட்ட நூல்களின் எண்ணக்கருவைத் தான் அறிந்து, தனது தேடல்களினூடாக நூலுக்கு வழங்குகின்ற அறிமுகக் குறிப்புகள் எழுத்தாளர்களை ஊக்கவிக்கவேண்டும் என்பதே தனது குறிக்கோளாகும் என்று குறிப்பிட்டுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 65124).

## 14869

**பிரதிகளைப் பற்றிய பிரதிகள்.** மேமன்கவி. கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 661/665/675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2019. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).

(13), 14-296 பக்கம், விலை: ரூபா 1250., அளவு: 22x14 சமீ., ISBN: 978-624-00-0191-5.

கோடிச் சேலை (மலரன்பன்), முரண்பாடுகள் (இதயராசன்), மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள் (துவாகரன்), வெறிச்சோடும் மனங்கள் (வெற்றிவேல் துஷ்யந்தன்), ஜீவநதி சஞ்சிகை மூன்றாவது ஆண்டு மலர், படிகள் சஞ்சிகையின் 30ஆவது இதழ், ஒரு சோம்பேறியின் கடல் (அஜந்தகுமார்), நான் நிழலானால் (ஸ்ரீரஞ்சனி விஜேந்திரா), செந்நீரும் கண்ணீரும் (சமரபாகு சீனா உதயகுமார்), இருமை (கே.எஸ்.சிவகுமாரன்), குள்ளன் (எம்.எம்.மன்சூர்), இன்னுமோர் உலகம் (கொற்றை பி.கிருஷ்ணானந்தன்), சர்வம் ப்ரம்மாஷஸ்மி (மலேசியா-நவீன் மனோகரன்), என் கடன் (வ.ஐ.வரதராஜன்), நிமிர்வு (அநாதரட்சகன்), தாரிக் (பாரதி அக்கா-மகாராணி), பீச்சாங்கை (சதீஸ்பிரபு), இரு சிறுகதைகள்-ஒப்பியல் கட்டுரைகள், இப்படியுமா? (வி.ரி.இளங்கோவன்), கண்ணீரினூடே தெரியும் வீதி (தேவமுகுந்தன்), வெள்ளிவிரல் (ஆர்.எம்.நௌஷாத்), தவறிப் போனவன் கதை (தெணியான்), பாயிஸா அலி கவிதைகள், இரவு மழையில் (ஈழக்கவி நவாஷ்), நந்தினி சேவியரின் கதைகள், ஒரு வழிப்போக்கனின் வாக்குமூலம் (ராஜாஜி ராஜகோபாலன்), அவளுக்கும் ஒரு வாழ்வு (கல்முனை முபாரக்), பாவு தளிர் தூவு வானம் (பசுந்திரா சசி), சிவப்பு டைனோசர்கள் (சு.தவச்செல்வன்), குதிரை இல்லாத ராஜகுமாரன் (ராஜாஜி ராஜகோபாலன்), கடவுச்சீட்டு (ஜீவகுமாரன்), கட்டுபொல் (பிரமீளா பிரதீபன்), நிழலைத் தேடி (ஏ.எஸ்.உபைத்துல்லாஹ்) ஆகிய நூல்களை பற்றிய திறனாய்வு முயற்சிகளாக இதிலுள்ள 33 கட்டுரைகளும் எழுதப்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65497).

## 14870

**புலவொலி: கட்டுரைகள்.** புலோலியூர் ஆ.இரத்தினவேலோன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, சித்திரை 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

viii, 112 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-4676-95-4.

இந்நூலில் புலவொலி-புலோலியூரின் இலக்கிய கர்த்தாக்கள், சிறுகதை வளர்ச்சிக்கு துணைநின்ற சிறு சஞ்சிகைகள், தெணியான் பற்றிய ஒரு தரிசனம், தி. ஞானசேகரனின் “சரித்திரம் பேசும் சாஹித்திய ரத்னா” விருதாளர்கள் நூல் பற்றிய பார்வை, மலர்ந்த(ன) பஞ்ச புஷ்பங்கள்-கலாமணியின் நூல்கள் பற்றி, சுதாராஜின் “காட்டிலிருந்து வந்தவன்”, கண.மகேஸ்வரனின் கனதிமிக்க சிறுகதைகள், புதியவகை இலக்கியமாய் பரிணமிக்கும் நேர்காணல்கள்:

பரணீதரனின் நூலை முன்னிறுத்தி, புலோலியூர் க.சதாசிவம் பற்றிய நெஞ்சம் உடைத்த நினைவுகள், நான் காணும் "தெளிவத்தை", "கருத்தால் உடன்பிறந்த" கோகிலா மகேந்திரன், கொன்றைப் பூக்கள்: மண்டூர் அசோகா, "வன்னியாச்சி" தாமரைச்செல்வி, "அதிவேக எழுத்தாளர்" ச.முருகானந்தன், "(எங்கள்) குடும்பநல மருத்துவர்" எம்.கே.முருகானந்தன், சிதம்பரப்பிள்ளை மாஸ்டர்-சில நினைவுகள் ஆகிய 16 கட்டுரைகளை தெகுத்திருக்கின்றார். ஈழத்து இலக்கிய உலகில் எழுத்தாளராக, பதிப்பாளராக, ஊடக முகாமையாளராக நன்கறியப்பட்ட உன்னத ஆளுமை புலோலியூர் ஆ.இரத்தினவேலோன். சிறந்த பல சிறுகதைகளை ஈழத்து இலக்கியத்துக்கு வழங்கிய இவர் இதுவரை 104 நூல்களை கொழும்பு மீரா பதிப்பகத்தின்மூலம் வெளியிட்டுள்ளார். தனது பத்தி எழுத்துக்களின் ஊடாக ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை பலரும் அறியச்செய்தவர். அவற்றின் தேர்ந்த தொகுப்பே இந்நூலிலும் இடம்பெற்றுள்ளது. இந்நூல் ஜீவநதி வெளியீட்டகத்தின் 121ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது.

## 14871

**மின்மினிகளால் ஒரு தோரணம்.** முல்லை முஸ்ரிபா. கொழும்பு 10: வெள்ளாப்பு வெளி, ஏ 6, 2/1 என்.எச்.எஸ்.கலைமகள் வீதி, 1வது பதிப்பு, 2017. (கொழும்பு 10: S & S Printers, 43, ஜயந்த வீரசேகர மாவத்தை).

xv, 132 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 19x13 சமீ., ISBN: 978-955-0280-05-6.

ஆசிரியரின் கவிதைத்துறைசார்ந்த ஆர்வத்தின் மற்றுமொரு வெளிப்பாடு இந் நூலாகும். இந்நூல் ஈழத்துக் கவிதைப்புலம் சார்ந்த தேடலாக விரியும் ஒன்பது கட்டுரைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. வடக்கு முஸ்லிம்களின் வாழ்வியல் பேசும் கவிதை: ஒரு தசாப்த காலக் கவிதைகளுடான ஆய்வு முன்வைப்பு, வடக்கு முஸ்லிம் எழுத்து: வடிவங்களைத் தேடும் வாழ்வு, நான்கு தசாப்தங்களில் இலக்கியப் பரிமாணம்: அல் ஹஸனாத் சஞ்சிகையின் இலக்கியக் கூறுகளை முன்வைத்து ஓர் ஆய்வுக் குறிப்பு, கண்ணின் மணியொப்பும் இருமணிகள்: பண்டிதமணி கணபதிப்பிள்ளை புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஒப்பீட்டு நோக்கு, நவீன கதைகளை உள்ளீர்த்தல்: தமிழ் மொழியும் இலக்கியமும் பாட நூல்களை முன்வைத்து சில குறிப்புகள், பாரசீகச் சிரிப்பு: அர்த்தமும் அலாதியும், ஒரு கவிதை ஒரு குறிப்பு: வானொலிக் கவிதை வாசிப்பு, மூன்று கவிதைப் பிரதிகளுக்கான அணிந்துரை: கவிதையின் செழுமைத் தேடல், மின்மினிகளால் ஒரு தோரணம்: ஹைக்கூ கவிதைகளின் லாவகம் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

## 14872

**வ.அ.இராசரத்தினத்தின் ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது: நாவலும் கருத்துக்களும்.** த.அஜந்தகுமார். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, வைகாசி 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

x, 122 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-76-3.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களின் பயன்பாட்டுக்கென இந்நூலை யாழ்/ ஆழியவளை சி.சி.த.க.வித்தியாலய ஆசிரியர் த.அஜந்தகுமார் தொகுத்து வழங்கியுள்ளார். 1992இல் வெளியான ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது என்ற வ.அ.இ. அவர்களின் நாவல் 1960 காலகட்டத்தைப் பிரதிபலிக்கின்றது. தமிழ்ப் பாரம்பரியத்தை மிக இறுக்கமாக வைத்திருந்த ஆலங்கேணிக் கிராமத்தையும் அக்கிராமத்து மக்களின் வாழ்வியலையும் இந்நாவல் பதிவுசெய்திருந்தது. திருக்கோணமலைப் பிரதேச நாவல் வளர்ச்சியிலும், கிழக்கிலங்கை நாவல் வளர்ச்சியிலும், ஒட்டுமொத்தமாக ஈழத்து நாவல் வளர்ச்சியிலும் இந்நாவல் சில தடங்களைப் பதித்துள்ளது. இந்நாவல் பற்றிய பேராசிரியர் ம.இரகுநாதன், பேராசிரியர் செ.யோகராசா ஆகியோரின் கருத்துரைகளும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல் ஜீவநதி வெளியீட்டகத்தின் 93ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது.

## 894.8 (7) பலவினத் தொகுப்பு

### 14873

**எனது பேனாவில் இருந்து.** கரவை மு.தயாளன். லண்டன்: T.G.L.வெளியீடு, 1வது பதிப்பு, ஜுன் 2016. (அச்சக விபரம் தரப்படவில்லை).

239 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x12.5 சமீ., ISBN: 978-0-9935325-8-0.

அரசியலோடு இணைந்த சமூக வெளிப்பாடும் சமூகத்தோடிணைந்த படைப்புகளின் வெளிக்கொணர்வும் இத்தொகுப்பின் உயிர்நாடி எனக் கொள்ளலாம். உலகம் பிரசவித்த பல தத்துவங்களின் உள்வாங்கல் இத்தொகுப்பின் படைப்புகளில் பிரதிபலிக்கின்றன. இத்தொகுப்பில் தோற்றது தாய்மை, அம்மாக்களும் பிள்ளைகளும், லண்டன் நகரத்து வீதிகளில், ஜெர்மானிய வீடுகளில், பாவம் கனகா, என்னை மறந்ததேன் ஆகிய ஆறு சிறுகதைகளும், திருவருளின் திருநீறு, சமயமும் சம்பவங்களும்-1, உன்னதங்கள், நாதனை மறைத்திடும் நவக்கிரகங்கள், சமயமும் சம்பவங்களும்-2, பரிணாமம், உலகெலாம் உணர்ந்து ஆகிய ஏழு கட்டுரைகளும், ஓ என் இனிய தமிழே, நீ எப்போது என்னுள் வந்தாய்?, வேரோடு நாம் பெயர்ந்தோம், ஏன் தமிழே, சேகுவேரா, விடுதலைக் கனவு, மணலாகிப் போனேன், இன்னுமா உனக்குப் புரியவில்லை, இத்தனைக்குப் பின்னும் ஆகிய ஒன்பது கவிதைகளும், தமிழ் படும் பாடு, பாஞ்சாலி சபதம் ஆகிய இரு நாடகங்களும், Lonliness, Identity, Reflection ஆகிய மூன்று ஆங்கிலச் சிறுகதைகளும், இறுதியில் பதினொரு ஆங்கிலக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

### 14874

**எஸ்போஸ் படைப்புகள் மற்றும் எஸ்போஸ் பற்றியும் அவருடைய படைப்புகள் பற்றியும்.** கருணாகரன், ப.தயாளன், சித்தாந்தன். சென்னை 600005: வடலி வெளியீடு, பி-55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2016. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).

*272 பக்கம், விலை: இந்திய ரூபா 220., அளவு: 21.5x14 சமீ.,* ISBN: *978-0-9919 755-8-7.*

முன்னாள் போராளியும், கவிஞரும், ஈழநாதம் வன்னிப் பதிப்பின் ஆசிரியர் குழுவின் ஊடகவியலாளருமான சந்திரபோஸ் சுதாகர் (எஸ்போஸ்) 2007ஆம் ஆண்டு வவுனியாவில உள்ள அவரது வீட்டில் வைத்து, தனது 7 வயதுப் பிள்ளை உள்ளிட்ட குடும்பத்தினரின் முன்னிலையில் போராளிக் குழுவொன்றினால் சுட்டுக் கொல்லப்பட்டார். 1994இல் எழுதத் தொடங்கிய இவர் தான் படுகொலை செய்யப்படும் 2007வரை தொடர்ந்தும் ஊடகங்களில் எழுதிவந்தவர். அவர் வாழும் காலத்தில் எழுதிய முக்கிய ஆக்கங்களின் தொகுப்பாக இந்நூலை அவரது நண்பர்கள் வெளியிட்டுள்ளனர். ஐந்து பகுதிகளைக் கொண்ட இத்தொகுப்பின் 1வது பகுதி அவரது கவிதைகளைக் கொண்டதாகவும், 2வது பகுதி அவர் எழுதிய மீட்சியற்ற நகரத்தில் செண்பகம் துப்பிய எச்சம், பாலம், நெருப்புக் காலத்தில் ஒரு துளிர், ஒரு இரவும் ஒரு காலமும், குகை ஆகிய சிறுகதைகளைக் கொண்ட தாகவும், 3வது பகுதி அவர் எழுதிய விமர்சனங்களின் பதிவாகவும், 4வது பகுதி கா.சிவத்தம்பி, சோ.பத்மநாதன், எஸ்.உமா ஜிப்ரான், கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகியோருடனான நேர்காணல்களாகவும், 5வது பகுதி எஸ்போஸ் பற்றிய பிற படைப்பாளிகளின் குறிப்புகள், கட்டுரைகள் மற்றும் பதிவுகளாகவும் அமைந்துள்ளன.

## 14875

**காதம்பரீ: இலக்கிய நூல்.** செல்லத்துரை கலாவாணி. யாழ்ப்பாணம்: செ. கலாவாணி, வாணி அகம், சிறுப்பிட்டி வடக்கு, 1வது பதிப்பு, ஆடி 2012. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் நேரச்சுப் பதிப்பகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர்).

*64 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 14x10 சமீ.*

கலாவாணியின் கட்டுரைகளும் கவிதைகளும் கொண்ட தொகுப்பு நூல். கட்டுரைப் பிரிவில் விடுகதை, பழமொழி, திருக்குறளும் அதன் சிறப்பும், விளையாட்டு, நட்பு, உழுதுண்டு வாழாவாரே வாழ்வார், தற்கால இலக்கியங்களும் அதன் பரவலும், நவீன தொடர்பாடல், தொல்காப்பிய நூல் காட்டும் தமிழர் வாழ்வு, நாடகம், மொழி என்பதும் அதன் பயன்பாடும், உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. கவிதைப் பிரிவில் கல்வி, இராமாயணத்திலோர் காட்சி, சங்கப் பாடல் தரும் விருந்துணவு, சகுந்தலை, கவிஞன், நல் ஆசிரியர், திருமணம், தியாகம், மழலை, மலர், தேன், வரதட்சணை, கனவு, முதிர்வு, குழந்தை தாலாட்டு, நிலா, மயில் நடனம், தாலி, வீரம், கண்கள், பேனா, கிராமியப் பாடல், பெண், மணப்பெண், விதி, மரணம், மன்னர் உலா, அழகு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கவிதைகள் என்பன இடம்பெற்றுள்ளன.

## 14876

**சின்னச் சின்ன எண்ணங்கள்.** *அனிஸ்டஸ் ஜெயராஜா. கொழும்பு 6: பூங்காற்று பதிப்பகம், 59, 1/1, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

xii, *38 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18*x*13 சமீ.,* ISBN: *978-955-0700-05-9.*

*பதினைந்து இருபது வருடங்களுக்கு முற்பட்ட தனது எண்ணங்களை வெளிப்படுத்த எடுத்த ஒரு முயற்சியின் விளைவாகவே இந்நூல் உருவானதாகக் கூறும் அனிஸ்டஸ் ஜெயராஜா, திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 25இற்கும் மேற்பட்ட நூல்களை பல்வேறு விடயப்பரப்புகளிலும் எழுதியுள்ள இவரது "சின்னச் சின்னஎண்ணங்கள்" நூலை இவர் "ஒரு மசாலா மிக்ஸ்"என்று குறிப்பிட்டுள்ளார்.*

## 14877

**செ.கதிர்காமநாதன் படைப்புகள்.** *செ.கதிர்காமநாதன் (மூலம்), அ.சிவஞானசீலன், த.அஜந்தகுமார் (தொகுப்பாசிரியர்கள்). கனடா: தேடகம், இணை வெளியீடு, கரவெட்டி: கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், 1வது பதிப்பு, 2015.*

xix, *552 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 21*x*14.5 சமீ.,* ISBN: *978-955-7756-01-1.*

*செ.கதிர்காமநாதன் தனக்குரிய கோட்பாட்டுத் தளத்தில் நின்று கலை நேர்த்தி குன்றாமல் 1959 இலிருந்து தன் படைப்பாக்கங்களை எமக்கு வழங்கியவர். "கலையும் இலக்கியமும் மக்களுக்காக என்ற கோட்பாட்டை நான் தழுவி நிற்பவன். ஒடுக்கப்பட்ட மக்களது வாழ்க்கையின் பிரதிபலிப்புகளும் விளைவுகளுமே என் கதைகளின் உள்ளடக்கம். வாழ்க்கை தாங்கொணாது அழுத்திக் கொல்கின்ற சுமையாக ஏன் இருக்கின்றதென்பதைத் துருவி ஆராயும் உளப்பாங்கே எனது கதைகளின் ஊற்றுக் கண்கள்" என்று தனது எழுத்துக்கள் பற்றிப் பிரகடனம் செய்தவர். செ.க.வின் எழுத்துக்கள் துருத்திக்கொண்டு வெளியே தெரியாத நுண் உத்திகளால் ஆக்கப்பட்டவை. அவரது கதைகளின் பொருத்தமான தலைப்புகளும் கூட எளிதில் நினைவில் தங்கி நீண்டநாள் மனதில் நிலைகொள்பவை. கரவெட்டியின் பேச்சுமொழியே இவரது கதைகளின் உயிரோட்டமாக அமைகின்றது. இத்தொகுப்பில் செ.கதிர்காமநாதனின் சிறுகதைகள், மொழிபெயர்ப்புகள், பிற படைப்புகள் என்பவற்றுடன், கொட்டும் பனி, மூவர் கதைகள், நான் சாகமாட்டேன் ஆகிய நூல்களில் இடம்பெற்ற முன்னுரை, மதிப்புரை, என்னுரை, என்பனவும், பின்னிணைப்பில் ஒரு காலத்தைய கரவெட்டியின் பேச்சுமொழி ஆவணமாக அமையும் "வழக்குச்சொல் அகரமுதற் திரட்டு", அமரரின் "நினைவு மலர்" ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.*

**14878**

**வெற்றிக்கு வலிகள் தேவை: கவிதைகளும் கதைகளும்.** வள்ளியம்மை சுப்பிரமணியம். யாழ்ப்பாணம்: தேசிய கலை இலக்கியப் பேரவை, 62, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில், 1வது பதிப்பு, நவம்பர் 2019. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிரின்டர்ஸ், சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு).

xii, 119 பக்கம், விலை: ரூபா 200.00, அளவு: 20.5x14 சமீ.

சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி வள்ளியம்மை, ஈழத்தின் பொதுவுடைமைவாதியான கே.ஏ.சுப்பிரமணியம் அவர்களின் துணைவியாராவார். அரச நெசவு ஆசிரியராக கிராமங்கள் பலவற்றில் சேவையாற்றியுள்ள இவர் சில காலம் சிங்கப்பூரில் தனது மகனுடன் வாழ்ந்து வந்தவர். பின்னாளில் தாயகம் திரும்பித் தன் பூர்வமண்ணான சுழிபுரத்தில் வாழ்ந்து வருகின்றார். எண்பது வயதைத் தாண்டிய நிலையிலும் ஆர்வத்துடன் சமூக, இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றார். புரட்சிகரமான சமூக மாற்றத்தை அவாவும் போக்கு இவரது கதைகளிலும் கவிதைகளிலும் வெளிப்படுகின்றன. இந்நூலில் வள்ளியம்மையின் 67 கவிதைகளும், அரிவாளும் சம்மட்டியும் தாலி, ஜனாதிபதிக்கு சிங்களத்தில் கடிதம் ஆகிய இரண்டு கட்டுரைகளும், அம்மையாரின் பிள்ளைகள் வடித்த (சிறையிலிருந்து எம்மகன் எழுதிய திருமண வாழ்த்து, அம்மா) இரண்டு கவிதைகளும், பிரசவித்தாய், செத்துப்பிழைத்தாய், ஊகித்து உணர்ந்தாய், வளர்த்தெடுத்தாய், என் தொழிலைக் காத்து உன் தொழிலை இழந்தாய், அன்புடன் உணவளித்தாய், வீரமாய் எழுந்தாய், பாதை திறக்க வழிவகுத்தாய், உயிரைக் காத்தாய், உயிர் காக்கத் துணிந்தாய், பராமரித்தாய் ஆகிய தலைப்புகளிலான பதினொரு சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன. இந்நூல் அமரர் தோழர் கே.ஏ.சுப்பிரமணித்தின் மறைவின் முப்பதாவது ஆண்டு நினைவாக வெளியிடப்பட்டது.

## 894.8 (87) அங்கதம்/நகைச்சுவை தொகுப்பு

**14879**

**விகடனின் விளங்கா விளக்கங்கள்.** சி.க.அமிர்தஞானம், இரா.மகேந்திரன். திருக்கோணமலை: இரா.மகேந்திரராஜா, பிருந்தாவனம், 106, பிரதான வீதி, 1வது பதிப்பு, 2010. (திருக்கோணமலை: சி.சிவபாலன், அஸ்ரா பிரின்டர்ஸ்).

viii, 104 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 20.5x15 சமீ.

நகைச்சுவைக்கும் சிந்தனைக்கும் விருந்தாக அமையக்கூடிய சின்னஞ்சிறு விடயங்களை இந்நூல் வழங்குகின்றது. கடவுள், கொஞ்சம் என்பதின் பொருள், ஆசாரம், மறுபிறப்பு, இனப்பற்று, தேடுகிறோம், சோளம்பொரி, பாலியல் பலாத்காரம், அவரவர் பார்வை, அளவோடு இருந்தால் போதும், சான்ட் பேப்பர், பிஞ்சிலே பழுத்தது, சும்மா, தொழில்நுட்பம், அட்டகாசம், காதல், நடிப்பு, வேண்டாம் மரணபயம், வைத்தியம், வாய்மைக்கரசன் அரிச்சந்திரனா?, மதப்பற்று, வறுமையில் செம்மை, பயணம், இறந்தநாள், அவர்தான் இவர், கெஞ்சினால் மிஞ்சினால், ஊமையா என் பிள்ளை, மொழிப்பற்று, நம்பிக்கை, தானாக விழும்,

*கேட்ட கேள்வி பிழை, கடவுளின் பங்கு, முந்துவது யார்?, தமிழ், பழமொழிகள், ஆசிரியர், நம் மதங்கள், தோற்றங்கள், படைப்புக்கள் பலவிதம், பிறந்தநாள், சந்தேகம், தொலைக்காட்சி, ஐயோ இனி போவது எங்கே?, மண்ணுரிமை, பெற்றபிள்ளையும் வளர்த்த மரமும், கொடுக்கல் வாங்கல், பொறாமை, ஓய்வூதியம், பற்றுக்கள் ஆசைகள், கிரிக்கெற் ஆகிய 50 விடயங்களைப் பற்றிப் பேசும் இந் நூலில் இடையிடையே தத்துவக் கருத்துக்களும், ஆன்றோர் பொன்மொழிகளும், குட்டிக்கதைகளும் செருகப்பட்டுள்ளன. சமூக, சமய விழுமியங்களையும், கலாச்சாரப் பண்புகளையும் போதிப்பதாக இவை அமைகின்றன. நூலாசிரியர் அமிர்தஞானம், தினக்குரல் பத்திரிகையின் பென்சனியர் பேரம்பலம் என்ற நகைச்சுவை கேலிச்சித்திரத்தின் வாயிலாகவும், பாப்பாக்களுக்குப் பலகாரம், பாட்டும் பதமும் போன்ற தொடர்களின் மூலமாகவும் நன்கு அறியப்பட்டவர்.*

# 900 புவியியல், வரலாறுகள்

## 909 நாகரீகங்கள்

### 14880

**வாழகம், பொருளாதாரம், சமூகம்.** *சீ. டரில் போட் (ஆங்கில மூலம்). கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், "சிறிமதி பாயா", 58, சேர் ஏர்னெஸ்ட் த சில்வா வீதி, 1வது பதிப்பு, 1967. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).*

xviii, *576 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14 சமீ.*

*மக்கட் பரம்பியலுக்கான ஓர் புவியியல் முறை அறிமுகமாக, பிரித்தானிய பல்கலைக்கழக அறிஞர்* C.Daryll Forde *அவர்கள் எழுதி லண்டன்* Methuen and Co. *வெளியிட்ட* Habitat, Economy and Society *என்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். இதனுள் ஐரோப்பியப் பழங்குடிமக்களின் ஆதிவாழ்க்கை விளக்கம் உண்டு. இந்நூல் நான்கு பிரதான பிரிவுகளைக் கொண்டது. முதற் பிரிவில் பற்றை மனிதனும் எஸ்கிமோவும், வேட்டையாடியும் மீன் பிடித்தும் வாழ்ந்த விதம் கூறப்படுகின்றது. போறோ, யோருபா ஆதிய பழங்குடியினர் வேளாண்மை வாழ்க்கை நடாத்திய முறைமை இரண்டாம் பிரிவில் கூறப்படுகின்றது. மாசை, கசாக்கர் ஆதியோர் மந்தை மேய்த்து வாழ்ந்த முறைமை மூன்றாம் பிரிவிற் கூறப்படுகின்றது. நான்காம் பிரிவில் இம்மூன்று பிரிவினரதும் உணவு பேணல், சிக்கன வாழ்க்கை முறைமை என்பன பற்றிய பொதுவான விளக்கங்கள் கூறப்படுகின்றன. இவ்வாங்கில மூலநூல், 1934இல் வெளிவந்தது. அதன்பின் 13 முறை மீள்பதிப்பிற்குள்ளாகியிருந்தது. இந்நூல் 13ஆவது பதிப்பின் தமிழாக்கமாகும். பல்கலைக்கழகங்களின் புவியியல்துறை மாணவர்களுக்கும் மானிடவியல்துறை மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23640).*

### 14881

**வியத்தகு புராதன விஞ்ஞானிகள்: மாயன்கள்-நாகர்கள்.** செல்வத்துரை குருபாதம். கொழும்பு 11: பூபாலசிங்கம் பதிப்பகம், 202, 340, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 2018. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xviii, (10), 162 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-955-3491-00-8.

மாயன்கள்-நாகர்களைப் பற்றிய ஓர் அறிமுகம், மாயன் இன அடையாளங்களும் குடும்ப அமைப்பும், வனாந்தரங்கள் வெளிப்படுத்திய மாயன் அறிவியல், அமெரிக்காவில் இந்திய விவசாயிகள் என அழைக்கப்பட்டவர்கள் நாகர்களா?, வரலாறு கூறும் மாயன் வரலாறு, மாயன்கள் நாகர்களதும் இலங்கை-இந்தியத் தொடர்பு, ஆச்சரியமான தகவல்கள், மாயன்களின் ஆக்கத்திறன் கலாச்சாரம், மிகப் புராதன காலத்தில் ஆடையணிந்த மாயன்கள், கை சைகைகளின் பாவனைக் காலத்தில் மொழி மூலம் தொடர்பு கொண்ட மாயன்கள், கணிதத்தின் முன்னோடிகள் பூச்சியம், தசம தானத்தின் அறிமுகம், வானில் ஆய்வு மையம், நிகழ்வுகளின் கால ஒழுங்கும் கலண்டர் முறையும், கட்டிடக் கலையும் கல்விக் கூடங்களும், தென் அமெரிக்காவில் புராதன இந்து ஆலயங்கள், உலகப் புகழ் பிரமிட், செறமிக்ஸ்சும் தொல்லியல் சின்னங்களும், பந்து கண்டுபிடிப்பும் பந்து விளையாட்டும், கண்டுபிடிப்பகள், போக்குவரத்துத் தொழில்நுட்பம், மதம், ஆட்சிமுறையும் அதிகாரமும், உள்நாட்டு யுத்தம், மாயப்பன் ஒன்றியம், இந்தியர்களது நாகரிகத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்ட கொலம்பஸ், இந்தியர்களது பிரதேசத்தை கைப்பற்றத் தீர்மானம், தென் அமெரிக்காவிற்கு நாகரிகத்தை அறிமுகப்படுத்தியவர்கள் இந்தியரே, கற்கள் கூறும் இரகசியங்கள், முடிவுரை ஆகிய 28 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பன்முகப் புலமை கொண்ட ஆய்வாளர் எஸ்.குருபாதம் இலங்கையில் யாழ்ப்பாணத்துக் கல்வியாளர்கள் மத்தியில் பத்திரிகை ஆசிரியராக, அரசியல் ஆய்வாளராகத் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டவர். பின்னாளில் புலம்பெயர்ந்து கனடாவில் ஒன்டாரியோ மாநிலத்தில் வாழ்ந்த வேளையில் ஆன்மீகம், வரலாறு, ஆசியப் பண்பாடு, நாகரீகம் தொடர்பில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவராகத் தனது புலமைத்துவத்தை விரிவாக்கி இருப்பவர்.

## 910 பொதுப் புவியியல்

### 14882

**கலைச்சொற்கள்: நான்காம் பகுதி: புவியியற் சொற்றொகுதி.** சொல்லாய்ந்த குழுவினர். கொழும்பு 7: அரசகரும மொழி அலுவல் பகுதி, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 421, புல்லர்ஸ் வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1956. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).

(4), 120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x15.5 சமீ.

அரசகரும மொழி அலுவல் பகுதியினரின் கல்விப் பிரிவினரால் வெளியிடப்பெற்றுள்ள இக்கலைச்சொற்றொகுதியின் தயாரிப்பில் ஈடுபட்ட சொல்லாய்ந்த குழுவில் கலாநிதி கா.குலரத்தினம், திரு. ஆ.பொ.கந்தசாமி, திரு. சி.நடராசர், பண்டிதர் கா.பொ.இரத்தினம், கலாநிதி வ.பொன்னையா, திரு. அ.வி. மயில்வாகனன் ஆகியோர் பணியாற்றியிருந்தனர். பொதுத் தகுதிப் பத்திரத் தேர்வின் புவியியல் பாடத் தேவைக்கு வேண்டிய கலைச்சொற்கள் யாவும் இங்கு இடம்பெற்றுள்ளன. தேவைப்படுமிடத்து பிறமொழிச் சொற்களுக்கு தமிழுருவம் கொடுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18215).

## 910.01 புவியியல் பாடநூல்கள்

### 14883

**புவியியல்: விருப்பத்துக்குரிய பாடம் (தரம்10, 11இற்குரியது).** மனோ சிவசுப்பிரமணியம், சிவா கிருஷ்ணமூர்த்தி. கொழும்பு 4: சிவா கிருஷ்ணமூர்த்தி, கொழும்பு இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (கொழும்பு 06: பரணன் அசோஷியேட்ஸ், 403, 1/1, காலி வீதி).

(6), 140 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x13.5 சமீ.

புவி, புவியின் அமைப்பு, இலங்கை, இலங்கையின் நிலத்தோற்றம், காலநில வலயங்கள், மண்ணும் மண் வகைகளும், இயற்கைத் தாவரங்கள், இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள் (விவசாயம், மீன்பிடி), பான வகை (தேயிலை), எற்றுமதிப் பயிர்கள் (இறப்பர், தென்னை), தோட்ட உற்பத்திகள் (காய்கறி, கோழி வளர்ப்பு), இலங்கையின் கைத்தொழில்கள், பிரதான கைத்தொழில் (சுரங்கம் அறுக்கும் கைத்தொழில், உற்பத்திக் கைத்தொழில், சேவைக் கைத்தொழில்), இலங்கையின் அபிவிருத்தி செயற்திட்டங்கள், மகாவலி அபிவிருத்தித் திட்டம், தென் இலங்கை அபிவிருத்தித் திட்டம், இலங்கையின் சூழல் பிரச்சினைகள், சூழல் பாதுகாப்பு, பௌதிக அம்சங்கள், கழிமுகம், வெள்ளச் சமவெளி, மேட்டுநிலம், மலை, சமவெளி, பொங்குமுகம், நீர் வடிகால் முறையும் ஆற்றுத் தொகுதிகளும், பாறைகளும் மண்ணும், காலநிலை, இயற்கைத் தாவரம், உலகின் பொருளாதார நடவடிக்கைகள், கைத்தொழில்கள், சனத்தொகை, அண்மைக்கால போக்குகள், பிரச்சினைகள், தீர்வுகள், செய்முறைப் புவியியல் ஆகிய பாடங்கள் இந்நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இறுதியில் 2001ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சை வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23729).

## 910. (1) அபிவிருத்திப் புவியியல்

### 14884

**இலங்கையில் தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தின் மாற்றுச் சக்தி வளங்கள்: ஒரு புவியியல் நோக்கு.** *இரா.சிவச்சந்திரன். யாழ்ப்பாணம்: அகிலம் வெளியீடு, இல. 7. ரட்ணம் ஒழுங்கை, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2011. (யாழ்ப்பாணம்: கங்கை பிரின்டர்ஸ்).*

*30 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 50.00, அளவு: 20x14.5 சமீ.*

*தமிழர் இலங்கையில் ஒரு தனித் தேசிய இனம். அவ்வினத்துக்கு சுயநிர்ணய உரிமை உண்டு. அவர்களுக்கொரு பாரம்பரியத் தாயகம் உண்டு எனவே எமது பிரதேசத்தை நாமே அபிவிருத்தி செய்யவேண்டிய பொறுப்பும் கடமைப்பாடும் நம்மவர்களுக்கு-குறிப்பாக- அறிவுப் புலத்தில் உள்ளோர்க்கு உண்டு. 18,323 சதுர கிலோமீற்றர் (7157 சதுர மைல்) பரப்பளவு கொண்ட வடகீழ் மாகாணத்தை தன்நிறைவானதும் நிலைத்து நிற்கத்தக்கதுமான அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் பல்வேறு கூறுகளில் மாற்றுச் சக்தி வளம் பற்றி இவ்வாய்வு பேசுகின்றது. இவ்வாய்வின் நோக்கம் நிறைவான மாற்றுச் சக்தி வளம் (பசுமைச் சக்தி வளம்) எமது பிரதேசத்தில் உண்டு என்பதை நிரூபிப்பதும் அது பற்றிய சிந்தனையை பல்வேறு துறைசார் புலமையாளர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏற்படுத்துவதுமாகும்.*

## 911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள்

### 14885

**கேரள டயரீஸ்-1: வேர் தேடுவோம்.** *அருளினியன். சென்னை:* Stoicdale Publishers, *1வது பதிப்பு, ஓகஸ்ட் 2017. (சென்னை 600042: ஜீவா பதிப்பகம், வேளாச்சேரி).*

*162 பக்கம், விலை: ரூபா 450., இந்திய ரூபா 230., அளவு: 22x14.5 சமீ.*

*யாழ்ப்பாணம், குப்பிழானைப் பிறப்பிடமாகக் கொண்ட அருளினியன் தன் ஆரம்பக் கல்வியை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும், இடைநிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியை பெங்களூர் பல்கலைக் கழகத்திலும் பெற்றவர். "ஆனந்த விகடன்" மாணவப் பத்திரிகையாளராக முதலில் அறிமுகமான இவர் இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் "சினிமா எக்ஸ்பிரஸ்", "தினமணி" ஆகியவற்றின் உதவி ஆசிரியராகவும், நிருபராகவும் பணியாற்றியவர். தற்போது சுயாதீன பத்திரிகையாளராகவும், பயணத்துறை ஊடகவியலாளராகவும், தமிழ் சினிமாவில் திரைக்கதைகளிலும் பங்களித்திருக்கிறார். கேரளத்தின் அறியாத பக்கங்களோடு அழைத்து செல்கிறார் அருளினியன். பயணக்கட்டுரைகளின் புதிய வரைவிலக்கணம் இந்த கேரள டயரீஸ். இந்நூலில் இவர் எழுதிய தளிப்பறம்பு நம்பூதிரியும் பின்னெ ஞானும், மணிப்பிரவாளமும் இலங்கைத் தமிழும், ஈழவர் என்ற ஈழத்தவர், முருகனைத் தொலைத்த கதை, காவுகள் என்ற கோயில்காடுகள், வேர் தேடி, வெள்ளாளர்கள் யாழ்ப்பாணத்தின் துயரம், நாவலரும் சைவ வெள்ளாள*

மேலாதிக்கமும், வீரத்தை இழந்த கதை, தேசவழமை என்ற வெள்ளாளச் சட்டம், பணியாக்களும் குறிச்சியர்களும், கொட்டியூர் மர்மங்கள், கண்ணகித் தெய்வமும் கண்டிப் பெரஹராவும், களரி, கதகளியும் மத ஒருமைப்பாடும், பாலாறும் பாவலி ஆறும், முத்தப்பனும் தெய்யமும் கள்ளும் கருவாடும், தட்சனின் தாடி, மாட்டிறைச்சி அரசியல், மிருகபலி ஆரியர், திலீப் ஏட்டனும் டிங்கொயிஸ்டுகளும், Buddy Love ஆகிய 22 பலவினக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

## 14886

**சுவிற்சர்லாந்து.** *ஸ்ரீலால் கல்தேரா. கொழும்பு 5: எஸ்.எல்.எஸ். அசோசியேட்ஸ், 33/30, டீ.டீ.எம்.கொலம்பகே மாவத்தை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2002. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).*

*(6), 76 பக்கம், வரைபடங்கள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ., ISBN: 955-9048-16-3.*

*சுவிட்சர்லாந்து நாடு பற்றிய வரலாறு, புவியியல் மற்றும் பயணிகளுக்கான தகவல்கள் முதல் இருபது பக்கங்களில் இடம்பெற்றுள்ளன. பக்கம் 21-76 வரை சுவிட்சர்லாந்து தொடர்பான புகைப்படக் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. சுவிட்சர்லாந்துக்குப் பயணம் செய்பவர்களுக்கேற்ற கைந்நூல். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48410).*

## 14887

**புனித பூமியில் பதிந்த சுவடுகள்.** *எம்.ஐ.எம்.அப்துல் லத்தீப். புத்தளம்: புத்தளம் தமிழ்மொழி எழுத்தாளர் சங்கம், இல. 19, மௌலவி புவாட் (Fuard) ஒழுங்கை, 14வது ஒழுங்கை, மரிக்கார் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2015. (புத்தளம்: மில்கொம் சிஸ்டம், இல. 01, ஜனசவிய கொம்பிளெக்ஸ், குருநாகலை வீதி).*

*67 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-4535-01-5.*

*புதிதாக ஹஜ், உம்றா புனிதப் பயணங்களை மேற்கொள்ளத் தயாராகவுள்ள இஸ்லாமியருக்கு ஆசிரியரின் அனுபவபூர்வமான ஆலோசனைகள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. கடவுச்சீட்டு தவறியதால், ஹறம்களின் வாசல் தவறியதால், அல்லாஹ் நிரப்பமாகத் தந்துள்ளதால், லிப்ட் பயணங்களின் போது, பதவிச் செருக்கினால், ஒவ்வா வார்த்தைகளால், அடையாளத்தை எடுத்துச் செல்லாமையால், அறிவுரைகளை அலட்சியம் செய்ததால், சமையல் பிரச்சினைகள், மஹ்ஷரின் ஒரு துளியின் துளியை மினாவில் கண்டோம், நாவைப் பேணுக-நபிமொழிகள் ஆகிய பதினொரு அத்தியாயங்களில் புனித யாத்திரையின்போது அவதானித்துக் கைக்கொள்ளவேண்டிய நடைமுறைகள் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் எம்.ஐ.எம்.அப்துல் லத்தீப் சமூகக் கல்வி, வரலாறு பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65127).*

## 14888

**யாழ் மீட்டிய கண்கள் (பயணக் கட்டுரை).** ராஜகவி ராகில். தமிழ்நாடு: அகநாழிகை பதிப்பகம், 26, ஜெயராமன் தெரு, கோகுலபுரம், செங்கல்பட்டு 603001, 1வது பதிப்பு, ஜுன் 2016. (சென்னை 600 005: கணபதி என்டர்பிரைசஸ்)

140 பக்கம், விலை: ரூபா 140., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-93-84921-12-5.

யாழ்ப்பாணத்தை நோக்கிய ராஜகவி ராகிலின் வழித்தடப் பயணத்தின் மூலம் இதுவரையும் நாம் பார்க்கத் தவறிய காட்சிகளை எம்கண்முன் காட்சிப்படுத்தும் பணியைச் செய்திருக்கிறார். கலை, கலாசாரம், இயற்கை வளம் நிறைந்த மண்ணில் ஏன் போர்வாடை வீசியது? அந்த வாடைக்காற்றால் இன்று வலிசுமப்போர் எத்தனை பேர்? போன்ற எண்ணங்களை இவருடைய அனுபவங்கள் பேசுகின்றன. மேலும் யாழ் மண்ணின் பாரம்பரியங்களையும் மன்னர்கால நினைவுச் சின்னங்களையும் இப்பயணத்தின் மூலம் ஞாபகப்படுத்தியிருக்கிறார். ஒரு பயணக்கதை போர் வலியைச் சுமந்து வந்திருக்கிறது. எழுத்தாளர் மணிமேகலையின் இரண்டு நூல்களின் வெளியீட்டு விழாவுக்காக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய தன் குடும்ப உறவுகளுடனான மகிழுந்துப் பயணமும், அப்பயணத்தின் போது யாழ் மண்ணின் மாண்புகளையும், அம்மண்ணின் பெருமைகளையும், அது சுமந்துநிற்கும் துயரங்களையும் வலிகளையும் கவிஞர் ஆங்காங்கே பதிவுசெய்கின்றார். இது கவிதைநடையில் எழுதப்பட்ட ஒரு பயணத்தொடர். கிழக்கிலங்கையின் நிந்தவூர் பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ராகில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். 12 கவிதை நூல்களையும், சிறுகதைத் தொகுதி ஒன்றையும் மிட்டாய் மலை இழுத்துச் செல்லும் எறும்பு என்ற நாவலையும் வெளியிட்டுள்ள இவரது முதலாவது பயண இலக்கியம் இதுவாகும். ஆசிரியர் தற்போது சீசெல்ஸ் நாட்டில் வசித்துவருகிறார்.

**மேலும் பார்க்க: சர்வதேச கலைப்பாலம்-2016. 14510**

# 912 தேசப்படங்கள்

## 14889

**இலங்கை தேசப்படத் தொகுதி: முதலாம் பாகம்.** இலங்கை நில அளவைத் திணைக்களம். கொழும்பு 5: இலங்கை நில அளவைத் திணைக்களம், இல. 150, கிருல்ல வீதி, நாரஹேன்பிட்டிய, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

xii, 172 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 43x31.5 சமீ., ISBN: 978-955-9059-07-3.

1988இல் இத்தேசப்படத் தொகுதியின் ஆங்கிலப் பதிப்பு முதலில் வெளியாயிற்று. ஓகஸ்ட் 2008இல் இரண்டாம் பதிப்பு ஆங்கிலத்தில் வெளியானது. பின்னர் 2013இல் 2ஆவது ஆங்கிலப் பதிப்பின் தமிழாக்கம் முதலாவது பதிப்பாக இரண்டு பாகங்களில் வெளியிடப்பட்டது. அப்பதிப்பின் முதலாவது பாகமே இந்நூலாகும்.

நூலில் இரண்டாம் பதிப்பு தமிழாக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண தேசப்படத் தொகுதியாகவில்லாமல் இது, தேசத்தின் பல்வகைமை சார்ந்த தகவல்களை தகுந்த கோணங்களில் வழங்க முயன்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65512).

### 14890

**இலங்கை தேசப்படத் தொகுதி: இரண்டாம் பாகம்.** இலங்கை நில அளவைத் திணைக்களம். கொழும்பு 5: இலங்கை நில அளவைத் திணைக்களம், இல. 150, கிருல்ல வீதி, நாரஹேன்பிட்டிய, 1வது பதிப்பு, நவம்பர் 2013. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

xii, 161 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 43x31.5 சமீ., ISBN: 978-955-9059-08-0.

1988இல் இத்தேசப்படத் தொகுதியின் ஆங்கிலப் பதிப்பு முதலில் வெளியாயிற்று. ஓகஸ்ட் 2008இல் இரண்டாம் பதிப்பு ஆங்கிலத்தில் வெளியானது. பின்னர் 2013இல் 2ஆவது ஆங்கிலப் பதிப்பின் தமிழாக்கம் முதலாவது பதிப்பாக இரண்டு பாகங்களில் வெளியிடப்பட்டது. அப்பதிப்பின் இரண்டாவது பாகம் இந் நூலாகும். நூலில் இரண்டாம் பதிப்பு தமிழாக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண தேசப்படத் தொகுதியாகவில்லாமல் இது, தேசத்தின் பல்வகைமை சார்ந்த தகவல்களை தகுந்த கோணங்களில் வழங்க முயன்றுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65513).

### 14891

**இலங்கை தேசப்படத் தொகுதி: பாடசாலை வெளியீடு.** ஆர்.பீ. பீரிஸ் (பிரதான தொகுப்பாசிரியர்). கொழும்பு 5: இலங்கை நில அளவைத் திணைக்களம், இல. 150, கிருல்ல வீதி, நாரஹேன்பிட்டிய, 2வது பதிப்பு, 2016, 1வது பதிப்பு, நவம்பர் 2013. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

viii, 209 பக்கம், வரைபடங்கள், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x21 சமீ., ISBN: 978-955-9059-12-7.

இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட இலங்கைத் தேசப்படத் தொகுதியின் பாடசாலைப் பதிப்பு இது. இரு முக்கிய நோக்கங்களுக்கு இத்தொகுதி முன்னுரிமை வழங்குகின்றது. தற்போது பாடசாலைகளில் போதிக்கப்பட்டுவரும் 6 முதல் 13 வரையிலான தரங்களுக்குரிய பாட விதானங்களிலுள்ள பல்வேறு விடயப் பகுதிகளுக்கும் பொருத்தமான தகவல்கள், வரைபடங்கள், அட்டவணைகள், பட உருக்கள் போன்றவற்றைத் தேர்ந்தெடுப்பது முதலாவதாகும். முக்கியமாக புவியியல் பாடத்திற்கு மேலதிகமாக வரலாறு, பிரஜைகள் கல்வி, விஞ்ஞானம், விவசாயம், சித்திரம், அரசியல், கலை மற்றும் பொருளியல் போன்ற பாடங்களும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இந்த நோக்கத்தினை ஈடுசெய்யும் வகையில் இந்நூலில் அமைவிட வரைபடங்கள்,

இலங்கையின் வரைபடங்கள், பௌதிக சூழலும் உயிரியற் சூழலும், தொல்பொருளியலும் கலைகளும், குடித்தொகை, விவசாயம், போக்குவரத்து சக்தி மற்றும் கைத்தொழில், வர்த்தகம், பொருளாதாரம், அரசாங்கம்-நிர்வாகம் மற்றும் நிதி, சமூக நிலைமைகள், கல்வியும் பயிற்சியும் ஆகிய 12 பிரிவுகளின் கீழ் தேசப்பட விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

## 920.01 துறைசாரா வாழ்க்கை வரலாறுகள்

### 14892

**இந்துச் சுடர்கள்.** வியாச கல்யாணசுந்தரம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம், Youth League for Santhana Dharmic Perception, 3, Ridgeway Place, 1வது பதிப்பு, மே 2003. (கொழும்பு 13: Sharp Graphics Pvt. Ltd.).

192 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29x12 சமீ.

இது, இந்து சமய விவகார அமைச்சினால் 2003இல் வெகு சிறப்பாக ஒழுங்குசெய்யப்பட்டிருந்த இரண்டாவது உலக இந்து மகாநாட்டை கௌரவிக்கும் முகமாக சனாதன தர்ம யுவ விழிப்புணர்ச்சிக் கழகம், சங்கநாதம் சஞ்சிகை, ஆரியபட்டர் பாலமந்திர் ஆகியவற்றினால் வெளியிடப்பட்டுள்ள யார் எவர் கைந்நூலாகும். இதில் நாயன்மார்கள், ஈழத்துக் கல்விமான்கள், சித்தர்களும் சமாதித் தலங்களும், நீதித்துறை சார்ந்தோர், அந்தணர்கள், இசை மேதைகள், இலங்கையில் வெளிவந்த இந்து சஞ்சிகைகள், வேதபுராண வைஷ்ணவ பரம்பரை, ரிஷிகள்-முனிவர்கள்-துறவிகள், இந்தியத் துறவிகள், நுண்ணறிவாளர்கள், சமய சீர்திருத்தவாதிகள், அரசர்கள், விஞ்ஞானிகள், அரசியல் பிரமுகர்கள், இலக்கிய அகராதிகள், ஈழத்து ஆய்வறிஞர்கள், இலங்கைப் பெரியார்கள், வணக்கத்துக்குரிய பெண்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் பல்வேறு முக்கிய மனிதர்கள் பற்றிய விபரக்கோவையாக இது அமைகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 055002).

### 14893

**ஏழாலைக் கிராமத்தின் நவமணிகள்: ஏழாலைத் தாய் பெற்றெடுத்த ஒன்பதின்மரின் வாழ்க்கை வரலாறும் சாதனைகளும்.** மு.இந்திராணி. யாழ்ப்பாணம்: ஆத்மஜோதி தியான மணிமண்டபம், ஏழாலை, 1வது பதிப்பு, 2012. (கோண்டாவில்: சிவரஞ்சனம் ஓப்செட் பிரின்ரேர்ஸ், பலாலி வீதி).

vi, 140 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 500., அளவு: 25x18 சமீ.

நவமணிகள், நவமணிகளைப் பெற்றெடுத்த ஏழாலை, இராவ்பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்கள், சித்தாந்த பேரறிஞர் ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள், சித்தவைத்திய மூதறிஞர் ஐ.பேரம்பலம் அவர்கள், திரு. சி.முருகேசு உபாத்தியாயர், சித்தாந்த வித்தகர் மு.ஞானப்பிரகாசம் அவர்கள், ஈழத்துச் சிறுகதை முன்னோடி சி.வைத்திலிங்கம் அவர்கள், ஈழத்து தமிழ்ச் சிறுகதை மூலவர் ஆக்க இலக்கிய கர்த்தா இலங்கையர்கோன் அவர்கள், இலக்கிய கலாநிதி பண்டிதர்

மு.கந்தையா அவர்கள், ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டுள்ள இந்நூலில் ஏழாலைக் கிராமத்தில் பிறந்து அந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்துச் சென்ற சி.வை.தாமோதரம்பிள்ளை (1832-1901), ஐயம்பிள்ளை பொன்னையா (1867-1948), ஐயம்பிள்ளை பேரம்பலம் (1889-1990), சி.முருகேசு உபாத்தியாயர் (1891-1981), மு.ஞானப்பிரகாசம் (1911-1996), சி.வைத்திலிங்கம் (1911-1991), இலங்கையர்கோன் (1915-1961), பண்டிதர் மு.கந்தையா (1917-2001), ஆத்மஜோதி நா.முத்தையா (1918-1995) ஆகிய ஒன்பது பிரமுகர்களின் வாழ்வும் பணிகளும் இக்கட்டுரைகளில் தேடிப் பதிவு செய்யப்பட்டுள்ளன. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21087).

### 14894

**கற்பகதேவி: பெருங்கதையிலோர் சிறுகதை.** ந.மயூரரூபன். பருத்தித்துறை: எழினி வெளியீட்டகம், 1வது பதிப்பு, சித்திரை 2017. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

60 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

அமரர் திருமதி கற்பகதேவி நவரத்தினம் (28.4.1945-22.3.2017) அவர்களின் நினைவஞ்சலி மலர். "உடலிலிருந்து உயிர் பிரியும் சம்பவம் மட்டுமல்ல சாவு, அந்தச் சாவுக்கு முன் உணர்வு சூழ்ந்த வாழ்க்கை ஒன்று இருந்தது என்பதை நாம் சில கணங்களில் கடந்து விடுகிறோம். அந்த வாழ்க்கை ஒவ்வொருவருக்கும் தனித்துவமானது. உண்மையில் சாவின் பின்தான் மனங்கள் விழித்துக்கொள்ளும். அம்மா உயிரோடிருக்கும்போது அம்மாவைப் பற்றி யோசித்திருக்கிறேனா என்கிற கேள்வி என்னைக் குடைகிறது. அம்மாவுடன் ஆறுதலாக இருந்து கதைத்திருக்கிறேனா? அம்மாவின் தனிமையை, மன உளைச்சலை கண்டு கொண்டிருக்கிறேனா? பிள்ளைகளை அம்மாவோடு இன்னும் கொஞ்சம் பொழுது போக்க விட்டிருக்கலாம். மனது அழுந்துகிறது. எல்லாப் பிள்ளைகளும் இப்படித்தான் நினைப்பார்களா? வெந்து போகிறது மனம். இப்படி ஆயிரம் குற்றவுணர்வுக் கேள்விகள் முட்டிமோதிக் கண்ணீரால் நிறைகின்றன. எல்லோருடைய அம்மாவும் அவரவர்க்கு தனித்துவமானவர்கள். எனது அம்மாவின் ஐந்து பிள்ளைகள் சார்பாகவும் அப்பா சார்பாகவும் நான் இந்தப் படையலைச் செய்கிறேன் " (ந.மயூரரூபன்- முன்னுரையில்).

### 14895

**கிழக்கிலங்கை மண்ணில் புகழ்பூத்த மைந்தர்கள்: 2வது பகுதி.** க.செபரத்தினம் (தொகுப்பாசிரியர்), க.தா.செல்வராசகோபால் (பதிப்பாசிரியர்). கனடா: நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம், # 3, 1292, Sherwood Mills, Mississauga, Ontario, L5V 1S6, 1வது பதிப்பு, சித்திரை 2003. (கனடா: ரிப்ளெக்ஸ் அச்சகம், # 3, 1292, Sherwood Mills, Mississauga, Ontario, L5V 1S6).

xliv, 200 பக்கம், புகைப்படங்கள், விலை: கனேடிய டாலர் 25.00, அளவு: 21x14 சமீ.

கிழக்கிலங்கை மண்ணின் புகழ்பூத்த மைந்தர்கள், துறவற நெறியில் நின்று கிழக்கிலங்கை மண்ணின் உயர்ச்சிக்கு உரமான உத்தமர்கள், சிலை வடிவம் பெற்ற செம்மல்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கலாநிதிகள், புகழ்பூத்த மூத்த எழுத்தாளர்கள், அரசியற் தலைவர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள், மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவஞ் செய்திட..., சமய சமூகத் தொண்டர்கள், தமிழ் மொழி வளர்க்கும் புலவர்கள்-வித்துவான்கள்-பண்டிதர்கள், கவிஞர்கள், படைப்பாளிகள்-கவிஞர்கள்-எழுத்தாளர்கள், இசைக் கலைஞர்கள்-ஓவிய சிற்பக் கலைஞர்கள், தமிழ் மொழி வளர்க்கும் இஸ்லாமியத் தமிழறிஞர்கள், பின்னிணைப்பு-தமிழறிஞர்கள், கடல் கடந்து தமிழ் வளர்க்கும் தமிழ் மைந்தர்கள், கிழக்கிலங்கையின் படைப்பாளிகளின் நூல் அகரவரிசைத் தொடர்ச்சி ஆகிய 17 அத்தியாயங்களில் இந்நூல் எழுதித் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3193).

## 14896

**குமாரசாமி குமாரதேவன்: வாசிப்பும் அறிதலும்.** கு.குமாரதேவன் நினைவுக் குழு. யாழ்ப்பாணம்: விதை குழுமம், 1வது பதிப்பு, டிசம்பர் 2019. (அச்சக விபரம் தரப்படவில்லை).

76 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

குமாரசாமி குமாரதேவன் (10.12.1960-15.11.2019) சமகாலத்தின் மிக முக்கியமான வாசகராகவும் நுண்ணுணர்வுடன் கூடிய விமர்சகராகவும் மிகக் கூர்மையான நினைவாற்றலுடன் அரசியல், இலக்கியம், சமூகம், திரைப்படம் என்று பல்வேறு தளங்களிலும் ஆழ்ந்தகன்ற அறிவும் புலமையும் கொண்டவருமாக எம்மிடையே வாழ்ந்தவர். காரைநகரிலுள்ள கோவளத்தில் பிறந்த குமாரதேவன் அவர்கள் தனது சிறுவயதிலிருந்தே தீவிரமான வாசிப்பிலும் தேடலிலுமாக தன் வாழ்வை கட்டமைத்துகொண்டவர். ஈழத்தில் நடந்த பல்வேறு சமூக, அரசியல், இலக்கியக் கூட்டங்களிலும் உரையாடல்களிலும் பங்கேற்று வந்துள்ள இவர் தன் வாசிப் பினாலும், புலமையினாலும், நேர்படப் பேசுகின்ற பண்பினாலும் அனைவராலும் மதிக்கப்பட்டுவந்தவர். விதை குழுமம், தொன்ம யாத்திரை, புதிய சொல் போன்ற ஊடக, இலக்கிய, சமூக அமைப்புகளில் ஆரம்பம் முதலே ஈடுபாட்டுடன் பயணித்துவந்தவர். குமாரதேவன் பல்வேறு சந்தர்ப்பங்களில் எமக்கான ஆலோசகராக இருந்தும் நெறிப்படுத்தியிருக்கின்றார். 15.12.2019 அன்று நிகழ்ந்த அவரது அஞ்சலி நிகழ்வின்போது நாவலர் வீதியில் உள்ள, தியாகி அறக்கொடை நிலைய (TCT) மண்டபத்தில் இந்நூல் வெளியிடப்பட்டது.

## 14897

**தனி ஈஸ்வரம்: க.வை.தனேஸ்வரன் நினைவு மலர்.** மகவம் கலைவட்டம் (தொகுப்பாசிரியர்கள்). கோண்டாவில்: ஊரெழு, க.வை.தனேஸ்வரன் நினைவுக்

குழு, மகவம் கலை வட்டம், 1வது பதிப்பு, ஜனவரி 2005. (கொழும்பு: லங்கா பப்ளிஷிங் ஹவுஸ், திலக பிரஸ், 257, டாம் வீதி).

viii, 82 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

அமரத்துவம் அடைந்த திரு.க.வை. தனேஸ்வரன் (04.12.1932-26.12.2004) அவர்களின் வாழ்க்கை வரலாறு உள்ளிட்ட நினைவஞ்சலிகள், அஞ்சலிப்பாக்கள் ஆகியவற்றின் தொகுப்பு. உடன் பிறப்புக்களின் உள்ளக் குமுறல்கள் உயிர் உள்ளவரையும் எங்களுக்கு அண்ணாவே (கவிஞர் வி.கந்தவனம்), இவனும் ஒரு எட்டயபுரத்தான், கடல் வந்து முத்தெடுத்த கதை இது, அறிவிப்புக்கலை உலகில் அரை நூற்றாண்டு கோலோச்சிய கோமகன் (வேல் அமுதன்), நீங்கா நினைவலைகள் (அநு.வை.நாகராஜன்), கண்களை மூடித் தேடுகிறோம், ஆத்மா அழிவதில்லை, காற்றுடன் கலந்த கலங்கரை விளக்கு க.வை. தனேஸ்வரன் ஊரெழு அழகிய சிற்றூர் (ஆக்கம்- க.வை.தனேஸ்வரன்), நிமிர்ந்த நெஞ்சுடையார் (சோ.தேவராஜா), நெஞ்சக் கோவில் (கவிஞர் மாவை வரோதயன்), திரு.க.வை.தனேஸ்வரன் (சி.தங்கராசா குடும்பம்), Kandiah Vaithilingam Thaneswaran, என் நினைவலைகளில் தனேஸ்வரன் மாஸ்டர் (அ.கனகசூரியர்), நினைவுகளில் நிலைத்து நிற்கும் க.வை.த (செ.சக்திதரன்), உடைந்தனன் உடைகின்றேன் எந்தாய் (லோகதாசன் குடும்பத்தினர்), நெஞ்சில் நிறைந்த அந்த இனிய நாட்கள் (க.தெய்வகுலரத்தினம்), திரு.க.வை. தனேஸ்வரன் நினைவிலிருந்து ஓர் குறிப்பு (செ.நரேந்திரன்), பேச்சுக் கலையின் விந்தை, கலைதுறை நாயகன் க.வை.தனேஸ்வரனுக்கு கண்ணீர் அஞ்சலி (த.சிவதரன்), மாந்தருக்குள் மாசற்ற மாணிக்கமே மறைந்து விட்டீரா (அ.தம்பித்துரை), யாழ்ப்பாண பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் அவர்களின் அனுதாபச் செய்தி, உலகை நேசித்த உத்தமன் (கம்பவாரிதி இ.ஜெயராஜ்), ஒளியாக நிற்கும் என் குரு (சண்முகலிங்கம்), அரசாங்க அதிபர் சிந்தனையிலிரேந்து (செ.பத்மநாதன்), எங்கள் குடும்ப நண்பர் (திருமதி. மகேஸ்வரி கதிரவேலு) ஆகிய ஆக்கங்களை இம்மலர் உள்ளடக்கியுள்ளது.

## 920.1 ஊடகவியலாளர், ஒலிபரப்புத்துறையினர்

### 14898

**நினைவலைகளில் வானொலிக் குயில்: ஒலிபரப்பாளர்களின் மனப்பதிவுகள்.** புஷ்பராணி சிவலிங்கம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 5: புஷ்பராணி சிவலிங்கம், 35/1, எட்மன்டன் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, மார்ச் 2013. (கொழும்பு 6: R.S.T. என்டர்பிரைசஸ், 14, W.A. சில்வா மாவத்தை).

164 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x14.5 சமீ.

வானொலிக்குயில் என்று செல்லமாக அழைக்கப்படும், பிரபல வானொலி அறிவிப்பாளர் இராஜேஸ்வரி சண்முகம் அவர்கள் 24.03.2012 அன்று அமரத்துவமடைந்தமையின் நினைவாக, அவரது நினைஞ்சலிக் குறிப்புகளைத் தாங்கி வெளிவந்துள்ள நூல் இது. கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர்,

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து கொழும்பு திரும்புவதற்காக புறப்பட்ட வேளையில், அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே காலமாகியுள்ளார். தமிழ் வானொலி வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்த இராஜேஸ்வரி சண்முகம் இலங்கை வானொலி சேவையில் 35வருடங்களுக்கு மேலாக பணியாற்றியுள்ளார். இலங்கை வானொலியில் ஒலிபரப்பான நாடகங்களில் யாழ்ப்பாண பேச்சு வழக்கில் பேசிப் பலரது பாராட்டையும் பெற்றதுடன், சிறந்த செய்தி வாசிப்பாளராகவும், நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் கடமையாற்றி இளைய தலைமுறை ஒலிபரப்பாளர்களுக்கு முன்னோடியாக திகழ்ந்தவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 52910).

## 922 சமயத் தலைவர், சிந்தனையாளர்

### 14899

**அருளொளி: ஸ்ரீ கார்த்திகேசு சுவாமிகள் நூற்றாண்டுச் சிறப்பு மலர் 1896-1996.** மா.கணபதிப்பிள்ளை (செயலாளர்). கொழும்பு 2: அருளொளி நிலையம், 31/21, டோசன் வீதி, 1வது பதிப்பு, 1996. (கொழும்பு 02: நியூ ராஜன் பிரின்ட், இல.25, கியூ லேன்).

50+(10) பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17 சமீ.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக கொழும்பில் ஆத்மீகப் பணியாற்றிவரும் கொழும்பு அருளொளி நிலையம், தனது ஸ்தாபகர் தவத்திரு கார்த்திகேசு சுவாமிகளின் நூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் முகமாக வெளியிட்டு வைத்திருக்கும் சிறப்பிதழ் இது. இச்சிறப்பிதழில், நுதற்கண் (அடியார்க்கடியவன்), இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளைத் தலைவர் ஸ்ரீ மத் சுவாமி ஆத்மகாநந்தாஜீ மஹராஜ் அவர்களின் வாழ்த்துரை, ஆன்மீகம் வாழ்க (தெ.ஈஸ்வரன்), தத்துவ ஞானத் தவச்சாலையின் சத்திய சமரச சன்மார்க்க ஏக காலப் பிரார்த்தனை (அடியார்க்கடியவன்), நிறைஞானியான பூரணன் கார்த்திகேசு ஐயா (சு.கனகரத்தினம்), பேரின்பக் குறள் (சித்ரமுத்தடிகள்), கார்த்திகேசு ஐயா (அடியார்க்கடியவன்), அமைதிக்கு வழி (கார்த்திகேசு சுவாமிகள்), பெத்தாச்சி சொன்ன கதை (சி.பாலசுப்பிரமணியம்), சத்திய சமரச சன்மார்க்கம் (கார்த்திகேசு சுவாமிகள்), நீறு பூத்த நீற்றினன் (பொன்.பரமபாதன்), கார்த்திகேசு சுவாமிகள் காட்டும் வழியும் வகையும் (பத்மா சுந்தரேசன்), 100 ஆண்டு நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு நம் மூதையர் வகுத்த அறநெறிகள், சித்திரமுத்தெனும் சீரார் சிவஞானி, Where are we heading for?( M.Sivarajaratnam), The Out Look of Humanity for the 21st Century (Gnanasironmani Poomani Gulasingam), Impact of Religions on the Development of Humanitarianism (R.Sinnathamby), தவத்திரு கார்த்திகேசு சுவாமிகள் நூற்றாண்டு நினைவாக கொழும்பு அருளொளி நிலையத்தின் தத்துவஞானத் தவச்சாலை, எம் இதயத்தில் மலரும் இனிய நன்றிகள் (மா.கணபதிப்பிள்ளை) ஆகிய படைப் பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. கார்த்திகேசு சுவாமிகள் ஊர்காவற்றுறையில்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கரம்பனை வாழிவிடமாகவும் கொண்டவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24590).

### 14900

**இணுவில் பெரிய சந்நியாசியாரின் வாழ்வும் வளமும்.** மூ.சிவலிங்கம். யாழ்ப்பாணம்: கலாபூஷணம் மூ.சிவலிங்கம், இணுவில், 1வது பதிப்பு, ஆடி 2018. (யாழ்ப்பாணம்: சுடர்நிலவு கிராப்பிக்ஸ், இணுவில் கிழக்கு, இணுவில்).

viii, 56 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

இணுவிலில் வாழ்ந்து மறைந்த சிவசுப்பிரமணியம் என்ற பெரிய சந்நியாசியாரின் நினைவாக அவர் சமாதிநிலையடைந்த 101ஆவது ஆண்டு நிறைவின்போது அங்கு கட்டப்பெற்ற புதிய மண்டபத்தில் நடந்த விழாவில் இந்நூல் வெளியிடப் பட்டுள்ளது. இதில் சீர்மிகு இணுவைத் திருவூர், பெரிய சந்நியாசியாரின் அவதாரம், மந்தை மேய்க்கும் மாண்புமிகு பணி, மாரியம்பாள் தந்த மதிய உணவு, சிவசுப்பிரமணியம் சித்தரானார், காரைக்கால் பதியின் அபிவிருத்தியில் பெரிய சந்நியாசியார், அன்னதானப் பணியின் தோற்றம், காரைக்கால் திருப்பதியில் 1008 மரம் நடுகை, ஏழு நீர்நிலைகள், பெரிய சந்நியாசியாரின் ஏனைய ஆலயப் பணிகள், இணுவில் பெருமஞ்சம் அமைக்கும் சிந்தனை, திருமஞ்சம் அமைத்தல், திருமஞ்சப் பணியின் இடமாற்றம், பெரிய சந்நியாசியாரின் கலை ஆர்வமும் கலைச் சிறப்புகளும், திருப்பெருமஞ்ச அமைப்பின் தோற்றம், உலகப் பெருமஞ்ச வெள்ளோட்டம், இணுவில் கந்தசுவாமி கோவிலிலிருந்து காரைக்காலுக்கு ஏழு தேர்ப்பவனி, சூரன்போர் (காரைக்காலில்), பெரிய சந்நியாசியாரின் அற்புதங்கள், பெரிய சந்நியாசியாரின் திருவாக்கும் அடித்தொண்டர்களின் நற்பேறும், பெரிய சந்நியாசியாரின் சமாதிக்காலம், பெரிய சந்நியாசியாரின் சமாதி நிறுவிய பின் நிகழ்ந்த சிறப்புகள், நிறைவாக ஆகிய 23 தலைப்புகளின் கீழ் இணுவில் பெரிய சந்நியாசியாரின் வாழ்வும் பணிகளும் விரிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 63614).

### 14901

**சித்தாந்தபாநு சோ.சுப்பிரமணியக் குருக்கள் பாராட்டுவிழா மலர்.** ச.பஞ்சாட்சர சர்மா (மலர் ஆசிரியர்). கோப்பாய்: குருக்கள் பாராட்டுவிழாச் சபை, 1வது பதிப்பு, 1971. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி).

(10), 84 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x18.5 சமீ.

இம்மலரில் வாழ்த்துரைகள், பாராட்டுரைகள், ஆசியுரைகளுடன், சிறப்புக் கட்டுரைகளாக, குருபக்தி (காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்), சிவஞானபோத முதனூல் (சிவஸ்ரீ ஈசான சிவாசாரியர்), சைவசமய சாத்திரங்கள் (சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள்), எம்மொழியில் அர்ச்சனை?

(சுவாமி சித்பவானந்தர்), சிவஞான சித்தியாரின் தனி மாண்பு (பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை), பீஜாக்ஷரம் (பிரம்மஸ்ரீ தி.கி.சீதாராம சாஸ்திரிகள்), ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி (பூ.தியாகராஜ ஐயர்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. "குருக்கள் கட்டுரைக் கோவைகள்" என்ற பிரிவில், சோ.சுப்பிரமணியக் குருக்கள் எழுதியவற்றுள் தெரிந்தெடுத்த கட்டுரைகளாக, தீர்த்த மகிமை, யோகசித்தி, திருஞானசம்பந்தர் உட்கொண்ட ஞானப்பால், சைவ சமயிகளும் சிறுதெய்வ வழிபாடும் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. சித்தாந்தபானு சோ.சுப்பிரமணியக் குருக்களின் பாராட்டுவிழா மலர்க் குழுவில் க.சி.வினாசித்தம்பி, க.இராசரத்தினம், சி.சுந்தரசிங்கம் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 039847).

## 14902

**சிவத்தமிழ் வித்தகம்**. கார்த்திக் புகழேந்தி, சிவகாசி சுரேஷ், சுபா கார்த்திக் (இதழாசிரியர்கள்). காஞ்சிபுரம்: சிவத்தமிழ் வித்தகர் அறக்கட்டளை, ஜீவா பதிப்பகம், இல. 351-MIG, NH-1, நக்கீரர் வீதி, மறைமலை நகர், 1வது பதிப்பு, 2019. (தமிழ்நாடு: காகிதப்பறவை டிசைன் அன்ட் பிரின்ட் மீடியா, இல.16A, ஜெயில்சிங் நகர், பெருமாள்புரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி).

238 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் (01.03.1949-13.02.2019) யாழ்ப்பாணத்தில் குப்பிழான் கிராமத்தில் பிறந்தவர். சைவ சமயப் பேச்சாளராகப் பிரபல்யம் பெற்ற இவர் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று நில அளவையாளராகப் பயிற்சிபெற்ற போதிலும், ஆர்வம் காரணமாக ஆசிரியப்பணியில் ஈடுபட்டவர். கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1972-1973 காலப்பகுதியில் ஆசிரியப் பயிற்சிபெற்று, மலையகத்தின் எட்டியாந்தோட்டை புனித மரியாள் தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆசிரியப்பணியை ஆரம்பித்தார். தொடர்ந்து கேகாலையிலும் ஆசிரியப் பணியாற்றியவர். அவ்வேளையில் மலையகத்தில் சைவம் வளர்க்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தவர். 1977இல் நிகழ்ந்த இனக் கலவரத்தின் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகி உரும்பிராய் இந்துக் கல்லூரியில் 12 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். ஆசிரியப் பணியுடன் சைவப்பணியும் ஆற்றிய இவரது சமய உரைகள் பலராலும் விரும்பப்பட்டன. இம்மலர் அவரது மறைவையொட்டி வெளியிடப்படும் நினைவுமலராகும். இதில் பல்வேறு பிரமுகர்களின் இரங்கலுரைகளும், அஞ்சலியுரைகளும், அமரர் சிவமகாலிங்கம் எழுதிய கட்டுரைகளும் அவர் பற்றிப் பிறர் எழுதிய வாழ்வும் பணிகளும் பற்றிய குறிப்புரைகளும் ஏராளமான புகைப்படங்களுடன் இடம்பெற்றுள்ளன. இடையிடையே அமரர் சிவமகாலிங்கம் எழுதிய கட்டுரைகளாக, சைவத்தின் காவலர் ஆறுமுக நாவலர், சைவ சித்தாந்தமும் காசிவாசி செந்திநாதையரும், மெய்ப்பொருள் பேசியவா, சித்தபுருஷர்களில் மூலவர் திருமூலர், சித்தர்கள் கண்ட சமயநெறி, திருமந்திரத்தில் கடவுட் கோட்பாடு, மழலையர் கல்வியை மாண்புற வளர்ப்போம், பாடசாலைக் கல்விமுறையின் பயன்பாடும் முறைபாடும்,

அறிவுப்பசி தோன்றினால் அகக்கண் திறந்துவிடும், நல்லாசிரியனே ஞானவிளக்கு ஆகியவை இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

## 14903

**தண்டபாணீயம்: வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் அவர்களின் மணிவிழா மலர்.** *மணிவிழாச் சபை. வல்வெட்டித்துறை: ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், 1வது பதிப்பு, நவம்பர் 2004. (கரவெட்டி: தமிழ்ப் பூங்கா அச்சகம், நெல்லியடி).*

*(8), 117 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18 சமீ.*

*வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுருவும், சிவாச்சாரிய பீடாபதியும், அகில உலக சைவக்குருமார் சம்மேளனத்தினதும், வேதாரண்ய குரு பரம்பரை சைவக்குருமார் அச்சகர்களின் நிறுவகத்தினதும் நிர்வாகியுமாகிய சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகரின் ஷஸ்டியப்த பூர்த்தி மணிவிழாவை 24.11.2004 அன்று கொண்டாடிய வேளையில் வெளியிடப் பெற்ற சிறப்பு மலர் இது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48315).*

## 14904

**திருவாசகம் ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள் நினைவு மலர்.** *த.துரைராசா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 13: ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை, 5ஆவது ஆண்டு குருபூசை நினைவு வெளியீடு, 1வது பதிப்பு, ஜனவரி 1993. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).*

*(28) பக்கம், விலை: அன்பளிப்பு, அளவு: 21.5x14.5 சமீ.*

*கொழும்பு 13, லக்ஷ்மி அச்சகத்தினரும் கொழும்பு 13, வீமாஸ் பிரிண்டர்ஸ் நிறுவனத்தினரும் அன்பளிப்பாக வழங்கியுள்ள பிரசுரம் இது. திருக்கேதீஸ்வரத்தில் திருவாசக மடத்தை முதலில் ஸ்தாபித்தவர் சபாரத்தினம் சுவாமிகளாவார். அவரைப்பற்றிய இந்த நினைவு மலர், ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகளின் வாழ்வினையும் அவர் ஆற்றிச்சென்ற சிவப்பணிகளையும் நினைவுகூர்வதாக அமைந்துள்ளது. அவர் பற்றிய வாழ்த்துரைகளை, வாழ்த்துக் கவிதைகளை, வாழ்வும் பணிகளும் பற்றிய குறிப்புக்களை அன்னாரின் தொண்டரடியார்களான கவிமாமணி, சிங்கையாழியான், வே.கெ.தனபாலன், ப.கோபாலகிருஷ்ணன், தங்கம்மா அப்பாக்குட்டி, க.கனகராசா, இரா.மகேந்திரசிங்கம், கரவைக்கிழார், ஆழ்கடலான், க.சி.குலரத்தினம், ஈழத்துச் சிவானந்தன், க.துரைராசா, த.துரைராசா, முருக-வே. பரமநாதன், செ.ஞானசேகரம், கே.பி.நடனசிகாமணி போன்றோர் இம்மலரில் வழங்கியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 16710).*

## 14905

**நகுலேஸ்வர குரு: கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா பிரதமகுரு பிரமஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின் பவளவிழா மலர்.** *மலர்க் குழு. கீரிமலை:*

பவளவிழாச் சபை, நகுலேஸ்வர தேவஸ்தானம், 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(16), 160 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x18 சமீ.

03.12.2000 அன்று வெளியிடப்பெற்ற இச்சிறப்பு மலரில் வாழ்த்தி வணங்குவோம், பாடிப் பரவுவோம், குருவும் கோயிலும், பழமையின் பெருமை, நகுலேஸ்வரப் பிரபந்தங்கள், நகுலேஸ்வரப் புதுப்பொலிவு ஆகிய ஆறு பிரிவுகளில் ஆக்கங்கள் வகுத்துத் தரப்பட்டுள்ளன. பவளவிழா நாயகருக்கான ஆசியுரைகள், வாழ்த்துரைகளுடன், குருவும் கோயிலும், பிரம்மஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின் வாழ்வுச்சீர் (பிரம்மஸ்ரீ சு.து.சுந்தரமூர்த்திக் குருக்கள்), நான் கண்ட நகுலேஸ்வரக் குருக்கள் (நாதஸ்வர வித்துவான் கலாசூரி என்.கே. பத்மநாதன்), Case of the missing idols:Vandalism or sacrilege? கீரிமலைச் சிவன் கோவில் அன்றும் இன்றும் (பேராசிரியர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர்), Shri Naguleswaram Shivan Temple Keerimalai History and Sanctity (A.Visvanathan), Shivasiri K.Naguleswara Kurukkal and His Achievements (A.Visvanathan), தலத்தின் தொன்மையும் குருவின் செம்மையும் (ச.சிவதாசன்), கீரிமலை நகுலேஸ்வரம் பற்றிய தகவல் திரட்டுதல் (சைவப்புலவர் சு.செல்லத்துரை), முப்பெரும் பழம்பதிகள் பற்றிய ஆய்வின் தேவை (சு.சுசீந்திரராசா), ஆலயத்தில் அறிவூட்டல் - புராணபடனம் - தெல்லிப்பழையிற் கல்வி, கீரிமலையிற் சைவாலயங்கள், கீரிமலையில் காவிய பாடசாலை (வித்துவசிரோமணி சி.கணேசையர்), கீரிமலைச் சிவன் கோயில் (ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 1878-05-24 இல் வெளியிட்ட துண்டுப் பிரசுரம்), கீரிமலைச் சிவன் கோயில் (அ.குமாரசுவாமிப்பிள்ளை), நகுலேஸ்வரப் பிரபந்தங்கள், நகுலேஸ்வரப் புகழ்மாலை (புலவர் வை.க.சிற்றம்பலம்), கீரிமலை நகுலேசர் ஊஞ்சல் (அ.குமாரசுவாமிப் புலவர்), நகுலேஸ்வரம் - புதுப்பொலிவு: பிரம்மஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் ஒரு செவ்வி (செவ்வி கண்டவர்: சைவப்புலவர் சு.செல்லத்துரை) ஆகிய படைப்பாக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24283).

## 14906

**நாவலர் அவதரித்தார் நல்லை நகர்தனிலே.** வ.செல்லையா. வவுனியா: மெய்கண்டார் ஆதீனம், 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (வவுனியா: நிர்மலா பிரின்டர்ஸ், 153A, குருமண்காடு).

20 பக்கம், விலை: ரூபா 15.00, அளவு: 20x14.5 சமீ.

நாவலர் தினமான 09.12.1998 அன்று வெளியிடப்படும் நோக்குடன், வித்துவான் வ.செல்லையா அவர்களால் எழுதப்பட்ட இந்நூலில், நாவலர் கீர்த்தனைகள், நாவலர் அவதரித்தார் நல்லை நகர்தனிலே (ஆசிரியரின் கட்டுரை), ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வரலாறு, நாவலரின் பொன்மொழிகள், பெரியோர் சிந்தனையில் நாவலர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்கள், நாவலர்

உரை எழுதி வெளியிட்ட நூல்கள் ஆகிய ஏழு தலைப்புகளின் கீழ் ஆறுமுக நாவலர் பற்றிய ஆக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21249).

## 14907

**நாவலர் மாநாடு விழாக் காட்சிகள் 1969**. நாவலர் மாநாட்டுக் குழு. கொழும்பு: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, 1வது பதிப்பு, நவம்பர் 1969. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சகம், 161, செட்டியார் தெரு).

94 தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 16.5x19 சமீ.

ஆறுமுக நாவலர் திருவுருவச் சிலை யாழ்ப்பாண மாநகரசபை முன்றலில் இருந்து இரத ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, அவர் பிறந்த பதியில்-நல்லூரில் நிறுவப்பட்டது. அவ்வேளை நாவலர் மாநாடு-பெருவிழா என்பனவும் 1969 ஜூன் 29, 30, ஜுலை 1, 2 ஆகிய நாட்களில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் நாவலர் மாநாட்டுக் குழுவினரால் நாடளாவிய ரீதியில் கலை நிகழ்ச்சிகளுடன் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. மதுரை மகா சந்நிதானம் உள்ளிட்ட பல பிரமுகர்கள் தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்தனர். நாவலர் தொடர்பான பல காட்சிகளைத் தாங்கிய ஊர்திகளின் பவனியும் இடம்பெற்றிருந்தது. அவ்வேளையின் நிகழ்வுகளை புகைப்படங்களாக, குறிப்புரையுடன் ஆக்கி, ஒரு நிரந்தர வரலாறாக இந்நூல் பதிவுசெய்கின்றது. 100 படங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட புகைப்படத் தொகுப்பு இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 26841).

## 14908

**மூதறிஞர் பண்டிதர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களின் திருத்தொண்டு பரவும் மலர்**. கே.கே.சுப்பிரமணியம் (பதிப்பாசிரியர்). தெகிவளை: கே.கே. சுப்பிரமணியம், 28, இரத்தினகார இடம், 1வது பதிப்பு, 2002. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

110 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x12.5 சமீ.

ஈழத்துச் சிதம்பரப் பிரதம குருவாக அணிசெய்த ச.கணபதீசுவரக் குருக்கள், சிவயோகசுந்தராம்பாள் தம்பதியரின் மகனாக 22.09.1916 இல் பிறந்தவரே வைத்தீசுவரக் குருக்கள். ஆரம்பக் கல்வியை காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் உயர்கல்வியை அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். சமஸ்கருதக் கல்வியை பி.வி.சிதம்பர சாஸ்திரிகளிடம் பெற்ற இவர் தமிழ்ப் பண்டிதர் கல்வியை மகாவித்துவான் சி.கணேசையரிடம் பெற்றுக்கொண்டார். 1940 இல் கொழும்பு விவேகானந்தக் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்று திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்று 1970 இல் அரச பணியில் இருந்து இளைப்பாறினார். வைத்தீசுவரக்

குருக்கள் காரைநகர் மணிவாசகர் சபையை 1940 ஆம் ஆண்டில் நிறுவியிருந்தார். ஈழத்துச் சிதம்பரத்தைத் தளமாகக் கொண்டு இச்சபை முன்னெடுத்துவரும் திருவாசக விழா மிகவும் பிரபலமானது. இன்றும் அந்த விழாவை குருக்கள் காட்டிய வழியில் அச்சபையினர் முன்னெடுத்து வருகின்றனர். 1970 ஆம் ஆண்டில் இச்சபையின் ஊடாக துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு சிவத்தமிழ்ச்செல்வி என்ற கௌரவப் பட்டத்தைக் குருக்களே வழங்கினார். 1960 ஆம் ஆண்டில் காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற அமைப்பையும் குருக்கள் அவர்கள் நிறுவியிருந்தார். இவ்வாறு வடமொழியாகிய சமஸ்கிருதத்தையும் தென்மொழியாகிய தமிழையும் தன்னிரு கண்களாகப் போற்றி வழுத்திய பெருந்தகையாகவே குருக்கள் திகழ்ந்தார். குருக்கள் அவர்கள் எழுதியும் தொகுத்தும் வழங்கிய நூல்களில் ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம், காரைநகரில் சைவசமய வளர்ச்சி, தொடர்மொழிக்கு ஒரு சொல், க.பொ.த. மாணவர்களுக்கான தமிழ்ப் பயிற்சி நூல்கள், காரைநகர் மணிவாசகர் சபையின் பொன்விழா மலர், காரைநகர் சைவமகா சபையின் பொன்விழா மலர், திருவாதிரை மலர்கள், ஈழத்துச் சிதம்பர கும்பாபிஷேக மலர் (1970), வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேக மலர் என்பவையும் அடங்கும். குருக்களின் தமிழியற் சேவைகளை நயந்து அகில இலங்கைக் கம்பன் கழகம் 1995 இல் மூதறிஞர் என்ற விருது வழங்கிக் குருக்களுக்கு மதிப்பளித்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2001 ஆம் ஆண்டில் கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கிப் பெருமை சேர்த்தது. பண்டிதர் க.வைத்தீசுவரக் குருக்கள் தனது 99 ஆவது வயதில் இவ்வுலகை வாழ்வை நிறைவு செய்துள்ளார். அவர் வாழும்காலத்தே அவர் பணிகள் பற்றிய தொகுப்பாக இச்சிறப்பிதழ் வெளிவந்திருந்தது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 31331).

### 14909

**விஸ்வநாதம்: பவளவிழா மலர் 2001.** ஸ்ரீ பிரசாந்தன் (மலராசிரியர்). கொழும்பு: பிரதிஷ்டாசிரோன்மணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களது எழுபத்தைந்தாவது அகவை நிறைவு விழா நினைவுக் குழு, 1வத பதிப்பு, 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

viii, 115 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x19.5 சமீ.

அளி வந்த அந்தணைப் பாடுதுங்காண் அம்மானாய் (ஸ்ரீ பிரசாந்தன்), நவாலி தந்த நவநிதியம் (வாழ்க்கை வரலாறு), குருக்கள் ஐயா அவர்கட்கு வழங்கிய பட்டங்களும் வழங்கிய ஆலயங்களின் விபரமும், குருக்கள் ஐயா அவர்கள் சேவையாற்றிய ஆலயங்கள் ஆகிய விபரங்களைத் தொடர்ந்து "அருள்" என்ற முதலாவது பிரிவில் ஆசிச்செய்திகளும், "அன்பு" என்ற இரண்டாவது பிரிவில் வாழ்த்துச் செய்திகளும், வாழ்த்துக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. "ஆக்கம்" என்ற மூன்றாம் பிரிவில், அந்தணர்களுக்குரிய நாற்பது ஸம்ஸ்காரங்கள் (ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்), அஷ்ட மூர்த்தம் -எட்டுரு (ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்), வீரசைவம் (சாந்தலிங்க இராமசாமி அடிகளார்),

சைவ சமய வளர்ச்சியில் ஆதிசைவர்களின் பங்கு (கோ.வி.கணேச சிவாச்சாரியார்), சைவ சமயச் சின்னங்கள் (என்.இராமநாத சிவாச்சாரியார்), சிவாகமத்தில் அருளிய கும்பாபிஷேகக் கிரியை (பா.சிவசண்முக சுந்தரக் குருக்கள்), சைவ சித்தாந்தமும் சிவாலயங்களும் (சிவஸ்ரீ மு.பரமசாமிக் குருக்கள்), சேக்கிழாரும் சித்தாந்தமும் (சி.அருணைவடிவேல் முதலியார்), சைவ சித்தாந்தம் (க.வச்சிரவேல் முதலியார்), வைணவத்தின் சிறப்பு (ஸ்ரீ அண்ணங்கராச்சாரியார்), சித்த யோக விளக்கம் (சுத்தானந்த பாரதியார்), சைவ ஆகமங்கள் (இரா.செல்வக்கணபதி), ஆலய அமைப்புக்கள் (பெ.திருஞானசம்பந்தன்), வகுத்தான் வகுத்த வகை (மு.சிவச்சந்திரன்), பெரிய புராணத்தில் சிவ அன்பு (சிவ.சண்முக வடிவேல்), தெய்வ நம்பிக்கையை இழக்கக் கூடாது (சந்திப்பு: தே.செந்தில் வேலவர்) ஆகிய கட்டுரைகளும், "அழகு" என்ற இறுதிப்பிரிவில் பிரதிஷ்டாசிரோன்மணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களது வாழ்வின் முக்கிய கணப்பொழுதுகளின் தேர்ந்த புகைப்படச் சான்றுகளும் தொகுக்கப்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23993).

## 923 சமூகவியல்துறை சார்ந்தோர்

### 14910

**திரு அஞ்சலி மலர்.** இலங்கையர் கனகசபை (ஆசிரியர்), த.கிருபாகரன் (இணை ஆசிரியர்). பிரான்ஸ்: சபரீசன் ஒன்றியம், 1வது பதிப்பு, 2001. (பாரிஸ்: மெய்கண்டான் அச்சகம்).

84 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

வட இலங்கை சர்வோதய அறங்காவலரும், தமிழ்கூறும் நல்லுலகினால் நன்கு அறியப்பட்டவரும், வாழ்நாள் முழுவதும் சமூக மேம்பாட்டுக்காக அல்லும் பகலும் உழைத்தவருமான அமரர் தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு. அவர்களின் மறைவு குறித்து வெளியிடப்பட்ட நினைவஞ்சலி மலர். சமூகத்தின் உயர்வே தனது லட்சியம் என சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டி, நிகழ்காலத்தவர் மட்டுமல்லாது எதிர்கால சந்ததியினரும் கடைப்பிடிக்கக்கூடிய வகையில் வாழ்ந்த பெருமகன் தான் தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு. அன்னாரைப் பற்றிய மனப்பதிவுகளை பாரிஸ் வாழ் பிரமுகர்கள் அஞ்சலிகளாக இந்நூலில் பதிவு செய்திருக்கின்றனர்.

## 923.2 அரசியல் துறையினர்

### 14911

**அஷ்ரஃப் பெருக்கெடுத்த கதைகள்: புதிய வெளிச்சம்.** அனிஸ்டஸ் ஜெயராஜா. சாய்ந்தமருது 05: மருதம் கலை இலக்கிய வட்டம், 129B, ஒஸ்மான் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2008. (கொழும்பு 14: டலஸ் கிராப்பிக்ஸ்).

viii, 56 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x16 சமீ., ISBN: 978-955-51026-1-2.

நிரந்தர இலட்சியங்களுக்காக, யார் இவர், அஷ்ரஃப் சகாப்தம் ஓர் அறிமுகம், ஹிரா, கருக்கல், புதிய வெளிச்சம், இமயம், மணிக்கூடு, காதுப்பூ-மின்னி, சீர்திருத்தம், விஸ்வரூபம், உரிமை எனும் ஊர், அஷ்ரஃப் ஏன் படிக்கப்படவேண்டும் ஆகிய அத்தியாயங்களினூடாக முஸ்லிம் மக்களின் அரசியல் தலைவர் அஷ்ரஃப் அவர்களின் வாழ்க்கைப் பாதை விபரிக்கப்பட்டுள்ளது. வறுமையிலும் செம்மையாக வாழ்வதற்கு, துயரங்களையும் பிரச்சினைகளையும் கண்டு துவண்டுவிடாமல் இருப்பதற்கு, உயர்ந்த சிந்தனைகளுக்கான உழைப்பு ஒருபோதும் வீண்போவதில்லை என்ற எடுத்துக்காட்டுக்கு, முடிவுகள் எதுவானாலும் தள்ளிப்போடாமல் துணிவுடன் எதிர்கொள்வதற்கு, முரண்பாட்டாளர்களையும் அணைத்துச் செல்வது எப்படி என்பதற்கும், அரசியல் இராஜதந்திரத்தில் மிக நுட்பமான வழிமுறைகளைக் கையாள்வதற்கும் அஷ்ரஃப் படிக்கப்படவேண்டியவர் என்பதை இந்நூல் வலியுறுத்துகின்றது.

### 14912

**இரண்டெழுத்தில் இயங்கிவந்த இணையற்ற செயல்வீரன்.** மலர்க் குழு. கொழும்பு 13: எம்.சி.சுப்பிரமணியம் நினைவுக் குழு, 161-1/1, ஜிந்துப்பிட்டி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (கொழும்பு 13: யூ.கே. பிரின்டர்ஸ், 98 A, விவேகானந்த மேடு).

80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

தோழர் எம்.சி.சுப்பிரமணியம் அவர்களின் நினைவாக நடந்த நினைவுச் சொற்பொழிவு 20.01.2004 அன்று பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு அவர்களால் நிகழ்த்தப்பட்ட வேளையில் வெளியிடப்பட்ட கட்டுரைத் தொகுதி இதுவாகும். இலங்கையின் வட பகுதியில் தோழர் மு.கார்த்திகேசன் அவர்கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை 1946இல் முதன்முதலாக ஸ்தாபிப்பதற்கு உதவிய முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படுபவர் தோழர் எம்.சி. சுப்பிரமணியம். 1957இல் எம்.சி. அவர்கள் அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகா சபையின் தலைவராகப் பொறுப்பேற்றார். எம்.சி. அவர்கள் கம்யூனிஸ்ட் புரட்சிகர உணர்வோடு செயலாற்றிய காலத்தில் சீவல் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டிய தவறணை முறையை ஒழிக்க உழைத்து, மரவரி முறையை ஏற்படுத்த உதவினார். வட இலங்கை கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தை உருவாக்கி அதன் நிர்வாகச் செயலாளராகவும் சிறப்பாகச் செயலாற்றினார். 1970இல் பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார். எம்.சி. பற்றிய பல்வேறு அரசியல், சமூகப் பிரமுகர்களின் கருத்துக்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39997).

### 14913

**இரும்பு மனிதன் நாகநாதன்.** சோழன் (புனைபெயர்: மலேயன் மணியம்). திருக்கோணமலை: மலேயன் மணியம், 1வது பதிப்பு, ஒகஸ்ட் 1966. (கொழும்பு

12: சுதந்திரன் அச்சகம், 194A, பண்டாரநாயக்க மாவத்தை).

26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

இலங்கையில் தமிழர் அரசியலின் முன்னோடிகளுள் ஒருவரான இ.மு.வி. நாகநாதன் (இலங்கை முருகேசு விஜயரத்தினம் நாகநாதன்) அவர்களின் வாழ்வும் பணிகளும் பற்றி எழுதப்பட்டுள்ள நூல். இவன் யார்? வாழ்க்கைக் குறிப்புகள், விடுதலை வேட்கை, செனெற்றர் நாகநாதன், பொதுச் செயலாளர் நாகநாதன், கண்டதும் கேட்டதும், களத்தில் நாகநாதன், நொடிந்த நாகநாதன், நாகநாதன் என்ற சேவகன், வாழ்க நீ எம்மான் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அமரர் நாகநாதன் கொழும்பில் மருத்துவராகப் பணியாற்றியவர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொன்னம்பலத்தின் தீவிர ஆதரவாளராக இருந்த இவர் 1947 ஆம் ஆண்டில் அக்கட்சியின் செயலாளராகப் பணியாற்றினார். அதே ஆண்டில் மேலவை உறுப்பினராகத் தெரிவானார். பின்னாளில் அவர் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகி இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்து அக்கட்சியின் முக்கிய உறுப்பினரானார். அக்கட்சியின் செயலாளராகவும் சில காலம் பணியாற்றினார். 1952, 1956 தேர்தல்களில் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் ஜி. ஜி. பொன்னம்பலத்தை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். மார்ச் 1960 தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சார்பில் நல்லூர் தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தொடர்ந்து சூலை 1960, 1965தேர்தல்களிலும் நல்லூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1966 ஆம் ஆண்டில் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவானார். அன்று நல்ல உடற்கட்டுடன் ஆஜானுபாகுவான தோற்றத்தையுடைய நாகநாதனை தமிழ் மக்கள் "இரும்பு மனிதன்" என்று அன்புடன் அழைத்தார்கள். 1970 தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டவேளை சி. அருளம்பலத்திடம் 508 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றார்.

## 14914

**எச்.எஸ்.இஸ்மாயில்: ஒரு சமூக அரசியல் ஆய்வு.** எம்.எஸ்.எம்.அனஸ். புத்தளம்: இளம் முஸ்லிம் பட்டதாரிகள் சங்கம், 1வது பதிப்பு, மே 1995. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(4), 188 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் முதலாவது முஸ்லிம் சபாநாயகர் என்ற பேற்றைப் பெறுபவர் மர்ஹூம் அல்ஹாஜ் எச்.எஸ்.இஸ்மாயில் அவர்களாவார். இவர் ஓர் அரசியல்வாதியாக அறியப்பட்டாலும் சமுதாயப் பற்றுள்ள தலைவராக உழைத்தவர். புத்தளத்தின் பூர்வீகக் குடும்பத்தைச் சார்ந்த இவர் 19.05.1901 அன்று பிறந்தார். புத்தளம் சென் அன்ரூஸ் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் கொழும்பு வெஸ்லி கல்லூரியில் உயர் வகுப்புக் கல்வியையும் ஆங்கில மொழி மூலம் கற்றார். 1920 ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் சிரேஷ்ட பரீட்சையில் சித்தியடைந்த இவர், 1921 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரியில் நுழைந்தார். 1925 ஆம் ஆண்டு புத்தளம் மாவட்டத்தின் முதலாவது முஸ்லிம் சட்டத்தரணி என்ற பெயருடன்

வெளியேறினார். பொதுச் சேவையில் அவருக்கிருந்த ஈடுபாடு காரணமாக 1928 ஆம் ஆண்டு புத்தளம் உள்ளூராட்சி மன்ற (Local Board) தலைவராகப் போட்டியின்றித் தெரிவானார். 1944 இல் கல்விக் கழகம் என்ற கல்வி மேம்பாட்டு நிறுவனத்தை நிறுவினார். இதே கால கட்டத்தில் ஸாஹிராக் கல்லூரியின் கிளை புத்தளத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அன்னாரின் நினைவாக புத்தளம் ஸாஹிராக் கல்லூரியின் கட்டிடமொன்றுக்கு அவரது நாமம் சூட்டப்பட்டது. இந்நூல் ஒரு முற்குறிப்பு, சமூக சேவையாளரின் தோற்றம், அரசியலும் மொழிப் பிரச்சினையும், மொழிப் பிரச்சினையில் முஸ்லீம்கள், இலங்கை பைத்துல்மால், சமூக சேவையும் முஸ்லிம்களும், கல்விப் பணிகள், முஸ்லிம் பாடசாலைப் பிரச்சினையும் சோனகர்-முஸ்லிம் இணக்கமும், கூட்டுறவு இயக்கமும் வளர்ச்சியும், சமூக பொருளாதார நடவடிக்கைகள், பேராதனைப் பல்கலைக்கழக மஸ்ஜித், இஸ்மாயிலின் நாட்குறிப்பேடு, Extracts from H.S.Ismail's Diary, குறிப்புகள் ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் அமரர் அல்ஹாஜ் எச்.எஸ்.இஸ்மாயிலின் சமூக அரசியல் பணிகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 31370).

### 14915

**என் பெயர் விக்டோரியா: நதியைக் கடக்க முனைந்தவள்.** தொந்தா விக்டோரியா (ஸ்பானிய மூலம்), தேவா (தமிழாக்கம்). சென்னை 600005: வடலி வெளியீடு, பி-55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2018. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).

220 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-1-7752 392-0-8.

அர்ஜென்டீனாவில் 1976-இல் நிகழ்ந்த ஆட்சிக் கவிழ்ப்பு அதன் வரலாற்றிலேயே கர்ணகொடூரமானதான சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுத்தது. முப்பதாயிரம் வரையான மக்கள் கடத்தப்பட்டார்கள். சித்திரவதைக்குள்ளானார்கள். ஈற்றில் "காணாமல் போனார்கள்". அக் காலத்தில்தான் கர்ப்பிணிகளாயிருந்த அரசியல் கைதிகளுக்குப் பிறந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் இருண்மைக்குள் சபிக்கப்பட்டிருந்த அவர்களது தாய்மாரிடமிருந்து திருடப்பட்டு இராணுவத்துடன் தொடர்புடையவர்களிடமோ அந்த சர்வாதிகார ஆட்சிக்குத் துணை போனவர்களிடமோ ஒப்படைக்கப்பட்டார்கள். அவ்வாறு கொடுக்கப்பட்ட குழந்தைகளில் ஒருத்திதான் "அனாலியா". தான் தத்தெடுக்கப்பட்டவள் என்பதையே சந்தேகிக்காது வளர்ந்த அவள், தனது 27வது வயதில் தான் தனது பெற்றோர் தனதல்லர் என்றும் தனது பெயரே தன்னுடையது அல்லவென்றும் அறிகிறாள். "எனது பெயர் விக்ரோரியா" எனும் இந்நூலில் தனது கதையை அனாலியா அல்ல விக்ரோரியாவே எழுதிச் செல்கிறாள். அதன் பக்கங்கள் ஊடே ப்யூனஸ் அயர்ஸின் புறநகர் பகுதிகளில் ஒரு செழிப்புமிக்க மத்தியதரவர்க்கத்தில் வளர்ந்தவளான தீவிர அரசியல் பிடிப்புகளை உடைய ஓர் இளம் பெண்ணை நாம் அறிகிறோம். தன் உற்றவராய் எண்ணியிருந்தவர்களே தனது பெற்றோரின்

*கொலைக்கும் பின்னர் தான் கடத்தப்பட்டு தத்தெடுக்கப்பட்டதற்கும் காரண கர்த்தாக்களுமானவர்கள் என்பதை அறிவதிலிருந்தே தனது அடையாளங்கள் குறித்த உண்மையைத் தேடிய அவளது பயணமும் தொடங்கியது. இன்று விக்ரோரியா அர்ஜென்டீன பாராளுமன்றத்தில் மிக இளம் வயது உறுப்பினர். தனது அடையாளத்தையும் சொந்தப் பெயரினையும் மீட்டுக்கொண்டு விட்டவர். இன்று அவர் அனாலியா அல்ல, விக்ரோரியா டொண்டா. ஸ்பானிய மொழியில் எழுதப்பட்ட இந்தப்புத்தகம்* DR.Stefanie Karg *இனால் ஜேர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு அதன் வழியாகத் தேவாவினால் தமிழுக்கு கொண்டு வரப்படுகிறது.*

## 14916

**ஒரு கம்யூனிஸ்டின் அரசியல் நினைவுகள்.** *என்.சண்முகதாசன். கொழும்பு 13: மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையம், இல. 9, 1/5, அல்விஸ் பிளேஸ், 1வது பதிப்பு, மார்ச் 2013. (கொழும்பு 6:* Fast Printers, 289½, *காலி வீதி, வெள்ளவத்தை).*

*426 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22*x*15.5 சமீ.,* ISBN: *978-955-4712-00-3.*

*இலங்கை இடதுசாரி இயக்கத்தின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்ததும் சமாந்தரமான வாழ்க்கையைக் கொண்டதுமே புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முன்னோடித் தலைவரான தோழர் என்.சண்முகதாசனின் வாழ்க்கை வரலாறாகும். தோழர் என்.சண்முகதாசனின் மறைவின் 20ஆவது ஆண்டு நினைவின் போது வெளியிடப்பெற்றுள்ள இந்நூலில் தோழர் சண்ணின் அரசியல் வாழ்க்கை 17 இயல்களில் விரிகின்றன. முன்னர் ஜுலை 1989இல்* Political Memoirs of an unrepentant Communist *என்ற தலைப்பில் அவர் எழுதிய ஆங்கில சுயசரிதை நூலின் தமிழாக்கம் இதுவாகும். பல்கலைக்கழக வாழ்க்கை, லங்கா சமசமாஜக் கட்சியில் பிளவு, கட்சியின் ஆரம்ப நாட்கள், யுத்தத்துக்குப் பிந்திய காலம், 1947 பொது வேலை நிறுத்தம், காலனிசத்திலிருந்து நவ காலனிசத்துக்கு, ஹர்த்தால் முதல் 1956 வரை, பண்டாரநாயக்கா சகாப்தம், பண்டாரநாயக்காவுக்கு பிறகு, கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவு, கொந்தளிப்பான அறுபதாம் ஆண்டுகள், மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாசாரப் புரட்சி, ஐக்கிய முன்னணி அரசாங்கமும் அதன் பின்னரும், 1971இற்குப் பின், மாசேதுங் சிந்தனைக்கு ஆதரவாக, மார்க்சிய-லெனினியவாதிகள் சர்வதேசிய ரீதியில் ஐக்கியப் படுதல், 1983 ஜுலைக்குப் பின், பின்னுரை ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் மேலதிகமாக லண்டனை மையமாகக் கொண்டியங்கும் இன உறவுகள் நிறுவனத்தின் பணியாளர் ஏ.சிவானந்தன், பத்திரிகையாளர் அமரர் அஜித் சமரநாயக்க, சூரியசேகரம் ஆகியோர் எழுதிய கட்டுரைகளையும், திரு சிவானந்தனின்* Race and Class *என்ற சஞ்சிகையில், நோர்வேயில் புலம்பெயர்ந்து வாழும் பேராசிரியர் என்.*

சண்முகரத்தினம் எழுதிய நூல் விமர்சனத்தையும் சேர்த்திருக்கிறார்கள்.

## 14917

**ஒரு மாமன்னரின் பொற்காலம்.** அனிஸ்டஸ் ஜெயராஜா. கொழும்பு 6: பூங்காற்று பதிப்பகம், 59, 1/1, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, 1வது பதிப்பு, ஜுன் 2011. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xvi, 82 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-0700-06-6.

மர்ஹூம் எம்,எச்.எம்.அஷ்ரப் அவர்கள் 1948 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி சம்மாந்துறையில் முஹம்மது மீரா லெப்பை ஹூஸைன் மற்றும் மதீனா உம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனாக கல்முனையில் பிரபலமான காரியப்பர் குடும்பத்தில் பிறந்தார். சட்டக் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்திலேயே அஷ்ரப் இலங்கை அரசியலில் தீவிர ஆர்வம் கொண்டார். அஷ்ரப் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார். தந்தை செல்வநாயகத்தை தனது அரசியல் குருவாக அஷ்ரப் வகுத்துக் கொண்டார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளில் தீவிர பங்கு கொண்ட எம். எச்.எம். அஷ்ரப் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை உருவாக்கினார். மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபைத் தலைவராகக் கொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களை ஓரணியில் இணைப்பதற்கு பெரு முயற்சி எடுத்தது. முஸ்லிம்களின் தனித்துவமான குரலாக அது ஒலிக்கத் தொடங்கியது. 1989 ஆம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதன் முதலாக போட்டியிட்டது. அனிஸ்டஸ் ஜெயராஜாவின் இந்நூல் மர்ஹூம் எம்,எச்.எம்.அஷ்ரப் அவர்களின் வாழ்வின் சில பக்கங்களை பதிவுசெய்கின்றது. இவர் முன்னதாக "கிழக்கின் உதயம் தேசத்தின் இதயம் (இரண்டு பாகங்கள்)", "அஷ்ரபின் அந்த எழு நாட்கள்" ஆகிய நூல்களையும் இவரைப்பற்றி எழுதியுள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53731).

## 14918

**தடங்கள்: மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீது அவர்களின் 15ஆம் வருட நினைவிதழ்.** கனகசபை தேவகடாட்சம். (தொகுப்பாசிரியர்). திருக்கோணமலை: முற்போக்கு வாலிபர் மன்றம், கிண்ணியா, 2வது பதிப்பு, டிசெம்பர் 2002, 1வது பதிப்பு, நவம்பர் 2002. (திருக்கோணமலை: ரெயின்போ மினிலாப், 361, நீதிமன்ற வீதி).

58 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14 சமீ.

மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீது (15.11.1933-13.11.1987)அவர்களின் நினைவு மலர். வாசலிலே சில நிமிடங்கள், தொகுத்துச் சூடுகிறேன் (கனகசபை தேவகடாட்சம்), வாழ்த்துச் செய்தி எம் இதயத்தில் என்றும் (மூதூர் ஜெஸ்மின் மகறூப்), இந்நாட்டின் விடுதலைக்கு முஸ்லிம்களும் போராடினர், முஸ்லிம்களின் தாய் மொழியும்

*போதனா மொழியும் தமிழே, முஸ்லிம்கள் இந்நாட்டில் சிறுபான்மையினர் ஆனால் உலகில் பெரும்பான்னையினர், இந்நாட்டின் முஸ்லிம்கள் இரண்டாம்தரப் பிரஜைகளல்ல, நெஞ்சிருக்கும் வரைக்கும் நினைவிருக்கும், மூதூர்த் தொகுதியின் முதல்வர் ஏ.எல்.அப்துல் மஜீத், அடித்தோய்ந்த அரசியற் தென்றல், அவரது இலக்கிய முகம் (எம்.எஸ்.அமானுல்லா), கிண்ணியாவின் கல்வி பற்றிய ஒரு பதிவு, மூதூர் முதல்வன் "மஜீது", நினைவுக் கவிதை, மர்ஹூம் அப்துல் மஜீது-ஒரு நவீன அரசியல் கலாசாரத்தின் பிதாமகன், நான் கண்ட அப்துல் மஜீத் நடுங்காத ஒரு வீரன், சரித்திரமாகிய ஒரு சரித்திரம் (ஏ.நஜிமுதீன்), இனி ஒருவன் வருவனோ (எஸ்.ஏ.முத்தலிப்), நிரந்தரமாய் நீ வாழ்வாய் (மூதூர் முகையதீன்) ஆகிய அஞ்சலிப் படையல்களுடன் இம்மலர் வெளிவந்துள்ளது. அமரர் ஏ.எல். அப்துல் மஜீத் (நவம்பர் 15, 1933 - நவம்பர் 13, 1987) கிழக்கிலங்கையின் அரசியல்வாதியும், முன்னாள் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார். மார்ச் 1960 இல் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியில் தையல் இயந்திரச் சின்னத்தில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோல்வி கண்டார். அதே ஆண்டு சூலை மாதம் நடந்த பொதுத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து போட்டியிட்டு நாடாளுமன்றம் சென்றார். அன்றிலிருந்து 1977 வரை மூதூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். இக்காலத்தில் அவர் தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறைப் பிரதி அமைச்சராகவும் பணியாற்றியிருந்தார். அப்துல் மஜீத் 1987ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி இனந்தெரியாதோரால் மூதூரில் சுட்டுக் கொல்லப்பட்டார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 27462).*

## 14919

**தோழர்: இதுவொரு நினைவின் பதிவு (அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன் நினைவு மலர்).** *மலர்க் குழு. கனடா: தோழர் சின்னத்தம்பி சண்முகநாதன் குடும்பத்தினர், 1வது பதிப்பு, மே 2016. (கனடா: அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(4), 87 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.*

*"சண்" எனத் தோழர்களாலும், நண்பர்களாலும் அன்பாக அழைக்கப்பட்ட நெடுந்தீவைச் சேர்ந்த தோழர் சின்னத்தம்பி சண்முகநாதன், ஏப்ரல்07ஆம் திகதி (2016) கனடாவின் ரொறன்ரோ நகரில் தமது 63ஆவது வயதில் காலமானார். தோழர் சண் 1960களில் நெடுந்தீவில் ஆரம்பிக்கப்பட்ட முற்போக்கு வாலிபர் இயக்கத்தின் மூலம் தமது பொது வாழ்க்கையை ஆரம்பித்தார். பின்னர் மார்க்சிய அரசியலில் ஈடுபாடு கொண்டு, இலங்கை மார்க்சிச-லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து அதன் வட பிரதேச குழு உறுப்பினராகவும், அக்கட்சி 1975இல் ஆரம்பித்த தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் முதலாவது பொதுச் செயலாளராகவும் செயல்பட்டார். கிளிநொச்சியில் கட்சியினால் முன்னெடுக்கப் பட்ட விவசாயிகள் சங்க வேலைகளிலும் ஈடுபட்டார். எழுத்தாற்றல்மிக்க அவர், பல கட்டுரைகளையும், சில கதைகளையும் எழுதியுள்ளார். தமிழ் மக்கள்*

ஜனநாயக முன்னணியின் ஆரம்பகர்த்தாக்களில் முக்கியமான ஒருவர் சண்முகநாதன். வடக்கில் போர் உக்கிரமடைந்த காலத்தில் இடம் பெயர்ந்து தமிழகத்திலும், ஜேர்மனியிலும் சில ஆண்டுகள் வாழ்ந்த அவர், கடைசி ஏழு வருடங்களாக குடும்பத்துடன் கனடாவில் வாழ்ந்து வந்தார். தமது கடைசிக்காலம் வரை, சமூக நடப்புகள் மீது உன்னிப்பான அவதானமும், விமர்சனமும் கொண்டவராக வாழ்ந்ததுடன், பரந்துபட்ட நட்பு வட்டாரத்தையும் கொண்டிருந்தார். இச்சிறப்பிதழில் தோழர் சின்னத்தம்பி சண்முகநாதன் பற்றிய பல்வேறு அறிஞர்கள், சக தோழர்கள் ஆகியோர் எழுதிய நினைவஞ்சலிக் குறிப்புக்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

### 14920

**பாரதரத்னா இந்திரா.** கண.சுபாஷ் சந்திரபோஸ். கொழும்பு 11: மெய்கண்டான் வெளியீடு, 161, செட்டியார் தெரு, 2வது பதிப்பு, டிசம்பர் 1985, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1985. (கொழும்பு 11: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, 161, செட்டியார் தெரு).

(12), 42+8 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: ரூபா 15.00, அளவு: 21x14 சமீ.

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் மறைவின் முதலாம் ஆண்டு நிறைவின்போது இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. அன்னை இந்திராவின் வாழ்க்கை வரலாற்றுடன் அவரது வெளியுறவுக் கொள்கைகள் பற்றியும் இந் நூல் பேசுகின்றது. "ஆக்கபூர்மான நடுநிலைமையே" பாரதத்தின் அயலுறவுக் கொள்கை என்று உலக அரங்கில் வலியுறுத்தி வந்தவர் அவர். அரசியல், பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்தித் துறைகளில் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டுசென்ற பெருமை அவருக்குண்டு. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24445).

### 14921

**மக்கள் தலைவர் தொண்டமான் முத்துவிழா மலர்: 1992.** பெ.அ.இளஞ்செழியன் (தொகுப்பாசிரியர்). சென்னை 600 005: புலவர் பெ.அ.இளஞ்செழியன், இல. 9, சிவராமன் தெரு, திருவல்லிக்கேணி, 1வது பதிப்பு, 1992. (தமிழ்நாடு: அச்சிட்ட இடம் குறிப்பிடப்படவில்லை).

328 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 சமீ.

ஜனாதிபதி பிரேமதாசா, டத்தோஸ்ரீ ச.சாமிவேலு, கி.ஆ.பெ.விசுவநாதம், டாக்டர் ம.பொ.சிவஞானம், குன்றக்குடி அடிகளார், ஜி.கே.மூப்பனார், இராம. வீரப்பன், கி.வீரமணி, பி.வேணுகோபால், ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான், பி.மருதப்பிள்ளை, S.K.T. ராமச்சந்திரன், எஸ்.கந்தப்பன், மு.லெட்சுமணன், சை.வே.சிட்டிபாபு, சி.பாலசுப்பிரமணியன், முத்துக்குமரன், ஆ.ஞானம், மே.த.க.குத்தாலிங்கம்,

பாண்டியன், பத்மா, வி.டேவிட், T.M.சவுந்தரராஜன், பி.பி.நாராயணன் ஆகியோரின் வாழ்த்துச் செய்திகளுடன், தலைவர் தொண்டமான் பற்றிய மலரும் நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளும் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன், நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை, கவிஞர் கண்ணதாசன், எஸ்.டி.சிவநாயகம், ச.பாலசுந்தரனார், புலவர் தணிகை உலகநாதன், பெரும்புலவர் இர.திருஞானசம்பந்தர், கோவை இளஞ்சேரன், கவிஞர் முருகுசுந்தரம், கி.ஆ.பெ. விசுவநாதம், க.இராசாராம், புலவர் இளஞ்செழியன், வா.மு.சேதுராமன், இ.முத்துராமலிங்கம், கோ.மோகனரங்கன், ஐ.உலகநாதன், கரு.நாகராஜன், புரட்சிதாசன், மணிமொழியன், ந.இராமகிருஷ்ணன், கவிஞர் வி.இக்குவனம், கோ.செல்வம், ஏ.பி.இராமன், செங்கைப் பொதுவன், இரா.மணியன், உதயை மு.வீரையன், ரோஹினி, பி.பி.காந்தம், மு.தங்கராசன், பாத்தேறல் இளமாறன், தமிழப்பன், ஆ.பழனி, புலவர் கரு செல்லமுத்து, குமாரவேல், திரு.வி.க, எம்.யூசுப், எம்.கே.ஏ.ஜப்பார், மு.வரதராசனார், சிலம்பொலி செல்லப்பன், ந.இளங்கோ, மது.ச.விமலானந்தம், தி.இராசகோபாலன், சதாசிவம் வீரையா, ஆர்.ருத்திராபதி, கரந்தை கணேசன், மு.வளவன், வீ.தமிழ்மறையான், பி.அந்தோணிமுத்து, M.சோலையன், த.ஆறுமுகன், க.ப.லிங்கதாசன், எஸ். நாராயணசாமி, நடேசநாராயணன், பாத்தென்றல் முருகதாசன், ஆர்.ராஜமோகன், டாக்டர் சாம்பசிவனார், ப.அரங்கசாமி, காஞ்சி துரை.சௌந்தரராசன், அரு.கோபாலன், ஆனந்த குமார், தங்கவயல் லோகிதாசனார், புலவர் அனு. வெண்ணிலா, வீ.கே.கஸ்தூரிநாதன், வேம்பத்தூர் கிருஷ்ணன், சாத்தூர் சேகரன், சீ.ஈ.எஸ்.பெருமாள், நெல்லை அறிவன், என்.வீராசாமி, மன்னர் மன்னன், க.து.மு.இக்பால், புலவர் தமிழ்ப்பித்தன், கருவூர் பாரி, புலவர் துரை தில்லான், சுப. திண்ணப்பன், மா.வழித்துணைவன், இராம.சுப்பிரமணியன், புலவர் ப.சத்தியபாமா, திருவான்மியூர் டி.எஸ்.பாலு, நெ.அ.பூபதி, புலவர் நு.ர.ஆறுமுகன், அரங்க நாராயணசாமி, ஆ.வே.இராமசாமி, கவிஞர் இரவி பாரதி ஆகியோரின் கவிதைகளும் கட்டுரைகளும், தொண்டமானின் முதல் சண்டமாருதம்: கம்பளை மாநாட்டுப் பேச்சு, கலிங்கம் வென்ற கருணாகரனின் இலங்கை வாரிசு: தலைவர் தொண்டமான் நூலிலிருந்து, தொண்டமான் அறநிதியம் ஆகிய வரலாற்று குறிப்பேடுகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 42301).

## 923.5 பொது நிர்வாகத்துறையினர்

### 14922

**இப்றாஹீமின் இலட்சியக் கனவுகள்.** ஏ.எம்.எம்.அலி (தொகுப்பாசிரியர்). கிண்ணியா 4: ஷரீபா வெளியீட்டகம், 118, நகரசபை வீதி, 1வது பதிப்பு, 2017. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).

86 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 950., அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-955-38105-0-2.

ஆசிரியரின் வாழ்க்கை வரலாறு இந்நூலில் அவரது வரலாற்றுக் குறிப்புகள்,

*புகைப்படங்களின் உதவியுடன் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அறிமுகம்: ஏ.சீ.எம். இப்றாஹீம், பாடசாலைக் காலம், வேலை தேடிய நாடோடியாக, அரச சேவையும் அரசியலும், கணக்காய்வுத் திணைக்களத்தில் சாதனையும் வேதனையும், வெளிநாட்டு அமைச்சில் ஆரம்ப காலம், சீனாவில் சிலகாலம் 1988-1991, தாய்லாந்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில், சவூதி அரேபியாவில், சிங்கப்பூர் சீமையில் சிலகாலம், இளைப்பாறிய பின்னர் இன்று எனப் பல்வேறு தலைப்புகளினூடாக இவரது வாழ்க்கைப் பயணம் புகைப்பட ஆதாரங்களுடனும் பத்திரிகைச் செய்திக் குறிப்புகளின் நிரூபணங்களுடனும் தொகுக்கப்பட்டுள்ளது. ஏ.சீ.எம். இப்றாஹீம் இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திர சேவையில் இணைந்து, சீனக்குடியரசின் தலைநகரிலும், தாய்லாந்து, சவூதி அரேபியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் சேவையாற்றி இளைப்பாறியவர்.*

## 923.6 சமூக சேவகர்கள்

### 14923

**சொல்லின் செல்வர் இர. சிவலிங்கம்.** எச்.எச்.விக்கிரமசிங்க (மலராசிரியர்). *இலங்கை: அமரர் இர.சிவலிங்கம் நினைவு மலர் வெளியீட்டுக்குழு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

*(6), 50 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.*

*அமரர் இர. சிவலிங்கம் (17.05.1932-09.07.1999) அவர்களின் மறைவையொட்டி 09.08.1999 அன்று வெளியிடப்பெற்ற நினைவு மலர். மலர் வெளியீட்டுக் குழுவில் தை.தனராஜ், ஆர்.இராமலிங்கம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இம்மலரில் எம்.ஜி.வென்சஸ்லோஸ், ஆர்.சிவகுருநாதன், ஆ.சிவநேசச்செல்வன், எம். வாமதேவன், ராஜஸ்ரீகாந்தன், தெளிவத்தை ஜோசப், இரா.யோகராஜன், தை.தனராஜ், சோ.சந்திரசேகரம், எஸ்.டி.சிவநாயகம், இளையதம்பி ஈஸ்வரலிங்கம், இ.தம்பையா, ஆர்.இராமலிங்கம், பி.முத்தையா, சு.திருச்செந்தூரன், அ.முகம்மது சமீம், மு.நித்தியானந்தன், பீ.மரியதாஸ், செ.நவரட்ன, ஆகியோரின் மலரும் நினைவுகளும், மு.சிவலிங்கம், மலர் வெளியீட்டுக் குழுவினர், தமிழோவியன், ஸ்ரீகரா, கேகாலை எஸ்.கிருஷ்ணன், ஆகியோரின் நினைவஞ்சலிக் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13875).*

## 923.61 விடுதலைப் போராளிகள்/இராணுவ வீரர்கள்

### 14924

**இன்றைய உலகில் உஸாமா பின்லேடன்.** எம்.எஸ்.முபாரக். இலங்கை: தளம் வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).

*32 பக்கம், விலை: ரூபா 30.00, அளவு: 21x14 சமீ.*

இஸ்லாமிய போராளியும் உலக இஸ்லாமிய இளைஞர்களால் தலைவனாகப் போற்றப்படுபவருமான உஸாமா பின் லேடனின் வாழ்க்கைக் குறிப்பு மற்றும் அமெரிக்கா மீதான பயங்கரவாதத் தாக்குதல்கள், அமெரிக்காவின் கோழைத்தனமான பதில் நடவடிக்கைகள் பற்றி இச்சிறுநூலின் மூலம் விளக்கமளிக்க ஆசிரியர் முயன்றுள்ளார். இந்நூலில் தீவிரவாதம் பற்றி, உஸாமா பின் லேடன் வாழ்க்கைச் சுருக்கம், சீ.ஐ.ஏ உடனான உஸாமாவின் தொடர்பு, அமெரிக்கா மீதான தாக்குதல்களும், உஸாமா மீதான குற்றச்சாட்டுகளும், அமெரிக்கா ஏன் தாக்கப் படவேண்டும் அமெரிக்கா மீதான தாக்குதல்-ஓர் இஸ்லாமியக் கண்ணோட்டம் ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33625).

## 14925

**நீண்ட காத்திருப்பு.** கொமடோர் அஜித் போயகொட, சுனிலா கலப்பதி (ஆங்கில மூலம்), தேவா (தமிழாக்கம்). சென்னை 600005: வடலி வெளியீடு, பி-55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1வது பதிப்பு, ஜனவரி 2020. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).

208 பக்கம், விலை: இந்திய ரூபா 220., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-1-7752 392-7-7.

கொமடோர் அஜித் போயகொட பணி ஓய்வு பெற்ற ஒரு கடற்படை அதிகாரி. 1974 முதல் 2004 வரை இவர் கடற்படையில் பணியாற்றினார். 1994இல் விடுதலைப் புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்டு 2002இல் விடுதலையான இவர் தனது அனுபவங்களை விரிவாகப் பேசும் முதல் நூல் இது. கொமடோர் அஜித் போயகொட சொல்லக் கேட்டு சுனிலா கலப்பதி என்ற அரங்கியலாளர் A Long Watch என்ற பெயரில் எழுதிய இப்பிரதி, தேவாவினால் தமிழாக்கம் செய்யப் பட்டுள்ளது. நவீன ஹிட்லர்களின் கீழ்- அடக்குமுறையாளர்களின் கீழ் இராணுவ ஆட்சிகளில் கூட-ஆளும் வர்க்கத்துடன் மௌனமாய் உடன்பட்டவர்களாலோ தத்தம் வேலையைப் பார்த்தவண்ணம் கடந்து செல்பவர்களாலோ அன்றி-தமது வரையறைகளுக்குள்ளும் தமக்கு நியாயமெனப் பட்டதை செய்பவர்களாலேயே மனித உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. அரச இயந்திரத்தால் அனுமதிக்கப்பட்ட கலவரங்களின் கீழ் அயலவர்-அந்நியர் உதவிகளுடன் தப்பியவர்களிடமிருந்து அத்தகைய பல கதைகள் எம்மிடமும் உண்டு. கொமடோர் அஜித் போயாகொடவின் நூலின் மையக்கூறும் அது தான். போரில் தனிமனிதர்களின் பங்கு என்ன என்பது நூலினது ஆதார வினாவாக அவரது பணிவாழ்வின், சிறைவாழ்வின் அனுபவங்கள் ஊடாக விரிகிறது. பலாலித்தளம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் படையினரிடம் அகப்பட்ட போராளி கெனடியை மீட்பதற்காக, விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கைதிகள் பரிமாற்றத்தில் விடுவிக்கப்பட்டவர் "சாகரவர்த்தனா" கப்பல் கப்டன் அஜித் போயகொட. 1994 ஆம் ஆண்டு மன்னார் கடற்பரப்பில் வைத்து கடற்புலிகள் மேற்கொண்ட கரும்புலித்தாக்குதலில் பிடிக்கப்பட்ட இவர், ஏழு வருடங்களின் பின்னர் விடுதலைப்புலிகளினால் விடுவிக்கப்பட்டவர். கடலில் வைத்து கைதுசெய்யப்பட்ட

*அஜித் போயகொட புலிகளுடன் இணைந்து செயற்படுகிறார் என்று சிங்களபடைத்தரப்பில் மாத்திரமல்லாது ஊடகங்களின் வாயிலாக மக்கள் மத்தியிலும் பிரச்சாரப்படுத்தப்பட்டு உண்மையாக்கப்பட்டிருந்த நிலையில், ஏழு வருடங்களின் பின்னர் தென்னிலங்கை திரும்பும் அஜித் முகங்கொடுக்கின்ற மிகப்பெரிய மன உளைச்சலின் விளைவாகவே இந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது. மாலுமிகள் நித்திரைகொண்டிருந்தபோது கடற்புலிகள் தாக்கி மூழ்கடித்த கப்பலில் இருந்து பாய்ந்து, கடலில் மிதந்துகொண்டிருந்த தன்னை பிடித்துக்கொண்டு கரைக்கு கொண்டுபோனபோது, சூசை வந்து அடையாளம் காணுவதிலிருந்து - கிளாலி வழியாக யாழ்ப்பாணத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு கொக்குவில், மானிப்பாய், நல்லூர், மிருசுவில், வன்னி என்று 94 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை - புலிகள் இராணுவ ரீதியாக எழுச்சிகொண்டுவந்த முழுக்காலப்பகுதியிலும் - அவர்களோடு ஒரு கைதியாக பயணிக்கிறார் அஜித் போயகொட. தான் கைதுசெய்யப்பட்டிருந்த காலப்பகுதியில் அனுபவித்த உண்மைகளை இயன்றளவு மறைக்காமல் எழுதியிருப்பது இந்த நூலுக்கு ஒரு பெறுமதியை கொடுக்கிறது.*

## 923.7 கல்வியியலாளர்கள்

### 14926

**இலங்கையில் முஸ்லிம் கல்வி: ஷாபிமரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்.** *ஏ.எம். நஹியா. கொழும்பு: அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு, 1வது பதிப்பு, 2018. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

xxiv, *336 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 950., அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *978-955-38131-0-7.*

*ஷாபியைப் புரிந்துகொள்ளல், அளுத்கம ஸாஹிறாவின் சிற்பி, கொழும்பு ஸாஹிறாவின் மீள் நிர்மாணம், கொழும்பு ஸாஹிறாவின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, கொழும்பு ஸாஹிறாவின் இரு வரலாற்றுப் பதிவுகள், ஒறாபிபாஷா ஞாபகார்த்தம், ஜாயா நினைவும் நிதியமும், முஸ்லிம் கல்வி மாநாட்டின் உயிர்நாடி, முஸ்லிம் கல்வி, சமயக் கல்வியின் காவலன், அரபு மொழி மேம்பாடு, பல்கலைக்கழகக் கல்வியில் அக்கறை, யூனானி வைத்தியத்துறையில் கரிசனை, கல்விக் கருத்தும் சிந்தனையும், தொழிற்கல்வி, எல்லோருக்கும் கல்வி, சுயாதீன தனியார் பாடசாலைகள், மொழிக் கொள்கை, தேசிய கல்விப் பணி, ஷாபியின் அரசியலும் முஸ்லிம் கல்வியும், நிறைவுரை ஆகிய 21 இயல்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 64494).*

### 14927

**உயர்ந்த மனிதர்.** *சரோ வர்ணன். கனடா: சரோ வர்ணன், டொரன்ரோ, 1வது பதிப்பு, ஐப்பசி 2010. (கனடா: விவேகா அச்சகம், 60,* Barbados Blvd, #6, Scarborough*).*

*130 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:*

21.5x14 சமீ.

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் முன்னாள் அதிபரும் தமிழ் அறிஞருமான கனகசபாபதி அவர்களின் வாழ்வும் பணிகளும் பற்றிய நூல். திரு. பொன்னையா கனகசபாபதி அவர்கள் மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றியிருந்தார். முன்னர் ஏழாலை மத்திய மகாவித்தியாலயத்திலும், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும் அதிபராகக் கடமையாற்றியிருந்தார். அதன் பின் நைஜீரியாவில் கடமையாற்றி விட்டு அங்கிருந்து 1987 இல் கனடா வந்த இவர் 1988ஆம் ஆண்டு முதல் கனடாவில் வாழ்ந்து 2014 மார்கழியில் அங்கு அமரத்துவமடைந்தார். இந்நூல் அவரது மறைவிற்கு நான்காண்டுகளுக்கு முன்னர் அவரது பவள விழாவையொட்டி வெளியிடப்பட்டிருந்தது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 225678).

### 14928

**என் அக்காவின் கதை.** என்.சண்முகலிங்கன். தெல்லிப்பழை: நாகலிங்கம் நூலாலயம், நகுலகிரி, மயிலிட்டி தெற்கு, 1வது பதிப்பு, நவம்பர் 2014. (யாழ்ப்பாணம்: ஹரிகணன் பிரின்டர்ஸ், காங்கேசன்துறை வீதி).

v, 68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

1988இல் தன் தந்தையின் (அமரர் நாகலிங்கம்) மறைவின்போது "என் அப்பாவின் கதை" என்ற நூலையும், 2004இல் தன்தாயின் (திருமதி நகுலேஸ்வரி நாகலிங்கம்) மறைவின் போது "என் அம்மாவின் கதை" என்ற நூலினையும் எழுதியவர் என். சண்முகலிங்கன். 2014இல் தன்சகோதரியின் பிரிவின்போது "என் அக்காவின் கதை" என்ற இந்நூலை எழுதியுள்ளார். அக்கா என்ற ஆளுமையின் வகிபாகத்தையும் தன் வரலாற்றுடன் இணைத்து கலைப்பெறுமானச் செறிவுடன் இந்நூலைத் தன் அக்காவின் கதையாக (பேராசிரியை திருமதி மனோ சபாரத்தினம்) எழுதியுள்ளார். கல்வெட்டுப் பாரம்பரியத்தின் பரிணாம வளர்ச்சியாக இந்நூல் அமைகின்றது. நாகலிங்கம் நூலாலயத்தின் பன்னிரண்டாவது நூலாக இது வெளியிடப்பட்டுள்ளது.

### 14929

**கருணையோகம்: பேராசிரியர் செ.யோகராசாவின் பணிநயப்பு விழா சிறப்பு மலர் 2016.** மலர்க் குழு. மட்டக்களப்பு: பேராசிரியர் செ.யோகராசா பணிநயப்பு விழாச்சபை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2016. (மட்டக்களப்பு: வணசிங்கா பிரின்டர்ஸ், 496ஏ, திருமலை வீதி).

258 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் செ.யோகராசாவின் பணிநயப்பு விழா சிறப்பு மலராக உதித்திருக்கிறது கருணையோகம். கல்வி, இலக்கியம், ஆய்வு என விரிந்திருந்த பேராசிரியரின் திறன் வீச்சுக்களையெல்லாம் ஒவ்வொரு வரிகளிலும் அள்ளியெடுத்து வந்திருக்கிறது. பதிப்புரை, ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், தலைவரின் செய்தி, மனப்பதிவுகள், கட்டுரைகள், செவ்வி, பேராசிரியரின் ஆக்கங்களும் அவர் பற்றிய ஆக்கமும் ஆகிய பிரிவுகளில்

இம்மலர் வடிவமைக்கப்பட்டுள்ளது. வடக்கில் பிறந்து, மலையகத்தில் வசித்து, கிழக்கில் பணிசெய்த ஒரு கல்வியியலாளரின் வாழ்வும் பணிகளும் இங்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. மலர்க்குழு உறுப்பினர்களாக றூபி வலன்ரீனா பிரான்சிஸ், வி.மைக்கல் கொலின், ஓ.கே.குணநாதன், சு.முரளிதரன், சோலைக்கிளி, மேமன்கவி, சு.ஜெயச்சந்திரன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

## 14930

**குருவுக்கான காணிக்கை: சி.க.கந்தசுவாமி.** நித்தியலட்சுமி குணபாலசிங்கம், செ.வேலாயுதபிள்ளை (மலராசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பழைய மாணவர் சங்க ட்ரஸ்ட், கொக்குவில் இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, 2004. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).

v, 69 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் சி.க.கந்தசாமி (29.12.1915-21.04.2004) அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட சிறப்பு மலர். நூலாசிரியர்களின் மனத்திரையிலிருந்து (நித்தியலஷ்மி குணபாலசிங்கம்), நினைவு மலர் வெளியிடுவதற்கு உதவி புரிந்தோர், A Tribute to the Late Mr. C. K. Kanthaswami (Dr. J. R. Chandran), Six decades of dedicated service (S. Sriranjan), Pursuit of Excellence (K. Kanthapillai), Mr. C. K. Kanthaswami the Builder of Kokuvil Hindu College (S. Ratnapragasam), C. K. K. : To Sir with Love! (S. Sivanayagam), C. K. Kanthaswami Teacher and Colleague (S. Sinnatamby), C. K. K. : Friend- Guide- Teacher (Dr. Mrs. Thampu Kumarasamy), Late Mr. C. K. K. Kandasamy (N. Sivasubramaniam), Chinnappah Kanagaratnam Kanthaswami (K. Thillainathan), C. K. K. My Mentor and Friend (M. V. Theagarajah), Tribute to C. K. K. (K. Ketheeswaran), Our Loved C. K. K. (Kanthiah Sivanantham), Our late Principal Mr. C. K. Kanthaswami (Mrs. S. Supramaniam), கொக்குவில் இந்துவின் சிற்பி (எஸ்.இரத்தினப்பிரகாசம்), அதிபரின் செய்தி (பொ.கமலநாதன்), அவர் மறையவில்லை (திரு. திருமதி. கந்தப்பிள்ளை), சி.கே.கே (வ.கணேசலிங்கம்), நான் கண்ட சி. கே. கேயர் (மாணிக்கம் சுப்பிரமணியம்), மறைந்ததொரு மாணிக்கம் (சுபத்திரா இராமநாதன்),எமது அதிபர் (செ.செல்வகுமாரன்), அதிபர்களுக்கு வழிகாட்டி சி. கே. கே. (இ. நடராசா), அமரர் திரு. சி.கே.கந்தசாமி (சு.நாகலிங்கம்), சி.கே.கே. எனும் மூன்றெழுத்து மந்திரம் (நித்தியலக்ஷ்மி குணபாலசிங்கம்), எனது குரு (அ.பஞ்சலிங்கம்), உத்தம அதிபர் (த. இ. பால்சுந்தரம்), மூன்றெழுத்தின் மூச்சு (சுடர் இ.மகேந்திரன்), அமரர் திரு. சி. கே.கந்தசாமி அவர்கள் (அ.விநாயகமூர்த்தி), கொக்குவில் இந்துக் கல்லூரியில் முப்பதாண்டுக் காலம் ஒப்பிலாப் பணிபுரிந்த ஓய்வு பெற்ற அதிபர் கந்தசுவாமி அவர்களின் சேவை நலம் பாராட்டும் வாழ்த்துப்பா (செ.வேலாயுதபிள்ளை), கொக்குவில் இந்துக் கல்லூரியின் "ஜவகர்" சி.கே.கந்தசுவாமி - பழைய மாணவர் சங்கம் (கனடா), What Prof. M. Suntharalingam said at a meeting of Old Students in U. K. ஜேர்மனியில் இருந்து (பழைய மாணவர் சங்கம்), மறைந்த உயர்திரு சி. கே. கந்தசுவாமி அவர்களைப் பற்றி நாம் கேட்டறிந்தவை (பழைய மாணவர்

சங்கம், நோர்வே) ஆகிய அஞ்சலி உரைகளும், வினைவுக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34092).

### 14931

**சண்- பன்முகப் பதிவுகள்: அதிபர் திரு. வே.சண்முகராஜா: வாழ்த்து மலர்.** மலர்க் குழு. பிலியந்தலை: மலர் வெளியீட்டுக் குழு, நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(6), 114, (18) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

தனது 38 ஆண்டுக் கல்விப்பணியை நிறைவுசெய்யும் வகையில் நுகேகொட தமிழ் மகா வித்தியாலய அதிபராகவிருந்து ஓய்வுபெற்ற வேளையில் இடம்பெற்ற பாராட்டு விழாவின்போது அதிபர் வே.சண்முகராஜா அவர்களுக்கு வழங்கப்பெற்ற வாழ்த்து மலர். தனது 17 ஆண்டு அதிபர் சேவையில் இவர் இறுதி பத்தாண்டுகளை நுகேகொட தமிழ் மகா வித்தியாலயத்திலேயே பணியாற்றியுள்ளார். இம்மலரில் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு, அறநெறி வளர்த்த அதிபர் (Ramakrishna Mission), நாம் மதிக்கும் நடுநிலையாளர் (மௌலவி சுஜப் இப்றாகீம்), முன் மாதிரியான அதிபர் - (போதகர் இன்பநாதனும் குடும்பத்தினரும்), உதவி செய்வதில் முதன்மையானவர் (வண. போதிதம்ப பிக்கு), தன்னலம் கருதாத சமூகத்தின் விடிவெள்ளி (பெ.இராதாகிருஷ்ணன்), தன்னலங் கருதா சமூக சேவையாளன் (சோ.சந்திரசேகரன்), சேவையால் உயர்ந்த செம்மல் (மா.சின்னத்தம்பி), முகாமைத்துவத்திற்கு இலக்கணம் வகுத்த அதிபர் (திருமதி க.சந்திரமோகன்), உயிரோட்டமுள்ள சிந்தனைகளால் உயர்ந்தவர் (M. Karunanithy), Devoted Teacher: Dedicated Principal (V. Shanmugarajah), கல்வி உலகிற்கு ஒரு வரப்பிரசாதம் (மா.செல்வராஜா), அறிவுத்திறனும் ஆக்கபூர்வ சிந்தனைத் திறனும் மிக்க அதிபர் (உடுவை எஸ்.தில்லை நடராசா), அஞ்சா நெஞ்சமிக்க அதிபர் (வெற்றிவேலு சபாநாயகம்), "சண்"... சில நினைவுகள் (தை.தனராஜ்), சீரிய பணியாற்றிய சிந்தனையாளர் (என். நடராஜா), பாரிதி காட்டிய வழி வந்த அதிபர் (கே. றமணி), இலங்கையில் ஆளணி விருத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பாளர் (உ. நவரத்தினம்), ஆசிரியத்துவத்திற்கு மகிமை சேர்த்தவர் (குமாரசாமி சோமசுந்தரம்), வாண்மை ரீதியாகவும் கல்வி ரீதியாவும் வெற்றி கண்டவர் (ச.நா.தணிகாசலப் பிள்ளை), மாணவ சமுதாயத்திற்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த அதிபர் திரு.சண்முகராஜா (இரா.சுந்தரலிங்கம்), கல்வியியலில் உயர் திறன்களையுடைய அனுபவ முதிர்ச்சியாளர் (ஏம்.எஸ்.ஏ.எம். முகுதார்), கடமையே கண்ணான ஆசான் (இரா.சின்னத்தம்பி), இதயத்தால் வாழ்த்துகிறேன் (T.V.மாரிமுத்து), அநீதிக்கெதிராக போராடிய போராளி (க.ஆறுமுகதாஸ்), மனித நேயமுள்ள பண்பாளன் (க.ஆறுமுகதாஸ்), நட்புக்கு இனிய நண்பர் (எஸ்.இராமகிருஷ்ணன்), சிறந்த அதிபருக்கான விருதுபெற்ற மறக்கமுடியாத அதிபர் (B.S.சர்மா), சமூகப் பணியை எதிர்கொள்ளும் உத்தமர் (மனோ ஸ்ரீதரன்), The Shan Whom I Knew (A.P.Kanapathypillai), அதிபர்... ஆசானுமாகி அன்புத் தந்தையுமானவர் (M.M.

தாஸின்), வன்னியில் நற்பணியாற்றிய சேவையாளன் (கே.வி.கே.திருலோகமூர்த்தி), கண்டிப்பும் கடமை உணர்வும் மிக்க அதிபர் (ந.தவராசா), சண்முகராசா எனும் சான்றோன் (அ.பொ.செல்லையா), A Tribute to Our Distinguished Person (P.G.Joseph), கிளிநொச்சியில் திரு. வே.சண்முகராஜா (அ.கனகரத்தினம்), அநீதியைக் கண்டு மனம் பொறுக்காதவர் (வி.சாமி), அகவை அறுபது காணும் ஆசான் வாழ்க வாழ்கவே (பா.குமாரஸ்வாமி சர்மா), அதிபர்... ஒரு நோக்கு (செல்வராணி வேதநாயகம்), கல்விப் பணியில் சிறந்த ஒரு முகாமையாளர் (கோ.பரமானந்தன்), பன்முக ஆற்றல்கள் படைத்த நல்லதோர் வழிகாட்டி (திருமதி. பவானி மகாதேவன்), இளைப்பாறும் எங்கள் செம்மலே (எம்.பி.செல்வவேல்), ஆளுமைமிக்க எம் அதிபர் (எம்.ரி.தங்கநாயகம்), மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய நெஞ்சமெல்லம் நிறைந்த அதிபர் (ே.பிரகாஸ்), விடிவுக்கு வித்திட்டவர் (B.கவிதா நிரோஷினி), தெய்வீக வாழ்வுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் (வள்ளிநாயகி கணபதிப்பிள்ளை), The Ceylon Moor Ladies' Union (Ruzaina Mahuruf), கல்விப் பணி தொடரட்டும் (த.மனோகரன்), ஓய்விலும் சேவை தொடரட்டும் (ஆர்.கணபதிப்பிள்ளை), "சண்" ஒரு அப்பழுக்கற்ற நல்லாசிரியர் (வ.திருநாவுக்கரசு), தலைசிறந்த நிர்வாகஸ்தர் (சோமசுந்தரம்), மாதா, பிதா, குருவான வழிகாட்டி (திருமதி. சோமசுந்தரம் மங்களகௌரி), இறைவன் கொடுத்த கொடை (மு.விக்னேஸ்வரி) ஆகிய மலரும் நினைவுகளின் பதிவாக இச்சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39082).

### 14932

**நாவலர் சரித்திர ஆராய்ச்சி**. பொன்.பாக்கியம். வட்டுக்கோட்டை: வட்டுக்கோட்டை தமிழ்ச் சங்கம், பண்ணாகம், சுழிபுரம், 1வது பதிப்பு, ஜுலை 1970. (யாழ்ப்பாணம்: சுசீலாதேவி அச்சகம், சித்தன்கேணி).

113 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 2.50, அளவு: 22x14 சமீ.

ஆறுமுக நாவலரின் வரலாற்றை இரு பெரும் பிரிவுகளாக விளக்கும் இந்நூலில் "சரித்திரம்", "ஆராய்ச்சி" ஆகிய இரு பிரிவுகளின் கீழ் அத்தியாயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. "சரித்திரம்" என்ற பிரிவின் கீழ் பிறப்பு, தோற்றம், கல்வி, விசேட சம்பவம் ஒன்று, கற்றவிதம், கல்வி வளர்ச்சி, ஆங்கிலப் படிப்பு, பைபிள் மொழிபெயர்ப்பு, உத்தியோக பரித்தியாகம், பதினான்கு வருசத்தின் பரமரகசியம், கற்பவை கற்றமை, கற்பித்தல், கற்பித்த நோக்கம், சைவப் பிரசங்கம், 1848ஆம் ஆண்டு, புத்தகம், அச்சுக்கூடத்துக்குப் போனவர் ஆறுமுக நாவலரானார், அச்சுக்கூடம், பத்து வருட சேவை, அச்சுக்கூடத்தில் ஒரு விசேடம், 31ஆம் வயசில் ஒரு பெருங் கிளர்ச்சி, ஆனந்த வருடத்தில் ஓர் அமைதி, நான்காவது பிரயாணம், வழியில், சென்னையில், தேவர் சந்திப்பு, மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் பாயிரம், விக்கியாபனம், திருவண்ணாமலை ஆதீனத்தில், திருவாவடுதுறையில், மூலதனம், வைதிக சைவம், ஐந்தாவது பிரயாணம், யாழ்ப்பாணத்தில், சீர்திருத்தம், உத்தம மாணவர், நல்லூர்த் திருத்தம், பிற வேலை, நல்லூர்ப் பிரசங்கம், திருக்கூட்டச் சிறப்பு, ஆட்டுக் கொலை, மூன்று பத்திரிகை, மற்றைக் கருமம், பஞ்ச நிவாரணம், மிகுதி, துவைனம், புலோலியில், கண்ணகி, பிரசங்க பூர்த்தி,

சிவபதப் பேறு ஆகிய 50 அத்தியாயங்கள் உள்ளன. "ஆராய்ச்சி" என்ற பிரிவில் சரித்திரம், யாழ்ப்பாணம், தவம், பாண்டிமழவர்குடி, ஞானப்பிரகாசர், இலங்கை காவல முதலியார், பரமானந்தர், கந்தர், நாவலர், ஆங்கில அரசு, அகநோய், கிறிஸ்த சூழல், கல்வி, கற்பவை, நோக்கும் நிலைக்களமும், நிலைக்கள சுத்தி, நீதி, பிரசங்கம், புராணபடனம், கற்பித்தல், மாணவர் பரம்பரை, வித்தியாசாலை, புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், கண்டனங்கள், பாஷை நடை, வழக்குகள், துவைனத்தை வழக்கு வைக்கும்படி நெருக்கடி செய்தது, சேர் முத்துக்குமாரசுவாமி, துணிவு, தியாகம், அச்சமின்மை, நாவலர் சுவாதீனபதி, வரிசை, நிந்தியாதவர்-நீதிமான், பஞ்சமும் நோயும், சூழல், வெகுசனவிரோதி, தர்மமும் கணக்கு வைத்தலும், நாவலர் அயாசகர், வள்ளல், டைக்கும் நாவலரும், நாவலரும் துவைனமும், சீர்திருத்தங்கள், திட்டங்கள், தமிழ்ப் புலமை (பாடத் திட்டம்), சைவசமயி, அநாசாரம், திருக்கோயிலிலும் திருவீதியிலும் செய்யத்தகாத குற்றங்கள், நாவலர் காலத்துப் புலவோர், விசாகப் பெருமாளையர், வேகத்தணிவு, தீர்ப்பு ஆகிய 54 அத்தியாயங்கள் உள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25135).

### 14933

**பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரும் முத்தமிழும்.** ஈழக் கவி. அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

40 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-79-4.

மட்டக்களப்பு காரைதீவில் 27.03.1892 அன்று சாமித்தம்பி-கண்ணம்மையார் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் சுவாமி விபுலாநந்தர். முதலில் தம்பிப்பிள்ளை என்ற பெயர்சூட்டிய பெற்றோர், பின்னர் இவருக்கு கதிர்காம முருகனின் பெயரால் மயில்வாகனன் என்று வழங்கினர். பின்னர் துறவறத்தை நாடியவேளை சுவாமி விபுலாநந்தர் என்ற பெயர் பெற்றார். இசைத் தமிழுக்கு தனது "யாழ் நூல்" என்ற இணையற்ற படைப்பை அளித்து சேவை செய்த சுவாமி விபுலானந்தர் ஈழம் தந்த அரிய தமிழ் மணிகளில் ஒருவர். யாழ் நூல் தவிர மதங்க சூளாமணி, நடராஜ வடிவம் போன்ற அரிய நூல்களையும் எழுதி இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் பெரும் புலவர் வரிசையில் தன் சுவடுகளைப் பதித்தவர். இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த உன்னதமான துறவிகளில் ஒருவர். ஆன்மீகத்தையும் தமிழையும் தன் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்த பெருமகன். கேம்பிரிட்ஜ் தேர்வில் முதல் வகுப்பில் வென்ற அவர், பின்னர் இலங்கைத் தலைநகர் கொழும்பு சென்று அங்கு ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றார். தொடர்ந்து அறிவியல் கல்வியும் கற்று அதில் பட்டயப்படிப்பு ஒன்றையும் முடித்தார். பின்னர் லண்டன் பல்கலைக்கழகத்தின் படிப்பான இளம் அறிவியல் பட்டப் படிப்பிலும் வென்றார். 28-வது வயதிலேயே கல்லூரி ஒன்றின் முதல்வர் பதவி அவரைத் தேடி வந்தது. கொழும்புக்கு அவர் படிக்க வந்த காலகட்டத்திலேயே கைலாசபிள்ளை, கந்தையாபிள்ளை உள்ளிட்ட சில முக்கிய தமிழ் அறிஞர்களிடம் நேரடியாகத் தமிழ் கற்றார். அதனால் அவர் ஆழமான தமிழறிவைப் பெற்றார். மதுரையின்

புகழ் பெற்ற தமிழ்ச் சங்கத்தின் வித்துவான் தேர்விலும் வென்றார். தமிழோடு ஆன்மீகமும் அவரை ஆட்கொண்டகாலம் இதுதான். அதற்கு மூல காரணம் கொழும்பிலிருந்த இராமகிருஷ்ண மடமும் இவரிடம் இயல்பாகவே இருந்த பாமரர்க்குத் தொண்டு செய்யும் மனப்பான்மையும்தான். 1922-ம் ஆண்டு அவர் சென்னைக்கு வந்து ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தார். மடத்தின் தமிழ் பத்திரிகையான ராமகிருஷ்ண விஜயம் மற்றும் ஆங்கிலப் பத்திரிகையான வேதாந்தகேசரி ஆகியவற்றின் ஆசிரியரானார். 1924-ம் ஆண்டு இவரது வாழ்வில் முக்கியத் திருப்பம் நேர்ந்தது. மயில்வாகனனாக இருந்த இவருக்கு சிவானந்த சுவாமிகள் என்ற துறவி, காவி உடை அளித்து சுவாமி விபுலானந்தராக்கி இராமகிருஷ்ண மடத்தின் துறவிகளில் ஒருவராக்கினார். 1925-ம் ஆண்டு மீண்டும் கொழும்புக்குத் திரும்பிய விபுலானந்தர் தன் தொண்டு வாழ்வைத் தொடர்ந்தார். 1931-ல் மீண்டும் அவர் தமிழ்நாட்டுக்கு வந்தார். அப்போது அவர் அன்று புகழ் பெற்றுவிளங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக 3 ஆண்டுகள் பணியாற்றினார். பல்கலைக்கழக தமிழ் ஆளுமைகள் தொடரில் முதலாவது நூலாக வெளிவந்துள்ள இப்பிரசுரம், ஜீவநதி வெளியீட்டகத்தின் 104ஆவது பிரசுரமுமாகும்.

## 14934

**விபுலாநந்த அடிகளாரின் வாழ்வும் வளமும்.** க.செபரத்தினம். கொழும்பு 2: கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம், 101/70, கியூ வீதி, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 2: ராஜன் அச்சகம், 31, கியூ லேன்).

(10), 72 பக்கம், விலை: ரூபா 40.00, அளவு: 21.5x14 சமீ.

இந்நூலில் விபுலாநந்த அடிகளாரின் பிறப்பிடமான மட்டக்களப்பின் வரலாற்றுச் சுருக்கமும் அவர் காலப் பின்னணியும், விபுலாநந்த அடிகளாரின் வாழ்க்கைச் சுருக்கம், அடிகளாரின் கல்விச் சிறப்பு, பள்ளிக்கூடங்கள் நிறுவிய பணி, சிவானந்த வித்தியாலயச் சிறப்புப் பணி, ஆசிரியர் பணி, பத்திரிகை ஆசிரியர் பணி, கலைச்சொல்லாக்கப் பணி, பல்கலைக்கழகப் பணி, அடிகளாரின் கல்விச் சிந்தனைகள், முடிவுரை, ஒரே பார்வையில் அடிகளாரது வாழ்க்கைக் குறிப்புகள், உசாத்துணை நூல்கள் ஆகிய 13 பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 16959).

**மேலும் பார்க்க: சிவத்தமிழ் வித்தகம்.14902**

**தமிழிசைக்கு புத்துயிர் அளித்த முத்தமிழ் வித்தகர்.14540**

## 923.8 வர்த்தகர்கள்

### 14935

**நீதியின் திலகம்: நீதிராஜா திலகவதி நினைவுமலர்-1997.** த.நீதிராஜா குடும்பத்தினர். *கொழும்பு 13: த.நீதிராஜா, 89 புதுச்செட்டித் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1997. (கொழும்பு 12: நியு லீலா அச்சகம், 182, மெசெஞ்சர் வீதி).*

*60 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.*

*யாழ். சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கைப் புகுந்தவிடமாகவும் கொழும்பு புதுச்செட்டித் தெருவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நீதிராஜா திலகவதி அம்மையாரின் நினைவாக 24.10.1997 அன்று வெளியிடப்பெற்ற நினைவுமலர். இவர் முன்னாள் செனேட்டர், மாநகர சபை உறுப்பினர், பிரபல தொழிலதிபர் நீதிராஜா அவர்களின் துணைவியாவார். இம்மலரில் நீதியின் திலகம், என் நெற்றித் திலகம் அழிக்கப்பட்டது (த.நீதிராஜா), தீர்ப்பு இறைவன் சிந்தனைக் குரியது (மகள் திருமதி பத்மினிதேவி வடிவேற்கரசன், மருகர் வீ.ஆர்.வடிவேற்கரசன்), பாச நினைவுகள் மோதுகின்றன (மருமகள் திருமதி அமிர்தாம்பிகை அருளானந்தன், மருகர் எஸ்.ரீ.எஸ்.அருளானந்தன்), கண்ணீர் சொரிந்து கொண்டே இருக்கிறேன் (மகன் நீ.தனராஜா மருமகள் ஜெயந்தி), அம்மம்மா போனதெங்கே (பேரன் திபா, பேத்திகள் ஹரி, தயா), இறை சோதியுட் கலந்தீரோ அம்மம்மா (பேரன் அர்ச்சுணா அனுஷன், பேத்தி அஞ்சணா), ஆத்ம ஜோதி ஆனீர்களோ சிறார்கள் நாம் சிலையானோம் (பேரன் மயூரன், பிரதீபன், பார்த்திபன் பேத்தி ஆதித்யா), பிஞ்சு வயதில் கொஞ்சி விளையாடிய அம்மம்மா (பேத்தி தயாஹரி வடிவேற்கரசன் பேரன் அனுஷன் அருளானந்தன்), காலன் கவர்ந்து விட்டான் (பேரன் மயூரன்), துணையாய் என்றும் வந்திடம்மா ஆகிய குடும்பத்தார் நினைவஞ்சலியுடன், திருவலிவலம், திருநீற்றுப்பதிகம், திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த தேவாரம், திருஞானசம்பந்த நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், திருக்கேதீச்சர பதிகம், திருவாசகம், மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம், சிவபுராணம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம், திருப்புகழ், சகலகலாவல்லிமாலை ஆகியவையும் தொகுக்கப்பெற்றுள்ளன. இறுதிப் பிரிவில் நீதிராஜா திலகவதி அம்மாள் சிவலோகப்பிராப்தி நினைவாஞ்சலி, ஆன்ம சாந்தி உரை, நெஞ்சத்தால் நிறைந்த திலகவதியாரை மஞ்சத்தில் வைத்த மஞ்சவனப்பதி முருகன், ஓம் சக்தியே, கிறீன்லன்ஸ் பணி அன்பர்கள் அனுதாபம், நாமாவளிகள், தேவராய சுவாமிகள் கந்தர் சஷ்டி கவசம், தேவி கருமாரியம்மன் ஸ்தோத்திரம், சிவ நாமம், வைரவர், பழனி முருகன், கணபதி, கொன்றை வேந்தன், ஆத்திச்சூடி, நாவெழாது நன்றி சொல்வோம் ஆகிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34848).*

**14936**

**நீதியின் நினைவு: தம்பிமுத்து நீதிராஜா நினைவுமலர்-11.04.1998.** த.நீதிராஜா குடும்பத்தினர். கொழும்பு 13: த.நீதிராஜா, 89 புதுச்செட்டித் தெரு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (கொழும்பு 12: லீலா அச்சகம், சின்னத்துரை பில்டிங், 182, மெசெஞ்சர் வீதி).

(6), 88 பக்கம், அட்டவணைகள், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப் படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

பிரபல வர்த்தகர் அமரர் தம்பிமுத்து நீதிராஜா அவர்களன் மறைவையொட்டி 11.4.1998 அன்று வெளியிடப்பட்ட நினைவு மலர். இம் மலரில், நீதியின் நினைவு, அனைவர்க்கும் அனையாத கலங்கரை விளக்கம், பொன் போல ஒளிரத் துணை நின்றோன், தாத்தாவின் அன்பு மழை, தோத்திரப் பாக்கள், அபிராமி அந்தாதி, மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாக சபை,, அமரர் தம்பிமுத்து நீதிராசா அவர்களின் மறைவையொட்டி அவர்களின் குடும்பத்தவர்களினால் வெளியிடும் நினைவு மலருக்கு கதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயதர்மகர்த்தாசபை சமர்பிக்கும் இரங்கல் செய்தி, திரு.தம்பிமுத்து நீதிராஜா அவர்கள் (க.விவேகானந்தன்), ஆடிய ஆன்மா அடங்கிய போது ஆடுகின்ற ஆன்மாவின் ஆன்மமொழி, இவர் புகழ் வாழ்க, ஓம் ஸ்ரீசாயிராம், மூல மந்திரம், பங்காரு அடிகளார் போற்றி மந்திரம் நூற்றியெட்டு, நூற்றியெட்டு போற்றி மந்திரம், வேண்டுதற் கூறு, வாழ்த்து, ஓம் சக்தியெ 108 போற்றித் திருவுரு, ஆதிபராசக்தி அன்னை - சரணம், ஓம் சக்தி, ஓம் சக்தி அன்னையின் அருள் மொழிகள், சுவாமி ஆத்மகணானந்தாவின் செய்தி, எமது அஞ்சலி, யு.ர்.ஆ.பௌஸி அவர்களின் இரங்கல் செய்தி, உள்ளம் கவர்ந்த உத்தமர் (பொ.கமலநாதன்), கொடைப் பெருங்கால் எம் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட அமரர் தம்பிமுத்து நீதிராசா (சோ.தி.கிருஷ்ணகுமார்), திரு.டி.நீதிராஜா (க.கேதீஸ்வரன்), நிறைவான வாழ்வு (மு.சிவசிதம்பரம்), எஸ்.சர்வானந்தா இரங்கலுரை, செனெட்டர் நீதிராஜா (நீதவான் கெ.பாலகிட்னர்), நீதியரை மறக்க முடியுமா (ஆர்.சிவகுருநாதன்),ஆத்ம சாந்தி இரங்கலுரை (சி.தனபாலா), வரலாறு படைத்த வள்ளலார் கொக்குவில் தந்த தவப்புதல்வன் அமரர் தம்பி முத்து நீதிராஜா (தம்பு மாணிக்கவாசகர்), நீதியர் புகழே வாழ்க, திரு.த.நீதிராசா சமாதான நீதிவான் உப-தலைவர் விவேகானந்த சபை, இந்து மக்களின் பேரிழப்பு (கந்தையா நீலகண்டன்), சைவ அபரக் கிரியை இயல், மரணச்சடங்கு சூர்ணோத்சவம், அஸ்தி சஞ்சயன - காடாற்று - சாம்பல் அள்ளல், சுவாமி விவேகானந்தர், நாள் தோறும் அடியிற் குறித்த நேரங்களில் இவைகளை ஓதிப் பயன் பெறுங்கள் ஆகிய தலைப்புகளில் பக்தி இலக்கியங்களும், இரங்கல் உரைகளும், கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24141).

## 924 மொழியியலாளர்கள்

### 14937

**தமிழியச் சான்றோர்.** நா.வை.குமரிவேந்தன் (இயற்பெயர்: மகேந்திரராசா). கிளிநொச்சி: குமரித் தமிழ்ப் பணிமன்றம், 84, ஜெயந்தி நகர், 1வது பதிப்பு, மார்கழி 2012. (வவுனியா: வாணி கணனிப் பதிப்பகம், இல. 85, கந்தசுவாமி கோவில் வீதி).

91 பக்கம், விலை: ரூபா 170.00, அளவு: 21x14.5 சமீ.

தமிழ்மொழியை காலம்காலமாக மொழிக்கலப்பிலிருந்து பாதுகாத்து எம்மிடம் இனிய மொழியாகக் கையளித்த சான்றோர்களை தமிழியச் சான்றோர்கள் என்கிறோம். இருண்மண்டிக் கிடந்த உலகை ஒளியேற்ற அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள், மொழியைப் பாதுகாக்க அவர்கள் மேற்கொண்ட பணிகள் போன்ற செயல்களை இந்நூல் பதிவுசெய்கின்றது. தேவநேயப் பாவாணர், ஞானப்பிரகாச அடிகள், சி.வை. தாமோதரம்பிள்ளை, சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் போன்ற சான்றோர்களின் வரலாற்றை கட்டுரைகளின் வாயிலாக அறியமுடிகின்றது. இவை என்னுரை, வாழ்கவே, தமிழ்மொழி மீட்பர் மொழிஞாயிறு, நல்லூர் வண. ஞானப்பிரகாச அடிகள், பதிப்புச் செம்மல் சி.வை.தாமோதரம்பிள்ளை, சுன்னாகம் அ.குமாரசாமிப் புலவர், தனித் தமிழில் எழுத முயலுவோம், மும்மொழிக் கல்வி, தமிழின் வரிவடிவ வரலாறு ஆகிய ஒன்பது இயல்களில் வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 52981).

### 14938

**பேராசிரியர் எம்.ஏ.நுஃமானும் மொழியியலும்.** ஈழக் கவி. அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

52 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-4676-82-4.

ஈழத்தமிழ் புலமையாளர் வரிசையில் பன்முக ஆளுமை கொண்ட பேரொளியாக பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் பிரகாசிக்கிறார். நுஃமான் பிறந்தது 10 ஆகஸ்ட் 1944 அன்றாகும். கிழக்கிலங்கையின் கல்முனைக்குடி இவர் பிறந்த இடம். இலக்கிய விமரிசகர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், எனப் பல்துறை ஆளுமை மிக்கவர். திறனாய்வு, மொழியியற் சிந்தனை, கவிதை, மொழிபெயர்ப்பு, கல்வித்துறை சார்ந்த கருத்தியல் உருவாக்கம் போன்ற பலதிறப்பட்ட பங்களிப்பைத் தமிழுக்கு இவர் வழங்கியுள்ளார். நுஃமான் தனது ஆரம்பக் கல்வியைக் கல்முனைகுடி அரசினர் ஆண்கள் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியைக் கல்முனை வெஸ்லி உயர்நிலைப் பாடசாலையிலும் கற்றார். இலக்கியமும் ஓவியம் வரைதலும் அவரது இளமைக்கால ஈடுபாடுகளாக இருந்தன. பேராசிரியர் நுஃமான் முப்பதுக்கும் அதிகமான நூல்களுக்கு ஆசிரியர். மொழியும் இலக்கியமும் (2006), மொழியியலும் இலக்கியத் திறனாய்வும் (2001), மார்க்சியமும் இலக்கியத்

திறனாய்வும் (1987), திறனாய்வுக் கட்டுரைகள் (1986), பாரதியின் மொழிச் சிந்தனைகள் (1999), இருபதாம் நூற்றாண்டு ஈழத் தமிழ் இலக்கியம், (1979), அடிப்படைத் தமிழ் இலக்கணம் (2007) ஆகியவை பேராசிரியர் நுஃமானின் முக்கியமான விமரிசன நூல்கள். மழைநாட்கள் வரும் (1983), அழியா நிழல்கள் (1982), தாத்தாமாரும் பேரர்களும் நெடுங் கவிதைகள் (1977), பதினொரு ஈழத்துக் கவிஞர்கள் (1984) ஆகிய கவிதை நூல்கள் மிகப் பரவலாக அறியப்பட்டவை. பல்கலைக்கழக தமிழ் ஆளுமைகள் தொடரில் ஆறாவது நூலாக வெளிவந்துள்ள இப்பிரசுரம், ஜீவநதி வெளியீட்டகத்தின் 109ஆவது பிரசுரமுமாகும்.

## 14939

**பேராசிரியர் தனிநாயகம் அடிகளாரும் உலகத் தமிழ் ஆய்வுகளும்.** ஈழக் கவி. அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

24 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-4676-81-7.

யாழ்ப்பாணத்தில் உள்ள கரம்பனில் பிறந்த தனிநாயகம் அடிகளார் தனது ஆரம்பக் கல்வியை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் இடைநிலைக்கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும், கொழும்பில் சென்ட் பேர்னாட் செமினறியில் தத்துவவியலில் கலைமாணிப் பட்டத்தையும் (1934), தமிழ் நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் M.Litt பட்டத்தையும் பின்னர் லண்டனில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார். 1961 இல் மலேசியா சென்று மலாயா பல்கலைக்கழகத்தில் 1969 வரை இந்திய ஆய்வியல்துறையிலே தலைமைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர் ஓராண்டு காலம் பாரிசில் பிரான்சுக் கல்லூரியிலும், ஓராண்டு காலம் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்திலும் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றினார். கத்தோலிக்க துறவியாக தனது பணியை ஆரம்பித்த தனிநாயகம் அடிகள் தமிழை முறைப்படி கற்றுத் தேர்ந்து ஒரு தமிழ் வளர்க்கும், பரப்பும் தூதராகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. Tamil Culture (தமிழ்க் கல்ச்சர்) என்ற ஆங்கில காலாண்டிதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக 1951-1959 வரை இருந்தார். அதன் மூலம் உலகெங்குமுள்ள தமிழ், திராவிட ஆர்வலரை ஒன்று சேர்க்க முற்பட்டு பெரும் வெற்றியும் கண்டார். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வெளியிட்டார். மலேசியாவில் பணிபுரியும் காலத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நிறுவுநர்களில் ஒருவராக இருந்து செயற்பட்டார். அதன் முதல் மாநாட்டினை 1966, ஏப்ரல் 16-23 தேதிகளில் மலேசிய அரசின் துணையோடு பிரம்மாண்டமான முறையில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடத்தினார். அடிகளார் இறப்பதற்கு நான்கு மாதத்திற்கு முன்னர் ஏப்ரல் 1980 இல் தந்தை செல்வா நினைவுப் பேருரையை கொழும்பில் நிகழ்த்தினார். அதே ஆண்டு மே மாதம் வேலணையில் பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்கள் எழுதிய தமிழ்மறை விருந்து நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்றார். அதன்பின், பெரிதும் உடல் நலிவுற்ற தனிநாயகம் அடிகளார், 1980 செப்டம்பர் 1 மாலை 6.30 மணியளவில்

உயிர் நீத்தார். பல்கலைக்கழக தமிழ் ஆளுமைகள் தொடரில் நான்காவது நூலாக வெளிவந்துள்ள இப்பிரசுரம், ஜீவநதி வெளியீட்டகத்தின் 107ஆவது பிரசுரமுமாகும்.

**மேலும் பார்க்க: சுவாமி விபுலானந்தரின் தமிழியல் ஆய்வுகள். 14426**

## 926 பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள்

### 14940

**நினைவழியா ஓராண்டு (An Unforgettable Year) வைத்திய கலாநிதி அமரர் நடராஜா சிவராஜா அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு.** *மலைஅரசி சிவராஜா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: திருமதி மலைஅரசி சிவராஜா, 47/3, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2020. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

vi, *108 பக்கம், புகைப்படங்கள், வண்ணத் தகடுகள், விலை: அன்பளிப்பு, அளவு: 21.5*x*14.5 சமீ.*

*வைத்திய கலாநிதி அமரர் நடராஜா சிவராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் சமூக மருத்துவத்துறையில் 1981-2003 காலகட்டத்தில் 22 ஆண்டுகள் விரிவுரையாளராகவும், முதுநிலை விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். இதில் 18 ஆண்டுகள் துறைத்தலைவராகவும் பணியாற்றியுள்ளார். 2003இலிருந்து 2013வரையிலான போர்க்காலச் சூழலில் ஐக்கிய நாடுகள் உலக சுகாதார மையத்தின் வட மாகாணத்துக்கான களப்பணி ஆலோசகராகவும் இணைப்பாளராகவும் பணியாற்றியவர். அவரது மறைவின் முதலாம் ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வின் போது இந்நூல் வெளியிடப்பட்டது. இம்மலரில் கடந்த ஆண்டு மறைந்த அமரர் நடராஜா சிவராஜா அவர்களின் அஞ்சலி நிகழ்வின்போது, 10.03.2019 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட ஹோவர் விரிவுரை மண்டபத்தில்* (Hover Auditorium) *பல்வேறு பிரமுகர்களால் ஆற்றப்பட்ட அஞ்சலி உரைகளின் உரைவடிவம் தொகுத்துத் தரப்பட்டுள்ளது. அமரர் சிவராஜாவின் மறைவையொட்டி உலக சுகாதார ஸ்தாபனத்தின் அலுவலர்களால் உருவாக்கப்பட்ட* In Loving Memory of Dr. Sivarajah *என்ற அஞ்சலி உரைக் குறிப்பேட்டின் பக்கங்களும்,* Memorable moments with Dr. Sivarajah *என்ற தலைப்பில் உலக சுகாதார நிறுவனத்தின் உயர் அதிகாரியாகப் பணியாற்றிய* Dr.Kolitha Wickramage *அவர்களின் அமரர் சிவராஜா தொடர்பான புகைப்பட நினைவாவணமும் பின்னிணைப்புகளாக இடம்பெற்றுள்ளன.*

## 927 கலைஞர்கள்

### 14941

**ஈழத்து தமிழ்க் கலைஞர்கள்: இசை, நடனம், நாடகம், ஓவியம், வாத்தியம், சிற்பம், கூத்து, சினிமா, கலைஞர்கள்-2000.** *எஸ்.சிவானந்தராஜா. பண்டத்தரிப்பு:*

எஸ்.சிவானந்தராஜா, இந்துக் கல்லூரி வீதி, செட்டிகுறிச்சி, 1வது பதிப்பு, டிசம்பர் 2018. (சங்கானை: சாய்ராம் பிரிண்டர்ஸ்).

iv, 104 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-38461-2-9.

கலை, கலைகளும் எழுத்தாளர்களும், கலைகள் தொடர்பாக எழுதிய எழுத்தாளர்கள், கலைஞர்கள் தொடர்பாக எழுதிய எழுத்தாளர்கள், நாடகம்-கூத்து தொடர்பாக எழுதிய எழுத்தாளர்கள், இசை பற்றிய நூல்களை எழுதிய எழுத்தாளர்கள், ஈழத்து வாக்கேயகாரர்கள், ஈழத்து வாக்கேயகாரர்களின் ஆக்கங்கள், இசைக்கருவிகள் பற்றி எழுதிய எழுத்தாளர்கள், பரத நாட்டியம் பற்றி எழுதிய எழுத்தாளர்கள், சிற்ப-ஓவிய-சித்திர எழுத்தாளர்கள், இலங்கையின் கலை வளர்ச்சிக்கு ஏனைய நாடுகளின் பங்களிப்பு, இலங்கை வானொலியின் ஒலிபரப்பு, கலைஞர்களை இனங்காணுதல், இசையமைப்பாளர்கள், இசைச் சொற்பொழிவாளர்கள், ஹார்மோனியக் கலைஞர்கள், வில்லிசைக் கலைஞர்கள், வீணையிசைக் கலைஞர்கள், புல்லாங்குழல் இசைக் கலைஞர்கள், வாய்ப்பாட்டிசைக் கலைஞர்கள், வயலின் இசைக் கலைஞர்கள், மிருதங்க இசைக் கலைஞர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், தவில் இசைக் கலைஞர்கள், ஏனைய இசைக்கருவிகள், மெல்லிசைப் பாடகர்கள், இசை நாடக கூத்து கலைஞர்கள், நாடகக் கலைஞர்கள், சிற்பாசிரியர்கள், ஓவியக் கலைஞர்கள், திரைப்படக் கலைஞர்கள், நடன-நாட்டியக் கலைஞர்கள் ஆகிய பிரிவுகளின் கீழ் ஈழத்துத் தமிழ்க் கலைஞர்கள் பற்றிய விபரங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

### 14942

**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் பரிசளிப்பு விழாவும் கலைஞர்கள் கௌரவிப்பு விழாவும்-1998.** செல்லையா மெற்றாஸ்மயில் (மலர் ஆசிரியர்). யாழ்ப்பாணம்: பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம், 12/1, மூத்த விநாயகர் வீதி, கச்சேரி-நல்லூர் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 1998. (யாழ்ப்பாணம்: கத்தோலிக்க அச்சகம், நல்லூர்: மீனாட்சி அச்சகம், 315 கச்சேரி-நல்லூர் வீதி).

152 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

யாழ்ப்பாணம்- பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம், 26.12.1998, 27.12.1998 ஆகிய தினங்களில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கலைஞர் கௌரவிப்பையும், பரிசளிப்பு விழாவையும் விழாவாகக் கொண்டாடியிருந்தனர். அன்றைய தின நினைவாக வெளிவந்துள்ள சிறப்பிதழ் இதுவாகும். கழகக் கீதம், ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகளுடன் அன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவும் கலைஞர் கௌரவிப்பு விழாவும் பற்றிய செய்திகளுடன், பரிசளிப்பு நிகழ்வுகள், கலைஞர்களுக்கு மகுடம் அன்பளிப்புச்செய்து கௌரவிப்பவர்கள், இசைநாடக, நாட்டுக்கூத்துப் போட்டியில் பங்குபற்றிய 500க்கு மேற்பட்ட கலைஞர்களில் சிறந்த நடிகர்களாக தெரிவு செய்யப்பட்டு பாராட்டுப்பத்திரம் பெறுபவர்கள் பற்றிய விபரங்களும், வரலாறாகும் கலைஞர்கள் பற்றிய குறிப்பும் இடம்

*பெற்றுள்ளன. இவ்விழாவில் கௌரவம் பெறும் இசை நாடகக் கலைஞர்களான நீ. வின்சென் டி போல், கலாபூசணம் அ. முருகவேள், நா. சின்னத்துரை, வி.ரி. செல்வராசா, சின்னத்தம்பி கனகன், கார்த்திகேசு மதியாபரணம், ரி.எம். அந்தோனிப்பிள்ளை, வஸ்தியாம்பிள்ளை ஜேக்கப், அ. பாலதாஸ், ஆசீர்வாதம் மரியதாஸ், வடிவேலு செல்வரத்தினம், ம.பொ.தைரியநாதன், செ.இரத்தினகுமார், சிதம்பரம் செல்வராசா, கதிர்காமு இரத்தினம், வி.என்.செல்வராசா, இராமன் மார்க்கண்டு, சி. தார்சீசியஸ், ஆ.சோதிலிங்கம், அ. ஞானகாந்தன், காத்தவராயன் கூத்துக் கலைஞர் சடையன் சிவஞானம், வே. நந்தகோபாலன், சீரணியூர் செல்வராஜா ஆகியோர் பற்றிய விரிவான வாழ்வும் பணிகளும் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36526).*

## 927.8 இசைக்கலைஞர்கள்

### 14943

**சங்கீத மகான்களும் எம் மண்ணின் சங்கீதக் கலைஞர்களும்.** *இ.குமாரசாமி சர்மா. யாழ்ப்பாணம்: பிரம்மஸ்ரீ கு.நந்தகோபன், 15, பி.ஏ.தம்பி லேன், வண்ணார் பண்ணை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: எவகிறீன் அச்சகம், இல. 693, காங்கேசன்துறை வீதி).*

xviii, *96 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*15 சமீ.*

*கர்நாடக சங்கீத முன்னோடிகள், இசை மேதைகள், வித்துவான்கள், வாழ்ந்துவரும் கலைஞர்கள் பற்றிய விபரங்களைத் தாங்கியதாக இந்நூல் 15 பிரிவுகளில் தகவல்களை உள்ளடக்குகின்றது. கர்நாடக சங்கீத இசை முன்னோடிகள், தமிழ்நாட்டில் சங்கீதம், தென் இந்திய இசை மேதைப் பாடகர்கள், தமிழக வயலின் கலைஞர்கள், தமிழக மிருதங்க வாத்திய கலைஞர்கள், இந்திய சங்கீத மேதைகளின் மகத்துவம், நமது நாட்டு இசைப் பாடகர்கள், இசை மன்றங்கள், நமது நாட்டு வயலின் மிருதங்க வாத்தியக் கலைஞர்கள், பரத நாட்டியக் கலைஞர்கள், தமிழ்நாட்டில் நாதஸ்வர, தவில் கலைஞர்கள், எம் மண்ணின் நாதஸ்வர தவில் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் சிலரின் சிறப்புக்கள், சங்கீதக் கலை எதிர்காலம், பிரபலம் பெற்ற சில சங்கீதப் பாடல்கள் ஆகிய பிரிவுத் தலைப்புகளில் தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.*

## 927.92 நாடகக் கலைஞர்கள்

### 14944

**ஈழத்து இசை நாடக மரபு வளர்ச்சியில் அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா: ஆய்வு நூல்.** *குயீன் ஜெஸிலி கலாமணி. பருத்தித்துறை: ஜீவநதி வெளியீடு, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, தை 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).*

viii, 96 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14 சமீ.

17.08.1988இல் அமரரான அல்வாயைச் சேர்ந்த கலைஞர் எஸ்.தம்பிஐயா அவர்களின் வாழ்வும் ஈழத்து இசை நாடக வளர்ச்சியில் அன்னாரின் பங்களிப்பும் பற்றிய ஆய்வு இது. சங்கீதம் முறையாகப் பயின்றதொரு நாடகக் கலைஞராகவும், சோதிடராகவும், சமூக சேவையாளருமாக அறியப்பட்டவர் இவர். இவ்வாய்வினை அறிமுகம், யாழ்ப்பாண இசை நாடக மரபின் வரலாறு, ஈழத்து இசை நாடக வரலாற்றை பதிவு செய்தலில் எழும் சிக்கல்கள், அண்ணாவியார் எஸ். தம்பிஐயாவின் ஆளுமை உருவாக்கம், ஈழத்து இசை நாடக வரலாற்றில் அண்ணாவியார் எஸ்.தம்பிஐயாவின் பங்களிப்புகள் (அறிமுகம், இசை நாடக மரபை நிறுவ உதவியமையும் முன்னணிக் கலைஞர்களின் உருவாக்கத்தில் பங்களிப்புச் செய்தமையும், நேர்த்திக்காக இசை நாடகங்களை மேடையேற்றும் மரபைப் பேணத் துணை நின்றமை, அண்ணாவியார் எஸ்.தம்பிஐயாவின் இசை நாடக அரங்க வகிபாகங்கள் - நடிகர், அண்ணாவியார், நாடகாசிரியர், ஒப்பனைக் கலைஞர், ஈழத்தில் ஸ்பெஷல் நாடக மரபை நெறிப்படுத்தியமை), நிறைவுரை ஆகிய இயல்களில் விரிவாக குயீன் ஜெஸிலி கலாமணி எழுதியுள்ளார். திருமதி குயீன் ஜெஸிலி கலாமணி அவர்களின் மணிவிழாவை முன்னிட்டு, அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானத்தில் 25.1.2018 அன்று வெளியிடப்பட்ட நூல் இதுவாகும். இந்நூல் 94ஆவது ஜீவநதி பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65187).

## 14945

**நாடகக் கலைஞர் ஏ.ரி.பொன்னுத்துரை: வெள்ளிவிழா மலர்-1974.** சி.கணபதிப்பிள்ளை (பதிப்பாசிரியர்). தெல்லிப்பழை: குரும்பசிட்டி சன்மார்க்க சபை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1974. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

xxiv, 52 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

பதிப்புரை (பண்டிதர் சி.கணபதிப்பிள்ளை), ஆசியுரை (சு.து.ஷண்முகநாதக்குருக்கள்), வாழ்த்துரைகள் (கலாநிதி சு.வித்தியானந்தன், கலையரசு க.சொர்ணலிங்கம், க.கைலாசபதி, செ.சண்முகநாதன், கா.சிவத்தம்பி, சி.சிவபாதசுந்தரம், இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், ச.சிதம்பரப்பிள்ளை, பொ.சோமசுந்தரம், தங்கம்மா அப்பாக்குட்டி, வ.பொன்னம்பலம், பெ.செல்வரத்தினம், வெ.சுந்தரமூர்த்தி, கனக செந்திநாதன், க.சொக்கலிங்கம், வி.கந்தவனம், சி.சிவசரவணபவன், காரை செ.சுந்தரம்பிள்ளை, செ.கதிரேசர்பிள்ளை, க.வை.தனேஸ்வரன், வை.பொன்னையா, எஸ்.எஸ்.கணேசபிள்ளை, கமலாலயம், அரியாலையூர் கவிஞர் வே.ஐயாத்துரை) ஆகியவற்றைத் தொடர்ந்து, இம்மலரில் மேடை ஏற்றமும் மேன்மக்கள் ஆதரவும், கன்னிப் படைப்பொன்று சன்மார்க்க சபை நிதிக்கு, சென்னை மாநகரில் சேர்ந்திட்ட அனுபவங்கள், தாகம் என்ற ஓரங்க நாடகத்தில் என் பங்கு, "இருமனம்" நாடகமும் "ஈழகேசரி" விமர்சனமும், "கற்புக்கனல்" மூலம் தேவனும் யானும்,

"லையனல் வென்ட்" தியேட்டரில் கொடிகட்டிப் பறக்கின்றேன், இருபத்தைந்து அரங்குகளில் பவனி வந்த "நிறைகுடம்", "பண்பின் சிகர"மும் "பாசக் குர"லும், ஆறு நாடகங்களுள் "ஆயிரத்தில் ஒருவர்", மாணவர் மத்தியிலே கலையுணர்வு ஊட்டுகிறேன், "ஆராமுது அசடா"வில் "பாஸ்கர்" பாத்திரம், "லும்பினித் தியேட்டரில் இரு தடவை "இறுதிப் பரிசு", "நாடகம்" என்ற ஓரங்க நாடகம், வானொலி நாடகமும் "தாளக் காவடி"யும், கலைக்கழகப் போட்டியில் பெற்ற சில பரிசில்கள், நூல் வடிவில் எனது நாடக ஆக்கங்கள், ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலமும் நாடகக் கருத்தரங்கங்களும், நாடகக் கட்டுரைகள் ஏடேறி வந்தன, சிந்தையை ஈர்த்த சில சிங்கள நாடகங்கள், விமர்சனத்தை ஊக்கி நாடகத்தை வளர்த்தவர்கள், காவியப் பரிசும் கருத்துப் பரிவர்த்தனையும், நாடக மேடையில் நாதஸ்வரக் கலாமேதை திரு.என்.கே.பத்மநாதன், கலைஞர்கள் கௌரவத்தில் களிபேருவகை கொண்டேன், எஸ்.பொ.வின் கணிப்பும் எனது விழிப்பும், பெருமையடைகிறேன் எதற்காகத் தெரியுமா? ஆகிய தலைப்புக்களில் தனது கலையுலக வாழ்வை சுயசரிதையாக்கித் தந்துள்ளார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19196).

### 14946

**பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் நாடகமும்/பேராசிரியர் சு.வித்தியானந்தனும் நாட்டார் வழக்காற்றியலும்.** ஈழக் கவி. அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஒகஸ்ட் 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

40 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-4676-80-0.

தமிழ் கூறும் நல்லுலகில் போற்றப்படும் பேராசிரியர்களுள் க.கணபதிப்பிள்ளை முக்கியமானவர். பருத்தித்துறை புலோலி கிழக்கில் உள்ள தும்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 02.07.1903 இல் பிறந்த இவரது தந்தையார் ஒரு பாரம்பரிய தமிழ் வைத்தியர். தனது தந்தையாரின் மேற்பார்வையில் தமிழ் மொழியைக் கற்ற கணபதிப்பிள்ளை பின்னர் பண்டிதர் பிரம்மஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக் குருக்களிடமும் தமிழுடன் சம்ஸ்கிருதத்தையும் கற்றார். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் படித்து, 1930 ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகத்தின் இளங்கலைத் தேர்வில் முதல் வகுப்பில் சித்தியெய்தினார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டத்தினையும் இலண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார். 1936 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் பணியாற்றினார். நாடகப் பணி, கவிதை, சிறுகதை ஆக்கமுயற்சிகள், இலக்கிய, வரலாற்று, கல்வெட்டு ஆய்வுகள் எனப் பல துறைகள் சார்ந்து பணியாற்றினார். பேராசிரியரவர்கள், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக 29 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இக்காலத்தில் தமிழ்ச் சங்கத்தின் இளங்கதிர் என்ற இதழைத் தொடங்கி அதனைத் தொடர்ந்து நடத்த வழி செய்ததுடன் தமிழ்ச் சங்கத்திற்கென பல நாடகங்களை எழுதி நெறிப்படுத்தினார். "உடையார் மிடுக்கு",

"கண்ணன் கூத்து", "நாட்டவன் நகர வாழ்க்கை", "முருகன் திருகுதாளம்" என்பவை குறிப்பிடத்தக்கனவாகும். இந்நாடகங்கள் "நானாடகம்"(1940) என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தன. மேலும் "பொருளோ பொருள்", "தவறான எண்ணம்" ஆகிய இரு நாடகங்களும் பேராசிரியரால் எழுதப்பட்டதுடன் அந்நாடகப்பிரதிகளும் "இரு நாடகம்"(1952) என்ற தலைப்பில் அச்சுருப்பெற்றன. ஈழத்தின் சிறந்த கல்வியாளரான பேராசிரியர் சு.வித்தியானந்தன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் பணிபுரிந்தவர். பல்கலைக்கழக தமிழ் ஆளுமைகள் தொடரில் இரண்டாவது நூலாக வெளிவந்துள்ள இப்பிரசுரம், ஜீவநதி வெளியீட்டகத்தின் 105ஆவது பிரசுரமுமாகும்.

### 14947

**மகுடம்: கலைஞர் கே.மோகன்குமார் பற்றிய ஓர் ஆவணப்பதிவு.** எம்.ஜெயகுமார் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 12: கிருஷ்ண கலாலயம், ஜீ 1/6, சாஞ்சி ஆராச்சித் தோட்டம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2017. (கொழும்பு: பிருந்தா எண்டர்பிரைசஸ்).

xxiv, 122 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-7379-00-5.

நாற்பதாண்டுக் காலமாக கலைத்துறையில் அர்ப்பணிப்புடன் செயலாற்றிவரும் கே.மோகன்குமார் பற்றிய ஒரு ஆவணப்பதிவாக "மகுடம்" வெளிவந்துள்ளது. அமரர் லடீஸ் வீரமணி, சபா.ஜெயராசா, கலைச்செல்வன், சந்திரரத்ன மாபிடிகம, அந்தனி ஜீவா, கே.எஸ்.சிவகுமாரன், தே.செந்தில்வேலவர், வீ.தனபாலசிங்கம், கே.செல்வராஜன், வீ.கே.டி.பாலன், எஸ்.ஐ.நாகூர்கனி, முல்லை செல்வராஜ், பி.எச்.அப்துல் ஹமீட், பிரபா கணேசன், எஸ்.தில்லைநாதன், ஹெலன்குமாரி ராஜசேகரன், வி.தேவராஜ், தம்பிஐயா தேவதாஸ், எம்.ஏ.றபீக், எம்.கே.ராகுலன், கே.அரசரட்ணம், மொழிவாணன், ராதா மேத்தா, எஸ்.விஸ்வநாதன், சசாங்கன் சர்மா, ஆர்.பீ.அபர்ணாசுதன், ஷியா உல் ஹஸன், கே.வீ.எஸ்.மோகன், என்.நஜ்முல் ஹுசைன், ஏ.எஸ்.எம்.நவாஸ், ஜோபு நஸீர், கே.சந்திரசேகரன், எம்.அன்பழகன், ஜீ.ஜே.ராஜ், தியாககுமார், ஜெறாட் நோயல் ஆகிய 36 சமூக ஆளுமைகள் மோகன்குமாரின் கலைப்பணி தொடர்பாகத் தமது மலரும் நினைவுகளைப் பகிர்ந்துகொண்டுள்ளனர். நாற்பதாண்டுகளாகப் பல சிரமங்களை எதிர்கொண்டு, கிருஷ்ண கலாலயத்தை நடத்திச் செல்லும் மோகன்குமார் நாடகத்துறையில் இளம் தலைமுறையினரை அத்துறையில் ஈடுபடுத்தி அவர்களுக்குப் பயிற்சிகளையும் வழங்கிவருவதோடு, 200க்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்தும் இருக்கிறார். நெறியாளராகப் பல தேசிய விருதுகளையும் இவர் பெற்றுள்ளார்.

**மேலும் பார்க்க: கூத்துக் கலைஞர் விஜேந்திரனுடனான நேர்காணல்.14509**

## 928 இலக்கிய அறிஞர்கள், புலவர்கள்

### 14948

**அகஸ்தியர் என்ற எங்கள் பப்பா 1926-1995. நினைவு மலர் வெளியீட்டுக் குழு.** பாரிஸ்: திருமதி நவமணி அகஸ்தியர், இல. 9, Rue Galleron, 75020, 1வது பதிப்பு, ஜனவரி 1996. (அச்சக விபரம் தரப்படவில்லை).

52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

06.01.1996 அன்று வெளியிடப்பெற்ற இம்மலரின் முதல் ஒன்பது பக்கங்களில் அமரர் அகஸ்தியரின் வாழ்க்கைச் சுருக்கம் இடம்பெற்றுள்ளது. தொடரும் பக்கங்களில் நவமணி அகஸ்தியர், நவஜோதி ஜோகரட்ணம், சுஜீ நவஜீவா, யன்னிக்ராஜ், நவஜெகனி ராஜதாசன், எஸ்.பி.ஜேசுரட்ணம், ந.கமலினி ஆகியோரின் குடும்பத் தலைவருக்கான அஞ்சலியுரைகள் இடம்பெறுகின்றன. அகஸ்தியர் நவஜீவா, கீழ்க்கரவைப் பொன்னையன், அருந்ததி, இ.உக்கிரப் பெருவழுதி ஆகியோரின் அஞ்சலிக் கவிதைகளும் இம்மலருக்கு அணிசேர்க்கின்றன. நூலின் நிறைவாக அகஸ்தியர் எழுதி 1970-தாமரை இதழில் பிரசுரமான "தனியொருவனுக்கு" என்ற சிறு கதையும், ச.சச்சிதானந்தம் (எழுத்தை ஆழும் அகஸ்தியரும் நானும்), மனோ-ஓசை (மரியாதைக்குரிய அகஸ்தியர் ஐயா அவர்களோடு), சி.சிவசேகரம் (முதுபெரும் முற்போக்கு எழுத்தாளர்) ஆகியோரின் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 25263).

### 14949

**இரவீந்திரநாத் தாகூர்.** நவாலியூர் சோ.நடராசன். கொழும்பு 7: தேசீய நூற்குழு, 135, தர்மபால மாவத்தை, 1வது பதிப்பு, 1967. (நுகேகொட: தீபானீ அச்சகம், ஹை லெவல் ரோட், கங்கொடவில).

351 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

இரவீந்திரநாத் தாகூர் (07.05.1861- 07.08.1941) புகழ் பெற்ற வங்காள பல்துறையறிஞராவார். கல்கத்தாவைச் சேர்ந்த வங்காளப் பிராமணரான இவர் ஜெஸ்சூர் மாவட்டம் ஜமீந்தார் மரபைச் சேர்ந்தவர். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இவரே வங்காள இலக்கியம் மற்றும் இசை வடிவத்தில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தவர். மேலும் இந்தியக் கலைகளிலும் மாற்றங்களைக் கொண்டு வந்தார். கீதாஞ்சலி எனும் கவிதைத் தொகுப்பிற்காக இவர் 1913-ல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றார். இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதல் ஆசியர் இவரே. ஐரோப்பியர் அல்லாத ஒருவர் இந்த விருதைப் பெறுவதும் இதுவே முதல் முறையாகும். தாகூரின் படைப்புகள் ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தது. சில நேரங்களில் இவர் வங்காளக் கவி எனவும் அறியப்படுகிறார். இந்தியாவின் தேசியகீதமான ஜன கண மன பாடலை இயற்றியவரும் இவரே. இவருடைய மற்றொரு பாடல் அமர் சோனார் பங்களா வங்காளதேசத்தின் தேசிய

கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தாகூர் தனது எட்டாவது வயதிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கினார். பதினாறாவது வயதில் இவரது முதலாவது கவிதைத் தொகுதியை பானுசிங்கோ (சூரிய சிங்கம்) என்னும் புனைபெயரில் வெளியிட்டார். தாகூர் பிரித்தானிய அரசை எதிர்த்து இந்திய நாட்டின் விடுதலையை ஆதரித்தார். இவர் தனது போர்க்குணத்தை, போராட்டத்தை ஓவியங்களின் மூலமாகவும், கேலிச் சித்திரங்களின் மூலமாகவும், எழுத்துகள் மற்றும் இரண்டாயிரம் பாடல்களின் மூலமாகவும் வெளிப்படுத்தினார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19661).

## 14950

**எங்களுடன் இன்னமும் வாழும் மாவை வரோதயன்-நினைவு மலர்.** மலர்க் குழு. கொழும்பு 6: தேசியகலை இலக்கியப் பேரவை, இல. 571/15, காலி வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).

60 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

இம்மலரில் மாவை வரோதயன் பற்றிய அஞ்சலிக் குறிப்புகளை ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, சோ.தேவராஜா, சி.சிவசேகரம், சி.கா.செந்திவேல், கோகிலா மகேந்திரன், கமலினி செல்வராசன், பொ.கோபிநாத், சுதாராஜ், வேல் அமுதன், சி.யமுனானந்தா, திருமதி பா.கணேசதுரை, குந்தவை ஆகியோரும், அஞ்சலிக் கவிதாஞ்சலிகளை ஜெயகௌரி, அருணன், சுகாபரணி, லோ.துஷிகரன், இதயராசன், இரா.சடகோபன், வசந்தி தயாபரன், பூமகன், செ.சக்திதரன், கிண்ணியா அமீர் அலி, ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஆகியோரும் வழங்கியுள்ளனர். இறுதிப் பிரிவில் மாவை வரோதயனின் சில ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. ஈழத்து எழுத்தாளரான அமரர் மாவை வரோதயன் (இயற்பெயர்: சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரன், 12.09.1965-2908.2009) கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள் எனப் பலவற்றையும் எழுதி வழங்கியவர். யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று கொழும்பில் பரீட்சைத் திணைக்களத்திலே சிலகாலம் பணிபுரிந்தார். பின்னர் அவர் சுகாதாரப் பரிசோதகராக(P.H.I) வெலிசறையில் உள்ள மார்பு சிகிச்சை நிலையத்தில் பணியாற்றினார். சில காலம் மாவை வரோதயன் மூளைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, 2009,ஆகஸ்ட் 29 இல் யாழ்ப்பாணத்தில் இறந்தார். இவரது துணைவியார் ஜெயகௌரி. இவர்களுக்கு அருணன், சுகாபரணி என்ற இரு பிள்ளைகளும் உள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 54137).

## 14951

**ஒளிரும் நட்சத்திரங்கள்: கலை இலக்கிய ஆளுமைகள் குறித்த பதிவுகள்.** க.பரணீதரன். அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, கார்த்திகை 2019. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

vi, 162 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-0958-20-7.

ஈழத்தில் ஒளிர்ந்து மறைந்தவர்களாகவும், ஒளிர்ந்து கொண்டிருப்பவர்களுமான ஆளுமைமிக்க நட்சத்திரங்களாக ஆசிரியரால் இனம் காணப்பட்ட 20 ஆளுமைகள் பற்றிய கட்டுரைகள் இவை. முன்னர் தமிழர் தளம், படிகள், ஜீவநதி ஆகிய ஊடகங்களில் வெளியானவை. இதில் இ.சு.முரளிதரன், சி.ரமேஷ், கே.ஆர். டேவிட், க.திலகநாதன், அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின், மலரன்னை, கொற்றை பி.கிருஷ்ணானந்தன், அலெக்ஸ் பரந்தாமன், மு.அநாதரட்சகன், அன்புடீன், செல்லக்குட்டி கணேசன், எம்.எஸ்.அமானுல்லா, கெக்கிறாவ ஸஹானா, இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், த.சிவசுப்பிரமணியம், இராஜினிதேவி சிவலிங்கம், கண.மகேஸ்வரன், நாடகவியலாளர் பா.இரகுவரன், கெகிறாவ ஸுலைஹா, புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் ஆகிய இருபது கலை இலக்கியவாதிகள் பற்றிய வாழ்வும் பணியும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஜீவநதி, கடல் ஆகிய இதழ்களின் ஆசிரியரான பரணீதரன், படைப்பாளியாக, சஞ்சிகை ஆசிரியராக, பதிப்பாளராக, இசை-நாடக நடிகராக எனப் பன்முக ஆளுமை கொண்டவர். இந்நூல் ஜீவநதி வெளியீட்டகத்தின் 132ஆவது பிரசுரமாக வெளிவந்துள்ளது.

14952

**கலைஞர் தமிழ்.** பால. சுகுமார். சென்னை 600020: உயிர்மை பதிப்பகம், எண். 5, பரமேஸ்வரி நகர் முதல் தெரு, அடையார், 1வது பதிப்பு, டிசம்பர் 2019. (சென்னை 600077: மணி ஓப்செட்).

(16), 17-54 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 18x12 சமீ., ISBN: 978-0-9919755-3-2.

பூம்புகார் இன்றுவரை கொண்டாடப்படும் தமிழ் சினிமாவின் அற்புத படைப்பு. தனக்கான தமிழை தமிழ்ச் சினிமாவின் முற்போக்கு முகமாக காட்டிய பெருமையும் கலைஞருக்கு உரியது. மறக்க முடியுமா என காகித ஓடம் பாடியது கலைஞர் கைகள். மந்திரி குமாரியில் மகுடம் சூடி, மனோகராவில் மணி மகுடமாய் ஜொலித்தது அவர் எழுத்து. நீதிக்குத் தண்டனை என வெகுண்டெழுந்து மண்டியிடும் மண்ணாங்கட்டி அரசியலை புடம்போட்டுத் தந்தது அந்த திரைப்படம். தமிழ்த் திரைப்பட வரலாற்றில் தனக்கான ஒரு மொழியை கட்டமைத்துக் கொண்டவர் கலைஞர். கலைஞர் கருணாநிதி பற்றிய தனது பார்வையினை கலைஞரும் நானும், கலைஞர் தமிழ், காலம் தோறும் கலைஞர், ஈழமும் கலைஞரும், ஈழ நிலமும் கலைஞரும், கலைஞர் நினைவிடம் ஆகி ஆறு இயல்களில் பால.சுகுமார் பதிவுசெய்திருக்கிறார். திருக்கோணமலை மாவட்டத்தின் சேனையூர் கிராமத்தில் பிறந்தவர் பாலசிங்கம் சுகுமார். சேனையூர் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பயின்ற இவர் ஆசிரியராகவும், விரிவுரையாளராகவும் பணியாற்றி, பிரித்தானியாவுக்குப் புலம்பெயரும் வரை கிழக்குப் பல்கலைக்கழக நுண் கலைத்துறைத் தலைவராகவும் பணியாற்றியவர். அரங்கியல் துறையில், கூத்துப் பண்பாட்டுத்துறையில் மிகுந்த ஆளுமை மிக்கவர்.

## 14953

**சரித்திரம் பேசும் சாஹித்தியரத்னா விருதாளர்கள்.** தி.ஞானசேகரன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2018. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xii, 128 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-8354-80-3.

சாஹித்தியரத்னா விருது இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலக்கியத்திற்கான உயரிய விருதாகும். 2002ஆம் ஆண்டிலிருந்து இவ்விருது வருடாவருடம் வழங்கப்பட்டு வருகின்றது. தமிழியல் துறையில் இதுவரை 17 பேர் இவ்விருதினைப் பெற்றுள்ளார்கள். இதில் பதினொருவர் ஆக்க இலக்கியப் படைப்பாளிகள். அறுவர் பல்வேறு துறைசார்ந்த புலமையாளர்கள். ஞானம் சஞ்சிகை ஆசிரியர் தி.ஞானசேகரன் அவர்கள் இவ்வாளுமைகள் பற்றி "தினக்குரல்" வார இதழ்களில் எழுதிய கட்டுரைத் தொடரே இங்கு நூலுருவாக்கப்பட்டுள்ளது. வரதர் (தி.ச.வரதராஜன்), சொக்கன் (க.சொக்கலிங்கம்), பேராசிரியர். கா.சிவத்தம்பி, டொமினிக் ஜீவா, பண்டிதர் க.சச்சிதானந்தன், இ.முருகையன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், செங்கை ஆழியான் (க.குணராசா), முகம்மது சமீம், பேராசிரியர் சபா ஜெயராசா, பேராசிரியர் க.அருணாசலம், தெணியான் (நா.க.நடேசு), தெளிவத்தை ஜோசப், முல்லைமணி (வே.சுப்பிரமணியம்), பேராயர் எஸ்.ஜெபநேசன், நீர்வை பொன்னையன், மு.பொன்னம்பலம் ஆகியோரின் ஆளுமைத் தடங்கள் பற்றிய பதிவுகளாக இக்கட்டுரைகள் அனைத்தும் அமைந்துள்ளன.

## 14954

**சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா நினைவு மலர்: 03.05.1992.** சா.இ.கமலநாதன் (தொகுப்பாசிரியர்). மட்டக்களப்பு: சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை, 1வது பதிப்பு, மே 1992. (மட்டக்களப்பு: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).

xix, 224 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ.

இம்மலரில் ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் என்பனவற்றைத் தொடர்ந்து விபுலாநந்தர் பதிகம் (அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன்), யாழ் நூல் ஓர் அறிமுகம் (இ.பாலசுந்தரம்), விபுலாநந்த அடிகளும் இசைத் தமிழும் (சி.பாலசுப்பிரமணியன்), ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தர் பிறந்திலரேல் (வி.விசுவலிங்கம்), சுவாமி விபுலாநந்தரும் சம்ஸ்கிருதமும் (வி.சிவசாமி), சுவாமி விபுலாநந்தரும் தனித் தமிழும் (றூபி வலன்ரீனா பிரான்சிஸ்), சுடர் வீசும் சுயம்பு ஜோதி (க.நல்லரத்தினம்), சுவாமி விபுலாநந்தர் கட்டுரைகள் கவிதைகள் நூல்கள் (எப்.எக்ஸ்.சி. நடராசா), விபுலாநந்த அடிகளும் தமிழர் வரலாறும் (வி.சிவசாமி), கல்விச் சிகரக் கொடியானோன் (மு.சோமசுந்தரம்பிள்ளை), விபுலாநந்தர் கவிதைகள்: ஒரு கண்ணோட்டம் (செ.யோகராசா), தவத்திரு விபுலாநந்தரின் வெளிச்சத்தைப் பார்த்து (ஆரையூர் அமரன்), சுவாமி விபுலாநந்தரின் வித்துவமும் கவித்துவமும் (க.நல்லரெத்தினம்),

விபுலாநந்த அடிகள் நினைவஞ்சலி (செ.வேலாயுதபிள்ளை), விபுலாநந்த அடிகள் இயற்றிய "யாழ்நூல்" (பி.டி.செல்லத்துரை), மதங்க சூளாமணி ஒரு திறனாய்வு (பழனி அரங்கசாமி), சுவாமி விபுலாநந்தரின் ஆளுமையும் பெறுமானங்களும் (சி.தில்லைநாதன்), மட்டக்களப்பும் மட்டிலாத் துறவியும் (வெற்றிமகன்), சுவாமி விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகள் (க.தியாகராசா), விபுலாநந்தரின் கல்வி முறை (க.கணபதிப்பிள்ளை), யாழ் நூல் தந்தவரும் யாழ்ப்பாணமும் (க.சி.குலரத்தினம்), சுவாமி விபுலாநந்தரின் சமூகப் பணிகள் (அன்புமணி இரா. நாகலிங்கம்), சுவாமி விபுலாநந்தரின் வரலாறும் ஆக்கங்களும் அவற்றின் பதிப்பு முயற்சிகளும் (சி--), எத்தனிப்பில் வெற்றி கொள்ள (திமிலைத்துமிலன்), விபுலாநந்த அடிகளாரும் சைவ சித்தாந்தமும் (ம.சிவநேசராசா), என் சிந்தையில் பதிந்தவை (வே.பஞ்சாட்சரம்), கிறிஸ்தவர்களுக்கும் சுவாமி விபுலாநந்தருக்குமிடையில் நிலவிய அன்னியோன்னிய தொடர்புகள் (வண.ஆர்.எஸ்.லோப்பு அடிகள்), இசைத் தமிழ் வளங்கண்ட அருட்டிரு விபுலாநந்த அடிகளார் (ஞானாம்பிகை குலேந்திரன்), பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர் (மாஸ்டர் சிவலிங்கம்), சுவாமி விபுலாநந்தர் நோக்கில் பாரதியார் (பெ.சு.மணி), சுவாமி விபுலாநந்தரின் இலக்கிய நோக்கு (வ.சிவசுப்பிரமணியம்), Swami Vipulananda The Sanniyasin Saint and Scholar (S.Ampalavanar), ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தர் சில நினைவுகள் (ஆர். கந்தையா), புலவரைப் போற்றிய புலவன் (வே.கணபதிப்பிள்ளை), விபுலாநந்த அடிகளாரும் நவநீதகிருஷ்ண பாரதியாரும் (இரா.வை.கனகரத்தினம்), முத்தமிழ் வித்தகரும் கண்ணகி வழிபாடும் (கே.கார்த்திகேசு), சுவாமி விபுலாநந்தரின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் (வ.சி), சுவாமி விபுலாநந்த அடிகளாரது தமிழ் உணர்வு பற்றிய ஓர் ஆய்வு (சி.மௌனகுரு), சுவாமி விபுலாநந்தரின் கல்வி நோக்கு (அ.சண்முகதாஸ்), Our infant department (S.Mylvaganam), In praise of the divine name (Swami Vipulananthar) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 12956).

## 14955

**செங்கதிர்: அமரர் சண்முகம் சிவலிங்கம் அஞ்சலிச் சிறப்பிதழ்.** செங்கதிரோன் (பிரதம ஆசிரியர்), அன்பழகன் குரூஸ் (துணைஆசிரியர்). மட்டக்களப்பு: த.கோபாலகிருஷ்ணன் (செங்கதிரோன்), இல. 19, மேல்மாடித் தெரு, 1வது பதிப்பு, மே 2012. (மட்டக்களப்பு: வணசிங்க அச்சகம், 126/1, திருமலை வீதி).

66 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 60.00, அளவு: 20x14.5 சமீ.

ஆசிரியர் பக்கம் (செங்கதிரோன்), எமது இணையற்ற கவிஞரின் நினைவாக- கவிதை (மு. சடாட்சரன்), இல்லாமைக்குள் ஸ்திரமாகும் இருப்பு (மலரா), எல்லாம் முடிந்தது ... இனி என்ன? நாம் நடப்போம்- கவிதை (ஏ.பீர்முகம்மது), சசியும் அவரது கவிதைகளும் (எம். ஏ.நுஃமான்), மறைந்தும் மறவாத மாபெரும் மனிதர் சண்முகம் சிவலிங்கம் - கவிதை (க.இரத்தினவேல்), ஸ்டீபன் மாமாவுக்கு ... (எஸ்.எழில்வேந்தன்), சண்முகம் சிவலிங்கம் நினைவில் நனைதல் (அன்புடீன்),

அமரர் சண்முகம் சிவலிங்கம் அவர்களின் இறுதிச் சடங்கின்போது (23.04.2012) எழுத்தாளர் உமா வரதராஜன் ஆற்றிய இரங்கலுரை, ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் சண்முகம் சிவலிங்கத்தின் தடங்கள்: சில குறிப்புகள் (செ.யோகராசா), எங்கள் பெரு மதிப்பிற்குரிய குரு, எம்மை நெறிப்படுத்தி வழிகாட்டிய ஆசான் அமரர் சண்முகம் சிவலிங்கம் சேர் என்றும் எம்மனங்களில் நிலையாக வாழ்கிறார்-கவிதை (ஏ. எச்.ஏ.பஷீர்), சசி என்னும் சண்முகம் சிவலிங்கம்: ஒரு கவிஞன்-ஒரு கலைஞன்-ஒரு படைப்பாளி (எஸ். அரசரெத்தினம்), ஒரு யூகசாலியின் மௌனம் (திருமதி. க.லோகிதராஜா), நான் போய்விட்டேன் ... உங்களுக்கு நினைவிருக்காது (றமீஸ் அப்துல்லா), ஈடு செய்ய முடியாத இழப்பு-கவிதை (நீலாபாலன்), மறு போகத்துக்கு காத்திருக்கும் மண் (செங்கதிரோன்), விசுவாமித்திர பக்கம் ஆகிய ஆக்கங்கள் இச்சிறப்பிதழில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் நூலகம் நிறுவன இணையத்தள நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 11680).

## 14956

**பன்மொழிப் புலவரின் ஆய்வுகள். நினைவு மலர்க் குழு.** யாழ்ப்பாணம்: பன்மொழிப்புலவர் தம்பு கனகரத்தினம் நினைவுக் குழு, மயிலங்கூடலூர், 1வது பதிப்பு, மார்ச் 2013. (கொழும்பு 6: குளோபல் கிராப்பிக்ஸ், இல. 14, கொழும்புத் தமிழ்ச் சங்க ஒழுங்கை, வெள்ளவத்தை).

(6), 101 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

மயிலங்கூடலூர் பன்மொழிப் புலவர் அமரர் தம்பு கனகரத்தினம் (09.04.1927-18.02.2013) அவர்களின் நினைவு மலர். பேராசிரியர் சபா.ஜெயராசாவின் அணிந்துரையுடன் கூடிய இம்மலரில் பன்மொழிப் புலவரின் வாழ்க்கை வரலாறு (சி.அப்புத்துரை), புத்த மதத்தில் இந்து தத்துவங்கள் (த.கனகரத்தினம்), வீர சோழியத்தின் சார்புநூல் தானா சிங்கள இலக்கண நூலான "சிதத்சங்கராவ"? (த.கனகரத்தினம்), சிலப்பதிகாரமும் ஈழமும் (த.கனகரத்தினம்), தமிழ் சிங்கள தூது காவியங்கள் (த.கனகரத்தினம்), பன்மொழிப் புலவர் பற்றிய பல்துறை அறிஞர்கள் பார்வை ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53554).

## 14957

**புத்தொளி சிவபாதம் (05.12.1932-30.11.2004): வாழ்வும் பணியும்(நினைவு மலர்).** மலர்க் குழு. ஆனைக்கோட்டை: திருமதி சி. ருக்குமணிதேவி, செல்வ அகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (யாழ்ப்பாணம்: திருச்செல்வி அச்சகம்).

xxix, 70 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 சமீ.

அமரர் நமசிவாயம் சிவபாதம் (புத்தொளி) அவர்களின் சிவபதப்பேற்றின் நினைவு மலர் 30.12.2004 அன்று வெளியிடப்பட்டது. இம்மலரில் பத்மராணி செல்லத்தம்பி

அவர்கள் எழுதிய "புத்தொளி சிவபாதம் வாழ்வும் பணியும்" என்ற ஆய்வுக் கட்டுரை இடம்பெற்றுள்ளது. ஆசிரியராகப் பணியில் சேர்ந்து, கல்விச்சேவையில் அதிபராகத் தரம் உயர்ந்து, ஆனைக்கோட்டை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் நீண்டகாலம் பணியாற்றியவர் அமரர் புத்தொளி சிவபாதம். 1949இல் எழுத்துலகில் பிரவேசித்த புத்தொளி அவர்கள் 2003ஆம் ஆண்டு வரை 21 நூல்களை எழுதியவர். இலங்கைத் தமிழரசுக்கட்சி அங்கத்தவராகவும் இவர் இருந்துள்ளார்.

## 14958

**பேராசிரியர் ம.மு.உவைஸும் இஸ்லாமிய தமிழ் இலக்கியமும்.** ஈழக் கவி. அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2018. (பருத்தித்துறை: பரணீ அச்சகம், நெல்லியடி).

32 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-83-1.

பேராசிரியர் உவைஸ், 15.01.1922 இல் பாணந்துறை பிரதேசத்திலுள்ள ஹேனமுல்லையில் பிறந்தவர். 1927இல் ஹேனமுல்லை முஸ்லிம் தமிழ் பாடசாலையில் சேர்ந்து ஆரம்பக் கல்வியைப் பெற்றவர். பாணந்துறையில் புனித யோவான் கல்லூரியில் சேர்ந்து பயின்றார். பின்னர், அதே கல்லூரியில் பல்கலைக்கழகப் புகுமுகப் படிப்பில் சேர்ந்து தமிழ், சிங்களம், வரலாறு, ஆட்சியியல் முதலிய பாடங்களைப் படித்து தேர்ச்சியடைந்தார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1946 ஆம் ஆண்டு சேர்ந்தார். அங்கு தமிழ்த்துறைத் தலைவராக விளங்கிய பேராசிரியர், தவத்திரு விபுலாநந்த அடிகளாரின் வழிகாட்டலும், ஊக்கமும் உவைசுக்கு பேருதவியாக அமைந்தன. தமிழில் கலைமாணிப் பட்டத்தை (இளங்கலை) 1949 ஆம் ஆண்டு பெற்றார். பின்னர் தமிழ் முதுமாணிப் பட்ட (முதுகலை) பாடத்தைப் படிக்க பதிவு செய்தார். தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றார். "இஸ்லாமியரின் தமிழ்த் தொண்டு" என்னும் ஆய்வேட்டையும் சமர்ப்பித்தார். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் 1962 ஆம் ஆண்டு தமது கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக, "தமிழ் இலக்கியத்தில் இஸ்லாமியக் காப்பியங்கள்" என்னும் தலைப்பை பதிவு செய்தார். இவரது ஆய்வுக்கு நெறியாளராக விளங்கிய பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் திடீர் மறைவினால் ஆய்வு தற்காலிகமாக நின்றுவிட்டது. இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராக பேராசிரியர் சு. வித்தியானந்தன் நியமனம் செய்யப்பட்ட பின்பு 1971 ஆம் ஆண்டு தமது ஆய்வைத் தொடர்ந்து மேற்கொண்டு 1975 ஆம் ஆண்டு ஆய்வை சமர்ப்பித்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். இலங்கையில் தமிழ்த்துறையில் கலாநிதி பட்டம் பெற்ற முதல் முஸ்லிம் என்ற பெருமையைப் பெற்றார். தமிழ்ப் பேரறிஞர் உவைஸ் இஸ்லாமியத் தமிழிலக்கியத்திற்கு ஆற்றியுள்ள மிகப்பெரிய தொண்டாகக் கருதக் கூடியது, தமிழக அறிஞர் டாக்டர் அஜ்மல் கானுடன் இணைந்து மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் சார்பாக எழுதிய "இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு" ஆகும். இந்த வரலாறு ஆறு தொகுதிகளைக் கொண்டது. தமிழ் இலக்கியத்தின் பால் உலகின் கவனத்தைத்

திருப்பிய பேரறிஞர் மன்ற மேடைகளிலே, மாநாட்டரங்கங்களிலே சொற்பொழிவுகளாற்றி, ஆய்வுக் கட்டுரைகள் படித்து, முஸ்லிம் மக்களைப் பெருமை கொள்ள வைத்தவர். ஏராளமான எழுத்தாளர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வளர்த்துவிட்டவர். தன் அறிவினால், தன்னடக்கத்தினால் அறிஞர் உலகை ஆட்கொண்ட பேராசிரியர் உவைஸ் 1996 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் மறைந்தார். அவர் பற்றிய வாழ்க்கை வரலாற்றுப் பின்னணியில் இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துக்கு அவர் ஆற்றிய பணிகள் இங்கு விபரிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக தமிழ் ஆளுமைகள் தொடரில் ஐந்தாவது நூலாக வெளிவந்துள்ள இப்பிரசுரம், ஜீவநதி வெளி யீட்டகத்தின் 108ஆவது பிரசுரமுமாகும்.

## 14959

**முத்திரையிற் பண்டிதமணி: முத்திரை வெளியீட்டு விழா மலர்**. மலர்க் குழு. யாழ்ப்பாணம்: பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை, உரும்பிராய், 1வது பதிப்பு, டிசம்பர் 1999. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

(8), 56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x19 சமீ.

இது இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் நூறாவது பிறந்ததின நிறைவைக் குறிக்கும் விசேட மலர். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள் (அருளாசிச் செய்தி), மஹாராஜ ஸ்ரீ.சு.து. ஷண்முகநாதக் குருக்கள் (ஒரு சங்கல்பம்), சீ.விநாசித்தம்பிப் புலவர் (சுவை அமுதமென வாழி வாழி), க.சண்முகநாதன் (நல்விருந்து), பொ.பாலசுந்தரம்பிள்ளை (மேதை), சுந்தரம் டிவகலாலா (நல்லாசான்), அ.க.சிவஞானசுந்தரம் (மூதறிஞர் பண்டிதமணி), இ.நமசிவாயதேசிகர் (பண்டிதமணியின் சீர்த்தி நீடுவாழ்க), சேந்தன் (நாவலர் தம் மரபில் வந்தோன்), மு.கந்தையா (பிரார்த்தனை உரை), தங்கம்மா அப்பாகுட்டி (முத்திரையிற் பண்டிதமணி), அ.சண்முகதாஸ் (பண்டிதமணி நீடூழி வாழ்வார்), அ.கி.பத்மநாதன் (ஒரே ஆண்டில் 1899 இரு தமிழ் அறிஞர்கள்), செ.பாலச்சந்திரன் (தித்திப்பான செய்தி), சோ.பத்மநாதன் (பொன்னாள்), சி.தர்மராஜன் (கல்விக் கண்கள்), இ.சிவகுருநாதன் (தினகரனிற் பண்டிதமணி), ம.வ.கானமயில்நாதன் (தமிழுக்கும் சைவத்துக்கும் பெருமை), ஆ.மகாலிங்கம் (ஈழத்துத் தமிழறிஞர்), பொன் பாக்கியம் (பண்டிதரையாவின் புகழ் பல்லாண்டு வாழும்), முருகையன் (முத்திரை வெளிவரல் நன்றே), சொக்கன் (இன்று அவரின் திருமுகம் முத்திரையிற் பெற்றோம்), மா.த.ந.வீரமணி ஐயர் (முத்திரை பொறித்த மூதறிஞர்), மன்னவன் மு.கந்தப்பு (என்றும் நினைவோம் இனிது), க.சச்சிதானந்தன் (முத்திரையிற் காண்போம் முகம்), இ.செல்லத்துரை (குரு வணக்கம்), வை.க.சிற்றம்பலம் (ஒரு ஞாபக முத்திரை), உடுப்பிட்டி மணிப்புலவன் (எங்கள் பண்டிதமணி), ச.தங்க மாமயிலோன் (பண்டிதமணித்துவம்), ம.பார்வதிநாதசிவம் (உலகெங்கும் பண்டிதமணி), இ.கந்தையா (பண்டிதமணி ஆசிரியர்க்கு ஆசிரியர்), சோ.பரமசாமி (சீர்பெறவோர் முத்திரையும் வெளியிட்டார்), வரதர் (பண்டிதமணி அவர்கள் அனுப்பிய திருமண வாழ்த்து), குமாரசாமி சோமசுந்தரம் (பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை), தினகரன் வாரமஞ்சரி

(தினகரன் பண்டிதமணியின் நூற்றாண்டு விழா), செல்லப்பா நடராசா (முத்திரைகள் பல பதித்த பண்டிதமணிக்கோர் முத்திரை), அ.பஞ்சாட்சரம் (பண்டிதமணி அவர்களும் அவர் பெற்ற பாராட்டுகளும்), ப.கோபாலகிருஷ்ணையர் (நாவலர் வழியில் நற்பணியாற்றிய பண்டிதமணி), க.உமாமகேஸ்வரன் (முத்திரை பதித்தவருக்கு முத்திரை), ராஜஸ்ரீகாந்தன் (வாழ்வியலின் அருஞ்செல்வம்), வ.சிவராசசிங்கம் (இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் இலக்கியப்பணி), த.செல்வநாயகம் (தமிழால் உயர்ந்தோர்), எஸ்.ஜெபநேசன் (பண்டிதமணி நினைவு), சு.செல்லத்துரை (முத்திரையும் பெற்றது நற்பேறு) ஆகிய பெரியோர்களின் ஆக்கங்களுடன் இத்தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. மலர்க்குழுவில் அ.பஞ்சாட்சரம், சு.செல்லத்துரை, சோ.பரமசாமி, பண்டிதை பொன் பாக்கியம், வே.தனபாலசிங்கம், மன்னவன் மு.கந்தப்பு ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 23394).

## 14960

**முருகையன் எனும் முடியா நெடும்பகல்: கவிஞர் இ.முருகையன் நினைவு மலர்.** மலர்க் குழு. கொழும்பு 11: தேசியகலை இலக்கியப் பேரவை, இல.44, மூன்றாம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டடத் தொகுதி, 1வது பதிப்பு, ஜூலை 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).

60 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

"மூத்த கவிஞர் இ.முருகையன்" என்ற தலைப்பில் தேசிய கலை இலக்கியப் பேரவை பொதுச் செயலாளர் திரு.சோ.தேவராஜாவின் குறிப்புடன் கவிஞர் முருகையனின் நினைவு மலர் தொடங்குகின்றது. "முருகையனின் படைப்புலகும் மொழிச் சிந்தனையும்" என்ற தலைப்பில் திரு.சி.சிவசேகரம் அவரது மொழி ஆற்றல் பற்றி எழுதியிருக்கிறார். கவிஞர் கல்வயல் வே.குமாரசாமியின் "முருகையன்" என்ற எண்சீர் விருத்தக் கவிதையும் இரண்டு வெண்பாக்களும் அவரது சிறப்பை இயம்புகின்றன. பேராசிரியர் எஸ்.தில்லைநாதன் தன்னுடைய "மானிட முன்னேற்றத்தை விழைந்த முருகையன்" என்ற கட்டுரையில் முருகையனின் கைக்கெட்டிய பல்வேறு துறைகள் பற்றி கூறியிருக்கின்றார். ஈழத்தின் கவிதை மும்மூர்த்திகள் பற்றி ஆரம்பித்து முருகையன் பற்றிய பல்துறை ஆய்வுகள் பற்றிய சுருக்கமான விடயங்களுடன் வீரகேசரியில் வெளிவந்த, பேராசிரியர் எம்.ஏ.நுஃமானின் "தன் படைப்புகளால் நிலைத்து வாழும் முருகையன்" என்ற கட்டுரை மறுபிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. சி.கா. செந்தில்வேல், முருகையன் அவர்கள் எப்படி ஒரு பொதுவுடமைவாதியாக இருந்தார் என்ற கருத்துகளை "பொதுவுடமை இயக்கத்திற்கு உரமிட்டு நின்றவர்" என்ற தலைப்பில் எழுதியுள்ளார். "செம்மை+எளிமை= முருகையன்" என்ற தலைப்பில் சோ.பத்மநாதன் எழுதிய அவரின் கவிதைகள் பற்றிய சுருக்கமாக விபரித்திருக்கிறார். "இரண்டாயிரம் வருடப் பழைய சுமை எங்களுக்கு" என்ற கவி வரிகளை வைத்து "தமிழ் மக்களும், சிங்கள மக்களும் அவர்கள் மீது சுமத்தப்பட்ட, கவிஞர் முருகையன் குறிப்பிடும் இரண்டாயிரம் ஆண்டுப் பழைய

சுமையை இறக்கி வைக்க இயலாதவர்களாக தமது வாழ்க்கைப் பயணத்தை இடர் மிகுந்த காட்டு வழியில் துயரங்கள் இழப்புகளுடன் தொடர நிர்ப்பந்திக்கப் படுகின்றனர்" என க.தணிகாசலம் குறிப்பிட்டுள்ளார். புதிய பூமியில் சிவா என்பவரால் எழுதப்பட்ட "முருகையனின் கவிதையின் உயர்வும் உன்னதமும்" என்ற ஆக்கமும் சுவையாக இருக்கின்றது. இது தவிர தேசிய கலை இலக்கிய பேரவை வவுனியாக் கிளை, இராசையா ஸ்ரீதரன், பயில்நிலம் மாணவர்கள், புதிய மலையகம் மகேந்திரன், எஸ்.டொன் பொஸ்கோ போன்றவர்களின் கண்ணீர் அஞ்சலிகளும், இதயராசன், பூமகன், மு.நாவலன், சிங்காரம் மலர், அழ பகீரதன் போன்றவர்களின் கவிதாஞ்சலிகளும் முருகையன் புகழ் பாடுகின்றன. பின்னிணைப்பாக கவிஞர் முருகையனின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கவிதைகளும் கட்டுரைகளும், அத்துடன் இவரின் நூல்களின் பட்டியல்களும் நாடகங்களின் பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46852).

## 14961

**வடிவேல் ஐயா நினைவு மலர்: 05.12.2004.** மலர்க் குழு. திருக்கோணமலை: மலர் வெளியீட்டுக் குழு, பாக்கியபதி, 15, வித்தியாலயம் ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (திருக்கோணமலை: ஸ்ரீ கணேச அச்சகம், 28B புதிய சோனகத் தெரு).

107 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x17 சமீ.

இந்நூலில் சைவப் புலவர் பண்டிதர் இ.வடிவேல் (09.12.1919-05.11.2004) அவர்களின் பணிகள், ஆலயங்களுக்குப் பாடி வழங்கிய ஊஞ்சல் பாக்கள், கவிதை ஆக்கங்கள், கட்டுரைகள், வடிவேல் ஐயா பெற்ற கௌரவப் பட்டங்கள், இரங்கற்பா, நிறைவான வாழ்க்கை வாழ்ந்தவர், கிழக்கில் உதித்த ஞான மலர், சைவப்புலவர் பண்டிதரின் நெஞ்சகலா நினைவலைகள், ஆத்ம சாந்திப் பிரார்த்தனை உரை - பண்டிதர் ஆர் வடிவேல் ஐயா அவர்களின் மறைவையொட்டி எழுதப்பெற்றது தொண்டனுக்குத் தொண்டன் தோழனுக்குத் தோழன், ஆத்ம அஞ்சலி, பணிந்து போற்றுகிறேன், கிழக்கில் உதித்த ஞானமலர் ஞானசிரோன்மணி பண்டிதர் வடிவேல், ஐயா என்றும் எம்முடன் இருப்பார், அமரர் இ.வடிவேலனார். ஆசானுக்கு ஒரு அஞ்சலி. அறிவொளித்தீபம் அணைந்தது, பண்டிதர் வடிவேல் ஐயாவுக்கு ஒரு மடல், திருகோணமலை வாழ் சைவப்பெருமக்களின் மனதில் நீங்கா நினைவு பெற்ற தொண்டன் அமரத்துவம் அடைந்த பண்டிதர் வடிவேல் அவர்கள், ஞானமலர்தன்னை மறந்திடப்போமா?,பண்டிதர் வடிவேலு ஐயாவுக்கு பிரிவுபசாரம் அவரின் ஆத்ம சாந்திக்கு ஓர் விண்ணப்பம், அமரத்துவம் அடைந்த பண்டிதர் ஞானசிரோன்மணி கலாபூஷணம், சைவப்புலவர் இராசையா வடிவேல் ஆசிரியர், திருமலை தந்த திருவிளக்கு, சமயப் பெரியார் தமிழறிஞர் சைவப் புலவர் பண்டிதர் வடிவேல் ஐயா, ஞானசிரோன்மணி பண்டிதர் வடிவேல் ஐயா, சைவப்புலவர் பண்டிதர் இ.வடிவேல், சைவமும், தமிழும், இனிது ஓங்க தன்னலம் கருதாது சேவைபற்றிய உயர் பெரியோன் பண்டிதர் அமரர் வடிவேல் ஐயா,

பண்டிதர் இ.வடிவேல் அவர்கள் ஆக்கிய திருக்கோணேஸ்வரம், தொன்மையும் வண்மையும் என்ற நூலிருந்து, திருக்கோணமலை சிவபூமி, அமரர். ஆர்.வடிவேல் ஐயா அவர்களுக்கு இரங்கற் பா, திருக்குறள் திலகம், வானசிரோன்மணி ஆகிவிட்ட ஞானசிரோன்மணி பண்டிதர் ஆர்.வடிவேல் அவர்கள், அமரத்துவமடைந்த ஞானசிரோன்மணி ஆர்.வடிவேல் ஐயா அவர்கட்கு சமர்ப்பணம், கிழக்கிலங்கைக்கு பெருமை சேர்த்த பெரியார், கிழக்கிலங்கை தந்த சைவத்தமிழ் பெரியார், இலக்கிய வித்தகர் பண்டிதர் வடிவேல் அவர்கள், திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள், திருப்பள்ளியெழுச்சி, திருக்கோணமலை ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி கோயில், ஸ்ரீ சண்முகப் பெருமான் திருவூஞ்சல், வில்லூன்றிக் கந்தன் தேர்ச் சிந்து, "சமூகம் ஒரு நல்ல தொண்டரை இழந்து விட்டது", ஆசானே அறிவுச்சுடரே என்றென்றும் ஒளிர்கவே பண்டிதரின் நுண்மான் நுழைபுலம், வடிவேலனார் நாமம் வாழ்க, என்றும் எங்கள் வழிகாட்டி ஆசான் பண்டிதர் இ.வட்வேல், திருக்கோணேசர் திருவூஞ்சற் பதிகம் ஆக்கியோன் சைவப்புலவர் பண்டிதர் இ.வடிவேல் அவர்கள், யான் அறிந்த பெரியார் ஈடுசெய்யமுடியாத இழப்பு, அழியாச் சேவை செய்த அன்னாரின் ஆன்மா முத்தி பெற வேண்டும், கிழக்கில் உதித்த சூரியன், திருமலைக்கு வடிவமைத்த இ.வடிவேல் அவர்கள் அன்னாருக்கு ஓர் அஞ்சலி, கொழும்புத் தமிழ்ச் சங்கம் பண்டிதர் இரா.வடிவேலு குடும்ப அங்கத்தவர்களுக்கு மௌனாஞ்சலி. நின்நாமம் என்றும் நிலைத்திட வேண்டுவமே, எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு, எம் சின்னையா பரணி போற்றும் திருவேலன், என்நன்றி கொன்றார்கும், சின்னையாவின் அழியாத நினைவுகள், அன்பு செலுத்திய எங்கள் சின்னையா, எங்கள் துருவ நட்சத்திரம் ஆகிய தலைப்புகளில் அன்பர்கள், உறவினர்களின் அஞ்சலி உரைகளை உள்ளடக்கியதாக இம்மலர் வெளியிடப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34830).

### 14962

**ஜீவநதி செங்கை ஆழியான் சிறப்பிதழ்.** க.பரணீதரன் (பிரதம ஆசிரியர்). அல்வாய்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, 1வது பதிப்பு, வைகாசி 2016. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தி, நல்லூர்).

72 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 28x20.5 சமீ.

சாஹித்தியரத்னா செங்கை ஆழியானின் மறைவையொட்டி வெளியாகியுள்ள சிறப்புமலர். இன்னொருவரால் இட்டு நிரப்ப இயலாத ஆளுமை செங்கை ஆழியான் (தெணியான்), செங்கை ஆழியான்: எழுதிக் குவித்தலும் பிரளயம் நாவலும் (A.H.M.நவாஸ்), செங்கை ஆழியானின் புனைவும் வாழ்வும் (க.சட்டநாதன்), வாடைக்காற்று நாவல் திரைமொழி பேசியபோது (கானா பிரபா), செங்கை ஆழியானின் நாவல்களில் யாழ்ப்பாண சமூக மரபு: சில நாவல்களை மட்டும் முன்வைத்து (சமரபாகு சீனா உதயகுமார்), பெருவாரிப் பிரதியாளி செங்கை ஆழியானின் ருத்திரதாண்டவம் (இ.சு.முரளிதரன்), விடியலைத் தேடி ஊடாக செங்கை ஆழியானை நினைவுகூர்தல் (க.நவம்), செங்கை ஆழியானின்

பிரளயத்தின் வாடைக்காற்றில் பிரயாணம் செய்யும் காட்டாறு (கிண்ணியா சபருள்ளா), வரலாறு பேசும் செங்கை ஆழியான் (யோகேஸ்வரி சிவப்பிரகாசம்), செங்கை ஆழியானின் காட்டாறு (தருமராசா அஜந்தகுமார்), செங்கை ஆழியான் படைத்த கிடுகு வேலி (கானா பிரபா), சூழலியலின் தத்துவம் உணர்த்தும் நாவல் செங்கை ஆழியானின் ஓ அந்த அழகிய பழைய உலகம்: நாவல் குறித்த சில மனப்பதிவுகள் (த.கலாமணி), செங்கை ஆழியானின் குந்தியிருக்க ஒரு குடிநிலம்: வாசக நிலை நோக்கு (அ.பௌநந்தி) ஆகிய படைப்பாக்கங்களை இச்சிறப்பிதழ் கொண்டுள்ளது. (இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் P 750).

## 14963

**ஸ்ரீ ஜகந்நாத பிம்பம்**. சு.இராஜேந்திரக் குருக்கள், த.ந.பஞ்சாட்சரம் (இணைச் செயலாளர்கள்), யாழ்ப்பாணம்: ஸ்ரீவாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன் ஞாபகார்த்த சபை, நீர்வேலி, 1வது பதிப்பு, ஜனவரி 1990. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 430, காங்கேசன்துறை வீதி).

xvi, 60 பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

தமிழறிஞர் அமரர் கி.வா.ஜகந்நாதன் அவர்களின் நினைவாக யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ள நினைவு மலர். இம்மலரில் கி.வா.ஜ. அவர்கள் யாழ்ப்பாணம் நீர்வைக் கந்தன் புகழ் துதித்துப் பாடியவை, பதிப்புரை (சு.இராஜேந்திரக் குருக்கள், த.ந.பஞ்சாட்சரம்), ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் வழங்கிய அருள் ஆசிகள் (நாராயண ஸ்ம்ருதி), வாழ்த்துரை (ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்), அளப்பரிய பணியாற்றிய அறிஞன் (சுவாமி சம்பிரஜானந்தா), எனது பிரார்த்தனை (கா.கைலாசநாதக் குருக்கள்), அந்தரங்க பக்திமான் (க.மங்களேஸ்வரக் குருக்கள்), இலட்சியத் தமிழ்த் தொண்டர் (சௌ.தொண்டமான்), ஸ்ரீ கி.வா ஜகந்நாதன் சீரிய தமிழ் அறிஞர் (அ.துரைராஜா), கி.வா.ஜ. ஒரு தமிழ் முனிவர் (ஆ.ஞானம்), அரிய செந்தமிழ்ச் செல்வர் சிறந்த முருக பக்தர் (எஸ்.வி.ரமணி), போற்றுவோம் அவர் பணிகள் (பி.பி.தேவராஜ்), செஞ்சொற் சுவைக் களஞ்சியம் (க.அன்பழகன்), இனிது இனிது (திருமதி சௌந்தரா கைலாசம்), மன்னித்து மீண்டுமந்த மாமணியைத் தந்து விடு (சௌந்தரா கைலாசம்), தமிழ்த் தாயின் தவப் புதல்வன் (திருமதி வசந்தா வைத்தியநாதன்), என்றும் என் நினைவில் இருப்பவர் (எம்.எம்.அப்துல் காதர்), தமிழ் உலகின் பெருமகன் (இராம வீரப்பன்), பேரறிஞர் கி.வா.ஜ அவர்கள் (பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி), அது ஒரு பெருவிருட்சம் (சிவஸ்ரீ பூரண. தியாகராஜக் குருக்கள்), பலர் புகழ் ஞாயிறு (க.வைத்தீஸ்வரக் குருக்கள்), கலை மகளுக்கு ஆசிரியர் (என்.மகாலிங்கம்), வாகீச கலாநிதி கி.வா ஜகந்நாதன் அவர்கள் (க.கனகராசா), இலகு தமிழ் நிபுணர் (இ.முருகையன்), பண்பாட்டுப் பாலம் அமைத்த தமிழ் அறிஞர் (வி.சிவசாமி), இரங்கற் பாக்கள் (நீர்வையூர் முருகு), தனக்குவமையில்லாத் தண்ணளியாளர் - கி.வா.ஜ (கனகசபாபதி நாகேஸ்வரன்),கி.வா. ஜ அவர்களும் ஈழநாடும் (ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம்), ஒரு சகாப்தத்தின் முடிவு (க.ச.முத்துவேல்), நல்லார் இணக்கம்

(மு.கணபதிப்பிள்ளை) வாகீச கலாநிதி ஸ்ரீ.கி.வா ஜகந்நாதன் ஞாபகார்த்த சபை ஆகிய படைப்பாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10237).

## 940 ஐரோப்பிய வரலாறு

### 14964

**இக்கால ஐரோப்பாவின் மலர்ச்சி (1453-1939).** சேர். ஜே.ஏ.ஆர். மரியற்று (ஆங்கில மூலம்), க.கிருட்டினபிள்ளை (தமிழாக்கம்). கொழும்பு: அரசகரும மொழிகள் திணைக்களம், 1வது பதிப்பு, 1962. (கொழும்பு: அரசாங்க அச்சகம்).

x, 496 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

சேர் J.A.R.Marriot எழுதி லண்டனில் Methuen and Co. வெளியிட்டிருந்த The Evolution of Modern Europe (1453-1939) என்ற வரலாற்றுப் பாடநூலின் தமிழாக்கம். இற்றையூழியின் உதயம், பௌதிகவியலும் அரசியலும், பிரான்சின் ஆக்கம், ஜப்பானிய முடியாட்சி, இத்தாலியப் போர்கள், ஜேர்மனியும் பேரரசும், புரொட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம், கத்தோலிக்க மதச் சீர்திருத்தம், ஐக்கிய நெதர்லாந்தின் தோற்றம், பிரான்சிற் கத்தோலிக்கரும் புரொட்டஸ்தாந்தரும், முப்பதாண்டுப் போர் ஆகியவை முதலாம் பாகத்தில் விளக்கப்பட்டுள்ளன. இரிசலூ, மசரின் என்பார் காலத்துப் பிரான்சு, 14ஆம் உலுயியின் ஆட்சி, பிரான்சும் ஐரோப்பாவும், போற்றிக்கு நாடுகள், இரசியாவின் எழுச்சி, கிழக்குப் பிரச்சினை-ஒற்றோமன் துருக்கர், 18ஆம் நூற்றாண்டு, உதிரத்து இணக்கமும் அதன் பின்னரும், பிரசியாவின் எழுச்சி, ஏழாண்டுப் போர், போலந்தின் பிரிவினைகள், அமெரிக்க ஐக்கிய நாட்டின் தோற்றம், பழைய ஆட்சியின் முடிவு-தண்ணளித் தனியாட்சி ஆகிய பாடங்கள் 2ஆவது பாகத்தில் தரப்பட்டுள்ளன. மூன்றாம் பாகத்தில் பிரான்சிய புரட்சி, நெப்போலியன் பொனபாட்டின் எழுச்சி, நெப்போலியனின் வீழ்ச்சி-வியன்னாப் பேரவை, மீட்பு-எதிர்விளைவு-புரட்சி, பெல்ஜியத்தின் தோற்றம், கிழக்குப் பிரச்சினை, இத்தாலி ஐக்கியம் பூண்டமை, ஜேர்மன் ஐக்கியம் பூண்டமை, இரண்டாம் பேரரசும் மூன்றாம் குடியரசும், ஐரோப்பாவின் அகற்சி, சூழலியற் புரட்சி, மாபெரும் உலகப் போரின் எல்லையில், உலகப் போர், அமைதிப் பொருத்தனைகள், அமைதியின்மையும் அபிவிருத்தியும், படுகுழிக்குள் இறங்கல் ஆகிய கட்டுரைகள் உள்ளன. மொத்தம் 39 அத்தியாயங்களில் இவை விளக்கப்பட்டுள்ளன. வம்சவழிப் பட்டியல், நாட்டுப்படங்கள் என்பன பின்னிணைப்பில் காணப்படுகின்றன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 43415).

## 941 பிரித்தானிய வரலாறு

### 14965

**பிரித்தானியாவின் புதிய அடிப்படை வரலாறு: நான்காம் பகுதி 1688-1939.** *சோச்சு தவுண்சென் உவாணர், சி.என்றி கே. மாட்டின், டி.எசுகின் மூர் (ஆங்கில மூலம்). இந்திரா மகாதேவா, கா.பத்மநாதன் (தமிழாக்கம்). கொழும்பு 7: வெளியீட்டுப் பிரிவு, அரச கரும மொழித் திணைக்களம், 1வது பதிப்பு, 1960. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).*

x, *541 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5*x*14 சமீ.*

George Townsend Warner, C.Henry K.Marten, D.Erskine Muir *ஆகிய மூவராலும் எழுதப்பெற்று லண்டன்* Blackie and Son *நிறுவனத்தால் வெளியிடப்பெற்ற* The new Groundwork of British History Section Four *(1688-1939) என்ற நூலின் தமிழாக்கம் இது. இலங்கைப் பாடசாலைகளில் உயர்வகுப்புகளுக்குப் பயன்படுத்தவென இலங்கை அரசகரும மொழித்திணைக்களத்தால் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதில் பிரான்சுடன் போராட்டமும் யாப்புமுறை முடியரசின் வளர்ச்சியும் (1688-1714), பிரித்தனின் விரிவும் முடியுடன் நடந்த இறுதிப் போட்டியும் (1714-1783), பிரான்சுடன் பெரும் இகல்: புரட்சியும் நெப்போலியனும் (1783-1815), கைத்தொழில் விருத்தி: கெடுதிகளும் சீர்திருத்தங்களும் (1815-1867), அரசியல் வளர்ச்சி: பேரரசாட்சியும் குடியாட்சியும் (1867-1914), போரும் பின்னடப்பும் (1914-1939) ஆகிய 6 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22103).*

## 953 அராபிய வரலாறு

### 14966

**இருபதாம் நூற்றாண்டு சிந்தனைகள் ஆளுமைகள் நிகழ்வுகள்.** A.B.M *.இத்ரீஸ் (பதிப்பாசிரியர்). வாழைச்சேனை 05: சோனகம் வெளியீடு, மஹ்மூட் ஆலிம் தெரு, 1வது பதிப்பு, 2011. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. 44, புகையிரத நிலைய வீதி).*

*136 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21*x*14 சமீ.,* ISBN: *978-955-0697-04-5.*

*1999ஆம் ஆண்டு நிறைவடைந்து 2000 ஆண்டு மிலெனிய யுகம் பிறக்கும்போது குவைத்திலிருந்து 30 வருடங்களுக்கு மேலாக வெளிவரும் அல்-முஜ்தமா (சமூகம்) என்ற புகழ்பெற்ற அறபு இஸ்லாமிய சஞ்சிகை தொடராக வெளியிட்ட அறபுலக இஸ்லாமிய அறிவுஜீவிகளின் நேர்காணல்களின் மொழிபெயர்ப்பு இவை. முஸ்தபா மஷ்ஹூர், கலாநிதி அஹ்மத் அல்-அஸ்ஸால், அலி அல் பயானூனி, அப்துல்லாஹ் அலி அல் முதவ்வஆ, சட்ட ஆலோசகர் தாரிக் அல் பிஷ்ரி, கலாநிதி அஹமத் ஸித்கி அத்துஜானி, கலாநிதி காஸீம் அப்துஹு காஸீம், யூசுப் அல் அழ்மி, கலாநிதி நாதியா மஹ்மூத் முஸ்தபா, கலாநிதி ஜமாலுத்தீன் அதிய்யா,*

*கலாநிதி மூஸா அபூ மர்சூக், கலாநிதி முஸ்தபா ஹில்மி, அப்துல் ஹாபிஸ் அஸீஸ் ஆகிய அறிஞர்களின் நேர்காணல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நேர்காணல்கள் கடந்த நூற்றாண்டில் அறபுலகம் பற்றிய மெக்ரோ*(Macro) *பார்வையை இந்நேர்காணல்கள் தருகின்றன.*

## 954.93 இலங்கை வரலாறு

### 14967

**பொலன்னறுவை பொத்குல் விகாரை சிலை.** *மகிந்த சோமதிலக (சிங்கள மூலம்), ஜே.எம்.றிழ்வான் (தமிழாக்கம்). கொழும்பு 10: எஸ்.கொடகே சகோதரர்கள், 675 பி.டி.எஸ்.குலரத்ன மாவத்தை, மருதானை வீதி, 1வது பதிப்பு, 2014. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 69, குமாரதாச பிளேஸ்).*

*(13), 14-152 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 450., அளவு: 22*x*15 சமீ.,* ISBN: *978-955-30-5386-2.*

*அறிமுகம், முதலாம் பராக்கிரமபாகு, அகத்திய முனிவர், கபில முனிவர், புலஸ்தி ரிஷி அல்லது இந்து முனிவர், இலங்கையில் சோழர்களது ஆதிக்கம், ராஜராஜேஸ்வர தேவாலயமும் கருவூர் தேவரும் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. மகிந்த சோமதிலக பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவராவார். மொழிபெயர்ப்பாளர் ஜே.எம். றிழ்வான் அதே பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை உதவி விரிவுரையாளராவார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 65508).*

## 954.93 (2) இலங்கை இனப்பிரச்சினை வரலாறு

### 14968

**இடைக்கால நிர்வாகமே இன்றைய தேவை.** *சி.அ.யோதிலிங்கம் (நேர்கண்டவர்). யாழ்ப்பாணம்: சி.அ.யோதிலிங்கம், 1வது பதிப்பு, 2018. (கொழும்பு: கே.பீ. லிமிட்டெட்).*

*14 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21*x*14 சமீ.*

*தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலத்துடன் நடந்த நேர்காணலின் எழுத்து வடிவம் இது. ஜெனீவா தீர்மானம் பலத்த ஏமாற்றத்தினை தமிழ் மக்களுக்குத் தந்திருந்த நிலையில், 13ஆவது திருத்தத்தினை அமுலாக்க அரசு பின்னடிப்பதினூடாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தினை இலங்கை அரசு முழுமையாக இல்லாமல் செய்வதற்கான சாதக நிலைமைகளை இந்நேர்காணல் வெளிக்கொண்டு வருகின்றது.*

## 14969

**இலங்கை இந்திய ஒப்பந்தம்: ஒரு நோக்கு.** செ.துரைசிங்கம். புத்தளம்: சிந்தியா கலை இலக்கிய வட்டம், இல. 22/17, முதலாம் ஒழுங்கை, கடுமையான்குளம் வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xiii, 50 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ.

இலங்கை இந்திய ஒப்பந்தம் எத்தகைய சூழ்நிலையில் ஏற்படுத்தப்பட்டது என்பதையும், இதன் வெற்றிக்கும் தோல்விக்கும் உரியவர்கள் யார் என்பதையும் ஆசிரியர் எளிமையாக விளக்கியிருக்கிறார். யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை வதிவிடமாகவும் கொண்ட நூலாசிரியர் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தில் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். 1986ஆம் ஆண்டு நெதர்லாந்தின் அம்ஸ்டர்ராம் நகரில் நடைபெற்ற உலக சுவிசேஷகர்கள் மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளில் ஒருவராகக் கலந்துகொண்ட இவர் புத்தளம் பரிகிலமெந்து ஆலயத்தின் சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபாடு கொண்டுழைத்து வரும் சுவிசேஷகராகவும் சேவையாற்றுகிறார். (இந் நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46703).

## 14970

**நந்திக் கடல் பேசுகிறது: பின் போர்க்காலமும் களப் பதிவுகளும்.** ஜெரா (தொகுப்பாசிரியர்). இலங்கை: ஊறுகாய் மற்றும் வொய்ஸ் எண்ணிம தளம், 2வது பதிப்பு 2020, 1வது பதிப்பு, 1919. (அச்சகவிபரம் தரப்படவில்லை).

(10), 277 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-624-5231-00-3.

முள்ளிவாய்க்கால் இறுதிக்கண அனுபவங்களில் ஆரம்பித்து கடந்த பத்தாண்டுகளில் ஈழத்தமிழர் சந்தித்துவரும் சவால்கள் தொடர்பான நாற்பது கட்டுரைகளை இந்நூலில் வன்னியைச் சேர்ந்த விவரணவியலாளர் ஜெரா தொகுத்துள்ளார். போர் நடைபெற்றபோது தாயகத்தில் வாழ்ந்த சாதாரண மக்கள், துறைசார்ந்தவர்கள், ஊடகவியலாளர்கள், விரிவுரையாளர்கள், புலம்பெயர் நாடுகளில் வாழும் ஈழத் தமிழர்கள் ஆகியோரிடம் இருந்தும் அனுபவங்களின் அடிப்படைகளில் ஆக்கங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த கட்டுரைகள் ஈழத் தமிழ்ப் போராட்டத்தையும் அதன் நியாயத்தையும் பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்த நூலில் நாற்பது தலைப்புகளில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டுரைகளின் விபரங்கள் வருமாறு: நந்திக்கடல்- சுதந்திர வேட்கை (யூட் லால்), விடுதலையின் இறுதி நாட்கள் அவை (முகில்நிலா), உயிர்வாழ்வதற்காக உயிரைப் பணயம் வைத்தல் (இளைய வன்னியன்), கையேந்தும் கலாசாரத்தை தந்துவிட்டுப்போன 2009 (செ.ராஜசேகர்), போருக்குப் பின்னர் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் (தெய்வீகபாலன் சந்திரகுமார்), இனவழிப்புப் பின்னணியில் தமிழ் பெண்கள் (பரணி கிருஷ்ணரஜனி), தமிழர் தாயகக் கோட்பாட்டை கேள்விக்குட்படுத்துவதே மகாவலி திட்டத்தின் இலக்கு

(வி.நவநீதன்), தமிழர் தாயகத்தின் நிலத்தொடர்ச்சியை சிதைக்கும் வெலிஓயா (பேராசிரியர் அ.சூசை), ஒரு தேசமாகத் திரள்வது எங்கிருந்து தொடங்குவது (நிலாந்தன்), தமிழர் நீக்கம் செய்யப்படும் தமிழர் தலைநகர் (ஜெனோஜன்), கன்னியா- சுடும் நிலம் (திருமலை நவம்), சூழல் அரசியலும் நில அபகரிப்பும்- யுத்தத்தின் பச்சை முகம் (பொ.ஐங்கரநேசன்), சிறைக்குள்ளயே சாகடிக்கப்படும் தமிழ் அரசியல் கைதிகள் (சக்திவேல் அடிகளார்), அம்மா இருக்கும் வீட்டைவிட அப்பா இருக்கும் சிறை மேல் (மு.தமிழ்ச்செல்வன்), வலிகளை வலிமையாக்குதல் (ஞானதாஸ் காசிநாதர்), வன்னிக்குள் மலையை மையப்படுத்திய செய்திகள் (கே. குமணன்), தமிழர் கடல் (ஜெயா), போருக்குப் பின்னான பத்தாண்டுகளில் தமிழ் ஊடகத்துறை (சி.ரகுராம்), பத்தாண்டுகளில் ஈழப்பிரச்சினையை தமிழகம் கையாண்ட விதம் (சரவணன்), வேர்கள் அறியா விருட்சம் (ட்ரைடன் கே. பாலசிங்கம்), பத்தாண்டுகளில் முள்ளிவாய்க்கால் மரபு (பாசன அபேவர்தன), ருவாண்டா மற்றும் இலங்கை- இரு இனப் படுகொலைகளின் கதைகள் (உருத்திரமூர்த்தி சேரன்,ஷெர்ரி ஐகன்), பின் முள்ளிவாய்க்கால் வரலாற்றுத் தளத்தில் நினைவுத்திறன் (எழில்ராஜன் அடிகளார்), பத்துவருட நிலுவை- இங்கிருந்து எங்கு (சஞ்சுலா பியற்றர்ஸ்), நந்திக்கடல் கோட்பாடுகள் (பரணி கிருஸ்ணரஜனி). இவர்களுடன் தொகுப்பாசிரியர் ஜெரா எழுதிய இரும்புத் துண்டுகளுடன் வாழும் மனிதர்/நலன்புரி எனும் நரகம்/ மரணச்சான்றிதழ் வேண்டாம்/ படத்தில் இருப்பது அப்பாதான்/ போராடி/ தண்டிக்கப்படும் நிராயுத பாணிகள்/ இந்த வாழ்க்கை நரகமா இருக்கு/ இந்தக் குழந்தைகள் என்ன செய்தனர்/ வவுனியா வடக்கில் மீளக்குடியேறலாமா/ தென்கரையாக விழுங்கப்படும் வவுனியா வடக்கு/ கேப்பாப்புலவு நிலமே எங்கள் உரிமை/ தண்ணீர்தான் பிரச்சினை தண்ணீருக்கு நடுவில் இருக்கும் தீவு/ புல்மோட்டையில் திடீர் குடியேற்றங்கள்/ வாழ்வோடு ஒட்டிக்கொண்ட போரின் வடு/ சூறையாடப்படும் நெய்தல்/ இலங்கையின் நீதி/ முள்ளிவாய்க்கால் 2019 ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

## 14971

**பிரான்ஸ் தமிழர் போராட்டம்.** மா.கி.கிறிஸ்ரியன். தமிழ்நாடு: விளிம்பு வெளியீடு, த.பாபிரஸ், 1205, கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, திருச்சி மாவட்டம், 1வது பதிப்பு, 2009. (சென்னை 600005: மணி ஓப்செட்).

176 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 200., அளவு: 22x15 சமீ.

இலங்கை அரசின் விடுதலைப் புலிகளுக்கெதிரான போரின் இறுதிக்கட்டத்தின்போது இவ்வினவழிப்பினால் புலம்பெயர் தேசமெங்கும் பொங்கியெழுந்த தமிழர்கள் உலக அரசுகளிடம் நீதிகேட்டு எழுச்சிப் போராட்டங்களை நடத்தினார்கள். அவ்வாறு பிரான்சில் நடந்த போராட்ட நிகழ்வுகளை வாரலாற்று ஆவணமாகத் தந்திருக்கிறார் கவிஞர் மா.கி.கிறிஸ்ரியன். ஒற்றுமையின் வலிமையில் என்னுரை, பிரான்ஸ் தமிழர் போராட்டம், பாரிஸ் மையத்திடலில் குதித்தனர் தமிழர், இனிப் போராடும் நிலைப்பாட்டில், புலம்பெயர்ந்தவர்-இடப்பெயர்வு, இரண்டாம் தலைமுறையின் நகர்த்தல், உண்ணாவிரதமும் கவனயீர்ப்பும், பகிஷ்கரிப்பு,

அதிர்ச்சியும் ஆத்திரமும், வீதிப் போராட்டத்தின் விழிப்பு, கருத்தும் கடமையும், தொழிலாளர் தினம், நினைப்பும் நிலையும், வட்டுக்கோட்டைத் தீர்மானமும் வாக்கெடுப்பும், ஈபில் கோபுரத்தின் முன் வாக்குறுதி, தமிழீழத்தில் மரணமுகாம்கள், கலைஞர்களின் பங்களிப்பும் கடவுளைப் பணிதலும், தவிப்பும் கொதிப்பும், ஊர்வலத்தின் எழுச்சி, அரசியலா அஞ்சலியா, வணங்காமண், கொடிகளும் சின்னங்களும், தலைமையின் உயிர்த்தெழுதல், யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கில் புலிகளின் நிர்வாகம், பிரான்ஸ் தமிழர் போராட்டம் பற்றிய கருத்துக்கள், தமிழீழப் போராட்டமும் புலம்பெயர்வாழ் தமிழ் மக்களும், பேசாமல் பேசவைப்பார் பிரபாகரன், அன்பு உறவுகளுக்கு ஒரு வேண்டுதல், அந்த ஐம்பது நாட்கள், ஏகோபித்த அபிலாஷைகள், தரங்களும் தவறுகளும் ஆகிய தலைப்புகளின் கீழ் வரலாற்று நிகழ்வுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

## 14972

**மனப்பால்.** கா.பொ.இரத்தினம். வேலணை: கா.பொ.இரத்தினம், பாராளுமன்ற உறுப்பினர், 1வது பதிப்பு, ஆவணி 1972. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

32 பக்கம், விலை: 60 சதம், அளவு: 20.5x13.5 சமீ.

இலங்கையின் தேசிய அரசுப் பேரவையில் 05.07.1972இல் நிகழ்த்திய உரை இச்சிறுநூலின் எழுத்துருவில் எழுதப்பட்டு, நூலின் பிரதான இடத்தை வகிக்கிறது. "தமிழர்களை அடிமைகளாக்கலாம் என்று குடிக்கவேண்டாம் மனப்பால்" என்ற விரிவான தலைப்பின் கீழ் இவ்வுரை எழுதப்பட்டுள்ளது. தொடர்ந்து பிரதம அமைச்சர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு 12.05.1972 அன்று எழுதிய கடிதமும் (யார் பைத்தியக்காரர்?), 26.01.1972 அன்று எழுதிய கடிதமும் (மனப்பால் குடிக்கிறீர்களா?) இணைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 34861).

## 14973

**மாவை சேனாதிராசாவின் மறைக்கப்பட்ட மறுபக்கம்.** வீ.ஆனந்தசங்கரி. யாழ்ப்பாணம்: வீ.ஆனந்தசங்கரி, தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி, செல்வா அகம், 58/4, ஸ்டான்லி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x13 சமீ.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான மாவை சேனாதிராஜா அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரிக்கு எதிராக மேடைகளிலும், ஊடகங்களிலும் கருத்துக்களைத் தெரிவிப்பதற்குப் பதிலடியாக 06.11.2003 அன்று தலைவர் வீ. அனந்தசங்கரி அவர்களால் மாவை சேனாதிராஜா அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட நீண்ட கடிதத்தின் மறுபிரசுரம் இதுவாகும். தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும், மாவை சேனாதிராஜா அவர்கள் வெளியிட்ட அபாண்டமான கருத்துக்களால் தான் அடைந்த வேதனையையும் அதற்கான மறுதலிப்புகளையும் இக்கடிதத்தில் விரிவாக எழுதியிருக்கிறார்.

## 954.93(3) இனங்கள், மக்கள் குழுமங்கள், இன உறவுகள்

### 14974

**சோனகத் தேசம்: மிகச் சுருக்கமான அறிமுகம்.** A.B.M .இத்ரீஸ். வாழைச்சேனை *05:* சோனகம் வெளியீடு, மஹ்மூட் ஆலிம் தெரு, *1*வது பதிப்பு, *2011. (*தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல. *44*, புகையிரத நிலைய வீதி*).*

*208 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22*x*15 சமீ.,* ISBN: *978-955-0697-01-4.*

*இலங்கையில் முஸ்லிம் மக்களின் வரலாற்றை கண்டறியும் நோக்கில் எழுதப்பட்ட நூல். சோனகத் தேசம் -அறிமுகக் குறிப்பு, உலகின் முதல் நாகரிகம், சோனகர் இன வரலாறு ஆகிய அறிமுகப் பக்கங்களைத் தொடர்ந்து இந்நூலின் முதலாம் இயலில் வரலாறு பற்றி அல்குர் ஆன், வரலாற்றிற்கு இஸ்லாமிய வியாக்கியானம், எல்லாக் காலத்திற்குமான தூது, உள்ளுணர்வு, நம்பிக்கை, விண்வெளிப் பயணம்-நம்பிக்கை ஓர் அறிவு ஆகிய விடயங்களும் இரண்டாம் இயலில் உலகின் தோற்றம், ஆதம் (அலை), அவ்வை, ஹாபில் காபில், ஷீது (அலை) ஆகிய விடயங்களும் மூன்றாம் இயலில் நூஹ் (அலை)யும் நதிக்கரை நாகரிகமும், லெமூரியா (குமரிக்) கண்டமும் நோவாவின் பிரளயமும், கிழ்ர் (அலை), முன்னைய நபிமார்களும் தொல்லியல் சான்றுகளும் ஆகிய விடயங்களும் நான்காம் இயலில் சோனக குடிப் பரம்பலும் ஆட்சியும், இலங்கையை ஆண்ட சோனக மன்னர்கள், இலங்கைச் சோனகரின் பூர்வீகத் தொழில்கள் ஆகிய விடயங்களும் ஐந்தாம் இயலில் சோனக மொழியும் பண்பாடும், சோனகம்-ஒரு தனித்துவ மொழி, பிற மொழிகளில் சோனக மொழிச் சொற்கள், சோனகப் பண்பாடு, பண்பாட்டு ஒற்றுமை ஆகிய விடயங்களும் ஆராயப்பட்டுள்ளன.*

### 14975

**தமிழர் யார்?** ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை: முத்தமிழ் நிலையம், எம். சக்கரவர்த்தி நயினார், Cottage Industries Publishing House, *2*வது பதிப்பு, பெப்ரவரி *1947*, *1*வது பதிப்பு, ஒக்டோபர் *1946. (*மதராஸ்: T.V.C.Press 329, Mint Street, G.T.Madras*).*

*52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18*x*12.5 சமீ.*

*இந்நூலில் ஆதி மக்கள், மக்கள் ஓரிடத்தினின்றும் பிற இடங்களுக்கு ஏன் சென்றார்கள்? நாவலந் தீவின் அழிவு, நாவலந் தீவின் நாகரிகம் வளர்ச்சியுற்றிருந்ததென்பதற்குச் சான்று, குமரி நாடு, குமரி நாட்டின் அழிவும் அங்கு வாழ்ந்த மக்கள் தென்னிந்தியாவிற் குடியேறுதலும், நாவலந்தீவு, நாவலந்தீவினின்றும் சென்று மக்கள் பிற நாடுகளிற் குடியேறுதல், சிந்து வெளி மக்கள், எகிப்தியர், சுமேரியர், பாபிலோனியர், அசீரியர், யூதர், பினீசியர், சீரியர், சின்ன ஆசிய மக்கள், எற்றூஸ்கானியர், கிரேத்தா மக்கள், பாஸ்க்கு மக்கள், துரூயிதியர், அமெரிக்கர், இக்கருத்துக்கள் புதியனவல்ல, ஆரியர், ஆரியருக்கும் தமிழருக்கும் இடையிற் போர், ஆரியர் தமிழரின் கொள்கைகளைப் பின்பற்றுதல், மக்கட் குலங்கள், ஹெரஸ் பாதிரியார் இந்திய வரலாற்று இதழில் எழுதியிருப்பதன் சுருக்கம், பார்ப்பனர் யார்? வடமொழி-தென்மொழிக் கலப்பு, பெரிய வெள்ளப்*

பெருக்குக்குப் பிற்பட்ட மக்கள் அல்லது ஹமித்திய இந்திய மத்தியதரை மக்கட்குலம், மொஹஞ்சதரோ நாகரீகமும் கீழ்நாட்டு ஆராய்ச்சியாளரும், திராவிடநாகரீகம், திராவிடம், நாகரீகத்தின் தொட்டில் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்து நவாலியூர் ந. சி. கந்தையாபிள்ளை (1893-1967) தமிழர் வரலாறு தொடர்பாக தமிழ் இந்தியா, தமிழர் சரித்திரம், தமிழகம், வரலாற்றுக் காலத்திற்க முற்பட்டபழந்தமிழர், நமது நாடு, நமது மொழி முதலான ஏராளமான நூல்களை வெளியிட்டவர். எளிய பாமர மக்களும் படித்துப் பலன் பெறுமாறு உரைநடையில் தமிழ் இலக்கியங்களை அக்காலத்தில் வழங்கிவந்தவர். இவர் யாழ்ப்பாணத்தில் கந்தரோடையில் 1893 ஆம் ஆண்டு நன்னியர் சின்னத்தம்பி அவர்களின் புதல்வராகப் பிறந்தார். அவ்வூரிலேயே கல்வி கற்றுத் தேறி, சில காலம் ஆசிரியப்பணி செய்தார். ஆசிரியப் பணியிலிருக்கும் போதே ஈழத்தில் பெரும் புலவர்களின் அறிமுகத்தில் தமிழ் இலக்கண, இலக்கியங்களை கற்றுத் தேர்ந்தார். சில காலம் மலேயாவில், பிரித்தானியா தொடர்வண்டி சேவையில் சில காலம் பணியாற்றினார். பின்னர் இலங்கை திரும்பி தமிழ்மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இவர் நவாலியூர் மருதப்பு என்பவரின் மகளான இரத்தினம்மாவைத் திருமணம் செய்தார். அவர் நவாலியூர் ந.சி.கந்தையாபிள்ளை என்றே பரவலாக அறியப்பட்டிருந்தார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 01277).

### 14976

**விலாசம் தேடும் விழுதுகள் ரோஹிங்யா.** எஸ்.எல்.மன்சூர். கொழும்பு 9: I.B.H. வெளியீட்டகம், 77, தெமட்டகொட வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2017. (கொழும்பு 9: இஸ்லாமிக் புக் ஹவுஸ், 77, தெமட்டகொட வீதி).

ix, 86 பக்கம், விலை: ரூபா 230., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-706-093-4.

Ethnic Cleansing of Rohingya என்ற ஆங்கில உபதலைப்புடன் இந்நூல் வெளியாகியுள்ளது. பர்மாவில் நடைபெறுகின்ற மிகப்பெரிய மனிதப் படுகொலைகளுக்குப் பின்னணியாக இருந்துள்ள விடயங்களை இந்நூல் வழியாக ஆசிரியர் வழங்கியுள்ளார். மியன்மாரின் அமைவிடம், இங்குள்ள மக்கள், ரோஹிங்கியர்களின் வரலாற்றுப் பதிவுகள், அந்நாட்டின் இராணுவ ஆட்சியாளர்களின் போக்குகள், இன அழிப்பின் பின்னணி, முஸ்லிம்கள் மீதான துரோகத்தனத்தின் வழிவகைகள் போன்ற விடயங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. மியான்மர் நாட்டு வரைபடத்தில், வங்க தேச எல்லையில், வங்கக் கடலை ஒட்டி ஒரு வால் போல் தொங்குகிற ராகைன் எனப்படும் மியான்மர் நாட்டு மாநிலத்தில் வாழ்கிற முஸ்லிம் இனங்களில் ஒன்றுதான் ரோஹிங்யாக்கள் எனப்படுவோர். வங்க இலக்கியங்களில் "ரோஷாங்" எனக் குறிப்பிடப்படும் இவர்கள் அங்கிருந்து கொஞ்சம் கொஞ்சமாக இடம் பெயர்ந்து வந்து இங்கு குடியேறினர். இலங்கையில் தமிழ்த் தந்தி என்ற வார இதழின் வழியாக 2016-2017 ஆண்டுக் காலப்பகுதியில் 20 வாரங்கள் தொடராக எழுதிய கட்டுரைகளே இவை. இத்தொடருடன் ஆசிரியர் சுடர்ஒளி, நவமணி போன்ற நாளிதழ்களிலும் எழுதப்பட்ட இவரது ஆக்கங்கள்

சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 63328).

மேலும் பார்க்க: தமிழர் பண்பாடு. **14261**

## 954.93 (4) பிரதேச வரலாறு

### 14977

**கங்கைவேலி.** சி.நந்தகுமார். திருக்கோணமலை: சிவசுப்பிரமணியம் நந்தகுமார், நகராட்சிமன்ற உறுப்பினர், 1வது பதிப்பு, பெப்ரவரி 1999. (திருக்கோணமலை: ஸ்ரீ கணேச அச்சகம், 28B புதிய சோனகத் தெரு).

(2), 29 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 25x18 சமீ.

திருக்கோணமலை நகரிலிருந்து 23 மைல் தொலைவில் உள்ள மூதூர்ப் பகுதியில் அமைந்துள்ள கங்குவேலி என்ற கிராமம் மகாவலி கங்கையை எல்லையாகக் கொண்டது. முன்னர் கங்கைவேலி என்று அழைக்கப்பட்டது. கொட்டியாரபுரப் பற்றிலுள்ள கிராமங்களின் வரலாற்றுப் பின்புலங்களையும் அழிவுக்குள்ளான ஆலயங்களினதும் வரலாறுகளை மீட்டுப்பார்க்க விளையும் முன்முயற்சியாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. முன்னர் திருக்கரைசையம்பதியை (கங்குவேலி) மத்தியாகக் கொண்ட ஒரு சைவ சாம்ராச்சியமே இப்பிரதேசத்தில் இருந்திருக்கக் கூடும் என்ற கருத்தை இந்நூலாசிரியர் வலியுறுத்துகிறார். அதற்கு ஆதாரமாக இங்கு அண்மைக்காலத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள லிங்கம், கோமுகை, பலிபீடம், முக்கூட்டுக் கல், வாயிற்கற்கள், தூண்கள், முதலியவற்றை குறிப்பிடுகின்றார். இவ்வாதாரங்களின்படி சிற்ப சாஸ்திர முறைப்படி அமைந்த மாபெரும் சிவாலயம் ஒன்று இங்கு முன்னர் இருந்திருப்பதை வலியுறுத்துவதாகக் குறிப்பிடுகிறார். மேலும் திருக்கோணமலை மாவட்டத்தில் தலபுராணம் உள்ள இரண்டு கோயில்களில் திருக்கரைசையம்பதியும் ஒன்று. காலவெள்ளத்தில் அழிந்துபோயுள்ள திருக்கரைசை மாநகரை ஆராய்ச்சிக்கு உட்படுத்தும்போது கிழக்கில் சைவப் பண்பாட்டுக் கருவூலங்களுக்கு வலுவூட்டும் புதிய தகவல்கள் எமக்கு வந்துசேரலாம். இந்நூல் அத்தகைய ஒரு ஆய்வுக்கு வழிகாட்டும் நோக்கில் புகைப்பட ஆதாரங்களுடன் தகவல்களைப் பதிவுசெய்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 21217).

### 14978

**கன்னியா: பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்.** என்.கே.எஸ். திருச்செல்வம். திருக்கோணமலை: இராவண சேனை வெளியீடு, இணை வெளியீட்டாளர், கொழும்பு 5: அருந்ததி பதிப்பகம், 68/14, ஸ்ரீ சித்தார்த்த வீதி, 1வது பதிப்பு, ஆவணி 2019. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).

xxxii, *404 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 1200., அளவு: 21.5*x*14 சமீ.*, ISBN: *978-955-3726-08-7.*

*இந்நூல் கன்னியா வெந்நீர் ஊற்றுகள் பற்றிய புராண வரலாறு, பண்டைய நூற் குறிப்புகள், வெந்நீர் ஊற்றுக்கள், இங்கிருந்த கோயில்கள், கன்னியா மலையில் உள்ள சமாதி ஆகியவை தொடர்பான ஐரோப்பிய அறிஞர்களின் ஆய்வுக் குறிப்புகள், இங்கு சிவன் கோயில் இருந்தமைக்கான தொல்பொருள் சின்னங்கள், பிள்ளையார் கோயிலின் சிதைவுகள், கடந்த நூற்றாண்டில் கன்னியா தொடர்பான முக்கிய விடயங்கள், இங்கிருந்த கோயில் அழிக்கப்பட்ட சம்பவங்கள் மற்றும் அண்மைக்காலமாக கன்னியாவில் இடம்பெற்று வரும் பௌத்த ஆக்கிரமிப்புக்கள் போன்ற விடயங்களை கிடைக்கக்கூடிய ஆதாரங்கள் மற்றும் சான்றுகளின் அடிப்படையில் ஆவணப்படுத்துகின்றது. கன்னியா ஓர் அறிமுகம், கன்னியா பெயர் வரலாறு, கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் புராண வரலாறு, கன்னியா மலையில் காணப்படும் இராவணனின் தாயின் சமாதி, கன்னியா மலையில் உள்ள சமாதி பற்றிய அறிஞர்களின் குறிப்புகள், மகாபாரதத்தில் கன்னியா தீர்த்தம், கன்னியாவில் அகத்திய முனிவர் அமைத்த ஆதி சிவன் கோயில், கன்னியாவில் இருந்த சிவலிங்கங்கள், கன்னியாவில் ஆதி பிள்ளையார் கோவில், கன்னியா பிள்ளையார் கோவில் பற்றிய வரலாற்று அறிஞர்களின் குறிப்புகள், கன்னியாவில் பௌத்த விகாரை இருந்தமை பற்றி வரலாற்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனரா?, கன்னியா வெந்நீர்க் கிணறுகள் மற்றும் அவை பற்றிய பொதுவான விபரங்களைக் குறிப்பிடும் வரலாற்று அறிஞர்கள், கன்னியா பற்றிக் குறிப்பிடும் தமிழ் நூல்கள், மடத்தடி மாரியம்மன் கோயிலுக்கும் கன்னியாவுக்கும் உள்ள தொடர்பு, ஆலடி விநாயகர் கோயிலுக்கும் கன்னியாவுக்கும் உள்ள தொடர்பு, சண்முகா தர்ம ஸ்தாபனத்திற்கும் கன்னியாவுக்கும் உள்ள தொடர்பு, உப்புவெளி பிரதேச சபைக்கும் கன்னியாவுக்கும் உள்ள தொடர்பு, கடந்த நூற்றாண்டில் கன்னியா, இனக் கலவரங்களின்போது அழிக்கப்பட்ட கன்னியா கோயில்கள், கன்னியாவில் இந்துக்களின் வழிபாட்டுப் பாரம்பரியம் அபகரிக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்ட வரலாறு, கன்னியா சைவத் தமிழ் மக்களின் பூர்வீகம்-பண்டைய அடையாளம்-கன்னியாவை மீட்டெடுப்போம் ஆகிய தலைப்புகளில் இந்நூல் கன்னியா பற்றிய விரிவான ஆய்வினை முன்னெடுத்துள்ளது. பின்னிணைப்பாகக் காணப்படுகின்ற 30 அனுபந்தங்கள், இந்நூலாசிரியரின் ஆழமான ஆய்விற்கான துணை ஆவணங்களாகத் தரப்பட்டுள்ளன.*

## 14979

**கொட்டியாரபுரப்பற்று முதுசங்கள்.** *அருமைநாதன் ஸதீஸ்குமார். திருக்கோணமலை: வைத்திய கலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமார், 48/190 கண்டி வீதி, விநாயகபுரம், 1வது பதிப்பு, 2016. (திருக்கோணமலை: எஸ்.எஸ்.டிஜிட்டல்ஸ் பிரின்ட்ஸ்).*

xxvi, *171 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 20*x*13 சமீ.*, ISBN: *978-955-44703-2-3.*

பழம்பெரும் வரலாற்றைக்கொண்ட கொட்டியாரபுரப்பற்றின் பெருமைகளையும் அதனுடன் சார்ந்த வரலாறுகளையும் பல ஆதாரங்களுடன் இருபது கட்டுரைகளில் ஆவணப்படுத்தும் முயற்சியாக இந்நூல் வெளிவந்துள்ளது. வரலாற்றுக்கால கேந்திர நிலையம் கொட்டியாரத்துறை, திருக்கரைசையம்பதி அகத்தியதாபன சிவன் ஆலயம், கொட்டியாரப்பற்று பிராமி சாசனங்கள், வெருகலம்பதி சித்திரவேலாயுதர் சுவாமி கோவில், சேறுவில மங்கள ரஜமகா விகாரை, சம்பூர் பத்திரகாளி அம்மன் ஆலயம், தேசிய வீரன் இளஞ்சிங்க வன்னிமை, நீலாப்பளை பத்தினியம்மன் ஆலயம் (தாயம்மன்), மூதூர் புனித அந்தோனியார் ஆலயம், சம்பூர் சுடுமண் உருவங்கள், மூதூர் சுடுமண் உருவங்கள், மூதூர் பெரிய பள்ளிவாசல், கும்பவிழா, கொட்டியாரப்பற்று கல்வெட்டு சாசனங்கள், சேனையூர் நாகம்மாள் ஆலயம், கொட்டியாரத்துக் காவியங்கள், திருமங்கலாய் சிவன் ஆலயம், கௌரவ இலக்கிய கலாநிதி வ.அ.இராசரெத்தினம், கொம்பு முறிக்கொம்பு விளையாட்டுச் சடங்கு, பண்டைக்கால துறைமுகப் பட்டினம் இலங்கைத்துறை, வெருகல் கோயில் களவு காவியம் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

## 14980

**திருக்கோணேஸ்வரம் கையேடு: திருமதி பத்மாசனி கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவேடு.** நினைவு மலர்க் குழு. திருக்கோணமலை: நாகராஜா கணபதிப்பிள்ளை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1971. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(30) பக்கம், புகைப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x15 சமீ.

திருக்கோணமலையைச் சேர்ந்த திருமதி பத்மாசனி கணபதிப்பிள்ளை (சின்னக்கிளி 04.11.1937-31.03.1971) அவர்களின் மறைவின் முப்பத்தியொராம் நாள் நினைவையொட்டி வெளியிடப்பட்ட நினைவுமலர். இம்மலரில் கோணேஸ்வரம் வரலாறு (திருத்தி வாசிக்கப்படுபவை/ஆலயம் அமைந்த வரலாறு/ அரசர்களின் திருப்பணிகள்/ மறுமலர்ச்சி/ பிற தொடர்புகள்/ வில்லூன்றிக் கந்தன்/ முடிவுரை), திருக்கோணமலைத் தேவாரத் திருப்பதிகம், திருக்கோணேஸ்வரம் நிகழ்ச்சிகள், திருமதி கணபதிப்பிள்ளை பத்மாசனி சிவபதமடைந்த திதி வெண்பா/ திருமதி கணபதிப்பிள்ளை பத்மாசனி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 21780).

## 14981

**பார் புகழும் பதி பன்னாலை.** நூல் ஆக்கக் குழுவினர். தெல்லிப்பழை: திருநாவுக்கரசு சிவபாக்கியம் பவளவிழா வெளியீடு, பன்னாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

225 பக்கம், புகைப்படங்கள், வரைபடம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18.5 சமீ.

தெல்லிப்பழை பிரதேசத்தின் பன்னாலைக் கிராமத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் திரு. கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் 75ஆவது அகவையை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பிதழ். இது திருநாவுக்கரசு சிவபாக்கியம் பவளவிழா வெளியீடாக 05.09.2005 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இவ்வூருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ள இம்மலர் சென்றகாலத்தின் பழுதிலாத் திறத்தையும் இன்றைய சிறப்பையும் எடுத்துக்காட்டும் வகையில் தொகுக்கப் பட்டுள்ளது. இம்மலர் சைவாலயங்கள், பொன்னாலையில் குறியீடு பெறுவோர், அதிபர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், அஞ்சலக அதிபர்கள், நிர்வாகிகள் எனப் பல்துறை சார்ந்த இப்பிரதேசத்து மக்கள் பற்றிய ஆவணப்பதிவாகின்றது. விழாநாயகர் வாழ்க்கை வளம் என்ற பிரிவில் விழாநாயகர் திரு. கந்தையா திருநாவுக்கரசு அவர்கள் வாழ்க்கை வரலாறு, கல்வியிற் கலங்கரை விளக்கம் மனிதருள் மாணிக்கம் அதிபர் திருநாவுக்கரசு (மாவை. சேனாதிராசா), பன்னாலைக் கிராமத்தில் ஒரு பண்பாளர் (சி.சிவமகாராசா) ஆகிய ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. நூல் ஆக்கக் குழுவில் சு.செல்லத்துரை, சொ.சண்முகலிங்கம், க.நடராஜர், அமிர்தயோகேஸ்வரி முத்துக்குமாரசாமி, சி.அப்புத்துரை ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37020).

### 14982

**பாஷையூரும் நாட்டுக்கூத்தும்**. மு.சிங்கராயர். பிரான்ஸ்: பாஷையூர் அபிவிருத்திக் குழு, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).

(10), 148 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

ஈழத்தின் நாட்டுக்கூத்துப் பாரம்பரியக் கிராமங்களில் ஒன்றான யாழ்ப்பாணம்-பாஷையூரின் நாட்டுக்கூத்து வரலாற்றினை, கலைஞர்களின் வாழ்வினூடாக திரு. மு.சிங்கராயர் ஆவணப்படுத்தியுள்ளார். பாஷையூர் கூத்தின் தோற்றம், கோவில் திருவிழாவும் கூத்தும், சலித்தெடுத்த முத்துக்கள், பாஷையூர் தந்த பெரும் புலவர்கள், கூத்துக்களை ஆடும் மேடைக் கோலங்கள், அண்ணாவிமார்களும் அரங்குகளும், ஊர்களைக் கவர்ந்திழுக்கும் கூத்து, பங்களிப்பும் பணக்கூத்தும், ஆட்டக்கூத்து, மிருதங்கம் தபேலா வீணை தாளம், ஒலி ஒளி அமைப்புகள், கூத்தும் ஒப்பனையும், பக்கப்பாட்டு, 1920இற்குப் பின் கூத்து, 1945க்குப் பின்னர் பாஷையூர் அரங்கின் கூத்தாளிகள், நாட்டுக்கூத்தில் இளைய தலைமுறை, பாஷையூர் கூத்தின் எதிர்காலச் செல்நெறி, நிறைவுறை ஆகிய 18 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம்-பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் முடியப்பு சிங்கராயர் எழுத்தாளரும், கவிஞரும் நாடக ஆசிரியருமாவார். தனது 20ஆவது வயதில் எழுத்துத் துறையில் நுழைந்த இவர் பன்னூலாசிரியருமாவார்.

14983

**புகழ்பூத்த நீர்வேலி.** த.பரராசசிங்கம். யாழ்ப்பாணம்: காமாட்சி அம்மாள் இந்து பரிபாலன சபை, நீர்வேலி, 2வது பதிப்பு, மார்ச் 2014, 1வது பதிப்பு, பெப்ரவரி 2000. (யாழ்ப்பாணம்: கணபதி பிரிண்டர்ஸ், திருநெல்வேலி).

396 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x15 சமீ.

சிவாசாரியார்களின் ஆசியுரையுடனும் கல்வியாளர்களின் வாழ்த்துரைகளுடனும் கிராமிய கீதத்துடனும் தொடங்கும் இந்நூலில், முதலில் இடம்பெறும் அமைவிடச் சிறப்பு, இலங்கை, யாழ்ப்பாணம், வலிகாமம், வலிகாமம் கிழக்கு என்பவற்றக்குரிய தனிச் சிறப்புக்களையும், சனத்தொகைப் பள்ளிவிபரங்களையும், கிராமத்தின் சிறப்பையும் அமைப்பையும் விளக்குகின்றது. தொடரும் இயல்களில், நிர்வாகச் சிறப்பு, வழிபாட்டுச் சிறப்பு, கல்விச் சிறப்பு, கமத்தொழிற் சிறப்பு, கைத்தொழிற் சிறப்பு, விருந்தோம்பற் சிறப்பு, கலைத்துறைச் சிறப்பு, விளையாட்டுத்துறைச் சிறப்பு, வைத்தியச் சிறப்பு, கூட்டுறவுச் சிறப்பு, சமூகசேவைச் சிறப்பு, சமயத் தொண்டுச் சிறப்பு, சிலைகளால் சிறப்பு, பெரியார் சிறப்பு, எழுத்தாளர் சிறப்பு, எனப் பதினாறு தலைப்புகளின் கீழ் நீர்வேலி மண்ணின் பண்பாடு, கலாச்சாரம் உள்ளிட்ட பிரதேச வரலாற்றைப் பதிவுசெய்கின்றது. பல்வேறு துறைகளிலும் சிறப்புற்றுத் திகழ்ந்த பெரியார்கள், எழுத்தாளர்கள், சமூக சேவையாளர்கள் என்போரின் வாழ்க்கைக் குறிப்புகள் புகைப்படங்களோடு இடம்பெற்றிருப்பது சிறப்பாகும்.

14984

**மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்றுச் சுவடுகள்.** க.தா.செல்வராஜகோபால் (புனைபெயர்: ஈழத்துப் பூராடனார்), எஸ்.பி.கனகசபாபதி (உதவி ஆசிரியர்). கனடா: ஜீவா பதிப்பகம், இல. 3, 1292 Sherwood Mills Blvd, Mississauga L5V1S6, Ontario, 1வது பதிப்பு, ஏப்ரல் 2005. (கனடா: ரீ கொப்பி, டொரன்டோ).

xxxx, 224 பக்கம், விலை: கனேடிய டொலர் 10., அளவு: 21.5x14 சமீ.

அமரர் வே.ஞானமுத்து அவர்களின் ஆய்வுகள், அடிச்சுவடுகளைப் படைத்தவர்கள், முதன்மைப் படைப்பாளியின் உரை, இணைப் படைப்பாளியின் உரை ஆகிய ஆரம்பத் தகவல்களுடன் தொடரும் இந்நூலின் "சுவடுகள்" என்ற பிரிவில், சுவட்டைப் பின்பற்ற ஒரு கைகாட்டி, மட்டக்களப்பு மாநிலத்தை நோக்கி ஒரு சுவடு, பண்டைய வரலாறு பற்றிய சுவடு, இடவாதாரச் சுவடுகள், சான்று ஆதார வரலாற்று நூற் சுவடு, மகாவம்சச் சுவடு, மூவிராச்சிய பகுப்பு அடிச்சுவடு, வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று அடிச்சுவடு, மட்டக்களப்பு மான்மிய அடிச்சுவடு, இடப்பெயர்ச் சுவடு, அனுபந்தச் சுவடு ஆகிய தலைப்புகளின் கீழ் மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றுச் சுவடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இந்நூலின் அனுபந்தங்களாக, யாரிந்த வேடர், இலங்கை அரசர் பெயர் வரிசை, கொடுங்கடல் கொண்ட பன்மலை அடுக்கமும் பஃறுளி ஆறும் குமரிக்கோடும், இராஜாவலிய மன்னர்களின் பெயர் வரிசை, தம்பன்னையில் இருந்து புலம்பெயர்ந்த பூர்வீக மக்களின் இறை வழிபாடு, மட்டக்களப்பை அரசு செய்தவர் பெயரட்டவணை,

மட்டக்களப்புத் தாயகத் தடயம், நிறைவு உரைச்சுவடு ஆகிய எட்டு ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன. ஈழத்துப் பூராடனார் என அழைக்கப்படும் க.தா. செல்வராசகோபால் (13 டிசம்பர், 1928 - 21 டிசம்பர் 2010) ஈழத்துப் பன்முகத் தமிழறிஞர். இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும் பதிப்பித்தும் உள்ளார். (இந்நூல் மட்டக்களப்பு பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 3839).

## 14985

**யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 3**. வேதநாயகம் தபேந்திரன். யாழ்ப்பாணம்: சிவகாமி பதிப்பகம், தேன் தமிழ், கைதடி வடக்கு, கைதடி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2016. (யாழ்ப்பாணம்: தேவி பிரின்டர்ஸ், 140/1, மானிப்பாய் வீதி).

209 பக்கம், விலை: ரூபா 390., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-41392-4-4.

தினக்குரல் வார வெளியீடு, தினகரன் வார மஞ்சரி, வீரகேசரியின் வட பிராந்தியப் பதிப்பு, யாழோசை ஆகிய ஊடகங்களில் 2012-2013 காலகட்டங்களில் வெளியான ஆக்கங்களின் தேர்ந்த தொகுப்பு. யாழ்ப்பாண நினைவுகள் என்ற தலைப்பில் வெளிவந்துள்ள மூன்றாவது பாகம் இது. யாழ் தேவியின் நினைவுகள், காணிவெல் கண்காட்சிக் காலங்கள், அருகிப்போன வேட்டையாடுதல், அருகிவரும் பாரம்பரிய உணவு வகைகள், பங்கர் கால நினைவுகள், சோதனைச் சாவடி காலங்கள், கடல்வலயத் தடையும் மீனவர் வாழ்க்கை முறையும், ரியுசன் கால நினைவு மீட்டல், போர்க்காலமும் மருத்துவமும், நல்லெண்ணையும் கைத்தொழிலின் கால மாற்றங்களும், அருகிப் போகும் சம்பிரதாயங்கள், பூங்காவனத் திருவிழா, யாழ்ப்பாணத்தில் கொம்யூனிக்கேஷன் யுகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும், வடபகுதிப் புகையிரதச் சேவைகள், எம்மவர் வாழ்விலும் நடைபெற்ற மணமகன் இல்லாத திருமணங்கள், சமூக மாற்றத்தை ஏற்படுத்திய யாழ்ப்பாணப் பெண்களும் சைக்கிளும், காலவெள்ளத்தில் கரைந்துபோன மாலைநேரச் சந்தைகள் ஆகிய பதினேழு சுவையான கட்டுரைகளை இத்தொகுதியில் காணமுடிகின்றது. அனைத்தும் காலப்போக்கில் நாம் இழந்தபோன அனுபவங்களின் மீள் நினைவூட்டல்களாக உள்ளன. நூலாசிரியர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

## 14986

**வரணியின் மரபுரிமைகள்: பாகம் 1**. சி.கா.கமலநாதன். யாழ்ப்பாணம்: புராதன குருநாதர் கோயில், மாசேரி, வரணி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2012. (யாழ்ப்பாணம்: கரிகணன் (தனியார்) நிறுவனம், 681, காங்கேசன்துறை வீதி).

xiv, 232 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 750., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-54774-0-6.

இந்நூல் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தென்மராட்சிப் பிராந்தியத்தில் பழைமை கொண்ட பரந்த பிரதேசமான வரணிக் கிராமத்தின் மரபுரிமைகளைப் பாதுகாப்பதும் வெளியுலகத்திற்கு வெளிப்படுத்துவதுமாக விளங்குகின்றது. அறிமுகம், வரலாற்று

வளர்ச்சியில் வரணி, வரணியில் கிடைத்த தொல்லியல் சான்றுகளின் முக்கியத்துவமும் இடப்பெயர்களும், பண்பாடும் வரணிப் பிரதேச இடப்பெயர்களும், முடிவுரை ஆகிய இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளில் வரணிக் கோவிற்பற்றுப் பிரதேச இடப்பெயர்கள், வரணிப் பிரதேசத்திலுள்ள முக்கிய குளங்கள், பழைய கிராம சேவையாளர் பிரிவுகள் ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 56226).

## 14987

**வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவு மக்களின் வாழ்வும் வளமும்.** எஸ். சிவானந்தராஜா. பண்டத்தரிப்பு: எஸ்.சிவானந்தராஜா, இந்துக் கல்லூரி வீதி, செட்டிகுறிச்சி, 1வது பதிப்பு, நவம்பர் 2019. (சங்கானை: சாய்ராம் பிரிண்டர்ஸ்).

v, 71 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-38461-5-0.

இலங்கையின் வடபிரதேசமான, யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்வி வளம், கலை வளம், கடல் வளம், என்பவற்றில் சிறப்புடையதாயும், வரலாற்றுச் சான்றுகளால் பெருமைப்படத்தக்கதாயும் அமைந்துள்ள பிரதேசமே வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவாகும். இந்நூல் இப்பிரதேசம் பற்றிய வரலாற்றையும், அப்பிரதேசத்து மக்களின் வாழ்வும் வளமும் பற்றிய பல்வேறு தகவல்களையும் பொது, அமைவிடம், நிர்வாகம், பணப்பரிமாற்றம், சட்டம் ஒழுங்கு, சமூக மட்ட செயற்பாடுகள், போக்குவரத்து, கூட்டுறவுச் சங்கம், தபாற்சேவையும் தொடர்பாடலும், மின்சார இணைப்புகள், பொதுச்சந்தை வியாபார நிறுவனங்கள், இயற்கை வளங்களும் மக்கள் பயன்பாடும், நெல்-உணவுற்பத்தி, கடல்வளமும் மீன்பிடித் தொழிலும், மக்களின் சுகாதாரம், மாணவர்களுக்கான கல்விச் சேவை, தொழில்புரிபவர்கள், சமூக சேவை-குடிநீர், மயானங்கள், மக்களின் ஆன்மீகத் தரிசனம், பொழுதுபோக்கு, சரித்திரச் சான்றுகள், கலைவளம், எழுத்தாளர்கள்/கவிஞர்கள் விபரம் ஆகிய தலைப்புகளின் கீழ் வழங்குகின்றது.

## 14988

**வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு.** கந்தையா பேரம்பலம். மிருசுவில்: க.பேரம்பலம், சிவபுரி, உசன், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2007. (நவாலி: ஐங்கர் கிராப்பிக்ஸ்).

xlii, 137 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x18 சமீ.

முனைன்னைநாள் உசன் இராமநாதன் மகாவித்தியாலய அதிபரும் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளருமான இந்நூலாசிரியர் முகமாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தன் வாழிடமான உசன் கிராமத்தின் வரலாற்றையும், உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் வரலாற்றையும் இங்கு ஆவணப் படுத்தியுள்ளார். தொன்மையான வரலாற்றுச் சிறப்பு மிக்க இக்கிராமத்தின் அமைவிடம், வரைபடம், ஆதிக்குடிகள், இடப்பெயர் ஆய்வு, என்பன போன்ற

தகவல்களுடன் வர்ண, கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. உசன் கிராம கீதம் (சிற்பி), உசன் கந்தசுவாமி கோவில் முத்துக் குமாரசுவாமி பேரில் பாடப்பெற்ற திருப்பள்ளி எழுச்சி, வெளிநாடுகளில் வசிக்கும் உசன் வாழ் மக்கள் இவ்வூரின் அபிவிருத்திப் பணிகளுக்குச் செய்யும் சேவைகள், பாடசாலைக் கீதம் (சிற்பி), பாடசாலை அதிபர்கள் உபஅதிபர்கள் ஆசிரியர்களின் சேவை விபரம், பாடசாலையின் பரீட்சைகளின் அடைவு மட்டமும் (பரீட்சைப்பெறு பேறுகள்) அதன் மூலம் இங்கு கல்வி கற்றவர்கள் பெற்ற தொழில் வாய்ப்புக்களும், சைவ வித்தியாவிருத்திச் சங்கம் கட்டிய பாடசாலைகள் விபரம் ஆகிய தகவல்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. *(இந்நூல் சுன்னாகம் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 15038).*

மேலும் பார்க்க: வாழத் துடிக்கும் வன்னி. **14280**

## 954.93(41) ஊர்ச் சங்கங்களின் சிறப்பு மலர்கள்/ஆண்டு மலர்கள்

### 14989

**புதுவையாள்: பிரதேச பண்பாட்டு விழா மலர்: 2016.** வீ.பிரதீபன், இ.செல்வநாயகம் (மலராசிரியர்கள்). முல்லைத்தீவு: பிரதேச பண்பாட்டுப் பேரவை, பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு, 1வது பதிப்பு, பெப்ரவரி 2016. (வவுனியா: மல்ரிவிஷன் அச்சுக் கலையகம், குடியிருப்பு).

viii, 197 பக்கம், புகைப்படங்கள், வண்ணத்தகடுகள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ள இச்சிறப்புமலரில், வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன், அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தில் சிவலிங்க வழிபாடு (அருணா செல்லத்துரை), கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முந்திய வன்னி நாடும் தொல்லியற் சான்றுகளும் (சி.க.சிற்றம்பலம்), தமிழ்-தமிழர்-தமிழகம்-தமிழ்நாடு: ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம் (தனபாக்கியம் குணபாலசிங்கம்), வன்னிப்பிரதேச வயற்பண்பாடு (அகளங்கன்), வன்னிப்பிரதேசக் கவிஞர்கள்: ஒரு தொகுதி நிலை வரலாற்று ஆய்வு (சுப்பிரமணியம் ஜெயச்சந்திரன்), வட இலங்கை மகிடிக் கூத்து- ஓர் ஆய்வு (காரை.செ.சுந்தரம்பிள்ளை), முல்லை மாவட்ட நாட்டார் இலக்கியம்(முல்லைமணி), முல்லைத்தீவு மாவட்ட மீன் வளமும் மீன்பிடி முறைகளும் (க.ஆ.ஞானேஸ்வரன்), முல்லை மாவட்டத்தின் பாரம்பரிய விளையாட்டுக்கள் (ந.இராமநாதன்), முல்லைத்தீவின் தென்கிழக்கு எல்லையில் நிலைபெற்றிருந்த பதுவில் இராசதானி (செ.சஞ்சீவன்), முல்லைத்தீவு வலயக் கல்வி வளர்ச்சி (செ.பஞ்சலிங்கம்), சாகித்தியரத்னா கலாநிதி முல்லைமணியின் மழைக்கோலம் சமூக நாவலின் சமகாலத் தாக்கம் (ந.பார்த்திபன்), பிரதேச செயலகங்களில் அரும்பொருட் காட்சியகங்களின் அவசியம் (ஜெயம் ஜெகன்), புதுக்குடியிருப்பில் சரவணபவன் என்ற ஒரு ஆளுமை (வீ.பிரதீபன்), வள்ளுவர்புரம் (கவிதை-யோ.புரட்சி),

*புதுக்குடியிருப்பில் ஸ்ரீ உலகளந்த பிள்ளையார் ஆலய வரலாற்றுப் பின்னணி (இ.செல்வநாயகம்), இந்து ஆலயங்களும் அவற்றின் இன்றைய நிர்வாக முறைகளும்-ஒரு நோக்கு (தமிழ் வாரிதி), முல்லை மாவட்டத்தில் வழங்கும் சிந்து வகைப் பாடல்களின் தொகுப்பு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் இலக்கிய ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.*

### 14990

**பொற்றாமரை: பொன்விழா சிறப்பு மலர் 2012**. *ப.க.மகாதேவா (மலர்க் குழுத் தலைவர்). நயினாதீவு: மணிபல்லவ கலாமன்றம், 1வது பதிப்பு, ஜுலை 2012. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளூமெண்டால் வீதி).*

L, *(6), 317 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 25.5*x*17.5 சமீ.*

*நயினாதீவு மணிபல்லவ கலாமன்றம், தனது பொன் விழாவை 05.07.2012 அன்று கொண்டாடியவேளை வெளியிடப்பட்ட சிறப்பு மலர். நயினாதீவு வரலாற்றுப் பின்னணி (ஐ.சரவணபவன்), சர்வசமய சந்நிதிகள் (மா.வேதநாதன்), நயினாதீவின் கல்வி வரலாறு-ஒரு நோக்கு (சோ.தில்லைநாதன்), நயினாதீவு அபிவிருத்தி திறமுறைகள் (பொ.பாலசுந்தரம்பிள்ளை), மணிபல்லவம் என்பதும் நாக வழிபாட்டுத் தொன்மையுடையதும் இன்றைய நயினாதீவு என்பதற்கான வரலாற்றுச் சான்றுகளும் மூலதாரங்களும் (கனகசபாபதி நாகேஸ்வரன்), நயினைப் புலவர்கள்: ஒரு வெட்டுமுகப் பார்வை (கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்), நயினாதீவின் பொருளாதாரம் அன்றும் இன்றும் (யோ.ஜெயகாந்), ஈழத்து இசை வளர்ச்சியில் நயினையம்பதி (என்.வி.எம். நவரத்தினம்), நயினாதீவு கிராமசபையும் கிராம அலுவலர்களும் (மணியான்), நயினாதீவு மக்களின் முக்கியசேவையான தபால் சேவையும் அதன் வளர்ச்சியும் (மணியான்), நயினாதீவில் அன்றும் இன்றும் வைத்தியசேவை (மணியான்), நந்தி (இ.ஜெயராஜ்), இருநூற்றாண்டு தாண்டிய எம் கலை (க.ந.ஜெயசிவதாசன்), நயினையில் நாடகக்கலை வளர்ச்சி (கனகசபை உருத்திரகுமாரன்), காதல் செய்வாள் அவள் கைதேர்ந்த கன்னி (ப.க.நவரத்தினராஜா), நயினாதீவின் விளையாட்டுத்துறை (ப.ந.உருத்திரலிங்கம்), கலை வளர்ச்சியில் மணிபல்லவ கலாமன்றம் (மு.இ.ஜெயலெட்சுமி), இதிகாசங்கள் காட்டும் வாழ்க்கை நெறி (சுப்பிரமணியம் கனகரெத்தினம்), நற்பணிகள் பல ஆற்றிவரும் நயினாதீவு சனசமூக நிலையங்கள் (நா.க.குமாரசூரியர்), இலக்கிய மேம்பாடுகளும் இலக்கிய விமர்சனக் கோட்பாடுகளும் (ம.நதிரா), நயினாதீவுக் கிராமத்தின் அபிவிருத்திக்கான சிலஆலோசனைகள் (கா.குகபாலன்), நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை 1960ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டுவரை (அம்பலவாணர் சர்வானந்தராஜா), தாயன்பின் மகத்துவம் (நா.யோகநாதன்), நயினைச்சித்தர் முத்துக்குமார சுவாமிகள் (எஸ்.சோமேஸ்வரப் பிள்ளை),* Fifty years ago – A subtle Revolution (P.K.Navaratnarajah, K.Sundareswaran), *தொண்டர்வாழ் நயினை (தவமணி சபாநாதன்), இதய நோய்கள்-வருமுன் காப்போம் (சகாதேவன் விதூசன்), ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய யாத்திரீகர் தொண்டர் சபையும் தாகசாந்தி நிலையங்களும் (சோ.தில்லைநாதன்), விஞ்ஞானத்தின் விளைவுகள் (வே.சிந்துஜா),*

*செய்யும் தொழிலே தெய்வம் (சோ.சரண்யா), சூழலைப் பேணுவோம் (கோ.டிலக்ஷன்), காலைக்காட்சி (இ.லஜாணனன்), ஊருக்குப் பெருமை சேர்த்த உத்தமர்களை வாழும்போதே வாழ்த்துவோம், தீவகம்- ஒரு தனிப்பட்ட பிராந்தியம் (மா.கணபதிப்பிள்ளை), மணிபல்லவத்திலிருந்து மணிபல்லவ கலாமன்றத்திற்கு ஒரு செய்தி (சி.ந.கருணாகரகுருமூர்த்தி), நயினையில் வித்தியாதானம் வழங்கும் கல்விஸ்தானங்களில் ஒரு பார்வை (வீ.கணேசராசா), மணிபல்லவத்திற்குப் பெரும் தொண்டாற்றிய சான்றோர்களைக் கௌரவப்படுத்தி திருப்திகொள்வோம், உருப்பெறுக ஒரு குலமாம் ஒருமைப்பாடு (நா.க.சண்முகநாதபிள்ளை), நித்திலத்தின் முத்தாய்நின்று புகழ் பெறுக (ப.க.மகாதேவா), மணிபல்லவ கலாமன்றம்- ஆண்டு பல்லாண்டு வாழி: பதினாறு சீர் நெடிலடி ஆசிரிய விருத்தம் (பசிக்கவி சி. பரராஜசிங்கம்), நித்திலமே என்றென்றும் நிலைந்து வாழி (கா.பொ.இ.குலசிங்கம்), இன்றைய ஈழத்தில் பாரதியார் இருந்தால் (நா.சிவராசசிங்கம்), என்ன சுகம் அந்தச் சுகம் (நா.க.சண்முகநாதபிள்ளை), மன்றம் செய்த மாபெரும் பணிகள் (கு.சரவணபவானந்தன்), பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவை யாவிலும் நனி சிறந்தனவே (வீ.ஓங்காரலிங்கம்), மணிபல்லவ கலாமன்றம் வாழி வாழி (ஜின்னாஹ் ஷரிபுத்தீன்), எனது சிந்தனை (ஓ.சித்தார்த்தனி), நயினைத் தீவே நீவாழ்க (த.பாலமுருகன்), நயினை பெரும்புலவர்களின் சில கவிதைகள் (தி. நிதர்சனன்), நயினை நாகம்மை-திருக்குட முழுக்காடற்பத்து (நா.க.சண்முக நாதபிள்ளை) ஆகிய படைப்பாக்கங்களை இச்சிறப்பு மலர் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 53748).*

## 954.93 (5) தொல்லியலாய்வு

### 14991

**தென்னிலங்கை பிராமிக் கல்வெட்டுகளில் இந்து சமயமும், தமிழும்.** என்.கே.எஸ். *திருச்செல்வம். கொழும்பு 5: அருந்ததி பதிப்பகம், 68/14, ஸ்ரீ சித்தார்த்த வீதி, 1வது பதிப்பு, நொவெம்பர் 2018. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36ஆவது ஒழுங்கை).*

xx, *212 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 550., அளவு: 21.5*x*14.5 சமீ.,* ISBN: *978-955-3726-06-3.*

*தமிழ்ப் பிராமி என்பது பண்டைக்காலத்தில் தமிழ் எழுத்துக்களை எழுதப் பயன்பட்ட ஒலிப்பியல் எழுத்து முறைமையாகும். இது தெற்காசியாவில் பயன்பாட்டில் இருந்த பிராமி எழுத்துமுறைகளான அசோகப் பிராமி, தென் பிராமி மற்றும் பட்டிபிரோலு எழுத்துமுறைகளிலிருந்து வேறுபட்டது. தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் குகைப் படுக்கைகள், மட்கல ஓடுகள், முதுமக்கள் தாழிகள், நாணயங்கள், முத்திரை அச்சுக்கள், மோதிரங்கள் ஆகியவற்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன. தற்போதைய தென் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மாநிலங்களான தமிழ்நாடு, கேரளம், இலங்கை, எகிப்து, தாய்லாந்து போன்ற இடங்களிலும் தமிழ்ப் பிராமி கண்டுபிடிக்கப்பட்டது. இந்நூலில் இலங்கையின்*

தென்பகுதிகளில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் இந்துசமயம், தமிழ் தொடர்பான தகவல்களைத் தேடித் தொகுத்து வழங்கியுள்ளார். நூலாசிரியர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் பட்டம் பெற்றவர்.

### 14992

**நாக இனக்குழுவும் இலங்கைத் தமிழரும் (அண்மைக்காலத் தொல்லியல் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு).** பரமு.புஷ்பரட்ணம். யாழ்ப்பாணம்: சேர் பொன் இராமநாதன் நினைவுக் குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜுன் 2018. (யாழ்ப்பாணம்: வைரஸ் கிரப்பிக்ஸ், இணுவில்).

(2), 50 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறையின் தலைவரும், சிரேஷ்ட பேராசிரியருமான பரமு புஷ்பரட்ணம் அவர்கள் 12.06.2018 அன்று கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்திய சேர் பொன் இராமநாதன் நினைவுப் பேருரையின் (2018) நூல்வடிவம் இதுவாகும். கற்காலப் பண்பாடு, நுண்கற்கால மக்கள் (Mesolithic People), பெருங்கற்காலப் பண்பாடு ஆகியவற்றினூடாக, புகைப்படச் சான்றுகளுடன் அண்மைக்காலத் தொல்லியல் கண்டுபிடிப்புகளை அடிப் படையாகக் கொண்டு நாக இனக்குழுவும் இலங்கைத் தமிழரும் பற்றிய இவ்வாய்வினை மேற்கொண்டுள்ளார்.

### 14993

**யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் தொல்பொருளியல் மரபுரிமை.** மாலினீ டயஸ், சுனில் பண்டார கோரளகே, எம்.வீ.ஜீ. கல்ப அசங்க (சிங்கள மூலம்), எம்.எம். ஹலீம் டீன் (தமிழாக்கம்). கொழும்பு 7: தொல்பொருளியல் திணைக்களம், ஸ்ரீமத் மார்கஸ் பர்ணாந்து மாவத்தை, 1வது பதிப்பு, 2016. (பாதுக்க: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், பானலுவ).

xiv, (20), 229 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18 சமீ., ISBN: 978-955-9159-99-5.

"யாழ்ப்பாணத் தீபகற்பம் பற்றி அறிமுகம்", "யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் அமைந்துள்ள முக்கியமான தொல்பொருளியல் இடங்கள் சிலவற்றினது விபரங்கள்", "யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தீவுகள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நெடுந்தீவு", "யாழ்ப்பாணத்தில் கிடைக்கப்பெறுகின்ற ஏனைய தொல்பொருளியல் மற்றும் வரலாற்றுப் பெறுமதியான இடங்கள்" ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு தொல்லியல் மதிப்புள்ள இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அவை பற்றிய குறிப்புகளும் படங்களும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 65668).

### 970 வட அமெரிக்க வரலாறு

மேலும் பார்க்க: ஐக்கிய அமெரிக்க அரசாங்கம். 14268

## 999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப் படைப்புகள்

### 999 பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்

### 14994

**அது இது எது: தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு ஆளுமைகளுடனான நேர்காணல்கள்.** முத்தையா வெள்ளையன். சென்னை 600005: கருப்புப் பிரதிகள், பி-74, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, 1வது பதிப்பு, ஜுலை 2008. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).

150 பக்கம், விலை: இந்திய ரூபா 65.00, அளவு: 22x14 சமீ.

இலங்கை இந்திய தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு ஆளுமைகளுடனான நேர்காணல்களின் தொகுப்பு இது. முன்னுரை- பதில்களின் ஊடாக (ராமாநுஜம்), நேர்காணலும் ஒரு படைப்பிலக்கியம் தான் (முத்தையா வெள்ளையன்), எழுத்துக்குச் சாதியைப் பூசாதீர் (மாத்தளை சோமு), தமிழர்கள் அறிவுபூர்வமாக வாழவேண்டும் (ச.அ.டேவிட்), நாங்கள் மூன்றாம் பாலினம் அல்ல (ஆஷா பாரதி), தொல்காப்பியம் தமிழர்களுக்காக எழுதப்படவில்லை (கா.சிவத்தம்பி), பன்மைத் தத்துவத்தில் நம்பிக்கையுண்டு (மௌனகுரு), ஆங்கிலத்தை மொழியாக கற்பதில் தவறு இல்லை (சுப வீரபாண்டியன்), மனித சமூகத்தின் வளர்ச்சியின் உச்சம் தான் கலை (யூமா வாசுகி), அம்மன் வரலாறே சோகமான வரலாறுதான் (ஆ.சிவசுப்பிரமணியன்), தப்பு அடிக்கல, பொணமும் எரிக்கல்ல, அப்படியே இருந்துக்க (சிந்தாமணி) ஆகிய தலைப்புகளில் இந்நூலின் நேர்காணல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 49333).

### 14995

**அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் (தொகுதி -2).** பதிப்பாசிரியர் குழு. சென்னை 600113: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, 1வது பதிப்பு, 2013. (சென்னை 600014: இலட்சுமி ஏஜென்சீஸ், 23/11, பெருமாள் முதலி தெரு, இராயப்பேட்டை).

xiv, 442 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முயற்சியில் வெளிவந்துள்ள இத்தொகுப்பில் "நாவல்" என்ற முதலாவது பிரிவில், ஈழத்தில் மலையக நாவல் இலக்கியத்தின் பங்களிப்பு (எஸ்.வை.ஸ்ரீதர்), மலையகத் தமிழ் நாவல்களில் இலங்கைவாழ் இந்திய வம்சாவழித் தமிழர்களின் சமூகப் பிரச்சினைகளும் வெளிப்பாட்டு முறைமைகளும் (பத்மநாதன் கலாவல்லி), இலங்கைத் தமிழ் நாவல் வளர்ச்சியில்

பெண்களின் பங்களிப்பு (த.அஜந்தகுமார்), இலங்கை மலையகப் பெண் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள் (து.ஜானகி), அண்மைக்கால இலங்கைப் படைப்புகளில் எஸ்.ஏ.உதயனின் நாவல்கள்-ஓர் ஆய்வு (சு.குணேஸ்வரன்), ராஜேஸ்வரியின் "நாளை மனிதர்கள்" புதினத்தில் பண்பாட்டுப் பதிவுகள் (க.முருகேசன்), "பனி பெய்யும் இரவுகள்" புதினத்தில் மனப்போராட்டங்கள் (மு.நாகராஜன்), "சயாம்-மரண இரயில்" நாவலில் இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் நிலை (ம.சித்ரா), முத்தம்மாள் பழனிச்சாமியின் "நாடு விட்டு நாடு" நூல்வழி அறியலாகும் மலேசிய தமிழ்ச் சமுதாயச் சூழல்-ஐம்பதுகளுக்கு முன் (ப.சத்யா), ஆகிய கட்டுரைகளும், "இணையத்தளம்" என்ற இரண்டாவது பிரிவில் அயலகத் தமிழர்களின் இணையத்தள இலக்கியப் படைப்புகள் (சுகந்தி வெங்கடேஷ்), இணைய உலக இலக்கியப் படைப்புகள் (செ.சு.நா.சந்திரசேகரன்), புகலிடத் தமிழர்களின் இணைய இதழ்கள் (பா.உமாசங்கரி), கனேடியத் தமிழர்களின் இணையத்தள இலக்கியப் படைப்புகள்-ஒரு மதிப்பீடு (எஸ்.சிதம்பரம்) ஆகிய ஆக்கங்களும், "பொது" என்ற மூன்றாவது பிரிவில், அயலகத் தமிழரும் தமிழ் இலக்கியப் படைப்புகளும் (க.சசிரேகா), 19ஆம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சி (துரை மனோகரன்), ஈழத்து நாட்டார் இலக்கியம் வழி வாழ்வியல் (ஏ.மேனகா), ஈழத்தமிழரின் மரபுசார் தமிழ் இலக்கிய உறவுகள் (ஊ.கன்னியப்பன்), ஈழத்துப் பேச்சு வழக்குத் தமிழும் யாழ்ப்பாணத் தமிழும் ஓர் மொழியியல் ஆய்வு (வேல் நந்தகுமார்), ஈழத்துக் கவிஞர் இ.முருகையனின் மொழி, இலக்கணச் சிந்தனைகள்: ஓர் அறிமுகக் குறிப்பு (செல்லத்துரை சுதர்சன்), ஈழத்தில் சைவத் தமிழ்க் கல்வியும் நவீனத்துவமும் (ஈஸ்வரநாதபிள்ளை குமரன்), நவீனத் தமிழ் இலக்கியத்திற்கு இலங்கையின் பங்களிப்பு (செ.யோகராசா), நவீனத் தமிழ் இலக்கியத்தில் புதிய வகைப்பாடு-ஈழத்துப் போர் இலக்கியம் (தி.ஞானசேகரன்), இலங்கைத் தமிழ் இதழ்களில் இலக்கியப் படைப்புகள் (சௌ.பா.சாலாவாணிஸ்ரீ), அயலகத் தமிழ் இதழ் "இந்து சாதனம்": யாழ்ப்பாணம் இலங்கை பழந்தமிழ் இதழ் (இல.செ.திருமலை), ஈழத்தில் தமிழ் அகராதி முயற்சிகள் 1939 வரை (ஞா. பாலச்சந்திரன்), கவிஞர் சேரனின் கட்டுரைத் தொகுப்புகளில் தமிழ்ச் சமூகமும் அரசியலும் (சி.கோபியா), ஈழத்து அரங்க எழுச்சியில் "பொங்கு தமிழ்" நாடக அரங்கு (யாழ். தர்மினி பத்மநாதன்), சிங்கப்பூர் தமிழ் நாடகங்கள் நோக்கும் போக்கும்: 1935 முதல் 2007 வரையிலான வரலாற்றின் வழி (கே.இரா.கமலா முருகன்), ஆணல்ட் சதாசிவம்பிள்ளையின் தமிழ்ப் பணிகள் (மார்க்கண்டன் ரூபவதனன்), சுவாமி விபுலானந்தரின் தமிழியல் ஆய்வுகள் 1892-1949 (அம்மன்கிளி முருகதாஸ்), மலேசியாவில் தமிழியல்-புதிய போக்குகள், பதிய பாதைகள் (பா. கௌசல்யா), மலேசியத் தமிழ்ச் சிறுவர் இலக்கியம் (எஸ்.குமரன்), அமெரிக்க பெண் படைப்பாளி காஞ்சனா தாமோதரனின் மொழிநடை (கி.ஜமுனா, கு.சிதம்பரம்), பிரான்சு நாட்டுப் படைப்பாளி நாகரத்தினம் கிருஷ்ணாவின் எழுத்துலகம் (மு.இளங்கோவன்), நெதர்லாந்து படைப்பாளி கலையரசனின் அகதி வாழ்வியல்-பயணங்கள்-உரிமைகள் (கு.சிதம்பரம்), சீனத்தில் விளைந்த தமிழ்ப் படைப்புகள் (ந.கடிகாசலம்), சீன வானொலியின் தமிழ்நூல்களும்

படைப்பாளர்களும் (தங்க.ஜெய்சக்திவேல்), Folk Songs of Sri Lanka (எம்.ஏ.பகீரதி), Eelam Novelist S.Ganeshalingam's 'Long Journey' as an Epic told in Lyric Parts (என். முருகையன்) ஆகிய 39 படைப்பாக்கங்களும், இத்தொகுப்பின் பதிப்பாசிரியர் குழுவில், தமிழகத்தின் முனைவர்களான கோ.விசயராகவன், மு.வளர்மதி, கு.சிதம்பரம், து.ஜானகி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 52990).

## 14996

**அயோத்தியிலிருந்து இலங்கை வரை.** கி.ராதாகிருஷ்ணன். சென்னை 600017: திருமகள் நிலையம், 55, வெங்கட்நாராயணா ரோடு, தி.நகர், 1வது பதிப்பு, ஜூன் 1985. (சென்னை 600033: தென்றல் பிரிண்டர்ஸ்).

ii, 268 பக்கம், விலை: இந்திய ரூபா 21.00, அளவு: 18x11 சமீ.

இந்நூலின் ஆசிரியர் ராதாகிருஷ்ணன் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். 1952இல் இந்திய பொலிஸ் சேவையில் இணைந்தவர். 1982இல் தமிழக காவல்துறையின் ஊழல் ஒழிப்புப் பிரிவின் இயக்குநராகப் பணியாற்றியவர். கிராக்கி என்ற புனைபெயரில் தன் இலக்கியப் படைப்புக்களை வெளியிட்ட இவர் சங்க இலக்கியங்களிலும் வடமொழியிலும் புலமை பெற்றவர். இந்நூலில் வால்மீகி, கம்பன், காளிதாஸர் ஆகிய மூவரையும் இராமாயணம் என்னும் பொதுப்புள்ளியில் வைத்து, அவர்கள் வாயிலாகவே தங்களைப் புலப்படுத்திக் கொள்ளும்படி விட்டிருக்கிறார். இவர்களது மூன்று நூல்களிலிருந்தும் அரிய பொறுமையுடன் ஒப்பான பகுதிகளைத் தேர்ந்து கதையில் வரும் முறையிலேயே ஏழு பகுதிகளாகப் பிரித்து ஒழுங்குபட அமைத்துள்ளார். அத்துடன் ஒவ்வொன்றிற்கும் சுருக்க உரையும் சேர்த்துள்ளார். அயோத்தியிலிருந்து மிதிலை வரை, அயோத்தியிலிருந்து நந்திக் கிராமம் வரை, நந்திக்கிராமத்திலிருந்து தண்டகாரண்யம் வரை, தண்டகாரண்யத்திலிருந்து கிட்கிந்தை வரை, கிட்கிந்தையிலிருந்து இலங்கை வரை, இலங்கையிலிருந்து அயோத்தி வரை, திருமுடிசூட்டு விழா ஆகிய ஏழு அத்தியாயங்களில் இந்நூல் எழுதி முடிக்கப் பட்டுள்ளது.

## 14997

**ஆமாம் கனம் நீதிபதி அவர்களே (ஒரு மூத்த வழக்கறிஞரின் அனுபவச் சிதறல்கள்).** இரா. காந்தி. சென்னை 600 094: உலகத் தமிழர் பதிப்பகம், 4, சௌராட்டிரா நகர், 7ஆவது தெரு, சூளைமேடு, 2வது பதிப்பு, செப்டெம்பர் 2011, 1வது பதிப்பு, ஜூலை 2010. (சென்னை 600 094: உலகத் தமிழர் பதிப்பகம், 4, சௌராட்டிரா நகர், 7ஆவது தெரு, சூளைமேடு).

272 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 150., அளவு: 22x15 சமீ.

சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம், தமிழ்நாடு-பாண்டிச்சேரி வழக்கறிஞர் சங்கம் ஆகியவற்றின் தலைவராகப் பணியாற்றிய மூத்த வழக்கறிஞர் இரா.காந்தி ஈழத்தமிழர்களுடன் நெருங்கிய உறவினைப் பேணிவந்தவர். மறவன்புலவு க.சச்சிதானந்தன் உள்ளிட்ட பல தமிழர்களுக்காக தமிழக நீதிமன்றங்களில்

வாதாடியவர். இந்நூலில் அவரது வாழ்க்கை அனுபவங்கள் 25 அத்தியாயங்களில் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 11ஆவது இயலில் "ஈழமும் நானும்" என்ற தலைப்பில் ஈழத்து அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கின்றார்.

### 14998

**இலங்கை இலக்கியச் சுற்றுலா: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கருத்தரங்கு கட்டுரைகள்.** பெ.இராஜேந்திரன் (தொகுப்பாசிரியர்). கோலாலம்பூர்: மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கம், 21B, Jalan Murai Dua, Batu Compleks, Off Batu 3 Jalan Ipoh 52100, 1வது பதிப்பு, 2015. (செலாங்கூர்: சம்பூர்ணா பிரின்டர்ஸ் சென். பெர்., No.1, Jalan Tie 1/19, Taman Industri Bolton, Batu caves).

154 பக்கம், புகைப்படங்கள், விலை: மலேசிய ரிங்கிட் 20.00, அளவு: 21x15 சமீ., ISBN: 978-967-13758-0-8.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 14.12.2015 இல் இடம்பெற்ற மலேசிய-இலங்கை தமிழ் இலக்கியம் பற்றிய கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட மலேசிய இலக்கியவாதிகள், ஆய்வாளர்களின் கட்டுரைகளின் தொகுப்பு இது. மலேசியத் தமிழ் எழுத்துலகமும் அதன் வளர்ச்சிக்கு மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆற்றியுள்ள பங்கும் (ரெ.கார்த்திகேசு), 1980ஆம் ஆண்டுகளுக்குப் பின் மலேசியாவின் தமிழ்ப் பத்திரிகை (பெ.இராஜேந்திரன்), மலேசியத் தமிழ்க் கல்வியின் தொடக்கமும் வளர்ச்சியும் இன்றைய சவால்களும் (பன்னீர்செல்வம் அந்தோணி), மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதையியல் அகவயச் சிந்தனைகள் (இராஜம் காளியப்பன்), மலேசிய விடுதலைக்குப் பின்னர் தோன்றிய மலேசியத் தமிழ் நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும் (சேகர் நாராயணன்), மலேசியத் தமிழ் தொடக்கப்பள்ளி மாணவர்களின் இலக்கிய ஆற்றலை வளர்ப்பதில் தமிழ் மொழிப் பாடத்தின் பங்கு (மோகன் பழனியாண்டி), இன்றைய மலேசியச் சிறுகதைகளின் நோக்கும் போக்கும் (எம்.சேகர்), வானொலி மின்னல் பண்பலையில் தமிழ் பயன்பாடு (பார்த்தசாரதி), இலக்கியப் பயணங்களால் விளைந்த நன்மைகள் (ஆஷா குமரன்), தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கத்தின் இலக்கியப் பரிசுகள் ஆகிய ஆக்கங்களை இக்கட்டுரைத் தொகுப்பு உள்ளடக்குகின்றது.

### 14999

**கண்ணதாசன் பயணங்கள்.** கண்ணதாசன். சென்னை 600017: கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, ஜுன் 2013. (சென்னை 5: புரோஸ்ஸ் இந்தியா).

144 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-81-8402-723-5.

கவிஞர் கண்ணதாசன் இலங்கை, அமெரிக்கா, மலேசியா, ரஷ்யா போன்ற நாடுகளுக்குப் பயணம் செய்து வந்தபின்னர் அவற்றைப் பயணக் கட்டுரைகளாகத் தமிழகப் பத்திரிகைகளில் எழுதிவந்தார். இவை தொகுக்கப்பெற்று 2000ஆம் ஆண்டில் ஆர்.பி.சங்கரன் அவர்களின் முயற்சியால் அவரது கங்கை புத்தக

நிலையத்தின் சார்பில் வெளியிடப்பட்டது. அந்நூலின் மீள் பதிப்பினை கவிஞர் கண்ணதாசனின் மகன் காந்தி கண்ணதாசன், தனது கண்ணதாசன் பதிப்பகத்தின் மூலம் மீள்பிரசுரமாக்கியுள்ளார். இத்தொகுப்பில் உள்ள "ஈழநாட்டில் ஈராறு நாட்கள்" என்ற தொடர் 1955இல் எழுதப்பட்டது. அது முழுமையாக தென்றல் பத்திரிகையில் வெளிவந்தது. "பர்ஷோஸ் பஸ்ஸுபா" (மனமார்ந்த நன்றி என்ற அர்த்தத்தைக் கொண்டது) என்ற தலைப்பில் 1968இல் எழுதிய ரஷ்யப் பயணத் தொடர், தனது மாத இதழான கண்ணதாசனில் தொடராக வெளிவந்து, இடைநடுவில் கண்ணதாசன் மாத இதழ் வெளிவராது நின்று போனதால் அத் தொடரும் பாதியில் நின்றுபோனது. "மலேசிய நினைவுகள்" என்ற மலேசியப் பயணர் தொடர் 1972இல் எழுதப்பட்டு அலைஓசை இதழில் தொடராக வெளிவந்து அவரது திரைப்படத்துறையில் அதீத ஈடுபாட்டின் காரணமாக நேரமின்மையால் பாதியில் நின்று போனது. "இங்கே இரவு அங்கே பகல்" என்ற அமெரிக்கப் பயணக் கட்டுரை, அவர் 1981இல் பயணம் செய்துகொண்டிருக்கும் போதே குமுதம் இதழில் உடனுக்குடன் தொடராக வெளிவந்துகொண்டிருந்தது. அவரது அமெரிக்கப் பயணம் திட்டமிட்ட வகையில் பூர்த்திபெறாமல் போனதால் இத் தொடரும் முழுமைபெறவில்லை.

### 15000

**சுவாமி விபுலானந்தரின் தலையங்க இலக்கியம்.** பெ.சு.மணி (தொகுப்பாசிரியர்). சென்னை 600 108: மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, 1வது பதிப்பு, மார்ச் 2005. (சென்னை 600 021: மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 25.00, அளவு: 21.5x14 சமீ.

ஆய்வாளர் பெ.சு.மணி பல்வேறு இதழியல் கருத்தரங்குகளிலும் இதழியல் சார்ந்த பல கட்டுரைகளைப் படித்தவர். "விடுதலைப் போரில் தமிழ் இதழ்கள், பழந்தமிழ் இதழ்கள்" என்னும் இவரது நூலைத் தொடர்ந்து சுவாமி விபுலாநந்தர் பல்வேறு இதழ்களிலும் வெளியிட்ட தலையங்கங்களின் தொகுப்பாக இந்நூலை வெளி யிட்டுள்ளார். சுவாமி விபுலானந்தர், இராமகிருஷ்ண மிஷன் நடத்திய "ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்" என்ற தமிழ்ச் சஞ்சிகைக்கும், "வேதாந்த கேசரி" (Vedanta Kesari) என்ற ஆங்கில சஞ்சிகைக்கும் ஆசிரியராகவிருந்து பல அரிய கட்டுரைகளையும் தலையங்கங்களையும் எழுதியிருந்தார். மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டித பரீட்சையின் பரீட்சார்த்தகராக நியமிக்கப்பட்ட இவர், தமிழ்ச் சங்க வெளியீடான "செந்தமிழ்" எனும் சஞ்சிகையில் இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ந்தும் எழுதி வந்தார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் பல திறனாய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டிருக்கிறார். இக்கட்டுரைகள், "மதங்க சூளாமணி" என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. சுவாமி விபலானந்தர் எழுதிய ஆசிரியர் தலையங்கங்களை இந்நூல் தாங்கி வந்துள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38677).

**பதினைந்தாம் தொகுதி முற்றிற்று**

# தலைப்பு வழிகாட்டி


*அக்டோபர் புரட்சியின் பாடங்கள். 14300*

*அகப்பட்ட கள்வன். 14533*

*அகஸ்தியர் என்ற எங்கள் பப்பா 1926-1995. 14948*

*அசை: சிறுகதைத் தொகுப்பு. 14676*

*அசையாத மலைத்தொடர். 14822*

*அஞர்: சேரன் கவிதைகள். 14557*

*அடையாளமற்றிருத்தல். 14558*

*அணிகலன்கள்: தமிழர் பாரம்பரிய அணி கலன்கள் ஓர் விபரிப்பு. 14394*

*அணையா விளக்கு 1991-1992: சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு சிறப்பு மலர். 14356*

*அத்லாண்டிக் மகா சமுத்திரத்தில் கரை யொதுங்கும் துறவாடைகள். 14559*

*அதிசயத் தீவினில் ஆனந்தன்: சிறுவர்களுக் கான நவீனம். 14534*

*அதிவீரராம பாண்டியரின் நைடதம்: யாவர்க்கும் ஒரு ஔடதம்: ஒரு ஆய்வுக் கண்ணோக்கு. 14831*

*அது இது எது: தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு ஆளுமைகளுடனான நேர்காணல்கள். 14994*

*அப்படியே இரு: தேர்ந்த கவிதைகள். 14560*

*அபோபிஸ்-2036 (விஞ்ஞான நாவல்). 14732*

*அம்பரய. 14823*

*அம்மா எனும் ஆசியாவின் அதிசயம். 14561*

*அம்மாவிடம் சேகரமாகிய முத்தங்கள்: கவிதைகள். 14562*

*அம்மை: கவிதைகள். 14563*

*அமுத மலர் 2017: யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம். 14364*

*அமுத மழை. 14824*

*அமுதப் பிரவாகம். 14564*

*அமெரிக்கா. 14733*

*அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் (தொகுதி -2). 14995*

*அயோத்தியிலிருந்து இலங்கை வரை. 14996*

*அரங்கத்தில் நிர்வாணம். 14734*

*அரச கணக்கியல் தொழில்நுட்பவியலாளருக் கான கற்பித்தல் கைநூல். 14482*

*அரசகரும மொழிகள் தேர்ச்சி மட்டம் 1: தமிழ். 14432*

*அரசகரும மொழிகள் தேர்ச்சி மட்டம் 2: தமிழ். 14433*

*அரசகரும மொழித் தேர்ச்சி மேலதிக வாசிப்பு நூல்: எழுத்துச் சிங்களம். 14407*

*அரசறிவியல் அறிமுகம். 14266*

*அரசியலமைப்பு 2000: பாராளுமன்ற விவாதங்கள். 14323*

*அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான அரசாங்க ஆலோசனைகள். 14324*

*அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான அரசாங்க ஆலோசனைகள். 14325*

*அரசியலும் கல்வியும். 14349*

*அரசியற் கொள்கையின் வளர்ச்சி. 14267*

*அருளொளி: ஸ்ரீ கார்த்திகேசு சுவாமிகள் நூற்றாண்டுச் சிறப்பு மலர் 1896-1996. 14899*

அல் ஜாமிஆ: மூன்றாவது இதழ்-1422/2001. 14858
அலகில் சோதியன்(நாடகங்கள்). 14665
அலுவாக்கரை (நாவல்). 14735
அவர்கள் அப்படித்தான். 14677
அவள் (நாவல்). 14736
அவளுக்கு தெரியாத ரகசியம். 14737
அவளும் நானும்: தேர்ந்த கவிதைகள். 14565
அவனருள். 14178
அவனுக்குள் ஆயிரம் (நாவல்). 14738
அழியாக் குறிகள் (நாவல்). 14825
அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கீர்த்தனங்களும் தோத்திரப் பாமாலையும். 14179
அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் மகாகும்பாபிஷேக சிறப்பு மலர்-2002. 14105
அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேக மலர் 1990. 14106
அற்புதங்கள் அறுபத்து நான்கு: சிவனார் திருவிளையாடல்கள். 14180
அறநெறிச் செல்வம். 14028
அறுபத்துமூவர். 14060
அன்பான சிறுவர்களே: குழந்தைக் கதைகள். 14530
அன்று வந்ததும் இதே நிலா. 14739
அன்னை அமுதம். 14029
அனலைதீவு ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயம்: இராஜகோபுர கும்பா பிஷேகச் சிறப்பு மலர் 2012. 14107
அனுபவத்தினூடே: கட்டுரைகள் விமர் சனங்கள். 14862
அனுமந்த மகரந்தம்: ரம்பொடை வெவண்டன் மலையுறை அருள்மிகு ஸ்ரீ பக்த அனுமன் ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர். 14108
அனைத்தும்: படைப்பிலக்கியம் பற்றிய பார்வை. 14863
அனைவரும் திருமணப் பொருத்தம் அறிந்திட. 14047
அஷ்ரஃப் பெருக்கெடுத்த கதைகள்: புதிய வெளிச்சம். 14911
ஆசிரிய வகிபாக விவரணம். 14350
ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் மகா கும்பாபிஷேக மலர். 14109
ஆதிக் கிழவனின் காதல். 14566
ஆமாம் கனம் நீதிபதி அவர்களே. 14997
1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்ற வியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை. 14333
ஆயிரம் வேரும் அருமருந்தும். 14466
ஆர்ட் லாப் (Art Lab) இதழ் 1. 14488
ஆர்ட் லாப் (Art Lab) இதழ் 2. 14489
ஆர்ட் லாப் (Art Lab) இதழ் 3-4. 14490
ஆராரோ ஆரிவரோ: மனிதம் விளையும் தாலாட்டு. 14567
ஆரையம்பதிப் பிரதேச நாடக மரபுகள். 14508
ஆரையம்பதியும் ஆலயங்களும். 14181
ஆழிவித்து. 14357
ஆளுமைகளுக்கான விருதுகள்-2019. 14017
ஆற்றங்கரை மற்றும் பிற கதைகள். 14678
ஆறுமுகப் பாலன் இவன் ஆற்றங்கரை வேலன். 14182
ஆன்மீக வாழ்க்கைக்கான வழிகாட்டுதல்கள். 14061
ஆனந்த இராகங்கள்: பொன்விழா சிறப்பு மலர். 14568
ஆனந்தனும் அவவும்: சுருக்(க) கதைகள். 14679
ஆனந்தியின் இரு குறுநாவல்கள் (புது வீடு, குருஷேத்திரம்). 14740

இக்கால ஐரோப்பாவின் மலர்ச்சி (1453-1939). 14964
இச்சா. 14741
இடைக்காடு அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர் 2005. 14110
இடைக்கால நிர்வாகமே இன்றைய தேவை. 14968
இடைநிலை அளவையியல். 14027
இணுவில் பெரிய சந்நியாசியாரின் வாழ்வும் வளமும். 14900
இந்த மண்ணும் எங்களின் சொந்த மண் தான். 14742
இந்திய வம்சாவளி மக்கள் 94600 பேருக்கு பிரஜா உரிமை வழங்குவதற்கான சட்ட வரைவுக்கு ஆதரவாக நான் ஏன் வாக்களித்தேன்? 14281
இந்தியக் கலை-1. 14491
இந்து சமய பாடத்திரட்டு: முதலாம் இரண்டாம் பாகங்கள். 14081
இந்து சமயம் தரம் 12: வளநூல். 14082
இந்து தருமம் 1962-63. 14101
இந்து தருமம் 1998: மகா கும்பாபிஷேக சிறப்பு வெளியீடு. 14102
இந்து தருமம் 2001. 14103
இந்து தருமம் 2005. 14365
இந்து தீபம்: 1999. 14366
இந்து தீபம்: 2001. 14367
இந்து நாகரிகம் தரம்-12: வளநூல். 14039
இந்து நாதம்: 1985. 14368
இந்து நாதம்: 1997. 14369
இந்துக்களின் அற ஒழுக்கவியற் செல்நெறி. 14040
இந்துச் சுடர்கள். 14892
இப்படிக்கு அக்கா: கவிதைத் தொகுதி. 14569
இப்படிக்கு தங்கை: புனர்வாழ்வு காலத்தின் உண்மைப் பதிவு-2010. 14570
இப்படியும் (தேர்ந்த கவிதைகள்). 14571
இப்றாஹீமின் இலட்சியக் கனவுகள். 14922
இயற்கை வளங்கள் தொடர்பான இரசாயனவியல். 14457
இரட்டைக்கரு முட்டைகள். 14572
இரண்டகன்?. 14743
இரண்டாவது உலக இந்து மாநாடு சிறப்பு மலர்: மன்னார் மாவட்டம். 14087
இரண்டாவது உலக இந்து மாநாடு: யாழ். பிராந்திய சிறப்பு மலர்-2003. 14111
இரண்டெழுத்தில் இயங்கிவந்த இணையற்ற செயல்வீரன். 14912
இரவீந்திரநாத் தாகூர். 14949
இராப்பாடிகளின் நாட்குறிப்பு. 14573
இருபதாம் நூற்றாண்டு சிந்தனைகள் ஆளுமைகள் நிகழ்வுகள். 14966
இரும்பு மனிதன் நாகநாதன். 14913
இல்லைத் துன்பமே: மூவர் அருளிய திருவைந்தெழுத்துப் பதிகங்கள். 14183
இலக்கியத் தொகுப்பு: க.பொத.(உ.த.) தமிழ் 1. 14543
இலக்கியம்: விசேட மலர் 2014. 14832
இலக்கியமும் உளவியலும்: கட்டுரைத் தொகுப்பு. 14864
இலகு தமிழில் HTML. 14003
இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடு. 14292
இலங்கை இந்திய ஒப்பந்தம்: ஒரு நோக்கு. 14969
இலங்கை இலக்கியச் சுற்றுலா: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கருத்தரங்கு கட்டுரைகள். 14998
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆறாவது தேசிய மாநாட்டின் உத்தேச அறிக்கை. 14301
இலங்கை கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளனம்: 12ஆவது தேசிய மகாநாடு (நகல் அறிக்கை). 14302

இலங்கை சித்திரவதைக்கு உட்படுத்தப்படா திருப்பதற்கான உரிமை: நீதிமுறை எதிர்வினை பற்றிய ஒரு பகுப்பாய்வு. 14282

இலங்கை தேசப்படத் தொகுதி: முதலாம் பாகம். 14889

இலங்கை தேசப்படத் தொகுதி: இரண்டாம் பாகம். 14890

இலங்கை தேசப்படத் தொகுதி: பாடசாலை வெளியீடு. 14891

இலங்கை மட்டக்களப்பு தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் மதிப்பீடு. 14424

இலங்கை மத்திய வங்கி: அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் முக்கிய பண்புகள் 2002. 14306

இலங்கை மத்திய வங்கி: அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் 2002 இன் முக்கிய பண்புகளும் 2003 இற்கான வாய்ப்புகளும். 14307

இலங்கை மத்திய வங்கி: அண்மைக்கால பொருளாதார அபிவிருத்திகள் 2005 இன் முக்கிய பண்புகளும் 2006 இற்கான வாய்ப்புகளும். 14308

இலங்கை மத்திய வங்கி: ஆண்டறிக்கை 1996. 14484

இலங்கை மத்திய வங்கி 1950-1975: நினைவு மலர். 14303

இலங்கை மத்திய வங்கி: நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு 2003/2004: கண்டறியப்பட்ட முக்கிய விடயங்கள். 14485

இலங்கை மத்திய வங்கி: பொருளாதார அளவீடு 1991இன் முதலரைப் பகுதி. 14294

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களும் காசுப்பாய்ச்சல் கூற்றும். 14483

இலங்கைக் காவியம்: முதற்றொகுதி: பருவப் பாலியர் படும் பாடு. 14673

இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு: முதலாம் பாகம். 14326

இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பு: இரண்டாம் பாகம். 14327

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு. 14328

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு தாபன விதிக் கோவை: 2ஆம் தொகுதி. 14334

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்: அரசியலமைப்புக்கான பதினேழாவது திருத்தம். 14329

இலங்கைத் தமிழ் அரசியல்: இனமோதலும் மிதவாதமும். 14272

இலங்கைப் பாராளுமன்றில் நீதியின் குரல். 14273

இலங்கையில் ஐக்கிய நாடுகள். 14322

இலங்கையில் சைவ வாழ்வு. 14062

இலங்கையில் தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தின் மாற்றுச் சக்தி வளங்கள்: ஒரு புவியியல் நோக்கு. 14884

இலங்கையில் தமிழியல் ஆய்வுகள். 14412

இலங்கையில் பின்காலனித்துவ அரசு. 14274

இலங்கையில் மனித உரிமைகளும் சமயங்களும். 14283

இலங்கையில் முஸ்லிம் கல்வி: ஷாபி மரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும். 14926

இலைகளே என் இதயம். 14574

இவள் கிறுக்கி. 14575

இளந்தளிர்-6. 14340

இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை. 14252

இறுகியிருக்கும் வரிகளுக்குள் நீ திரவமென ஓடிக்கொண்டிருக்கிறாய். 14576

இறைவற்கொரு பச்சிலை: சிறுகதைத் தொகுதி. 14680

இன்பத் தமிழும் இலங்கையரும்: நான்காவது ஐரோப்பியத் தமிழ் ஆய்வியல் மாநாடு-ஆய்வரங்க மலர் (இரண்டாம் பாகம்). 14425

இன்றைய உலகில் உஸாமா பின்லேடன். 14924

இனிக்கும் இல்லறம். 14395

இனிப்புக் கதைகள். 14681

இஸ்லாத்தின் வழியில் பெண்கள் சுத்தம். 14243

ஈகையின் உயர்வு. 14041

ஈசுபரன் அகவலும் கந்தசுவாமி காவியமும். 14184

ஈழத்தில் தமிழ்நாவல் இலக்கியம்: சில குறிப்புகள். 14833

ஈழத்தில் திரௌபதை வழிபாடு. 14398

ஈழத்து இசை நாடக மரபு வளர்ச்சியில் அண்ணாவியார் எஸ்.தம்பிஐயா: ஆய்வுநூல். 14944

ஈழத்து இந்துக் கோயில்கள்: ஆய்வரங்கச் சிறப்பு மலர் 2019. 14088

ஈழத்து உளவியற் சிறுகதைகள். 14682

ஈழத்து தமிழ்க் கலைஞர்கள்: இசை, நடனம், நாடகம், ஓவியம், வாத்தியம், சிற்பம், கூத்து, சினிமா, கலைஞர்கள்-2000. 14941

ஈழத்துத் தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியம் (போர்த்துக்கேயர் காலம்). 14860

உசாத்துணையிடல் பாணிகள்.14351

உதிரிப் பூக்கள். 14683

உப்புச் சாடிக்குள் உறையும் துயரக்கடல். 14577

உமர் முக்தார்(வானொலி நாடகத் தொகுப்பு). 14666

உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த திருவருட்பயன். 14042

உயர்ந்த மனிதர். 14927

உயர்வகுப்பு மாணவர்களுக்குரிய கட்டுரை எழுதுவது எப்படி? 14434

உயிர்வாசம் (நாவல்). 14744

உயிர் விதைப்பு. 14578

உயிரில் கலந்த வாசம். 14745

உருக்கி வார்த்த உணர்வுகள். 14579

உரைநடைக்கோவை: ஆறுமுக நாவலர் தொடக்கம் சிவராமன் வரை. 14435

உரைநடைச் சிலம்பு (பரல்-க). 14834

உரைநடைச் சிலம்பு (பரல்-உ). 14835

உலக இந்து மகாநாடு: ஆத்மஜோதி சிறப்பு மலர். 14112

உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு கொழும்பு: 22,23,24 ஒக்டோபர் 2002: சிறப்புமலர். 14859

உலக காவியம்: அறிவியல் ஆன்மீக காவியம். 14674

உலக சைவப் பேரவை நான்காவது பொதுச் சபைக் கூட்டமும், உலக சைவ மாநாடும்: சிறப்பு மலர் 08-10 செப்டெம்பர் 1995. 14089

உலக சைவப் பேரவையின் யாப்பு. 14090

உலக வங்கியும் இலங்கையின் வறுமைக் குறைப்பும். 14309

உலகத் தமிழர்ஆவணக் காப்பகம்: ஓர் அறிமுகம். 14007

உலகளாவிய ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் நூற்றாண்டு விழா ஞாபகார்த்த மலர்: 1897-1997. 14113

உலகெலாம். 14023

உள்மனச் சித்திரம். 14684

உள்ளத்தனைய உயர்வு (நாவல்). 14746

உள்ளத்துள் உறைதல். 14024

உறவும் பிரிவும். 14747

உனக்குள் நீ. 14580

ஊற்றை மறந்த நதிகள்(சமூக நாவல்). 14748

எங்கள் காடு: சிறுவர் நாடகம். 14527

எங்கள் கிராமம். 14532

எங்களுடன் இன்னமும் வாழும் மாவை வரோதயன்-நினைவு மலர். 14950

எச்.எஸ்.இஸ்மாயில்: ஒரு சமூக அரசியல் ஆய்வு. 14914

எதனை வேண்டுவோம்: கவிதைத் தொகுதி. 14581

எரிமலை: நாவல். 14749

எல்லையற்ற பெருவெளி. 14582

எல்லையற்ற வான்வெளியில். 14583

எழுக அதிமானுடா. 14584

எழுத்துத் தமிழ்(Lekana Demala Basa). 14436

எறிகணைத் தாலாட்டு. 14585

என் அக்காவின் கதை. 14928

என் இதயம் பேசுகிறது. 14586

என் கண்களே சாட்சி. 14685

என் பெயர் விக்டோரியா: நதியைக் கடக்க முனைந்தவள். 14915

என்றும் ஒளிரும் விளக்கு. 14750

என்னத்தை எழுதி என்னத்தை கிழிக்க. 14587

என்னமோ இருக்கிறம். 14588

என்னைக் காப்பாற்றிய காதலியின் துல்லிய பார்வை (நாவல்). 14751

எனது பேனாவில் இருந்து. 14873

எனது மகள் கேள்வி கேட்பவள். 14589

எஸ்போஸ் படைப்புகள் மற்றும் எஸ்போஸ் பற்றியும் அவருடைய படைப்புகள் பற்றியும். 14874

ஏழாலைக் கிராமத்தின் நவமணிகள்: ஏழாலைத் தாய் பெற்றெடுத்த ஒன்பதின்மரின் வாழ்க்கை வரலாறும் சாதனைகளும். 14893

ஏன் தொழ வேண்டும்?. 14244

ஐக்கிய அமெரிக்க அரசாங்கம். 14268

ஐக்கியமும் அபிவிருத்தியும். 14275

ஐங்கரன் அமிர்தம்: இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் மணி மண்டபத் திறப்புவிழா சிறப்பு மலர் 2004. 14114

ஐம்பது ஆண்டு பாராளுமன்ற அனுபவம். 14018

ஐரோப்பிய பொருளாதார வரலாறு: 1760-1939. 14295

ஒரு கம்யூனிஸ்டின் அரசியல் நினைவுகள். 14916

ஒரு கூடும் இரு முட்டைகளும். 14752

ஒரு சென்ரி மீட்டர் சிரிப்பு பத்து செகன்ட் கோபம். 14590

ஒரு துளி நிழல். 14753

ஒரு தேவதையின் சிறகசைப்பு. 14591

ஒரு நதியின் தேடல். 14592

ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். 14667

ஒரு நிலமும் சில சுயசரிதங்களும். 14754

ஒரு நெக்லசும் ஆண் குழந்தையும்: சிறுகதைகத் தொகுப்பு. 14686

ஒரு மாமன்னரின் பொற்காலம். 14917

ஒரு வேள்வி ஆட்டின் விண்ணப்பம்: அனாதியன்கவிதைகள். 14593

ஒளிரும் நட்சத்திரங்கள்: கலை இலக்கிய ஆளுமைகள் குறித்த பதிவுகள். 14951

ஒன்பதாவது குரல். 14687

க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணிதம்: எளிமை இசை இயக்கம். 14445

க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணிதம்: ஏகபரிமாண உந்தமும் கணத்தாக்கும். 14446

க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணிதம்: கணிதத் தொகுத்தறி முறையம் ஈருறுப்பு விரிவும். 14447

க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணிதம்: சுட்டிகள், அடுக்குக் குறிச் சார்புகள், மடக்கைகள். 14448

க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணிதம்: தளமொன்றின் மீது ஒரு துணிக்கையின் இயக்கம். 14449

க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணிதம்: தொடர்களின் கூட்டல். 14450

க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணிதம்: நியுற்றனின் இயக்க விதிகள். 14451

க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணிதம்: பயிற்சி வினாக்கள் விடைகளுடன். 14452

க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணிதம்: பெறுதிகளின் பிரயோகம். 14453

க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணிதம்: வகையீடு. 14454

க.பொ.த. (உயர்தரம்) இணைந்த கணிதம்: வேலை-சக்தி-வலு. 14455

க.பொ.த. (உயர்தரம்) தமிழ்: மாதிரி வினா-விடை பகுதி 1,2. 14437

க.பொ.த. (உயர்தரம்) பாடத்திட்டம். 14379

க.பொ.த. (உயர்தரம்) வணிகக் கல்வி-2. 14386

கங்கைவேலி. 14977

கட்டிடக் காடும் யுரேனியக் கதிரும். 14594

கடலின் நடுவில். 14755

கடவுள் வழிபாடும் தமிழ் மக்களும். 14063

கடைசி வேரின் ஈரம்: சிறுகதைகள். 14688

கண்டி-கட்டுக்கலை அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஸ்ரீ மீனாட்சி சோம சுந்தரேஸ்வரர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக மலர்.14115

கண்டிக்கால ஓவியங்கள்: க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கானது. 14497

கண்ணகி கற்பு அல்லது வினைச் சிலம்பால் விளைந்த கதை. 14836

கண்ணகி வழிபாடு: பார்வையும் பதிவும். 14392

கண்ணதாசன் பயணங்கள். 14999

கண்ணன் எங்கள் கண்ணன்: குழந்தை இலக்கியம். 14535

கணனி ஒரு அறிமுகம் (கணனியியல் பாகம் 1): கணனி வன்பொருள். 14004

கணினி வழிகாட்டி: 5.14005

கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை கொழும்பு: அரைநூற்றாண்டு நிறைவு 1925-1975: பொன்விழா மலர். 14116

கதிரேசன்பேரில் ஆனந்தக் களிப்பு. 14185

கந்தபுராண அமுதம். 14186

கந்தபுராண நவநீதம். 14064

கந்தபுராணச் சுருக்கம். 14187

கந்தபுராணம் ஒரு பண்பாட்டுக் களஞ்சியம். 14188

கந்தபுராணம்: சூரபன்மன் வதைப் படலம். 14189

கந்தபுராணம்: முதலாவது உற்பத்திக் காண்டம். 14190

கம்பராமாயணம் சுந்தரகாண்டம்: பகுதி 1-காட்சிப் படலம் (விளக்கவுரையுடன்). 14544

கம்பராமாயணம் யுத்தகாண்டம் - கும்பகருணன் வதைப்படலம் (முதல் 170 செய்யுள்கள்). 14545

கம்பன் கடலமுதம். 14837

கருணையோகம்: பேராசிரியர் செ. யோகராசாவின் பணிநயப்பு விழா சிறப்பு மலர் 2016. 14929

கருநாகபூஷணம்: வவுனியா இறம்பைக்குளம் அருள்மிகு ஸ்ரீ கருமாரி நாகபூஷணி அம்பாள் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம். 14117

கல்: சிறுவர் சிறுகதைகள். 14531

கல்லூரி நாடகங்கள்: ஆறு நாடகங்களின் தொகுதி. 14528

கல்விப்பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்புக்களுக்கான மனைப் பொருளியல்: உசாத்துணை நூல். 14478

கல்விப்பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) ஆண்டு 12-13: இணைந்த கணிதம் பாடத்திட்டம். 14380

கல்விப்பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) ஆண்டு 12-13: பொறியியல் தொழினுட்பவியல் பாடத்திட்டம். 14381

கல்விப்பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) ஆண்டு 12-13: வரலாறு பாடத்திட்டம். 14382

கல்விப்பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்) ஆண்டு 12-13: விலங்கியல் பாடத்திட்டம். 14383

கலசம் 2009. 14370

கலாபம்: கவிதைத் தொகுப்பு. 14595

கலாபன் கதை (நாவல்). 14756

கலிங்கு 2003-2015 (நாவல்). 14757

கலை இலக்கிய கட்டுரைகள். 14838

கலைச்சொற்கள்: தாவரவியற் சொற்றொகுதி. 14460

கலைச்சொற்கள்: நான்காம் பகுதி: புவியியற் சொற்றொகுதி. 14882

கலைஞர் தமிழ். 14952

கலைபடும் மௌனம். 14247

கலையுருக்காட்டி. 14596

கவிதைச் சாரல். 14597

கவின்கலைகளில் சித்திரக்கலை: க.பொ.த. (சாதாரண)தரம் 7-11. 14494

கள்ளக்கணக்கு. 14689

களுவாஞ்சிக்குடி சைவ மகாசபையின் பொன்விழா சிறப்பு மலர் 1952-2002. 14118

கற்க கசடற: அமரர் ஆறுமுகம் தில்லைநாதன் நினைவுமலர். 14352

கற்பக தீபம்-2014: ஸ்ரீ கற்பக விநாயகர்ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக மலர். 14119

கற்பகதேவி: பெருங்கதையிலோர் சிறுகதை. 14894

கற்பு நிலை. 14043

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை. 14276

கறுத்த கோடுகள்: சிறுகதைகள். 14690

கறுப்பு வானம். 14598

கன்னியா: பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம். 14978

கனடா மொன்றியால் அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவில் மஹா கும்பாபிஷேக மலர்-1995. 14120

கனடாவில் கதைத்தது. 14865

காகிதப் படகு (குறுநாவல்கள்). 14758

காடு சார்ந்த மேட்டுநிலக் கமத்தொழிலைப் பிரதானமாகக் கொண்டுள்ள உலர் வலய சமுதாயமொன்றில் சிறுவர் உரிமைகளின் தன்மை. 14284

காதம்பரீ: இலக்கிய நூல். 14875

காந்தி போதனை. 14030

காப்பியதாசன் கட்டுரைகள். 14839

காமமே காதலாகி. 14759

காமன் கூத்து: இலங்கை மலையகத் தமிழர் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு. 14400

காரைநகர் பண்டத்தரிப்பான்புலம் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமான் தேவஸ்தானம் மஹா கும்பாபிஷேக மலர் 2003. 14121

காலங்கள் மாறும். 14760

காலநதி: கவிதைத் தொகுப்பு. 14599

காலவரை காட்டூன்கள். 14496

காற்சட்டை அணியும் பெண்மணி: சீனக் குறுநாவல். 14826
கானல் தேசம். 14761
கிராமிய பூபாளம் 2018: சர்வோதய சிறப்பு மலர். 14013
கிராமிய வழிபாடு. 14399
கிழக்கிலங்கை மண்ணில் புகழ்பூத்த மைந்தர்கள்: 2வது பகுதி. 14895
கிழக்கு ஆசியாவின் அற்புதம்: பொருளாதார வளர்ச்சியும் பொதுக் கொள்கையும். 14310
கிறிஸ்துவின் அருள் வரங்களும் தெய்வீக வெளிப்பாடுகளும் (நாடகங்கள்). 14668
குஞ்சிதபாதம்: இந்து சமயச் சிந்தனைக் கட்டுரைகள். 14191
குட்டி. 14762
குடிமைச் சமூகத்தை வலுவூட்டல். 14277
குதிரைக்காரன்: சிறுகதைகள். 14691
கும்பிட்ட கையுள்ளும் கொலைசெய்யும் கருவி (நாவல்). 14763
குமாரசாமி குமாரதேவன்: வாசிப்பும் அறிதலும். 14896
குருதிப் பூஜை (நாவல்). 14827
குருவுக்கான காணிக்கை: சி.க.கந்தசுவாமி. 14930
குழந்தைகளும் வாழ்வும். 14346
குழந்தைகளை வளர்க்காதீர்கள் வளர விடுங்கள். 14347
குறுக்கால போவானே கோதாரி விழுவானே. 14600
கூத்துக் கலைஞர் சி.விஜேந்திரனுடனான நேர்காணல் (கூத்து மீளுருவாக்கம் அனுபவப் பகிர்வு-3). 14509
கேட்டிருப்பாய் காற்றே: கல்லூரி நாடகங்கள் தொகுதி -2. 14669
கேண்மை. 14840
கேதாரீஸ்வரர் விரத மகிமை. 14192
கேரள டயரீஸ்-1: வேர் தேடுவோம். 14885
கை விளக்கு: சிறுவர் நூல். 14521
கைக்குட்டை: சிறுகதைகள். 14729
கைதடி மேற்கு இணுங்கித்தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் முத்துக்குமரன் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர். 14122
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் (புதுக்கோவில்) நால்வர் வழிபாடு. 14193
கொங்கு வேளீர் இயற்றிய கொங்குவேண் மாக்கதை எனும் பெருங்கதை: ஆய்வு நோக்கு. 14861
கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேக சிறப்பு மலர். 14123
கொட்டியாரபுரப்பற்று முதுசங்கள். 14979
கொடகே சதர்த்தவாஹினீ வாணி கற்பகம் ஆங்கில-தமிழ் அகராதி. 14405
கொலம்பசின் வரைபடங்கள். 14764
கொவி செவன முகவர் பயிற்சி: விவசாயத் தொழில்நுட்பப் பாடநூல் (இரண்டாம் பாகம்). 14476
கொழும்பு இந்துக் கல்லூரியின் பொன்விழா மலர் 2002. 14371
கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தங்கத்தேர் மலர். 14124
கொழும்பு தொண்டர் வித்தியாலயம் புதிய மூன்று மாடி கட்டிடத் திறப்பு விழா: வெளியீட்டு மலர்1977. 14372
கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில் கும்பாபிஷேக மலர். 14125
கொழும்புத் தமிழ்ச்சங்கம்: 49,40 ஆவது ஆண்டுப் பொது அறிக்கை (1990-1991). 14014

கொழும்புத் தமிழ்ச்சங்கம்: ஆண்டுப் பொது அறிக்கை (1994). 14015
கொழும்புத் தமிழ்ச்சங்கம்: 57வது ஆண்டுப் பொது அறிக்கை (1998-1999). 14016
சகவாழ்வுக்கான அறிவு. 14262
சங்கநாதம் 1976-1977.14373
சங்கீத மகான்களும் எம் மண்ணின் சங்கீதக் கலைஞர்களும். 14943
சண்- பன்முகப் பதிவுகள்: அதிபர் திரு. வே.சண்முகராஜா: வாழ்த்து மலர். 14931
சண்முகநாதம்: யா/கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் 2017. 14374
சதுரங்கத்தில் வாழ்க்கை (கட்டுரைத் தொகுப்பு). 14841
சந்தியாவந்தன இரகசியம். 14065
சந்தைப் பொருளாதாரம் என்றால் என்ன? 14311
சந்நிதியான் ஆச்சிரமம்: சேவைகள் பணிகள். 14091
சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் சத்தியமான 18 படிகள்: 18ஆவது ஆண்டு மண்டல பூஜை சிறப்பு மலர்-1993. 14126
சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் தெய்வீகப் பாமாலை: 20ஆவது ஆண்டு மண்டல பூஜை சிறப்பு மலர்-1995. 14127
சம்பூர்ண அரிச்சந்திரா நாட்டுக்கூத்து. 14401
சம்ஸ்கிருத முதற் பாலபாடம். 14406
சமஷ்டி முறையும் சுயநிர்ணய உரிமையும். 14269
சமாதானத்தின் கதை. 14692
சமாதானம்: தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கான இலக்கியப் போட்டி எழுத்தாக்கங்கள் 2002. 14549
சமுத்ராவும் அவளிசைக்கும் புல்லாங் குழலும். 14601
சமுதாய அகதிகள்.14693
சமூக அறிவு: தொகுதி 1, இதழ் 1/2-ஆடி 2004. 14253
சமூக அறிவு: தொகுதி 2, இதழ் 1/2-ஆடி 2005. 14254
சமூகக் கல்விப் பாடத்துக்கான தேசப்படப் பயிற்சி 10-11. 14250
சமூகத்தை அணிதிரட்டல், வலுவூட்டல், சமூக நிலைமாற்றுதல் தொடர்பில் மாதிரிக் கட்டமைப்பையும் உபாயங் களையும் உருவாக்குதல். 14248
சமூகவெளி: தரிசனங்களும் பதிவுகளும். 14842
சர்வஉரூபிகரம். 14765
சர்வதேச கலைப்பாலம்-2016 (பயணக் கட்டுரை). 14510
சர்வதேச மனித உரிமைகள் பற்றிய சட்டங்களும் சட்ட அபிவிருத்தியும். 14285
சர்வஜாதக சந்தேக நிவர்த்தி. 14048
சரித்திரம் பேசும் சாஹித்தியரத்னா விருதாளர்கள். 14953
சனநாயகம் என்றால் என்ன?. 14270
சாதிகள் இல்லையடி பாப்பா (நாவல்). 14766
சாந்தம் புதிய மண்டபத் திறப்பு விழா சிறப்பு மலர். 14128
சாமரையில் மொழிகலந்து. 14602
சாயிபாபா அவதாரங்கள். 14066
சாவகச்சேரி அருள்மிகு வாரிவன ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் 2008. 14129
சான்றுக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 14). 14313
சிகண்டி: தன்னைக் கடந்தவள். 14603
சிங்கள அலங்காரங்கள். 14495
சிங்கள போதினி. 14408
சித்த மருத்துவம் 1985. 14467

சித்த மருத்துவம் 1986. 14468
சித்த மருத்துவம் 1987. 14469
சித்த மருத்துவம் 1990/91. 14470
சித்த மருத்துவம் 1992/93. 14471
சித்த மருத்துவம் 1993/94. 14472
சித்த மருத்துவம் 1997/98. 14473
சித்தாந்தபாநு சோ.சுப்பிரமணியக் குருக்கள் பாராட்டுவிழா மலர். 14901
சிந்தனை: மலர் 2 இதழ் 2/3 (ஜுலை-ஒக்டோபர் 1968). 14358
சிந்தனை தொகுதி XIII, இதழ் 2.(ஜுலை 2000). 14359
சிந்தனை தொகுதி XIV, இதழ் 3 (நவம்பர் 2004). 14360
சிந்தனைத் திடரில் சிதறிய துகள்கள். 14843
சிவஞானதேசிகன் பிரார்த்தனை. 14044
சிவஞானம்: ஏழாவது உலக சைவ மாநாடு கனடா, 1999: சிறப்புமலர். 14130
சிவத்தமிழ் வித்தகம். 14902
சிவதொண்டன் நிலையப் பொன்விழா மலர் 2004. 14131
சிவநெறி 1961. 14104
சிவப்பு டைனோசர்கள். 14604
சிவப்புக் கோடு: சிறுகதைகள். 14694
சிவபுராணம். 14194
சிவராத்திரி மலர். 14195
சிற்றம்பலநாடிகள் அருளிய திருச்செந்தூரகவல் மூலமும் விளக்கவுரையும். 14196
சிறகிழந்த கிளிகள். 14605
சிறு கீற்று. 14606
சிறுகதைத் திரட்டு: தரம் 12-13. 14546
சிறுமியும் மந்திரக்கோலும். 14536
சிறுவர் சிந்தனைத் தமிழ்(கவிதைத் தொகுப்பு). 14522
சிறுவர் ஞானத் தமிழ் நாடகம். 14529
சிறையில் இருந்து மடல்கள். 14607
சின்னச் சின்ன எண்ணங்கள். 14876
சின்னஞ்சிறிய பூக்கள்-5. 14539
சீயக்காய் வாசக்காரியும் சில்வண்டுக் காதலனும். 14608
சீனாவுக்கான அமைதிவழி அபிவிருத்தியும் அதன் இரகசியமும். 14293
சுகமான விடியலை நோக்கி. 14462
சுடர் விளக்கு (நாவல்). 14767
சுதந்திரத்தை நோக்கிய அரசியல் திட்ட வளர்ச்சி. 14330
சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோயில் வரலாறு. 14092
சுயதொழில் வழிகாட்டி. 14305
சுருதி 1996. 14492
சுவர்க்கத்து நறுமணம்: சிறுகதைகள். 14695
சுவாசம் மட்டுமே சுடுகலனாய். 14609
சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா நினைவு மலர்: 1992.14954
சுவாமி விபுலானந்தரின் தமிழியல் ஆய்வுகள். 14426
சுவாமி விபுலானந்தரின் தலையங்க இலக்கியம். 15000
சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள் 200. 14031
சுவிற்சர்லாந்து. 14886
சுவிஸ்-பேர்ண் ஞானலிங்கேச்சரர் திருப் பள்ளியெழுச்சி. 14197
சுழிபுரம்-பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் 04.04.2004. 14132
சுற்றாடல் நிலைமை அறிக்கை: இலங்கை-2001. 14348
சூரசங்காரம். 14067
செ.கதிர்காமநாதன் படைப்புகள். 14877
செங்கதிர்: அமரர் சண்முகம் சிவலிங்கம் அஞ்சலிச் சிறப்பிதழ். 14955

செந்தமிழ் குழந்தைப் பாடல்கள். 14523
செய்முறை முகாமைத்துவ கைநூல்: இலங்கையின் கிராமிய, நகர, மக்கள் அமைப்புகளுக்காக: தொகுப்பு 1- அமைப்பு, நிர்வாகம், தொடர்பு முறைகள். 14479
செய்னம்பு நாச்சியார் மான்மியம். 14675
செவ்விலை. 14610
சேர்ந்து உழைத்தலில் சுய அபிவிருத்தி. 14341
சேற்றின் நடுவில். 14768
சைவ இலக்கியக் கதாமஞ்சரி. 14083
சைவ சமய ஒழுக்கங்கள். 14068
சைவ சமய வாழ்வியற் சிந்தனைகள். 14069
சைவ சமயத் திருமுறைப் பாராயணத்திரட்டு. 14198
சைவ நாதம்: சைவப் புலவர் பொன்மலர் 1960-2010. 14518
சைவ நெறி: தரம்8. 14084
சைவநெறிக்கூடம்: அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் செந்தமிழ்த் திருக்குடமுழுக்கு பெரு விழா மலர். 14133
சைவ போதினி மத்திய பிரிவு (எட்டாம் வகுப்புக்குரியது). 14085
சைவ மகாஜன தீபம்: மண்டபத் திறப்பு விழா மலர்-2015. 14375
சைவ விரதங்கள்: ஓர் அறிமுகம் 14070
சைவப் பிரகாசிகை: முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் புத்தகங்கள். 14086
சைவம் போற்றுதும்-2018. 14134
சொர்க்கபுரிச் சங்கதி (சிறுகதைகள்). 14696
சொல்லின் செல்வர் இர. சிவலிங்கம். 14923
சொல்லோவியம். 14611
சோமவார விரத மகிமை. 14199
சோனக அரங்கு: உரையாடல். 14511
சோனகத் தேசம்: மிகச் சுருக்கமான அறிமுகம். 14974
ஞாபகிக்கத்தக்கதோர் புன்னகை. 14844
ஞான மண்டலம் ஆலயம் வஜனாம்ருதம். 14045
தகவல் அறியும் உரிமை: ஒரு வழிகாட்டி. 14290
தகன ஸம்ஸ்கார. 14397
தடங்கள்: மர்ஹூம் ஏ.எல்.அப்துல் மஜீது அவர்களின் 15ஆம் வருட நினைவிதழ். 14918
தடுத்தாட்கொண்ட புராணம். 14200
தண்டபாணீயம்: வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் அவர்களின் மணிவிழா மலர். 14903
தண்ணீர்: சிறுகதைத் தொகுப்பு. 14697
தண்ணுமைத் தண்ணொலி. 14498
தத்துவ சிந்தனை மரபில் சைவசித்தாந்தம் கூறும் ஆன்மா. 14046
தமிழ் அகதிகளுக்காக மாமாங்கப் பிள்ளையார் தோத்திரம். 14201
தமிழ் அகராதியியலின் பரிணாமம் மற்றும் பரிமாணம்: நான்காவது ஐரோப்பியத் தமிழ் ஆய்வியல் மாநாடு-ஆய்வரங்க மலர் (முதலாம் பாகம்). 14427
தமிழ் உரைநடைத் தொகுப்பு (க.பொ.த. உயர்தரம்). 14438
தமிழர் உறவுமுறைச் சொல்வழக்கு அகராதி. 14413
தமிழ் எழுத்துக்கள். 14414
தமிழ் கற்பித்தலில் உன்னதம்: ஆசிரியர் பங்கு. 14353
தமிழ் சிங்கள அகராதி: இரண்டாம் மொழி. 14409
தமிழ் சினிமா இசையில் அகத்தூண்டுதல். 14499

தமிழ் தலைப்புச் சொற்களுடன் முழுமை யான பிரயோக மும்மொழி அகராதி. 14415

தமிழ் மரபில் நடிகர்திலகம் சிவாஜி கணேசனின் நடிப்புப் பண்பாடு. 14515

தமிழ் மறைக் கட்டுரைகள். 14845

தமிழ் மொழி உயர்தரம். 14439

தமிழ் மொழி கற்போம் (முதலாம் பகுதி) பேச்சுத் தமிழ். 14440

தமிழ் மொழிப் பிரயோகம்: கணக்கெடுப்பும் பிரச்சினைகளும்: ஆய்வரங்கக் கட்டுரைகள்-1996. 14480

தமிழ் மொழியும் இலக்கியமும்: தரம் 7 (இன்பத் தமிழ் 2-செயல்நூல்). 14441

தமிழ் வேதப்பாமாலை. 14202

தமிழ் வேதம் தந்த கணபதி. 14203

தமிழ்த் திரைப்படக் களஞ்சியம்: தொகுதி நான்கு. 14516

தமிழ்த் தீபம்-2018. 14361

தமிழர் உளவியலும் உளவளத் துணையும். 14025

தமிழர் தகவல் 2000. ஒன்பதாவது ஆண்டு மலர் (மிலேனியம் மலர்). 14009

தமிழர் தகவல் 2003. பன்னிரண்டாவது ஆண்டு மலர் (மாமாங்க மலர்). 14010

தமிழர் தகவல் 2020. 29ஆவது ஆண்டு மலர் (இளமதிச் சுவடு). 14011

தமிழர் பண்பாடு. 14261

தமிழர் யார்? 14975

தமிழிசைக்கு புத்துயிர் அளித்த முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார். 14540

தமிழியச் சான்றோர். 14937

தமிழியல் ஆய்வுச் சோலை: தமிழ் இலக்கியச் சிந்தனை ஆய்வுகள். 14846

தமிழியல் தடங்கள். 14416

தமிழினி (சிறுகதைத் தொகுதி). 14698

தமிழோடு இசை பாடல். 14612

தரிசனப் பார்வைகள். 14866

தருமத்தின் குரல். 14032

தன்னாத்மாவைத் தேடி அலையும் மனிதன். 14022

தனி ஈஸ்வரம்: க.வை.தனேஸ்வரன் நினைவு மலர். 14897

தாந்தாமலை மாட்சி: தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய மலைப்பிள்ளையார் கோயில் குடமுழுக்கு மலர்-2011. 14135

தாய்மை: தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள். 14699

தாய்மையின் பொலிவு: தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 150ஆவது ஜனன ஆண்டு விழாச் சிறப்பு மலர். 14136

தாயக பூமி. 14700

தாயுமானவன்(கவிதைத் தொகுப்பு). 14613

தான்தோன்றுமீசுரர் தோத்திரப் பாடல். 14204

திணை மயக்கம் அல்லது நெஞ்சொடு கிளர்தல். 14614

திரு அஞ்சலி மலர். 14910

திருக்குறள். 14033

திருக்கேதீச்சர கௌரிநாயகி பிள்ளைத் தமிழ். 14205

திருக்கேதீச்சரம்: திருக்குடத் திருமஞ்சன மலர். 14137

திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்பாள் தேவஸ்தானம் கும்பாபிஷே கமலர். 14138

திருக்கோணமலை இளைஞர் அருள்நெறி மன்றம்: 25ஆவதுஆண்டு நிறைவு வெள்ளிவிழா மலர். 14139

திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேக மலர்1994. 14140

திருக்கோணமலைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முதலாண்டு மலர்-ஆனி 1961. 14550
திருக்கோணேஸ்வரம். 14093
திருக்கோணேஸ்வரம் கையேடு: திருமதி பத்மாசனி கணபதிப்பிள்ளை அவர் களின் நினைவேடு. 14980
திருச்சபை வரலாற்றுத் துளிகள். 14050
திருந்திய உள்ளங்கள்: சிறுகதைத் தொகுதி. 14701
திருநெறித் தமிழ்: வெள்ளிவிழா சிறப்பிதழ் 1998. 14141
திருமந்திரம் சிறப்பு நிகழ்ச்சி மலர். 14206
திருமறைக் கலாமன்றம் எனது பார்வையில். 14512
திருமுருக வழிபாடு. 14207
திருமுறை, தோத்திரப் பாடல்களின் திரட்டு. 14208
திருமுறைத் தோத்திரப் பாடல்கள். 14209
திருமுறைப் பண்ணிசை. 14500
திருவருள் மிகு ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில் கும்பாபிஷேக சிறப்புமலர். 14142
திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமை யாளர். 14847
திருவாசகத் தேன்துளிகள். 14210
திருவாசகத் தேன்துளிகள் ஐந்து. 14211
திருவாசகத்தில் சிவபுராணம்: இனிய இலகு தமிழ் உரைநடையுடன். 14212
திருவாசகம் ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள் நினைவு மலர். 14904
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, ஒன்பதாம் திருமுறை (மூலமும் உரையும்). 14213
திரைப்படத்துறையில். 14517
தில்லைச் சிதம்பரமும் ஈழத்துச் சிதம்பரமும். 14094
தினகரன் தமிழ்விழா சிறப்பு மலர் 1960. 14551
தினசரி உபதேச மொழிகள்.14034
தீக்கங்குகள்.14615
தீவிரவாதி? (நாவல்). 14769
துயரம் தரும் அழகு. 14616
துர்கா. 14770
துருவத்தின் கல்லறைக்கு. 14771
துளிர் விடும் அரும்பு: கவிதைகள். 14617
துன்பக் கேணியில்... (ஒரு நாவல்). 14772
தெகிவளை நெடுமால் கோவை. 14214
தெய்வீகப் பாடல்கள். 14215
தென்கதிரை முருகன் பேரில் சிறைமீட்ட கும்மி. 14216
தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்துசமய வரலாறு. 14071
தென்திசை அதிபருக்கு ஓர் அதிபரின் அஞ்சல். 14848
தென்னிலங்கை பிராமிக் கல்வெட்டுகளில் இந்து சமயமும், தமிழும். 14991
தேச வழமைச் சட்டம். 14314
தேர்ந்த சிறுகதைகளும் நாகம்மாள் நாவலும் ஒரு நோக்கு. 14547
தேவதையின் அந்தப்புரத்தில் பட்டாம்பூச்சிக் குடியிருப்பு. 14618
தொடுவானின் சிதறல்கள். 14619
தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய மாமணி சிறப்புமலர்-2002. 14143
தொழில் சட்டங்கள்: இலகுவான முறையில். 14331
தோத்திரக் களஞ்சியம். 14217
தோத்திரக் கோவை. 14218
தோத்திரத் திரட்டு. 14219
தோத்திரத் திரட்டு: திரு.கதிர்காமர் நாகநாதர் அவர்களது பிரிவு குறித்த நினைவு மலர். 14220

தோழர்: இதுவொரு நினைவின் பதிவு (அமரர் சின்னத்தம்பி சண்முகநாதன் நினைவு மலர்). 14919

நக்கீரம் 1995. 14144

நகுலேஸ்வர குரு: கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா பிரதமகுரு பிரமஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின் பவளவிழா மலர். 14905

நஞ்சுமிழும் காளான்கள். 14620

நட்சத்திரங்கள் நனைந்துபோன மழை நாட்கள். 14621

நடராஜப்பத்து. 14221

நடனம் (பரத நாட்டியம்). 14504

நடைமுறைத் தமிழ் வழிகாட்டி: அகரமுதலி. 14417

நதிமேல் தனித்தலையும் சிறுபுள். 14773

நந்திக் கடல் பேசுகிறது: பின் போர்க்காலமும் களப் பதிவுகளும். 14970

நல்ல சிந்தனைகள் அடங்கிய நல்ல சிவமலர். 14222

நல்லை நாற்பது: பக்திக் கீர்த்தனைப் பாடல்கள். 14223

நல்லைக் கந்தன். 14224

நல்லைக்குமரன் மலர் 1998. 14145

நல்லைக்குமரன் மலர் 1999. 14146

நல்லைக்குமரன் மலர் 2002. 14147

நல்லைக்குமரன் மலர் 2005. 14148

நல்லைக்குமரன் மலர் 2006. 14149

நல்லைக்குமரன் மலர் 2007. 14150

நல்லைக்குமரன் மலர் 2008. 14151

நல்லைக்குமரன் மலர் 2009. 14152

நல்லைக்குமரன் மலர் 2011. 14153

நல்லைக்குமரன் மலர் 2017. 14154

நலங்கள் அறுபது. 14035

நவநாதம் 1998: நாவலப்பிட்டி-குயீன்ஸ்பரி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயம் மகா கும்பாபிஷேகச் சிறப்பு மலர். 14155

நவீன அரசியற் கோட்பாடுகள். 14271

நவீன இலக்கியம்: ஈழம்-புகலிடம்-தமிழகம். 14849

நவீனமயப்படுத்தல். 14335

நறுக்கென்று-மூன்று விரல் கேள்விகள்: சமூக சுயவிமரிசனப் பத்திகள். 14249

நன்றி மறப்போம். 14354

நன்னூல் மூலமும் விருத்தியுரையும். 14430

நா இடற வாய்தவறி. 14622

நாக இனக்குழுவும் இலங்கைத் தமிழரும். 14992

நாங்கள் மனித இனம்: உருவகக் கதைகள். 14702

நாங்கள் யார்? 14286

நாட்குறிப்பு (சிறுகதைத் தொகுப்பு). 14703

நாட்டார் பாடல்கள் (தொகுப்பு). 14402

நாட்டார் பாடற் துளிகள். 14403

நாடகக் கலைஞர் ஏ.ரி.பொன்னுத்துரை: வெள்ளிவிழா மலர்-1974. 14945

நாடகமும் அரங்கியலும்: பரீட்சை வழிகாட்டி. 14513

நால்வர் உதயம் கலைவிழா 1998: சிறப்பு மலர். 14376

நாவலர் அவதரித்தார் நல்லை நகர்தனிலே. 14906

நாவலர் சரித்திர ஆராய்ச்சி. 14932

நாவலர் நூற்றாண்டு நினைவு விழாச் சிறப்பிதழ் 1979. 14156

நாவலர் மாநாடு விழாக் காட்சிகள் 1969. 14907

நாற்காலிகள் (மேடை நாடகம்). 14672

நான். 14623

நான் என் அம்மாவின் பிள்ளை (பாகம் 1). 14774

நான் என் அம்மாவின் பிள்ளை (பாகம் 2). 14775

நான் நீயானால் (குறுநாவல்). 14776

நான் பேசும் இலக்கியம். 14850
நானும் என் தேவதையும். 14624
நிகர்: சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011: சிறப்பிதழ். 14012
நித்தியாவின் அர்த்தமுள்ள மௌனம். 14777
நிர்வாகச் சட்டம். 14315
நிரந்தரப் புரட்சியும் சோசலிச அனைத்துலக வாதத்துக்கான போராட்டமும். 14299
நிலவு குளிர்ச்சியாக இல்லை. 14704
நிலவுக்குள் சில ரணங்கள். 14705
நிலா நாழிகை. 14625
நிறம் பூசும் குழந்தைகள். 14626
நினைவலைகளில் வானொலிக் குயில். 14898
நினைவழியா ஓராண்டு (An Unforgettable Year) வைத்திய கலாநிதி அமரர் நடராஜா சிவராஜா அவர்களின் ஞாபகார்த்த வெளியீடு. 14940
நினைவுகள் துணையாக. 14627
நினைவுகளும் கனவுகளும். 14851
நினைவுப் பகடைகள் (சிறுகதைகள்). 14706
நீட்சி பெறும் சொற்கள்: கட்டுரைகள். 14867
நீண்ட காத்திருப்பு. 14925
நீதி நூல் தொகுப்பு. 14036
நீதிமுரசு 1978. 14316
நீதிமுரசு 1992. 14317
நீதிமுரசு 1997. 14318
நீதிமுரசு 1999. 14319
நீதிமுரசு 2000. 14320
நீதியரசர் பேசுகிறார் (தொகுதி 1). 14278
நீதியின் திலகம்: நீதிராஜா திலகவதி நினைவுமலர்-1997. 14935
நீதியின் நினைவு: தம்பிமுத்து நீதிராஜா நினைவுமலர்-1998. 14936
நீரரர் நிகண்டு. 14418
நீரும் மீனும். 14304
நீலமும் பசுமையும் நிறைந்த நல்ல உலகம். 14541
நீறிருக்கப் பயமேன்: கட்டுரைத் தொகுப்பு. 14072
நுங்கு விழிகள். 14628
நுண்ணறிவு: போட்டிப் பரீட்சைக்குரிய உள ஆற்றலும் நுண்ணறிவு அளவீடும். 14001
நுண்பொருள்: அறம்-பொருள்-காமம். 14852
நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய ஸ்ரீ காயத்ரீ தேவி மஹா கும்பாபிஷேக விழா சிறப்புமலர் 1986. 14157
நூல்தேட்டம் தொகுதி 14. 14006
நூலக முகாமைத்துவம். 14008
நூறு குறளும் நூறு கதையும். 14707
நெஞ்சுறுத்தும் நிஜங்கள்: கவிதைத் தொகுப்பு. 14629
நெருஞ்சி முள்ளு. 14778
நெருநல் (கவிதைகள்). 14630
நெய்தல்: நான்காவது ஆண்டு மலர். 14493
நேசவினை (சமூக நாவல்). 14779
நோக்கு: ஆய்வுக் கட்டுரைகள். 14853
பகலில் காணும் கனவுகள்: கவிதைத் தொகுப்பு-01. 14631
பகவத் கீதை வெண்பா: மூன்றாம் பாகம்: ஞான யோகம். 14037
பகிர்தலும் புரிதலும்: ஞானம் பத்திரிகை ஆசிரியத் தலையங்கங்கள். 14020
பசுவின் கதை. 14073
பஞ்ச கதிகள். 14501
பஞ்சம் பிழைக்க வந்த சீமை: வரலாற்று நெடுங்கதை. 14780
பட்டது. 14632
பணிக்கர் பேத்தி. 14781
பத்தாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு 2007. 14428

பத்தாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டு மலர் 2008. 14429

பத்திரிகை ஆசிரியர்களுக்கான கையேடு. 14019

பத்தினித் தெய்வம்: சிலப்பதிகார நாடகங் களும் வில்லுப்பாட்டுக்களும். 14670

பதிவுகளின் சங்கமம். 14868

பரத இசை மரபு. 14502

பரத நாட்டிய செய்முறைத் தாள விளக்கம். 14505

பரதநாட்டியம்: வாசிப்புத் துணை நூல்-தரம் 8. 14506

பரதநாட்டியம்: வாசிப்புத் துணை நூல்-தரம் 11. 14507

பரராசசேகர நயனவிதி (மூலமும் உரையும்). 14474

பராரி கூத்துகள். 14782

பருத்தித்துறை கொட்டடி ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்புமலர் 23.2.2017. 14158

பருத்தித்துறையிலிருந்து கற்றிங்கன் வரை: ஒரு புலம்பெயர்ந்தவனின் கதை. 14291

பலன்தரும் பெயர் சூட்டுவோம். 14049

பழுத்தோலை. 14633

பள்ளத்தாக்கில் சிகரம். 14634

பறவையாய் அவளை மாற்றிப் பார்ப்போமா?. 14635

பன்மொழிப் புலவரின் ஆய்வுகள். 14956

பனங்கூடல் (நாவல்). 14783

பனிச்சங்கேணி அரசி: வரலாற்றுச் சிறுகதைகள். 14708

பனுவல்: சமூக பண்பாட்டு விசாரணை (இதழ் 1-2003). 14255

பனுவல்: சமூக பண்பாட்டு விசாரணை (இதழ் 4-2006). 14256

பனுவல்: சமூக பண்பாட்டு விசாரணை (இதழ் 5-2007). 14257

பனுவல்: சமூக பண்பாட்டு விசாரணை (இதழ் 6-2008). 14258

பனுவல்: சமூக பண்பாட்டு விசாரணை (இதழ் 7-2009). 14259

பஜனைப் பாடல்கள். 14225

பாட்டும் விளையாட்டும் (கிராமியச் செல்வங்கள்). 14404

பாடிப்பறந்த பறவைகள்: திரைக்கதை வசனம். 14784

பாதி உறவு: குறுநாவல். 14785

பார் புகழும் பதி பன்னாலை. 14981

பார்வைகள். 14636

பாரதக் கதைகள். 14519

பாரதரத்னா இந்திரா. 14920

பாரதீயம்: சிற்றிலக்கண நூல் (இரண்டாம் பாகம்). 14431

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் பரிசளிப்பு விழாவும் கலைஞர்கள் கௌரவிப்பு விழாவும்-1998. 14942

பாரிசவாதமும் பராமரிப்பும். 14465

பால் வனங்களில் (நாவல்). 14786

பால்நிலை சமத்துவத்தை நோக்கிய ஆண்களின் பயணம். 14263

பாலம்: குணசேன விதானேகே அவர்களின் வாழ்வியலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளும். 14730

பாலைவனத்துப் புஷ்பங்கள் (நாவல்). 14787

பாஷையூரும் நாட்டுக்கூத்தும். 14982

பிங்கலன் கதை. 14537

பிரணவக் கலை விளக்கு. 14074

பிரதிகளைப் பற்றிய பிரதிகள். 14869

பிரதேச செயலகமும் பொது மக்களுக்கான சேவைகளும்-ஓர் அறிமுகம். 14336

பிரதோஷ வழிபாடு. 14075

பிரமமாய் நின்ற சோதி. 14226

பிரமிள்: தேர்ந்தெடுத்த கவிதைகள். 14637

பிரயோக உடற்றொழிலியல் (முதலாம் பாகம்). 14461
பிரவுணிங்கு, யோசேப்பு ஆகியொரின் செய்முறை இரசாயனம். 14458
பிரான்ஸ் தமிழர் போராட்டம். 14971
பிரித்தானியாவின் புதிய அடிப்படை வரலாறு: நான்காம் பகுதி 1688-1939. 14965
பிள்ளை நிலா: சிறுவர் பாடல்கள். 14524
பிள்ளையார் பெருங்கதை (வசனம்). 14227
பிள்ளையின் உரிமைகள் மீதான பட்டயம். 14332
பின்நோக்கினளே. 14788
புகழ்பூத்த நீர்வேலி. 14983
புங்குடுதீவு கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனாக்ஷியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வர ஸ்வாமி கோவில் (சிவன் கோவில்) 33 குண்ட, 100 ஸ்தம்ப உத்தமோத்தம பக்ஷயாக மஹா கும்பாபிஷேக மலர். 14159
புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்க வெள்ளிவிழா மலர். 14377
புத்தரின் கடைசிக் கண்ணீர். 14709
புத்தொளி சிவபாதம்: வாழ்வும் பணியும். 14957
புதுக்கோயிலான் பெருங்கருணை: மஹா கும்பாபிஷேகம் சிறப்பு வெளியீடு. 14160
புதுவையாள்: பிரதேச பண்பாட்டு விழா மலர்: 2016. 14989
புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள் (அனுராதபுர மாவட்டம்). 14076
புலமையும் வறுமையும். 14638
புலவொலி: கட்டுரைகள். 14870
புவியியல்: விருப்பத்துக்குரிய பாடம் (தரம் 10, 11இற்குரியது). 14883
புள்ளிகள் கரைந்த பொழுது (நாவல்). 14789
புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் ஆண்டுற்சவ மலர் 1971. 14161
புறங்கைச் சுமை: கட்டுரைகள். 14026
புன்னகைக்கும் நபிகள். 14245
புன்னாலைக்கட்டுவன் கணேச சனசமூக நிலையம்: கட்டடத்திறப்பு விழா சிறப்பு மலர்-2002. 14342
புனித பூமியில் பதிந்த சுவடுகள். 14887
பூ (சிறுகதைகள்).14710
பூகம்பப் பூக்கள். 14639
பூலான் தேவி. 14790
பூவரசம்பூ. 14664
பெண் என்றால் என்ன? ஆண் என்றால் என்ன?. 14264
பெருந்தோட்ட உற்பத்தியில் பெண் தொழிலாளர்கள். 14265
பேச்சு சிங்களம்: அரசகரும மொழிகள் தேர்ச்சி-மேலதிக வாசிப்பு நூல். 14411
பேச்சுச் சிங்களம் (Bahashana Sinhala Mattama 3). 14410
பேச்சுத் தமிழ் (Katana Demala Basa). 14442
பேச்சுத் தமிழும் இலக்கியத் தமிழும். 14443
பேராசிரியர் எம்.ஏ.நுஃமானும் மொழியியலும். 14938
பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் நாடகமும்/பேராசிரியர சு.வித்தியானந்தனும் நாட்டார் வழக் காற ்றியலும். 14946
பேராசிரியர் சுவாமி விபுலாநந்தரும் முத்தமிழும். 14933
பேராசிரியர் தனிநாயகம் அடிகளாரும் உலகத் தமிழ் ஆய்வுகளும். 14939
பேராசிரியர் ம.மு.உவைஸும் இஸ்லாமிய தமிழ் இலக்கியமும். 14958
பேரும் ஊரும்: இடப்பெயர் ஆய்வு. 14393
பொத்தானை வயல். 14711

பொது முதலீடு 1990-1994. 14486
பொதுப் போட்டிப் பரீட்சை வழிகாட்டி. 14002
பொருளாதார மத்திய வழி: பொதுமக்கள் செல்வ நிலையை உயர்த்த ஓர் திட்டம். 14312
பொருளியற் பாகுபாடு. 14296
பொலன்னறுவை பொத்குல் விகாரை சிலை. 14967
பொற்கனவு. 14640
பொற்றாமரை: பொன்விழா சிறப்பு மலர் 2012. 14990
போர்க்குணம் கொண்ட ஆடுகள் (சிறுகதைகள்). 14712
போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளிகோயில். 14077
போரும் அமைதியும் (நாவல்). 14791
மக்கள் சேவையில் ஈராண்டு. 14337
மக்கள் சேவையில் மூன்று ஆண்டுகள். 14338
மக்கள் தலைவர் தொண்டமான் முத்துவிழா மலர்: 1992. 14921
மக்களில் முதலீடு செய்தல்: நிறுவனத்தைக் கட்டியெழுப்புதலும் மனிதவளமும்: முன்னேற்ற அறிக்கை 1991. 14339
மகளிர் இருவர் (நாவல்). 14792
மகா வாக்கியங்கள். 14038
மகாபாரதக் கதை: பழகு தமிழ் நூல். 14520
மகாபாரதம் சபாபருவ மூலமும் புத்துரையும். 14548
மகான்கள் அர்ச்சனை மாலை. 14228
மகுடம்: கலை விழா 2008. 14378
மகுடம்: கலைஞர் கே.மோகன்குமார் பற்றிய ஓர் ஆவணப்பதிவு. 14947
மங்களேஸ்வரக் குருமணி. 14229
மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரி திறப்புவிழா மலர் 1953. 14362
மட்டக்களப்பு சைவக் கோவில்கள் (இரண்டு பாகங்களில்). 14095
மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்றுச் சுவடுகள். 14984
மட்டக்களப்புச் சொல்வெட்டு. 14419
மட்டுநகர் ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலய வரலாறு. 14096
மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோயில் கும்பாபிஷேக சிறப்புமலர். 14162
மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்மன் கோவில் பூர்வீக சரித்திர வரலாறும் கும்பாபிஷேக வைபவமும். 14163
மடிவேன் என்று நினைத்தாயா? 14641
மண்-நீர்: தேசிய கண்காட்சி-நீரேந்துப் பரப்புகளைப் பாதுகாத்தல். 14297
மண்ணவரும் விண்ணவரும்மகிழ்ந்த மகாகும்பாபிஷேகம்: ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோயில்-1993. 14164
மணற்கும்பி. 14642
மணற்கேணி: திருக்குறட் கட்டுரைகளின் தொகுப்பு. 14854
மணிமொழிகள்: நாவலர் மணிமண்டப திறப்புவிழா நினைவுமலர்- 1995. 14165
மத்திய மாகாண இந்து மாநாட்டுச் சிறப்பு மலர்-2003. 14166
மத்திய மாகாண இந்து மாமன்ற இந்து கலாச்சார நிலையத் திறப்புவிழா சிறப்பு மலர்-1983. 14167
மதுவின் இரகசியம். 14793
மந்திரவாதியின் தலையைத் தாக்கிய மாயச்செம்பு. 14538
மயக்கத்தை அகற்றி துலங்கும் அறிவு. 14246
மயில்வாகனம். 14230
மயூரகிரி புராணம். 14231

மர்ம மாளிகை. 14794
மர்மப் பெண்: திகில் சித்திரம். 14795
மரக்கறிச் செய்கை. 14477
மரணம் ஒரு முடிவல்ல. 14796
மரணமழையில் நீந்திக்கடந்த நெருப்பாறு. 14797
மருதம் கலாசார விழா சிறப்பு மலர். 2005. 14552
மலாய இலங்கையர் சங்கம்-யாழ்ப்பாணம்: வெள்ளி விழா 1962. 14343
மலைச்சாரலின் தூவல் (நாவல்). 14798
மலைத்தென்றல் சிறப்பு மலர்- 2015. 14363
மலைமகள் கதைகள். 14713
மழலை அமுதம் (கவிதைத் துளிகள்). 14525
மழலை ஓவியங்கள். 14526
மழலையும் மறக்குமா?. 14643
மறுபடியும் நாங்கள். 14799
மனப்பால். 14972
மனப் பூக்கள்(கவிதைத் தொகுதி). 14644
மனமெனும் கூடு: கவிதைத் தொகுப்பு. 14645
மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் பொறிமுறைகள். 14287
மனித விழுமியப் பாடல்கள். 14646
மனுவுக்கு மனு. 14647
மனுஷ்யா. 14714
மாணவர் ஆரோக்கிய மேம்பாடு. 14464
மாணவர் கட்டுரைகள்: தரம் 7-8. 14444
மாணவர்களின் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல். 14355
மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம் எட்டாந் திருமுறை மூலமும் பல ஆராய்ச்சி அகராதிகளும். 14232
மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை. 14233
மாத்து: கலை இலக்கியக் கட்டுரைகள். 14855
மாய மீட்சி. 14828
மாவடியான் திரு: மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேக மலர்-2010. 14168
மாவை சேனாதிராசாவின் மறைக்கப்பட்ட மறுபக்கம். 14973
மாற்றல் காரணிகளும் அட்டவணைகளும் (இலங்கைக் கட்டளை 99: 1975). 14456
மானிடம் வீழ்ந்ததம்மா. 14800
மானுடம் தோற்றிடுமோ?. 14715
மானுடமும் மணிக்கவிதைகளும். 14648
மிகப் பெரும் ஆயுதக் களைவு. 14829
மிகுதியை எங்கு வாசிக்கலாம். 14649
மின்மினிகளால் ஒரு தோரணம். 14871
மீண்டும் ஒரு காதல் கதை (நாவல்). 14801
முக வரிகள்: தமிழ்மொழி மூல பயிற்சிபெற்ற பட்டதாரிகள். 14481
முகிலெனக்கு துகிலாகும்: வடிவழகையன் கவிதைகள். 14650
முகை விடும் மொட்டுக்கள். 14651
முத்திரையிற் பண்டிதமணி: முத்திரை வெளியீட்டு விழா மலர். 14959
முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி அவர்களின் பாடல்கள். 14652
மும்மொழிச் சொற்களஞ்சியம் (தமிழ்/ ஆங்கிலம்/சிங்களம்). 14420
மும்மொழியிலான கலைச்சொற்றொகுதி. 14384
முருகன் கதிர்காமம். 14097
முருகன் கீர்த்தனைகள்: ஆறுமுக வேலவன் துதி. 14234
முருகன் புகழ்மாலை (தோத்திரப் பாடல்களுடன்). 14235

முருகையன் எனும் முடியா நெடும்பகல்: கவிஞர் இ.முருகையன் நினைவு மலர். 14960
முள்ளிவாய்க்கால் பதிவுகள். 14344
மூசாப்பும் ஒரு முழு வெயிலும். 14653
மூதறிஞர் பண்டிதர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களின் திருத்தொண்டு பரவும் மலர். 14908
மூவுலகு (நாவல்). 14802
மூனாவின் நெஞ்சில் நின்றவை. 14021
மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம். 14716
மேல் நீரேந்துப் பரப்பு முகாமைத்துவ திட்டத்திற்கான பண்ணை மண் பாது காப்பு சிபார்சுகள்: பாதுகாப்பு முறை களும் நியமங்களும். 14298
மேலைப்புலோலி நா.கதிரைவேற் பிள்ளையின் சிவக்ஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம். 14078
மேலைப்புலோலி நா.கதிரைவேற் பிள்ளையின் சைவபூஷண சந்திரிகை. 14079
மொட்டப்பனையும் முகமாலைக்காத்தும். 14717
மொழி வேலி கடந்து: நவீன சிங்கள இலக்கியங்கள் பற்றிய ஒரு பார்வை. 14542
மொழிபெயர்க்கப்பட்ட மௌனம். 14654
மொழிபெயர்ப்பு மரபு. 14421
மொழிபெயர்ப்புக் கலை. 14422
மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும். 14423
மொழியா வலிகள் பகுதி 1. 14803
மொழியா வலிகள் பகுதி 2. 14804
மொழியா வலிகள் பகுதி 3. 14805
மொழியா வலிகள் பகுதி 4. 14806
மௌன வலிகளின் வாக்குமூலம். 14718
யக்கடையாவின் வர்மம்: துப்பறியும் நாவல். 14807
யாத்திரை: சமூக ஆய்விற்கான இலங்கைச் சங்கத்தினது ஆய்விதழ். 14260
யாழ். இந்துக் கல்லூரி சிவஞான வைரவர் கோவில் குடமுழுக்கு விழா மலர். 14169
யாழ் மீட்டிய கண்கள் (பயணக் கட்டுரை). 14888
யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 3. 14985
யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் தொல் பொருளியல் மரபுரிமை. 14993
யாழ்ப்பாணத்தின் மன்றாட்டம். 14288
யாழ்ப்பாணப் பகுதியில் காணாமற் போனோர் மீதான விசாரணைக் குழுவின் அறிக்கை. 14289
யோகி (நாவல்). 14808
ரஸ்யாவின் ரஸ்புட்டீன் தீர்க்கதரிசியா? மக்கள் புரட்சிக்கு வித்திட்டவரா? (சரித்திர நாவல்). 14809
ரா.ப.வின் கட்டுரைகள். 14279
ராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை) நூற்றாண்டு விழா சிறப்பு மலர் 1998. 14170
ரிஸானா நபீக்: மனச்சாட்சியின் படுகொலை. 14321
ருது நூல் சாஸ்திரம். 14396
லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் 75ஆவது ஆண்டு பவளவிழா மலர் 1925-2000. 14475
லீலாவிநோதன் முருகன். 14236
லைலா மஜ்னு. 14810
வ.அ.இராசரத்தினத்தின் ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது: நாவலும் கருத்துக்களும். 14872
வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வரலாறும் பிரபந்தங்களும். 14098
வட்டுக்கோட்டை அரங்க மரபு. 14514

வட்டுக்கோட்டை-தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங் கேஸ்வரர் ஆலய கும்பாபிஷேக மலர். 14171
வடவாமுகாக்கினி (நாவல்). 14830
வடிவேல் ஐயா நினைவு மலர்: 2004. 14961
வண்டொன்று இரு மலர்கள்(நாவல்). 14811
வணிகக் கல்வி: இன்றைய வாணிப நடைமுறை. 14387
வணிகக் கல்வி பாடத்திட்டம்: கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (உயர்தரம்): தரம் 12,13. 14388
வணிகத் துளிர் 2002. 14385
வணிகப் புள்ளிவிபரவியல்: மாதிரி எடுப்பும் புள்ளிவிபர அனுமானமும்: க.பொ.த. உயர்தரம். 14389
வணிகவியற் கட்டுரைகள். 14390
வந்தனா. 14719
வப்பு நாய்: சிறுகதைகள், குறுநாவல் தொகுதி. 14720
வரணியின் மரபுரிமைகள்: பாகம் 1. 14986
வரலாறும் சமூகக் கல்வியும்: சர்வதேச அமைப்புக்கள்-2. 14251
வலசைப் பறவைகள். 14812
வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவு மக்களின் வாழ்வும் வளமும். 14987
வலித்திடினும் சலிக்கவில்லை. 14655
வலு: காலாண்டிதழ் வெள்ளி மலர்: 25வது சிறப்பிதழ். 14345
வள்ளுவரின் வழி நடப்போம். 14856
வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு. 14988
வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கருணைமலர்: இராஜகோபுர மணிக் கோபுர மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்-2011. 14172
வாக்குமூலம். 14813
வாப்பாடம்மா. 14656
வாழ்க்கைச் சோலை: பாகம் 1. 14814
வாழ்தல் மீதான வன்முறைகள்: சிறுகதைகள். 14721
வாழ்வியல்: அனுபவ பகிர்வு பாகம் 1. 14857
வாழ்வை காக்கும் தகவல்கள் 2004. 14463
வாழகம், பொருளாதாரம், சமூகம். 14880
வாழத் துடிக்கும் வன்னி: சமூகவியல் கட்டுரைகள். 14280
வாழைச்சேனைப்பிரதேசத்து திருத்தல பஜனைப் பாடல்கள். 14237
வானம்பாடி: போர்க்கால வாழ்வியல் பதிவுகள்-பகுதி 02. 14722
வானம்பாடியும் ரோஜாவும். 14731
விகடனின் விளங்கா விளக்கங்கள். 14879
விசித்திரங்களால் நிறமூட்டடப்பட்ட உலகு. 14657
விஞ்ஞான தொழில்நுட்பவியல் G.C.E.A/L: நீரியல் வளங்கள். 14487
விடியலின் விழுதுகள். 14723
விடைபெறல். 14724
விண்ணில் நிகழ்ந்த விந்தை. 14658
விதை: வானொலியில் விதைத்த நாடகங்கள். 14671
விநாயகசட்டிப் புராணம். 14238
விபச்சாரி 80 ரூபாய். 14725
விபுலாநந்த அடிகளாரின் வாழ்வும் வளமும். 14934
வியத்தகு புராதன விஞ்ஞானிகள்: மாயன்கள்-நாகர்கள். 14881
விரல்சூப்பி. 14659
விரலிசை: ஹார்மோனியம் கற்றலுக்கான வழிகாட்டி நூல். 14503
விலாசம் தேடும் விழுதுகள் ரோஹிங்யா. 14976
விழித்திருங்கள். 14660
விளம்பரம் ஒட்டாதீர். 14661
விஸ்வநாதம்: பவளவிழா மலர் 2001. 14909

வீட்டுக் கிணறு (நாவல்). 14815
வீடு. 14816
வீரகத்தி விநாயகரும் கொல்லங்கலட்டிக் கிராமமும். 14099
வெசாக் சித்திவிலி 1991. 14051
வெசாக் சிரிசர 1999. 14052
வெசாக் சிரிசர 2000. 14053
வெசாக் சிரிசர 2001. 14054
வெசாக் சிரிசர 2002. 14055
வெசாக் சிரிசர 2004. 14056
வெசாக் சிரிசர 2005. 14057
வெசாக் சிரிசர 2008. 14058
வெசாக் சிரிசர 2012. 14059
வெட்டிய வேரில் ஒரு முளை: சிறுகதைகள். 14726
வெண்ணிலா: குறுநாவல். 14817
வெல்லாவெளி வழிபாட்டியலும் அருள்மிகு முத்துமாரியம்மன் திருத்தல வரலாறும். 14100
வெள்ளைச்சேலை: நாவல். 14818
வெளிச்சம்: இலங்கேஷின் சிறுகதைகள். 14727
வெளியே புன்னகை அரசி உள்ளே கண்ணீருக்கு அடிமை. 14662
வெற்றிக்கு வலிகள் தேவை: கவிதைகளும் கதைகளும். 14878
வேப்பமரம் (நாவல்). 14819
வேர்கள்: கவிதைத் தொகுதி. 14663
வேரும் விழுதும். 14820
வேற்றுக் கிரக மனிதர்கள். 14459
வைரவர் வழிபாடு. 14080
ஜீ.சீ.ஈ.(உயர் தரம்) வணிகக் கல்வி வழிகாட்டி-2. 14391
ஜீவநதி ஆடி 2011: உளவியல் சிறப்பிதழ். 14554
ஜீவநதி ஐப்பசி 2011: கே.எஸ்.சிவகுமாரனின் பவளவிழாச் சிறப்பிதழ் 2011. 14555
ஜீவநதி சிறுகதைகள் தொகுதி 1. 14728
ஜீவநதி செங்கை ஆழியான் சிறப்பிதழ். 14962
ஜீவநதி தை 2011: சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு-2011. 14553
ஜீவநதி மார்கழி 2011: இளம் எழுத்தாளர்கள் சிறப்பிதழ். 14556
ஜெப்னா பேக்கரி. 14821
ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜயந்தி மலர்-05.01.2000. 14173
ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிச் செய்த கந்தபுராணம் இரண்டாவது அசுரகாண்டம் மூலமும் உரையும். 14239
ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சிறப்பு மலர். 14174
ஸ்ரீ நகுலாம்பிகை (கீரிமலை) அருட்ஜோதி மலர், 1969. 14175
ஸ்ரீ நாராயணன் தோத்திரம்: கெருட பத்து. 14240
ஸ்ரீ மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் ஆராய்ச்சிப் பேருரை. 14241
ஸ்ரீ முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னநாதஸ்வாமி தேவஸ் தான மஹா கும்பாபிஷேக மலர்-1963. 14176
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சமித்தி: வெள்ளிவிழா மலர் 1995. 14177
ஸ்ரீ ஜகந்நாத பிம்பம். 14963
ஸ்ரீ ஸ்தோத்திர மஞ்சரி. 14242

# ஆசிரியர் வழிகாட்டி


*அக்பர், எம்.எம்.அலி 14688*

*அகளங்கன் 14527*

*அகஸ்தியர் நினைவு மலர் வெளியீட்டுக் குழு 14948*

*அகிலன், பாக்கியநாதன் 14488-90, 14563*

*அசங்க, எம்.வீ.ஜீ. கல்ப 14993*

*அசரீரி* பார்க்க *அபூபக்கர், பதீக்*

*அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம். 14344*

*அதிரூபசிங்கம், வ.ஆ. 14182*

*அந்தோனிப்பிள்ளை, பீ.பீ. 14434, 14525*

*அநாதரட்சகன், மு. 14842*

*அப்பாஸ்,* M.A. *14807*

*அப்புத்துரை, சி. 14060, 14069, 14207*

*அபீர்ராஜன் 14636*

*அபூபக்கர், பதீக் 14576*

*அம்பலவாணர், மறவன்புலோ செல்லம் 14671*

*அம்பிகா பான்சி றேடர்ஸ் 14192*

*அம்பிகைதாசன் 14106*

*அமரசிங்க, சோமவன்ச 14292*

*அமரர் ந.க.மயில்வாகனம் நினைவுக்குழு. 14230*

*அமிர்தஞானம், சி.க. 14879*

*அமிர்தையா, ஏ.ஆர். 14312*

*அரசகரும மொழிகள் திணைக்களம். 14407, 14414-15, 14432, 14439-40*

*அருட்குமரன், செல்வநாயகம் 14314*

*அருணாசல ஆசிரியர், கா. 14083*

*அருணாசலம், சரோஜினிதேவி 14824, 14830*

*அருணாசலம் சுவாமிகள், சி. 14044*

*அருள் சுவாமிநாதன் 14202*

*அருளானந்தம், நீ.பி. 14574, 14808*

*அருளானந்தன், இராஜேந்திரன் டேவிட்* பார்க்க *பூனாகலை அருள்கார்க்கி*

*அருளினியன் 14885*

*அரூஸ், ரா.ப. 14279*

*அல் உதைமின், செய்க் முஹம்மத் பின் ஸாலிஹ் 14243*

*அல்விறட், பி.எஸ். 14512*

*அலி, அமீர் 14623*

*அலி, ஏ.எம்.எம். 14922*

*அலி, மு.இ.உமர் 14656*

*அழகரசன், வே.அந்தனிஜான் 14424*

*அன்ட்ரூ, சிரானி அனுசியா 14248*

*அன்புடீன் 14602*

*அன்புராசா, செ. 14647*

*அனந்தன், கௌரி 14718*

*அனஸ், எம்.எஸ்.எம். 14914*

*அனாதியன்* **பார்க்க** *ஜனாத்தகன், மார்க்*

*அனுசாந்தன், ஏ. 14088*

*அனுராதா 14583*

*அஜந்தகுமார், த. 14526, 14681, 14872, 14877*

*அஜந்தன், கந்தர்மடம் அ. 14645*

*அஸ்ஹர், எம்.ஜே.எம். 14251*

*அஹமட், ஏ.எம்.சாஜித் 14626*

*ஆசிய அபிவிருத்தி வங்கி 14482*

*ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் தர்மபரி பாலன சபை. 14109*

*ஆதம்பாவா,* U.L. *14702*

*ஆப்தீன், சப்னா செய்னுல் 14601*

*ஆரியரத்ன, ஏ.ரி. 14341*

*ஆரூரன், சிவ. 14812*
*ஆரோக்கியதாசன், துரை 14273*
*ஆறுமுக நாவலர் 14430*
*ஆனந்தசங்கரி, வீ. 14973*
*ஆனந்தநடராஜா, மாதினியார்* **பார்க்க**
*ஆனந்தன், கே.எஸ். 14747, 14760*
*ஆனந்தி 14740*
*இ. விஜயேந்திரன்* **பார்க்க** *இராஜேஸ்வரன்,இ.*
*இக்பால், அல்லாமா 14664*
*இக்பால், கே.எம்.எம். 14755*
*இக்பால், சுலைமா சமி 14748*
*இடைக்காடு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை. 14110*
*இத்ரீஸ்,* A.B.M. *14245, 14247, 14277, 14321, 14346, 14511, 14966, 14974*
*இதயச்சந்திரா, எட்வேர்ட் 14516,14668*
*இதயராசன், சி. 14624*
*இதயராஜ், செ.ஜோர்ஜ் 14516*
*இந்திரக் குருக்கள். பால. 14046*
*இந்திரச்செல்வன், தாரணி 14606*
*இந்திரபாலா, கா. 14358*
*இந்திராணி, மு. 14893*
*இந்துமகேஷ் 14799*
*இப்றாஹீம், ஏ.சீ.எம். 14293, 14586, 14633, 14711*
*இம்மானுவேல், பிரிசில்லா சுகந்தி 14385*
*இயோனெஸ்கோ, இயூஜீன் 14672*
*இரகுபரன், க. 14832*
*இரகுவரன், பா. 14528,14669*
*இரண்டாவது உலக இந்து மாநாடு, மன்னார் 14087*
*இரத்தினசபாபதி, செ. 14224*
*இரத்தினசிங்கம்,* R.D. *14278*
*இரத்தினப்பிரகாசம், செ. 14193*
*இரத்தினம், கா.பொ. 14845, 14972*
*இரத்தினவேலோன், புலோலியூர் ஆ. 14870*
*இரமணாகரன், பா. 14531*
*இரவீந்திரன், தளையசிங்கம் 14117*
*இராகி 14776*
*இராசரத்தினம், ரஜிதா 14642*
*இராசரத்தினம், வ.அ. 14664*
*இராதாகிருஷ்ணன், முத்து 14684*
*இராமச்சந்திரன், க. 14228*
*இராமசாமி, கே.வி. 14115*
*இராமநாதன், கலைவாணி 14040*
*இராயப்பு, குருசுமுத்து* **பார்க்க** *கலையார்வன்*
*இராஜநாயகம், முருகேசு* **பார்க்க** *அநாதரட்சகன், மு.*
*இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம், புங்குடுதீவு 14364*
*இராஜேந்திரக் குருக்கள், சு. 14963*
*இராஜேஸ்வரன், இ. 14736*
*இராஜேந்திரன், பெ. 14998*
*இலங்கேஷ் 14727*
*இலங்கை அரசாங்கம். 14328-29, 14333*
*இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம் 14859*
*இலங்கை கட்டளைகள் பணியகம் 14456*
*இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 14301*
*இலங்கை கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளனம் 14302*
*இலங்கை சின்மய மிஷன், கொழும்பு 14108*
*இலங்கை நில அளவைத் திணைக்களம் 14889-90*
*இலங்கை மத்திய வங்கி 14294, 14303, 14484-85, 14306-08*
*இலங்கை மன்றம். 14283*
*இளங்கோவன், பத்மா 14523*
*இளஞ்செழியன், பெ.அ. 14921*
*இளநெஞ்சன் முர்ஷிதீன் 14693*
*இளைஞர் அருள்நெறி மன்றம், திருக்கோணமலை 14139*
*இன்பராஜா, பாலிப்போடி 14135*
*ஈஃபின், செஸ்டர் 14270*

ஈழக் கவி 14933, 14938-39, 14946, 14958
ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம் 14211
ஈழத்துப் பூராடனார் **பார்க்க** செல்வராஜ கோபால், க.தா.
ஈழவாணன் 14550
ஈஸ்வரராஜா, தம்பிராஜா 14768
ஈஸ்வரன், தெ. 14500
உ.நிசார் பார்க்க நிசார், H.L.M.14699
உதயகுமார், சமரபாகு சீனா 14698, 14754
உதயசேகர், வேலு 14330
உதயன், எஸ்.ஏ. 14735
உதவி. நண்பர்கள் 14539
உமாசுத சர்மா, மாதவி 14565
உமாபதி சிவாசாரியார். 14042
உயன்கொட, ஜயதேவ 14274
உலக சைவப் பேரவை, இலங்கைக் கிளை 14089-90
உலக சைவப் பேரவை, கனடா 14130
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்-கனடா 14429
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 14995
உவாணர், சோச்சு தவுண்செென் 14965
உவைஸ், ம.முகம்மது 14296
உள்நாட்டலுவல்கள் அமைச்சு. 14339
எதிர்மன்னசிங்கம், எஸ். 14480
எதிரிசிங்க, சத்திஸ்சந்திர 14350
எம்.சி.சுப்பிரமணியம் நினைவுக் குழு 14912
ஏகாம்பர முதலியார். 14048
ஏகாம்பரநாதன், ச. 14068
ஏகாம்பரம், தினேஷ் 14738
எமில், வைதேகி செல்மர் 14510
ஐ.பீ.சீ. தமிழ். 14017
ஐக்கிய நாட்டுச் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம். 14348
ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் 14463
ஐக்கிய நாடுகள் தகவல் நிலையம். 14322
ஐங்கரன், பொன்னுத்துரை 14389
ஒபயசேகரா, ஆர். 14260
கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் 14190, 14239
கடம்பேஸ்வரன், ம.ந. 14652, 14839
கண்ணதாசன் 14999
கண்ணதாசன், சிறீதேவி 14505
கண்ணதாஸ், நல்லை க. 14501
கண்ணதாஸ், வேலணையூர் என். 14617
கண்ணப்பன், ஆ. **பார்க்க** சாத்தானின் சகோதரன்
கண்ணராசன், கண்ணன் 14843
கணபதிப்பிள்ளை, க. 14214
கணபதிப்பிள்ளை, சி. 14184,14945
கணபதிப்பிள்ளை, நாகராஜா 14980
கணபதிப்பிள்ளை, மா. 14899
கணபதிப்பிள்ளை, மு. 14097, 14199, 14232, 14423
கணபதிப்பிள்ளை, வ. 14101
கணினிப்பித்தன் மேலும் **பார்க்க** நவமோகன், வே.
கணேசமூர்த்தி, கஜானன் 14363
கணேசலிங்கன், செ. 14766, 14769, 14791, 14792, 14815
கதிர்காமநாதன், செ. 14877
கதிர்வேலாயுத சுவாமி கோவில் 14125
கதிரேசன், தர்ஷனி 14385
கதிரைவேற்பிள்ளை, நா. 14078-79
கந்தசாமி, சி. 14036
கந்தசாமி, ரதிதேவி **பார்க்க** தாமரைச் செல்வி
கந்தராஜா, ஆசி. 14689
கந்தையா, ஆ. 14862
கந்தையா, சியாமளா 14473
கந்தையா, லதா **பார்க்க** வன்னிமகள் எஸ். கே.சஞ்சிகா
கந்தையா, வி.சீ. 14095
கந்தையாபிள்ளை, ந.சி. 14261, 14975

கபிலன், வ. 14340
கமலநாதன், சா.இ. 14954
கமலநாதன், சி.கா. 14986
கமலேஸ்வரன், குலசேகரம் 14638
கமால், திக்குவல்லை **பார்க்க** திக்குவல்லை கமால்
கமால், முகம்மது ஜெலால்தீன் முகம்மது **பார்க்க** திக்குவல்லை கமால்
கர்ணன், யோ. 14764
கரவை மு.தயாளன் 14641, 14873
கராமத், எஸ்.ஏ.சீ.எம். 14262
கருணாகரன் 14874
கருணாகரன், வே.சு. 14851
கருணாநிதி, மா. 14270,14310
கருணானந்தராஜா, எஸ்.14658,14715
கருணேந்திரா, ஜோ. 14263
கருப்பு, க. 14546
கல்தேரா, ஸ்ரீலால் 14886
கல்வளை சேயோன், கு. 14101
கல்வி வெளியீட்டுத்திணைக்களம். 14250, 14384, 14460, 14543, 14882
கலந்தர் லெவ்வை, பீ.எம். **பார்க்க** அன்புடீன்
கலப்பதி, சுனிலா 14925
கலாமணி, குயீன் ஜெஸிலி 14944
கலாமணி, த. 14866
கலாமதி, த. 14864
கலாவாணி, செல்லத்துரை 14875
கலையரசி, ம. 14595
கலையார்வன் 14818-19
கவிதாலட்சுமி 14603
களுவாஞ்சிக்குடி சைவ மகாசபை. 14118
கற்பகம் யசோதர 14589
கனகசபாபதி, எஸ்.பி. 14984
கனகசபாபதி, பொ. 14848
கனகசபாபதி ஐயர், வே. 14041
கனகசபை, இலங்கையர் 14910
கனகசபை, பொன்.அ. 14196
கனகரத்தினம், குரும்பசிட்டி இரா. 14007
கனகரத்தினம், த. 14053-59
கனகரத்தினம், பவளராணி 14007
கனகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம், வட்டுக்கோட்டை 14171
கனகேஸ்வரன், ப. 14659, 14661
கனி-விமலநாதன் 14459
கஜன், ரோசி 14683
கஜேந்திரா, அன்பழகி 14564, 14580
காங்கேயன் 14643
காசிநாதன், தம்பிப்பிள்ளை 14092
காசிலிங்கம், அற்புதராணி **பார்க்க** மலரன்னை
காண்டீபன், வானதி 14441
காணாமற்போனோர் சம்பந்தமான விசாரணைக்குழு 14289
காத்தான்குடி பாத்திமா 14622
காதர் லெப்பை, அப்துல் 14623
காந்தளகம். 14073
காந்தி, இரா. 14997
கார்த்திக், சுபா 14902
கார்த்திகேசு, சி. 14223
கார்மேல் பாத்திமாக் கல்லூரி, கல்முனை 14356
கிரிதரன், வ.ந. 14584,14733
கிருட்டினபிள்ளை, க. 14964
கிருபாகரன், இணுவில் ஆர்.எம். 14742
கிருபாகரன், த. 14910
கிருபானந்தன், சா.பி. 14050
கிருஷ்ணகுமார், சோமேசசுந்தரி 14359
கிருஷ்ணபிள்ளை, இரா. **பார்க்க** இராகி
கிருஷ்ணமூர்த்தி, சிவா 14883
கிருஷ்ணராசா, சோ. 14360
கிருஷ்ணராசா, தவபாக்கியம் 14788
கிருஷ்ணன், எஸ்.பி. 14685
கிளாரி சீமாஸ் 14309
கிறிஸ்ரியன், மா.கி. 14971
கிறுக்கி ஆதிரா 14575

கீதபொன்கலன், எஸ். 14266
கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானம் 14905
கீல், சிரில் ஏ. 14461
குகதாசன், சுமதி 14581
குகதாஸ், T. 14481
குகனேந்திரன் 14739
குகபாலன், கார்த்திகேசு14360
குஞ்சிதபாதக் குருக்கள், சி. 14229
குணசேகரம், கே.வி. 14226
குணதிலக்க, கிஹான் 14290
குணபாலசிங்கம், நித்தியலட்சுமி 14930
குணரட்ண, பத்மா எஸ். 14465
குணரத்னம், பிரதீப் **பார்க்க** யதார்த்தன்
குணராசா, க. **பார்க்க** செங்கை ஆழியான்
குணேஸ்வரன், சு. 14403,14562
குந்தேரா, மிலான் 14828
கும்பழாவளைப் பிள்ளையார் (சந்திரசேகரப் பிள்ளையார்) ஆலயம், 14105,14179
குமரன், கணேசலிங்கன் 14253-54
குமரிவேந்தன், நா.வை. 14937
குமாரசாமி, கல்வயல் வே. 14646
குமாரசாமி, சீமாட்டிதேவி 14066
குமாரசாமி, செல்லையா 14524,14534
குமாரசாமி சர்மா 14943
குமாரசுவாமி, ஜெயகுமார் **பார்க்க** பாரதிபாலன்
குமாரசுவாமிக் குருக்கள், ச. 14086
குமாரசுவாமிப்பிள்ளை, த. 14187
குமாரசுவாமிப் புலவர், வ. 14548
குமாரதீபன் **பார்க்க** தென்பொலிகை குமாரதீபன்
குமாரதேவன் நினைவுக் குழு. 14896
குர்ஷித், ஏ.எம். 14657
குரானா, றியாஸ் 14649
குரியன், றேஷல் 14265
குருசுவாமி, கு. 14116
குருப்பு, ராஜா 14052-58
குருபாதம், எஸ். 14347
குருபாதம், செல்வத்துரை 14881
குரூஸ், அன்பழகன் 14955
குரே, கிறிஸ்டி 14275
குலரத்தினம், க.சி. 14081
குலேந்திரன், ஞானா 14502
குஹானந்த சர்மா, சோ. 14062, 14191
கெங்காதரக் குருக்கள், இ. 14159
கேதாரபிள்ளை, ந.மா. 14201, 14216, 14221, 14240
கொத்தலாவலை, ஜஸ்டின் 14312
கொல்லுரே, இஷானி 14335
கொழும்பு இந்துக் கல்லூரி, 14371
கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் 14170
கொழும்பு தொண்டர் வித்தியாலயம் 14372
கொழும்பு விவேகானந்த சபை. 14085
கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு. 14014-16
கொள்கை திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு 14486
கோப்பாய் சிவம் **பார்க்க** சிவானந்த சர்மா, ப.
கோபாலகிருஷ்ண சர்மா, பால. 14132
கோபாலகிருஷ்ணன், இரா. 14040
கோபாலகிருஷ்ணன், த. 14955
கோபாலசிங்கம், சீ. பார்க்க வெல்லவூர்க் கோபால்
கோபாலபிள்ளை, க. 14676
கோபிநாத், தில்லைநாதன் 14352
கோரளகே, சுனில் பண்டார 14993
கௌசி பார்க்க சிவபாலன், சந்திரகௌரி
கௌதமன், பாலச்சந்திரன் 14144
கௌரீஸ்வரன், து. 14263
சக்திவேல், P. 14002
சங்கர், இ. 14169
சங்கரநமச்சிவாயப் புலவர் 14430
சங்கரப்பிள்ளை, வி. 14074

சச்சிதானந்தம், கார்த்திகேசு **பார்க்க** ஆனந்தன், கே.எஸ்.
சச்சிதானந்தம், சதாசிவம் 14425, 14427, 14795
சச்சிதானந்தன், க. 14673
சசிதரக் குருக்கள், இராம. 14208
சட்ட சமுதாய அறநிலையம் 14282
சட்டநாதன், க. 14616, 14745
சடகோபன், இரா. 14532
சண்முகசுந்தரன், சோ. 14183
சண்முகதாசன், என். 14916
சண்முகதாசன், நா. 14300
சண்முகதாஸ், அ. 14402, 14412
சண்முகதாஸ், மனோன்மணி 14854
சண்முகநாதன், வேலுப்பிள்ளை 14714
சண்முகம், நவறாஜினி 14098
சண்முகலிங்கம், க. 14274
சண்முகலிங்கன், என். 14928
சத்தியநாதன், பொ. 14665
சதாசிவம், த. 14204
சதாசிவம்பிள்ளை, சி.இ. 14205
சந்திரகலா, வேலு **பார்க்க** வெற்றிச்செல்வி
சந்திரகாந்தி, வீ.என். 14857
சந்திரசேகரம், ஜெயக்குமரன் பார்க்க ஜேகே
சந்திரசேகரன், சோ. 14270
சந்திரசேகரன், நந்தவனம் 14706
சந்திரபோஸ், கண.சுபாஷ் 14920
சந்திரா, நிழல் எட்வேட் **பார்க்க** இதயச்சந்திரா, எட்வேர்ட்
சபா, வட வரணி சி. 14631
சபாரத்தினம், ஈ. 14343
சபாரத்தினம், த. 14267
சபாஜிதன், க. 14172
சம்சுதீன், ஜனூஸ் **பார்க்க** ஜனூஸ், எஸ்.
சமரசேகர, சாறுக்க 14331
சமரநாயக்க, ரஞ்சித் 14051
சமூக சிற்பிகள் 14718
சயசூரியா, எப்.ஆர். 14296
சர்மிலா வினோதினி 14717
சர்வேஸ்வரன், கந்தையா 14272
சற்குணநாதன், சின்னத்துரை 14004
சற்குணராஜா, ஏ.எஸ். 14611
சற்குணேஸ்வரன், க. 14031
சனாதனன், தா. 14255-59,14488-90
சனீர், எம்.ஜே.எம். 14268
சாத்தானின் சகோதரன் 14585
சாந்த கிளேயார் கல்லூரி, கொழும்பு 14370
சாந்தகுமார், கணேசன் 14369
சாந்தகுமாரன், கு. 14365
சாந்தன், ஐயாத்துரை 14840
சாம்பசிவ சர்மா, இராஜ.சிவ. 14241
சாரங்கன், வேல். 14654
சாலி, காத்தநகர் முகைதீன் 14721
சிங்கராயர், மு. 14982
சித்தாந்தன் 14874
சிபானி, ராஷிப் 14355
சில்வா, கே.டியுடர் 14260
சில்வா, டபிள்யூ. ஏ. 14729
சில்வா, ரில்வின் 14292
சிவகுமார், ஆதிலட்சுமி 14789
சிவகுமாரன், கே.எஸ். 14517,14682
சிவகுருநாதன், க. 14163
சிவகுருநாதன், லோஜனா14473
சிவச்சந்திரன், இரா. 14884
சிவசண்முகராஜா, எஸ்.எல். 14467
சிவசண்முகராஜா, சே. 14474
சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார், நா. 14238
சிவசுப்பிரமணியம், தி. 14167
சிவசுப்பிரமணியம், மனோ 14883
சிவஞான சுவாமிகள் 14430
சிவஞானசீலன், அ. 14877
சிவஞானம், சரோஜினிதேவி 14212
சிவத்தம்பி, கார்த்திகேசு 14353
சிவநேசச்செல்வன், ஆ. 14833

சிவநேசராஜா, அ. 14386
சிவநேசன், முருகுப்பிள்ளை 14837
சிவபாதசுந்தரம், சு. 14042
சிவபாதசுந்தரம், நா.14836
சிவபாலசிங்கம், சிவதாஸ் **பார்க்க** சோதியா
சிவபாலன், சந்திரகௌரி 14850
சிவமகிழி 14133
சிவரமணி 14619
சிவராசசிங்கம், வ. 14214
சிவராசா, அ. 14271
சிவராமகிருஷ்ண சர்மா, பா. 14195
சிவராஜா, சு. 14520
சிவராஜா, மலைஅரசி 14940
சிவலிங்கம், புஷ்பராணி 14898
சிவலிங்கம், மு. 14780
சிவலிங்கம், மூ. 14209, 14900
சிவலிங்கராஜா, எஸ். 14360
சிவஸ்வாமி ஐயர் 14218
சிவானந்த சர்மா, ப. 14070
சிவானந்தபாலன், வி. 14387
சிவானந்தமூர்த்தி, கே.14359
சிவானந்தராஜா, சி. 14373
சிவானந்தராஜா, எஸ். 14941, 14987
சிவானந்தன், க. 14159
சிற்றம்பல நாடிகள் 14196
சிறில், சொலமன் சூ. 14273
சிறீஞானேஸ்வரன், இரா. **பார்க்க** மாயன்
சிறீரங்கன், சி. 14694
சிறீவர்த்தனா, P.P.G.L. 14458
சின்னத்தம்பி, அ. 14461
சின்னத்தம்பி, எம். 14260
சின்னத்துரை, ச.த. 14116
சின்னராஜன், க. 14697
சீதரன், ராணி 14026
சுகுமார், பாலசிங்கம் 14515, 14591, 14620, 14952
சுகுமாரன் 14637
சுசீந்திரராஜா, எஸ். 14402,14436,14442
சுதாகரன், செல்வராஜா மேலும் **பார்க்க** வயலூரான்
சுந்தரமூர்த்தி ஐயர், து. 14175
சுந்தரலிங்க தேசிகர், மு. 14138
சுப்பிரமணிய சாஸ்திரிகள், ச. 14190, 14239, 14406
சுப்பிரமணியம், அ.க. 14422
சுப்பிரமணியம், கே.கே. 14908
சுப்பிரமணியம், சர்மிளா 14718
சுப்பிரமணியம், வள்ளியம்மை 14878
சுப்பிரமணியன், நா. 14188, 14284, 14408
சுபாஷ், எஸ். 14366
சுமன், பாஸ்கரன் 14398
சுரேந்திரன், ந. 14826
சுரேஷ், சிவகாசி 14902
சுரேஷ், வனிதா 14513
சுவாமி கெங்காதரானந்தா. 14045
சுவாமி கோகுலானந்தா 14061
சுவாமிநாதன், அருள் 14235
சுவாமிநாதன், வேல் 14235
சுனில் சாந்த, M.H.M. 14284
சுஜந்தன், இராஜசெல்வி 14521
சூசை, ஏ.எஸ்.14359
செகராசசிங்கம் **பார்க்க** தேவசகாயம்பிள்ளை, ஆசீர்வாதம்
செங்கதிரோன் **பார்க்க** கோபாலகிருஷ்ணன், த.
செங்கை ஆழியான் 14710,14783-84
செந்திநாதையர், ஸ்ரீ காசிவாசி சி. 14064
செபரத்தினம், க. 14895, 14934
செல்லத்துரை, சு. 14518, 14670
செல்லையா, வ. 14906
செல்லையாபிள்ளை, மா.வ. 14034
செல்வகுமார், தங்கராசா 14703
செல்வகுமாரன், ஆழ்வாப்பிள்ளை தெட்சணாமூர்த்தி **பார்க்க** மூனா
செல்வதாஸ், கே.எம். 14572

செல்வநாயகம், அருள் 14794
செல்வநாயகம், இ. 14391,14989
செல்வநாயகம், விக்னேஸ்வரி 14441
செல்வமனோகரன், தி. 14078-79, 14231, 14853
செல்வராசா, காரை 14437
செல்வராஜகோபால், க.தா. 14418-19, 14668, 14831, 14861, 14895, 14984
செல்வராஜகோபால், திருமதி பி.ப. 14418-19
செல்வராஜன், கே. 14667
செல்வராஜா, எம்.ரி. 14809
செல்வராஜா, என். 14006
செல்வன் **பார்க்க** தர்மதாஸ், எஸ்.
சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் 14390
செனோவத் எரிக், 14270
சேந்தன் **பார்க்க** கார்த்திகேசு, சி.
சேரன் 14557,14614
சேனாரட்ண, பி.ஏ. 14334
சைவப் புலவர் பண்டிதர் இ.வடிவேல் மலர்க் குழு 14961
சொலமன், எஸ்ரா 14311
சோதியா 14578
சோமகாந்தன், நா. 14156
சோமசுந்தரம், குமாரசுவாமி 14035
சோமசுந்தரம், தயா 14022
சோமசேகரம், கனகலிங்கம் 14168
சோமதிலக, மகிந்த 14967
சோமாஸ்கந்த சர்மா, ச. 14397
சோமாஸ்கந்தர், வை. 14093
சோழன் 14913
சௌந்தர், தங்கவடிவேல் 14499
சௌந்தரராஜன் சர்மா, கணேசையர் 14107
ஞானசேகரன், தி. 14020, 14749, 14953
ஞானதயாளன், ஞா. 14494
ஞானேஸ்வரன், அன்னபரிபூரணம் 14099
டயஸ், சிட்னி மார்க்கஸ் 14262
டயஸ், மாலினீ 14993
டயஸ், ஜோர்ஜ் 14291
டயனா குமாரி 14410
டீ.எஸ். சேனநாயக்கா கல்லூரி, கொழும்பு 14378
த சில்வா, சித்ரா றஞ்சன் 14276
தங்கராசா, இளையதம்பி 14774-75
தங்கவடிவேலு ப. 14172
தபேந்திரன், வேதநாயகம் 14985
தம்பிராஜா, கற்பகன் 14768
தமிழ் உதயா 14559, 14566, 14577
தமிழ் வளர்ச்சிக் கழகம். 14417
தமிழ்நேசன் அடிகள், அருட்திரு 14416
தயாபரன், மைதிலி 14841
தயாளன், ப. 14874
தயானந்த, கே. 14251
தர்மகுலசிங்கம், இரா. 14323
தர்மசேகரம், க. 14345
தர்மதாஸ், எஸ். 14496
தர்மராஜா, நா. பார்க்க அகளங்கன்
தர்மலிங்கம், லோஷினி 14376
தவச்செல்வன், சு. 14604
தவபாலச்சந்திரன் கா. 14700
தவபாலன், கா. 14700
தவரத்தினம், திருச்செல்வம் 14038, 14049, 14075, 14080, 14225, 14233, 14304, 14487
தவராஜா, சுகுணலதா 14357
தனராஜ், டி. 14270,14311
தாட்சாயணி 14687
தாமரைச் செல்வி 14744
திக்குவல்லை கமால் 14729, 14750, 14816, 14822, 14827
திசாநாயக்க, ஜே.பீ. 14411
தியாகலிங்கம், இ. 14709, 14720, 14734, 14743, 14753, 14759, 14765, 14771, 14778, 14782, 14793, 14800, 14803-06

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை, மன்னார் *14137*
திருச்செந்திநாதன், சிதம்பரபாரதி *14724*
திருச்செல்வம், எஸ்.*14009-11*
திருச்செல்வம், என்.கே.எஸ். *14071, 14076-77, 14978, 14991*
திருஞானசம்பந்தபிள்ளை, ம.வே. *14231*
திருநாவுக்கரசு சிவபாக்கியம் பவளவிழா குழு *14981*
திருநாவுக்கரசு, செ. *14644*
திருநீலகண்டன், வே. *14210*
திருமாறக் குருக்கள், இ. *14158*
தில்லைநடராஜா, உடுவை எஸ். *14540-41*
தில்லைநடேசன், ச. *14514*
தில்லைநாதன், எஸ். *14018, 14436, 14442*
தில்லைநாதன், பிரதீபா கனகா- மேலும் பார்க்க கற்பகம் யசோதர
திலகேஸ்வரி, சி. *14469*
தினகரன் மலர்க் குழு *14551*
தினகரன், வே. *14012*
திஸ்ஸகுமார, ஆனந்த *14488-90*
துசியந்தன், து. *14497*
துருவன் **பார்க்க** பரராஜசிங்கம், க.
துரைசாமி, மு. *14350,14825*
துரைசிங்கம், செ. *14969*
துரைசிங்கம், த. *14438, 14444*
துரைராசசிங்கம், கி. *14317*
துரைராசா, த. *14904*
துலாஞ்சனன், வி. *14134*
துவாரகன் **பார்க்க** சு.குணேஸ்வரன்
துஷ்யந்தன், ம. *14342*
தெணியான் *14802*
தெய்வேந்திர ஐயர், விசாகரத்தின ஐயர் *14174*
தெல்லிப்பழையூர் சிதம்பரபாரதி **பார்க்க** திருச்செந்திநாதன், சிதம்பரபாரதி
தென்பொலிகை குமாரதீபன் *14567*
தேசிய கல்வி நிறுவகம், மஹரகம *14039, 14082, 14379-83, 14388, 14409, 14420, 14445-55, 14478, 14506-07*
தேசிய கலை இலக்கியப் பேரவை *14950,14960*
தேவகடாட்சம், கனகசபை *14918*
தேவகஜானன், லக்சனா *14374*
தேவகாந்தன் *14756-57, 14773, 14849, 14852*
தேவசகாயம்பிள்ளை, ஆசீர்வாதம் *14401*
தேவதாஸ், தம்பிஐயா *14547*
தேவலோகேஸ்வரக் குருக்கள், துன்னையூர் ராம். *14142*
தேவா *14823,14915,14925*
தொல்புரக்கிழார் *14836*
தோழர் சின்னத்தம்பி சண்முகநாதன் குடும்பத்தினர் *14919*
நடராசன், நவாலியூர் சோ. *14537,14949*
நடராசா, சி. *14141*
நடராசா, செ. *14544*
நடராசா, பிரான்சிஸ் சேவியர் செல்லையா **பார்க்க** நடராஜா, எப்.எக்ஸ்.சி.
நடராசா, மட்டுவில் ஆ. *14067*
நடராஜா, எப்.எக்ஸ்.சி. *14421*
நடராஜா, கல்யாணி *14316*
நடராஜா, செ.*14167*
நடேசன், என்.எஸ். **பார்க்க** நடேசன்,நொயல்
நடேசன், நொயல் *14761*
நந்தகுமார், சி. *14977*
நந்தகுமாரன், செல்வ அம்பிகை *14854*
நம்பி, வீ.வ. *14130*
நல்லதம்பி, நா. *14163*
நல்லதம்பி, மு. *14652*
நவநீத கிருஷ்ண பாரதியார், க.சு. *14241, 14431*
நவமோகன், வே. *14003, 14005*
நவரத்தினம், உ.*14251,14491, 14495*
நவாஸ், ஏ.எஸ்.எம். *14690*

நவாஸ்தீன், ப.மு. 14351, 14355
நவாஷ், ஏ.எச்.எம். **பார்க்க** ஈழக் கவி
நற்குணதயாளன், மு. **பார்க்க** கரவை மு.தயாளன்
நஹியா, ஏ.எம். 14926
நாகரட்ணம், ஆர். 14343
நாகலிங்கம், ஏ. 14343
நாகூர் கனி, எஸ்.ஐ. 14354
நாகேந்திரன், திருமதி ஆனந்தராணி **பார்க்க** நெல்லை லதாங்கி
நாகேஸ்வரன், கனகசபாபதி 14155, 14200, 14846
நாகையா, த. 14096
நாயக்ககோரராள, எச்.பி. 14298
நிசார், H.L.M. 14699
நித்தியானந்தம், வி. 14253-54
நித்தியானந்தன் 14546
நிதி அமைச்சு 14482
நிர்மலவாசன், சு. 14263
நீதி அமைச்சு 14313, 14324-25
நீதிராஜா குடும்பத்தினர் 14935-36
நீர்வேலி கந்தசுவாமி கோவில் பரிபாலன சபை 14189
நீர்வை பொன்னையன் 14719
நீல், எறிக் 14461
நுஃமான், M.A. 14402
நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம் 14931
நெடுந்தீவு முகிலன் 14598, 14662
நெல்லை லதாங்கி 14568, 14660
நேசரெட்ணம், அருட்திரு பாவிலு கிறிஸ்து **பார்க்க** தமிழ்நேசன் அடிகள்
நோபேட், எஸ்.அன்ரனி 14270, 14310-11,
நோர்த், டேவிட் 14299
நௌஷாத், எம்.எம். 14696
பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம், வவுனியா 14128
பகீரதன், அழ. 14560,14571
பசுபதி, வில்வம் 14680
பஞ்சாட்சர சர்மா, ச. 14901
பஞ்சாட்சரம், ச.வே. 14197, 14227, 14639
பஞ்சாட்சரம், த.ந. 14963
பண்டத்தரிப்பான்புலம் சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரப் பெருமான் ஆலயம். 14121
பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை 14959
பத்மநாதன், கா. 14965
பத்மநாதன், சோ. 14853
பத்மநாதன், தர்மினி பார்க்க யாழ். தர்மினி பத்மநாதன்
பத்மநாபன், ச. 14238
பத்மபாரதி **பார்க்க** இளங்கோவன், பத்மா
பத்மானந்தன், கந்தையா 14072, 14203, 14561, 14587-88, 14600, 14679, 14847
பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி 14361,14368
பரணீதரன், கலாமணி 14553-56, 14728, 14951, 14962
பரந்தாமன், வீ. 14413
பரமேசுவரி, பா. 14545
பரமேஸ்வரன், நிரோஜினி **பார்க்க** கிறுக்கி ஆதிரா
பரராசசிங்கம், த. 14983
பரராஜசிங்கம், க. 14710
பரீத், ஸக்கிய்யா ஸித்தீக் 14723
பன்மொழிப் புலவர் தம்பு கனகரத்தினம் நினைவுக் குழு 14956
பன்னா(ரஹ்), ஹஸனுல் 14244
பாக்கியம், பொன். 14932
பாசின், கம்லா 14264
பார்த்திபன் 14785
பாரதி, ஆர். 14019
பாரதிபாலன் 14674
பாலகிருஷ்ணன், எம். 14538
பாலச்சந்திர சர்மா, என்.கே. 14386
பாலசிங்கம், லியோநிஷா 14613

பாலசுந்தரம், சோதிநாயகி 14441
பாலசுப்பிரமணியம், செல்வி பாலேஸ்வரி **பார்க்க** பாலேஸ்வரி, ந.
பாலமுருகன், எஸ்.பி. 14621
பாலேஸ்வரி, ந. 14550, 14767
பியதிகம, நெவில் 14059
பிரகாஷ், உமாச்சந்திரா 14394
பிரதாபன், கி. 14134
பிரதீபன், நல்லசாமி **பார்க்க** மட்டுநகர் ராகுல் நாயுடு
பிரதீபன், வீ. 14522, 14989
பிரதீபா, பி. 14471
பிரபாகரன், எஸ்.கே. 14483
பிரபாகரன், பொன். 14400
பிரபு, நிதனி 14683
பிரமிள் 14637
பிராங், ஜோன் பி. 14270
பிரேமதாச, ஆர். 14275
பிரோஸ்கான், ஜ. 14590
பிறேமா எழில் 14579
பீரிஸ், ஆர்.பீ. 14891
பீற்றர், அன்ரனி **பார்க்க** அபீர்ராஜன்
புகழேந்தி, கார்த்திக் 14902
புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு சர்வோதய நற்பணி ஒன்றியம், 14013
புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலை 14377
புஞ்சிஹேவா, எஸ்.ஜி. 14288
புண்ணியமூர்த்தி, பெ. 14237
புத்தொளி சிவபாதம் மலர்க் குழு 14957
புவனேந்திரன், பொன். 14143
புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில், 14161
புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக சேவை அமைச்சு. 14332
புஷ்பரட்ணம், பரமு. 14992
புஷ்பராஜ், சிவலிங்கம் 14336
புஷ்பராஜன், மு. 14493
பூண்டுலோயா இரா.மணிசேகரன் **பார்க்க** மணிசேகரன், இராமையா
பூனாகலை அருள்கார்க்கி 14727
பூனாகலை நித்தியஜோதி 14814
பெர்னாண்டோ, டபிள்யூ. ஸ்டனிஸ்லாவுஸ் 14312
பெர்னி, ஆதர் 14295
பெரியசாமி, சீரங்கன் 14298, 14477
பெரியதம்பிப்பிள்ளை, ஏ. 14037
பெரேரா, அனோலி 14488-90
பெரேரா, கசங்க 14255-59
பெரேரா, கமல் 14822
பெனடிக்ற் பாலன், யோ. 14762
பேரம்பலம், கந்தையா 14988
பேரம்பலம், வே.14458
பேராசிரியர் செ.யோகராசா பணிநயப்பு விழாச்சபை 14929
பேராதனை இந்து மாணவர் சங்கம், 14102
பொலிகையூர் ரேகா 14627
பொன்சேக்கா, எரிக்கு L. 14458
பொன்மீரா, எம். 14546
பொன்னம்பலபிள்ளை, ந.ச. 14231
பொன்னம்பலம், சி. 14094
பொன்னம்பலம், பிரேமினி **பார்க்க** தாட்சாயணி
பொன்னம்பலம், மு. 14829
பொன்னுத்துரை, எஸ். 14865
பொன்னுத்துரை, க. 14155
போட், சீ. டரில் 14880
போயகொட, கொமடோர் அஜித் 14925
போரதீவுப் பற்று பிரதேசச் செயலகம் 14552
போல், லயனல் திலகநாயகம் 14612
மகவம் கலைவட்டம் 14897
மகா சிவராத்திரி மட பரிபாலன சபை, மன்னார் 14219
மகாதேவ ஆச்சிரமம் 14198
மகாதேவன், A. 14457

மகாதேவா, இந்திரா 14965
மகாதேவா, ப.க. 14990
மகேந்திரராசா மேலும் **பார்க்க** குமரி வேந்தன், நா.வை. 14937
மகேந்திரன், இ. 14084
மகேந்திரன், இரா. 14879
மகேந்திரன், பிளன்டினா 14248
மகேந்திரன், கோகிலா 14024
மகேஸ்வரன், இ. 14104
மகேஸ்வரன், சின்னையா **பார்க்க** இந்து மகேஷ்
மட்டுநகர் ராகுல் நாயுடு 14023
மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் 14162
மணி, பெ.சு. 14061,15000
மணிசேகரன், இராமையா 14648
மணிவண்ணன், சோதீ 14338
மதியழகன், வே. 14375
மதீசன், சி. 14122
மயில்வாகனம், மங்கையர்க்கரசி 14178
மயூரநாதன், பாமதி 14234, 14236, 14597
மயூரரூபன், ந. 14894
மரியற்று, சேர். ஜே.ஏ.ஆர். 14964
மருதமுத்து, தானா 14605
மருதமைந்தன் 14726
மலர்ச்செல்வன், த. 14508, 14855
மலரன்பன் 14786
மலரன்னை 14758, 14787, 14798
மலாயாப் பல்கலைக்கழகம் 14428
மலேயன் மணியம் பார்க்க சோழன்
மலைமகள் 14713
மனசூர், அட்டாளைச்சேனை எஸ்.எல். 14701, 14868, 14976
மனசூர், எஸ்.எம். 14243
மன்மதராஜன், வீ. 14365
மனிதவள அபிவிருத்தி நிலையம் 14476, 14482
மனோகரன், துரை. 14166
மனோகரன், மு. 14399
மனோரஞ்சிதமலர், எம். 14471
மனோன்மணி, கே. 14472
மஸ்இம்புள, மஹிந்த பிரசாத் 14825
மஹாகவி 14550
மாட்டின், சி.என்றி கே. 14965
மாணிக்கவாசகம், பொன்னையா 14280
மாணிக்கவாசகர் 14194
மாதவன், நாகரட்ணம் 14498
மாயன் 14607
மாவையூர்க் கவி **பார்க்க** இரமணாகரன், பா.
மாற்றுக் கல்வி நிலையம் 14269
மான்கோட்டே, கே.என். 14477
மீர்சா, ஹிதாயத்துல்லாஹ் 14779
மீராகுகன் 14635
முகில்நிலா 14632
முகில்வண்ணன் **பார்க்க** சண்முகநாதன், வேலுப்பிள்ளை
முகையுதீன் குருபாவா, ஷேக் 14246
முத்துத்தம்பி, இ. 14326-27
முத்துராஜா, க. 14582
முத்துலிங்கம், அ. 14691
முத்தெட்டுவேகம, சரத் 14281
முத்தையா, நா. 14112
முபாரக், எம்.எஸ். 14924
முர்ஷிதீன், இளநெஞ்சன் **பார்க்க** இளநெஞ்சன் முர்ஷிதீன்
முரளிதரன், இ.சு. 14572, 14596, 14628, 14630
முரளிதரன், க. 14367
முரளிதரன், நயினாமலை 14336
முருகதாஸ், அம்மன்கிளி 14426
முருகவேல், வாசு 14821
முஸ்தபா, வெலிவிட ஏ.சீ.ஜரீனா 14737
முஸ்ரிபா, முல்லை 14871
முஸம்மில், M.I.M. 14686

முஹம்மட், பாத்திமா பார்க்க காத்தான்குடி பாத்திமா
மூர், டி.எசுகின் 14965
மூனா 14021
மெலோன், S.H. 14027
மெற்றாஸ்மயில், செல்லையா 14401, 14942
மெனிகே, அனுலா விஜேரத்ன 14830
மேமன்கவி 14542,14869
மேல் நீரேந்துப் பரப்பு முகாமைத்துவத் திட்டம் 14297-98
மொழிவாணன் 14770,14790
மொனகன், A.J. 14027
மோகனதாஸ், செ. 14091
மோசேஸ், எஸ். 14838
மௌதூதி, மௌலானா 14244
மௌனாஷ்ரம் ட்ரஸ்ட் 14206
யதார்த்தன் 14716
யாழ். தர்மினி பத்மநாதன் 14725
யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் 14043
யாழ்ப்பாணம், இராசலிங்கம் அன்னபூரணம் ஞாபகார்த்த வெளியீடு 14029
யாழ்ப்பாணம் தெய்வானை அம்மையார் நினைவு வெளியீடு 14028
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை 14462
யோகநாதன், செ. 14530, 14535, 14772, 14820
யோகராஜா, எஸ்.ஜே.14410, 14433, 14443, 14832
யோகேந்திரநாதன், நா. 14797
யோகேந்திரன், எம். 14367
யோகேந்திரன், யோகா 14677,14801
யோதிலிங்கம், சி.அ. 14968
ரதீஸ், பரா. 14103
ரமேஷ்சங்கர், இரா. 14367
ரவீந்திரகுமார், க. 14126-27
ரவீந்திரன், சோ. 14103
ரவீந்திரன், முருகேசு 14863
ரவீந்திரன், வானதி 14066
ரஜிதா, சுதாகரன் 14340
ரஜிந்தன், பாலசுந்தரம் பார்க்க வேலணையூர் ரஜிந்தன்
ரஹ்மான், எம்.ஏ. 14030
ராதாகிருஷ்ணன், எஸ். 14032
ராதாகிருஷ்ணன், கி. 14996
ராஜகோபால், அமிர்தா 14751
ரானி, கொயிச்சி 14310
ராஜ்குமார், யோ.யோண்சன் 14510
ராஜகவி ராஹில் 14618, 14634, 14888
ராஜகோபால், இரா. 14155
ராஜமணி, என். 14047
ராஸீக், எம்.ரஸ்லான் 14651
ரேகா, பொலிகையூர் பார்க்க பொலிகையூர் ரேகா
ரொட்றீகஸ், றெக்ஸ் 14295
லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம் 14475
லண்டன் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம். 14119
லத்தீப், எம்.ஐ.எம்.அப்துல் 14887
லீசாகோயிஸ், கிஷாலி பின்ரோ ஜயவர்த்தன, 14282
லெட்சுமணன், அ. 14012
லெப்பை, அப்துல் காதர் 14675
லோகநாதன், தி. 14001
வசந்த், மாலினி 14777
வட்டக்கச்சி வினோத். 14599
வடஇலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 14834-35
வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் 14165
வடகோவை வரதராஜன் 14704
வடிவழகையன் 14650
வடிவேல், இ. 14138
வடிவேல், மா.14362

வடிவேலு, ஆ.14707
வணிகசேகர, எல்.பீ. 14281
வதனரூபன், சம்பூர் 14558
வயலூரான் 14629
வர்ணன், சரோ 14927
வரதசுந்தரம், வே. 14138
வரதராசனார், மு. 14033
வரதராஜன், S.T. **பார்க்க** வடகோவை வரதராஜன்
வரதராஜன், வே.ஐ. 14615
வல்லிபுரம், பொன். 14215
வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் 14903
வவுனியா நகர சபை 14337-38
வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா 14609
வன்னியகுலம், சி. 14305
வாகரைவாணன் 14708
வாங் நுன்சி 14826
வாசுகி, கமலா 14263
வாட்ஸ், மைக்கல் 14311
வாரிவன ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம் 14129
விக்ரமசிங்க, எச்.எச். 14123, 14923
விக்கிரமசிங்க, மார்ட்டின் 14532
விக்டோரியா, தொந்தா 14915
விக்னேஸ்வரன், க.வி. 14278
விக்னேஸ்வரன், பா. 14856
விக்னேஸ்வரன், பி. 14672
விசாகரத்தினம், கை.க. 14169
விசாலாட்சி மாதாஜி, ஸ்ரீ விசுவாம்பா 14186, 14519, 14529
வித்தியாபரன், வரதராஜா 14615
விதானகே, குணசேன 14730
விநாயகமூர்த்தி, வெற்றிவேல் 14395, 14404
விபுலாநந்த அடிகள் இசை நடனக் கல்லூரி, மட்டக்களப்பு 14492
விமலதாஸ், பி.வி. 14467
விமலநாதன், சின்னையா ரிட்ஜ்வே **பார்க்க** கனி-விமலநாதன்
வியாச கல்யாணசுந்தரம் 14892
வில்லவராஜன், க.கபிலன் 14287
வில்லிபுத்தூராழ்வார் 14548
வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில், திருக்கோணமலை 14140
விவேகானந்தராஜா, த. 14509
விவேகானந்தராஜா, பசுபதி உதயகுமாரி **பார்க்க** தமிழ் உதயா
விவேகானந்தன், வை. 14285
வின்செட், பிரனாந் 14479
வினாசித்தம்பி, எஸ். 14131
வினோத் **பார்க்க** வட்டக்கச்சி வினோத்
வினோதினி, சர்மிலா **பார்க்க** சர்மிலா வினோதினி
வினோதினி, தி. 14573
விஜயசிங்க, வஜிர பிரபாத் 14405
விஜயசுந்தரம், நல்லையா 14111, 14145-54
விஜயசூரிய, உசுல பி. 14823
விஜயலாதன், வி.சு. **பார்க்க** காங்கேயன்
விஜேரத்ன, மடுளுகிரியே 14730
விஸ்வலிங்கம், ஆ. 14063
விஸ்வலிங்கம், கணபதிப்பிள்ளை 14466
வீரசிங்க, ஜெகத் 14488-90
வெத்தசிங்க, சிபில் 14286,14549
வெரேக்கர், சாள்ஸ் 14267
வெல்டன், ஜேம்ஸ் 14027
வெல்லவூர்க் கோபால் 14100, 14392
வெற்றிச்செல்வி 14569-70, 14722, 14817
வெற்றிமகன் **பார்க்க** விநாயகமூர்த்தி, வெற்றிவேல்
வெள்ளையன், முத்தையா 14994
வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை 14231
வேரற்கேணியன் **பார்க்க** கிருஷ்ணன், எஸ்.பி.
வேல்நம்பி, தி. 14663

வேல்முருகு, சி. **பார்க்க** வேலழகன், ஆ.மு.சி.
வேலணையூர் ரஜிந்தன் *14594, 14625, 14640*
வேலழகன், ஆ.மு.சி. *14746, 14763*
வேலாயுதபிள்ளை, செ. *14402, 14930*
வேலுசாமி, ஓ.ஏ. *14610*
வேலுப்பிள்ளை, சு. *14435*
வேலுப்பிள்ளை, மணி *14828*
வைத்தியநாதன், வசந்தா *14124*
வைத்தீஸ்வரன், கா. *14464*
வோல்ப், ப்றைன் *14309*
றஞ்சித்குமார், J.P.A. *14248*
றஜீபன், கு. *14592*
றஸ்மி, S. *14481*
றஸாக், அப்துல் *14813*
றியோச், ரிச்சர்ட் *14309*
றிழ்வான், ஜே.எம். *14967*
றெஸ்ஸாக், ஐ.பயஸ் *14320*
றைற், சாம்சன் *14461*
றொபேட், தவநாதன் *14503*
ஜயக்கொடி, அபேசிங்க *14436, 14442*
ஜயக்கொடி, ஜயசேன *14824*
ஜயத்திலக்க, லக்ஷ்மன் *14252*
ஜயதுங்க, நிஹால் பீ. *14827*
ஜவ்ஹர்ஷா, எம்.றிஸ்வி *14318*
ஜனநாயகம், க. *14104*
ஜனாத்தகன், மார்க் *14593,14608*
ஜனூஸ், எஸ். *14653*
ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமியா *14858*
ஜிஃப்ரி, எம்.எஸ்.எம். *14732*
ஜிஃப்ரி, ஏ.எச்.எம். **பார்க்க** ஜிஃப்ரி ஹாஸன்
ஜிஃப்ரிஹாஸன் *14712*
ஜீவாதரன், ஹம்ஸானந்தி *14465*
ஜுனைதீன், ஏ.ஏ. *14666*
ஜெகநாதன், ஞானப்பிரகாசம் *14393*
ஜெகானந்தகுரு, இராஜேஸ்வரி *14180*
ஜெபநாமகணேசன், ஐ. *14468*
ஜெயகுமார், எம். *14947*
ஜெயசங்கர், சி. *14263*
ஜெயசீலன், ஹறோசனா *14860*
ஜெயந்தன் *14249*
ஜெயந்தன், பதியூரான் ச. *14181*
ஜெயந்தன் செபஸ்தியாம்பிள்ளை போல் **பார்க்க** ஜெயந்தன்
ஜெயநிதி, க. *14319*
ஜெயராசா, சபா. *14025, 14349, 14832*
ஜெயராஜ்,W.J. *14008*
ஜெயராஜா, அனிஸ்டடஸ் *14796, 14876, 14911, 14917*
ஜெயவீரசிங்கம், க.*14172*
ஜெரா *14632,14970*
ஜெஸீல், எம்.சி. *14811*
ஜேகே *14692*
ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம், தெகிவளை *14173*
ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சமிதி, கொழும்பு *14136*
ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயம், *14113*
ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம், நுவரெலியா *14157*
ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில், கொழும்பு *14164*
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை *14213*
ஸ்ரீ துர்க்கை அம்மன் கோவில், கனடா *14120*
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில், இணுவில் *14114*
ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம் *14176*
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா குடீர், கொழும்பு *14177*
ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி **பார்க்க** விசாலாட்சி மாதாஜி, ஸ்ரீ விசுவாம்பா
ஸ்ரீகணேசன், பி. *14472*
ஸ்ரீசுப்பிரமணியம், என். *14470*

*ஸ்ரீதயாளன், எம்.எஸ். 14160*
*ஸ்ரீதரன், க. 14470*
*ஸ்ரீபிரசாந்தன் 14909*
*ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, 14907*
*ஸ்ரீஸ்கந்தராசா, அ. 14093*
*ஸ்ரீஸ்கந்தராஜா, சாரதாதேவி 14504*
*ஸதீஸ்குமார், அருமைநாதன் 14979*
*ஸபீர்,* M.U.M. *14351*
*ஸஹானா, கெக்கிராவ 14752*
*ஸாலிஹ், ஸாலிஹ் அஸ். 14243*
*ஸுலைஹா, கெக்கிறாவ 14731, 14844*
*ஸெய்யித், ஸர்மிளா 14781*
*ஸெயின், முஹம்மது 14810*
*ஷம்ஸ், எம்.எச்.எம். 14288*
*ஷரிபுத்தீன், ஜின்னாஹ் 14533,14536*
*ஷிபானா, கே. 14655*
*ஷியா* **பார்க்க** *ஷிபானா, கே.*
*ஷோபாசக்தி 14741*
*ஹக், லறீனா அப்துல் 14867*
*ஹமீட்,* M.S.S. **பார்க்க** *மருதமைந்தன்*
*ஹரன், தேவகுமாரி 14088*
*ஹலீம்டீன், எம்.எம். 14993*
*ஹன்டல், மத்தியூ14270*
*ஹன்ஸீர்,* A.W.M. *14315*
*ஹாபிஸ், ஸபீர் 14678*
*ஹிதாயத்துள்ளாஹ், எம்.எம். 14695*
*ஹேரத், மேனகா 14287,14303*
*ஹௌசுன்,* AMd *14829*

*நூல்தேட்டம் தொகுதிகளில் உங்கள் நூல்களையோ,*
*பிற ஈழத்துப் படைப்பாளர்களின் நூல்களையோ பதிவுசெய்து*
*அவற்றை ஆவணப்படுத்துவதற்கு உதவிசெய்ய விரும்புகின்றீர்களா?*
*நூல்களின் பிரதிகளை கீழ்க்கண்ட எனது முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.*
*ஒவ்வொரு பிரதியிலும் தலைப்புப் பக்கத்தில்*
**நூல்தேட்டம் பதிவுக்காக என்.செல்வராஜாவுக்கு வழங்கப்பட்டது**
*என்ற குறிப்பினை எழுதத் தவறாதீர்கள்.*


**N.Selvarajah**
**14, Walsingham Close, Luton, LU2 9BH**
**United Kingdom**

*எனது மின்னஞ்சல் முகவரி:* Noolthettam.ns@gmail.com
*எனது தொலைபேசி இலக்கம்:* (0044)78 1740 2704


*நேரில் அனுப்பிவைப்பதில் சிரமங்களை எதிர்நோக்குபவர்கள் நூல்களின் பிரதிகளை இலங்கையிலும் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். காலக்கிரமத்தில் இவை என்னிடம் கையளிக்கப்படும்.*

### யாழ்ப்பாணம்

**Dr. Mrs.Kalpana Sandrasekar**
**180/4, Sir P.Ramanathan Road, Thirunelveli,**
**Jaffna**

### மட்டக்களப்பு

**Mrs. Sunthari Krishnapillai**
**Boundary Road, Eravur 4, Chenkallady,**
**Batticaloa**

### திருக்கோணமலை

**Mr. T.Sanjeevan**
**338 A, Veerapaththirar Lane, Anbuvalipuram**
**Trincomalee**

### கொழும்பு

**G.Kumaran**
**Kumaran Book House, 39, 36th Lane,**
**Colombo 6**

# நூல் தேட்டம் 15

## என். செல்வராஜா

*ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல் விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002 இலும், இரண்டாவது தொகுதி 2004 இலும், மூன்றாவது தொகுதி 2005 இலும், நான்காவது தொகுதி 2006 இலும், ஐந்தாவது தொகுதி 2008 இலும், ஆறாவது, ஏழாவது தொகுதிகள் 2011இலும், எட்டாவது தொகுதி 2012 இலும், ஒன்பதாவது தொகுதி 2014 இலும், பத்தாவது தொகுதி 2015 இலும், பதினொராவது தொகுதி 2017இலும், பன்னிரண்டாவது தொகுதி 2018இலும், பதின்மூன்றாவது தொகுதி 2019இலும், பதினான்காம் தொகுதி 2020இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான பதினைந்தாவது தொகுதி இதுவாகும். இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதியிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் இத்தொகுதியில் இடம்பெறும் நூல் பதிவுகளுக்கு 14001 இலிருந்து 15000வரை தொடரிலக்கமிடப்பட்டுள்ளன.*



என். செல்வராஜா: ஈழத்து நூலகவியல் துறையிலும் வெளியீட்டுத்துறையிலும் நன்கு அறிமுகமானவர் திரு. என். செல்வராஜா அவர்கள். சுன்னாகம் இராமாதன் கல்லூரியில் தன் நூலகப் பணியை ஆரம்பித்த இவர், பின்னர் யாழ். சர்வோதய மத்திய நூலகம், இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவன நூலகம், இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையத்தின் கொழும்புக் கிளையின் நூலகம் ஆகியவற்றில் பணியாற்றியவர்.

அயோத்தி நூலக சேவைகள் நிறுவனத்தின் தாபகரான இவர் அந்நிறுவனத்தினூடாகப் பல நூலகவியல் சார்ந்த நூல்களை வெளியிட்டு வருகின்றார். 'நூலகவியல்', 'நூல்தேட்டம்' ஆகிய இரு சஞ்சிகைகளினதும் பிரதம ஆசிரியராக இருந்ததுடன் 'கிராமிய நூலகங்களும் அபிவிருத்தியும்', 'ஆரம்ப நூலகர் கைந்நூல்', 'உருமாறும் பழமொழிகள்', 'யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு', 'நூலகர் கைந்நூல்: சிறுவர், பாடசாலை, கிராம நூலகர்களுக்கு', 'தேடலே வாழ்க்கையாய்', 'Selected Bibliography of James T. Ratnam', 'Rising From the Ashes' ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். தற்போது இங்கிலாந்தில் வசித்துவரும் இவர் அங்கும் புத்தகப் பண்பாட்டை ஊக்குவிக்கும் முயற்சிகள் பலவற்றிலும் ஈடுபட்டு வருகின்றார்.

அயோத்தி நூலக சேவைகள் &
குமரன் புத்தக இல்லம்

விடயம்: நூலகவியல்